ஓம்.

திருக்குறள் விளக்கம்

இதில் தேய்வப்புலமைத் திருவள்ளுவனார் திருவருள்செய்த

திருக்குறள் மூலமும்

அதற்குப் பரிமேலழகர் உரையும்

சேர்ந்துள்ளன.

மூன்றும் பாகம்

"காமத்துப்பால்"

இது "சித்தாந்தப்" பத்திராசிரியர்

திருவாளர் - கிருஷ்ணம்பேட்டை - குப்புசாமி முதலியார்

அவர்களால்

ஷை யார் மாணவர்கள்

கா. ரா. காளத்தீசுர முதலியார்,

முதலியோர் விருப்பத்தின்படி

இயற்றப்பட்டது.

1926

All Rights Reserved

விலாசம் :—

கி. குப்புசாமி முதலியார்,

3/2, பிள்ளையார்கோயில் தெரு,

கிருஷ்ணம்பேட்டை,

திருவல்லிக்கேணி போ

Opinion

I have perused a major portion of Pandit K. Kuppuswami Mudaliar's "Tirukkural Vilakkam". His work appears to be the outcome of not only a deep study of the text and its commentary but also of the accumulated experience of several years of teaching. His way of elucidating the ideas of the author as well as the commentary of Parimelalagar on the Text is inimitable. His explanations and the felicitous mode of presenting highly abstruse ideas by means of easy and familiar illustrations will, I believe, make the work useful not only to the learned but also to those who have not a high degree of proficiency in the Tamil language and literature. It gives me great pleasure to say that his is a monumental production which proves his originality, research and scholarship. He may be said to have done a real service to the Tamil land by bringing out his edition of the moral code of Tiruvalluvar so as to suit the needs of the present time.

2. So far as I am aware he is perhaps the only one who has not only had the privilege of making a thorough study of the immortal work of Tiruvalluvar during the greater portion of his life but has also had the rare privilege of having taught it to many for several years. It is very rare that a single person with slender resources undertakes and completes a work of this kind during his life-time. His is therefore an achievement of which any man may well be proud. He has earned the gratitude of the Tamils by his untiring and self-sacrificing labour and by the novel method of presentation which he has adopted. It is my well-considered opinion that his publication deserves every encouragement at the hands of the public.

T. P. SANTHOSHA NADHA PILLAI,
Head Clerk "C" Section.
POSTMASTER-GENERAL'S OFFICE, MADRAS

DATED MADRAS,
26th October, 1926.

திருக்குறள் விளக்கம்

காமத்துப்பால்

களவியல்

(பரி.) இனி அப்பொருளைத் தோற்றுவாயாகவுடைத்தாய் இம்மையே பயப்பதாய வின்பங்கூறுவா னெடுத்துக்கொண்டார். எண்டின்பமென்றது ஒருகாலத்தொருபொருளான் ஐம்புலனுநுகர்தற்கிறப்புடைத்தாய காமவின்பத்தினை. இச்சிறப்புப்பற்றி வடநூலுட் போசராசனுஞ் 'சுவைபலவென்று கூறுவார் கூறுக; யாங்கூறுவ தின்பச்சுவை யொன்றினையுமே' என இதனையே மிகுத்துக்கூறினன். இது புணர்ச்சி பிரிவென விருவகைப்படும். எனையிருத்தல், இரங்கல், ஊடலென்பனவோவெனின், இவர் பொருட் பாகுபாட்டினை அறம்பொருளின்பமென* வடநூல் வழக்குப்பற்றி யோதுதலான், அவ்வாறே யவற்றைப் பிரிவின்கணடக்கினரென்க. இனி அவைதம்மையே தமிழ் நூல்களோடும் பொருந்தப் புணர்ச்சியைக் களவென்றும், பிரிவைக் கற்பென்றும் பெரும்பான்மைபற்றி வகுத்து, அவற்றைச் சுவைமிகுதிபயப்ப உலகநடை

---

* "இன்பமும் பொருளு மறனு மென்றுங்
கன்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கிற்
காமக் கூட்டங் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுட்
டுறையமை நல்யாழ்த் துணைமையோ ரியல்பே"

என்னும் இத்தொல்காப்பியப் பொருளதிகாரம் களவியல் முதற் சூத்திரத்தால் வட நூலார் கூறும் அறம் பொருள் இன்பம் என்னும் பாகுபாட்டினை இன்பம் பொருள் அறம் எனக் கூறுவது தமிழர் கூற்றென்றும், அவ்விதம் அடையும் இன்பமானது இயற்கைப் புணர்ச்சி முதல் இருபத்தைந்து பிரிவுகளால் பகுக்கப்பட்டுள்ளது என்றும், எண்வகை மணங்களுள்

யோடு ஒப்புமொவ்வாமையு முடையவாக்கிக் கூறுகின்றார். அக் கைகோளிரண்டனுள்ளுங் களவாவது பிணிமூப்பிறப்புக்களின்றி எஞ்ஞான்று மொரு தன்மையராய் உருவுந் திருவும் பருவமுங் குலனுங் குணனு மன்பு முதலியவற்றாற் றம்முளொப்புமையுடையராய தலைமகனுந் தலைமகளும் பிறர் கொடுப்பவும்டுப்பவுமன்றிப் பால்வகை பாற்றாமே யெதிர்ப்பட்டுப் புணர்ந்துவருவது. அதனை யேழதிகாரத்தர்ற் கூறு வான்றொடங்கி, முதற்கட் டகையணங்குறுத்தல் கூறுகின்றார்.

விளக்கம்:—பொருட்பால் இதுவென்று உணர்த்திய தெய்வப்புலவர் திருவள்ளுவனார் இனி முறையே அப்பொருளையே துணைக்காரணமாகக்கொண்டு இமைப் பயன் ஒன்றினையே கொடுக்கும் இன்பம் என்பதைப்பற்றிச்சொல்லுதற்கு எடுத்துக்கொண்டனர். இங்கு இன்பமென்று எடுத்துக்கொண்டது ஒரே காலத்தில் ஒரு பொருளால் ஐந்து புலன்களும் இன்பம் அனுபவித்தற்குரிய மிகச்சிறப்பினையுடைய காம இன்பம் என்பதாம். இவ்வித சிறப்பினைப்பற்றி வடநூலுள் மிகத் தேர்ந்தவனாகிய போஜராஜன் என்பவனும் 'உலகத்துப் பல சுவை உண்டென்று சொல்லுபவர் சொல்லுக; யான் சொல்லும் இன்பச்சுவை ஒன்றே சுவையுடையது' என்று ஐம்புலனும் நுகரும் சுவையுடையதாகிய இக்காம இன்பத்தினையே பெரிதெனக் கூறினான். மேலும், இவ்வித சுவையுடைய காம இன்பத்தினைக் காம நூல் வல்லவர் புணர்ச்சி என்றும், பிரிவு என்றும், இருத்தல் என்றும், இரங்கல் என்றும், ஊடல் என்றும் பிரித்து இருக்கினும், இவ்வாசிரியர் பொருள் பாகுபாட்டினை

ஒன்றாகிய காந்தர்வ மணத்தின்பாற்படுவது என்றும், தலைவனுக்கும் தலைவிக்கும் நேருங் கூட்டமானது குறிஞ்சித் திணையில் நேரும் என்றும், குறிஞ்சித் திணைக்குக் கூறும் பெரும்பொழுதும் சிறு பொழுதும் கூதிரும் யாமமும் ஆயினும் பொழில் விளையாட்டு விருப்பால் ஆயத்தோடு வருதற்கு அக்காலம் பொருந்தாது ஆதலால் வேனிலையே கொள்ளுதல் வேண்டும் என்றும் அறிகின்றோம். இனி ஊழ்வலியால் புணர்வார் என்பதைத் திருக்கோவையாருள்,

"வளைபயில்கீழ் கடனின்றிட மேல்கடல் வானுகத்தின்
றுளைவழிநேர் கழிகோத்தெனத் தில்லைத் தொல்லோன்கயிலைக்
கிளைவயினீக்கியிக் கெண்டையங் கண்ணியைக் கொண்டு தந்த
விளைவையல்லால் வியவே னயவேன் றெய்வமிக்கெனவே

என்னும் திருவிருத்தத்தால் அறிதல்கூடும்.

அறம், பொருள், இன்பம் என்று வடநூல் வல்லவர் வழக்கையே பின் தொடர்ந்து நூலியற்றினராதலால், பிரிவு என்பதனுள் இருத்தல், இரங்கல், ஊடல் என்பனவற்றை அடக்கியுள்ளனர். அதுவன்றியும், அப் புணர்ச்சி பிரிவு என்னும் இரண்டனையும் தமிழ் நூல் வல்லவர்கள் வழக்கோடும் பொருந்தப் புணர்ச்சி என்பதைக் களவென்றும், † பிரிவு என்பதைக் கற்பென்றும் பெரும்பான்மை கருதி வகுத்து அக்களவென்பதையும கற்பென்பதையும் மிகச் சுவைபயக்கும்படி பெரும் பான்மை உலக நடையோடு ஒத்து இருக்கவும், சிறுபான்மை ஒவ்வாதிருக்கவும் கூடிய தகுதியோடு கூறுகின்றனர். இவ்வித களவு கற்பு, என்னும் கோக்கோள் இரண்டனுள்ளும் களவு என்பது பிணியும், மூப்பும், இறப்பும ஆகிய இவையில்லாத எக்காலத்தும் ஒரே தன்மையுடையவராய் வடிவத்திலும், அழகிலும், பருவத்திலும், குலத்திலும், குணத்திலும், அன்பிலும் ஒரு சிறிதுங் குறைபாது ஒப்புமை உடையவராய் உள்ள ஒரு தலைமகனும் ஒரு தலைமகளும் பிறரால் கொடுப்பது மல்லாமல் அடுப்பதுமல்லாமல் ஊழ்வினையால் தாமே ஒருவருக்கொருவர் எதிர்ப்பட்டுப் புணர்ந்து வருவதாம். அவ்விதம் புணர்ந்து வரும் களவென்பதை ஏழு அதிகாரங்களால் சொல்லத் தொடங்கி முதல் அதிகாரமாகத தகையணங்குறுத்தல் என்பதனைச் சொல்லத் தொடங்கினர்.

---

† இவ்விதம் கூறும் களவு என்பதை ஒருவன் கற்பதால் ஆகும் பயன் எதுவென்று நீவிர் ஐயுறுதல் கூடும். ஏனெனில் 'களவு, கொலை, இணை விழைச்சு என்பனவாகிய குற்றங்களன்றே எல்லாச் சமயத்தோர்களாலும் உலகத்தாராலும் வெறுக்கப்பட்டவை; அவ்விதமிருக்க, இதை எதற்காகக் கற்றல் வேண்டு மெனின், தெய்வப்புலவர் இங்குக் கூறும் இக்காமம் திமை பயவாது வீடு பயப்பது ஒன்றுமும். அது எவ்விதமெனின்? ஒத்த அன்புடைய இருவர் மணங்கள் எட்டனுள் காந்தர்வம் என்கின்ற காமம் சேரும் மணங் கொண்டு அன்பு பூண்டு ஒருவர் நோய் கொண்டால் மற்றொருவர் நோய் கொண்டும், ஒருவர் சாவாராயின் மற்றொருவர் செத்தும் போகக் கூடிய ஒத்த அன்பினராய் உலகத்து ஒழுகி அவ்வொழுக்கத்தால் இல்லறம் நடத்தி மேல் நற்பிறவி அடைந்து தவம் பூண்டு ஞானமடைந்து வீடு பேற்றினை யடைய நிற்பது ஒன்றுதலான்; அன்றியும், மேல் பாமேலழதர் போஜராஜன் தான் இன்பச்சுவை என்று கொண்டது காம இன்பத்தினையே என்று கூறியது என்னெனின், சுவை: சொற்சுவை, பொருட்சுவை என இரண்டாயினும், அப் பொருட் சுவையானது வீரச்சுவை, பயச்சுவை, இழிப்புச்சுவை, அற்புதச்

109. அதிகாரம்.

தகையணங்குறுத்தல்.

(பி.) அஃதாவது பொழில்விளையாட்டுவிருப்பான் ஆயிங்க அதன்கட் டமியளாய் நின்றுளே வேட்டவிருப்பான் இவையார்நிங்கத் தமியஞ்வந்து கண்ணுற்ற தலைமகன் அவள் வனப்புத் தன்னை வருத்தமுறுவித்தலைச் சொல்லுதல். இது, கண்ணுற்றபொழுதே நிகழ்வதாகலின், முதற்கட் கூறப்பட்டது.

விளக்கம்:-இத்தகையணங்குறுத்தலென்பது மேற்கூறியபடி ஒரு வித வேறுபாடுமில்லாது மித ஒப்புமையுடையவராய தலைமகன் ஒரு வனும் தலைமகள் ஒருத்தியும் ஒருவரை ஒருவர் கண்டவுடனே உண் டாவது ஒன்றாகும். அதாவது, ஊழின் வலியால் தலைமகள் ஒருத்திக்குச் சோலையில் விளையாடும் விருப்பம் உண்டாகித் தன் தோழியரோடு சென்று தானும் தன் தோழிமாரும் விளையாடுகின்ற பொழில ஒன்றில் புகுந்து நிற்கவும், வேறு தோழியர்கள் ஒவ்வொருவராய் ஊசலாடவும்,

---

சுவை, இன்பச் சுவை, அவலச்சுவை, நகைச்சுவை, உருத்திரச்சுவை, நடுவு நிலைச்சுவை என்று ஒன்பது வகைப்படும் என்றும் இவ்வொன்பதனுள் இன்பச்சுவையாவது :—

> "காமவளிநயங் கருதுங் காலைத்
> தாவுள்ளுறுத்த வடிவுந் தொழிலுங்
> காரிகைகலந்த கடைக்கணுங் கவின்பெறு
> மூரன்முறுவல் சிறுநிலா வரும்பலு
> மலர்ந்த முகனு மிரந்தமன் னெவியுங்
> கலந்தன பிறவுங் கடைப்பிடித் தனரே"

என்றமையால், புணர்ச்சியைப்பற்றிய விருப்பமென்றும் அறிகின்றோம். இவ் விருப்பமாவது காட்சியும் குறிப்பறிதலும் நிகழ்ந்த பிறகு குறிஞ்சித்திணையில் புணர்ச்சியும், பாலைத்திணையில் பிரிதலும், முல்லைத்திணையில் இருத்தலும், மருதத்திணையில் ஊடலும், நெய்தல் திணையில் இரங்கலும் நிகழ்தல் ஒன்றாம். இவ்விதம் கூறிய பொருள் பாகுபாட்டினைத் தமிழ் நூலார் அகப்பொருள் என்று எடுத்துக் கொண்டது மனத்தினிடத்தே உண்டாகும் எண்ணத்தினை அகப்பொருளென்று கூறியதாலேயாகும்.

குன்று எதிர்ச் சென்று கூவவும், ஒளி தங்கிய முத்துக்களைப் பொறுக்கவும், குளிர்ந்த தளிர்களைப் பறிக்கவும், குற்றமில்லாத ஜலத்தில் குளித்து முழுகவும், அம்மணிக்காய், பந்து, கழங்கு முதலியவை ஆடவும் பிரிந்து செல்லுவர். அவ்வாறு பிரிந்து சென்றவுடன் தனியே நின்ற தலைமகள் மாதவிப் பந்தரில் மரகதச் சிலையினில் மயில் ஒன்று தன் கலாபத்தை விரித்து ஆடுவதைப் பார்த்து நிற்பாளாவள். இவள் இவ்வாறு இருக்கவும், தலைமகன் ஒருவன் வேட்டையின் விருப்பத்தால் பல இளையாரோடு புறப்பட்டுக் காட்டுக்கு வருதலும், உடன் வந்த இளைஞர் பலரும் வேட்டையின் விருப்பத்தால் கலைமானினை யெய்யவும், கடுமுஷ்ண ஏணத்தை எய்யவும், கரடி, வெம்புலியினைக் கடியவும் தலைமகளை விட்டு நீங்குவர். அவ்விதம் தன்னுடன் வந்த இளைஞர் நீங்கவும் தலைமகன் தன்னைத் தனியனுப்பத் தன்னை நிர்ப்பட்ட பொழிலிடை மான் ஒன்றைப் பின்தொடர்ந்து செல்லுவன். அவ்விதம் சென்றவனுகிய தலைமகன் ஊழ்வலியால் மயில் வினோயாட்டைப்பார்த்து மகிழ்வுற்றிருக்கும் மயிலாகிய தலைமகளைக் காண்பான்.* இவ்விதம் கண்டவனுகிய

* இனி இதனையே இறையனாரகப்பொருள் இரண்டாவது சூத்திரத்தினுள் கூறிய காமப் புணர்ச்சி என்னும் உரையினுள்ளும் பின்வருமாறு காணுதல் கூடும்.

"இனிக் காமப்புணர்ச்சி யென்பது தலைமகனுந் தலைமகளுந் தமியராய் ஒரு பொழிலகத்து எதிர்ப்பட்டுத் தம்முணர்வினரன்றி வேட்கை மிகலினுற் புணர்வதென்பது. ஆயின் இவர் மேற் பொருவிறந்தார் தலைமகனுந் தலைமகளுமென்றமையான், அவனுங் கற்கந்தும் எறிபோத்துங் கடுங்கண் யானையுந் தறுகட்பன்றியுங் கருவரையும் இருநிலனும் பெருவிசும்பு மனையார் ஆளி மொய்ம்பினர் அரிமான்றுப்பினர் பற்பனூறுயிரவர் கூர்வேலினையர் தற்சூழச் செல்வனென்பது முடிந்தது. இவளும் உடன் பிறந்து உடன் வளர்ந்து நீர் உடனுடிச் சீர் உடன் பெருகி ஒல் உடனுட்டப் பால் உடனுண்டு பல் உடனெழுந்து சொல் உடன் கற்றுப் பழமையும் பயிற்சியும் பண்பும் நண்பும் வீழ்ப்பமும் ஒழுக்கமும் மாட்சியும் உடையார் பற்பனூறுயிரவர் கண்ணுமனமுங்கவரும் ஒண்ணுதன் மகளிர் தற்சூழத் தாரகை நடுவட் தண்மதிபோலச் செல்வாளென்பது முடிந்தது. முடியவே, தமியராய்ப் புணர்ந்தார் என்பது ஈஞ்டு மாறுகொள்ளுமெனின், மாறு கொள்ளாது; எங்ஙனே ? அவள் ஆயங்களும் பொழிலிடம் புகுதலும் வினோயாட்டு விருப்பினுற் பிரியும். என்னே பிரியுமாறெனின், ஒருவர் ஒருவரின்முன்னர்த் தழைவிழையத் தக்கன தொடுத்து

தலைமகன் அவளைத் திடீரென நோக்கினைதலால் அவள் அழகு தன்னை வருத்துதலையும் அவள் உருவு ஈதென்றறியாது சந்தேகித்தான் போல்

மென்றும், கண்ணி தண்ணறு நாற்றத்தன செய்துமென்றும், போது மேதக்கன கொய்துமென்றும், மயிலொடு மாறுடுதுமென்றும், குயிலொடு மாறுகூவுதுமென்றும், அருவியாடி அஞ்சுண குடைதுமென்றும், வாசமலர்க் கொடியில் ஊசலாடுதுமென்றும் பரந்து, அப்பாலுள்ளார் இப்பாலுள்ளார் கொல்லோவென்றும், இப்பாலுள்ளார் அப்பாலுள்ளார் கொல்லோவென்றும் இவ்வகை நினைத்துப் பிரிபவென்பது. இவ்வகை அவளைத் தமியராய்ப் பிரியவெனின், எட்டியுஞ் சுட்டியுங் காட்டப்படுங் குலத்தனலல்லாரகலானும் பான்மை அவ்வகைத்தாகலானும் பிறவாறு நினையார் பிரிபவென்பது. ஆயின், இவ்வகைப்பட்ட ஆயத்திடை மேனட் பிரிந்து பயின்றறியாதாள் தமியளாய் நிற்குமோ லெனின், நிற்கும்; தான் பயின்ற இடத் தன் ஆயத்தினே டொக்குமாகலானென்பது. யாங்ஙனம் நிற்குமோவெனின், சந்தனமுஞ் சண்பகமுந் தேமாவுந் தும்பலவும் ஆரினியும் அசோகுங் கோங்கும் வேங்கையுங் குரவமும் விரிந்து, நாகமுந் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பரவை ஞாழலும் பைங்கொன்றையும் பிணியவிழ்ந்த பொரிப்புன்கும் புன்னகமும் உருக்கொடு மூகை சிறந்து, வண்டறைந்து, தேனுர்ந்து, வரிக்குயில்கள் இசை பாடத், தண்டென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவு செய்யும் பொழிலது நடுவண் ஓர் மாணிக்கச் செய்குன்றின்மேல் விசும்பு துடைத்துப் பசும்பொன் பூத்து வண்டு துவைப்பத் தண்டேன் துளிப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள்; கண்டு பெரியதோர் காதல் களிகூர்ந்து தன் செம்மலர்ச் சிறடி மேற் சிலம்பு கிடந்து சிலம்பு புடைப்ப, அம்மலரணிக் கொம்பர் கடைகற்ப தென நடந்து சென்று, நறைவிரி வேங்கை நாண்மலர் கொய்தாள்; கொய்த விடத்து மரகதமணி விளிம்படுத்த மாணிக்கச் சுணைமருங்கினதோர் மாதவி வல்லி மண்டபத்துப் போது வேய்ந்த பூநாறு கொழுநிழற்கீழ்க் கடிக்குருக்கத்தி கொடிப்பிடித்துத் தகடுபடு பசும்பொற் சிகரங்களின் முகடு தொடுத்து வந்திறுதரும் அருவி பொன் கொழித்து மணிவரன்றி மாணிக்கத்தொடு வயிரமுந்தி அணிவிளரருவி ஆடகப் பாறைமேல் அதிர் குரன் முரசின் கணிரட்ட, வண்டுந் தேனும் யாழ்முரல, வரிக்குயில்கள் இசைபாடத், தண்டாது தலிசுபடப் போர்த்ததோர் பளிக்குப்பாறை மணித்தலத்து மிசை நீல ஆலவட்டம் விரித்தாற்போலத் தன் கோலக் கலாவங் கொளவிரித்து முழுள் பிளஞ்சாயிற்று இளவெயில் எறிப்ப ஓர் இளமயில் ஆடுவது கண்டு நின்றருள், அப்பாற் றலைமகனும் பற்பன்னூருயிரவர் கூர் வேலினையாரோடு குளிர்

கூறுவன்.* ஆகலின், தலைமகளினது அழகு தலைமகனைத் துன்புறுத்தலால் தகையணங்குறுத்தல் என்று கூறி முதலில் வைத்து உள்ளனர் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், " அறவோய்! அறமும் பொருளும் இதுவென உணர்ந்த எங்களுக்கு இன்பத்தையும் உணர்த்துவான் தொடங்கி இன்பப் பகுதியாகிய காமத்துப்பாலில் முதலதிகாரமாகிய தகையணங்குறுத்தலைக் கூற ஆரம்பித்தீர். ஒன்றன்பின் ஒன்றாக அறிய விரும்புகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்

1081. †அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்
குழாதர்கொன் மாலுமென் னெஞ்சு. [குழை

மலைச் சாரல் வேட்டம் போய் வீளையாடுகின்றான், ஆண்டெழுந்ததோர் கடுமாவின் பின்னேடிச், காவலியலவரைக் கையகன்று, கொடுமான் றேரொடு பாகனை நிலவு மணற் கானியாற்று நிற்கப் பணித்துத், தொடுகழல் அடியதிரச், சுருளிருங்குஞ்சி பொன்ஞாணிற் பிணித்துக், கடிகமழ் நறுங்கண்ணி மேற் கொண்டு வண்டு மணமயர அஞ்சாந்தின் நறுமாற்றம் அகன் பொழிலிடைப் பரந்து நாற, அடுகிலை ஒருகணை எந்தி வடிவுகொண்ட காமன் போலச் சென்று அவள் நின்ற இரும்பொழில் புகும். அஃதியாங்ஙனமோ வெனின், வடகடலிட்ட ஒருதுகம் ஒருதுளை தென்கடலிட்ட ஒரு கழி சென்று கோத்தாற் போலவும் வெஞ்சிரக்கனலியுந் தண்கதிர்மதியமுந் தங் கதிவழியித் தலைப்பெய்தாற்போலவுந் தலைபெய்து ஒருவரொருவரைக் காண்டல் நிமித்தமாகத் தமியராவர்.

x "மடமானேக்கி வடிவுங் கண்ட விடமுஞ் சிறந்தழி யெய்துவ தையம்" என்னும் அகப்பொருள் விளக்கச் சூத்திரமும் இங்கு உய்த்துணரற் பாலதாம்.

†இயற்கைப்புணர்ச்சிக்கு முன் காட்சி, ஐயம், தெளிதல், துணிவு, குறிப் பறிதல் என்பன நிகழ்ச்சியாயினும் இவ்வாசிரியர் காட்சி யென்பதைக் கூறாது கண்ட பின்னரே கொள்ளும ஐயத்தினை முன்னர்க் கூறினர். இதனைத் திருக்கோவையார் ஆசிரியர்,

" திருவளர் தாமரை செல்வளர் காவிக லீசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்குதெய்வ
மருவளர் மாலையார் வல்லியி னெஞ்சி யனகடைவாய்ந்
துருவளர் காமன்றன் வெற்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே"

என்றும்,

போதோ விசும்போ புனலோ பணிகளதுகியோ
யாதோ அறிகுவ தேதமர்ந்தி யமன்விடுத்த

தலைமகளுருவு முதலியன முன்கண்டறிவனவன்றிச் சிறந்தமையின் அவளைத் தலைமகன் ஐயுற்றது. *

(பரி.) இ-ள். கனங்குழை=இக்கனவியகுழையையுடையாள்—அணங்கு கொல்=இப்பொழிற்கணுறைவாளோர் தெய்வமகளோ,—ஆய் மயில்கொல்= அன்றி யொருமயில் விசேடமோ,—மாதர்கொல்=அன்றியொருமானுடமாத் ரோ,—என் நெஞ்சு மாலும்=இவளையின்னளென்று துணியமாட்டாது என் னெஞ்சு மயங்கா நின்றது. எ-று.

ஓ—அசை. ஆய்மயில்=படைத்தோன் விசேடமாக வாய்ந்துபடைத்த மயில்; மயிற்சாதியுட்டெரிந்தெடுத்த மயிலென்றுமாம். †கனங்குழை—ஆகு பெயர். கணங்குழையென்று பாடமோதிப் பலவாய்த்திரண்ட குழையென் றுரைப்பாருமுளர். எழுதலாகாவுருவுந் தன்வருத்தமும்பற்றி 'அணங்கு கொல்' என்றும், சாயலும் பொழில்வயினிற்றலும்பற்றி 'ஆய்மயில் கொல்' என்றும், தன்னெஞ்சஞ் சென்றமையும் அவளெதிர்நோக்கியவாறும் பற்றி 'மாதர்கொல்' என்றுங் கூறினான். (க)

விளக்கம்:—தலைமகளைக் கண்ட தலைமகன் தான் காணும் தலைமக ளது உருவத்தைப்போல் முன்னோர் முறை கண்டறியாதவ னாதலால், அத்தலைமகளைத் தலைமகன் சந்தேகித்தவனாய் 'இக்கனந்தங்கிய குழையா

தூதோ வனங்கன்றுணையோ விணையிலி தொல்லைத்தில்லை
மாதோ மடமயிலோ வெனநின்றவர் வாழ்பதியே "

என்றும், காட்சியையும் ஐயத்தையும் முறையே பிரித்துக் காட்டியுள்ளதால் அறிதல்கூடும்.

குறிஞ்சிக் கருப் பொருள்களுள் ஒன்றாயும் புள்ளினமாயுமுள்ள மயிலும் கிளியும் என்பதனுள் மயில் என்பதைக் கூறியமையால் புணர்தலுக்குத் திணை குறிஞ்சி என்பதையும் இத்திருக்குறளால் கண்டோம்.

*"ஐயமென்பது கண்ணுற்றபின் ஐயப்படுவது. எங்ஙனமோ வெனின், வரையரமகள் கொல்லோ வானரமகள் கொல்லோ நீரரமகள் கொல்லோ இத் துணை மேதகவுடையாள்; அன்றி மக்களுள்ளாள் கொல்லோ என்று ஐயப் படுவது"—இறையனாரகப்பொருள் இரண்டாவது சூத்திரவுரை.

† கனங்குழை யென்றதனை ஆகுபெயர் அன்றென மறுத்து, அன் மொழித் தொகை யெனக் கொள்வர் இலக்கண விளக்கச் சூறாவளியார். ஆகுபெயர்க்கும் அன்மொழித் தொகைக்கும் உள்ள வேற்றுமையைத் தொல் காப்பியச் சூத்திர விருத்தியிற் காண்க.

திய காதணியினை யுடையவள் இச்சோலையில் வசிக்கும் தெய்வமகள் தானே, அல்லது மயில் கூட்டத்தில் மிகத் தகுந்த அழகினை வாய்ந்த ஒரு மயில்தானே, அல்லது ஓர் மானுட மகளோ, இவளே இன்னவளென்று துணிந்து அறிவதற்கு இல்லாது என் மனமானது மயங்குகின்றது' என்று கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, சூழ்துவதற்கு அமையாத அவளது உருவத்தைக் கண்டு தான் வருந்திய வருத்தத்தைப் பற்றிக் காமநெறிபால் ஆட்வருபிரைக் கொள்ளை கொள்ளும் தெய்வமகளென்று உவமித்தான். அவளது சாயலையும் சோலையில் நிற்கும் தகுதியையும் நோக்கி மயிலோ என ஐயுற்றான். பின்னர் தன்னெஞ்சு அவளிடத்துச் சென்று தான் அவளை நோக்கியதும் அவள் எதிர் நோக்கியதையும் கருதி இவள் மானுடமாதே என்று தீர்மானித்தான். இவ்விதம் தீர்மானித்தவன் இனி அவளது பார்வையாலாய வருத்தத்தையும் சொல்ல ஆரம்பித்தனன்.

1082. நோக்கினு நோக்கெதிர் நோக்குத றுக்கணங்கு தானைக்கொண் டன்ன துடைத்து.

மானுடமாதாநெளிந்த தலைமகன் அவளைக்கினையு
வருத்தங் கூறியது.

(பரி.) இ-ள். நோக்கினுள் நோக்கெதிர் நோக்குதல் = இப்பெற்றித்தாய வனப்பினையுடையாள் என்னைக்கிற்கெதிர்நோக்குதல்—தாக்கு அணங்கு தானைக்கொண்டன்னது உடைத்து = தானே தாக்கி வருத்துவதோரணங்கு தாக்குதற்குத் தானையுங் கொண்டுவந்தாற்போலுந் தன்மையையுடைத்து.

மேலும் 'அணங்குகொலாய்மயில்கொல்' என்றமையான், இகரச்சுட்டு வருவிக்கப்பட்டது. 'எதிர்நோக்குதலென்றமையின்' அது குறிப்புநோக்காயிற்று. வனப்பால் வருந்துதன்மேலுங் குறிப்பு நோக்கால் வருந்துதல் கூறியவாறு. நோக்கினுளென்பதற்கு என்னுளேக்கப்பட்டாளென்றுரைப்பாருமுளர். (2)

விளக்கம்:—மேல் திருக்குறளில் கூறிய வண்ணம் மானுட மாதர் என்று தெளிந்த தலைமகன் 'இவ்விதத் தகுதியுடையதாகிய அழகினையுடையாள் நான் அவளைப் பார்த்தகாலத்து என்னை எதிராகப் பார்த்தது தானது ஒருவன் காண்பதற்கு முன்னே தானே சென்று தாக்கி வருத்தச் செய்பவளாகிய காமநெறியால் உயிர் கொள்ளும் தெய்வமகள் தான் தாக்கித் துன்புறுத்துவதுமல்லாமல் தன் சேனையையும் உடன்

கொண்டு வந்து தாக்குந் தகுதியுடையதாக உள்ளது' என்று கூறினை னென இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, ஆடவனொருவன் பார்த்தகாலத்து அப்பார்வைக்கு எதிராக மகளிரும் பார்ப்பாராயின் அப்பார்வையைக் குறிப்பு மோக்கு என்று நூல்வல்லவர் கூறுவராதலால், தலைமகளது அழகானது தன்னை மிகுதியும் வருத்துவதோடு தன்னையும் குறிப்பாக நோக்கியது அணங்கு என்னும் தெய்வமகள் தன் சேனை யோடு வந்து தன்னை வருத்துவதாகத் தன் காமத் துன்பத்தின் மிகுதி யைக் கூறலாயினன். மானுட மாதராதல் கால் நிலத்தில் தோய்தலாலும், கண் இமைத்தலாலும், மாலை வாடுதலாலும் ஆகிய குறிகளால் அறிந்தா னென்றதாயிற்று. இதனைத் திருக்கோவையாருள்,

"பாயும் விடையரன் நில்லையன்னாள் படைக்கண் ணிமைக்குந்
தோயு நிலத்தடி தூமலர் வாடுந் துயரமெய்தி
யாயு மனனே யணங்கல்ல மம்மா மூலைசுமந்து
தேயு மருங்குற் பெரும்பணைத் தோளிச் சிறுதுதலே"

என்பதனானு மறிதல் கூடும்.

1083. பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன் பெண்டகையாற் பேரமர்க் கட்டு.

இதுவுமது.

(பரி.) இ-ள். கூற்று என்பதனைப் பண்டு அறியேன் = கூற்றென்று நூலோர்சொல்வதனைப் பண்டு கேட்டறிவதல்லது கண்டறியேன்,—இனி அறிந்தேன் = இப்பொழுது கண்டறிந்தேன்,—பெண்டகையால் பேர் அமர்க் கட்டு = அது பெண்டகையுடனே பெரியவாய் அமர்த்த கண்களையுடைத்து.

பெண்டகை = நாணம் மடம் அச்சம் பயிர்ப்பென்னுங் குணங்கள். அவை அவ்வக்குறிகளானறியப்பட்டன. அமர்த்தல் = அமர்செய்தல்: பெய ரடியாயவினை. பெண்டகையால் இன்பம பயத்தலுமுண்டேனும் துன்பம் பயத்தன்மிகுதிபற்றிக் கூற்றுக்கிக் கூறினன். (சு)

விளக்கம்:—மேல் திருக்குறளில் கூறியபடி மறுபடியும் அவள் கண்ணினாலாய துன்பத்தைக் கூறும் தலைமகன் 'எமன் என்று நூல்வல்லவர் சொல்லுகின்ற ஒன்றினைப் பழைய காலம் முதல் காதால் கேட்டு அறிவதையே அல்லாமல் கண்ணால் கண்டு அறியேன்.

ஆனல் இப்பொழுது அதனேப் பார்த்து அறிந்தேன். அவ்வெமனனது பெண் தகுதியோடு கூடிப் பெரியனவாய் யுத்தம் செய்யும் கண்களே யுடையதாய் இருக்கிறது' என்று கூறினன் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. மேல் காமநெறியால் உயிர்கொள்ளும் ஓர் தெய்வமகள் என்று சிறப்பித்துச்சொல்லிய தலேவன் இத்திருக்குறளில் பொதுவாகவே யாவர் உயிரையும் கொள்ளே கொள்ளுகின்ற எமன் என்று அக்கண்களுக்கு உள்ள பார்வையின் விசேடத்தை வியந்து கூறினன். இவ்விதம் எம னென்று கூறினுயினும், தான் கண்ட பெண்ணிற்கு உரிய குணங்களா கிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நான்கினேயும் அதனதன் குறிகளால் அறிந்து கூறியதுடன் அவள் குறிப்பு நோக்கினுல் தான் அடைந்த துன்பத்தினே அறிவித்தற்கு அமர்செய்யும் கண்களே யுடை யது என்று கூறினன். அதுவன்றியும், தான் கண்ட இவ்விதி பெண் ணின் தகுதியால் இன்பம் அடைவதற்கு உரியவனுயினும் தான் அவள் பார்வையால் அடைந்த துன்பமானது மிகுதியாக இருந்தமையால் எம னேக்கிக் கூறினன். பெண்களின் குணங்களேப்பற்றி இறையனரகப் பொருள் இரண்டாம் சூத்திரம்,

" அதுவே, தானே யவளே தமியர் காணக்
காமப் புணர்ச்சி யிருவயி னெய்தல் "

என்பதற்கு உரை எழுதிய காலத்து " இனித் தலேமகட்கு நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்பன குணம். அவற்றுள், நாணென்பது பெண்டிர்க்கு இயல்பாக உளதொரு தன்மை. மடமென்பது கொளுத் தக் கொண்டு கொண்டது விடாமை. அச்சமென்பது பெண்மையிற் முன் காணப்படாததோர் பொருள் கண்டவிடத்து அஞ்சுவது. பயிர்ப் பென்பது பயிலாத பொருட்கண் அருவருத்து நிற்கும் நிலேமை. இந் நான்மையும் புனலோடிவழிப் புற்சாய்ந்தாற்போல வேட்கையான் மீதூ ரப்பட்டுச் சாய்ந்து கிடக்கும் " என்று கூறியதையும் காணுதல்கூடும்.

1084. கண்டாருயி ருண்ணுந் தோற்றத்தாற் பெண்ட
பேதைக் கமர்த்தன கண்.

[கைப்

இதுவுமது.

(பரி.) இ-ள். பெண்டகைப் பேதைக்குக் கண்=பெண்டகையை யுடைய விப்பேதைக்கு உள்ளாய கண்கள்—கண்டார் உயிர் உண்ணும் தோற்

றத்தான் அமர்த்தன = தம்மைக் கண்டாருயிருண்ணுந்தோற்றத்துடனே கூடி அமர்த்திருந்தன. எ-று.

அமர்த்தல் = மாறுபடுதல். குணங்கட்கும் பேதைமைக்குமேலாது கொடியவாயிருந்தன வென்பதாம். (சு)

விளக்கம் :—மேல் தலைமகளது குறிப்பு நோக்கால் வருந்திய தலைமகன் மேற்கூறிய பெண் தகுதியையுடைய இந்த பேதைமையுடையாளுக்கு உண்டாகிய கண்கள் தம்மைப் பார்த்தால் உயிரினையே உண்ணும் பார்வையுடனே கூடி மாறுபட்டு இருந்தன என்று கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. எனெனின்? நாணம் முதலிய நற்குணங்களுக்கும் பேதைமைத் தன்மைக்கும் பொருந்தாது பார்ப்பவர் உயிரையே உண்ணும் கொடுமையுடையனவாய் அக்கண்கள் இருந்தமையால் அக் கொடுமையை அனுபவிப்பவனாகிய தலைமகன் இவ்வாறு கூறுவானாயினன்

1085. கூற்றமோ கண்ணே பிணையோ மடவரல் நோக்கம் இம்மூன்று முடைத்து.

இதுவுமது.

(பி.) இ-ள். கூற்றமோ = என்னை வருத்துதலுடைமையாற் கூற்றமோ, — கண்ணே = என்மேலோடுதலுடைமையாற்கண்ணே, — பிணையோ = இயல்பாக வருவதலுடைமையாற் பிணையோ, அறிகின்றிலேன் — மடவரல் நோக்கம் இம்மூன்றும் உடைத்து = இம்மடவரல் கண்களினோக்கம் இம்மூன்றன்றன்மையையு முடைத்தாயிரா நின்றது. எ-று.

இன்பமும் துன்பமும் ஒருங்கு செய்யா நின்றதென்பதாம். தொழில்பற்றி வந்த ஐயநிலையுவமம். (சு)

விளக்கம் .—இனி இவ்வித மெல்லாம கண்களால் இன்பமும் துன்பமும் ஒரே காலத்து அடைந்த தலைமகன் கண்களை ஐயமுறக் கூறினனென்பது போதர 'என்னைத் துன்புறுத்தலால் எமன் தானே, என்மேல் ஓடுதல் உடைமையால் கண் தானே, இயல்பாக மருட்சியைக்கொள்ளுதலால் மான் தானே, அறிவதற்கு இல்லை. எனெனின்? இத்தக்கைய யௌவனப் பருவம் வாய்ந்த இப்பெண்ணின் கண்களின் நோக்கமானது மேல் கூறிய மூன்றின் தன்மையையும் உடையதாய் உள்ளது' என்று கூறினனென்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால் இன்பமும்

தன்பமும் ஆகிய இரண்டனையும் இக்கண்கள் ஒரு காலத்திலேயே செய்யவல்லன என்று கூறினதாயிற்று.

1086. கொடும்புருவங் கோடா மறைப்பி னெடுங்கரூர் செய்யல மன்னிவள் கண்.

இதுவுமது.

(பத.) இ-ள். கொடும் புருவம் கோடா மறைப்பின் = பிரியாட்பாய கொடும்புருவங்கடானுஞ் செப்பமுடையவாய் விலக்கினவாயின், —இவள் கண் நடுங்கு அஞர் செய்யல = அவற்றைக்கடந்து இவள் கண்கள் எனக்கு நடுங்குந் துயரைச் செய்யமாட்டா எ-று.

நட்டாரைக் கழறுவார்க்குத் தாஞ்செம்மையுடையராதல் வேண்டலிற் 'கோடா' என்றும், செய்கின்ற அவற்றிற்கும் உறுகின்ற தனக்கும் இடை நின்று விலக்குங்காலுஞ் சிறிதிடைபெறின் அதுவழியாக வந்து அஞர்செய்யு மாகலின் 'மறைப்பின்' என்றுங் கூறினான். நடுங்கஞர் = நடுங்கற்கேது ஆய அஞர். தாமியல்பாகக் கோடுதலுடைமையான் அவற்றை மிகுந்திக்கண் மேற் சென்றிடக்மாட்டாவாயின வென்பதுபட நின்றமையின், மன் ஒழி யிசைக்கண் வந்தது. (ஈ)

விளக்கம்:— 'விடற்குப் பிரியாத நட்பினையுடைய இவளது வளைந்த புருவங்கள் நடுநிலையுடையனவாய் இவளது கண்கள் என்மீது செல்ல வொட்டாது விலக்குமாயின், அப்புருவங்களைக் கடந்து இவள் கண்கள் நான் அடைந்ததாகிய துன்பத்தினை எனக்குச் செய்யமாட்டா' என்று தலைமகன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால் தம் நட்பினர்க்கு உறுதி கூறி நல்வழியில் நிறுத்த எண்ணியவர் தாம் முதலில் நடுநிலை இல்லாதவராய் இருப்பாராயின், அவர் தம் நட்பினர்க்கு உறுதி கூறும் வல்லமை யுடையராய் இராரென்றும், நடுநிலை யுடையாரே உறுதி கூறவல்லவராவாரென்றும், இவள் புருவங்கள் கோணாக நில்லாமல், வளைந்துள்ளனவாதலால், தம்மை மீறிச் செல்லுகின்ற கண்களுக்கு இடித்துப் புத்தி கூறும் தகுதியைப் பெறவில்லையென்றும், ஆதலால் இவள் கண்கள் எனக்குத் துன்பத்தைச் செய்கின்றன என்றும், புருவங் களின் சிறப்பையும் கண்களின் தகுதியையும் கூறியதாயிற்று.

1087. கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர் படாஅ முலைமேற் றுகில்.

அவண்முலைகளினுய வருத்தங் கூறியது.

(பரி.) இ-ள். மாதர் படா முலைமேற்றுகில் = இம்மாதர் படாமுலைகளின் மேலிட்ட துகில், — கடாக் களிற்றின்மேற் கட்படாம் = அவைகொல்லாமற் காத்தலின் கொல்வதாய மதக்களிற்றின்மேலிட்ட முகபடாத்தினையொக்கும்.

கண்ணை மறைத்தல்பற்றிக் 'கட்படாம்' என்றான். துகிலான் மறைத்தல் நாணுடை மகளிர்க் கியல்பாகலின், அத்துகிலாடே அவற்றின் வெம்மையும் பெருமையுங்கண்டு இத்தினையாற்றலுடையன இனி யெஞ்ஞான்றுஞ் சாய் வில வெனக் கருதிப் 'படாமுலை' என்றான். உவமை சிறிதுமறையாவழி உவை கொல்லுமென்பது தோன்ற நின்றது. (எ)

விளக்கம் :—'இப்பெண்ணின் சாய்தலில்லா முலைகளினுமேல் மூடிய வஸ்திரமானது அம்முலைகள் என்னைக் கொல்லாமல் என்னைக் காத்தலால், கொல்லும் குணத்தையே உடைய ஒரு மதயானையின் முகத்தை மூடிய முக படாம் என்னும் தினையையே ஒத்துள்ளது' என்று தலைவன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. மேல், ஆறு திருக்குறள்களில் தான் கண்ட பெண்ணின் கண்களின் சிறப்பையும் அக்கண்களால் தான் அடைந்த துன்பத்தையும் எடுத்துக் கூறிய தலைமகன் இத்திருக்குறளில் அவளது முலைகளின் சிறப்பினை எடுத்துக் கூறுவான் அவை கண்டார்க்கு மிகுதியும் விருப்பத்தைத் தருவனவும் பெருமையுடையனவும் ஆக இருக்கக்கண்டு இவ்வளவு தகுதியுடையனவாகிய முலைகள் எக்காலத்தும் சாய்வினையடையாவென்றும், அவற்றை மூடியுள்ள மேல் போர்வை இல்லாவிடில் அவை கொன்றே விடும் என்றும் அறிவித்தற்குப் படாமுலை என்றும், யானையின் முக படா மென்றும் உவமையால் கூறி மகிழ்ந்து நின்றான் என்று கூறியதாயிற்று.

1088. ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினு ணண்ணாரு முட்குமென் பீடு.

நுதலினுய வருத்தங் கூறியது.

(பரி.) இ-ள். ஞாட்பினுள் நண்ணாரும் உட்கும் என் பீடு = போர்க்களத்துவந்து நேராதபகைவரும் நேர்ந்தார் வாய்க்கேட் டஞ்சுதற்கேதுவாய

என்வலி—ஒண்ணுதற்கு உடைந்ததே=இம்மாதரதொள்ளிய நுதலொன்றற்குமே அழிந்துவிட்டது. எ-று.

மாதரென்பது அதிகாரத்தான் வந்தது. ஞாட்பினுளென்றதனாற் பகைவராதல் பெற்றாம். பீடென்ற பொதுமையான் மனவலியுங் காயவலியுங் கொள்க. ஓ வென்னும் வியப்பின்கட்குறிப்பு அவ்வலிகளது பெருமையும் நுதலது சிறுமையுந்தோன்றநின்றது. கழிந்ததற்கிரங்கலிற் றற்புகழ்தலன்றாயிற்று.

விளக்கம்:—'யுத்தகளத்து வந்து என்னிடத்துப் போர்செய்யாத பகைவரும், என்னிடம் வந்து போர்செய்து தோற்றுப் போனவர் வாய்ச் சொற்கேட்டுப் பயப்படக் கூடியதாகிய என் வலிமையானது இப்பெண்ணினது ஒளிதங்கிய நெற்றிஒன்றினுக்கோ தோற்றுவிட்டது' என்று தலைமகன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, மேல் முலைகளின் பெருமையைக் கூறிய தலைவன் இத்திருக்குறளில் அவள் நெற்றியினது ஒளியும் அவ்வொளியால் தனக்கு உண்டாகிய துன்பத்தினையும் உணர்ந்து போரில் சிறிதும் குறையாத தன்னுடைய மன வலிமையையும் தேக வலிமையையும் எண்ணி இவ்வித வல்லமையானது இவ்வளவு சிறியதாயிருக்கின்ற நெற்றி ஒன்றற்கோ தோற்று மயங்குகின்றது என்று மிகுதியும் இரங்கியவனாய் நெற்றியினால் தனக்குண்டாகிய துன்பத்தைக் கூறினானாயிற்று. இதனையே,

"கோம்பிக் கொதுங்கிமேயா மஞ்சை குஞ்சரங்கோ ளிழைக்கும்
பாம்பைப் பிடித்துப் படங்கிழித் தாங்கப்பணை முலைகேகே
தேம்பற் றுடியிடை மான்மடநோக்கி தில்லைச் சிவன்றா
ளாம்பொற் றடமலர் சூடுமென் னாற்ற லகற்றியதே"

என்னும் திருக்கோவையார் செய்யுளாலும் அறிதல்கூடும்.

1089. பிணையேர் மடநோக்கு நாணு முடையாட்
கணியெவனோ வேதில தந்து.

அணிநலத்தானாய வருத்தங் கூறியது.

(பரி.) இ-ள். பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்கு=புறத்து மான்பிணையொத்த மடநோக்கினையும் அகத்து நாணினையுமுடையளாய விவட்கு—ஏதில தந்து அணி எவன்=ஒற்றுமையுடைய இவ்வணிகளே யமைந்திருக்க வேற்றுமையுடைய வணிகளைப்படைத்தணிதல் என்னபயனுடைத்து,

மடநோக்கு = தெருவுதலுடைய நோக்கு. இவட்குப் பாரமாதலும் எனக் கணங்காதலுங் கருதாமையின், அணிந்தார் அறிவிலரென்பதாம். (கூ)

விளக்கம்:—'தேகத்தின் வெளிப்புறத்தில் பெண்மானின் கண்களை யொத்த மருண்ட பார்வையும், தேகத்தின் உட்புறமாகிய மனத்தினிடத்தே நாணமும் உடையவளாய இப்பெண்ணிற்குத் தேகத்தோடேயே எக்காலத்தும் விட்டுப் பிரியாத ஒற்றுமையுடைய இவ்விரண்டு அணிகள் மிகுதியும் பொருத்தமாக அமைந்திருக்கின்றன. அவைகளல்லாமல் இவள் தேகத்திற்கு அன்னியமாய் இருக்கக்கூடிய ஆபரணங்களைச்செய்து இவளை அலங்கரித்தல் என்ன பயனைத்தரும்?' என்று அவளது ஆபரணங்களால் உண்டாகிய அழகின் மிகுதியானது தன்னை வருத்தியமையைத் தலைவன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், அவளது கண்ணின் பார்வையானது தன்னை வருத்தியமையும், அவள் நாணமானது தான் அவளை அணைவதற்கு இடங்கொடாமல் நின்றமையும், அவளது இயற்கை யழகோடு செயற்கையழகாகப் பல ஆபரணங்களையும் செய்து அவளுக்கு இட்டிருக்கும் நலத்தையும் பார்ப்பவனாகிய தான் மேலும் மேலும் துன்பப் பிணிவதைப்பற்றிக் கூறினனென்றதாயிற்று.

1090. உண்டார் கணல்ல தடுநருக் காமம்போற் கண்டார் மகிழ்செய்த லின்று.

நலமகள் குறிப்பறிதலுற்றன் சொல்லியது.

(பரி.) இ-ள். அடுநரு = அடப்படுநரு,—உண்டார்கண் அல்லது = தன்னை யுண்டார்மாட்டு மகிழ்ச்சியைச் செய்வதல்லது,—காமம்போல் கண்டார் மகிழ்செய்தல் இன்று = காமம்போலக் கண்டார்மாட்டு மகிழ்ச்சியைச் செய்தலுடைத்தன்று. எ-று.

அடுநரு—வெளிப்படை. காமமென்றது ஈண்டு அது நுகர்தற்கிடனாகியாரை. கண்டார்கணென்னு மேழாவது இறுதிக்கட்டொக்கது. மகிழ்செய்தற்கட் காமம் நறவினுஞ் சிறந்ததே யெனினும் இவள் குறிப்பாராய்ந்தறியாமையின் யானது பெற்றிலேனெனக் குறிப்பெச்சம்[1] வருவித்துரைக்க, "அரிமயிர்த்திரண்முன்கை"* என்னும் புறப்பாட்டிற்குறிப்புபோல. (ம)

விளக்கம்:—'காய்ச்சிய கள்ளானது தன்னை யுண்டவர்களுக்கு மகிழ்வினை உண்டுபண்ணுவதே யல்லாமல் காமம் போலத் தன்னைக் கண்

* புறநானூறு, 11.

டவர்களுக்கும் மகிழ்ச்சியை உண்டுபண்ணுந் தகுதியுடையதன்று என்று தலைமகளது உள்ளக் குறிப்பினை அறிய எண்ணியவனுகிய தலைமகன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தலைவனுவன் தலைவியின் குறிப்பு இதுவென அறியவேண்டி உண்ட பிறகு மகிழ்ச்சியைத்தரும் கள்ளினைக் காட்டிலும் காம இன்பம் நுகர்தற்கு உரிய இருவர் ஒருவரை ஒருவர் கண்டவுடன் மகிழ்ச்சியைத் தரும் காம இன்பமானது, இப்போது என் எதிரில் நின்று தன் அழகால் என்னைத் தன்புறுத்தி நிற்கின்ற இவளுடைய குறிப்பை யான் அறிவதற்கு இல்லையாதலால், கண்டதாலாகிய மகிழ்ச்சியைத் தருவதற்கில்லை என்று குறிப்பினை அறியவேண்டிக் கூறினனாயிற்று.

---

110 அதிகாரம்.

குறிப்பறிதல்.

(பரி.) *அஃதாவது தலைமகன் தலைமகள் குறிப்பினையறிதலும், தோழி குறிப்பினையறிதலும், அவடான் அவ்விருவர்குறிப்பினையு மறிதலுமாம். தகை யணங்குற்ற தலைமகன் றலைமகளைக்கூடுங்கால் இது வேண்டுமாகலின், தகை யணங்குறுத்தலின்பின் வைக்கப்பட்டது.*

விளக்கம்:—அதாவது, மேல் அதிகாரத்தில் பத்தாவது திருக்குறளில் 'தலைமகளைக் காணப்பெற்றும் அவள் குறிப்பினை அறியாது வருந்துகின்றேன்' என்று கூறிய தலைமகன் இனி அத்தலைமகளது குறிப்பினை அறிதலும், அவளைவிட்டுப்பிரியாத தோழியினது குறிப்பினை அறிதலும், அத்தோழியும் தலைமகன், தலைமகள் ஆகிய அவ்விருவர் குறிப்பினையும் அறிதலும் ஆகும். மேல் தலைமகளது உருவத்தின் அழகால் வருந்திய தலைமகன் தலைமகளைத் தன் வயமாக்கித் தன்னைக் கூட வேண்டுகின்றுனுதலின், இக்குறிப்பறிதல் என்னும் அதிகாரம் தகையணங்குறுத்தல் என்னும் அதிகாரத்திற்குப் பின் வைக்கப்பட்டுள்ளது.

1091. இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு நோய்நோக்கொன் றத்நோய் மருந்து.

தலைமகன்றலைமகளுளப்பாட்டுக்குறிப்பினை அவனேக்கினனறித்தது.

(பரி.) இ-ள். இவள் உண்கண் உள்ளது இருநோக்கு=இவளுடைய வுண்கணகத்ததாய நோக்கு இதுபொழுது என்மேலிரண்டு நோக்காயிற்று;— ஒரு நோக்கு நோய்நோக்கு ஒன்று அந்நோய் மருந்து=அவற்றுள் ஒரு நோக்கு எனக்குஞ்செய்யுநோக்கு, வேனயது அந்நோய்க்கு மருந்தாய நோக்கு, எ-று.

உண்கண்=மையுண்டகண். நோய்செய்யுநோக்கு=அவண்மளத்தினுய காமக்குறிப்பினை வெளிப்படுக்கின்றநோக்கு. மருந்தாய நோக்கு=தன்கணி கழ்கின்ற அற்புநோக்கு. நோய்செய்யுநோக்கினைப் பொதுநோக்கென்பாரு முளர். அது நோய்செயிற் கைக்கிளையாவதல்லது அகமாகாமையறிக. இவ் வருத்தந்தீரும் வாயிலுமுண்டாயிற்றென்பதாம். (க)

விளக்கம்:—'இவளுடைய மையுண்ட கண்ணின் பார்வையானது இப்பொழுது என் மேல் இரண்டு பார்வையாய் உள்ளது. அவ்விரண்டு பார்வையுள் ஒரு பார்வையானது எனக்கு நோயினை உண்டி பண்ணும் பார்வையாயும், மற்றொன்று அந்நோயினை உண்டுபண்ணிய பார்வைக்கு மருந்தாகிய பார்வையாயும் உள்ளது' என்று தலைமகன் கூறியதாக இத் திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தலைமகனவன் தலைமகளுடைய மனத்தின் குறிப்பினை அவள் பார்வையால் அறிந்தாலால் அவள் மனத்தில் காமக்குறிப்பினை வெளிப்படுத்துகின்ற பார்வையினைத் தனக்கு நோய் செய்யும் பார்வையாகவும், பின்னர்த் தன்னிடத்து அன்புடைய வளாய்த் தனக்கு இசைய விரும்புவாள் போன்று பார்க்கின்ற பார்வை யைத் தனக்குற்ற காமநோயினை நீக்கும் மருந்தாகவும் கொண்டானென்ப தாயிற்று.

இதனை,

"அணியுமமிழ்து மென்னுவியு மாயவன் றில்லைச்சிந்தா
மணியும் பாரதியா மறையோனடி வாழ்த்தலரிற்

"அரிவை நாட்ட மகத்துகிழ் வேட்கை
தெரிய வுணர்த்துங் குரிசிற் கென்ப" என்னும் அகப்பொருள் விளக்கச் சூத்திரமும் இக்கருத்தினையே வலியுறுத்தும்.

பிணியு மதற்குமருந்தும் பிறழப்பிறழ மின்னும்
பணியும் புரைமருங்குற் பெருந்தோளி படைக்கண்களே"

என்னும் திருக்கோவையார் செய்யுளாலும் அறிதல் கூடும்.

1092. கண்களவு நொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற் செம்பாக மன்று பெரிது.

இருவுமது.

(பரி.) இ-ள். கண் களவுகொள்ளும் சிறுநோக்கம்=இவள் கண்கள் யான காணுமல் என்மேலுக்குகின்ற அருகியநோக்கம்—காமத்தில் செம் பாகம் அன்று பெரிது=மெய்யுறுபுணர்ச்சியின் ஒத்த பாதியளவன்று, அத னினுமிகும். எ-று.

தானுக்கியவழி நாணியறைஞ்சியும் நோக்காவழி உற்றுநோக்கியும் வருதலாற் 'களவுகொள்ளும்' என்றும், அஃதளதாங்காலஞ் சிறிதாகலிற் 'சிறுநோக்கம்' என்றும், அஃது உளப்பாடுள்வழி நிகழ்வதாகலின் இனிப் புணர்தல் ஒருதலையென்பான் 'செம்பாகமன்று பெரிது' என்றுங் கூறினான்.

விளக்கம்:—'இவளுடைய கண்கள் யான் பாராவண்ணம் என் மேல் பார்க்கின்ற சுருங்கிய நோக்கமானது மெய்யுறு புணர்ச்சியினால் அடைகின்ற இன்பத்தின் ஒரு பாதியளவாக இராமல் அதற்கு மேற் பட்டும் உள்ளது' என்று தலைவன் கூறியதாக இத்திருக்குறள் கூறு கின்றது. அது என்னையோவெனின்? தான் அவளைப் பார்த்தவிடத்து அவள் தன்னைப் பாராது நாணத்தால் தலை கவிழ்ந்தும், தான் அவளைப் பாராவிடத்து அவள் தன்னை உற்றுப் பார்த்தும் வருகின்றுளாதலால், அவ்விதம் பார்ப்பது வெகு சிறுபொழுது ஆதலின் அவ்வித நோக்கத் தைச் சிறுநோக்கமென்று கூறியதுடன், அச்சிறு பார்வையானது புணர்தற்கு உரிய மனப்பாங்கினைத் தெரிவித்தலால் தான் அவளைப் புணர்வது நிச்சயமென்றும், அதனால் உண்டாகும் இன்பமானது புணர் வதாலுண்டாகும் இன்பத்தின் ஒரு பாதிக்கு மேற்பட்டதா யிருக்கின் றது என்றும் அவளது மனக்குறிப்பினைத் தலைவன் அறிந்து கூறிய தாயிற்று.

1093. நோக்கினு நோக்கி யிறைஞ்சினு ளஃதவள் யாப்பினு ளட்டிய நீர்.

நோக்கினுநாணினுமறிந்தது.

(பரி.) இ-ள். நோக்கினுள்=யானுக்காவளவிற் ரூனென்னையன்போடு நோக்கினுள்,—நோக்கி இறைஞ்சினுள்=நோக்கி ஒன்றினையுட்கொண்டு நாணி இறைஞ்சினுள்,—அஃது யாப்பினுள் அவள் அட்டிய நீர்—அக்குறிப்பு இருவேமிடையுந் தோன்றிய அற்புப்பயிர்வளர அதன்க ணவன்வார்த்த நீரா யிற்று. எ-று.

அஃதென்னுஞ் சுட்டுப்பெயர் அச்செய்கைக்கேதுவாய குறிப்பின்மே னின்றது. யாப்பினுளுயதனை 'யாப்பு' என்ரூர். ஏகதேசவுருவகம்.' (கு)

விளக்கம்:—'யான் அவளைப் பாராதவிடத்து அவள் என்னை அன்போடு பார்த்தாள். அவ்விதம் பார்த்து ஒன்றினை மனத்தில் உட் கொண்டு நாணத்தினால் தலைவணங்கினாள். அவ்விதம் செய்த குறிப்பா னது எங்கள் இருவருக்கும் நடுவே உண்டாகிய அன்பு என்னும் பயிரா னது வளர அப்பயிரினிடத்தில் அத்தலைவி வார்த்த தண்ணீராயிற்று' என்று தலைமகன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால் தலைமகளுக்கு இயற்கையாக அமைந்த பார்வையையும், அப்பார்வையோடு இயல்பாக அமைந்த நாணத்தையும் எடுத்துக்கூறியதுபோல் அவள் குறிப் பும் தனக்கு இசைந்ததாக உள்ளது என்று அறிந்தானதலால், தங்கள் இருவருடைய அன்பும் இனி வளரும் தன்மையுடையதாகும் என்று தன்மீது அவளுக்கு உள்ள அன்பின் மிகுதியையும் எடுத்துக் கூறினை னையிற்று.

1094. யானுக்குங் காலை நிலனுக்கு நோக்காக்காற் ரூனுக்கி மெல்ல நகும்.

நாணினுலுமகிழ்ச்சியினுலுமறிந்தது.

(பரி.) இ-ள். யான் நோக்குங் காலை நிலன் நோக்கும்=யான்றன்னை நோக்குங்காற் ரூனெதிர்நோக்காது இறைஞ்சி நிலத்தை நோக்காநிற்கும்,—நோக்காக்கால் தான் நோக்கி மெல்ல நகும்=அஃதறிந்தியானுக்காக்காற் ரூனென்னைநோக்கித் தன்னுள்ளே மகிழாநிற்கும். எ-று.

மெல்ல=வெளிப்படாமல். மகிழ்ச்சியாற் புணர்தற்குறிப்பினிதுவினாங் கும். மெல்லநகு மென்பதற்கு முலுவலிக்குமென்றுரைப்பாரு மூளர். (ச)

விளக்கம் :—'யான் அவளைப் பார்க்கு மிடத்து அவள் என்னை எதிர்முகமாகப் பாராது தலைவணங்கி நிலத்தைப் பார்த்த வண்ணமாக நிற்கின்றாள்; அவ்விதம் அவள் செய்வதை யான் அறிந்து அவள் தன்னை நான் பாராதபோது அவள் என்னைப் பார்த்து தனக்குள்ளேயே மகிழ்ச்சி யடைகின்றாள்' என்று தலைவன் கூறியதாக இத்திருக் குறள் கூறுகின்றது. இதனால், மேல் திருக்குறளில் அவளது பார்வையா லும், நாணத்தாலும் அன்பென்னும் பயிரை வளர்க்கின்றாள் என்று கூறிய தலைவன் இத்திருக்குறளால் நாணத்தோடு அவளிடத்துத் தோன் றும் மகிழ்ச்சியையும் அவள் சிரிப்பினாலறிந்து இனி இவளிடத்திப் புணர்தல் குறிப்பு உண்டாகின்றது என்று கூறினானயிற்று.

1095. குறிக்கொண்டு நோக்காமை யல்லா லொருகண் சிறக்கணித்தாள் போல நகும்.

இதுவுமது.

(பரி.) இ-ள். குறிக்கொண்டு நோக்காமை அல்லால்=நேரே குறிக் கொண்டு நோக்காதுணையல்லது—ஒருகண் சிறக்கணித்தாள் போல நகும் =ஒருகண்ணைச் சிறங்கணித்தாள்போல என்னை நோக்கிப் பின் றலா னுள்ளே மகிழாநிற்கும். எ-று.

சிறக்கணித்தாளென்பது செய்யுள் விகாரம். சிறங்கணித்தல்=சுருங்கு தல். அது தானும் வெளிப்பட நிகழாமையிற் போலவென்றான். நோக்கி யென்பது சொல்லெச்சம். இனி யிவளை யெய்துதல் ஒருதலையென்பது குறிப் பெச்சம். (கு)

விளக்கம் :—'இவள் என்னை நோக்கக்குறித்துப் பாராத தன்மை யோடி இருக்கினும் ஒரு கண்ணினைச் சுருக்கிப் பார்ப்பதுபோல் என் னைப் பார்த்த பிறகு தனக்குள்ளேயே மகிழ்ந்து நிற்கின்றாள் என்று தலைமகன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. மேல் திருக்குறளில் அவள் கொண்ட மகிழ்ச்சியினால் புணர்ச்சிக் குறிப்பினை அறிந்த தலை மகன் இத்திருக்குறளில் அவள் சுருங்கிய பார்வையுடன் தன்னைக்கண்டு மகிழ்ச்சி யடைவதை நோக்கியவுடன் இம்மகிழ்ச்சிக் குறிப்பினால் இனி இவளை நான் அடைவது நிச்சயமாயிற்று என்று கூறினானயிற்று.

1096. உரு அ தவர்போற் சொலினுஞ் செரு அர்சொ
லொல்லை யுணரப் படும்.

தோழிசேட்படுத்தவழி அவள்குறிப்பறிந்த தலைமகன்
தன்னுள்ளே சொல்லியது.

(பரி.) இ-ள். உரு தவர்போல் சொலினும் = புறத்து நொதுமலர் போலக் கடுஞ்சொற்சொன்னராயினும்,—செரு ர் சொல் ஒல்லை உணரப் படும் = அகத்துச் செறுதலிலாதார்சொற் பிறபயத்தல் குறையுற்றாற் கடிதினறியப்படும். எ-று.

கடுஞ்சொலென்பது இவ்விடங்காவன்மிகுதியுடைத்து வரற்பாலிரல்லீரென்றன் முதலாயின. செருரெனவே, அருளுடைமை பெறப்பட்டது. தன் குறை முடிக்கக்கருதியே சேட்படுக்கின்றமை குறிப்பானறிந்து, உலகியன் மேலிட்டுக் கூறியவாறு. இது வருகின்ற பாட்டிற்கு மொக்கும். (சு)

விளக்கம்:—'பகையும் நட்புமில்லாத நொதுமலர் போலக் கடுமை யாகிய சொற்களைச் சொன்னராயினும் மனத்துப் பகை இல்லாதவர் சொற்கள் அக்கடுஞ் சொற்களுக்கு மாறுகிய பயனே உண்டுபண்ணுதல் குறைகொண்டு நின்றாரால் விரைவில் அறிந்து கொள்ளுதல் கூடும்' என்று தலைவன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது; தலைவி தன்னை நோக்கவும் தான் அவள் குறிப்பை அறிந்து இனி இவளை அடைவது நிச்சயம் என்று மனத்துட் கொண்டு இருந்த தலைமகனைக் கண்ட தோழியானவள் தன் கடமையை முடிக்கவேண்டி ' நீவிர் யார்? இங்கு யாரும் வருதல் கூடாது; இவ்விடமோ மிகுந்த காவலோடு கூடியது; இனி நீர் இங்கு வராதிருக்கக் கடவீர்' என்பது முதலாக தலைவி தலைவராகிய இருவரது குறிப்பையும் அறிந்து கூறுகின்ற சொற்களைக் கேட்டு 'இத்தோழியானவள் நம்மிடத்து அருளுடையளாதலால் நம்முடைய குறையை முடிக்க எண்ணியே நம்மை இவ்வித கடுஞ் சொற்களால் அகற்றுகின்றாள். ஆயினும் அவள் வாயினின்றும் தோன்றுகின்ற கடுஞ் சொற்களின் பயனை நாம் இனி அடையாது அதற்கு மாறுகிய அருளின் பயனையே நாம் அடைவது நிச்சயம்' என்று தோழி தன்னை இடத்தைவிட்டு அகலும்படிக் கூறிய சொற்களால் 'இவள் கூறியது குறிப்பாகுமே யல்லாமல் உண்மையல்லை' என்று அவள் குறிப்பறிந்து தலைமகனவன் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டானென்பதாயிற்று.

1097. செறுஅச் சிறுசொல்லுஞ் செற்றார்போ னேக்கு முறுஅர்போன் றுற்றார் குறிப்பு.

இதுவுமது.

(பரி.) இ-ள். செறுச் சிறுசொல்லும்=பின்னினிதாய் முன்னின்ன தாய சொல்லும்—செற்றார்போல் நோக்கும்=அகத்துச் செறுநருருத்தே புறத்துச் செற்றார்போன்ற வெகுளிநோக்கும்—உறார்போன்று உற்றார் குறிப்பு=நொதுமலர்போன்று நட்பாயினர்க்கு ஒரு குறிப்புப்பற்றி வருவன. எ-று.

குறிப்பு—ஆகுபெயர். இவை உள்ளேயொரு பயன்குறித்துச் செய்கின்றன இயல்பல்லவாகலான், இவற்றிற்கஞ்சவேண்டாவென்பதாம். (எ)

விளக்கம்:—'பின்னர் இனிமையுடையதாய் முன்பு துன்பம் தருவதாகிய சொல்லும், மனத்துள் பகையில்லாதிருந்தே வெளியில் பகை கொண்டார்போன்ற கோபப்பார்வையும், பகையும் நட்புமில்லாத நொதுமலர்போல் காண்பித்து உள்ளே நட்பு கொண்டு உள்ளவர்களுக்கு ஏதோ ஒர்குறிப்பினல் உண்டாகி வருவனவாகும்' என்று தலைமகன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தலைவன் தன்னைத் தோழி அகற்றுகின்ற காலத்து 'இவள் சொல்லுகின்ற கடுஞ்சொற்கள் இப்போது துன்பம் தருவதாக இருக்கினும் பின்னர் இன்பம் பயப்பனவாக இருப்பதாலும், மனத்துள் கோபியாமலே வெளியில் கோபிப்பாள் போன்று பார்க்கின்ற கோபப்பார்வைபானது பகையும் நட்புமில்லாத நடுவாயுள்ளவர்கள் நட்புகொள்ளுவதற்கு உற்ற குறிப்பாயுள்ளதாலும், இவையெல்லாம மனத்திற்குள் ஏதோ ஒரு பயனைக் குறித்துச செய்யப்படுகின்றனவே அன்றி இயல்பாக உண்டாவனவன்று; ஆகவே இவற்றிற்கு அஞ்சவேண்டுவதில்லை' என்னும் குறிப்பினை அறிந்தானென்று கூறியதாயிற்று.

1098. அசையியற் குண்டாண்டோ ரேளர்யா னேக்கப் பசையினள் பைய நகும்.

தன்னைநோக்கி மகிழ்ந்த தலைமகளைக்கண்டு தலைமகன் கூறியது.

(பரி.) இ-ள். யான் நோக்கப் பசையினள் பைய நகும்=என்னையகற்று மென்ற சொற்காற்றுதியானிரக்குநோக்கியவழி அஃதறிந்து நெகிழ்ந்து உள்ளே மெல்ல நகாநின்றாள்,—அசை இயற்கு ஆண்டு ஓரோர் உண்டு=அதனால்

தடங்கிய வியல்பினையுடையாட்கு அச்சுகையின்கண்ணே தோன்றுகின்ற தோர் நன்மைக் குறிப்புண்டு. எ-று.

ஏர்—ஆகுபெயர். அக்குறிப்பு இனிப்பழுதாகா தென்பதாம். (அ)

விளக்கம்:—'தோழியானவள் என்னை இடம்விட்டுச் செல்லும்படி அகற்றுகின்ற கடுஞ் சொற்களுக்கு யான் சகிக்கமுடியாது அவளைக் கெஞ்சிப் பார்த்தவிடத்து அப்பார்வையை அறிந்து மனமிளகி உள்ளுக் குள்ளேயே மெதுவாகச் சிரிக்கின்றாளாதலால் நடங்கிய இயல்பினை யுடைய தலைவியின் மெதுவாகிய சிரிப்பினிடத்தே காணப்படுவதாகிய ஒரு நன்மைக் குறிப்பு உள்ளது' என்று தன்னை நோக்கி மகிழ்ச்சி யடைந்த தலைமகளைப் பார்த்து தலைமகன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், மேல் திருக்குறளில் தோழியினுடைய கடுஞ் சொற்களுக்கும், கோபப்பார்வைக்கும் பயப்பட வேண்டுவதில்லை என்று தனக்குள்ளே தீர்மானித்து நின்ற தலைவன் இத்திருக்குறளில் தோழி யின் சொற்களுக்கு வருந்திக் கெஞ்சிய பார்வையுடன் நிற்கின்ற தன்னைக் கண்டு தலைமகள் மகிழ்வுற்றனள் என்று அறிந்தானாதலால், இனிப் புணர் தல் தடைப்படாது என்று கூறினானுமாயிற்று.

1099. எதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல் காதலார் கண்ணே யுள.

தோழி மதியுடம்படுவாடன்னுள்ளே சொல்லியது.

(பதி.) இ-ள். எதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்=முன்னறி யாதார்போல ஒருவரையொருவர் பொதுநோக்கத்தானேக்குதல்—காதலார் கண்ணே உள=இக்காதலையுடையார்கண்ணே யுளவாகாநின்றன. எ-று.

பொதுநோக்கு=யாவர்மாட்டும் ஒருதன்மைத்தாய நோக்கு. நோக்குதற் றொழில், ஒன்றேயாயினும் இருவர்கண்ணு நிகழ்தலானும், ஒருவர்கட்டானுங் குறிப்பு வேறுபாட்டாற் பலவாமாகலானும், 'உள' எனப் பன்மையாற் கூறப் பட்டது. இருவரும் மதுமறைத்துண்டோர் மகிழ்ச்சிபோல உள்ளத்துள்ளே மகிழ்தலின் அதுபற்றிக் 'காதலார்' என்றும், அது புறத்து வெளிப்படாமை யின் 'எதிலார்போல' என்றுங் கூறினாள். (கு)

விளக்கம்:—'இக்காதலை யுடையார் இருவருமே முன்னர் ஒரு வரை யொருவர், அறியாதார்போல் பார்க்கின்ற பார்வையை யுடையவர்க ளாய் உள்ளனர்' என்று தோழி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்

றது. அதாவது அவ்விருவர் குறிப்பிற்கும் உடன்படுவாளாகிய தோழி அவ்விருவர் பார்வையையும் பார்த்தகாலத்து 'இவ்விருவரும் கள்ளினே மறைவாக உண்டு அதனால் உண்டாகிய மகிழ்ச்சியையுடையவர்கள்போல மனத்துள்ளே மகிழ்ச்சியையடைகின்ற காதலராக இருந்தும், அம்மகிழ்ச்சி வெளிப்படாது ஒருவரை யொருவர் பொது நோக்கு என்னும் யாவரையும் பார்க்கும் பார்வையுடையவராய் நடித்துக் காட்டுகின்றனர். ஆதலால் இவ்விருவர் கருத்திற்கும் நான் உடன்பட வேண்டியவளாக இருக்கின்றேன்' என்று தலைமகன் தலைமகள் ஆகிய இருவருடைய குறிப்பினையும் அறிந்து தனக்குள்ளேயே சொல்லியதாயிற்று.

1100. கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்
சொல்லென்ன பயனு மிலை. [சொற்க

இருபதாவது.

(பரி.) இ-ள். கண்ணொடு கண்ணினை நோக்கு ஒக்கின்=காமத்திற் குரிய விருவருள் ஒருவர்கண்களோடு ஒருவர்கண்கள் நோக்காலொக்குமாயின்,—வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல=அவர் வாய்மைதோன்றச் சொல்லுகின்ற வாய்ச்சொற்கள் ஒருபயனு முடையவல்ல. எ-று.

நோக்காலொத்தல்=காதலெனக்கினவாதல். வாய்ச்சொற்கள்=மனத்தின்கணின்றி வாயளவிற் மேன்றுகின்ற சொற்கள். இருவர்சொல்லுக்கேட்டு உலகியன்மேல் வைத்துக் கூறியவாறு. இருவர்சொல்லுமாவன=அவள் புனங்காவன்மேலும் அவன் வேட்டத்தின்மேலுஞ் சொல்லுவன. பயனில்சொற்களாகலின், இவை கொள்ளப்படாவென்பதாம். இவை புணர்தனிமித்தம். (ம)

விளக்கம் :—"காம இன்பம் அனுபவித்தற்கு உரிய இருவருள் ஒருவர் கண்களோடு ஒருவர் கண்கள் பார்வையால் ஒத்திருக்குமாயின், அவ்வித்தம் ஒத்த பார்வையையுடைய அக்காதலர் தாங்கள் ஒருவரை யொருவர் அறியார்போல் பிறர்நம்பும்படிச் சொல்லுகின்ற சொற்கள் ஒரு பயனையும் உடையன அல்ல" என்று தோழி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், மேல் திருக்குறளில் காதல் நோக்கு உடையவராயிருந்தும், யாவரையும் பார்க்கும் பொது நோக்கங்கொண்டு நடிக்கின்றாயினும் அவ்விருவரும் காதலரேயாவர் என்று தீர்மானித்த தோழியானவள் பின்னர் ஒருவருக்கொருவர் உற்றுப்பார்க்கின்ற பார்வையைக் கண்டாளாதலால் இவர்கள் இருவரும் ஒருவரையொருவர் விரும்புகின்ற காத

லராகவே இருக்கின்றனர் இவரை நாம்வினவும் காலத்தத்தலைவியானவள் 'நான் தினைப்புனத்தைக் காத்து நிற்கின்றேன். அவன் யாரோ அறிகிலேன்' என்று சொல்லுகின்ற சொற்களும், அவன் 'மான் ஒன்றைத் தேடி வேட்டையின் பொருட்டு இங்கு வந்தேன். அம்மானைக் கண்ட துண்டோ' என்ற சொற்களும் பயன்படாத சொற்களாதலால், அவற்றை நான் போற்கொண்டு நிற்பதில் பயனில்லை. இனி, இவ்விருவரும் தம் இச்சையின் வண்ணம் இருக்கலாகும் என்று புணர்தல் நிமித்தம் கூறித் தோழி அவ்விருவருக்கும் உடனபடுவாளாயினள் என்ப தாயிற்று. இவ்வாறு தோழி கூறுவதை,

"மெய்யே யிவற்கில்லை வேட்டையின்மேன் மனமீட்டிவளும்
பொய்யே புனத்தினை காப்பதறை புலியூர னீயாண்
மையேர் குவளைக்கண் வண்டினம்வாழுஞ் செந்தாமரைவா
யெய்யே மெனினுங் குடைந்தின்பத்தே னுண்டெழிதருமே"

என்னும் திருக்கோவையார் செய்யுளாலும் அறிதல் கூடும்.

111. அதிகாரம்.

புணர்ச்சிமகிழ்தல்.

(பரி.) அஃதாவது அங்ஙனங்குறிப்பறிந்து புணர்ந்த தலைமகன் அப் புணர்ச்சியினை மகிழ்ந்துகூறல்.* அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

விளக்கம் :—அதாவது, தலைமகன் தலைவியின் குறிப்பினையும் தோழியின் குறிப்பினையும் அறிந்தானதலால், இனி இவ்விதம் 'வடகடலிருந்த நூக்கத்தடியின் தூலவழியே தென் கடலிருந்த கழி ஒன்று சென்று நுழைந்ததிபோல், எவ்விடத்தோ இருந்த என்னையும் இவளையும் ஒன்று சேரும்படிச் செய்து புணர்தல் குறிப்பினை உண்டுபண்ணிய ஊழ் ஒன்றே சிறந்ததோர் தெய்வமாகும். ஆகலால், அத்தெய்வமே இவளோடு நான் புணர்வதற்குத் தூணையாகும்' என்று எண்ணிப் புணர்ந்தான். புணர்ந்த தலைமகனைவன் தான்புணர்ந்த புணர்ச்சியையும் உண்டா

*அகப்பொருள் விளக்கத்துள்ள "கலந்துழி மகிழ்தலு நலம்பாராட்டலு, மேற்புற வணிதலு மென்னு மிம்மூன்றும், போற்றிய தெய்வப் புணர்ச்சியின் விரியே" என்னும் சூத்திரமும் இங்கு உணர்தற்பாலது.

கிய மகிழ்ச்சியைபும் கூறுவது இயல்பாதலாலும், குறிப்பறிந்த பின்னரே புணர்ச்சி நிகழ்ந்து அதனை மகிழ்கின்றான் ஆதலாலும் புணர்ச்சிமகிழ்தல் என்னும் இவ்வதிகாரத்தைக் குறிப்பறிதல் என்னும் அதிகாரத்திற்குப் பின் வைத்தனர்.

1101. கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு மொண்டொடி கண்ணே யுள.

இயற்கைப்புணர்ச்சி யிறுதிக்கட் சொல்லியது.

(பரி.) இ-ள். கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும்=கண்ணுற்கண்டும் செவியாற்கேட்டும் நாவாலுண்டும் மூக்கான்மோந்தும் மெய்யாற்றீண்டியும் அனுபவிக்கப்படு மைம்புலனும்--ஒண்டொடி கண்ணே உள=இவ்வொள்ளிய தொடியையுடையாள்கண்ணே யுளவாயின எ-று.

ஊம்மை—முற்றும்மை. தேற்றேகாரம் வேறிடத்தின்மை விளக்கிற்று. வேறுவேறுகாலங்களில் வேறுவேறு பொருள்களானனுபவிக்கப் படுவன ஒரு காலத்து இவள்கண்ணே யனுபவிக்கப்பட்டனவென்பதாம். வடநூலார் இடக்கர்ப்பொருளவாகச் சொல்லிய புணர்ச்சித்தொழில்களும் ஈண்டடக்கிக் கூறப்பட்டன. (க)

விளக்கம் :—"கண்ணால் பார்த்தும், காதால் கேட்டும், நாவினால் உண்டும, மூக்கினால் மோந்தும், தேகத்தினால் தீண்டியும் அனுபவிப்பதற்கு வேண்டிய ஐந்து புலன்களும் இவ்வொளிதங்கிய வளையலை அணிந்தாள் இடத்துப் பொருந்தி இருக்கின்றன" என்று தலைமகன் ஊழ்வலியால் நேர்ந்த புணர்ச்சிக்குப் பிறகு கூறினனென்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், குறிப்பறிந்து புணர்ந்த தலைமகன் அவளிடத்தே உண்டாகிய இன்பத்தின் மிகுதியை எடுத்துக் காட்டினான் வேண்டி வேறுவேறு காலங்களில் வேறுவேறு பொருள்களால் அனுபவிக்கக் கூடியவைகளாகிய இன்பங்களையெல்லாம் இவளிடத்து ஒரு காலத்திலேயே அடைந்தானதலால், தான் ஐம்புலன்களும் ஆர அனுபவித்த புணர்ச்சித் தொழில்களை அடக்கிக்கூறினானாயிற்று. அன்றியும், பரிமேழகர்கூறும் வண்ணமவடநூலார் கூறும் அறுபத்துநான்கு விதமாகிய புணர்ச்சித்

* இத்திருக்குறள் சேரமான் பெருமாள் நாயனார் திருக்கைலாய ஞான உலாவில் எடுத்தாளப்பட்டுள்ளது.

தொழில்களுள் இடக்கர்ப் பொருளவாகச் சொல்லுகின்ற புணர்ச்சித் தொழில்கள் இரண்டினையும் இவன் கூறினன் என்பது ஆயிற்று. ஆதலால், தான் இவளிடத்துக் கண்ட இன்பம் வேறு எவ்விடத்தும் காண்பதற்கு இல்லையென்று வியந்து கூறியதுமாம்.

1102. பிணிக்கு மருந்து பிறமன் னணியிழை
தன்னெஞ்சுக் குத்தானே மருந்து.

இடந்தலைப்பாட்டின்கட் சொல்லியது.

(பதி.) இ - ள். பிணிக்கு மருந்து பிற = வாத முதலிய பிணிகட்கு மருந்தாவன அவற்றிற்கு நிதானமாயினவன்றி மாறுபயில்பினையுடையனவாம்;—அணியிழை தன் நோய்க்கு மருந்து தானே = அவ்வாறன்றி இவ் வணியிழையினையுடையாள் தன்னினைய பிணிக்கு மருந்தும் தானேயாயினள். எ - று.

இயற்கைபுணர்ச்சியை நினைந்து முன்வருந்தினளாகலின், 'தன்னெஞ்' என்றும், அவ்வருத்தம் தமியளே யிடத்தெதிர்ப்பட்டுத் தீர்ந்தனளாகலின் 'தானே மருந்து' என்றும் கூறினன். இப்பிணியும் எளியவாயவற்றுற் றீரப் பெற்றிலமென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக் கண் வந்தது. (உ)

விளக்கம்:—"வாதம், பித்தம், சிலேத்தும்மம் ஆகிய நோய்களுக்கு மருந்தாக இருப்பன அந்நோய்களுக்கு ஒற்றுமை யுடையனவா யில்லாமல் மாறுபட்ட இயல்பினையுடையனவா யுள்ளன. ஆனால் இவ்வழகிய ஆபரணத்தை யுடையவளோ அவ்விதம் அல்லாமல் தன்னுல் உண்டாகிய நோய்க்குத் தானே மருந்தாமாக இருக்கின்றாள்" என்று புணர்ச்சி மகிழ்தலில் தலைமகன் கூறினனென்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால் மேல் திருக்குறளில் தனக்கு நேர்ந்த இயற்கைப் புணர்ச்சியின் கடைசியில் தனக்குள்ள மகிழ்ச்சியைச் சொல்லிய தலைமகன் இத்திருக்குறளில் குறித்த இடத்திலேயே தலைவியைச் சந்தித்துப் புணர்ச்சியை மகிழ்ந்தானதலால் இதற்கு முன்னரெல்லாம் புணர்ச்சியை நினைந்து வருந்திய வருத்தத்தைத் தலைவியால் உண்டாகிய நோயென்றும், இப்போது குறித்த இடத்தில் அவளைக் கண்டு புணர்ந்து மகிழ்தலால் அவ் வருத்தமென்னும் நோயினைத் தீர்த்துக் கொள்வதற்கு அவளே மருந்துமாயினள் என்றும் கூறினனுமிற்று. அதுவன்றியும் ஏனைய நோய்களைத் தீர்க்கும் வேறுபட்ட மருந்துகள் போல் அல்லாது இவளால்

உண்டாகிய நோய்க்கு இவளே மருந்தாய் நின்றதால் தீர்ந்ததென்றும் அவ்வாறு அல்லாது ஏனைய மாதர்களால் தீர்த்துக்கொள்ளுதல் ஆகாதென்றும், இவளால் உண்டாகிய காம நோயினைத் தணிப்பதற்கு இவள் ஒருத்திக்கே முடியுமென்றும் தன் தலைவியினிடத்தே காணப்பட்ட புணர்ச்சி யின்பத்தினை மகிழ்ந்து கூறியதாயிற்று.

1103. தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொ
லோமையைக் கண்ணு ளுலகு.

நிரதிசயவிடப்பத்தீற்றியநீ இச்சிற்றின்பத்திற்கின்னையாதல்
தகாதென்ற டாங்கற்குச் சொல்லியது.

(பரி.) இ-ள். தாம் வீழ்வார் மென்றோட்டுயிலின் இனிதுகொல்= ஐம்புலன்களையு நுகர்வார்க்குத் தாம் விரும்புமகளிர் மெல்லியதோளின் கட்டுயிலுந் துயில்போல வருந்தாமலெய்தலாமோ—தாமரைக்கண்ணுன் உலகு=அவற்றைத் துறந்த தவயோகிகளெய்துஞ் செங்கண்மாலுலகம். எ-று.

ஐம்புலன்களையு நுகர்வாரென்னும்பெயர் அவாய் நிலையான் வந்தது. இப்பெற்றித்தாய துயிலெவிட்டுத் தவயோகங்களான் வருந்தவேண்டுதலின், எம்மனோர்க்காகாதென்னுங் கருத்தால் 'இனிதுகொல்' என்றான். இந்திர னுலகென்றுரைப்பாரு முளர்: தாமரைக்கண்ணனென்பது அவனுக்குப் பெயரன்மையின், அஃ தரையன்மை யறிக. (கு)

விளக்கம் :—"ஐம்புலன்களாலும் அனுபவிக்கவேண்டிய இன்பங் களை அடைபவர் தம்மால் விரும்பப்படும் பெண்களின் மென்மை யாகிய தோளினிடத்துத்துயின்று அத்துயிலால் அடையும் இனபத்தைப் போல அவ்வின்பமுலனுல் வரும் இன்பத்தைத் துறந்த யோகிகள் அடை யும் செங்கண்மால் உலகம், வருந்தாமல் அடைதல்கூடுமோ" என்று தலை வன் வினவியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைவனை னன் தனக்குக்கிடைத்த புணர்ச்சி இன்பத்தை மகிழ்ந்து பேசக்கேட்ட பாங்கனவன் 'நிரதிசய இன்பமாகிய பேரின்பத்தினை அடைவதற்கு ட்டியவனுக உள்ள நீ இவ்விதம் மகளிர்காமத்தை விழைந்து மகிழ்வெய்தல் கூடுமோ?' என்று வினவினனுதலால், அதுகேட்ட தலைவன் 'நீ சொல்லிய பேரின்பமான துதவங்கிடந்து அத்தவயோகங்களால் வருந்தி யடையும் இன்பம் ஒன்றாகும். அவ்வின்பமும் ஐம்புலன்களாலும் ஆர உண்டு தம் மால் விரும்பப்பட்ட பெண்களது தோளினிடத்தே தூங்கும் தூக்கத்திற்

குச் சமானமாகுமோ?' என்றும், 'சமானமாகாவிடினும் வருந்தாமல் அடைதல் கூடுமோ?' என்றும் புணர்ச்சியால் தனக்குக் கிடைத்த இன்பத்தினையே பேரின்பமென்று மகிழ்ந்து கூறினன் ஆயிற்று.

1104. நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுந் தீயாண்டுப் பெற்ற ளிவள்.

பாங்கற்கூட்டத்திறுதிக்கட் சொல்லியது.

(பரி.) இ-ள். நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும் தீ = தன்னையகன்றுழிச் சுடாநிற்கும், அணுகுழிக் குளிராநிற்கும் இப்பெற்றித்தாய தீயை—இவள் யாண்டுப் பெற்றாள்=எக்கட்டருதற்கு இவளெய்வுலகத்துப் பெற்றாள்! எ-று.

கூடாமுன் றன்புறுதலின் 'நீங்கிற்றெறூஉம்' என்றும், கூடியபின் னின்புறுதலிற் 'குறுகுங்காற்றண்ணென்னும்' என்றும், இப்பெற்றியதோர் தீ உலகத்தில்லையாமாகலின 'யாண்டுப்பெற்றாள்' எனறும் கூறினன்: தன காமத்தீத்தன்னையே அவடந்தாளாகக் கூறினன், அவளான் அது வெளிப் படுதலின். (சு)

விளக்கம்:—"தன்னைவிட்டு அகன்றகாலத்தில் சுடுவதும், தன்னை நெருங்கிய காலத்துக் குளிர்ந்து நிற்பதும் ஆகிய தன்மையுடைய நீயினை எனக்குத்தருவதற்கு இவள் எவ்வுலகத்தில் பெற்றனள்?" என்று தலைவன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, பாங்கனுல தலைவி யைப்பெற்றுக் கூடிமுயங்கி முடிந்தபிறகு தலைவனவன் அவளைவிட்டுப் பிரிகின்ற துன்பத்தினையும் அவளோடு சேருகின்ற காலத்திலுண்டாகின்ற இன்பத்தினையும் உவமை வாயிலாக எடுத்துக்காட்ட வேண்டி அவளை விட்டு அகல்கின்ற காலத்து அடைகின்ற வருத்தம் தீச்சுடுகின்றது போல் சுடுகின்றதென்றும் அவளோடு கூடுகின்ற கூட்டத்தால் உண்டா கின்ற இன்பம் சுட்டதீ குளிர்ந்து நிற்பதுபோல் உள்ளது என்றும், உல கத்துத் தீயானது தன்னை நெருங்கியவரைச் சுட்டும், அகன்றவரைக் குளிர்வித்தும் நிற்க, இவளிடத்து நின்ற நீ அதற்கு மாறுபட்டதாக உள்ளது ஆதலால் அவ்வித தீயினை இவ்வுலகத்து நான் காண்பதற்கு இல்லை; அதனை எவ்வுலகத்திலிருந்து பெற்றனளோ அறியேன் என்று கூறினன். காமத்தீயானது தன்னிடத்தே இருப்பதாயினும் அவளால் வெளிப்படுதலால் அதை அவள் தந்ததாகக் கூறியதாயிற்று.

1105. வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினு டோள்

தோழியிற் கூட்டத்திறுநிகிதட் சோல்லியது.

(பரி.) இ-ள். வேட்டபொழுதின் அவையவை போலுமே=மிகவிரிய வாய பொருள்களைப் பெறுது அவற்றின்மேல் விருப்பங்கூர்ந்தபொழுதின் கண் அவையவை தாமே வந்தின்பஞ்செய்யுமாறுபோல இன்பஞ் செய்யும்,— தோட்டார் கதுப்பினுடோள்=எப்பொழுதும் பெற்றுப்புணரினும், பூவினே யணிந்த தழைந்த கூந்தலினேயுடையாடோள்கள். எ-று.

தோடு—ஆகுபெயர். இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டத்துக்கண் முன்னரே நிகழ்ந்திருக்கப் பின்னரும் புதியவாய் நெஞ்சம் பிணித்தலின், அவ்வாராமைபற்றி இவ்வாறுகூறினுன். தொழிலுவமம். (கு)

விளக்கம்:—மிக இனிமையுடைய பொருள்களே அடைவதற்கு இல்லாது அப்பொருள்களின் மேல் விருப்பம் மிகுந்தவிடத்து அப் பொருள்கள் தாமே வலிய வந்து இன்பம் செய்வதுபோல இன்பம் செய் கின்றன எப்பொழுதும் அடையப்பெற்று புணர்ந்தாலும் பூவினே அணிந்ததும் தழைந்ததும் ஆகிய கூந்தலினேயுடைய இப்பெண்ணின் தோள்கள் என்று தலைவன்கூறினனென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தலைவனனவன் தோழிபின் முயற்சிபால் தலைவியைக் கூடி இன்ப மடைந்த பிறகு தனக்குத்தானே அவள் தோள்களிடத்து அடைந்த இன்பத்தினே மகிழ்ந்து கூறுபவன், எவனேனும் ஒரு வன் ஒருபொருளே அடைய விரும்புவானுயின் விரும்பியபடி கிடைக் கப்பெறுது அப்பொருளினிடத்தே இச்சை மிகுந்து வருந்துகின்ற காலத்து அப்பொருளே விருமபுகின்ற அவன் முயலாமலே தானேவந்து அவன் வருத்தத்தைப் போக்கி இன்பத்தைச் செய்யின் எவ்விதம் இருக் குமோ அவ்விதம் இயற்கைப்புணர்ச்சி முதலாகச் சொல்லப்பட்ட புணர்ச் சிகள் பல இடங்களில் நிகழ்ந்து இருக்கினும் அதற்குப் பின்னரும் புதிய பொருள் காணுமாறு போன்று அவளது தோள்கள் மகிழ்ச்சியைத் தருவதுடன் அவள் இன்பத்தில் நெஞ்சம் கட்டுப்படுதலால் அவ்வாற்று மையை நோக்கி இவ்வாறு கூறினுயிற்று.

1106. உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள்.

இதுவுமது.

(பரி.) இ-ள். உயிர் உறுதோறு தளிர்ப்பத் தீண்டலால்=தன்னைப்பெ

ரூது வாடிய என்னுயிர் பெற்றமுற்தோறுந் தளிர்க்கும்வகை தீண்டுதலான், ஈர் பேதைக்குத் தோள் அமிழ்தின் இயன்றன = இப்பேதைக்குத் தோள்கள் தீண்டப்படுவதோ ரமிழ்தினுற் செய்யப்பட்டன. எ - று.

ஏதுவாகலாற் றீண்டல் அமிழ்திற்குமெய்திற்று. வாடியவுயிரைத் தளிர்ப்பித்தல்பற்றி, அவை 'அமிழ்தினியன்றன' என்ரூன். தளிர்த்தல் = இன்பத்தாற் றழைத்தல். (சு)

விளக்கம்:—"தன்னை அடையாது வாடி நின்ற என் உயிரானது இவளை அடைந்து முயங்குங் காலமெல்லாம் வாடிய உயிர் களிக்கும் விதம் தீண்டுவதால் இப்பேதைக்கு உள்ள தோள்களானவை தீண்டப் படுவதால் நோய் தீர்க்கும் ஓர் அமிழ்தத்தால் செய்யப்பட்டுள்ளன" என்று கூறினன் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தலை வனுனவன் தலைவியைப் பெறுதகாலத்துக் காமத்துன்பமாகிய தீயினுல் கொளுத்தப்பட்ட மரம்போல் உயிர்வாடி நின்றுன் என்றும், அவளை அடைந்து அவள் தோள்களில் இறுக முயங்குந்தோறும் முயங்குந்தோ றும் வாடியமரம் தளிர்ப்பதுபோல் உயிரானது காம இன்பத்தால் தழைத் தல் பெற்றுனென்றும் ஆதலால் அவள் தோள்கள் உண்ணுகின்ற அமிழ் தத்தால் செய்ததல்லை, தொடுதலால் நோய்தீர்க்கும் அமிழ்தத்தால் செய் யப்பட்டுள்ளன என்றும், உண்டு இறவாதிருக்கும் அமிழ்தத்தைக் காட் டிலும்தொட்டு இறவாதிருக்கும் இத்தோள்களே சிறந்தன என்றும் மேல் திருக்குறளில் கூறியதுபோல் தோள்களையே வியந்து கூறினுளெயிற்று.

1107. தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்ரு
லம்மா வரிவை முயக்கு.

இவளை நீ வரைந்துகொண்டு உலகோர் தம்மில்லிருந்து தமது பாத்துண்ணு மில்லறத்தோடு படல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

(பரி.) இ-ள். அம் மா அரிவை முயக்கு = அழகிய மாயைநிறத்தை யுடைய அரிவையது முயக்கம்—தம்மில் இருந்து தமது பாத்து உண்டற்று = இன்பம் பயத்தற்கட் டமக்குரிய வில்லின்கணிருந்து உலகோர் தம் தானான் வந்த பொருளைத் தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்கட்குப் பகுத் துத் தங் கூற்றை யுண்டாற்போலும். எ - று.

தொழிலுவமம். இல்லறஞ்செய்தாரெய்துந் துறக்கத்தின்பம் எனக் இப் புணர்ச்சியே தருமென வரைவுடன்படான் கூறியவாருயிற்று. (எ)

விளக்கம் :—அழகிய மாமை நிறத்தினையுடைய இப்பெண்ணினது முயக்கமானது இன்பம் அடைவதற்கு உரிய இல்லறத்திலிருந்து உலகத்தவர் தம்முயற்சியால் கொண்ட பொருளைத் தென்புலத்தார் தெய்வம்,விருந்தினர், சுற்றத்தவர் ஆகிய இவர்களுக்குப் பங்கிட்டுக்கொடுத்துப் பிறகு தங்களுக்கென்று வந்த பகுதியினை உண்டதுபோல்வதும்''என்று கூறினனென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, களவு ஒழுக்கத்தால் புணர்ந்துவந்த தலைமகனை நோக்கித் தோழியானவள் "நீ இவ்விதம் களவு ஒழுக்கத்தால் இவளிடத்து இன்பம் அனுபவித்து வருதல் தக்கது அன்று. இவளை யாவரும் அறியும்படி. நீ மணந்து கொண்டு உலகத்துள்ளஏனையோர் எவ்விதம் இல்லறத்தை நடத்தி இம்மைப் பயனுகிய புகழையும, மறுமைப் பயனுகிய துறக்க இன்பத்தையும் அடைகின்றீர் களோ அவ்விதம் அடைதல் வேண்டும் என்னலும், கேட்ட தலைவனுனவன் " ஓ! தோழியே ! இல்லறத்திலிருந்து விதித்தன செய்து, விலக்கியன ஒழித்து உலகத்தார் அடையும் இம்மை மறுமையாகிய இரண்டு இன்பங்களையும் இவளிடத்து உண்டாகும் மெய்யுறு புணர்ச்சியே எனக்குத் தருதலால் எனக்கு இக்களவொழுக்கமே போதும்; மணந்து கொண்டு இல்லறம் நடத்த வேண்டுவதில்லை " என்று கூறினனென்பதாபித்து.

1108. வீழு மிருவர்க் கினிதே வளியிடை போழப் படா அ முயக்கு.

ஒத்தவரிருவருடைய நமக்கு ஒருபொழுதும் விடாத முயக்கமே இனியதென வரைவுகடாய தோழிக்குச் சொல்லியது.

(பரி.) இ-ள். நீ சொல்லுகின்றதொக்கும்,— வளி இடை போழப்படா முயக்கு = ஒருபொழுது நெகிழாமையிற் காற்றுலிடையறுக்கப்படாத முயக்கம்—வீழும் இருவர்க்கு இனிதே = ஒருவரையொருவர் விழைவாரிருவர்க்கு மினிதே. எ-று.

முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. எகாரம் தேற்றத்தின்கண் வந்தது. ஈண்டு இருவரில்லை, இன்மையான் இஃதொவ்வாதென்பது கருத்து. களவிற்புணர்ச்சியை மகிழ்ந்து வரைவுடன்படான் கூறியவாறு. (அ)

விளக்கம் :—''நீ சொல்லுகின்றது பொருந்தும், ஒரு காலத்தும் ஒருவர் உடம்பைவிட்டு ஒருவர் உடம்பு பிரியாமையால் காற்றினுலும்

மறிவில் செல்லக்கூடாத மெய்யுறு புணர்ச்சி ஒருவரை யொருவர் விரும்பிப் புணரும் தலைவன் தலைவி இருவர்க்கும் இனிமையுடையதாம்" என்று தலைவன் கூறினனென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, மேல் திருக்குறளில் களவினால் புணரும் புணர்ச்சியே துறக்க இன்பத்தினும் மிகுந்தது என்று மகிழ்ந்து கூறிய தலைவனை நோக்கித் தோழியானவள் "நீ சொல்லியபடி மெய்யுறு புணர்ச்சியே சிறந்ததாகட்டும். ஆயினும், அப்புணர்ச்சியினைக் களவொழுக்கத்தால் புணர்வதாயின் விடாது செய்வதற்கு இல்லை ஆதலால் ஒருவரை யொருவர் விட்டுப் பிரியாது இருப்பதற்குச் சிறந்ததாகாது" என்று கூறலும், தலைவனவன் "அன்புடைய தலைவன் அன்புடைய தலைவி என்று இருவராக இருந்து புணர்வதானால் பிரிந்து நிற்பது தகுதியாகாது. ஒருவரோடொருவர் பொருந்தி நிற்பது தகுதியாகும் என்று சொல்வது பொருந்தும். ஆயினும், இவ்விடத்தே இருவரென்பது இல்லாது ஒருபிறப்போலிருக்கின்றோம். ஆதலால், நாங்கள் பிரிந்து நிற்கின்றோம் என்று சொல்வது பொருந்தாது என்று களவிற் புணர்ச்சியையே மகிழ்ந்து மணந்து கொள்ள உடன்படாத தலைவன் கூறினனென்பதாயிற்று.

1109. ஊட லுணர்தல் புணர்த லிவைகாமங்
கூடியார் பெற்ற பயன்.

காத்தல்வேண்டாமையின் இடையறவில்லாத கூட்டமே
இன்பப்பயனுடைத்தென வரைவுகடாயினாட்குச்
சொல்லியது.

(பரி.) இ-ள். ஊடல் உணர்தல் புணர்தல் இவை = புணர்ச்சியினி தாதற்பொருட்டு வேண்டுவதாய ஊடலும் அதனை யளவறிந்து நீங்குதலும் அதன்பினிகழ்வதாய வப்புணர்ச்சிதானுமென விவையன்றே—காமம் கூடியார் பெற்ற பயன் = வரைந்துகொண்டு காமத்தை யிடைவிடாதெய்தியவர் பெற்ற பயன்கள். எ-று.

ஊடலர்க்குப் பிரிவென்பதொன் றுளதாதன்மேலும் அதுதான் பரத்தையர் மாட்டாதலும் அதனையறிந்து மகளிரூடிநிற்றலும் அவ்வூடலைத் தவறு செய்தவர்தாமே தந் தவறின்மைகூறி நீக்கலும் பின்னுமவ்விருவரும் ஒத்தவன்பினராய்க் கூடலுமன்றே மூன்வரைத்தெய்தினுர் பெற்ற பயன்; அப்பயன் இருமூலப்புள்ளிஞெருயிராய உழுவலன்புடைய வெமக்கு வேண்டாவென அவ்வரைந்தெய்தலே யிகழ்ந்து கூறியவாறு. (க)

விளக்கம்:—"ஒருவரோடு ஒருவர் புணரும் புணர்ச்சியானது இனி தாகும்பொருட்டு விரும்பப்படுவதாகிய ஊடலும், அவ்வூடல் என்பதி லும் ஊடவேண்டிய பருவமறிந்து ஊடிப் பிறகு அதனினின்றும நீங்க வேண்டிய அளவறிந்து நீங்குதலும், அதற்குப்பின் நிகழ்வதற்குரிய மெய் யுறு புணர்ச்சியும் ஆகிய இவையன்றே மணங்துகொண்டு காம இன்பத் தினை இடைவிடாது அடைந்தவர் அடைந்த பயன்கள்" என்று தலைவன் கூறினனென்று இதனிருக்குறள் கூறுகின்றது. அதாவது, மேல் திருக் குறளில் நாங்கள் இருவரில்லை என்று தனக்கும் தன் தலைவிக்கும் உள்ள அன்பினைக்கூறக்கேட்ட தோழியானவள் "அவ்விதமேமிருவருயிரும் ஓர் உயிர் என்றகூறுமம அன்பினராக நீங்கள் இருக்கினும் இக்களவொழுக்கம் ஒளிந்துநின்று இடம் பெற்றவிடத்தே புணர்ந்து நிற்கின்ற இன்பம்; ஆத லால், இது ஓர் இன்பமாகாது; எக்காலத்தும் பிரிதலில்லாது ஒருவரை ஒருவர் தழுவி நிற்கும கூட்டமே இன்பந் தருவதாகும். அவ்வித இன் பத்தை அடைய வேண்டுமாயின் மணந்து கொள்ளுதலே தகுதியாகும் என்றி தோழி சொல்லுகலும், தலைவனவன் "தோழியே! நீ கூறிய புணர்ச்சியின்பமான கமிகப்பெருகவேண்டுமாயின், தலைவியானவள் தலை வனிடத்தே யாதொரு குற்றமும் இல்லாதிருக்கவும், வேண்டுமென்றே, 'நீவிர் பரத்தையர்மாட்டு அன்புடையீர். இனி நுமர்பிணைப் பொருத்து வது ஆகாது' என்று சிறு பிணக்குக் கொள்ளுதலும், அச்சிறு பிணக் கைக்கண்ட தலைவன் கோபித்து நிற்கின்ற தலைவரினிடத்து பணிந்தமொ ழிகளால் தன்னிடத்துத் தவறில்லாமையைச்சொல்லி அவ்வூடலை நீக்குத லும், ஊடல் நீங்கியவுடன் தலைவனும தலைவியும் ஒத்த அன்பினராய்க் கூடுதலும் ஆகிய இவையல்லவோ மணஞ்செய்து கொண்டு நின்ற தலை வன் தலைவியர் பெற்ற பயனுகும். ஆனால், இருதலைப்பட்சியுள் இருக்கும் ஓர் உயிர்போன்று உருவம் இரண்டு உயிர் ஒன்று ஆக இருக் கக்கூடிய பிறவிகள்தோறும் விட்டுநீங்காத தொடர்ச்சியுடைய எங்களிரு வருக்கும் இவ்விதம் மணஞ்செய்து கொள்ள வேண்டுமில்லை" என்று மணஞ்செய்துகொண்டி அதனால் அடையும் இன்பங்களை இகழ்ந்து கூறினனென்பதாயிற்று

1110 அறிதோ றறியாமை கண்டற்றுற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு.

(பரி.) இ-ள். அறிதோறு அறியாமை கண்டற்று=நூல்களானும் நுண்ணுணர்வானும் பொருள்களை யறியவறிய மூன்னையறியாமை கண்டாற்

போலக் காணப்படாநின்றது—சேயிழைமாட்டுச் செறிதோறும் காமம்= சிவந்த விழையினையுடையாளை இடைவிடாது செறியச்செறிய இவண்மாட்டுக் காதல். எ-று.

களவொழுக்கத்திற் பலவிடையீடுகளா னெய்தப்பெறுது அவாவற்றுன் இது பொழுது நிரந்தரமாகவெய்தப் பெற்றமையின், 'செறிதோறும்' என்றுன். அறிவிற்கெல்லையின்மையான் மேன்மேலறிய வறிய முன்னேயறிவு அறியாமையாய் முடியுமாறுபோலச் செறிவிற் கெல்லையின்றி மேன்மேற் செறியச்செறிய முன்னேச்செறிவு செறியாமையாய் முடியாநின்றதெனத் தன்னுராமை கூறியவாறு. இப்புணர்ச்சிமகிழ்தல் தலைமகட்குமுண்டேனும் அவண்மாட்டுக் குறிப்பாணிகழ்வதல்லது கூற்றுனிகழாமையறிக. (ம)

விளக்கம்.—"நூல்களிஞலும் நுட்பமாகிய உணர்வினலும் பொருள்களின்தன்மையை அறியுந்தோறும் அறியுந்தோறும் பின்னர் அறிந்தபொருள்களின் தன்மையை முன்னர் அறியாது இருந்ததுபோல் நல்ல ஆபரணங்களே அணிந்த இப்பெண்ணினை இடைவிடாமல் புணருந்தோறும் புணருந்தோறும் இவளிடத்து ஆசையானது காணப்படுகின்றது" என்று தலைவன் கூறியதாக இக்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, இடம் பற்றிப் புணர்ந்து செல்கின்றவனுகிய தலைமகன் தான் அடைந்த புணர்ச்சியின் மகிழ்ச்சியைத் தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான் என்பதாயிற்று. அது என்னேயாவெனின்? "நூல்களே ஆராய எண்ணி ஆராய்ந்த நூல்வல்லவன் ஒருவனுக்கு ஒருமுறை ஆராய்ந்த நூலினையே பலமுறை ஆராயுங்காலத்தும் ஆராயுந்தோறும் ஆராயுந்தோறும் புதிது புதிதாகப் பொருள்தோன்றி முன்னர் ஆராய்ந்ததெல்லாம் இப்போது அறிந்து ஆராய்ந்ததாலுண்டாகிய பொருளிற்குச் சமானமாகாது என்று ஆராய்ந்த நூல்களில் பொருள் நயம் காணும் நூலறிவைப்போல் காம இன்பத்திற்கு உரிய இப்பெண்ணினிடத்தே யான் புணர்ந்து புணர்ந்து இன்பங்காணுந்தோறும் இன்பங்காணுந்தோறும் முன்னர்கண்ட இன்பமெல்லாம் இப்போது காணும் இன்பத்திற்கு இணையாகாது என்றுசொல்லும்படியாக எனக்கு மகிழ்ச்சியுண்டாகின்றது" என்று தலைமகனுன் வன் முன்னர்க் களவொழுக்கத்தில் பலதடைகளால் அடையாது தலைவியிடத்து அவாக்கொண்டிருந்தான் இப்பொழுது அவளே நிரந்தரமாக அடைந்துபுணர்ச்சி இன்பத்தின் முடிவினேக்கண்டு தனக்கு அவ்வின்பத்திலுள்ள ஆராமையை எடுத்துக் கூறினனுயிற்று. இப்புணர்ச்சியால்

வரும் மகிழ்தல் தலைமகளுக்கும் உண்டாயினும் அவளிடத்து அதுகுறிப் பால் காணப்படுமேயன்றி, சொல்லால் காணப்படாதாதலால் அதைக் குறித்து இவ்வு யாதும் கூறுவதற்கு இல்லை என்று அறிகின்றோம்.

---

112 அதிகாரம்.

நலம்புனைந்துரைத்தல்.

(பரி) அஃதாவது தலைமகன் றலைமகணலத்தைப் புனைந்துசொல்லியது இது, புணர்ச்சிமகிழ்ந்துழி நிகழ்வதாகலின், புணர்ச்சிமகிழ்தலின்பின் வைக் கப்பட்டது.

விளக்கம்:—அதாவது தலைமகனைவன் தலைமகளுடைய அழ கினை அலங்கரித்துச் சொல்லுதல் இவ்வதிகம் அழகினைப்புகழ்ந்து சொல் லுவதே அவளிடத்து நேர்ந்த புணர்ச்சி இன்பத்தால் மகிழ்ந்தகாலத்து உண்டாவதாகலின், இதுபுணர்ச்சி மகிழ்தல் என்னும் அதிகாரத்திற்குப் பிறகு வைக்கப்பட்டு உள்ளது.

1111. நன்னிரை வாழி யனிச்சமே நின்னினு
மென்னீரள் யாம்வீழ் பவள்.

இயற்கைப்புணர்ச்சியிறுதிக்கட் சொல்லியது.

(பரி.) இ-ள். அனிச்சமே வாழி நன்னீரை= அனிச்சப்பூவே! வாழ்வாயாக, மென்மையால் நீ யெல்லாப்பூவினு நல்லவியற்கையை யுடையை,—யாம் வீழ்பவள் நின்னினும் மென்னீரள்= அங்ஙனமாயினும் எம்மால் விரும்பப்பட்டவள் நின்னினு மெல்லிய வியற்கையை யுடையள். எ-று.

அனிச்சம் ஆகுபெயர். வாழியென்பது உடன்பாட்டுக்குறிப்பு. இனி, யானே மெல்லியன்' என்னுந் தருக்கினை யொழிவாயாகவென்பதாம். அது பொழுதுற்றறிந்தாளுகலின், ஊற்றினினிமையையே பாராட்டினன். இன் னீரளென்று பாடமோதுவாருமுளர். (க)

விளக்கம்:—"அனிச்சப்பூவே! வாழக்கடவாய்! மென்மைத் தன் மையால் நீ எல்லாப்பூக்களினும் நல்ல மென்மையாகிய இயல்பினையுடை யாய். அவ்விதம் மென்மையுடையையாயினும் எம்மால் விரும்பப்பட்ட

தலைவியானவள் உண்னைக் காட்டிலும் மென்மை தங்கிய இயற்கையுடையவளாய் இருக்கின்றாள்'' என்று தலைவன் அவள் நலத்தினைப் புனைந்துரைத்தானென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைவனவன் இயற்கைப் புணர்ச்சியின் கடைசியில் அவளது அழகினைப் புகழவேண்டி முதலில் தேகத்தின் மென்மையைப் புகழ்வதற்கு ஆரம்பித்து, மென்மைக்கெல்லாம் மென்மையுடையது என்னும் மென்மையுடையதும் முகர்ந்தவுடன் வாடிப்போவதுமாகிய அணிர்ச்சப் பூவினை நோக்கி ''நீ பூக்களிலெல்லாம் மென்மையுடையை. ஆதலால், எக்காலத்தும் வாழ்வாயாக! ஆயின், அவ்வித மென்மைகொண்டு நம்மைக்காட்டிலும் மென்மையையுடைய பொருள் இவ்வுலகில் நீ கொண்டிருந்த கர்வத்தினை இனி ஒழித்து விடுதல்வேண்டும். ஏனெனில்? என்னால் விரும்பப்பட்ட தலைவியோ உன்னைக்காட்டிலும் மிக மென்மையாகிய தேக இயற்கையையுடையவளாக இருக்கின்றாள்'' என்று தான் அப்பொழுது அவள் தேகத்தில் பொருந்தி அடைந்த இன்பத்தையே முதலில் 'பாராட்டிக் கூறினன் என்பதாயிற்று.

1112. மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண் பலர்காணும் பூவொக்கு மென்று.

இடந்தலைப்பாட்டின்கட் சொல்லியது.

(பதி.) இ-ள். நெஞ்சே = நெஞ்சே!—இவள் கண் பலர்காணும் பூ ஒக்கும் என்று = யானே காணப்பெற்ற இவள் கண்களைப் பலரானுங் காணப்படும் பூக்கள் ஒக்குமென்று கருதி—மலர்காணின் மையாத்தி = தாமரை, குவளை, நீலமுதலிய மலர்களைக்கண்டால் மயங்காதின்றாய், தின்னறிவிருந்தவாறென்?

மையாத்தல் = ஈண்டு ஒவ்வாததவற்றை யொக்குமெனக்கோடல் : இறுமாத்தல் செம்மாத்தலென்பனபோலவொருசொல். இயற்கைப்புணர்ச்சி நீக்க முதலாகத் தலைமகள் கண்களைக் காணப்பெறுமையின் அவற்றிற்றொடரு புடை யொக்குமலர்களைக் கண்டுழியெல்லாம் அவற்றின்கட் காதல்செய்து போந்தான், இதுபொழுது அக்கண்களினலமுழுதுந் தானே தமியாளாயிடத்தெதிர்ப்பட்டனுபலித்தாஞ்சலின் அம்மலர்கள் ஒவ்வாமைகண்டு ஒப்புமைகருதிய நெஞ்சையிகழ்ந்து கூறியவாறு. (உ)

விளக்கம்:—''நெஞ்சே! நானே பார்க்கக் கிடைத்த இவளுடைய கண்களைப் பலராலும் பார்க்கப்படும் பூக்களுக்குச் சமானமென்று

எண்ணித் தாமரை, குவளை, நீலம் முதலிய பூக்களைக் கண்டால் மயங்கிநிற்கின்றாய். உன் அறிவு இருந்தவிதம் என்னே?" என்று தலைவன் தன்னெஞ்சை நோக்கிக் கூறினன் என்று இத்திருக்குறள் கூற்றுகின்றது. இயற்கைப் புணர்ச்சிக்குப் பிறகு தலைவியைக் காணுத நாள்களிலெல்லாம் தாமரை முதலிய பூக்களைக் கண்டு இப்பூக்க ளெல்லாம் தன்னுடைய தலைவியின் கண்களுக்குச் சமானமுடை யன என்று கருதி அப்பூக்களையே கண்டு தினந்தோறும் மகிழ்ந்து இருந்தவன், இப்போது குறித்த இடத்தில் தலைவியைக் கண்டு அவள் கண்களினுடைய அழகு முழுவதையும் பார்த்து அனுபவித்தா னதலாலே, இக்கண்களுக்கு ஒருசிறிதும் பொருந்தாத மலர்களையெல்லாம் கண்டு அம்மலர்கள் இக்கண்களின் அழகிற்கு ஒத்த அழகினையுடையன என்று மயங்கின நெஞ்சை நோக்கி இகழ்ந்து கூறியதுபோல் இரண்டா வதாக அவளது கண்களின் நலத்தையும் புனைந்து உரைத்தானுயிற்று.

1113. முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம் வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.

கூட்டுதலுற்றபாங்குந் தலைமகன்றலைமகளதியல்பு கூறியது.

(பரி.) இ-ள். வேய்த்தோளவட்கு = வேய்போலுந் தோளினையுடைய வட்கு — மேனிமுறி = நிறந் தளிர்நிறமாயிருக்கும்; — முறுவல் முத்தம் = பல்லுமுத்தமாயிருக்கும், — நாற்றம் வெறி = இயல்பாய நாற்றம் நறுநாற்ற மாயிருக்கும், — உண்கண் வேல் = உண்கண்கள் வேலாயிருக்கும். எ-று.

பெயரடையானும் ஓரியல்பு கூறப்பட்டது. முறி, முறுவலென் பன ஆகுபெயர். உருவகவகையாற் கூறினமையின், புனைந்துரையாயிற்று. நின்னைற் கருதப்பட்டாளையறியேனென்று சேட்படுத்த தோழிக்குத் தலை மகன் சொல்லியதூஉமாம். (கூ)

விளக்கம்:—மூங்கில்போலும் தோளினையுடைய இப்பெண் ணிற்கு மேனி தளிர் நிறமாயிருக்கும், பல் முத்துப்போலிருக்கும், இயற் கையாகவே அமைந்த மணமானது வாசனைதங்கிய மணமாய் இருக்கும், மையுண்ட கண்கள் வேலாயிருக்கும் என்று தலைமகன் தலைமகளது இயற்கையைப் பாங்கனுக்குக் கூறினனென்று இத்திருக்குறள் கூறு கின்றது. இவ்விதம் அவயவங்களை உவமையால் கூறுது உருவகப்படுத் திக் கூறினதால், அவளுடைய அழகினை மிகுதியும் அலங்கரித்துச்

சொன்னையிற்று. அதுவன்றியும், இத்திருக்குறளைப பாங்கனுக்குக் கூறியதாகக் கொள்ளாது உன்னுல் எண்ணப்பட்ட தகுதியுடைய தலை வியை நானறியேன் என்று தன்னே அகற்றுகின்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியதாகக் கொள்ளுதலுமாகும்.

1114. காணிற் குவளை கவிழ்த்து நிலனேக்கு மாணிழை கண்ணெவ்வே மென்று.

பாங்கற்கூட்டத்துச்சென்று சார்தலுறுவாள் சேரல்லிய தி.

(பரி.) இ-ள். குவளை = குவளைப்பூக்களாமும்,—காணின் = காண்டற் றெழிலேயுடையவாயின்,—மாண் இழை கண் ஒவ்வேம் என்று, கவிழ்ந்து நிலன் நோக்கும் = மாண்டவிழையினேயுடையாள்கண்களே யாமொவ்வே மென்று கருதி அந்நாணினு லிறைஞ்சி நிலத்தினே நோக்கும். எ-று.

பண்பாளனேயன்றித் தொழிலானு மொவ்வாதென்பான் 'காணின்' என் றும், கண்டால் அவ்வொவ்வாமையால் நாணுடைத்தாமென்பது தோன்றக் 'கவிழ்ந்து' என்றும் கூறினன். காட்சியு நாணு மின்மையிற் செம்மாந்து வாணே நோக்கின வென்பதாம். (சு)

விளக்கம்:—"குவளைப்பூக்கள் தாமும பார்க்குந் தொழிலே யுடை யனவாயின், மாட்சிமைப்பட்ட ஆபரணங்களே அணிந்தவளாகிய இவள் கண்களுக்கு யாம் ஒப்பு ஆகோம் என்று எண்ணி அதனுல் நாணி அந்நாணத்தால் வணங்கி நிலத்தினேப் பார்க்கும்" என்று பாங்கனி டத்துச்சென்று சேர்பவன் சொல்லியதாக இத்திருக்குறள் கூறுகின் றது. தலைவனுனவன் தன் தலைவியின் நலம இதுவென்று தன் பாங்க னுக்குக் கூறுகின்ற காலத்து "ஓ! பாங்கனே! இக்குவளைப் பூக்களைப் பெண்களின் கண்களுக்கு உவமை கூறுகின்றனர். என் தலைவியின் கண் களுக்கு இப்பூக்களே உவமை கூறுதல் அடாது எனெனின்? தொழிலா லும் குணத்தாலும் இம்மலர்கள் ஒரு புடையும் ஒத்தில்லாமையால், அவ்வாறு உவமை கூறுதல் பொருந்தாமையாகும். இவள் கண்களோ காண்டல் தொழிலேயும் கருமை நிறத்தையும் அடைந்தனவா யுள்ளன இக்குவளைப் பூக்கள் உண்மையாகவே பார்க்கின்ற செயலேயுடையனவ் யின் என் தலைவியின் கண்களைக் கண்டு 'இவள் கண்ணின் தன்மைக்கு நாம்நிறுதும் ஒப்பாகோம்' என்று நாணங்கொண்டு தலைகவிழ்ந்து பூழியை நோக்கும் வண்ணமாக இருக்கும். அவ்வாறு காண்பதற்குப் பார்வையும் நாணமும் இல்லாமையால் தம்மைக் காட்டிலும் நிறம் உடையன இல்லே

யென்று தமக்குச் தாமே இறுமாந்து ஆகாயத்தைப் பார்த்தவண்ணமாக உள்ளன" என்று கண்களுக்கு உவமை சொல்லுகின்ற குவிளம்பூக்களையும் இழித்துக் கூறினளெயிற்று.

1115. அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா னுசுப்
நல்ல படாஅ பறை. [பிற்கு

பகற்குறிக்கட் பூவணிகண்டு சொல்லியது.

(பரி.) இ-ள். அனிச்சப்பூக் கால் களையாள் பெய்தாள்=இவள் தன் மென்மைகருதாது அனிச்சப்பூவை முகிழ்களையாது சூடினளுள்,—நுசுப்பிற்கு நல்ல பறைபடா= இனியிவளிடைக்கு நல்லபறைகளொலியா. எ-று.

அம்முகிழ்ப்பாரம் பொறுமையின் இடை முரியும், முரிந்தால் அதற்குச் செத்தார்க்குரிய செய்தற்பறையே படுவதென்பதாம். மக்கட்குரிய சாக்காடும் பறைபடுதலும் இலக்கணக்குறிப்பால் தசுப்பின்மேலேற்றப்பட்டன. (இ)

விளக்கம் :—"இப்பெண்ணினவள் தன்னுடைய மெல்லிய இயற்கையை எண்ணுமல் அனிச்சப்பூவினைக் காம்பு களையாமல் சூடிக் கொண்டனள் இனி இவளுடைய இடுப்பிற்கு நல்ல பறைகள் ஒசை செய்பா" என்று பகலிடத்தே தலைவியைக்கண்டு அவள் பூவினை அணிந்ததை நோக்கிக் கூறினனென்று இத்திருக்குறள் கூறுகின்றது அதாவது, பகற்போதில் குறித்த இடத்துத் தலைவியைக்கண்டு அவள் அழகினைப் புகழ்ந்து சொல்லவேண்டிய தலைவன் "இவளுடைய இடுப்பின் மென்மையை உணராது பூவால் தன்னை அலங்கரித்துக் கொள்ள வேண்டிக் காம்புகளைக் களையாமலே அனிச்சப்பூவைச் சூடினளாதலால், அப்பூக்களின் காம்புகளது பாரம் பொறுமையால் இடைமுரிந்து விடும்; முரிந்தால் செத்தார்க்கு அடிக்கின்ற சாப்பறையே அடிக்கப்படும்" என்று கூறினமையால் மோந்த உடனே குழைந்துவிடும் பூக்களாகிய அனிச்சப் பூக்களையினும் அவற்றின் காம்பையும் தாங்குதற்கு இல்லாத அத்துணை மென்மையுடையது இடையென்று அவளது இடையின் நலத்தைப் புகழ்ந்து கூறினளெயிற்று

1116. மதியு மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன்.

இரவுக்குறிக்கண்மதிகண்டு சொல்லியது.

(பரி.) இ-ள். மீன்=வானத்து மீன்கள்,—மதியும் மடந்தைமுகனும் அறியா= வேறுபாடுபெரிதாகவும் தம்மதியினையும் எம்மடந்தைமுகத்தினை

யும் இது மதி இதுமுகமென்றறியமாட்டாது,—பதியிற் கலங்கிய = தங்கிலே யினின்றும் கலங்கித் திரியாநின்றன. ஏ - று.

ஓரிடத்து நில்லாது எப்பொழுதுமியங்குதல்பற்றிப்'பதியிற்கலங்கிய'என் றான். வேறுபாடு வருகின்றபாட்டாற்பெறப்படும். இவரிரண்டினையும் பதி யிற்கலங்காத மீன்களறியுமல்லது கலங்கின மீன்கள் அறியாவென்றுரைப் பினு மமையும். (சு)

விளக்கம்:—'வானத்து உள்ள நட்சத்திரங்கள், பெரிதும் வேறு பாடு இருந்தவும் தம் கலிவனுகிய சந்திரனையும் எம் கலிவியின் முகத் தினையும் இது சந்திரன் இது முகம் என்று அறிய முடியாமல் தாமிருக் கும் தத்தம் நிலையினின்றும் கலங்கித் திரிகின்றன" என்று "இரவில் குறித்த இடத்துச் சந்திரனைப் பார்த்துத் தலைவன் கூறினனென்று இத் திருக்குறள் கூறுகின்றது. அது என்னையோவெனின்? வானத்தில் சந்திரனும் அவனைச் சுற்றியுள்ள நட்சத்திரங்களும் அசைகின்ற தோற்றத்தைக் கண்டு இந்நட்சத்திரங்கள் தம்முடைய பதிபாகிய சந்திரனுக்கும் என்னுடைய கலிவியின் முகத்திற்கும் பெரியதோர் வேறுபாடு கண்டும் இது சந்திரன் இது பெண் முகம் என்று அறிய மாட்டாமல் மயங்கி அலைகின்றன என்று கலிவியின் முகத்தினை வியந்து கூறினனையிற்று.

1117. அறுவாய் நிறைந்த வவிர்மதிக்குப் போல மறுவுண்டோ மாதர் முகத்து.

இதுவுமது.

(பத.) இ-ன். அம்மீன்கள் அங்ஙனங்கலங்குதற்குக் காரணம்யாது?— அறுவாய் நிறைந்த அவிர் மதிக்குப்போல = முன்குறைந்தவிடம் வந்துநிரம் பிய விளங்குமதிக்கட்போல — மாதர் முகத்து மறு உண்டோ = இம்மா தர்முகத்து மறுவுண்டோ! ஏ - று.

இடம் = கலை. மதிக்கென்பது வேற்றுமைமயக்கம் தேய்தலும், வளர்த லும், மறுவுடைமையு மின்மைபற்றி வேறுபாடறியலாயிருக்க அறிந்திலவென் விகழ்ந்து கூறியவாறு. (எ)

விளக்கம்:—"இந்நட்சத்திரங்கள் மதியென்றும் முகமென்றும் அறியாமல் கலங்குவதற்குக் காரணம் எது என்று அறிவதற்கு இல்லை. பிறைச்சந்திரனை இருந்த காலத்துக் குறைந்த இடம் தினந்தோறும்

நிரம்பப்பெற்று ஆகாயத்தில் காணப்படுகின்ற சந்திரனைப்போல என் தலைவியாகிய இவளது முகத்தே ஏதேனும் மறுவுண்டோ?' என்று தலைவன் தன் தலைவியின் முகத்தின் நலத்தைப் புனைந்து கூறினனென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, சந்திரனுனவன் தேயுந் தன்மையும் வளருந்தன்மையும் களங்மாகிய குற்றமுடைமையும் கொண்டிருக்கவும், அவ்விதம் வளர்தலும் தேய்தலும் களங்கமுமில்லாத என் தலைவியின் முகத்தை வேறுபடுத்து அறியாது மயங்குகின்றநட்சத்திரங்களின் அறியாமை எவ்விதமுள்ளது என்று அவற்றின் அறியாமையை இகழ்ந்து கூறியவாறுமாயிற்று.

1118. மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற்
காதலை வாழி மதி

இதுவுமது.

(பி.) இ-ள் மதி வாழி=மதியே! வாழ்வாயாக;— மாதர் முகம்போல் ஒளிவிடவல்லையேல் காதலை=இம்மாதர்முகமபோல யான்மகிழும்வகை ஒளிவீசவல்லையாயின், நீயுமென்காதலை யுடையையாதி. எ - று

மறுவுடைமையின் அது மாட்டாய், மாட்டாமையின் எனைநற் காதலிக்கவும்படாயென்பதாம். வாழியென்பது இகழ்ச்சிக்குறிப்பு. (அ)

விளக்கம் :—"ஓ மதியே! நீ வாழ்வாயாக நிறைபெண்ணினது முகம்போல் யான் மகிழ்சசியடையும்விதம் ஒளி வீச வல்லமையுடையையாகில், நீயும் என் அன்பிற்கு உரியையாவாய்" என்று தலைமகன் கூறினனென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, உலகத்து மக்கள் சந்திரனது ஒளியை மாதர் முகவொளிபோலவே உவமித்தும் கூறுவது ஓர் வழக்காக இருந்தாலும், பிறபுனைய சந்திரன் மறுவில்லாத என் தலைவியின் முகத்தைப்போல் ஒளிவீசுவதற்கு இல்லையாதலால் மறுவில்லாது ஒளிவீசும்என் தலைவியின் முகத்தைக் கண்டு மகிழ்வதுபோல் உன்னைக் கண்டு மகிழ்வதற்கு இல்லை. என் தலைவியின் முகத்திற்கு உவமை கூறப்படுவதற்கு உன்னை நீ சமானனாக எண்ணிக்கொள்கின்றாய்; இவ்விதம் அறியாமையைக் கொண்ட நீ வாழ்ந்து போகக்கடவாய் என்று குறிப்பாக இகழ்ந்ததாயிற்று. இதனை,

"புறந்தாழ் குழலுமை பங்காளர் வெங்கை புரதத்தர் வெறபிற
குறைந்தா லிவணுத லொவ்வாய் நினது குறை நிறைந்தாற்
சிறந்தா யிழைமுக மொவ்வாய் விளங்குஞ் செழுங்கலைபால
நிறைந்தா லென் னன்றிக் குறைந்தாலென் னெங்கட்கு நீமதியே"

என்னும் திருவெங்கைக் கோவைச செய்யுளாலும் அறிதல்கூடும்.

1119. மலரன்ன கண்ணுண் முகமொத்தி யாயிற் பலர்காணத் தோன்றன் மதி.

இதுவுமது.

(பரி.) இ-ள். மதி=மதியே!—மலர் அன்ன கண்ணுள் முகம் ஒத்தியா யின்=இம்மலர்போலுங் கண்ணினையுடையாண் முகத்தை நீயொக்க வேண்டுதியாயின்,— பலர்காணத் தோன்றல்= இதுபோல யான்காணத் தோன்று, பலர்காணத்தோன்றுதொழி. எ-று.

தானே முகத்தினலமுழுதுங்கண்டநுபவித்தாளுலின் ஈண்டும் பலர் காணத்தோன்றலே யிழத்துக்கூறினுள். தோன்றின் நினக்கல்வொப்புண் டாகா தென்பதாம். (கூ)

விளக்கம் :—"ஓ சந்திரனே! இந்த மலர்போலும் கண்ணையுடை யாள் முகத்திற்கு நீ சமானமாவதற்கு விரும்புவையானுல் இவள் முகம்போல நான் ஒருவனே காணும்படித் தோன்றுதல் வேண்டும். பல ரும் பார்க்கும்படித் தோன்றுதலைச் செய்யாதே" என்று தலைவன் கூறின னென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அது என்னையோவெனின்? கற்புடையாளாகிய தன் தலைவியின் முகத்து அழகு முழுவதும் தானே கண்டு அனுபவித்தானுதலால், அவ்விதமல்லாது எல்லோரும் பார்க்கும் படி வானத்தில் உலாவுகின்ற சந்திரனைக் கற்பில்லாமைபற்றி இழித்துக் கூறுவானும், அவ்வாறு இழித்துக் கூறுவதனுல் கற்புடைய தன் தலைவியின் முகத்திற்குப் பலர் காணத்தோன்றும் சந்திரன் ஒப்பா கான் என்றும் தன் காதலியின் மறுவில்லா முகத்தின் ஒளிமையும் அம் முகத்தின் அழகு முழுவதையும் தானே கண்டு அனுபவித்த நன்மை யினையும் வியந்து கூறினனுயிற்று.

1120. அனிச்சமு மன்னத்தின் ரூவியு மாத ரடிக்கு நெருஞ்சிப் பழம்.

உடன்போக்கதரைத்த தோழிக்கு அதனதருமைகூறி மறுத்தது.

(பரி.) இ-ள். அனிச்சமும் அன்னத்தின் ரூவியும்=உலகத்தாரான் மென்மைக்கெடுக்கப்பட்ட அனிச்சப்பூவும் அன்னப்புள்ளின் சிறகுமாகிய விரண்டும்—மாதர் அடிக்கு நெருஞ்சிப்பழம்=மாதரடிக்கு நெருஞ்சிப்பழம் போல வருத்தஞ்செய்யும். எ-று.

முன் வலிதாதலுடைமையிற் பழமென்றுன். இத்தன்மைத்தாயவடி

"பாத்தியன்ன குடுமிக்கூர்ங்கற்களை" *உடைய வெஞ்சுரத்தை யாங்ஙனங் கடக்குமென்பது குறிப்பாற்பெறப்பட்டது. செம்பொருளேயன்றிக் குறிப்புப் பொருளும் அடிநலனழியாமையாகலின் இதுவு மிவ்வதிகாரத்ததாயிற்று. (௰)

விளக்கம் :—"உலகத்தாரால் மென்மையுளெல்லாம் மென்மையென்று எடுத்துச் சொல்லும் அனிச்சப் பூவும் அன்னப்பட்சியின் சிறகும் ஆகிய இரண்டும் என் தலைவியினது பாதங்களுக்கு நெருஞ்சிப் பழம்போல வருத்தத்தை உண்டுபண்ணும்" என்று தலைவி உடன்போக விரும்புகின்றாள் என்று சொல்லிய தோழிக்குத் தலைவனானவன் தன் தலைவியின் பாதங்களின் மென்மையைக்கூறி உடன் வருதல் முடியாதென்று மறுத்துக் கூறினான் என்பதை இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, செம்பஞ்சுக் குழம்பு ஊட்டிய இவள் சிறிய பாதங்கள் பஞ்சணையில் பரப்பிய அனிச்ச மலருக்கும் அன்னத்தின் சிறகிற்கும் வருந்தக்கூடிய அவ்வளவு மென்மையுடைய வாதலால், நான் செல்லுகின்ற கல் வழியை எவ்வாறு நடந்து கொடிய பாலை வனத்தைக் கடக்கும். ஆதலால், என்னுடன் போதல் வேண்டும் என்று எண்ணிய உடன் போக்கானது முடியாதது என்று உடன்போக்கை மறுப்பான்போன்று அவள்பாதங்களின் அழகினையும் புகழ்ந்துகூறினானாயிற்று. இவ்வருமை புரைத்தலை,

"மெல்லியல் கொங்கை பெரியமின் னேரிடை மெல்லடியூக்
கல்லியல் வெம்மைக் கடங்கடுத் தீக்கற்று வானமெல்லாஞ்
சொல்லிய சீர்ச்சுடர்த் திங்களங் கண்ணித் தொல்லோன்புலியூ
ரல்லியங் கோதை நல்லாயெல்லை சேய்த்தெம் மகனகரே"

என்னும் திருக்கோவையார் செய்யுளாலும் அறிதல்கூடும்.

---

113 அதிகாரம்.

காதற்சிறப்புரைத்தல்.

(பரி.) அஃதாவது தலைமகன் தன்காதன்மிகுதிகூறலும், தலைமகள் தன் காதன் மிகுதி கூறலுமாம். இது, புணர்ச்சியும் நலனும்பற்றி நிகழ்வதாகலின், புணர்ச்சிமகிழ்தல் நலம்புனைந்துரைத்தல்களின்பின் வைக்கப்பட்டது.

---

* அகநானூறு, களிற்றியானைநிரை, 5.

விளக்கம்:—அதாவது, தலைமகன் தலைமகள்மீது தனக்கு உள்ள ஆசைமிகுதியைச் சொல்லுதலும், தலைமகள் தலைமகன்மீது தனக்குள்ள ஆசையின் மிகுதியைச் சொல்லுதலுமாகும் இக்காதல் சிறப்புரைத்தல் புணர்ச்சியினாலும் அழகினாலும் உண்டாவதொன்றாகலின் புணர்ச்சி மகிழ்தல், நலம்புனைந்துரைத்தல் என்னும் அதிகாரங்களுக்குப் பிறகு வைக்கப்பட்டு உள்ளது.

1121. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்.

இயற்கைப்புணர்ச்சி யிறுதிக்கட் டலைமகன் றனையப் புணர்த்தியது.

(பரி.) இ-ள். பணிமொழி வால் எயிறு ஊறிய நீர்=இம்மெல்லிய மொழியினையுடையாளது வாலிய வெயிறூறிய நீர்—பாலொடு தேன்கலந் தற்று=பாலுடனே தேனைக்கலந்த கலவைபோலும். எ-று.

கலந்ததற்றென்பது விகாரமாயிற்று, கலக்கப்பட்டதென்றவாறு. பாலொடு தேனென்றவதனால் அதன் சுவைபோலுஞ் சுவையினையுடைத்தென பதாயிற்று எயிறூறியவென இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்தின்மே னின்றது. வேறுவேறறியப்பட்டசுவையவாய பாலுந்தேனுங்கலந்துழி அக் கலவை இன்னதென்றறியலாகாத இன்சுவைத்தாமாகலின், அது பொருளாகிய நீர்க்குமெய்துவிகக. (க)

விளககம்:—"இம்மிருதுவாகிய சொல்லினையுடையவளது வெண்மையாகிய பற்களில் ஊறும் நீரானது பாலுடனே தேனையும் கலந்த கலவைபோலுள்ளது" என்று இயற்கைப் புணர்ச்சியின் இறுதியுள் தலைமகனானவன் தன் காதலின் சிறப்பினை உணர்த்தினானென்று இத் திருக்குறள் கூறுகின்றது. அதாவது, புணர்ச்சியின்பம் இதுவென்று உணர்த்தி அதனால் தலைமகள்மீது தனக்கு உள்ள காதலை சிறப்பித்துச் சொல்லவேண்டிய தலைமகன் அவளது அதரபானமானது வேறு வேறு திறப்பட்ட சுவையினையுடைய பாலும் தேனும் ஒன்றாகக் கலந்து உண்ட காலத்து இரண்டின் சுவையும் இன்ன தன்மையுடையது என்று அறியக்கூடாத இனிய சுவையாகு மாதலால் அவ்வித இனிய சுவையைத் தருகின்றது என்று தனக்குள்ள ஆசையின் மிகுதியை எடுத்துக் கூறினானாயிற்று.

1122. உடம்பொ டுயிரிடை யென்ன மற்றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு.

பிரிவச்சங்கூறியது.

(பரி.) இ-ள் உடம்பொடு உயிரிடை என்ன அன்ன=உடம்போடுயி

நிடை யுளராய நட்புக்கள் எத்தன்மைய அத்தன்மைய — மடந்தையோடு எம் மிடை நட்பு = இம்மடந்தையோடு எம்மிடையுளவாய நட்புக்கள். எ-று.

என்னெனப் பன்மையாற் கூறியது, இரண்டுந் தொன்றுதொட்டு வேற்றுமையின்றிக் கலந்துபழகுதல், இன்பத்தன்பங்களொக்க வனுபவித்தல், இன்றியமையாமையென்றிவற்றை நோக்கி. தெய்வப்புணர்ச்சியாகலான் அதுபொழுது உணர்ச்சியிலளாகியாள் பின்னுடையளாமன்றே; ஆயவழி இவன் யாவனொலெனவும் என்கணன்புடையனொலெனவும் இன்னுமிவ னைச் தலைப்பெய்தல் கூடுகவெனவும் அவண் மனத்தின்கணிகழும். அங் நிகழ்ச்சியனவற்றைக் குறிப்பானறிந்து அவைதீர்கூறியவாறு. என்னையென்று பாடமோதுவாருமுளர். (உ)

விளக்கம்.—'உடம்பிறந்துயிர்நடுங்கும் உள்ளமெனவாய நட்புக்கள் எவ்விதந்தன்மையுடையனவோ அவ்விதந்தன்மையுடையன இப் பெண்ணினெனி எமக்கு உளவாய நட்புக்கள்' என்று தான் பிரிந்துபோதற்கு உண்டாகும் அச்சத்தைக் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. மேல்கூறிய புணர்ச்சியின்பத்தை யுணர்ந்த தலைமகன் அவ்வின்பத்தால் உண்டாகிய காதலைக்கூறி நிற்கவும், வேற்வகியிபால் ஒருவரைபொருவர்ந்தும் பிரிந்த காலத்தும் நம்மை இதுவென்ன வுபாயமது புணர்ந்த தலைமகள் பின்னர் உணர்ச்சி வந்தகாலத்து "எமக்கு உயிரைத் தருவதை நின்ற இவன்எவனே, என்னிடத்து அன்புடையவனெனவும் ஓர் முறை இவனைச் சந்தித்து இன்பம் எய்துதல் கூடுமோ?" என்று தன் மனத்தில் நினைத்தாளென்றும், அங்ஙனமபிநினைப் குறிப்பால் அறிந்த தலைமகனுவன் அவளது துன்பமானது நீங்குவபடி பிறவிகள்தோறும் ஒற்றுமைபோபாடி கலந்து வருகலையும் இன்ப தன்பங்கள் ஒந்து அனுபவித்தலுப் ஒன்றில்லாமல் பழ்றொன்று அமைபாகிருத்தலும் ஆகிய உடம்பிற்கும் உயிருக்கும் உள்ள நட்புப போல் இவளிடத்துத் தன் நட்பு உள்ளது என்றும், அவளை விட்டுத் தான் பிரிவதற்கு இல்லையென்றும், ஆகலால் அவள் அஞ்சவேண்டுவ தில்லையென்றும் அவளைத் தேற்றுவதற்குச் சொல்லி பதாயிற்று.

1123 கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழுந் திருநுதற் கில்லை யிடம்.

இடந்தலைப்பாட்டின்கட் டலைமகனைக்குறித் தோழி சொல்லியது.

(பரி) இ-ள். கருமணியிற் பாவாய் நீபோதாய் = என் கண்ணிற் கரு

மணியின் கணுறையும் பாவாய், நீயங்குநின்றும் போதருவாயாக ;—யாம் வீழும் திருநுதற்கு இடம் இல்லை=போதராதிருத்தியாயின், எம்மால் விரும்பப்பட்ட திருநுதலையுடையாட்கு இருக்கவிடமில்லையாம். எ-று.

யான் காணாதமையாமையின் இவள்புறத்துப் போகற்பாலளன்றி என் கண்ணுளிருக்கற்பாலள், இருக்குங்கால் நின்னோடொருங்கிருக்க இடம்போதாமையின் நின்னினுஞ் சிறந்தவிவட்கு அவ்விடத்தைக் கொடுத்து நீ போதுவாயாக வென்பதாம். (௩)

விளக்கம்:—"என் கண்ணிலுள்ள கருமணியில் வசிக்கின்ற ஓ! பாவை போலவாய்! நீ அக்கருமணியினின்றும் போய்விடுவாயாக! நீ போகாதிருப்பாயாகில் எம்மால் விரும்பப்பட்ட அழகிய நெற்றியை உடையாளாகிய இவளுக்கு அவ்விடத்து இருக்க இடமில்லாமல்போம்" என்று குறித்த இடத்துப்புணர்ந்து நீங்குகின்ற தலைமகளது நீக்கத்துத் தலைமகன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அது என்னையோ வெனின்? தலைமகனானவன் தலைமகளிடத்துத் தனக்குள்ள தன் காதல் சிறப்பினை அவள் அறியவேண்டித் தன்கண்ணினுள் இருக்கும் கருமணியில் தோன்றும் உருவத்தைப் பார்த்து "ஓ! பாவைபோல்வாளே! என் தலைவியாகிய இவளைப் பாராது இருக்க என்னாலாகாது ஆதலால இவள் என் கண்களைவிட்டு வெளியே போகாமல் என் கண்களின் உள்ளேயே இருக்க வேண்டியவளாக இருக்கின்றாள். அவ்விதம் என் கண்களினுள் இருக்கவேண்டுமாயின் நீயும் அவ்விடத்து உடனிருக்க இடம் போதாததாகும். ஆதலால உன்னைக் காட்டிலும் சிறந்தவளாகிய இவளுக்கு அவ்விடத்தைக் கொடுத்துவிட்டு நீ போய்விடுவாயாக!" என்று அவளது பிரிவினால் தனக்கு உண்டாகும் துன்பத்தைக் கூறுவது போல் தனக்கு அவள்மீது உள்ள காதல் சிறப்பினையும் கூறினானாயிற்று.

1124. வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாத லதற்கன்ன ணீங்கு மிடத்து.

பகற்குறிக்கட்புணர்ந்து நீங்குவான் சொல்லியது.

(பரி.) இ-ள். ஆயிழை உயிர்க்கு வாழ்தல் அன்னள்=தெரிந்தவிழையினை யுடையாள் எனக்குப் புணருமிடத்து உயிர்க்குடம்போடு கூடி வாழ்தல் போலும்;—நீங்குமிடத்து அதற்குச் சாதல் அன்னள்=பிரியுமிடத்து அதற்கு அதனினீங்கிப் போதல்போலும் எ-று.

எனக்கென்பதும் புணருமிடத்தென்பதும் அவாய்நிலையான் வந்தன. வாழுங்காலத்து வேற்றுமையின்றி வழிநிற்றலானும், சாங்காலத்து வருத்தஞ் செய்தலானும், அவற்றை அவள்புணர்வு பிரிவுகட்குவமையாக்கினன். (சு)

விளக்கம் :—"மிக நன்மையுடையது என்று அறியக்கூடிய சிறந்த ஆபரணங்களை உடையாளாகிய இவள் எனக்குப் புணருகின்ற காலத்து உயிரானது உடம்போடு கூடிவாழ்வதுபோலும், அவள் என் நீப் பிரியும் காலத்து அவ்வுயிரானது அவ்வுடம்பினைவிட்டு நீங்கிப்போகல்போலும் உள்ளாள்" என்று பகற்போதில் குறித்த இடத்து வந்து சேர்ந்து புணர்ந்து செல்லுகின்றவனுகிய தலைமகன் சொல்லியதாக இத் திருக்குறள் கூறுகின்றது. அதாவது, ஓர் உயிராளது உடம்பொடுகூடி வாழுங் காலத்து இது உயிர் இது உடல் என்று யாதொரு வேறுபாடு மில்லாமல் ஒன்றையொன்று விரும்பி நிற்பதுபோல் அவளோடு உள்ள காலமெல்லாம் இன்பந் தருவதாக உள்ளது என்றும், உயிரானது உடலினிட்டு நீங்குங் காலத்துப் பெரியதோர் துன்பஞ் செய்வதுபோல் அவளைப் பிரியுங் காலத்துத் துன்பம் உண்டாகின்றதென்றும் அவளோடு உள்ள புணர்வுக்கும் பிரிவிற்கும் ஆகிய இரண்டிற்கும் உவமை கூறினனென்பதாயிற்று.

1125. உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன் வெள்ளமர்க் கண்ணுள் குணம்.

ஒருவழித் தணந்துவந்த தலைமகன் நீயிர் தணந்தநான்று எம்மையுள்ளிய மறிதிரோவென்ற தோழிக்குச் சொல்லியது.

(பரி.) இ-ள். ஒன்னமர்க் கண்ணுள் குணம் யான் மறப்பின் உள்ளுவன்=ஒள்ளியவாய் அமரைச்செய்யுங் கண்ணினையுடையாள் குணங்களை யான் மறந்தேனுயின், நினைப்பேன்;—மறப்பு அறியேன்=ஒருபொழுதும் மறத்தலையறியேன், ஆகலான் நினைத்தலையுமறியேன். எ-று.

மன்—ஒழியிசைக்கண்வந்தது. குணங்கள் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலாயின. இத்தூணையுத் தலைமகன்கூற்று; மேற்றலைமகள்கூற்று. (கி)

விளக்கம் :—"ஒளியையுடையனவாய்ப் போரினைச் செய்யும் கண்களை யுடையாளது குணங்களை யான் மறந்திருப்பேனுயின் நினைத்து இருப்பேன். ஆனால் ஒருபொழுதும் மறந்து அறியேன். எப்போது மறக்கவில்லையோ நினைத்தும் அறியேன்" என்று சிறிது

வாராது இருந்து வந்த தலைமகனே "நீவிர் வராதிருந்த காலத்து எம்மை நினைந்துமிருந்தீரோ?" என்ற தோழிக்குப் பதில் கூறினனென்று இத் திருக்குறள் கூறுகின்றது. அதாவது, "எம்மைப் பிரிந்திருந்த காலத்து எம்மை நினைப்பதுமுண்டோ?" என்று தோழி கேட்டலும், "என் தலைவியின் குணங்களாகிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் பெண்தகைமையை நான் மறந்திருப்பேனுயின், பிரிந்தகாலத்து நினைந்திருத்தல் கூடும் ஓர் காலத்தும் மறந்தலில்லாதையால் நினைத்தலுமில்லையாயிற்று" என்று தலைமகன் காதல் சிறப்பினை உரைத்தானுயிற்று. இனித் தலைமகளது கூற்று நிகழும்.

1126. கண்ணுள்ளிற் போகா நிமைப்பிற் பருவரார் நுண்ணியரெங் காதலவர்.

ஒருவழித்தணப்பின்கட்டலைமகனைத்தோழி இயற்பழிக்குமென் றஞ்சி அவள்கேட்பத் தன்னுள்ளே சொல்லியது.

(பரி.) இ-ள். தாங்காணுமைபற்றிச் சேய்மைக்கட்போயினுஞ்சென்று கருதுவார் கருதுக,—எங்காதலவர் கண்ணுள்ளிற் போகார்=எம்முடைய காதலர் எங்கண்ணகத்து நின்றும் போகார், இமைப்பிற் பருவரார்=யாமறியாதிமைத்தேமாயின் அதனுல் வருந்துவதுஞ்செய்யார்,—நுண்ணியர்=ஆகலாற் காணப்படா நுண்ணியர். எ-று.

இடைவிடாத நினைவின்முதிர்ச்சியான் எப்பொழுதும் முன்னேதோன்றலிற் 'கண்ணுள்ளிற் போகார்' என்றும், இமைத்துழியும் அது நிற்றலான் 'இமைப்பிற் பருவரார்' என்றுங் கூறினுள். (சு)

விளக்கம்:—"தாம் பாராமையால் விட்டுப் பிரிந்து போயினர் என்று எண்ணுபவர் எண்ணியிருக்க ; ஆனுல் எம்முடைய காதலரோ எம் கண்ணினின்றும் போகாதவராயுள்ளார். இவ்வாறு கண்ணினுள்ளதை யாம் அறியாது இமை கொட்டுவோமாயின் அவ்வினைத்தலால் வருந்தவும் மாட்டார். ஆதலால், இவ்விதத் தகுதியுடைய எம் காதலர் கண்ணுல் பார்க்கப்படாத நுண்ணியராக இருக்கின்றனர்" என்று தலைவன் பிரிந்தகாலத்து அத்தலைவனைத் தோழி பழிப்பாளென்று அஞ்சி அத்தோழி கேட்கும்படி தனக்குள்ளேயே தலைவி சொல்லியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, இடைவிடாத நினைவின் மிகுதியால் எப்பொழுதும் தனக்கு முன்னே தோன்றுதலால் தன் கண்ணை

விட்டுப் போகாரென்றும், இமைகொட்டுகின்ற காலத்தும் அவ்வுரு தனக்கு முன்னே நிற்றலால், இமைத்தலாலும் துன்பப்படார் என்றும் கூறித் தன் தலைவனைத் தோழி பழிக்காதவிதமாகத் தலைவி தலைவனுடத்து உள்ள தன் காதல் சிறப்பினைக் கூறியதாயிற்று.

1127. கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணு மெழுதேங் கப்பாக் கறிந்து.

இ நுவுமது.

(பரி.) இ - ள். காதலவர் கண் உள்ளாராகக் கண்ணும் எழுதேம்= காதலர் எப்பொழுது மெங்கண்ணினுள்ளாராகலாற் கண்ணினை அஞ்சனத்தாலெழுதுவுஞ்சு செய்யேம்,—கரப்பாக்கு அறிந்து=அத்துணைக்காலமும் அவர் மறைதலையறிந்து. எ-று.

இதிலுறைப்பும்மை மாற்றப்பட்டது. கரப்பாக்கென்பது வினைப்பெயர். வருகின்ற வேபாக்கென்பதுமது. யானிடையீடின்றிக் காண்கின்றவரைப் பிரிந்தாரென்று கருதுமாறெனனெயென்பது குறிப்பெச்சம். (எ)

விளக்கம்:—"காதலர் எக்காலத்தும் எம் கண்ணினிடத்திலேயே இருக்கின்றார் ஆதலால் என் கண்களுக்கு அஞ்சனக்கோல் கொண்டு மை பூசுவதும் செய்யேம்; ஏனெனில்? பூசுகின்ற அவ்வளவு காலமும் அவர் மறைந்திருப்பாரென்று அறிந்து" என்று தோழி தலைவனைப் பழியாதவிதமாகத் தலைவி சொல்லியதென்று இத்திருப்பாவில் கூறுகின்றது. அதாவது, கண்ணினை மை கொண்டு பூசின், பூசுகின்ற அவ்வளவு சிறிய காலமும் என் எதிரில் நிற்கின்ற அவளைப் பாராதிருத்தல் கூடாமையாகின்றதென்று கண்ணிற்கு மையினை இடுதலும் செய்யாதிருக்கின்றேன். அவ்விதம் யான் விடாது பார்த்தும் கொண்டிருக்கின்ற காதலரைப் பிரிந்து நின்றார் என்று ஏன் கருதுதல்வேண்டும் என்று தன் நினைவின் முதிர்ச்சியையும் அவனது உருவெளித் தோற்றத்தையும் கூறினாளாயிற்று.

1128. நெஞ்சத்தார் காத லவராக வெப்துண்ட லஞ்சுதும் வேபாக் கறிந்து.

இ நுவுமது.

(பரி.) இ - ள். காதலவர் நெஞ்சத்தாராக வெய்து உண்டல் அஞ்சுதும்

=காதலர் எந்நெஞ்சினுள்ளாராகலான் உண்ணுங்கால் வெய்தாக உண்டலே யஞ்சாநின்றேம்,—வேபாக்கு அறிந்து=அவர் அதனுன் வெய்துறலையறிந்து.

எப்பொழுதும் எந்நெஞ்சின்கணிருக்கின்றவரைப்பிரிந்தாரென்று கருதுமாறெண்ணுவதென்பது குறிப்பெச்சம். (அ)

விளக்கம்:—"என் காதலர் என்னெஞ்சினுள்ளேயே இருக்கின்ற காதலால், உண்ணுங் காலத்தும் வெப்பமாகப் பொருள்களை யுண்பதற்குப் பயப்படுகின்றேன் ஏனெனில்! அவர் அதனுல் வெப்பமடைதலை யறிந்து" என்று தன் நினைவின் முதிர்ச்சியைத் தனக்குள்ளேயே தலைவி சொல்லிக்கொண்டதாக இத்திருக்குறள் கூறுகின்றது அதாவது, "காதலர் என் நெஞ்சில் இடைவிடாது இருக்கின்றனரென்று அறிந்து வெப்பமாகிய பொருள்களை உண்டால் அதனுல் அக்காதலர் வருந்துவர் என்று எண்ணி வெப்பமாகிய பொருள்களையும் உண்ணுமலிருக்கின்றேன். அவ்விதமிருக்க அது அறியாத சிலர் அவர் பிரிந்தாரென்று எண்ணுவது எதற்கு" என்று தலைவி குறிப்பாகக் கூறினளாயிற்று.

1129. இமைப்பிற் கரப்பாக் கறிவ லினைத்திற்கே யேதில ரென்னுமிவ் வூர்.

வரைவிடை வைத்துப் பிரிவின்கட் டலைமகளாற்றுதற் பொருடடுத் தோழி தலைமகனையியற்பழித்தவழி அவளியற்பட மொழிந்தது.

(பர்.) இ-ள். இமைப்பிற் கரப்பாக்கு அறிவல்=என்கண்ணிமைகளுமாயின் உள்ளிருக்கின்ற காதலர் மறைதலையறிந்து இமையேன்;—அதனைத் திற்கே எதிலர் என்னும் இவ்வூர்=அவ்வளவிற்கு அவரைத் துயிலாநோய் செய்தார் அன்பிலரென்று சொல்லாநிற்கும் இவ்வூர். எ-று.

தன் கருத்தறியாமைபற்றிப் புலந்து சொல்லுகின்றமையாகலின், தோழியை வேறுபடுத்து 'இவ்வூர்' என்றன். ஒருபொழுதும் பிரியாதவரைப் பிரிந்தாரென்று பழிக்கற்பாலையல்லை யென்பதாம். (க)

விளக்கம்:—"என் கண் இமை கொட்டுமாயின் அக்கண்ணுள்ளிருக்கின்ற காதலர் அவ்விமை கொட்டுகின்ற காலமும் மறைந்து இருத்தலை யறிந்து இமைகொட்டேன். அவ்விதம் என்னைவிட்டுப் பிரியாது என் கண்ணுள்ளேயே உள்ள அக்காதலரைத் 'தூங்காவண்ண

மாக நோயிணை உண்டுபண்ணினர்; அன்பு இல்லாதவர்' என்று இவ்வூர் சொல்லாநிற்கும்" என்று மணந்துகொள்ளக் கருதித் தலைமகன் பிரிந்து நின்றமையைக் கருதித் தலைமகள் மனம் ஆறுதலடையும் பொருட்டுத் தோழி தலைமகன் குறித்தகாலத்துவரவில்லை என்று அவன் இயற்கையைப் பழித்தகாலத்துத் தலைவியானவள் அவன் நகுதியைப் புகழ்படச் சொல்லியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தோழியானவள் தலைவிக்குத் தலைவன் மீதுள்ள காதலறியாது அவனைக் கோபித்துச் சொல்லுகின்றபோது 'உயிர்த்தோழியாக இருந்தும் என் தலைவன்மீது எனக்கு உள்ள காதலறியாது அயலவர்போல் என் தோழி உரைக்கின்றாள்' என்று தன் கருத்தை யறியாமையால் அவளை அயலவளாக்கியதுடன் ஒருபொழுதும் பிரியாத் தன் தலைவரைப் பிரிந்தாரென்று கூறிப்பழித்தல்கூடாது என்றும் கூறினளாயிற்று.

1130. உவந்துறைவ ருள்ளத்து ளென்று மிகந்துறைவ ரேதில ரென்னுமிவ் வூர்.

இதுவுமது.

(பரி.) இ - ள். என்றும் உள்ளத்துள் உவந்து உறைவர்=காதலர் எஞ்ஞான்றும் என்னுள்ளத்துள்ளே புவந்துறையாநிற்பர்,—இகந்து உறைவர் எதிலர் என்னும் இவ்வூர்=அதனையறியாது அவரைப் பிரிந்துறையா நின்றார் அன்பிலரென்றுசொல்லாநிற்கும் இவ்வூர்.' எ - று.

உவந்துறைவரென்றதனால் அன்புடைமைகூறினள். பிரியாமையும் அன்புமுடையாரை இலரெனப் பழிக்கற்பாலையல்லை யென்பதாம். (இ)

விளக்கம்:—"எம் காதலர் எக்காலத்தும் என் மனத்தினுள்ளேயே விரும்பி வசிக்கின்றனர்; அவ்விதம் அவர் வசித்தலை யறியாது அவரைப் பிரிந்து வசிக்கின்றனர்; அதனால் அன்பில்லாதவர்" என்று இவ்வூர் சொல்லும் என்று தலைமகனைத் தலைமகள் இயல்பட மொழிந்தாளென்று இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால் தலைவியானவள் தனக்குத்தலைவன்மீதுள்ள அன்புடைமையையும் தன்மீது தலைவனுக்கு உள்ள அன்புடைமையையும் கூறித் தோழியைப் பழிக்கற் பாலையல்லை என்று தடுத்துத் தன் காதல் சிறப்பையும் கூறினளாயிற்று.

114. அதிகாரம்.

நாணுத்துறவுரைத்தல்.

(பரி.) அஃதாவது சேட்படுக்கப்பட்டு ஆற்றுணைய தலைமகன் தோழிக்குத் தன்ஞண்டுறவுரைத்தலும், அறத்தொடு நிற்பிக்கலுற்ற தலைமகள் அவட்குத் தன்ஞண்டுறவுரைத்தலுமாம். இது, காதன்மிக்குழி நிகழ்வதாகலின், காதற் சிறப்புரைத்தலின் பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:—அதாவது, தோழியால் வாராவண்ணம் அகற்றப்பட்டு அவ்வகற்றலுக்கு ஆற்றுதுணையாகிய தலைமகனவன் அத்தோழிக்குத் தனக்கு இயல்பாக உள்ள நாண் போய்விட்டமையைச் சொல்லுதலும், தாய் தந்தை முதலியோருக்குத் தலைவன் தலைவிக்கு உள்ள ஒழுக்கத்தைத் தோழியறிவித்து நின்றமையின் வரைவின் பொருட்டுத் தலைமகனைக் காணுது நின்ற தலைமகள் அவனைக் காணுமையால் தன்னுடைய நாணமிழந்தலைதோழிக்குச் சொல்லுதலும் ஆம்; இவ்விதம் நாணத்தைத் துறத்தல் அன்புமிகுந்த இடத்து உண்டாவது ஒன்றுதலால், காதல் சிறப்பு உரைத்தல் என்னும் அதிகாரத்திற்குப் பிறகு இவ்வதிகாரம் வைக்கப்பட்டுள்ளது

1131. காம முழந்து வருந்தினுர்க் கேம
மடலல்ல தில்லை வலி.

சேட்படுக்கப்பட்டு ஆற்றுணைய தலைமகள் சொல்லியது.

(பரி.) இ - ள். காமம் உழந்து வருந்தினுர்க்கு = அரியராய மகளிரோடு காமத்தையனுபவித்துப் பின்னதுபெறாது துன்புற்றவாடவர்க்கு = ஏமம டல் அல்லது வலி இல்லை = பண்டும் ஏமமாய் வருகின்ற மடலல்லது இனி யெனக்கு வலியாவதில்லை. எ - று.

ஏமமாதல் = அத்துன்ப நீங்கும்வகை அவ்வனுபவத்தினைக்கொடுத்தல். வலி — ஆகுபெயர். பண்டுமாடவராயினுர் இன்பமெய்திலருன்றவாறுநிற்க நின்னையதற்குத் துணையென்று கருதிக் கொன்னே முயன்ற யான் இது பொழுது அல்லாதமையையறிந்தேனுகலான் இனி யானுமவ்வாற்றுன் அதனை யெய்துவலென்பது கருத்து. (க)

விளக்கம்:—"கிடைப்பதற்கு அரியராகிய பெண்களோடு காம இன்பத்தை அனுபவித்துப் பின்னர் அவ்வின்பத்தைப் பெறாது துன்

பத்தை யடைந்த ஆண்மக்கட்கு முன்னரும் காவலாய் வருகின்ற மடலேறுதல் அல்லாமல் வேறொன்றில்லை ஆதலால், இனி எனக்கு வலிமையுடையது ஆக நிற்பது மடலேறுதல் அன்றி வேறொன்றுமில்லை" என்று தலைவியைப் பெறாதகாலத்துப் பொறுக்கமுடியாதவனாகிய தலைமகன் சொல்லியது என்று இத்திருக்குறள் கூறுகின்றது அதாவது, தன்னை அகற்றுகின்ற தோழியிடத்துத் தலைவனானவன் "ஓ! தோழியே! பண்டைக்காலமுதல் ஆண்மக்கள் தோழியரின் துணை கொண்டு இன்பம் அடைந்து வந்தாராதலால் அவ்விதமே உன்னைத் துணைகொண்டு இன்பம் அடைவதற்கு முயற்சிசெய்த யான் இப்பொழுது அம்முயற்சியால் யாதொரு பயனையும் அடைதல் முடியாது என்று அறிந்தேனாதலால், இனி இவ்வாறு வருந்துபவர் தங்களுக்குத் துணையாகக் கொண்டதாகிய மடலேறுதல் என்னும் செயலை யான் மேற்கொண்டு என் துன்பத்தினின்றும் நீங்கி இன்பத்தை யடைவேன்" என்று கூறினானாயிற்று. இறையனாரகப்பொருள் ஒன்பாவது சூத்திர உரையில், "தலைமகன் ஒரு சொற்சொல்லும், என் சொல்லுமோவெனின், இன்றி னாங்கு எல்லாம் இகக்கும், நின்னான் முடியுமெனக் கருதிவந்து உழந்தேன், நின்னான் முடியாமை உணரப்பட்டது, பட்டமையால் இனி இளிவந்தன செய்தாயினும் முடிப்பல், இதனை இன்றியமையேனாகலானென்னும், இளிவந்தன செய்தலாவது, மடலூர்ந்தானும் வரைபாய்ந்தானும் என்றவாறு" என்று கூறியிருத்தலும் இங்கு ஒப்பு நோக்கற்பாலது.

1132. நோனா வுடம்பு முயிரு மடலேறு நாணினை நீக்கி நிறுத்து.

நாணுடைய நமக்கு அது முடியாதென மடல் விலக்க லுற்றுட்குச் சொல்லியது.

(பரி.) இ-ள். நோனா உடம்பும் உயிரும் மடல் ஏறும் = அவ்வருத்தத்தினை, பொறாத வுடம்புமுயிரும் அதற்கேமமாய மடன்மாவினையூரக் கருதாநின்றன, —நாணினை நீக்கி நிறுத்து = அதனை விலக்குவதாய நாணினையகற்றி. எ-று.

வருந்தினார்க்கென மேல்வந்தமையிற் செயப்படுபொருள் ஈண்டுக் கூறாராயினார். மடல்—ஆகுபெயர். நீக்கிநிறுத்தென்பது ஒரு சொன்னீர்மைத்து. அறிவுநிறை யோர்ப்புக் கடைப்பிடி முதலிய முன்னே நீங்கவும் நாணீங்காது

ன்றது, அதுவுமிதுபொழுது நீங்கித்தென்பான், உடம்புமுயிரும் என் றூன். அதைகாக் தம்முணீங்காமற்பொருட்டு மடலேறுமென்றது அவள் தன்னுற்றுமை யறிந்து கடிதிற் குறைகோர்தலேக்கி. (உ)

விளக்கம் : — "பிரிந்திருத்தலால் உண்டாகும் வருத்தத்தைப் பொறுக்கமுடியாது உடம்பும் உயிரும் தனக்கு அத்தன்பத்தை நீக்கும் ஆகாரமாகிய மடலினே ஏறக் கருதாகிற்கும். அவ்விகம் ஏறுகின்ற மடலேறுகலே விலக்குகின்ற நாணினேப்போக்கி" என்று நாணமுடைய உனக்கு மடலேறுதல் முடியாது என்று மடலேறுதலே விலக்கிய தோழிக்குத் தலேமகன் சொல்லியதாக இத்திருக்குறள் கூறுகின் றது. அதாவது, நாணமென்ப து இல்லாதவரே மடலேறுதல் கூடும் நாணமென்பது ஒன்று மேற்கொண்டு உள்ள உமக்கு அது முடியாது என்று கூறிய தோழியை நோக்கி, "தோழியே! நீ கூறியது ஒக்கும்; அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி, நாண் என்னும் நற்குணங்களுள் அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடியாகிய குணங்கள் முன்னமே என்னேவிட்டு நீங்கின. நாண் ஒன்றுமாத்திரம் என்னேவிட்டு நீங்கா திருந்தது; அந்நாணும் இப்பொழுது என்னேவிட்டு நீங்கியது. இனி, மடலேறுவது நிச்சயம்" என்று தோழி தன் குறையை அறிந்து விரை வாகக் குறையை முடிப்பபாள் என்று கூறியதாயிற்று.

1133. நாணெடு நல்லாண்மை பண்டுடையே னின் காமற்ரு ரேறு மடல். [றுடையேன்

நாணேயன்றி நல்லாண்மையு முடைமையின் முடியாதென்றுட்தச் சொல்லியது.

(பரி.) இ - ள். நாணெடு நல்லாண்மை பண்டு உடையேன் = நாணும் மிக்க வாண்டகைமையும் யான் பண்டுடையேன், — காமுற்றூர் ஏறும் மடல் இன்று உடையேன் = அவை காமத்தானீங்குதலான், அக்காமமிக்காரேறும் மடலினே யின்றுடையேன். எ - று.

நாண = இழிவாபினசெய்தற்கண் விலக்குவது. ஆண்மை = ஒன்றற்குச் தளராதநிற்றல். அவை பண்டுள்ளன, இன்றுள்ளது இதுவேயாகலிற் கடி இன் முடியுமென்பதாம். (கூ)

விளக்கம்:— "நாணத்தினேயும் மிகுந்த ஆண் தன்மையினேயும் யான் முன்னர் உடையவனுயிருந்தேன். அந்த நாணும் நல்ல ஆண்மை

யும் எனக்குள்ள காமத்துன்பத்தால் என்னைவிட்டு இப்பொழுது நீங்குதலால், இனிக்காமமிகுந்தவர் ஏறும் மடலேறுதலை இன்று உடைய வனாயிருக்கின்றேன்" என்று தலைமகனுனவன் நாணும் நல்லாண்மை யுமுடைய உமக்கு மடலேறுதல் முடியாதென்ற தோழிக்குச் சொல்லிய தாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, "இழிவாகிய காரியங் களைச் செய்யவொட்டாது எதிர்நிற்கும் நாணத்தையும் ஒன்றினுக்கும் தளராது இருக்கச் செய்கின்ற ஆண்மைத் தன்மையினையும் இப்போது எனக்கு நேர்ந்த காமத் துன்பத்தினால் போக்கிவிட்டேனுதலால், இனி மடலேறுதல் வீரைவில் முடியுமென்று தலைவன் கூறினனுயிற்று.

1134. காமக் கடும்புன லுய்க்குமே நாணொடு நல்லாண்மை யென்னும் புணை.

நாணுநல்லாண்மையுங் காமவெள்ளத்திற்குப் புணையாகலின் அதனுல் அவை நீங்குவனவல்ல வென்றட்குச் சொல்லியது.

(பரி.) இ-ன். நாணொடு நல்லாண்மை என்னும் புணை=யான்றண்னைக் கடத்தற்குக் கொண்ட நாணும் நல்லாண்மையுமாகிய புணைகளை—காமக்கடும் புனல் உய்க்குமே=என்னிற் பிரித்துக் காமமாகிய கடிய புனல் கொண்டு போகாநின்றது. எ-று.

அதுசெய்யமாட்டாத வனைப்புனலினீக்குதற்குக் 'கடும்புனல்' என்றன், இப்புனற்கு அவை புணையாகா, அதனுன் அவைநீங்குமென்பதாம். (சு)

விளக்கம்:—"காமத்தைக் கடப்பதற்குக் கொண்ட நாண், நல் லாண்மை ஆகிய புணைகளை என்னைவிட்டுப் பிரித்துக் காமமாகிய விரைந்து செல்லுகின்ற புனலானது கொண்டுபோகா நின்றது" என்று காமவெள்ளத்திற்கு நாண், நல்லாண்மை என்னுமிரண்டும் தெப்பங்க ளாதலால், அக்காம வெள்ளத்தைத் தாண்டிச் செல்வதற்குத் துணையாக நிற்குமேயல்லாது விட்டு நீங்குவனவல்லவே என்று சொல்லிய தோழிக் குத் தலைமகன் சொல்லியது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, "காம வெள்ளமல்லாத ஏனைய வெள்ளமாயின் நாணினையும் நல்லாண்மையையும் நீக்குதல் முடியாது. இக்காம வெள்ளமோ எல்லா வெள்ளத்தினும் விரைந்து செல்லுகின்ற புனலாதலால் இவ்விரண்டு புணையினை அடித்துக்கொண்டு போகுமேயன்றி, அப்புணைகளைக் கொண்

டவர்களுக்குத் துணையாகமாட்டா" என்று காமத்திற்குள்ள வலிமையையும் கூறினனையிற்று.

1135. தொடலைக் குறுந்தொடி தந்தாண் மடலொடு மாலை யுழக்குந் துயர்.

இவ்வாற்றையும் மடலும் நமக்கெவ்வாறு வந்தன வென்றடைச் சொல்லியது.

(பரி.) இ-ள். மாலை உழக்கும் துயர் மடலொடு=மாலைப்பொழுதின்கணனுபவிக்குந் துயரினையும் அதற்கு மருந்தாய மடலினையும் முன்னறியேன்,—தொடலைக் குறுந்தொடி தந்தாள்=இது பொழுது எனக்கு மாலை போலத் தொடர்ந்த சிறுவளையினையுடையாடந்தாள். எ-று.

காமம் வனைப்பொழுதுகளினு மூளதேனும் மாலைக்கண் மலர்தலுடைமையின் 'மாலையுழக்குந்துயர்' என்றும், மடலும் அதுபற்றி வந்ததாகலின் அவ்விழிவும் அவளாற்றப்பட்டதென்றும், அவடான்றீ கூறியதே கூறுமிலைமையென்பது தோன்றத் 'தொடலைக்குறுந்தொடி' என்றுங் கூறினன். அப்பெயர் உவமைத்தொகைப்புறத்துப்பிறந்த வன்மொழித்தொகை. இவை அவடந்தனவாகலின் நின்னுணீங்குமென்பது கருத்து. (இ)

விளக்கம்:—"மாலைப் பொழுதினிடத்தே அனுபவிக்குந் துன்பத்தினையும் அத்துன்பத்திற்கு மருந்தாகிய மடலினையும் நான் முன்பு அறியேன், அவற்றை இப்பொழுது எனக்கு மாலைபோலத் தொடர்ச்சிபெற்ற இனமாகிய சிறிய வளைகளை அணிந்தவளாகிய இவள் தந்தாள்" என்று இவ்வித ஆற்றுமையும் மடலேற எண்ணிய எண்ணமும் நமக்கு எவ்வாறு வந்தன என்று கேட்ட தோழிக்குத் தலைமகன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, காதலிருவர் ஒருவரை யொருவர் விட்டுப் பிரிந்து உள்ள காலமெல்லாம் காமம் துன்புறுத்தக் கூடுவது ஆயினும், மாலைக்காலத்தில் பூவொன்று மலர்வதுபோல அது அதிகரித்து நிற்பதால், அவ்வித காமத்தினை மாலையுழக்கும் துயர் என்றும், மடலூர்தலும் அக்காமத் துன்பத்தால் வந்ததாதலின் அவ்விரண்டும் தான் அடைவதற்கு இல்லாத தலைவியினால் தரப்பட்டது என்றும், அவ்வித தலைவியும் நீ சொல்லியதையே சொல்லும் இளமைப் பருவமுடையவளாதலால் தொடலைக் குறுந்தொடி என்றும் கூறியதுடன், இவ்வித துன்பங்கள் உன் தலைவி தந்தனவாதலால் அவை

நீங்கவேண்டுமாயின் உன்னுலேயே நீங்கவேண்டும் என்றும் தன் கருத் தினைக் கூறினளையிற்று.

1136. *மடலூர்தல் யாமத்து முள்ளுவேன் மன்ற படலொல்லா பேதைக்கென் கண்.

மடலூரும் பொழுது இற்றைக்குங் கழிந்ததென்றுட்கி சொல்லியது.

(பரி.) இ-ள். பேதைக்கு என் கண் படல் ஒல்லா = நின்பேதைகாரண மாக என்கண்கள் ஒருகாலுந் துயிறலைப்பொருந்தா ;—யாமத்தும் மன்ற மட லூர்தல் உள்ளுவேன் = அதனுல் எல்லாருந்துயிலு மிடையாமத்தும் யானி ருந்து மடலூர்தலையே கருதாநிற்பேன். எ-று.

பேதையென்றது பருவம்பற்றியன்று மடமைபற்றி. இனிக்குறை முடிப்பது நானேயெனவேண்டாவென்பதாம. (சு)

மடலூர்தலாவது இயற்கைப் புணர்ச்சிக்குப் பிறகுத் தோழியான வள் தலைமகனே, "இவ்விடத்துக் காவல் மிகுதி உள்ளது. நீர் இங்கு வருவது கூடாது" என்று சில பகல் தடுத்தகாலத்து அத்தடைகளால் தலைமகளைப் பார்க்க முடியாத தலைமகன் தாங்கமுடியாத காமத்துன்பத் தைக்கொண்டு, "இனி நான் என் தலைவிக்கும் எனக்கும் உள்ள அன்பின் மிகுதியை ஊரவர் அறியும்படி செய்து மணம் முடிப்பேன்" என்று எண் ணியவனுய் பண்டைக் காலத்து வழக்கின்படி பனையினது கூர்மைதங்கிய கருக்கினுல் குதிரை ஒன்றினையும் பனைமரத்திலுள்ள வனைய உறுப்புகளால் வண்டில் முதலானவும் செய்து கருக்கால் செய்த அக்குதிரையின்மேல் ஏறு வது. அவ்விதம் மடலேறுகின்ற காலத்து உடை ஒன்றுந் தரியாதவனும் உடல் முழுவதும் நீற்றினைப் பூசி சித்திரம் எழுதுவான் ஒருவன் கையால் எழுதாது தானே தான் காதல்கொண்ட தலைவியின் உருவத்தை எழுதி முடித்து அவ்விதம் எழுதிய படத்தில் தன் பெயரையும் எழுதி, தன் கையில் பிடித்துக்கொண்டு ஊருக்கு நடுவே நான்கு சந்துகள் கூடுகின்ற ஓர் இடத்தே உணவும் உறக்கமுமில்லாமல் தன் கையிலுள்ள படத்தில் உள்ள மகளைப் பார்க்கின்ற பார்வையும் அவ்விடத்தேயே பதிந்துகிடக்கின்ற மனமும் தணி யாத ஆவலுமுடையவனுய வேறு உணர்ச்சி ஒன்றுமில்லாமல் தனக்கு எவ்வித இடையூறுகள் வரினும் அவற்றை யெல்லாம் அறிதலில்லாமல் மழையிலும் வெயிலிலும் காற்றிலும் கலங்காது அவ்விடத்தேயே இருக்கவும், இசெயலை யறிந்த அவ்வூரிலுள்ளவர்கள் ஒன்றுகூட கூடியதை "படத்தில் உள்ளவள் பொருட்டாக மடலை யேறுவையோ அவ்விதம் ஏறி அதற்கு உரிய

விளக்கம்:—"பேதைமைமிகுந்த உன் தலைவியின் காரணமாக என் கண்கள் ஒருகாலும் தூங்குவதில்லை ஆதலால் எல்லாரும் தூங்குகின்ற இடை யாமத்தும் யான் விழித்திருந்து மடலேறுவதையே எண்ணுவேன்" என்று தோழியானவள் தலைவனை நோக்கி இப்பொழுது மடலேறுவதற்குரிய பொழுதானது ஆய்விட்டதாதலால் இன்றைய தினமும் மடலேறுதல் என்பது ஒழிந்தது என்று சொல்லுதலும் அவளுக்குத் தலைவன் பதில் சொல்லியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, அறியாமை மேற்கொண்டாளாகிய உன் தலைவியின் காரணமாக என் கண்கள் காமத் துன்பத்தால் எக்காலத்தும் தூங்காமல் உள்ளனவாதலால், நான் எண்ணிய மடலை யேறுவதற்கு இதுதான் பொழுதென்று சொல்லுவதற்கு இல்லை. எல்லோரும் தூங்குவதாகிய நடுராத்திரியிலும் யான் மடலேறுதல்கூடும். ஆதலால், இனி என் குறையை முடிப்பது நாளைக்கு ஆகும் என்று இருந்துவிடாதே; இன்றே முடிப்பது நலமாகும் என்று கூறினனையிற்று.

சோதனையைக் கொடுப்பாயோ, கொடுப்பாயாயின் அவளை உனக்கே தருவோம்" என்று கூறுவர். அதைக் கேட்ட தலைமகன் அவ்விதமே செய்வேன் என்பானுயின் அச்செயலை அரசனுக்கு அறிவித்து அவன் ஏவல்கொண்டு ஏறுதல் வேண்டும். அவ்விதம் ஏறுங்காலத்து வெண்பூளைப்பூ, எலும்பு, எருக்கின்முகை இவைகளால் ஆகிய மாலையை மார்பில் அணிந்துகொண்டு அம்மடல் என்கின்ற குதிரையின்மீது ஏறுதல் வேண்டும். ஏறியவுடன் அம்மடல் மாவில் கட்டிய கயிற்றினை வீதியில் இழுத்த காலத்து உருண்டு ஓடுகின்ற வண்டில் முதலாகிய பனங்கருக்குகள் அறுத்த இடமெல்லாம் இரத்தம் தோன்றுமல் வீரியம் தோன்றுமாயின் அத்தலைமகள்மீது உண்மையாகிய காதல் உடையவன் என்று அவ்வூரவர் அவளைப் பலவித அலங்காரங்களுடன் மணஞ்செய்து கொடுப்பர். அவ்விதம் வீரியம் தோன்றுது இரத்தம் தோன்றுமாயின் காதல் இல்லாது பழி கூறுகின்றனன் என்று எண்ணிக் கொலைசெய்துவிடுவர் என்பதேயாகும். இம்மடலேறும் விதத்தைப் பின் வரும் திருக்கோவையார் செய்யுளாலும் அறிதல்கூடும்.

"கழிகின்ற வெண்ணெய் நின்றநின் கார்மயி றன்னையும்யான்
கிழியொன்ற நாடி யெழுதிக் கைக்கொண் டென்பிறவி கெட்டின்
றழிகின்ற தாக்கிய தாளம்பலவன் கயிலே யன்தேன்
பொழிகின்ற சாரலுஞ் சீரூர்த் தெருவிடைப் போதுவனே."

1137 கடல்ன்ன காம முழந்து மடலேறுப்
பெண்ணிற் பெருந்தக்க தில்.

பேதைக்கேன்கண் படலோல்லா வென்பதுபற்றி அறிவிலாய மகளிரினும் அஃதுடையராய வாடவரன்றே ஆற்றற்பால ரெவ்ருட்குச் சொல்லியது.

(பரி.) இ - ன். கடல் அன்ன காமம் உழந்தும் மடல் ஏறும் பெண்ணின்=கடல்போலக் கரையற்ற காமநோயினையனுபவித்தும் மடலூர்தலைச் செய்யாது ஆற்றியிருக்கும் பெண்பிறப்புப்போல—பெருந்தக்கது இல்=மிக்க தகுதியினையுடைய பிறப்பு உலகத்திலில்லை. எ-று.

பிறப்புவிசேடத்தால் அவ்வடக்கம் எனக்கில்லையாகா நின்றது, நீ யஃதறிகின்றிலை யென்பதாம். இத்துணையுந் தலைமகன்கூற்று, மேற்றலைமகள் கூற்று. (எ)

விளக்கம்:—"அளவு சொல்லக்கூடாத சமுத்திரம்போலக் கரையில்லாத காம நோயாகிய துன்பத்தினை அனுபவித்து இருந்தும், மடல் என்பது ஒன்றினை ஏறுது பொறுத்துக் கொண்டிருக்கும் பெண்கள் பிறப்பினைப்போல் மிகத் தகுதியுடைய பிறப்பொன்று இவ்வுலகத்திலில்லை" என்று பேதைக் காரணமாக நான் தூங்குவதில்லை என்று மேல்கூறிய தலைவனை நோக்கித் தோழியானவள் அறிவின் மிகுதி இல்லாத பெண்களைப் பார்க்கினும் அவ்வறிவின் மிகுதியுடைய ஆண்மக்களன்றே காமத் துன்பத்தினைப் பொறுத்துக்கொண்டு மடலென்பது ஏறுது நிற்றல் வேண்டுமென்று சொல்லியதற்கு அவன் பதில் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, "தோழியே! பெண்கள்பிறப்பின் விசேஷத்தால் அடைந்துள்ள அடக்கத்தை நான் அடைவதற்கு இல்லை. நீ அதனை அறியாது கூறுகின்றாய். என்னைவிட்டு நீங்காது நின்ற நாணமும் இக்காமத் துன்பத்தால் இதுபொழுது என்னைவிட்டு நீங்கிற்று" என்று தன் நாண் துறத்தலைத் தலைவன் இதுகாறும் கூறினனையிற்று. இனித் தலைமகள் கூற்று நிகழும்.

1138. நிறையரியர் மன்னளிய ரென்னுது காம
மறையிறந்து மன்று படும்.

நாப்புச்சிறைமிக்குக் காமம் பெருகியவழிச் சேரல்லியது.

(பரி.) இ - ன். நிறை அரியர் (என்னுது)=இவர் நிறையால் நாமீதார் தற்கரியரென் றஞ்சுதல்செய்யாது,—மன் அளியர் என்னுது=மிகவுமளிக்

கத்தக்காரென் றிரங்குதல் செய்யாது,—காமம் மறை இறந்து மன்றுபடும்= மகளிர் காமமும் அவர் மறைத்தலேக்கடந்து மன்றின்கண்ணே வெளிப் படுவதா யிருந்தது. எ-று.

என்னுதென்பது மூன்னுங்கூட்டி மகளிரென்பது வருவிக்கப்பட்டது. எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. மன்றென்றது தந்தைதன்னேயரை நோக்கி. உலகத்துப் பெண்பாலார் காமத்தியல்பு கூறுவாள்போன்று, தன் காமம் பெருகியவாறும் இனியறத்தொடு நிற்றல்வேண்டுமென்பதுங் குறிப் பாற் கூறியவாருயிற்று. (அ)

விளக்கம் :—"பெண்களிடத்துள்ள கற்பின் தன்மையால் நாம் இவர்களைத் துன்புறுத்துதல் கூடாது என்று பயப்படாமலும், பேதை மையுடையராதலால் இவர்கள் நம்மால் காக்கப்படவேண்டியவர்களாய் உள்ளார்கள் என்று அவர்பால் இரக்கங்கொள்ளாமலும் பெண்கள் அடைந்த காமமானது அவர்கள் எவ்வளவு மறைத்தாலும் அம்மறைப் பினைக் கடந்து யாவரும் அறியக்கூடிய வண்ணம் வெளிப்படுவதாக இருந்தது" என்று தலைவி சொல்லியதாக இத்திருக்குறள் கூறுகின்றது அது என்னேயோவெனின் ? தலைவி பருவம் முதிர்ந்தாளென்று கண்ட தாயானவள் அவளை வெளிப்போகாவண்ணம் வீட்டிலேயே இருக்கச் செய்தகாலத்து தலைவியானவள் தலைவனைக் காண்பதற்கு இல்லாமையால் காமம் மிகுந்து அதனை யாவரும் அறியும்படி இருந்ததுடன், இனி மணந்துகொள்ளவேண்டும் என்கிற எண்ணமுங்கொண்டு அவ்வெண் ணத்தைத் தாய் தந்தை முதலிய தலைவருக்குக் கூறியே முடித்தல்வேண் டும் என்று தன்னுடைய உயிர்த் தோழிக்குத் தன் காமத் துன்பத் தைக் கூறியதாயிற்று என்பதாம்.

1139. அறிகிலா ரெல்லாரு மென்றேயென் காம மறுகின் மறுகு மருண்டு.

இதுவுமது.

(பரி.) இ-ள். எல்லாரும் அறிகிலார் என்று=யான்முன்னடங்கிநிற்ற லான் எல்லாருமென்னேயறிந விலர் இனியவ்வாறு நல்லாதியானே வெளிப் பட்டறிவிப்பலென்று கருதி,—என்காமம் மறுகில் மருண்டு மறுகும்=என் காமம் இவ்வூர்மறுகின்கண்ணே மயங்கிச்சுழலாநின்றது. எ-று.

மயங்குதல்=அம்பலாதல். மறுகுதல்=அலராதல். அம்பலுமலரு மாயிற்று, இனியறந்தொடுநிற்றல்வேண்டு மென்பதாம். அறிவிலாரென் பதூஉம் பாடம். (கூ)

விளக்கம்:—"என்னுடைய காமமானது 'நான் முன்னர் அடங்கி இருந்தகால் என்னை எல்லாரும் அறியாது இருந்தனர். இனி அவ்விதம் அடங்கி நில்லாது யானே வெளிப்பட்டு யாவருக்கும் அறிவிப்பேன்' என்று எண்ணியதாய் இவ்வூர் தெருவினிடத்தே மபங்கிச் சூழலுகின்றது" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அது என்னேயோ வெனின்? கரைகாணுத காமத் துன்பத்தால் யான் வருந்துவதைக் கண்ட ஊரவர் அம்பலும் அலரும் எடுப்பாராயிற்று. இனி, இவ்விதம் களவு ஒழுக்கத்தில் நிற்றற்கு இல்லாமையாலும், காமத் துன்பத்தை அடக்குவதற்கு முடியாதாதலாலும் தன் தாய் தந்தையருக்குத் தனக்குள்ள துன்பத்தை யறிவித்து மணத்தை முடித்தல்வேண்டும் என்று தோழிக்கு அறிவுறுத்தியதாயிற்று.

1140. யாங்கண்ணிற் காண நகுப வறிவில்லார் யாம்பட்ட தாம்படா வாறு.

செவிலிக்கறத்தோடு நின்றுவைத்து யாணிற்குமாறென்னே
யென்று நகையாடிய தோழியோடு புலந்து
தன்னுள்ளே சொல்லியது.

(பரி.) இ - ள். யாம் கண்ணிற்காண அறிவில்லார் நகுப=யாங்கேட்கு மாறு மன்றிக் கண்ணுற்காணுமாறு எம்மையறிவிலார் நகாநின்றார், —யாம் பட்ட தாம் படாவாறு=அவரநுபவஞ் செய்கின்றது யாமுற்றநோய்கள் தாமுறுமையான். எ - று.

கண்ணினென்றது முன்கண்டறியாமையுணர்வினைநது. அறத்தொடு நின்றமையறியாது வரைவு மாட்சிமைப்படுகின்றிலனெனப் புலக்கின்றாளாகலின், எதிளாளாக்கிக் கூறினள். இது, நகாநின்று சேட்படுக்குந்தோழிக்குத் தலைமகன் கூறியதாங்கால், அதிகாரத்திற் கேலாமையறிக. (ய)

விளக்கம்:—"யாம் கேட்கும் விதம் வாயால் சொல்லுவது மாத்திரம் அல்லாமல் கண்ணால் பார்க்கும் விதமும் எம்மை நோக்கி அறிவில்லாதவர் நகைக்கின்றார். அவர் அவ்விதம் நகைசெய்வது நாம் அடைந்த் காமத் துன்பங்களே அவர் அடையாமல் இருப்பதால்" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தோழியானவள் தன் தலைவியினது காமத் துன்பத்தினே உடனிருந்து பார்த்தாளாதலால் அதனே வளர்த்த தாய்க்குக் கூறுவாளாய்

"அன்னையே உன் மகளுக்குப் பருவம் வந்துவிட்டது நீ அப் பருவத்தை அவளைப் பெற்ற தாய்க்கும் தந்தைக்கும் கூறி மணம் முடித்தல் வேண்டும்" என்று குறிப்பித்துத் தன்தொழில் முடித்தாளாயினும் தான் செய்துவந்த காரியத்தைத் தலைவியறியாள் என்று எண்ணி அவள் எதிரில் நின்று 'யான் இவ்விடத்து நிற்பது எதன்பொருட்டு' என நகையாடுதலும், நகையாடிய தோழியைநோக்கி, இவள் நம் காமத்தின் பத்தை அறிந்தும் மணத்திற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யாது அயலாள் போன்று நம்மெதிரில் நின்று நகைக்கின்றாளாதலால் ஊர வர் அம்பலுக்கும் அலருக்கும் துணையாகி நின்றாளேயன்றி நமக்குத் துணையாகவில்லை என்று தோழியின் உண்மை யறியாது பிணக்குக்கொண்டு கூறினளாயிற்று.

115-ம் அதிகாரம்.

அலரறிவுறுத்தல்.

(பரி.) *அஃதாவது களவொழுக்கம்வேண்டிய தலைமகன் பிறர்கூறுகின்ற வலர் தனக்காகின்றவாற்றைத் தோழிக்கறிவுறுத்தலும், வரைவாகவுடன்போக் காக ஒன்றுவேண்டிய தலைமகளுந்தோழியும் அவ்வலரையவன்றனக் கறி வுறுத்தலுமாம். இது, நாணுத்துறந்தவழி நிகழ்வதாகலான், நாணுத்துற வுரைத்தலின்பின் வைக்கப்பட்டது.*

விளக்கம் :—அதாவது களவினில் தலைவியைச் சேர்ந்து ஒழுக வேண்டிய ஒழுக்கத்தை விரும்பும் தலைமகனவன் பிறர் தன்னைப் பற்றிச சொல்லுகின்ற பழி தூற்றலானது தனக்கு நன்மையைத் தரு கின்ற விதத்தை தோழிக்குச் சொல்லுதலும், மணஞ்செய்து கொள்வ தையோ தலைவனுடன் போதலையோ ஆகிய இரண்டனுள் ஒன்றை விரும்பிய தலைமகளும் தோழியும் பிறர் கூறும் பழிதூற்றலை அத் தலைவனுக்குச் சொல்லுதலுமாகும். இவ் வலரறிவுறுத்தல் நாண் நீங்கிய வழி உண்டாவது ஒன்று ஆதலால், நாணுத்துறவுரைத்தல் என்னும் அதிகாரத்திற்குப் பிறகு வைக்கப்பட்டுள்ளது.

1141. அலரெழ வாருயிர் நிற்கு மதனைப்
பலரறியார் பாக்கியத் தால்.

அல்லகுறிப்பட்ட பிற்றைஞான்று வந்த தலைமகனைத் தோழி
யலர் கூறி வரைவுகடாயவழி அவன் சொல்லியது.

(பரி.) இ - ள். அலர் எழ ஆருயிர் நிற்கும்=மடந்தையொடெம்மிடை நட்பு ஊரின்கணலராயெழுதலான் அவளைப்பெறாது வருந்துமென்னரிய வுயிர் பெற்றதுபோன்று நிலைபெறும்;—அதனைப் பாக்கியத்தால் பலர் அறியார்=அந்நிலைபேற்றைத் தெய்வத்தால் யானே யறிவதல்லது கூறுகின்ற பலருமறியார். எ - று.

அல்லகுறிப்பட்டுத் தலைமகளையெய்தப்பெறாத வருத்தமெல்லாந் தோன்ற 'அரியவுயிர்' என்றும், அங்ஙனமரியாளை எளியளாக்கி யெடுக்கின்றமையின், அஃதவ்வாருயிர்க்குப் பற்றுக்கோடாகாநின்றதென்பான் 'அலரெழ வாருயிர் நிற்கும்' என்றும், பற்றுக்கோடாதலை அவ்வேதிலாரறியிற்றூற்றாதொழிவர், ஒழியவே ஆருயிர்போமாகலான் அவரறியாதொழிகின்றது தெய்வத்தானென்றுங் கூறினான். முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. (க)

விளக்கம்:—"மடந்தைப் பருவம் உடையாளாகிய உன் தலைவிக்கும் எமக்கும் உள்ள நட்பானது இவ்வூரினிடத்தே பழி தூற்றலாக எழுதலால் அவளை அடையாது வருந்துகின்ற என் அருமையாகிய உயிர் அவளை அடைந்ததுபோல் நிலைபெற்றுள்ளது. அவ்விதம் நிலைபெற்றதைத் தெய்வத்தால் நானே அறியக்கூடுமே யன்றி பழி கூறுகின்ற பலரும் அறியமாட்டார்கள்" என்று குறித்த இடத்து அடைவதற்கு இல்லாது அடுத்த தினத்து வந்துசேர்ந்த தலைமகனைக் கண்டு தோழியானவள் உலகோர் கூறும் பழியை எடுத்துக்கூறி இனி மணந்து கொள்ளுதல் வேண்டும் என்று சொல்லிய காலத்து அவன் பதில் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, குறித்த இடத்துச் செல்லாது தவறித் தலைமகளையடையக் கூடாமல் மறுதினத்துச் சென்ற தலைமகனைக்கண்ட தோழியானவள் 'உமக்கும் எனது தலைவிக்கும் நடக்கின்ற களவுப் புணர்ச்சியை யாவரும் அறிந்தார் ஆதலால், இப்போது பழிதூற்றுகின்றனர். அப்பழி ஒழியும் வண்ணம் அவளை நீர் இனி மணந்து கொள்ளுதல் வேண்டும்' என்னலும், தலைமகனானவன், 'ஓ' தோழியே! குறித்த இடத்துச் சென்று அடையாது குறிதவறி அடைந்த வருத்தங்களை யெல்லாம் உலகவர் தூற்றும் பழி ஒன்றே போக்குகின்

றது ஏனெனில்? அடைவதற்கு மிக அருமையாகிய உன்னது தலைவியை நான் அடைகின்றேன் என மிக எளியளாக்கி ஊரவர் பழிதூற்றுகின்ற ராதலால், இனி நான் அவளை அடைவேனென்பது திண்ணமாயிற்று அது எவ்வாறாயினில் ஊரவர் பழியை அறிந்த தாய் தந்தையர் இனி எவ் விதமேனும் மணஞ்செய்யத் துணிவர் ஆகவே, நான் அவளை அடைதல் கூடும். இவ்வுண்மை அறியாத உலகத்தவர் தூற்றும் பழியானது அலைத் துநிற்கின்ற கொடிக்குப் படருவதற்கு ஓர் கொம்பு கிடைத்ததுபோல் அவளை அடையாது நிற்கின்ற எனக்குத் தெய்வத் திருவருளால் உயிர் நிலைத்து நிற்கும் வழி ஒன்றுயிற்று" என்று, ஊரவர் கூறும் பழி தனக்கு நன்மையாகவுள்ளது என்று கூறினானயிற்று.

1142. மலரன்ன கண்ணு ளருமை யறியா தலரெமக் கீந்ததிவ் வூர்.

இகுவாமது.

(பரி.) இ - ள். மலர் அன்ன கண்ணாள் அருமை அறியாது = மலர் போலுங் கண்ணே புடையாளது எய்தற்கருமையறியாது, — இவ்வூர் அலர் எமக்கு ஈந்தது = இவ்வூர் அவளையெளியளாக்கி அவளோடலர்கூறலை எமக் குபகரித்தது. எ - று.

அருமை அல்லகுறிப்பாட்டானும் இடையீடுகளானும் ஆயது. ஈந்த தென்றான், தனக்குப் பற்றுக்கோடாகலின். அலர்கூறுவாரை அவர்செய்த வுதவிபற்றி 'இவ்வூர்' என்றான். (உ)

விளக்கம்:— "மலர்போலும் கண்ணையுடைய தலைவியினது அடை தற்கு அருமையை அறியாமல் இவ்வூரானது அவளை எளிய ளாக்கி அலர் தூற்றுதல் எனக்கு உபகாரத்தைச் செய்ததாயிற்று" என்று தலைமகன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, பல நாட்களாகப் பல இடையூறுகளால் அடையப்பெறுத தலைவியைப் பழிதூற்றுதலால், தான் அடைவதற்கு ஓர் வழியுண்டா யிற்று என்று எண்ணினானதலால் அலர் கூறுகின்றவரை உபகாரஞ் செய்பவராக எண்ணி அவரை அவர் செய்த உதவிக்கு நன்மையுடை யார் என்று மகிழ்ந்து கூறினானயிற்று.

1143. உரூஅதோ வூரறிந்த கௌவை யதனைப்
பெரூஅது பெற்றன்ன நீர்த்து.

இதுவுமது.

(பரி.) இ-ள். ஊர் அறிந்த கௌவை உரூதோ=எங்கட்குக் கூட்ட முண்மை இவ்வூரறிதலான் விளைந்தவலர் எனக்குறுவதொன்றன்றே,—அத னைப்பெரூது பெற்றன்ன நீர்த்து=அதுகேட்டவென்மனம் அக்கூட்டத் தைப் பெரூதிருந்தே பெற்றாற்போலு நீர்மையையுடைத்தாகலான். எ-று.

பெற்றன்னநீர்மை=பெற்றவழியுளதா மின்பம்போலு மின்பமுடைமை. நீர்த்தென்பதற்கேற்ற மனமென்னும் வினைமுதல் வருவிக்கப்பட்டது. (சு)

விளக்கம் :—"தலைவிக்கும் எனக்கும் உள்ள நட்பினை இவ்வூரவர் அறிவதால் உண்டாகிய பழிதூற்றல எனக்கு மிகுதியும் பொருந்து வது ஒன்று அன்றே! ஏனெனில்? அப்பழி தூற்றலைக் கேட்ட என் மனமானது அவளைப் பல தினங்களாக அடைப்பப் பெறாது இருந்த எனக்கு அடைந்தாற்போலும் நன்மையை உண்டாக்குதலால்" என்று தலைவன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, பழிகூறு தலைக் கேட்ட தலைமகன் அது தனக்குத் துன்பம் நீக்கி இன்பத்தைத் தருவதாக உள்ளது என்று தோழிக்குக் கூறியதாயிற்று.

1144. கவ்வையாற் கவ்வித காம மதுவின்றேற்
றவ்வென்னுந் தன்மை யிழந்து.

இதுவுமது.

(பரி.) இ-ள். காமம் கவ்வையால் கவ்வித=என்காமம் இவ்வூரெடுக் கின்ற அலராலே யலர்தலையுடைத்தாயிற்று;—அது இன்றேல் தன்மை இழந்து தவ்வென்னும்=அவ்வலரில்லையாயின், தன்னியல்பிழந்து சுருங் கும். எ-று.

அலர்தல்=மேன்மேன்மிகுதல். செவ்வையுடையதனைச் செவ்வியென் றாற்போலக் கவ்வையுடையதனைக் 'கவ்வித' என்றார். இயல்பு=இன்பம்பயத் தல். 'தவ்வென்னும்' என்பதுகுறிப்புமொழி ; "தூல்கால் யாத்த மாலை வெண்குடை—தவ்வெண் நரையிற் தாழ்துளி மறைப்ப" என்புழியுமது. (சு)

விளக்கம்:—"என்னுடைய காமமானது இவ்வூரவர் கூறுகின்ற பழிதூற்றலால் மலர்ச்சியை யடைந்ததாயிற்று. அவ்விதம் அவர் பழி

கூறுவிடில் அக்காமமென்னும் மலர் மலராத தன் இபற்கை கெட்டுச் சுருங்கிவிடும்" என்று தலைவன்கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, ஊரவர் பழிதூற்றலைச் சூரியனுகவும் தன் காமத்தை ஓர் அரும்பாகவும் உருவகப்படுத்தி அச்சூரியனுல் இவ்வரும்பு மலர்ந்து மணந்தந்தது என்றும், இல்லாவிடில் காமமாகிய அரும்பானது மலராது சுருங்கிப் போய்விடும் என்றும் கூறினனையிற்று ஏனெனில்? சூரிய வொளிமலர்வதற்குக் காரணமாவதுபோல் அலர் தூற்றல் காம இன் பத்தை அனுபவித்தற்கு இடனுக நிற்பதாயிற்று

1145. களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றுற் காமம் வெளிப்படுந் தோறு மினிது.

இதுவுமது.

(பரி.) இ-ள். களித்தொறும் கள் உண்டல் வேட்டற்று=கள்ளுண்பார்க்குக் களிக்குந்தோறுங்கள்ளுண்டல் இனிதாமாறுபோல,—காமம் வெளிப்படுந்தோறும் இனிது=எனக்குக் காமம் அலராந்தோறும் இனிதாகாநின்றது.

வேட்கப்பட்டற்றுலென்பது வேட்டற்றுலெனநின்றது. வேட்கையிருதியால் அலரும் இன்பஞ்செய்யாநின்ற தென்பதாம். (நி)

விளக்கம் :—"கள்ளினிக் குடிப்பார்க்கு மயக்கங் கொள்ளுந்தோறும் கள்ளினிக் குடித்தல் இனியது ஆவதுபோல், எனக்குக் காமமானது பழி தூற்றுந்தோறும் இனிமைபாகும்" என்று தலைவன் ஊரவர் தூற்றும் அலர் தனக்கு இனிமைபாக உள்ளது என்று கூறியதாக இத் திருக்குறள் கூறுகின்றது. அது என்னையோவெனின்? கள்ளுண்பான் ஒருவன் அக்கள்ளினுல் உண்டாகும் மயக்கம் துன்பத்தைத் தருவதா யினும், மேலும் மேலும் அக்கள்ளினையே உண்டு களித்தல் உலக இயல்பாதலால், காம இன்பம் கொண்டானெருவனும் ஊரவர் அலரைத் தன்னுயிர்க்கு உறுதியென்று எண்ணுதல் வேண்டும் என்று கூறியதா யிற்று.

1146. "கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந் திங்களோப் பாம்புகொண் டற்று.

இடையீடுகளானும் அல்லதுறியானுந் தலைமகளையெய்தப் பெறுத் தலைமகள் அவன்சிறைப்புறத்தானுகத் தோழிக்குச் சொல்லுவாளாய் அலரறிவுறீஇ வரைவுகடாயது.

(பரி.) இ-ள். கண்டது ஒருநாள்=யான் காதலரைக் கண்ணுறப்பெற்றது ஒருஞான்றே, அலர் திங்களோப் பாம்புகொண்டற்று=அதனினையவலர்

அவ்வளவிற்றன்றித் திங்களைப்பாம்புகொண்டவலர்போன்று உலகெங்கும் பரந்தது. எ - று.

காரியத்தைக் காரணமாக வுபசரித்துப் 'பாம்புகொண்டற்று' என்றாள். இருவழியும் மன்னும் உம்மையும் அசைநிலை. காட்சியின்றியும் அலர்பரக்கின்ற இவ்வொழுக்கம் இனியாகாது, வரைந்துகோடல்வேண்டு மென்பதாம். (சு)

விளக்கம்:—"யான் என்காதலரைப் பார்க்கப்பெற்றதுஒருநாளே யாகும். அவ்வொரு நாள் பார்த்ததாலாகிய அலர் தூற்றலோ பார்த்த அளவாக இல்லாமல் சந்திரனை ராகுக்கோள் விழுங்கிய அலர் போன்று உலகம் முழுவதும் பரந்து விட்டது" என்று தலைவியானவள் பல இடையீடுகளானும் குறித்த இடங்களில் தலைவன் எதிர்ப்படாமையா னும் அத்தலைமகனை அடையக் கூடாதவளாய் அவன் மதிலிற்கு அப் புறமிருக்கத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தனக்கு உற்ற அலரைக் கூறி மணந்து கொள்ளுதல் வேண்டும் என்று கூறினாள் என்று இத் திருக்குறள் கூறுகின்றது அதாவது, "உலகத்தவர் சந்திரனைமூடிய இரு ளைக் கண்டு தாங்கள் பாராத ராகுக்கோளினைக் கண்டார் போன்று ராகு சந்திரனை விழுங்கிற்று என்று கூறுவதுபோல், நான் ஒரு நாள் என் காதலரைக் கண்ட காட்சியாலேயே இவ்வூரவர் எனக்கும் என் தலைவ ருக்கும் மிகுதியாகிய களவு ஒழுக்கம் நிகழ்கின்றது என்று அலர் தூற்றுகின்றனர். இனி, இவ்விதம் களவுப் புணர்ச்சி ஆகாது; ஆதலால் தோழியே! மணந்துகொண்டு இன்பத்தை அனுபவித்தல் வேண்டும்" என்று மதிற்புறத்தே நிற்கும் தலைவன் கேட்கும்படி கூறினாளென்ப தாயிற்று.

1147. ஊரவர் கௌவை யெருவாக வன்னைசொன் னீராக நீளுமிந் நோய்.

வரைவுநீட ஆற்றாளாய தலைமகளைத் தலைமகன் சிறைப்புறத்தா னாதலறிந்த தோழி ஊரவரலரும் அன்னைசொல்லுநோக்கி யாற்றல்வேண்டுமெனச் சொல்லெடுப்பியவழி அவள் சொல்லியது.

(பரி.) இ-ள். இந்நோய்=இக்காமநோயாகிய பயிர்,—ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல் நீராக நீளும்=இவ்வூரின்மகளிரெடுக்கின்ற அலர்

எருவாக அதுகேட்டு அன்னே வெருண்டுசொல்லுகின்ற வெஞ்சொல் நீராக வளராநின்றது. எ - று.

ஊரவரென்பது தொழிலான் ஆணெழித்துநின்றது. ஏகதேசவுருவகம் சுருங்குதற்கேதுவாவனதாமே விரிதற்கேதுவாகாநின்றன வென்பதாம் வரைவாணுதல் பயன். (எ)

விளக்கம்:—"இக்காம நோயாகிய பயிர் இவ்வூரிலுள்ள பெண்கள் தூற்றுகின்ற பழிச் சொற்களேயே எருவாகவும், அவ்விதம் அச் சொற்களைக் கேட்டுத் தாயானவள் கோபித்துச் சொல்லுகின்ற கொடுஞ் சொற்களே நீராகவும்கொண்டு வளர்கின்றது" என்று மணந்துகொள்வதற்குத் தாழ்த்த காலத்து அக்காலத்தாழ்வைப் பொறுக்கமுடியாத தலைமகளைநோக்கித் தோழியானவள் மதிற்புறத்தில் தலைவன்வந்திருந்தகாலம் பார்த்துத் "தலைவியே! ஊரவர் தூற்றுகின்ற அலராகிய சொற்களையும் அவைகேட்டுத் தாய் சொல்லுகின்ற கோபச் சொற்களையும் நீ பார்த்து அதன் பொருட்டேனும் பொறுத்துக்கொண்டு இருத்தல் வேண்டும்" என்று வலிந்து சொல்லிய காலத்துத் தலைவியானவள் பதில் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால் காம நோயானது பொறுமையால் சுருக்கிக்கொள்ள முடியுமாயினும், ஊரவர் பழியாலும் தாய் கோபத்தாலும் சுருக்குவதற்கு இல்லாது விரிந்து நிற்கின்றது. ஆதலால், மணந்து கொள்வதே பயனுகும் என்று கூறியதாயிற்று.

1148. நெய்யா லெரிநுதுப்பே மென்றற்றுற் கௌவை
காம நுதுப்பே மெனல். [யாற்

இதுவுமது.

(பரி.) இ - ள். கௌவையால் காமம் நுதுப்பேமெனல்=எதிலாரெடுக்கின்ற அலரால் நாங்காமத்தை யவித்து மென்று கருதுதல்—நெய்யால் எரி நுதுப்பேமென்றற்று = நெய்யாலெரியையவித்துமென்று கருதுதலோடொக்கும். எ-று.

மூன்றனுருபுகளை கருவிக்கண் வந்தன. இளர்த்தற்காரணமாய அலரால் அவித்தல்கூடா தென்பதாம். (அ)

விளக்கம்:—"அயலவர் தூற்றுகின்ற பழிச் சொற்களைக் கேட்டு நம்முடைய காமத்தை நாம் போக்கிவிடுவோம் என்று எண்ணுதல் நெய்யினால் தியினை அவித்துவிடுவோம் என்று ஒருவர் எண்ணுவதற்குச்

சமானமாகும்' என்று தலைவி தோழிக்குக் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, நெய்யை ஊற்றி எரிகின்ற நெருப்பை அவித்து விடலாம் என்று எண்ணி ஒருவன் செய்வானானால் எவ்வாறு அந்நெய்யினது தகுதியால் அத்தீயானது அதிகரிக்கின்றதோ அதுபோல் ஊரவர் கூறும் பழிச் சொற்கள் காமத்தின்பத்தை அதிகப் படுத்துமே யன்றி அதனை ஒரு சிறிதும் நீக்கா என்று கூறியதாயிற்று.

1149. அலர்நாண வொல்வதோ வஞ்சலோம் பென்னூர்
பலர்நாண நீத்தக் கடை.

வரைவிடைவைத்துப் பிரிவின்க ணஞ்சுறுதலை அவன் கூறக் கேட்டுப்புறத்தானுதலறிந்து அலராஞ்சியாற்றல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

(பரி.) இ - ள். அஞ்சலோம்பு என்னூர் பலர் நாண நீத்தக்கடை = தம்மை யெதிர்ப்பட்டஞான்று நின்னிற்பிரியேன் அஞ்சலோம்பென்றவர் தாமே இன்று கண்டார் பலரும் நாணும்வகை நம்மைத் தந்தபின் — அலர் நாண வொல்வதோ = நாமேதிலார் கூறுமலருக்கு நாணக்கூடுமோ கூடாது.

நாணவென்னும் வினையெச்சம் ஒல்வதென்னுந்தொழிற்பெயருள் ஒல்லு தற்றொழிலோடு முடிந்தது. கண்டார் நாணுநிலைமையமாய யாம் நாணுதல் யாண்டைய தென்பதாம். (க)

விளக்கம்:—"தன்னைக் கண்டகாலத்து "உன்னைவிட்டுப் பிரியேன்; அஞ்சுதல் வேண்டுவதில்லை; உன்னை நீ காத்துக்கொள்' என்று உறுதி கூறிய அவரே இன்று பார்ப்பவர் பலரும் நாணங் கொள்ளும் விதம் நம்மை நீங்கிய பிறகு நாம் அபலவர் கூறும் பழிச்சொற்களுக்கு நாணுதல் கூடுமோ? கூடாததாகும்" என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, மணஞ்செய்வதற்குக் குறித்துள்ள நாட்களின் நடுவில் தலைவன் பிரிந்து உள்ள தன்மையால் பொறுக்க முடியாத தலைமகளானவள் தலைவன் மதிற்புறத்தில் வந்து இருத்தலை அறிந்து 'ஊரவர் அலருக்குப் பயந்தாகிலும் நீ பொறுத்தல் வேண்டும்' என்று தோழி கூறியதைக் கேட்டுப் பதில் கூறுவாளாய் "தோழியே! நம்மைப் பார்த்தவர் நம்முடைய நிலைகண்டு நாணவேண்டிய நிலையினையடைந்த நாம் பிறர் தூற்றும் அலர் பொருட்டு அஞ்சி நாணுதல் எங்ஙனம் கூடும்? ஆதலால் நீ ஆற்றுதல் வேண்டும் என்று கூறியது முடியாததாகும்" என்று கூறினாளாயிற்று.

1150. தாம்வேண்டி னல்குவர் காதலர் யாம்வேண்டுங்
கௌவை யெடுக்கு மிவ்வூர்.

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லு
வாளாய் அலரறிவுறீஇ அவன் உடன்போக்கு நயப்பச்
சொல்லியது.

(பரி.) இ - ள். யாம் வேண்டும் கௌவை இவ்வூர் எடுக்கும்=உடன் போகற்கேதுவாகஞெக்கி யாம் பண்டேவிரும்புவதாயவலரை இவ்வூர்தானே யெடா நின்றது—காதலர்தாம் வேண்டின் நல்குவர்=இனிக் காதலர்தாமும் யாம் வேண்டியக்கால் அதனை யினிதினேர்வர். அதனால் இவ்வலர் நமக்கு நன்றுய் வந்தது. எ-று.

எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. நங்கட்காதலுடைமையின் மரு ரென்பதுதோன்றக் 'காதலர்' என்றுள். இவ்விருபதுபாட்டும் புணர்தனி மித்தம். (ம)

விளக்கம் :—"தலைவனுடன் போதற்கு ஏதுவாக இருக்கின்ற அலர் தூற்றலானது முன்னர் யாம் விரும்பி நின்றது ஒன்றுயினும் விரும்பி நின்ற அதனை இவ்வூர் தானே கூறுகின்றது. அவ்விதம் உடன்போதலை இனி நம் காதலர் தாமும் யாம் விரும்புங் காலத்து நமக்கு இனிமையாகச் சம்மதிப்பர். ஆதலால் ஊரவர் தூற்றும் அலரானது நமக்கு நன்மைசெய்வதற்காகவே வந்ததுபோலுள்ளது" என்று தலைமகன் மதிற்புறத்து வந்த காலத்து தோழியானவள் தலைமகளுக்குச் சொல்லுவாளாய் ஊரவர் அலரைக்கூறித் தலைமகனுடன் உடன்போதலை விருட்பும்படிக் கூறினாள் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, மணந்துகொள்வதையோ அல்லது அவனுடன் போய் விடுவதையோ ஆகிய இரண்டில் ஒன்றை விரும்பிய தலைமகளுக்குத் தோழியானவள் "தலைவியே! முன்னரே நாம் உடன் போதற்குக் காரணமாகிய அலர் தூற்றலை இப்போது இவ்வூரார் தாமே செய்கின்றராதலால், இனி, தலைவனுடன் போதல் கூடும். அவ்விதம் போதற்கு நம் காதலரும் நம்மிடத்துள்ள அன்பின் மிகுதியால் மறுக்கமாட்டார்" என்று உடன் போதலைக் குறிப்பித்தாளாயிற்று. ஆதலால், நாணுத்துறவுரைத்தல், அலரறிவுறுத்தல் ஆகிய இவ்விருபது திருக்குறள்களும் புணர்தற்கு நிமித்தம் கூறியவாயின.

களவியல் முற்றிற்று

கற்பியல்.

(பரி.) இனிக் கற்புப் பதினெட்டதிகாரத்தாற் கூறுவான் றொடங்கி, முதறகட் பிரிவாற்றுமை கூறுகின்றார்.

விளக்கம்:—களவியல் ஏழு அதிகாரங்களால் கூறிய ஆசிரியர் கற்பு என்பதை பதினெட்டு அதிகாரங்களால் கூறுதல் தொடங்கி முத லில் பிரிவாற்றுமை என்பதைக் கூறுகின்றனர்.

---

116 அதிகாரம்.

பிரிவாற்றுமை.

(பரி.) அஃதாவது வரைந்தெய்தியபின் தலைமகன் அறம்பொருளின் பங்களின் பொருட்டுச் சேயிடையினும் ஆயிடையினுந் தலைமகளைப் பிரிந்து செல்லும்; செல்லுஞான்று அப்பிரிவினை அவளாற்றுளாந் தன்மை. அஃது ஈண்டுப் பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழிகூறலும், அவடனக்குத் தலை மகடானே அவன்குறிப்பா லுணர்ந்துகூறலும், பிரிவுணர்த்தியவழிக் கூற லும், தலைமகன் பிரிந்துழி ஆற்றுவிக்குந் தோழிக்குத் தலைமகள் மறுத்துக் கூறலுமென நால்வகையாற் கூறப்படும்.

விளக்கம்:—அதாவது, விதிவழியாக மணந்து தலைவியை யடைந்து வாழ்கின்ற தலைமகன் அறத்தின் பொருட்டேனும் பொரு ளின் பொருட்டேனும், இன்பத்தின் பொருட்டேனும் தூர தேசங்க ளுக்காயினும், சமீபமாக உள்ள நாடுகளுக்காயினும் தலைமகளைப் பிரிந்து போவன். அவ்விதம் பிரிந்து செல்லுகின்ற காலத்து அவன் பிரிவிற் குத் தலைவியானவள் பொறுக்க முடியாளாய் நிற்கும் நிலைமை. அவ்வித நிலைமையானது தன்னிடத்துப் பிரிவினைக் கூறிய தலைமகனுக்குத் தோழி கூறுதலும், அத்தோழிக்குத் தலைமகளே பிரிகின்ற தலைவனது குறிப் பால் தெரிந்து கூறுதலும், தலைமகன் பிரிவினை அறிவித்த காலத்துக் கூறுதலும், தலைமகன் பிரிந்த காலத்துத் தனக்கு ஆறுதல் சொல்லும் தோழிக்குத் தலைமகளானவள் அவள் ஆறுதல் சொற்களுக்கு மறுத்துச் சொல்லுதலும் ஆக நான்கு விதப்படும்.

1151. செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

பிரிந்து கடிதின்வருவலென்ற தலைமகற்குத் தோழி
சொல்லியது.

(பரி.) இ-ள். செல்லாமை உண்டேல் எனக்கு உரை=நீயெம்மைப் பிரியாமையுண்டாயின் அதனையெனக்குச்சொல்,—மற்று நின் வல்வரவு வாழ்வார்க்கு உரை=அஃதொழியப் பிரிந்தபோய் விரைந்து வருதல் சொல்லையாயின் அதனை அப்பொழுது உயிர்வாழ்வார்க்குச் சொல். எ-று.

தலைமகளையொழித்து 'எனக்கு' என்றுள், தானவளென்னும் வேற்றுமையின்மையின். அக்காலமெல்லா மாற்றியிருந்து அவ்வரவு காணவல்லளல்லள், பிரிந்தபொழுதே இறந்துபடு மென்பதாம். அழுங்குவித்தல் பயன். இதனைத் தலைமகள் கூற்றுக்கி யுரைப்பாரு மூளர். (க)

விளக்கம்:—"நீர் எம்மைப் பிரியாது இருப்பதாயின் அதனை எனக்குச் சொல்லக்கடவீர் அவ்விதமல்லாது பிரிந்து சென்று விரைந்து வருவேன் என்று சொல்லுவீராயின், அவ்வித வருதலை நீர் வருகின்ற காலத்து உயிரோடு கூடி இருப்போர்க்குச் சொல்லுவீராக!" என்று தம்மைப் பிரிந்து எண்ணிய கருமத்தை முடித்து வருவேனென்ற தலைமகனுக்குத் தோழி சொல்லியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, "தலைவனே! நீ பிரிந்து சென்று விரைவில் வருவாயாயினும், உன்னைப் பிரிந்தபொழுது இறந்துபடுகின்ற தன்மையுடையவளாக என் தலைவி இருக்கின்றாள். ஆதலால், நீ பிரிந்து உள்ள காலமெல்லாம் பொறுத்து இருந்து உன் வரவினை மறுபடியும் காண்பதற்கு இல்லாதவளாய் இருக்கின்றாள்" என்று தலைவிக்கு உண்டாகும் பிரிவாற்றுமையைக் கூறினளாயிற்று.

1152. இன்க ணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்க ணுடைத்தாற் புணர்வு.

பிரிவு தலைமகன்தூதிப்பானறிந்த தலைமகள்
தோழிக்குச் சொல்லியது.

(பரி.) இ-ள். அவர் பார்வல் இன்கண் உடைத்து=தழையுங்கண்ணியுங் கொண்டு பின்னின்றஞான்று அவர்நோக்குமாத்திரமும் புணர்ச்சிகுறித்தமையான் நமக்கின்பமுடைத்தாயிருக்கும்,—புணர்வு பிரிவஞ்சும் புன்கண் உடை

த்து=இன்று அப்புணர்ச்சிதான் நிகழாநிற்கவும் அது பிரிவரென்றஞ்சு மச்சத்தினையுடைத்தாயிற்று, அவரன்பினிலைமையிது. எ-று.

பார்வலென்றதனாற் புணர்ச்சிபெறாத பின்னிலைக்காலம் பெறப்பட்டது. புன்கணென்னுங் காரணப்பெயர் காரியத்தின்மேலாயிற்று. அவ்வச்சத்தினை யுடைத்தாதலாவது *"முள்ளுறழ் முளையெயிற் றமிழ்தூறுந் தீநீரைக்—கள்ளினு மகிழ்செய்யு மெனவுரைத்து மமையாரென்—னொள்ளிழை திருத்தும்"* பணடையிற் சிறப்பால் அவன் பிரிதற்குறிப்புக்காட்டி அச்சஞ்செய்த லுடைமை. அழுங்குவித்தல் பயன். (உ)

விளக்கம்:—"கையில் தழையினையும் மாலையினையும் கொண்டு பின் நின்ற அவர் பார்வை யொன்றாலே புணர்ச்சி யின்பத்தைக் குறித்தமையால நமக்கு இன்பத்தைத் தருவதாய் இருந்தது இன்றோ, அம்மெய்யுறு புணர்ச்சியைப் பெற்றும் அது நிகழ்ந்து கொண்டு இருந்தும் குறிப்பால் உணர்ந்த உள்ளப்புணர்ச்சியைப் போல் செயலால் நிகழும் இம் மெய்யுறு புணர்ச்சியானது இன்பத்தைத் தாராது அச்சத்தைத் தருவதாயுள்ளது. ஆதலால அவர் அன்பின் நிலைமை இதுவாகும்" என்று பிரிவினைத் தலைமகன் குறிப்பால் அறிந்த தலைமகளானவள் தோழிக்குக் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, முதலில் தலைவர் பார்த்த காலத்து உண்டாகிய பார்வை யானது அவர் உள்ளப்புணர்ச்சியைக் குறிப்பித்தவுடன் அக் குறிப் பினால் எவ்வித பெரியதோர் இன்பத்தை அடைந்தனனோ அதற்கு மாறாக அவரை அடைந்து புணர்ந்துகொண்டுள்ள இக்காலத்து அவர் பிரிவின் குறிப்பினால் அச்சத்தை அடைய வேண்டியதாயிற்று என்று தன் ஆற்றாமையைக் கூறியதாயிற்று.

1153. அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும் பிரிவோ ரிடத்துண்மை யான்.

இதுவுமது.

(பரி.) இ-ள். அறிவு உடையார் கண்ணும்=பிரியேனென்ற தஞ்சொல் லும் நம்பிரிவாற்றாமையும் அறிதலுடையராய காதலர்கண்ணும்,—ஓரிடத்துப் பிரிவு உண்மையான்=ஒரோவழிப் பிரிவு நிகழ்தலான்,—தேற்றம் அரிது= அவர் சொல்லும் தலையளியும்பற்றி நம்மாட்டன்புடையரெனத் தேறுந்தேற் றம் அரிதாயிருந்தது. எ-று.

* கலி, பாலை, 3.

அரோ-அசைநிலை, உம்மை-உயர்வுசிறப்பின்கண் வந்தது. (ரு)

விளக்கம்:—"பிரிய மாட்டேன் என்று கூறிய தம்முடைய சொல் வினையும் பிரிவதால் நமக்கு உண்டாகும் ஆற்றுமையும் அறிந்து உள்ளவ ராகிய நம் காதலரிடத்தும் ஒரு காலத்துப் பிரிந்து செல்லுதல் என் னும் குறிப்பு உண்டாகுமாயின், இனி அவர் கூறுகின்ற அன்புடைமை யைபபற்றி நீண்டு நம்மிடத்து அவர் அன்புடையவர் என்று துணி வது அருமையாகும்" என்று தோழிக்குத் தலைவி கூறியதாக இத்திருக் குறள் கூறுகின்றது. அதாவது, "தோழியே! நம் தலைவர் நம்மைக் கூடிய காலத்து நம்மைவிட்டுப் பிரியேன் என்று சொல்லிய சொல்லினையும் நம்மை விட்டுப் பிரிந்தால நமக்கு உண்டாகும் ஆற்றுமையையும் அறிந்து இருந்தும் பிரிதல் குறிப்பினை உணர்த்துவாராயின், அவர் மற்றோர் முறைவந்து கூடி எமக்கு இன்பத்தை உண்டுபண்ணும் அன்பினையுடையார் என்பது கூடாததாகும்" என்று கூறினளாயிற்று

1154. அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற் றேறியார்க் குண்டோ தவறு.

இதுவுமது.

(பரி.) இ-ள். அளித்து அஞ்சல் என்றவர் நீப்பின்=எதிர்ப்பட்டஞான் றே தலையளிசெய்து நன்னிற்பிரியேன் அஞ்சலென்றவர்தாமே பின் பிரிவரா யின்,—தெளித்தசொல் தேறியார்க்குத் தவறுஉண்டோ=அவர்க்கன்றி அவர் தெளிவித்தசொல்லே மெய்யெனத் தெளிந்தார்க்குக் குற்றமுண்டோ! எ-று.

தேறியாரென்பது தன்னைப் பிறர்போற் கூறல். சொல்லுஞ் செயலு மொவ்வாமைக்குற்றம் அவர்க்கெய்தும், அஃதெய்தாவகையழுங்குவியென்பது கருத்து. (ச)

விளக்கம்:—"நம்மை எதிர்ப்பட்ட அன்று நமக்கு இன்பத்தைத் தந்து 'உன்னை விட்டுப் பிரியேன், நீ அஞ்சுதல் வேண்டாம்' என்று கூறிய அத்தலைவரே இன்று பிரிவாராயின், அவருக்கல்லாமல் அவர் கூறிய சொற்களை உண்மையென்று நம்பியவர்களுக்கு ஏதேனும் குற் றம் உண்டாகுமோ" என்று தலைவி தோழிக்குக் கூறியதாக இத்திருக் குறள் கூறுகின்றது. அதாவது, "தோழியே! நம்மைவிட்டுப் பிரிந்து போகும்குற்றம் அவரையே சாரும். ஏனெனில்? நம்மைக்கூடியகாலத்து நம்மைப் பிரியேனென்று சொல்லிய சொல்லும், நம்மைப் பிரிந்து செல் தவற்கு இப்போது நிகழும் செயலும் ஒன்றற்கு ஒன்று பொருந்தாது

உள்ளதால், எக்காலத்தும் ஒரு நிலையாக உள்ள நம்மிடத்து யாதொரு குற்றமும் வந்து சாருவதற்கில்லை. ஆதலால், சொல்லிய வண்ணம் செய்யாத குற்றத்தை நம் தலைவர் அடையாதவிதமாக அவர் பிரிந்து செல்லுதலைத் தடுப்பாயாக என்று கூறியதாயிற்று.

1155. ஓம்பி னமைந்தார் பிரிவோம்பல் மற்றவர்
நீங்கி னரிதாற் புணர்வு.

இருவுமது.

(பரி.) இ-ள். ஓம்பின் அமைந்தார் பிரிவு ஓம்பல்=என்னுயிரைச் செல்லாமற்காத்தியாயின், அதனையாளுதற்கமைந்தாருடைய செலவினை அழுங்குவிப்பாயாக;—மற்று அவர் நீங்கிற் புணர்வு அரிது=அழுங்குவிப்பாரின்றி அவர்செல்வாயின் அவராலாளப்பட்டவுயிருஞ் செல்லும், சென்றுற் பின்ன வரைக்கூடுதல் எனக்கரிதாம். எ-று.

ஆளுதற்கமைதல்=இறைவராதற்குத் தெய்வத்தாலேற்புடையராதல். மற்று-வினைமாற்றின்கண் வந்தது. (இ)

விளக்கம்:—என்னுயிர் போகாது அதனைக்காக்க விரும்புவாயாயின் அவ்வுயிரை ஆள்வதற்குத் தலைவராய் வந்தவருடைய பிரிந்து செலலுதலைத் தடுப்பாயாக! அவ்விதம் தடுப்பாரில்லாமல் அவர் பிரிந்து போவாராயின், அவரால் ஆளப்பட்ட உயிரும் போய்விடும். அவ்விதம் போய்விடுமாயின், திரும்பிவருபவராகிய அவரைக் கூடுதல் எனக்கு உண்டாகாது" என்று தலைவி தோழிக்குக் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தெய்வத்தால் எனக்குத் தலைவராக வாய்க்கப் பெற்ற காதலர் பிரிந்து செல்லாவண்ணம் காப்பையாயின், என்னுயிரைக் காக்கும் உயிர்த்தோழி என்னும் பெயருக்கு உரியவளாவை என்று தலைவன் பிரிவால் தனக்கு உண்டாகும் ஆற்றுமையைக் கூறினளாயிற்று.

1156. பிரிவுரைக்கும் வன்கண்ண ராயி னரிதவர்
நல்குவ ரென்னு நசை.

தலைமகன் பிரிவுணர்த்தியவாறு வந்துசொல்லிய
தோழிக்குச் சொல்லியது.

(பரி.) இ-ள். அவர் பிரிவு உரைக்கும் வன்கண்ணராயின்=நங்கவவுக் கடுமையறிந்த தலைவர்தாமே நம்முனின்று தம்பிரிவினையுணர்த்தும் வன்

கண்மையுடையாயின்;—நல்குவர் என்னும் நசை அரிது=அத்தன்மையார் பின்பு நம்மாற்றுமையறித்துவந்து தலேயளிசெய்வரென்றிருக்கு மாசை விடப் படும். எ-று.

அருமை=பயன்படுதலில்லாமை. கூடியிருந்தே அன்பின்றிப் பிரி வெண்ணுதலும் உணர்த்தலும் வல்லராயினர் பிரிந்துபோய் அன்புடையராய் நம்மை நினைத்துவந்து நல்குதல் யாண்டைய தென்பதாம். அழுங்குவித்தல் பயன். (கூ)

விளக்கம்:—"பிரிவினால் நமக்கு உண்டாகும் துன்பத்தினையறிந்த தலேவரே நம்முன் நின்று தாம் பிரிந்து செல்லுதலே அறிவிக்குர் அஞ்சா நெஞ்சுடையராயின், அவ்வித தன்மையுடையார் நம்மைப் பிரிந்து சென்றபிறகு அப்பிரிவால் நமக்கு உண்டாகும் ஆற்றுமையை யறிந்து திரும்பிவந்து புணர்ந்து இன்பத்தைத் தருவார் என்று கொள் ளும் ஆசையை விட்டுவிடுதல் வேண்டும்" என்ற தலேமகனது பிரிவினே அவன் அறிவித்தவிதம் வந்து சொல்லிய தோழிக்குத் தலேமகள் கூறிய தாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, "தோழியே! நம்முடனி ருந்தே இன்பத்தை அனுபவித்து வருகின்ற தலேவர் அன்பு இல்லாமல் பிரிதலே எண்ணுதலும், எண்ணிய வண்ணம் அறிவித்தலும் உடைய ராகையினால், நம்மைப் பிரிந்துபோய் நம்மீது அன்பு கொண்டு நம்மை நினைத்துத் திரும்பிவந்து நம்மைக்கூடி இன்பந்தருதல் முடி யாததாகும். ஆதலால் அவர் நம்மைப் பிரியாவண்ணம் அவரைத் தடுத்தலே பயனுகும்" என்று கூறினளாயிற்று.

1157. துறைவன் றுறந்தமை தூற்றுகொல் முன்கை யிறையிறவா நின்ற வளே.

இதுவுமது.

(பரி.) இ-ள். துறைவன் துறந்தமை=துறைவன் என்னேப் பிரிய லுற்றமையை—முன்கையிறை இறவாநின்ற வளே தூற்றுகொல்=அவனு ணர்த்தாமற் றுமேயுணர்ந்து என்முன்கையினிறையினின்றுங் கழலாநின்ற வளேகள் எனக்கறிவியாவோ, அவனுணர்த்தவுணர்ந்துவந்து நீயறிவித்தல் வேண்டுமோ! எ-று.

முன்னேநிகழ்ந்தமையின் 'துறந்தமை' என்றும், கேட்டதனேயான் மெலிந்து ஆற்றுமையின் 'இறவாநின்ற' என்றுங் கூறினுள். அழுங்குவித்து வந்து கூறற்பாலேயல்லேயாய் நீயும் இவ்வளேகள் செய்தனவே செய்தாயெனப் புலந்து கூறியவாறு. (எ)

விளக்கம்:—"துறைவனகிய நம் தலைவன் என்னைப் பிரிய எண்ணியதை அவன் அறிவிக்காமலே தாமே அறிந்து என் முன்கையினின்றும் கழன்றனவாகிய என்னுடைய வளையல்கள் எனக்கு அறிவியாவோ? அவன் உணர்த்த நீ அதனை அறிந்துவந்து எனக்கு அறிவித்தல் வேண்டுமோ?" என்று பிரிவினை உணர்த்திய தோழிக்குத் தலைமகள் கூறினளென்று இத்திருக்குறள் கூறுகின்றது அதாவது, "தோழியே! என் தலைவன் பிரிகின்ற தன்மையை அறிந்து அக்காலத்தேயே நான் ஆற்றுது தேகம் மெலிந்தமையால் அதைப் பிறர் அறியும் வண்ணம் நான் அணிந்த வளையல்களே என் கையை விட்டு நீங்கின எனின், நீ அப் பிரிவினை அறிந்து வந்து எனக்குக் "கூறுதல் தகுதியாகுமோ? ஆதலால், நீ அவனைச் செல்லாவண்ணம் தடுத்து அதனால் உண்டாகும் நன்மையினை எனக்குக் கூறுது எனக்கென்று அணிந்த இவ்வளையல்கள் மெலிந்த காலத்து என்னை விட்டுப் பிரிந்தனபோல் நீயும் துன்பக்காலத்து உதவுகின்றாயில்லை என்று கோபித்துக் கூறியதாயிற்று.

1158. இன்ன தினனில் னூர் வாழ்த லதனினு மின்ன கிளியார்ப் பிரிவு.

இதுவுமது.

(பரி.) இ-ள். இனன் இல் ஊர் வாழ்தல் இன்னது = மகளிர்க்குத் தங் குறிப்பறியுந் தோழியரில்லாத வேற்றூரின்கண் வாழ்தலினுது;—இனி யார்ப்பிரிவு அதனினும் இன்னது = அதன்மேலுந் தங் காதலரைப்பிரிதல் அதனினுமின்னது. எ-று.

தலைவன் செலவினையழுங்குவித்து வாராது உடன்பட்டுவந்தமைபற்றிப் புலக்கின்றமையாகலின், 'இனனில்லூர்' என்றார். உலகியல் கூறுவாள் போன்று தனக்கவ்விரண்டு மின்மை கூறியவாறு. (அ)

விளக்கம்:—"பெண்களுக்குத் தம்முடைய குறிப்பையறிகின்ற தோழியர்களில்லாத வேற்றூரில் வாழ்வது துன்பமாகும். அதற்கு மேலும் தன் காதலரைப் பிரிந்து இருத்தல் மிகுதியும் துன்பமாகும் என்று தலைவி தோழிக்குக் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தலைவன் பிரிந்து போதலைப் போக வொட்டாது தடுக்காது அவன் போதற்கு உடன்பட்டு வந்த தோழியை நோக்கி கூறுகின்றாளாதலால், குறிப்பறியாத தோழியர் இருப்பதினால் இன்பத்தை அடை

வதற்கு இல்லாமல் துன்பத்தை அடையவேண்டி உளளது. அது வன்றியும், அன்புடைமை கருதாது பிரிந்து போகின்ற காதலரைப் பிரிந்திருப்பது மிகுதியும் துன்பத்தைத் தருவதாக உள்ளது என்று பிரிவால் தனக்கு உண்டாகும் ஆற்றுமையைக் கூறியதாயிற்று.

1159. தொடிற்சுடி னல்லது காமநோய் போல விடிற்சுட லாற்றுமோ தீ.

காமந் தீயேபோன்று தானீங்கவிடத்தைச் சுடுமாகலான் நீயாற்றற்கவேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

(பரி.) இ-ள். தீத்தொடிற் சுடிற் சுடலல்லது = தீத் தன்னைத்தொட்டாற் சுடுமாயிற் சுடுதலல்லது — காமநோய்போல விடிற்சுடல் ஆற்றுமோ = காமமாகிய நோய்போலத் தன்னையகன்றுற் றப்பாதுசுடுதலை வற்றே, மாட்டாது .எ-று.

சுடுமாயினென்பது மந்திரமருந்துகளாற் தம்பிக்கப்படாதாயினென்ற வாறு. காமத்திற்கதுவதில்லையென்பாள் வாளா 'சுடல்' என்றுள். அகறல் = நீகராமை. சுடலென்பது மூன்றுங் கூட்டப்பட்டது. தீயினுங்கொடியதனை யாலுற்றுமாறென்னை யென்பதாம். (கூ)

விளக்கம்:—"தீயானது ஒருவன் தன்னைத் தொட்டால் சுடுவ தல்லது காமமென்னும் நோய்போல் தன்னை விட்டு நீங்கியவரைத் தப்பாது சுடும் தன்மையுடையதோ? இல்லை" என்று காம மானது தீப்போல் தானிருந்த இடத்தைச் சுடுமாதலால் நீ பொறுத்துக் கொண்டு இருத்தல் வேண்டும் என்று கூறிய தோழிக்குத் தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அது என்னையோ வெனின்? பிரிவுக்கு ஆற்றுது வருந்துகின்ற தலைவியைப் பார்த்துத் தோழியான வள் "தீத் தானிருந்த இடத்தைச் சுடுவதுபோல் காமம் கொண்டாரைச் சுட்டு எரிக்கும். ஆதலால் இந்நோய் கொள்ளாது பொறுத்து இருத் தல் வேண்டும்" என்னலும், அது கேட்ட தலைவி, 'தோழியே! தீச் சுடு கின்ற தன்மையுடையதாயினும் மந்திரத்தாலும், மருந்துகளாலும் சுட வொட்டாது தடுத்து உயிரைக் காத்துக் கொள்ளல் கூடும். அவ் விதம் மந்திரம் மருந்துகளால் தடுக்கக்கூடாத தீயினும் கொடிய காமத் தீயினைப் பொறுத்துக்கொண்டு உயிர் வாழ்வது எவ்விதம்?" என்று கூறினளாயிற்று.

1160. அரிதாற்றி யல்லனோய் நீக்கிப் பிரிவாற்றிப் பின்னிருந்து வாழ்வார் பலர்.

தலைவியர்பலரும் பிரிவாற்றியிருப்பர் அது நீ செய்கின்றிலை யென்ற தோழிக்குச் சொல்லியது.

(பரி) இ-ள். நீசொல்லுகின்றதொக்கும்,—அரிது ஆற்றி அல்லல்நோய் நீக்கி=பிரிவுணர்த்தியவழி அதற்குடம்பட்டுப் பிரியுங்கால் நிகழும் அல்லனோயினையு நீக்கி,—பிரிவு ஆற்றிப் பின் இருந்து வாழ்வார் பலர்=பிரிந்தால் அப் பிரிவுதன்னையு மாற்றிப் பின்னுமிருந்து உயிர்வாழுமகளிர் உலகத்துப் பலர்.

பண்டையிற்சிறப்பத் தலையளிபெற்றின்புறுகின்ற வெல்லுக்கண்ணே அஃதிழந்துதன்புறுதற்குடம்படுதல் அரியதொன்றுகலின் அரியதனைச்செய்தென்றும், செல்லுந்தேயத்து அவர்க்கியாது நிகழுமென்றும் வருந்தினையும் யாமாற்றியிருக்குமாறென்னென்றும் அவ்வாவதான் எஞ்ஞான்று வந்தெய்துமென்றும் இவ்வாற்றுளிகழுங் கவலை மனத்துநீங்காதாகலான் 'அல்லனோய் நீக்கி' என்றும், பிரிந்தால் வருந்தினையும் அகத்து நிகழுங் காமவேதனையும் புறத்து யாழிசை, மகிழ், தென்றலென்றிவைமுதலாக வந்து அதனை வளர்ப்பனவும் ஆற்றலரியவாகலிற் 'பிரிவாற்றி' என்றும், தங்காதலரை யின்றியமையா மகளிருள் இவையெல்லாம் பொறுத்துப் பின்னுமிருந்து உயிர்வாழ்வார் ஒருவருமில்லையென்பது குறிப்பாற்றோன்றப் 'பின்னிருந்து வாழ்வார் பலர்' என்றுங் கூறினுன். அஃதென்பது வினைக்குறிப்பெயர். பிரிவின்கணிகழ்வனவற்றைப் பிரிவென்றுள். செய்து, நீக்கி, ஆற்றியென்பன ஒசை வகையான் அவ்வவற்றதருமையுணர நின்றன. சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது யானுமிறந்து படுவலென்பது கருத்து. (ம)

விளக்கம் :—"தோழியே! நீ சொல்லுகின்றது பொருந்தும். தலைவன் பிரிந்தபோதலை உணர்த்திய காலத்து அப்பிரிவிற்கு உடன்பட்டுப் பின்னர்ப் பிரிந்தபோகு மிடத்து உண்டாகும் துன்பமாகிய நோயினையும் நீக்கி, அப்பிரிந்ததால் உண்டாகிய பொறுக்க முடியாமையையும் பொறுத்து, அதன் பின்னரும் இவ்வுலகத்து இருந்து உயிரோடு வாழும் பெண்கள் பலருண்டு" என்று தலைவர் பிரிந்த காலத்துத் தலைவியர் பிரிவு ஆற்றியிருப்பர். நீயோ அது செய்கின்றிலை என்று கூறிய தோழிக்குத் தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தலைவர் பிரிந்தால் தலைவியர் பொறுத்து இருப்பர் என்று நீ கூறுவது மிகுதியும் பொருத்தமன்றே! காட்சியளவையாகத் தலைவனைக் கண்டகாலத்து அவன் காட்டிய அன்பைக் காட்டிலும்

அவன் உடனிருந்து மகிழ்கின்ற காலத்து அவன் காட்டும் அன்பு மிகப்பெரியது ஆகலால் அவ்வித அன்பினை இழந்து இருப்பது எவ்விதமென்றும், அவ்வாறு இருக்கினும் அவன் செல்லுகின்ற தேயத்து அவனுக்கு யாது உண்டாகுமோ என்று மனத்துள் நீங்காத கவலையும் இருக்குமாதலால், அவன் திரும்பிவரும் வரையும் எவ்வாறு பொறுத்து இருப்பது என்றும், அதுவன்றியும் அவன் வரும்வரையில் மனத்தில் உண்டாகும் காமவேதனையும் வெளியில் காணப்படுகின்ற சந்திரன், தென்றற்காற்று, வீணையோசை ஆகிய இவைகள் அக்காம வேதனையை வளர்ப்பனவுமாய் இருக்குமாதலால், இவற்றையெல்லாம் நீக்கிப் பொறுத்து இருத்தல் எவராலும் முடியாத தென்றும், இப்பிரிவினால் யாதும் இறந்து படுவதே உண்மையாகும் என்றும் தனக்குண்டாகிய பிரிவாற்றுமையைத் தோழியிடத்துக் கூறினளாயிற்று.

---

117. அதிகாரம்.

படர்மெலிந்திரங்கல்.

(பரி.) *அது படரான்மெலிந்திரங்கலென விரியும். அஃதாவது பிரிவாற்றுளாய தலைமகன் தானுறுகின்ற துன்பத்தினை எப்பொழுதும் நினைத்தலின் அந்நினைவான் மெலிந்திரங்குதல் அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.*

விளக்கம் :—அதாவது, துன்பத்தால் மெலிந்து தன் ஆற்றுமையை வாய்விட்டுக் கூறல் என்பதாகும். அது எண்ணியோவெனின்? தலைவன் தன்னைப் பிரிந்து சென்றமையைப் பொறுத்தற்கு ஆகாது, தலைமகளானவள் தான் அடைகின்ற துன்பத்தினை எக்காலத்தும் நினைக்கின்றுளாதலின், அந்நினைவின் மிகுதியால் தேகம்மெலிந்து, தன் துன்பத்திற்காக வருந்திக் கூறுதல் பிரிவாற்றுமைக்குப்பிறகு, இப்படர் மெலிந்திரங்கல் நேருகின்றதாதலால் இவ்வதிகாரம் இங்குவைக்கப்பட்டதாயிற்று.

1161. மறைப்பேன்மன் யானிஃதோ நோயை யிறைப்
கூற்றுநீர் போல மிகும். [பவர்க்

காமநோயை வெளிப்படுத்தல் நின்னுணுக்கேலாதென்ற
தோழிக்குச் சொல்லியது.

(பரி.) இ - ள். நோயை யான் மறைப்பேன்=இந்நோயைப் பிறரறிதலை யான் மறையாதின்றேன்; —இஃதோ இறைப்பவர்க்கு ஊற்றுநீர்போல

மிகும்=நிற்பவும், இஃது அங்காண்வரை நில்லாது நீர் வேண்டுமென்றிறைப் பவர்க்கு ஊற்றுநீர்மிகுமாறுபோன் மிகாநின்றது. எ - று.

தம்மறைத்தலாற் பயனென்னென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. "இஃதோ செல்வர்க்கொத்தனென்யான்" என்புழிப்போல ஈண்டுச் சுட்டுப்பெயரீறு திரிந்துநின்றது. இஃதோ நோயையென்று பாடமோதுவாரு மூளர்; அது பாடமன்மை யறிக. இனி அதற்கேற்றது தீ செயல்வேண்டுமென்பதாம். (க)

விளக்கம்:—"இக்காம நோயினைப் பிறர் அறிவதென்று எண்ணி அதற்கேற்ற நாணமடைந்து யான் அதனை மறைக்க முயல்கின்றேன். அவ்விதம் மறைத்தும் இந்நோயை அங்காண் அரவு நில்லாது நீரினை வேண்டுமென்று இறைப்பவர்க்கு ஊற்றிலிருந்து வரும் நீரானது மிகுவதுபோல் மிகுந்து நின்றது" என்று, காமநோயினை உனக்கு உண்டென்று வெளியார் அறியும்படிச் செய்தல் உனக்கியல்பாக உள்ள நாண் என்னும் தன்மைக்கு ஏற்றதாகாது என்று கூறிய தோழிக்குத் தலைவி கூறினதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, நாணமுடையார் காம நோயினை அயலவர் அறியும்படி மெலிதல் கூடாது என்று தோழி கூறுதலும், தலைவியானவள் அவ்வள நோக்கி "ஓ தோழியே! நாண் என்னும் மறைப்பால் காமமென்னும் துன்பத்தினை நான் எவ்வளவு மறைக்க முயன்றாலும் ஊற்றுநீர் எவ்வாறு இறைக்குந்தோறும், இறைக்குந்தோறும் அதிகமாகச் சுரக்கின்றதோ அதுபோல் மறைக்க முயலுந் தோறும் முயலுந்தோறும் அது அதிகமாகா நின்றது. ஆதலால் நான் மறைத்தலால் யாதொரு பயனும் உண்டாகவில்லை, இனி, நீயே இக்காம நோய் தோன்றுமைக்குச் செய்ய வேண்டியது செய்ய வேண்டும்" என்று கூறினளாயிற்று.

1162. கரத்தலு மாற்றேனிந் நோயைநீரய் செய்தார்க் குரைத்தலு நாணுத் தரும்.

ஈண்டையாரறியாமன் மறைத்தல் ஆண்டையாரறியத்
தூதுவிடுதலென்னு மிரண்டனுள் ஒன்றுசெயல்
வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

(பரி.) இ - ள். இக்நோயைக் கரத்தலும் ஆற்றேன்=இக்நோயை ஈண்டையாரறியாமன் மறைத்தலும் வல்லேனு கின்றிலேன்;—நோய் செய்தார்க்கு

உரைத்தலும் நாணுத் தரும்=ஆகாக்கால், நோய்செய்தவர்க்குரைக்க வெனின், அதுவும் எனக்கு நாணினைத்தாராநின்றது, இனி யென்செய்கோ! எ - று.

ஒருகாலைக் கொருகான் மிகுதலிற் 'காதலுமாற்றேன்' என்றும், சேயிடைச் சென்றவர்க்கு இதுசொல்லித் தூதுவிட்டால் இன்னும்வருத்தே னென்பது பயக்குமென்னுங் கருத்தால் 'நாணுத் தரும்' என்றுங் கூறினாள்.

விளக்கம்:—"இக்காமநோயினை இங்கு உள்ளவர் அறியா விதமாக மறைப்பதற்கும் யான் வல்லவள் ஆக இருக்கவில்லை. அவ்வித வல்லமை இல்லாமையுடன் இந்நோயினை உண்டுபண்ணிய தலைவருக்குச் சொல்லிவேண்டுமெனில், அதுவும் எனக்கு நாணத்தினை உண்டாக்குகின்றது. ஆதலால், இனி என் செய்வேன்?" என்று இவ்விடத்து உள்ளவர்கள் அறியாவண்ணம் மறைத்தலோ அன்றி அவ்விடத்து உள்ள தலைவர் அறியத் தூது விடுதலோ ஆகிய இரண்டனுள் ஒன்றினைச் செய்து நீ ஆற்றல் வேண்டுமென்ற தோழிக்குத் தலைவி கூறியதாக இத் திருக்குறள் கூறுகின்றது. அதாவது, "காமநோயானது ஒரு காலைக்கு ஒரு காலை அதிகமாக மிகுதலால் அதை மறைப்பதற்கும் என்னால் முடியவில்லை. விட்டுப் பிரிந்து நெடுந்தூரத்தில் சென்று உள்ள தலைவர்க்குத் தூது விடவோ எண்ணில், தூது கண்ட தலைவர் இவள், 'விட்டுப் பிரியேன், பிரிந்தால் இறப்பேன்' என்று கூறியவள் பிரிந்து இத்தனை நாள்களாயும் இன்னும் பிழைத்திருக்கின்றாளன்றே என்று கருதி என் அன்புடைமையைக் குறைவாகக் கருதுவார் என்ற நாணத்தால் தூது விடுவதற்கும் என்னால் முடியவில்லை' என்று கூறினாளாயிற்று

1163. காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென் னோனு வுடம்பி னகத்து.

இதுவுமது.

(பதி.) இ - ள். காமமும் நாணும்=காமநோயும் அதனைச் செய்தவர்க்கு உரைக்கலொல்லாத நாணும்—நோனு என் உடம்பின் அகத்து=தம்மைப் பொருத என்னுடம்பின்கண்ணே—உயிர் காவாத்தூங்கும்=உயிர்காத்தண்டாக அதனிருதலையினும் தூங்காநின்றன. எ - று.

பொருமை=மெலிவானது. தூங்குமென்பது, ஒன்றினொன்று மிகாது இரண்டும் ஒத்தசீரவென்பது தோன்ற நின்றது. தூதுவிடவும் ஒழியவும் பண்ணுவனவாய காமநாண்கள் தம்முளொத்து உயிரினையிறுவியாநின்றன, யான் அவற்றுளொன்றின் கணிற்கமாட்டாமையின் இஃதிற்றேவிமென்பதாம்.

விளக்கம்:—"காம நோயும் அந்நோயினைச் செய்தவருக்குச் சொல்ல முடியாத நாணமும் ஆகிய இரண்டும் அவற்றைப் பொறுக்க முடியாத என்னுடம்பினிடத்தே காவடித் தண்டுபோன்றுள்ள என் னுயிரின் இருமுனையிலும் நிலைத்திருக்கின்றன" என்று தலைவி தோழிக்குச் சொல்லியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, "காவடித் தாங்கிச் செல்லும் தண்டு ஒன்று நன்னுடைய இரண்டு முனை களிலும் மாட்டித் தொங்குகின்ற ஒத்த அளவினையுடைய பாரங்களைத் தாங்கிச் செல்வதுபோல் என் உடம்பினிடத்தில் உள்ள உயிரானது காவடித் தண்டுபோலிருந்து ஒரு பக்கத்து இழுக்கும் காமநோயாகிய பாரத்தினாலும் அக் காமத்தைத் தலைவனுக்குத் தூதுவிட்டு அறிவிக்கக் கூடாது தடுக்கும் நாணமென்னும் பாரத்தினாலும் இழுக்கப்பட்டு நடு வில் மிகுந்த பாரத்தால் உடைந்து போவதாகும். இனி உயிர்பிழைத்து இருத்தற்கு யாதும் வழியில்லை" என்று கூறினளாயிற்று.

1164: காமக் கடன்மன்னு முண்டே யதுநீந்து
மேமப் புணைமன்னு மில்.

தலைவியர் காமக்கடற்படார், படினும் அதனை யற்றபுணையா
லீந்திக் கடப்பரென்ற தோழிக்குத் தோழியது.

(பரி.) இ-ள். உண்டு காமக்கடலே=யாவர்க்கும் உளவாய்வருகின்ற இவ்விரண்டனுள்ளும் எனக்குண்டாகின்றது காமக்கடலே; —அது நீந்தும் ஏமபுணை இல்=அதனை நீந்தும் அரணுகிய புணையில்லை. எ-று.

இருவழியும் மன்னும் உம்மும் அசைநிலை. தூதுவிட்டு இதற்குப் புணை யாகற்பாலையாயதீயும் ஆயிற்றிலையென்பது கருத்து. (சு)

விளக்கம்:—"யாவருக்கும் இருப்பனவாய் உள்ள இவ்விரண்டனுள் ளும் எனக்கு இருப்பது காமமாகிய கடலொன்றேயாம். அக்கடலை நீந் திக் கரையேறும் அரணுகிய தெப்பமானது எனக்கு இல்லை" என்று தலைவியரானவர் காமமாகிய கடலில் வீழார். ஒரு கால் வீழினும் அக் காமக் கடலை அதற்குத் தகுதியாகிய தெப்பமொன்றைக் கொண்டு நீந் திக் கரையேறுவர் என்ற தோழிக்குத் தலைவி கூறியதாக இத்திருக் குறள் கூறுகின்றது. அதாவது காமக் கடலைக் கடப்பதற்கு ஏற்ற தெப்பமாயிருப்பது தலைவனுக்குத் தூது விடுதல் ஒன்றேயாம். எனக்கோ தூதுவிடுதற்கு உற்ற துணையில்லை. துணையாகிய நீயும் அக் கடலை நீந்துவதற்குத் தெப்பமாக ஆகவில்லை. ஆகலால் இக்காமக்

கடலை யான் கடந்து உயிர் வாழ்வது முடியாத காரியம் என்று கூறினாளாயிற்று.

1165. துப்பி னெவனுவர் மற்கொ றுயர்வரவு நட்பினு ளாற்று பவர்.

தூதுவிடாமைநோக்கித் தோழியோடு புலந்து சொல்லியது.

(பரி.) இ-ள். நட்பினுள் துயர்வரவு ஆற்றுபவர்-இன்பஞ்செய்தற்குரிய நட்பின்கண்ணே துன்பவரவினைச் செய்யவல்லவர்—துப்பின் எவனுவர் கொல்=துன்பஞ்செய்தற்குரிய பகைமைக்கண் என்செய்வர்கொல்லோ!

துப்புப் பகையுமாதல் * "துப்பெதிர்த் தோர்க்கே யுள்ளாச, சேய்மைய—னட்பெதிர்ந் தோர்க்கே யங்கை யண்மையன்" என்பதனுனு மறிக. அப்பகைமை ஈண்டுக்காணுமையின் அவர்செய்வதுமறியப் பெற்றிலேமென் பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. துயர்வருதலே லிலக்கலாயிருக்க அதுசெய்கின்றிலேயெனப் புலக்கின்றமையின், துயர்வரவு செய்தாளாக்கியும் பிறளாக்கியுங் கூறினுள். (இ)

விளக்கம்:—"நம்மிடத்து நட்டார்க்கு இன்பத்தையே செய்ய வேண்டிய நட்பினை யுடையவரே துன்பத்தைச் செய்ய வல்லமையுடையவரா யிருப்பாராயின், அவ்வித நட்பினர் துன்பத்தையே செய்து தம் பகைமையைக் காட்டவேண்டிய பகைவராவாரென்னில், அக்காலத்து அவர் எது செய்து நிற்பினும்" என்று தூது விடாமையைப் பார்த்து தன் தோழியோடு கோபித்துச் சொல்லினுளென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தோழியே! நீ எனது உயிர்த்தோழியாக இருந்தும் தலைவனுக்கு ஓர் தூதினை விட்டு எனக்கு உள்ள காமத் துன்பத்தினை நீக்குகின்றாயில்லை. ஆதலால் தோழியாகிய நீயே பகைவர் செய்யும் துன்பவருகையைச் செய்தாய் இவ்விதமாயின் வேறு எவர்தான் எனக்கு இன்பம் செய்ய வல்லவர் என்று தோழியை நட்பிற் பகைவளாப்பேபோலாக்கி, துயர்செய்தாளாக்கி, வேறொருத்தியாக்கிக் கூறினுளாயிற்று.

1166. இன்பங் கடன்மற்றுக் காம மஃதடுங்காற் றுன்ப மதனிற் பெரிது.

காமத்தினின்பழற்றுர்க்கு அதனினுய துன்பழம் வருமென்ற தோழிக்குச் சொல்லியது

(பரி.) இ-ள். காமம் இன்பம் கடல்=காமம் புணர்வாலின்பஞ்செய்யுங்கால், அவ்வின்பங் கடல்போலப் பெரிதாம்;—மற்றஃது அடுங்கால் தன்

* புறநானூறு, ஈஅ0.

பம் அதனிற் பெரிது=இனி அதுகாணே பிரிவாற்றுன்பஞ்செய்யுங்கால், அத்துன்பம் அக்கடலினும் பெரிதாம். எ-று.

மற்று வினைமாற்றின்கண் வந்தது. அடுங்காலென வந்தமையின், மறு தலையெச்சம் வருவிக்கப்பட்டது. பெற்றலின்பத்தோடொத்துவரின் ஆற்றலாம்; இஃததன தளவன்றென்பது கருத்து. (சு)

விளக்கம்:—" காமமானது புணர்ச்சியினிடத்தே இன்பத்தைச் செய்யுமிடத்து அவ்வின்பமானது கடல்போலப் பெரிதாக உள்ளது இனி அக்காமந்தானே பிரிந்த இடத்துத் துன்பஞ் செய்யுமாயின் அத் துன்பமானது மேற்கூறிய இன்பக்கடலைக் காட்டிலும் பெரியதாக உள்ளது" என்று காமத்தால் இன்பத்தை அடைந்தார்க்கு காமத்தால் துன்பமும் வருமென் றகூறிய தோழிக்குத் தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது காமமுற்றார்க்கு இன்பமும் துன்பமும் இரண்டும் வரும். ஆதலால் இன்பத்தை அனுபவித்ததுபோல் துன்பத்தையும் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும் என்று தோழி கூறினளாதலால் அவளை நோக்கி இன்பமும் துன்பமும் ஒத்து இருக்குமாயின் பொறுத்தல் கூடும். ஆயினும் முன்னர்த் தலைவனிருந்த காலத்து அடைந்த இன்பத்தைக் காட்டிலும் அவன்பிரிந்த காலத்துத் துன்பமானது மிகப்பெரியதாக உள்ளது. அதனால் பொறுத்தல் முடியாது என்பதாம்.

1167. காமக் கடும்புன லீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளேன்.

காமக்கடல் நிறைபுணையாக நீந்தப்படுமென்றுட்கச்
சோல்லியது.

(பரி.) இ-ள். காமக் கடும்புனல் நீந்திக் கரை காணேன்=காமமாகிய கடலை நீந்தாதேனல்லேன், நீந்தியும் அதற்குக் கரைகாண்கின்றிலேன்,—யாமத்தும் யானே உளேன்=அக்காலமைக்காலத்தான் எல்லாருந்துயிலும் அரையிருளாயிற்று, அவ்வரையிருட்கண்ணும் அதற்கொருதுணையின்றி யானேயாயினேன், ஆயும் இறந்துபட்டுய்ந்து போகாதேனாகின்றேன் ஈதொரு தீவினைப்பயனிருந்தவாறென். எ-று.

கடுமை ஈண்டு மிகுதிக்கணின்றது. உம்மை முன்னுங்கூட்டப்பட்டது. யானேயாயினேனென்பது நீ துணையாயிற்றிலையென்னுங் குறிப்பிற்று. (எ)

விளக்கம்:—"காமமாகிய கடலை நான் நீந்தக்கூடாதவள் அல்லள் ஆனால் நீந்தியும் அக்காமக் கடலுக்குக் கரைகாண்பதற்கு இல்லை அவ்

விதம் கரையைக் காணுமையால் எல்லாரும் தூங்குகின்ற பாதி இராத் திரியினிடத்தே அக்காமக் கடலுக்கு வேறு துணையில்லாமல் நானே துணைபாக நிற்கின்றேன். அவ்விதம் நானே விழித்திருந்து வருந்துவ தாயினும் அவ் வருத்தத்தினின்றும் நீங்க இறந்தபடாது இன்னும் இருக்கின்றேன். அவ்விதம் வருந்தி நிற்பது முன்செய்த தீவினைப் பயனேயாகும்" என்று காமமாகிய கடலே நிறை என்னும் புணையாலே நீந்துதல் கூடும் என்ற தோழிக்குத் தலைவி சொல்லியதாக இத் திருக்குறள் கூறுகின்றது. அதாவது தோழியே! காமத்துன்பமென் னும் கடலைப் பிறர் அறியாமல் பொறுத்துக் கொள்ளுதல் என்னும் நிறையாகிய தெப்பத்தைக் கொண்டு நீந்துதல் கூடும் என்று கூறுகின் றாய். ஆனால்? பாதி இரவாயும் உறங்காது வருந்தச் செய்யும் இக்காமக் கடலோடு நான் தன்புற்று நிற்கின்றேனே யன்றி என் துணைவியாகிய நீ எனக்கு யாதொரு உதவியையும் செய்து அக்காமக் கடலினின்றும் கரையேற்றினையில்லை என்பதாயிற்று.

1168. மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா வென்னல்ல தில்லை துணை.

இரவின்தொடுமைகொல்லி யிரங்கியது.

(பரி.) இ-ள். இரா அளித்தது=இவ்விரா அளித்தாயிருந்தது;—மன் உயிர் எல்லாம் துயிற்றி என்னல்லது துணை இல்லை=உலகத்து நிலைபெறு கின்ற உயிர்களையெல்லாந் தானே துயிலப்பண்ணுதலான் என்னையல்லது வேறு துணையுடைத்தாயிற்றில்லை. எ-று.

துயிற்றியெனத் திரிந்துநின்ற வினையெச்சம் அவாய்நிலையான்வந்த உடைத்தாதலோடு முடிந்தது. துணையோடொன்றுகின்ற உயிர்களெல்லாம் விட்டு இறந்தபடுமெல்லையேனை என்னையே துணையாகக்கோடலின் அறி வின்றென்பதுபற்றி அளித்தென்றாள்; இகழ்ச்சிக்குறிப்பு. (அ)

விளக்கம்:—"இவ்விரவோ மிகுதியும் தயவுடையதா யிருந்தது. உலகத்து நிலைபெற்றுள்ள உயிர்களெல்லாம் அவை தூங்குவதற்கு முன் தானே தூங்கச் செய்வதாய் என்னையல்லாமல் அதற்கு வேறு துணையிருப்பதற்கு இல்லாததாய்" என்று இரவினைத் தனக்குண்டாகிய கொடுமையைக் கூறித் தலைவி வருந்தினாள் என்று இத்திருக்குறள் கூறு கின்றது. அதாவது நாயகனைவிட்டுப் பிரிந்ததலைவி காமத்துன்பதால் தூங்காது வருந்துகின்ற தன்மையை உரைப்பவள் போன்று தனக்கு

உண்டாகிய துன்பத்தை இராப்பொழுதின் மீது ஏற்றி இவ்விரவானது தலைவரும் தலைவியருமாகிய இருவருடும் ஒருவரோடு ஒருவர் துணை கொண்டு நிற்கின்ற அவர்களை யெல்லாம் விட்டு இறந்துபடுவதற்குச் சமீபமாகவுள்ள என்னையே தனக்குத் துணையாகக் கொண்டு இருத்தலால் அறிவுடையது அன்று. அறிவுடையதாயின் துணையுடைய உயிர்களைக் காம இன்பத்தின் பொருட்டு விழித்திருக்கச் செய்து தனக்குத் துணைகொண்டு இருக்கும். அவ்வாறு அல்லாது தலைவனைப் பிரிந்திருக்கின்ற என்னை விழித்திருக்கச்செய்து தனக்குத் துணைகொண்டமையால் வீழ்வார்க்கு வீழ்வாரைத் துணைகொள்வது போல் அறிவில்லாமையேயாகும் அதனோடு கொடுமையுமாகும் என்று தனக்கு இரவில் உண்டாகும் வருத்தத்தைக் கூறியதாயிற்று.

1169. கொடியார் கொடுமையிற் ருங்கொடிய விந்நா ணெடிய கழியு மிரா.

இதுவுமது.

(பரி.) இ-ன். இந்நாள் நெடிய கழியும் இரா=காதலரொடு நாமின் புற்ற முன்னுள்களிற் குறியவாய் அவர்பிரிவாற்றேமாகின்ற இந்நாள்களிலே நெடியவாய்ச்செல்கின்ற கங்குல்கள்—கொடியார் கொடுமையின் தாம் கொடிய=அக்கொடியாரது கொடுமைக்குமேலே தங்கொடுமை செய்யாகின்றன. எ-று.

தன்னுற்றுமை கருதாது பிரிதலின், 'கொடியார்' என்றுள். கொடுமை= கடிதின்வாராது நீட்டித்தல். அவர்பிரிவானும் நீட்டிப்பானுமுளதாய ஆற்றுமைக்குக் கண்ணோடாமைமேலும் பண்டையினெடியவாய்க் கொடியவாகாகின்றனவென்பதாம். (க)

விளக்கம் :—"நம் காதலருடன் நாம் இன்புற்றிருந்த நாள்களில் குறுகினவாய் அவர் பிரிதலால் பொறுக்கமுடியாத துன்பத்தை யடைந்துள்ள இந்நாள்களில் நீண்டனவாய்க் கழிகின்ற இராக்காலங்கள் அப் பிரிந்து சென்ற கொடியாரது கொடுமையைக் காட்டிலும் அதிகமாகக் கொடுமை செய்கின்றன" என்று இரவின் கொடுமையைத் தலைவி கூறினளென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தலைவனானவன் தன்னுடைய பிரிவினையான் பொறுத்தற்கு ஆகாது என்று சிறிதுங் கருதாது பிரிந்து போனதுடன் விரைந்து வருவேனென்ற வாக்கின்படி விரைந்து வாராமல் காலத்தை நீட்டிக்கச் செய்யவும் தலைவன் பிரிவினை

லும் விரைந்து வாராமையினாலும் உண்டாகிய ஆற்றுமைக்கு இரக்கங் கொள்ளாதிருப்பதுடன் முன்னர் அவரிருந்த காலத்து விரைந்து கழிந்த இராக்காலங்களானவை இப்போது மிக நீண்டு கழிந்து தன் புறத்துகின்றனவாதலால் மிகக் கொடியவாக உள்ளன என்று கழியாத இரவின் தன்மையை உணர்த்தியதாயிற்று.

1170. உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின் வெள்ள நீர்நந்தல மன்னுவென் கண். [நீர்

நின்கண்கள் போழகழிகின்றனவாகலின் அழற்பாலே யல்லேயென்றுட்குச் சொல்லியது.

(பரி.) இ - ள். உள்ளம் போன்று உள்வழிச் செல்கிற்பின்=மனம் போலக் காதலருள்ள தேயத்துக் கடிதிற்செல்லவல்லனவாயின்,—என் கண் வெள்ளநீர் நீந்தல=என் கண்கள் இங்ஙனம் வெள்ளமாகிய தண்ணீரை நீந்தா. எ - று.

அது மாட்டாமையின் இனி அவற்றிற்கு நீந்துதலேயுள்ளதென்பதுபடின்றமையின், மன் ஒழியிசைக்கண்வந்தது. மனத்திற்குச் செலவாவது நினேவேயாகலின் 'உள்ளம்போன்று' என்றும், மெய்க்கு நடந்துசெல்ல வேண்டுதலிற் கண்கள் அதனெடுசென்று காதலரைக்காண்டல் கூடாதென்னுங் கருத்தாற் 'செல்கிற்பின்' என்றுங் கூறினுள். இதனுன் வருகின்ற வதி காரமுந் தோற்றுவாய் செய்யப்பட்டது. (ம)

விளக்கம்:—"மனம் எவ்வாறு செல்லுகின்றதோ அதுபோலக் காதலர் இருக்கின்ற தேயத்துக் கண்கள் விரைவில் செல்லவல்லனவாக இருக்குமாயின், அக்கண்கள் இவ்விதம் வெள்ளம்போல் வழியும் கண்ணீரினே நீந்தவேண்டுவதில்லே" என்று 'உன்னுடைய கண்கள் பெரிய அழகினே இழக்கின்றன ஆகலின் அழுதல் வேண்டுவதில்லே' என்று கூறிய தோழிக்குத் தலேவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தோழியே! என் மனமானது இருந்த இடத்தில் இருந்து நினேப்பதாலேயே காதலன் உள்ள இடத்தே விரைந்து சென்று அடைவதாக உள்ளது. ஆனல் என் கண்களோ என்னேடு நடந்து சென்று காணவேண்டி உள்ளனவாதலால் நடந்துசெல்லக் கூடாதவளாகிய என்னேடு இருந்து அவரைக் காணக்கூடாமையால் வருந்தி அழுது அழகினே இழக்கின்றன. ஆதலால் அவ்விதக் கண்களின் தன்மையை எவ்வாறு நீக்குதல்கூடும் என்றாளாயிற்று.

118. அதிகாரம்.

கண்விதுப்பழிதல்.

(பரி.) *அஃதாவது கண்கள் தங்காட்சிவிதுப்பான் வருந்துதல். காட்சி விதுப்புத் தலைமகனைக் காண்டற்கு விரைதல். இது படரான்மெலிந்தவழி நிகழ்வதாகலின், படர் மெலிந்திரங்கலின்பின் வைக்கப்பட்டது.*

விளக்கம்:—அதாவது தாம் தலைமகனைக் காண்பதற்கு விரைதலால் வருந்துதல். இது நினைவின் முதிர்ச்சியால் துன்புற்று மெலிந்த விடத்து உண்டாவது ஒன்று ஆதலால் படர்மெலிந்து இரங்கல் என்னும் அதிகாரத்திற்குப் பிறகு வைக்கப்பட்டுள்ளது.

1171. கண்டாங் கலுழ்வதெவன் கொலோ தண்டாநோய்
தாங்காட்ட யாங்கண் டது.

நீள்கண்கள் கலுழ்ந்து தம்மழகிழவாநின்றன நீயாற்றல்
வேண்டுமென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

(பரி.) *இ - ள். தண்டா நோய் யாம் கண்டது தாம் காட்ட=இத்தணியா நோயை யாமறிந்தது தாமெமக்குக் காதலரைக காட்டலானன்றே,—கண்தாம் கலுழ்வது எவன் கொல்=அன்று அத்தொழிலவாய கண்கள் இன்று எம்மைக் காட்டச்சொல்லியழுகின்றது என்கருதி! எ - று.*

காட்டவென்பதற்கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. இன்னுந் தாமே காட்டுதலல்லது யாங்காட்டுதல் யாண்டைய தென்பதாம். (க)

விளக்கம்:—"இவ்வித தணியா நோயினை யாம் அறிந்தது அக் கண்கள் தாம் எமக்குக் காதலரைக் காட்டியதாலன்றே? முதலில்கண்—அன்று அவ்விதம் காட்டும் தொழிலையுடைய இக்கண்கள் பிரிந்து உள்ள் இன்று அவரைக் காட்டும்படி எம்மிடம் கூறி அழுகின்றது எது கருதி?" என்று 'உன் கண்கள் அழுது தம்முடைய அழகினை யிழக்கின்றன ஆதலால், நீ ஆறுதல் அடையவேண்டும்' என்ற தோழிக்குத் தலைமகள் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, இப்போது பிரிவால் வருந்தி அழுகின்ற கண்கள் அன்று முதலில் எமக்குத் தலைவரைக் காட்டாதிருக்கின் இவ்வித துன்பம் நேராதன்றே? இத்தகைய துன்பத்திற்குக் காரணமாக இருந்த கண்களே இன்று அழுது அழகிழந்தால் நாம் அதற்குச் செய்வது யாது உள்ளது என்று கூறியதாயிற்று.

1172. தெரிந்துணரா நோக்கிய வுண்கண் பரிந்துணராப் பைத லுழப்ப தெவன்.

இதுவுமது.

(பரி.) இ - ள். தெரிந்து உணரா நோக்கிய உண்கண் = மேல்வீளுவதனை யாராய்ந்தறியாது அன்று காதலரை நோக்கிநின்ற உண்கண்கள் — பரிந்து உணராப் பைதல் உழப்பது எவன் = இன்று இது நம்மால்வந்ததாகலிற் பொறுத்தல் வேண்டுமெனக் கூறுபடுத்துணராது துன்பமுழப்பது என் கருதி! எ - று.

வீளுவது = பிரிந்துபோயவர் வாராமையிற் காண்டற்கரியராய் வருத்துதல். முன்னே வருவதறிந்து அதுகாவாதார்க்கு அது வந்தவழிப் பொறுத்தலன்றே புள்ளது, அதுவுஞ் செய்யாது வருந்துதல் கழிமடச்செய்கை யென்பதாம். (உ)

விளக்கம்:—" மேல்வரப்போவதை ஆராய்ந்து அறியாமல் காதலரைக் கண்ட காலத்து அவரையே பார்த்து நின்ற மைதீட்டிய கண்கள் அவர் பிரிந்து உள்ள இக்காலத்து இவ்வித துன்பம் நம்மால் வந்த தாதலின் பொறுத்து இருத்தலே வேண்டும் என்று உய்த்து உணராது துன்பத்தால் வருந்துவது எது கருதி " என்று தலைவி தோழிக்குக் கூறியதாக இத்திருக்குறளை கூறுகின்றது. அதாவது, ஓர் காரியத்தைச் செய்வதற்கு முன்னரே அதனால் வரும் பயனை யறியாது அக்காரியத்தைச் செய்தார்க்கு அக்காரியத்தால் உண்டாகிய பயனைப் பொறுத்துக் கொள்ளுதலன்றே தகுதியுள்ளது. அவ்விதம் ஆராயாது செய்ததுடன் வருகிற துன்பத்திற்கு வருந்துதல் மிகுதியும் அறியாமையே ஆகும் என்று தன் கண்கள் தலைவனைக் காண்டற்கு விரைவதைக் கூறியதாயிற்று.

1173. கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழு மிதுநகத் தக்க துடைத்து.

இதுவுமது.

(பரி.) இ - ள். தாம் கதுமென நோக்கித் தாமே கலுழும் இது = இக் கண்கள் அன்று காதலரைத் தாமே விரைந்துநோக்கி இன்றுந் தாமேயிருந்து முகின்றவிது — நகத்தக்கது உடைத்து = நம்மாற்சிரிக்கத்தக்க வியல்பினை யுடைத்து. எ - று.

உண்கணென்பது அதிகாரத்தான் வந்தது. இதுவென்றது மேற்கூறிய

கழிமடச் செய்கையை. அது வருமுன்னர்க் காப்பாற்கு ஈகைவிளக்குமாக லான், 'ஈகத்தக்கதுடைத்து' என்றான். (ஈ)

விளக்கம்:—" இக்கண்கள் அன்று காதலரைப் பார்த்த காலத்து தாமே விரைந்து பார்த்ததுடன் பிரிந்து உள்ள இன்றும் தாமே யிருந்து அழுகின்ற இத்தன்மை நம்மால் சிரிக்கக்கூடிய இயற்கை யுடையதாக உள்ளது" என்று தோழியை நோக்கித் தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, முன்னர்த் தாமே விரைந்து பார்த்ததும் இப்போது வந்த துன்பத்திற்கு ஆற்றாது நிற்பதும் ஆகிய மிகுந்த அறியாமையை உடைய செய்கைக்கு நாம் பார்த்துச் சிரிக்க வேண்டியதாகவே உள்ளது. ஏனெனின்? ஒன்று வருதற்கு முன்னரே காத்துக்கொள்ளாத தகுதியுடையாரை வருமுன்னர்க் காக்கும் தகுதியு டையார் காணின் சிரிப்பதன்றி வேறு என்செய்வது என்று கண்கள் தலைவனைக் காணும் விதுப்பினைக் கூறினளாயிற்று.

1174. பெயலாற்றா நீருலந்த வுண்க ணுயலாற்றா வுய்விதே யென்க ணிறுத்து.

இதுவுமது.

(பரி.) இ - ள். உண்கண்=உண்கண்கள்,—உயலாற்றா உய்வு இல் நோய் என்கண் நிறுத்த=அன்று யானுய்யமாட்டாமைக் கேதுவாய ஒழிவில் லாத நோயை என்கண்ணே நிறுத்தி,—பெயலாற்றா நீர் உலந்த=தாமுமழு தலை மாட்டாவண்ணம் நீர் வற்றிவிட்டன. எ - று.

நிறுத்தல்=பிரிதலும் பின்கூடாமையுமுடையாரைக் காட்டி அதனால் நிலைபெறச் செய்தல். முன் எனக்கின்னுதனசெய்தலாற் பின் தமக்கின்னு தன தாமேவந்தன வென்பதாம். (ச)

விளக்கம்:—"என்னுடைய மையுண்ட கண்கள் தலைவனைக் கண்ட அன்று நான் பிழைப்பதற்கு முடியாத,நீங்காத நோயினை என்னிடத்தே உண்டாக்கி, பிரிந்து உள்ள இன்று தாம் அழுவதற்கு முடியாத வித மாக நீர் வற்றி விட்டன " என்று தலைவி தோழிக்குக் கூறியதாக இத் திருக்குறள் கூறுகின்றது. அதாவது, கண்ட காலத்துப் பின்னர்ப் பிரி தலும் விரைந்து வந்து கூடாமையும் உடைய தலைவரை முன்னர் எனக்குக் காட்டி எனக்கு ஒழியா நோயினை உண்டுபண்ணினலாத லால் அக்கொடுமை காரணமாக,

"பிறர்க்கின்னு முற்பகற் செய்யிற் றமக்கின்னு
பிற்பகற் ருமே வரும்"

என்றபடி தாம் தேடாமலே தமக்குத் துன்பங்கள் வந்தன என்று கூறிய தாயிற்று.

**1175. படலாற்ரு பைத லுழக்குங் கடலாற்ரு
காமநோய் செய்தவென் கண்.**

இதுவுமது.

(பரி.) இ - ள். கடல் ஆற்ருக் காமநோய் செய்த என்கண்=எனக்குக் கடலுஞ் சிறிதாம்வண்ணம் பெரிதாய காமநோயைச் செய்த என்கண்கள்— படல் ஆற்ரு பைதல் உழக்கும்=அத்தீவினையாற் ருமுக் துயில்கிலவாய்த் துன்பத்தையு முழவாகின்றன. எ - று.

காமநோய் காட்சியான் வந்ததாகலின், அதனைக் கண்களேசெய்ததாக் கிக் கூறினுள். துன்பம் அழுதலானுயது. (கு)

விளக்கம்:—"எனக்குக் கடலும் சிறிய அளவினை யுடையது என்னும்படிப் பெரியதாகிய காமநோயினைச் செய்தனவாகிய என் கண் கள் அத்தீவினையினுல் தாமும் தூங்காதனவா யிருப்பது டன் துன்பத்தையும் அடைந்து வருந்துகின்றன" என்று தலைவி தோழிக்குக் கூறினளென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, முன்னர்க் கண்ட காட்சியால் தலைவி காம நோயினைக் கொண்டாளாத லால் அந்நோயினைக் கண்களே செய்தனவாகக் கூறி அவ்விதம் முன்னர் எனக்குத் துன்பஞ செய்த கண்கள் தீவினைப்பயனுல் பிரிந்து உள்ள இப்பொழுது தாம் அழுது அழுது துன்பத்தை அடைகின்றன என்று தலைவனைக் காண்டற்குக் கண்கள் விரைவதைக் கூறினுளாயிற்று

**1176. ஓவினிதே யெமக்கிந்நோய் செய்தகண்
டாஅ மிதற்பட் டது.**

இதுவுமது.

(பரி.) இ - ள். எமக்கு இந்நோய் செய்த கண் தாம் இதற்பட்டது= எமக்கிக்காமநோயினைச செய்த கண்கடாமும் இத்துயிலாதழுதற் கண்ணே பட்டது—ஓஓ இனிதே=மிகவுமினிதாயிற்று. எ - று.

ஓவென்பது மிகுதிப்பொருட்கண்வந்த குறிப்புச்சொல். தம்மால் வருத்தமுற்ற வெமக்கு அது தீர்ந்தாற்போன்ற தென்பதாம். (கூ)

விளக்கம் :—"எமக்கு இக்காம நோயினை உண்டாக்கிய கண்கள் தாமும் அவ்விதம் தூங்காது அழுதல் தொழிலில் சேர்ந்தது. ஓகோ! இது மிகவும் இனிமையுடையதாயிற்று" என்று தலைவி தோழிக்குக் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தன் காமநோய்க்குக் கண்களைக் காரணமாகக் கூறினளாதலால் அக்கண்கள் இப்பொழுது அழுது படுகின்ற துன்பத்தை நோக்கிய தலைவியானவள் அக்கண்களால் தான் அடைந்த வருத்தம் அக்கண்கள் இப்பொழுது படும் துன்பத்தை நோக்குங் காலத்துத் தன்னை விட்டு நீங்கியது போலுள்ளது என்று கூறியதாயிற்று. அது என்னையோவெனில்? உலகத்துத் தமக்குத் துன்பஞ் செய்த ஒருவர் துன்பம் அடைவதைக் காணின் மகிழ்ச்சி கொண்டு தாம் அடைந்த துன்பம் கழிந்ததுபோல் இன்புறுவது வழக்காதலால், இவ்விதம் கூறினளாயிற்று.

1177. உழந்துழந் துண்ணீ ரறுக விழைந்திழைந்து
வேண்டி யவர்க்கண்ட கண்.

இதுவுமது.

(பரி.) இ - ள். விழைந்து இழைந்து வேண்டி அவர்க் கண்ட கண் = விழைந்து உண்ணெகிழ்ந்து விடாதே அன்று அவரைக் கண்ட கண்கள்— உழந்துழந்து உள்ளீர் அறுக = இன்று இத்தியிலாதமுங்கலாய துன்பத்தினை யுழந்துழந்து தம்மகத்துள்ளநீர் அற்றேபோக. எ - று.

அடுக்கு இடைவிடாமைக்கண் வந்தது. அறுதலாகிய இடத்துநிகழ் பொருளின்மேழில் இடத்தின்மேனின்றது. (எ)

விளக்கம் :—"விரும்பி மனங் குழைந்து விடாது அன்று தலைவரைக் கண்ட கண்கள் இன்று இவ்விதம் தூங்காது வருந்துவதாகிய துன்பத்தினை மிகுதியும் மேற்கொண்டு தம் மூள்ளிடத்தே உள்ள நீரானது அற்றேபோக" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, ஆய்ந்து உணராமல் அன்று விருப்ப மிகுதியால் இடைவிட்டாது பார்த்தமையாலன்றே பிரிவாகிய இக்காலத்து இத்துணைத் துன்பத்தை யடைதல் வேண்டியுள்ளது. ஆதலால் இனி அழுவதற்கு மில்லாமல் தன்னிடத்தே உள்ள நீரும் அற்றுப்போகும்படி வருந்துக என்று தனக்குள்ள துன்பத்தை எடுத்துக் கூறினளாயிற்று.

1178. பேணுது பெட்டா ருளர்மன்னே மற்றவர்க் காணு தமைவில கண்.

காதலர் பிரிந்துபோயிஞால்லர் அவரீண்டுளர் அவரைக் காணுமளவும் நீயாற்றல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

(பரி.) இ - ள். பேணுது பெட்டார் உளர்=நெஞ்சால் விழையாது வைத்துச் சொன்மாத்திரத்தால் விழைந்தவர் இவ்விடத்தேயுளர்;—மற்று அவர்க்கண் காணுது அமைவில=அவ்வுண்மையாற் பயன்யாது, அவரைக் கண்கள் காணுதமைகின்றன வில்லையாயின. எ-று.

செயலாற்பிரிந்து நின்றமையிற் 'பேணுது' என்றும், முன்னலம்பாராட்டிப் பிரிவச்சமும் வன்புறையுங் கூறிஞராகலிற் 'பெட்டார்' என்றுங் கூறினள். மன் ஒழியிசைக்கண் வந்தது. மற்று வினைமாற்றின்கண் வந்தது. ஓகாரம் அசைநிலை. யாஞற்றவுங் கண்கள் அவரைக் காண்டற்கு விரும்பா நின்றன வென்பதாம். இனிக்கொண்கனேயென்று பாடமாயின், என்கண்கள் தம்மைக்காணுதமைகின்ற கொண்கனேத் தாங்காணுதமைகின்றனவில்லை இவ்வாறே தம்மையொருவர் விழையாதிருக்கத் தாமவரை விழைந்தார் உலகத்துளரோவென்றுரைக்க. இதற்கு மன் அசைநிலை. (அ)

விளக்கம்:—" மனத்தால் விரும்பாது இருந்து சொல்லளவால் விரும்பிய தலைவர் இவ்விடத்தே உள்ளனர். அவ்விதம் அவர் இவ்விடத்தே இருந்தும் பயன் ஒன்றுமில்லை. ஏனெனில்? அவரைக் கண்கள் காணுமல் பொருந்துவனவாய் இல்லையாதலின்" என்று 'உன்னுடைய காதலர் உன்னைவிட்டுப் பிரிந்துபோவதில்லை அவர் இங்குதான் இருக்கின்றனர். அவரைக் காணும்வரையும் நீ பொறுத்திருத்தல் வேண்டும்' என்று கூறிய தோழிக்குத் தலைமகள் கூறினள் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, "முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து, அகநக நட்பது நட்பு" என்று கூறிய வண்ணம் மனத்தால் விரும்பாது முகத்தால் விரும்பி வாக்களவாக நலம் புனைந்து உரைத்துப் பிரிவினால் உண்டாகிய துன்பத்தையும் கூறி விரைந்து வருவேன் என்று கூறிய சொற்களையும் காப்பாற்றுமல் நின்ற தலைவர் சமீபத்திலிருக்கிலென்? தூரத்தில் சென்றுலென்? அவரைப் பாராத கண்கள் என்னைத் துன்புறுத்துகின்றன. தம்மைக் காணவிரும்பாத தலைவனை விரும்பி இடர்ப்படுகின்ற இக்கண்களின் அறிவு இருந்தவாறு என்னே! என்று கூறியதாயிற்று.

1179. வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
யாரஞ ருற்றன கண்.

நீயுமாற்றி நின்கண்களுந் துயில்வனவாதல் வேண்டுமென்ற
தோழிக்குச் சொல்லியது.

(பரி.) இ - ள். வாராக்கால் தஞ்சா = காதலர் வாராதஞான்று அவர் வரவு பார்த்துத் துயிலா,—வரின் தஞ்சா = வந்தஞான்று அவர்பிரிவஞ்சித் துயிலா,—ஆயிடைக் கண் ஆரஞர் உற்றன = ஆகலான் அவ்விருவழியும் என் கண்கள் பொறுத்தற்கரிய துன்பத்தினையுடைய. எ - று.

ஆயிடையெனச் சுட்டு நீண்டது. இனி அவற்றிற்குத் துயில் ஒரு ஞான்று மில்லையென்பதாம். (கூ)

விளக்கம் :—"நம் காதலர் வாராத நாளில் அவர் வருகையைப் பார்த்துத் தூங்காதனவாயின. அவர் வந்த நாளில் அவர் எங்குப் பிரிந்து போகின்றாரோ என்று பயந்து தூங்காதனவாயின. ஆதலால் வந்த நாளிலும் வாராத நாளிலும் என்னுடைய கண்கள் பொறுத்தற்கு மூடியாத துன்பத்தினையே உடையவாயின" என்று மீயும் பொறுத்துக் கொண்டு இருத்தல் வேண்டும், உன் கண்களும் தூங்குதல் வேண்டும் என்று கூறிய தோழிக்குத் தலைவி பதில் கூறினாளென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அது என்னையோ வெனின் ? என் கண்கள் தலைவர் வந்த காலத்தும் தம்மைவிட்டுப் பிரிந்து போகாவண்ணம் விழித்த வண்ணமாக இருந்தன. பிரிந்து வாராத இக்காலத்தும் அவரைக் காண விரும்பித் தூங்காதனவாயுள்ளன. இவ்வித தகுதியுடையனவாகிய என் கண்கள் ஓர் காலத்தும் தூங்குவது இல்லை என்று கூறியதாயிற்று.

1180. மறைபெற லூரார்க் கரிதன்ரு லெம்போ
லறைபறை கண்ணு ரகத்து.

காதலரை இவ்வூர் இயற்பழியாமல் அவர்கொடுமையை
மறைக்கவேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

(பரி.) இ - ள். எம்போல் அறைபறை கண்ணுர் அகத்து மறை பெறல் = எம்மைப்போலும் அறைபறையாகிய கண்ணினையுடையார் தங்கெஞ்சின்கண் அடக்கிய மறையையறிதல்—ஊரார்க்கு அரிதன்று = இவ்வூரின்கணுள்ளார்க்கு எளிது. எ - று.

மறையென்றது ஈண்டு மறைக்கப்படுவதனை. அகத்துநிகழ்வதனைப் புறத்துள்ளார்க் கறிவித்தலாகிய தொழிலான் ஒற்றுமையுண்மையின், 'அறைபறை

யாகிய கண்' என்றுள். இங்ஙனஞ் செய்யுள்விகாரமாக்காது அறைபறைக் கண்ணுரென்று பாடமோதுவாரு மூளர். யான் மறைக்கவும் இவை வெளிப்படுத்தா நின்றன வென்பதாம். (ம)

விளக்கம் :—"எம் போல் ஊரார்க்கு அறிவிப்பதற்கு அடிக்கின்ற பறை வாத்தியம்போன்ற கண்ணிணை உடையவர்கள் தம் மனத்தில் அடக்கிய இரகசியமாகிய விஷயங்களை அறிந்து கொள்ளுதல் இவ்வூரில் உள்ளவர்களுக்கு மிக எளிமையே யாகும்" என்று 'உன் தலைவரை இவ்வூரவர் அவர் குணத்தைப் பழியாத விதமாக அவர் வாராத கொடுமையை மறைத்து வைத்தல் வேண்டும்' என்று கூறிய தோழிக்குத் தலைவி பதில் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, நான் எவ்வளவு மறைத்து வைக்கினும் என்னுடைய கண்கள் ஊரிலுள்ளார்க்குக் கூவிச் சொல்லுகின்ற பறை வாத்தியம்போல் விடாது அழுதலால் வெளிப்படுத்தி விடுகின்றன. ஆதலால், இவ்வித கண்களையுடைய யான் காதலரை ஊரவர் பழியா வண்ணம் எவ்வாறு காப்பது ? என்று கண்களின் விதுப்பை மிகுத்துக் கூறினளாயிற்று.

---

119. அதிகாரம்.

பசப்புறுபருவரல்.

(பரி.) *அது பசப்புற்ற பருவரலென விரியும். அஃதாவது பசப்புறுதலானுய வருத்தம். இதனைப் "பக்தெநிந்தவயர்"* என்பதுபோலக் கொள்க. பசப்பாவது பிரிவாற்றுமையான் வருவதோர் நிறவேறுபாடு. இது, தலைமகனைக் காணப்பெறுதவழி நிகழ்வதாகலின், கண்விதுப்பழிதலின்பின் வைக்கப்பட்டது.*

விளக்கம்:—அதாவது நிறவேறுபடுதலால் உண்டாகும் வருத்தம். இங்கிற வேறுபாடானது தலைமகனைக் காணுமையால் பிரிவாற்றுது வருந்துவதால் உண்டாகும். தன்மையாதலால் கண் விதுப்பு அழிதல் என்னும் அதிகாரத்திற்குப் பிறகு வைக்கப்பட்டுள்ளது.

---

* கலி.

1181. நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்
பண்பியார்க் குரைக்கோ பிற.

முன் பிரிவுடம்பட்ட தலைமகள் அஃதாற்றது பசந்தவழித்
தன்னுள்ளே சொல்லியது.

(பரி.) இ - ள். நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் = என்னை நயந்த வர்க்கு அதுபொழுது பிரிவையுடம்பட்ட நான்—பசந்த என் பண்பு யார்க்கு உரைக்கோ = அதனையாற்றாது இதுபொழுது பசந்தவென்னியல்பினை யார்க்குச் சொல்வேன்! எ - று.

பிறவென்பது அசைநிலை. உடம்படாவழி ஒழிதல்குறித்துப் பிரிவுணர்த் தினாகலின் அவரன்புடையரென்னுங்கருத்தான் 'நயந்தவர்' என்றும், இதுவேயுடம்பாடாக மேலும் பிரிவு நிகழுமாகலின் இனி அவரைக் கூடுத லரிதென்னுங் கருத்தான் 'நல்காமை' என்றும், முன்னருடம்படுதலும் பின் னாற்றாது பசத்தலும் பிறர்செய்தனவல்ல வென்பாள் 'பசந்தவென் பண்பு' என்றும், யான் செய்துகொண்ட துன்பத்தினை இனியொருவர்க்குச் சொல்லலும் பழியாமென்னுங் கருத்தால் 'யார்க்குரைக்கோ' என்றுங் கூறி னாள். (க)

விளக்கம்:—"என்னை விரும்பி நின்றவராகிய தலைவர் தான் பிரிவு தாகக் கூறிய காலத்து அப்பிரிவினுக்கு உடன்பட்டவளாகிய நான் இப்பொழுது அப்பிரிவினைப் பொறுக்க முடியாமல் நிறைவேறுபாட்டினை அடைந்த என் தன்மையை யாருக்குச் சொல்லுவேன்?" என்று முன் பிரிவிற்கு உடன்பட்ட தலைமகளானவள் அப்பிரிவிற்குப் பொறுக்க முடியாது தன் மேனி சுலைந்த காலத்து ஒனக்குள்ளேயே சொல்லிக் கொண்டதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, அவர் பிரி விற்கு உடன்படாவிடின் துன்பமாமென்று எண்ணி உடன்பட்டு இப்போது அப்பிரிவிற்கு ஆற்றாது நிறைவேறுபாட்டினை அடையும் துன் பமானது யானே செய்து கொண்டது ஒன்று ஆதலால் இதனை யார்க்கு எடுத்துச் சொல்லுதல் கூடும் என்று தன்னையே கொந்துகொண்டா ளென்று கூறியதாயிற்று.

1182. அவர்தந்தா ரென்னுந் தகையா லிவர்தந்தென்
மேனிமே லூரும் பசப்பு.

ஆற்றளைக் கவன்றதோழிக்கு ஆற்றுவலென்பதுபடச்
சொல்லியது.

(பரி.) இ - ள். யானுற்றியுளேனுகவும்,—பசப்பு = இப்பசப்புத்தான் தந்தார் அவர் என்னும் தகையால் = என்னையுண்டாக்கினார் அவரென்னும்

பெருமிதத்தான்,—என் மேனிமேல் இவர்தந்து ஊரும்=என்மேனியைமேல் கொண்டு செலுத்தாநின்றது. எ - று.

"குருதிகொப் புளிக்கும் வேலான் கூந்தன்மா விவர்ந்து செல்ல"* என்புழியும் இவர்தல் இப்பொருட்டாத லறிக. இஃது உரிமைபற்றி யூர்கின்றது, இதற்கு நீ கவலல்வேண்டா வென்பதாம். (உ)

விளக்கம்:—"நான் பொறுத்துக்கொண்டு இருப்பேனாகவும், இப்பசப்பு என்னும் நிறவேறுபாடானது தன்னை உண்டாக்கினார் அத்தலைவர் என்கின்ற இறுமாப்பினால் என் மேனியின்மீது தானே மேற்கொண்டு செலுத்துகின்றது" என்று பொறுக்கமாட்டாள் என்று கவலை கொண்ட தோழிக்குப் பொறுத்துக் கொள்வேன் என்பதுபட தலைவி கூறியதாக் இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தோழியே! நீ கவலைப்படுதல் வேண்டாம். இப்பசப்பு என்னும் நிறவேறுபாடோ என் மீது தனக்கு உள்ள உரிமையால் மேலும் மேலும் அதிகரித்தது. எவ்வாறெனின்? என்னை உண்டாக்கியவர் இவளது தலைவராகும். இவள் மீது நான் அஞ்சாது பரவுவேன் என்று படருகின்றது என்று தலைவனைப் பிரிந்த துன்பத்தினைக் கூறியதாயிற்று.

1183. சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறு நோயும் பசலையுந் தந்து.

அழகுநாணு மழியாமல் நீ யாற்றல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

(பரி.) இ - ள். கைம்மாறு நோயும் பசலையும் தந்து=பிரிகின்றஞான்றே அவ்விரண்டற்குந் தலைமாறாக இக்காமநோயினையும் பசலையையும் எனக்குத் தந்து,—சாயலும் நாணும் அவர் கொண்டார்=என்மேனியழகினையும் நாணினையும் அவர் கொண்டுபோயினார். எ - று.

எதிர்நிரனிறை. அடக்குந்தோறும் மிகுதலான், நோய் நாணிற்குத் தலை மாறாயிற்று. இனி, அவர் தந்தாலல்லது அவையுளவாகலும் இவையில வாகலுங் கூடாவென்பதாம். (ங)

விளக்கம்:—"பிரிந்ததினமே அழகிற்கும் நாணத்திற்கும் மாறுதலாக இக்காம நோயினையும் பசலை பூப்பதையும் எனக்குக் கொடுத்து என்மேனி அழகினையும் நாணத்தையும் என் தலைவராய இவர் கொண்டு போய்விட்டனர்" என்று அழகும் நாணமும் அழியாதிருக்கும்படி நீ

* சீவகசிந்தாமணி, விமலையாரிலம்பகம், 1.

பொறுத்தல் வேண்டும் என்று கூறிய தோழிக்குத் தலைவி பதில் கூறிய தாக இக்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, எனது காமநோயை நான் அடக்க முயலுந்தோறும் அந்நோய் மிகுந்து நாணைத்திற்குப் பகை யாகி அந்நாணினை அடக்குதலாலும், நினைக்குந்தோறும் நினைக்குந்தோ றும் நிறைவேறுபடுதலால் மேனி பழுதை யிழத்தலாலும் அந்நினைப்பும் அதனால் உண்டாகும் நோயும் அவரைக் கண்டு கூடும் வரையில் நீங்காதனவாகும் ஆதலால், அவர் கொடுப்பாராயின் அழகும் நாண மும் எனக்கு உண்டாகும். அல்லையேல் இல்லைபாம் என்பதாயிற்று.

1184. உள்ளுவன் மன்யா னுரைப்ப தவர்திறமற் கள்ளம் பிறவோ பசப்பு.

பிரிகின்றவர் தெளிவித்த சொற்களையும் அவை தற்றிறங்களையு மறிதியாகலின் நீட்டியாது வருவரென்றவழிச் சொல்லியது

(பதி.) இ - ள். யான் உள்ளுவன் = அவர்சொற்களை யான் மனத்தா னினையா நிற்பேன், —உரைப்பது அவர்திறம் = வாக்காலுரைப்பதும் அவர் நற்றிறங்களையே; —பசப்புக் கள்ளம் = அங்ஙனஞ் செய்யாதிருக்கவும், பசப்பு வந்து நின்றது, இது வஞ்சனையாயிருந்தது. எ - று

'பிற'வும் 'ஓ' வும் அசைநிலை. மெய் மற்றை மனவாக்குகளின் வழித்தாக லின் அதன்கண்ணும் வரற்பாற்றன்மையிருக்க வந்தமையின், இதன்செயல் கள்ளமாயிருந்ததெனத் தானற்றகின்றமை கூறியவாறுமாயிற்று. (ச)

விளக்கம்:—"தோழியே! அவர் சொல்லிய சொற்களை யான் மனத்தால் நினைந்தவண்ணமாக இருப்பதுடன் வாக்கால் கூறுவதும் அவருடைய நல்ல குணங்களை. அவ்விதம் நான் செய்துகொண்டிருந் தும் என் மேனியழகு குலையப் பசப்பு வந்துள்ளது. இது ஓர் வஞ்சனை யாக உள்ளது" என்று தலைவர் பிரிந்தகாலத்து அவர் நீ தெளியும்படிச் சொல்லிய சொற்களையும், அவர் நல்ல குணங்களையும் அறிவாயாயின் காலம் நீட்டியாமல் வருவார் என்று உனக்குத் தோன்றும் என்று தோழி யானவள் சொல்லியகாலத்து தலைவியானவள் கூறினளென்று இத்திருக் குறள் கூறுகின்றது. அதாவது தலைவியானவள் தோழியை நோக்கி மனத்தில் தோன்றுவன எவையோ, வாக்கால் கூறுவன எவையோ, அவை களின் வழியாகத் தேகத்தின் நிலை யிருப்பது இயல்பாக இருக்கவும் மனத்தால் தலைவரை நினைந்தும் வாக்கால் அவர் நல்ல குணங்களை எடுத் துச்சொல்லியும் இருக்கும் நிலைமையிலும் தேகமானது பசப்புக் கொண்டு

அழகினை இழந்தது ஓர் கள்ளச்செய்கையாகவே உள்ளது என்று பசப்பினால் வந்த துன்பத்தைக் கூறினாளாயிற்று.

1185. உவக்காணெங் காதலர் செல்வா ரிவக்காணென் மேனி பசப்பூர் வது.

காதலர் பிரிந்தணித்தாயிருக்கவும் ஆற்றுகின்றிலையென்ற தோழிக்கு முன்னிகழ்ந்தது கூறியது.

(பரி.) இ - ள். எங்காதலர் உவக்காண் செல்வார்=பண்டும் நங்காதலர் உங்கேசெல்வாராக,—என்மேனி பசப்பூர்வது இவக்காண்=என்மேனிபசப்பூர்வதிங்கேயன்றோ! அப்பெற்றியது இன்று பிறிதொன்றாமோ! ஏ - று.

'உவக்காண்' 'இவக்காண்' என்பன ஒட்டிநின்ற விடைச்சொற்கள். தேயவண்மையாற் காலவண்மை கருதப்பட்டது. அவர்செலவும் பசப்பினது வரவும் பகலிரவுகளின்செலவும் வரவும்போல்வதறிந்துவைதது அறியாதாய் போல நீ சொல்லுகின்ற தென்னை யென்பதாம் (௫)

விளக்கம்:—"ஓ தோழியே! நம்முடைய காதலர் நம்மைவிட்டுப் பிரிந்த அன்றைய தினம் சில அடிகள் எடுத்து வைத்தலும் என்மேனி நிறவேறுபாடாகிய பசப்பினை அடைந்தது அல்லையோ. அவ்விதம் இருக்க அவர் பிரிந்து சமீபமாக இருக்கினும் இன்று பசலை இராதிருக்குமோ" என்று உன்னுடைய காதலர் உன்னைப் பிரிந்து வெகு சமீபத்திலிருக்கவும் அவரது பிரிவிற்குப பொறாது வருந்துகின்றனை என்று கூறிய தோழியைப் பார்த்து தலைவி கூறினாளென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது பகலும் இரவும் ஒன்று சென்றால் மற்றொன்று வருவதுபோல் அவர் பிரிவும் பசப்பும் நேர்ந்திருக்கவும் நீ அதனைத் தெரிந்திருந்தும் அறியாதவள்போல் கூறுகின்றனை. என் தலைவர் உள்ள சமீபத்தையும் சுருங்கியகாலத்தில் வந்து என்னைச் சேருவர் என்னும் நினைவையும் கொள்ளுவதால் இப்பசப்பு நீங்குவதில்லை. அவர் வந்த பிறகே இப்பசப்பு நீங்கும் என்றதாயிற்று.

1186. விளக்கற்றம் பார்க்கு மிருளேபோற் கொண்கன் முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.

இதுவுமது

(பரி.) இ - ள். விளக்கு அற்றம் பார்க்கும் இருளேபோல்=விளக்கினது மெலிவுபார்த்து நெருங்கிவரு மிருளேபோல—கொண்கன் முயக்கு

அற்றம் பார்க்கும் பசப்பு=கொண்கன்முயக்கினது மெலிவுபார்த்து நெருங்கி வரும் இப்பசப்பு. எ - று.

பார்க்குமென்பன இலக்கணைச்சொல். முன்பிரியாதிருக்கவும் தனக்கவ காசம் பார்த்துவரும் பசப்புப் பிரிவுபெற்றால் என்செய்யாதென்பதாம். (சு)

விளக்கம்:—"ஓ! தோழியே! விளக்கினது ஒளியானது குறைந்து வருவதைப்பார்த்து நெருங்கி வருகின்ற இருளைப்போல, தலைவனது புணர்ச்சியின் மெலிவினைப் பார்த்து இப்பசப்பானது நெருங்கி வருகின்றது" என்று தலைவர் சமீபத்திலுள்ளார் நீ ஆற்றுதல்வேண்டும் என்ற தோழிக்குத் தலைவி கூறினளென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது நாயகன் என்னோடு சேர்ந்திருந்த காலமெல்லாம் இப் பசப்பென்னும் நிறவேறுபாடானது என்னை அணுகப் பயந்தும் சிறிது என்னை விட்டு அசைவராயின் மகிழ்ச்சிபோடு என் மீது ஏறியும் வருவதாக விருக்க தலைவர் முழுவதும் என்னை விட்டுப் பிரிந்து உள்ள இக்காலத்து என்னை என் செய்யாது. அதனால் எனக்கு வரும் துன் பத்தை எவ்விதம் ஆற்றிக் கொள்வது என்று கூறினளாயிற்று.

1187. புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவி லல்லிக்கொள் வற்றே பசப்பு.

இதுவுமது.

(பரி.) இ - ள். புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன்=முன்னொரு ஞான்று காதலரைப் புல்லிக்கிடந்த யான் அறியாது புடைபெயர்ந்தேன்,— அவ்வளவில் பசப்பு அள்ளிக்கொள்வற்று=அப்புடைபெயர்ந்தவளவிலே பசப்பு அள்ளிக்கொள்வதுபோல வந்து செறிந்தது. எ - று.

கொளவென்பது குறைந்துநின்றது. அள்ளிக்கொள்வது=அள்ளிக் கொள்ளப்படும் பொருள். அப்புடைபெயர்ச்சி மாத்திரத்துக்கு அவ்வாறுயது இப்பிரிவின்கணுமாறு சொல்லவேண்டுமோ வென்பதாம். (எ)

விளக்கம்:—"முன்னொரு நாள் என் காதலரை அணைத்த வண்ண மாகப் படுத்திருந்த யான் சிறிது அறியாமல் அணைத்த கையைச் சிறிது நீக்கினேன். அவ்விதம் தேகத்தைச் சிறிது அசைத்த அளவி லேயே நிறவேறுபாடாகிய பசப்பு என்பது என் தேகத்தைக் கையால் அள்ளி வாயில் உண்டு விடுவதுபோல் வந்து முழுவதும் மூடிக் கொண்டது" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது.

அதாவது ஒருவரோடொருவர் அணைத்து இருந்த காலத்துச் சிறிது தேகத்தை அசைத்து மறுபடியும் பொருந்துவதற்கு முன் தேகம் பசலை பூத்து விடுமாயின் இவ்விதம் தலைவன் பிரிந்து உள்ள காலத்து நான் எவ்வாறு அந்நிறவேறுபாட்டைக் கொள்ளாது நிற்பது என்று ஆற்றுமையைத் தலைவி தோழிக்குக் கூறியதாயிற்று.

1188. பசந்தா ளிவளென்ப தல்லா லிவணீத் துறந்தா ரவரென்பா ரில்.

நீ யிங்ஙனம் பசக்கற்பாலையல்லையென்ற தோழியோடு புலந்து சொல்லியது.

(பரி.) இ - ள். இவள் பசந்தாள், என்பது அல்லால்=இவள் ஆற்றியிராது பசந்தாளென்று என்னைப் பழிகூறுவதல்லது—இவளை அவர் துறந்தார் என்பார் இல்=இவளையவர் துறந்துபோயினரென்று அவரைக் கூறுவாரொருவருமில்லை. எ - று.

என்பாரென வேறுபடுத்துக்கூறினாள், தன்னையே நொருங்குதல்பற்றிப் புலக்கின்றமையின். (அ)

விளக்கம்:—"இவள் பொறுத்து இராது நிறவேறுபாட்டினை அடைந்தாளென்று என்னைப் பழி கூறுவதல்லாமல் இவளை அவர் விட்டு நீங்கிப் போயினர் என்று என்னைப் பிரிந்து உள்ள அவரைக் கூறுவார் ஒருவருமிலரே" என்று தலைவி கூறியதாக இக்குறள் கூறுகின்றது அதாவது நீ இவ்விதம் நிறவேறுபாடு கொள்ளுதல் ஆகாது என்று கூறிய தோழியை நோக்கி இவ்வூரவர் என்னைப் பழி கூறுவது அல்லாமல் என்னை விட்டுச் சென்ற தலைவரைப் பழித்தலைக் காணேன் என்று கோபித்துச் சொன்னாளென்று அறிந்ததாயிற்று.

1189. பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார் நன்னீரிலைய ராவ ரெனின்.

இதுவுமது.

(பரி.) இ - ள். நயப்பித்தார் நன்னீரிலையராவர் எனின்=இப்பிரிவை யானே யுடம்படும்படி சொல்லியவர் இன்று நின்கருத்தான் நல்ல நீரிலையின ராவராயின்,—என்மேனி பட்டாங்கு பசக்க=என்மேனி பட்டதுபடப் பசப்பதாக. எ - று.

நன்னீரிலையராதல்=நன்மைக்கண்ணே சிற்றிலையுடையராதல். பட்டாங்காகவென ஆக்கம் விரித்துரைக்க. முன் இப்பிரிவின் கொடுமையறியாத

வென்னே இதற்குடம்படுத்திப் பிரிந்தவர் தவறிலராகவேவேண்டுவது, என் மேனியும் பசப்பும் யாதுசெய்யினென் னென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. (கூ)

விளக்கம்:—"இப்பிரிவினே யான் உடன்படும் விதமாகச் சொல்லிய காதலர் இன்று உன் கருத்தின் வண்ணம் நன்னிலையில் நிற்பவராக இருப்பாராயின் என் மேனி எவ்வளவு பசப்பினே யடைந்தாலும் அதனால் எனக்கு யாதொரு துன்பமுமில்லே. எதுவாயினும் ஆகட்டும்" என்று தலேவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது ஆற்றுதல் வேண்டுமென்ற தோழியை நோக்கித் தோழியே! தலேவரானவர் பிரிவு என்பது இதுவென்று அறியாத என்னே இப்பிரிவிற்கு உடன்படுத்திப் பிரிந்து சென்றவர் பிரிந்ததுடன் குறித்த காலத்தில் வரவில்லே யாதலால் அவர் நன்மையினேக் கடைபிடித்தவர் அல்லர். நன்மையுடையவராயின் என் மேனி வேறுபட்டது இன்னும் படட்டும். அதனால் எனக்கு யாதொரு துன்பமுமில்லே என்று தன் தலேவரைப் பழியாது தனக்கு ஆறுதல் சொல்லிய தோழிக்குக் கோபித்துக் கூறிய தாயிற்று.

1190. பசப்பெனப் பேர்பெறுத னன்றே நயப்பித்தார் நல்காமை தூற்றுரெனின்.

தலேமகளாற்றுதற்பொருட்டுத் தோழி தலேமகனேயியற் பழித்தவழி அவள் இயற்படமொழிந்தது.

(பதி.) இ - ள். நயப்பித்தார் நல்காமை தூற்றுரெனின்=அன்று தாங் குறைநயப்பித்துக் கூடினவர்க்கு இன்று நல்காமையை நட்டோர் தூற்றுராயின்,—பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே=பசப்புற்றுரென வேற்றுமையானன்றிப் பசப்புத்தானுமினுென ஒற்றுமையாற்றுஞ்சொல்ல அப்பெயரைப் பெறுதல் எனக்கு நன்று; எ - று.

நட்டாரென்பது அவாய்நிலேயான் வந்தது. இயற்பழித்தல்பொருது புலக்கின்றுளாகலின், இகழ்ச்சிக்குறிப்பாற் கூறினுள். அவரை அருளிலரென்னுது இன்னும் பசந்தாளிவளென்கையே யானும்று நெறியாவதென்பதாம்.

விளக்கம்:—" என்னே எதிர்ப்பட்ட அன்று தாம் தம்முடைய குறைபை கூறி என்னே விரும்பும்படிச் செய்து என்னேடு கூடினவர்க்குப் பிரிந்து நின்ற இன்று அவர் வந்து இன்பம் தாராமையை நட்

பினாவார் எடுத்துச் சொல்லாயின் பசப்பினை இவள் அடைக் தாள் என்ற வேறுபாடு கொள்ளும் வண்ணம் கூறுது பசப்பே ஆப் விட்டனள் என்று ஒற்றுமையால் சொல்லும் அப்பெயரினை யான் பெறு தல் எனக்கு நன்றுகும்" என்று தலைமகள் பிரிவினைப் பொறுத்துக் கொள்ளும் வண்ணம் தோழியானவள் தலைமகனது நற்குணங்களைப் பழித்துச் சொல்லிய விடத்துத் தலைமகள் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தோழியே! தலைவன்பொருட்டு நான் நிறவேறு பட்டேன் என்று உலகத்தவர் கூறுகின்றனரே அன்றி, அன்று தம் குறைநீங்கும் வண்ணம் எனக்கு நயப்பாகிய வார்த்தைகளைக்கூறி கூடினு ராகிய தலைவற்கு என் குறை இதுவென்று சொல்வார் இல்லை. இவவிதம் அவர்க்கு என் குறை கூறுது அவரை அருளில்லாதவர் என்று கூறுவதல்லாமல் இவளே இன்னும் முற்றும் நிறவேறுபாடு ஆயினள் என்று என்னைப் பழிக்க அதுவே நான் ஆற்றி நிற்கும் வழியாகும் என்று கோபித்துத் தலைவி இகழ்ச்சிக் குறிப்பாகக் கூறியதாயிற்று.

---

120. அதிகாரம்.

தனிப்படர்மிகுதி.

(பரி.) அது தனியாகிய படர்மிகுதியென விரியும். அஃதாவது படர்மிகுதி தலைவன்கணின்றித் தன்கண்ணேயாதல் கூறுதல். அறமும் பொருளுநோக்கிப் பிரிதலின் அவன்கண் இல்லையாயிற்று. இது, பசப்புற்று வருந்தியாட்குரியதாகலின், பசப்புறுபருவாலின்பின் வைக்கப்பட்டது.

விளக்கம் :—அதாவது தனியாகியதால் உண்டான துன்பமிகுதி என்பதாம். அதாவது பிரிவினால் உண்டாகும் துன்பமிகுதி பிரிந்து சென்ற தலைவனிடத்து இல்லாது பிரிவு ஆற்றுத தன்னிடத்தே இருப் பதாகக் கூறுதல். ஏனெனில் அறத்தைக் கருதியோ, பொருளைக் கருதி யோ தலைவன் பிரிந்தானுதலின் அப்பிரிவினால் உண்டாகும் துன்ப மிகுதி அவனுக்கு இல்லையாயிற்று. இத்தனிப்படர் மிகுதி பிரிவினால் நிறவேறுபட்டு வருந்திய தலைவிக்கு உரியதாகலின் பசப்புறுபருவதல் என்னும் அதிகாரத்திற்குப் பிறகு வைக்கப்பட்டு உள்ளது.

1191. தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றூரே
காமத்துக் காழில் கனி.

காதலரும் நின்னினுமாற்றாராய்க் கடிதின்வருவர் நீயவரோடு
பேரின்பநுகர்கியென்ற தோழிக்குச் சொல்லியது.

(பரி.) இ - ள். தாம் வீழ்வார் தம் வீழப் பெற்றவர்=தம்மாற்காதலிக்கப்படுங் கணவர் தம்மைக் காதலிக்கப்பெற்ற மகளிர்—பெற்றூரே காமத்துக் காழ் இல் கனி=பெற்றூரான்றே காமநுகர்ச்சியென்னும் பரலில்லாத கனியை ; எ - று.

காமம்* ஆகுபெயர். அத்து அல்வழிக்கண் வந்தது. முன்னே நல்வினை இல்வழிப்பெறப்படாமையிற் 'பெற்றூர்' என்றும், அவராற் றடையின்றி நுகரப்படுதலிற் 'காழில்கனி' என்றுங் கூறினுள். நங்காதலர் பிரிதலே யன்றிப் பின் வாராமையுமுடைமையின், அக்கனி யாம் பெற்றிலே மென்ப தாயிற்று. (க)

விளக்கம் :—"தம்மால் விரும்பப்படும் கணவர் தம்மை விரும்பும் படி அடையப்பெற்ற பெண்கள் அல்லவோ காம இன்பமென்னும் விதையில்லாத கனியை அடைந்தவர்கள்" என்று பிரிவினால் வருந்து கின்ற தலைவியை நோக்கித் தலைவியே! உம்முடைய காதலரும் பிரிவினால் உண்டாகும் துன்பத்து உண்ணக் காட்டினும் அதிகமாகப் பொறுக்க முடியாத தன்மையராக விரைவில் வருவர். நீ அவரோடு கூடி பேரின் பத்தை அனுபவிப்பாயாக என்று கூறிய தோழியைப் பார்த்துத் தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைவியானவள் தோழியே! நாம் கணவரை விரும்புவதுபோல் கணவராலும் விரும்பப்படும் பெண்களல்லவோ தாம் அனுபவிப்பதற்கு உரிய விதை இல்லாத பழங்களைக் கண்டவுடன் போக்கில்லாமல் முற்றும் உடனே அருந்துவதுபோல் காமநுகர்ச்சி யென்னும் இன்பத்தை அனுபவிப் பர். இவ்விதம் ஒருவரை யொருவர் விரும்பி அனுபவிக்கும் இன்பம் முன்னே நல்வினையுடையார் பெறுவரே அன்றி நல்வினை யில்லாத யான் பெறுவதற்கு இல்லை. இனி நம் காதலர் பிரிந்து சென்றமையே அல் லாமல் பின் வாராமையும் உடையராயிருத்தலால் அவரோடு கூடி அனு பவிக்கும் இன்பத்தை நான் பெறுவதற்கு இல்லையாயிற்று என்று கூறி யதாயிற்று.

1192. வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு வீழ்வா ரளிக்கு மளி.

இதுவுமது.

(பரி.) இ - ள். வீழ்வார்க்கு வீழ்வார் அளிக்கும் அளி=அறமும் பொருளு நோக்கிப் பிரிந்தாற் றம்மை யின்றியமையா மகளிர்க்கு அவரை யின்றியமையாக்கணவர் அளவறிந்து வந்து செய்யுந் தலையளி—வாழ்வார்க்கு வானம் பயந்தற்று=தன்னையே நோக்கி உயிர்வாழ்வார்க்கு வானம் அள வறிந்து பெய்தாற்போலும்; எ - று.

நங்காதலர் நம்மை விழையாமையின் அத்தலையளி யில்லையாகலான், மழைவறந்துழி அதனுன் வாழாதார்போல இறந்துபடுதலே நமக்குள்ள தென்பதாம். (உ)

விளக்கம்:—" அறத்தினையும் பொருளினையும் எண்ணி தலைவர் பிரிந்தால், நாம் இல்லாது உயிர் வாழாத பெண்களுக்கு அப்பெண் களை யில்லாது உயிர் வாழாத தலைவர், பிரிந்த காலத்தின் அளவை அறிந்து, குறித்த பருவத்து வந்து செய்யுந் தலை அளியாகிய இன்பம் துகர்தல், தன்னையே நோக்கி உயிர் வாழ இருக்கின்ற மக்கட்கு மழை யானது வந்து பெய்து இன்பத்தைத் தந்ததுபோலும்" என்று இத் திருக்குறள் கூறுகின்றது. அதாவது மழையானது பெய்யவேண்டிய காலத்து எவ்வாறு பெய்து அம்மழையையே நம்பியுள்ள உயிர்களை வாழச் செய்கின்றதோ அதுபோல் மகளிர்மீது ஈங்கா அன்புடைய தலைவர்கள் அம்மகளிரைப் பிரிந்த காலத்து அளவறிந்து தாம் குறித்த காலத்து விரைந்து வந்து, கூடி, இன்பத்தை யடையச் செய் வர். நம் காதலரோ பிரிந்ததுடன் குறித்த பருவத்தும் வாராமையால் மழை வறண்ட காலத்து உயிர்கள் வாழாமல் போவதுபோல் வாழாது இறந்துபடுதலே நமக்கு உள்ளதாயிற்று என்று தலைவி தோழிக்குக் கூறினளென்பதாம்.

1193. வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே வாழுந மென்னுஞ் செருக்கு.

இதுவுமது.

(பரி.) இ - ள். வீழுநர் வீழப்படுவார்க்கு அமையுமே=தாம் விழையும் தணவரான் விழையப்படுமகளிர்க்கு எற்புடைத்து—வாழுநம் என்னும்

செருக்கு=காதலர் பிரிந்தாராயினும் நம்மை நினைந்து கடிதின் வருவர், வந்தால் நாமின்புற்று வாழ்துமென்றிருக்குக் தருக்கு; எ - று.

நாம் அவரான் வீழப்படாமையின், நமக்கமைவது இறந்துபாடென்ப தாம். (கூ)

விளக்கம்:—"தாம் விரும்பப்படும் கணவரால் நம்மை விரும்பப் படும் பெண்களுக்குப் பொருந்தும் 'காதலர் பிரிந்தாராயினும் நம்மை நினைந்து விரைந்து வருவர். அவ்விதம் வந்தால் நாம் இன்பத்தைப் பெற்று வாழ்வோம்' என்று இருக்கும் இறுமாப்பு" என்பது தலைவி கூறினு ளென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது நாம் விரும்பும் கண வரால் விரும்பப்பட்டுள்ள பெண்களுக்குக் காதலர் நம்மைப் பிரிந்து சென்றாராயினும் நம்மீது உள்ள அன்பின் பிடுதியால் விரைந்து வரு தல் கூடும். அவ்வாறு வருங் காலத்து நாம் காமநுகர்ச்சியாகிய இன் பத்தை அனுபவித்து வாழ்ந்து இருபோம் என்று எண்ணக்கூடிய கர் வம் பொருத்தமாம். ஆயின் நாம் விரும்பிய காதலர் நம்மை விரும்ப வில்லையாதலால் நாம் தருக்கோடு பகர்வதற்கு இலவாதிருபபதுடன் இறந்துபடுவதே நமக்குப் பொருந்தியதாயிற்று என்று தலைவனது அன்பின்மையையும் தனது பிரிவாற்றுமையையும் தலைவி கூறினு ளென்பதாயிற்று.

1194. வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார் வீழப் படாஅ ரெனின்.

காதலரை யியற்பழித்தலையஞ்சி அவரருளின்மை மறைத்த நீ
கடவுட் கற்பினையாகலிற் கற்புடைமகளிரால் நன்கு
மதிக்கப்படுதியென்ற தோழிக்குச் சொல்லியது.

(பரி.) இ - ள். வீழப்படுவார்=கற்புடைமகளிரால் நன்குமதிக்கப்படு வாரும்—தாம் வீழ்வார் வீழப்படாரெனிற் கெழீஇயிலர்=தாம் விரும்புங் கணவரான் விரும்பப்படாராயிற் றீவினையாட்டியர்; எ- று.

சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. கெழீஇயின்மை=நல்வினை யின்மை; அஃது அருத்தாபத்தியாற் றீவினையுடைமையாயிற்று. தீவினை யுடையேற்கு அந்நன்குமதிப்பாற் பயனில்லை யென்பதாம் (சு)

விளக்கம்:—"கற்புடைய பெண்களால் நன்மதிப்பை அடைந்த பெண்களும் தம்மால் விரும்பப்பட்ட கணவரால் விரும்பப்படாது

போவாராயின் அப்பெண்கள் தீவினையின் பயனை அனுபவிப்பவராவர்" என்று ஓ! தலைவியே! உன்னுடைய காதலர் உன்னைப் பிரிந்தமையையும் குறித்த காலத்து வாராமையையும் எண்ணி அவர் குணங்களைப் பிறர் பழித்த காலத்து அப்பழி கூறலுக்குப் பயந்து அவர் அருளில்லாமையை மறைத்து அருளுடையவர் என்று புகழ்ந்து கூறிய நீ தெய்வத் தன்மை தங்கிய கற்புடைப் பெண்களாவாகின்றாய், அதனால் கற்புடைய பெண்களால் மிகவும் மதிக்கப்படுவாய் என்று தான் ஆற்றும்படி கூறிய தோழியை நோக்கித் தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தோழியே! நீ கூறிய நூ ஒக்கும். கற்புடைய பெண்களால் மதிக்கப்படக்கூடிய கற்புடைய பெண்களாயினும் தாம் விரும்பி மணந்து கொண்ட தலைவரால் விரும்பப்படாவிடில் தாம் பிறரால் அடைந்த நன்கு மதிப்பால் என்ன பயனை அடைதல் கூடும் நல் வினைப் பயனால் ஒரு பக்கத்து நன்கு மதிப்பை அடையினும் தீவினைப் பயனைக் கணவரால் விரும்பப்படாது இறந்து தீராதிலே உண்டாகும் என்று பிரிவாற்றுமையையும் காதலர் குறித்த பருவத்து வாராமையையும் உரைத்துக் கூறியதாயிற்று.

1195. நாங்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ தாங்காதல் கொள்ளாக் கடை.

அவரீமேற் காதலுடைமையின் அவர் கருத்தறிதற்தாற்றினை யென்ற தோழிக்குச் சோல்லியது.

(பரி.) இ-ள். நாம் காதல் கொண்டார் நமக்கு எவன் செய்ப=நம் மாற் காதல்செய்யப்பட்டவர் நமக்கென்னவின்பத்தைச் செய்வர், —தாம் காதல் கொள்ளாக் கடை=அவ்வாறே தாமும் நங்கட்காதல் செய்யா வழி; எ-று.

எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. அக்காதலுடைமையால் நாம் பெற்றது தின்பமே யென்பதாம். (இ)

விளக்கம்:—"நம்மால் விரும்பப்பட்ட காதலர் நாம் காதல் கொண்டதுபோல் அவரும் நம்மிடத்துக் காதல் செய்யாவிடின் அவர் நமக்கு என்ன இன்பத்தைச் செய்தல் கூடும்" என்று தலைவியே! நீ தலைவர்மீது காதல் உடையவள் ஆதலின் அத்தலைவர் கருத்தினை யறிந்து ஆறுதல் அடைந்திருந்தனை என்று கூறிய தோழியை நோக்கித் தலைவி கூறிய

தாக இத்திருக்குறள் கூறுகின்றது. அது என்னையோவெனின், நாம் தலைவர் மீது எவ்வளவு காதலுடையவராக இருப்பினும் அவர் நம்மீது காதல் செலுத்தவில்லையாதலால் நாம் காதலுடையவராக இருப்பதின் பயன் துன்பம் அனுபவித்தலே அன்றி வேறு யாது உளது என்று கூறியதாயிற்று.

1196. ஒருதலையா னின்னது காமங்காப் போல
விருதலை யானு மினிது.

இதுவுமது.

(பரி.) இ-ள். காமம் ஒருதலையான் இன்னுது=மகளிர் ஆடவரென்னு மிருதலையினும் வேட்கை ஒருதலைகண்ணேயாயின் அஃதின்னுது; —காப்போல இருதலையானும் இனிது=காவினது பாரம்போல இருதலைக் கண்ணுமொப்பின், அஃதினிது; எ-று.

மூன்றனுருபுகள் ஏழன்பொருண்மைக்கண் வந்தன. கா=ஆகுபெயர். என்மாட்டுண்டாயவேட்கை அவர்மாட்டுமுண்டாயின், யானிவ்வாறு துன்ப முழத்தல் கூடுமோ வென்பதாம். (சு)

விளக்கம்:—"பெண்களென்றும் ஆண்மக்களென்றும் கூறுகின்ற இருவரிடத்தும் சமமாகிய அன்பில்லாது ஒருவரிடத்தே அன்பு இருக்குமாயின் அவ்வன்பானது மிகுதியும் துன்பத்தையே தருவதாகும். ஆயின் காவடிக் கொம்பு தாங்கும் பாரத்தைபோல இருவரிடத்தும் அன்பு ஒத்து இருக்குமாயின் அது மிகுதியும் இனிமையைத் தருவதாகும்" என்று வலியுறுத்தி கூறியதாக இத்திருக்குறளை கூறுகின்றது அதாவது தோழியே! நீ சொல்லுவது ஒக்கும். தலைவர் மீது எனக்குள்ள அன்பைப் போல அவருக்கும் என்மீது அன்பு இருக்குமாயின் யான் இத்துணைத் துன்பங்களை அனுபவிக்கக் கூடுமோ? என்மீது அவர்க்கு அன்பில்லை ஆதலால யான் அடைவது துன்பம் ஒன்றேயாம் என்று கூறியதாயிற்று

1197. பருவரலும் பைதலுங் காணன்கொல் காம
னொருவர்க ணின்றொழுகு வான்.

இதுவுமது.

(பரி.) இ-ள். ஒருவர்கண் நின்று ஒழுகுவான் காமன்=காமநுகர்தற்குரிய விருவரிடத்தும் ஒப்பநிற்றலொழிந்து ஒருவரிடத்தே நின்று பொருகின்ற

காமக்கடவுள்—பருவரலும் பைதலும் காணன்கொல்=அவ்விடத்துப் பசப்பா னுய பருவரலும் படர்மிகுதியும் அறியான்கொலோ ! எ-று.

விழைவும் வெறுப்புமின்றி எல்லார்கண்ணு நிகழ்ந்தனவறிதற்குரிய கட வுளும் என்கண் வேறுபட்டான், இனி யானுய்யுமா றென்னே யென்பதாம்.

விளக்கம் :—" காம இன்பத்தை அனுபவிப்பதற்கு உரிய பெண் கள் ஆண்களாகிய இருவரிடத்தும் பொதுவாக இருப்பதை யொழிந்து ஒருவரிடத்தேயே நிலையாக யுத்தத்தைச் செய்யக் காமக்கடவுளாகிய மன் மதன் தான் எண்ணிச் செய்கின்ற இடத்து உண்டாகும் நிறவேறுபாட் டாலாகிய துன்பத்தினையும், தனியாக நினைத்து இருப்பதால் உண்டா கும் துன்பத்தினையும் அறியாமட்டானே" என்று தலைவி கூறியதாக இத் திருக்குறள் கூறுகின்றது. அதாவது தோழியே ! யாவரிடத்தும் விருப் பும் வெறுப்பு மில்லாமல் பொதுவாக நின்று எல்லாரிடத்தும் உண்டா வனவற்றை யறிகின்ற கடவுளும், இவ்விதம் என்னிடத்தே நிலைதவறி என்னை மாத்திரம் காமத்துன்பத்தால் வருத்துவானுயின் யான் பிழைப் பதெவ்விதம் ? என்று கூறியதாயிற்று.

1198. வீழ்வாரி னின்சொற் பெரு அ துலகத்து வாழ்வாரின் வன்கணு ரில்.

தலைமகன் நாதுவராக்காலது சொல்லியது.

(பரி.) இ-ள். வீழ்வாரின் இன்சொற் பெருது வாழ்வாரின்=தம்மால் விரும்பப்படுங் காதலர்நிறத்தினும் ஓரின்சொல்லளவும்பெருதே பிரி வாற்றி உயிர்வாழ்கின்ற மகளிர்போல—வன்கணர் உலகத்து இல்=வன் கண்மை யுடையார் இவ்வுலகத்தில்லை. எ-று.

காதலர்நிறத்துச்சொல் யாதானும் எனக்கினிதென்னுங் கருத்தால், 'இன்சொல்' என்றன். இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. யான் வன் கண்ணேனுகலின் அதுவும் பெருது உயிர்வாழாநின்றே னென்பதாம். (அ)

விளக்கம்:—"தம்மால் விரும்பப்படுகின்ற காதலரிடத்து இருந்து ஓர் இனிய சொல்லேனும் வரப்பெறுமல் பிரிவினை ஆற்றி உயிர்வாழ்ந்து கொண்டு வருகின்ற பெண்கள் போல அஞ்சா மனத்தினையுடையவர் கள் இவ்வுலகத்து இல்லை" என்று பிரிந்து சென்ற தலைமகனிடத்தினின் றும் தூது ஒன்றும் வரக்காணுத தலைமகள் ஆற்றுளாய்க் கூறிய தாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது பிரிந்து சென்ற தலை

மகன் குறித்தகாலத்து வாராவிடின் ஓர் இனிய சொல்லேயேனும் தூதுவர் மூலமாகக் கேட்டு வாழ்ந்து இருத்தல் பெண்களுக்கு இயல் பாகும் யானே அவ்வோர் இனிய சொல்லைக் கேட்பதற்கு ஓர் தூதும் வரப்பெறாது இருக்கவும் இன்னும் உயிர்வாழ்கின்றேன். இவ்விதச் செயல் உலகத்திலுள்ள வன்கண்மைக்கெல்லாம் தலைமை உடையதாக உள்ளது என்ற ஆற்றாமை மிகுதியால் தன்னைப் பழித்துக் கூறியதா யிற்று.

1199. நசைஇயார் நல்கா ரெனினு மவர்மாட்
டிசையு மினிய செவிக்கு.

இதுவுமது.

(பரி.) இ-ள். நசைஇயார் நல்கார் எனினும்=என்னால் நச்சப்பட்ட காதலர் என்மாட் டன்பிலரேயாயினும்,—அவர்மாட்டு இசையும் செவிக்கு இனிய=அவர்திறத்தியாதானுமோர்சொல்லும் என்செவிக்கினியவாம்.

இழிதகைமையும், அவர் வாரலரென்னுஞ் சொல்லாயினும் அமையு மென்பதுபட நின்றது. அதுவும் பெற்றிலேனென்பதாம். (கூ)

விளக்கம் :—"என்னால் விரும்பப்பட்ட காதலர் என்னிடத்து அன்பு இல்லாதவராயினும் அவரைக் குறித்துக் கேள்விப்படும் ஏதேனும் ஒரு சொல்லும் என் காதிற்கு இனியவாயிருக்கும்" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைவியானவள் தலைவரிடத்து இருந்து யாதொரு தூதும் வரப்பெறாத காலத்து என் தலைவர் என்னிடத்து அன்புகொண்டு குறித்த பருவங் கழிந்தும் வாரா விடினும் நான் வருவது இல்லை என்ற சொல்லும் ஓர் சொல்லை யேனும் கேட்பேனையின் அச்சொல்லும் எனக்கு இனிமையைத் தருமே அன்றி துன்பத்தைத் தாராது. அவ்விதச் சொல்லையும் சொல்லி அனுப் பக்கூடிய நல்லினீயும் நான் பெறவில்லை என்று தலைவி தனது பிரிவின் ஆற்றாமையைக் கூறியதாயிற்று.

1200. உரூஉர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செரூஉ அஅய் வாழிய நெஞ்சு.

தலைமகள் தூதுவரப்பெறாது தான் தூதுவிடக்கருதியாள்
நெஞ்சொடு சொல்லியது.

(பரி.) இ-ள். உரூர்க்கு உறுநோய் உரைப்பாய் நெஞ்சு=நின்னே டுறுதார்க்கு நின்னுறுநோயை யுரைக்கலுற்ற நெஞ்சே,—கடலைச் செரூய்=

கீயாற்றுயாயினும் அரிதாய அதனையொழிந்து, நினக்குத் துயரஞ்செய்கின்ற கடலைத் தூர்க்க முயல்வாயாக, அஃதெளிது. எ-று.

உரைக்கலுற்றது அளவிறந்தநோயாகலானுங் கேட்பார் உறவிலராகலானும் அது முடிவதொன்றன்று; முடிந்தாலும் பயனில்லையென்பது கருதாது, முயலாநின்றுயென்னுங் குறிப்பான், 'வாழிய' என்றாள். (கo)

விளக்கம்:—"உன்னை விரும்பாதாரிடத்து உனக்கு உள்ள பெரிய தோர் துன்பத்தினைச் சொல்லுவோம் என்று எண்ணுகின்ற என் நெஞ்சே! அவர் பிரிவினாலாகும் ஆற்றுமையால் வருந்தி நீ துன்புறுவையாயினும் அத் துன்பத்தையும் அவர்க்குக் கூறுவது உனக்கு மிகவும் அருமையாதலால் அவ்வித அருமையாகிய தொழில் செய்வதை யொழிந்து உனக்கு இரவெல்லாம் துன்பஞ் செய்கின்ற சமுத்திரத்தைத் தூர்த்துவிட முயற்சி செய்ய எண்ணுவாயாக! அது மிகுதியும் எளிமையான காரியம்" என்று தலைமகனது தூது வரப் பெருமையால் அவனிடத்துத் தூதுவிட எண்ணிய தலைவி தன் நெஞ்சிற்குக் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைவி தன் நெஞ்சை நோக்கி ஓ! நெஞ்சே! அவரில்லாமையால் உனக்கு உள்ள பெரியதோர் துன்பத்தினை அவர்க்குச் சொல்லலாம் என்று எண்ணுகின்றனை. உன்னைத் துன்புறுத்துகின்ற கடலைத் தூர்த்துவிட நீ முயல்வாயாயின் அவ்வித பெரியதோர் முயற்சியும் ஓர்கால் கைகூடுதல் கூடும். அன்பிலராய அவர்க்கு நீ எண்ணியதைச் சொல்லி வரும்படிச் செய்தல் கைகூடாதது ஒன்றாகும். அவ்விதம் கைகூடாதது ஒன்றினை இது நமக்கு முடியாதது என்று விட்டுவிடாமல் நீ முயற்சிக்க எண்ணினையாதலால் உன் முயற்சிக்கு யான் மகிழ்கின்றேன். இவ்விதப் பெரியதோர் முயற்சி செய்கின்ற நீ வாழ்வாயாக! என்று தன் நெஞ்சை வாழ்த்தினளாயிற்று.

---

121. அதிகாரம்.

நினைந்தவர்புலம்பல்.

(பரி.) *அஃதாவது முன்கூடியளான்றையின்பத்தினை நினைந்து தலைமகடனிமையெய்தலும், பாசறைக்கட்டலைமகன் றனிமையெய்தலுமாம். இவ்வாறு இருவர்க்கும் பொதுவாதல்பற்றிப் பன்மைப்பாலாற் கூறப்பட்டது. இது, படர்மிகுதி தன்கண்ணதாக நினைந்த தலைமகட்கு முரித்தாகலின், அவ்வியைபுபற்றித் தனிப்படர்மிகுதியின்பின் வைக்கப்பட்டது.*

விளக்கம்:—அதாவது இவர்கள் ஒருவரோடு ஒருவர் கூடிய நாளில் அடைந்த இன்பத்தினை எண்ணி, தலைமகளானவள் ஓர் தனியிடத்து இருந்து தனக்குத் தானே புலம்பலும், யுத்தத்திற்குச் சென்ற தலைமகன் தான் தங்கின இடமாகிய பாசறையினிடத்தே தனிமையாக இருந்து புலம்பலும் ஆகும். இவ்வதிகாரம் தலைவன் தலைவியாகிய இருவருக்கும் பொதுவாக உள்ளதால் நினைந்து அவர் புலம்பல் என்று பன்மையாகக் கூறப்பட்டது. இவ்விகம் புலம்புதல் தனித்து நிற்பதால் தனக்கே துன்பம் உள்ளதாக எண்ணிய தலைமகளுக்கும் ரியது ஒன்றுதலால் அச்செயற்கை கருதி னிப்படர் மிகுதி என்னும் அதிகாரத்திற்குப் பிறகு இவ்வதிகாரம் வைக்கப்பட்டுள்ளது.

1201. உள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற் கள்ளினுங் காம மினிது.

தூதாய்ச்சென்ற பாங்கனுக்குத் தலைமகன் சொல்லியது.

(பரி.) இ-ள். உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்=முன்கூடிய ஞான்றை யின்பத்தினைப் பிரிந்துழி நினைந்தாலும் அதுபொழுது பெற்றுற் போல நீங்காத மிக்கமகிழ்ச்சியைத் தருதலால்,—கள்ளினும் காமம் இனிது =உண்டுழியல்லது மகிழ்ச்சிசெய்யாத கள்ளினுங்காமம் இன்பம்பயத்தலுடைத்து; எ-று.

தன்றனிமையுந் தலைமகளே மறவாமையுங் கூறியவாறு. (க)

விளக்கம்:—"முன் ஊழின் வல்லியால ஒருவரை பொருவர் கண்டு கூடிய காலத்தில் உண்டாய இன்பத்தினைப் பிரிந்த காலத்து எண்ணினாலும் அப்புணர்ந்த காலத்து உண்டாகிய இன்பம் எத்தன்மையதோ அத்தன்மையாகிய இன்பத்தை ஒத்தது போலவே நீங்காத மிக்கதோர் மகிழ்ச்சியை எனக்குத் தருதலால் உண்ட காலத்து அல்லாது ஏனைய காலத்தில் மகிழ்ச்சி செய்யாத கள்ளைக்காட்டிலும் காமமானது இன்பத்தை உண்டுபண்ணுவதாக உள்ளது" என்று தூதாய்ச் சென்ற பாங்கனிடத்துத் தலைமகன் கூறினனென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைமகனவன் ஓ! பாங்கனே! என் தலைவியிடத்து நீ கூற வேண்டுவது நாங்கள் இருவரும் தெய்வத் திருவருளால் புணர்ந்த முதல் நாள் இன்பத்தை நான் தனித்து நிற்கின்ற இன்றையப் பொழுதும் மனத்தால் எண்ணினாலும் அம்மெய்யுறு புணர்ச்சியால் அடைந்த இன்பத்தைக் காட்டிலும் மிக்கதோர் மகிழ்ச்சியைத் தரும்

இன்பம் உடையதாக உள்ளது என்றும், உண்டு களிக்கின்ற கள்ளைப் போல் நினைந்து களிக்கின்ற இன்பத்தைத் தந்த தலைமகளை நான் மறந்து விடுவதற்கு இல்லையென்றும் அறிவித்தல் வேண்டும் என்று தான் தனியாய் இருப்பதால் உண்டாகும் துன்பத்தையும் தலைமகளை மறவா திருத்தலையும் கூறினாயிற்று.

1202. எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார் நினைப்ப வருவதொன் றில்.

இதுவுமது.

(பரி.) இ - ள். தாம் வீழ்வார் நினைப்ப வருவது ஒன்று இல்=தம்மால் விரும்பப்படுவாரைப் பிரிவின்கணினைத்தால் அந்நினைவார்க்கு அப்பிரிவான் வருவதோர் துன்பமில்லையாம்;—காமம் எனைத்து இனிது ஒன்றேகாண்=அதனுள் காமம் எத்துணையேனு மினிதொன்றே காண் ; எ - று.

புணர்ந்துழியும் பிரிந்துழியும் ஒப்ப வினிதென்பான், 'எனைத்துமினிது என்றான். சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. தானுற்றியவதை கூறியவாறு.

விளக்கம்:—" தம்மால் விரும்பப்படுபவரை அவரைப் பிரிந்து உள்ள காலத்தில் நினைத்தாலும் அவ்விதம் நினைப்பவர்க்கு அப்பிரிவினால் வருவதாகிய ஓர் துன்பமும் இல்லையாகும். அதனுள் காமமானது எவ்விதமாயிருக்கினும் இனியது ஒன்றுகவே உள்ளது" என்று பாங்கனை நோக்கித் தலைவன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைவனைவன் ஓ! பாங்கனே! என் தலைவியைப் பிரிந்து உள்ள இக்காலத்து அவளை எக்காலத்தும் நினைத்திருப்பதாலேயே புணர்ந்த காலத்து உண்டாகும் இன்பம் எனக்கு உண்டாகின்றது. ஆதலால் தாம் விரும்பும் மகளிரைப் பிரிந்த காலத்தும் காமமானது நினைப்பு ஒன்றினாலேயே இன்பத்தைத் தருவதால் அந்நினைப்பையே உறுதியாகக் கொண்டு அவள் பிரிவினை ஆற்றி நிற்கின்றேன் என்று கூறியதாயிற்று.

1203. நினைப்பவர் போன்று நினையார்கொ றும்மல் சினைப்பது போன்று கெடும்.

தலைமகனை நினைந்து வருந்துகின்ற தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

(பரி.) இ - ள். தும்மல் சினைப்பதுபோன்று கெடும்=எனக்குத் தும்மல் எழுவதுபோன்று தோன்றிக் கெடாதின்றது,—நினைப்பவர்போன்று

நினையார் கொல்=அதனற் காதலர் என்னை நுங்களப்பார்போன்று நினையாராகல் வேண்டும். எ-று.

நினைத்தல்=அரும்புதல். சேய்மைக்கண்ணாராய தோழிர் நினைந்துழி அந்நினைக்கப்பட்டார்க்குத் தும்ம ரேன்றுமென்னு முலகியல்பற்றித் தலைமகனெடுத்துக்கொண்டவினை முடிவதுபோன்று முடியாமை யுணர்ந்தாள் சொல்லியதாயிற்று. (சு)

விளக்கம்:—"எனக்குக் துப்பல் வருவது போன்று தோன்றி பின்பு வராமல் நின்றது. அதனால் என் காதலர் என்னை நினைப்பவர் போன்று இருந்து நினையாதவராக இருக்கின்றார்" என்று தலைமகனது பிரிவாற்றுமையால் அவனை நினைந்து வருந்துகின்ற தலைமகளான வள் தோழியை நோக்கிக் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது ஓ! தோழியே! எனக்குத் துப்பல் வருவது போலக் காணப்பட்டுப் பின்னர் வராமல் நின்றுவிடுவதால் என்னுடைய காதலர் நினைப்பவர் போன்றும் நினையாதவர் போன்றும் இருத்தல் வேண்டும். அதனாலேயே எனக்கு இவ்விதம் தோன்றுகின்றது. அது எனெனின், தலைமகன் பிரிந்தகாலம் கொண்டு வினை முடிவது போன்று காணப்படுங் காலத்து என்னை நினைக்கும் முடியாதிருந்த காலத்து என்னை நினையாமலும் இருத்தல் வேண்டும் என்று கூறியதாயிற்று.

1204. யாமு முளேங்கொ லவர்நெஞ்சுந் தந்நெஞ்சத் தோமு வளரே யவர்.

இதுவுமது.

(பரி.) இ-ள். எந் நெஞ்சத்து அவர் ஓ உளரே=எம்முடைய நெஞ்சத்து அவர் எப்பொழுதுமுளரேயாயிராநின்றார்;—அவர் நெஞ்சத்து யாமும் உளேங் கொல்=அவ்வகையே அவருடைய நெஞ்சத்தும் யாமுமுள மாதுமோ, ஆகேமோ! எ-று.

ஓகாரவிடைச்சொல் ஈண்டிடைவிடாமை யுணர்த்திநின்றது. உளமாயும் வினைமுடியாமையின் வாராயினரோ, அது முடிதலும் இலமாகலின் வாரார்போயினரோவென்பது கருத்து. (சு)

விளக்கம்:—"எம்முடைய நெஞ்சினிடத்து அவர் எப்பொழுதும் உள்ளவராகவே இருக்கின்றார். அவ்விதமே அவருடைய நெஞ்சதத்தில் யாமும் இருப்பவராக இருப்போமோ அல்லது இருக்கமாட்டோமோ"

என்று தலைவனை நினைந்து வருந்துகின்ற தலைவி கூறியதாக இத்திருக் குறள் கூறுகின்றது. அதாவது தலைவியானவள் தோழியே! எக்காலத் தும் நாம் தலைவரை நினைந்தவண்ணமாக இருக்கின்றோம். அவ்விதம் அவரும் இருபபாராயின் அவர் எடுத்த வினை முடியாமையினல் வாரா மல் போயினரோ, அலலது எடுத்தவினை முடிந்தும் நம்மை அவர் நினை யாமையினல வாராமல போயினரோ யாதோ அறியேன் என்று கூறிய தாயிற்று.

1205. தந்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணுர் லெந்நெஞ்சத் தோவா வரல். [கொ

இருவுமது.

(பரி.) இ - ள். தந்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார்=தம்முடைய நெஞ்சின்கண்ணே யாஞ்செல்லாமல் எம்மைக் காவல்கொணட காதலர்— எந்நெஞ்சத்து ஓவாவரல் நாணுர்கொல்=தாமெம்முடையநெஞ்சின்கண் ஒழி யாது வருதலே நாணுர்கொல்லோ ! எ - று.

ஒருவரைத் தங்கண வருதற்கு ஒருகாலு முடம்படாது தாமவர்கட் பல காலுஞ் சேறல் நாணுடையார் செயலன்மையின், 'நாணுர்கொல்' என்றுள்.

விளக்கம்:—"தம்முடைய நெஞ்சினிடத்தே யாம் மிகாக வொட் டாமல் எம்மைக் காவல கொணடு தடுத்து நின்ற காதலர் தாம் எம்மு டைய மனத்தினிடத்தே எக்காலமும் வந்து கொண்டு இருப்பதற்கு நாணத்தை யடையாமல இருக்கின்றரோ" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது மீதாழியே ! உலகத்து ஒருவ ரைத் தம்மிடத்துக்கு வருவதற்கு உடன் படாது இருந்து தாம் மாத்தி ரம் அவரிடத்துப பலநாளும் செலலுதல நாணுடையவர் செயலாகாது. அவ்விதம் இருந்தும் தலைவர் என் நெஞ்சத்தினிடத்து வருவது நாண மென்பதே இல்லாமையேபோலும் ! என்று தலைவி கூறியதாயிற்று.

1206. மற்றியா னென்னுளேன் மன்னே வவரொடியா னுற்றநா ஞள்ள வுளேன்.

அவரோடு புணர்ந்தஞான்றையின்பத்தை நினைந்து ஆறற்று பாடெய்தாநின்றமை அதுமறத்தல் வேண்டுமென்றுட்குச் சொல்லியது.

(பரி.) இ - ள். யான் அவரொடு உற்ற நாள் உள்ள உளேன்=யான் அவரோடு புணர்ந்த ஞான்றையின்பத்தை நினைதலான் இத்தின்ப வெள்ளத்

தும் உயிர்வாழகின்றேன்;—மற்று யான் என்னுளேன்—அதுவின்றுயின், வேறெத்தால் உயிர்வாழ்வேன் ! எ - று.

நாள் = ஆருபெயர். உயிர்வாழ்தற்கு வேறுமுள, அவைபெற்றிலேனென் பதுபட நின்றமையின், மன் = ஒழிபிசைக்கண் வந்தது. அவை அவன்றாது வருதல், தன்றாது சேறன்முதலாயின. அவையாவுமின்மையின், இதுவல்லது எனக்குப் பற்றுக்கோடில்லையென்பது கருத்து. (சு)

விளக்கம்:—"யான் அவரோடு புணர்ந்த நாள் இன்பத்தை நினைத் திருப்பதாலேயே இவ்வித துன்பமாகிய சமுத்திரத்தில் புரண்டும் உயிர் வாழ்ந்து கொண்டு இருக்கின்றேன். அவ்விதம் அவ்வின்பத்தை நினையேனுயின் வேறு எவ்விதத்தால் உயிர் வாழ்ந்திருப்பேன்" என்று நீ உன் தலைவரைக் கண்ட தினத்துப் புணர்ந்ததால் உண்டாகிய இன் பம் ஒன்றினையே நினைந்து நினைந்து இறப்பதற்கு உரிய தகுதியிலிருக் கின்றாய். ஆதலால் நீ உயிர் வாழும் பொருட்டு அவ்விதம் நினைப்பதை மறந்தி இருத்தல் வேண்டும் என்று சொல்லிய தோழிக்குத் தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைவியானவள் ஏ ! எனது உயிர்த்தோழியே ! உலகத்துத் தலைவரைப் பிரிந்து உள்ள பெண்களுக்கு உயிர் வாழ்வதற்குப் பற்றுக் கோடாய் உள்ளன தலைவன் அனுப்பிய தூது வருதலும், தான் அனுப்புகின்ற தூது செல்லலும் ஆகிய பலவிருந்தும் அவற்றுள் எனக்கு ஒன்றும் இல்லாமையால் முதல் நாள் புணர்ந்த இன்பத்தை நினைந்து பிரிவாற்றுமையால் உண்டாகும் துன்ப சமுத்திரத்தில் உழன்றும் உயிர் வாழ்கின்றேன். ஆதலால் ஈது ஒன்றே எனக்குப் பற்றுக்கோடாக உள்ளது என்று கூறினளாயிற்று.

1207. மறப்பி னெவனுவன் மற்கொன் மறப்பறியே னுள்ளி னு முள்ளஞ் சுடும்.

இதுவுமது.

(பரி.) இ - ள். மறப்பு அறியேன் உள்ளினும் உள்ளம் சுடும் = அவ்வின் பத்தை மறத்தலறியேனுய் இன்றுள்ளாநிற்கவும், பிரிவு என்னுள்ளத்தைச் சுடாநின்றது,—மறப்பின் எவனுவன் = அங்ஙனம் பிரிவாற்றுத யான் மறந் தால் இறந்துபடாது உளேனுவது எத்தால் ! எ - று.

மறக்கப்படுவது அதிகாரத்தான் வந்தது. மன் = ஈண்டும் அதுபடநின்று ஒழியிசையாயிற்று. கொல் = அசைநிலை. (எ)

விளக்கம் :—" அப்புணர்ந்த தினத்து இருந்த இன்பத்தைச் சிறிதும் மறத்தல் அறியாதவளாய் நின்று நினைந்து கொண்டே இருக்கவும், அவரைப் பிரிந்து உள்ள பிரிவினால் உண்டாகும் துன்பமானது என் மனத்தைச் சுட்டுக்கொண்டு இருக்கின்றது. அவ்விதம் பிரிந்ததற்கு ஆற்றாத நான் நினைப்பதையும் விட்டு மறப்பேனாயின் இறக்காது உயிர் வாழ்வது எத்துணை கொண்டு" என்று தலைவி கூறினாளென்று இத்திருக்குறள் கூறுகின்றது அதாவது தோழியே! நீ தலைவரை நினைத்தலை மறத்தல் வேண்டும் என்கின்றாய். மறவாது நினைக்கின்ற இக்காலத்தேயே பிரிவின் துன்பமானது என்னைக் கொளுத்துகின்றது. அவ்விதம் கொளுத்தியும் அவரை மறவாது நினைத்தலாலேயே இறவாது இருக்கின்றேன். அந்நினைத்தலும் செய்யேனாயின் உயிர் வாழ்வதற்கு வேறு துணை இல்லை என்று தலைவி கூறினாளாயிற்று.

1208. எனைத்து நினைப்பினுங் காயா ரனைத்தன்றோ காதலர் செய்யுஞ் சிறப்பு.

இந்துன்பமறிந்துவந்து காதலர் நினக்கின்பஞ்
செய்வரென்றாட்குச் சொல்லியது.

(பரி.) இ-ள். எனைதது நினைப்பினும் காயார்=தம்மை யானெத்துணையும் மிக நினைந்தாலும் அதற்கு வெகுளார்;—காதலர் செய்யும் சிறப்பு அனைத்து அன்றோ=காதலர் எனக்குச செய்யுமின்பமாவது அவ்வளவன்றோ! எ-று.

வெகுளாமை அதற்குடன்பட்டு நெஞ்சின்கணிற்றல். தனக்கு அவ்வின்பத்திற் சிறந்ததின்மையின், அதனைச 'சிறப்பு' என்றாள். காதலர் நம்மாட்டருளென்றும், செய்யுங்குணமென்றும் பாடமோதுவாரு முளர். தோழி கூறியவதனைக் குறிப்பானிகழ்ந்து கூறியவாறு. (அ)

விளக்கம் :—"தம்மை யான் எவ்வளவு அதிகமாக நினைந்தாலும் அதற்கு அவர் கோபியார். ஆதலால் காதலர் எனக்குச் செய்யும் இன்பமானது அவ்வளவு அல்லவோ" என்று நீ படுகின்ற துன்பத்தினை அறிந்து வந்து காதலர் உனக்கு இன்பம் செய்வர் என்று கூறிய தோழிக்குத் தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைவியானவள் தோழியே! நீ கூறுவது பொருந்தும். என் தலைவரானவர் நான் எவ்வளவு அவரை அதிகமாக நினைந்தும் அதற்குச் சிறிதும்

வெகுளாது என் விருப்பத்திற்கு உடன்பட்டு என் நெஞ்சினிடத்தேயே நிற்கின்றாதலால் எனக்கு அவ்வின்பத்தில் சிறிதந்த இன்பம் வேண்டுவது இல்லையாகும். இனி அவர் வந்து எனக்கு இன்பஞ் செய்வர் என்பது அத்துணைப் பெரியதோர் சிறப்பு ஆகாது என்று தோழி கூறிய தொன்றைக் குறிப்பாக இகழ்ந்து பேசினாள் என்றதாயிற்று.

1209. விளியுமெ னின்னுயிர் வேறல்ல மென்பா ரளியின்மை யாற்ற நினைந்து.

தலைமகன் நாதுவரக் காணாது வருந்துகின்றாள் வற்புறுத்துத் தோழிக்குச் சொல்லியது.

(பரி.) இ - ள். வேறு அல்லம் என்பார் அளியின்மை ஆற்ற நினைத்து = முன்பெல்லாம் நாமிருவரும் வேறல்லமென்று சொல்லுவார தளியின்மையை மிகவுநினைந்து,—என் இன்னுயிர் விளியும் = எனதினியவுயிர் கழியாநின்றது.

அளியின்மை = பின்வருவாகலுமாய்ப் பிரிதலும், பிரிந்துவாராமையும் ஆண்டுநின்றுழித் தாதுவிடாமையும் முதலாயின. பிரிவாற்றல்வேண்டுமென வற்புறுத்தாட்கு என்னுயிர் கழிகின்றது பிரிவிற்கன்று அவன்பின்மைக் கென எதிரழித்து கூறியவாறு. (கூ)

விளக்கம்:—"முன்பு எல்லாம் நாம் இருவரும் வேறு அல்லம் என்று சொல்லுகின்றவரது அருள் இல்லாமையை மிகுதியும் நினைந்து எனது இன்னுயிரானது போகா நின்றது" என்று தலைமகனது தாது வரக் காணுமையால் வருந்துகின்ற தலைவியானவள் பிரிவிற்கு ஆற்றுதல் வேண்டும் என்று வலிந்து கூறிய தோழியை நோக்கிக் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தோழியே! நான் வருந்துவது அவருடைய பிரிவாற்றுமைக்கு அன்று. அவர் முன் னெல்லாம் இருவரல்லே ஒருவரேயாகும் என்ற புணர்ச்சி மகிழ்தலில் கூறி இப்போது சிறிதும் அன்பில்லாதவராய் வருவேன் என்று பிரிந்ததும், குறித்த பருவத்து வாராமையும், தாமிருக்கின்ற இடத்தி னின்றும் தாது விடாமையும் ஆகிய அன்பின்மைக்கே என்னுயிர் என் னுடலே விட்டுப் பிரிவதாக உள்ளதே யன்றி வேறு இல்லை என்று கூறிய தாயிற்று.

1210. விடாஅது சென்றூரைக் கண்ணினூற் காணப் படாஅதி வாழி மதி.

வன்புறையெதிரழிந்தாள் காமமிக்க கழிபடாற் சொல்லியது.

(பரி.) இ-ள். மதி=மதியே!—விடாது சென்றூரைக் கண்ணினூல் காணப்படாதி=என்னெஞ்சின் இடைவிடாதிருந்தே விட்டுப்போயினூரை யானென்கண்ணளவானூயினும் எதிர்ப்படும்வகை நீ படாதொழிவாயாக கண்ணளவா னெதிர்ப்படுதலாவது மதி இருவரானு நோக்கப்படுதலின் இருவர்கண்ணும் அதன்கண்ணே சேர்தல். மூதலொடு நிலைக்கொற்றுமை யுண்மையிற் சென்றூரைக் 'காண'என்றும், குறையுறுகின்றூளாகலின் 'வாழி' என்றுங் கூறினூள். இனிப் படாதென்பது பாடமாயின், கனவிடைக் கண்ணினூற்காணுமாறு மதிபடுகின்றதில்லையென அதனூற்றுயில்பெறுது வருந்துகின்றூள் கூற்றாக்குக. இப்பொருட்கு வாழியென்பது அசைநிலை. (ம)

விளக்கம்:—"மதியே! என் மனத்தில் இடைவிடாமலிருந்தே என்னைவிட்டுப் போயினவரை யான் என் கண்ணூலாயினும் பார்க்கும் வண்ணம் நீ மறைந்து போகாதிருத்தல் வேண்டும்" என்று பிரிவாற்றுதல் வேண்டுமென்று வற்புறுத்திக் கூறிய தோழியை எதிர் அழிந்து கூறிய தலைவியானவள் மிகுந்த காமத்தால் உண்டாகிய துன்பமிகுதியால் சந்திரனைப் பார்த்துக் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது ஓ! சந்திரனே! நானும் உன்னை நோக்குகின்றேன். என் தலைவரும் உன்னை நோக்குகின்றனர். ஆதலால் உன்னைப் பார்த்தல் அவரைப் பார்ப்பதுபோல ஆகும். ஆதலால் நீ எக்காலத்தும் மறையாது எனக்குத் தோன்றுதல் வேண்டும். இவ்விதம் செய்வாயாகில் உன்னையான் வாழ்த்துவேன். நீ நெடுங்காலம் அதனால் வாழ்வாய் என்று தலைவனைக் காண்பதற்கு விரும்பிய தலைவி கூறியதாயிற்று.

---

122. அதிகாரம்.

கனவுநிலையுரைத்தல்.

(பரி.) அஃதாவது தலைமகள் தான்கண்ட கனவினது நிலைமையைத் தோழிக்குச் சொல்லுதல். அக்கனவு கனவின்கணிணைவுமிகுதியாற் கண்டதாகலின் இது நினைந்தவர்புலம்பலின்பின் வைக்கப்பட்டது.

விளக்கம் :—அதாவது தலைமகளானவள் தான் கண்ட கனவி னுடைய நிலைமையினைத் தோழிக்குச் சொல்லுதல். அக்கனவானது நனவினிடத்தே நிகழ்வு மிகுதியால் உண்டாவது ஆதலின் இதனை நிகழ்ந்தவர் புலம்பல் என்னும் அதிகாரத்திற்குப் பிறகு வைக் கப்பட்டு உள்ளது.

1211. காதலர் தூதொடு வந்த கனவினுக்
கியாதுசெய் வேன்கொல் விருந்து.

தலைமகன் தூது வாக்கண்டாள் சொல்லியது.

(பரி.) இ-ள். காதலர் தூதொடு வந்த கனவினுக்கு=யான் வருந்துகின் றதறிந்து அது தீரக் காதலர் விடுத்த தூதினைக்கொண்டு என் மாட்டுவந்த கனவினுக்கு—விருந்து யாது செய்வேன்=யான் விருந்தாக யாதினைச்செய் வேன்! எ-று.

விருந்தென்றது விருந்திற்குசெய்யு முபகாரத்தினை. அது கனவிற் கொன்று காணுமையின், 'யாதுசெய்வேன்' என்றாள். (க)

விளக்கம்:—"யான் வருந்துவதை யறிந்து அவ்வருத்தம் நீங்கும் படி காதலர் அனுப்பிய தூதினைக் கொண்டு வந்த கனவினுக்கு யான் விருந்தாக எதனைச் செய்வேன்" என்று தலைமகனது தூதுவரைக் கண்ட வளாகிய தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைமகளானவள் கனா நிலையில் தூது வந்ததுபோல் கண்டாளாதலால் அவ்விதத் தூதிற்கு விருந்தாக வந்தவர்க்குச் செய்யும் உபகாரம் ஒன்றி னைச் செய்வதற்கு இல்லை என்று கூறியதாயிற்று.

1212. கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற்கலந்தார்க்
குயலுண்மை சாற்றுவேன் மன்.

தூதுவிடக்கருதியாள் சொல்லியது.

(பரி.) இ-ள். கயல் உண்கண் யான் இரப்பத் துஞ்சின்=துஞ்சாது வருந்துகின்ற என் கயல்போலு முண்கண்கள் யானிரந்தாற் றுஞ்சுமாயின்,— கலந்தார்க்கு உயல் உண்மை சாற்றுவேன்=கனவிடைக் காதலரைக் காண் பேன், கண்டால் அவர்க்கியானுற்றியுளேனுய தன்மையை யானே விரியச் சொல்வேன்; எ-று.

'கயலுண்கண்' என்றாள், கழிந்தகாலத்திற்கிரங்கி. உயல்=காமநோய்க் குத் தப்புதல். தூதர்க்குச்சொல்லாது யாமடக்குவனவும் சொல்லுவனவற்

நுள்ளுஞ் சுருக்குவனலற்றின் பரப்புந் தோன்றச்சொல்வேனென்னுங் கருத்தாற் 'சாற்றுவேன்' என்றுள். இனி, அவையுந்துஞ்சா சாற்றலுங்கூடா தென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. முன்னுங் கண்டாள் கூற்றுகலின், கனவுநிலே யுரைத்தலாயிற்று. (உ)

விளக்கம் :—"தூங்காமல் வருந்துகின்ற கயல்மீன்போலும் என்னுடைய மையுண்ட கண்கள் யான் அவற்றை யாசித்துக் கேட்குங் காலத்துத் தூங்குமாயின் கனவு உண்டாகும். அக்கனவினிடத்தே காதலரைப் பார்ப்பேன்; பார்ப்பேனுயின், அவருக்குப் பிரிவினால் உண்டாகும் துன்பத்தை யான் பொறுத்துக் கொண்டு உள்ள தன்மையெல்லாம் யானே விரிவாக எடுத்துக் கூறுவேன்" என்று தூதுவிடம் கருதிய தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைவியான வள் தூங்காது என்னே வருத்துகின்ற கண்கள் தூங்குமேயாயின் கனவு உண்டாகும். அக் கனவினிடத்தே வருகின்ற காதலர்க்கு நான் காம நோய்க்குத் தத்தளித்தலே ஒன்றும் விடாது அவற்றின் பரப்பை யெல்லாம் நன்றாகச் சொல்லுவேன். என் கண் தூங்குவதுமில்லே. நான் அவர்க்குச் சொல்லுவதற்கு மில்லே. தூது அனுப்புவேனுயின் சொல்லக் கூடாதனவற்றை அடக்கியும், சொல்லக் கூடியவற்றுள் சுருக்கியும் சொல்லவேண்டியுள்ளதால், கனவு நிலையிலாயினும் அவரைக் கண்டுச் சொல்வதற்குக் கூடாமையாக உள்ளது என்று கூறியதாயிற்று.

1213. நனவினு னல்கா தவரைக் கனவினுற் காண்டலி னுண்டென் னுயிர்.

ஆற்றுளைக் கவன்றுட்கு ஆற்றுவலேன்பதுபடச் சொல்லியது.

(பரி.) இ-ள். நனவினுன் நல்காதவரை=நனவின்கண் வந்து தலையளி செய்யாதாரை—கனவினுற் காண்டலின் என் உயிர் உண்டு=யான் கனவின் கட்கண்ட காட்சியானே என்னுயிருண்டாகா நின்றது; எ-று.

மூன்றனுருபுகள் ஏழன்பொருண்மைக்கண் வந்தன. அக்காட்சியானே யானுற்றியுளேனுகின்றேன் நீ கவலல் வேண்டா வென்பதாம். (ரு)

விளக்கம்:—"நனவினிடத்தே வந்து எனக்கு இன்பத்தைத் தாராதாரை நான் கனவினிடத்தே காண்கின்றமைபாலேயே என்னுயிரானது இன்னும் தங்கியுள்ளது" என்று இவள் பிரிவிற்கு ஆற்றாது வருந்துகின்றுளென்று கவலையுற்ற தோழியை நோக்கித் தலைவி கூறியதாக இத்

திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைவியானவள் தோழியே! நீ கவலல் வேண்டாம். நனவில் வாராவிடினும் என் தலைவர் கனவில் வருகின்றார். அக் கனவிடத்தே அவரை நான் காணும் காட்சி யளவினாலேயே நான் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். அவ்விதம் மல்லாவிடின் உயிர் வாழேன் என்று தன் கனவின் நிலையை உரைத்தாயிற்று.

1214. கனவினு னுண்டாகுங் காம நனவினு
னல்காரை நாடித் தரற்கு.

இதுவுமது.

(பரி.) இ-ள். நனவினுன் நல்காரை நாடித் தாற்கு = நனவின்கண்வந்து தலையளிசெய்யாதாரை அவர்சென்றழி நாடிக்கொண்டுவந்து கனவு தருதலான், — கனவினுற் காமம் உண்டாகும் = அக்கனவின்கணே எனக்கின்ப மூண்டாகாநின்றது; எ-று.

காமம் ஆகுபெயர். நான்காவது மூன்றன்பொருண்மைக்கண் வந்தது. இயல்பான் நல்காதவரை அவர்சென்ற தேயமறிந்துசென்று கொண்டு வந்துதந்து நல்குவித்த கனவால் யாஞற்றுவ லென்பதாம். (சு)

விளக்கம்:—"நனவில் வந்து எனக்கு இன்பத்தைச் செய்யாதாரை அவர் சென்ற விடத்துத் தேடிக் கொண்டுவந்து கனவு கொடுத்தலால் அக்கனவினிடத்தே எனக்கு இன்பம் உண்டாகின்றது" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைவியானவள் தோழியை நோக்கித் தோழியே! யான் ஆற்றுது வருந்துகின்றேன் என்று எண்ணுகின்றனள். என் காதலர் என்னிடத்தில் நனவில் வாராவிடினும் கனவில் வருகின்றாராதலால் எனக்கு இன்பம் உண்டாகின்றது. அதனால் நான் பொறுத்துக் கொள்வேன் என்று கூறியதாயிற்று.

1215. நனவினுற் கண்டதூஉ மாங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே யினிது.

இதுவுமது.

(பரி.) இ-ள். நனவினுற் கண்டதூஉம் (இனிது) ஆங்கே = முன்னனவின்கண் அவரைக்கண்டு நுகர்ந்தவின்பந்தானுமினிதாயிற்று அப்பொழுதே; — கனவுந்தான் கண்டபொழுதே இனிது = இன்று கனவின்கட்கண்டு நுகர்ந்த வின்பமும் அக்கண்டபொழுதே யினிதாயிற்று; அதனால் எனக் கிரண்டு மொத்தன; எ-று.

இனிதென்பது முன்னுங்கூட்டப்பட்டது. கனவு ஆகுபெயர். முன்னும் யான்பெற்ற திவ்வளவே, இன்னும் அதுகொண்டாற்றுவ லென்பதாம். (இ)

விளக்கம்:—"முன் நனவில் அவரைக் கண்டு அடைந்த இன்ப மும் அப்பொழுது இனிமை யுடையதாகவே இருந்தது. இன்று அவ ரைக் கனவில் கண்டு அடைந்த இன்பமும் முதலாகக் கண்ட இன்பத் தைப் போல் இனிமையுடையதாக உள்ளது. ஆதலால் எனக்கு நனவி டத்தேயும் கனவிடத்தேயும் அடைந்த இன்பங்கள் ஒரு தகுதியுடைய னவாகவே உள்ளன" என்று தலைவி கூறினளென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைவியானவள் தோழியை நோக்கித் தோழியே! யான் என் காதலரால் நனவினிடத்தே அடைந்த இன்பமும் அவர் பிரி வின்கண் கனவிலடைகின்ற இன்பமும் இரண்டும் ஒத்த தகுதியுடையன வாகவே உள்ளனவாதலால் இக் கனவினைக் கொண்டு பொறுத்து இருப பேன் என்பதாயிற்று.

1216. நனவென வொன்றில்லை யாயிற் கனவினுற்
காதலர் நீங்கலர் மன்.

இதுவுமது.

(பரி.) இ-ள். நனவென ஒன்று இல்லையாயின் = நனவென்று சொல்லப் படுகின்ற ஒருபாவியில்லையாயின், —கனவினுற் காதலர் நீங்கலர் = கனவின் கண் வந்துகூடிய காதலர் என்னைப் பிரியார்; எ-று.

ஒன்றென்பது அதன்கொடுமைவிளக்கி நின்றது. அஃது இடையே புகுந்து கனவைப்போக்கி அவரைப் பிரிவித்த தென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. கனவிற்பெற்றாற்றுகின்றமை கூறியவாறு. (சு)

விளக்கம்:—" நனவு என்று சொல்லப்படுகின்ற ஒரு பாவியான வன் இல்லையாயின் கனவினிடத்தே வந்து கூடுகின்ற என் காதலர் என் னைவிட்டுப் பிரியார்" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின் றது. அதாவது தோழியே! கனவில் என்னைவந்து கூடுகின்ற என் காத லரைப் பிரியும்படிச்செய்யும் நனவு என்னும் ஒரு பாவியானவன் இடை யேவாராவிடில் அக்கனவில் காணும் இன்பத்தால் யான்மிகுதியும் மகிழ்ச் சியுற்றிருப்பேன், நனவென்பது ஒன்று தடுக்கினும் கனவில் காண் கின்ற அவ்வளவு பொழுது அனுபவிக்கின்ற இன்பத்தால் பிரிவிற்கு ஆற்றி நிற்கின்றேன் என்று கூறியதாயிற்று.

1217. நனவினு னல்காக் கொடியார் கனவினு
னென்னெம்மைப் பீழிப் பது.

விழித்துழிக் காணாளாயினுள் கனவிற்கூட்டநினைந்து
ஆற்றாளாய்ச் சொல்லியது.

(பரி.) இ-ள். நனவினுன் நல்காக் கொடியார்=ஒருஞான்றும் நனவின் கண் வந்து தலையளிசெய்யாத கொடியவர், கனவினுன் எம்மைப் பீழிப்பது என்=நாடோறுங் கனவின்கண்வந்து நம்மை வருத்துவது எவ்வியைபுபற்றி!

பிரிதலும் தன்னினைந்துவாராமையுநோக்கிக் 'கொடியார்' என்றும், கனவிற்றேண்மேலராய் விழித்துழிக் காத்தலின் அதனுனுந் துன்பமாக நின்ற தென்பாள் 'பீழிப்பது' என்றுங் கூறினுள். நனவினில்லது கனவினுமில்லை யென்பர், அது கண்டில மென்பதாம். (எ)

விளக்கம்:—"ஓர் நாளும் நனவினிடத்தே வந்து எனக்கு இன்பத்தைத் தாராத கொடியவர் தினந்தோறும் கனவினிடத்தே வந்து நம்மை வருத்திக்கொண்டிருப்பது எவ்வித உரிமை கருதியோ?" என்ற தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தோழியே! என்னைப் பிரிந்து சென்றும் குறித்தகாலத்து வாராது நின்ற கொடியவர் கனவினிடத்தே தோள்மேலராயிருந்து விழித்துப் பார்க்குமிடத்து ஒளித்து எனக்குத் துன்பத்தைத் தருவது எது கருதியோ அறிகிலேன். நனவில் வாராதது கனவில் வருவதில்லை என்னும் உலக வழக்கையும் கடந்து நனவில் வாராத தலைவர் கனவில் நாள்தோறும் வருகின்றனர். இது யாதோ அறிகிலேன் என்று தன் கனவின் நிலையை உரைத்தாளாயிற்று.

1218. துஞ்சுங்காற் றேண்மேல ராகி விழிக்குங்கா
னெஞ்சத்த ராவர் விரைந்து.

தானற்றுதற்பொருட்டுத் தலைமகளையியற்பழித்தாட்கு
இயற்பட மொழிந்தது.

(பரி.) இ-ள். துஞ்சுங்கால் தோண்மேலராகி=என்னெஞ்சுவிடாது றைகின்ற காதலர் யான்றுஞ்சும்பொழுது வந்து என்றேண்மேலராய்,—விழிக்குங்கால் விரைந்து நெஞ்சத்தராவர்=பின் விழிக்கும்பொழுது விரைந்து பழைய நெஞ்சின்கண்ணராவர்; எ-று.

கலவிவிட்டுமறையுங் கடுமைபற்றி 'விரைந்து' என்றுள். ஒருகாலும் என்னினீங்கி யறியாதாரை நீ நோவற்பாலையல்லை யென்பதாம். (அ)

விளக்கம்:—"என் மனத்தினிடத்தே நீங்காது வசிக்கின்ற காதலர் யான் தூங்கும்பொழுது வந்து தோள்மேலிருந்தும் பின் விழிக்குங் காலத்து விரைந்து சென்று பழமைபோல் நெஞ்சினிடத்தேயே ஒளித்துக் கொள்ளுகின்றனர்" என்று தோழியானவள் தலைமகள் பிரிவிற்கு ஆற்றுதற் பொருட்டுத் தலைமகனது குணங்களைப் பழித்த விடத்தே தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தோழியே! என் காதலரை ஏன் பழிக்கின்றாய். அவர் என்னைவிட்டு ஓர்காலும் நீங்கி அறியார். அவர் என் நெஞ்சிடத்தேயே எப்போதும் இருப்பவராய் இருந்தும் கனவில் மாத்திரம் என் தோள்மீதிருந்து கலவியை நடத்துகின்றனர். இவ்விதம் நனவிலும் கனவிலும் விட்டுப் பிரியாத அவரை நீ நொந்து கொள்ளுதல் வேண்டுவதில்லை என்று கூறியதாயிற்று.

1219. நனவினு னல்காரை நோவா் கனவினுற் காதலர்க் காணு தவர்.

இதுவுமது.

(பரி.) இ-ள். கனவினுற் காதலர்க் காணுதவர்=தமக்கொருகாதலரின்மையின் அவரைக் கனவிற்கண்டறியாத மகளிர்—நனவினுன் னல்காரை நோவர்=தாமறிய நனவின்கண் வந்து நல்காத நங்காதலரை அன்பிலரென நோவா நிற்பர்; எ-று.

இயற்பழித்ததுபொறுத புலக்கின்றாளாகலின், அயன்மைதோன்றக் கூறினாள். தமக்குங் காதலருளராய் அவரைக் கனவிற் கண்டறிவாராயின் நங்காதலர் கனவின்கணுற்றி நல்குதலறிந்து நோவாரென்பதாம். (கூ)

விளக்கம்:—"தமக்கு ஒரு காதலர் இல்லாமையால் அக்காதலரைக் கனவில் கண்டறியாத பெண்கள் தாம் பார்க்கும்படி நனவினிடத்தே வந்து எனக்கு இன்பத்தைத் தாராத என் காதலரை அன்பில்லாதவரென்று நொந்துகொள்ளுவர்" என்று தோழியானவள் தலைவரைப் பழித்த காலத்து அப்பழித்தலைப் பொறுதவளாகிய தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைவியானவள் கோபங் கொண்டு தமக்கும் ஓர் காதலரிருந்து பிரிந்தகாலத்து அவரைக் கனவில் காண்பது வழக்கமாக இருப்பின் என் காதலர் பிரிந்து நனவில் வாரா விடினும் கனவில் வருவதை அறிந்து நான் பிரிவிற்கு ஆற்றி நிற்கின்றேன் என்பதை அறிவர். அப்பெண்கள் காதலரைப் பெற்றில்லாமை

யால் என் காதலரைப் பழிக்கின்றனர் என்று தன் தலைவனுக்குப் புக முண்டாகக் கூறியதாயிற்று.

1220. நனவினு னந்நீத்தா ரென்பர் கனவினுற்
காணர்கொ லிவ்வூ ரவர்.

இதுவுமது.

(பரி.) இ-ள். இவ்வூரவர் நனவினுள் நங்நீத்தார் என்பர்=இவ்வூரின் மகளிர் நனவின்கண் நம்மை நீத்தாரென்று நங்காதலரைக் கொடுமைகூறு நிற்பர்,—கனவினுற் காணர்கொல்=அவர் கனவின்கண் நீங்காதுவருதல் கண்டறியாரோ! எ-று.

என்னெஞ்சு தன்னிடை வேற்றுமையின்றியின் யான்கண்டது தானுங் கண்டமையும், அதுகாணாது அவரைக் கொடுமைகூறுகின்றமையின் அயலாளே யாமென்னுங் கருத்தால், 'இவ்வூரவர்' என்றாள். (ம)

விளக்கம்:—"இவ்வூரினிடத்தே உள்ள பெண்கள் நனவினிடத்தே நம்மை விட்டுப் பிரிந்தாரென்று நம்முடைய காதலரைக் கொடுமை கூறுகின்றனர். அவ்விதம் கொடுமை கூறுபவர் அவர் நம் கனவினி டத்தே நீங்காது வருதலைப் பார்த்து அறியாரோ" என்று தலைவி கூறிய தாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தானென்றும் அவ ளென்றும் வேற்றுமை காணாது நன்னெஞ்சு பழகிய தோழியாக இருந் தும் தான் நனவில் காணவிடினும் கனவில் கண்டு இன்பமடைந்து நிற் கும் நிலையை அறியாது தன் காதலரைப் பழிக்கின்றனளாதலால் அவள் அயலாளே யாகும் என்று கோபித்துக் கூறிய தலைவி இவ்வூரவர் என்று தோழியைப் பிரித்துக் கூறியதுடன் தன் கனவின் நிலையையும் கூறி முடித்தாளாயிற்று.

---

123. அதிகாரம்.

பொழுதுகண்டிரங்கல்.

(பரி.) அஃதாவது மாலைப்பொழுது வந்தழி அதனைக்கண்டு தலைமகளி ரங்குதல். களமுங்துறுத வினையில்லை யென்பதுபற்றிப பகற்பொழுதாற்றி யிருந்தாட்கு உரியதாகலின், இது கனவுநிலை யுரைத்தலின்பின் வைக்கப் பட்டது.

விளக்கம் :—அதாவது மாலைப் பொழுது வந்த காலத்து அம் மாலைப் பொழுதைக் கண்டு தலைமகள் வருந்துதல். கனவு நிலையடை யாததற்கு முன் யாதொரு தொழிலும் நேராது என்பது பற்றி பகற் பொழுதெல்லாம் பிரிவினை ஆற்றியிருந்தாளுக்கு இம் மாலைப்பொழுது உரியதாகலின் இதனைக் கனவுநிலையுரைத்தல் என்னும் அதிகாரத்துக் குப் பிறகு வைக்கப்பட்டுள்ளது.

1221. மாலையோ வல்லை மணந்தா ருயிருண்ணும் வேலை நீ வாழி பொழுது.

பொழுதோடு புலந்து சொல்லியது.

(பரி.) இ-ள். பொழுது=பொழுதே;—நீ மாலையோ அல்லை=நீ முன் னுள்களின் வந்த மாலையோவெனின், அல்லை;— மணந்தார் உயிர் உண்ணும் வேலை=இருந்தவாற்றான் அந்நாட்காதலரைமணந்து மகளிருயிரையுண்ணும் இறுதிக்காலமாயிருந்தாய்; எ-று.

முன்னுள்=கூடியிருந்த நாள். அந்நாண்மணந்தாரெனவே, பின்பிரிந் தாராதல் பெறுதும். வாழியென்பது குறிப்புச்சொல். "வாலிழை மகளி ருயிர்ப்பொதி யவிழ்க்குங் காலை" என்றாற்போல ஈண்டுப் பொதுமையாற் கூறப்பட்டது. வேலையென்பது ஆகுபெயர். வேலையென்பதற்கு வேலா யிருந்தாயென்பாரு முளர். (க)

விளக்கம் :—"பொழுதே! நீ முன் நாள்களில் வந்த மாலைப் பொழுது தானே என்று எண்ணின் அது அல்லை. ஆயின் இப்போது இருந்த விதத்தை நோக்கின் அந் நாள் காதலரை மணந்து கொண்ட பெண்களது உயிரை உண்ணுகின்ற கடைநாளாக இருந்தாய்" என்று மாலைப் பொழுதோடு கோபித்துத் தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைமகளானவள் அப் பொழுதை நோக்கி ஓ! மாலையே! முன் தலைவரோடு கூடியிருந்த நாள்களில் வந்த மாலைக் காலமாக நீ காணப்படவில்லை ஆயின் தலைவரைப் பிரிந்த பெண்களது உயிரைக் கொள்ளை கொள்ளுகின்ற இறுதிக் காலத்தைச் செய்யும் எமன் போல் இருக்கின்றாய் என்று மாலைப் பொழுதில் உண்டாகும் காமத்தின்பத்தைக் கூறியதாயிற்று.

1222. புன்கண்ணே வாழி மருண்மாலை யெங்கேள்போல்
வன்கண்ணை தோநின் றுணை.

தன்னுட்கையாற்றை அதன்மேலிட்டுச் சொல்லியது.

(பரி.) இ-ள். மருண்மாலை=மயங்கியமாலாய்,—புன்கண்ணே=நீயுமெம் போலப் புன்கணுடையையாயிருந்தாய்,—நின்றுணை எங்கேள்போல் வன் கண்ணைதோ=நின்றுணையும் எந்துணைபோல வன்கண்மையுடையதோ, கூறுவாயாக; எ-று.

மயங்குதல்=பகலுமிரவும் தமமுள்ளே மிரவுதல்; கலங்குதலுக்தோன்ற நின்றது. புன்கண்=ஒளியிழத்தல்; அதுபற்றித் துணையுமுண்டாக்கிக் கூறினள். எச்சவும்மை விகாரத்தாற்செய்க்கது. எமகருத் துன்பஞ்செய்தாய், நீயு மின்பமுற்மிலையென்னுங் குறிப்பால் 'வாழி' என்றுள். (உ)

விளக்கம்:—" மயங்கிய மாலைக் காலமே! நீயும் என் போல் ஒளி யிழந்து நிற்கின்றாய். உன் துணைவனும் என் துணைவன் போல் வன் கண்மையே சொல்லுவாயாக!" என்ற காமத துன்பத்தால் வருந்தும் தலைவியானவள் தன் மனப் பாங்கிணை மாலையின் மீது வைத்துக் கூறிய தாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது ஓ! மாலையே! நீயும் பகலும் இரவும் இரண்டும் ஒன்றுகக் கலக்கின்ற கலக்கத்தையுடையை. அன்றியும் ஒளியிழந்து நிற்கின்றனை. யானும் கலங்கி நிற்கின்றேன். ஒளியிழந்தும் உள்ளேன். என் தலைவன் போல் உன் துணைவனும் ஓர் கால் அஞ்சா நெஞ்சினனைப் இருத்தல் வேண்டும். ஆயினும் ஒருவர்க் குத் துன்பஞ்செய்தால் தாமும் துன்பம் அடைவது உலக வழக்காக உள்ளது என்பது போதர முன்னர் எனக்குத் துன்பஞ்செய்த மாலைப் பொழுதாகிய நீயும் இன்பத்தை அடையவில்லை. இவ்விதம் மயங்கி ஒளியிழந்த நீ வாழ்ந்துகொண்டிருப்பாய் என்று மாலைப்பொழுதில் உண்டாகும் துன்பத்தைக் கூறினளாயிற்று.

1223. பனியரும்பிப் பைதல்கொண் மாலை துனியரும்
துன்பம் வளர வரும். [பித்

ஆற்றல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

(பரி.) இ-ன். பனி அரும்பிப் பைதல்கொள் மாலை=காதலர்கூடிய நா ளெல்லாம் என்முன் நடுக்கமெய்திப் பசந்துவக்க மாலை, —துனி அரும்பித் துன்பம் வளர வரும்=இக்காள் எனகிறந்துபாடு வந்துதோன்றி அதற்குன தாக் துன்பம் ஒருகாலைக்கொருகால் மிக வாராநின்றது; எ-று.

குளிர்ச்சிதோன்ற மயங்கிவருமாலையென்னுஞ் செம்பொருள் இக்குறிப் புணர நின்றது. துனி = உயிர்வாழ்தற்கண் வெறுப்பு. அதனால் யானுற்றுமா றென்னே யென்பது குறிப்பெச்சம். (கூ)

விளக்கம்:—"என் காதலர் கூடியிருந்த நாள்களிலெல்லாம் என் முன் தோற்றுவதற்கு நடுக்கமடைந்து நிறவேறுபட்டு நின்ற மாலையா னது, காதலரைப் பிரிந்து உள்ள இந்நாளைகளில் நான் இறந்துபடுவ தற்கு உரிய தன்மையோடு வந்து காணப்பட்டு அவ்விறத்தலுக்கு உரி யதாம் துன்பம் ஒரு காலத்திற்கு ஒருகாலம் மிகும்படி வருகின்றது" என்று பிரிவினைப்பொறுத்திருத்தல் வேண்டும் என்றதோழியை நோக்கி, தலைவி கூறியதாக இக்கிருக்குறள் கூறகின்றது. அதாவது தோழியே! இம்மாலைக் காலமானது காதலர் என்னோடு கூடியிருந்த காலத்து வந்த மாலைக்கால மலை, நான் இறப்பதற்கு உரிய காலத்துத் தோன்றும் துன்பமானது மேலும் மேலும் வளர்வதுபோல் இப்போது வரு வதாக உள்ளது. ஆதலால அக்காலத்துக் குளிர்ச்சி தோன்றவந்த மாலையானது இக்காலத்து அழல்போல் காணப்படுவதால் எவ்விதம் யான் ஆறறியிருந்து உயிர் வாழ்வேன் என்று குறிப்பாகக் கூறியதா யிற்று.

1224. காதல ரில்வழி மாலை கொலைக்களத் தேதிலர் போல வரும்.

இதுவுமது.

(பரி.) இ-ள். மாலை = காதலருள்ளபொழுதெல்லாம் என்னுயிர்தளிர்ப்ப வந்தமாலை,—காதலர் இல்வழி = அவரில்லாத இப்பொழுது—கொலைக் களத்து எதிலர்போல வரும் = அஞ்தொழிந்துந்றலேயன்றிக கொல்லுங் களரியிற் கொலைஞர் வருமாறுபோல அவ்வுயிரைக்கோடற்கு வாராநின்றது.

எதிலர் = அருள்யாதுமில்லார். முன்னெல்லாம் எனக்கு நட்பாய் இன் பஞ்செய்து வந்தபொழுதும் இன்று என்மேற் பகையாய்த் துன்பஞ்செய்து வாராநின்றது. இனி யானுற்றுமாறென்னே யென்பதாம். (ச)

விளக்கம்:—"காதலர் என்னோடு கூடியிருந்த காலமெல்லாம் என் னுயிர் தளிர்த்து நிற்கும்படி வந்து கொண்டிருந்த மாலைப்பொழுதா னது அக்காதலர் என்னைவிட்டுப் பிரிந்து நிற்கின்ற இக்காலத்து அத்தளிர்த்தற்கு உரிய குளிர்ச்சி ஒழிந்ததோடு கொலைக்களத்து உள்ள கொல்லும் தொழிலைச செய்யும் கொலைஞர் நெருங்கி வருவதுபோல்

தளிர்க்கச் செய்திருந்த உயிரை கொண்டுபோவதற்கு வருகின்றது" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தோழியே! காதலர் என்னோடு இருந்த காலமெல்லாம் எனக்கு நட்பாக இருந்து இன்பத்தைச் செய்துவந்த மாலைப்பொழுதும் அவர் பிரிந்து உள்ள இக்காலத்து என்மீது பகைகொண்டு துன்பத்தைச் செய்துவருகின்றது. அவ்விதம் இருக்குமாயின் இனி யான் பொருந்தி இருப்பது எவ்விதம் என்று கூறினளாயிற்று.

1225. காலைக்குச் செய்தநன் றென்கொ லெவன்கொல் மாலைக்குச் செய்த பகை. [யான்

இதுவுமது.

(பி.) இ-ள். காலையும், மாலையும் அவர் கூடியஞான்றுபோலாது இஞ்ஞான்று வேறுபட்டு வாராநின்றன: அவற்றுள்.—யான் காலைக்குச் செய்த நன்று என்=யான் காலைக்குச் செய்தவுபகாரம் யாது?— மாலைக்குச் செய்த பகை எவன்=மாலைக்குச்செய்த அபகாரம் யாது? எ-று.

கூடியஞான்று பிரிவரென்றஞ்சப்பண்ணிய காலை அஃதொழிந்து இஞ்ஞான்று கங்குல்வெள்ளத்திற்குக் கரையாய் வாராநின்றதென்னுங் கருத்தால் 'நன்றென்கொல்' என்றும், கூடியஞான்று இன்பஞ்செய்துவந்த மாலை அஃதொழிந்து இஞ்ஞான்று அளவிறுன்பஞ்செய்யாநின்றதென்னுங் கருத்தால் 'பகையெவன்கொல்' என்றுங் கூறினள். பகை ஆகுபெயர். தன்னோடொத்த காலைபோலாது மாலை தன்கொடுமையாற்றுன்பஞ் செய்யாநின்றதென்பதாம். (இ)

விளக்கம்:—"காலைப்பொழுதும் மாலைப்பொழுதும் என் தலைவர் என்னோடு கூடியிருந்த நாள்களில் இருந்தனபோல் அல்லாமல் அவர் பிரிந்து உள்ள இந்நாளில் வேறுபட்ட தன்மை உடையனவாய் வருகின்றன. அக்காலையும் மாலையுமாகிய இரண்டனுள் யான் காலைப்பொழுதிற்குச் செய்த உபகாரம் எது? மாலைப் பொழுதிற்குச் செய்த அபகாரம் யாது?" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தோழியே! காதலர் என்னோடு கூடியிருந்த நாள்களில்பொழுது விடியின் நம்மை நம் தலைவர் பிரிந்துபோவரே என்று பயப்படச் செய்த காலைப்பொழுதானது காதலர் பிரிந்து உள்ள இக்காலத்து அவ்விதம் அஞ்சச் செய்தலை ஒழித்து கழியாத இராக்காலமாகிய சமுத்திரத்திற்கு ஒரு கரைபோல் வந்து நான் இரவெல்லாம் அடைந்த துன்

பத்தை நீக்கியும், கூடியிருந்த காலத்து எனக்கு இன்பத்தைச் செய்து வந்த மாலைப்பொழுதானது எனக்கு இன்பஞ்செய்தலை யொழிந்து இக் காலத்து அளவில்லாத துன்பத்தைச் செய்தும் வருகின்றன. ஆதலால் பகைபோன்றிருந்த காலை நட்புப்போன்று எனக்கு நன்மை செய்வதால், அக்காலைப பொழுதிற்கு நான் செய்த உபகாரம் எது? நட்புப் போலிருந்து எனக்கு நன்மை செய்து வந்த மாலை இக் காலத்துக் கொடுமை செய்து வருவதால் இம்மாலைக்குச செய்த அபகாரம் எது? இவ்விதம் கொடுமை செய்யும் மாலைக்காலத்து நான் ஆற்றியிருப்பது எவ்விதம் என்பதாம்.

1226. மாலைநோய் செய்தன் மணந்தார கலாத்
காலை யறிந்த திலேன்.

இனறு இனனையாகின்று நீ அன்று அவர்பிரிவிற்குடம்பட்ட
தென்னையென்றுட்குச் சொலியது.

(பரி.) இ-ள். மாலை நோய் செய்தல்=முன்னெல்லாம எனகது நட்பாய் இன்பஞ்செய்துபோந்த மாலை இன்று பகையாய்த் துன்பஞ்செய்தலை—மணந்தார் அகலாத காலை அறிந்தது இலேன்=காதலர் பிரிதற்கு முன்னே அறியப் பெற்றிலேன்! எ-று.

இங்ஙனம வேறுபடுதலறிந்திலேன், அறிந்தேனையின் அவர்பிரிவிற்குடம் படேனென்பதாம். (சு)

விளக்கம்:—"காதலர் கூடியிருந்த காலமெல்லாம் எனக்கு நட்புப் போலிருந்து இன்பத்தைச செய்து வந்த மாலைக்காலமானது, காதலர் பிரிந்துள்ள இன்று பகையாய்த் துன்பஞ் செய்தலை என் காதலர் என்னைவிட்டுப் பிரிவதற்கு முன்னர் அறிந்திலேன்" என்று தோழியான வள் தலைவியை நோக்கி, தலைவியே! காதலர் பிரிவினால் இவ்விதம் துன்பப்படுகின்ற நீ அன்று அவர் பிரிவினை உணர்த்திய காலத்து ஏன் அதற்குச் சம்மதித்தனை என்னலும், தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைவியானவள் தோழியே! காதலர் இருந்தகாலத்து இன்பத்தைத் தந்த இம்மாலைக் காலம் அவர் இல்லாத காலத்துத் துன்பத்தைத் தரும் என்னும் வேறுபாட்டினை அறியாதிருந்தேன். அவ்விதம் அறிந்திருப்பேனையின் அவர் பிரிந்து போதற்குச சம்மதித்திரேன் என்று கூறியதாயிற்று.

1227. காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்.

மாலைப்பொழுதின்கண் இனையையாதற்குக் காரண
மென்னையென்றுட்குச் சொல்லியது.

(பரி.) இ - ள். இந்நோய்=இக்காமநோயாகிய பூ—காலை அரும்பி= காலைப்பொழுதின்கணரும்பி,—பகல் எல்லாம் போது ஆகி=பகற்பொழு தெல்லாம் பேரரும்பாய் முதிர்ந்து,—மாலை மலரும்=மாலைப்பொழுதின்கண் மலரா நிற்கும்; எ - று.

துயிலெழுந்த பொழுதாகலிற் கனவின்கட்கூட்ட நிணைந்தாற்றுதல் பற்றிக் 'காலையரும்பி' என்றும், பின் பொழுது செலச்செல அதுமறந்து பிரிவுள்ளியாற்றுளாதல்பற்றிப் 'பகலெல்லாம் போதாகி' என்றும், தத்தந் தலைவையுள்ளிவந்துசேரும் விலங்குகளேயும் மக்களேயுங் கண்டு தான் அக் காலத்தினுகர்ந்த வின்பநினைந்தாற்றுமைமிகுதிபற்றி 'மாலைமலரும்' என்றுங் கூறினுள். பூப்போல இந்நோய் காலவயத்தாகாநின்றதென்பது உருவகத் தாற் பெறப்பட்டது. ஏகதேசவுருவகம். (எ)

விளக்கம் :—" காலைப் பொழுதிடத்தே அரும்புபோல் தோன்றி பகற்போதெல்லாம் பேரரும்பாய் முதிர்ந்து மாலைப்பொழுதினிடத்தே மலராகி இக்காம நோயாகிய பூ மலர்கின்றது" என்ற மாலைப் பொழு திடத்தே நீ இவ்வித தன்மை அடைவதற்குக் காரணம் எது? என்ற தோழியை நோக்கித் தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைவியானவள் தோழியே! இக்காம நோயா கிய பூவானது, காலைப் பொழுதிடத்தே அரும்பாகத் தோன்றியும், பின்பு பகற்பொழுதெல்லாம் அவ்வரும்பு பெரிய அரும்பாக முதிர்ச்சி கொண்டும், மாலைப்பொழுதிடத்தே மலர்வதாயும் இருக்கின் றது. எவ்விதம் எனின் யான் இரவினில் கனவினிடத்தே தலைவன் வந்து கூடுவதை நினைந்தகாலத்து அந்நினைவின் மிகுதியால் சிறிது ஆறு தலடைந்து அக்காமத்துன்பம் சிறிதாக உள்ளது. பின்பு பொழுது செல்லச்செல்ல அக்கனவினிடத்தே கூடிய கூட்டத்தை மறந்து காதலர் பிரிந்து இருப்பதை நினைந்து ஆற்றுமை கொண்டு நிற்பதால் அக்காமத் துன்பமானது மலர்வதற்கு உரிய பக்குவங் கொண்ட அரும்புபோல் என்னைத் துன்புறுத்துகின்றது. பிறகு மாலைப் பொழுதிடத்தே தம்

தம் துணையாயுள்ள பெண்களே நினைத்துக்கொண்டு இடத்தில் சேரு கின்ற மிருகங்களையும் மக்களையும் பார்ப்பதால் அத்தலை நாளில் புணர்ந்த புணர்ச்சியால் உண்டாகிய இன்பத்தை நினைந்து ஆற்றுமை மிகுதியாகின்றது. மலரும் மலர் எவ்விதம் தன் தன்மையை யாவ ரும் அறியச் செய்கின்றதோ அதுபோல் இக்நோய் என்னை இவ்வித மாக இருக்கச் செய்கின்றது என்று கூறியதாயிற்று.

1228. அழல்போலு மாலைக்குத் தூதாகி யாயன் குழல்போலுங் கொல்லும் படை.

இதுவுமது.

(பரி.) இ - ள். ஆயன் குழல்=முன்னெல்லாம் இனியதாய்ப்போந்த ஆயன் குழல்—அழல்போலும் மாலைக்குத் தூதாகி=இதுபொழுது அழல் போலச் சுடுவதாய மாலைக்குத் தூதுமாய்,—கொல்லும் படை=அது வந் தென்னைக் கொல்வுழிக் கொல்லும் படையுமாயிற்று ; எ - று.

பின்னின்ற போலுமென்பது உரையசை. முன்னரே வாவுணர்த்த விற்றாதாயிற்று. கோறற்கருமியாகலிற் படையாயிற்று. தானே சுடவல்ல மாலை இத்துணையும் பெற்றால் என்செய்யாதென்பதாம் (அ)

விளக்கம்:—"காலைவன் பிரிவதற்கு முன்னெல்லாம் இனிமையாய்த் தோன்றிய இடையாமது குழலோசையானது பிரிந்து உள்ள இக்கா லத்தைத் தீப்போல் சுடுவதாகிய மாலைப் பொழுதிற்குத் தூதுமாகி, அம்மா லைப் பொழுதான அது வந்து என்னைக் கொல்லுங் காலத்து கொல்லும் படையாகவும் உள்ளது" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறு கின்றது அதாவது தோழியே! நாயகனோடு இருந்த காலத்து மாலைக் காலத்து ஊதும் இடையாமது குழலோசையானது எனக்கு மிகுதியும் இன்பத்தைத் தந்து கொண்டிருந்தது. அக் குழலோசையே இக்கா லத்து என்னைத் தீப்போல் சுடுகின்ற மாலைப் பொழுதானது வருகின்றது வருகின்றது என்று தூது சொல்வது போல் இருப்பதுடன், மாலைப் பொழுது வந்த பிறகு காமத் துன்பத்தினை அதிகரிக்கச் செய்து என்னைக் கொல்வதற்கு உரிய ஆயுதமுமாயிற்று. இவ்விதம் முன்னர் இனிமையாகக் காணப்பட்ட குழலோசையே எனக்கு இப்போது தீமையாக வருவதால் இவ்வித தீமை தரத்தக்க தூணையையும் பெற்ற மாலையானது என்ன யாது செய்யாது என்று கூறியதாயிற்று.

1229. பதிமருண்டு பைத லுழக்கு மதிமருண்டு மாலை படர்தரும் போழ்து.

இதுவுமது.

(பரி.) இ - ள். இதற்கு முன்னெல்லாம் யானேமயங்கி நோயுழந் தேன்,—மதி மருண்டு மாலை படர்தரும் போழ்து=இனிக் கண்டாரும் மதிமருளும்வகை மாலை வரும்பொழுது,—பதி மருண்டு பைதல் உழக்கும்= இப்பதியெல்லாம் மயங்கி நோயுழக்கும். எ - று.

மதிமருளவென்பது மதிமருண்டெனத் திரிந்துநின்றது. கூற்றமாகக் கருதிக் கூறினாராகலின் 'மாலைபடர்தரும் போழ்து' என்றார். யானிறந்து படுவலென்பதாம். மாலை மயங்கிவரும் போழ்து என் பதி நிலை கலங்கி நோ யுழக்குமென் றுரைப்பாரு முளர். (கு)

விளக்கம்:—"இதற்கு முன்னெல்லாம் யானே மயங்கி நோயால் வருந்தினேன்; இனி, கண்டவரும் அறிவு மயங்கும் விதமாக மாலைவரும் காலத்து இப்பதியில் உள்ளா ரெல்லாம் மயங்கி நோயுழப்பர்" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, "தோழியே! இம்மாலைப் பொழுதானது இதுவரையில் யான் மாத்திரம் அறிவுகலங்கி நோயால் வருந்துவதாக இருந்தது. இனி என்னைப் பார்ப்பவரும் அறிவுகலங்கும்படி இம்மாலைக் காலமானது வரும் காலத்து அது உயிரைக்கொள்ளைகொள்ளும் எமனுக்குத் தோன்றுமாத லால் அதற்கு ஆற்றுதவளாய் யான் இறந்துபடுவேன். அதனைக்கண்ட இவ்வூரி லுள்ளாரெல்லாம் மயங்கி வருந்துவர்" என்பதாயிற்று.

1230. பொருண்மாலை யாளரை யுள்ளி மருண்மாலை மாயுமென் மாயா வுயிர்.

இதுவுமது.

(பரி.) இ - ள். மாயா என் உயிர்=காதலர்பிரிவைப் பொறுத்து இறந்துபடாதிருந்த என்னுயிர்,—பொருண்மாலையாளரை உள்ளி மருண் மாலை மாயும்=இன்றுபொருளியல்பே தமக்கியல்பாகவுடையவரை நினைந்து இம்மயங்கு மாலைக்கண்ணே இறந்துபடா நின்றது. எ - று.

குறித்தபருவங் கழியவும் பொருண்முடிவு நோக்கி வாராமையிற் சொல் வேறுபடாமையாகிய தம்மியல்பொழிந்தவர் அப்பொருளியல்பே தம்மியல் பாயினர், காலமிதுவாயிற்று, இனி நீ சொல்கின்றவாற்றுற் பயனில்லை யென்பதாம். (ம)

விளக்கம்:—"காதலருடைய பிரிவினைப் பொறுத்துக் கொண்டு இறந்துபடா திருந்த என் உயிரானது இன்று பொருளின் தன்மையே பெரிதென எண்ணி அதன் பொருட்டுப் பிரிந்து உள்ளவரை நினைந்து இம்மாலைக்காலத்து இறந்துபடுவதாயுள்ளது" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, "தோழியே! நீ ஆற்றியிருத்தல் வேண்டும் என்கின்றாய்; இத்துணைக் காலமும் அவர் வருவரென்று பொறுத்து இறந்துவிடாதிருந்த எனது உயிரானது அவர் குறித்த பருவம் கழிந்தும் பொருள் தேடுதலையே நமக்கு ஓர் இயல்பாக எண்ணி வாராதிருப்பதாலும், சொல்லிய சொல் மாறுபடாத அத்தலைவர் அப் பொருள் தன்மையைக் கருதித் தம் இயற்கையை ஒழிக்காராதலாலும், இனி நீ சொல்லும் ஆறுதலால் பயனில்லை. என் உயிர் இறந்துபடுவ தாகவே உள்ளது" என்று கூறியதாயிற்று.

---

124. அதிகாரம்.

ஊறுப்புநலனழிதல்.

(பரி.) அஃதாவது தலைமகடன் கண்ணும், தோளும், நுதலு முதலாய அவயவங்கள் தம்மழகழிதல். இஃது இரக்கமிக்குழி நிகழ்வதாகலின் பொழுது கண்டிரங்கலின்பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:—அதாவது, தலைமகளுடைய கண்களும், தோள்களும், நெற்றியும் முதலாகிய அவயவங்கள் தம்முடைய அழகினை இழந்து விடுதல் இவ்வழகழிதல் வருத்தப் மிகுந்து இரங்கும் காலத்து உண் டாவது ஒன்று ஆதலால் பொழுது கண்டிரங்கல் என்னும் அதிகாரத் துக்குப் பிறகு வைக்கப்பட்டு உள்ளது.

1231. சிறுமை நமக்கொழியச் சேட்சென்ற ருள்ளி
நறுமலர் நாணின கண்.

ஆற்றுமை மீதூரியான் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

(பரி.) இ-ள். சிறுமை நமக்கு ஒழியச் சேட்சென்றார் உள்ளி = இவ்வாற் றுமை நங்கண்ணே நிற்பத் தாஞ்சேணிடைச்சென்ற காதலரை நீ நினைந் தழுதலால், — கண் நறுமலர் நாணின = நின் கண்கள் ஒளியிழந்து முன் நமக்கு நாணிய நறுமலர்கட்கு இன்று தாம் நாணிவிட்டன. எ-று.

நமக்கென்பது வேற்றுமைமயக்கம். உள்ளவென்பது உள்ளியெனத் திரிந்து நின்றது. உள்ளுதலென்பது காரணப்பெயர் காரியத்திற்காயவாகு பெயர். இவைகண்டார் அவரைக் கொடுமைகூறுவர், நீ யாற்றல் வேண்டு மென்பது கருத்து. (க)

விளக்கம்:—"இவ்வித ஆற்றாமையானது நம்மிடத்தே இருக்கும் படி நம்மைப் பிரிந்து தூரத்தில் சென்ற காதலரை எண்ணி நீ அழுத லால், நின் கண்கள் ஒளியினை யிழந்து முன் தமக்கு வெட்கிய வாசனை தங்கிய பூக்களுக்கு இன்று தாம் வெட்கிவிட்டன" என்று பிரிவின் ஆற்றாமை மிகுதியால் உறுபபு அழகினையிழந்த தலைமகளை நோக்கித் தோழி சொல்லியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தோழி யானவள் "தலைவியே! இவ்விதம் நீ ஆற்றாமையால் வருந்தும்படி விட்டுப் பிரிந்து நெடுந்தூரத்திலுள்ள உன் காதலரை நீ நினைந்து அழுவதால், பூக்களுக்கு உவமை சொல்லக்கூடிய உன் கண்கள் ஒளி யிழந்து அப்பூக்களினும் தாழ்ந்தனவாயின. அதலால், இவ்வித வேறு பாட்டினைக் கண்ட நம்மவர் பிரிந்து சென்ற காதலரைக் கொடுமை கூறு வர். அதன் பொருட்டேனும் நீ ஆற்றியிருந்தல் வேண்டும்" என்ப தாயிற்று.

1232. நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும் பசந்து பனிவாருங் கண்.

இதுவுமது.

(பரி.) இ-ள். பசந்து பனிவாரும் கண=பசப்பெய்தன்மேனீர்வார் கின்ற நின்கண்கள்,—நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்=நம்மானயக் கப் பட்டவரது நல்காமையைப் பிறர்க்குச் சொல்லுவபோலாநின்றன, இனி நீ யாற்றல் வேணடும். எ-று.

சொல்லுவபோறல் = அதனையவருணர்தற்கனுமானமாதல். நயந்தவர்க் கென்று பாடமோதுவாரு முளர். (உ)

விளக்கம்:—"பசப்பு அடைதலோடு நீர் சொரிகின்ற உன்னுடைய கண்கள் நம்மால் விரும்பப்பட்டவருடைய அன்பில்லாமையைப் பிறர்க்கு எடுத்துச் சொல்லுவதுபோ லுள்ளனவாதலால்,நீ ஆற்றியிருத்தல் வேண் டும்" என்று ஆற்றாமை கொண்ட தலைவியை நோக்கித் தோழி கூறிய தாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, "தலைவியே! முன்னரே

தலைவர் பிரிவினால் நிறமேறுபாட்டினை அடைந்த உன் கண்கள் அவ் வளவோடு நில்லாமல் இப்போது அழுவதால் நீரையும் சொரிகின்றனவா தலால், இவ்வித வேறுபாடானது இவளுக்கு ஏன் வந்தது? இவள் காதல் கொண்ட நாயகனும் இவளைப் பிரிந்து உள்ளமையால் இவ்வித செயல் உண்டாகின்றது என்று அயலவர் சந்தேகம் கொள்வதற்கு இடமாகும். ஆதலால் நீ பொறுத்து இருத்தல் வேண்டும்" என்று கூறியதாயிற்று. மேற்கூறிய இரண்டு திருக்குறள்களும் அவயவங்களில் சிறந்த கண்களானவை தம் அழகினை இழத்தலைச் சொல்லியதாயிற்று.

1233. தணந்தமை சால வறிவிப்ப போலு மணந்தநாள் வீங்கிய தோள்.

இதுவுமது.

(பரி.) இ-ள். மணந்த நாள் வீங்கிய தோள்=காதலர் மணந்தநான்று இன்பமிகுதியாற் பூரித்த நின்றோள்கள்,—தணந்தமை சால அறிவிப்ப போலும்=இன்று அவர் பிரிந்தமையை விளங்க உணர்த்துவபோல மெலியாநின்றன, இது தகாது. எ-று.

அன்றுமவ்வாறு பூரித்து இன்றுமிவ்வாறு மெலிந்தால் இரண்டுங் கண்டவர் கடிநினைந்து அவரைத் தகவின்மை கூறுவரென்பதாம். (கூ)

விளக்கம்:—"காதலர் மணந்த தினத்தன்று மிகுந்த இன்பத்தால் பூரித்த உன் தோள்கள் அவர் பிரிந்த இன்று அவர் பிரிவினை யாரும் அறிய உணர்த்த வேண்டுவனபோல மெலிகின்றன. இவ்வித மெலிவு தகுதியாகாது" என்று ஆற்றுமை மிகுதியால் வேறுபாட்டினை அடைந்த தலைமகளை நோக்கித் தோழி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தோழியானவள் "ஓ தலைவியே! நீ மணந்த காலத்து அடைந்த இன்பத்தின் மிகுதியால் பருத்து நின்ற தோள்கள் இன்று தலைவர் பிரிந்த காலத்து மிகுதியும் மெலிந்து போயின வாதலால், அன்று பூரித்தமையும், இன்று மெலிந்தமையும் ஆகிய இரண்டு வேறுபாட்டினையும் கண்டவர் விரைவில் அறிந்து இவ்வித வேறுபாடு இவளுக்கு வந்தது இவளது தலைவன் பிரிந்து சென்று குறித்த பருவத்து வாராமையேயாகும் என்று அவரைப் பழிப்பர் ஆகலால் நீ ஆற்றியிருத்தல் வேண்டும்" என்று கூறியதாயிற்று.

1234. பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித் தொல்கவின் வாடிய தோள்.

இதுவுமது.

(பரி.) இ-ள். துணை நீங்கித் தொல் கவின் வாடிய தோள் = அன்றுந் தந் துணைவர் நீங்குதலான் அவராற்பெற்ற செயற்கையழகேயன்றிப் பழைய வியற் கையழகுமிழந்த இத்தோள்கள், — பணை நீங்கிப் பைந்தொடி சோரும் = இன்றதற்குமேலே தம்பெருமையிழந்து வளை கழலாநின்றன, இவையிங்ஙனஞ் செயற்பாலவல்ல, எ-று.

பெருமையிழத்தல் = மெலிதல். பைந்தொடி = பசிய பொன்னைச்செய்த தொடி. சோருமென்னும் வினைத்தொழில் தோண்மேலேறின்றது. அன்றும் பிரிந்தாரென்று அவரன்பின்மையுணர்த்தி இன்றுங் குறித்தபருவத்து வந் திலரென்று அவர் பொய்ப்மை யுணர்த்தாநின்றன; இனி அவற்றைக் கூறு கின்றார்மேற் குறையுண்டோ வென்பதாம். (சு)

விளக்கம்:—"தலைவர் பிரிந்த அன்றும் தம் துணைவர் நீங்குதலால் அவரால் அடைந்த செயற்கை அழகு மாத்திரமல்லாமல் பழைய இயற் கையழகையும் இழந்தனவாகிய இத்தோள்கள் குறித்தபருவத்து வா ராது வருந்தும் இன்றும் அதற்கு மேலே தம் பெருமை இழந்து வளை களும் கழலும்படி நின்றன. இத்தோள்கள் இவ்விதம் செய்யக் கூடி யன அல்ல" என்று தோழி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, "தலைவியே! தலைவர் பிரிவிற்கு உடன்பட்டு அவர் பிரிந்த காலத்து மணப்பதற்கு முன்னிருந்த இயற்கையாகிய அழகினையும், மணந்ததால் உண்டாகிய செயற்கையாகிய அழகினையும் இழந்தனவா கிய உன் தோள்கள் அன்றும் அவர் பிரிந்தனரென்று அவர் அன்பில் லாமையை உணர்த்திக் குறித்தபருவத்து வாராத இன்றும் தம் வலிமை இழந்து மிகுதியும் மெலிந்து அம்மெலிவால் வளையல்களும் கீழ் வீழும் படி நின்று அவர் சொல்லிய சொல் பொய்த்தது என்னும் பொய்ம்மை யையும் உணர்த்தா நின்றன. இனி இவ்வுண்மையை அறிந்தார் பழி கூறுவார்ராயின், பழி கூறுகின்ற அவர் மீது என்ன குறை உள்ளது?" என்று கூறியதாயிற்று.

1235. கொடியார் கொடுமை யுரைக்குந் தொடியொடு தொல்கவின் வாடிய தோள்.

இதுவுமது.

(பரி.) இ-ள். கொடியார் கொடுமை உரைக்கும் = கவவுக்கை நெகிழினும் ஆற்றுதாட்கு இக்கால நீட்டத்து என்ஞமென்று நினையாத கொடியாரது கொடுமையைத் தாமே சொல்லாநின்றன,—தொடியொடு தொல் கவின் வாடிய தோள் = வளைகளுங் கழன்று பழைய வியற்கையழகுமிழந்த இத் தோள்கள், இனியதனை யாமறைக்குமாறென்னே! எ று.

உரைக்குமென்பது அப்பொருண்மைதோன்ற நின்ற குறிப்புச்சொல். ஒடு—வேறுவினைக்கண் வந்தது. அவரொடு கலந்ததோள்களே சொல்லுவன வாஞல் அயலார் சொல்லுதல் சொல்லவேண்டுமோ வென்பதாம். (சு)

விளக்கம்:—"இறைத் தழுவிய தையானது சிறிது நெகிழ்ந்தாலும் பொறாது இருந்தவளுக்குப் பிரிந்து உள்ள இக்கால அதிகரிப்பு யாதாகுமோ என்று எண்ணுக கொடியராகிய தலைவரது கொடுமையைத் தாமே சொல்லுகின்றன. வளைகளும் கழலப்பெற்று, பழைய இயற்கை யழகினையும் இழந்த இத்தோள்கள். இனி, அவ்விதம் நேர்ந்த செயலையும் யாம் பிறரறியாது மறைக்கும் விதம் என்னை ?" என்று தோழி கூறிய தாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, "வளையல்களும் கழலப் பெற்று மணப்பதற்கு முன் னிருந்த பழைய இயற்கை யழகினையும் பிரிவால் இழந்த இத்தோள்கள் புணர்ந்தகாலத்து நெருக்கி அணைத்த கை யானது சிறிது தளர்ச்சி யடையுமாயின் அத்தளர்ச்சிக்கும் பொறுக் காது நிற வேறுபாட்டினை யடைந்த தலைவிக்கு இங்நெடுங்காலப் பிரிவினிடத்தே யாதாகுமோ என்று சிறிதும் எண்ணுத கொடியாரது கொடுமையைத் தாமே சொல்லுவதாக உள்ளன. அவ்விதம் அத்தலைவரோடு கலந்த தோள்களே அவரது கொடுமையைச் சொல்லுவனவா யிருப்பின் நட்பில்லாத அயலவர் சொல்லுதலைச் சொல்லவும் வேண்டுமோ ?" என்று தோள் நலன் அழிந்ததைத் தோழி கூறியதாமிற்று.

1236. தொடியொடு தோணெகிழ நோவ லவரைக் கொடிய ரெனக்கூற லெஞ்சு.

தாஞற்றுதற்பொருட் டியற்பழித்த தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

(பரி.) இ-ள். தொடியொடு தோள் நெகிழ = யானுற்றவும் என்வயத்த வன்றித் தொடிகள் கழலுமாறு தோள்கண்மெலிய,—அவரைக் கொடியர்

எனக் கூறல் நொந்து நோவல்=அவற்றைக் கண்டு நீயவரைக் கொடிய ரெனக் கூறுதலைப் பொறாது யானென்னுள்ளே நோவாநின்றேன். எ-று.

ஒடு—மேல்வந்தபொருணமைத்து. யானாற்றேனாகின்றது அவர் வாரா ததற்கன்று, நீ கூறுகின்றதற் கென்பதாம். (சு)

விளக்கம்:—"தோழியே! யான் பொறுத்திருக்கவும் என் வசப் படாவாய் வளையல்கள் கழலுண்டு தோள்கள் மெலியவும், அம்மெலி கின்ற தோள்களைக் கண்டு நீ காதலரைக் கொடியர் என்று சொல்லுத லைப் பொறாமல் யான் என் மனத்துள்ளே நொந்து கொண்டுள்ளேன்" என்று தான் பொறுக்கும் பொருட்டுத் தலைவன் தன்மையைப் பழித்த தோழியை நோக்கித் தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைமகளானவள், "தோழியே! என் தோள்கள் யான் பொறுத்திருக்கவும் என் வழி நில்லாது வளையல்கள் கழலுவதும் மெலி வதும் செய்வதைக்கண்டு என்னைப் பிரிந்து சென்ற தலைவரைக் கொடியரென்று கூறுகின்றாய். அவ்விதம் அவரைப் பழிப்பதற்கு யான் ஆற்றாது நிற்கின்றேனேயன்றி அவர் குறித்த பருவத்து வாராதது பற்றியல்லை" என்று கூறியதாயிற்று.

1237. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென் வாடுதோட் பூச லுரைத்து.

அவ்வியற்பழிப்புப் பொறாது தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

(பரி.) இ-ள். நெஞ்சே=நெஞ்சே!—கொடியார்க்கு என் வாடுதோட் பூசல் உரைத்து=இவள் கொடியாரென்கின்றவர்க்கு நீ சென்று என்மெலி கின்ற தோளினால் விளைகின்ற ஆரவாரத்தைச் சொல்லி,-பாடு பெறுதியோ= ஒருமேம்பாடெய்தவல்லையோ, வல்லையாயின் அதனையொப்பதில்லை. எ-று.

கொடியார்க்கென்பது கொடியரல்லரென்பது தோன்றநின்ற குறிப்புச் சொல். வாடுதோளென்பதும் அமைதாமே வாடாநின்றனவென்பது தோன்ற நின்றது. பூசல்—ஆகுபெயர். அஃது அவள் தோணோக்கியியற்பழித்தன் மேலும் அதனாற் றனக்காற்றாமைமிகன்மேலும் நின்றது. நின்னுரை கேட் டலும் அவர் வருவர், வந்தால் இவையெல்லாநீங்கும், நீங்க அஃதெனக்குக் காலத்தினாற்செய்த நன்றியாமாகலின், அதன்பயனெல்லாமெய்துதியென் னுங் கருத்தாற 'பாடுபெறுதியோ' என்றாள். (எ)

விளக்கம்:—"நெஞ்சே! இவள் கொடியார் என்கின்ற காதலர்க்கு நீ போய் என்னுடைய மெலிகின்ற தோள்களினால் உண்டாகும் ஆரவா

ரங்களோச சொலலி ஒரு மேம்பாட்டினை அடையவலலீயோ ! அவவித மேம்பாட்டினை அடையவலலியாயின் அதறகொப்பது வேறெறன்றும் இலலையாகும்" என்று தோழியானவள் காதலரைப் பழித்த பழிசசொற் களுக்குப பொறுகவளாபத தலவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின் றது. அதாவது, நலலியானவள தன் நெஞ்சினை நோக்கி "நெஞ்சே ! கொடியரலலாக என் காதலரைத தாமே வாடுகின்ற தோளகளை நோக்கிக் கொடியரென்ற இவள கூறுகின்றாளாதலால அதறகு நான் மிகுதியும் வருந்துகின்றேன். அதனால நீ காதலரிடஞ் சென்று என் தோள்கள மெலிதலால அவறறைக் காணும் ஊரவர் பழியை யெலலாம் கூறின், என் காதலர் வருவர வருவராயின் இத்தோள்களால உணடாகும் ஆரவாரங்களெலலாம நீஙகும். நீங்கலும், நீ செய்த நனறியானது காலத் தினால செய்த நனறியாகும். அதனால் நீ அடையவேண்டிய பயன் எலலாம் அடையக் கூடும். இவவித பெருமையை நீ அடையவலலை யாயின் அதனினும் மேம்பட்ட பெருமையொன்றும் இலலையாகும்" என்று கூறியதாயிற்று.

1238. முயஙகிய கைகளோ யூக்கப் பசந்தது பைந்தொடிப் பேதை நுதல்.

வினைமுடித்த மீடலுற்ற தலைமகள முனனிகழ்ந்தது நினைந்து கனனுள்ளே சொலலியது.

(பரி) இ-ள். முயஙகிய கைகளோ ஊகக=தன்னையிறுக முயஙகிய கைகளே இவட்குநோமென்று கருதி ஒருஞான்றியானெஙிழ்தேனுக, —பைந் தொடிப் பேதைநுதல பசநதது=அதுதுணையும் பொறுது பைநதொடிகளே யணிநத பேதையது நுதல் பசக்தது, அப்பெற்றித்தாய நுதல் இப்பிரிவிற்கி யாது செய்யுமோ' எ-று.

இனிககடிநிற் செல்லவேணடுமென்பது கருத்து. (அ)

விளக்கம் :—"தன்னை இறுக அணைத்த கைகளே இவளுக்கு நோரு மென்ற எண்ணி ஒருநாள் யான் சிறிது நெகிழும் படிச் செய்தேன். நெகிழ்ந்த அசசிறுபொழுதும் பொறுததால் பசிய வளையலகளை யணிந்த பேதையாகிய அவளுடைய நெற்றி யானது நிறவேறுபாட்டினை யடைந்தது. அவவித தகுதியுடையதாகிய அவளுடைய நெற்றியானது இவவிதம் பிரிந்து உளள பிரிவினுக்கு

யாது செய்யுமோ" என்று அரசன்பொருட்டுப் போரினுக்குச் சென்ற தலைவன் தான் சென்ற தொழில் முடிந்து திரும்பும் பருவத்து முன் கூடியிருந்த காலத்துத் தனக்கும் தலைவிக்கும் உண்டாகிய விஷயங்களை நினைந்து தனக்குள்ளேயே கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது அதாவது, தலைமகன் "யான் ஒரு நாள் காதலியை இறுக அணைத்து முயங்கிய காலத்து இவ்விதம் இறுக அணைப்போமாயின் இவளுக்கு நோகுமே என்று எண்ணி இறுகி இருந்த கைகளைச் சிறிது தளரும்படிச் செய்தேன். அத்தளர்வுக்குப் பொறாமல் என் காதலியது நெற்றியானது பசப்பாகிய நிறவேறுபாட்டினை யடைந்தது. அவ்விதம் இறுகிய கைகளைச் சிறிது தளர்த்தியதற்குப் பொறாத இவளது நெற்றியானது இவ்விதம் நெடும் பொழுது பிரிந்து இருந்த இப்பிரிவிற்கு என் செய்யுமோ அறிகிலேன். யான் இனி விரைவில் செல்லல் வேண்டும்" என்று சொல்லிக்கொண்டானென்பதாயிற்று.

1239. முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற பேதை பெருமழைக் கண்.

இதுவுமது.

(பரி) இ-ள். முயக்கிடைத் தண் வளி போழ=அங்ஙனங் கைகளை யூக்குதலான் அம்முயக்கிடையே சிறுகாற்று நுழைந்ததாக, — பேதை பெருமழைக்கண் பசப்புற்ற — அத்துணையிடையீடும் பொறாது, பேதையுடைய பெரிய மழைக்கண்கள் பசப்புற்றன; அத்தன்மையவான கண்கள் மலைகளும், காடும் நாடுமாய இவ்விடையீடுகளையெல்லாம் யாங்ஙனம் பொறுத்தன! எ-று.

தண்மை—ஈண்டு மென்மைமேனின்றது. போழவென்றது உடம்பிரண்டும் ஒன்றாது துதோன்றநின்றது. மழை=குளிர்ச்சி. (கூ)

விளக்கம்:—"அவ்விதம் கைகளைத் தளர்த்தலால் முயங்கியுள்ள உடம்பின் நடுவே சிறிது காற்று நுழைந்ததாயிற்று. சிறிது காற்று நுழையும்படி முயக்கம் தளர்ச்சி யுற்றதால் அசசிறு தளர்ச்சியையும் பொறாமல் என் காதலியினுடைய குளிர்ச்சி தங்கிய கண்கள் நிறவேறுபாட்டினை அடைந்தன. அவ்விதம் பிரிவு ஆற்றாத கண்கள் மலைகளும், காடுகளும், நாடுகளுமாகிய இடங்களிலெல்லாம் பிரிந்து இருப்பதற்கு எவ்விதம் பொறுத்து உள்ளனவோ!" என்று தலைவன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, மேல் திருக்குறளில தன்னுடைய கைகளைத் தளர்த்தியதால் நெற்றி பசந்தது என்று கூறிய தலைமகன் இத்

திருக்குறளில் தன் கைகளை நெகிழ்த்தியதால் பசந்தது நெற்றி மாத்திர மன்று, கண்களும் பசந்தன. அவ்விதம் சிறு காற்றம் உள் நுழையா வண்ணம் மூயங்கி இன்பத்தை யடைந்த அவள் குளிர்ந்த கண்கள், விட்டுப் பிரிந்து மலைகளையும் காடுகளையும் நாடுகளையும் காண்டிச்சென்று உள்ள இப்பிரிவிற்கெல்லாம் எங்ஙனம் பொறுத்துக்கொண்டு உள்ள னவோ என்று காதலியின் கண்களின் மென்மையையும் அவற்றின் பிரிவாற்றுமையையும் கூறினனுயிற்று

1240. கண்ணின் பசப்போ பருவர லெய்தின்றே யொண்ணுதல் செய்தது கண்டு.

இதுவுமது.

(பரி.) இ-ள். கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்று-தண்வளிபோழ வந்த கண்ணின்பசப்புத் துன்பமுற்றது,—ஒண்ணுதல் செய்தது கண்டு= தனக்கயலாய ஒண்ணுதல் விளைத்த பசப்பைகண்டு. எ-று.

அது கைகளோடுக்க அவ்வளவிற்பசந்தது, யான் கைகளுமூங்கி மெய் களு நீங்கிச் சிறுகாற்று ஊடறுக்குந் தூணையும் பசந்திலனெனத் தன்வன்மை யும் அதன்மென்மையுங் கருதி வெள்கிற்றென்பசாம்: ஆகவே, அவளுறுப்புக் கள் ஒன்றினென்று முற்பட்டு நலனழியும், யாங்கடகிற் சேறுமென்பது கருத்தாயிற்று. (ம)

விளக்கம்:—"சூளிர்ந்த காற்றுனது பிரிந்த ஈடம்புகள் இரண்டின் நடுவில் நுழைந்தகால் வந்த நிறவேறுபாட்டினைக் கண்கள் பசப்புத் துன் பமடைந்தது, தனக்கு அயலிலுள்ள ஒளிதங்கிய நெற்றியானது ஒண் டாக்கிய பசப்பு என்னும் நிறவேறுபாட்டினைப் பார்த்து" என்று தோவன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது அதாவது, விரைந்து செல்ல எண்ணிய தலைமகன் தான் புணர்ந்து இருந்தகாலத்து உண்டாகிய ஒவ் வொருசெயலினையும் நினைந்து,"அவளது உறுப்புக்களொன்றுக்கொன்று முற்பட்டுதம் அழகினை இழக்கும் அன்மை அது எவ்வாறேறுவெனில்? மேற்கூறிய வண்ணம் ஓர் நாள் நான் அவளை இறுகத் தழுவியிருந்த கைகளைச் சிறிது நெகிழ்த்தியதால் நெற்றியானது நிறவேறுபாட்டினை அடைந்த தன்மையைக்கண்ட கண் 'எனக்கு அயலாக உள்ள நெற்றி யானது இறுகிய கைகள் சிறிது நெகிழ்ந்ததாலேயே பசந்தது. யானோ கைகளையும் நெகிழ்த்தி ஒன்றோடு ஒன்று சேர்ந்திருந்த உடம்புகளும் நீங்கி நடுவே சிறுகாற்று செல்லும் வரையும் பசவாது நிற்கின்றேன்.

அவ்வித மென்மை தங்கிய நெற்றியை நோக்க என் தன்மை வன்மையையாயிற்று' என்று வெட்கத்தை அடைந்தது தானும் பசக்கலா யிற்று. ஆதலால், இவ்வித தன்மையுடையாளுடைய உறுப்புக்களின் தன்மையை நான் நன்கு அறிவேனுதலால், அவை ஒன்றோடு ஒன்று மூற் பட்டு அழிவதற்குமுன் யான் கடிதில் செல்லல்வேண்டும்" என்று கூறி னுளையிற்று.

---

125. அதிகாரம்.

நெஞ்சொடுகிளத்தல்.

(பரி.) அஃதாவது ஆற்றுமை மீதூரத் தனக்கோர் பற்றுக்கோடு காணுத தலைமகள் தன்னெஞ்சொடு செய்தியறியாது சொல்லுதல். இஃது, உறுப் புக்கள் தங்கலனழிந்தவழி நகழ்வதாகலின், உறுப்புகலனழிதலின்பின் வைக் கப்பட்டது.

விளக்கம்:—அதாவது, பிரிவினது ஆற்றுமையானது அதிகரித்த லும் தனக்கு ஒரு பற்றுக்கோடும் காணுத தலைமகள் தன் நெஞ்சுடன் செய்யவேண்டுவதை அறியாது சொல்லிப் கொள்ளுதல். இவ்வித தன்மை உறுப்புக்களானவை தம் கலத்தினை இழந்தகாலத்து உண்டா வது ஒன்றுதலின், உறுப்புகலனழிதல் என்னும் அதிகாரத்திற்குப் பிறகு இது வைக்கப்பட்டு உள்ளது.

1241. நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே யெனைத்
மெவ்வநோய் தீர்க்கு மருந்து. [தொன்று

தன்னுற்றுமை தீருந்திறமுடியது.

(பரி.) இ-ள். நெஞ்சே=நெஞ்சே!—எவ்வநோய் தீர்க்கும் மருந்து ஒன்றுட்இவ்வெவ்வநோயினைத் தீர்க்குமருந்தாவதொன்றனை,—எனைத்து ஒன்றும் நினைத்துச் சொல்லாய்=யானறியுமாற்றலின், எத்தன்மையதியா தொன்றுயினும் நீயறிந்தெனக்குச் சொல். எ-று.

எவ்வம் ஒன்றுனுந் தீராமை. உயிரினுஞ் சிறந்த காணினைவிட்டுச் செய்வ தியாதொன்றுயினு மென்பான், 'எனைத்தொன்றும்' என்றுள். (க)

விளக்கம்:—"நெஞ்சே! இக்குற்றந் தங்கிய நோயினைத் தீர்க்கும் மருந்து யாதொன்றினையும் யான் தெரிந்துகொள்ளும் வல்லமை யில்லா தவளாய் இருக்கின்றேன். ஆதலின், அவ்வித தன்மையுடைய மருந்து

ஒன்று எதுவாயினும் நீ அறிந்து எனக்குச் சொல்வாயாக!" என்று தனக்கு உள்ள பிரிவின் ஆற்றுமையானது தீர்கின்ற திறம் ஒன்றினை நாடிய தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தலைவியானவள் தன் நெஞ்சைக் கூவி "ஓ நெஞ்சே! பிரிவு ஆற்றுமையாகிய ஒன்றினும் நோதற்கு நோயினைத் தீர்க்கும் ஒரு மருந்தினை யான் தெரிந்துகொள்ளும் வல்லமை யுடையவளாக இல்லாதலால் உயிரினும் சிறந்த நாணினையிட்டேனும் செய்யும் செயல் உடையதாக ஒன்று இருந்து இந்நோயைத் தீர்க்குமாயின், அதை நீ அறிந்து எனக்குச் சொல்லல் வேண்டும்" என்று கூறியதாயிற்று.

1242. காத லவரில ராகநீ நோவது
பேதைமை வாழியென் னெஞ்சு.

தலைமகனைக் சாண்டற்கண் வேட மைமிதியாற் சொல்லியது.

(பரி.) இ-ள். என் நெஞ்சு வாழி=என்னெஞ்சே! வாழ்வாயாக,—அவர் காதல் இலராக நீ நோவது=அவர் நங்கட்காதலிலராகவும் நீயவர்வரவு நோக்கி வருந்துதற்கே,—பேதைமை=நின் பேதைமையே,பிறிதில்லை.எ-று.

நம்மை நினையாமையின் நங்கட்காதலிலரென்பதறியலாம், அஃதறியாமை மேலும் அவர்பாற்செல்லக் கருதாது அவர்வரவு பார்த்து வருந்தா நின்றாய், இது நீ செய்துகொள்கின்றதென்னுங் கருத்தாற் 'பேதைமை என்றாள். வாழி—இகழ்ச்சிக்குறிப்பு. யாமவர்பாற்சேறலே அறிவாகதென்ப தாம். (உ)

விளக்கம்:—"என் நெஞ்சே! நீ வாழ்வாயாக! அவர் நம்மிடத்துக் காதல் இல்லாதவராக இருக்கவும் நீ அவரது வரவினை நோக்கி வருந்துதற்குக் காரணம் உன்னுடைய பேதைமையே அல்லாமல் வேறு இல்லை" என்று தலைமகனைப் பார்ப்பதற்கு உள்ள விருப்பமிகுதியால் தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது அதாவது, தலைவியானவள் தன் நெஞ்சைப்பார்த்துச் சொல்லுவாள் போன்று "நம்மைப் பிரிந்துசென்ற காதலர் நம்மை நினையாமையினால் நம்மிடத்து அவர்க்கு அன்பு இல்லை என்பதை நீ அறிதல் வேண்டும். அவ்விதம் அறிய வேண்டுவதை அறியாது நின்றதோடு நில்லாமல் அதன்மேலும் அவரிடத்துச் செல்லக் கருதாது அவர் தாமே வருவரென்று அவர் வரவுபார்த்து வருந்துகின்றாய். இவ்விதச் செயலானது பேதைமையுடையது ஒன்றே ஆகும். இப்பேதைமையுடைய நீ வாழ்ந்திருப்பாய்" என்று இகழ்ச்சியாகக்

கூறியதால் நாம் அவரிடத்துச் செல்லுதலே அறிவுடைமையாகும் என்றும் கூறியதாயிற்று.

1243. இருந்துள்ளி யென்பரித னெஞ்சே பரிந்துள்ளல்
பைதனோய் செய்தார் கணில்.

இதுவுமது.

(பரி.) இ-ள். நெஞ்சே இருந்து உள்ளிப் பரிதல் என்=நெஞ்சே, அவர்பாற்செல்வதுஞ்செய்யாது ஈண்டிமறந்துபடுவதுஞ் செய்யாதிருந்து அவர் வரவு நினைந்து நீ வருந்துகின்றதென்னே!—பைதல் நோய் செய்தார்கண் பரிந்து உள்ளல் இல்=இப்பையுணோய் செய்தார்மாட்டு நமக்கிரங்கிவரக் கருதுதல் உண்டாகாது. எ-று.

நம்மாட்டருளுடையரன்மையிற் றூமாக வாரார், நாஞ்சோலே இனித் தகுவதென்பதாம். (கூ)

விரக்கம்:—"நெஞ்சே! நீ அவரிடந்துப் போவதுஞ் செய்யாமல் இவ்விடத்தில் இறந்து போவதையும் செய்யாமல் அவர் வரவு ஒன்றனையே நினைந்து நீ வருந்துகின்றது எதற்கு? இத் தன்பமிருந்த கோயினைச் செய்தவரிடத்து நமக்காகப் பரிந்து வரும் எண்ணம் உண்டாவது இல்லை" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, "நெஞ்சே! நம்மிடத்து அவர் அன்பில்லாதவராக இருக்கவும் அவர் காமாகவே நம்மை எண்ணி வருவது கூடாதாகும். நீ அவரிடத்துச் செல்லாதும் இவ்விடத்து இறந்துபடாதும் நினைந்து வருந்துவதில் பயனில்லை. அவரைக் காணவேண்டுமாயின் நாம் அவரிடத்துச் செல்லுதலே இனித் தகுதியுடையதாகும்" என்று கூறியதாயிற்று.

1244. கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே யிவையென்
றின்னு மவர்க்காண லுற்று. [னைத்

இதுவுமது.

(பரி.) இ-ள். நெஞ்சே கண்ணும் கொளச் சேறி=நெஞ்சே, நீயவர்பாற் சேறலுற்றாயின் இக்கண்களையும் உடன்கொண்டு செல்வாயாக;—இவை அவர்க் காணல் உற்று என்னை இன்னும்=அன்றி நீயே சேறியாயின், இவை தாம் காட்சிவிதுப்பிஞல் அவரைக் காண்டல்வேண்டி நீகாட்டென்று என்னைத் தின்பனபோன்று கலியாகற்கும். எ-று.

கொண்டென்பது கொளவெனத் திரிந்துநின்றது. இன்னுமென்பது

இலக்கணைக்குறிப்பு. அந்நலிவு தீர்க்கவேண்டுமென்பதாம்: என்றது தான் சேறல் குறித்து. (ச)

விளக்கம்:—"நெஞ்சே! நீ அவரிடத்துச் செல்லுவாயாயின் இக்கண்களையும் உன்னுடன் கொண்டு செல்லுதல் வேண்டும். அவ்விதமல்லாது நீயே செல்லுவாயாயின் இக்கண்கள் அவரைத் தாம் பார்க்க வேண்டிய விருப்பத்தினால் நீ காட்டென்று என்னைத் தின்று விடுவன போன்று துன்பஞ் செய்யும்" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது அதாவது, தலைவியானவள் தான் தலைமகனைப் பார்க்க வேண்டிய விருப்பமகுதியை அறிவிப்பாளாய்த் தன நெஞ்சினை நோக்கி, "நீ பிரிந்துசென்ற தலைவரிடத்துப் போக விரும்புவாயாயின் இக் கண்களையும் உன்னுடன் அழைத்துச் செல்லுதல் வேண்டும். அவ்விதமல்லாது நீயே தனித்துச் செல்வாயாயின் நீ சென்ற பிறகு தாம் பார்க்கவேண்டிய விருப்பினால் என்னை மென்று தின்று விடுவது போல் எனக்குத் துன்பத்தை உண்டாக்கும். அவ்வித துன்பத்தினை நீ எனக்குத் தீர்த்தல் வேண்டும்" என்று தான் தலைவனிடத்தே செல்லல் வேண்டும் என்று குறித்ததாயிற்று

1245. செற்றாரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயா முற்றாலுறாஅ தவர்.

இதுவுமது.

(பா.) இ-ள். நெஞ்சே=நெஞ்சே,—யாம் உற்றால உறாதவா=யாம் தம்மையுறத் தாமுறாத நங்காதலரை—செற்றாரெனக் கைவிடல உண்டோ= வெறுத்தாரென்று கருதிப் புலந்து கைவிட்டிருக்கும் வலி நமக்குண்டோ, இல்லை. எ-று.

உறுதல்=அன்புபடுதல். அவ்வலியின்மையின் அவர்பாற்செல்வதே நமக்குத் தகுவதென்பதாம். (ரு)

விளக்கம்:—"நெஞ்சே! யாம் தம்மிடத்தே அன்பு படுதலை அறிந்திருந்தும் நம்மிடத்து அன்புகொள்ளாத நம்முடைய காதலரை நம்மை வெறுத்தாரென்று எண்ணிக் கோபித்து அவரைக் கைவிட்டு இருக்கும் வலலமை நமக்கு உளவதோ; இல்லை" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, நெஞ்சினை நோக்கி தலைவியானவள் "நெஞ்சே! நாம் அன்பு கொண்டாலும் நம்மிடத்து அன்புகொள்ளாத காதலரை நம்மை வெறுத்தாரிடத்து நாம் என் செல்லுதலவேண்

டும் என்று கோபித்து அவரைக் கைவிட்டிருக்கும் வல்லமை நமக்கு இல்லையாதலால், அவரிடத்து நாம் செல்லுவதே நமக்குத் தகுதியாகும்'' என்று கூறியதாயிற்று.

1246. கலந்துணர்த்துங் காதலர்க் கண்டாற் புலந்துண பொய்க்காய்வு காய்தியென் னெஞ்சு. [ராய்

தலைமகன் கொடுமைநினைந்து செல்வுடன்படாத நெஞ்சினைக் கழறியது.

(பரி.) இ. ள். என் நெஞ்சு = என்னெஞ்சே, — கலந்து உணர்த்தும் காதலர்க் கண்டாற் புலந்து உணராய் = யான் தம்மொடு புலந்தால் அப்புலவியைக் கலவிதன்னானே நீக்கவல்ல காதலரைக் கண்டாற் பொய்யேயாயினும் ஒருகாற் புலந்து பின்னதனை நீங்கமாட்டாய், — பொய்க் காய்வு காய்தி = அதுவுமாட்டாத நீ இப்பொழுது அவர் கொடியரெனப் பொய்க்காய்வு காயா நின்றாய், இனியிதனை யொழிந்து அவர்பாற்செல்லத் துணிவாயாக. எ-று.

கலந்தலானென்னும் பொருட்டாய கலாகவென்பது திரிந்து நின்றது. அதனானுணர்த்தலாவது கலவியின்பத்தைக் காட்டி அதனான் மயக்கிப் புலவிக்குறிப்பினை யொழித்தல். பொய்க்காய்வு = நிலையில் வெறுப்பு. கண்டான் மாட்டாத நீ காணாதவழி வெறுக்கின்றதனாற் பயனில்லையென்பதாம். (௬)

விளக்கம்—"என் நெஞ்சே! யான் அவரோடு கோபிக்கின் அக்கோபத்தைக் கலவியினால் நீக்கவல்ல காதலரைக் காண்பாயாயின் பொய்யாகவேனும் ஒரு முறை கோபித்துப் பின்னர் கோபத்தினின்றும் நீங்கமாட்டாய் அவ்வளவு தகுதியுமில்லாத நீ இப்பொழுது அவர்கொடியவரென்று பொய்யாகக் கோபிக்கின்றாய். இனி இவ்வித பொய்க் கோபத்தை யொழித்து அவர் உள்ள இடத்துக்குப் போகத் துணிவாயாக!'' என்று தலைமகனது கொடுமையை எண்ணி அவனிடத்துச் செல்ல உடன்படாத நெஞ்சினைப்பார்த்துத் தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, "ஓ நெஞ்சே! காதலரைக் கண்டவிடத்து அவரை வெறுத்துச் சிறு பொழுதேனும் நிற்க முடியாத நீ அவரைக் காணாத பிரிவின்கண் வெறுப்பதால் பயனில்லை. ஆதலால், நிலையில்லாத வெறுப்பினைக் கொண்ட நீ அவர் உள்ள இடத்துச் செல்லுதலே தகுதி'' என்று கூறியதாயிற்று.

1247. காமம் விடுவொன்றே நாண்விடு நன்னெஞ்சே யாளே பொறேனிவ் விரண்டு.

நாண்டடுத்தலிஃ அச்சேலவோழிவாள் சொல்லியது.

(பரி.) இ-ள். நன்னெஞ்சே=நல்லநெஞ்சே!—ஒன்று காமம் விடு=ஒன்றின் நாண்விடமாட்டாயாயிற் காமவேட்கையை விடு;—(ஒன்று) நாண் விடு=ஒன்றின் அது விடமாட்டாயாயின் நாணினை விடு,—இவ்விரண்டு யாளே பொறேன்=அன்றியே இரண்டும் விடாமை நின்கருத்தாயின், ஒன்றற் கொன்று மறுதலையாய இவ்விரண்டனையும் உடன்முங்குமதுகை யானிலன்.

யாளேவென்னும் பிரிநிலை நீ பொறுப்பினு மென்பதுபட நின்றது. நன் னெஞ்சேயென்றது, இரண்டையும் விடாது பெண்மையை நிலைபெறுத்த லின், நல்லையென்னுங் குறிப்பிற்று. அது நன்றேயெனினும் என்னுயிருண் டாதல் சாலாமையின், அதற்காகின்றிலேனென்பதாம். முற்றும்மை விகா ரத்தாற்பிறக்கது. (எ)

விளக்கம்:—"என் நல்ல நெஞ்சே! நாணம், காமம் என்கின்ற இரண்டனுள் நாண் ஒன்றை விடுவதற்கு உன்னுல் கூடாதாயின் காம விருப்பத்தை விட்டுவிடு. அக்காம இன்பம் ஒன்றினை விடுவதற்கு உன்னுல் கூடாதாயின் நாணத்தை விட்டுவிடு. அவ்விதமல்லாது இரண் டையும் கொண்டு நிற்பது உன் கருத்தாயின் ஒன்றினுக்கு ஒன்று மாறு பாடாகிய நாண், காமம் என்னும் இவ்விரண்டனையும் ஒருகாலத்துத் தாங்கும் வலிமையற்றவளாக யான் இருக்கின்றேன்" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தலைவனிடத்துச் செல்ல எண்ணியவளாகிய தலைவி அவ்வாறு செல்வதற்கு நாணம் அவ ளைத் தடுத்தலால் போதற்கு இல்லாதவளாய்த் தன் நெஞ்சினை நோக்கி "நாணம், காமம் என்னும் இரண்டனுள் ஒன்று கொண்டு என் பெண் டன்மையை நீ நிலைநிறுத்துவது மிக்கதேகார் நன்மையேயாயினும், என் உயிரோ அவ்விரண்டையும் ஒரே காலத்துப் பொறுத்து வாழும் வலி யற்று நிற்பதால் யான் இரண்டையும் பொறுக்கும் உனது நன்மைத் தன்மையைத் தாங்கமுடியாதவளாக இருக்கின்றேன்" என்று கூறிய தாயிற்று.

1248. பரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர் பின்செல்வாய் பேதையென் னெஞ்சு.

இதுவுமது.

(பரி.) இ-ள். என் நெஞ்சு=என்னெஞ்சே!—அவர் பரிந்து நல்கா ரென்று=அவர் இவ்வாற்றுமையையறியாமையின் கொந்துகந்து தலையளி செய்யாராயினுரென்று கருதி,—பிரிந்தவர்பின் எங்கிச் செல்வாய் பேதை= அஃதறிவித்தற் பொருட்டு நம்மைப் பிரிந்துபோயவர்பின் எங்கிச்செலலுற்ற நீ யாதுமறியாய். எ-று.

ஆற்றுமைகண்டுவைத்தும் நல்காது போயினுரைக் காணுதவழிச் சென் றறிவித்த றணையானே நல்கவருவரென்பது கருதினமையிற் 'பேதை' என்றுள். (அ)

விளக்கம்:—"என் நெஞ்சே! அவர் நாம் படும் இவ்வாற்றுமையை அறியாமையினல் நமக்காக வருந்தி வந்து அளிபிணைச் செய்யவில்லை பென்று எண்ணி அதனை அறிவித்தற் பொருட்டு நம்மைப் பிரிந்து போனவர் பின் ஏங்கிச் செல்ல ஆரம்பித்த நீ யாதும் அறியாய்" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, பிரிந்துபோ கின்ற காலத்து, நாம்படும் ஆற்றுமைபால் வரும் தன்பத்தைப் பார்த்து இருந்தும் நம்மிடத்து அன்பு செலுத்தி நம்மோடு இராது பிரிந்து போய் தூரத்தில் வசிக்கின்ற அவர்க்கு நம் பிரிவாற்றுமையைப் பார்ப்ப தற்கு நாம் போய் அறிவித்தவளவே நமக்கு இன்பத்தைத் தர நம் மிடத்து வருவரென்று எங்கிச் செல்கின்றாய். உன்னினும் பேதையை யுடையவர் யார்?" என்று தன் நாண் தடுத்தலால் தான்போகாதிருக்கும் தருதியைக் கூறியதாயிற்று.

1249. உள்ளாத்தார் காத லவராக வுள்ளிநீ யாருழைச் சேறியென் னெஞ்சு.

இதுவுமது.

(பரி.) இ-ள். என் நெஞ்சு=என்னெஞ்சே,—காதலவர் உள்ளத்தாராக= காதலர் நின்னகத்தாராக,—நீ உள்ளி யாருழைச் சேறி=முன்பெல்லாங் கண்டுவைத்து இப்பொழுது நீ புறத்துத் தேடிச் செல்கின்றது யாரிடத்து! உள்ளமென்புழி அம்மும் பகுதிப்பொருள்விகுதி. நின்னகத்திருக்கின்ற வரை அஃதறியாது புறத்துத்தேடிச் சேறல் நகையுடைத்து, அதனை யொழி யென்பதாம். (கூ)

விளக்கம்:—"என் நெஞ்சே! காதலர் உனக்கு உள்ளேயே இருக்கவும் அவரை முன்பெல்லாம் உன்னகத்தே பார்த்திருந்தும் இப்பொழுது நீ வெளியே சென்று யாரைத் தேடுவது?" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, நாண் தடுத்தலால் தலைவனிடத்துச் செல்வதற்கு முடியாத தலைவியானவள் தன் நெஞ்சை நோக்கி "நம் காதலர் உன் உள்ளேயே எக்காலத்தும் இருப்பதை முன்பெல்லாம் நீ பார்த்து உள்ளனை. அவ்விதமே அவர் பிரிந்து சென்ற இப்பொழுதும் உன்னுள்ளேயே பார்த்திராது நீ வெளியே சென்று அவரைப் பார்க்க எண்ணுகின்றாய். அவர் உள்ளிருக்கவும் நீ யாரைத் தேடி வெளியே செல்லுகின்றாய்" என்று மேல் திருக்குறளில் தன் நெஞ்சைப் பேதையென்று அழைத்தவள் இத்திருக்குறளில் "இவ்வித பேதைமைத் தன்மையை நீ செய்வது நகைத்தற்கிடமாய் விடும். இனி அவ்விதம் செய்யாது ஒழிவாய் நெஞ்சே!" என்று கூறியதாயிற்று.

1250. துன்னாத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா
வின்னு மிழத்துங் கவின்.

அவரை மறந்தாற்றல்வேண்டுமென்பதுபடச் சொல்லியது.

(பரி.) இ-ள். துன்னாத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா = நம்மைக் கூடாவண்ணந் துறந்துபோயினாரை நாம் நம்மகத்துடையேமாக,—இன்னும் கவின் இழத்தும் = முன்னிழந்த புறக்கவினேயன்றி நின்ற அகக்கவினுமிழப்பேம். எ-று.

"குன்றி—னெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேல்"* என்புழிப் போல நெஞ்சென்பது ஈண்டும் அகப்பொருட்டாய் நின்றது. அவர் நம்மைத் துன்னாமற் றுறந்தாராகவும், நாமவரை மறத்தன்மாட்டேமாகவும், போன மெய்க்கவினேயன்றி நின்றநிறையு மிழப்பேமென்பதாம். (௰)

விளக்கம் :—"நம்மைக் கூடாதவிதமாக நம்மை விட்டுப் பிரிந்து போயினாரை நாம் நம்முடைய மனத்தினிடத்தே எண்ணிக்கொண்டே இருப்போமாயின், முன்னரே இழந்த மேனியின் அழகாகிய வெளியழகை யிழந்தது மாத்திரமல்லாமல் எக்காலத்தும் நிலை பெற்றுள்ள உள்ளிடத்தே யிருக்கும் அழகினையும் இழந்து விடுவோம்" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, "நம்மைப் பிரிந்து போயினவரை மேலும் மேலும் நினைப்போமாயின், இப்போதே

*குறுந்தொகை, கடவுள் வாழ்த்து.

தேகத்திலுள்ள அழகினெல்லாம் இழந்ததுடன் உள்ளுக்குள் மறைந்து அழகு செப்து வக்திருக்கும் நிறையினையும் இழக்க நேரும். இவ்விதம் நிறைபழியாது இருக்கவேண்டுமாயின் பிரிந்த தலைவரை மறந்து இருத்தல் வேண்டும்" என்று கூறியதாயிற்று.

126. அதிகாரம்.

நிறையழிதல்.

(பரி.) அஃதாவது தலைமகள் மனத்தடக்கற்பாலனவற்றை வேடகை மிகுதியான் அடக்கமாட்டாது வாய்விடுதல்: "நிறையெனப்படுவது மறை பிறரறியாமை"† என்றார்பிறரும் அஃதழிதற்காரணம் நெஞ்சொடுகிளர்ந்தமை யின், இது நெஞ்சொடுகிளர்த்தலின்பின் வைக்கப்பட்டது.

விளக்கம் :—அதாவது, தலைமகள் மனத்தில் அடக்கவேண்டு வனவற்றைக் காதலன்மீது உள்ள விருப்பமிகுதியால் அடக்கமுடியா மல் வாய்விட்டுச் சொல்லுதல். இவ்விதம் பிறரறியாது அடக்கிவைக்கும் நிறையாகிய மறையினைத் தன் நெஞ்சொடு ஆற்றமையால் சொல்லிக் கொண்டமையால் நிறையழிந்து நின்றமையினாள். ஆகலால், இந்நிறை யழிதல் நெஞ்சொடுகிளர்த்தல் என்னும் அதிகாரத்திற்குப் பிறகு வைக் கப்பட்டு உள்ளது.

1251. காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னு
நாணுத்தாழ் வீழ்த்த கதவு.

நாணுநிறையுமழியாமை நீயாற்றல்வேண்டுமென்ற
தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

(பரி.) இ-ள். நாணுத் தாழ் வீழ்த்த நிறையென்னுங் கதவு=நாணுகிய தாழினைக்கோத்த நிறையென்னுங் கதவினை,—காமக் கணிச்சி உடைக்கும்= காமவேட்கையாகிய கணிச்சி முறியாகின்றது, இனி அவை நிற்றலுமில்லை, யானுற்றலுமில்லை. எ-று.

கணிச்சி=கூர்தலி. நாணுள்ளதுணையும் நிறையழியாதாகலின் அதனைத் தாழாக்கியும், அகத்துக்கிடந்தன பிறர்கொள்ளாமற் காத்தலின் நிறையைக் கதவாக்கியும், வலியவாய்த் தாமாக நீங்காத அவ்விரண்டனையும் ஒருங்கு நீக்க லிற் றன்காமவேட்கையைக் கணிச்சியாக்கியுங் கூறினாள். (க)

† கலி, நெய்தல், 16.

விளக்கம் :—"நாண் என்னும் நாழிணைக் கோத்து உள்ள நிறை யென்று சொல்லும் கதவிணைக் காம விருப்பமென்னும் கோடரி முறிக் கின்றது. இனி அந்நாணும் நிறையும் அழியாமல் நிற்பதுமில்லை, யான் பொறுத்து இருப்பதும் இல்லைபாரும்" என்று நாணமும், நிறையும் அழியாது இருத்தல் வேண்டி நீ பொறுத்தல் வேண்டும் என்ற தோழி யை நோக்கித் தலைமகள் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதா வது, தலைமகளானவள் "தோழியே! நாண் என்கின்ற தாழிணையும் நிறை யென்கிற கதவிணையும் ஆகிய இரண்டிணையும் ஒரு காலத்திலே காம விருப்பமென்னும் கோடரியானது வெட்டிச் சாய்க்குமாயின், மனத்து மறைந்து கிடைந்தனவற்றைப் பிறர் கொள்ளாத விதமாக நின்ற நிறை யாகிய கதவம் அக்கதவிணைத் திறவாத விதமாக இட்டதாழும் எவ்விதம் நிற்கும் அவ்விரண்டும் நிற்பதற்குமில்லை, யான் பொறுத்து இருத்தற்கு மில்லை" என்று கூறினளாயிற்று.

1252. காம மெனவொன்றே கண்ணின்றென் னெஞ் யாமத்து மாளுந் தொழில். [சத்தை

நெஞ்சின்கடடோன்றிய காமம் நெஞ்சாலடக்கப்படு மென்றடைச் சோல்லியது

(பி-ரி.) இ-ள். யாமத்தும் என் நெஞ்சத்தைத் தொழில் ஆளும்=எல்லா ருந் தொழிலொழிய யிடையாமத்தும் என்னெஞ்சத்தையொறுத்துத் தொழில் கொள்ளாநின்றது,—காமமென ஒன்று கண் இன்று=ஆகலாற் காம மென்று சொல்லப்பட்ட வொன்று கண்ணேட்ட மின்றாயிருந்தது. எ-று.

ஓ வென்பது இரக்கக்குறிப்பு. தொழிலின் கண்ணேயாடல்=தலைமகன் பாற் செலவிடுத்தல். தாயைப்பணிகோடல் உலகியலன்மையிற் 'காமமென வொன்று' என்றும், அது தன்னைக் கொள்கின்றது அவளறியாது கோடலிற் 'கண்ணின்று' என்றுங் கூறினள். அடக்கப்படாமை கூறியவாறு. (உ)

விளக்கம் :—"உலகத்து எல்லாரும் தாம் செய்யும் தொழிலை விட்டு நிற்கும் நடுச்சாமத்தும் என்னுடைய நெஞ்சத்தைத் துன்புறுத் தித் தொழில் கொள்ளுகின்றது. ஆதலால் இவ்விதக் காமமென்று சொல் லப்பட்ட ஒன்று கண்ணேட்ட மற்றதாய் இருந்தது" என்று நெஞ்சி னிடத்தே தோன்றிய காமத்தை நெஞ்சாலேயே அடக்குதல் கூடும் என்ற தோழியை நோக்கித் தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது அதாவது, தலைவியானவள் "யான் என் செய்வேன்?

என்னிடத்துத் தோன்றும் காமமானது எல்லோரும் உறங்கும் நடுச் சாமத்தும் தலைமகனிடத்தே செல்லும்படி என் நெஞ்சத்தைத் தன் புறத்தி ஏவல் கொள்ளுகின்றது. இவ்விதம் தாயைப் பணி கொள்ளுதல் உலகத்து இயற்கையாக இல்லாதிருந்தும் என்னிடத்துத் தோன்றிய காமமென்னும்ஒன்று என்னை அறிவதாது பணிகொண்டு கண்ணேட்ட மற்று உள்ளது. இவ்விதம் கண்ணேட்டமற்று நிற்கின்ற காமத்தை எவ் விதம் அடக்குவது ? அடக்க முடியாதாகும்" என்று கூறியதாயிற்று.

1253. மறைப்பேன்மற் காமத்தை யாலே குறிப்பின்றித் தும்மல்போற் றோன்றி விடும்.

மகளிர்காமம் மறைக்கப்படுமென்றதற் கொலியது.

(பரி.) இ-ள். காமத்தை யான் மறைப்பேன்=இக்காமத்தை யாலென் னுள்ளே மறைக்கக்கருதுவேன்;=குறிப்பு இன்றித் தும்மல்போல் தோன்றி விடும்=அதனாலென், இஃதென்கருத்தின் வாராது தும்மல்போல வெளிப் பட்டே விடாநின்றது. எ-று.

மன்—ஒழியிசைக்கண் வந்தது. ஓகாரம்—இரங்கற்கண் வந்தது. தும்ம லடங்காதாற்போல அடங்குகின்றதில்லை யென்பதாம். (சு)

விளக்கம்.—"இந்தக் காமத்தை எனக்குள்ளேயே யான் மறைக்க எண்ணுவேன். அவ்விதம் எண்ணுவதால் இக்காமமானது மறைக்க எண் ணிய என் எண்ணத்தின் வழி நில்லாது, அடக்க முயன்றாலும் அடங் காது வெளிவருகின்ற தும்மலைப்போல வெளிப்பட்டு விடுகின்றது" என்று பெண்களது காமம் பிறரறியாவண்ணம் மறைத்தல் கூடும் என்று கூறிய தோழியை நோக்கித் தலைவி கூறியதாக இக்கிருக்குறள் கூறுகின் றது. அதாவது, தலைவியானவள் "தோழீயே! நீ சொல்லுகின்றபடி என்னிடத்தே தோன்றும் காமத்தை. என்னுள்ளேயே இருக்கும் வண்ணம் மறைக்கும்படி யான் எண்ணுவேன். அவ்விதம் யான் எண் ணுவதால் இக்காமமானது என் எண்ணத்தின்படி நில்லாது அடக்க முயன்றாலும் அடங்காத தும்மல்போல் பிறரறிய வெளிப்பட்டு விடு கின்றது" என்று கூறியதாயிற்று.

1254. நிறையுடையே னென்பேன்மன் யாலுனெவென் மறையிறந்து மன்று படும். [காம

இதுவுமது.

(பரி.) இ-ள். யான் நிறையுடையேன் என்பேன்=இன்றிஞங்கெல்

லாம் யானென்னை நிறையுடையேனென்று கருதியிருந்தேன்,—என் காமம் மறை இறந்து மன்று படும்=அதனாலென், இன்றென்காமம் மறைத்தலைக் கடந்து மன்றின்கண் வெளிப்படா நின்றது. எ-று.

மன்னும் ஓவும் மேலவற்றின்கண் வந்தன. மன்றுபடுதல்=பலருமறிதல். இனி என்வரைத்தன்றென்பதாம். (௪)

விளக்கம்:—"இன்றைப்போதெல்லாம் யான் என்னை மறை பிற ரறியாமல் மறைத்து வைக்கும் நிறையுடையவள் என்று எண்ணியிருந்தேன் அவ்விதம் எண்ணி இருந்ததால் இன்று என்னிடத்தே தோன்றிய காமமானது யான் மறைத்தலைக் கடந்து பலரும் அறியும்படி வெளிப்பட்டுவிட்டது. ஆதலால் இனி இக்காமமானது எனக்கு உட்பட்டதுஅன்று" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, "தோழியே! இன்றெல்லாம் யான் என்னை மறைவாகிய விஷயங்களை மறைக்கக்கூடிய தகுதியுடையவள் என்று எண்ணியிருந்தேன். அவ்வித எண்ணத்தை யான் கொண்டு இருக்கவும் என் காமமானது என்வழி நில்லாது யாவரும் அறியும்படி வெளிப்பட்டு விட்டதால், இனி என்னால் இக்காமம் மறைக்கப்படுவது ஒன்று அன்று" என்று கூறியதாயிற்று.

1255. செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோ யுற்றார் அறிவதொன் றன்று.

தம்மைமறந்தாரை நாமுமறக்கற்பால மென்றுடகுச் சொல்லியது.

(பரி.) இ-ள். செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை=தம்மையகன்று சென்றார் பின்செல்லாது தாமும் அகன்றுநிற்குநிறையுடைமை—காமநோய் உற்றார் அறிவது ஒன்று அன்று=காமநோயினையுறாதார் அறிவதொன்றன்றி உற்றார் அறிவதொன்றன்று. எ-று.

இன்பத்தொடு கழியுங்காலத்தைத் துன்பத்தொடு கழியுமாறு செய்தலிற் 'செற்றார்' என்றாள். பின்சேறல்=மனத்தால் இடைவிடாது நினைத்தல். பெருந்தகைமை—ஈண்டாகுபெயர். காமநோயுறாதார்=மானமுடையார், நன்றெனவுணரார்மாட்டுஞ்சென்றேநிற்கும், யானறிவதொன்றன்றென்பதாம்.

விளக்கம்:—"தம்மை விட்டு நீங்கினார் பின்னே செலலாமல் தாமும் அவரைவிட்டு நிற்கும் நிறையுடைமை காம நோயினை அடையாதார் அறிவது ஒன்று அல்லாமல காம நோயினை அடைந்தார் அறிவது ஒன்று ஆகாது" என்று நம்மை மறந்தாரை நாமும் மறத்தல் வேண்டும்

என்ற தோழியை நோக்கித் தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தலைவியானவள் "தோழியே! தம்மைவிட்டு நீங்கியவரை மனத்தால் இடைவிடாது நினையாது நிற்கும் நிறையென்னும் மறையுடைமை காமநோயினைப் பெறாத மான முடையார்க்கு ஆகுமே யன்றி மானத்தை இழக்கும் காமநோயினைப் பெற்றவளாகிய என்னால் உடன் நின்று இன்பத்தோடு கழிகின்ற காலத்தைப் பிரிந்து துன்பத்தோடு கழியும்விதம் செய்யும் பகைவராயினும் அவ்வித பகைவராகிய தலைவரிடத்து என்மனம் இடைவிடாது செல்லாது நிற்கச் செய்வதற்கு இல்லை ஆதலால் அவரை யான் மறப்பது கூடாததாகும்" என்று கூறியதாயிற்று.

1256. செற்றவர் பின்சேறல் வேண்டி யளித்தரோ வெற்றென்னை யுற்ற துயர்.

இதுவுமது.

(பரி.) இ-ள். செற்றவர்பின் சேறல் வேண்டி=என்னையகன்று சென்றார் பின்னே யான் சேறலைவேண்டுதலான்,—என்னை உற்றதுயர் எற்று அளித்து=என்னை யுற்றதுயர் எத்தன்மையது! சாலநன்று. எ-று.

செற்றவரென்றது ஈண்டும் அப்பொருட்டு. வேண்டவென்பது வேண்டியெனத் திரிந்துநின்றது. அளித்தென்பது இகழ்ச்சிக்குறிப்பு. இக்காமநோய் யான் சொல்லவுங் கேட்கவுமாவதொன்றன்று, சாலக்கொடிதென்பதாம் (சு)

விளக்கம்: —"என்னை விட்டு நீங்கிச் சென்றவர் பிறகு யான் போக விரும்புதலால் என்னை அடைந்த துக்கமானது எவ்வித தகுதியுடையது. மிகுதியும் நன்மை யுடையதாகும்" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது அதாவது, "நம்மை மறந்தாரை நாமும் மறப்போம் என்று யான் எண்ணினும் என்னைத் துன்பத்தோடு இருக்கவிட்டு நீங்கிய தலைவர் பின்னே என்னைப் போக விரும்புதலால் என்னையுற்ற காமநோயானது எவ்வித அருளுடையதாய் இருத்தல் வேண்டும்? இவ்விதம் என்வழி நில்லாத காமநோய் யான் சொல்லவும் யான் சொல்லுவ தொன்றனை அது கேட்கவும் ஆவது ஒன்று அன்று. ஆதலால் இக்காம நோய் மிகக் கொடியதாகும்" என்று கூறியதாயிற்று.

1257. நாணெனை வொன்றே வறியலங் காமத்தாற் பேணியார் பெட்ப செயின்.

பாத்தையிற்பிரிந்துவந்த தலைமகனோடு நிறையழிவார் கூடிய தலைமகள் புலவாமைக்குக் காரணம் யாதென்ற தோழிக்குச் சொல்லியது.

(பரி.) இ-ள். பேணியார் காமத்தாற் பெட்ப செயின்=நம்மால் விரும் பப்பட்டவர்வந்து காமத்தால் நாம் விரும்பியவற்றைச் செய்யுமளவின்,— நாண் என ஒன்றே அறியலம்=நாணென்றொன்றையும் அறியமாட்டேமா யிருக்கேம். எ-று.

பேணியாரெனச் செயப்படுபொருள் வினைமுதல்போலக் கூறப்பட்டது விரும்பியன=வேட்கைமிகவினைற் கருதியிருந்த கலவிகள். நாண்=பரத்தை யர் தோய்ந்த மார்பைத் தோய்தற்கு நாணுதல். ஒன்றென்பது ஈண்டுச் சிறி தென்னும் பொருட்டு. இழிவு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. நிறையழி வான் அறியாது கூடியதன் குற்றநோக்கி, அவளையுமுளப்படுத்தாள். (எ)

விளக்கம்:—"நம்மால் விரும்பப்பட்ட தலைவர் நம்மிடத்தே வந்து நாம் விரும்பியவற்றை யெல்லாம் செய்யும் அளவிலே நாண் என்பது ஒன்றையும் அறியாப் கூடாதவராக இருந்தோம்" என்று பரத்தையோடு கூடியிருந்து பிரிந்து வந்த தலைமகனோடு தன் நிறையழிவினால் புணர்ந்த தலைமகளை நோக்கித் தோழியானவள் உன்னைப் பிரிந்து சென்று பரத் தையோடு இருந்துவந்த தலைமகனிடத்து நீ கோபியாதிருப்பதற்குக் காரணம் யாது என வினவும், தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின் றது. அதாவது, தலைவியானவள் "தோழியே! நம்மால் விரும்பப் பட்ட தலைவர் நம்மிடத்தே வந்து நாம் ஆசை மிகுதியால் விரும்பி யிருந்த கலவிச்செயல்களை எல்லாம் செய்கின்ற காலத்து பரத்தையர் தோய்ந்த மார்பை நாம் தோய்தல் கூடாது என்று கொள்ளும் நாணத்தை அறியுதற்கு இல்லாமல் போயிற்று. ஆதலால், அவரிடத்துக் கோபியாது கூடியது நிறையழிவு என்னும் குற்றமேயாகும்" என்று கூறியதாயிற்று.

1258. பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றேநம் பெண்மை யுடைக்கும் படை.

இதுவுமது.

(பரி.) இ-ள். நம்பெண்மை உடைக்கும் படை=நங்நிறையாகியவரணை யழிக்குந் தானை—பன்மாயக் கள்வன் பணிமொழியன்றே=பல பொய்களை

வல்ல கள்வனுடைய தாழ்ந்தசொற்களன்றே! ஆனபின் அதுநிற்குமா றென்னே! எ-று.

பெண்மை ஈண்டுத் தலைமைபற்றி நிறைமேனின்றது. வந்தாற் புலக்கக் கடவேமென்றும், புலந்தால் அவன்சொற்களானுஞ் செயல்களானும் நீங்கே மென்றும் இவை முகலாகவெண்ணிக்கொண்டிருந்தன யாவுங் காணுது கல விக்கட்டன்னினுமுற்படும் வகை வந்துதோன்றினனென்பாள், 'பன்மாயக் கள்வன்' என்றாள். பணிமொழி=நம்மினுந்தானன்புமிகுதியுடையனுகச் சொல்லுஞ்சொற்கள். அவன் அத்தன்மையனுக, சொற்கள் அவையாக, நங நிறையழியாதொழியுமோ வென்பதாம். (அ)

விளக்கம்:—"நம்முடைய நிறையாகிய காவலை யழிக்கும் படை பல பொய்களைப் பேசவல்ல கள்வனுகிய காதலனது பணிவுடைய சொற்களன்றே! அவ்விதம் ஆனபிறகு நம்நிறை நிற்குமாறு எவ்விதம்?" என்று தலைவி கூறியதாக இக்கிருக்குறள் கூறுகின்றது. அதாவது, "தோழியே! நீ கூறியபடிக் காதலன் வந்தால் கோபித்துக் கொள்ளலா மென்றாய், அவ்விதம் கோபிப்போமாயின் அக்காதலனது சொற்களா லும் செயல்களாலும் அக்கோபத்தினின்றும் நீங்குவதாகதென்றும் எண்ணியிருந்த எண்ணங்களெல்லாம் ஒன்றும் நில்லாதபடி கலவியினி டத்தே அவன் வருவதற்குமுன் நாம் செல்லுங்படிப் பணிவாகிய சொற் கள் பலமிழந்து நம்மினும் தான் அன்புடையவனுகத் தெரிவித்தானதலால் நம் நிறை யழியாமல் நிற்குமோ?" என்று கூறியதாயிற்று.

1259. புலப்ப லெனச்சென்றேன் புல்லினே னெஞ்சங் கலத்த லுறுவது கண்டு.

இதுவுமது.

(பதி.) இ-ள். புலப்பல் எனச் சென்றேன்=அவர் வந்தபொழுது புலக் கக் கடவேனென்று கருதி முன்னில்லாது பிறிதோரிடத்துப்போயினேன்;— நெஞ்சம் கலத்தலுறுவது கண்டு புல்லினேன்=போயும், என்னெஞ்சம் நிறையினில்லாது அறைபோய் அவரோடு கலத்தலுடங்குதலையறிந்து, இனி அது வாயாதென்று புல்லினேன். எ-று.

வாயாமை=புலத்தற்கருவியாய நெஞ்சுதானே கலத்தற்கருவியாய் நிற்ற லின், அது முடியாமை. (க)

விளக்கம் :—"அவர் வந்தபொழுது கோபித்துக் கொள்வோமென்று எண்ணி அவர் முன் நில்லாமல் வேறொரு இடத்தில் சென்றேன். அவ்விதம் வேறொரிடத்துச் சென்றும் என் நெஞ்சம் காவலில் நில்லாமல் என்னோடு யுத்தம் செய்ய எண்ணுவதுபோல் அறைகூவீச் சென்று காதலரோடு கலப்பதற்கு ஆரம்பிப்பதை அறிந்து இனிக் கோபித்து நிற்பது நமக்கு முடியாது என்று எண்ணி அவர் எதிரில சென்று அவரை அணைந்தேன்" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது கோபிப்பதற்குக் கருவியாக இருந்த என் நெஞ்சே கலப்பதற்கும் கருவியாகி நிற்குமாயின் யான் எவ்விதம் கோபித்துத் தலைவரைச் சேராதிருப்பது. ஆதலால் அது முடியாத காரியம் என்று கூறியதாயிற்று.

1260. நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ புணர்ந்தூடி நிற்பே மெனல்.

இதுவுமது.

(பரி.) இ-ள். நிணம் தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு=நிணத்தைத் தீயின்கண்ணேயிட்டால் அஃதுருகுமாறுபோலத் தங்காதலரைக் கண்டால் நிறையழிந்துருகு நெஞ்சினையுடைய மகளிர்க்கு,—புணர்ந்து ஊடி நிற்பேம் எனல் உண்டோ=அவர் புணர யாமூடிப் பின்பு உணராது அந்நிலையே நிற்கக் கடவேமென்று கருதுதலுண்டாகுமோ, ஆகாது. எ-று.

புணர்தல் ஈண்டு மிக நணுகுதல்; எதிர்ப்படலுமாம். புணர வென்பது புணர்ந்தெனத் திரிந்துநின்றது. யானத்தன்மையேனாகலின் எனக்கஃதில்லையாயிற் றென்பதாம். (ய)

விளக்கம்:—"நிணமாகியகொழுப்பினைத் தீயினிடத்தே இட்டால அது எவ்விதம் உருகுமோ அவ்விதம் தம் காதலரைக் கண்டால நிறையழிந்து உருகும் நெஞ்சினையுடைய பெண்களுக்கு அக்காதலர் புணரயாம் கோபித்துப் பின்பு அவர் வணங்கியும் அவர் வழி நிலலாது கோபித்த அந்நிலையிலேயே நிற்கக் கடவோம் என்று எண்ணுதலும் உண்டாகுமோ, ஆகாததாகும்" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தோழியே! காதலரைக் கண்ட காலத்து உருகும் நெஞ்சினையுடைய எனக்கு எவ்விதம் புலந்து அப்புலவி தீராது நிற்பது கூடும், அது முடியா தென்பதாம்.

127. அதிகாரம்.

அவர்வயின்விதும்பல்.

(பரி.) அஃதாவது சேயிடைப்பிரிவின்கட்டலைமகனுந் தலைமகளும் வேட்கை மிகவினான் ஒருவரையொருவர் காண்டற்கு விரைதல். தலைமகன் பிரிவும் தலைமகளாற்றாமையும் அதிகாரப்பட்டுவருகின்றமையின், இருவரையுஞ்சுட்டிப் பொதுவாகிய பன்மைப்பாலாற் கூறினார். பிறரெல்லாம் இதனைத் தலைமகனை நினைந்து தலைமகள் விதுப்புறலென்றார்: சுட்டுப்பெயர் சொல்லுவான் குறிப்பொடு கூடிய பொருளுணர்த்துவதல்லது தானொன்றற்குப் பெயராகாமையானும், தலைவிகூற்றாய அதிகாரத்துத் தலைமகன் உயர்த்தற்பன்மையாற கூறப்படாமையானும், அஃதுரையன்மையறிக. இதனுட்டலைமகள் கூற்று நிறையழிவானிகழ்ந்ததாகலின், அவ்வியைபுபற்றி நிறையழிதலின் பின் வைககப்பட்டது.

விளக்கம்:—அதாவது பிரிந்து தூரத்தில உள்ள காலத்துத் தலைமகனும் தலைமகளும் விருப்பமிகுதியால் ஒருவரை பொருவர் பார்ப்பதற்கு விரைதல். தலைமகனது பிரிவும் தலைமகளது ஆற்றாமையும் மிகுதிப்பட்டு வருவதால் இருவரையும் சுட்டிப பொதுவாகக் கூறினார். தலைமகளது கூற்று நிறையழிவால உண்டாயினதாதலால் அச்சம்பந்தம் கருதி நிறையழிதலின் பிறகு இது வைக்கப்பட்டு உள்ளது.

1261. வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற நாளொற்றித் தேய்ந்த விரல்.

தலைமகள் காணடலவிதுப்பினாற் சொல்லியது.

(பரி:) இ - ள். அவர் சென்ற நாள் ஒற்றி விரல் தேய்ந்த=அவர் நம்மைப் பிரிந்துபோய நாள்கள் சுவரின்கணிழைததவற்றைததொட்டு எண்ணுதலான் என்விரல்கடேய்ந்தன,—கண்ணும் வாள் அற்றுப் புற்கென்ற=அது வேயன்றிஅவர்வரும் வழிபார்த்து என்கண்களும் ஒளியிழந்து புல்லியவாயின; இவ்வாறாயும் அவர் வரவுண்டாயிற்றில்லை. எ - று.

நாள் ஆகுபெயர். புல்லியவாதல்=நுண்ணியகாணமாட்டாமை. ஒற்றவென்பது ஒற்றியெனத் திரிந்துநின்றது. இனி யான்காணுமாறென்னையென்பதாம். நாளெண்ணலும் வழிபார்த்தலும் ஒருகாற் செய்தொழியாது இடையின்றிச்செய்தலான், விதுப்பாயிற்று. (க)

விளக்கம்:—"காதலர் நம்மைப்பிரிந்து போயின நாள்களெல்லாம் சுவரின் கண் குறித்து வைத்து அவற்றை ஒவ்வொன்றாகத் தொட்டு எண்ணுதலால் என் விரல்கள் தேய்ந்தனவாயின. அதுவேயுமல்லாமல் அவர் வருகின்ற வழியைப் பார்த்து என்னுடைய கண்களும் ஒளி யிழந்து துட்பமாகிய பொருள்களைக் காணமாட்டாவாயின. இவ்வாறு ஆகியும் காதலர் வரவு இன்னும் உண்டாகவில்லை" என்று பிரிந்து சென்ற தலைமகனைப் பார்ப்பதற்கு விரும்பிய விரைவின் மிகு தியால் தலைமகள் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைமகளானவள் யான் மன் செய்வேன். ஓர் நாளும் விடாது சென்ற நாள்களை எண்ணுதலும், வருகின்ற வழியைப் பார்த்தலும் ஒரு முறை செய்யாது பல முறை செய்வதால் சுவரைத்தொட்டு எண்ணு கின்ற என் விரல்கள் தேய்ந்தும், வரும் வழியையே பார்த்து நிற்கும் என் கண்கள் துட்பமாகிய பொருள்களைக் காணவண்மம் ஒளியிழந் தும் அவர் வரவு இன்னும் நேரவில்லை. அவ்விதமாயின் இஃது காத லரை யான் காணும் விதம் எவ்விதம் ஆகும் என்று கூறியதாயிற்று.

1262. இலங்கிழா யின்று மறப்பினென் மேனின்மேற் கலங்கழியுங் காரிகை நீத்து.

ஆற்றுமைமிகுதலின் இடையின்றிநினைக்கற்பாலையஃலை சிறிது மறக்கல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

(பரி.) இ - ள். இலங்கு இழாய்=விளங்காநின்றவிழையினையுடை யாய்!—இன்று மறப்பின்=காதலரை இன்று யான் மறப்பேனுயின்,—மேல் காரிகை நீத்து என்மேற் கலங் கழியும்=மேலுங்காரிகையென்னை நீப்ப என் மேற்கள் வளை கழல்வனவாம். எ - று.

இலங்கிழாயென்பது இதற்கு நீ யாதும் பரியலையென்னுங் குறிப்பிற்று. இன்று=யாளிறந்தபடுகின்றவின்று. மேலும் மறுபிறப்பினும். எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. நீப்பவென்பது நீத்தெனத் திரிந்துநின்றது. கழியு மென்னும் இடத்துநிகழ் பொருளின்மேழில் இடத்தின்மேனின்றது. இவ் வெல்லைக்கண்ணேனந்தால் மறுமைக்கண் அவரையெய்தியின்புறலாம், அதனுன் மறக்கற்பாலேனல்லே னென்பதாம். (உ)

விளக்கம்:—"ஒளிவிட்டு விளங்கும் ஆபரணங்களையுடையவளே! என் காதலரை இன்று யான் மறந்து விடுவேனுயின் மேலும் என் அழ

நினையிழந்து என் தோள்களும் வளையல்கள் கழல்வதற்குரிய இளைப் பினையடையும்" என்று ஆற்றுமை மிகுதியால் இடைவிடாது நினைத்தல் வேண்டாம், சிறிது மறத்தல் வேண்டும் என்று கூறிய தோழியை நோக் கித் தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது இவ் விதம் யான் அழகு இழந்து நிற்கவும் நீ அதற்காக யாதும் பரியாது உன் இயற்கை அழகோடு செயற்கை அழகாகிய ஆபரணங்களையும் அணிந்து நிற்கின்றாய். காதலர் என்னைவிட்டுப் பிரிந்தமையால் அழகு முந்து வளை கழன்றமையான் இறந்து போகக்கூடிய நிலையிலுள்ள இன்று அவரை நினையாது இருப்பின் மறுபிறப்பிலும் இவ்விதமே பிரிவாற்ற மையால் அழகிழந்து வளையல்கள் கழல ஏதுவாகும். ஆதலால் இவ் விறக்கும் தருவாயில் மறவாது நினைப்பேனுயின் மறுபிறப்பிலேனும் அவரை அடைந்து இன்புறுதல் கூடும் இனி நான் மறப்பதற்கு இல்லை என்று கூறியதாயிற்று.

1263. உரனசை இ யுள்ளந் துணையாகச் சென்றூர் வரனசை இ யின்னு முளேன்.

இதுவுமது.

(பரி.) இ - ள். உரன் நசைஇ உள்ளம் துணையாகச் சென்றூர் = இன்ப நுகர்தலே நசதாது வேறலே நசதி நாந் துணையாதலையிகழ்ந்து தம்மூக்கந் துணை யாகப் போயினர், — வரல் நசைஇ இன்னும் உளேன் = அவற்றையிகழ்ந்து ஈண்டுவருதலே நச்சுதலான, யானிவ்வெல்லையினு முளேனையினேன். எ - று.

உரனென்பது ஆகுபெயர். அந்நசையா னுயிர்வாழாநின்றேன். அஃ தில்லையாயின் இறந்துபடுவலென்பதாம். (கூ)

விளக்கம் :—"இன்பம் அனுபவித்தலே விரும்பாது யுத்தத்தில் வெல்லும் தொழிலையே விரும்பி நாம் துணையாக இருப்பதையும் இகழ்ந்து தம்முடைய ஊக்கமே தமக்குத் துணையாகப் போயினர், அவ் வெல்லும் தொழிலை இகழ்ந்து ஈண்டு வருவதை விரும்பி உள்ளதாலேயே யான் இவ்விதப் பிரிவாற்றுமையினும் பிழைத்து உள்ளேன்" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது காதலர் இன்பம் அனுபவித்தலே விரும்பாதும் நாம் துணையாய் இருத்தலே இழந்தும் போர்க்களத்தில் வெல்லும் தொழிலையே விரும்பித் தம் ஊக்கம் துணையாகப் போயினுரேனும், அவ்விதம் சென்றவர் திரும்பி என்னிடம் வருதலேயே யான் விரும்புதலால் அவ் விருப்ப

மிகுதிகொண்டே இன்னும் உயிர் வாழ்ந்து நிற்கின்றேன். அவ்விதம் அவரை விரும்பேனாயின் இத்துணை நாள் இறந்து இருத்தல் கூடும் என்று கூறியதாயிற்று.

1264. கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக் கோடுகொ டேறுமென் னெஞ்சு.

இதுவுமது.

(பரி.) இ - ள். பிரிந்தார் கூடிய காமம் வரவு உள்ளி = நீங்கியகாமத்தராய் நம்மைப் பிரிந்துபோயவர் மேற்கூடிய காமத்துடனே நங்கண் வருதலை நினைந்து,—என்னெஞ்சு கோடுகொடு ஏறும் = என்னெஞ்சு வருத்தமொழிந்து மேன்மேற் பணைத்தெழாநின்றது. எ - று.

வினைவயிற்பிரிவுழிக் காமவின்பநோக்காமையும் அது முடிந்துழி அதுவே நோக்கலுந் தலைமகற்கியல்பாகலின், கூடியகாமமொடென்றாள். ஒடுவுருபு விகாரத்தாற்றொக்கது. கோடுகொண்டேறலாகிய மரத்தது தொழில் நெஞ்சின்மேலேற்றப்பட்டது. கொண்டென்பது குறைந்துநின்றது. அஃதுள்ளிற்றிலேனாயின் இறந்துபடுவலென்பதாம். (ச)

விளக்கம் :—"காமத்தினின்றும் நீங்கியவராய் நம்மைப் பிரிந்து சென்ற காதலர் மேல காம உணர்ச்சிகொண்டு நம்மிடத்து வருதலை நினைந்து என் நெஞ்சானது வருத்தம் நீங்கி மேன்மேலும் குதூகலிக்கின்றது" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது அதாவது, தோழியே! காதலரானவர் தாம் ஏற்றுக்கொண்ட யுத்த வினையை முடிப்பது கருதிப் பிரிகின்ற காலத்துக் காம இன்பம் நோக்காது சென்றாராயினும் அவர் சென்ற தொழில் முடிகின்ற காலத்து அக்காமம் ஒன்றினைப்பே நோக்குவது அவருக்கு இயல்பாக உள்ளதால் அவ்வியல்பினை எண்ணி வருவர் என்ற எண்ணத்தால் என் நெஞ்சமானது மேலும் மேலும் சந்தோஷிக்கின்றது. அவ்விதம் நினைந்து மகிழ்ச்சியடையேனாயின் இவ்வளவு காலம் இறந்தே இருப்பேன் என்று கூறிய்தாயிற்று.

1265. காண்கமற் கொண்கனைக் கண்ணாரக் கண்டபி னீங்குமென் மென்றோட் பசப்பு.

தலைமகன்வரவுகூறி ஆற்றுயாய்ப் பசக்கற்பாலை யல்லையென்ற தோழிக்குச் சொல்லியது.

(பரி.) இ - ள். கண் ஆரக் கொண்கனைக் காண்க = என் கண்களாரும வகை என்கொண்கனை யான் காணபேனாக,—கண்டபின் என் மென்றோட்

பசப்பு நீங்கும்=அநஙனங் கண்டபின் என் மெல்லியதோளின்கட் பசப்புத் தானே நீங்கும். எ - று.

காணகவென்பது ஈண்டு வேண்டிக்கோடற்பொருட்டு. அது வேண்டு மென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. கேட்ட துணையா னீங்காதென்பதாம். (௫)

விளக்கம்:—"என் கண்கள் நிறையும் வண்ணம் என் காதலரை யான் பார்பபேனாக! அவ்விதம் பார்த்த பிறகு என் மென்மைசுங்கிய தோளினிடத்தே தோன்றிய நிறவேறுபாடானது தானே நீங்கி விடும்" என்று தலைமகன் வருகையைச் சொல்லி நீ ஆற்றாமையால் நிறவேறு பாட்டினை அடைதல் வேண்டாம் என்ற தோழியை நோக்கித் தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது அதாவது தோழியே! நீ தலை வர் வருகின்றார் என்று சொல்லும் சொற்களைக் காதால் கேட்பதால் என் தோளில் உண்டாகும் பசப்பு நீங்காது. அவர் வருகையை என் கண்ணாரக் கண்ட பின்பே நிறவேறுபாடாகிய பசப்புத் தனக்குத் தானே நீங்கும் என்று கூறியதாயிற்று.

1266. வருகமற் கொண்க னொருநாட் பருகுவன் பைதனோ யெல்லாங் கெட.

இதுவுமது.

(பரி.) இ - ள். கொண்கன் ஒருநாள் வருக=இத்துணைநாளும் வாராக் கொணகன் ஒருநாள் என்கண வருவானாக!—பைதல் நோயெல்லாம் கெடப் பருகுவன்=வந்தாற் பையுளைசசெய்கின்ற இந்நோயெல்லாங்கெட அவ்வமிழ் தத்தை வாயில்க ளைந்தானும் பருகக்கடவேன்; எ - று.

வருகவென்பதற்கும் மன்னென்பதற்கும் மேலுரைத்தவாறே கொள்க. அக்குறிப்பு அவ்வொருநாளைக்குள்ளே இனி வரககடவநோய்களுங் கெடுப்ப லென்பதாம். (௬)

விளக்கம்:—"இத்துணை நாளும் வாராத என் காதலர் ஒரு நாள் என்னிடத்தே வருவாராக! அவ்விதம் அவர் வந்தால் துன்பத் தைச செய்கின்ற நோயெல்லாம் கெடும்படி அவ்வமிழ்தத்தை மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐந்தின் வழியானும் குடிக்கக்கடவேன்" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தோழியே! இத்துணை நாளும் என் காதலர் என்னிடத்து வாரா திருக்கினும் ஒருநாள் என்னிடத்து வந்தே தீர்வர். அவ்விதம் வரு

கின்ற காலத்தும் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம் புலன்களாகிய ஐந்து வாயில்களாலும் அமிழ்தம்போன்ற அவர் வரு கையைக் குடித்து இப்போது உள்ள நோய்களையும் இனி வரவேண்டு வனவாகிய நோய்களையும் அவ்வொரு நாளிலேயே தீர்த்துக்கொள் வேன் என்று கூறியதாயிற்று.

1267. புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப் கண்ணன்ன கேளிர் வரின். [பேன்கொல்

இதுவுமது.

(பரி.) இ - ள். கண் அன்ன கேளிர் வரின் = கண்போற்சிறந்த கேளிர் வருவாயின், — புலப்பேன்கொல் = அவர் வாவு நீட்டித்தமைநோக்கி யான் புலக்கக் கடவேனே, — புல்லுவேன்கொல் = அன்றி என்னுற்றுமை நோக்கிப் புல்லக் கடவேனே, — கலப்பேன்கொல் = அவ்விரண்டும் வேண்டுதலான் அவ் விரு செயல்களையும் விரவக்கடவேனே, யாது செய்யக்கடவேன்! எ - று.

புலவியும் புல்லலும் ஓர்பொழுதின்கண் விரவாமையிற் 'கலப்பேன் கொல்' என்றாள். மூன்றனையுஞ்செய்தல் கருத்தாகலின், வித்துப்பாயிற்று. இனிக் கலப்பேன்கொலென்பதற்கு ஒருபுதுமைசெய்யாது பிரியாதகாட் போலக் கலந்தொழுகுவேனே வென்றுரைப்பாரு முளர். (எ)

விளக்கம்:—"என் கண்போல் சிறந்த காதலர் வருவாராயின், அவர் குறித்த பருவத்து வாராது காலம் நீட்டித்தமையை எண்ணியான் அவரிடத்துக் கோபிப்பேனே, அல்லது என் ஆற்றுமை மிகுதியால் அவரை அணைவேனே, அவ்விரண்டு செயல்களும் கலவிக்கு வேண்டிய படியால் கோபித்தலும் அணைதலுமாகிய இரண்டனையும் ஒன்றன்பின் ஒன்றுகக் கலந்து செய்வேனே, யாது செய்வேனே அறியேன்' என்று தலைமகள் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைவன் வருகையைக் கூறுகின்ற தோழியைப் பார்த்து, தோழியே! நீ கூறுகின் றபடிக் காதலர் வருவாராயின் அவர் நெடும்பொழுது கழிந்துவந்த தன் மையை நோக்கிக் கோபித்தலைச் செய்து அவ்வுடல் நீங்கியவுடன் புணர் வேனே, அல்லது அவரைப் பிரிந்து உள்ள ஆற்றுமை மிகுதியால் யாதொரு கோபித்தலையும் செய்யாது அவர் பிரிந்திராது கூடியிருந்த காலத்தில் அவரோடு கலந்து ஒழுகியதுபோல் கலந்து இன்பத்தை

அனுபவிப்பேனோ, யாது செய்வேனோ அறிகிலேன் என்று காதலனைக் காணவேண்டி விரைகின்ற குறிப்பினைக் கூறியதாயிற்று.

1268. வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து மாலை யயர்கம் விருந்து.

வேந்தற்குற்றுழிப்பிரிந்த தலையகன் வினைமுடிவுநீட்டித்துழித் தலைமகளை நினைந்து தன்னுள்ளே சொல்லியது.

(பரி.) இ - ள். வேந்தன் வினைகலந்து வென்றீக=வேந்தன் வினைசெய் தலைப்புரிந்து வெல்வானாக,—மனைகலந்து மாலைவிருந்து அயர்கம்=யாமும் மனைவியைச் சென்றுகூடி ஆண்டை மாலைப்பொழுதிற்கு விருந்தயர்வே மாக. எ-று.

மனையென்பது ஈண்டாகுபெயர், "மங்கல மென்ப மனைமாட்சி" என் புழிப்போல. வினைசெய்தற்கண்வந்த மாலைப்பொழுதிற்கு எதிர்கோடல் அலங்காரத்தன் முதலியவன்மையின், மனைகலந்து மாலைக்கு விருந்தயர்கம் என்றான். நான்கனுருபு விகாரத்தாற்றொக்கது. இது வினைமுடியா முன்கூற லான் விதப்பாயிற்று. பிறரெல்லாம் இதனைத் தலைமகள் கூற்றாக்கி யுரைத் தனர்; தலைமகனைக் கூறுது வேந்தன்வெல்க என்றும், 'மனைகலந்து' என்றும், மாலைப்பொழுதின்கண் விருந்தயர்கம் என்றும், வந்த அவ்வுரைதானே அது கூடாமைக்குக் காரியமாயிற்று. (அ)

விளக்கம்:—"நம்முடைய வேந்தன் போரினைச் செய்துதற் தன் பகைவரை வெல்லட்டும். யாமும் மனைவியிடத்திற் போய் அவளைக்கூடி அன்றை மாலைப்பொழுதிற்கு விருந்தினைச் செய்வோம்" என்று தன் அரசனுக்குப் பகைவரால் யுத்தம் நேர்ந்த காலத்து அதன்பொருட்டுத் தலைவியை விட்டுப் பிரிந்து யுத்தத்திற்குச் சென்று அவ்விடத்து அவ் யுத்தமானது நீட்டித்த காலத்துத் தலைமகளை நினைந்து தனக்குள்ளேயே தலைமகன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைவனானவன் என்னுடைய அரசன் பகை அரசரிடத்து யுத்தம் செய்து அவர்களை விரைவில் வெல்வானாயின் யானும் பிரிந்து வந்த மனைவியிடத்திற் போய்க் கூடி மாலைப்பொழுதெல்லாம் என்னை எதிர்கொள்ளுதலும் அலங்கரித்தலும் முதலிய செயல்களைச் செய்யும் படிச் செய்து இன்பந்துய்ப்பேன் என்று தலைவியினிடத்துச் செல்ல விரும்பிய விரைவினைக் கூறியதாயிற்று.

1269. ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ் சேட்சென்
வருநாள் வைத்தேங்கு பவர்க்கு. [ரூர்

இதுவுமது.

(பரி.) இ-ள். சேண் சென்ரூர் வருநாள் வைத்து ஏங்குபவர்க்கு=சே ணிடைச்சென்ற தங்காதலர் மீண்டுவரக்குறித்த நாளே யுட்கொண்டு அது வருந்துணையும் உயிர்தாங்கி வருந்து மகளிர்க்கு,—ஒருநாள் ஏழுநாள்போல் செல்லும்=ஒருநாள் பலநாள்போல நெடிதாகக்காட்டும்; எ-று.

ஏழென்பது அதற்குமேலாய மிக்க பன்மைகுறித்துநின்றது, "ஒருவர் கூறை யெழுவ ருடுத்து" என்ரூர்போல. தலைமகள் வருத்தம் பிறர்மேலிட் டுக் கூறியவாறு. இதனுள் இதுவுந் தலைமகள் கூற்ருகாமை யறிக. இருநா ளென்று பாடமோதுவாரு முளர். (கூ)

விளக்கம்:—"தம்மைப் பிரிந்து நெடுந்தூரத்தில் சென்ற தம் மூடைய காதலர் மறுபடியும் திரும்பிவர எண்ணிய நாளினை மனத்துட் கொண்டு அந்நாள் வருமளவும் உயிர் தாங்கி வருந்துகின்ற பெண்களுக் குக் கழிகின்ற நாள்களில் ஒவ்வொருநாளும் பல நாள்கள்போல நீண்ட பொழுதாகக் காட்டும்" என்று தலைமகன் கூறியதாக இத்திருக் குறள் கூறுகின்றது. அதாவது பிரிந்து சென்ற தலைமகன் தான் குறித்த பருவத்துப் போவதை எண்ணினுனுகலால், அப்பருவம் வரை யும் தன் வருகையை நோக்கி வருந்தியுள்ள தன் தலைவியின் வருத்தத் தைப் பிறர்மேல் வைத்துப் பொதுவாகக் கூறினுன். காதலரைப் பிரிந்த பெண்களுக்குக் காதலன் வரும் வரையும் கழியும் நாள்களுள் ஒருநாள் பல நாள்கள்போல் கழியாது நெடியதாகத் தோன்றும் என்று தான் தலை மகளிடத்து விரைந்து செல்லவேண்டும் என்று கூறியதாயிற்று.

1270. பெறினென்னும் பெற்றக்கா லென்னு முறி
முள்ள முடைந்துக்கக் கால். [னென்னு

இதுவுமது.

(பரி.) இ-ள். உள்ளம் உடைந்து உக்கக்கால்=காதலி நம் பிரிவினையாற் ரூது உள்ளமுடைந்திறந்துபட்டவழி,—பெறின் என்=நம்மைப் பெறக்கட வளாஞலென், —பெற்றக்கால் என்=அதுவன்றியே பெற்ரூலென்,—உறின் என்=அதுவன்றியே மெய்யுறக்கலந்தாற்ரூனென்? இவையொன்ரூலும் பய னில்லை; எ-று.

இம்மூன்றும் உடம்பொடுபுணர்த்துக் கூறப்பட்டன, அதன்மேலும் முன்னே வழக்குண்மையின். அதற்கு முன்னே யான்செல்லவேண்டுமென்பது கருத்தாகலின், வினாப்பாயிற்று. இது தலைமகள் கூற்றாயவழி இரங்கலாவதல்லது வினாப்பாகாமையறிக. (ம)

விளக்கம் :— "நம் காதலி நம் பிரிவினைப் பொறாதவளாகி மனமுடைந்து இறந்து போவாளாயின் நம்மைப் பெறக் கூடியவளாய் இருந்தாலும் அல்லது நம்மைப் பெற்றவிட்டாலும் அல்லது இரண்டு தேகமும் பொருந்தும்படி புணர்ந்தாலும் இவையாதொன்றாலும் பயன் இல்லாமல்போம்" என்று தலைமகன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைமகனவன் தான் சென்ற தொழில் காலம் நீட்டித்த விடத்துத் தனக்குள்ளேயே வருந்துவானைப் என் தலைவி என் பிரிவாற்றாமையால் இறந்து படுவள் அவ்வித காதலியை யான் அடைய விரும்பினால் விரைந்து செல்லுதல் வேண்டும் என்று தனக்குள்ள விரைவினைத் தனக்குள்ளே சொல்லிக் கொண்டதாயிற்று.

---

128. அதிகாரம்.

குறிப்பறிவுறுத்தல்.

(பரி.) அஃதாவது தலைமகன், தலைமகள், தோழியென்றிவர் ஒருவர் குறிப்பினை யொருவர்க்கறிவுறுத்தல். இது பிரிந்துபோய தலைமகன் வந்து கூடியவழி நிகழ்வதாகலின், அவர்வயின்விதும்பலின்பின் வைக்கப்பட்டது.

விளக்கம் :—அதாவது தலைமகன், தலைமகள், தோழி என்னும் மூவரும் ஒருவர் குறிப்பினை ஒருவர்க்கு அறியும்படிச் செய்தல். இக் குறிப்பறிவுறுத்தல் பிரிந்து சென்ற தலைமகன் தலைவியினிடத்தே வந்து கூடியகாலத்து உண்டாவது ஒன்று ஆதலால் அவர்வயின்விதும்பல் என்னும் அதிகாரத்திற்குப் பிறகு வைக்கப்பட்டு உள்ளது.

1271. கரபபினுங் கையிகந் தொல்லா நின் னுண்க
ணுரைக்க லுறுவதொன் றுண்டு.

பிரிந்துகூடிய தலைமகன் வேட்கைமிகவிறும்புதுவது பன்னுஞ் ப்ராரட்டத் தலைமகள் இதுவொன் றுடைந்தென அத்தியவழி அதனையவன் குறிப்பானறிந்து அவனவட்குச் சொல்லியது.

(பரி.) இ-ள். *காப்பினும்*=நீ சொல்லாது மறைத்தாயாயினும்,—*ஒல்லாகையிகந்து*=*அதற்குடம்படாதே நின்னைக் கைகடந்து*,—*நின் உண்கண் உரைக்கலுறுவது ஒன்று உண்டு*=*நின்னுண்கண்களே எமக்குச் சொல்ல லுறுவதொரு காரியமுண்டாயிராநின்றது*, *இனியதனை நீயே தெளியச் சொல்வாயாக*. எ-று.

காத்தல்=*நாணுடைடக்குதல்*. *தன்கட் பிரிதற்குறிப்புளதாகக் கருதி வேறுபட்டாளது வேறுபாடு குறிப்பானறிந்து அவட்குத் தன் பிரியாமைக் குறிப்பறிவுறுத்தவாறு*. (க)

விளக்கம் :—"நீ சொல்லாமல் மறைத்து வைத்தாயாயின் அம் மறைத்தற்கு உடன்படாமல் உன்னைக் கை கடந்து உன்னுடைய மையுண்ட கண்களே எனக்குச் சொல்ல எண்ணிய காரியம் ஒன்று உண்டாயிருந்தது. ஆதலால் அக்கண்கள் எனக்குத் தெரிவிப்பதுடன் நீயே அதனை இனி எனக்குத் தெளியச் செய்வாயாக" என்று தலைவன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது பிரிந்துசென்று வினைமுடித்து வந்து தலைமகளைக் கூடிய தலைமகன் பிரிவாற்றுமையால் உண்டாகிய விருப்பத்தின் மிகுதியால் தான் செய்த கலவிபோல் தினந்தோறும் புதிது புதிதாகக் கலவிகளைச் செய்தலும் அதைக் கண்ட தலைமகள் இவன் இவ்விதம் ஏதோ புதியவன் போல் ஆற்றுமை கொண்டு புதிது புதிதாகக் கலவிகளைச் செய்து இன்பம் துய்க்கின்றனதலால் நம்மை மறபடியும் பிரிந்து செல்வதற்கு எண்ணி இவ்விதமெல்லாம் செய்கின்றனன் போலும் என்று மனத்திடத்தே அஞ்சிய இடத்து அக்குறிப்பினை அவள் கண்குறிகளாலும் மனவேறுபாட்டினாலும் அறிந்த தலைமகன் தன் காதலிக்குத் தன் பிரியாமைக் குறிப்பினை உணர்த்துவான். "ஓ! காதலியே! நீ மனத்தில் எண்ணி உள்ளதை நீ வாக்கால் கூறுவிடினும் உன் கண்கள் உன் மறைத்தலுக்கு அடங்காது உன் ரகசியத்தை எனக்குச் சொல்லுவதாய் உள்ளது. அவ்விதம் அக் கண்கள் சொல்லுவதுடன் நீயே தெளியச் சொல்லுதல் கூடும்" என்று தன் குறிப்பினை அறிவித்ததாயிற்று.

1272. கண்ணிறைந்தகாரிகைக்காம்பேர்தோட்பேதைக்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது. [குப்

நாணால் அவள் அதுகொள்ளாளாயவழி அவள் தோழிக்குச் சொல்லியது.

(பரி.) இ-ள். *கண் நிறைந்த காரிகைக் காம்பு ஏர் தோட்பேதைக்கு*=*என்கண்ணிறைந்த வழகினையும் வேயையொத்த தோளினையுமுடைய நின்*

பேதைக்கு-பெண் நிறைந்த ரீர்மை பெரிது=பெண்பாலாரிடத்து நிறைந்த மடமை அவ்வளவன்றி மிகுந்தது. எ-று.

இலதாய பிரிவினைத் தன்கணேற்றி அதற்கஞ்சுதலான் இவ்வாறு கூறினன். (உ)

விளக்கம் :—"என் கண்ணிற்கு நிறைந்த அழகினையும் மூங்கிலை யொத்த தோளினையும் உடைய உனது பேதைக்குப் பெண்பாலாரிடத்து இருக்கவேண்டிய அறியாமை எவ்வளவோ அவ் அளவிற்கு அதிகமாகவே உள்ளது" என்று தலைவன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைவனுனவன் தன் தலைவியிடத்துத் தான் பிரியாமையைக் குறிப்பித்தும் அவள் வேறுபட்டாளாதலால் நீ எதற்காக இவ்வித வேறுபாட்டினை அடைந்தனை எனப் பலமுறை தேட்டும் அவள் நாணமிகுதியால் ஒன்றும் சொல்லாதிருக்கவும் அவள் தோழியை நோக்கித் தோழியே! உன் தோழியோ உலகத்து உள்ள பெண்கள் எல்லாரிலும் அறியாமை மேற்கொண்டவள் போலும்! எனெனில் இல்லாத பிரிவினை இருப்பதாக எண்ணிப் பயந்து வேறுபடுகின்றாளாதலால் என்று கூறியதாயிற்று.

1273. மணியுட் டிகழ்தரு நூல்போன் மடந்தை யணியுட் டிகழ்வதொன் றுண்டு.

இதுவுமது.

(பரி.) இ-ள். மணியுள் திகழ்தரும் நூல்போல்=கோக்கப்பட்ட பளிக்கு மணியகத்துக் கிடந்து புறத்துப் புலனுய நூல்போல,—மடந்தை அணியுள் திகழ்வது ஒன்று உண்டு=இம்மடந்தைய தணியகத்துக் கிடந்து புறத்துப் புலனுகின்றதொரு குறிப்புண்டு. எ-று.

அணி=புணர்ச்சியானுய அழகு. அதனகத்துக் கிடத்தலாவது அஞ்ஞெடு உடனிகழ்தற்பாலதன்றிவைத்து உடனிகழ்தல். அதனேயானறிகின்றிலேன், நீயறிந்துகூறல்வேண்டுமென்பது கருத்து. (ஊ)

விளக்கம் :—"கோக்கப்பட்ட பளிக்கு மணியின் உள்ளே கிடந்து வெளியிலேயும் காணப்படும் நூலைப்போல் இப்பெண்ணினது புணர்ச்சியினுள் கிடந்து வெளியே காணப்படுகின்ற ஒரு குறிப்பு உண்டு" என்று தலைவன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தோழியே! கோக்கப்பட்ட நூல் மணிக்கு உள் இருந்தும் மணியின் தன்மையால் வெளியே காணுமாறுபோல மனத்துக்குள் ஏதோ

ஒரு குறிப்பு அடங்கியிருந்தும் அவளுடைய புணர்ச்சியில் தோன்றும் வேறுபாட்டினால் அது புலப்படுகின்றதாதலால் அக்குறிப்பு இது என்று யான் அறிந்துகொள்வதற்கு இல்லை, நீ உயிர்த் தோழியாதலால் அதனை அறிந்து, சொல்லல் வேண்டும் என்பதாயிற்று.

1274. முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு.

இதுவுமது.

(பதி.) இ-ள். முகை மொக்குள் உள்ளது நாற்றம்போல்=முகையது முகிழ்ப்பினுளதாய்ப் புறத்துப் புலனாகாத நாற்றம்போல,—பேதை நகை மொக்குள் உள்ளது ஒன்று உண்டு=பின்பேதை என்னுடு நகைக்கருது நகையது முகிழ்ப்பினுளதாகிப் புறத்துப்புலனாகாததோர் குறிப்புண்டு; எ-று.

முகிழ்ப்பு=முகிர்ச்சியாற் புடைபடுதல். நகை=புணர்ச்சியின்பத்தாலிகழ்வது. (ஈ)

விளக்கம் :—"பூவின் அரும்பினது விரிதலில் உண்டாகும் வெளியே காணப்படாத வாசனையைப்போல் உன்னுடைய தலைவியான வள் என்னுடு மகிழக் கருதும் மகிழ்ச்சியின் புடை பெயர்தலால் வெளியே காணப்படாததாகிய ஒரு குறிப்பு உண்டு" என்று தலைவன் கூறியதாக இத் திருக்குறள் கூறுகின்றது. அதாவது "தோழியே! பூவின் அரும்பானது முதிர்ந்து அம்முதிர்ச்சியின் தன்மையால் இதழ் கள் விரிகின்ற சமயத்துத் தோன்றுகின்ற மணத்தை யெவ்வாறு காணுதல் கூடாதோ அதுபோல் புணர்ச்சி முடிந்து பிரிகின்ற காலத்து இவளிடத்து உண்டாகும் மகிழ்ச்சியின் தன்மையை நோக்க அறிந்துகொள்வதற்குக் கூடாத குறிப்பு ஒன்று உள்ளதாகக் காணப்படுகின்றது" என்று கூறினையிற்று.

1275. செறிதொடி செய்திறந்த கள்ள முறுதுயர் தீர்க்கு மருந்தொன் றுடைத்து.

இதுவுமது.

(பதி.) இ-ள். செறி தொடி செய்து இறந்த கள்ளம்=நெருங்கிய வளை களையுடையாள் என்கணில்லாததொன்றினையுட்கொண்டு அது காரணமாக என்னை மறைத்துப்போன குறிப்பு—உறு துயர் தீர்க்குமருந்து ஒன்று உடைத்து=என்மிக்க துயரத்தைத் தீர்க்குமருந்தாவதொன்றினையுடைத்து; எ-று.

உட்கொண்டது - பிரிவு. கள்ளம் ஆகுபெயர். முறைத்தற்குறிப்பு = தானு முடன்போக்குட் கொண்டது. உறுதுயர் = நன்றுசெய்யத் தீங்கு வினைதலானும் அதுதான் தீர்தற்றம்பெருமையானும் உளதாயது. மருந்து = அப்பிரிவின்மை தோழியாற்றெளிவித்தல். நீ யதுசெய்தல்வேண்டுமென்பதாம். (சு)

விளக்கம் :—"நெருங்கிய வளையல்களை உடையாய்! என்னிடத்து இல்லாத பிரிவு ஒன்றினை உள்ளதாக மனந் நம்கொண்டு அதன் காரணமாக என்னை மறைத்துச் சென்ற குறிப்பு எனக்குள்ள மிகுந்த துக்கத்தினைத் தீர்க்கும் ஓர் மருந்தினை உடையதாய் இருக்கின்றது" என்று தலைவன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தோழியே! உன் தலைவியினது குறிப்பானது என்னுடன் வருதலை எண்ணுவதாய் உள்ளது. நான் நன்மை செய்பவரும் தீங்குவினைவது போல் விருப்ப மிகுதியால் பலதிறப்பட்ட கலவிகளைச் செய்ததால் அது பிரிதற்குறிப்பு என்று உணர்ந்து எனக்கு நீங்காத மிகுந்த துயரத்தை உண்டு பண்ணினாள். அக்குறிப்பு யான் உணர்ந்ததனதலால் நான் பிரிதலில்லை என்பதையும், அவள் உடன்போதல் வேண்டுவதில்லை என்பதையும் நீ அவளுக்குத் தெரிவித்தல் வேண்டும் என்று கூறினனுயிற்று.

1276. பெரிதாற்றிப் பெட்பக் கலக்கத லரிதாற்றி யன்பின்மை சூழ்வ துடைத்து.

தலைமகன்குறிப்பறிந்த தலைமகள் அதனை அகுதெளிவிக்குச் சென்ற தோழிக்கறிவுறுத்தது.

(பரி.) இ-ள். பெரிது ஆற்றிப் பெட்பக் கலத்தல் = காதலர் வந்து தம் பிரிவினுலுய துன்பத்தினை மிகவுமாற்றி காமகிழும்வண்ணங் கலக்கின்ற கலவி, — அரிது ஆற்றி அன்பின்மை சூழ்வது உடைத்து = இருந்தவாற்றுன் மேலுமத்துன்பத்தினை அரிதாகவாற்றியிருந்து அவரன்பின்மையை நினையுந் தன்மையுடைத்து. எ-று.

பிரிதற்குறிப்பினுற்செய்கின்றதாகலான், முடிவில் இன்னுதாகாதென்பதாம். (சு)

விளக்கம்:—"பிரிந்து சென்ற காதலர் நம்மிடத்து வந்து தம் பிரிவினுலாகிய துன்பத்தினை மிகுதியும் ஆற்றுவிப்படி செய்து நாம் மகிழ்ச்சியடையும் விதம் நம்மோடு கலக்கின்ற கலவியானது இருந்த விதத்தை

எண்ணுமிடத்து மேலும் அப்பிரிதல் துன்பத்தினீ அரியதாகப் பொறுத்து இருந்து நம்மிடத்து அவர் அன்பு இல்லாமையை நினைக்குந் தன்மையுடையதாக உள்ளது" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைமகனது குறிப்பினை இதுவென்று அறிந்த தலைமகள் அக்குறிப்பினைத் தலைமகளைத் தெளிவிக்கச் சென்ற தோழிக்குச் சொல்லுவாளாய்த் 'தோழியே! நம் காதலன் நம்மிடத்துச் செய்யும் அன்புடைமையையும் கலவி இன்பங்களையும் நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் இனிமையுடையதாக இப்போது காணப்படினும் அவன் செய்கின்ற கலவிக் குறிப்புகளெல்லாம் பிரிதற் குறிப்பாக உள்ளனவாதலால் முடிவில் இன்னுமைபாகிய துன்பத்தையே விளக்கும் என்று கூறியதாயிற்று.

1277. தண்ணந் துறைவன் றணந்தமை நம்மினு முன்ன முணர்ந்த வளை.

இருவுமது.

(பரி.) இ-ள். தண்ணந்துறைவன் தணந்தமை = குளிர்ந்த துறையையுடையவன் நம்மை மெய்யாற்கூடியிருந்தே மனத்தாற்பிரிந்தமையை, — நம்மினும் வளை முன்னம் உணர்ந்த = அவன்குறிப்பானறிதற்குரிய நம்மினும் இவ்வளைகள் முன்னேயறிந்தன. எ-று.

கருத்துநிகழ்ந்ததாகலின் 'தணந்தமை' என்றும், யான் தெளியவுணர்தற்குமுன்னே தோள்கண் மெலிந்தனவென்பாள் அதனை வளைமேலேற்றி அதுதன்னை யுணர்வுடைத்தாக்கியுங் கூறினாள். (எ)

விளக்கம் :—"குளிர்ந்த நீர்த்துறையையுடைய நம் தலைவன் நம்மைத் தேகத்தால் கூடியிருந்தே மனத்தால் பிரிந்ததை அவன் குறிப்பால் அறிதற்கு உரிய நம்மைக்காட்டினும் இவ்வளையல்கள் முன்னரே அறிந்து கொண்டன" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தோழியே! நம் தலைவன் நம்மைத் தேகத்தோடு தேகம் பொருந்தும்படி இறுகத் தழுவிப் புணர்ந்துகொண்டு மனத்தில் பிரிதற் குறிப்புகொண்டு செய்யும் கலவிகளை நாம் அறிவதற்கு முன்னே நம் தோள்கள் அறிந்து மெலிந்துபோயின. அம்மெலிதலால் வளையல் களும் கழல்வன ஆயின. நம்மினும் நம்வளையல்கள் தலைவன் குறிப்பினை அறிதலில் மிக்க உணர்வுடையனவாக உள்ளன என்று கூறியதாயிற்று.

1278. நெருநற்றுச் சென்ருரெங் காதலர் யாமு மெழுநாளே மேனி பசந்து.

இதுவுமது.

(பரி.) இ-ள். எங்காதலர் சென்ருர் நெருநற்று=எங்காதலர் பிரிந்து போயினர் நெருநற்றே,—யாமும் மேனி பசந்து எழுநாளேம்=அப்பிரிவிற்கு யாமும் மேனிபசந்து எழுநாளுடையமாயினேம். எ-று.

நெருநற்றுச்செய்த தலையளியாற் பிரிவு தணியப்பட்டதென்பாள் 'நெருநற்றுச்சென்ருர்' என்றும், அதனை யையுற்றுச்செல்கின்றது எழுநாளுண்டாகலின் அன்றே மேனிபசந்ததென்பாள் 'மேனிபசந்தெழுநாளேம்' என்றுங் கூறினுள். இவ்வாற்றுற் றலைமகனது பிரிதற்குறிப்பினையுணர்த்தி நின்றது. (அ)

விளக்கம் :—"எம்முடைய காதலர் எம்மை விட்டுப் பிரிந்து போயது நேற்றேயாயினும், அவ்வித பிரிவிற்கு யாமும் தேக நிறம் மாறுபட்டுப் பசப்பினைக்கொண்டது எழுநாள்களுக்கு முன்னரேயாம்" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தோழியே! நம் காதலர் நம்மைப் பிரிந்து சென்றது நேற்றுத் தினமேயாயினும் அப்பிரிவினை முன்னரே குறிப்பால் உணர்ந்த யாம் எழு நாள்களுக்கு முன்னே தேகத்தில் நிறவேறுபாட்டினைக் கொள்வதாக இருக்கோம் என்று அவர் பிரிதற் குறிப்பு உணர்ந்தோமோ அன்றே நிறவேறுபாட்டினை அடைந்தோமாதலால் அதனை நீ இனி எமக்கு உணர்த்தவேண்டுவதில்லை என்று கூறியதாயிற்று.

1279. தொடிநோக்கி மென்ருளு நோக்கி யடிநோக்கி யஃதாண் டவள்செய் தது.

தலைமகள் குறிப்பறிந்த தோழி அதனைத் தலைமகற் கறிவித்தது.

(பரி.) இ-ள். யானதுதெளிவித்தவழித் தெளியாது,—தொடி நோக்கி=அவர் பிரிய யானீண்டிருப்பின் இவைகில்லாவெனத் தன்றொடியை நோக்கி—மென்ருளும் நோக்கி அதற்கேதுவாக இவைமெலியுமெனத் தன்மென்ருள்களையுநோக்கி—அடி நோக்கி=பின்னிவ்விரண்டும் நிகழாமல் நீர் நடந்து காத்தல்வேண்டுமெனத் தன்னடியையுநோக்கி—ஆண்டு அவள் செய்தது அஃது=அங்ஙனம் அவள்செய்த குறிப்பு உடன்போக்காயிருந்தது.

செய்தகுறிப்பு=செய்தற்கேதுவாய குறிப்பு. அஃதென்றாள்' "செறி தொடி செய்திறந்தகள்ள" மென்றானாகலின். பிரிதற்குறிப்புண்டாயின் அஃ தழுங்குதல் பயன். (௯)

விளக்கம்:—"யான் உமது குறிப்பினைத் தெளிவித்த காலத்துத் தெளியாதவளாய் அவர் பிரிய யான் இங்கு இருப்பேனாயின் இவை நில்லா என்று தம் வளையல்களை நோக்கி, அவற்றிற்கே எதுவாகிய இவை மெலியுமென்று தன் மெல்லிய தோள்களையும் நோக்கி, பின்னர் இவ் விரண்டும் உண்டாகாமல் நீர் நடந்து காத்தல் வேண்டுமென்று தன் பாதங்களையும் நோக்கி அவள் செய்த குறிப்பானது உடன் போக்காகவே இருந்தது" என்று தோழி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தலைமகள் குறிப்பு இதுவென்று அறிந்த தோழியானவள் அக்குறிப்பினைத் தலைமகனுக்கு உணர்த்துவாளாய் தலைவனே! யான் அவளைக் கண்டகாலத்து அவள் தெளியும்படிச் சொல்லிய சொற்களைக் கொண்டு சிறிதும் தெளியாதவளாய் அவர் பிரிந்து யான் இங்கு இருப் பின் இவ்வளையல்கள் என் கைகளில் நில்லா. அவ்விதம் நில்லாமல் போதற்குக் காரணமாக இத்தோள்களும் மெலியும் என்று அவைகளைப் பார்த்து வருந்தியதுடன் இவ்விதம் வளைகழலாமலும் தோள்கள் மெலியாமலும் இப்பாதங்கள் தான் நடந்து உடன் சென்று காத்தல் வேண்டும் என்றதன் பாதங்களையும் நோக்கினாளாதலால் அவ்விதம் அவள் செய்த குறிப்பெல்லாம் உம்முடன் போதற்காகவே இருந்தது. ஆதலால் விட்டுப் பிரிந்துபோவது உம்முடைய குறிப்பாயின் போகா திருப்பதே பயனாகும் என்று கூறியதாயிற்று.

1280. பெண்ணினாற் பெண்மை யுடைத்தென்பகண்ணி காமநோய் சொல்லி யிரவு. [னாற்

தலைமகன் பிரியாமைக்குறிப்பினைத் தோழிக்கறிவுறுத்தது.

(பரி.) இ-ள். காமநோய் கண்ணினாற் சொல்லி இரவு=மகளிர் தங் காம நோயினைத் தோழியர்க்கும் வாயாற்சொல்லாது கண்ணினாற்சொல்லி அது தீர்க்க வேண்டுமென்று அவரையிரவாது உடன்போதல் குறித்துத் தம்மடி யினையிரத்தல்—பெண்ணினால் பெண்மை உடைத்து என்ப=தமக்கியல் பாகிய பெண்மைமேலும் ஓர் பெண்மையுடைத்தென்று சொல்லுவர் அறிந் தோர்; எ-று.

தலைமகளதுடன்போதற்றுணிபு தோழியாற்றெளிந்தாளுகலின், தன் பிரிவின்மைக்குறிப்பினையறிவுறுப்பான், அவள் பெண்மையினைப் பிறர்மே லிட்டு வியந்துகூறியவாறு. (ம)

விளக்கம் :—" பெண்கள் தமக்கு உண்டாகும் காமநோயினைத் தோழியர்களுக்கும் வாயினாற் சொல்லாமல் கண்களால் சொல்லி அந் நோயினைத் தீர்க்கவேண்டுமென்று அத்தோழியரை வேண்டாது தலை வனுடன் உடன் போதலை எண்ணித் தம் பாதங்களை வேண்டுதல் தமக்கு இயற்கையாக அமைந்த பெண்தன்மை மேலும் ஓர் பெண்தன்மை உடையதாக உள்ளது என்று அறிந்தார் சொல்லுவர்" என்று தலைவன் கூறியதாக இக்கிருக்குறள் கூறுகின்றது. அதாவது தோழியே! பெண் கள் தமக்குள்ள துன்பத்தினைத் தோழியர்க்குச் சொல்லி தீர்த்துக் கொள்ள வேண்டுவது அவர்கள் தன்மையாக இருந்தவும் அவ்விதம் செய்யாது தன் துன்பத்தினைத் தோழியர்க்குக் கண்ணால் காட்டியும் காட்டியகாலத்தும் அத்தோழியரால் தம் குறைமுடிக்க எண்ணுது உடன் போதற்கே துணிதல் பெண்களுக்கு உரிய அறியாமையினும் அறியாமையாகவே உள்ளது என்று தன் பிரிவின்மையைத் தோழிக் குக் கூறினளையிற்று.

---

129. அதிகாரம்.

புணர்ச்சிவிதும்பல்.

(பரி.) அஃதாவது தலைமகனுந் தலைமகளும் புணர்ச்சிக்கண்ணே விரை தல். மேற் புணர்ச்சிமிகுதிபற்றித் தலைமகன் பிரிதற்குறிப்பறிவுறுத்த தலை மகள் அவன்மாட்டேநிகழாது வேட்கை மிகவினுற்பின்னு தண்கண்ணே நிகழ்தலான், இது குறிப்பறிவுறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

விளக்கம்.—அதாவது தலைமகனும் தலைமகளும் புணர்ச்சியி னிடத்தே விரைதல். மேல் அதிகாரத்துள் தலைமகனுல் நேர்ந்த புணர்ச்சி யின் மிகுதியினுல் தலைமகன் தன்னைவிட்டுப்பிரிதற்கே இவ்விதம் புதிது புதிதாகப் பலவித கலவிகளைச் செய்கின்றன் என்று அவனது பிரிதல் குறிப்பினைத் தோழி அறியும்படிச்செய்த தலைமகளிடத்து விருப்பமிகுதி யால் இப்புணர்ச்சி விரைதல் பின்னும் உண்டாவதாலும் தலைவனிடத்து உண்டாகாமையாலும் இவ்வதிகாரம் குறிப்பறிவுறுத்தல் என்னும் அதிகாரத்திற்குப பிறகு வைக்கபபட்டுள்ளது.

1281. உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங் கள்ளுக்கில் காமத்திற் குண்டு.

பிரிதற்குறிப்பினுகியாதேனு நீ புலவாமைக்குக் காரணம் யாதென நகையாடிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

(பரி.) இ-ள். உள்ளக் களித்தலும்=நினைந்தது ணையானே களிப்பெய் தலும்—காணமகிழ்தலும்=கண்டதுணையானேமகிழ்வெய்தலும்—கள்ளுக்கு இல் காமத்திற்கு உண்டு=கள்ளுண்டார்க்கில்லை,காமமுடையார்க்குணடு;எ-று

களித்தல்=உணர்வழியாதது. மகிழ்தல்=அஃதழிந்தது. இவ்விரண்டும் உண்டெழியல்லதின்மையிற் 'கள்ளுக்கில்' என்றுள், உண்டென்பது இறுதி விளக்கு. அப்பெற்றித்தாய காமமுடைய யான் புலத்தல் யாண்டைய தென்பதாம். (க)

விளக்கம் :—"நினைந்த அளவே களிப்பை அடைதலும் கண்ட அளவே மகிழ்வை யடைதலும் கள்ளினை உண்டார்க்கு இல்லை. ஆனால் காமம் உடையார்க்கு உண்டு" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தோழியானவள் தலைவியை நோக்கிப் பிரிதல் குறிப்பினால் நின்றுழியும் நீ கோபித்துக் கொள்ளாததற்குக் காரணம் எது என்று நகைத்துச் சொல்லிய தோழிக்குத் தலைமகளானவள் ஓ தோழியே! நினைத்தால் களித்தல் என்னும் உணர்வழியாத சந்தோஷத்தையும் உண்டால் உணர்வு அழியும் சந்தோஷத்தினையும் கள்ளினிடத்தே ஒருவன் அடைதல் ஆகாது. ஆனால் காமம்கொண்ட ஒருவர் நினைத்த அளவிலும் பார்த்த அளவிலும் களிப்பையும் மகிழ்ச்சியையும் அடைதலால் அவ்வித தகுதியுடையதாகிய காமத்தை உடைய யான் எவ்விதம்தலைவனிடத்துக் கோபித்துக் கொள்ளுதல் கூடும் என்று கூறியதாயிற்று.

1282. தினைத்துணையு மூடாமை வேண்டும் பனைத்துணை காம நிறைய வரின். [யுங்

இதுவுமது.

(பரி.) இ-ள். காமம் பனைத்துணையும் நிறைய வரின்=மகளிர்க்குக் காமம் பனையளவினும் மிகவுண்டாமாயின்—தினைத்துணையும் ஊடாமை வேண்டும் =அவரால், தங்காதலரோடு தினையளவும் ஊடுதல்செய்யாமை வேண்டப் படும். எ-று.

பனைத்துணையுமென்புழி ஐத்தனருபு விகாரத்தாற்றொக்கது. ஊடின் வருத்தமிகுமெனப் பிறர்க்குரைதி கூறுவாள்போன்று, தன் விதப்புக் கூறிய வாறு. (உ)

விளக்கம் :—"பெண்களுக்குக்காமமானது பனை மரத்தினது அளவைக்காட்டிலும் மிகுதியாக உண்டாகுமாயின் அப்பெண்களால் தம் 'காதலரோடு திணை என்னும் தானியத்தின் அளவும் சிறு பிணக்கினைக் கொள்ளாதிருத்தல் வேண்டும்" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தோழியே! காமம் மிகுந்து அதனால் துன்பப்படுகிற பெண்கள் தம் கலவிடத்து ஊடல் என்னும் சிறு பிணக்கையும் மிகச் சிறிதும் கொள்ளாதிருத்தல் வேண்டும். கொள்வார் களாயின் மிக்கதோர் வருத்தத்தை அடைதல் வேண்டும் என்று பிறர்க் குக் கூறுவதுபோல் தனக்கு உள்ள காம முதிர்ச்சியைக் கூறியதா யிற்று.

1283. பேணுது பெட்பவே செய்யினுங் கொண்கனைக் காணுந மைபல கண்.

இதுவுமது.

(பரி.) இ-ள். பேணுது பெட்பவே செய்யினும்=நம்மை யவமதித்துத் தான் வேண்டியனவே செய்யுமாயினும்—கொணகனைக் கண் காணுது அமை யல=கொண்கனை என்கண்கள் காணுதமைகின்றனவில்லை; எ-று.

தன்விதப்புக் கண்கண்மேலேற்றப்பட்டது. அத்தன்மையேன் அவ னொடு புலக்குமாறென்னையென்பதாம். (ரு)

விள்க்கம் :—"தம்மை அவமதித்து தான் விரும்பிய வண்ணமே செய்யுமரயினும் தலைவனைக்காணுது என்னுடைய கண்கள் பொருந்து வனவாயில்லை" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது நம் தலைவன் நம்மை விரும்பாது அவமதித்துத் தான் விரும் பிய வண்ணமே செய்கின்றவனாயினும் என் கண்கள் அவனைப் பாரா விடின் பொருந்தேனென்கின்றன. இவ்வித காதலனை யான் எவ்வாறு கோபித்துக் கொள்வது என்று தனக்கு உள்ள காம மிகுதியினைக் கண் களின்மீது ஏற்றிக் கூறினளாயிற்று.

1284. ஊடற்கட் சென்றேன்மற் றோழி யதுமறந்து
கூடற்கட் சென்றதென் னெஞ்சு.

இதுவுமது.

(பரி.) இ-ள். தோழி=தோழீ! —ஊடற்கண் சென்றேன்=காதலரைக் காணாமுன் அவர்செய்த தவற்றைத் தன்னொடுநினைந்து யானவரோடூடு தற்கணணே சென்றேன்—என்னெஞ்சு அது மறந்து கூடற்கண் சென்றது-கண்டபின் என்னெஞ்சு அதனை மறந்து கூடுதற்கண்ணே சென்றது; எ-று.

சேறனிகழ்தல் நனைத்தநெஞ்சிற்குமொத்தலின், 'அதுமறந்து' என்றாள் அச்செலவாற் பயனென்னென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைககண் வந்தது. அவ்வெல்லையிலே நெஞ்சு அறைபோகலான், அது முடிந்ததில்லை யென்பதாம். (௪)

விளக்கம் :—"தோழியே! நம் காதலரைக் காண்பதற்கு முன்னெல்லாம் அவர் நமக்குச் செய்த தவறுகளைத் தன்னொடு எண்ணியான் அக்காதலரோடு கோபித்துக் கொள்ளலாம் என்று எண்ணினேன். அவ்விதம் தன்னொடு யோசித்துக் கோபிக்கச் சென்றும் கோபிக்கும் யோசனையை மறந்து அவரைக் கண்டவுடன் என் நெஞ்சானது காதலரைக் கூடுதற் கண்ணே சென்றது" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தோழியே! எந்த நெஞ்சுடன் தலைவருடைய தவறினை எண்ணிக் கோபித்துக்கொள்ளத் தீர்மானித்தேனோ அந்த நெஞ்சே கோபித்தல் வேண்டுமென்னும் தீர்மானத்தினை மறந்து புணர்தல் விருப்பத்தினைக் கொள்ளுமாயின் இவ்வித நெஞ்சுடையயான் எவ்வாறு காதலரிடத்து ஊடல் கொள்ளுதல் கூடும். அது முடியாததாகும் என்று கூறியதாயிற்று.

1285. எழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோற் கொ
பழிகாணேன் கண்ட விடத்து. [ண்கன்

இதுவுமது.

(பரி.) இ-ள். எழுதுங்கால் கோல் காணாக் கண்ணேபோல்=முன்னெல்லாங் கண்டிருந்தும் எழுதுங்காலத்து அஞ்சனக்கோலினியல்புகாணமாட்டாத கண்ணேபோல-கொண்கன்பழி கண்டவிடத்துக்காணேன்=கொண்கனது தவறு காணாதவிடத்தெல்லாங் கண்டிருந்து அவனைக் கண்டவிடத்துக் காணமாட்டேன்; எ-று.

கோல் ஆகுபெயர்; இயல்பு=கருமை. என்னியல்பிதுவாகலின் மேலும் அது முடியாதென்பதாம். (௫)

விளக்கம்:—"முன்னெல்லாம் பார்த்திருந்தும், அஞ்சனக்கோலின் இயல்பினை எழுதுங் காலத்துப் பார்க்கமாட்டாத கண்களைப்போல, காதலனுடைய தவறுகளையெல்லாம் அவனைக் காணுத முன்னெல்லாம் கண்டிருந்தாலும் அவனைக் கண்ட இடத்து காணப்படாதவளாக இருக்கின்றேன்" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது கண்ணிற்கு மை தீட்டுகின்ற அஞ்சனக்கோலினை எவ்விதம் அது மை தீட்டுங்காலத்துக் காண்பதற்கு இல்லாது அது தீட்டும் தன்மையினையே நோக்கி நிற்பதுபோல் காம இன்பத்தைக் கொண்ட மகளிர் தம் காதலர் செய்த தவறுகளையெல்லாம் எண்ணிப் பிரிய என்ணுவதே அன்றி, கழ்டகாலத்து அவரிடத்து உள்ள விருப்பமிருதிபால் கோபியாது புணர்ச்சி யின்பத்தையே விரும்புவதாகும். அவ்வித தகுதியுடையாளாகிய நான் புலக்கக் கருதுவது முடியாததாகும் என்று கூறியதாயிற்று.

1286. காணுங்காற் காணேன் றவறுமற காணுங்காற் காணேன் றவறல் லவை.

இதுவுமது.

(பதி.) இ–ள். காணுங்கால் தவறுய காணேன்=கொண்கனே யான் காணும்பொழுது அவன்றவறுயவற்றைக் காண்கின்றிலேன்—காணுக்கால் தவறல்லவை காணேன்=காணுதபொழுது அவையேயல்லது பிறவற்றைக் காண்கின்றிலேன்; எ-று.

செயப்படுபொருள் அதிகாரத்தான் வந்தது. முன்பு நானின்னுடுசொல்லிய தவறுகள் இதுபொழுது காணுமையிற் புலந்திலேனென்பதாம். (சு)

விளக்கம் :—"காதலனே யான் பார்க்கும்பொழுது அவன் செய்யும் தவறுகளே யான் பார்ப்பதற்கு இல்லை அவனைக் காணுதபோது அவன் செய்த தவறுகளன்றி வேறு எவற்றையும் பார்ப்பதற்கு இல்லை" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது தோழியே! காதலனைக் காணுங்காலத்து அவன் செய்த தவறுகளுக்காகக் கோபித்தல் வேண்டுமென்று எண்ணியிருந்தும் அவனைக் காணுங் காலத்து அவனிடத்து உள்ள விருப்பமிருதியால் அவன் செய்த தவறுகளெல்லாம் முன்பெல்லாம் உன்னுடு சொல்லிக்கொண்ட வண்ணம் ஒன்றுந் தோன்றவில்லையாதலால் அவனிடத்துக் கோபிப்பதற்கு இல்லாமல் போயிற்று என்று கூறியதாயிற்று.

1287. உய்த்த லறிந்து புனல்பாய் பவரேபோற் பொய்த்த லறிந்தென் புலந்து

இதுவுமது.

(பரி.) இ-ள். உய்த்தல் அறிந்து புனல் பாய்பவரேபோல்=தம்மையீர்த்துக் கொண்டுபோத லறிந்துவைத்து ஒழுகுகின்ற புனலுட் பாய்வார்செயல் போல—பொய்த்தல் அறிந்து புலந்து என்=பலவி முடிவுபோகாமையறிந்து வைத்துக் கொண்டனெனது புலந்து பெறுவதென்! எ-று.

பாய்பவரென்பது ஆகுபெயர். பொய்த்தல்=புரைபடுதல். புலந்தாலும் பயனில்லையென்பதாம். பொய்த்தலறிந்தேனென்பது பாடமாயின், உய்த்த லறிய ஓடுநீருட்பாய்வார்போல முடிவறியப் பணிடொருகாற் புலந்து முடியா மையறிந்தேன், இனி அதுசெயற்பாற்றன்றென வுரைக்க. (ஏ)

விளக்கம் :—"தம்மை ஈர்த்துக்கொண்டு போதல் அறிந்து இருந்தும் ஓடுகின்ற நீரினுள் பாய்பவருடைய செய்கைபோல் கோபித்தது நிற்கும் நிலையில்லாமையைத் தெரிந்து இருந்தும் காதலனோடு கோபித்து அதனால் அடையும் பயன் யாதாகும்" என்று தலைவி கூறியதாக இத் திருக்குறள் கூறுகின்றது. அதாவது ஓடுகின்ற நீரினுள் பாய்ந்தால் நம்மை இழுத்துச் செல்லும் என்று அறிந்து இருந்தும் அந்நீரினுள் பாய்ந்து இறந்துபோக முயல்பவர்போல் காதலனிடத்து முன்னொரு கால் கோபித்தும் அக்கோபமானது நில்லாது அவனிடத்தையே காதல் கொண்டு புணரவேண்டியே இருந்ததால் இவ்வித கோபத் தைக் கொண்டு என்செய்வது, ஆதலால் அப்புலத்தலைச் செய்யா திருத்தலே தகுதியென்று கூறியதாயிற்று.

1288. இளித்தக்க வின்ன செயினுங் களித்தார்க்குக் கள்ளற்றே கள்வ நின் மார்பு

தலைமகள் புணர்ச்சிவிதுப்பறிந்த தோழி தலைமகற்குச் சொல்லியது.

(பரி.) கள்வ=வஞ்சகா!—களித்தார்க்கு இளித்தக்க இன்னசெயினும் கள்ளற்றே = தன்னேயுண்டுகளித்தார்க்கு இளிவாகத்தக்க இன்னதவற்றைச் செய்யினும், அவரால் மேன்மேல் விரும்பப்படுவதாய கள்ளுப்போலும்—நின் மார்பு=எங்கட்கு நின்மார்பு; எ-று.

அவ்வின்னதன=காணின்மை, நிறையின்மை, ஒழுக்கமின்மை, உணர் வின்மையென் றிவை முதலாயின. எங்கட்கு காணின்மை முதலியவற்றைச் செய்யுமாயினும் எங்களால் மேன்மேல் விரும்பப்படாநின்றதென்பதாம், கள்வ வென்றதும் அதுகோக்கி. (அ)

விளக்கம் :—"ஓ! வஞ்சகா! தன்னை யுண்டு களிப்பினையடைந்தவர்க்கு இழிவைக் கொண்டுவரும் துன்பங்களைச் செய்யுமாயினும், அக்குடித்தவர்களால் மேலும் மேலும் விரும்பப் படுகின்ற கள்ளைப் போலும் எங்களுக்கு உன்னுடைய மார்பு இருக்கின்றது" என்று தலைமகளது புணர்ச்சி விழைவினை அறிந்த தோழியானவள் தலைமகனுக்குக் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, "ஓ! வஞ்சகா! கள்ளையுண்ட ஒருவனுக்கு அவன் உண்ட கள்ளானது நாணமில்லாமை, மறைதலில்லாமை, ஒழுக்கமில்லாமை, உணர்வு இல்லாமை என்று இவை முதலாய பல கெடுதிகளைச் செய்யுமாயினும், அதனைக் குடியாத காலத்து அவையெல்லாம் அறிந்து இருந்தும் மேலும் மேலும் கள்ளையே குடிக்கக் கள்குடியன் விரும்புவதுபோல் உன்னுடைய மார்பானது எங்களுக்கு நாணின்மை முதலாகிய தீங்குகளைச் செய்தும் அதையே விரும்பச் செய்கின்றது. ஆதலால், இஃதோர் வஞ்சகமாக உள்ளது" என்று சொல்லியதாயிற்று.

1289. மலரினு மெல்லிது காமஞ் சிலரதன் செவ்வி தலைப்படு வார்.

உணர்ப்புவயின்வாராவூடற்கட் டலைமகன்சொல்லியது.

(பரி.) இ-ள். காமம் மலரினும் மெல்லிது = காமவின்பம் மலரினுமெல்லிதாயிருக்கும்,—அதன்செவ்வி தலைப்படுவார் சிலர் = அங்ஙனம் மெல்லிதாதலையறிந்து அதன் செவ்வியைப் பெறுவார் உலகத்துச் சிலர். எ-று.

தொட்டதுணையானே மணச்செவ்வியழிவதாய மலர் எல்லாவற்றினும் மெல்லிதென்பது விளக்கலின், உம்மை சிறப்பின்கண்வந்தது. குறிப்பும், வேட்கையும், நுகர்ச்சியும், இன்பமும், ஒருகாலத்தின்கண்ணே யொத்து நுகர்தற்குரியாரிருவர் அதற்கேற்ற இடனுங் காலமும் உபகரணங்களும் பெற்றுக் கூடிநுகரவேண்டுதலின் 'அதன் செவ்வி தலைப்படுவார் சிலர்' என்றும், அவற்றுள் யாதானுமொன்றனாற் சிறிது வேறுபடினும் வாடுதலின் மலரினுமெல்லிது' என்றுங் கூறினான். குறிப்பொவ்வாமையின் யானது பெறுகின்றிலேனென்பதாம். தலைமகளூடறீர்வது பயன். (௬)

விளக்கம் :—தலைமகன் தனது குற்றமில்லாமையைத் தலைவிக்கு உணர்த்தவும் தன் வழிவாராது கோபங்கொண்டிருந்த காலத்து அவள் கோபம் தீர்வதின் பயனாக "காம இன்பமானது மலரைக் காட்டிலும் மெல்லியதாயுள்ளது. அவ்விதம் மெல்லியதாய் இருப்பதை

அறிந்து அதனைக் காலத்தில் பெறுவார் உலகத்துச் சிலராகவே இருக்கின்றனர்'' என்று கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தொட்ட அளவிலேயே மனத்தின் தன்மை அழியக்கூடியதாயும், எல்லாவற்றினும் மெல்லியதாயுமுள்ள மலரைக் காட்டிலும் காம இன்பமானது மிகுதியும் மெல்லியதாக உள்ளது. அவ்வித சிறப்பினையுடைய தாயுள்ள இன்பத்தினைக் குறிப்பாலும் விருப்பத்தாலும் அனுபவிக்கும் தன்மையாலும் ஒரு காலத்தே லக்து அனுபவிக்க வேண்டிய இருவர் அதற்கு எற்ற இடத்தினையும் காலத்தினையும் மலரினை முதலிய உபகரணங்களையும் பெற்றுக் கூடி அனுபவிக்கவேண்டியுள்ளதாலின் அவ்வித இன்பத்தை அறிந்து அனுபவிப்பார் சிலரென்றும், அவ்வித அனுபவத்தை யான் பெறுவதற்குத் தலைவியின் குறிப்பு ஒவ்வாதிருத்தலால் யான் அதனைப் பெறுவதற்கு இல்லாதவனாய் உள்ளேன் என்றும் தலைவன் கூறியதாயிற்று.

1290. கண்ணிற் றுனித்தே கலங்கினாள் புல்லுத லென்னினுந் தான்விதுப் புற்று.

இதுவுமது.

(பரி.) இ-ள். கண்ணின் துனித்தே = காதலி முன்னொரு ஞான்று புல்லல் விதுப்பினற்சென்ற என்னெடு தன் கண் மாத்திரத்தானூடி-புல்லுதல் என்னினும் தான்விதுப்புற்றுக் கலங்கினாள் = புல்லுதலே என்னினுந் தான் விதும்பலால் அது தன்னையும் அப்பொழுதே மறந்து கூடிவிட்டாள்; அதனால் யானித்தன்மையேனுகவும் விதுப்பின்றி யூடிநிற்கின்ற இவள் அவளல்லள்.

கண்மாத்திரத்தானூடல் = சொன்னிலைச்சியின்றி அது சிவந்ததுணையே யாதல். அவளாயின் இங்ஙனமூடற்கு ணீடாளென்பது பயன். (ம)

விளக்கம் :— ''என் காதலி முன்னொரு நாள் புணர்ச்சி விழைவினால் அவளிடத்தே சென்ற என்னெடு தன்னுடைய கண் மாத்திரத்தால் ஊடுதல் கொண்டு புணர்தலே என்னைக் காட்டிலும் தான் விரும்பி விரைதலால் அக்கண் மாத்திரத்தால் கோபித்த கோபத்தையும் அப்பொழுதே மறந்து என்னைக் கூடிவிட்டாள். அவ்வித விருப்ப மூடைபாள் யான் என் தவறு இன்மையைக் கூறி இவ்விதம் வணங்கி நிற்கவும் புணர்ச்சியில் விழைவின்றி கோபித்து நிற்கின்ற இவள் அவள் அல்லள்'' என்று தலைவியினது சிறு பிணக்குத் தீர்வதின் பயனைத்

தலைமகன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தான் எவ்வளவு தன் தவறின்மையைக் கூறியும் கோபம் தணியாதவளாக இருந்த தலைவியை நோக்கி இவள் என் காதலியாகக் காணப்படவில்லை. யாரோ வேறொருத்தியாகக் காணப்படுகின்றாள். ஏனெனில்? என் காதலி என்னிடத்து ஊடல் கொள்வாளாயின் அவ்வூடலை யாதொருசொல்லாலும் கூறாது கண்மாத்திரம் சிவந்து காட்டிப் பின்னர் அக்கோபத்தையும் மறந்து என்னினும் விரைந்து கூடுவது இயல்பாதலால் இவ்விதம் தணியாது நிற்கின்ற கோபத்தையுடைய இவள் அவளாக இருப்பதற்கு இல்லை என்று கூறியதாயிற்று

---

130. அதிகாரம்.

நெஞ்சொடுபுலத்தல்.

(பரி) அஃதாவது காரணமுண்டாயவழியும் புலக்கக்கருதாது புணர்ச்சி விதும்புகின்ற நெஞ்சுடனே தலைமகள் புலத்தலும், தலைமகன் புலத்தலுமாம. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

விளக்கம் :—அதாவது கோபிக்கக் காரணமுண்டான இடத்தும் கோபிக்க எண்ணுமல் புணர்ச்சியினிடத்தே விரைகின்ற நெஞ்சுடனே தலைமகள் கோபித்தலும், தலைமகன் கோபித்தலும் ஆம். மேல் புணர்ச்சி விதும்பலால் தம் தன்மையை எடுத்துக்கூறிய தலைமகனும் தலைமகளும் இப்போது அப்புணர்ச்சியை விதும்புகின்ற நெஞ்சொடு புலக்கின்றாராதலால் புணர்ச்சி விதும்பல் என்னும் அதிகாரத்திற்குப் பிறகு நெஞ்சொடுபுலத்தல் என்னும் இவ்வதிகாரம் வைக்கப்பட்டுள்ளது.

1291. அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே நீயெமக் காகா தது.

தலைமகன்கட் டவறுண்டாயவழியும் புலவிகருதாத் நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது.

(பரி.) இ-ள். நெஞ்சே=நெஞ்சே!—அவர் நெஞ்ச அவர்க்கு ஆதல்கண்டும்=அவருடைய நெஞ்சு நம்மை நினையாது அவர்க்காய்நிற்றல் கண்டுவைத்தும்,—நீ எமக்கு ஆகாதது எவன்=நீ யெமக்காய் நில்லாது அவரை நினைத்தற் காரணம் யாது? எ-று.

அவர்க்காதல் = அவர் கருதியதற்குடம்படுதல். எமக்காகாததென்றது புலவிக்குடம்படாமையை. ஒரு கருமத்தைத் தாமாகவறிந்து செய்யமாட்டாதார் செய்வாரைக் கண்டாயினுஞ் செய்வர், நீ அதுவுஞ்செய்கின்றிலையென்பதாம். (க)

விளக்கம்:- "நெஞ்சே அவருடைய நெஞ்சானது நம்மை நினையாமல் அவர் தன்மையாய் நிற்பதைப் பார்த்துவைத்தும் நீ எம்முடைய விருப்பத்தின் வண்ணம் எமக்காக நிற்காது அவரை நினைத்தல் காரணம் யாது?" என்று தலைமகனிடத்தித தவறுகண்ட காலத்தும் கோபித்தலை எண்ணுத நெஞ்சினை நோக்கித் தலைமகள் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தலைமகளானவள் ஓ! நெஞ்சே! தலைவருடையநெஞ்சானதுநம்மைச் சிறிதும் நினையாதுஅவர் எண்ணிய வழியே செய்வதற்கு அவரோடு கூடியிருக்க, நீ அவ்விதம் என்னுடுகூடி என் வழியில் நில்லாது அவரைவிடாது நினைக்கின்றாய். அதற்குக் காரணம் யாதென அறிகிலேன். இவ்விதம் ஒரு கருமத்தைத் தாமாக அறிந்து செய்யமாட்டாதவர் செய்வாரைப்பார்த்தாயினும் அக்கருமத்தைச் செய்வர். நீயோ அவர் செய்வதைப் பார்த்தும் அவ்விதம் செய்யத் தெரிந்து கொள்ளவில்லை என்று தன் நெஞ்சைப் புலவிக்கு உடன்படுத்த வேண்டித் தலைமகள் கூறியதாயிற்று.

1292. உரூஉ தவர்க்கண்ட கண்ணு மவரைச்
செரூஉ வெனச் சேறியென் னெஞ்சு.

இதுவுமது.

(பரி.) இ-ள். என்னெஞ்சு = என்னெஞ்சே! — உரூஉதவர்க் கண்ட கண்ணும் = மேலும்நம்மாட்டன்புடையராகாதவரையுள்ளவாறறிந்தவிடத்தும், — செரூஉவென அவரைச் சேறி = நாஞ்சென்றுரல் வெகுளாரென்பதுபற்றி நீ யவர் மாட்டுச் செல்லா நின்றாய், இப்பெற்றியதுமேலுமோ ரறியாமையுண்டோ!

அவரையென்பது வேற்றுமைமயக்கம். பழங்கண்ணேட்டம்பற்றி வெகுளாரென்பது கந்தாகச் சென்றாய், நீ கருதியது முடியுமோவென்பதாம். (உ)

விளக்கம் :— "என் நெஞ்சே! மேலும் நம்மிடத்து அன்புடையர் ஆகாத தலைவரை உள்ளவாறு அறிந்தவிடத்தும் நாம் சென்றால் அவர் கோபியார் என்பதைக் கருதி நீ அவரிடத்துச் செல்லுகின்றாய்.

இவ்வித தகுதியைக்காட்டிலும் ஓர் அறியாமை என்பது உண்டோ?" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, நெஞ்சே! நம்மிடத்து அன்பில்லாத தலைவரிடத்து நீ பழைய கண்ணோட்டத்தையே உறுதியாகக் கொண்டு நாம் வலியச் சென்றால் நம்மைக் கோபியார் என்று சென்றுப். அவ்வித்தம் எலிந்துசென்றாலும் நீ எண்ணியது முடியுமோ என்று தன் நெஞ்சுடன் கோபித்துக் கூறியதாயிற்று.

1293. கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ பெட்டாங் கவர்பின் செலல்.

இதுவுமது.

(பரி.) இ-ள். நெஞ்சே=நெஞ்சே!—நீ பெட்டாங்கு அவர்பின் செலல்=என்மாட்டுநில்லாது நீ விரும்பியவாறே அவர்மாட்டுச் செல்லுதற்குக் காரணம்—கெட்டார்க்கு நட்டார் இல்லென்பதோ=கெட்டார்க்கு நட்டார் உலகத்தில்லையென்னுகின்னோவோ, நின்னையல்போ, கூறுவாயாக. எ-று.

என்னைவிட்டு அவர்மாட்டுச்சேறல் நீ பணடேபயின்றதென்பாள் 'பெட்டாங்கு' என்றும், தானிதுபொழுது மானமிலளாகலிற் 'கெட்டார்க்கு' என்றீங் கூறினுள். பின்னென்பது ஈண்டிடப்பொருட்டு. செலலென்பது ஆகுபெயர். *"ஒல்கிடத் துலப்பிலா வுணர்விலார் தொடர்"பாயிற்று நின்றொடர் பென்பதாம். (கூ)

விளக்கம்:—"நெஞ்சே! என்னிடத்து நில்லாது நீ விரும்பியவிதமே அவரிடத்துச் செல்லுதற்குக் காரணம் கெட்டவர்களுக்கு நட்பினர் உலகத்தில் இல்லை யென்கின்ற நினைவோ, அல்லது உன்னுடைய இயற்கையோ, சொல்லுவாயாக" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது: அதாவது, நெஞ்சே! நீ என்னைவிட்டு அவரிடத்துச் செல்லல் நீ பழைமையாகவே பழகிய பழக்கமாதலால் யான் இப்பொழுது நாண் இழந்து நிற்கின்ற என் தகுதியைக்கண்டு காமத்துன்பத்தால் துன்பப்படுகின்ற இவரிடத்து நாம் கூடியிருத்தலால் என்ன பலன் என்று எண்ணி அவரிடத்துச் சென்றுப்போலும்! இவ்வித தகுதியுடைய உன்னுடைய நட்பு துன்பப்படுகின்ற காலத்து அறிவிலாதவரது நட்பினைக் கொண்டதுபோலுள்ளது என்று கூறியதாயிற்று.

* கலி, பாலை, 25.

1294. இனியன்ன நின்னெடு சூழ்வார்யார் நெஞ்சே துணிசெய்து துவ்வாய்காண் மற்று.

இதுவுமது.

(பரி.) இ-ள். நெஞ்சே=நெஞ்சே!—துணி செய்து மற்றுத் துவ்வாய்=நீயவரைக் கண்டபொழுதே இன்பதுகரக் கருதுவதல்லது அவர்தவறுநோக்கி முன் புலவியையுண்டாக்கி அதனையளவறிந்து பின்னுகாக்கருதாய்,—இனி அன்னநின்னெடு சூழ்வார் யார்=ஆகலான், இனி யப்பெற்றிப்பட்டவற்றை நின்னெடணணுவார் யார்? யானதுசெய்யேன். எ-று.

அப்பெற்றிப்பட்டன=புலக்குந் திறங்கள். காணென்பது உரையசை. மற்று வினைமாற்றின்கண் வந்தது. முன்னெல்லாம் புலப்பதாகவெணணியிருந்து பின் புணர்ச்சிவிதும்பலின், இவ்வாறு கூறினாள். (ச)

விளக்கம்:—"நெஞ்சே! நீ அவரைப பார்த்தகாலத்து இன்பம் அனுபவிக்க எண்ணுவதே யல்லாமல அவர் தவறுகளை நோக்கி முன் சிறு பிணக்கினை உண்டாக்கி அசசிறுபிணக்கினை அளவு அறிந்து நீக்கிப் பின்னர் இன்பம் அனுபவிக்க எண்ணமாட்டாய் ஆதலால், இனி அவ்வித தகுதியையுடைய புலவியை உண்டாக்குதலை உன்னெடு எண்ணுவார் யார்? யான் அது செய்வேன்" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது அதாவது, நெஞ்சே! தலைவரைக் காண்பதற்கு முன்னெல்லாம் அவர் தவறுகளுக்காக அவரிடத்துக் கோபிக்க எண்ணியிருந்த நீயே அவரைக் கண்டவுடன் சிறிதும் கோபிக்கக் கருதாது புணர்ந்து இன்பத்தை அனுபவிக்க எண்ணுவையாயின், அவ்வித தகுதியுடைய உன்னெடு தலைவரிடத்துக் கோபிக்கும் திறங்களை ஆலோசிப்பதால் பயன் என்னை? என்று கூறியதாயிற்று.

1295. பெருமை யுஞ்சும் பெறிற்பிரி வஞ்சு மருமை விடும்பைத்தென் னெஞ்சு.

வாயிலாகச் சென்று தோழிகேட்பத் தலையகள் சொல்லியது.

(பரி.) இ-ள். பெருமை அஞ்சும்=காதலரைப் பெறுத ஞான்று அப் பெருமைக்கஞ்சாநின்றது—பெறின் பிரிவு அஞ்சும்=பெற்றக்கால்வாக்கடவ பிரிவினையுட்கொண்டு அதற்கஞ்சாநின்றது-என்னெஞ்சு அரு இடும்பைத்து =ஆகலான், என்னெஞ்சம் எஞ்ஞான்றும் நீங்காதவிடும்பையையுடைத்தாயிற்று. எ - று.

காதலரைப் பெற்றுவைத்துக் கலவி யிழத்தல் உறுதியன்றென்னுங்கருத் தான் வாயினோர்கின்முளாகலிற் 'பெருமையஞ்சும்' என்றும், கலவியாராமை யின் இன்னும்வர்பிரிவாயின் யாது செய்துமென்பது நிகழ்த்லிற் 'பெறிற் பிரிவஞ்சும்' என்றும், இவ்விரண்டுமல்லாது பிறிதின்மையின் எஞ்ஞான்றும் அருவிடும்பைத்து' என்றுங் கூறினள். (இ)

விளக்கம்:—"காதலரைப் பெறுதகாலத்து அப்பெறுத தன்மைக் காக அஞ்சுகின்றது; பெற்ற இடத்து வரக்கடவதாகிய பிரிவினைத் தன் னுள் கொண்டு அப்பிரிவிற்கு அஞ்சுகின்றது; அதலால் என் நெஞ்ச மானது எக்காலத்தும் நீங்காத துன்பத்தை அடைந்ததாயிற்று" என்று தன்னிடத்துத் தூதாக வந்த தோழிபானவள் கேட்குப்படிக் கலைகள் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, கலைவியானவள் என் நெஞ்சானது காதலர் வாராத காலத்து அவர் வராமையைக் கருதி யும், வந்தவிடத்து பிரிந்து போவாரோ என்பதைக் கருதியும் அஞ்சுகின் றது என்று காதலர் வந்த விடத்தும் கலவியால் இன்பம் அனுபவியாது கலவியினை பிழத்தல் உயிர்க்கு உறுதி அன்று என்னும் தோழியின் கருத்துக்கு இணங்கினள் போன்று வாராதகாலத்துத் தனக்குள்ள பிரி வாற்றுமையை வந்த காலத்துக் கலவியால் உண்டாகும் இன்பமானது நிறையாமையின் பிரிந்து போவரோ என்னும் துன்பத்தையும் உணர்த்தி, இவ்விரண்டும் அல்லாது வேறொன்றும் தனக்கில்லையென்று தன் குறிப்பினைத் தன் நெஞ்சின் மேல் ஏற்றிக் கூறினளாயிற்று.

1296. தனியே யிருந்து நினைத்தக்கா லெண்ணெத் தினிய விருந்ததென் னெஞ்சு.

இதுவுமது.

(பரி.) இ - ள். என்னெஞ்சு இருந்தது=என்னெஞ்சு ஈண்டிருந்தது— தனியே இருந்து நினைத்தக்கால்=காதலரைப் பிரிந்திருந்து அவர் கொடுமை களை யான்றன்னெடு நினைத்தக்கால்—என்னைத்தினிய=அவ்வளவறிந்து என்னைத் நிபைதுபோன்று துன்பஞ் செய்தற்கே. எ - று.

எண்மாட்டிருந்தது அன்று அவர்கொடுமைகளை யுட்கொண்டு எனக் காற்றுமைசெய்தற்கே ; இன்று அவைநோக்கி அவரொடு புலத்தற்கன்றென் பதாம். (சு)

விளக்கம்:—"என் நெஞ்சமானது இங்கே இருந்தது காதலரைப் பிரிந்து இருந்து அவருடைய கொடுமைகளை யான் தன்னெடு நினைத்த

இடத்து நினைத்த அவ்வளவினையறிந்து என்னைத் தின்பனபோன்று துன்பஞ் செய்வதற்கேயாகும்" என்று தூதாக வந்த தோழி கேட்கும் வண்ணம் தலைமகள் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது அதாவது, தலைமகளானவள், "தோழியே! என் நெஞ்சம் என்னுடன் இருந்து என் தலைவர் எனக்குச் செய்த கொடுமைகளை நினைந்து நினைந்து நிற்குந்தோறும் எனக்கு ஆற்றுமை செய்தவர்க்கேயன்றி இன்று அவர் கொடுமைகளை நோக்கி அவரோடு புலத்தற்கு அன்று" என்று காதலரிடத்துப் புணர்ச்சி விரும்புதலைக் கூறியதாயிற்று.

1297. நாணு மறந்தே னவர்மறக் கல்லாவென் மாணு மடநெஞ்சிற் பட்டு.

இருவுமது.

(பரி.) இ - ள். அவர் மறக்கல்லா என் மாணு மடனெஞ்சிற் பட்டு = தன்னை மறந்த காதலரைத் தான்மறக்கமாட்டாத என்மாட்சிமையில்லாத மடநெஞ்சுடனே கூடி, — நாணும் மறந்தேன் = என்னுயிரினுஞ்சிறந்த நாண்டன்னையும் மறந்துவிட்டேன். எ - று.

மாணுமை = ஒரு நிலையினில்லாமை மடமை = கண்டவழி நினைந்து காணுத வழி மறக்கும் தவற்றைக் காணுவழிநினைந்து கண்டவழி மறத்தல். நாண் = எஞ்ஞான்றுங் கூடியொழுகினும் அஞ்ஞான்று கண்டார்போன்றொடுங்குதல். கண்டபொழுதே புணர்ச்சி விதும்பலின், அதனையுமறந்தேனென்றாள். (எ)

விளக்கம்:—"தன்னை மறந்துவிட்ட காதலரைத் தான் மறத்தற்கு மூடியாத என் மாட்சிமையில்லாத மடமை தங்கிய நெஞ்சுடனே யான் கூடியதால் என் உயிரினும் சிறந்ததாகிய நாணத்தினையும் மறந்துவிட்டேன்" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, ஒரு நிலையில் நில்லாது தலைவனைக் கண்டவிடத்து அவன் செய்த தவறுகளை நினைத்தும் காணுத இடத்து மறந்தும் இருக்கவேண்டியிருக்கத் தலைவனைக் காணுத இடத்து நினைத்தும் கண்ட இடத்து மறந்தும் அறியாமை மேற்கொண்ட நெஞ்சுடனே கூடியதால் இக்காலத்தும் கூடிப் பொருந்தினும் ஒவ்வோர் காலும் அன்றே புதிதாகக் கண்டது போன்று ஒடுங்குகின்ற நாணத்தையும் இழந்த கண்ட பொழுதே புணர்ச்சியினை விரைதலாயிற்று என்று காதலனிடத்துத் தனக்கு உள்ள மனநிலையைக் கூறியதாயிற்று.

1298. எள்ளி னிளிவாமென் றெண்ணி யவர்திற
முள்ளு முயிர்க்காத னெஞ்சு.

இதுவுமது.

(பரி.) இ - ள். உயிர்க் காதல் நெஞ்சு=உயிர்மேற் காதலையுடைய என் னெஞ்சு,—எள்ளின இளிவு ஆம் என்று எண்ணி=நம்மையெள்ளிச்சென்றா ரென்று நாமுமெள்ளுவேமாயிற் பின்னமக்கிளிவாமென்று கருகி,—அவர் திறம் உள்ளும்=அவர் திறத்தினையே நினையாநின்றது. எ - று.

எள்ளுதல்=வாயின்மறுத்தல். இளிவு=வழிபடாமையானும், பிரிவாற் றாமையானும், நாணும் நிறையுமுதலியவிழத்தலானும் உளதாவது. திறம்= வாயினேர்தலும் வருதலும் கூடலு முதலாயின. இளிவிற்கஞ்சுதலானும் இறந்துபடமாட்டாமையானுங் கூடக் கருதாநின்ற தென்பதாம். (அ)

விளக்கம் :—"உயிர்மீது ஆசைகொண்டு நிற்கின்ற என் நெஞ்சா னது காதலர் நம்மை இகழ்ந்து சென்றாரென்று நாமும் அவரை இகழ்ந்து நிற்போமாயின் பின்னர் நமக்கே அது இழிவைத் தரும் என்று எண்ணி அவர் திறத்தினையே நினையா நிற்கின்றது" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது அதாவது, தோழியே! அவர் நம்மை நினையாது பிரிந்து சென்றாரேனும் அதனை நாம் எண்ணி அவர் அனுப்பிய தூதினை மறுப்போமாயின், வழிபடாது நின்றமையாலும் பிரிவாற்றாமையாலும் நாணத்தையும் நிறையினையும் இழந்து நிற்க வேண்டி வருமாதலால் இனி அவர் அனுப்பும் தூதிற்குச் சம்மதித்த லும் வருதற்கு உடன்படுதலும் கூடுதற்கு எண்ணுதலும் செய்தல் வேண்டும். ஏனெனின்? இழிவிற்கு அஞ்சுதலாலும் இறந்துபட மாட் டாமையாலும் என்னெஞ்சானது காதலரைக் கூடல் கருதுகின்றது என்று கூறியதாயிற்று.

1299. துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி.

உணர்ப்புவயின்வாரா ஊடற்கட்டலைமகன் சொல்லியது.

(பரி.) இ-ள். துன்பத்திற்கு=ஒருவர்க்குத் துன்பம் வந்துழி, அது நீக்குதற்கு,—தாம் உடைய நெஞ்சம் துணையல்வழி=தாமுரித்தாகப் பெற்ற தம்முடைய நெஞ்சந் துணையாகாவழி,—துணையாவார் யாரே=வேறு துணை யாவார் ஒருவருமில்லை. எ - று.

ஈண்டுத் துன்பமாவது ஊடலுணர்ப்புவயின் வாராமை. அதற்கு நெஞ்சந் துணையாகாமையாவதி அவளையன்பிலளென்றெழியாது கூடற்கண்ணே வீதும்பல். ஒரு துணையுமின்மையின், இஃதுற்றுவிடுதலே யுள்ளதென்பதாம்.

விளக்கம்:—"ஒருவர்க்குத் துன்பம் வந்த காலத்து அதனை நீக்குதற்குத் தமக்கு உரித்தாகிய தம்முடைய நெஞ்சமே துணையாகாத இடத்து வேறே துணையாக இருக்கவோ ஒருவரும் இல்லை" என்று தலைமகன் கூறியதாக இத்திருக்குறள் கூறகின்றது. அதாவது, தலைவனுனவன் தன் தவறின்மையைக் கூறி வணங்கிய இடத்தும் தன் வழி வாராத தலைவியினை நெஞ்சானது அவள் அன்பில்லாதவள் என்று நினையாது நிற்பதைவிட்டு அவளைக் கூடுதற்கே விரும்புதலால் உடனிருந்து வாழும் நெஞ்சே துணையாக இல்லாது துன்புறுத்துவதால் இந்நெஞ்சமானது அவளிடத்துப் பொருந்துவதாகவே முடியும் என்று நெஞ்சொடு புலந்ததாயிற்று.

1300. தஞ்சந் தமரல்ல ரேதிலார் தாமுடைய நெஞ்சந் தமரல் வழி.

இதுவுமது.

(பரி.) இ-ள். தாம் உடைய நெஞ்சம் தமர் அல்வழி=தாமுரித்தாக வுடைய நெஞ்சம் ஒருவர்க்குத் தமரல்லாவழி,—ஏதிலார் தமர் அல்லர் தஞ்சம்=அயலார் தமரல்லராதல் சொல்லவேண்டுமோ! எ-று.

பிறளொருத்தியைக் காதலியென்று கருதி என்னெஞ்சே என்னை வருத்தாநின்றபின் அப்பிறள் புலக்கின்றதெளிதென்பதாம். (ல)

விளக்கம்:—"தமக்கு உரிமையாக உடைய நெஞ்சமானது ஒருவருக்குச் சுற்றமாக இல்லாவிடின் அயலவர் சுற்றமல்லாதவராய் ஆகின்றமையைச் சொல்லுதலும் வேண்டுமோ" என்று தலைவன் கூறியதாக இத்திருக்குறள் கூறகின்றது. அதாவது, தான் எவ்வளவோ தன் தவறின்மையைக் கூறியும் தன் வழிவாராத பிறள் ஒருத்தியைக் காதலியென்று எண்ணி என் நெஞ்சமே என்னை வருத்துமாயின் பிறளாக உள்ள அவள் என்னிடத்துப் புலந்து என்னைத் துன்புறுத்துவது மிக எளிமையன்றோ என்று தன் நெஞ்சம் தனக்காகாததனால் அதனோடு புலப்பதுபோல் கூறியதாயிற்று.

131 அதிகாரம்

புலவி.

(பரி) அஃதாவது இருவா நெஞ்சும புணாச்சிவிதுமபாது புலககக கருதிய வழி ஒருவரோடொருவா புலததல. அதிகாரமுறைமையும இதனானே விளஙகும்.

விளக்கம் —தலைமகள தலைமகனாகிய இருவருடைய நெஞ்சும புணாசசியினிடத்தே விரையாது கோபிகக எண்ணிய விடத்து ஒருவரோடொருவா கோபிததல மேல அதிகாரததில தம் வழி வாராத நெஞ்சுடனே கோபித்தாராதலால ஒருவரோ டொருவா கோபித்தல என்னும் பொருள கொளளும புலவி எனனும அதிகாரம் இங்கு வைக்கப்பட்டுள்ளது.

1301. புல்லா திராஅப புலத்தை யவருறு
மல்லனோய் காண்கஞ் சிறிது

வாயிலாகச்சென்ற தோழி தலைமகன் வாயினேர்தற்பொருடடு அவளொடு நகையாடிச் சொல்லியது.

(பரி.) இ - ள அவா உறும அலலல் நோய சிறிது காணகம்=அஙஙனம புலநதாற் காதலரெயதுமல்லனோயினை யாஞசிறிதுகாணக்கடவேம;—புல்லாது இராப் புலததை=நீயவரைவிரைந்துசென்று புல்லாதே இத்தொழிலை மேலிட்டுககொணடிருந்து புலப்பாயாக எ - று.

அல்லனோய்=துன்பதைச் செயயும காமநோய சிறிதென்றாள், புலவியை நீளவிடலாகாதென்பதுபற்றி. புலத்தையென்புழி ஐகாரம் "கடம் பூண்டொருகானீவந்தை" * என்புழிப்போல முன்னிலைவினைவிகுதி. புலத்தியென்பதூஉம் பாடம். புலவிககுறிபபுக்கண்டு அவள்வழியளாய நின்று நாமுற்ற வருத்தம் அவருஞ சிறிதுற்றறிதல் வேணடுமென நகையாடி நேர்விதத வாறு. (க)

·விளக்கம் :—"தலைவியே! நீ காதலரிடததே விரைந்து போய் அணையாமல புலத்தல் தொழிலை மேலிடுக்கொண்டு இருந்து புலபபாயாக! அவவிதம் நீ கோபித்துக் கொளவதால காதலரடையும் துன்பத்

* கலி, குறிஞ்சி, 27.

தைச் செய்யும் காமநோயினை யாம் சிறிது பார்த்தல் கூடும்" என்று ஊடல் தீரும்படிச் சென்ற தோழியானவள் தலைமகளும் தானும் வந்த தூதிற்குச் சம்மதிக்கும்படி அவளுடன் சிரித்துக் கொண்டு கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தலைமகளது புலவிக் குறிப்பைப் பார்த்து அவள் வழியளாய் நிற்பாள்போல் நகைத்து, ஓ! என் தலைவியே! தலைவர் பிரிந்து இருந்த காலத்து நாம் அடைந்த துன் பத்தைச் செய்யும் காமநோயினை அவரும் இப்போது சிறிது அடைந்து துன்புறுவதை நாம் பார்க்க விரும்புவதால் நீ அவரை விரைந்து சென்று அணையாமல் இப்போது கோபித்து இருபபது போலேயே இன்னும் சிறிது கோபித்துக்கொண்டு இருப்பாயாக! என்று தன் வழிப்படுத்த வெண்ணிய தோழியானவள் கூறியதாயிற்று.

1302. உப்பமைந் தற்றுற் புலவி யதுசிறிது மிக்கற்று னீள விடல்.

புலவியொழிந்து வாயினேருங்வகை அவள் சொல்லியது.

(பரி.) இ-ன். புலவி உப்பு அமைந்தற்று=புலவி கலவி இன்பஞ் செயற்கு வேண்டுமளவிற்றுதல் உப்புத் தூய்ப்பனவற்றை இன்சுவைய வாக் கற்கு வேண்டுமளவிற்றுதல் போலும்;—சிறிது நீளவிடல் அது மிக்கற்று= இனி அதனே யவ்வளவிற் சிறிதுமிகவிடுதல் அவ்வுப்பு அளவின்மிக்காற் போலும். எ-று.

நீளவிடல்=அளவறிந்தணராது கலவிமேலெழுந்த குறிப்பழுங்குமள வுஞ் செய்தல். சிறிது நீளவிடலாகாதென்றுள், கோர்விக்கின்றுளாகலின். உப்பு மிக்கவழித் தூய்ப்பது சுவையின்றுஞற்போலப் புலவிமிக்கவழிக் கலவி இன்பமின்றுமென்றமையின், இது பண்புவமை. (உ)

விளக்கம் :—"புலவி என்பது கலவியாகிய இன்பத்தைச் செய்தற்கு வேண்டும் அளவினைச்செய்தல், உப்பானது உண்ணும் உணவுகளில் இனிய சுவைப்படித்துதற்கு வேண்டும் அளவினைக் கொள்ளுதல் போலும். ஆதலால் இனி அப்புலவியினை வேண் டும் அளவாகக் கொள்ளாது சிறிது மிகவிடின் சுவையினை உண்டு பண்ணும் அவ்வுப்பினை அளவிற்கு மிகுதியாக உபயோகித்தல் போலும்" என்று தலைவிக்கு உள்ள கோபம் நீங்கித் தான் வந்த தூதிற் குச சம்மதிக்கும்படித் தோழி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்

றது. அதாவது, காழியானவள், தலைவீர்ப! கோபித்தல் என்பது கலவியினால் உண்டாகும் இன்பத்தை அனுபவித்தற்கு வேண்டியது ஒன்றுயினும் அக்கோபத்தைத் தலைவரிடத்து உபயோகிக்கும் காலத்து கலவியின் பொருட்டு அவனுக்கு எழுந்த குறிப்பு அடங்குவதற்குமுன் செய்தல் வேண்டுமேமபன்றிச் சிறிது நீளிடல் ஆகாது. எனெனின்? உப்பு மிகுந்த இடத்து உண்கின்ற உணவுகள் எவ்விதம் சுவைகெட்டுப் போமோ அதுபோல கொண்ட கோபங்கொள்ளுமிடத்து கலவியினுலுண்டாகும் இன்பமானது இன்பமாக இராது போய்விடும் என்று கூறித் தன் வழிப்படுத்தினளாயிற்று

1303. அலந்தாரை யல்லனெய் செய்தற்றுற் றம்மைப் புலந்தாரைப் புல்லா விடல்.

பரத்தையர்டத்துநின்றும் வந்த தலைமகனெடு தலைமகள் புலந்து சொல்லியது.

(பரி.) இ - ள். தம்மைப் புலந்தாரைப் புல்லாவிடல்=தம்மைப்பெரிதும் புலந்தமகளிரைப் புலவி நீக்கிக கலவாது ஆடவர் சேறல்,—அலந்தாரை அல்லல்நோய் செய்தற்று=பண்டே துன்பமுற்றழிந்தாரை அதன்மேலும் மிக்க துன்பத்தினைச் செய்தாற்போலும். எ - று.

பிறர்பாற்சேறலின் தம்மைபபெரிதும் புலந்தாடியிருக்கின்ற பரத்தையரைப்போய்ப் புலவிநீக்கிப் புல்லீராயின், அவராற்றுசென்பதாம். (கு)

விளக்கம்:—"தம்மை அடையாது கோபித்த பெண்களே அவர்களது கோபத்தை நீக்கி அவர்களோடு கலவாமல் ஆண்மக்கள் செல்லல் முன்னமே துன்பமுற்றவர்க்கு அதன்மேலும் மிகுந்த துன்பத்தைச் செய்ததுபோலாயிற்று" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தலைவியினது புலவி தீரும்படி அவளிடத்துவந்த தலைமகனைத் தலைமகள் கண்டு இவன் பரத்தையினிடத்தே இருந்து வந்தானுதலால் இவனோடு சிறிது கோபித்தல் வேண்டுமென்று எண்ணினவளாய் நீர் இப்போது அயலவரிடத்தே வந்தமையால் உம்மை அடையாது கோபித்து ஊடல் கொண்டு இருக்கும் பரத்தையரிடத்துச் சென்று புலவியை நீக்கி அவரை அணையீராயின் அவர் உமது பிரிவு ஆற்றுமையால் வருந்துவர். ஆதலால் அவரிடத்துச் சென்று அவரை ஆற்றுதல் வேண்டும் என்று பிரிவாற்றுமையால் தனக்குண்டாகிய துன்

பத்தைப பலர்க்கும் பொதுவாகிய மகளிரும் பிரிவு என்பது ஒன்று அறியாதவரும் ஆகிய பரத்தையர் மீது ஏற்றி இழித்துக் கூறிய தாயிற்று.

1304. ஊடி யவரை யுணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று.

இதுவுமது.

(பரி.) இ - ள். ஊடியவரை உணராமை — நுமமோடியிய பரத்தையரை ஊடலுணர்த்திக கூடாதொழிதல் — வாடிய வள்ளி முதல் அரிந்தற்று = பண்டே நீர்பெருது வாடிய கொடியை அடியிலேயறுத்தாற்போலும். எ - று.

நீர் பரத்தையரிடத்திராயவழி எம்புதல்வரைக் கண்டாற்றியிருக்கற் பாலமாய யாம நும்மோடுதற்குரியமல்லம், அன்மையின் எம்மையுணர்த்தல் வேண்டா; உரியராயுடிய பரத்தையரையே உணர்த்தல்வேண்டுவது, அதனால் ஆண்டுச்சென்மினென்பதாம். (ச)

விளக்கம்:—"உம்மோடு ஊடல்கொண்ட பரத்தையர்களை ஊடல் கொள்ளாத விதமாக உம்முடைய தவறின்மையைக்கூறி அவர்கள் சம் மதிக்கும்படிச் செய்து அவர்களைக் கூடாது இருப்பீராயின், முன்னரே தண்ணீர் பெருமல் வாடியிருக்கும் கொடி ஒன்றினை வேரோடு அறுத்து விட்டதுபோலாகும்" என்று பரத்தையரிடத்து இருந்துவந்த தலைமகளை தோக்கித் தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, நீர் பரத்தையரிடத்து இருக்க விரும்பி அவரோடு உள்ளகாலத்து எம் முடைய பிள்ளைகளைப்பார்த்து உமது பிரிவு ஆற்றுமையைப பொறுத்து இருக்கக்கூடிய தகுதியுடைய யாம் உம்மோடு ஊடல்கொண்டு ஊடுவத ற்குப் பாத்தியதை உடையோமல்லோம். அவ்விதம் அல்லாமையால் எம்மை உம்முடைய தவறின்மையைக்கூறிச் சம்மதிக்கச் செய்யவேண்டு வதில்லை. உம்மிடத்தே மிகுதியும் பாத்தியதையைக் கொண்டு உமது பிரி வாகிய தவறினைக்கண்டு ஊடல்கொண்ட பரத்தையரையேவணங்கிச் சம் மதிக்கச் செய்யவேண்டுவது. அவ்விதம் செய்யாவிடில் முன்னரே நீரில் லாமையால் வாடிய பசுங்கொடி ஒன்றினை வேரோடு அறுத்துவிட்டாற் போலாகும் ஆதலால் அபபரத்தையரிடத்துச் செல்லல்வேண்டும் என்று தன் பிரிவாற்றுமையையும் தலைவன் பரத்தையரிடத்து இருந்த தகுதியின்மையையும் தலைமகள் கூறினளாயிற்று.

1305. நலத்தகை நல்லவர்க் கேளிர் புலத்தகை பூவன்ன கண்ணு ரகத்து.

தலைமகளைப் புலவிநீக்கிக் கூடிய தலைமகன் பன்னுள்ளே சொல்லியது.

(பரி.) இ-ள். நலத்தகை நல்லவர்க்கு ஏர்=நற்குணங்களாற் றகுதியுடைய்யாய தலைவர்க்கும் அழகாவது,—பூ அன்ன கண்ணர் அகத்துப் புலத்தகை=தம்பூவன்னகண்ணர் நெஞ்சின்கண் நிகழும் புலவிமிகுதியன்றே.

சிறப்புமை விகாரத்தாற்றொக்கது. தவறில்லார்க்கும் புலவி இனிதென்பான், 'நலத்தகை நல்லவர்க்கும்' என்றான். அழகு=இன்பப்பயனைத் தலைப்படுதல். தானுகர்ந்தவின்பத்திற்கேதுவாகிய புலவியை வியந்து கூறியவாறு.

விளக்கம்:—"நல்ல குணங்களால் தகுதியை யடைந்த தலைவர்களுக்கும் அழகாக இருப்பது தம் பூவினையே ஒத்த கண்களையுடைய பெண்களுடைய நெஞ்சினிடத்தே உண்டாகும் புலவியின் மிகுதியன்றே?" என்று தலைமகளை அவள்கொண்ட கோபத்தினின்றும் நீக்கி அவளோடு கூடிய தலைமகன் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தலைவியினது கோபத்தினால் தனக்கு நேர்ந்த இன்பத்தை மிகுதியும் வியந்து தவறுடையவர்களுக்கு மாத்திரம் தலைவியின் புலவி இனிதென்று கூறுவதற்கு இல்லை. தவறில்லாத தலைவர்களுக்கும் தலைவியின் புலவிவேண்டுவதாக உள்ளது. ஏனெனின்? புலவியில்லாத கலவி அத்துணை இன்பம் தருவதற்கு இல்லை என்று தலைவியின் புலவியையும் அதனால் தான் அடைந்த இன்பத்தையும் கூறியதாயிற்று.

1306. துனியும் புலவியு மில்லாயிற் காமங் கனியுங் கருக்காயு மற்று.

இதுவுமது.

(பரி.) இ-ள். துனியும் புலவியும் இல்லாயின்=முதிர்ந்த கலாமாகிய துனியும் இளையகலாமாகிய புலவியும் இல்லையாயின்,—காமம் கனியும் கருக்காயும் அற்று=காமம் செவ்விமுதிர்ந்தபழமும் இளங்காயும்போலும். எ-று.

மிக்முதிர்ந்திறுமெல்லென்றதாய கனி நுகர்வார்க்கு மிகவுமினிமைசெய்யாதாதலிற் றுனியில்லையாயிற் கனியற்றென்றும், கட்டிளமைத்தாய காய் நுக

ருஞ்செவ்வித்தன்றாகலிற புலவியில்லையாயிற் கருக்காயற்றென்றுங கூறினான் இவ்விரண்டும் வேண்டுமென்று வியந்து கூறியவாறு. (௬)

விளக்கம்:—"தலைவனுக்கும் தலைவிக்கும் ஊடலால் தீராத முதிர்ந்த கலகமாகிய துன்பமும், இளைய கலகமாகிய புலவியும் இல்லையானால் காமமானது காலத்தால் முதிர்ந்த பழமும் இளைமையாகிய காயும்போல் ஆகும்" என்று தலைமகன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தலைமகளது கோபத்தைத் தீர்த்துக் கூடிய தலைமகனானவன் மிகுதியும் முதிர்ந்து தானே அற்று விழக்கூடிய தகுதியுடையதாகிய பழமானது உண்ணக்கூடியவர்க்கு எவ்வளவு மிகுதியாகிய இனிமையைச செய்யுமோ அதுபோல் முதிர்ந்த கலகம் இல்லாத இடத்து இன்பம் அனுபவித்தல் உள்ளதென்றும், இளங்காயை உண்டால்உண்பார்க்கு எவ்விதம் இனிமைதாராதோ அதுபோல் சிறு கலகமாகிய புலவியென்பது இல்லாதவிடத்து அனுபவிக்கும் இன்பம் இனிமைதாராததாக உள்ளதென்றும் கூறியதால் காம இன்பம் அனுபவிப்பார்க்குத் தீராத கோபம் இல்லாமையும் தீர்கின்ற கோபம் இருத்தலும் ஆகிய இரண்டும் வேண்டுமென்று கூறியதாயிற்று.

1307. ஊடலி னுண்டாங்கோர் துன்பம் புணர்வது நீடுவ தன்றுகொ லென்று.

இருவுமது.

(பரி.) இ-ள். புணர்வது நீடுவது (கொல்) அன்றுகொல் என்று=இனிப் புணர்ச்சி நீட்டிககுமோ நீட்டியாதோவென்று கருதலான்,—ஊடலின் ஓர் துன்பம் உணடு=இன்பத்திற்கின்றியமையாத ஊடலின்கண்ணேயும் ஒரு துன்பநிகழும். எ-று.

என்றென்னுமெச்சத்திற்குக் கருதலானென்பது வருவிக்கப்பட்டது. சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது கொல்லென்பதனை நீடுவதென்பதனுடனுங் கூட்டுக. ஆங்கென்பது அசைநிலை. ஊடல் கூடற்கண விரைவித்தல் கூறியவாறு.

விளக்கம்:—"இனி புணர்ச்சியானது நீட்டித்து நிற்குமோ அல்லது நீடியாது ஒழியுமோ என்று எண்ணுதலால் இன்பம் அனுபவிப்பதற்கு இருந்தே ஆகவேண்டிய புலவியின்கண்ணும் ஓர் துன்பம் நிகழ்தல் கூடும்" என்று தலைமகன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது.

அதாவது, தலைமகனானவன் தலைமகளைக் கூடுமிடத்து இதற்குமுன் தலைவியிடத்து உண்டாகிய ஊடலால் அவள் கூடுதலை விரைவில் விரும்புவதை அறிந்து ஊடலானது புணர்ச்சியினிடத்து விரையும்படிச் செய்வதற்குக் கருவியாக உள்ளது என்று கூறியவாறாயிற்று.

1308. நோத லெவன்மற்று நொந்தாரென் றஃதறியுங் காதல ரில்லா வழி.

உணர்ப்புவயின்வாரா வூடற்கட்டலைமகன் தலைமகளோடு புலந்து சொல்லியது.

(பரி.) இ-ள். நொந்தாரென்று அஃது அறியும் காதலர் இல்லாவழி= இவர் நம்பொருட்டாக நொந்தாரென்று அந்நோவினையறியு மன்புடையாரைப் பெறாவழி,—நோதல் மற்று எவன்=ஒருவர் நோகின்றதனாற் பயனென்! எ-று.

அறிதல்=ஈண்டூடலை யினிதுணர்தல், மற்று வினைமாற்றின்கண்வந்தது. இவள் நங்காதலியல்லள், அன்மையின் இந்நோவறியாள், அறியாமையின் நாம் புலக்கின்றதனாற் பயனில்லையெனத் தன்னாற்றாமையுணர்த்தியவாறு.

விளக்கம் :—"இவர் நம்பொருட்டாக வருந்தினாரென்று அவ்வருத்தத்தை அறியும் அன்பு உடையவரைப் பெறாத இடத்து ஒருவர் தமக்குத் தாமே வருந்துவதில் பயன் யாது" என்று தலைவியை ஊடல் தீர்க்கும் பொருட்டுத் தன் தவறின்மையை எவ்வளவு வணங்கிச் சொல்லியும் தன் வழிவாராது ஊடிக்கொண்ட தலைமகளோடு தலைமகன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தலைமகன் கோபித்து இவள் நம் காதலியாக இருப்பாளாயின் நம் பிரிவாற்றாமையால் இவர் வருந்துகின்றனர் என்று கருதுவள், இவள் நம் காதலியல்லள் ஆதலால் நம் வருத்தத்தை அறியாதவளாக இருக்கின்றாள். இவ்விதம் நம் வருத்தம் அறியாத இவளிடத்துக் கோபிப்பதால் யாதொரு பயனும் இல்லையெனத் தன் ஆற்றாமையை உணர்த்தியவாறாயிற்று.

1309. நீரு நிழல தினிதே புலவியும் வீழுநர் கண்ணே யினிது.

இதுவுமது.

(பரி.) இ-ள். நீரும் நிழலதே இனிது=உயிர்க்கின்றியமையாத நீரும் நிழலின் கண்ணதே இனிதாவது, ஏனை வெயிலின்கண்ணது ஆகாது;—புலவி

யும் வீழுநர் கண்ணே இனிது = அதுபோலக் கலவிக்கின்றியமையாத புலவியும் அன்புடையார் கண்ணே இனிதாவது, வேனயன் பிறார்கண் ஆகாது. எ - று.

நிழற்கணிருந்த ீர் குளிர்ச்சிமிக்குத் தாகந்தணித்தலின் இனிதாயிற்று. வீழுநர் ஆற்றுமைக்கு கோதலுங் கூடுதற்கண் வேட்கையுமுடையராவார். இவள் கம்மாட்டு அவ்விரண்டுமின்மையின் இப்புலவிதானு மின்னுதாகாநின்ற தென்பதாம். (கூ)

விளக்கம்:—"உயிர்களுக்கு இருந்தே ஆகவேண்டிய தண்ணீரும் நிழலின் கீழ் இருப்பதாயின் இனிமையாகவே இருக்கும். அவ்வித மல்லாது வெயில் காயுமிடத்து இருப்பதானால் அது இனிமையுடைய தாகாது. அதுபோலவே கலவிக்கு இருந்தே ஆகவேண்டிய புலவி என்னும் சிறு கோபமும் அன்பு உடையாரிடத்துத் தோன்றுமாயின் இனிமையாகவே முடியும், மற்றை அன்பில்லாதவரிடத்து அப்புலவி தோன்றுமாயின் இனியது ஆகாமல் போகும்" என்று தலைவன் கூறியதாக இத் திருக்குறள் கூறுகின்றது. அதாவது, நிழலிடத்தே உள்ள நீரானது எவ்வாறு குளிர்ச்சிமிகுந்து உண்பார்க்குத் தாகத்தை நீக்கி இனிமையாக உள்ளதோ, அதுபோல் தம்மை விரும்பும் காதலரிடத்தே தோன்றும் பிரிவாற்றுமைக்கு வருந்துதலும் அவ்வருத்தம் நோக்கி காதலரைக் கூடுங்காலத்து விருப்பம் மிகுந்து இனிமைபடச் செய்வதால் அன்புடையாரிடத்துண்டாகும். அவ்வாறன்றி வெயிலிடத்தே இருந்த நீரினை உண்பார்க்கு எவ்விதம் தாகத்தைத் தணிக்கினும் அது இனிமை செய்யாதது போல் இவளிடத்து நம்முடைய வருத்தங்கண்டு வருந்துகின்ற தன்மையும் அவ்வருத்தங் கண்டு கூடுகின்ற காலத்து அக் கலவியை இனிமை படும்படிச் செய்யும் விருப்பமும் ஆகிய இரண்டும் இல்லாமையால் இவளிடத்தே தோன்றிய புலவிதானும் நீரும் கோபமாக இல்லாது துன்பத்தைத் தருவதாக உள்ளது என்று தன்வழிவாராத தலைவியை நோக்கித் தலைவன் கோபித்துக் கூறியதாயிற்று.

1310. ஊட ணுணங்க விடுவாரோ டென்னெஞ்சங் கூடுவே மென்ப தவா.

இதுவுமது.

(பதி.) இ-ள். ஊடல் ணுணங்க = தாஹாடற்கண்ணே மெலியாநிற்கவும், —விடுவாரோடு கூடுவேம் என்பது என்னெஞ்சம் அவா = விட்டிருக்கவல்லா

ரோடுகூடக் கடவேமென்று என்னெஞ்சம் முயறற்கேது தன்னவாவே, பிறிதில்லே. எ-று.

அன்புமருளுமில்லாதாரை உடையரென்றும் அவரோடியாங் கூடுவ மென்றுங் கருதி அதற்கு முயறல் அவாவுற்றூர் செயலாகலின், 'கூடுவே மென்பதவா' என்றூன். காரியங காரணமாக வுபசரிக்கப்பட்டது. இக்கூட் டம் முடியாதென்பதாம். (மி)

விளக்கம்:—"தான் ஊடலிடத்தித வருந்தி நிற்கவும் தன்னேவிட் டுப் பிரிந்து இருக்க வல்லாரோடு புணர்வோமென்று என் நெஞ்சமானது முயற்சி செய்வதற்குக் காரணம் தனக்குள்ள ஆசையேயன்றி வேறெ ன்றும் இல்லேயாகும்" என்று தலேவன் கூறியதாக இதிலிருக்குறள் கூறு கின்றது. அதாவது, அன்பும் அருளும் உடையார் ஊடல் கொள்வாரா யின் அவ்வூடலால் உண்டாகும் பிரிவாற்றுமைக்கு வருந்துகின்ற காதலரைக் கண்டு இவர் நம்பொருட்டு இவ்விதம் வருந்துகின்றூர் ஆத லின் இவரோடு கூடி இன்பம் உண்டாகும் கலவியை முடிப்போம் என்று கருதுவர். அவ்விதம் அலலாது காதலர் பிரிவாற்றுமையால் வருந்தி நிற்கவும் ஊடி நின்று அன்பும் அருளும் இல்லாதவரை அன் பும் அருளும் உடையவரென்று எண்ணி அவரோடு யாம் கூடுதற்கு முயற்சி செய்தல ஆசைகொண்டார் செயல் ஒன்றே ஆகுமேயன்றிக் கூடிக் கலவி யின்பத்தை அனுபவிப்பதற்கு முடியாததாகும் என்ப தாயிற்று.

---

132. அதிகாரம்

புலவி நுணுக்கம்.

(பரி.) *அது புலவியது நுணுக்கமென விரியும். அஃதாவது தலேமகனுங் தலேமகளும் ஓரமளிக்கட் கூடியிருந்துழி அவன்மாட்டுப் புலத்தற்காரண மில்லே யாகவுங காதல் கைம்மிகுதலான் நுண்ணியதோர் காரணமுளதாக வுட்கொண்டு அதனே யவன்மேலேற்றி அவள் புலத்தல். காரணத்தினுணுக்கம் காரியத்தின்மேனின்றது. அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும்.*

விளக்கம்:—அதாவது புலவியினுடைய நுணுக்கம் என்பதாம். அது என்னேபோவெனின் ? தலேமகனும் தலேமகளும் ஓர் படுக்கையில்

கூடியிருந்த காலத்து அத்தலைமகனிடத்தே கோபித்துக் கொள்வதற்கு யாதொரு காரணமும்இல்லாதிருக்கவும்,விருப்பமிகுதியால் வெகு நுட்ப மாகிய ஒரு காரணம் இருப்பதாக மனத்துள்கொண்டு அக்காரணத் தையே அத்தலைவன்மீது சுமத்தித் தலைவி கோபித்தல் மேல் புலவி என்னும் அதிகாரத்தைக் கூறினராதலால் அதன் நுணுக்கத்தைப் புலவி நுணுக்கம் என்று இங்குக் கூறலாயினர்.

1311. பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொது
நண்ணேன் பரத்தநின் மார்பு. [வுண்பர்

உலாப்போய்வந்த தலைமகன் பள்ளியிடத்தானாகத்
தலைமகள் சொல்லியது.

(பரி.) இ-ள். பரத்த=பரத்தமை யுடையாய்,—பெண்ணியலார் எல் லாரும் கண்ணிற் பொதுவுண்பர்=நின்னைப் பெண்ணியல்பினையுடையார் யாவருந் தங்கண்ணாற் பொதுவாகவுண்பர்,—நின் மார்பு நண்ணேன்=அத னால் அவர்மிச்சிலாய நின்மார்பினைப் பொருந்தேன். எ-று.

கற்பு நாண் முதலிய நற்குணங்களின்மையிற் பரத்தையர்க்குள்ளது பெண்ணியற்கைமாத்திரமேயென்னுங் கருத்தாற் 'பெண்ணியலார்' என்றாள். பொதுவாகவுண்டல்=தஞ்சேரிச்செலவின் முறையானன்றிஒருகாலத்தொரு ங்கு நோக்குதல்: அதுவுமோர் குற்றம். தாநோக்கியின்புற்றவாறே அவரு நோக்கியின்புறுவரென ஆசங்கித்து அவர்பாற் பொறாமையெய்துதலின், நுணுக்கமாயிற்று. (க)

விளக்கம்:—"ஓ! பரத்தையர் நட்பு உடையாய்! உன்னைப்பெண் தன்மையுடையார் எல்லோரும் தம் கண்ணால் பொதுவாக ஒருகாலத் திலேயே யாவரும் ஒன்றாகப் பார்ப்பர். அவ்விதம் யாவரும் பார்த்துக் கழித்ததாகிய உன்னுடைய மார்பினை யான் பொருந்தேன்" என்று உலாவுதற்குப்போய் வந்த தலைமகனானவன் படுக்கையிடத்துவந்து அம ரவும் அவனைக் கண்ட தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது,தலைமகள் கற்பு,நாணம்முதலிய நற்குணங்கள் ஒன்றுமில்லாது பெண் தன்மை ஒன்றே உடைய பரத்தையரது சேரியில் நீர் செல்லுங் காலத்து அப்பரத்தையர் யாவரும் ஒரு காலத்திலேயே உமது மார்பினை ஒருங்கே பார்த்தார்களாதலால் அவ்விதம் யாவரும் ஒருங்குகண்டு இன் பத்தையடைந்த அம்மார்பை யான் இப்போது பொருந்துவேனாயின் உண்டு கழிந்த மிகுதியை உண்டதுபோலாகுமாதலால் யான் அதைச்

செய்யேன் என்றுள். இதனால்தான் எவ்வித தம் தலைவனது மார்பை நோக்கி இன்பத்தை அடைந்தாளோ அவ்வித அப்பரத்தையரும் அவன் மார்பைப் பார்த்து இன்பத்தை அடைந்திருப்பர் என்று சந்தேகித்து அப்பரத்தையரிடத்துப் பொருமைகொண்டு புலக்கின்றாளாதலால் இவ புலவி நுணுக்கமாயிற்று.

1312. ஊடி யிருந்தேமாத் தும்மினார் யாந்தம்மை நீடுவாழ் கென்பாக் கறிந்து.

தலைமகனிக்கருந்துச் சென்ற தோழிக்குத் தலைமகள் பள்ளியிடத்து நிகழ்ந்தது கூறியது.

(பரி.) இ-ள். ஊடி இருந்தேமாத் தும்மினார்=யாம் தம்மோடியுரையாடா திருந்தேமாகச் காதலர் தும்மினார், —யாம் தம்மை நீடுவாழ்கென்பாக்கு அறிந்து; அது நீங்கித் தம்மை நீடுவாழ்கென்றுரையாடுவேமாகக் கருதி.

தும்மியக்கால் வாழ்த்துதல் மரபாகலான், உரையாடல் வேண்டிற் றென்பதாம். இயல்பானிகழ்ந்த தும்மலைக் குறிப்பானிகழ்ந்ததாகக் கோட லின், நுணுக்கமாயிற்று. (உ)

விளக்கம்:—"யாம் காதல் மீறாடு ஊடல் கொண்டு பேசாதிருக்கவும் நம் காதலர் தும்மினர். ஏனெனின் ? அவ்வூடல் நீங்கித் தம்மை நெடும்பொழுது வாழ்வீர் என்று வாழ்த்துவேம் என்று எண்ணியே யாகும்" என்று தலைமகளைத் தலைமகன் நீங்கியிருந்த காலத்து அவளிடத்தே சென்ற தோழிக்குத் தலைமகள் படுக்கையிடத்து நிகழ்ந்ததைக் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தலைவியானவள் தன்னிடத்து வந்த தோழியை நோக்கி யான் தலைவரிடத்து நேற்று இரவு பேசாது கோபித்து இருக்கவும் அக் கோபத்தை நீக்கக் கருதிக் குறிப்பாகத் தும்மினர். ஏனெனின் ? ஒருவர் தும்மும் காலத்து அவரிடத்து அன்பு கொண்டவர்கள் அவரை நெடும்பொழுது வாழ்தல் வேண்டுமென்று வாழ்த்துவது உலக வழக்காதலால் அவ்வித யாதும் வாழ்த்தாவேன் என்றும், அதனால் என் புலவியும் நீரும் என்றும் எண்ணியேயாகும் என்று கூறினளாயிற்று. இங்கு தலைவன் இயல்பாகவே தும்மியும் குறிப்பாகத் தும்மினனென்று தலைவிகொண்டதால் இது புலவியினுடைய நுணுக்கமாயிற்று.

1313. கோட்டுப்பூச் சூடினுங் காயு மொருத்தியைக் காட்டிய சூடினீ ரென்று.

தலைமகள் புலவிக்குறிப்பினைக் கண்டு நீவிர்கூடியொழுகா நிற்கவும் இது நிகழ்த்தற்குக் காரணம் யாதென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

(பரி.) இ-ள். கோட்டுப்பூச் சூடினும்=யான் கோடுதலைச்செய்யு மாலை யைக சூடினேனுயினும்,—ஒருத்தியைக் காட்டிய சூடினீர் என்று காயும்= நும்மாற் காதலிக்கப்பட்டா ளொருத்திக்கு இப்பூவணிகாட்டல்வேண்டிச் சூடினீரென்று வெகுளாநிற்கும்; இத்தன்மையாட்கு ஒரு காரணம் வேண்டு மோ[1] எ-று.

கோடென்பது முதனிலைத் தொழிற்பெயர். பூ—ஆகுபெயர். வினைய மாகச் சூடினுமென்பதாம்;"கோட்டங் கணணியுங் கொடுந்திரை யாடையும்"* என்றுர் பிறரும். இனி அம்மருதநிலத்துப்பூவன்றி வேற்றுநிலத்துக் கோட்டுப் பூவைச் சூடினேனுயினும் சண்டையாள் பிறளொருத்திக்கு அவ்வேற்றுப் பூவணி காட்டல்வேண்டிச் சூடினீரென்று வெகுளுமெனினு மமையும் (க)

விளக்கம்:—"யான் கோடுதலையுடைய மாலை யொன்றினைச் சூடி னேனுலும் உம்மால் விரும்பப்பட்ட காதலி யொருத்திக்குப் பூவின் அழகினைக் காண்பித்தல் வேண்டியே சூடிக்கொண்டீர் என்று கோபித் கின்றனள். இவ்வித தகுதியுடையாளுக்குக் கோபித்தற்கு ஒரு காரண மும் வேண்டுமோ"என்று தலைமகளது கோபிக்குங் குறிப்பினைத் தோழி பார்த்து தலைமகனை நோக்கி நீவிர் இருவரும் கூடி இருக்கவும் இவ்விதப் புலவி உண்டாவதற்குக் காரணம் எது என்று கேட்டலும் தலைமகன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தலைமகனை வன் தோழியை நோக்கி ஓ! தோழியே! யான் வினையமாகச் சூடிக்கொள் ளும் பூவினுலாகிய மாலை ஒன்றினையேனும் அல்லது இம்மருத நிலத் துக்கு உரியதல்லாத வேற்று நிலத்திற்கு உரிய கொம்பிற் பூக்கும் பூவையேனும் சூடிக்கொள்வேனையின், அதுகண்ட உன் தலைவியான வள் நீர் இவ்விதமாகிய மாலைனை அணிதல் யாரோ பிறள் ஒருத்திக்கு இவ்வேற்று நிலத்துப் பூவினழகினைக் காண்பித்தல் வேண்டியே சூடிக் கொண்டீர் என்று கோபிப்பாளாயின் இவ்வித தகுதியுடையாளுக்குப்

* புறநானூறு, 275.

புலக்கற்கு ஒரு காரணமும் வேண்டுமோ என்று புலவி நுணுக்கம் கூறியதாயிற்று.

1314. யாரினுங் காதல மென்றேனு வூடினுள் யாரினும் யாரினு மென்று.

இதுவுமது.

(பரி.) இ-ள். யாரினும் காதலம் என்றேனு=காமநுகர்தற்குரிய விருவராயினுள் யாவரினும் யாம் மிக்க காதலையுடையேமென்பது கருதி யாரினும் காதலமென்றேனாக,—யாரினும் யாரினும் என்று வூடினுள்=நின்றோழி அது கருதாது, என்னுற்காதலிக்கப்பட்ட மகளிர் பலருள்ளும் நுங்கட்காத லுடையே னென்றேனுக்கருதி, அமமகளிர் யாரினும் என்கட் காதலுடைய ராயினீரென்று சொல்லிப் புலந்தாள். எ-று.

தலைமகள் கருத்திற்குத் தன்மைப்பன்மை உயர்ச்சிக்கண் வந்தது. யானன்பீமிருதியாற் சொல்லியதனைக கருத்து வேறுபடக்கொண்டதல்லது பிறிதுகாரணமில்லையென்பதாம். (ச)

விளக்கம்:—'காம இன்பத்தை அனுபவித்தற்கு உரிய இருவராயினர் எவரினும் யாம் மிகுந்த காதலை யுடையோம் என்பதை எண்ணி அவ்வெண்ணத்தை அவள் அறியவேண்டி நாம் யாவரினும் மிக்க காதலுடையோம் என்று கூறினேன். கூறுதலும், உனது தலைவி யான் சொல்லிய பொருள் இதுவென்று எண்ணாது என்னால் விரும்பப்பட்ட பெண்கள் பலருள்ளும் தன்னிடத்து அதிகமாகிய காதலுடையேன் யான் என்று கூறினேன் என்று பொருள் கொண்டு 'அப்பெண்கள் யாவரினும் என்னிடத்து அதிக விருப்பங் கொண்டீர் அன்றே?' என்று சொல்லிக்கொண்டே கோபித்தாள்" என்று தலைமகன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தலைமகன் தன்னையும் தலைவியையும் உட்படுத்தி யாம் என்னும் பன்மைச் சொல்லால் கூறுதலும், அது கருதாது யாம் என்னும் சொல்லைத் தன்மைப்பன்மை யுயர்ச்சிக் கண் வந்ததாகப் பொருள்கொண்டு யான் அன்பு மிகுதியால் சொல்லிய சொல்லைக் கருத்து வேறுபடக்கொண்டு அதனால் வெகுள்வாளாயின் அவ்வித தகுதியுடையாள் ஒருத்திக்குப் புலப்பதற்குக் காரணமும் வேண்டுமோ என்று தலைவியினது புலவியின் நுணுக்கத்தைக் கூறியதாயிற்று.

1315. இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனுக் கண்ணிறை நீர்கொண்ட னள்.

இதுவுமது.

(பரி.) இ-ள். இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனு=காதன்மிகுதி யான் இம்மையாகிய பிறப்பின்கண் யாம் பிரியேமென்று சொன்னேனுக,— கண் நிறை நீர் கொண்டனள்=அதனுன் எனை மறுமையாகிய பிறப்பின்கட் பிரிவலென்னுங் குறிப்பினேனுகக் கருதி, அவள் தன் கண்ணிறைந்த நீரினைக் கொண்டாள், எ-று.

வெளிப்படுசொல்லைக் குறிப்புச்சொல்லாகக் கொள்கின்றதல்லது என் பாற் றவறில்லே யென்பதாம். (கு)

விளக்கம் :—" விருப்பமிகுதியால் இம்மையாகிய இப்பிறப்பின் கண் யாம் ஒருவரை யொருவர் விட்டுப் பிரியமாட்டோம் என்று சொன்னேன். சொல்லுதலும் அச்சொற்களைக் கேட்ட தலைவி அவ்வித மாயின் மற்றை மறுமையாகிய பிறப்பினிடத்தே தன்னைப் பிரிந்து விடு வேன் என்று சொல்லியதாகக் கருதி அவள் தன் கண்களில் நிறைந்த நீரினைக் கொண்டாள் " என்று தலைமகன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தோழியே! இப்பிறப்பில் யாம் ஒருவரை யொருவர் விட்டுப்பிரியோம் என்ற அன்பின் மிகுதியால் வெளிப்படு சொற்களால் கூறியதை இப்பிறப்பில் பிரியமாட்டோம் மறுபிறப்பில் பிரிவோம் என்ற குறிப்புச் சொல்லாகக் கூறியதாக எண்ணி கண் நிறைந்த நீரினைக் கொண்டு துன்பப் படுவாளாயினள். அவளது புல விக்கு ஓர் காரணமும் வேண்டுமோ என்ற தலைவியின் புலவி நுணுக்கத் தைக் கூறியதாயிற்று.

1316. உள்ளினே னென்றேன்மற் றென்மறந்தீ ரென் புல்லாள் புலத்தக் கனள். [றென்னைப்

இதுவுமது.

(பரி.) இ-ள். உள்ளினேன் என்றேன்=பிரிந்தகாலத்து நின்னையிடை யின்றி நினைந்தேனென்னுங் கருத்தால் யானுள்ளினேனென்றேன்;—மற்று என்மறந்தீர் என்று என்னைப் புல்லாள் புலத்தக்கனள்=என, அதனை ஒரு கான் மறந்து பின்னினைந்தேனென்றதாகக்கருதி, என்னையிடையே மறந்தீ

ரென்று சொல்லி முன் புல்லுகற் கமைந்தவள் அஃதொழிந்து புலத்தற் கமைந்தாள். எ-று.

மற்று வினைமாற்றின்கண் வந்தது. அருத்தாபத்திவகையான் மறத்தலை யுட்கொண்டு புலந்தாளென்பதாம். (௬)

விளக்கம் :—"பிரிந்து இருந்தகாலத்து உன்னை இடைவிடாது நினைத்து இருந்தேன் என்னும் கருத்தினால் யான் உன்னை நினைத்தேன் என்றேன். கூறலும் நினைத்தேன் என்னும் சொல்லை ஒருகாலத்து மறந்து பின்னர் நினைத்தேன் என்று கூறியதாக எண்ணி என்னை நடுவில் மறந்தீர் என்று சொல்லிக்கொண்டே முன் தழுவுதற்கு அமைந்தவள் அதனை ஒழிந்து 'கோபித்தற்கு ஆரம்பித்தனள்'' என்று தலைவன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தோழியே! இவ்விதம் சொல்லும் சொற்களை வெளிப்படையாகக் கருதாது குறிப்பாகக் கருதிப் புலக்கின்ற இவளுக்குப் புலத்தற்கு ஒரு காரணமும் வேண்டுமோ என்று தலைவியின் புலவி நுணுக்கத்தைக் கூறியதாயிற்று.

1317. வழுத்தினா டும்மினே னாக வழித்தழுதாள் யாருள்ளித் தும்மினீ ரென்று.

இதுவுமது.

(பரி.) இ-ள். தும்மினேனாக வழுத்தினாள்=கூடியிருக்கின்றவள் யான் தும்மினேனாக தன்னியற்கைபற்றி வாழ்த்தினாள்,—அழித்து யார் உள்ளித் தும்மினீர் என்று அழுதாள்=அங்ஙனம் வாழ்த்தியதானே மறித்து, நும்மை நினைத்து வருந்துகின்ற மகளிருள் யாவர் நினைத்தலாற் றும்மினீரென்று சொல்லிப் புலந்தழுதாள். எ-று.

வாழ்த்தலொடு புலத்தல் இயையாமையின், 'அழித்து' என்றான். அன்புடையார் நினைத்தவழி அந்நினைக்கப்பட்டார்க்குத் தும்மறோன்றுமென்பது மகளிர் வழக்கு. இல் வழக்கை உள்வழக்காகக் கருதிப் புலந்தாளென்பதாம்.

விளக்கம் :—"என்னோடு கூடியிருக்கின்ற தலைவியானவள் யான் தும்முதலும் தான் இயற்கையாகச செய்வது போல் என்னை வாழ்த்தினாள். அவ்விதம் வாழ்த்திய அத்தலைவியே மறுபடியும் அவ்வாழ்த்து தலையொழித்து உம்மை நினைத்து வருந்துகின்ற பெண்களுள் எவர் நினைத்தலால் தும்மினீர் என்று சொல்லிக்கொண்டேகோபித்து அழுவாளாயினாள்'' என்று தலைவன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, அன்புடையவர்கள் எவரேனும் ஒருவரை நினைத்தால் அந்

நினைக்கப்பட்டவர்க்குத் தும்மல்தோன்றுமென்பது பெண்கள் வழக்காதலால் இங்கும் யான் தும்மினதற்கு முதலில் வாழ்த்தினாளேனும் பின்னர் எவரோ என்னிடத்து அன்புடையவர் நினைத்தலால் எனக்குத் தும்மல் வந்தது என்று எண்ணி வாழ்த்ததலேவிட்டுக் கோபித்து அழுவாளாயினாள். இவ்விதத் தகுதியுடையாளுக்குப் புலத்தற்குக் காரணமும்மேண்டுமோ என்று தலேவியின் புலவி நுணுக்கத்தைக் கூறியதாயிற்று.

1318. தும்முச் செறுப்ப வழுதா ணுமருள்ள லெம்மை மறைத்திரோ வென்று.

இதுவுமது.

(பரி.) இ-ன். தும்மூச் செறுப்ப்=எனக்குத் தும்மரேன்றியவழி யாருள்ளித் தும்மினீரென்று புலத்தலேயஞ்சி, அதனே யானடக்கினேன்; அங்ஙனமடக்கவும்,—தமர் உள்ளல் எம்மை மறைத்திரோ என்று அழுதாள்=தமர் தும்மை நினைத்தலே எம்மை மறைக்க லுற்றீரோவென்று சொல்லிப் புலந்தழுதாள். எ-று.

தும்மூவென்பது முதனிலேத் தொழிற்பெயர். செறுப்பவென்புழி இறந்ததுதழீஇயவெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. எம்மையென்பது தும்மோடியாதுமையில்லாத வெம்மையென்பதுபட நின்ற இசையெச்சம். இதனே வடநூலார் காகு வென்ப. தும்மினுங் குற்றம் ஒழியினுங் குற்றமாயக்காற் செயற்பாலதியாதென்பதாம். (அ)

விளக்கம் :—''எனக்குத் தும்மல் தோன்றிய விடத்தே யாரை நினைத்து நீர் தும்மினீர் என்று அவள் கோபிப்பதற்குப் பயந்து எனக்குத் தோன்றிய தும்மலே வெளிவாத விதமாக யான் அடக்கிக்கொண்டேன். அவ்விதம் அடக்கவும், உம்முடையவர் உம்மை நினைத்தலே யான் அறியாதிருக்கும்படி மறைக்க ஆரம்பித்துத் தும்மலே அடக்கினீரோ என்று சொல்லிக் கோபித்து அழுதாள்'' என்று தலேவன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தோழியே! இயல்பாகவே உண்டாகிய தும்மலே யாரோ நினைத்தலால் உண்டாவது என்று கோபித்தற்குப் பயந்து அத்தும்மலே அடக்கினும் அதுவும் குற்றம் என்று அழுகின்றாள் தும்மினும் குற்றம் தும்மாவிடினும் குற்றம் என்று குற்றங்காண்கின்ற தகுதியுடைபாளாகிய இவளிடத்துச் செய்யக் கூடுவது எதுவும் இல்லே என்று தலேவியின் புலவி நுணுக்கத்தைக் கூறியதாயிற்று.

1319. தன்னை யுணர்த்தி னுங் காயும் பிறர்க்கு நீ
ரிந்நீர ராகுதி யென்று.

இதுவுமது.

(பரி.) இ - ள். தன்னை உணர்த்தினுங் காயும்=இவ்வாறருளுடிய தன்னை யான் பணிந்துணர்த்துங்காலும் வெகுளாநிற்கும்,—பிறர்க்கும் நீர் இந்நீரர் ஆதலிர் என்று=பிறமகளிர்க்கும் அவ்வுடியவழி இவ்வாறே பணிந்துணர்த்து நீர்மையையுடையீராகுதியென்று சொல்லி. எ - று.

இவள் தெளிவித்தவழியுந் தெளியாளென்பதுபற்றி என்மேலேற்றிய தவற்றை உடம்பட்டுப் பணிந்தேன், பணிய அதுதானும் புலத்தற்கேதுவாய் முடிந்தது, இனி யிவண்மாட்டுச் செய்யத்தகுவதியா தென்பதாம். (கூ)

விளக்கம் :—"இவ்விதமாக ஊடல் கொண்ட தலைவியை யான் வணங்கி என் தவறு இல்லாமையை அவளுக்குச் சொன்னேன். அக் காலத்தும் 'எனைய பெண்களுக்கும் அவர் கோபித்த காலத்து இவ் விதமே வணங்கி அவர்கள் கோபத்தைத் நீர்க்கும் தகுதியுடையராய் இருப்பீரன்றோ" என்று சொல்லிக்கொண்டு கோபிக்கின்றனள்" என்று தலைவன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தோழி ! இவள் நம்முடைய தவறு இன்னதை எவ்வளவு அறிவிக்கினும் அதுகொண்டு தெளியாளென்பது கருதி அவள் என்மீது ஏற்றிய தவறுகளுக்கு உடன்பட்டு வணங்கினேன். அவ்விதம் வணங்கியு வணக்கமும் அவள் புலத்தற்குக் காரணமாய் முடியுமாயின், இனி இவளிடத்து யாம் செய்யக்கூடியது எது உள்ளது என்று தலைவியின் புலவி நுணுக்கத்தைக் கூறியதாயிற்று.

1320. நினைத்திருந்து நோக்கினுங் காயு மனைத்துநீர்
பாருள்ளி நோக்கினீ ரென்று.

இதுவுமது.

(பரி.) இ - ள். நினைத்து இருந்து நோக்கினுங் காயும்=என்சொற்களுஞ் செயல்களும் பற்றித் தான் வெகுடலான், அவற்றையொழிந்திருந்து தன்ன வயவங்களைதொப்பின்மையை நினைந்து அவற்றையே நோக்கினும், என்னை வெகுளாநிற்கும்,—அனைத்தும் நீர் நோக்கினீர் யார் உள்ளி என்று=என்ன வயவமனைத்தும் நோக்கினீர் அவற்றதொப்புமையான் எம்மகள்மை நினைந்தென்று சொல்லி. எ - று.

யான் எல்லாவவயவங்களானும் ஒருத்தியோடொத்தல் கூடாமையின் ஒன்றுலொருவராகப் பலரையுநினைக்கவேண்டும்; அவரெல்லாரையும் யானறியச் சொல்லுமினென்னுங் கருத்தால் 'அனைத்துநோக்கினீர் யாருள்ளீ' என்றுள். வானாவிருத்தலுங் குற்றமாயிற்றென்பதாம். (ய)

விளக்கம் :—"என் சொற்களிலும் செயல்களிலும் குற்றங்கண்டு தலைவி கோபித்தலால் அச்சொல்லையும் செயலையும் ஒழித்து இருந்து அவளது அவயவங்களது உவமை யில்லாத அழகினை நினைந்து அவ்வவயவங்களைப் பார்த்திருந்தேன். அது நோக்கி 'என் அவயவங்கள் எல்லாவற்றையும் நோக்கினீர், அவ்விதம் நோக்கியக்கால் அவ்வவயவங்களினது அழகின் ஒப்புமைகொண்ட எப்பெண்களை நினைந்தோ?' என்று சொல்லி என்னைக்கோபிக்கின்றாள்" என்று தலைவன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தோழியே! அவளது அவயவங்கள் முற்றும் யான் நோக்கிய காலத்து எனக்கு உள்ள அவயவங்கள் எல்லாவற்றையும் நீர் நோக்கியதால் என் அவயவங்களுடைய ஒப்புமையானது ஒருத்திக்கே இருத்தல் கூடாமையின் ஒவ்வொரு அங்கங்களாக எவரெவருக்கு எவ்வெவ்வங்கங்கள் பொருந்தி இருக்குமோ அவர்கள் எல்லாரையும் நீர நினைந்திருத்தல் வேண்டும். அவ்வாறு நினைத்த பெண்கள் எல்லாரையும் யான் அறியச சொல்லுமின் என்று கோபித்தாள். இவ்விதம் தம்மினும் குற்றம், தம்மாவிடினும் குற்றம, பேசினும் குற்றம், பேசாவிடினும் குற்றம், பணியினும் குற்றம், பணியாவிடினும் குற்றம்,நோக்கினும் குற்றம், நோக்காவிடினும் குற்றம், சும்மாவிருக்கினும் குற்றம் என்று யாவும் குற்றமாயின் இவள் புலவிக்கு ஓர் காரணமும் உண்டோ என்று தலைவியின் புலவி நுணுக்கத்தைத் தலைவன் கூறி முடித்ததாயிற்று.

---

133. அதிகாரம்.

ஊடலுவகை.

(பரி.) அஃதாவது அப்பெற்றித்தாய ஊடலாற்றமக்குக்கூடலின்பஞ் சிறந்தழி அச்சிறப்பிற்கேதுவாய அவ்வூடலைத் தலைமகளுவத்தலும் தலைமகனுவத்தலுமாம். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும.

விளக்கம்:—அதாவது மேல் புலவி நுணுக்கத்தால் உண்டாகிய சிறு பிணக்கால் இருவர்க்குமே கூடிதலாலாகிய இன்பம் சிறக்குமாதலின் அச்சிறப்பிற்குக் காரணமாகிய அவ்வூடலைத் தலைமகள் விரும்பி மகிழ்த

லும் தலைமகன் விரும்பி மகிழ்தலுமாம். மேல் அதிகாரத்தில் ஊடலால் வந்த உவகையை இங்குக் கூறுவதால் ஊடலுவகை யென்னும் இவ்வதிகாரம் இங்கு வைக்கப்பட்டுள்ளது.

1321. இல்லை தவறவர்க் காயினு மூடுதல்
வல்ல தவரளிக்கு மாறு.

தலைமகள் காரணமின்றிப் புலக்கின்றமை கேட்ட தோழி
அங்ஙனநீ புலக்கின்றதென்னையென்றாட்கு அவள் சொல்லியது.

(பரி.) இ - ள். அவர்க்குத் தவறு இல்லையாயினும் = அவர்மாட்டுத்தவறில்லையாயினும், — அவர் அளிக்குமாறு ஊடுதல் வல்லது — நமக்கவர் தலையளி செய்கின்றவாறு அவரோடுடுதலை விளைக்க வற்றாகின்றது எ - று.

அவர்க்கென்பது வேற்றுமைமயக்கம். அளவிறந்தவின்பத்தராகலின் யானெய்தற்பாலதாய இத்தலையளி ஒழிந்தாருமெய்துவரெனக்கருதி அது பொறாமையான் ஊடனிகழாநின்றதென்பதாம். (க)

விளக்கம்:—"அவரிடத்துத் தவறே யில்லையாயினும் நமக்கு அவர் மிக்க அன்பினைச் செய்வதற்காக அவரோடு கோபித்தலைச் செய்ய வேண்டியுள்ளது" என்று தலைமகளானவள் காரணமில்லாமலே தலைமகனிடத்துக் கோபிக்கின்ற தன்மையைக் கேட்ட தோழியானவள் அவ்விதம் காரண மில்லாது நீ புலப்பது எதற்கு என்று கேட்டதற்குத் தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது அதாவது, தலைமகளானவள், தோழியே! தலைவரிடத்து யாதொரு தவறும் யான் காணாவிடினும் அளவிறந்த இன்பத்தை யுடையவராதலால் யான் அடையக் கூடிய இவ்வித அன்பினை அவரிடத்து மற்றவர்களும் அடைவரே என்று எண்ணி அவ்விதம் மற்றவரும் அடைவதால் எனக்கு உண்டாகும் பொறாமையினால் ஊடல் என்னும் சிறு பிணக்கு உண்டாவதாயிற்று என்று கூறியதாகும்.

1322. ஊடலிற் றோன்றுஞ் சிறிதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும்.

புலவாக்காலும் அத்தலையளி பெறலாயிருக்க அஃதிழந்து
புல்வியான் வருந்துவதென்னையென்றாட்கு அவள் சொல்லியது.

(பரி.) இ - ள். ஊடலின் தோன்றும் சிறுதுனி = ஊடலேதுவாக நங்கட்டோன்றுகின்ற சிறியதுனிதன்னால், — நல்லளி வாடினும் பாடுபெறும் = காதலர் செய்யு நல்லதலையளி வாடுமாயினும் பெருமையெய்தும். எ - று.

தவறின்றி நிகழ்கின்றவூடல் கடிதினீங்கலின் அத்துன்பமுமில்லாதென்பாள் 'சிறுதுனி' என்றும், ஆராமைபற்றி நிகழ்தலின் அதனை நல்லளி வாடாதென்பாள் 'வாடினும்' என்றும், பின்னே பேரின்பம்பயக்குமென்பாள் 'பாடுபெறும்' என்றுங் கூறினாள். அது வருத்தமெனப்படாதென்பதாம். (உ)

விளக்கம்:—ஊடல் காரணமாக நம்மிடத்துத் தோன்றுகின்ற சிறிய துன்பத்தினால் காதலர் நமக்குச் செய்கின்ற நல்ல தலையளியானது சிறிது வாடுமாயினும் பின்னர் பெருமையை அடையச் செய்யும்'' என்று தோழியானவள் தலைவியை நோக்கி அபபுலத்தல் என்னும் சிறு கோபத்தை அடையா விட்டாளும் அவர் அன்பின் மிகுதியால் பெரிய தேர் இன்பத்தைப் பெறக் கூடியதாய் இருக்கவும், அவ்வின்பத்தினை பிழந்து புலவியால் வருந்துவது ஏதுகருதி என்றூட்டுத், தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தோழியே! யாதொரு தவறுமில்லாமல உண்டாகின்ற ஊடலானது விரைவாக நீங்குதலால் அதனால் உண்டாகும் சிறிய துன்பமும் நெடும்பொழுது நில்லாதென்றும், எனக்குள்ள ஆராமை மிகுதியால் இவ்வூடல் உண்டாவதால் அவர் என்னிடத்தே செய்யும் நல்ல இன்பமானது வாடாது என்றும், அவ்விதம் சிறுபொழுது நாம் ஊடலால் அப்போது இன்பத்தை அடையாவிடினும் பின்னர் உண்டாகும் புணர்ச்சியானது பேரின்பத்தைத் தருவதால் அவ்வூடலால் வரும் வருத்தத்தை வருத்தமென்று கொள்ளுதலாகாது என்றும் கூறியதாயிற்று.

1323. புலத்தலிற் புத்தேணு டுண்டோ நிலத்தொடு நீரியைந் தன்ன ரகத்து.

இதுவுமது.

(பரி.) இ - ள். நிலத்தொடு நீர் இயைந்தன்னாரகத்துப் புலத்தலின் = நிலத்தொடு நீர் கலந்தாற்போல ஒற்றுமையுடைய காதலர்மாட்டுப் புலத்தல் போல,—புத்தேள் நாடு உண்டோ = நமக்கின்பந்தருவதொரு புத்தேளுலக முண்டோ, இல்லை எ - று.

நீர் தானின்ற நிலத் தியல்பிற்றாமாறுபோலக் காதலருந் தாங்கூடிய மகளிரியல்பினராகலான் அதுபற்றி அவரோடு புலவிநீகழுமென்பாள் 'நிலத்தொடு நீரியைந்தன்னாரகத்து' என்றும், அவர் நமக்கும் அன்னராகலின் அப்புலவி பின்னே பேரின்பம் பயவாதின்றதென்பாள் 'புலத்தலிற் புத்தேணுடுண்டோ' என்றுங் கூறினாள். உவமம் பயன்பற்றி வந்தது. (ஈ)

விளக்கம்:—"நிலத்தினோடு நீர் கலந்ததுபோன்ற ஒற்றுமையுடைய காதலரிடத்துப் புலத்தல் கொள்வதுபோல் நமக்கு இன்பத்தைத் தருவதாகிய ஒரு தேவ உலகமும் உண்டோ, இல்லை" என்று தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, நீரானது எந்நிலத்தில் நின்றதோ அந்நிலத்து இயல்பினை அடைவதுபோலக் காதலராய் உள்ளவரும் தாம் கூடிய பெண்களது இயல்புக்குத் தக்க அளவாகப் பொருந்தி வாழ்வராதலால் அவ்வித தகுதியைக் கருதிப் புலவியுண்டாகின்றதென்றும், அவ்விதம் புலவி உண்டாய காலத்து நம்மை அவர் தெளிவித்துக் கூடுகின்ற கூட்டத்தினுள் உண்டாகும் பேரின்பமானது நாம் இறந்து மறுமைப் பயனாக அடையும் தேவபோகத்திற்கும் மேலாயதென்றும் அறிந்தோம். ஆதலால் புலந்துகூடி பேரின்பத்தை அடைவது கலவியின் பயனாகும் என்று புலவியின் பயனைத் தலைவி தோழிக்குக் கூறியதாயிற்று.

1324. புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென்னுள்ள முடைக்கும் படை.

அப்புலவி இனி யாதானீங்குமென்றுட்குச் சொல்லியது.

(பரி.) இ - ள். புல்லி விடாப் புலவியுள் தோன்றும்=காதலரைப் புல்லிக் கொண்டு பின்விடாமைக் கேதுவாகிய அப்புலவிக்கண்ணே யுளதாம்,—என் உள்ளம் உடைக்கும் படை=அதன்மேற்சென்ற என்னுள்ளத்தைக் கெடுக்கும் படைக்கலம். எ-று

புலவியுளென்னுமேழாவது வினைநிகழ்ச்சிக்கண வந்தது. என்னுள்ள முடைக்கும் படைக்கலமென்றது பணக்கத்தையும் பணிமொழியையும். படைக்கலம் என்றாள், அவற்றான் அப்புலவியுள்ளமழிதலின். புலவிநீங்குந் திறங் கூறியவாறு. (ச)

விளக்கம்:—"காதலரை அணைத்துக்கொண்டு பின் விடாமைக்கு எதுவாக உள்ள அப்புலவியினிடத்தே உள்ளது ஆகும், அப்புலவிமீது சென்ற என் உள்ளத்தைக் கெடுக்கும் படைக்கலம்" என்று தோழியானவள் நீ கூறும் பேரின்பத்திற்குக் காரணமாகிய புலவியானது இனி எதனால் நீங்கும் என்று கேட்டதற்குத் தலைவி கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தோழியே! காதலர் தாம் தம் தவறின்மையைக் கூறி வணங்கியும் பணிந்த மொழியால் என்னைத்

தற்றியும் நின்றகாலத்துப் புலவியைக் கொண்ட மனமானது புலவியி னின்றும் நீங்கிக் கூடுந் திறத்தை நாடும் என்று புலவி நீங்கும் திறத் தினைக் கூறியதாயிற்று.

1325. தவறில ராயினுந் தாம்வீழ்வார் மென்றோ ளகறலி னுங்கொன் றுடைத்து.

நலமகளோயுடனிருக்கிக் கூடிய தலைமகன் தழியுவகையுளுய்த் தன்னுள்ளே சொல்லியது.

(பரி) இ-ள். தவறு இலராயினும் தாம் வீழ்வார் மென்றோள் அகறலின் =ஆடவர் தங்கட்டவறிலராயினும் உடையார்போல வூடப்பட்டுக் தாம் விரும்பு மகளிருடைய மெல்லிய தோள்களைக் கூடப்பெறுத வெல்லைக்கண் —ஆங்கு ஒன்று உடைத்து=அவர்கு அப்பெற்றியதோரின்பம் பயத்த லுடைத்து. எ-று.

உடையராயக்கால் இறந்தலின்பத்தோடு வருமின்பமுமெய்துவராகலின் அது மிக நன்று, மற்றையிலராயக்காலும் வருமின்பத்தை யிகழ்ந்ததில்லே யென்னுங் கருத்தால், தவறிலராயினு மாங்கொன்றுடைத்தென்றார். ஊட லினுயவின்பம் அளவிறத்தலிற் கூறற்கரிதென்பான், அப்பெற்றிய தொன் றென்றார். தவறின்றியுடியதூடும் எனக்கின்பமாயிற்றென்பகாம். (கி)

விளக்கம்:—"ஆடவரானவர் தம்மிடத்துத் தவறு இல்லாதவராயி னும் தவறு உடையவர்போல ஊடப்பட்டுத் தம்மை விரும்புகின்ற பெண்களுடைய மெல்லிய தோள்களைக் கூடப்பெறுத அளவில் ஆட வர்க்கு அவ்வித தகுதியுடையதோர் இன்பம் பயத்தலையுடைய தாயுள்ளது" என்று தலைமகளை ஊடல் நீக்கிக் கூடிய தலைமகனை வன் மிகுதியும் உவகை யுடையவனுப்த் தனக்குள்ளேயே கூறிய தாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, ஆடவர் தம்மி டத்துத் தவறு உடையராய் அத்தவறின் பொருட்டுப் பெண்களால் ஊடப்பெற்று அவ்வூடல் தீர்ந்தவுடன் ஊடலால் பிரிந்திருந்த காலத்து அனுபவியாத இன்பத்தோடு இனி அனுபவிக்க வேண் டிய இன்பத்தையும் அனுபவிப்பதற்கு உரியராதலின், அத்தவறு டைமை கண்டு ஊடுதல் மிக நன்மையுடையதென்றும், அவ்வித்தம் அல் லாது ஆடவர் தவறில்லாதவராயினும் தவறு உடையாரென எண்ணி ஊடியகாலத்தும் அளவு இறந்து சொல்லுதற்கு ஒண்ணுத அவ்வின்பத் தையே ஒத்து இருந்ததென்றும், ஆதலால் என்னிடத்துத் தவறில்லா

திருந்தும் இவள் ஊடல் கொண்டதும் மனக்கின்பமாயிற்று என்பதைத் தலைமகன் சொல்லிக் கொண்டான் என்பதாயிற்று.

1326. உணலினு முண்ட தறலினி தூடல் புணர்தலி னூட லினிது.

இதுவுமது.

(பரி.) இ - ள். உணலினும் உண்டது அறல் இனிது = உயிர்க்குமேலுண் பதனினும் முன்னுண்டதறுதல் இன்பந்தரும்;—காமம் புணர்தலின் ஊடல் இனிது = அதுபோலக் காமத்திற்கு மேற்புணர்தலினும் முன்னேற்தவறு பற்றியூடுதல் இன்பந்தரும். எ-று.

காமத்திற்கென்புழிச் சாரியையும் நான்கனுருபும் விகாரத்தாற்றொக்க னை. பசித்துண்ணும்வழி மிகவுண்ணலுமாய் இன்சுவைத்துமாம் அதுபோல அகன்று கூடும்வழி ஆராதுமாய்ப் பேரின்பத்துமாமெனத் தன்னனுபவம் பற்றிக் கூறியவாறு. (சு)

விளக்கம்:—"உயிர்களுக்குப் பசியாத காலத்து உண்பதினும் முன் உண்டது முழுவதும் அற்ற பிறகு உண்ணுதல் எவ்வித இன்பத்தினைத் தருமோ அது போலக் காமத்துக்கு மேலும் மேலும் புணர்தலினும் தலைவன் பிரிந்திருந்த காலத்து அவன் செய்த தவறு நோக்கிப் பெண்கள் ஊடிக்கொள்ளுதல் ஆடவர்க்கு இன்பத்தைத்தரும்" என்று தலைமகளது ஊடலைப்போக்கிக் கூடிய தலைமகனுனவன் மிக மகிழ்ச்சியுடையனுய்க் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, பசித்து உண்ட காலத்து உண்ணும் பொருள்களை விடுதியும் உண்டலும், அவ்விதம் உண்ட உணவுகள் இனிய சுவையைத் தருதலும் இயல்பு ஆதல் போல, பெண்களை நீங்கியிருந்து கூடுங்காலத்து உண்டாகும் இன்பமானது ஆராத தன்மையுடையதுமாய்ப் பேரின்பத்தைத் தருவதுமாய் உள்ளது என்று ஊடலால் வருகின்ற அனுபவத்தைக் கூறியதாயிற்று.

1327. ஊடலிற் றோற்றவர் வென்றூ துமன்னுங் கூடலிற் காணப் படும்.

இதுவுமது.

(பரி.) இ - ள். ஊடலின் தோற்றவர் வெண்ணூர் = காமநுகர்தற்குரிய இருவருள் ஊடலின்கட்டோற்றவர் வென்றூவார்;—அது கூடலிற் காணப்

படும்=அஃதப்பொழுதறியப்படாதாயினும் பின்னைப் புணர்ச்சியின்கண் அவராலறியப்படும். எ-று.

தோற்றவர்=எதிர்தலாற்றாது சாய்ந்தவர். அவர் புணர்ச்சிக்கட் பேரின்ப மெய்தலின் வென்றாராயினார். மன்னும் உம்மும் அசைநிலை. யானதுபொழுது சாயதலின் இதுபொழுது பேரின்பம்பெற்றேனென்பதாம். (எ)

விளக்கம்:—"காம இன்பம் அனுபவித்தற்கு உரிய இருவருள் ஊடலாகிய சிறு பிணக்கு இடத்தே தோற்றவர் வெற்றி அடைந்தவராவார். அவ்வெற்றியானது தோற்ற அப்பொழுது அறியப்படாது இருக்கினும் பின்னைப் புணர்ச்சியின்பம் அனுபவிக்குங் காலத்து அவரால் அறியப்படும்" என்று தலைமகன்கூறியதாக இத்திருக்குறள்கூறுகின்றது. அதாவது, ஊடல்கொண்ட தலைமகளைத் தலைமகனானவன் அவள் ஊடலை நீக்கி அவளோடு புணர்கின்ற காலத்து அப்புணர்ச்சியால் வரும் இன்பத்தைக் கூறுவான் போன்று மகளிர் ஊடல் கொண்டகாலத்து அவரோடு ஆடவரும் ஊடிக்கொள்ளாமல் தம்முடைய தவறின்மையைக்கூறி அவர்களை வணங்கித் தம்வழிப்படுத்தும் தோல்வியானது அப்பொழுது அம்மகளிர்க்குத் தோற்றவர்போல் காணப்பட்டாலும் ஊடல் தீர்ந்த மகளிர் பின்னர்க் காண்பிக்கும் இன்பமானது பேரின்பமாக இருக்குமாதலால், அத்தோல்வி அப்போது தோல்வியாகக் காணப்படினும் பின்னர் வெற்றியாகவே முடியும். அதனை என் தலைவி ஊடல்கொண்ட காலத்து நான் வணங்கி நின்றேனாதலின் புணர்ச்சியின்பம் அனுபவிக்கும் இக்காலத்து அடைந்த பேரின்பத்தால் அறிந்தேன் என்று கூறியதாயிற்று.

1328. ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக் கூடலிற் றோன்றிய வுப்பு.

இதுவுமது.

(பரி.) இ - ள். நுதல் வெயர்ப்பக் கூடலில் தோன்றிய உப்பு=இது பொழுது இவணுதல் வெயர்க்கும்வகை கலவியின்கணுளதாய இனிமையை— ஊடிப் பெறுகுவங்கொல்லோ=இன்னுமொருகால் இவளூடி யாம்பெறவல்லேமோ! எ-று.

கலவியது விசேடம்பற்றி 'நுதல்வெயர்ப்ப' என்றான். இனிமை=கண்டு கேட்டுண்டுயிர்த்துற் றறிதலானாய வின்பம். இனி அப்பேறு கூடாதெனப் பெற்றதன் சிறப்புக் கூறியவாறு. (அ)

விளக்கம்:—"இதுபொழுது இவளுடைய நெற்றியில் வெயர்வை தோன்றும் வண்ணம் கலவியினிடத்தே உண்டாகிய இனிமையை இன்னும் ஓர் காலத்து இவள் ஊடல் கொண்டு யாம் அடைய வல்லவரா வோமோ" என்று தலைவன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, ஊடல் தீர்த்துக்கூடிய தலைமகன் அக்கூடலில் உண்டாகிய விசேடம் குறித்து நுதல் வெயர்த்தது என்றும், நுதல் வெயர்க்கக்கூடிய கலவியால் கண்ட இன்பமானது ஊடலால் நேர்ந்ததென்றும், இன்னும் மற்றோர் முறை அவ்விதம் ஊடி இவ்விதக் கண்டு கோட்டி உண்டு உயிர்த்து உற்று அறிதலால் உண்டாகிய இன்பத்தினை அடைவது உண்டாகாதென்றும், ஊடலால் தான் இதுபொழுது பெற்ற இன்பத்தின் சிறப்பினைக் கூறியவாறுயிற்று.

1329. ஊடுக மன்னே வொளியிழை யாமிரப்ப
நீடுக மன்னே விரா.

இதுவுமது.

(பதி.) இ - ள். ஒளியிழை ஊடுகமன் = ஒளியிழையினையுடையாள் இன்னுமெம்மோடூடுவளாக;—யாம் இரப்ப இரா நீடுகமன் = அங்ஙனம் அவளூடி நிற்றற்கும் அத்தினையுணர்த்துதற்பொருட்டு யாமிரந்து நிற்றற்கு காலம் பெறும்வகை இவ்விரவு விடியாது நீட்டித்தல் வேண்டுக; எ - று.

ஊடுக நீடுகவென்பன வேண்டிக்கோடற்பொருள். மன்னிரண்டும் ஆக்கத்தின்கண் வந்தன. ஓகாரங்கள் அசைநிலை. கூடலின் ஊடலேயமையுமென்பதாம். (கூ)

விளக்கம்:—"ஒளிதங்கிய ஆபரணங்களை உடையளாகிய இவள் இன்னும் எம்மோடு ஊடிக்கொள்ளல் வேண்டும். அவ்விதம் அவள் ஊடல் கொண்டு இருப்பதற்கும் அவ்வூடலைத் தீர்த்தற்பொருட்டு யாம் எம் குறையையெல்லாம் கூறி வணங்கி நிற்றற்கும் காலம் இருக்கும்படி இவ்விராப் பொழுதானது விடிந்து விடாது நீட்டித்து இருத்தல் வேண்டும்" என்று தலைவன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது; ஊடல் தீர்த்துப் புணர்ந்த தலைமகன் அவ்வூடலால் வந்த பேரின்பத்தைக் கருதி எக்காலத்தும் கூடி நிற்பதினும் முன்னர் ஊடி பின்னர் கூடுதலே மிக்கதோர் இன்பத்தை அடைவதற்குக் காரணமாகும் என்று ஊடலிடத்தே உண்டாகும் உலகையைக் கூறியதாயிற்று.

1330. ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்.

இதுவுமது.

(பரி.) இ-ள். காமத்திற்கு இன்பம் ஊடுதல்=காமநுகர்ச்சிக்கின்பமாவது அதனை நுகர்தற்குரியாவார் ஆராமைபற்றித் தம்முளூடுதல்,—அதற்கு இன்பம் கூடி முயங்கப் பெறின்=அவ்வூடுதற்கின்பமாவது, அதனை யளவறிந்து நீங்கித் தம்முட்கூடி முயங்குதல் கூடுமாயின், அம்முயக்கம். எ-று.

கூடுதல்=ஒத்தவளவினராதல். முதிர்ந்ததனியாயவழிததுன்பம்பயத்தலானும், முதிராதபுலவியாயவழிக் கலவியின்பம் பயவாமையானும், இரண்டற்குமிடையாகிய வளவறிந்து நீங்குதலரிதென்பதுபற்றிக் 'கூடிமுயங்கப் பெறின்' என்றார். அவ்விரண்டின்பமும் யான் பெற்றேனென்பதாம். (இ)

விளக்கம்:—"காம அனுபவத்திற்கு இன்பமாக இருப்பது அக் காம இன்பத்தினை அனுபவித்தற்கு உரியவராவார் அடங்காக் காமத்தால் தமக்குள் ஊடிக்கொள்ளுதலாகும். அவ்விதம் ஊடிக்கொள்வதற்கு இன்பமாக இருப்பது அவ்வூடலை அளவு அறிந்து நீங்கித் தம் முள் ஒத்த அளவினராய்க் கூடி முயங்குதல் கூடுமாயின், அம் முயக்க மேயாகும்" என்று தலைமகன் கூறியதாக இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தலைமகன் தலைமகளது புலவியை நீக்கிக் கூடுங் காலத்து உண்டாகும் இன்பத்தினைக் கூறுவானுகி ஊடுதலே காம நுகர்ச்சிக்கு இன்பமாயினும் அவ்வூடல் அதிகப் படாமலும் குறையாமலும் இருத்தல் வேண்டுமென்றும், அவ்விதம் அளவறிந்து கூடாவிடின் ஊடல் முதிர்ந்ததாலத்து அது துன்பம் பயக்குமென்றும், முதிராது சிறு புலவியாய இடத்துக் கலவி இன்பம் மிக்கதோர் பயனைத் தாராது என்றும், ஆதலால் அவ்வளவறிந்து இருவர்கூடுதல் மிகுதியும் அருமையென்றும், ஆயின், யானே அவ்விரண்டு இன்பமும் பெற்றேன் என்றும் தான் பெற்ற இன்பத்தினைக் கூறினனையிற்று.

காமத்துப்பால் முற்றிற்று.

(பரி.) ஈண்டுப் பிரிவினை வடநூன்மதம்பற்றிச் செலவு ஆற்றுமை விதுப்புப் புலவியென நால்வகைத்தாக்கிக் கூறினர். அவற்றுட் செலவு பிரிவாற்றுமை யுள்ளும், ஆற்றுமை படர்மெலிந்திரங்கன் முதல் நிறையழிதலீறு யவற்றுள்ளும், விதுப்பு அவர்வயின்விதும்பன்முதற் புணர்ச்சிவிதும்பலீறு யவற்றுள்ளும், புலவி நெஞ்சொடுபுலத்தன்முதல் ஊடலுவகையீறுயவற்றுள் ளுங்கண்டு கொள்க. அஃதேல் வடநூலார் இவற்றுடனே சாபத்திலுளுய நீக் கத்தினையுங் கூட்டிப் பிரிவினை ஐவகைத்தென்றாலெனின், அஃது அறம் பொருளின்பமென்னும் பயன்களுள் ஒன்றுபற்றிய பிரிவன்மையானும், மூனிவராணையான் ஒருகாலத்தோர் குற்றத்துளதாவதல்லது உலகியல்பாய் வாராமையானும் ஈண்டொழிக்கப்பட்டதென்க.

விளக்கம்:—இவ்வாசிரியர் பிரிவு என்பதனை வடநூலார் கொள் கையின் வழி பிரிந்து செல்லுதல், அதனால் உண்டாகும் ஆற்றுமை, பின்னிசைதல், புலத்தல் என்று நால்வகையாகக் கூறியுள்ளனர். அவ் விதம் கூறிய நான்கு பகுதியினுள் செலவு என்பதனைப் பிரிவாற்றுமை என்னும் அதிகாரத்துள்ளும், ஆற்றுமை என்பதனைப் படர்மெலிந்து இரங்கல் என்னும் அதிகாரம் முதல் நிறையழிதல் என்கின்ற அதிகா ரங்கள் வரையும், விதுப்பு என்பதனை அவர்வயின்விதும்பல் என் னும் அதிகாரம் முதல் புணர்ச்சிவிதும்பல் என்னும் அதிகாரங்கள் வரையும், புலவி என்பதனை நெஞ்சொடுபுலத்தல் என்னும் அதிகாரம் முதல் ஊடலுவகை என்கின்ற அதிகாரங்கள் வரையும் கண்டுகொள்ளு தல் வேண்டும். அதுவல்லாமலும், வடநூலார் இப்பிரிவினை மேல்கூறிய நான்குவகையாகக் கூறுவதுடன் நில்லாமல் சாபத்தினால் உண்டாகும் நீக்கத்தினையும் கூட்டிப் பிரிவு என்பதனை ஐந்துவிதம் என்று கூறுகின் றனரே எனின், அவ்வித பிரிவானது அறம், பொருள், இன்பம் என் னும் பயன்கள் அடைவதற்கு நேர்ந்த பிரிவு அல்லாமையானும், முற் றத் துறந்த முனிவராது ஆணையால் எப்போதேனும் ஓர் காலத்து ஓர் குற் றத்தின்பொருட்டு உண்டாவது அல்லது உலக இயல்பாய் வாராமை யானும் அவ்வடநூலார் கூறும் சாபத்தினால் வரும் பிரிவினைத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் கூறாமல் விட்டுவிட்டனர் என்பதாம்

காமத்துப்பால் முற்றிற்று

திருக்குறள் விளக்கம் முற்றுப்பெற்றது.

திருக்குறள் விளக்கம்.

காமத்துப்பால் அகராதி.

குறள்.	எண்.	பக்கம்.	குறள்.	எண்.	பக்கம்.
அசையியற்	1098	23	உள்ளினே	1316	208
அணங்குகொ	1081	7	உள்ளுவன்—னு	1184	101
அரிதாரோதேற்	1153	75	உள்ளுவன்—ம	1125	49
அரிதாற்றி	1160	81	உறுஅதவர்க்	1292	188
அலக்கணை	1303	197	உறுஅதவர்போ	1096	22
அலரெழ	1141	65	உறுஅதோ	1143	67
அலர்நாண	1140	71	உறுஅர்க்கு	1200	113
அவர்தக்தா	1182	99	உறுதோறு	1106	31
அவர்நெஞ்	1291	187	ஊடலிற்றோ	1327	217
அழல்போலு	1228	136	ஊடலிற்றோன்	1322	213
அளித்தஞ்ச	1154	76	ஊடலினுண்	1307	200
அறிகிலா	1139	62	ஊடலுணங்	1310	202
அறிதோறறி	1110	35	ஊடலுணர்தல்	1109	34
அறவாய்நி	1117	42	ஊடற்கட்	1284	182
அனிச்சப்பூ	1115	41	ஊடற்பெ	1328	218
அனிச்சமு	1120	44	ஊடியவ	1304	198
இமைப்பிற்கா	1129	52	ஊடியிருக்	1312	205
இம்மைப்பிறப்	1315	208	ஊடுகமன்	1329	219
இருநோக்கி	1091	18	ஊடுதல்	1330	220
இருந்துள்ளி	1143	149	ஊரவர்கௌவை	1147	69
இலங்கியா	1262	164	எழுதுங்காற்	1285	182
இலேஎவற	1321	213	எள்ளினினி	1298	193
இளித்தக்க	1288	184	எனைத்து நினைப்	1208	120
இனியன்ன	1294	190	எனைத்தொ	1202	116
இன்கணுடை	1152	74	ஏதிலாரேபோ	1099	24
இன்பங்கடன்	1166	86	ஒண்ணுதற்	1088	14
இன்னுநின	1158	79	ஒருதலேயா	1196	111
உடம்போ	1122	46	ஒருநாளெழுநாள்	1269	170
உணலினு	1326	217	ஒம்பினமை	1155	77
உண்டார்க	1090	16	ஒலினிதே	1176	94
உப்பமைந்	1302	196	கடலன்ன	1137	61
உய்த்தலறிந்	1287	184	கடாக்களி	1087	14
உரனசைஇ	1263	165	கண்களவு	1092	19
உவக்காணெங	1185	102	கண்டதுமன்	1146	68
உவந்தாரை	1130	53	கண்டாங்கலுழ்வ	1171	91
உழக்குழக்	1177	95	கண்டாருயிரு	1084	11
உள்ளக்களித்	1281	180	கண்டுகேட்	1101	27
உள்ளத்தார்	1249	153	கண்ணிறைந்த	1272	172
உள்ளம்போ	1170	90	கண்ணிற்றுனி	1290	186
உள்ளினு	1201	115	கண்ணின்பசப்	1240	146

குறள்.	எண்.	பக்கம்.
கண்ணுங்கொளச்	1244	149
கண்ணுள்ளார்	1127	51
கண்ணுள்ளிற்	1126	50
கண்ணொடுக	1100	25
கதுமெனத்தா	1173	92
கயலுண்கண்	1212	123
கரத்தலுமாற்	1162	83
கரப்பினுங்	1271	171
கருமணியிற்	1123	47
கலந்துணர்த்துங்	1246	151
கவ்வையாற்	1144	67
களித்தொறு	1145	68
கனவினானுண்	1214	125
காணிற்குவளை	1114	40
காணுங்காற்	1286	183
காண்கமற்	1265	166
காதலரில்வழி	1224	132
காதலர் தூதொரு	1211	123
காதலவரிலராக	1242	148
காமக்கடன்	1164	85
காமக்கடும்புனலு	1134	57
காமக்கடும்புனனீ	1167	87
காமக்கணிச்சி	1251	155
காமமுநாணு	1163	84
காமமுழந்	1131	54
காமமென	1252	156
காமமவிடு	1247	152
காலைக்குச்	1225	133
காலையரும்பி	1227	135
குறிக்கொண்	1095	21
கூடியகாமம்	1264	166
கூற்றமோ	1085	12
கெட்டார்க்	1293	189
கொடியார்—யி	1169	89
கொடியார்—யு	1235	142
கொடும்புரு	1086	13
கோட்டுப்	1313	206
சாயலுநாணு	1183	100
சிறுமைநமக்	1231	138
செல்லாமை	1151	74
செறாஅச்சிறு	1097	23
செறிதொடி	1275	174
செற்றவர்பின்	1256	159
செற்றாரென	1245	150
செற்றார்பின்	1255	158
தஞ்சந்தம	1300	194
தணந்தமை	1233	140
தண்ணந்துறைவன்	1277	176
தந்நெஞ்சத்	1205	118
தம்மிலிருந்	1107	32
தவறிலரா	1325	216
தனியேயிருந்	1296	191
தன்னையுணர்	1319	211
தாம்வீழ்வார்தம்	1191	107
தாம்வீழ்வார்மென்	1103	29
தாம்வேண்டி	1150	72
தினைத்துணையு	1282	180
துஞ்சுங்காற்	1218	127
துப்பினெவ	1165	86
தும்முச்செறுப்ப	1318	210
துறைவன்	1157	78
துனியும்புல	1306	199
துன்பத்திற்	1209	193
துன்னாத்துறந்தாரை	1250	154
தெரிந்துணரா	1172	92
தொடலைக்	1135	58
தொடிநோக்கி	1279	177
தொடியொடு	1236	142
தொடிற்சுடி	1159	80
நசைஇயார்	1199	113
நயந்தவர்க்கு	1181	99
நயத்தவர்நல்காமை	1232	139
நலத்தகை	1305	199
நனவினாற்	1215	125
நனவினானந்நீந்தா	1220	129
நனவினானல்காக்	1217	127
நனவினானல்காதவ	1213	124
நனவினானல்காரை	1219	128
நனவென	1216	126
நன்னீரைவாழி	1111	37
நாங்காதல்	1195	110
நாணுமற	1297	192
நாணென	1257	160
நாணொடு	1133	56
நிணந்தீயி	1260	162

குறள்.	எண்.	பக்கம்.	குறள்.	எண்.	பக்கம்.
நிறையரி	1138	61	பேணுதுபெட்பவே	1283	181
நிறையுடையே	1254	157	பொருண்மாலே	1230	137
நினைத்திருந்து	1320	211	மடலூர்தல்	1136	59
நினைத்தொன்று	1241	147	மணியுட்	1273	173
நினைப்பவர்	1203	116	மதியுமடந்தை	1116	41
நீங்கிற்றெ	1104	30	மலரன்ன கண் ணுள்	1119	44
நீருநிழல	1307	201			
நெஞ்சத்தார்	1125	51	மலரன்ன கண் ணுளருமை	1142	66
நெய்யாலெரி	1148	70			
நெருநற்றுக்	1278	177	மலரினுமெல்	1289	185
நோக்கினு—இ	1093	20	மலர்காணின்	1112	38
நோக்கினு—கெ	1082	9	மறப்பினெவ	1207	119
நோதலெவன்	1308	201	மறைபெற	1180	97
நோனுவுடம்	1132	55	மறைப்பேன்மற்	1253	157
பசக்கமற்	1189	104	மறைப்பேன்மன்	1161	82
பசந்தாளிவ	1188	104	மற்றியானெ	1206	118
பசப்பென	1190	105	மன்னுயிரெல்	1168	88
படலாற்ற	1175	94	மாதர்முகம்	1118	43
பணிநீங்கிப்	1234	141	மாலேநோய்	1226	134
பண்டறியேன்	1083	10	மாலேயோ வல்லே	1221	130
பதிமருண்டு	1229	137	முகைமொக்கு	1274	174
பரிந்தவர்கல்கா	1248	153	முயக்கிடை	1239	145
பருவரலும்	1197	111	முயங்கிய	1238	144
பனியரும்பி	1223	131	முறிமேனி	1113	39
பன்மாயக்கள்வன்	1258	160	யாங்கண்ணிற்	1140	63
பாடுபெறுதியோ	1237	143	யாமுமுளே	1204	117
பாலொடு	1121	46	யாரினுங்கா	1314	207
பிணிக்குமருந்	1102	28	யாரேனுக்குங்	1094	20
பிணையேர்	1089	15	வருகமற்கொண்க	1266	167
பிரிவுரைக்கும்	1156	77	வழுத்தினுமும்மி	1317	209
புலத்தலிற்	1323	214	வாராக்காற்	1179	97
புலப்பலென	1259	161	வாழ்தலுயிர்	1124	48
புலப்பேன்கொல்	1267	168	வாழ்வார்க்கு	1192	108
புல்லாதிரா அ	1301	195	வானற்றுப்	1261	163
புல்லிக்கிடக்	1187	103	விடாஅது	1210	122
புல்லிவிடா அ	1324	215	விளக்கற்றம்	1186	102
புன்கண்ணே	1222	131	விளியுமெனின்	1209	121
பெண்ணிய	1311	204	வினைகலந்து	1268	169
பெண்ணினெற்	1280	178	வீழப்படுவார்	1194	109
பெயலாற்ரு	1174	93	வீழுநர்வீழப்	1193	108
பெரிதாற்றிப்	1276	175	வீழுமிருவர்	1108	38
பெரு அமையஞ்	1295	190	வீழ்வாரினின்	1198	112
பெறினென்னும்	1270	170	வேட்ட	1105	31
பேணுதுபெட்டா	1178	96			

திருக்குறளின் சிறப்புப் பாயிரமாகிய

திருவள்ளுவ மாலை.

அகரீரி

க. திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டுருத்தகு நற்பலகை யோக்க—விருக்க
வுருத்திர சன்ம ரெனவுரைத்து வானி
லொருக்கவோ வென்றதோர் சொல்

(இ-ள்.) திருத்தகு தெய்வத் திருவள்ளுவரோடு=அருட் செல்வத்தையும் அதற்குத் தக்க தெய்வத் தன்மையையுமுடைய திருவள்ளுவரோடு—உருத்தகு நற்பலகை உருத்திரசன்மர் ஒக்க இருக்க என உரைத்து=அவரிருத்தற்குரித் தனது உருவத்தினுலே தக்க நல்ல சங்கப் பலகையிடத்து உருத்திரசன்மர் ஒருவரே ஒப்பவேறியிருக்கவென்று கூறி,—வானில் ஒருக்க ஓர் சொல் ஒவென்றது=ஆகாசத்திலிருந்து அவ்விடத்துள்ள புலவர் கருத்தையெல்லாம் ஒற்றுமை செய்யும்படி ஒரு வாக்கியம் ஒவென்று இரைந் தெழுந்தது. எ-று.

"அருட் செல்வஞ் செல்வத்துட் செல்வம்" என்பவாகவின், திருவென்றசற்கு அப்பொருளுரைக்கப் பட்டது. தெய்வதன்மை தெய்வத்தினவதாரமாய் விளங்குகை. தெய்வத்தன்மை யில்லாதார்க்கு அருளுளதாயினும் அதனுலே பெரும்பயன் விளையாமைபின், தகுதி சொல்லப்பட்டது. திருவள்ளுவரென்னும் பெயருள், திருவென்பது உயர்வையும், வள்ளுவரென்பது வண்மை யுடையவரென்பதையும், விளக்கி நின்றனவாகவின், அது வேதத்தில் இலேமறை காய்கள்போற் பலவிடங்களினும் மறைந்து வெளிப்படாதிருந்த மெய்ப்பொருள்களே யெல்லாம் தொகுத்து உலகத்தாருக்குக் கொடுத்தருள் செய்தவரென்னுங் காரணம் பற்றி வந்த பெயராயிற்று. வள் முதனிலே, ஈர் இறுதிநிலே, உ சாரியை. அம்முதனிலேக்குப் பொருள் ஈகை. உருத்திரசன்மர் உருத்திரனுல் அடைந்த சன்மத்தையுடையவரென விரியும். அவர் முருகக்கடவுளது திருவவதாரமாய் வணிகர் மரபிற்றோன்றிய மூங்கைப்

பிள்ளையார். அசரீரி அருவமாய் எங்குமிறைந்துள்ள முதற்றெய்வம். அரங் கேற்றத் தொடங்கிய காலத்தைத் தெய்வப் புலவரோடு ஒப்ப விருந்து கேட் டற்குத் தகுதியுடையோர் யாரென யாவரும் எண்ணமுற்று நின்றவழி இவ் வசரீரி வாக்கியம் பிறந்தது. என்றசெனப் படர்க்கை வினையாகக் கூறலின், ஆண்டு நின்று கேட்ட புலவர்களுள் ஒருவர் அதனை இங்ஙனம் பாடலாகச் செய்தனரென்றறிக. (க)

நாமகள்.

உ. நாடா முதலுன் மறைநான் முகனுவிற்
பாடா விடைப்பா ரதம்பகர்ந்தேன்—கூடாரை
யெள்ளிய வென்றி யிலங்கிலேவேன் மாறபின்
வள்ளுவன் வாயதென் வாக்கு

(இ-ள்.) கூடாரை எள்ளிய வென்றி இலங்கு இலேவேல் மாற=பகை வரைப் புறக்கொடுக்கச் செய்து இகழ்ந்த வெற்றியை உண்டாக்கி விளங்கா நின்ற இலேபோலும் வேற்படையையுடைய பாண்டியராகனே,—நாடா= உலகத்தார் விதிவிலக்குகளே அறிந்து உய்யும் வழியை நாடி,—முதல் நான் முகன் நாவின் நான் மறை பாடா=படைப்புக் காலத்திலே பிரமனது நாவி னிருந்து இருக்கு முதலாகிய நான்கு வேதங்களேயும் பாடி,—இடைப்பார,ரும் பகர்ந்தேன்=நடுவான காலத்திலே பாரதமாகிய வேதத்தைக் கூறி னேன்;—பின் என் வாக்கு வள்ளுவன் வாயது=அதற்குப் பிற்பட்ட இக காலத்திலே என் வாக்குத் திருக்குறளாகிய வேதத்தைச் சொல்லி வள்ளு வன் வாயின் கணணதாயிற்று. எ-று.

தன் கணவனுகவின் நான்முகனுவிலிருந்தென்றும், அவனதாரமாக லின், வள்ளுவன் வாயதென் வாக்கென்றும், கூறினுள். பாரதம் வியாசரைக் கொண்டு சொல்லப்பட்டது. இகனுல் நான்மறை பூர்வ வேதமும், பாரதம் மதிய வேதமும், திருக்குறள் உத்தர வேதமும் என்றதாயிற்று. வேதம் மூவ கைத் தென்பதனுலும். இவற்றது தோற்றமுறையால் இவ்வாக்கியப் பிர மாணத்திற் சிறப்புடைத் தென்பதனுலும சொல்லியபடி. (உ)

இறையனர்.

ங. என்றும் புலரா தியாணர்நாட் சொல்லுகினு
நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்க்—குன்றுத
செந்தளிர்க் கற்பகத்தின் றெய்வத் திருமலர்போன்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்.

(இ-ள்.) மன்புலவன் வள்ளுவன் வாய்ச்சொல் = புலவர்க்கரசனாகிய வள்ளுவன் வாயிற் பிறந்த திருக்குறளானது,—என்றும் யாணர் புலராது நாட் செல்லுகினும் நின்று அலர்ந்து தேன் பிலிற்றும் நீர்மையதாய் = எக்காலத்துந் தன்னழகு கெடாது நெடுங்காலங் கழியினும் நிலை பெற்று மலர்ந்து தேனைச் சொரிகின்ற குணமுடையதாய் விளங்குமாதலால்,—குன்றாத செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர் போன் = குறைவு படாத செய்ய தளிர்களையுடைய கற்பகத்தினது தெய்வத் தன்மை பொருந்திய உயர்வாகிய மலர்போலும். எ-று.

திருக்குறளுக்கு அழகு சொன்முடிபு பொருண்முடிபின் குணங்களும், அலர்தல் எங்கும் பரவுதலும், தேன்பிலிற்றல் இருமை யின்பங்களும் விளைத்தலுமாம். சொல் ஆகு பெயர். இறையனார் கடவுளாகலின், இனி இதிற் சிறப்ப தொன்றுளதாவதின் றென்னுந்துணிவுதோன்ற என்றுமென்றும், பினனும் அதனை வலியுறுத்தற்கு நாட் செல்கினு நின்றென்றும் வாழ்த்துப் பொருள்பட இவ்வாறு கூறினார். இது அழியாது நின்று பெருகிப் பயன்படுமாறு சொல்லியபடி. (௩)

உக்கிரப்பெருவழுதியார்.

நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
றான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன் முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்க கேட்க செவி.

(இ-ள்.) நான்முகத்தோன் தான் மறைந்து வள்ளுவனாய் நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளாத் தந்து உரைத்த நூன முறையை = நான்முகன் தான் தன்னுரு மறைந்து திருவள்ளுவனாயவதரித்து நான்கு வேதங்களினுண்மைப் பொருளை அறம் பொருள் இன்பமென்னும் முப்பாற் பொருளாகத் தமிழிற் றந்து கூறிய திருக்குறளெழுதிய திருமுறையை—சென்னி வந்திக்க = என் தலை வணங்குக,—வாய் வாழ்த்துக = வாய்துதிக்க,—நன்னெஞ்சம் சிந்திக்க = நல்ல மனம் தியானிக்க,—செவிகேட்க = காது கேட்க. எ-று.

முப்பொருள் ஆகுபெயர். இவ்வேதப் பொருள் ஆதியிலே வேதஞ் சொல்லியோனாலேயே சொல்லப்பட்டமையால் உலகத்துச் சமயாசாரியர்களாலும் பிறராலும் ஒன்றற்கொன்று மாறாகக் கொள்ளப்பட்ட பொருள்கள் போல்வதன்றென்பது தோன்ற, மெய்ப் பொருளென்றார். கலையுணர் புலமையிற் றலையோனாகி விதிமுறை வழாது முது நிலம் புரக்கும் பெருந்

தகை யுக்கிரப் பெருவழுதி யென்னுந் தன்னிக ரில்லா மன்னவர் பெருமான் தான் மேற்கொண்ட சிறப்பைப் பலரும் அறிந்து மேற்கொளள, இவ்வாறு வழிபாடு கூறினனென், "மன்ன னெப்படி மண்ணுயிரப்படி" ஆகலின். இப்புத் தகத்தை முன்னே பூசித்து மெய்மொழி மனங்களால் வணக்கஞ் செய்து பின் கேட்கவேண்டுமென்று சொல்லியபடி. (ச)

கபிலர்.

நி. தீனையளவு போதாச் சிறு புன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தான்—மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனூர்
வெள்ளைக் குறட்பா விரி.

(இ-ள்.) மனை அளகு வள்ளைக்கு உறங்கும் வளநாட = மனைமில் வளர்க்கப் படுகின்ற பறவைப் பேடுகள் உலக்கைப்பாட்டால் கண்ணுறங்குகின்ற வளம் பொருந்திய நாட்டையுடைய அரசனே, – வள்ளுவனூர் வெள்ளைக் குறட்பா விரி = திருவள்ளுவரால் அருளிச் செய்யப்பட்ட குறள் வெண்பா மிகப் பெரிய பொருளைத் தன்னுட்கொண்டு காட்டுதல் — தினையளவு போதாச் சிறு புன்னீர் நீண்டபனையளவு காட்டும் படித்து = தினையரிசியி னளவுக்கும போதாத சிறிய புல்லினது நுனியின் கண்ணுள்ள பனி நீர் உயர்ந்த பனையி னளவான அகன் சாயையைத் தன்னுட்கொண்டு காட்டுங் குணம் போலுங் குணத்தையுடைத்து. எ-று.

பனை ஆகுபெயர். ஆல் அசை. பறவை கிளி முதலியவை. உலக்கைப் பாட்டு மகளிர் பரிமளப்பொடி இடிக்கின்றபோது பாடும் பாட்டு. விரி விரித தல். எப்படி மிகச்சிறிய பனித்துளியிலே மிகப் பெரிய பனைமரத்தின் சாயை அடங்கி விளங்குகின்றதோ அப்படியே மிகச் சிறிய இக்குறள் வெண்பாவில் மிகப் பெரிய பொருள் அடங்கி விளங்குகின்ற தென்பதாம். இது சுருங்கி யிருந்தும் விரிவான பொருளை விளக்குமாறு சொல்லியபடி. இது முதலியன சங்கத்துப் புலவராலே பாடப்பட்டன. (இ)

பரணர்.

கூ மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞால முழுது நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையகத்தா
ருள்ளுவவேல் லாமனந்தா ரோர்ந்து.

(இ-ள்) மாலும் குறளாய வனர்ந்து **இரண்டு** மாண் அடியால் ஞாலம் முழுதும் ளாயது அளந்தான்=திருமாலும் குறளாயப பிறந்து வளர்ந்து இரண்டு பெரிய அடிகளால் உலக மனைத்தையும் விரும்பி அளந்தான்;— வாலறிவின் வள்ளுவரும் தமகுறள் வெண்பா அடியால் வையத்தார் உள்ளுவ வெல்லாம் ஓருகது அளாசாரா=மெய்யறிவினையுடைய திருவள்ளுவரும் சும் மினிலை நாதோறன்று நாநிலை நமுவனற வெண்பாகுறளின் இரண்டு சிறிய அடிகளால அவ்வுலக மனைத்தினுமுளோராலை நினைசபபட்- வறனை யெல்லாம ஆராயகது அளந்தார். எ-று.

உம்மை பிரணடும முறையே இவரிற் பெரியோனெனிய வென்றும், ம னிதரிற சிறியராயக காணப்பட்ட தென்றும, பொருள்பட நின்றன. உவ மானதநிலே வளர்ந்தும் பெருமையும சொலலுதலால், உவமேயத்நிலே அவற்றுகது முரணிய நிலை நிற்றலும் கி மையமுமவ நுவிக்கப்பட்டன மாலுக் குதானே குறளாதலும பின்பு அ ர் ல்லா ரு வளர்தலும பேரடிகளால் அளவுபட்ட லகத்தை யளாதலும, திருவள்ளுவருகுத சமமினின்றுங குறளா ரணடாகுதலும அது தன்னிலை நிறறலும் அதன் சிறறடிகளால் அளவுபடாத நினைபபின் வி யஙகளா அளாதலும, சொல்லப்படுதலாலும், வேறறுமை யறிக நினைகபபட்டன வெல்லாம் இகனகத்து அளவு செய்யப் பட்டமை சொலலியபடி. (சு)

நக்கீரர்.

கா. தானே முழுதுணார்ந்து தண்டமிழின வெண்குறளா
லானே வறமுதலா வங்நான்கு—மேனேருக்
கூழி னுரைத்தாறகு மோண்ணீரா முகிலுக்கு
வாழியல கேன்னுற்று மற்று

(இ-ள.) தானே முழுது உணர்ந்தது=தானே வேதப பொருள் அனைத தையும் அறிந்து—தணடமிழின் வெணகுறளால் ஆனு அறம முதலா அங்நான் கும் வேனுருகு ஊழின உரைத்தாற்கும்=தண்ணிய தமிழினகண குறள் வெண்பாகளால விட்டு நீங்குதல் கூடாத அறமுதலிய அங்நான்கு பொருள் நினையும் அவ்வாறை அறியாதவர்களுக்கு உவர் எளிதினறிய முறையாற் சொல்லியருளிய குருவள்ளுவருகுமம—ஒணணீரா முகிலுகுகும்=ஒள்ளிய நீரை சுருத்தி மேலுத்து முகும்— உலகு மற்று ளன ஆற்றும்=இவ்வுலகம எநநாளும் பாது செய்யுமா ? செயாது நின்றது வளாயினால் ;—வாழி=அவரும அதுவும் வாழுக எ-று

ஆனாமை நீங்காமை.. தானே முழுதுணர்ந்தெனவே, ஆசிரியராயிருந்து பிறர் அறிவிக்க அறிந்தில ரென்றதாயிற்று. முழுது மென்னு மும்மை தொக்கது. ஒண்மை இனிமைமேல் நின்றது. முறை நூலின் முப்பொருள்களின் கிடக்கையொழுங்கு. நாயனார் கொடைச் சிறப்புச் சொல்லியபடி. (எ)

மாமூலனார்.

அ. அறம்பொரு ளின்பம்வி டென்னுமந நான்கின்
றிறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்.

(இ-ள்.) அறம் பொருள் இன்பம் வீடு என்னும் அந்நான்கின் திறம் தெரிந்து செப்பிய தேவை - அறம் முதலாகச் சொல்லப்பட்ட அவ்வேதப பொருள்களாகிய நான்கனது கூறுபாட்டையும் தெரிந்து உலகத்தார்க்குச் சொல்லிய தேவனை - மறந்தேயும் வள்ளுவனென்பான் பேதை = மறந்தாயினும் ஒரு மனிதனாக உட்கொண்டு வள்ளுவனென்று சொல்லுதற்கு ஒருவன் உளனாயின், அவன் அறிவிலலாதவனாவன் ;—அவன் வாய்ச்சொல் அறிவு உடையார் கொள்ளார் —அவனது வாயிற் பிறந்த அச்சொல்லை அறிவுடையார் கொள்ளார். எ-று.

அறமுதலியவற்றின் கூறுபாடு அவற்றினது தொகை வகை விரிகள் மறந்தேயும் என்றதனால், நினைப்புடன் சொல்லுவோன் பேதையிற் பேதையாம் என்பதாயிற்று. முன்னும் பின்னுமுள்ள பாட்டுக்களில் இப்பெயர் தெய்வத் தன்மையைக் குறிப்பிக்கும்படி நன்கு மதித்து உயர்த்திச் சொல்லப்படுதலால், ஒரு மனிதனாக உட்கொண்டென்பது வருவிக்கப்பட்டது ; அன்றி ஒலிக்குறிப்பினாலே சாதி யிழிவு தோன்ற வள்ளுவனென்பா னெனினுமமையும். இக்குறிப்பொலியை வட நூலார் காகுசுரமென்பர். தெய்வப் புலவரை அவமதிப் பினிழிவு சொல்லியபடி. (அ)

கல்லாடர்.

கூ. ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனி
னன்றென்ப வாறு சமயத்தார்—நன்றென
வெப்பா லவரு மியைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி

(இ-ள்.) ஆறு சமயத்தார் ஒன்றே பொருள் எனின் வேறு என்ப=அறுவகை மதத்தோறும் ஒரு மதத்தார் தமது நூலிலே உலகமும் உயிரும் கடவளுமாகிய பொருள்கள் ஒன்றே என்று நாட்டுவராயின், மற்றொரு மதத்தார் தமது நூலிலே அதனை மறுத்து அவை வேறாம் என்று நாட்டுவர்;—வேறு எனின் அன்று என்ப—அப்படி வேறு என்று நாட்டின், பின்னொரு மதத்தார் அதனை அன்றென்று மறுப்பர்; ஆதலால், சமய நூல்களெல்லாம் இவ்வாறு மறுக்கப்படுகின்றன,—வள்ளுவனார் முப்பால் மொழிந்த மொழி நன்று என எப்பாலவரும் இயைப=திருவள்ளுவராலே முப்பாலாகச் சொல்லப்பட்ட நூலை நன்றென்று கொள்ளுதற்கு எவ்வகைப்பட்ட பகுதியோரும் உடன்படுவார். எ-று.

மொழி ஆகுபெயர். ஆறு மதமாவன வியாச மதம், சைமினி மதம், பதஞ்சலி மதம், கபிலமதம், கணாதமதம், அக்ஷபாதமதம்; அன்றிச் சைவ வைணவ முதலியவற்றைக் கூறினுமாம். எச்சமயத்தாரு மென்னாது எப்பாலவரும் என்றதனால், வேதத்துக்குட்பட்ட சமயத்தாரே யன்றி புறப்பட்ட சைனம், பௌத்தம் முதலிய மதத்தாரும், பலவகைப்பட்ட சாதியாரும் தேசத்தாரும், காலத்தாரும், பிறரும் தழுவப்படுதலறிக. இதுவே பொது வேகமென்றபடி. (௬)

சீத்தலைச் சாத்தனார்.

௰. மும்மலையு முந்நாடு முந்நதியு முப்பதியு
மும்முரசு முத்தமிழு முக்கொடியு—மும்மாவுந
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றாரன்றோ
பாமுறைதோ வள்ளுவர்முப் பால்.

(இ-ள்.) வள்ளுவர் பாமுறை தேர் முப்பால்=திருவள்ளுவரது பாக்களின் முன்பின் முறை தெரிதற்கிடனாகிய திருக்குறளானது,—மும்மலையும்=கொல்லிமலை, நேரிமலை, பொதியமலை எனப்படுகின்ற மூன்று மலைகளையும்—முந்நாடும்=குடநாடு புனநாடு தென்னாடு எனப்படுகின்ற மூன்று நாடுகளையும்—முந்நதி=பொருநை நதி காவிரி நதி வைகை நதி எனப்படுகின்ற மூன்று நதிகளையும்—முப்பதி=கருவூர் உறையூர் மதுரை எனப்படுகின்ற மூன்று பதிகளையும்—மும்முரசும்=மங்கல முரசு வெற்றி முரசு கொடை முரசு எனப்படுகின்ற மூன்று முரசுகளையும்—முத்தமிழும்=இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத் தமிழ் எனப்படுகின்ற மூன்று தமிழ்களையும்—முக்கொடியும்=விற்கொடி புலிக்கொடி மீனக்கொடி எனப்படுகின்ற மூன்று கொடிகளையும்—மும்மாவும்=கனவட்டம் பாடலம் கோரம் எனப்படுகின்ற

மூன்று குதிரைகளையும்—தாமுடைய மன்னர் தடமுடிமேல் சாரன்றோ= தாம் முறையேயுடைய சேர சோழ பாண்டியரெனப்படுகின்ற மூவரசருடைய பெரிய முடிகளின் மேலும் கொள்ளப்பட்ட மாலையன்றோ. எ-று.

அன்றோ என்றது பலரறிதேற்றம். முப்பால் ஆகுபெயர். மும்முரசும் முத்தமிழும் அம்மூவரசர்க்கும் பொதுமையவாயினும், இம்முறையுரிமை அவர் குடிமரபிற்கு இயைந்தன போலும் அரசர் மூவரும் மேற்கொண்ட சிறப்புச் சொல்லியபடி. (௰)

மருத்துவன்றாமோதரனார்.

௰௧. சீந்திநீர்க் கண்டந் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்—காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலாற்
றலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு.

(இ-ள்.) காந்தி மலைக்குத்தும் மால்யானை—தன்பகையென வெகுண்டு மலையைக் குத்துகின்ற பெரிய களிறுபோலுள்ள அரசனே,—சீந்திநீர்க்கண்டம் தெறிசுக்குத் தேன் அளாய் மோந்த பின் யார்க்கும் தலைக்குத்து இல்= சீந்தி நீர்ச்சருக்கரையையும் சிதைக்கப்பட்ட சுக்கையும் தேனொடுகலந்து மோந்த பின் அதனால் தலைக்குத்துடையோர் யாவர்க்கும் தலைக்குத்து இல்லையாகும்.—வள்ளுவர் முப்பாலால் சாத்தற்குத் தலைக்குத்துத் தீர்வு—திருவள்ளுவர் அருளிச்செய்த முப்பாலினாலே சீத்தலைச் சாத்தனார்க்குத் தலைக்குத்து இல்லையாயிற்று. எ-று.

யானைபோல்பவனை யானையெனலால், ஆகுபெயர் முன்கேட்கப்பட்ட நூல்களிலெல்லாம் பல சொற்குற்றங்களும், பொருட் குற்றங்களும், கண்டு பொறாது தலையில் அறைந்துகொண்டு வந்தமையால், புண்பட்டுக் குத்தல் உண்டாயிருந்தது; இதன் கண் ஓர் குற்றமும் காணப்பெறாமையால் அது நீங்கிற்றென்க. எப்படி அம் மூன்று சரக்கும் அதற்கு மருந்தாமோ அப்படியே இதற்கு இம்மூன்று பாலும் மருந்தாயின வென்பதாம், தீர்வென்னும் தொழிற்பெயர் முற்றுப் பொருளில் வந்தது. இதன் குற்றமற்று விளங்குகை சொல்லியபடி. (௰௧)

நாகன் றேவனார்.

௰௨. தாளார் மலர்ப்பொய்கை தாங்குடைவாா தண்ணீரை
வேளா தொழிதல் வியப்பன்று—வாளாதா
மப்பா லொருபாவை யாய்பவோ வள்ளுவனார்
முப்பான் மொழிமுழ்கு வார்.

(இ-ள்.) தாள் ஆர் மலர்ப்பொய்கை குடைவார் தீண்ணீரை வேனா தொழி தல் வியப்பு அன்று = நாளத்தோடு பொருந்திய தாமரைமலர்களையுடைய ஒரு குளத்து நீரின்கண்ணே மூழ்குவோர் வேறு தண்ணீரை விரும்பாதொழி தல் வியப்பைச் செய்வதன்று;—வள்ளுவனுர் மூப்பால் மொழி மூழ்குவார் தாம்வளர்ந அபபால் ஒருபாவை ஆய்பவோ = திருவள்ளுவரது மூப்பால்களை யுடைய நூலின் கண்ணே மூழ்குவார் தாம் வீணுக அப்பால் ஒருநூலை விரும் புவரோ! விரும்பார்; ஆதலின், இதுவே வியப்பைச் செய்வதாம். எ-று.

தாளார் மலரெனலால், தாமரைமலரெனப்பட்டது. வியப்பைச் செய் வதை வியப்பென்றார். மூழ்குதல் இங்கே கருத்து முழுதும் அழுந்தி நிற்றன் மேனின்றது. மொழி ஆகுபெயர். ஓகாரம் எதிர்மறை. விரும்புதலாகிய கார ணத்தை ஆய்பவோவெனக் காரியமாக உபசரித்தார். அது வியப்பன்றென் றமையால், இது வியப்பென்றதாயிற்று. உயர்வானபொருள் பெற்றோர்க்கு அதினிழிவான பொருள்களையும் பெற விரும்புதல் இயல்பாயிருக்க, குளிர்ச்சி இன்சுவை நறுமணம் முதலிய குணங்களாலே சிறந்தஒரு தாமரைக் குளத்து நீரைப் பெற்றோர்க்கு அதனற்றாகிய அமைதி பெற்று வேறு தண்ணீரைப் பெற விரும்பாமை வியப்பைச் செய்வதாயிற்று; ஆயினும் இதுகாறும் ஒரு நூலைக் கற்றோர்க்கு வேறுநூலைக் கற்கவிரும்புதலன்றி விரும்பாமை யில்லா திருக்க, இப்போது உளதாகலின், இதுவே பெருவியப்பைச் செய்வதென்ற தாயிற்று. இதனுல் இந்நூலகத்து எந்நூற்பொருளும் அடங்கியிருக்கின்ற மைக் குறிப்பிக்கப்பட்டது. பலநூல்களையும் கற்க விரும்புவோர்க்கு இது வொன்றே அமைதல் சொல்லியபடி. (உ)

அரிசிற்கிழார்.

பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறனேதோறுஞ் சேரச்—சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால்.

(இ-ள்.) பரந்த பொருளெல்லாம் பார் அறிய வேறு தெரிந்து = வேதத் திலே ஒன்றோடொன்று மயங்கி நின்ற நால்வகைப் பொருள்களையும் இப் பூமியிலுள்ளோர் அறிதற்பொருட்டு வேறுகப் பிரித்து—திறந்தோறுஞ்சேரச் சுருங்கிய சொல்லால் பொருள் விளங்க விரித்துச் சொல்லுதல் வல்லார் = அது அது தனது தனது வகையோடு சேரும்படி சுருங்கிய சொல்லால் பொருள் விளங்க விரியும்படி வைத்துச்சொல்லுதல் வல்லார்—வள்ளுவரல் லால் ஆர் = வள்ளுவரல்லது ஒருவருமில்லை. எ-று.

பார் ஆகுபெயர். நிறம் அறமுதலியவற்றின் கூறுபாடு. சுருங்கச சொல்லல் வினங்கவைத்தன் முதலிய அழகுகள் எப்படி இவரால் அமைக்கப்பட்டனவோ அப்படிப் பிறரால் அமைக்கப்படுதல் கூடாமை காட்டியதாயிற்று. நூலுக்கும் ஈயனுர்க்கும் தகுதி சொல்லியபடி. (யஈ)

பொன்முடியார்.

யிச. கானின்ற தோங்கலாய் காசிபனுர் தந்ததுமுன்
கூனின் றளந்த குறளென்ப—நூன்முறையான்
வானின்று மண்ணின் றளந்ததே வள்ளுவனுர்
தானின் றளந்த குறள்.

(இ-ள்.) கான் நின்ற தொங்கலாய்=மணந்தங்கப்பெற்ற மாலையையுடைய பாண்டியராஜனே,—முன்காசிபனுர் தந்தது கூனின்று அளந்த குறள் என்ப=முன் காசிபராலே தரப்பட்ட குறளை மண்ணின்கண்ணே நின்று உலகத்தை அளந்த குறளென்று சொல்லுவர்;—தாம் நின்று வள்ளுவனுர் அளந்த குறள் நூன்முறையான் வான் நின்று மண் நின்று அளந்தது=தாம் இங்கே எழுந்தருளித் திருவள்ளுவராலே தரப்பட்ட குறள் நூலின் முறையோடு கூடி வீண்ணின் கண்ணே நின்றும் மண்ணின் கண்ணே நின்றும் உலகத்தை அளந்தது. எ-று.

கூ எனை நீண்டது. ஆனுருபு ஒடுவுருபின் பொருளில் வந்தது. அக்குறள் வஞ்சித்துப் பெற்றளத்தலால் நூன்முறையோடு கூடாததாயிற்று. இக்குறளுக்கு ஒலிவடிவும் வரிவடிவுமென இரண்டு வடிவுண்மையால், ஒலிவடிவுக்கிடம் வானுகவின் வானின்றென்றும், வரிவடிவுக்கிடம் மண்ணுகவின் மண்ணின் றென்றும், கூறினுர். இக்குறளுக்கு நூன்முறையோடு கூடலும் வானிற்றலும் மிகுத்துச் சொல்லி வேற்றுமை செய்யப்பட்டது. முன் மாலுமென் பாட்டிலே ஈயனுர்கும் மாலுக்கும் இப்பாட்டிலே திருக்குறளுக்கும் மாலவதாரக் குறளுக்கும், ஒப்புமை குறித்துச் சொல்லலால் வேறுபாடம். உலகத்துப் பொருளெல்லாம் இஃது அளத்தற் கிறப்புச் சொல்லியபடி. (யச)

கோதமனுர்.

யிரு. ஆற்றலழியுமென் றந்தணர் கணுன் மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தேழதா— ரேட்டெழுதி
வல்வுருரும் வல்லாரும் வள்ளுவனுர் மூப்பாலைச்
சொல்லிடினு மாற்றல்சோர் வின்று.

(இ-ள்.) அந்தணர்கள் நான் மறையை உரைத்துப் போற்றி ஆற்றல் அழியும் என்று ஏட்டின்புறத்து எழுதார்=அந்தணர்கள் நான்கு வேதங்களையும் வாய்ப்பாடமாகக் காப்பாற்றி, ஏட்டின்கண் எழுதிவைத்தால் வலியில்லாரும் ஓதுவாராகலின் இவற்றின் வலிமை குறையுமென்று ஏட்டின்கண் எழுதார்; —வள்ளுவனார் முப்பாலை ஏட்டில் எழுதி வல்லுநரும் வல்லாரும் சொல்லிடினும் ஆற்றல் சோர்வின்று=திருவள்ளுவரது திருக்குறளை ஏட்டின்கணெழுதிவைத்து வலியுடையவரும் வலியில்லாரும் ஓதினாலும், வலிமை குறைசலில்லை. எ-று.

அவ்வேதத்துக்கு உதாத்தம் அநுதாத்தம் சுவரிதமென்னுஞ் சுரங்களின் வழுவாமல் ஓதல்வேண்டு மென்னும விதியுளதாதலின், அதற்குத் தகுதியுடைய அந்தணரே அதிகாரிகளாயினார், இதற்கு அஃதில்லாமையால் யாவரும் அதிகாரிகாளாவ ரென்றறிக. சொல்லிடினு மென்றதனால் பொருளுணர்ச்சிக்கும் இதற்கும வலிமை வேண்டுமென்பது பெறப்பட்டது. ஆற்றல் சொற் செறிவின் றிட்பம். இங்ஙனங்கூறவே, அவ்வேதம் சொல்லின் கண்ணே தலைமையுடைத் தென்பதூஉம் இவ்வேதம் பொருளின் கண்ணே தலைமை யுடைத்தென்பதூஉம் பெறபபட்டன. ஓதப்படுதலின் அவ்வேதத்தினும் இது சிறப்புடைமை சொல்லியபடி. (௰௫)

நத்தத்தனார்.

௰௬. ஆயிரத்து முந்நூறறு முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததறபின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

(இ-ள்.) பாயிரத்தினோடு ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளும் பகர்ந்ததற்பின் போய் ஒருத்தர் வாய்க்கேட்க நூல்உளவோ=பாயிரம் நான் கதிகாரங்களோடு சேர்ந்து தொகையாகிய அரிய ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள் வெண்பாக்களையும் ஓதி யுணர்ந்தபின்பு, போய் ஒருவரது வாயாலே கேட்டறிதற்கு நூலுளவோ! இல்லை:—மன்னு தமிழ்ப் புலவராய்க் கேட்க வீற்றிருக்காலம=நிலைபெற்ற தமிழிலே புலமை நிரம்பியோராகிப் பிறர் தம்மிடத்து வந்து கேட்க வீற்றிருக்கலாம். எ-று.

வீற்றிருத்தல் ஒரு சபை நடுவிலே உயர்வாகிய ஆதனத்தில் ஏறியிருத்தல். இவற்றுட் பலவகைப்பட்ட நூல்களின் கருத்துக்களெல்லாம் விளங்கி நிற்றலின், கேட்க நூலுளவோ வென்றார். புலவராயெனவே, புலமை நிரம்புதற்கு இவை ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களும் போது மென்பது பெறப்பட்டது. ஓதியோர்க்கு வரும் இம்மைப் பயன் சொல்லியபடி. (௰௬)

மூகையனார்ச் சிறுகருந்தும்பியார்.

வெ. உள்ளுத லுள்ளி யுரைத்த லுரைத்தனைத்
தெள்ளுத லன்றே செயற்பால—வள்ளுவனார்
முப்பாலின் மிக்க மொழியுண் டெனப்பகர்வா
ரெப்பா வலரினு மில்.

(இ-ள்.) வள்ளுவனார் முப்பாலின் மிகுமொழி உண்டு எனப் பகர்வார் எப்பாவலரினும் இல்=திருவள்ளுவரது திருக்குறளின் மேற்பட்ட நூலொன்று உளதென்று சொல்ல வல்லவர் எவ்வகைப்பட்ட புலவருள்ளும் இல்லை;-செயல் பால உள்ளுதல் உள்ளி உரைத்தல் உரைத்தனைத் தெள்ளுதல் அன்றே= ஆதலால், நாம் இந்நூலைக் குறித்துச் செயக்கடவன நாம் இதன் பொருளைச் சிந்தித்துக் கொள்ளுதலும், சிந்தித்துப் பிறர்க்கு அதனைச் சொல்லுதலும், பிறராலே சொல்லப்பட்ட அதனைத் தெளிதலும் அன்றே. எ-று.

மொழி ஆகுபெயர். ஒப்பது வடமொழி வேதமிருத்தலின் மிக்க மொழி என்றும், தமிழின் மாத்திரமன்றி வடமொழி முதலியவற்றினுள்ள 'புலவரையும் தழுவதற்கு எப்பாவலரினு மென்றும், அறிவொப்புக் காண்டற்கு உரைத்ததனைத் தெள்ளுதல் என்றும், கூறினர். உள்ளுதலெனவே கேட்டலும், தெளிதலெனவே அவ்வா றெழுகலும் அடங்கின. இது பயிற்சி செய்தொழுகுமாறு சொல்லியபடி. (வெ)

ஆசிரியர் நல்லந்துவனார்.

கூ. சாற்றிய பல்கலையுந் தப்பா வருமறையும்
போற்றி யுரைத்த பொருளெல்லாந்—தோற்றவே
முப்பான் மொழிந்த முதற்பா வலரோப்பா
ரெப்பா வலரினு மில்.

(இ-ள்.) சாற்றிய பல்கலையும் தப்பா அருமறையும் போற்றி உரைத்த பொருளெல்லாம் தோற்ற=அறிவுடையோரால் சொல்லப்பட்ட பல நூல்களானும் தப்பாத அரிய வேதத்தினானும் காப்பாற்றி வைத்திருந்து உலகத்தார்க்குச் சொல்லப்பட்ட விடயங்களெல்லாம் தன்னிடத்தே காட்டும்படி—முப்பால்மொழிந்த முதற் பாவலர் ஒப்பார் எப்பாவலரினும் இல்=திருக்குறளைச் சொல்லிய திருவள்ளுவரை ஒப்பவர் எவ்வகைப்பட்ட பாவலருள்ளும் இல்லை. எ-று.

தம்மாலே சொல்லபபட்டவற்றில் வழுவுறுமையால் தப்பாதென்றும், பொருளுணர்தற்கேயன்றி ஓதுதற்கும் எளிதன்றுகலின் அருமறையென்றும்,

விசேடனஞ் செய்யப்பட்டது. எப்பாவலரினுமில் இதற்கு முன்னுரைக்கப் பட்டபடியே கொள்க. மூதற் பாவலர் முதன்மையையுடைய பாவலர்; நால் வகைப் பாக்களில் வெண்பாக்களும் அவற்றுள்ளும் குறள் வெண்பாவும் தலை மைபெற்று நிற்றலின், அக்குறள் வெண்பாவால் நூல்செய்த வல்லமையுடைய ரென்றுமாம். புலமையிலே நாயனருக்கு ஒப்பின்மை சொல்லியபடி. (அ)

கீரந்தையார்.

யகூ. தப்பா முதற்பாவாற் முமாண்ட பாடலினன்
முப்பாலி னுற்பான் மொழிந்தவ—ரேப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்
தெய்வத் திருவள் ளுவர்.

(இ-ள்.) எப்பாலும் வைவைத்த கூர்வேல் வழுதி மனம் மகிழ=எவ்வி டத்திலும் கூர்மைவைத்த சிறப்புப்பொருந்திய வேலையுடைய பாண்டிய ராசன் மனமகிழ—தப்பா முதற்பாவால் ஈரம் மாண்ட பாடலினால் முப்பாலின் நாற்பால் மொழிந்தவர்=சொல்லப்பட்ட பொருள் வழுவாமல் முதன்மை யுடைய பாவாகிய குறள் வெண்பாக்களாலே தாம் மாட்சிபெற்ற பாடற் றொழிலினாலே மூன்று பால்களினாலே அறம் முதலிய நான்கு பகுதிப்பொரு ளையும் திருவாய் மலர்ந்தவர்—தெய்வத் திருவள்ளுவர்=தெய்வத் தன்மை யுடைய திருவள்ளுவ நாயனார். எ-று.

கூர் சிறப்பு. நான்கனுண் மூன்றடங்குவதன்றி மூன்றனுள் நான்கடங் காமையின், வியந்து கூறப்பட்டதாயிற்று. நூல்செய்த சிறப்பும், அதனால் அரசனே மகிழ்வித்தமையும், சொல்லியபடி. (க)

சிறுமேதாவியார்.

உம. விடொன்று பாயிர நான்கு விளங்கற
நாடிய முப்பத்து மூன்றொன்றாழ்—கூடுபோரு
ளெள்ளி லெழுப திருபதிற் றைந்தின்பம்
வள்ளுவர் சொன்ன வகை.

(இ-ள்.) வள்ளுவர் சொன்ன வகை=திருவள்ளுவரா லே சொல்லப்பட்ட திருக்குறளின் அதிகாரவகை,—பாயிரம நான்கு=பாயிரம் நான்கு அதி காரத்தை உடைத்து, அறம் முப்பத்துமூன்று=அறம் முப்பத்துமூன்று அதி காரத்தை யுடைத்து,—ஈழ் ஒன்று=ஈழ் ஒரதிகாரத்தையுடைத்து,— பொருள் எழுபது=பொருள் எழுபது அதிகாரத்தை யுடைத்து,—இன்பம் இருபதிற்றைந்து=காமம் இருபத்தைந்து அதிகாரத்தை யுடைத்து. எ-று.

அறத்துப்பாலுள் அடங்காது அதனை வீட்டு நூற்கெல்லாம் பொதுவாய் நிற்றலின் வீடொன்று பாயிரமென்றும், இம்மை மறுமை வீடு மூன்றும் பயத்தற் சிறப்பிற்றாய் மூன்றனுண் முதனிற்றலின் விளங்கறமென்றும், யாவர்க்கும் பொதுப்பட நாடித் தொகுக்கப்பட்ட அறத்தின் கூறுபாடு இவையேயாகலின் நாடிய முப்பத்து மூன்றென்றும், மூன்னின்ற அறமும் பின்னின்ற இன்பமும கைகூடுதற்குத் துணையாய் நிற்றலின், கூடுபொருள் என்றும், அப்பொருளின் பாகுபாடுகளெல்லாம் இவற்றினடங்குதலின் எள்ளி லெழுபதென்றும், கூறினர். எள்ளல் இகழ்தல். சிலர் பழைய நூல்களிலே சிலவற்றைச் சாதியாரும் சமயத்தாரும் மிகுத்தும் குறைத்தும் வேறு படுத்தலால் அப்படிப்பட்ட வேறுபாடு இதற்கும் வாராதும் வருமென்று ஆசங்கித்து, இதனதிகாரங்களுக்கு இங்ஙனம தொகை செய்தார். பின் இவ்வாறு தொகை செய்யப்பட்டு வருவனவற்றிற்கும் இதுவே கருத்தாகக் கொள்க. முப்பால் களுக்கும் அதிகாரத்தொகை சொல்லியபடி. (உ)

நல்கூர்வேள்வியார்.

உக. உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தா
னுத்தர மாமதுரைக் கச்சென்ப—விப்பக்க
மாதானு பங்கி மறுவில் புலச்சேந்நாப்
போதார் புனற் கூடற் கச்சு.

(இ-ள்.) உப்பக்கம் நோக்கி உபகேசி தோள்மணந்தான உத்தரமா மதுரைக்கு அச்சு என்ப=அப்பக்கத்தைக் குறித்துச் சென்றோனகிய உமாதேவியினது தோளைமணந்த கடவுளை வடமதுரைக்கு ஆதாரமென்று சொல்லுவர்;—இப்பக்கம் மாதானு பங்கி மறு இல் புலச் செந்நாப் போதார் புனற்கூடற்கு அச்சு=இப்பக்கம் மாதானு பங்கி எனப்படுகின்ற குற்றமற்ற புலமையாகிய தேனைச் சொரிகின்ற செவ்விய நாவாகிய மலரையுடையவர் நீர்வளத்தையுடைய தென் மதுரைக்கு ஆதாரமாவர். எ-று.

உப்பக்கம் இடைக்காடர் அரசன் தன் பாடலை அவமதித்தமைப் பற்றிப் பிணங்கிச் சென்ற பக்கம். உப்பக்கநோக்கி என்றது வினையாலணையும் பெயர். கேசி திருமால்; இது அக்கடவுள் சகசிர நாமத்திற் கண்டது. கேசிக்குப் பின்னே பிறந்தவள் உபகேசி என்றுரைத்தது உபேந்திரன் என்பதுபோல. மாதானுபங்கி மாதானை நிகராகக் கொண்டு நடக்கின்ற ஒழுங்கினனெப்படுதலின் அவள் பிள்ளை மேலேபோல் இவர் உலகத்தார்மேல் அருள் செய்தல் சொல்லப்பட்டதாயிற்று. நாப்போதென்றதற்கேற்பப் புலமையிலே தேனை

ரோபிக்கப்பட்டது. அச்சுப்போற் றாங்குதலால், அச்சென்றார். நாயனாராலே திங்கட் குடைபுடைச் சீர்சால் வழுதியுஞ் சங்கப்புலவருந் தழைத்தினி தோங்கிய மதுரைக்குண்டான சிறப்பு சொல்லியபடி. (உக)

தொடித்தலை விழுத்தண்டினார்.

உஉ. அறநான் கறிபொரு ளேழொன்று காமத்
திறமூன் றெனப்பகுதி செய்து—பெறலரிய
நாலு மொழிந்தபெரு நாவலரே நன்குணர்வார்
போலு மொழிந்த பொருள்.

(இ-ள்.) அறத்திறம் நான்கு=பாயிரம், இல்லறம், துறவறம், ஊழென அறப்பாலினுட் பிரிவுகள் நான்கும்,—அறி பொருட்டிறம் ஏழ்=அரசு, அமைச்சு, அரண், கூழ், படை, நட்பு, ஒழிபென அறியப்பட்ட பொருட்பாலினுட் பிரிவுகள் ஏழும்,—காமத்திறம் மூன்று எனப் பகுதி செய்து=ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று, அவ்விருபாற் கூற்றெனக் காமத்துப் பாலினுள் பிரிவுகண் மூன்றுமாகப் பகுதிசெய்து—பெறலரிய நாலும் மொழிந்த பெருநாவலரே=பெறுதற்கரிய அறம் பொருள் இன்பம் வீடு எனப்படுகின்ற நான்கு பொருள்களையும் சொல்லிய பெருநாவலரே—ஒழிந்த பொருள் நன்கு உணர்வார்போலும்=அவற்றுள் அடங்காது ஒழிந்த பொருள் உளதாயின், அதனை நன்றாக அறியவல்லவர் போலும். எ-று.

திறமென்றது அறமுதலியவற்றோடுங் கூட்டப்பட்டது. நாவல்லரே என்றமையால், பிறரால் அறியப்படுவதன்றென்றதாயிற்று முப்பாலியற்றொகையும், இவற்றினடங்காதது ஒன்றில்லை என்பதும், சொல்லியபடி (உஉ)

வெள்ளி வீதியார்.

உங. செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
வதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்.

(இ-ள்.) செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த பொய்யா மொழிக்கும் பொருள் ஒன்றே—ஒருவராலே செய்யப்படாத மொழியாகிய வேதத்துக்கும் திருவள்ளுவரால் அருளிச்செய்யப்பட்ட தன்வழியினொழுகுவோர்க்குப் பயன் விளைவிலே பொய்படாத மொழியாகிய திருக்குறளுக்கும் பொருளொன்றே;—ஆராயிற் செய்யா அதற்கு உரியர் அந்தணரே=ஆராயுங்கால்,

செய்யப்படாத அவ்வேதமும் ஓதுதற்குரியவர் அந்தணரே, — ஏனையதற்கு உரியரல்லாதார் இல் = பொய்படாத இத்திருக்குறள் ஓதுதற்கு உரியரல்லாதவர் உலகத்தில் இல்லை. எ-று.

பூர்வவேதத்தை நித்தியமென்பார் மதம்பற்றிச் செய்யாமொழி யென்றார். அது வடமொழியும் இது தென்மொழியுமாய் நின்று சில வேறுபாடுடையன போல் தோன்றினும் நுண்ணுணர்வாளர்க்குவார்க்குக் கருத்து வேறுபடாமையின், பொருளொன்றேயெனத் தேற்றேகாரம் கொடுத்துக் கூறினர். செய்யாமொழி பொய்யாமொழி அன்மொழித் தொகைகள். இதற்குரியரல்லாதாரில்லென்றதனாலும் பொதுவேதமாதலறிக. அதற்கும் இதற்கும் பொருள் வேறுரென்றும், இதனை யோதற்கதிகாரிகளாவார் யாவரோவென்றும் நிகழ்கின்ற ஐயமொழித்தபடி. (உ சு)

மாங்குடி மருதனார்.

உசு. ஓதற்கெளிதா யுணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்—தீதற்றூ
ருள்ளுதோ றுள்ளுதோ றுள்ள மூருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(இ-ள்.) வள்ளுவர் வாய்மொழி மாண்பு = திருவள்ளுவரது வாயினின்றுந் தோன்றிய திருக்குறளினது மாட்சியைச் சொல்லின், — ஓதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாகி வேதப் பொருளாய் மிகவிளங்கி = அது ஓதப்படுதற்கு எளிய சொற்களையுடையதாகியும் அறியப்படுதற்கு அரியப்பொருள்களையுடையதாகியும் வேதமெனப் படுகின்ற பொருளாகியும் அவ்வேதத்தின் மிக விளங்கி, — தீதற்றூர் உள்ளுதொறு உள்ளுதொறு உள்ளம் உருக்கும் = குற்றமற்றோர்கள் நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் அவர்களுடைய மனத்தைக் கரைக்கும். எ-று.

ஓதற்கெளிதாயெனவே நவின்றோர்க்கினிமை நன்மொழி புணர்த்தல்களும், உணர்தற்கரிதாயெனவே ஆழமுடைமையும், வேதப்பொருளாயெனவே விழுமியது பயத்தலும், பிறவுமாகிய அழகுகளினமைதி சொல்லப்பட்டதாயிற்று. தீதற்றூர் பொருளாராய்ச்சிக் கேற்ற நுண்ணறிவுடையோர். உள்ளுதொறுள்ளுதொறு முள்ள மூருக்கு மெனவே, முன்காணப்பட்டதினும் 'பின்காணப்படும் பொருள் நிறைந்தும் விரிந்துந் தோன்றுதலுடைமை பெறப்பட்டது. இதனது அற்புதமான குணமுடைமைச் சிறப்புச் சொல்லிய படி. (உசு)

எறிச்சலூர் மலாடனார்.

உரி. பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே
தூய துறவறமோன் றாழாக—வாய
வறத்துப்பா லைவகையா வாய்ந்துரைத்தார் நூலின்
றிறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து.

(இ-ள்.) வள்ளுவனார் ஆய்ந்து நூலின் திறத்துப்பால் தேர்ந்து=திரு வள்ளுவனுயனர் அவ்வேதத்தின் கருத்துக்களே யாராய்ந்து தம்மாலே செய் யப்பட்ட நூலினது திறத்திற்குத் தக்க நன்மையுடைமையால் இவையே உரி யவை யென்று தெரிந்து,—பாயிரம் நான்கு=பாயிரம் நான்கதிகாரமும்,— இல்லறம் இருபான்=இல்லறவியல் இருபததிகாரமும்,—துறவறம் பன் மூன்று=துறவறவியல் பதின்மூன்றதிகாரமும்,—ஊழ் ஒன்றாக=ஊழ் ஓ திகாரமுடையனவாக,—ஆய அறத்துப்பால் நால்வகையா உரைத்தார்=இவ் வாறாய அறத்துப்பாலே பாயிர முதலிய நால்வகையுடைத்தாகக் கூறினர்.

மூப்பாற் பொருள்களினும் மூத்திக்குக் காரணமாதற் சிறப்புடைமை யின், தூயதுறவற மென்றார். தூப்பு நன்மை; அது எல்லா வருணச்சிரமங் களுக்கும் பொதுவா யிருக்கை. அறப்பாவிய லதிகாரத்தொகை சொல்லியபடி.

போக்கியார்.

உசு. அரசிய லையைந் தமைச்சிய லீரைந்
தருவல் லரணிரண்டோன் றேண்கூ—ழிருவிய
றிண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்
றேண்போரு ளேழா மிவை.

(இ-ள்.) அரசியல் ஐயைந்து=அரசியல் இருபத்தைந் ததிகார முடைத்து,—அமைச்சியல் ஈரைந்து=அமைச்சியல் பத்ததிகாரமுடைத்து, அரண் இரண்டு=அரணியல் இரண்டதிகாரமுடைத்து,—கூழ் ஒன்று= பொருளியல் ஓரதிகாரமுடைத்து,—படை இருவியல்=படையியல் இரண் டதிகாரமுடைத்து,—நட்புப் பதினேழ்=நட்பியல் பதினேழதிகார முடைத்து,—குடி பதின்மூன்று=ஒழிபியல் பதின்மூன் றதிகாரமுடைத்து,— எண்பொருள் இவை ஏழாம்=எண்ணப்பட்ட பொருட்பாலுக்கு இவ்வியல்க ளேழாம். எ-று.

அரணுக்கு உருத்திட்பம் சிறத்தலின் உருவல்லரணென்றும், பொரு ளுடையார்க்கே ஒளி அமைவதாகலின் ஒண்பொருளென்றும், படைக்குக் கடும்போரிற் பின்கொடாத திண்மை உரித்தாகலின், திண்படையென்

றும் கூறினர். பிற்காலத்தார் அமைச்சு முதலிய வைந்தனையும் அங்கவிய லென ஓரியலாற்கியும் வழங்குப. பொருட்பாவிய லதிகாரத்தொகை சொல் லியபடி. (உசு)

மோசிகீரனார்.

உ௱. ஆண்பாலே ழாறிரண்டு பெண்பா லடுத்தன்பு
பூண்பா லிருபாலோ ராருக—மாண்பாய
காமத்தின் பக்கமோரு மூன்றுக்க் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு.

(இ-ள்.) ஆண்பால் ஏழ்=ஆண்பாற் கூற்று ஏழதிகாரமும்,—பெண்பால் ஆறிரண்டு=பெண்பாற் கூற்றுப் பன்னிரண்டதிகாரமும்,—அடுத்து அன்பு பூண்பால் இருபால் ஓராருக=ஒருவரை யொருவர் அடுத்து அன்பைப் பூணு தற் பகுதியுடைய அவ்விருபாற் கூற்று ஆறதிகாரமுமாக,—மாண்பு ஆயகாமத் தின் பக்கம் ஒரு மூன்றுக காமத்தின் வள்ளுவனார் நன்கு கட்டுரைத்தார்= மாட்சியான காமத்துப் பாலினியல்கள் மூன்றுகப் பெயர் பெற்ற திருவள்ளு வர் நன்கு கூறினர். ௭-று.

இவையே பொருளிலக்கணத்துக்கமையக் களவியல் கற்பியலென இரண் டாக்கப்பட்டன. காமத்துப் பாலியலதிகாரத் தொகை சொல்லியபடி. (உ௭)

காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார்.

உஅ. ஐயாறு நூறு மதிகார மூன்றுமா
மெய்யாய வேதப் பொருள்விளங்கப்—பொய்யாது
தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனெகி
யந்தா மறைமே லயன்.

(இ-ள்.) அதிகாரம் நூறும் ஐயாறும் மூன்றுமாம்=அதிகாரம் நூற்றுமூப் பத்து மூன்றுக,--மெய்யாய வேதப்பொருள் பொய்யாது விளங்க= வட மொழியிலிருந்து மெய்யாகிய வேதப்பொருள் பொய்யுரு தி விளங்கும் பொ ருட்டு,—அந்தாமரை மேல் அயன் தான் வள்ளுவனெகித் தந்தான்=அழகிய தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் நான்முகக் கடவுள் தான் திருவள்ளுவனெகி உலகத்தாருக்குத் தமிழ்செய்து தந்தான். ௭-று.

உலகு இங்கே மக்களே உணர்த்தி நின்றது. மெய்யாய வேதப்பொருள் பொய்யாது விளங்கவெனவே, இதற்குமுன் மெய்யாய பொருள் பெரய்யாய் மறைந்தும், பொய்யாய பொருள் மெய்யாய் விளங்கியும், கிடந்தமை சொல் லப்பட்டதாயிற்று. அதிகாரத் தொகையோடு நூற்பொருளியல்பு சொல்லிய படி. (உஅ)

மதுரைத் தமிழ் நாயகனார்.

உ௯ எல்லாப் பொருளு மிதன்பா லுளவிதன்பா
லில்லாத வெப்பொருளு மில்லையாற்—சொல்லாற்
பரந்தபா வாலென் பயன்வள் ளுவனார்
சுரந்தபா வையத் துணை.

(இ-ள்.) எல்லாப் பொருளும் இதன்பால் உள=பலவகை நூல்களாலுஞ் சொல்லப்பட்ட எல்லாப் பொருளும் இந்நூலகத்தடங்கி யிருக்கின்றன;—இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை=இதனிடத்தில்லாத யாதொரு பொருளும் எந்நூலகத்தும் இல்லை,—சொல்லாற் பரந்த பாவால் பயன் என்=ஆதலால், சொல்லளவினாலே விரிந்த நூல்களாற் பயன் யாது! வள்ளுவனார் சுரந்தபா வையத் துணை=திருவள்ளுவராலே தரப்பட்ட இந்நூலொன்றே மண்ணுலகத்தாருக்குத் துணையாதலமையும். எ-று.

எல்லாப்பொருள்களுமாவன,முதல் வழி சார்பென மூவகைப்பட்ட அற நூல் பொருளூல் இன்பநூல் வீட்டுநூல்என்பவற்றிற் செம்பொருள் ஆக்கப் பொருள் குறிப்புப்பொருளென இம் மூவகையாற் கொள்ளக்கிடந்த காட்சிப் பொருள்களும் கருத்துப்பொருள்களுமாம். தொழிலும் பண்பும் ஒரோவழிப் பொருளெனற் கேற்புடைமையின், அவையும் இவற்றுள் அடங்குமாறறிக. பின்னும் அதனை வலியுறுத்தற்கு இதன்பாலில்லாத வெப்பொருளு மில்லை யென்றார். சொல்லாற் பரந்தவெனவே, அவை பொருளாற் பரப்பின்மை பெறப்பட்டது. பரத்தல் பதினாயிரம் நூறாயிர முதலிய கிரந்தவளவையால் விரிதல். சொல்லாற்பரந்த நூல்களை ஆய்வோர் மலையகழ்ந்து எலிபிடித்தல் போல மிகவருந்திச் சிறுபயன் கொள்ளுதலால், என்பயனென்றார். ஆல் அசை. பா, வையம் ஆகுபெயர்கள். சின்னாட் பல்பிணிச்சிறறறிவுடையோர்க்கு விதிவிலக்குக்கண் முற்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் கண்டு தெளியு மாறு உணர்த்தித் தடிமாற்றந் தீர்த்தலின், வையத்துணை யென்றார். முற்றொருங்குணர விழைவார்க்கு இஃது இன்றியமையாச் சிறப்பிற்றென்றபடி. (உ௯)

பாரதம்பாடிய பெருந்தேவனார்.

௩௦ எப்பொருளும் யாரு மியல்பி னறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாஞ் செப்பவரு—முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர்.

(இ-ள்.) பாரதம் சீராமகதை மனுப் பண்டைமறை நேர்வன=பாரதம பழைய சீராமகதையையும், மனுமிருதி பழைய வேதத்தையும், ஒப்பன வாகும்;—எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச் செப்பிய வள்ளுவர்

செப்பவரும் முப்பாற்கு நிகர் இல்லை=எவ்வகைப்பட்ட பொருள்களையும் எவ்வகையோடும் அவற்றின்றன்மையோடு அறிய அவர்க்குச் சொல்லும் படிக்குத் திருவள்ளுவர் சொல்லால் வந்த திருக்குறளுக்கு உவமானமாகத் தக்கது ஒன்றில்லை. எ-று.

மற்று அசை. அறிதற்கரிய வேதாந்தப் பொருளுமென்றற்கு எப்பொருளுமென்றும், உயர்குலத்தாரேயன்றி ஏனையோருமென்றற்கு யாருமென்றும், ஐயந்திரி பின்றியறிய வென்றற்கு இயல்பினறிவுற வென்றும் இதுவே சுருதி குருவிரண்டுமா மென்றற்குச் செப்பிய வென்றும், கூறினர். பண்டை யென்பது சீராமகதைக்குங் கூட்டுக. கதாரூபமாயிருந்து பாரத ராமாயண மெனவும், விதிரூபமாயிருந்து சுருதி மிருதியெனவும் கூட்டிச் சொல்லப்படுதலால், உவமான உவமேயங்களாதலறிக. எப்பொருளும் யாருமியல்பினறிவுறச் செப்புதல் வேத்திற்கின்மையால், முன் முப்பாலின் மிக்கதொழியென்ற அதனாற் பெறப்பட்ட வேதத்தினுப்புமையை மறுத்தபடி. (கய்)

உருத்திரசன்மகண்ணனர்.

ங க. மணற்கீளாக்க நீரூறு மைந்தர்கள் வாய்வைத்
துணச்சுரக்குந் தாய்மூலை யோண்பால்—பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர் முப்பான் மதிப்புலவோர்க்
காய்தோறு மூறு மறிவு.

(இ-ள்.) மணற்கீளாக்க நீர் ஊறும்=மணலைத் தோண்டுந் தோறும் நீர் பெருகும்,—மைந்தர்கள் வாய் வைத்து உணத் தாய் மூலை ஒண்பால் சுரக்கும்=புதல்வர்கள் வாய்வைத்து உண்ணுந்தோறும் தாயினது மூலைக்கண் கல்ல பால் பெருகும்;—பிணக்கு இலா வாய் மொழி வள்ளுவர் முப்பால் ஆய் தொறும் மதிப்புலவோர்க்கு அறிவு ஊறும்=அவைபோல, பிணங்குதற்கு ஏதுவில்லாத வாய்மைச் சொல்லையுடைய திருவள்ளுவர்தது திருக்குறளை ஆராயுந் தோறும், அறிவுடைய புலவர்க்கு அறிவு வளரும். எ-று.

கற்பிதமாகிய சாதிசமயங்களின் மானம்பற்றி உள்ளதை இல்லதாகவும் இல்லதை உள்ளதாகவும், சிறிதைப் பெரிதாகவும், பெரிதைச் சிறிதாகவும், தீயதை நல்லதாகவும், நல்லதைத் தீயதாகவும், புனைந்து பிறர் பிணங்கும்படி சொல்லப்பட்டதல்லாமையால், பிணக்கிலா வாய்மொழி யென்றார். மதிப்புலவோர்க் கறிவூறு மெனவே, அவர் அவ்வறிவைக்கொண்டு பிறர்க்கெல்லாம் விதி விலக்குகளைக் கற்பித்தல் வேண்டுமென்றதாயிற்று. இதனைச் சிலகாற் பயிறலினமையாது பலகாலும் பயிற்சி செயல் வேண்டுமென்றபடி. (ஙக)

பெருஞ்சீத்தனர்.

கூ உ ஏதமில் வள்ளுவ ரின்குறள்வெண் பாவினு
லோதிய வொண்பொரு ளெல்லா—முரைத்ததனுற்
முதவிழ் தார்மாற தாமே தமைப்பயந்த
வேதமே மேதக் கன.

(இ-ள்.) தாது அவிழ்தார்மாற=பொடியொடு விரிந்த பூமாலையையுடைய பாண்டியராசனே,—ஏதம் இல் வள்ளுவர் இன் குறள் வெண்பாவினுல் ஓதிய ஒண்பொரு ளெல்லாம் உரைத்ததனுல்=குற்றமில்லாத் திருவள்ளுவர் இனிய குறள் வெண்பாக்களாலே நான்கு வேதங்களாலுஞ் சொல்லப்பட்ட ஒள்ளிய பொருள்களே யெல்லாங் கூறினமையால்,—மேதக்கன தாமே தமைப்பயந்த வேதமே=மேம்பாட்டுக்குத் தக்கவை அக்குறள் வெண்பாக்களே, முத னூலாய் நின்று அவற்றைப் பயந்த வேதங்களோ ' நீ சொல்லுவாயாக. எ-று.

தாம் தம்மை எனப்பட்டவை அவை அவற்றை என்னும் பொருளைத் தந்து நின்றன. ஏகாரம் இரண்டும் ஈற. பிறநூலாசிரியர்க்கெல்லாம் அவரெ திரிகளாலே மறுக்கப்பட்டுவருங் குற்றம்போல்வது இவர்க்கு இல்லையென்றற்கு ஏதமில் வள்ளுவரென்றும், தாங்குறியவாய் நின்று கற்போர்க்கு வருத்தம் வீளையாமை பற்றி இன்குறளென்றும், உணர்வுடையோராலே விரும்பப்பட்ட நற்குண முடைமைபற்றி ஒண்பொருளென்றும், கூறினர். நூலாசிரியர்க்கும் நூலுக்கும், நூலுதலிய பொருளுக்கும், தகுதிதோன்றச் சொல்லப்பட்ட விசேடண குணங்களாலே, இவ்வேதம் அவ்வேதத்தினுஞ் சிறப்புடைமை குறிப்பித்தபடி. (கூ உ)

நரிவெருத்தலையார்.

கூ ங இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு
முன்படியச் சொன்ன முதுமொழிநூன்—மன்பதைகட்
குள்ள வரிதென் றவைவள் ளுவருலகங்
கொள்ள மொழிந்தார் குறள்.

(இ-ள்.) இன்பம் பொருள் அறம் வீடு என்னும் இந்நான்கும் மன்பதை கட்கு முன்பு அறியச் சொன்ன முதுமொழி நூல் உள்ள அரிது என்று= இன்ப முதலிய இந்நாற் பொருளியல்புகளேயும் மக்கட் பரப்புக்கு அக்காலத் தில் அறியும் வண்ணஞ் சொல்லப்பட்ட பழமொழி வேதமானது ஓதியுணரப் படுதற்கரிதென்று,—வள்ளுவர் அவை உலகம் கொள்ளக் குறண்மொழிந்தார்= திருவள்ளுவர் அவற்றை உலகத்தார் எளிதினுணரும்படி திருக்குறளைக் கூறினர். எ-று.

முன்பறியவெனவே, உற்சர்ப்பிணியாகலின், அக்காலத்தோர்க்கு உணர் தற்கேற்ற ஆயுணீட்சியும் உணர்வுவலியும் இருந்தனவென்பதூஉம், அவசர்ப் பிணியாகலின் இக்காலத்தோர்க்கு அவையில வென்பதூஉம், பெறப்பட்டன. இவ்விரண்டும் அவாவறுத்தன் முதற்பாட்டுரையிற் காண்க. தேயவழக்கிற் படாததும் வருந்திக் கற்போர்க்கு மாத்திரம் புலப்படுவதுமாய் எல்லாமொழி கட்கும் முற்பட்டுக் கடவுண் மொழியாய் நிற்றலின், முதுமொழி யென்றார். அறமுதலிய நான்கும் பிரிவுபட்டுத் தோன்றுமையை உடைத்தாகலின், உள்ள வரிதாயிற்று. பழையவேதம் உளதாகவும் வேறிது சொல்லுதற்குக் காரணம் உணர்த்தியபடி. (கூகூ)

மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்க்கிழார்.

கூ஧. புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேற்
சிலவர் புலவரெனச் சேப்ப—னிலவு
பிறங்கொளிமா லேக்கும் பெயர்மாலை மற்றுங்
கறங்கு கிருண்மா லேக்கும் பெயர்.

(இ-ள்.) பூமேல் புலவர் திருவள்ளுவரன்றிச் சிலர் புலவரெனச் செப் பல்—பூவலகின கண்ணே புலரெனத் திருவள்ளுவரையன்றி யேறு சிலரை யும்புலவரென்று சொல்லுதல்,—மாலைநிலவு பிறங்கு ஒளி மாலேக்கும் பெயர் மற் றும் கறங்கு இருள் மாலேக்கும் பெயர் (செப்பல்)=மாலையென்பது நிலவால் வீளங்குகின்ற அந்திக்கும் பெயராக மற்றும் சூழ்கின்ற விருளையுடைய அந் திக்கும் பெயராகச் சொல்லுதல் போலும். எ-று.

செப்பலென்றது பின்னுங்கூட்டப்பட்டது. புலமையாவது பலவேறு வகைப்பட்ட நூலுணர்ச்சிகளை யெல்லாம் ஒருங்கேகொண்ட பேரறிவுடை மையாம். உயர்வொப்பற்ற இவரது புலமையைக் குறித்து நோக்குங்கால் எனையோர் புலமை புலமையன்றாய் மூடிதலின் இவ்வாறு கூறினார். புலவ ரென்பது நாயனார்க்கே காரணப் பெயராமென்றபடி. (கூ஧)

மதுரை யறுவைவாணிகர் இளவேட்டனார்.

கூ஫. இன்பமுந் துன்பமு மென்னு மிவையிரண்டு
மன்பதைக் கெல்லா மனமகிழ—வண்போழியா
துள்ளி யுணர வுரைத்தாரே யோதுசீர்
வள்ளுவர் வாயுறை வாழ்த்து.

(இ-ள்.) இன்பமும் துன்பமும் என்னும் இவை இரண்டும் உள்ளி உணர=பின் வரக்கடவனவாய சுகமும் துக்கமுமெனனப்பட்ட இவற்றினு டைய இருவகைக காரணங்களையும் ஆராய்ந்தறியவும்,—அன்பு ஒழியாது

மனம் மகிழ=தம்மேலன்பு நீங்காமல் உள்ளங்களிகூறவும், —மன்பதைக் கெல்லாம் இது சீர்வள்ளுவர் வாயுறை வாழ்த்து உரைததார்=மக்கட் பரப்புக கெல்லாம் புகழ்ப்படுஞ் சீரையுடைய திருவள்ளுவர் வாயுறை வாழ்த்தாகத் திருக்குறளைக் கூறினார். எ-று.

இன்பத்தின் காரணம் விதிக்குறளாலும், துன்பத்தின் காரணம் விலக்குக் குறளாலும், சொல்லப்பட்டன. முன்பறிதற்குப் பயன் அவற்றைச் செய்தலும் தவிர்தலுமாம். வேண்டுவனவெல்லாந தொகுத்துணர்த்தலின், மன மகிழ்தல் சொல்லப்பட்டது. அவ்வேதம்போலாது பலர்க்கும் உபயோகியாகக் கூறலின், மன்பதைக் கெல்லாமென்றார். வாயுறை வாழ்த்தினியல்பு "வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்—வேம்புங் கடுவும் போலவெஞ்சொற்—றாங்குதலின்றி வழிநனி பயக்குமென்—றோம்படைக் கிளவியின் வாயுறுத்தற்றே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தாலறிக. எதிர்கால விளைவுணர்ச்சி பயததல் சொல்லியபடி. (௩௫)

கவிசாகரப் பெருந்தேவனார்.

௩௬. பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புனத
மாவிற் கருமுனியா யானைக்—கமரரும்ப
றேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா.

(இ-ள்.) பூவிற்குத்தாமரை=மலர்களுக்குள்ளே தாமரை மலரும்,—பொன்னுக்குச் சாம்புனதம்=பொன்களுக்குள்ளே சாம்புனதப் பொன்னும, ஆவிற்கு அருமுனிஆ=பசுக்களுக்குள்ளே காமதேனுவும் —யானைக்கு அமரர் உம்பல்=யானைகளுக்குள்ளே ஐராவதமும், —தேவில் திருமால் என—தேவர்களுக்குள்ளே திருமாலும் போல,—பாவிற்கு வள்ளுவர் வெண்பா சிறந்தது என்ப=நூல்களுக்குள்ளே கிருவள்ளுவரது குறள்வெண்பாச் சிறந்தது என்று அறிவுடையோர் சொல்லுவர். எ-று

ஏ அசை. பா ஆகுபெயர். பொன் ஆடகம், கிளிச்சிறை சாதரூபம், சாம்புனதம் என நால்வகைப்படும். காமதேனு வசிட்டமுனியினிடத்துள்ளதாகலின், அருமுனியாவென்றார். உவமான முகத்தால் இஃது பலநூல்களினும் சிறந்து நிற்கின்ற மாட்சிமை சொல்லியபடி. (௩௬)

மதுரைப் பெருமருதனார்.

௩௭. அறமுப்பத் தெட்டுப் பொருளெழுப தின்பத்
திறமிருபத் தைந்தாற் றெளிய—முறைமையால்
வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனா
ரோதவழுக் கற்ற துலகு.

(இ-ள்) அறத்திறம் முப்பதெட்டால் = அறத்தின் கூறுபாடு முப்பத்தெட்டதிகாரங்களாலும், —பொருட்டிறம் எழுபதால் = பொருட் கூறுபாடு எழுபததிகாரங்களாலும், -இன்பத்திறம் இருபத்தைந்தால் = காமத்தின் கூறுபாடு இருபத்தைந்ததிகாரங்களாலும், —தெளிய = தெளியும் பொருட்டு, முறைமையால் வேதவிழுப்பொருளே வெண்குறளால் வள்ளுவனார் ஓத = காரண காரியவொழுங்கால் வேதத்தினுயாவாகிய பொருளே குறளவெண்பாக்களாலே திருவள்ளுவனார் ஓதலால், —உலகு வழுக்கு அறற்று = உலகமானது வழுவுதலின்றும் நீங்கிற்று. எ-று.

திறமும் ஆறும் முனனுங் கூட்டப்பட்டன உயாவாகியபொருள் கரும காண்டம பிரமகாண்ட மிரண்டினுளளதும சிறந்தபொருள் வழுக்குதல் விதியை விலக்கெனறும விலக்கை விதியென்றும கோடல உலகு மக்களே யுணாத்தி நின்றது. துணிவுபற்றி அற்றென இறந்தகாலத்தாற் கூறினார். முன்னதின் வேறுபட்ட மூபபால்களினதிகாரத்தொகைகளோடு உலகிற்கு வீளையும நனமை சொல்லியபடி. (கூஎ)

கோவூர்க்கிழார்.

கூஅ அறமுத லைந்கு மகலிடத்தோ ரேல்லாந்
திறமுறத் தோந்து தெளியக்—குறளவெண்பாப
பன்னிய வளளுவனார் பான்முறைநே ரோவவா தே
முன்னை முதுவோர் மொழி.

(இ-ள்) அறமுதல் நான்கும அகலிடத்தோர எல்லாம திறமஉறத் தோநது தெளியகுறள் வெணபாப் பன்னியவளளுவனார் பான்முறை அறமுதலிய நான்குபொருள்களையும மணணுலகதோரெல்லாம வகைபபட ஆராயநது தெளியும பொருட்டுக குறள் வெணபாகளாலே சொலலப்பட்ட திருவள்ளுவநாயனாரது மூப்பாலகளையுடைய புத்தகத்தின் கணணே — முன்னை முதுவோர மொழிகோ ஒவ்வாது = முறகாலததுள்ள பொர்யோரது நூல்களுககு நோதல் பொருந்தாது. எ-று

மொழி ஆகுபெயர பெரியோராவார வடமொழியிலும தெனமொழியிலும பிறமொழிகளிலும, நூல செயத முனிவரும, புலவரும, பிறரும. அந நூல்களாவன மணு முதலியோராலே செயயப்பட்ட அறநூன முதலியன இதன புததகத்தில முன்னூல்களிலொன்றும சோகபபடுதற்கு தகுவதன் றென்று சொல்லியபடி. (கூஅ)

உறையூர் முதுகூற்றனார்.

கூகூ. தேவிற் சிறந்த திருவள் ளுவாகுறள்வேண்
பாவிற் சிறநதிடுமப் பால்பகரார்—நாவிற்

குயவில்லை சொற்சுவை யோரவில்லை மற்றுஞ்
செயலில்லை யென்னுந் திரு

(இ-ள்) தேவிற் சிறந்த திருவள்ளுவர் குறள்வெண்பாவிற் சிறந்திடுமுப்பால் பகரார் = தெய்வத்தன்மையாற் சிறந்த திருவள்ளுவரது குறள்வெண்பாக்களோடு கூடிச்சிறந்து தோன்றா நின்ற முப்பால்களையும் ஓதாரது—நாவிற்கு உயல் இல்லை = வாக்கிற்கு இன்சொற் சொல்லி வாழ்தல் உண்டாகாது,—சொற்சுவை ஓர்வு இல்லை = மனத்திற்குச் சொற்களின் சுவையை அறிதல் உண்டாகாது,—மற்றும் செயல் இல்லை = இவையன்றியும் காயத்துக்கு நல்ல செயலுண்டாகாது—என்னும் திரு = என்று நினைத்துத் திருமகள் அவரிடத்துச் சேராள். எ-று.

அவையோர்தற்கும் செயலுக்கும் உரிய மனமும், காயமும் வருவிக்கப்பட்டன. திருமகள் சேராமையாகிய காரியத்தைக் காரணமாக உபசரித்தார். ஓதார்க்குளவாகாமை கூறவே ஓதுவோர்க்கு இவையுளவாகலின், வாக்கிற்குக் கடுஞ்சொல், பொய், கோள், புறங்கூறல்களும், மனத்திற்குப் பிறனில விழைதல், பிறன்பொருள் விழைதல், பிறன்பொருட்குக் கேடெண்ணல், பிறவுபிர்க்கிறுதி யெண்ணல்களும், காயத்திற்குப் பிறன்மனை புணர்தல் உயிர்க்கொலை செய்தல், பழியூணுணல், பிறர்பொருள் வெளவல்களும், ஆகிய குற்றங்களெல்லாம் நீங்குமென்பதும் பெறப்பட்டது அறவின்பங்கட்குக் காரணமாகற் சிறப்புடைய பொருட்பேறு இஃதோதலின் உளதாமென்றபடி. (௩௯)

இழிகட் பெருங்கண்ணனார்.

௪௦ இம்மை மறுமை யிரண்டு மெழுமைக்குஞ்
செம்மை நெறியிற் றெளிவுபெற — மும்மையின்
வீடவற்றி னானகின் விதிவழங்க வள்ளுவனார்
பாடினரின் குறள்வெண் பா

(இ-ள்.) இம்மை மறுமை இரண்டும் எழுமைக்கும் செம்மை நெறியின் தெளிவுபெற—இகபரங்கட்காவன விரண்டையும் வினைப்பயன் றொடர்தற்குரிய ஏழு பிறப்பிற்குமாகச் செவ்வையான வழியால் யாவரும் தெளிதல் பெறவும்,—மும்மையின் அவற்றின் வீடு நானகின விதிவழங்க = அறம்பொருள் இன்பமென்னும் முப்பால்களுள் அம்முப்பாற் பொருள்களோடு வீடுமாகிய நாற்பொருள்களது விதிகளும் வழங்கவும்,—வள்ளுவனார் இன்குறள் வெண்பாப் பாடினர் = திருவள்ளுவ நாயனார் இனிய குறள் வெண்பாவைப் பாடினர். எ-று

செவ்வையான வழி விதியும் பத்தியும் ஞானமும் நோயாளிக்கு மருந்தும் அனுபானமும் பத்தியமும் போல் ஒன்றற்கொன்று முரணுது கூடி நிற்கும் வழி. வீட்டு விதி துறவறத்திற் காண்க. இம்மை மறுமை வீடு மூன்றும் பயக்குமாறு சொல்லியபடி. (சரி)

செயிர்க்காவிரியார்மகனார் சாத்தனார்.

சக. ஆவனவு மாகா தனவு மறிவுடையார்
யாவரும் வல்லா ரெடுத்தியம்பத்—தேவர்
திருவள் ளுவர்தாமுஞ் செப்பியவே செய்வார்
பொருவி லொழுக்கம்பூண் டார்.

(இ-ள்.) ஆவனவும் ஆகாதனவும் அறிவுடையார் யாவரும் எடுத்தியம்ப வல்லார்=மக்களுக்கு ஆவனவற்றையும் ஆகாதவற்றையும் அறிவுடையார் யாவரும் இனி இதிலிருந்து எடுத்துச் சொல்லுதற்கு வல்லவராவார்;—தேவர் திருவள்ளுவர் செப்பியவே பொருவில் ஒழுக்கம் பூண்டார் செய்வார்=ஆதலால், தேவராகிய திருவள்ளுவராலே சொல்லப்பட்டவற்றையே ஒப்பில்லாத ஒழுக்கத்தை மேற்கொண்டவர் செய்வார். எ-று.

இங்ஙனம் கூறவே, அவ்வேதத்திலிருந்து உள்ளவாறு எடுத்துச்சொல்லுதல் அறிவுடையார்க்கு முடியாமையால், ஒழுக்கம் பூண்டதற்கு அதன் கண்ணே சொல்லப்பட்டபடி வழுவாமற் செய்தல் கூடாமை காட்டப்பட்டது. தாம், உம், அசைகள். ஆவன இன்பத்தைத் தருவன. ஆகாதன துன்பத்தைத் தருவன. ஒப்பில்லாத ஒழுக்கம் கொல்லாமை முதலியன. போதகாசிரியருக்கும் கேட்டு ஒழுகுபவர்க்கும், பரும் நன்மை சொல்லியபடி. (சக)

செயலூர்க் கோடுஞ் சேங்கண்ணனார்.

சஉ. வேதப் பொருளோ விரகால் விரித்துலகோ
ரோதத் தமிழா லுரைசெய்தா—ராதலா
லுள்ளுங ருள்ளும் பொருளெல்லா முண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு.

(இ-ள்.) வேதப்பொருளை உலகோர் ஓத விரகால் விரித்துத் தமிழால் உரை செய்தார்—வேதத்தின் பொருளை உலகத்தார் ஓதியுணரும் பொருட்டு உபாயத்தால் விரித்துத் தமிழ்மொழியினாலே சொல்லியருளினார்;—ஆதலால் உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் வள்ளுவர் வாய்மொழிமாட்டு உண்டு என்ப=ஆதலால், நினைப்பவர் நினைக்கும் பொருள்களெல்லாம் திருவள்ளுவர் திருவாயிற் பிறந்த திருக்குறளின் கண்ணே உண்டென்று அறிவுடையோர் சொல்லுவர். எ-று.

உபாயததால விரித்தல சொற்சுருககத்தால் ஓதறகெளிதென மன வெழுச்சியுணடாககிக கற்போரது அறிவளவிற கேற்பப பொருளளவு விரிய வைததல். நினைககபபடும பொருள்களெலலாம இதன கணணே இககார ணததால தோன்றா நின்றனவென்று கூறியபடி. (௪௨)

வண்ணக்கஞ்சாத்தனார்

௪௩ ஆரியமுஞ் செநதமிழு மாராய்ந திதனினிது
சீரிய தென்றொன்றைச் செப்பரிதா—லாரியம்
வேத முடைத்துத் தமிழ்திரு வளளுவனா
ரோது குறட்பா வுடைத்து.

(இ-ள்) ஆரியமும செநதமிழும ஆராயநது இதனின இது சீரியது என்று ஒன்றைச் செபபரிது=வடமொழியையும் தென் மொழியையும ஆராயந்து இதைக காட்டிலும இது சிறபபுடைத்தெனறு ஒன்றைத்தெரிந்து சொல்லுதல் கூடாது,—ஆரியம வேதம் உடைததுத தமிழ் திருவள்ளுவனார் ஓது குறடபாவுடைத து=வடமொழி வேதமுடைத்து, தமிழ்மொழி திருவள் ளுவ நாயனா சொலலிய குறட்பா உடைதது, ஆதலால் எ-று.

ஆல் அசை. வடமொழியும் தென்மொழியும பிறமொழிகள் போலாது பாணினியாரும அகததியனா முதலாய முனிவர்களாலே செயப்பட்ட இலக ணநூல்களாலே சீாதிருந்தி நிற்றன் முதலிய குணஙகளுடைமையாலும், அது பிராகிருத முதலியவற்றுககுப் போல் இது ஆநதிர முதலியவற்றுக்கு முதலாய் நிற்றலாலும, ஒன்றற்கொனறு குறைபாடுடைததன்றேனும, வேத முடைமை பறறி வட மொழிககுச சொலலபபட்ட உயாவு தென்மொழிக கண்ணே திருககுறள உணடாதலின இனிமில்லை யெனறறகு, இதனினிது சீரியதென்றொன்றைச் செப்பரிதெனறா இததிருககுறளாலே வடமொழி யோடு தென்மொழிககு ஒபபுமை நிறைவு சொலலியபடி. (௪௩)

களத்தூர்க்கிழார்.

௪௪ ஒருவ ரிருகுறளே முபபாலி னோதுந
தரும முதனான்குஞ் சாலு—மருமறைக
ளைந்துஞ் சமயநூ லாறுநம் வள்ளுவனா
புந்தி மொழிந்த பொருள்.

(இ-ள்.) அருமறைகள் ஐந்தும் சமயநூல ஆறும நம வள்ளுவனா புநதி மொழிந்த பொருள்=இருககு முதற் பாரதமீறாகிய அரியவேதங்கள் ஐந்தும் அவ்வேதத்தின வழிப்பட்ட சமயநூல்களாறும் நமமுடைய திருவள்ளுவ ரால் உலகததார்ககுப் புத்தியாகச் சொலலபபட்ட நூலிலடஙகும்,—ஒருவா

இரு குறளே முப்பாலின் ஒவ்வும் தருமர் முதல் நான்கும் சாலும் = ஆதலால், ஒருவர் ஒருவிகற்பமும் இருவிகற்பமுமாகிய இருவகைக்குறள்களேயுமே முப்பால்களில் அத்தியயனஞ்செய்த அறியப்படுகின்ற அறமுதலிய நாற்பொருள்களேயும் அவர்க்குப் போதும். எ-று.

ஒருவனுக்கே ஐந்தும் ஐந்தியுணர முடிவு போகாது வேறு வேறுண அதிகாரிகளுடைமைபற்றி, அருமறைகளேந்து மென்றார். சமயநூலாறும் ஒன்றே பொருளென்னும் பாட்டுமையிற் காண்க. நமக்கெல்லாம் அறிவொழுக்கங்களுத்தி நல்வழிப்படுத்த வந்த பரமாசாரியர் இவரே யென்னு முரிமை தோன்றற்கு நம்வள்ளுவனார் எனறார். மறைகளேந்துஞ் சமயநூலாறும் நம் வள்ளுவனார் புந்திமொழிந்த பொருளெனலால், அவை பலவற்றினும் வேறு வேறு வகைப்பட்டுச் சிறந்து நின்ற கருத்துகளெல்லாம் இவ்வொரு நூற் கண்ணே அடங்கி நிற்கின்றமை சொல்லப்பட்டதாயிற்று. பொருள் ஆகு பெயர். ஒருவகைனப் பொதுப்படக் கூறலால், இதனே ஒத்ததற்குப் பெண் பாலார்க்குமதிகாரமுண்டென்பது கொள்ளப்பட்டது. இவ்வொரு நூலோதி யுணர்ந்தோர் அருமறைகளேந்துஞ் சமயநூலாறும் ஓதி யுணர்ந்தோர் ஆவர் என்றபடி. (சக)

நச்சுமனார்.

எ நி. எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு
வழுக்கில் வனப்பணி வண்ண---மிழுக்கின்றி
யென்றெவர் செய்தன வெல்லா மியம்பின
வின்றிவ ரின்குறள் வெண்பா

(இ-ள்.) எழுத்து அசை சீர் அடி சொல் பொருள் யாப்பு வழுக்கு இல் வனப்பு அணி வண்ணம் இழுகு இன்றி என்று எவர் செய்தன = எழுத்து முதல் வண்ணமீருகச் சொல்லப்பட்ட இவற்றுள் வழுவுதலில்லாமல் எக் காலத்தில் எவரால் எவை செய்யப்பட்டன,—எல்லாம் இன்று இவர் இன் குறன் வெண்பா இயம்பின = அவையெல்லாம் இக்காலத்து இத்திருவள்ளுவ ராலே செய்யப்பட்ட இவ்வினிய குறள் வெண்பாக்களிற் சொல்லப்பட்டன.

வனப்பு, அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு, அணி சொல்லணி, பொருளணி, ஓலியணி. வண்ணம்குறிலகவற்றாக நிசை வண்ண முதலியன ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு பாவலர் ஒவ் வொரு குணத்தினுலே சிறந்து விளங்க நூல் செய்தனர், இவரோவெனின் எல்லாக் குணங்களாலும் நிறைந்து சிறந்து விளங்கச் செய்தமையின், இவ் வாறு கூறினர். இதன் பாக்களின் சிறப்புச் சொல்லியபடி. (சகு)

அக்காரக்கனி நச்சுமனார்.

சசு. கலைநிரம்பிக் காண்டற் கினிதாகிக் கண்ணி
னிலைநிரம்பு நீர்மைத் தெனினுந்—தோலிலா
வானூர் மதியந் தனக்குண்டோ வள்ளுவர்முப்
பானூ னயத்தின் பயன்.

(இ-ள்.) கலை நிரம்பிக் காண்டற்கு இனிதாகிக் கண்ணினிலை நிரம்பு நீர்மைத்து எனினும்=மதியமும் முப்பானூலும் பதினெறு கலைகளாலும், அறுபத்து நாலு கலைகளாலும். நிறைந்து, நோக்குதற்கு ஆராய்ச்சி செய்தற்கினிதாகி, முகக்கண்ணினிலையில், அகக்கண்ணினிலையில், நிரம்புகின்ற தண்மையுடைத்தாயினும் *குணமுடைத்தாயினும்,—வள்ளுவர் முப்பானூல் நயத்தது இன்பயன் தொலைவு இலாவாம் ஊர் மதியந்தனக்கு உண்டோ—திருவள்ளுவர் தது முப்பானூலினது நயத்தால் விளைவுதாகிய இனிய பயனை தது ஒழிவின்றி ஆகாசதலின் கண்ணே நிரிகின்ற மதியினிடத்து உண்டோ? எ-று.

மதியந்தனக்கு என்றது வேற்றுமை மயக்கம். ஓகாரம் எதிர்மறை. ஆதாரமாகக் கொள்ளுதற்கு வற்புடைத்தல்லாத வானை ஆதாரமாகக் கோடலின், இழிதோன்றத் தொலைவிலா வானூர் மதியம் என்றார். நயம் மறுப்படாமை, மழுங்காமை, குறைவுறாமை முதலியன. பயன் இம்மை மறுமை வீட்டின் பங்கள். ஒப்புமை சொல்லுதற்கு நூல்களில் ஒன்றும் இன்மையால், எனைப்பொருள் பலவற்றினுஞ் சிறந்த மதியையாயினும், சொல்லுதுமெனப் புகின் அதுவும் இதனைற் றகுவதன் றென்றபடி. (சசு)

நப்பாலத்தனார்.

சஎ. அறந்தகளி யான்ற போருடிரி யின்பு
சிறந்தநெய் செஞ்சோற்றீ தண்டு—குறும்பாவா
வள்ளுவனு ரேற்றினார் வையத்து வாழ்வார்க
ளுள்ளிருளு ணீக்கும் விளக்கு.

(இ-ள்.) அறம் தகளி=தருமம் அகலும்,—பொருள் திரி=பொருள் திரியும்;—இன்பு நெய்=காமம் நெய்யும், — செஞ்சொல் தீ=செவ்விய சொல் நெருப்பும்,—குறும்பாத் தண்டா = குமட்பாத் தண்டும், ஆக,—வள்ளுவனார் வையத்து வாழ்வார்கள் உள்ளிருள் நீக்கும் விளக்கு ஏற்றினார்= திருவள்ளுவனையனார் பூமியின் கண் வாழ்வோரது அகத்திருளை ஒழிப்பதாகிய விளக்கு ஏற்றினார். எ-று.

ஆன்றல் மேம்படுதல். அகத்திருள் அஞ்ஞானம். தீச்சுடர் தகளி முதலியவற்றோடு கூடிப் புறத்திருளை எப்படியோ அப்படி ஞானாதி நிருவா

யிற் பிறந்த செஞ்சொல் அற முதலியவற்றோடு கூடி அகத்திருளைக் கெடுத் தலின், இங்ஙனம் உருவகஞ் செயலாயிற்று. மனையகத்தேற்றப்படுகிற விளக்கு அம்மனையகத்துள் மாத்திரமே உபயோகியாய் நிற்றலாலும், அகத்திருளைக் கெடுக்க வல்ல தன்மையாலும், இவ்வுலகத்து வாழ்வோர் பலர்க்கும் உபயோகியாய் நிற்றலாலும், அகத்திருள் கெடுதலாலும், அதனின் இது பல கோடி மடங்கு மிக்குச் சிறந்து நிற்கின்றமை உணர்த்தியபடி. (எ)

குலபதி நாயனார்.

ச அ. உள்ளக் கமல மலர்த்தி யுளத்துள்ள
தள்ளற் கரியவி ருள்ளுதலால்—வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரு மோக்குமெனக்
கொள்ளத் தகுங்குணத்தைக் கொண்டு.

(இ-ள்.) உள்ளக் கமலம் மலர்த்தி உளத்து உள்ளத்தள்ளற்கு அரிய இருள் தள்ளுதலால்=நெஞ்சமாகிய தாமரை மலரை மலர்த்தி மக்களது அகத்திலுள்ள பிறிதொன்றனாலே நீக்கப்படாத அஞ்ஞானவிருளை நீக்குத லால்,—வள்ளுவனார் வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிருங் குணத்தைக் கொண்டு ஒக்கும் எனக் கொள்ளத்தகும்=திருவள்ளுவரது குறள் வெண்பா வும், புறத்திருத் தாமரை மலரை மலர்த்திப் புறத்திருளை நீக்குகின்ற சூரிய னும், அச்செய்கையைக் கொண்டு ஒக்குமென்று கொள்ளத்தகும். எ-று.

செயலும் தொழிற் பண்பெனப்படுதலின் குணமெனப் பட்டது அது மலர்த்தலும் தள்ளுதலுமாம். குணத்தைக் கொண்டெனவே செயப படுபொருளைக் கொண்டு ஒக்குமெனக் கொள்ளத் தகாதென்றதாயிற்று. உலகுக்கெல்லாம் பேரொளியாகிய சூரியனும் இதற்கு ஒருபுடை யொப்பாம் என்றபடி. (ச அ)

தேனீக்குடிக்கீரனார்.

ச கூ. போய்ப்பால பொய்யேயாய்ப் போயின போய்யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே—முப்பாலிற்
றெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து.

(இ-ள்.) தெய்வத் திருவள்ளுவர் முப்பாலிற் செப்பிய குறளால் தெய் வத் தன்மையையுடைய திருவள்ளுவனையனார் மூன்று பால்களை யுடையதா கக்கூறியகுறணூலைக் கேட்டறிதலால்,—வையத்து வாழ்வார் மனத்துப்பொய்ப் பால பொய்யேயாய்ப் போயின=உலகின்கண் வாழ்வாருடைய மனத்துப் பொய்யின் பகுதியிற் பட்டவை எல்லாம் பொய்யேயாய்ப் போயின,—பொய்

யல்லாத மெய்ப்பால மெய்யாய் விளக்கின = பொய்மையல்லாத மெய்யின் பகுதியிற் பட்டவை யெல்லாம் மெய்யேயாய் விளங்கின. எ-று.

குறளாற் பொய்ப்பால பொய்யேயாய்ப் போயின மெய்ப்பால மெய்யே யாய் விளங்கின எனவே, இதற்கு முன்னெல்லாம் உண்மைத் தணியப்படா மையின், பொய்ப்பால மெய்ப்பாலப் போன் மேற் கொள்ளப்பட்டும், மெய்ப் பால பொய்ப்பால போல் கைவிடப்பட்டும், மயங்கிக் கிடந்தன வென்றதா யிற்று. இதன் மெய்யுணர்வு பயத்தற் நிறப்புச் சொல்லியபடி. (ஈக)

கோடிஞாழன் மாணி பூதனர்.

நிம. அறனறிந்தே மான்ற பொருளறிந்தே மின்பின்
நிறனறிந்தேம் வீடு தேளிந்தே— மறனேறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனர் தம்வாயாற்
கேளா தனவெல்லாங் கேட்டு.

(இ-ள்.) மறன் எறிந்த வாள் ஆர் நெடுமாற = பகைவரை யெறிந்த வாட் படை தீங்கிய வீரரேங்கும் பாண்டியராசனே, —வள்ளுவனர் தம் வாயாற் கேளாதன வெல்லாம் கேட்டு அறன் நிறன் அறிந்தேம் = திருவள்ளுவனய னாரது வாக்கால் இதற்கு முன் கேட்கப்பட்டில்லாதவை யெல்லாம் இப் போது கேட்டு, அறத்தின் நிறத்தை அறிந்தேம், —பொருட்டிறன் அறிந் தேம் = பொருளின் நிறத்தை அறிந்தேம், — இன்பின் நிறன் அறிந்தேம் = இன்பத்தின் நிறத்தை அறிந்தேம், —வீட்டுதிறன் தெளிந்தேம் = வீட்டின் நிறத்தை அறிந்தேம். எ-று.

நிறன் அற முதலியவற்றேடுங் கூட்டப்பட்டது. மறன் ஆகு பெயர். கேளாதன பிறநூலாசிரியர்க்கெல்லாம் அறிந்து சொல்லுதற் கெட்டா நிருந்த அற முதலியவற்றினுட்பங்கள். இம்மை மறுமை வீடுகளைக் குறித் துணர்தற்குரிய ஒருநிப் பொருளன்கு முணர்தலின், இனியாதொன்றுமுங் குறைவில்லை யென்றபடி. (இம)

கவுணியனர்.

நிக. சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த விருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனர்
பன்னிய வின்குறள் வெண்பா.

(இ-ள்.) முந்திய நன்னெறி நாம் அறிய நாப்புலமை வள்ளுவனர் பன் னிய இன்குறள் வெண்பா = முற்பட்டதாகிய நல்ல வழியை நாம் அறியும் பொருட்டு நாவால் விளங்குகின்ற புலமையையுடைய திருவள்ளுவனயனாற் சொல்லப்பட்ட இனிய குறள் வெண்பாக்கள்-சிந்தைக்கு இனிய = நினைத்தால்

மனத்திற்கு இன்பம் செய்வன,—செவிக்கு இனிய=கேட்டாற் காதுக்கு இன்பஞ் செய்வன, —வாய்க்கு இனிய=ஓதினால் வாய்க்கு இன்பஞ்செய்வன, —வந்த இருவினைககுமாமருந்து=தொடர்ந்து வருகின்ற இருவினைகளாகிய நோய்களுக்குப் பெரிய மருந்துகளாவன. எ-று.

குறட்பாவை மருந்தென்றமைககு ஏற்கவினையை நோய் என்னாமையால் ஏகதேச ரூபகம். நல்வினையும் பிறவிக்கு ஏது வாகலால் இருவினை யென்றார். முற்பட்ட நல்வழி நன்மக்களுககு அனாதியாயமைநதுள்ளது; அது சமயத்தாரது பலவகைப்பட்ட கற்பனையினாலே மறைபட்டு நின்றமையின், நாமறிய வென்றார். இந்நூலின் பாக்களைச் சிந்தித்தன் முதலியன செய்யுஙகாலும் சொற் பொருணயஙகளாலே இன்பம் விளைத்துத் தெய்வத் தன்மையால் வினைத்துயரும் ஒழிக்கு மென்றபடி. (௫௬)

மதுரைப் பாலாசிரியனார்.

௫௨ வெள்ளி வியாழம் விளங்கிரவி வெண்டிங்கள்
பொள்ளென நீக்கும் புறவிருளைத்—தெள்ளிய
வள்ளுவரின் குறள் வெண்பா வகிலத்தோ
ருள்ளிரு ணீக்கு மொளி.

(இ-ள்., வெள்ளி வியாழம் விளஙகு இரவி வெண்டிஙகள் புறவிருளைப பொள்ளென நீககும=சுக்கிரன் சுரகுரு சூரியன் சந்திரன் என்பன புறத்திருளை விரைவிலே நீக்கும் ஒளிகளாம,—தெள்ளிய வள்ளுவர் இன் குறள் வெண்பா அகலத்தோருள்ளிருள் நீககும் ஒளி=முற்றுணர்ந்த திருவள்ளுவ நாயனாரது இனிய குறள் வெண்பா உலகத்தோரது உள்ளிருளை நீக்கும் ஒளியாம்.' எ-று.

இங்ஙனங கூறவே, புறத்திருளுககு அவைபலவுள, அகத்திருளுக்கு இஃதொன்றே உளதென்றதாயிற்று. அவற்றுள் ஒன்றாலும நீக்கப்படாத அகத்திருளை நீக்கவல்லதாகலின், இதற்கு எவ்வாறானும் ஒப்பதொன்றின்றென்றபடி. (௫௨)

ஆலங்குடிவங்கனார்.

௫௩ வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்குந
தெள்ளமுதின் றீஞ்சுவையு மொவ்வாதாற்—றெள்ளமுத
முண்டறிவார் தேவ ருலகடைய வுண்ணுமால்
வண்டமிழின் முப்பான் மகிழ்ந்து.

திருவள்ளுவ மாலை

(இ-ள்.) வள்ளுவர் பாட்டின் வளம் உரைக்கின் வாய் மடுக்கும் தெள்ளி முதின் தீஞ்சுவையும் ஒவ்வாது=திருவள்ளுவரது பாட்டினது தீஞ்சுவையைச் சொல்லுமிடத்து, உண்ணப்படுகின்ற தெள்ளிய அமுதினது தித்திப்பாகிய சுவையும் ஒப்பாகாது,—தெள்ளமுதம் உண்டு அறிவார் தேவர்=தெள்ளிய அமுதையுண்டு அதன் சுவையை அறிபவர் தேவர்கள்;—வண்டமிழின் முப்பாலுலகடைய மிழ்ந்து உண்ணும்=வளம் பொருந்திய தமிழின் கண்ணதாகிய முப்பாலாகிய அதின் மும்மடி சிறந்த பாலை எல்லாவுலகத்தாரும் மகிழ்ந்து உண்டு தீஞ்சுவை யறிவார். எ-று.

வளம் ஆகுபெயர். ஆல் அசை. அவ்வமிர்தம் வாயுட் பெய்த வழி நாவிற்பட்ட சிறிதுபொழுது அளவே தீஞ்சுவை பயப்பது, இப்பாட்டு நெஞ்சின்கணிலேபெற்று ஒழிவின்றித் தீஞ்சுவை பயத்தலின், ஒவ்வாதென்றார். முப்பால் சிலிஷ்ட ரூபகம். இனி எவ்வுலகத்தாருக்குங் கரும பூமியாகிய இவ்வுலகத்துட்டோன்றி மெய்ப்பொருணார்ந்தன்றி வீட்டின்பம் பெறுதல் கூடாமையின், உலகடைய உண்ணுமென்றார். அன்றி, அவ்வுலகத்துத் தேவர்களும் தமது மேற்பட்ட வறிவினுலே இதனது உயர்வொப்பற்ற குணத்தை யறிந்து முக்கிய பிரமாணமாகக் கொண்டு மகிழ்கூறுவர் என்பது பற்றி, அங்ஙனங் கூறினுரெனினுமமையும். இஃது இவ்வுலகத்தார்க்கேயன்றி அவ்வுலகத்தார்க்கும் பயன்படுமாறு சொல்லியபடி. (நிகு)

திருத்தணிகைச் சரவணப் பெருமாளையர் செய்த

திருவள்ளுவமாலை யுரை முற்றிற்று.

இடைக்காடர் பாடல்.

நிச. கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

(இ-ள்.) குறள்=காயனரது நூலின் ஆயிரத்து மூன்றாற்று முப்பது குறள் வெண்பாக்களும்,—கடுகைத் துளைத்து எழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த=கடுகை அதனடியே துளைசெய்து ஏழுகடனீரையும் அத்துளையுட் பெய்து தன்னளவிற் குறுகும்வண்ணம் தறித்து வைத்தால், அதுபோல் வன வாகும். எ-று.

யிக்க சிற்றளவிற்கு எடுத்துச் சொல்லப்படுவதொரு நுண் பொருளாக லின், கடுகு சொல்லப்பட்டது. இரண்டனுருபு தரித்த வென்னை கொண் டது. துளைத்தல் உள்ளீடு போக்குதல். புகலிடென்பது புகடென விகாரப்பட்டு முதனிலையாய் நிற்றலின், புகட்டி யென்றுரைத்தது. துளையினிடை வெளிக்கும் அதன் புறமூடிக்கும் கொள்ளப்பட்ட பலகு சிறியதாக வொழிந்த பங்கு பெரியதாகலின் குறுகவென்றார். தறித்தாலென்ன வேனற்பாலது தறித்தவென்ன இடைக்குறைந்து நின்றது. இல்லாத பொருளே உவமான மாகக் கூறலின் இல்பொருளுவமை. குறட்பாக்களுள் ஒவ்வொன்றும் அது போன்றலின் தறித்தவெனப் பன்மையால் கூறலாயிற்று. குறள் பால்பகா வஃறிணைப் பெயராகலின், இங்கே பன்மைக்காயது. இங்ஙனங்கூறவே குறட் பாவின் சொற்சுருக்கமும் அதனுள் அடக்கப்பட்ட பொருள் விரிவும் நோக கும் வழி, அக்கடலும் எழ் கடலும் நீரும் போலு மென்றதாயிற்று. பொருள் விரிவினளவு படாமை சொல்லியபடி.

இப்பாட்டிலே "அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்—குறுகத் தறித்த குறள்" என முதற் சொல்லை மாற்றி ஔவையாராற் புகழ்ச்சி செய் யப்பட்டது.

விளக்கம் :—பகைவர் நிறைந்த யுத்தகளத்துச் சிறிதும் பயப்படாது சென்று யுத்தம் செய்து சாகவல்லவர் உலகத்துப் பலர் உண்டென்றும், ஆனல் கற்றறிந்தவர் சபையினிடத்தே அஞ்சாது சென்று தாம் கற்ற நூற்பொருள்களைச் சொல்லவல்லவர் வெகு சிலசென்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. இதனுல், தம்மரசன் பொருட்டு யுத்தகளத்துச்சென்று தோல்வியடையும் காலத்து அதற்காக மனமஞ்சிப்புறமுதுகிட்டு ஓடாது தம்முயிரைக் கொடுத்துப் புகழை அடையவல்லவர் உலகத்துப் பலர் உண்டென்றும், ஆயின் கற்றறிந்த சபையினிடத்துச் செல்பவர் வெகு சில சென்றும், அவ்விதம் சென்றவருள் சபைக்கு அஞ்சாது தாம் கற்ற விஷயத்தைக் குற்றமில்லாமல் பேசுபவர் வெகு சிலசென்றும் அறிகின்றேம். ஆகலால் சொல்வல்லமை உடையார் வெகு சிலசென்றும், அச்சொல்வன்மையிருந்தும் சபைக்குப் பயப்படாது சொல்லுதல் மிக அருமையென்றும் அறிந்தோம என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "மேற் கூறிய மூன்று செய்யுள்களாலும் கற்றறிந்த சபைக்குப் பயப்படாத கற்றறிந்தவர் சிறப்பினை அறிந்தோம். இனிச் சபையினிடத்தே அஞ்சாது சென்ற ஒருவன் தான் கற்ற நூலின் பொருள்களைப் பிறர்க்குக் கூறிவந்துவிடுதல் வேண்டுமோ ? அல்லது தம்மின் மிக்கவர் ஏதேனும் அச்சபையினிடத்தே சொல்லப் புகுந்தால் அதனையுங் கேட்டல் வேண்டுமோ ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

724. கற்றார்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற மிக்காருண் மிக்க கொளல்.

(பரி.) இ-ள். கற்றார்முன் கற்ற செலச் சொல்லல்=பலநூல்களையுங் கற்றாவைக்கட் டாங்கற்றவற்றை அவர் மனம் கொள்ளுமாற்றுற் சொல்லல்—தாம் கறற மிக்க மிக்காருள் கொளல்=அவற்றுன் மிக்க பொருள்களே அம்மிகக் கற்றாரிடத் தறிந்துகொள்க. எ-று.

எல்லாம் ஒருவர்க்குக் கற்றல் கூடாமையின் வேறுவேறுய கல்வியுடையார் பலரிருந்த அவைக்கட் டாங்கற்றவற்றை அவர்க்கேற்பச் சொல்லுக சொல்லவே, அவரும் அவையெல்லாஞ் சொல்லுவராகலான், ஏனைக்கற்கப் பெருதன கேட்டறியலாமென்பதாயிற்று. இதனுல் அதனதொருசார்பயன் கூறப்பட்டது. (ச)

விளக்கம் :—பல நூல்களையும் கற்றறிந்த சபையின் மூன் தாம் கற்ற நூற்பொருள்களை அக்கற்றறிந்தவர் விரும்பி மனத்தில் ஏற்றுக்கொள்ளும் விதமாகச் சொல்லுவதுடன் தாம் கல்லாததாகிய நூல்களின் பொருள்களைத் தம்மினும் மிக்கார் சொல்லுவதாயின் அம்மிக்கவரிடத்து அம்மேலாகிய பொருள் களை அறிந்து, கேட்டுக்கொள்ளுதல் வேண்டுமெ என்று இத்திருக் குறள் கூறுகின்றது. இதனால், 'கற்றது கைம்மண்ணளவு, கல் லாதது உலகளவு' என்று ஔவை கூறியபடி எல்லா நூல்களையும் கற்று விடுதல் ஒருவர்க்குக் கூடாதாகையால், வேறு வேறுகிய நூல் களைக் கற்றுவல்லவர் பலர் கூடியிருக்கு சபையின்கண் தாம் என்று தாம் கற்ற விஷயங்களைச் சொல்லும் காலத்து அவர் குணமெனக் கொள்ளும்படிச் சொல்லுதல் வேண்டுமென்றும், அவ்விதம் சொல் லும் காலத்துக் கேட்டவராகிய ஏனைய புலவோர் இவரை விரும்பித் தாம் கற்ற நூற் பொருள்களையும் சொல்ல மனம் உவந்து சொல்லு வாரென்றும், அவ்விதம் சொல்லுங்காலத்துத் தாம கல்லாதன வற்றையும கேட்டறிந்து கொள்ளலாமென்றும், அதனால் பெரும் பயன் அடைதல் கூடுமென்றும் அறிந்தோம ளின்றனர். அது கேட்ட மாணாக்கர், "நூல்களைக் கற்கும் காலத்து இலக்கணம் இலக்கியம் சாத்திரம் என்னும் வகையினுள் இலக்கியமை என்பது ஒன்றைக் கற்கும் காலத்து இலக்கணமுமை பயிலுதல் வேண்டுமோ? அல்லது எவ்விதம் பழகல்வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவா சாயினர்

725. ஆற்றி னளவறிந்து கற்க வதையஞ்சா மாற்றங் கொடுத்தற் பொருட்டு.

(பரி.) இ-ள். ஆற்றின் அளவு அறிந்து கற்க=சொல்லிலக்கண நெறி யானே அளவை நூலை அமைச்சர் உட்பட்டுக கற்க;—அவை அஞ்சாமாற்றம் கொடுக்கற்பொருட்டு=வேற்றுவேந்த ரவையிடையஞ்சாது அவர் சொல்லிய சொற்கு உத்தரஞ் சொல்லுதற்பொருட்டு. எ-று.

அளவைநூல் சொன்னூல் கற்றே கற்கவேண்டுதலின், அதற் கஃதா றெனப்பட்டது. அளக்குங் கருவியை 'அளவு' என்றார், ஆகுபெயரான். அவர் சொல்லே வெல்வதொருசொற் சொல்லலாவது நியாயத்து வாத செற்ப

வீதண்டைகளும் சல சாதிகளும் முதலிய கற்றூர்க்கேயாகலின், அவற்றைப் பிழையாமற் கற்கவென்பதாம். இதனுள் அதல் காரணங் கூறப்பட்டது. (நி)

விளக்கம்:—அமைச்சரானவர் வேற்றரசர் சபையினிடத்தே அவர் சொல்லிய சொற்களுக்குப் பயப்படாமல் பதில் சொல்லுதல் வேண்டுமாயின் அளவு நூல்களைச் சொல்லிலக்கண நூலிற் சொல்லியபடிக் கற்றல் வேண்டும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனுல் அளவு நூலைச் சொல்லிலக்கண வழியால் கற்ற அமைச்சன் ஒருவன் தன்னரசன் பொருட்டு வேற்றரசர் சபையிற் சென்று பேசும்போது அவர் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லக் கூடுமென்றும், இவன் சொல்லும் சொல்லை மற்றொரு சொல் கொண்டு வாதித்து வெல்லா வண்ணம் சொல்லுதல் கூடுமென்றும், அவ்விதம் கூறி வெல்லாவிடின் பகைவர் சொல்லால் தான் எண்ணிச் சென்ற கருமம் இயற்றுவதற்காகாது தோல்வி அடைய வேண்டி வரும் என்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் இலக்கண வழியாக நூலினைக் கல்லாது சொல்வாஞ யின் அவ்வித அமைச்சன் தான் கற்ற நூலால் எவ்வித பயனையும் அடைதலில்லைபோலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

726. வாளொடென் வன்கண்ணை யல்லார்க்கு நூலொடென் னுண்ணறிவை யஞ்சு பவர்க்கு.

(பரி.) இ-ள். வன்கண்ணையல்லார்க்கு வாளொடு என்ன வன்கண்மை யுடைய யல்லாதார்க்கு வாளுடென்ன வியையுண்டு—நுண்ணறிவை அஞ்சுபவர்க்கு நூலொடு என்ன அதுபோல நுண்ணியாதறிவையை யஞ்சுவார்க்கு நூலோடென்ன வியையுண்டு. எ-று.

இருந்தாரு நுண்மை அவைமே லேற்றப்பட்டது. நூற்குரிய ரலல சென்பதாம் (சு)

விளக்கம்:—மனத்திட்பம் ஆகிய வன்கண்மை இல்லாதார்க்கு அவர் பகைக் களத்தில் பிடித்துச் சென்ற வாளால் எவ்வித பயன் உண்டாகுமோ, அதுபோல நுட்பமாகிய நூல்களை இலக்கண வழியாகக் கற்றவர் சபையில் சென்று அவர்க்கு அஞ்சும் கல்வியாளர்க்குத் தாம் கற்ற நூலோடாகிய பயனுனது எவ்விதம்

கிடைக்கும் என்று இத்திருக்குறள் விளைக்கின்றது. இதனால், பேடி ஒருவன் வாளேந்திச் சென்றான் ஆயினும் பகைவராகிய வீரரைக் கண்டவிடத்து அவ்வாளாலாகிய பயனை அடையாது பயந்துவிடுவது போல், நூலினைக் கற்றேமென்று அமைச்சன் சென்று சபையிடத்துப் பேசுங்காலத்துத் தான் கற்ற நூல் இலக்கண வழியாகக் கல்லாததாயின், இலக்கணவழியாகக் கற்ற நூல்வல்லவர்களை ஜயிப்பதற்கில்லாமல் தோல்வியடைவதுடன் தான் கெடும்பொழுது வருந்திக் கற்ற நூலாலாகிய பயனையும் அடையாமற்போவான். ஆதலால் இலக்கண வழியோடு ஒருவன் நூலைக் கற்க வேண்டுமென்றும், அல்லாவிட்டால் சபைக்கு அஞ்சுதல் வேண்டுமென்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "வனகண்ணர் அல்லாதார் கொண்ட வாள் என்பதற்கு பேடிகை வாள்என்று கூறினீர். நம்மாசிரியர் வன்கண்ணர் அல்லாதாரைப் பேடியென்று கூறுகின்றனரோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

727. பகையகத்துப் பேடிகை யொள்வாள் போலவை பகைத் தஞ்சுமவன் கற்ற நூல்

(பரி.) இ-ள். பகையகத்துப் பேடி கை ஒள்வாள் = எறியப்படும் பகை நடுவண் அதனை யஞ்சும் பேடி பிடித்த கூர்வாளை யொக்கும்—அவையகத்து அஞ்சுமவன் கற்ற நூல் = சொல்லப்படும் அவைநடுவண் அதனை யஞ்சுமவன கற்ற நூல். எ - று.

பேடி = பெண்ணியல்பு மிகுந ஆணியல்பு முடையவள். களமும் வாய்த்தும் தானும் நன்றுயிஞ்தேயாயினும் பிடித்தவள் குற்றத்தால் வாள் சிறப்பின்றுயினும் போல, அவையும் வாய்த்தும் தானும் நன்றுயிருந்தேயாயினும் கற்றவன் குற்றத்தால் நூல் சிறப்பின்றுயிற்று. (எ)

விளக்கம்:—சொல்லுவதற்குச்சென்று சொல்லக்கூடிய சபையும் வாய்த்து அவ்வித சபையின் நடுவில் அச்சபையிலுள்ளாரைக்கண்டுச் சொல்லுவதற்குப் பயப்படுகின்ற ஒருவன் கற்ற நூல் பகைவர் நடுவே சென்று எறிவதற்குத் தாங்கிய வாளினை எறிவதற்கில்லாது பயப்படுகின்ற பேடி ஒருத்தி பிடித்த கூர்மையுடைய வாளினையே ஒத்திருக்கும் என்று இத்திருக்குறள்

கூறுகின்றது. இதனால், யுத்தகளம் இருக்கவேண்டிய வழியாக இருந்தும், வாளுந் ஒளியோடு கூடிய கூர்மையுடையதாகவிருந்தும், அவ்வாளைப் பிடித்தவள் பேடியாயின் எவ்வாறு சிறப்பை அடையாமற் போமோ, அதுபோல் சொல்லுதற்குரிய கற்றறிந்த சபையும் வாய்த்து, கற்ற நூல்களும் நன்னெறியுடையவேயாயினும், சொல்லும் வன்மையில்லாது அவைக்கு அஞ்சுகின்ற ஒருவன் கற்ற குற்றத்தால் அக்கற்ற நூல் சிறப்படையாமல் போம் என்று அறிந்தோம், ஆதலால் மேல் திருக்குறளில் வன்கண்ணாரல்லார்க்கென்று கூறியது மனவலி இல்லாதாரை என்று பொதுப்படக் கூறினும் இத்திருக்குறளால் மனவலி இல்லாதார் பேடிகளே ஆவர் என்று விரித்துக் கூறியதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஏதேனும் ஓர் நூலைக் கற்றிருந்து அவைக்கு அஞ்சுவதால் அந் நூல் பயன்படாமல் போம். ஆயின் பல சபைகளில் பல நூல்களைக் கற்றவர் சொல்வன்மை யில்லாமையினாலேயே நன்கு மதிக்கப்படாமல் போவரோ?" என்னவும், ஆசிரியர் கூறுவாராயினர்.

728. பல்லவை கற்றும் பயமிலரே நல்லவை முன்கு செலச்சொல்லா தார்.

(பரி.) இ-ள். நல்லவையுள் நன்கு செலச் சொல்லாதார்=நல்லாரிருந்த வவைக்கண் நல்ல சொற்பொருள்களைத் தம்மச்சத்தான் அவர்க்கேற்கச் சொல்லமாட்டாதார்—பல்லவை கற்றும் பயம் இலரே=பலநூல்களைக் கற்றாயினும் உலகிற்குப் பயன்படுத்தலிலர். எ-று.

அறிவார் முற்சொல்லாமையிற, கல்வியினுண்மை யறிவாரில்லை யெனத் தாம். இனிப் பயமிலரென்பதற்குக் கலவிப்பயனுடையரல்லரென்றுரைப் பாருமுளர். (அ)

விளக்கம்:—நல்லவரிருந்த சபையினிடத்தே நல்ல சொற்களைத் தம்முடைய பயத்தால் அந்நல்லவர் மனங்கொள்ளும்படிச் சொல்லமுடியாதவர், பல நூல்களையும் படித்தவராயினும், உலகத்திற்குப்பயன்படுதல் இல்லாமற் போவர் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், கற்றறிந்த அறிவுடையோர் முன் சொல்லுவ

கற்கு அஞ்சுகின்ற ஒருவனது கல்வியின் நாட்பத்தைக் கேட்டறி வார் ஒருவருமில்லாதலால் அவ்விதம் கற்ற கல்வி கற்றவனுக்கும் பயன்படாது, கேழ்ப்பார்க்கும் பயன்படாது போகுமென்றும், உலகிற்கும் பயன்படுதலில்லை என்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "சொல்லும் வல்லமை இல்லாவிடினும் படித்த ஒருவனைப் படித்தவனென்றே மதித்தல் வேண்டுமன்றே?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

729. கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
நல்லா ரவையஞ்சு வார்.

(பரி.) இ-ள். கற்று அறிந்தும் நல்லார் அவை அஞ்சுவார் = தூல்களைக் கற்றுவைத்தும் அவற்றுற் பயனறிந்துவைத்தும் நல்லாரிருந்த அவையினை யஞ்சி ஆண்டுச் சொல்லாதாரை—கல்லாதவரின் கடை என்ப = உலகத்தார் கல்லாதவரினுங் கடையரென்று சொல்லுவர். எ-று.

அக்கல்வியறிவுகளாற் பயன் முழுமையும்தாது பிறரை யெய்துவிப்ப தஞ்சி செய்யாத கல்வித்துன்பமே யெய்தித்தலின், கல்லாதவரிற் கடை யென உலகம் பழிக்கு மென்பதாம். (க)

விளக்கம்:—பல நூல்களையும் படித்து வைத்தும் அவற் றுல் ஆகவேண்டிய பயனை அறிந்து வைத்தும் நூல்வல்லவராகிய கல்லவர்களிருந்த சபைக்குப் பயந்து அச்சபையினிடத்துச் சொல் லாதவரை உலகத்தார் 'படியாதவன் என்று கூறுது, இவன் படியாத வரினும் மடையன்' என்று சொல்லுவர் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, படித்த படிப்பினுலாகிய அறிவின் முதிர்ச்சியால் அடையக்கூடிய பயனைப் படித்தவராகிய தாமும் அடையாது பிறரையும் அனுபவிப்பதும் செய்யாது தான் வருந் திக் கற்ற துன்பம் ஒன்றையே அடைகின்றாதலால், இவ்விதம் 'அவை அஞ்சுபவரைப் படியாதவரினும் படியாதவர்' என்று உல கம் பழிக்குமே அன்றிப் படித்தவராகக் கருதாது என்று அறிந் தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் உலகத்தார் அவையஞ்சுபவனைப் படியாதவருள் படியாதவன் என்று கருதினு லும், அவனை ஓர் உயிரோடு வாழும் மனிதனுகவாகிலும் எண்ண மாட்டாரோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

730. உளரெனினு மில்லாரொ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.

(பரி.) இ-ள். களன் அஞ்சிக் கற்ற செலச் சொல்லாதார் = அவைக்களத்தை யஞ்சித் தாம்கற்றவற்றை அதற்கேற்கச் சொல்லமாட்டாதார்,— உளர் எனினும் இல்லாரொடு ஒப்பர் = உயிர் வாழ்கின்றாராயினும், உலகத்தாராலெண்ணப்படாமையின இறந்தாரோடொப்பர். எ-று.

ஈண்டுக் களனென்றது ஆண்டிருந்தாரை. இவையைத் துபாட்டானும் அவை யஞ்சுவார் நிறுபு கூறப்பட்டது. (இ)

விளக்கம் :—சபையிலுள்ளோர்க்குப் பயந்து தாம் கற்ற விஷயங்களை அச்சபையிலுள்ளோர் ஏற்றுக்கொள்ளும்படிச் சொல்லமாட்டாதவர் உயிரோடு கூடிவாழ்கின்றவராயினும், உலகத்தாரால் அவர் உயிரோடிருப்பவராகக் கருதப்படாமல் இறந்தவராகவே கருதப்படுவர் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், உலகத்து உடலோடு வாழும் உயிர்களுள் மக்கள் உயிர் சிறந்ததே ஆயினும், நூல்களைக் கல்லாவிடின் பயனற்றதென்றும், அவ்விதம் கற்றும் சபைக்குப் பயந்து சொல்லாதிருக்குமாயின் கற்றதாக எண்ணப்படாது பழிக்கப்படுமென்றும், பழிக்கப்படுவதோடு நில்லாமல் உலகத்தாரால் ஒரு உயிரிருப்பதாகவே கருதப்பட மாட்டாதென்றும், அவை யஞ்சுதலால் உண்டாகிய இழிவினை அறிந்தோம். இதுகாறும் அரசனுக்கு உரிய அங்கங்கள் ஆறனுள் முதலாவதாக அமைச்சனது இயல்பைக் கூறுவான் தொடங்கி அமைச்சு என்பது முதல் அவையஞ்சாமை ஈறுகப் பத்து அதிகாரங்களால் கூறி முடித்தனர். இனி அவ்வங்கங்களுள் இரண்டாவதாக 'நாடு' என்பதனைக் கூறத்தொடங்கினர் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "அரசியலும், அமைச்சியலும் உணர்ந்தோம். இனி, நாட்டின் தன்மையை அறிய விரும்புகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

அங்கவியலில் அமைச்சியல் முற்றிற்று.

74 அதிகாரம்.

நாடு.

(பரி.) இனி அவ்வரசனுலும் அமைச்சனுலுங் கொண்டுப்க்கப்படுவதாய் எனையாண் முதலிய அங்கங்கட்கு இன்றியமையாச் சிறப்பிற்முய நாடு ஓரதி காரத்தாற் கூறுகின்றுர்.

விளக்கம் :—அதாவது, மேற்கூறிய அரசனுலும் அவனது அமைச்சனுலும் கொண்டு ஆளப்படுவதாய் மற்றைய அரண் முத லாகச் சொல்லப்பட்ட அங்கங்களுக்குக் காரணமாய் உள்ள சிறப்பி னையுடைய நாட்டினை ஓர் அதிகாரத்தினுல் சொல்லத் தொடங்கினர் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "உயிர்கள் வாழ்வதற்கு இன்றி யமையாச் சிறப்பினை உடையது நாடு என்பதை அறிவதே அறிவா தலால் எவ்விதமிருக்கின் நாடு என்று கூறப்படும் என்பதை அறி வித்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

731. தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச் செல்வருஞ் சேர்வது நாடு.

(பரி.) இ-ள். தள்ளா விளையுளும்=குன்முத விளையுளைச் செய் வோரும்—தக்காரும்=அறவோரும்—தாழ்வு இலாச் செல்வரும்=கேடில் லாத செல்வ முடையோரும்—சேர்வது நாடு=ஒருங்கு வாழ்வதே நாடா வது. எ-று.

மற்றை யுயர்திணைப் பொருள்களோடுஞ் சேர்தற்கருமிலோடும் இயை யாமையின், விளையுளென்பது உழவர்மேனின்றது. குன்முமை=எல்லா வுணவுகளும் நிறைய வுளவாதல். இதனுல் வாழ்வார்க்கு வறுமையின்மை பெறப்பட்டது. அறவோர்=துறக்தோர், அந்தணர் முதலாயினர். "நற்றவஞ் செய் வார்க்கிடம் தவஞ்செய்வார்க்கு மஃதிடம்" என்முர் பிறரும். இதனுல் அழிவின்மை பெறப்பட்டது. கேடில்லாமை=வழங்கத்தலையாமை. செல் வர்=கலத்தினுங் காலினும் அரும்பொருள் தரும் வணிகர். இதனுல் அரசனுக் கும் வாழ்வார்க்கும் பொருள் வாய்த்தல் பெறப்பட்டது. (க)

விளக்கம் :—எக்காலத்தும் குறையாத விளைவுகளைச் செய் கின்றவாகிய உழவர்களும், அறமே உயிரெனக் கொண்ட துறந் தோரும், எக்காலத்தும் கேட்டை யடையாத செல்வமுடையவரும்

ஆகிய இவர்களெல்லாம் ஒருங்கு சேர்ந்து வாழ உள்ளதே நாடு என்று சொல்லப்படும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், விளையுளும் என்று கூறியதினாலேயே வேறு எதன் மீதுஞ் செல்லாது அவ்விளைவினைச் செய்யும் உழவர் மீதேயேசெல்லுகின்றதென்றும், அவரே உலகத்து உயிர்களெல்லாம் காக்கின்ற ஆணிபோல்வரென்று பின்னர் வருகின்ற உழவு என்பதனுள் கூறுவதால் அவ்வுழவரை முதலில் நாட்டிற்கு அங்கமாகக் கூறியும், பின்னர் உயிர்களுக்கு அறம் ஒன்றே இம்மை, மறுமை, வீடு என்கின்ற மூன்றையும் தருவதால் அவ்வறத்தை உயிரெனக் கொண்ட துறவிகளை இரண்டாவதாகக் கூறியும், எவ்வளவு கொடுக்கினும் குறையாத செல்வத்தைத் தேடுகின்ற செல்வரென்றமையால் கடலில் செல்லுகின்ற கப்பலாலும், நிலத்துச் செல்லுகின்ற வண்டி முதலிய வைகளாலும் செய்யக்கூடிய வர்த்தகங்களையெல்லாம் செய்து அரசனுக்கும் ஏனைய வாழ்வார்க்கும் பொருளினை உண்டாக்கும் வணிகரை மூன்றுவதாகக் கூறியும் இருப்பதாக அறிகின்றோம். அன்றியும் குன்றுத விளையுள் என்றமையால் எல்லாவித உணவுகளும் நிறைய உண்டாகும்படிச் செய்கின்றது விளைவு என்றும், அவ்விதம் செய்வதால் அந்நாட்டில் வாழ்வார்க்கு வறுமை யென்பது வாராதென்றும், துறவிகள் கூறும்வழி அறத்தைக் கடைப்பிடிப்போர் சிறந்தமக்களாவாராதலால் சிறந்தமக்களுள்ள இடமென்றும், வழங்கும் தோறும் தொலையாத செல்வமுடையோரென்றமையால், பொருளைத் தேடும் காலத்து நடு நிலையாகச் சம்பாதிக்கின்ற வணிகரென்றும் அறிந்தோம். ஆதலால், மேற்கூறிய உழவர், துறவோர், செல்வர் ஆகிய மூவரும் அவரவர்க்கு உரிய இலக்கணங்களோடு அமைந்து வாழ்பவராயின், அதுநாடு என்றும், அவ்விதம்வாழ்வதிலும், ஒன்றிருந்து மற்றவை இல்லாவிடின் பயன்படாது போகுமாதலால் மூன்றும் இருத்தல் வேண்டுமென்றும், அவ்விதம் மூன்றுமிருக்குமாயின் அந்நாட்டினை ஆளும் அரசன் யாதொரு குறையும் அடையாது அறம், பொருள், இன்பத்தைச் செய்தல் கூடுமென்றும், அவ்விதம் அரசன் வாழ்வதுடன் அவன் கீழ்ப்பட்ட குடிகளும் இம்மை, மறுமை, வீட்டினை அடைதல் கூடுமென்றும் அறிந்தோம். அன்றியும், இதனைச் சிவஞானசுவாமிகள், நாமகளிலம்பகம், 48-வது செய்யுளாகிய

நற்ற வஞ் செய் வார்க்கிடங் நவஞ் செய் வார்க்கு மஃதிட
கற்பொ ருள் செய் வார்க்கிடம் பொருள் செய் வார்க்கு மஃதிடம்
வெற்ற வின்பம் விளைவிப்ப ான் விண்ணு வந்து வீழ்த்தென
மற்றை நாடு வட்ட மாகவைகு மற்றந் நாடரோ.

என்பதினுலும் அறிதல் கூடும் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "நாட்டிற்கு முதலாக இருக்கவேண்டிய மூன்று அங்கங்களையும் அறிந்தோம். இனி ஏனையவற்றையும் அறிய விரும்புகின்றேம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

732. பெரும்பொருளாற் பெட்டாங்க தாகி யருங்கேட்டா லாற்ற வினைவது நாடு.

(பதி.) இ-ள். பெரும் பொருளால் பெட்டக்கது ஆகி = அளவிறந்த பொருளுடைமைபாற் பிறதேயத்தாராலும் விரும்பத்தக்கதாய்—அருங்கேட்டால் ஆற்ற வினைவது நாடு = கேடின்மையோடு கூடி மிக விளைவதே நாடாவது. எ-று.

அளவிறப்புப் பொருள்களது பன்மைமேலும் தனித்தனி அவற்றின் மிகுதிமேலும் நின்றது. கேடாவது:—மிக்கபெயல், பெயலின்மை, எலி, விட்டில், கிளி, அரசண்மை யென்றிவற்றுன் வருவது. "மிக்கபெய லோடு பெய லின்மையெலி விட்டில்கிளி—யக்கண ரசண்மையோ டாறு." இவற்றை வடநூலார் ஈதிகளென்ப. இவற்றுண் மூன்னையவற்றை தின்மை அரசனுத்தானும், பின்னைய தின்மை அவன் மந்திரத்தானும், வரும். இவ் வின்மைகளான் மிக விளைவதாயிற்று. (உ)

விளக்கம் :—மற்றைய தேசத்தவர்களும் விரும்பக்கூடியதாகிய அளவு சொல்லக்கூடாத பொருள்களை உடையதும், ஒரு கேடும் இல்லாமல் மிகுதியும் விளையும் விளைவுகளை உடையதுமே நாடாகுமென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது பொருள்களுள், இன்ன பொருள் விளையும், இன்ன பொருள் விளையாது என்று கூறவொண்ணுமல் எல்லாப்பொருள்களும் விளையக்கூடியதாயும், அவ்விதம் விளையாது கெட்டுப் போவதற்கு மழை அதிகமாகப் பெய்தலும், பெய்யாது போதலும் ஆகிய இரண்டு தீர்க்குணங்களுமில்லாததாயும், பயிர்களை அழிக்கும் எலி, விட்டிற்

பூச்சி, கிளி, அரசனது பார்வையில்லாமை ஆகிய இவற்றால் வரும் கேடுகளில்லாததாயும் இருத்தல் வேண்டுமென்றும், இவ்விதமிருப்பதற்கு அரசனுடைய அறச்செய்கையும், மறச்செய்கையும் ஆகிய இரண்டும் வேண்டுமென்றும், அதாவது அரசனது செயல் அறமாயிருக்குமாயின் அந்காட்டினுள் அதிவருஷம், அனுவருஷம் என்கின்ற அதிகமாகப் பெய்தல், பெய்யாது போதல் என்கின்ற குற்றங்கள் உண்டாகா என்றும், அரசனது செயல் வேட்டையாடல் முதலிய மறச்செயலாயின் தன் குடிகளால் விரோவிக்கப்பட்ட விரோவுகளோ அழிக்கின்ற எலி முதலிய பிராணிகள் அழியுமென்றும் அறிந்தோம். இவ்விதம் அரசனது தகுதியால் நாடு செழித்து மிக விரோயுமென்பதாயிற்று என்றனர். அது கேட்ட மாணாக்கர், "பொருள் மிகுதியும் விரோவது நன்மையேயாகும். ஆயின் விரோயும் பொருள் கொண்டு காட்டவர் தம் நாடொன்றினைக் காத்துக்கொள்வாராயின், அது சிறந்த நாடாகும் போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

733. பொறையொருங்கு மேல்வருங்காற் றாங்கி யிறை யிறையொருங்கு தேர்வது நாடு. [வற்

(பரி.) இ-ள். பொறை ஒருங்கு மேல்வருங்கால் தாங்கி = பிறநாடுகள் பொறுத்த பாரமெல்லாம் ஒருங்கே தன்கண் வருங்கால் அவற்றைத் தாங்கி— இறைவற்கு இறை ஒருங்கு தேர்வது நாடு = அதன்மேற் றன்னரசனுக்கு இறைப் பொருண் முழுதையும் உடம்பட்டுக் கொடுப்பதே நாடாவது. எ-று.

பாரங்கள் = மக்கட்டொகுதியும் ஆன் எருமை முதலிய விலங்குத் தொகுதியும். தாங்குதல் = அவை தத்தந்தேயத்துப் பிரை வந்திறுத்ததாக, அரசு கோல்கோடியதாக, உணவின்மையானுகத் தன்கண் வந்தால் அவ்வத்தேயங்களோப்போல இனிதிருப்பச் செய்தல். அச்செயலால் இறையைக் குறைபடுத்தாது தானேகொடுப்பதென்பார், 'இறையொருங்கு தேர்வது' என்றார். (கூ)

விளக்கம் :—பிற நாடுகள் தாங்கிய பாரமெல்லாம் தன்னிடத்தே ஒன்றாய் சேர்ந்து வருமாயினும், அப்பாரங்களைத் தாங்குவதுடன் தன்னரசனுக்குச் செலுத்தவேண்டிய இறைப்பொருளெனும் பகுதியை முழுவதும் கட்டும் நிலைமையுடையதே

நாடென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது பிற நாடு களிலுள்ள மக்கள் கூட்டமும், பசுக்கள், எருமைகள் என்கின்ற விலங்கின் கூட்டங்களும், தம் தம் தேசங்களில் பகைவரால் தன் புறுத்தப்பட்டோ, அன்றி அரசன் செங்கோலனை இல்லாமல் கொடுங்கோலனை விருக்குங் காரணம் பற்றியோ, அன்றி விளையு ளில்லாமையால் உணவு கிடைக்காமையாலோ தம் தம் நாட்டை விட்டு ஒரு நாட்டிற்குச் செல்வார்களானால், அவ்விதம் வந்த மக்க ளுக்கு வேண்டுவன உதவி அவர் நாட்டில் இருந்ததுபோல் இனி மைப்பட இருக்கச் செய்தும், விலங்குகளுக்கு வேண்டுவன செய்து அவைகளைக் காத்தும் இருப்பதுடன் இவ்விதம் அயல் நாட்டுப் பாரங்களை 'நாங்கள் தாங்குகின்றோம்! ஆதலால் அரசனுக்குச் செலுத்தவேண்டிய இறைப் பொருள் முழுவதையும் கொடுத்தல் முடியாது' என்று கூறுது சிறிதும் குறைவில்லாது தானே வலிந்து கொடுக்கக் கூடியதுமே நாடாகும் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "மேல் திருக்குறளில் பிறதேசத்தவரும் விரும்பக்கூடிய செல்வமுடையது நாடென்றபடி இத்திருக் குறளில் அப்பிறதேசத்தவரைத் தாங்குவதும், அது மாத்திரம் அல் லாது தன் மன்னனுக்குக் கொடுக்கவேண்டுவனவற்றைக் குறை யாது கொடுப்பதும், நாட்டின் வளமென்று அறிந்தோம். இனி இன்னும் அந் நாட்டிற்கு உரிய சிறப்பினை எல்லாம் கூறல் வேண் டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

734. உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ் சேரா தியல்வது நாடு.

(பரி.) இ-ள். உறு பசியும்=மிக்க பசியும்—ஓவாப் பிணியும்=நீங் காத நோயும்—செறுபகையும் சேராது=புறத்து நின்றுவந் தழிவுசெய்யும் பகையுமின்றி—இயல்வது நாடு=இனிது நடப்பதே நாடாவது. எ-று.

உறுபசி, உழவருடைமையானும் ஆற்றலோதலானும் சேராதாயிற்று. ஓவாப்பிணி, தீக் காற்று மிக்க குளிர் வெப்பங்களும் நுகரப்படு மவற்றது தீமையுமின்மையிற் சேராதாயிற்று. செறுபகை, அரசனுற்றலும் நீலப்படை யும் அடலியும் அரணுமுடைமையிற் சேராதாயிற்று. (ச)

விளக்கம்:—மிகுந்த பசியும், நீங்காத நோயும், பிறர் தேயத்திருந்து வந்து அழிவு செய்கின்ற பகையுமில்லாமல் இனிமையாக இருப்பதே நாடென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, முதற்றிருக்குறளில் 'தள்ளாவிளையுளும்' என்று கூறியபடி உழுது பயிர்செய்கின்ற உழவர் பலரிருப்பதினாலும், பயிர்செய்த வண்ணமே யாதொருகேடில்லாது விளைவதினாலும், மிகுந்த பசி சேராதென்றும், தீயும், காற்றும், மிகுந்த குளிரும், அதிகரித்த வெப்பமும் ஆகிய இவைகளில்லாமையும் உண்பதற்கு வேண்டுவனவாகிய பொருள்கள் தீமையுடையனவாய் இல்லாமையும் இருக்குமாயின் பிணி நாடாதென்றும், நாட்டை ஆளும் அரசன் வல்லமையுடையவனும், நிலைத்த சைன்னிய முடையவனும், மலை, காடுகள் முதலாகிய அரண்களை உடையவனும் இருப்பானாயின் பகைவர் சேராதென்றும், இவ்விதம் இருக்கும் நாடு குடிகளுக்கு இனிமைப்பட இருக்குமென்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "நாட்டிற்கு உண்டாகும் தீமைகள் இவை என்றும், அத்தீமைகளில்லாமையால் வரும் நன்மைகள் இவை என்றும் அறிந்தோம். இனி நாட்டிலுள்ளார் தகுதியையும் கூறல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

735. பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக் கொல்குறும்பு மில்லது நாடு. [குங்

(பரி.) இ-ள். பல் குழுவும்=சங்கேதவயத்தான் மாறுபட்டுக் கூடும் பல கூட்டமும்—பாழ் செய்யும் உட்பகையும்=உடனுறையாகின்றே பாழாகச் செய்யுமுட்பகையும்—வேந்து அலைக்கும் கொல் குறும்பும் இல்லது நாடு=அளவுவந்தால் வேந்தனையலைக்குங் கொல்லினைக் குறும்பு மில்லாததே நாடாவது. எ-று.

சங்கேதம்=சாதிபற்றியும் கடவுள்பற்றியும் பலர்க்குளதா மொருமை உட்பகை=ஆறலைப்பார், கள்வர், குறும்பு கூறுவார் முதலிய மக்களும், பன்றி, புலி, காடி முதலிய விலங்குகளும். உட்பகை, குறும்பென்பன ஆகுபெயர். இம்மூன்றும் அரசனலும் வாழ்வாராலுங் கடியப்பட்டு நடப்பதே நாடென்பதாம். (இ)

விளக்கம்:—சாதிபற்றியோ, தெய்வம்தொழுகையைக்குறித்தோ ஒருவருக்கொருவர் தம் மனப்பாங்கின்படி மாறுபட்டுக் கூடு

கின்ற பல கூட்டங்களும், உடன் வசித்தே அரசனைப் பாழ்படுத்தும் உட்பகையும், சமயம் வாய்ந்த காலத்து அரசனைத் துன்பப்படுத்திக் கொல்லும் தொழிலையுடைய குறும்பர் என்னும் தலைவர்களும் இல்லாததே நாடென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, ஒவ்வோர் கூட்டத்தினர் ஒவ்வோர் பிரிவராகப் பிரிந்து கூட்டம் கூட்டமாக ஒருவருக்கொருவர் சண்டை யிடுவாராயின் அவ்வித நாடு அமைதியோடு இராதென்றும், "புறப்பகைகோடியின் மிக் குறினும் அஞ்சார், அகப்பகை ஒன்று அஞ்சிக் காப்பர்" என்ற படி உடனிருந்தே எல்லாவுளவுகளையும் அறிந்து பாழ்படுத்துகின்ற உட்பகையிருக்குமாயின் அந்நாடு நன்மையடையாதென்றும், அவ்வுட்பகையாவார் வழிப்பறி கள்வரும், வீடுபுகுந்து திருடுபவ ரும், கோள் சொல்லுவாரும் ஆகிய மக்கட் கூட்டங்களும், பன்றி, புலி, கரடி ஆகிய மிருகங்களும் ஆகும் என்றும், ஆகையால் இவ் வித உட்பகை இல்லாமற் செய்தும், சிறு சிறு கூட்டங்களுக்குத் தலைவராக இருந்து சமயம் வாய்த்தபோதெல்லாம் அரசனைத் தின் பப்படுத்துகின்ற குறும்பர்களாகிய பகைவர்களைத் தொலைத்தும் நாட்டை ஆளும் அரசனும், அவன்கீழ் வாழும குடிகளும் வாழ்வார் களாயின் அவ்விதம் வாழும் நாடே நாடென்றும் அறிந்தோம் என் றனர். அதுகேட்ட மாணாக்கர், "நாட்டின் தன்மை யாவுமறிந் தோம். இனி வேற்றரசராகிய பகைவரால் ஓர் நாடு கேட்டினை அடைதல் கூடுமன்றே? அவ்விதக் கேட்டினை அடைந்த காலத்தும் எவ்வித தன்மையுடைய நாடு காடாகும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

736. கேடறியாக் கெட்டவிடத்தும் விளங்குன்றே நாடென்ப நாட்டிற் றலை.

(பரி.) இ-ள். கேடு அறியா=பகைவராற் கெடுதலறியாததாய்— கெட்டவிடத்தும் வளம் குன்றாது=அரிதிற் கெட்டதாயினும் அப்பொழு தும் தன் வளங்குன்றாத நாட்டினை—நாட்டின் தலை என்ப=எல்லா நாட்டி னும் தலையென்று சொல்லுவர் நூலோர். எ-று.

அறியாத, குன்றாதவென்னும் பெயரெச்சங்களி னிறுதிநிலைகள் விகாரத் தாற றொக்கன. கேடறியாமை அரசனுற்றலானும் கடவுட்பூசை யறங்க

னென்றிவற்றது செயலானும் வரும், வளம்=ஆகாங்களிற்* படுவனவும் வய லினுந் தண்டலையினும்† விளைவனவுமாம். குன்றுமை=அவை செய்யவேண் டாமல் இயல்பாகவே யுளவாயும் முன்னீட்டப்பட்டுங் குறைவறுதல். இவை யாறுபாட்டானும் நாட்ட திலக்கணங் கூறப்பட்டது. (சு)

விளக்கம்:—பகைவர்களால் கெடுதல் என்பதே அறியாத தாயும், ஓர்கால் எப்போதேனும் பகைவரால் கெடுக்கப்பட்டதாயி னும் எக்காலத்தும் வளம் குன்றுததாயும் உள்ள நாட்டினை எல்லா நாடுகளுக்கும் தலைமையுடைய நாடென்று நூல்வல்லவர் கூறுவர் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, அரசன் அறிவு, ஆண்மை, பெருமை என்கின்ற மூவித வல்லமையும், கட வுட் பூசை, தருமம் செய்தல் என்கின்ற நற்செயலும் உள்ளவனை இருப்பானையின், அவன் ஆளும் நாடு கேடு அடையாதென்றும், அவ்விதம் ஓர் கால் பகைவரால் கெடுக்கப்படுமாயினும், களிகளில் உண்டாகிய பொருள்களாலும், வயல்களிலும், தோட்டங்களிலும் விளைகின்ற பொருள்களாலும், அப்பகைவரால் கெடுத்த கேட்டிற்குக் குறைவுபடாது, நிரப்பக்கூடியதாகிய வளமுடையதாகவும் இருத் தல் வேண்டுமென்றும், அவ்விதம் வளமுடைய நாட்டினை நூல் வல்லவர் ஈட்டப்படாமலே இயல்பாகவே வளத்தைப் பெறும் நாடென்றும், நாடுகளில் தலைமையுடையது என்றும் கூறுவ தென்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ் விதம் இயல்பாகவே நாட்டிற்கு வளம் உண்டாகச் செய்யும் கருவி கள் எவை?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

737. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும் வல்லரணு நாட்டிற் குறுப்பு.

(பரி.) இ-ன். இருபுனலும்=கீழ்நீர் மேனீரெனப்பட்ட தன்கணீ ரும்—வாய்ந்தமலையும்=வாய்ப்புடைத்தாய மலையும்—வருபுனலும்=அதனி னின்றும் வருவதாய நீரும்—வல்லரணும்=அழியாத நகரியும்—நாட்டிற்கு உறுப்பு=நாட்டிற்கவயவமாம். எ-று.

---

* ஆகாங்கள்=சுரங்கங்கள்.

† தண்டலை=குளிர்ந்த சோலை.

எண்டுப் புனலென்றது தூரவு, கேணிகளும், வரிகளும், ஆறுகளுமாகிய ஆதாரங்களே, அவயவமாதற்குரியன அவையேயாகலின். அவற்றுன் வானம் வறப்பினும் வளனுடைமை பெறப்பட்டது. இடையதன்றி யொருபுடைய தாகலும் தன் வளந் தருதலும் மாரிக்கணுண்டநீர் கோடைக்க ணுமிழ்தலு முடைமைபற்றி, 'வாய்ந்தமலே' என்றார். அரண் ஆகுபெயர். இதனுன் அத னவயவங் கூறப்பட்டது. (எ)

விளக்கம் :—கீழ் நீர், மேல் நீர் எனக்கூடிய இருவித நீர் வளப்பத்தையும், வாய்ப்புடைய மலையையும், அம்மலையிடத்தி னின்றும் வருவதாகிய நீரும், அழியாத நகரியும் நாட்டிற்கு அவ யவம் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தூரவு, கேணிகள், வரிகள், ஆறுகள் என்று சொல்லப்பட்ட ஆதாரங்களே யுடையதும், தனக்கு உண்டாகிய வளத்தைக் கொடுப்பதுடன் மாரிக்காலத்து உண்ட நீரைக் கோடைக்கால முழுவதும் கொடுப்ப தாகிய மலைவளமுடையதும், பகைவர் அபகரியாதபடி நாட்டிற்கு உரியதாகிய அரணும், அழிவில்லாத நகரமுமுடையதுமாக இருக்க வேண்டுமென்றும், அவ்வாறு அவயவங்களே யெல்லாம் பெற்றிருக் கின் ஓர் கால் வானம் மழைபெய்யாது விடினும் நாடு வளமடை தல் கூடுமென்றும், அதுவே சிறந்த நாடென்றும் அறிகின்றேம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "நாட்டிற்கு உறப்பீனே அறிந் தோம். இனி அந்நாட்டிற்குப் பிறதேயத்தாலும் விரும்பும் அழ கினைக் கூறல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

738. பிணியின்மை செல்வம் விளைவின்ப மேம மணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

(பரி.) இ-ள். பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம் இவ் வைந்து=நோயின்மையுஞ் செல்வம் விளைதல் இன்பம் காவலென்றிவை யுடைமையுமாகிய இவ்வைந்தினையும்—நாட்டிற்கு அணி என்ப=நாட்டிற் கழகென்று சொல்லுவர் நூலோர். எ-று.

பிணியின்மை நிலநலத்தான் வருவது. செல்வம்மேற் சொல்லியன. இன்பம்=விழவும் வேள்வியுஞ் சான்றோரு மூடைமையானும், துகாவன வுடைமையானும், நிலகீர்களது நன்மையானும், வாழ்வார்க்கு உண்ணிகழ் வது. காவலெனவே அரசன் காவலும் வாழ்வோர் காவலும் அரண்காவலு

மடங்கின. பிறதேயங்களிலுள்ளாரும் விழைந்து பின் அவையுள்ளாமைக் கேதுவாய அதனழகு இதனுற் கூறப்பட்டது. (அ)

விளக்கம் :—நால் வல்லவர் நாட்டிற்கு அழகென்று கூறுவது நோயில்லாமையும், செல்வங்களையுடையதும், விளைவினையுடையதும், இன்பத்தை விளைப்பதும், காவலையுடையதும் ஆகிய ஐந்தும் ஆகும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, நாட்டின் நிலம் குற்றமற்றதாயும், நன்மையுடையதாயும் இருக்குமாயின் நோய் வராதென்றும், வாணிபம் முதலியன செய்து செல்வத்தை அதிகரித்தலால் வறுமை நீங்கிச் செல்வத்தையுடைய தாகுமென்றும், உழவர் கெடாது தம் தொழிலைச் செய்வாராயின் நல்ல விளைவு வருமென்றும், நாட்டில உள்ள ஆலயங்களுக்குத் திருவிழாச் செய்தலாலும், வேள்வி முதலிய செய்தலாலும், சான்றோர் இருத்தலாலும், உண்ணக்கூடிய பொருள்கள் கிடைப்பதாலும், நிலத்தின் நன்மையும் நீர் நன்மையும அமைந்திருப்பதாலும் வாழ்வார்க்கு இன்பம் உண்டாகுமென்றும, அரசன் காவலும் நாட்டில் வாழ்வோர் செய்து கொள்ளும் காவலும், அரண் காவலும் இருக்குமாயின் காவலாகுமென்றும், மற்ற தேசத்தவர்கள் இங்கு வந்து இந்நாட்டினை விரும்பிய பிறகு பின்னர் அவர் நாட்டினை விரும்பாவண்ணம் செய்யுமாயின் அழகுடைய தாகுமென்றும் கூறுவதாக அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், ''இவ்வித மெல்லாம் அழகுபெற நாடிருப்பது தம் தம் நிலைக்கேற்ப அவரவர் தேடி வருந்துவதால் உண்டாகுமே அன்றி இயல்பாகவே உண்டாகுமோ ?'' என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

739. நாலென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

(பரி.) இ-ள். நாடா வளத்தன நாடு என்ப = தங்கண்வாழ்வார்தேடி வருந்தாமல் அவர்பாற்றானே யடையுஞ் செல்வத்தை யுடையவற்றை நூலோர் நாடென்று சொல்லுவர் ;—நாட வளம் தரும் நாடு நாடு அல்ல = ஆதலாற் றேடிவருந்தச் செல்வ மடைவிக்கும் நாடுகள் நாடாகா. எ-று.

நாடுதல் இருவழியும் வருத்தத்தின்மேனின்றது. ''பொருள் செய்

வார்க்குமஃதிடம்" * என்றார் பிறரும். நூலோர் விதிபற்றி எதிர்மறைமுகத் தாற் குற்றங் கூறியவாறு. இவ்வாறன்றி 'என்ப' என்பதனைப் பின்னுங் கூட்டி இருபொருள்பட வுரைப்பின் அனுவாதமாம். (க)

விளக்கம் :—தன்னிடத்து வாழும் மக்கள் தேடி வருந்தா மல் அம்மக்களிடத்துத் தானே சென்று அடையும் செல்வத்தை உடையதை நூல் வல்லவர் நாடென்று கூறுவர் என்றும், அதுவல் லாமல் தேடி வருந்துதலால் செல்வத்தை உண்டுபண்ணும் நாடுகள் காடுகள் ஆகாவென்றும இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால் இயல்பாகவே நிலவளத்தாலும், நீர்வளத்தாலும், செல்வத்தைத் தருவதே நாடென்றும், வருந்திச் செல்வத்தை அடையச் செய்யும் காடு நாடல்ல வென்றும் கூறினர். அது கேட்ட மாணாக்கர் "நாடு, நாட்டின் உறுப்பு, நாட்டின் அழகு, வாடாத செல்வம் இவையெல் லாமிருக்கினும் அரசன் தகுதியற்றவனுக இருப்பானையின் அக் காலத்து எதுவாகும் ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

740. ஆங்கமை வெய்தியக் கண்ணும் படுமின்றே வேந்தமை வில்லாத நாடு.

(பரி.) இ-ள். வேந்து அமைவு இல்லாத நாடு=வேந்தனெடு மேவுத வில்லாத நாடு—ஆங்கு அமைவு எய்தியக் கண்ணும் பயம் இன்றே=மேற் சொல்லிய குணங்களெல்லாவற்றினும் நிறைந்திருந்தாயினும் அவற்றுற் பயனுடைத்தன்று. எ-று.

வேந்தமைவெனவே, குடிகள் அவன் மாட்டன்புடையாதலும் அவன் முன் இவர்மாட்டருஞ்டையனுதலும் அடங்கின. அவையில்வழி வாழ்வோ ரின்மையின், அவற்றுற் பயனின்றாயிற்று. இவை யிரண்டுபாட்டானும அதன் குற்றங் கூறப்பட்டது. (ம)

விளக்கம் :—மேற் சொல்லிய குணங்கள் எல்லாவற்றினும் நிறைந்திருக்கும் நாடாயினும், வேந்தனெடு பொருந்தாத நாடா யின் அகுணங்களால் பயன அடையாது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, குடிகள் அரசன்மாட்டு அன்புடைய வாயிருத்தலும், அவ்வரசன் தானும் குடிகளிடத்து அன்புடைய

* 731-வது குறளுரையைப் பார்க்க.

வஞையிருத்தலும் ஆக நாடானது இருக்குமாயின் மேல் நாட்டிற்குக் கூறிய குணங்களெல்லாம் குணங்களாக நின்று பயன் படுமென்றும், அவ்வாறு அரசனும், குடிகளும் பொருந்தாவிடின் அக்குணங்களால் அவ்வரசனும், நாடும் யாதொரு பயனும் அடைவதற்கு இல்லாமற்போம் என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "முன்னர் நாட்டிற்கு உறுப்புக்களைக் கூறிய காலத்து வல்லரண் வேண்டுமென்று கூறினீர். அவ்வரண் எத்தகைத்து என்பதைப்பற்றி அறிய விரும்புகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

75. அதிகாரம்.

அரண்.

(பரி.) இனி அந்நாட்டிற்குறுப்பாயடங்குமாயினும் பகைவராற் றொலைவு வந்துழி அது தனக்கும் அரசன்றனக்கும் மெய்ஞ்ஞாற் சிறப்புப்பற்றிப் பிறிதோரங்கமாக வோதப்பட்ட அரண் இவ்வதிகாரத்தாற் கூறுகின்றார்.

விளக்கம்:—அதாவது, இவ்வரண் என்பது ஏனைய உறுப்புக்கள்போல் நாட்டிற்கு ஓர் உறுப்பாய் நாடு என்னும் அதிகாரத்துள் அடங்கி வருவதாயினும், பகைவரால் எதேனும் துன்பம் வந்து அந்நாட்டிற்குக் கெடுதிவரும் காலத்து அந்நாட்டையும், அந்நாட்டையாளும் அரசனையும் காக்கின்ற காவலாக இருப்பதால், இதனை மற்றொரு அங்கமாக இறைமாட்சியுள் வைத்தபடி இங்கு கூறுகின்றனர் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஏனைய உறுப்புக்களை எல்லாம் தனித்துக் கூறாது இத்தனையே தனித்துக் கூறுவதால் இதன் சிறப்பு மிக்கதாக இருக்கும்போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

741. ஆற்று பவர்க்கு மரண்பொரு ளஞ்சித்தற் போற்று பவர்க்கும் பொருள்.

(பரி.) இ-ள். ஆற்றுபவர்க்கும் அரண் பொருள் = மூவகையாற்றலுமுடையராய்ப் பிறர்மேற் செல்வார்க்கும் அரண் சிறந்தது;—அஞ்சித் தற்போற்றுபவர்க்கும் (அரண்) பொருள் = அவையின்றித் தம்மேல் வருவார்க்கஞ்சித் தன்னையே யடைவார்க்கும் அரண் சிறந்தது; எ-று.

பிறர்மேற் செல்லுங்கால் உரிமை பொருண் முதலியவற்றைப் பிறனொருவன் வௌவாமல் வைத்துச் செல்லவேண்டுமாகலானும், அப்பெருமை தொலைந்திறுதிவந்துழிக் கடனடுவ னுடைகலத்தார்போன்று ஏமங்காணாதிறுவராகலானும், ஆற்றுபவர்க்கும் போற்றுபவர்க்கும் அரண் பொருளாயிற்று. ஆற்றலுடையராயினும் அரணில்வழி அழியும் பாலராகலின், அவரை முற்கூறினார். இதனால் அரணினது சிறப்புக் கூறப்பட்டது. (க)

விளக்கம் :—அறிவு, ஆண்மை, பெருமை என்கின்ற மூவகை ஆற்றலும் உடையராய்ப் பகைவர்மீது செல்வார்க்கு அரண் என்பது சிறந்ததாகுமென்றும், அவையில்லாமல் தம்மீது வெல்வதற்கு வருகின்ற பகைவர்களுக்குப் பயந்து தன்னையே வந்து அடைகின்றவர்களுக்கும் அரண் ஆனது சிறப்புடையதாகும் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, அரசனானவன் பிறபகைவர்கள் மீது யுத்தத்திற்குச் செல்லும்போது தன்னுடைய உரிமை, பொருள் முதலிய எல்லாவற்றையும் வேறு ஒருவன் அபகரியா வண்ணம் வைத்துச் செல்லவேண்டுமாதலால் அக்காலத்து அரண் வேண்டுமென்றும், அதுவன்றியும் பகைவர் தன்மீது வந்த காலத்துத் தனக்குள்ள பெருமையெல்லாம் ஒழிந்து தோற்றுப்போவானானால், நடுக்கடலில் செல்லுபவர் தம்மை ஏற்றிச் செல்லும் கப்பல் உடையுமாயின் எவ்வாறு வருந்துவரோ அது போல் வருந்துவதற்கு ஏதுவாகு மாதலால், அவ்விதம் வருந்தா வண்ணம் செய்வதற்கு அரண் வேண்டுமென்றும், ஆதலால் வலியுடையார்க்கும், வலி இல்லாதார்க்கும் இருவர்க்கும் அரண் என்பது வேண்டியே உள்ளது என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்டமாணாக்கர், "இத்திருக்குறளால் அரணது சிறப்பினை அறிந்தோம். இனி அரண் என்பது யாதென அறிய விரும்புகின்றோம்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

742. மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண்.

(பரி.) இ-ள். மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்காடும் உடையது அரண் = மணிபோலு நிறத்தினையுடைய நீரும் வெள்ளிடை நிலமும் மலையுங் குளிர்ந்த நிழலையுடைய காடுமுடையதே அரணாவது. எ-று.

எஞ்ஞான்றும் வற்றுத நீரென்பார், 'மணிநீர்' என்றும், நீருநிழலுமில்லா மருநிலமென்பார் 'மண்' என்றும், செறிந்த காடென்பார் 'அணிநிழற்காடு' என்றுங் கூறினர். மதிற்புறத்து மருநிலம் பகைவர் அரண்பற்றுமைப் பொருட்டு. நீராண், நிலவாண், மலையாண், காட்டாண் என இயற்கையுஞ் செயற்கையுமாய இந்நான்காணுஞ் சூழப்படுவது அரணென்பதாம். (உ)

விளக்கம் :—மணிநீரும், வெள்ளிடை நிலமும், உயர்ந்த மலையும், குளிர்ந்த நிழலுடைய காடும் உடையதே அரண் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால் மணிபோலும் நிறத்தையுடைய வற்றுத ஊற்று நீரையுடையதும், நீரும் நிழலுமில்லாத வற்றல் நிலம் உடையதும், உயர்ந்த மலையினையுடையதும், பகைவர் தாண்டிவருவதற்குக் கூடாத அடர்ந்தகாடு உடையதும் ஆகிய இலக்கணம் பொருந்தியதே அரண் என்று அறிந்தோம். அது என்னையோவெனில்? வற்றுத நீர் இல்லாவிடின் மதிற்புறத்தை சூழ்ந்துகொள்ள அகழியைத் தாண்டிப் பகைவர் உள்நுழைந்து விடுவார்களாதலால் நீர் அரண் வேண்டுமென்றும், அகழிக்கும் மலைக்கும் நடுவே நிழலும், நீருமில்லாத வெறு நில மிருக்குமாயின் அந்நிலத்தைத் தாண்டிவருவது பகைவர்க்குக் கடினமாயிருக்குமாகையினால் அவ்வித வெறுநிலம் வேண்டுமென்றும், அவ்வித வெறு நிலத்திற்கும் அடர்ந்த காட்டிற்கும் நடுவே மலையிருக்குமாயின் பகைவர் அதனைக் கடந்து வருதல் கூடாதாதலால் மலை வேண்டுமென்றும், அம்மூன்றும் கடந்து பிறகு நெருங்கிய காடிருக்குமாயின் பகைவர் முதலிலேயே உள்நுழைந்து வருவதற்குக் கடுமையாக இருக்குமாதலால் செறிந்த காடு வேண்டுமென்றும், நீர் அரண், நிலவரண், மலை அரண், காட்டரண் ஆகிய நான்கு அரண்களும் ஒன்றுகூடி யிருப்பதே அரண் என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் நான்கு அரண்களையும் அறிந்தோம். இனி நாட்டினைச் சுற்றி மதிலும் இருக்கக் காண்கின்றோம். அதனையும் ஓர் அரண் என்று கூறல்வேண்டுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

743. உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கி னமைவர ணென்றுரைக்கு நூல்.

(பரி.) இ-ள். உயர்வு அகலம் திண்மை அருமை இந்நான்கின் அமைவு = உயர்ச்சியும் அகலமுந் திண்மையும் அருமையுமென்று சொல்லப்பட்ட இந்

நான்கின் மிகுதியையுடைய மதிலை—அரண் என்று உரைக்கும் நூல்=அரணென்று சொல்லுவர் நூலோர். எ-று.

அமைவு, நூலென்பன ஆகுபெயர். உயர்வு=எணியெய்தாதது. அகலம்=புறத்தோர்க்கு அகழலாகா அடியகலமும், அகத்தோர்க்கு நின்று வினைசெய்யலாந் தலையகலமும். திண்மை=கல்லிட்டிகைகளாற்* செய்தலீற் குத்தப்படாமை. அருமை=பொறிகளான் அணுகற்கருமை. பொறிகளாவன:—"வலீவிற் பொறியு மயிற்செறி நிலையுங்—கருவிரலாகமுங் கல்லுமிழ் கவணும்—பரிவுறு வெங்கெயும் பாகடு குழிசியுங்—காய்பொன் னுலையுங் கல்லிடு கூடையுங்—தூண்டிலுந் துடக்கு மாண்டலை யடுப்புங்—கலையுங் கழுவும் புதையும் புழையு—மையவித் தூலமுங் கைபெய ரூசியுஞ்—சென்றெறி சிரலும் பன்றியும் பணையு—மெழுவுஞ் சிப்பு முழுவிறற் கணையமுங்—கோலுங் குந்தமும் வேலுஞ் சூலமும் "† என்றிவை முதலாயின. (சு)

விளக்கம்:—உயர்வும், அகலமும், வலிமையும், அருமையும் என்று சொல்லப்பட்ட இந்த நான்கு தகுதியையும் மிகுதியாக உடைய மதிலொன்று இருக்குமாயின் அவ்விந மதிலை நூல்வல்லவர் அரண் என்று சொல்லுவரென்று இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், மேற்கூறிய நான்கு அரண்களோடு மதிலென்னும் ஓர் அரணும் வேண்டும் என்றும், பகைவரால் ஏணி முதலியவை கொண்டு மேல் ஏறக்கூடாததாகிய உயர்ச்சியும், பகைவர்களால் வெளியே இருந்து தோண்டிவிடாதபடி மதிலின் அடிப்புறத்தில் அகலமும், உள்ளிருந்து யுத்தம் செய்பவர்க்கு மேலேறி யுத்தத்தைச் செய்வதற்குக்கூடிய மேற்புறத்தில் அகல்மும், ஆயுதம்கொண்டு குத்தித் துளையாக்கக்கூடாதபடி கல் முதலியவைகளால் கட்டப்பட்டதாயும், பகைவர் அம்மதிலிடத்து அணுகாதவண்ணம் தானேவலீனாந்து எய்யும் இயந்திரவிற்பொறியும், கருமையாகிய வீரலீயுடையதாய்க் குரங்கு போலிருந்து பகைவர் சேர்ந்தவுடன் கடிக்கின்ற பொறியும், தானே கல்லீ வீசுகின்ற கவண் என்னும பொறியும், அணுகினவரைக் கொல்லுவதற்குக் காய்ந்து கொண்டே இருந்து இறைக்கின்ற நெய்யையுடைய பொறியும, செம்பினை உருக்கித் தன்னிடதே

* இட்டிகை=சுண்ணாம்பு.

† சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை, 207-216.

வைத்து அணுகினவர்மீது இறைக்கும் பொறியும், பல உலோகங்களைக் காய்ச்சி எறிவதற்கு உரியதாகிய பலவித பொறிகளும், வீசுவதற்கு உரியதாகிய பொறிகளுக்குக் கல்லினை நிரைத்து வைக்கும் கூடைகளாகிய பொறிகளும், தூண்டில்போன்று வடிவமுடையதாகச் செய்யப்பட்டு அகழியைத் தாண்டி மதிலினைப்பற்றும் பகை வரைக் கோத்துவலிக்கும் கருவியாகிய பொறியும், கழிகோல்போலக் கழுத்தில் பூட்டி முறிக்கும் சங்கிலிகளையுடைய பொறியும், பறவை வடிவாகப் பண்ணப்பட்டுப் பறக்கவிடுதலால் பகைவரது உச்சியைக் கொத்தி மூளையைக் கடிக்கும் பல பொறிகளும், கிடங்கில் ஏறிய வுடன் மல்லாத்தித்தள்ளும் இருப்பு உலக்கையுடைய பொறியும், கடுகுபோன்ற பொறியும், பாணங்களை நிறையவுடைய பொறியும், பகைவர் வருங்காலத்து நுழைந்து கொள்ளுவதற்கு உரிய அறைகளும், பகைவரைப்பற்றி அவர் உடலைத் தூக்கிப்போகும்படிச் செய்கின்ற நிறைகோல்போன்ற பொறியும், மதிலினுடைய தலையைப் பற்றுவாரை அவர்கள் கையைப் பொத்துகின்ற ஊசிகளையுடைய பொறிகளும், பகைவர்மேல் சென்று கண்ணைக் கொத்துகின்ற சிச்சிலிப் பறவை போன்ற பொறியும், மதிலின்தலையிலேறின பகைவரது உடலைக் கொம்பினால் கிழிக்க இரும்பால் செய்துவைத்த பன்றியாகிய பொறியும், வருகின்ற பகைவரை அடித்தற்காக மூங்கில் வடிவாக அமைத்து வைத்த பொறியும், மதிற்புறத்தின் கதவுக்கு வலிமைசெய்யும்படி உள்வாயிற்படியில் நிலத்திலே விழுவிடுகின்ற மரங்களும், கணையாயிரம் விட்டேறும், குத்தமும், வேலும் நூறுபோர்களைக் கொல்லுகின்ற சதக்கினி, தள்ளிவெட்டி, யானைப் பொறி, பாம்புப்பொறி, புலிப்பொறி, சகடகப்பொறி, ஆட்டுப் பொறி, சிங்கப்பொறி என்கின்ற பொறிகளும் ஆகிய இவ்வித பொறிகளையெல்லாம் உடைய மதிலை அரண் என்றும் அறிந்தோம். இதை மேல் பரிமேலழகர் தம் உரையுள் எடுத்துக்காட்டிய சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை, அகவற்பாவாலும் அறிதல் கூடும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வித மதிலொன்று அமைந்த காலத்து அரசன் மதிற்புறத்து வேறு ஒரு காவலையும் அமைக்கவேண்டுவதில்லை போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

744. சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை யூக்க மழிப்ப தரண்.

(பரி.) இ-ள். சிறுகாப்பிற் பேர் இடத்தது ஆகி—காக்கவேண்டுமிடஞ் சிறிதாய் அகன்றவிடத்தை யுடைத்தாய்—உறு பகை ஊக்கம் அழிப்பது அரண்=தன்னைவந்து முற்றிய பகைவரது மனவெழுச்சியைக் கெடுப்பதே அரணுவது. எ-று.

வாயிலும் வழியுமொழிந்த விடங்கள் மலை, காடு, நீர்நிலையென்றிவற்றுள் ஏற்பனவுடைத்தாதல் பற்றிச் 'சிறுகாப்பின்' என்றும்; அத்தோர் கலிவின்றி யிருத்தல்பற்றிப் 'பேரிடத்ததாகி' என்றும், தம்வலி நோக்கி இதுபொழுதே யழித்துமென்று வரும் பகைவர் வந்து கண்டால் அவ்வூக்கமொழிதல்பற்றி 'ஊக்கமழிப்பது' என்றுங் கூறினர். (சு)

விளக்கம்:– காக்கவேண்டுமிடம சிறியதாயும, வீணைய இடம் அகன்றதாயும் உடையதாய் மதிலாகிய தன்னைப் பகைவர் வந்து அடைந்தகாலத்து அப்பகைவரது மனத்திலுள்ள ஊக்கத்தைக் கெடுத்து நிற்பதே அரண் என்று சொல்லப்படும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, மதிலின் வாயில், சிறுவழி ஆகி சிறு இடங்களில் காவல் அமைக்கக்கூடியதாயும, வீணைய இடங்களெல்லாம மலை, காடு, நீர்நிலையாகிய அகழிகள் ஆகிய இவைகளால் சூழ்ந்திருக்க வேண்டுமென்றும், அவ்வித மிருக்குமாயின் அவ்வாயிற் புறத்தும் வழியிலும் காவலாளர்களை அமைக்கின் அது போதுமானதாக இருக்குமென்றும், உள்ளிருக்கும் வீரர்முதலியோர் பகைவரால் வளைக்கும் காலத்துத் துன்பப்படாது இருக்கக்கூடிய பெரிய இடத்தை யுடையதாயும் தம்முடைய வலிமையை எண்ணி இப்போதே இந்நாட்டையும், நாட்டையாளும் அரசனையும் அழித்து விடுவோம்' என்றெண்ணி வருகின்ற பகைவர், மதிலிடத்தே வந்து மதிலைப்பார்த்ததும், 'இம்மதிலோ மிக அருமையுடையது இதனைக்கடக்க ஒருவராலுமாகாது' என்று அப்பகைவரது ஊக்கத்தை ஒழிக்கக் கூடியதாயும் இருக்கின்ற மதிலே அரண் என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "அரணுனது உள்ளிருப்போர் நலிவடையாவண்ணம் வேறிடத்தை உடையதாய் இருந்தாற் போதுமோ? உள்ளிருப்போர்க்கு வேறு ஒன்றும் வேண்டாமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

745. கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார்
நிலைக்கெளிதா நீர தரண்.

(பரி.) இ-ள். கொளற்கு அரிதாய்=புறத்தாராற் கோடற் கரிதாய்—கொண்டகூழ்த்தாகி=உட்கொண்ட பலவகை யுணவிற்றாய்—அகத்தார் நிலைக்கு எளிதாம் நீரது அரண்=அகத்தாரது போர்நிலைக் கெளிதாய நீர் மையை யுடையதே அரணுவது. எ-று.

கோடற்கருமை=இளைஞிடங்குகளாலும் பொறிகளாலும் இடங்கொள் ளுதற் கருமை. உணவு தலைமைபற்றிக் கூறினமையின், மற்றுள்ள நுகரப்படு வனவுமடங்கின. நிலைக்கெளிதா நீர்மையாவது :—அகத்தார் விட்ட வாயுத முதலிய புறத்தார்மே லெளிதிற் சேறலும், அவர் விட்டன அகத்தார் மேற் செல்லாமையும், பதணப்பரப்பும் முதலாயின. (கு)

விளக்கம்:—பகைவராகிய புறத்தில் உள்ளவர்களால் கொள் ளுதற்கு அருமையுடையதாய் உள்ளே உள்ள வீரர் முதலியோர் உண்பதற்கு உரிய பலவகை யுணவினை உடையதாய் உள்ளிருக் கும் வீரர் போர்செய்வதற்கு உரிய எளிமையுடையதாய் இருப்பதே அரண் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, இளை, நீர் இடங்கி, பொறிகள் ஆகிய இவைகளைப் பெற்றிருப்பதால் பகைவ ரால் அடையக்கூடாததாயும் உண்ணப்படுகின்ற உணவுகள் யாவும் குடிப்பனவாகிய ஜலமும் ஆகிய எல்லாம் அடங்கியதாயும, உள்ளி ருக்கின்ற வீரர் பகைவரைக் குறிக்கொண்டு எய்த ஆயுதங்கள் அப் பகைவர்மீது குறிதவறாது சென்று எய்தவண்ணமே எய்தற்குக் கூடியதாகிய தளைகள் உடையதும, வெளியிலிருந்து பகைவரால் விடப்பட்ட ஆயுதங்கள் உள்ளிருக்கின்ற வீரர்கள்மீது வந்து பாயா வண்ணம செய்து உள்ள பரப்பு முதலியவைகளை உடையதும் மதி லென்றும, அதுவே அரண் என்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "மதிலும், பொருளும் இருக்கின் போது மோ? வேறு ஒன்றும் வேண்டாமோ?" என்னலும், ஆசிரியர் கூறு வாராயினர்.

746. எல்லாப் பொருளு முடைத்தா யிடத்துதவு
நல்லா ளுடைய தரண்.

(பரி.) இ-ள். எல்லாப்பொருளும் உடைத்தாய்=அகத்தோர்க்கு வேண் டும் பொருள்களெல்லாவற்றையும் உள்ளே யுடைத்தாய்—இடத்து உதவும்

நல்லாள் உடையது அரண் = புறத்தோரால் அழிவெய்து மெல்லெக்கண் அஃதெய்தாவகை யுதவிக் காக்கும் நல்ல வீரரையு முடையதே அரணெனவது.

அரசன்மாட்டன்பும் மானமும் மறமும் சோர்வின்மையும் முதலிய நற்குணங்களுடைமைபற்றி 'நல்லாள்' என்றார். (சு)

விளக்கம்:—உள்ளிருப்பவர்க்கு வேண்டிய பொருள்கள் எல்லாவற்றையும் தன்னிடத்தே உடையதும், புறத்தோராகிய பகைவரால் அழிக்கக்கூடிய காலம் வருமிடத்து அவ்விதம் அழிக்கப்படாமல் உதவிக காக்கின்ற நல்ல வீரரை உடையதும் அரண் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனுள் யுத்தம் கேர்ந்த காலத்து அரணுக்கு வெளியே சென்று பொருள்களைத் தேடிவருதல் கூடாதாதலால் எல்லாப்பொருள்களும் அடைவதற்கு உரிய தகுதியுடைய தாய்ப் பகைவர் வந்தகாலத்து அரசனிடத்து அன்பும், தன் மதிப்பும், அஞ்சாதவீரமும், சோர்வின்மையும் ஆகிய நற்குணங்கள் உடையவரே வெல்வாராதலால் அவ்வித நற்குணங்களமைந்த வீரர்களுடையதாய் இருக்குமாயின் அதுவே அரண் என்று அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இத்திருக்குறளில் நல்லாள் என்கின்ற வீரர் வேண்டும் என்று கூறுவதால், நல்லாளின் இலக்கணம் எதுவென்றும் அறிவித்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

747. முற்றியு முற்றுந் தெறிந்து மறைப்படுத்தும் பற்றற் கரிய தரண்.

(பரி.) இ-ள். முற்றியும் = புகலொடு போக்கொழியும் வகை கெருங்கிச் சூழ்ந்தும்—முற்றுது எறிந்தும் = அங்ஙனஞ் சூழாது செலிழந்த விடஞ்சென்று ஒருமுகமாகப் பொருதும்—அறைப்படுத்தும் = அகத்தோரை அவர் தெளிந்தோரை லிட்டுக் கீழறுத்துத் திறப்பித்தும்—பற்றற்கு அரியது அரண் = புறத்தோராற் கொள்ளுதற்கரியதே அரணெனவது. எ-று.

இம மூன்றுபாயத்துள்ளும் முதலாவது எல்லாப்பொருளு முடைமையானும், வேனைய நல்லாளுடைமையானும், வாயாவாயின. (எ)

விளக்கம்:—உள்ளே வந்து நுழைதலும், வெளியே போதலும் இல்லா வகை கெருங்கிச் சூழ்ந்தும், அவ்விதம் சூழாது மன

மிலேத்தவிடத்தே அவ்விடம் நோக்கி ஒருமுகமாகச் சென்று யுத்தம் செய்தும், உள்ளிருப்பார்களில் உளவு தெரிந்தவரைக் கொண்டு மதிற்புறத்தின் கீழிடத்தை அறுத்துப் புறத்தவரால் அடையக்கூடாத வாயிலுள்ளதும் அரண் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், எல்லாப்பொருளும் உடைமையால் பகைவர் உள்நுழையா வண்ணமும், நுழைந்தபகைவர் வெளியேபோகா வண்ணமும் இருக்கச் செய்வதும் தம்படை சூழாது இலேத்த விடத்தே பகைவர் படைகள், முழுவதையும் ஒருங்கு நிரட்டி யுத்தம் செய்யக்கூடியதும், பகைவரானவர் உளவு சொல்லக் கூடியவர்களைக்கொண்டு மதிலின் கீழினை அறுத்து சதி செய்தலும் இல்லாது காத்துப் பகைவரால் கொள்ளக் கூடாததாகிய தொழில்களைச் செய்யக்கூடியவராகிய வீரர்களை உடையதாய் இருக்கவேண்டுமென்றும், இவ்விதம் பொருளும் வீரரும் இருப்பாயின் பகைவரால் கொள்ளக் கூடாமல் இருக்குமென்றும் அவ்வித அரணே அரசனுக்கு அரண் என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இன்னும் அந்கல்லாள்களின் பெருமையை அறிவித்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

748. முற்றூற்றி முற்றி யவரையும் பற்றூற்றிப் பற்றியார் வெல்வ தரண்.

(பரி.) இ-ள். முற்று ஆற்றி முற்றியவரையும்—தானைப் பெருமையாற் சூழ்தல் வல்லராய் வந்து சூழ்ந்த புறத்தோரையும்—பற்றியார் பற்று ஆற்றி வெல்வது அரண்—தன்னைப்பற்றிய வகத்தோர் தாம் பற்றியவிடம் விடாதே நின்று பொருது வெல்வதே அரணாவது; எ-று.

உம்மை சிறப்பும்மை பற்றின்கண்ணேயாற்றியென விரியும். பற்று ஆகுபெயர். வெல்லுதென உடையார்தொழில் அரண்மேனின்றது. பெரும் படையானைச் சிறுபடையான் பொறுத்து நிற்குந் துணேயேயன்றி வெல்லுமியல்பின தென்பதாம். இதற்குப் பிரிதுரைப்பாரு முளர். இவை யேழுபாட்டானும் அதனதிலக்கணங் கூறப்பட்டது. (அ)

விளக்கம் :—சேனைசங்கியத்தின் பலத்தால் சூழவல்லவராய் வந்து சூழ்ந்துகொண்ட புறத்தோராகிய பகைவரையும் தன்னைப் பற்றிய உள்ளிருப்போர் தாம பற்றியவிடம் எதுவோ அவ்விடத்

தை விடாமல நின்று யுத்தம் செய்து வெல்லக்கூடியதே அரண் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது பகை அரசர்கள் தங்கள் சேனையின் பலத்தால் தம்நாடுவிட்டுப் பிறநாட்டின்கண்ணே சென்று சூழ்ந்துகொள்ளுங் காலத்துச் சிறுபடை உடைய அரசர்கள் தங்களுடைய அரண் வலிமையால் தாங்களிருந்த இடத்திலிருந்து சிதறுபடாமல் பொறுத்து நிற்பாராயின் பெரும் படை உடையானும் இச்சிறு படையுடையானை அரண் வலிமையால் வெலவதற்கில்லாமல் போமென்றும், ஆதலால் அரணும், அதனுள் நின்ற வீரரும் சிறப்புடையராக இருத்தல் வேண்டும் என்றும் அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இதுகாறும் அரண் இலக்கணமறிந்தோம். இனி, அவவரணைக் காக்கின்ற வீரரது இயல்பை அறிய விருமபுகின்றோம்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

749. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து வீறெய்தி மாண்ட தரண்.

(பர்.) இ-ள். முனை முகத்து மாற்றலர் சாய வினைமுகத்து வீறு எய்தி = போர் தொடங்கின வளவிலே பகைவர் கெடும் உண்ணம் அகத்தோர் செய்யும் வினைவேறுபாடுகளான் வீறுபெற்று — மாண்டது. அரண் = மற்றும் வேண்டுமாட்சியையுடையதே அரணாவது. எ - று.

தொடக்கத்திற் கெட்டார் பின்னுங் கூடிப் பொருதல் கூடாமையின், 'முனைமுகத்துச்சாய' என்றார். வினைவேறுபாடுகளாவன:—பகைவர் தொடங்கிய போரினையறிந்து எய்தல், எறிதல், குத்துதல், வெட்டுதலென்றிவை முதலாய வினைகளுள் அதனைச் சாய்ப்பனசெய்தல். மற்றும் வேண்டுமாட்சியென்றது புறத்தோரறியாமற் புகுதல், போதல் செய்தற்குக் கண்ட சுருங்கை வழி முதலாயின வுடைமை. (௯)

விளக்கம்:—போர் தொடங்கினவுடனே பகைவரானவர் கெட்டுப்போம்படி உள்ளிருப்பவர் செய்கின்ற யுதத வேறுபாடுகளால் பலமுடையதாய் மற்றும் வேண்டிய பெருமைகளையும் உடையதே அரணாகுமென்று இத்திருக்குறள் கூறுகின்றது அதாவது, யுத்தம் தொடங்கிய உடனே பகைவர் கெடும்படி பலவித சூழ்ச்சிகளுடன் யுத்தத்தைச்செய்ய ஆரம்பிக்கின் அச்சூழ்ச்சிகளால் யுத்த ஆரமபத்திலேயே கெட்டுப் போவார்களாயின், அவ்விதம கெட்ட பகைவர்கள் மறுபடியும் போர்செய்தல் கூடாதென்றும், அவ்வித சூழ்ச்சிகளால் செய்யக்கூடிய வினை வேறுபாடுகள் பகைவரது தகுதிக்குத் தக்க அளவாகத் தெரிந்து வில்லால் எய்தலும், ஆயுதங்

களே எறிதலும், ஆயுதங்களைக்கொண்டு குத்துதலும், வாள் முதலிய வை கொண்டு வெட்டுதலும் ஆகிய வினைகள் என்றும், பகைவர் அறியாமல் உள்ளே வருவதற்கும் வெளியே போவதற்கும் அமைத் தல்ல பல சுருங்கிய வழிகள் உள்ளனவாயிருத்தல் அரணுக்கு மாட்சி என்றும் ஆராய்ந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இன்னும் அக்காப்பாரின் தன்மையை அறிய விரும்புகின்றோம்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

750. எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி யில்லார்க ணில்ல தரண்.

(பரி.) இ-ள். அரண் = அரண், — எனைமாட்சித்து ஆகியக் கண்ணும் = மேற் சொல்லப்பட்ட மாட்சியெல்லாமுடைத்தாய விடத்தும், — வினைமாட்சி இல்லார்கண் இல்லது = வினைசெய்தற்கண் மாட்சியில்லாதார்மாட்டு அவை யிலதாம். எ - று.

வாளாவிருத்தலும் அளவறியாது செய்தலும் ஒலாதது செய்தலுமெல் லாம் அடக்க 'வினைமாட்சியில்லார்' என்றும், ஏற்றவினையை யளவறிந்து செய்து காலக்கால் அம்மாட்சிகளாற் பயனின்றி யழியுமென்பார் 'அவை யுடைத்தன்று' என்றுங் கூறினர். இரண்டு பாட்டானுங் காப்பாரை யின்றியமையா தென்பது கூறப்பட்டது. (ம)

விளக்கம் :— மேற்கூறிய எல்லாப் பெருமைகளையும் உடைய தாக அரணுனது அமைக்கப்பட்டிருக்கினும், பகைவரிடத்துயுத்தம் செய்யும் போர் வீரர்களிடம் மாட்சிமையில்லாவிடத்து அப்பெரு மைகளெல்லாம் பயனில்லாமற் போய்விடும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, மேல் கூறிய பொறிகளையும், சுருங்கிய வழிகளையும், அகன்றும், உயர்ந்தும், வலிவுகொண்டும் எய்தற்கரிய அருமையுடையதும் ஆகிய எல்லாமிருக்கினும், அவ்வரணைக் காக் கின்ற காவலாளர்கள் தகுதியுடையவர்களாக இல்லாவிடில் பயனில் லாமற்போம என்றமையால், அக்காவலாளர் அறிந்து செய்ய வேண்டுவனவற்றை விரைந்து செய்யாது சும்மா இருத்தலும் இதற்கு இவ்வளவு செய்யவேண்டுமென்று அளவினை அறியாது ஓர் காலத்து மிகுதியாயும், ஓர் காலத்துக் குறைவாகச் செய்தலும, போர்க்கு உரியனவல்லாத வகைகளைச் செய்தலும் ஆகிய வீர ரைப் பெற்றிருக்கின் அவர்கள் செய்யும வினைகளால் யாதும் மாட்சிமைப் படாததுடன், அரணும் மாட்சிமைப்படாதென்றும், அவ்விதம் செய்த வீரரைக் காத்தற்கு யோக்கியமில்லாமல் அரணும்

அழிந்து போம் என்றும், அவ்வரண் எத்துணைப் பெருமை யுடைய தாயினும் பயனில்லை என்றும் அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "காப்பார் அமையாவிடின் அரண் பயனில்லை என்று அறிந்தோம். இனி, இறைமாட்சியுள் கூறிய அங்கங்களுள் கூழ் என்னும் பொருளென்பதை அறிய விரும்புகின்றோம்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

76. அதிகாரம்.
பொருள்செயல்வகை.

(பரி.) இனிப் பெரும்பான்மையும் காட்டானும் அரணானும் ஆக்கவுங் காக்கவும் படுவதாய பொருளைச் செய்தலின் நிறம் இல்வதிகாரத்தாற் கூறுகின்றார்.

விளக்கம் :—அதாவது காட்டில் உண்டாவதும், அரணால் காக்கப்படுவதும் ஆகிய பொருளை அரசன் அங்கங்கள் ஆறினுள் ஒன்றாகச் சொல்லியிருப்பதால், இப்போது அப்பொருளைச் செய்கின்ற விதம் இதென்று அறிவித்தற்கு நாட்டையும், அரணையும் கூறியபிறகு பொருள்செயல்வகை என்று கூறுகின்றார் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பொருள் நிலையாதது என்று பன்முறை சொல்லக் கேட்டோம். ஆனால், அவ்வித்தப் பொருள் அரசனுக்கும் ஏனையோர்க்கும் இன்றியமையாததாக உள்ளதுபோலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

751. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்ல தில்லை பொருள்

(பரி.) இ-ள். பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்லது=ஒருபொருளாக மதிக்கப்படாதாரையும் படுவாராகச் செய்யவல்லபொருளையொழிய—பொருள் இல்லை=ஒருவனுக்குப் பொருளாவதில்லை. எ-று.

மதிக்கப்படாதார்=அறிவிலாதார், இழிகுலத்தார். இழிசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. மதிக்கப்படுவாராகச் செய்தல்=அறிவுடையாரும் உயர்குலத்தாரும் அவர்பாற்சென்று நிற்கப் பண்ணுதல். அதனால் ஈட்டப் படுவது அதுவே பிறிதில்லை யென்பதாம். (க)

விளக்கம் :—உலகத்துப் பிறரால் ஒரு பொருளாக எண்ணி மதிக்கப்படாதவரையும் மதிக்கப்படுபவராகச் செய்ய வல்லதாகிய பொருளைக் காட்டிலும் வேறுபொருள் ஒருவனுக்குப் பொருளாக

இல்லை என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, அறிவில்லாதவரும், இழிகுலத்தவரும் ஆகிய மதிக்கப்படாதாரும் பொருளுடையவராக இருப்பாராயின் அவரிடத்து உள்ள பொருள் கருதி அறிவுடையவரும், வேறு குலத்தோரும் அவரிருக்குமிடம் சென்று அவர் கூறும்வரையில் உட்காராமல் நின்றுகொண்டே இருப்பதை நாம் காண்கின்றோமாதலால், அவ்வித பொருளை ஒருவன் சேர்ப்பதே பொருளென்றும் அப்பொருளல்லாமல் வேறு அறிவும், உயர்குலமும் கொண்டு தம்மை அதிகமாக எண்ணுவதால் பயனில்லை யென்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "அறிவுடையோரும், உயர் குலத்தோரும் பொருளுடையானிடத்துச் சென்று தாழ்ந்து நிற்பர் என்றமையால் செல்வமல்லாதிருக்குமாயின் அவர் அறிவில்லாதவரும், இழிகுலத்தோராயும் இருப்பதிடன் தீமையுடையராக இருக்குங்காலத்தும் அச் செல்வரை அவரிடத்துள்ள தீமையைக் கருதாது மகிழ்வரோ? நன்மையுடையாரைப் பொருளில்லாமை கருதி உயர்த்தாரோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

752. இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை யெல்லாருஞ் செய்வர் சிறப்பு.

(பரி.) இ-ன். இல்லாரை எல்லாரும் எள்ளுவர் = எல்லாநன்மையு முடையராயினும் பொருளில்லாரை யாவருமிகழ்வர்; —செல்வரை எல்லாரும் சிறப்புச் செய்வர் = எல்லாத்தீமையு முடையராயினும் அஃதுடையாரை யாவரு முயரச்செய்வர். எ - று.

இத்திருக்குறள் சோமான் பெருமாளையனார் திருக்கைலாய ஞான உலாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அஃதாவது:—

செங்கேழற் றூமரைபோற் சீறடியாடகிலா
வங்கேழரிவைப் பிராயத்தா—ளொண்கேழற்
றிங்களுந் தாரகையும் வில்லுஞ் செழும்புயலுக்
தங்கொளிசேர் செவ்வாயு முண்மையாற்—பொங்கொளிசேர்
மின்னுவான் காட்டு முகவொளியாண் மெய்ம்மையே
தன்னுவாரில்லாத் தகைமையா—ளென்கொளுமி
ல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பென்னுஞ்—சொல்லாலே.

உயரச்செய்தல் = தாங் தாழ்ந்து நிற்றல். இகழ்தற்கண்ணுங் தாழ்தற் கண்ணும் பகைவர், நட்டார், தொதுமலரென்னும் மூவகையாரு மொத்தலின், யாவரும்' என்றார். பின்னுங் கூறியது அதனை வலியுறுத்தற் பொருட்டு. (உ)

விளக்கம் :—பொருளில்லாதோர் எல்லா நன்மைகளையும் டையவராயினும் அவரை உலகத்தோர் யாவரும் இகழ்வாரென் றும், செல்வமுடையவர் எல்லாத் தீமைகளையுமுடையவராயினும அவரை உலகத்தார் யாவரும் உயர்த்திக் கூறுவரென்றும இத திருக்குறள் கூறுகின்றது. அதாவது, செல்வமில்லாதாரை அவனது பகைவன் மாத்திரமல்லாமல் நட்பினனுயுள்ளவனும, கொது மலனுயுள்ளவனும் அவனிடத்தில் செல்வமில்லாமையால் இழித் துக் கூறுவனென்றும, செல்வமுடையவன் எத்தீமைத் தீமை யுடையவனுயினும் மேற்கூறிய மூவகையாரும் அவனிடத்துத் தாழ்ந்து நின்று அவனை நன்கு மதிப்பரென்றும கண்டோம. அது என்னையோவெனில் ? பொருளுடையான் ஒருவன் மேற்கூறியபடி இழிகுலத்தவனுயினும், அறிவில்லாதவனுயினும், பஞ்சமாபாதகங களைச் செய்பவனுயினும அவனிடத்துள்ள பொருளைக்கருதி உலகோர் தங்கள் மனத்தினிடத்து அன்பில்லாவிடினும அவனுல் அடையவேண்டிய நன்மையை அடைய விரும்பி அவனிடத்துக கைகட்டி வாய்பொத்தி நிற்பரென்றும, செல்வமில்லாதவன் மேற் கூறிய தீமையெல்லாமொழிந்து அதற்கு மாருகிய நன்மைகளை யெல்லாம் அடைந்திருப்பினும அவனை மதியாது இகழ்ந்து பேசுவர் என்றும் அறிகிறோம். இதனை,

கல்லாதே யாளுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லாதே
இல்லாரும் வேண்டாண்மற றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல்''

என்னும நமது மூதன்னையின் திருவாக்கே நிலைநாட்டும் என்றனர் அதிகேட்ட மாணாக்கர், ''இவ்விதம் பொருளாலுண்டாகிய சிறப் பைப் பொருளுடையவன் தன்னுடைய காட்டில் மாத்திரம அடைவனே ? அல்லது வேறு காடுகளிலும் சிறப்படைந்து நிற்ப னே ?'' என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

753. பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு மெண்ணிய தேயத்துச் சென்று.

(பரி.) இ-ள். பொருள் என்னும் பொய்யா விளக்கம்=பொருளென்று எல்லாராலுஞ் சிறப்பிக்கப்படும் ஈந்தாவிளக்கு—எண்ணியதேயத்துச்சென்று இருள் அறுக்கும்=தன்னைச் செய்தவர்க்கு அவர் நினைத்த தேயத்துச் சென்று பகையென்னு மிருளைக் கெடுக்கும். எ-று.

எல்லார்க்கும் எஞ்ஞான்றும் இன்றியமையாததாய் வருதல் பற்றிப் 'பொய்யாவிளக்கம்' என்றும், வினைவிளக்கோடு இதனிடை வேற்றுமை தோன்ற 'எண்ணியதேயத்துச்சென்று' என்றுங் கூறினார், ஏகதேசவுருவகம். இவை மூன்று பாட்டானும் பொருளது சிறப்புக் கூறப்பட்டது. (ரு)

விளக்கம்:—எல்லாராலும் சிறப்பிக்கப்படும் பொருளாகிய கெடாத விளக்கு அப்பொருளைச் செய்தவர்க்கு அவரெண்ணிய தேயத்திற் சென்று பகையென்னும் இருளைக் கெடுக்கும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், எவ்வித தகுதியுடையாரர்க்கும், எக்காலத்தும் இல்லாது முடியாதாய் வருகின்ற பொய்யாத விளக்கென்னும் பொருளானது மற்றைய விளக்குகள்போல் தன்னிடத்தே மாத்திரம் எரிந்து ஒளி தருவதுபோல் இல்லாது, நினைத்த இடங்களிலெல்லாம் சென்று பொருளுக்கு உரியாருடைய இவனுடைய ஒளியைப் பரப்புகின்றதென்று அறிகின்றோம். ஆகலால், மற்றைய ஒளிகள்போலல்லாது பிறநாட்டிலும் சென்று புகழை அடைவிக்கக்கூடியது பொருளென்று கண்டோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் யாவராலும் எக்காலத்தும் புகழ்பெறக்கூடிய பொருளை எவ்விதமேனும் சேர்த்துவிடுதல் கூடுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

754. அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து தீதின்றி வந்த பொருள்.

(பா.) இ-ள். அறன் அறிந்து தீது இன்றி வந்த பொருள்=செய்யுந திறத்தினையறிந்து அரசன் கொடுங்கோன்மையிலனாக வுளதாயபொருள்—அறன் ஈனும் இன்பமும் ஈனும்—அவனுக்கு அறத்தையுங் கொடுக்கும், இன்பத்தையுங் கொடுக்கும். எ-று.

செய்யுந்திறம்=தான் பொருள்செய்தற்குரிய நெறி. இலனாக்வென்பது இன்றியெனத் திரிந்துநின்றது. செங்கோலனென்று புகழப்படுதலானும், கடவுட்பூசை தானங்களாற் பயனெய்தலானும் 'அறனீனும்' என்றும், நெடுங்காலநின்று துய்க்கப்படுதலான், 'இன்பமுமீனும்' என்றுங் கூறினார். அதனான் அத்திறத்தானீட்டுக வென்பதாம். (௪)

விளக்கம் :—அரசன் கொடுங்கோலனாக இல்லாது செய்ய வேண்டிய தகுதியை அறிந்து தேடிய பொருள் அவ்வரசனுக்கு அறத்தையும், இன்பத்தையும் கொடுக்குமென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, அரசன் தான் பொருளைத் தேடுதற்கு உரிய நெறியினின்றும் சிறிதும் விலகாதவனாய்ப் பொருளைத் தேடுதல் வேண்டுமென்றும், அவ்விதம் செங்கோலனாக நின்று தேடிய பொருள் செங்கோலனென்று இம்மையில் புகழைத்தரும் என்றும், அவ்விதம் தேடிய பொருளை கடவுட் பூசைக்கும் தானங்களுக்கும் செலவழிப்பானாயின் அதனாலாகிய பயன் இம்மை, மறுமை, வீடென்கின்ற மூன்றையும் தரும் அறத்தைக் கொடுக்குமென்றும், அவ்வறத்தைப் பெறுதல் மாத்திர மல்லாமல் "செப்ப முடையவனாக்கம் சிதைவின்றி, எச்சத்திற்கே மாப் புடைத்து" என்னும் நடுநிலைமை என்னும் அதிகாரத்தில் கூறிய திருக்குறளின்படி பொருள் தேடிய இவன் நெடுங்காலம் நிலைபெற்றிருந்து அனுபவித்து இன்பத்தை அடைகலாலும், இன்பத்தைத் தருமென்றும் அறிந்தோம் இதனை,

"வடுவிலா வையத்து மன்னிய மூன்றி
னடுவண தெய்த விருதலையும்—எய்து
னடுவண தெய்தாதா னெய்து முலைப்பெய்
தடுவது போலும் துயர்." †

என்னும் நாலடிச் செய்யுளே நிலை நாட்டும் என்றனர். அது நேட்டமாணாக்கர், "இவ்விதம் அறத்தின் வழியாய்ப் பொருள் சேர்க்க முயலல் வேண்டும் என்றீர் இவ்விதம் வாராது வேறு வழியில் பொருள் வருமாயின் அதனை ஏற்றுக் கொள்ளல் ஆகாதோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

* திருக்குறள், 112.

† நாலடியார், மெய்ம்மை, 114.

755. அருளொடு மன்பொடுப் வாராப் பொருளாக்கம் புல்லார் புரள விடல்.

(பரி.) இ-ள். அருளோடும் அன்பொடும் வாராப் பொருள் ஆக்கம் = தாங்குடிகண்மாட்டுச் செய்யுமருளோடும் அவர் கண்மாட்டுச் செய்யுமன் போடுங் கூடி வாராத பொருளீட்டத்தை—புல்லார் புரளவிடல் = அரசர் பொருந்தாது கழியவிடுக. எ-று.

அவற்றோடு கூடி வருதலாவது:—ஆறிலொன்றாய் வருதல். அவ்வாறு வாராத பொருளீட்டம் பசுமட்கலத்தணீர்போலச் செய்தானேயுங்கொண்டிறத்தலின், அதனைப் புல்லார் என்றெழியாது 'புரளவிடல்' என்றுங் கூறினர். (இ)

விளக்கம்:—அரசன் தான் குடிகளிடத்துச் செலுத்துகின்ற அருள் தன்மையோடும், அக்குடிகள் அரசரிடத்துச் செய்யும் அன்போடும் கூடிவாராத பொருளின் திறாகுகியை எற்றுக் கொள்ளாமல் கழியவிடல் வேண்டும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது அதாவது, அரசர் பொருள் சேர்க்கும் வழியாவது குடிகளிடத்தே ஆறில் ஒன்று வாங்குதல். ஆறிலொன்றுவது:—இல்லறத்தார்க்கு வகுத்த தென்புலத்தார், தெய்வம், விருந்து, சுற்றத்தார், தான் என்கின்ற ஐவர்களும் ஒத்து பங்கினை எடுத்துக்கொண்டு ஒரு பங்கினை அரசனுக்குக் கொடுத்தல். அவ்விதம் குடிகள் தங்களுக்கு வரும் வருவாயை ஆறுபங்குகளாக்கி ஒன்றினை அரசனுக்குக்கொடுக்கும் காலத்து அன்போடு தருதல் வேண்டுமென்றும், அவ்விதம் அன்போடு வந்த பொருளை எல்லா உயிர்களையும் ஒன்றென்று பார்க்கும் கருணையுடைய அரசன் அந்நேரடு ஏற்று அப்பொருளை மேற்கூறிய வண்ணம் அறத்திற்கும், இன்பத்திற்கும் செலவிடல் வேண்டும் என்று அறிந்தோம். அதனால், நல்வழியில் வாராது அதற்கு மாறுகிய தீயவழியில் வரும பொருளை அரசன் கொள்ளாது கழித்துவிடுதலவேண்டும் என்றும் அறிகின்றோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "அரசன் குடிகளிடத்தில் எவ்வெவ்வழியாகப் பொருளை அடைதல் வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

756. உறுபொருளு மூல்கு பொருளுந்தன் னென்னுர்த் தெறுபொருளும் வேந்தன் பொருள்.

(பரி.) இ-ள். உறு பொருளும்=உடையாரின்மையிற் றூனேவத்துற்ற பொருளும்—உல்கு பொருளும்=சுங்கமாகிய பொருளும்—தன் ஒன்னுர்த் தெறுபொருளும்=தன் பகைவரைத் திறையாகக்கொள்ளும் பொருளும்—வேந்தன் பொருள்=அரசனுக்குரிய பொருள்கள். எ-று.

உறுபொருள்=வைத்தாரிறந்தபோக நெடுங்காலம் நிலத்தின்கட் கிடந்து பின் கண்டெடுத்ததாஉம், தாயத்தார் பெறுதலாஉமாம். சுங்கம் — கலத்தினுங் காலினும் வரும் பண்டங்கட்கிறையாயது. தெறுபொருள்= தெறுதலான் வரும் பொருளென விரியும். ஆறிலொன்றெழுபவும் உரியன கூறியவாறு. இவை மூன்றுபாட்டானும் அமீதீட்டுநெறி கூறப்பட்டது. (சு)

. விளக்கம் :—உடையவரில்லாமையால் தானே வந்து சேர்கின்ற பொருளும், சுங்கத்தால் வருகின்ற பொருளும், தன்னுடைய பகைவரைத் தனக்குக் கீழ்ப்படியச் செய்து அவரிடத்தே வாங்குகின்ற பொருளும் அரசனுக்கு உரிய பொருள் ஆகும் எனறு இத் திருக்குறள் கூறுகின்றது. அதாவது, மேற்கூறிய வண்ணம் குடிகளால் செய்யப்படும் உழவுமுதலிய தொழில்களால்வரும் பொருள்கள் ஆறிலொரு கடமையாக அரசனைச் சேருவதுடன், எவரேனும் தம்முடைய பொருளை நிலத்தின் கண் புதைத்து வைத்து, அவ் வைத்தவர் இறந்துபோக நெடுங்காலம் புதைத்த அந்நிலத்திலேயே கிடந்து பின்னர் ஒரு காலத்து கண்டு எடுக்கப்படுமாயின் அவ்விதம் புதையல் பொருளும், பெரும் பொருள் படைத்தவர் இறந்து போக அப்பொருளை அடைய காயத்தாராகிய பங்காளிகள் இல்லாவிடில் அவ்விதப் பொருளும், கப்பலிலும், வண்டி முதலியவைகளிலும் வருகின்ற பொருள்கள் மீது சுமத்திய சுங்கத்தால் வருகின்ற பொருளும், பகைவர்களை வெற்றி கொள்வதால் அப்பகைவர் கொடுக்கின்ற கப்பமாகிய பொருளும் ஆகிய இவையெல்லாம் அரசனுக்கு உரியனவாகும் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "பொருளுக்கு உரிய சிறப்பினையும் அதைச் சேர்க்கும் வழியும், அப்பொருளால் வரும் அறத்தையும், இன்பத்தையும் அறிந்தோம். ஆயின் இப்பொருள் இல்லறத்தார

கிய மக்கள் தம் தொடர்புடையவரிடத்துச் செலுத்தும் அன்பினை வளர்ப்பதற்கு மாத்திரம் துணையாகும் போலும்! இப்பொருளால் அன்பிற்கு மேற்பட்ட அருளை அடைதற்கு முடியாதபோலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

757. அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ் செல்வச் செவிலியா லுண்டு.

(பரி.) இ-ள். அன்பு ஈன் அருள் என்னும் குழவி=அன்பினுலீனப் பட்ட அருளென்னுங் குழவி—பொருள் என்னும் செல்வச் செவிலியால் உண்டு=பொருளென்று உயர்த்துச் சொல்லப்படுஞ் செல்வதையுடைய செவிலியான் வளரும். எ-று.

தொடர்புபற்றுதே வருத்தமுற்றுர்மேற் செல்வதாய அருள் தொடர்பு பற்றிச் செல்லுமன்பு முதிர்ந்துழி உளதாவதாகலின், அதனை 'அன்பீன் குழவி' என்றும், அது வறியார்மேற் செல்வது அவ்வறுமை கீளயவல்லார்க் காதலிற் பொருளை அதற்குச் 'செவிலி' என்றும், அஃது உலகிற் செவிலியர் போலாது தானே யெல்லாப்பொருளு முதவி வளர்த்தலிற் 'செல்வச் செவிலி' என்றுங் கூறினர். (எ)

விளக்கம்:—அன்பென்னும் தாயால் பெறக் கூடிய அருளென்னும் குழந்தையானது எவராலும் உயர்த்திச் சொல்லப்படும் பொருளென்னும் செல்வத் தாயால் உண்டாகும் என்று இத்திருக் குறள் கூறுகின்றது. அதாவது, அன்பென்கிறது மனைவி, தாய், தந்தை, மக்கள், சுற்றத்தவர் என்னும் சம்பந்தமுடையவரிடத்தே செல்லுகின்ற ஆசையென்றும், அவ்விதம் செல்லுகின்ற ஆசையானது பின்னர் வறியார் மாட்டும் ஏனைய உயிர்களிடத்தும் சென்று அருளாவதற்குப் பொருள் உடையவனுக்கே ஆகுமாதலால் அவ்விதப் பொருளைச் செல்வத்தாயென்றும், அச்செல்வத்தாயால் உண்டாகின்ற அருளினை அன்பால்பெறப்பட்ட குழந்தையெனறும் விதந்து கூறியதாக அறிகின்றேம். ஆதலால், பொருளால் ஒருவன் வீட்டினை அடையக் கூடிய அருளையும் அடைதல் கூடுமென்றும், அப்பொருளே இம்மை, மறுமை, வீடாகிய மூன்றிற்கும் காரணமென்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "உலகத்தி உள்ள மற்று எத்தகைய தாய்மார்களைக் காட்டிலும் இச்செல்வத்தாய்

எல்லா நன்மைகளையும் உண்டாக்குவாள் என்று அறிந்தோம். இனி, அவ்வித பொருளுடையான் ஒருவன் யாதொரு தொழிலையும் யாதொரு வருத்தமுமில்லாமல் முடித்து விடுதல் கூடும்போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

758. குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்
றுண்டாகச் செய்வான் வினை. [தொன்

(பரி.) இ-ள். தன் கைத்து உண்டாக ஒன்று செய்வான் வினை=தன் கையதாகிய பொருளுண்டாக ஒரு வினையை யெடுத்துக்கொண்டான் அதனைச் செய்தல்—குன்று ஏறி யானைப்போர் கண்டற்று=ஒருவன் மலை மேலேறி நின்று யானைப்போரைக் கண்டாலொக்கும். எ-று.

ஒன்றென்பது வினையாதல் செய்வா னென்றதனாற் பெற்றாம். குன்றேறியான் அச்சமும் வருத்தமுமின்றி நிலத்திடை யானையும் யானையும் பொருபோரைத் தானினிருந்து காணுமதுபோலக், கைத்துண்டாக வினையை மேற்கொண்டானும் அச்சமும் வருத்தமுமின்றி வல்லாரையேவித் தானினிருந்து முடிக்கு மென்பதாம். (அ)

விளக்கம் :—தன் கையில் பொருளிருந்து ஒரு காரியத்தைச் செய்ய எடுத்துக்கொண்ட ஒருவன் அதனைச் செய்து முடித்தல் ஒருவன் யானைச் சண்டையைக் காணவேண்டி மலையின் மீதேறிப் பார்ப்பது போலிருக்கும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது அதாவது, இரண்டு யானைகள் ஒன்றோடொன்று போர் செய்யும காலத்து அச் சண்டையைக் காணவெண்ணிய ஒருவன் ஓர் மலைமீது ஏறிப் பார்க்கப் புகுந்தால் சிறிதும் அவித அச்சமும வருத்தமும் இல்லாமல் அச் சண்டையைக் கண்டு களிப்பானே அது போல் ஒரு தொழிலை மேற்கொண்டவனும் அக்காரியத்திற்கு வேண்டிய பொருளைத் தன் வசமில் உடையவனாக இருந்து செய்வானையின் யாதொரு அச்சமும் வருத்தமுமில்லாமல் அவ்வினையை முடிக்கும் வல்லவர்களை ஏவி அவை முடிக்கும்படிச் செய்து தானிருந்தவிடத்தில் இனிமையுடனிருத்தல் கூடும் என்று அறிகின்றோம். ஆதலால், பொருளைப் படைத்த ஒருவன் பொருள் படைத்த தகுதியால் எவ்வித காரியத்தையும் யாதொரு வருத்தமுமில்லாமல் இனிதுபட முடிப்பானென்றும், அதற்கும் பொருளே காரணமென்

றும் அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம பொருள் படைத்து நிற்பதால் எண்ணிய கருமம் இனிது முடியு மென்று அறிந்தோம். ஆயின், இப்பொருள் கொண்டு பகைவரை அடக்குதல் கூடுமோ ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

759. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு மெஃகதனிற் கூரிய தில்.

(பரி.) இ-ள். பொருளைச் செய்க = தமக்கொன்றுண்டாகக் கருதுவர் பொருளையுண்டாக்குக ;—செறுநர் செருக்கு அறுக்கும் எஃகு = தம்பகைவர் தருக்கினையறுக்கும் படைக்கலம் அதுவாம் ;—அதனிற் கூரியது இல் = அதற்கதுபோலக் கூரிய படைக்கலம் பிறிதில்லை. எ-று.

அதுவாம் அதற்கென்பன அவாய்நிலையான் வந்தன. பொருளைச் செய்யவே பெரும்படையும் நட்பு முடையராவர்; ஆகவே, பகைவர் தருக்கொழிந்துதாமேயடங்குவரென்பார் 'செறுநர்செருக்கறுக்குமெஃகு' ஆமென்றும், எனை யெஃகுகள் அதுபோல அருவப்பொருளை யறுக்கமாட்டாமையின் 'அதனிற் கூரியதில்' என்றுங் கூறினர். (கூ)

விளக்கம் :—தமக்கு ஓர் புகழ் உண்டாக எண்ணுபவர் பொருளை உண்டாக்குதல் வேண்டுமென்றும், அப்பொருள் ஒன்றே யகைவரது கர்வத்தை அடக்கும் ஆயுதமென்றும், அவ்விதம் பகைவர் கர்வத்தை அடக்கக்கூடிய ஆயுதங்களுள் இப்பொருள் போன்று கூர்மையுடையது வேறு ஒன்றுமில்லை என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், பொருளை மிகுதியும் படைத்தான் ஒருவனுக்கு நிலப்படை முதலாகிய பெரும்படைகளும், நன்னெறி அடையச் செய்யும் நட்பினரும் உண்டாவாரென்றும், அவ்விதம் உண்டாதலைக் கண்ட பகைவர் தாம் கொண்டிருந்த தருக்கு நீங்கி யுத்தம் செய்து, அடங்காமலே தாமே அடங்கி விடுவர் என்றும், அதனுடன் கர்வமென்னும் அருவப்பொருளை அடக்குவதற்கு இப் பொருள் ஒன்றே கருவியென்றும், ஏனைய கூர்மையுடைய கருவிகளெல்லாம் புறத்தே உள்ள உருவப்பொருளை அறுக்குமே அன்றி ஒருவன் மனத்தே உள்ள அருவப்பொருளாகிய செருக்கினை அறுப்பதற்கு முடியாவென்றும, ஆதலால் பொருள் படைத்தோன் ஒருவன் தன் பகைவரது கர்வத்தைத் தான் ஒன்றும் செய்யாமலே

அடக்கிவிடுதல் கூடும் என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் பொருள் படைத்தவன் ஒருவனுக்கு எல்லாம் தானே வந்து அடையும் என்று அறிந்தோம். இப்பொருளால் அறத்தையும் இன்பத்தையும் அடைதல் கூடும்போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

760. ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொருளேனை யிரண்டு மொருங்கு.

(பரி.) இ-ள். ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு = நெறியான் வரும் பொருளை இறப்ப மிகப் படைத்தார்க்கு — ஏனை இரண்டும் ஒருங்கு எண் பொருள் = மற்றையறனுமின்பமும் ஒருங்கே யெளிய பொருள்களாம். எ-று.

காழ்த்தல் = முதிர்தல். பயன்கொடுத்தல்லது போகாமையின் 'ஒண் பொருள்' என்றும், ஏனையிரண்டும் அதன் விளைவாகலிற் றாமே யொருகாலத்திலே யுளவாமென்பார் 'எண்பொருள்' என்றுங் கூறினார். இவை நான்கு பாட்டானும் அதனான் வரும் பயன் கூறப்பட்டது. (ம)

விளக்கம் :—நன்னெறியில வந்த பொருளை அளவிறந்து உடையவர்க்கு மற்றைய அறப் பொருளும், இன்பப் பொருளும உண்டாவது மிக எளிமையென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, பொருளைத் தேடும்காலத்து பழியஞ்சிச் சம்பாதித்தல் வேண்டுமென்றும, அவ்விதம் பழியஞ்சிச் சம்பாதித்த பொருளானது ஒருவனுக்கு மிகுதியாக உண்டாகுமாயின், அப்பொருளால் அறத்தையும், இன்பத்தையும, அவன் வருந்தாமலே மிக எளிமையாக ஒருங்கே அடைதல் கூடுமென்றும் அறிந்தோம். ஆதலால் பொருளுடையான் ஒருவனுக்கு அறம், இன்பம் என்கின்ற இரண்டையும் அடைவது சுலபமென்றும், அவனே உலகத்து மக்களால் புகழப்பட்டவனென்றும், ஆகையால் பொருளை, செய்ய வேண்டிய விதத்து விடாதுசெய்து எல்லா நன்மைகளையும் அடைய வேண்டுமென்றும், அவ்விதம் பொருள் செய்தல் அரசன் அங்கங்களில் ஆறினுள் ஒன்றாக இருக்கினும் மற்றையயாவர்க்கும பொதுபடக் கூறப்பட்டிருக்கிறதென்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "பொருள் செய்யும் விதமும் பொருளால் வரும் பயனும் இவையென்று நன்கு அறிந்தோம். இனி, அரச

னுக்கு உரிய ஏனைய அங்கங்களின் மாட்சியையும அறிய விருமபு கின்றோம்" என்னலும, ஆசிரியர் கூறுவாராயினர்.

---

77. அதிகாரம்.

படைமாட்சி.

(பரி.) இனி அப்பொருளினானாவதாய் வெல்வதாய படை இரண்டதி காரத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கட் படைமாட்சி கூறுகின்றார் அஃதாவது படையினது நன்மை.

விளக்கம்:—அதாவது, முன்னர் பொருள் இருக்கு மாயின் பெரும்படை உண்டாகும என்றபடி பொருள் கொணடு படைப்பதாகிய வெல்லக்கூடிய தகுதியுடைய படை என்னுமங் கத்தை இரண்டு அதிகாரங்களால் சொல்லத்தொடங்கி முதலாகப் படையினது நன்மை இதுவென்று அறிவிக்கும் படைமாட்சி யென்பதை இங்குக் கூறுகின்றார் என்றனர். அதுகேட்டமாணாக்கர், "படையினது நன்மை யென்று ஒன்று உண்டுபோலும்!" என்ன லும், ஆசிரியர் கூறுவாராயினர்.

761. உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலை.

(பரி.) இ-ள். உறுப்பு அமைந்து ஊறு அஞ்சா வெல்படை—யானை முதலிய நான்குறுப்பானும் நிறைந்து போரின்கணூறுபடுதற்கஞ்சாது நின்று பகையை வெல்வதாய படை—வேந்தன் வெறுக்கையுள் எல்லாம் தலை—அர சன் செல்வங்களெல்லாவற்றுள்ளுந் தலையாய செல்வம். எ-று.

ஈண்டுப்படையென்றது அந்நான்கன்றொகுதியை. ஊறஞ்சியவழி வேறல் கூடாமையின் 'ஊறஞ்சா' என்றும், ஒழிந்தவங்கங்கட்கும் அரசன்றனக்குங் காலலாகலின் 'வெறுக்கையுளெல்லாந்தலை' என்றுங் கூறினார். (க)

விளக்கம்:—யானைப்படை முதலிய நான்கு உறுப்புகளாலும் நிறையப்பெற்று யுத்தத்தின்கண் அஞசாது நின்று எதிர்த்த பகை வரைவெல்லக்கூடிய படையானது அரசன் ஒருவனுக்குக் கிடைக்கு மாயின் அவ்வித படையே அரசனுக்கு உள்ள செல்வங்கள் எல்

லாவற்றினும் முதன்மையாகிய செல்வம் என்று இத்திருக்குறள் கூறுகின்றது அதாவது, யானை, தேர், குதிரை, காலாள் என்கின்ற நான்குவித படைகளும் ஒருவனுக்கு அமையப்பெறுவதுடன் அவ்விதம் அமைந்த படையானது பகைவர் மீது யுத்தத்திற்குச் செல்லும் காலத்துப் பகைவரால் எய்தல், எறிதல், குத்துதல், வெட்டுதல் என்ற கருவிகளால் உண்டாகும் காயங்களுக்குப் பயந்து ஓடாது நிலைத்து நின்று பகைவரோடு போர் செய்து அப்பகைவரை வெல்லக்கூடிய தகுதியோடு இருக்குமாயின் அப்படையைக் காட்டிலும் வேறு சிறந்த செல்வம் வேண்டாமென்றும், எனெனில்? எனைய செல்வங்களை எல்லாம் காப்பதும் அரசனைக் காப்பதும் படையாதலால் அப்படையைக் காட்டிலும் சிறந்த செல்வம் இல்லை என்றும் கண்டோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பகைவர் மீது போர்க்குச் சென்ற படைவீரர் கருவிகளால் தாக்கப்பட்ட காலத்தும் எவ்விதம் அஞ்சாதிருத்தல் கூடும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

762. உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துத் தொல்படைக் கல்லா லரிது.

(பரி.) இ-ள். தொலைவிடத்து உலைவிடத்து ஊறு அஞ்சா வன்கண்மை தான் சிறிதாய வழியும் அரசற்குப் போரின்கணுலைவுவந்தால் தன்மேலுறுவதற்கஞ்சாது நின்று தாங்கும் என்கண்மை—தொல்படைக்கல்லால் அரிது—அவன் முன்னோரைத் தொடங்கிவரும் படைக்கல்லது உளதாகாது. எ-று.

இழிவு சிறப்புமை விகாரத்தாற்றொக்கது. மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, ஆணைப்படை, பகைப்படையென்னும் அறுவகைப் படையுள்ளுஞ் சிறப்புடையது மூலப்படை யாகலான், அதனை அரசன் "வெல்லுபாறியு நாடும் விழுப்பொருளுந் தண்ணடையுங்—கொல்களிறுமாவுங் தொடுத்தளிக்க"* என்பது குறிப்பெச்சம். இப்படையை வடநூலார் 'மௌலம்' என்ப. (2)

விளக்கம் :—அரசன் படையானது சிறிதாக இருக்கினும், தன்னைக் காவலாக அடைந்துள்ள அரசனுக்கு யுத்தத்தின்கண் துன்பம் வருமாயின் அக்காலத்துப் பகைவரால் செய்யும் துன்பத்

திற்கெல்லாம் அஞ்சாது நிலைபெற்று யுத்தம் செய்து தாங்குகின்ற அஞ்சாத வீரத்தன்மையை அவ்வரசனது முன்னோர் காலம் தொடங்கி இருந்து வரும் பழமையாகிய படைக்கேயுண்டாகுமன்றிப் புதிதாகச் சேர்க்கும் படைக்கு உண்டாகாது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, மூலப்படை யென்றும், கூலிப் படை யென்றும், நாட்டுப்படை யென்றும், காட்டுப் படையென்றும், துணைப்படையென்றும், பகைப்படையென்றும் உள்ள படைகளுள் முதலாவதாகக் கூறப்பட்ட மூலப்படையே சிறந்ததென்றும், அப்படையொன்றே யுத்தகளத்தில் புறமுதுகு இடாது யுத்தஞ்செய்து பகையை வென்று அரசனைக் காக்குமென்றும், அவ்விதம், காப்பது பண்டைக்காலம்தொட்டு வழிவழியாக வருகின்ற படைக்கலப் பயிற்சியாலும், வீரத்தாலும, அரசரிடத்தே உள்ள அன்பினாலும் நிகழுமென்றும், ஏனைய படைகளாகிய கூலிக்குச் சண்டை செய்வதும், நாடு ஒன்றனையே காப்பதும், காடு ஒன்றனையே காப்பதும், துணையாக வருவதும், பகைவர் வாராவண்ணம் தடுப்பதும் ஆகிய படைகள் எல்லாம் அவ்விதம் வீரத்தோடு போர் புரிதல் கூடாதென்றும அறிந்தோம். இதனை வெண்பாமாலை தும்பைப் படலத்துள்,

"வெல்பொறியு நாடும விழுப்பொருளுந் தண்ணடையுங்
கொலகளிறு மாவுங் கொடுத் தளித்தான்—பல்புரவி
நன்மணித் திண்டேர் நயவார் தலைபனிப்பப்
பன்மணிப் பூணான் படைக்கு"

என்று கூறியுள்ளதாலும அறிதல்கூடும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "மூலப்படையல்லாது வேறுபடைகள் வெல்லா என்றமையால் ஏனைய படைகள எல்லாம் ஒன்று சேருமாயின் அம மூலப் படைசெய்யும் வெற்றியை உண்டாக்காதோ ?" என்னலும ஆசிரியர் கூறுவாராயினர்.

763. ஒலித்தக்கா லென்னா முவரி யெலிப்பகை நாக முயிர்ப்பக் கெடும்.

(பரி.) இ-ள். எலிப்பகை உவரி ஒலித்தக்கால் என்னும்=எலியாய பகை திரண்டு கடல்போலவொலித்தால் நாகத்திற்கு என்ன ஏதம் வரும்! — நாகம் உயிர்ப்பக் கெடும்=அந்நாக முயிர்த்த துணையானே அதுதானே கெடும். எ-று.

உவமைச்சொற் பொருட்குறின்றது. இத்தொழிலுவமத்தாற் றிரட்சிபெற் றும். வீரரல்லாதார் பலர் திரண்டார்த்தால் அதற்கு வீரனஞ்சான், அவன் கிளர்ந்ததுணையானே அவர் தாங்கெடுவரென்பது தோன்ற நின்றமையின், இது பிறிதுமொழிதலென்னு மலங்காரம். வீரரல்லாதார் பலரினும் வீர னொருவனே யாடல் நன்றென்பதாம். இவை மூன்றுபாட்டானும் முறையே அரசனுக்குப் படை எனையங்களுட் சிறந்ததென்பதாம், அது தன்னுள் ளும் மூலப்படை சிறந்ததென்பதாம், அது தன்னுள்ளும் வீரன் சிறந்தா னென்பதாமுங் கூறப்பட்டன. (கூ)

விளக்கம் :—எலிகளெல்லாம் திரண்டு காகம் ஒன்றிற்குப் பகை யாகி அக்காகத்தின் எதிரே சமுத்திரத்தைப் போலக் கூச்சலிட்டா லும் அவ்வெலிகளின் கூச்சல் அக்காகத்திற்கு ஒரு தீங்குபத்தையும் செய்யாதென்றும், அகாகம் ஒன்றுமிருக்கினும் அது மூச்சு விடுமா யின் எண்ணிறந்தனவாகிய அவ்வெலிகள் இறந்துபோம் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, படைக்களத்தில் புறமுது கிடாத வீரர் அல்லாதார் பலர் ஒன்று கூடி தம் வீரத்தைக் காண்பிப்பதுபோல் இறைச்சலிட்டாலும் வீரனுயுள்ள ஒருவன் அவ்விறைச்சலுக்குப் பயப்படமாட்டானென்றும், அவன் கொஞ்சம் தன்னுடைய வீரத்தைக் காண்பிக்கப் புகுவானாயின் வீரரல்லாதார் பலரும் தாமே கெட்டுப் போவரென்றமை அறிவதுடன், வீரரல்லா தார் பலரை அரசன் தனக்குப் படைத்துணையாகப் பெற்றிருப்பதி னும் வீரனுயுள்ளவன் ஒருவனை வைத்துக்கொண்டு இருப்பது போதுமென்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இதுவரையும் அரசனுக்கு உரிய ஆறு அங்கங்களுள் படை யென்பது சிறந்தது என்பதும், அப்படையுள் மூலப்படை சிறந்த தென்பதும், அம்மூலப்படையுள்ளும் வீரனுயுள்ள ஒருவன் இருப்பது சிறப்பு என்பதும் அறிந்தோம். இனி, படையினது இலக்கணம் இதுவென்றறிய விரும்புகின்றேம்?" என்னுரும், ஆசி ரியர் கூறுவாராயினர்.

764. அழிவின் றறைபோகா தாகி வழிவந்த வன்க ணதுவே படை.

(பரி.) இ-ள். அழிவு இன்று=போரின்கட்கெடுதலின்றி—அறைபோ காதாகி=பகைவராற் கீழறுக்கப்படாததாய்—வழிவந்த வன்கண்மை அதுவே

படை=தொன்றுதொட்டுவர்க தறுகண்மையையுடையதே அரசனுக்குப் படையாவது. எ-று.

அழிவின்மையான் மறமானங்களுடைமையும், அறைபோகாமையான் அரசன்மாட் டன்புடைமையும் பெறப்பட்டன. வழிவந்த வன்கண்மை "கன்னின்ரு னெந்தை கணவன் களப்பட்டான்—முன்னின்று மொய்ய விந்தா ரென்னையர் - பின்னின்று —கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி—யெய்போற் கிடந்தானென் னேறு" * என்பதனு னறிக. குற்றிய லுகரத்தின் முன்னர் உடம்பினமெய் விகாரத்தான் வந்தது. இது வருகின்ற பாட்டுள்ளு மொக்கும். (கு)

விளக்கம் :—அரசனுக்குப் படையென்று கூறுவது யுத்த களத்தில் கெடுப் போகாததும், பகைவரால் சூழ்ச்சியோடு கெடுக் கப்படாததும், தலைமுறையாக வந்த அஞ்சாத வீரத்தன்மையுடை யதும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, வீரத் தன்மையும், பழிக்கு அஞ்சுகின்ற மானமும் ஆகிய இரண்டுடனே இருக்குமாயின் அவ்வித படையானது யுத்தத்தின் கண் கெட்டுப் போகாதென்றும், அரசனிடத்து அன்புடைய படையாயிருக்கு மாயின் பகைவரின் சூழ்ச்சியால் கீழறுக்கப்படாதென்றும், சந்ததி சந்ததியாக அரசனது வீரர்களாயிருந்தவர்கள் வழிவந்தவர்களாக இருந்தால் அவர்களே யுத்தகளத்தில் அஞ்சாது போரிடுவரென்றும் படையின் இலக்கணத்தை அறிந்தோமென்றனர். இதனைப் பரிமே லழகர் எடுத்துக் காட்டிய வெண்பாமாலை, வாகைப்படலம் 22-வது செய்யுளாலும் அறிதல்கூடும் என்றனர். அதுகேட்ட மாணாக் கர், "பகைவர் எதிர்த்த காலத்து கெடாதிருப்பது எவ்விதம்? வீர மும், புகழும் இருக்கினும் பொறுக்கும் வரையில் பொறுத்தல் கூடுமேயன்றி உயிர்க்குத தன்பம் வருங்காலத்தும் பொறுத்தல் கூடுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

765. கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு மாற்ற லதுவே படை.

(பரி.) இ-ள். கூற்று உடன்று மேல்வரினும்= கூற்றுவன் தானே வெகுண்டு மேல் வந்தாலும்—கூடி எதிர்நிற்கும் ஆற்றலதுவே படை=கெஞ்

* வெண்பாமாலை, வாகைப்படலம் 22.

சொத்து எதிர்நின்று தாங்கு மாற்றலை யுடையதே படையாவது. எ-று.

மருந்தில் கூற்றுகலின் * உம்மை சிறப்பும்மை. மிகப்பலர் நெஞ்சொத் தற்குக் காரணம் அரசன்மே லன்பு. ஆற்றல்=மனவலி. (கி)

விளக்கம் :—எல்லோர் உயிரையும் கொள்ளை கொள்ளுகின்ற யமனே கோபித்து மேல் வந்ததுபோல் பகைவர்கள் எதிர்த்த காலத்தும் ஒருவரோடு ஒருவர் மனம் ஒன்றுகூடி அப்பகைவர் எதிரில் நின்று யுத்தம் செய்து தாங்கும் வலிமையுடையதே படையென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, யமனே கோபித்து வந்தாலும் எதிர் நின்று தாங்கும் வலிமையுடையதே படையென்று கூறினமையால், பகைவர் எதிரில் நின்றால் உடலிலிருந்து உயிரை இழக்க நேரும்என்று திட்டமாகத்தெரிந்தும் அதைவிட்டு நீங்காதுபோரிட வேண்டுமென்றும், அவ்விதம் போராடுங் காலத்து வீரர்களெல்லாம் அரசன் மீதுள்ள அன்பினால் மிகப் பலர் நெஞ்சு ஒற்று ஆகவேண்டுமென்றும், அது அரசன் மீதுள்ள அன்பினால் ஆதல் வேண்டுமென்றும், அவ்வன்போடு மனவலியு மிருத்தல் வேண்டுமென்றும் அவ்வித தகுதியுடையதே படையென்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வித படையாளர் படைகளுக் காவல்போல் இருப்பர் அன்றே ? வேறு காவலும் வேண்டாம் போலும் !" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

766. மறமான மாண்ட வழிச்செலவு தேற்றம்
மெனநான்கே யேமம் படைக்கு.

(பரி.) இ-ள். மறம் மானம், மாண்ட வழிச்செலவு தேற்றம் எண் ணான்கே=தறுகண்மையும் மானமும் முன் வீராயினர் சென்ற நன்னெறிக் கட்சேறலும் அரசனுற் றேறப்படுதலுமென இந்நான்கு குணமே=படைக்கு ஏமம்=படைக்கு அரணவது. எ-று.

இவற்றுள் முறையே பகைவரைக் கடிந்நிறகொன்று நிற்றலும், அரசனுக்குத் தாழ்வுவாராமற் காத்தலும், "அழியுநர்புறக்கொடையில்லோர்ச் சாமை"† முதலியவும், அறைபோகாமையுமாகிய செய்கைகள் பெறப்பட்டன.

* மருந்தில் கூற்றத் தருந்தொழில் சாயா—புறநானூறு 3.

† வெண்பாமாலை, வஞ்சிப்படலம், 20.

இச்செய்கையார்க்குப் பகைவர் நணுகாராகலின், வேறரண் வேண்டா வென்பதாம். (சு)

விளக்கம் :—அஞ்சாத வீரச் செய்கையும், பழிக்கு அஞ்சும் மானமும், தனக்கு முன் இருந்த வீரர்கள் சென்ற நல்வழியின கண் தாமும் செல்லலும், அரசனுல் 'இவன் தக்கோன்' என்று அறியப்படுதலும ஆகிய இந்நான்கு குணமுமே படைக்கு அரண் ஆவது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, அஞ்சாத வீரத் தன்மையிருப்பதால் பகைவரை அதி சீக்கிரத்தில் கொன்று நிற்பா ரென்றும், பழிக்கு அஞ்சுகின்ற மானமுடையவரா யிருக்கின் தம அரசனுக்குத்தாழ்வுவருமாயின் தமக்குத்தாழ்வுவந்ததுபோல் எண் ணிப் பழிக்குப்பயந்து தாழ்வுவராமல் காப்பாரென்றும்,முன்வீரராயி னர் சென்ற நல்வழியே சென்று யுத்தம் புரிவதால் பகைவர்களால் சூழ்ச்சி செய்து வெல்லப்படாரென்றும், அரசன் தம்மைத் தெரிந்து கொள்ள வேண்டுவதற்கு வேண்டிய வினைகளைச் செய்யும் வீரத்தன் மையும இருக்குமாயின் அவ்வித குணம் அமைந்த வீரர்களே படை யைக் காக்கும் அரண்போல் இருப்பரென்றும், இவ்வித படைவீரர் கள் இருப்பதால் பகைவர்கள் பயந்து சமீபிக்கார் ஆதலால் வேறு அரண் வேண்டாமென்றும் அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணுக்கர், "படை வீரர்கள் யுத்தம் வந்த காலத்துத் தாமே மேல் சென்று யுத்தம் செய்தல் வேண்டுமோ? அல்லது யுத்தத்திற்கு வந்தவர்கள் தம் நாட்டில் வந்த பிறகு எதிர்த்து யுத்தம் செய்தல் வேண்டுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

767. தார்தாங்கிச் செல்வது தானே தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து.

(பரி.) இ-ள். தலைவந்த போர் தாங்கும் தன்மை அறிந்து = மாற்றரால் வகுக்கப்பட்டுத் தன்மேல்வந்த படையின்போரை விலக்கும் வகுப்பறிந்து வகுத்துக்கொண்டு—தார் தாங்கிச் செல்வது தானே = அவர் தூசியைத் தன் மேல் வாராமற் றடுத்துத் தான அதன் மேற் செல்வதே படையாவது. எ-று.

படைவகுப்பாவது:—வியூகம்; அஃது எழுவகையுறுப்பிற்றாய், வகையா னொன்காய், விரியான் முப்பதாம். உறுப்பேழாவன:—உரமுதற்கோடியீறா யின. வகைநான்காவன :— தண்டம், மண்டலம், அசங்கதம், போகமென விவை. விரி முப்பதாவன:-தண்டவிரி பதினேழும், மண்டலவிரி இரண்டும், அசங்கதவிரியாறும், போகவிரியைந்துமென விவை. இவற்றின பெயர்களும், இலக்கணமும் மண்டிரைப்பிற் பெருகும்; அவையெல்லாம் வடநூல்களுட் கண்டு கொள்க. இவை நான்கு பாட்டானும் படையினிலக்கணங் கூறப்பட் டது. (எ)

விளக்கம் :—பகைவர்களால் வகுக்கப்பட்டுத் தன்மீது வந்த படையினால் உண்டாகிய யுத்தத்தைத் தடுத்து விலக்கும் வகுப்பி னைத் தெரிந்து அதற்கு வேண்டியபடி தான் வகுத்துக் கொண்டு அவரது தூசிப்படை யென்னும் முன் படையாகிய கொடிப்படை தன்மேல் வாராவண்ணம் தடுத்துத தான் அப்படைமீது யுத்தம் செய்வதற்குச் செல்வதே படையாவது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், பகைவரது படைக்களத்தைக் கண்டு அப் படை பகைவரால் வகுக்கப்பட்டு உள்ளதென்று தெரிந்து அதற்குத் தக்க அளவாகத் தன்னுடைய படைகளை வகுத்து நிற்ப தூடன் அப்பகைவர் படையானது தன்மீது வந்து மோதுவதற்கு முன் தான் யுத்தத்திற்கு உரிய தும்பமாலையை அணிந்து எதிர் சென்று அப்பகைவரது படையைத் தாக்க வேண்டுமென்றும், அவ் விதம் முதலில வலியமை கொண்டு பகைவர் படையைத் தாக்கு தலால் வெறறி உண்டாகுமென்றும, அவ்விதமல்லாது பகைவர் படையானது தன்னை முதலில் தாக்குமாயின் வெற்றி யடைவது அருமையென்றும் அறிந்தோம் என்றனர். அன்றியும் படை வகுப்பு என்கின்ற வியூகம் இதுவென்று மேல் பரிமேலழகர் கூறி யிருக்கினும் அவ்வியூகமானது எழ்வித உறுப்பாகிய மார்பு ஒன்றும், இறக்கை இரண்டும், மத்தியம் ஒன்றும், பிரதிக்கிரகம் ஒன்றும், பிரிஷ்டம் ஒன்றும், கோடி ஒன்றும் ஆகிய உறுப்புகளோடு அமைக தள்ளது. தண்டம் முதலாகிய நான்கு வகையினுள் தண்டமாவது சேனையைக் குறுக்காக நிறுத்துவதும், மண்டலமென்பது பாம்புசுற் றிக் கொள்வதுபோல் சேனையைச் சுற்றி நிற்கிறதும், அசங்கதம என்பது சேனைகளை வேறுவேறுக நிறுத்துவதும், போகம் என்பது

யானை, தேர், குதிரை, காலாட்படை என்னும் நால்வித சைன்னியங் களையும ஒன்றன்பின் ஒன்றுக நிறுத்துவதும் ஆகுமென்றும், இக் நான்கு வகையினுள் தண்டவிரியாவது, பிரதரம், திருடகம், சீயா வஸ்தம், சுஷி, பிரதிட்டம், சுப்பிரதிட்டம், சீயேகம், விஜயம், சஞ்சயம், விராலம், நிஜயம், சூசி, ஸ்தூணை, கர்ணம், சமூமுகம், ரதா சியம், வலயம் என்கின்ற பதினேழும் மண்டல விரியாகிய சர்வதோ பத்திரம், தூர்ஜயம் என்னும் இரண்டும், அசங்கத விரியாகிய அர்த் தசந்திரம், உத்தானம், சிருங்காடகம், கர்க்கடகசிருங்காரி, காகபாரி, கோதிகா என்கின்ற ஆறும, போகவிரி என்கின்ற கோமூத் திரிகை, கிம்சகம், சஞ்சாரி, சகடம், பத்மம என்னும் ஐந்தும் காமந தக மென்னும் வடநூலுள் விரிவாகக் கூறப்பட்டுள்ளதால் அவ் வித நூல்களை யெல்லாம் கற்று உணர்ந்து படைகளை வகுக்கவேண்டு மென்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ் வித பாகுபாடுகள் பிறர் அமைப்பார்களாயின் அப்பாகுபாடுகளா லேயே வெற்றி உண்டாகும் போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

768. அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானை படைத்தகையாற் பாடு பெறும்.

(பரி.) இ-ள். தானை = தானை,—அடற்றகையும் ஆற்றலும் இல் எனி னும் = பகைமேற் முன் சென்றடுந் தறுகண்மையும் அது தன்மேல்வந்தாற் பொறுக்கு மாற்றலும் இல்லையாயினும்,—படைத்தகையால் பாடு பெறும் = தன்றோற்றப் பொலிவானே பெருமை யெய்தும். எ-று.

இல்லெனினு மெனவே, அவற்றதின்றியமையாமை பெறப்பட்டது. படைத்தகையென்றது ஒரு பெயர் மாத்திரமாய் நின்றது. தோற்றப் பொலி வாவது :—அலங்கரிக்கப்பட்ட தேர், யானை, குதிரைகளுடனும், பதாகை, கொடி, சூடை, பல்லியம், காகளமுதலியவற்றுடனும் அணிந்து தோன்று மழகு. பாடு—கண்டவளவிலே பகைவரஞ்சும் பெருமை. (அ)

விளக்கம்:—பகைவர்மீது தானை சென்று வெல்லுகின்ற தகு தியும வலிமையும் இலவெனினும, பலகவர் தன்மீது வருயுத்தம

செய்யும் காலத்தும் பொறுத்துக்கொள்ளும் பொறுமையும் வலிமையும் இல்லையாயினும், படையானது அது அமைக்கப்பட்டுள்ள அழகினால் பெருமை அடையும் என்று இக்குறள் கூறுகின்றது. அதாவது, மிக அலங்காரம் பெற்ற தேர், யானை, குதிரை, காலாட்படை என்கின்ற படைகளுடைய அழகும், கொடி, குடை, பல வாத்தியங்கள் ஆகிய உறுப்புகளும் அமைந்திருக்குமாயின், அவ்வழகினையும் பெருமையினையும் கண்ட அளவில் பகைவர் அஞ்சி அறுகு மாட்டார்களென்றும், படையினை அலங்கரிக்கும் தகுதியே வெற்றிக்கு ஏதுவாகுமென்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இனி, படையானது எவ்விதக் குற்றங்களில்லாதிருக்கின் அப்படை உண்மையாக வெல்லும் என்பதைக் கூறல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

769. சிறுமையுஞ் செல்லாத் துனியும் வறுமையு மில்லாயின் வெல்லும் படை.

(பதி.) இ-ள். சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும் இல்லாயின் = தான் நேய்ந்து சிறிதாகலும் மனத்தினின்று நீங்காத வெறுப்பும் கல்குரவும் தனக்கில்லையாயின்,—படைவெல்லும் = படை பகையை வெல்லும். எ-று.

விட்டுப்போதலும் நின்றது கல்கூர்தலும் அரசன் பொருள் கொடாமையான் வருவன. செல்லாத்துனியாவன:—மகளிரைவௌவல், இனிவராயின செய்தன் முதலியவற்றுள் வருவது. இவையுள்வழி அவன்மாட்டன்பின்மி உற்றுப்பொராமையின், 'இல்லாயின் வெல்லும்' என்றார். (க)

விளக்கம் :—படையானது சிறிது சிறிதாகத் தேய்ந்து மேபாகாமலும், மனத்தினிடத்தே நீங்காத வெறுப்பும், தரித்திரமும் தனக்கு இல்லாமல் இருக்குமாயின், அவ்விதப் படை பகையை வெல்லும் என்று இக்குறள் கூறுகின்றது. அதாவது, அரசனிடத்து அன்பில்லாவிடினும் அரசன் பொருள் கொடாவிடினும் படையானது விட்டு விலகுமென்றும், அவ்விதம் விட்டுப் போகாது இருக்க படையானது சரியாகப் பொருள் தரப்பெறாவிடில் தரித்திரமடைந்து அதனால் வெறுப்படையுமென்றும், படையினுள்

ளார் மகளிரை அரசன் அபகரிப்பதாலும் மற்றும் இழிந்த காரியங்களைச் செய்வதாலும் படைகள் வெறுப்பினை அடைந்து சிறிது சிறிதாகத் தேய்ந்துபோகுமென்றும், அவ்விதம் அல்லாது இருக்குமாயின் பகைவரது படையை வெல்லுதல் கூடுமென்றும் அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் படைவீரர் பலரிருக்கின் பகைவரை வெல்லுதல் கூடும் போலும்! தக்கதோர் தலைவர் வேண்டாவோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

770. நிலைமக்கள் சால வுடைத்தெனினுந் தானை தலைமக்க ளில்வழி யில்.

(பரி.) இ-ள். நிலைமக்கள் சால உடைத்து எனினும்=போரின்கணிலையுடைய வீரை மிகவுடைத்தேயாயினும்,—தலைமக்கள் இல்வழித் தானை இல்=தனக்குத் தலைவராகிய வீரரில்லாதவழித் தானை நில்லாது. எ-று.

படைத்தலைவர் நிலையுடையரன்றிப் போவாராயிற் காண்போரில் லெனப் பொராது தானும் போமென்பார், 'தலைமக்களில்வழியில்' என்றார். இவை மூன்று பாட்டானும் முறையே படைத்தகையின்மையானும், அரசன் கொடைத் தாழ்வுளானும், தலைவரின்மையானும், தாழ்வு கூறப்பட்டது. (ம)

விளக்கம் :—மேற்கூறிய வண்ணம் யாதொரு துன்பமுமில்லாமல் அரசனிடத்துப் பிரியாது நிலையுடைய போர்வீரர்கள் பலர் இருக்கினும், அவ்வீரர்களுக்குத் தலைவர் இல்லையாயின் படை நில்லாது என்று இக்குறளில் கூறுகின்றது. இதனால் பல படைவீரர் இருக்கினும் அவர்களை நடத்தும் அனுபவமுடைய தலைவர்கள் இல்லாவிடில் அப்படையானது பகைவரால் வலிப்புண்டு நிற்பதற்கு ஆற்றாது அழிந்துபோம் என்று அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "படையின் தகுதியில்லாமையும், அரசன் கொடைத்தாழ்வுகளாலும், தலைவரில்லாத தாழ்வினாலும் உண்டாகின்ற தீமைகளும், அவை இருக்குமாயின் அவற்றால் உண்டாகும் நன்மைகளும் இவையென்று அறிந்தோம். அவ்வித படைவீரர்களின் வீரம் இத்தகைத்தென அறிய ஆசைப்படுகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

78. அதிகாரம்.

படைச் செருக்கு.

(பரி.) அஃதாவது அப்படையது மறமிகுதி. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

விளக்கம் :—அதாவது, மேற்கூறிய வண்ணம் மாட்சிமை அமைந்த படைகளுக்கு உரிய வீரத்தின் மிகுதியே படைச் செருக்காதலால் படைமாட்சி என்பதற்குப் பிறகு இவ்வதிகாரம் வைக்கப் பட்டுள்ளது என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இப்படைச் செருக்கை முறையே பகரல் வேண்டும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

771. என்னைமுன் னில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்னின்று கல்லினின் றவர்.

(பரி.) இ-ள். தெவ்விர் என் முன் நின்று கல் நின்றவர் பலர்=பகை வீர், இன்றிங்கென்றலேவனெதிர் போரேற்று நின்று அவன்வேல்வாய் வீழ்ந்து பின்கல்லின்கண்ணே நின்றவீரர் பலர்,—என் முன் நில்லன்மின்—நீவிர் அதன்கணின்றும் தும்முடற்கணிற்றல்வேண்டின், என்றலேவனெதிர் போரேற்று நிற்றலே யொழிமின். எ-று.

'என்னை' எனத் தன்னெடு தொடர்புபடுத்திக் கூறினமையின், அவன் வேல்வாய் வீழ்தல் பெற்றும். கல்=நடுகல்.† "நம்பன் றிலேவாய் நடக குங்கணே மிச்சி லல்லா—லம்பொன முடிப்பூ ணாரசும்மிலே" † எனப் பதுமு

நடுகல்லிலக்கணம், தொல், பொருள், புறம், 5-ம் சூத்திரத்துட் காண்க.

† "பைம்பொற் புளகப் பருமக்களி யானையீட்டஞ்
சொம்பொ னெடுத்தேர்த் தொகை மாக்கடற்றானே வெள்ள
நம்பன் றிலேவாய் நடக்குங்கணே மிச்சிலல்லா
லம்பொன் மணிப்பூ ணாரசும்மிலே யென்று நக்கான்

சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், 317.

கன் கூறினாற்போல ஒரு வீரன் தன்மறம் அரசன்மேல் வைத்துக் கூறிய வாறு. இப்பாட்டு நெடுமொழிவஞ்சி. ‡ (க)

விளக்கம் :—யுத்தகளத்தில் பகைவரைக் கண்டகாலத்து அவரை நோக்கி, 'ஓ! பகைவர்களே! என்னுடைய தலைவன் எதிர் நின்று போர்செய்து, அவன் வேலால் கொல்லப்பட்டுப் பின்னர் அவ்வீரத்தை அறிவிக்கக் கற்கோளியர் என்ற வீரர் பலர் உண்டாதலால், இப்போது யுத்தத்திற்கு வந்தவர்களாகிய நீங்கள் அவரது வேலால் விழுந்து இறக்காமல் உம்முடைய உடல்களினிடத்தே உயிர்கள் இருக்கவேண்டுமாயின் என்னுடைய தலைவர் எதிர்நின்று யுத்தம்செய்தலை ஒழிந்து போய் விடுங்கள்' என்று கூறுவதே படைச்செருக்கென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, வீரன் ஒருவன் யுத்தகளததுத் தன்னை எதிர்த்த பகைவனைக் காணும் காலத்துத் தன்னுடைய வீரத்தன்மை இது என்றுகூறவேண்டுமாதலால் அவ்வாறு கூறுங்கால் அதைத்தன் மீது ஏற்றிக் கூறாமல் தன் அரசன்மீது ஏற்றிக் கூறுவது வழக்கென்றும், இவ்விதம் கூறுவதால் எதிர்ததுவந்த பகைவர் ஊக்கத்தோடு போர் செய்வதற்கில்லாது முதலிலேயே மனமுடைந்து ஓடிப்போவரென்றும் அறிகின்றோம் என்றனர். அன்றியும், இத்திருக்குறளால போரில்வெல்லாவிடில் புறமுதுகு இடாது யுத்தம் செய்கின்ற வீரர்கள் யுத்தத்தில் இறப்பாராயின் அவரது வீரத்தன்மையை மற்றைய வீரர்கள் அறியும பொருட்டு அவர்போன்று கல்லில் அடித்துப் பலரும்பார்க்க நடுகல்லாகவைப்பது வழக்கென்றும் அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் யுத்தம் செய்யுங்காலத்து வீரனாயுள்ள ஒருவன் தன்னை எதிர்த்துப் போர் செய்யவந்த ஒரு வீரனோடு போர்செய்தல் வேண்டுமோ? அன்றி எவரேனும் எதிர்த்தாராயின் அவர் எவ்வித தகுதியுடையவரேனும் அவரோடு போர்செய்தல் வேண்டுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

‡ நெடுமொழி வஞ்சியென்பது :—ஒன்னாதார் படைகெழுமித்தன்னாணமை யெடுத்துரைத்தன்று. வெண்பாமாலை, வஞ்சிப்படலம், 12.

772. கான முயலெய்த வம்பினில் யானை பிழைத்தவே லேந்த லினிது.

(பரி.) இ-ள். கான முயல் எய்த அம்பினில்=கானத்தின்கணோடும் முயலைப் பிழையாமலெய்த அம்பையேந்தலினும்—யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது=வெள்ளிடை நின்ற யானையை யெறிந்து பிழைத்த வேலை யேந்துதல் நன்று. எ-று.

கானமுயலென்றதனுள் வெள்ளிடைநின்றவென்பதும், பிழைத்தவென்றதனுற் பிழையாமலென்பதும், முயற்குத் தக எய்தவென்றதனுள் யானைக் குத்தக வெறிதலும், வருவிக்கப்பட்டன. இது மாற்றரசன் படையொடு பொருதானோர் வீரன் அது புறங்கொடுத்ததாக நாணிப் பின்னவன்மேற் செல்ல ஆற்றானது கூற்று. (2)

விளக்கம்:—காட்டிலோடும் முயலினைத் தவறுமல எய்த அம்பு மன்றினை ஒருவன் கையில் எந்ததனினும் வெளியிடத்தே நின்ற யானை ஒன்றின்மீது வீசி எய்யாது தவறிய வேல் ஒன்றினைக் கையில் ஏந்தி நிற்றல் நன்றென்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால் முயல் ஒன்றினைப்பெருங்காட்டினுள்தவறுது கொல்வதினும் வெளியிடத்தில் நின்ற யானை ஒன்றைகொல்ல முயற்சித்துப் பிழைபடுவதே நன்மையுடையது என்றமையால், வீரனுள்ள ஒருவன் தன்னோடு யுத்தம்செய்ய வந்த படையொன்று அந்தயுத்தத்திற்கு ஆற்றாது புறமுதுகிட்டு ஓடியகாலத்து 'தக்கதோர் யுத்தத்தைச் செய்யும் வீரரோடு போரிடுவதற்கு அமையாமல் போயிற்று அன்றே? இவ்விதம் புறமுதுகிட்டு ஓடிப்போகின்றவரிடம் போரிட்டு வெற்றி அடைவதினும் புறமுதுகிடாது நின்று யுத்தத்தில் இறக்கும் வீரர்களோடு யுத்தம் செய்வதற்கு இலாமற் போயிற்றே' என்று வருந்திக் கூறியதாக அறிகின்றோம். ஆதலால், வீரனென்பான் ஒருவன் தன்னோடு பொருத ஓர் வீரனோடு யுத்தம் செய்தல் வேண்டுமென்றும் தாழ்ந்தவரிடத்து யுத்தம் செய்தல் தகுதியல்ல வென்றும் அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் யுத்தம் செய்கின்ற வீரன் 'இவர் இன்னவர்' என்று தாக்ஷண்யம் கொண்டு யுத்தத்தைச் செய்தல் வேண்டுமோ? அல்லது 'படுகளத்தில் ஒப்பாரி இல்லை' என்ற பழமொழிப்படி யுத்தம் செய்தல் வேண்டுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

773. பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கா லூராண்மை மற்றத னெஃகு.

(பரி.) இ-ள். தறுகண் பேராண்மை என்ப = பகைவர்மேற் கண்ணோடாது செய்யும் மறத்தை நூலோர் மிக்கவாண்டன்மையென்று சொல்லுவர்,—ஒன்று உற்றக்கால் ஊராண்மை அதன் எஃகு (என்ப) = அவர்க்கு ஒரு தாழ்வு வந்ததாயிற் கண்ணோடி அது தீர்த்துக்கோடற்பொருட்டு ஊராண்மை செய்தலே நூலோர் அதற்குக் கூர்மையென்று சொல்லுவர். எ-று.

என்பவென்பது பின்னுமியைந்தது. ஊராண்மை = உபகாரியாந்தன்மை. அஃதாவது இலங்கையர்வேந்தன் போரிடைத் தன்னோ முழுதும்படத் தமியனாயகப்பட்டானது நிலைமை நோக்கி, அயோத்தியரிறை மேற்செல்லாது 'இன்று போய் நாளை நின்னோடு வா'வென விட்டாற்போல்வது. இவையிரண்டுபாட்டுந் தழிஞ்சி. (ங)

விளக்கம் :—பகைவர் மீது யுத்தஞ் செய்யச் சென்ற வீரன் ஒருவன்தான் யுத்தம் செய்யுங் காலத்துச் சிறிதும் தாக்ஷண்யமில்லாது யுத்தம் செய்வது மிகுந்த ஆண்மையென்று நூலோர் கூறுகின்றனரென்றும், அவ்விதம் யுத்தம் செய்யுங்காலத்து அப்பகைவர்க்கு யாதேனும் ஒருதாழ்வுவருமாயின் அக்காலத்துத் தாக்ஷண்யமடைந்து அவருக்கு நேர்ந்த துன்பத்தை நீக்குதல் பொருட்டு உபகாரியாக இருத்தல் வேண்டுமென்றும், அவ்விதம் செய்வதே மிகுந்த ஆண் தன்மையின் தகுதி என்று நூல்வல்லவர் கூறுகின்றனரென்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, வீரனொவ்வொரு தானயுத்தம்செய்யுங்காலத்துப் பகைவனிடத்துச் சிறிதும்தாக்ஷண்யமில்லாது யுத்தம் செய்து வெல்லல் வேண்டுமென்றும, அவ்விதம் யுத்தம் செய்யும்காலத்துப் பகைவன் தன் கையில் ஒன்று மில்லாது படைகளே யெல்லா மிழந்தும, சேனைகளே இழந்தும் நிற்பானுயின் அக்காலத்து முன் கொண்ட தாக்ஷண்ய மின்மையை விட்டுவிட்டு எல்லாவற்றையு மிழந்த அப்பகைவன் மீது அருளால் தாக்ஷண்யப்பட்டு அவனுக்கு வேண்டும் உபகாரங்களே யெல்லாம் செய்தல் வேண்டுமென்றும், அவ்விதம் செய்வதே யுத்த முறை யென்றும,

---

தழிஞ்சியென்பது:—அழிபவர் புறக்கொடை யயில்வா ளோச்சாக் கழிதறு கண்மை காதவித் துரைத்தன்று—வெண்பாமாலை, வஞ்சிப்படலம்,3.

அதுவே பேராண்மை யுடையது என்றும், பிறர்க்கும் அழகென்றும் அறிந்தோம். இதனைப்பண்டைக் காவியங்களுள் ஒன்றாகிய இராமாயணத்துள் கம்பர் கூறியதையே முதலாகக் கொண்டு உரை ஆசிரியர், பரிமேலழகர், 'அயோத்தியின் அரசனாகிய இராமன் இலங்கையின் அரசனாகிய இராவணனை நடத்தியது போல் என்றெடுத்துக் காட்டினார். இவ்வித மெடுத்துக் காட்டிய கதைக்கு உரிய செய்யுள்களைப் பின்னர் காணுதல் கூடும.

" அண்டர்நாயகனடுசிலையுதைத்தபேரம்பு
கொண்டுபோகப்போய்க்குரைகடல்குளித்தவக்கொள்கை
மண்டலந்தொடர்வயங்குவெங்கதிர்களைவாயால்
உண்டகோளொடுவொலிகடல்விழ்ந்ததுமொக்கும்.
சொல்லுமத்தனையளவையின்மணிமுடிதுறந்தான்
எல்லிமைத்தெழுமதியமுஞாயிறுமிழந்த
அல்லுமொத்தனன்பகலுமொத்தனனமர்பொருமேல்
வெல்லுமத்தனையல்லதுதோற்றிலாவிறலோன்.
மாற்றருந்தடமணிமுடியிழந்தவாளரககன்
ஏற்றமெவ்வுலகத்தினுமுயர்ந்துளானெனினும்
ஆற்றநன்னெடுங்கவிஞனாரங்கதமுரைப்பப்
போற்றரும்புகழிழந்தபேரொருவனும்போன்றான்.
அறங்கடந்தவர்செயலிதென்றுலகெலாமார்ப்ப
நிறங்கரிந்துகானிலம்விரல்கிளைத்திடநின்றான்
இறங்குகண்ணினனெல்லழிமுகத்தினன்றலையன்
வெறுங்கைநாற்றினன்விழுதுடையாலன்னமெய்யன்.
நின்றவந்நிலைநோக்கியநெடுந்தகையிவனைக்
கொன்றலுன்னிலன்வெறுங்கைநின்றானெனக்கொள்ளா
இன்றவிந்ததுபோலுமுன்றீமையென்றிசையோ
டொன்றுவந்தனவாசகமினையனவுரைத்தான்.
அறத்தினாலன்றியமரர்க்குமருஞ்சமங்கடத்தல்
மறத்தினாலரிதென்பதுமனத்திடைவலித்தி
பறத்திநின்னெடும்பதிபுகவிமைப்பினிற்பாவி
இறத்தியானதுநினைக்கிலென்றனிமைகண்டிரங்கி.

உடைபெருங்குலத்தினொடுமுறவொடுமுகவும்
படைக்கலங்களுமற்றுநீதெடியபலவும்
அடைத்துவைத்தனதிறந்துகொண்டாற்றுதியாயின்
கிடைத்தியல்லேயெலெளித்தியாற்சிறுதொழிற்கீழோய்.
சிறையின்வைத்தவடன்னெவிட்டுலகினிற்றேவர்
முறையின்வைதுதுன்றம்பியையிராக்கதமுதற்பேர்
இறையின்வைத்தவற்கேவல்செய்திருத்தியாலன்றேல்
தறையின்வைக்கிலெனின் தலைவாளியிற்றடிந்து.
அல்லேயாமெனிஞாமசாற்றெனுக்தோற்றம்
வல்லேயாமெனினுனக்குளவலியெலாங்கொண்டு
நில்லேயாவெனதேர்நின்றுபொன்றுகியெனினும்
கல்லேயாகுதிபிழைப்பினியுண்டெனநயவேல்
ஆளியாவுனக்கமைத்தனமாருதமறைந்த
பூளையாயினகண்டனெயின்றுபோய்ப்பொரற்கு
நாளைவாவெனநல்கினனுகிளங்கமுகின்
வாளைதாவுறுகோசலைநாடுடைவள்ளல்.

அதாவது; முதல் நாள் போரில் இராவணனுவன் தன் சைன்னியங்களையும், படைக்கலங்களையும, பதகுக் கிரீடங்களையும் ராமனது அம்புகளால் இழந்தபிறகு தலைவணங்கி நிலத்தைக் காலால் கீறி நின்றதைக் கண்ட இராமன் 'இன்றையதினமை உன் தீச்செயல்களெல்லாம் ஒழிந்தது போலும்! தேவராயினும் அறத்தின் வழியல்லாது மறத்தின் வலிமையால் யுத்தத்தில் வெற்றி கொள்வதில்லை என்பதை நீ உன் மனத்திற் கொள்வாயாக! நீ இனியேனும் உனது சுற்றத்தவரோடும், தேடிய பொருள்களோடும் உலகத்து வாழ வேண்டுமாயின் சிறையில் வைத்துள்ள எனது தலைவியை என்னிடத்துக் கொண்டு வந்து விடுதலோடு உன் தம்பியாகிய விபீஷணனை இலங்கைக்குத் தலைவனுக்கி அவனுக்கு ஏவல் செய்து வருதல் வேண்டும். அல்லேயேல் உன்னுடைய வலிமை யெல்லாம் கொண்டு யுத்தம் செய்யினும் இனி உனக்குப் பிழைப்பென்பதே இல்லையாகும். அதனை இன்றையப் போரில் அறிந்தாய் போலும்! ஓ! இராவணு! இப்போது நீ நிற்கின்ற நிலையில் உனக்கென்ன நீ ஆள்வதற்கு உரிய பொருள்கள் எவையேனும உளவோ? நீ கொண்டு வந்த பொருள்களெல்லாம்

பெருங் காற்றில் அகப்பட்ட பூஞ்சப்பூப்போல் ஆயின கண்டனை அன்றே? ஆதலால், உனக்கு யுத்தம் செய்வது விருப்பமாயின் இன்றுபோய் நாளை வருதல் கூடும்!" என்று போரில யாவு மிழக்த இராவணனுக்கு உயிர்க்கு உபகாரியாய் இருந்தானதலால் இக்கிருக் குறளில் கூறிய ஊராண்மை என்பதற்கு இராமனையே இலக்காக உரை ஆசிரியர் எடுத்துக் காட்டினார் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் வீரன் ஒருவன் தோற்று நிற் பதைக் கண்ட மற்றொரு வீரன் உபகாரியாக இருக்க காலத்து உபகாரம் பெற்ற வீரன் அவ்வளவோடு உயிரைக் காப்பாற்றிக் கொண்டு ஓடிவிடுதல் தகுதியோ? அல்லது தன் பெருமையை நிலை நாட்ட யுத்தம் செய்வது தகுதியோ?" என்று கேட்டனும், ஆசிரியர் கூறுவாராயினர்

774. கைவேல் களிற்றெறு போக்கி வருபவன் மெய்வேல் பறியா நகும்.

(பரி.) இ-ள். கைவேல் களிற்றெறு போக்கி வருபவன்=தன் கைப் படையாய வேலைத் தன்மேல்வந்த களிற்றெறு போகவி டாநின்ற களிற் றுக்கு வேலுடித்திரிவான்—மெய் வேல் பறியா நகும்=தன் மார்பினை வேலைக்கண்டு பறிந்து நகுமிழுக். எ-று.

களிற்றெறு போக்கல்=களிற்றின் வயிரைக் கொடிபோமாறுவிடுதல். மிழற்கி தேடியதெய்தலான். இதனுட் களிற்றைவல்லதியானென்பதூ உம், தினமருகியான் வேலிடை போந்ததற்கு பயனென்பதூ உம், பின் னும் போர்மேல் விரும்பினனென்பதூ உம் பெறப்பட்டன. நூறிலாட்டி.*(சு)

விளக்கம்:—வீரனென்பான் தன் கையிலுள்ள ஆயுதமாகிய வேல் ஒன்றினைத் தன்மீது பாய்ந்து வருகின்ற யானையின் மீது எறிந்தது மீதிருக்கும், மற்றொரு யானையை வெல்வதற்கு மற்றொரு வேலினைக் கொண்டவன் தன் மார்பினிடத்தே பகைவரால் எய்யப்பட்டிருக்கும் வேலைப் பார்த்து அதனைப் பிடுங்கி எறிந்து மகிழ்வான் என்று இக் கிருக்குறள் கூறுகின்றது. இதனால், வீரனென்பான் ஒரு முறை தன் கையிலுள்ள படை யெல்லாம் ஒழிந்தும் அதற்காக அஞ்சாது

*நூறிலாட்டென்பது:—எனக் கழுமிய பாடபேதை—வளைந்த நிலவேல் பறித்தோச்சென்று,—வெண்பாமாலை, தும்பைப் படலம். 16.

தன் உயிர் இழப்பதையும் கருதாது தன் மார்பில் புதைந்து கிடந்த வேலினைப் பறித்து எய்வான் என்னும் குறிப்பால், போர் செய்கின்ற காலத்தில் தனக்குள்ள கோபமிகுதியால் தன் மார்பில் வேல் பாய்ந்ததும் அறியவில்லை யென்றும், போரின் மீதேயே விருப்பமுள்ளவன் என்பதையும் அறிகின்றோம். ஆதலால் புற முதுகிடாது போரில் உயிரிழக்கும் வீரனே வீரனாவான் என்றும் 'இன்றுபோ நாளைவா என்றான்' என்று கூறியபடி இராவணன் அன்றுபோய் அன்றைய மறுதினமும் மற்றத் தினங்களிலும் போரினைச் செய்து கடைசியாகப் படைக்களத்தில் இறந்து விட்டமையே வீரனுடைய தகுதியை நன்கு எடுத்துக் காட்டும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதப் போர்புரியும் வீரன் ஒருமுறை நின்ற இடத்து அசையாது யுத்தம் செய்தல் வேண்டும் போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

775. விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி னோட்டன்றோ வன்கணவர்க்கு.

(பரி.) இ-ள். விழித்த கண் = பகைவரை வெகுண்டுநோக்கியகண் — வேல்கொண்டு எறிய அழித்து இமைப்பின் = அவர் வேலைக்கொண்டெறிய அஃதாற்றாது அந்நோக்கையழித்து இமைக்குமாயின்,—வன்கணவர்க்கு ஓட்டு அன்றோ = அது வீரர்க்குப் புறங்கொடுத்தலாம். எ-று.

அவ்வெகுளிநோக்கமீட்டலும் போரின்கண் மீட்சியெனக்கருதி அது வஞ் செய்யாரென்பதாம். (௫)

விளக்கம்:—போரில் பகைவரைக் கோபித்துப் பார்த்த கண்ணானது அப்பகைவர் இவன்மீது கோபித்து வேல் ஒன்றினைக்கொண்டு எறிவராயின அவ்வேலிற்கு ஆற்றாது பயந்து முன்பார்த்த கோபப் பார்வையை ஒழித்து இமைக்குமாயின், அவ்வித தகுதி வீரர்க்குப் புறங்கொடுத்தல் ஆகுமென்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால் நீர் முன் வினவியபடி இடம்விட்டு அசைதல் மாத்திர மல்லாமல் ஒருமுறை கோபித்துப் பார்த்த பார்வையினின்றும் விட்டு நீங்குதல் ஆகாதென்றும், பகைவர் எத்துணைத் தகுதியோடு கூடிய யுத்தங்களை நடத்தினும் அதற்காக அஞ்சுதல் கூடாதென்றும், அவ்வஞ்சுதல் இமைகொட்டாது பார்க்கின்ற கோபப்பார்வை

கொண்ட கண் அஞ்சுதற்கு உரிய இமை கொட்டுமாயினும் அது வீரத்தன்மையாகா தென்றும் கூறுவதால் வீரனென்பான் யுத்தத்தில் நின்ற நிலையில் யுத்தம் செய்வான் என்பது பொருளாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "வீரனென்பான் ஒரு முறை ஓர் யுத்தத்தில் வெற்றியை அடைந்து நிற்பதினாலேயே மகிழ்ந்து நிற்பனோ? அன்றி ஆயுட்காலம் முழுவதும் போரினை விரும்புவனோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

776. விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள் வைக்குந்தன் னாளை யெடுத்து.

(பரி.) இ-ள். தன் நாளை எடுத்து=தனக்குச் சென்ற நாள்களையெடுத்தெண்ணி,—விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள் வைக்கும்=அவற்றுள் விழுப்புண்படாத நாள்களையெல்லாம் பயன்படாது கழிந்தநாளுள்ளே வைக்கும் வீரன். எ-று.

விழுப்புண்=முகத்தினும் மார்பினும் பட்டபுண். போர்பெற்றிருக்கவும் அது பெறாத நாள்களோடுங் கூட்டுமென்பதாம். இவை மூன்றுபாட்டானும் ஊறஞ்சாமை கூறப்பட்டது. (சு)

விளக்கம்:—வீரனென்பான் தனக்குச் சென்ற நாட்கள் இவை என்றெண்ணி அவ்விதமெண்ணிய நாட்களில் பெரிய தோர் புண்ணினை அடையாத நாட்களையெல்லாம் பயனடையாமல் கழிந்த நாள்கள் என்று எண்ணுவான் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால் வீரனென்பான் தினந்தோறும் யுத்தத்தைச் செய்ய விரும்புவானென்றும், அவ்விதம் செய்யும் யுத்தத்தில் புறமுதுகு இடாமையால் முகத்தினும், மார்பினும் புண்ணினை அடைய விரும்புவானென்றும், தினந்தோறும் யுத்தம் செய்தும் தனக்கு அஞ்சி ஓடிப்போகின்ற வீரரோடு யுத்தம் செய்ததில் மகிழாது தன்னை எதிர்த்துப் போர்செய்து தன் முகத்தின்மீதும், மார்பின்மீதும் புண்படும்படியாக யுத்தம் செய்வதற்கே மகிழ்வானென்றும், அவ்விதம் புண்பட்ட நாள்களையே தன் ஆயுட்காலத்தில் பயன்பட்ட நாள்களென்று எண்ணுவானென்றும், ஏனைய நாட்கள் பயன்படாது ஒழிந்த நாள்களென்று வருந்துவா

னென்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர் இதனால் வீரனென்பான் தன்மீது படும் காயத்திற்கு அஞ்சமாட்டான் என்பது அறிந்தோம. வீரன் ஒருவனுக்கு இவ்வுலகத்து வாழும் இன்பத்தில் விருப்பமில்லை போலும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

777. சுழலு மிரைவேண்டி வேண்டா வுயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து.

(பரி.) இ-ள். சுழலும் இரைவேண்டி வேண்டா உயிரார்—துறக்கத்துத் தம்மொடு செல்லாது வையத்தைச் சூழ்ந்து நிற்கும் புகழைவேண்டி உயிர் வாழ்தலை வேண்டாத வீரர்—கழல் யாப்புக் காரிகை நீர்த்து—கழல் கட்டுதல் அலங்கார நீர்மையையுடைத்து. எ-று.

வையத்தைச சூழுமெனவே, அதன் பெருமை பெற்றும். செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. சூழ்தல்—அகத்திடல். துறக்கமும் புகழும் எளிதில் நெய்துவராகலின், ஆபரணமாவது அதுவே யென்பதாம். (எ)

விளக்கம்:—துறக்கமென்கின்ற தேவலோகாட்டிற்குத் தம்முடன் வாராது இவ்வுலகத்திலேயே பரவி நிற்கும் புகழினை விரும்பி உயிர் வாழ்தலை விரும்பாத வீரர் பரிணிடத்தே கழல் என்னும் வீரகண்டையைக் கட்டிக் கொள்ளுதல் அலங்காரத் தன்மை யுடையதே ஆகும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, உலகத்துள் பொருள் தேடிச் செய்ய வேண்டுவன யாவும் செய்து இம்மைப் புகழையும், மறுமைப் போகத்தையும் அடைய விரும்புவார் நெடுங்காலம் அவ்வொழுக்கத்தில் நின்று அதனைச் செய்ய வேண்டுமாதலால், அவ்விதம் வருந்தாது யுத்தகளத்தில் போர் வீரனாக நின்று உயிரைத் துறும்பென மதித்து இறந்து விடுகின்ற வீரன் இம்மைப் புகழையும், மறுமைப் போகமாகிய தேவ போகத்தையும் ஒருங்கே அடைந்து விடுகின்றான். ஆதலால், அவ்வித வீரச் செயலே தக்கதென்றும், அவ்விதம் உயிரைத் துறும்பாக மதிக்கும் வீரன் ஒருவனுக்குக் காலில் வீரகண்டை அணிவதும் வேண்டாமென்றும், அவ்விதம் அணிந்து கொள்வது அலங்காரத் தன்மை யுடையது ஆகுமே அன்றி வேறு பயனைத் தருவதில்லை என்றும்

அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணக்கர், "இவ்வித வீரர் தம் அரசன் எவ்வகாலத்து யுத்தத்தை அவன் சொல்லியவாறு செய் வரோ? அல்லது தம் மனம்போல் செய்வரோ?" என்னலும், ஆசிரி யர் கூறுவாராயினர்.

778. உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்
செறினுஞ்சீர் குன்ற லிலர்.

(பரி.) இ-ள். உறின் உயிர் அஞ்சா மறவர்=போர்பெறிற் றம்முயிர்ப் பொருட்டஞ்சாது அதன்மேற்செல்லும் வீரர்—இறைவன் செறினும் சீர் குன்றல் இலர்=தம்மிறைவன் அது வேண்டாவென்ற முனியினும் அவ்வீர மிகுதி குன்றார். எ-று.

போர்பெற்றறியாமையின், அதுபெற்றால் அரசன் றடுப்பினும் நில்லா ரென்பதாம். பிறரும் "போரெனிற் புகலும் பூணகழன் மறவர்" * என்றும் "புட்பகைக்—கேவா ஞகலிற் சாவேம் யாமென—நீங்கா மறவர் விங்குதோள் புடைப்ப" † என்றுங் கூறினர். (அ)

விளக்கம்:—யுத்தம் வருங்காலத்துத் தம்முயிரை இழந்து விடு வோம் என்று அஞ்சாமல் யுத்தத்தின் மீதே செல்லுகின்ற வீரர் கள் தம்முடைய தலைவனுகிய அரசன் யுத்தத்திற்குச் செல்லவேண் டாமென்று கோபிக்கினும் தம்முடைய வீரத்தில் குறையாது யுத தத்திற்குச் செல்வார் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இத னால், இவ்வீரரது ஆற்றலைக் கேட்ட மற்றைய அரசர்கள் படை யெடுப்பதற்கே அஞ்சி நிற்பரென்றும், அவ்விதம் படை எடா திருந்த அரசர் ஒர் காலத்தில் தம்முடைய படைச் செருக் கால் படை யெடுத்து வந்தாராயினும் அதைக் கண்ட வீரரானவர் 'நெடும் பொழுது யுத்தம்' என்பதே இல்லாது வீணுள் கழித் தோம்; இப்போது யுத்தம் வந்துவிட்டது; இது நம்முடைய நன்னு ளாகும்' என்றெண்ணி யுத்தத்திற்கு மகிழ்ச்சியோடு செல்வரென் றும், அவ்வாறு செல்லுங் காலத்து அரசன் வேண்டாமென்று கோபித்துத் தடுக்கினும் அதற்காக அஞ்சாது யுத்தம் பெற்ற தையே மகிழ்ச்சியாகக் கொண்டு யுத்தத்திற்குச் செல்வரென்றும் அறிந்தோம். ஆதலால், நீங்கள் மேல் வினவியபடி வீரனென்பான்

* நாலடி, 31. † புறநானூறு, 68.

எக்காலத்தும் யுத்தத்தை விரும்ப வேண்டும் என்றும், அரசன் தடுக்கினும் யுத்தத்தில் உள்ள மகிழ்ச்சியால் யுத்தம் செய்யவேண்டு மென்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "வீரனு வான் 'நான் இப்போரைச் செய்து முடிப்பேன்' என்று வஞ்சினங் கூறிச்சென்று வெற்றியடையாது இறப்பானுயின், அக்காலத்து உலகோர் அவனை இகழாது புகழ்வரோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

779. இழைத்த திகவாமைச் சாவாரை யாரே பிழைத்த தொறுக்கிற் பவர்.

(பா.) இ-ள். இழைத்தது இகவாமைச் சாவாரை=தாங்கூறின வஞ்சினத்தப்பாமற்பொருட்டுச் சென்று சாவல்லவீரரை—பிழைத்தது ஒறுக்கிற்பவர் யார்—அது தப்பியவாறு சொல்லி யெள்ளுதற்குரியார் யாவர்! எ-று.

இழைத்தல்=இன்னது செய்யேனுயின் இன்னனுகுகவெனத் தான் வகுத்தல். சொல்லியென்பது அவாய்நிலையான் வந்தது. வஞ்சினமுடிப்பான் புகுமுன்னே சாலினுந் தொலைவன்மையின், அது முடித்தாராவதெனச் சாதற்சிறப்புக் கூறியவாறு. (கூ)

விளக்கம்:—தாம் கூறிய வஞ்சினம தப்பாமற் பொருட்டு யுத்ததிற்சென்று சாகவல்லவராகிய வீரரை அவ்வஞ்சினம முடியாமல அவர் இறந்ததைக்குறி இகழ்ந்து பேசுபவர் யாவர் என்று இத்திருக் குறள் வினவுகின்றது. அதாவது, போர்க்களத்துச் சென்று 'என் பகைவனுகிய இவனை இவ்விதம் செய்யேனுயின் நான் ஒரு வீரனே அல்லேன்' என்பது முதலாகப் பல சபத வார்த்தைகளைக் கூறி அவனி தமே போரிற் சென்று தன் சபதத்தை முடிக்கக்கருதி அதி முடி வதற்கு முன்னமே பகைவனுல் இறப்பானுயினும், அவனிறத்தலால் சபதம் முடித்தவனுகவே உலகோர் கருதுவரே அன்றி, சபதம் முடி யாமல் இறந்தான்' என்று யாரும் பழியா ரென்றமையால் போரிற் சென்று யுத்தகளத்தில் இறப்பான் ஒருவன் புகழுக்கே உரியனுவான் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் சாதலால் உலகோர் புகழ்வர் என்று அறிந் தோம். ஆயின், இவ்வித வீரனை மனத்து ஆண்டவனுகிய அரசன் தன் போர்வீரர் தனக்காக இறந்தமை பற்றி எவ்வாருக் கரு

துவான் என்பதையும் அறிய ஆசைப்படுகின்றேம் என்னலும் ஆசிரியர் கூறுவாராயினர்.

780. புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து.

(பத.) இ-ள். புரந்தார் கண் நீர் மல்கச் சாகிற்பின் = தமக்குச் செய்த நன்றிகளை நினைந்து ஆண்டவராசர் கண்கள் நீர் மல்கும் வகை போர்புரிந்து சாவுப்பெறின், —சாக்காடு இரந்து கோட்டக்கது உடைத்து = அச்சாக்காடு இரந்தாயினுங்கொள்ளுந் தகுதியையுடைத்து. எ-று.

மல்குதலாகிய இடத்து நிகழ்பொருளின்றெழில் இடத்தின்மேனின்றது. கிளையழ இல்லிடை நோயால் வினைவார் பழவினைப்பயனேயெய்துதலின், அடுத்தவினையாற் றுறக்கமெய்துஞ் சாதலை 'இரந்துகோட்டக்க துடைத்து' என்றார். இதை நான்குபாட்டானும் உயிரோம்பாமை கூறப்பட்டது. (ம)

. விளக்கம்:—தமக்குச்செய்த நன்றிகளை எண்ணி ஆண்ட அவ்வரசர்களது கண்களினின்றும் ஜலமானது பெருகி வழியுமபடி யுத்தத்தினிடத்தே சாகக் கூடுமாயின், அவ்விதசாதலானது யாசித்தாயினுமஅடையும தகுதியுடையதாய் உள்ளது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், யுத்தகளத்தில் தன்னுடைய அரசன்தான் செய்த வீரத்தன்மைக்காகத தன்னை நினைந்து துக்கிக்கும்படிச் சாதலால் துறக்கமென்கின்ற தேவபோகத்தை அடைதல் கூடுமென்றும, அவ்விதமலலாது இல்லத்தினிடை இறப்போராகிய உலகத்தவர் நோய் முதலிய கொணடு இறத்தலால் அவா செய்த முன் வினையின் பயன்படியே எதேனும பலனை அடைதல்கூடுமேஅன்றி, இவ்விதம வீரசொர்க்கத்தை அடைதற்கு இல்லையாதலால இவ்வித வீரசொர்க்கத்தை அடையும், யுத்தகளத்தில் சாகும்சாவினை ஒருவன் யாசித்தாயினும கொள்ளல் வேண்டுமென்பதால் இவ்வித வீரத்தன்மையே சிறந்ததென்றும அறிந்தோம என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இப்படைச்செருக்கு என்னுமதிகாரத்தால் வீரரின் தன்மை, அவர் உயிர்ஓம்பாது யுத்தகளத்தில் சாவும சாவினால் வரும் பயன் ஆகிய யாவுமறிந்தோம. இனி அரசனுக்குக் கூறிய அங்கங்கள் ஆறனுள் மிகுந்து உள்ளதாகிய நட்பு என்பதையும கூறல்வேண்டும" என்னலும, ஆசிரியர் கூறுவாராயினர்.

79. அதிகாரம்.

நட்பு.

(பரி.) இனி அப்படைபோல அரசனுக்கு வினையிடத்துதவுவதாய நட்பினை ஐந்ததிகாரம் விதிமுகத்தானும் பன்னிரண்டதிகாரம் எதிர்மறைமுகத்தானுங் கூறுவான்முடங்கி, விதிமுகவதிகாரமைந்தனுள்ளும் முதற்கண் நட்புக் கூறுகின்றார். அஃதாவது இன்னதென்பதூஉம் அதிகாரமுறைமையும் இதனுள் விளங்கும்.

விளக்கம் :—அதாவது, இனி மேற்கூறிய படையின் தகுதியைப் போல் அரசனுக்கு அவன் செய்யும் தொழிலிடத்து உதவுவதாகிய நட்பு என்பதனைக் கூற ஆரம்பித்து, ஐந்து அதிகாரங்களால் அந்நட்பினைச் செய்யவேண்டும் விதம இதுவென்று விரித்துக்காட்டியும், பன்னிரண்டு அதிகாரங்களால் இவ்விதம் செய்தலாகாது என்று விலக்கிக்காட்டியும் சொல்லவேண்டி ஆரம்பித்து முதலில் விதிமுகமாயுள்ள ஐந்து அதிகாரங்களுள் முதலாவதாகிய நட்பு என்பதனைக் கூறுகின்றனர். அந்நட்பாவது இது என்பதும், படைச செருக்கினுக்குப் பிறகு ஏன் வைக்கப்பட்டுள்ளது என்பதும இவ்வதிகாரத்தினுள் விளங்குமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "நட்பென்பது அரசனுக்குக் கூறி இருக்கினும உலகத்தோர் யாவர்க்கும அதனினும் சிறந்ததில்லை என்று பலர் கூறக்கேட்டிருக்கின்றோம். அவ்விதநட்பினை நன்கு விளக்கல வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

781. செயற்கரிய யாவுள நட்பி னதுபோல் வினைக்கரிய யாவுள காப்பு.

(பரி.) இ-ள். நட்பின் செயற்கரிய யா உள = நட்புப்போலச் செய்து கோடற்கரிய பெரும்பொருள்கள் யாவையுள!—அதுபோல் வினைக்கு அரிய காப்பு யா உள = செய்துகொண்டால் அதுபோலப் பகைவர் செய்யும் வினைக்குப் புகற்கரிய காவலாவன யாவையுள! வ-று.

நடப்புச்செய்தற்காவாரைப் பெறுதலும் பெற்றுச் செய்யுமுபாயமும் செய்தாற் றடைப்பின்றி நிற்றலுமுதலிய அரியவாகலின் நட்பிற் செயற்கரியன வில்லையென்றும, செய்தாற் பகைவராஞ்சி வினைதொடங்காராகலின் அதுபோல வினைவாராமைக்கு அரிய காவலில்லையென்றுங் கூறினர். நட்புத்தான்

இயற்கை செயற்கையென இருவகைப்படும். அவற்றுள் இயற்கை பிறப்பு முறையானாய தாஉம் தேயமுறையானாய தாஉமென விருவகைப்படும். அவற்றுண் முன்னையது சுற்றமாகலின் அது சுற்றந்தழாலினடங்கிற்று; ஏனையது பகையிடையிட்ட தேயத்ததாகலின், அது துணைவலியென வலியறிதலுளடங்கிற்று. இனி நண்டுச் சொல்லப்படுவது முன்செய்த வுதவிபற்றிவருஞ் செயற்கையேயாகலின், அதன் சிறப்பு இதனாற் கூறப்பட்டது. (க)

விளக்கம் :—நட்பினைப்போலே செய்து அடையக்கூடிய பொருள்கள் எவையேனும் உளவோ? அந்நட்பினைப் போல் ஒருவனுக்குப் பகைவர் செய்யும் தீங்காகிய வினையைத் தடுத்தற்கு உரிய அரியகாவல் எவையேனும் உளவோ? என்று இத்திருக்குறள் வினவுகின்றது. அதாவது, நட்பினைச் செய்யவேண்டுமாயின் நட்பிற்கு உரியாரைப் பெறுதல் மிகுதியும் அருமையென்றும், அவ்விதம் பெறினும் அந்நட்பினைச் செய்யும் உபாயத்தை அறிதல் வேண்டுமென்றும், அவ்விதம் உபாயம் அறிந்து செய்யுங்காலத்து அந்நட்பானது மாறுபாடு அடையாது நிற்கவேண்டுமென்றும் அறிகின்றோமாதலால், முதலில் நட்பினைச் செய்வது மிக அருமையென்றும், அந்நட்புத்தான் கைகூடிவிடுமாயின் அதைக் கொண்ட ஒருவனைக் கண்டகாலத்து அவன் பகைவர் மிகப் பயந்தவராய் அவன் மீது பகைகொண்டு எதிர்க்கமாட்டாரென்றும், ஆதலால் நட்பைப்போல் பகைவரைத் தடுக்கும் காவல் வேறொன்றுமில்லையென்றும அறிகின்றோம். அன்றியும் அவ்வித நட்பு இயற்கை நட்பென்றும், செயற்கை நட்பென்றும இரண்டு விதப்படும அவ்விரண்டனுள் இயற்கையாக அமைந்த நட்பானது ஒருவருக்கொருவர் சாதியால் உண்டாவதும், தேசமுறையால் உண்டாவதும் ஆக இரண்டு விதப்படும். இவ்விதம் சாதியும், சுற்றமும் ஆகியவற்றால் உண்டாகிய நட்பினை முன்னரே "சுற்றந்தழால்" என்று அரசனுக்குக் கூறிய அரசியலுள் ஐம்பத்து மூன்றாமதிகாரமாக வைக்கப்பட்டு உள்ளதால் அவ்வித நட்பு அதனுள் அடங்கிற்று. இனி தேசமுறையால் உண்டாகும் நட்பானது பகைவர் எதிர்த்த காலத்து உண்டாகின்றதாதல் பற்றி அது வலியறிதல் என்னும நாற்பத்தெட்டாம் அதிகாரத்துள் "துணை வலியென"க் கூறியதாயிற்று. ஆகவே இயற்கை அல்லாது முன்செய்த உதவி ஒன்றினையே எண்ணி

வரும் செயற்கை கட்பிணையே ஈண்டுச் சொல்லுகிறரென்றும் அவ்வித செயற்கை கட்பிணையே இக்திருக்குறள் கமக்கு அறிவிக்கின்ற தென்றும் அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர் "கட்பைப்போல் சிறப்புடையது வேறொன்றில்லை என்று அறிகின்றோம். அவ்வித சிறப்பாகிய கட்பிணைச் செய்து கொள்வதற்கு எவ்வித காரணம் கொண்டு செய்தல் வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

782. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப் பின்னீர பேதையார் நட்பு.

(பரி.) இ-ள். நீரவர் கேண்மை பிறை நிறை நீர=அறிவுடையார் நட்புக்கள் பிறைநிறையுந் தன்மைபோல நாடோறு நிறையுந்தன்மையவாம்,—பேதையார் நட்பு மதிப்பின் நீர=மற்றைப்பேதைமையுடையார் நட்புக்கள் நிறைந்த மதி பின் குறையுந்தன்மைபோல நாடோறுங்குறையுந் தன்மையவாம். எ-று.

'நீரவர்' எவ்வுரர் இவ்விமைபற்றி கேண்மை, நட்பென்பன ஒருபொருட் கிளவி. செய்தாரற்ற பன்மையான் நட்பும் பலவாயின. அறிவுடையாரும் அறிவுடையாருஞ் செய்தன முன்சுருங்கிப் பின்பெருகற்கும், பேதையாரும் பேதையாருஞ் செய்தன முன்பெருகிப் பின் சுருங்கற்குங் காரணம் தம்முண் முன்னறியாமையும் பின்னறிதலுமாம். (ச)

விளக்கம் :—அறிவுடையார் செய்கின்ற நட்புக்கள் வளர் பிறைச் சக்திரன் தினந்தோறும் ஒவ்வொரு கலையாகச் சேர்ந்து நிறைவதுபோல் நாள்தோறும் நிறையும் தன்மையுடையனவாய் இருக்குமென்றும், அவ்விதம் அல்லாது அறிவில்லாத பேதையர் செய்யும் நட்புக்கள் பூரணச்சந்திரன் பின் ஒவ்வொரு கலையாக ஒவ்வொருநாளும் குறைந்து போவதுபோல் தினந்தோறும் குறைந்து கொண்டேவரும் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, அறிவுடைய பெரியோர் முதலில் நட்புக்கொள்வதற்கு முன் நட்புக் கொள்வதற்கு உரியாரைத் தெரிந்து நட்பிணைச் செய்வர் ஆதலால் முதலில் ஒவ்வொரு குணங்களாக ஒருவருக் கொருவர் ஆய்ந்து அறிந்தபிறகு நட்பிணைப் பலப்படுத்துவரென்றும, அவ்வித நட்பு பிறைச் சக்திரன்போல் வளர்ந்து பயன் தருமென்றும், அவ்விதம்

அறியவேண்டுவனவற்றை அறியும் அறிவில்லாத பேதையாரட்புச் செய்யத் தொடங்குவாராயின் ஒன்றும் ஆராயாமல் பூரணச் சந்திரனைப்போல் முழுநட்பு முதலிலேயே கொள்வரென்றும், பிறகு ஒன்றாகூடி எல்லா இன்பங்களையும் அனுபவிக்க ஆரம்பித்து குற்றங்கள் ஒன்றின்பின் ஒன்றுகத்தோன்ற நாளுக்கு நாள் சந்திரன் தேய்ந்து போவதுபோல் அவ்வித நட்புத் தேய்ந்து பின்னர் ஒன்றுமில்லாமல் போய்விடுமென்றும் அறிகின்றோம். ஆதலால் அறிவுடைமையோடு கூடிச்செய்கின்றநட்பே நட்பென்றும், அவ்விதமல்லாத நட்பு நட்பாகாதென்றும் அறிந்தோம். இதனை,

> "கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை யெஞ்ஞான்றுங்
> குருத்திற் கரும்பு தின்றற்றே—குருத்திற்
> கெதிர் செலத் தின்றன்ன தகைத்தரோ வென்று
> மதுர மிலாளர் தொடர்பு."

என்னும் காலடிச் செய்யுளாலும் அறிதல்கூடும் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் அறிவுடையார் ஒருவருக்கொருவர் செய்த நட்புப் பிரியாது இருப்பதற்குக் காரணம் என்னை?" என்னலும், ஆசிரியர் கூறலாராயினர்.

783. நவிறொறு நூனயம் போலும் பயிறொறும் பண்புடை யாளர் தொடர்பு.

(பரி.) இ-ள். பண்பு உடையாளர் தொடர்பு பயிறொறும்=நற்குண முடைய மக்கள் தம்முட்செய்த நட்புப் பயிலுந்தோறும் அவர்க்கின்பஞ் செய்தல்—நூல் நவிறொறும் நயம்போலும்=நூற்பொருள் கற்குந்தோறுங் கற்றார்க் கின்பஞ் செய்தலே யொக்கும். எ-று.

நயத்தினைச் செய்தலான், நயமெனப்பட்டது. இருமையினும் ஒருகாலைக் கொருகால் மிகுமென்பதாம். இவை யிரண்டொட்டாலும் அச்சிறப்பின் கேதுக் கூறப்பட்டது. (கூ)

விளக்கம்:—நல்ல குணமுடைய மக்கள் தமக்குள் செய்த நட்பானது பழகுந்தோறும் அவர்க்கு இன்பத்தைச்செய்தல், நூலில் உள்ள பொருளைப் படிக்குந்தோறும் படிப்பார்க்கு இன்பம் செயதலை ஒத்திருக்கும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது,

பழகும்தோறும் பழகும்தோறும் நட்பு மிகுகியால் ஒரு காலைக்கு ஒருகால் மிகுந்து வருமென்றும், அவ்விதம் மிகுதலால் உண்டாகும் இன்பமானது, நூல்களைக்கற்று அதனுலாகிய பயனை அடைய விரும்பிய ஒருவன் மேலும் மேலும் கற்குந்தோறும் கற்குந்தோறும் பொருளின் இன்பமானது எவ்விதம் அதிகரித்துக்கொண்டே வருகின்றதோ அதுபோல் அதிகரிக்கும் என்றும் அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர் " இவ்விதம் நட்புக்கொண்டு இன்பமடைகின்ற இருவருள் ஒருவர் எதேனும் தவறிப்போவாராயின் மற்றொருவன் குற்றம் செய்தவனேடு மகிழ்தல் வேண்டுமோ? அல்லது அவனுக்குப் புத்தி புகட்டல் வேண்டுமோ ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

784. நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண் மேற்சென் றிடித்தற் பொருட்டு.

(பரி.) இ-ள். நட்டல் நகுதற்பொருட்டன்று=ஒருவனே டொருவன நட்புச் செய்தல் தம்முணகுதற்கியைந்தன சொல்லி நகையாடற் பொருட்டன்று,—மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு=அவர்க்கு வேண்டாத செய்கை யுளதாயவழி மூற்பட்டுக் கழறுதற்பொருட்டு. எ-று.

பழியும் பாவமும் தருஞ்செய்கை தன்பமே பயத்தலான் வேண்டப் படுவ தன்மையின் அதனை 'மிகுதி' என்றும், அதுசெய்தற்கு முன்னே மீட்டல் வேண்டுதலின் 'மேற்சென்று' என்றும், இன்சொற்கு மீளாமையின் 'இடித்தற்பொருட்டு' என்றுங் கூறினர். இதனுல் நட்பின் பயன் கூறப் பட்டது. (ச)

விளக்கம்:—ஒருவனேடொருவன் நட்புக்கொள்ளுதல் ஒருவன் குற்றம் செய்தால் மற்றொருவனும் குற்றம் செய்தவனேடு சேர்ந்து தங்கள் தங்களுக்கு இசைந்த வார்த்தைகளைச் சொல்லி நகைப்பதற்கு அன்று என்றும் ஒருவனிடம் குற்றம் கண்டவிடத்து அவன் கூறுமளவிலுக்கினும மற்றொருவன் தானே முந்தி அவன் செய்த குற்றத்தைச் சொல்லி இடித்துப் புத்தி கூறல்வேண்டுமென்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, நட்புக்கொண்ட ஒருவன் தன் நண்பன் எதேனும் பழியும் பாவமும் தருகின்ற செய்கையைச் செய்வானுயின், பலரால் வேண்டப்படாத அவ்விதம் அதிக்

கிரமச் செயல்களைச் செய்வதற்கு எண்ணிய காலத்து எண்ணிய அச்செய்கை முடிவதற்கு முன்னே விரைந்து சென்று அவனைப் பழியினின்றும், பாவத்தினின்றும் மீட்டல் வேண்டுமென்றும், அவ்விதம் மீட்க எண்ணி புத்தி புகட்டும் காலத்து இனிய சொற்களைக் குப் பெரும்பான்மையும் இணங்கி மீளாஞ்தலால் வன்சொல் கூறிப் புத்திபுகட்டித் திருப்புதல் வேண்டுமென்றும் அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "நட்புக் கொள்வதாலாகிய பயன் இதுவென்று அறிந்தோம். இனி நட்புக்கொள்வதற்கு எது காரணமாக வுள்ளது ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

785. புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதானட்பாங் கிழமை தரும்.

(பரி.) இ-ள். புணர்ச்சி பழகுதல்வேண்டா = ஒருவனேடொருவன் நட்பாதற்குப் புணர்ச்சியும் பழகுதலுமாகிய காரணங்கள் வேண்டுவதில்லை,— உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும் = இருவர்க்குமொத்தவுணர்ச்சிதானே நட்பாமுரிமையைக் கொடுக்கும். எ-று.

புணர்ச்சி = ஒருதேயத்தாராதல்; "இன்றேபோல்கதும் புணர்ச்சிதானே"* என்றதும் அதனை. பழகுதல் = பலகாற் கண்டுஞ் சொல்லாடியும் மருவுதல். இவ்விரண்டுமின்றிக் கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும்போல உணர்ச்சியொப்பின், அதுவே உடனுயிர்கீங்கு முரிமைத்தாய நட்பினைப் பயக்குமென்பதாம். †நட்பிற்குப் புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சியொத்தலென்னுங் காரணமூன்றனுள்ளும் பின்னது சிறப்புடைத்தென்பது இதனுற் கூறப்பட்டது. (இ)

விளக்கம் :—உலகத்தில் ஒருவனேடொருவன் நட்பினைச் செய்வதற்குப் புணர்ச்சியும், பழகுதலும் ஆகிய காரணங்கள் வேண்டுவதில்லையென்றும், அந்நட்புக்கொண்ட இருவருக்கும் , உள்ளசமானமாகிய 'உணர்வே நட்பு ஆகக்கூடிய உரிமையை உண்டுபண்ணும்' என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. இதனுல், நட்புக்கொள்ளுபவர் ஒரு தேயத்தாராகவும், பலமுறை கண்டு பேசிப் பழகுகின்ற பழக்கமுடையவராகவும் இருத்தல் வேண்டுவதில்லை என்றும், இருவர்க்கும் ஒத்த அறிவே அந்நட்பினை அதிகரிக்கச் செய்

* புறநானூறு; 58. † புறநானூறு, 217.

கின்றதென்றும், ஆதலால் நட்புச் செய்வதற்கு வேண்டுவனவாகிய புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சி ஒத்தல் என்னும் மூன்று காரணங்களுள் உணர்ச்சி ஒத்தலே சிறப்புடையதாதலால் அதுவே போதுமானது என்றும் அறிகின்றேம். அன்றியும், இதனைப் புறநானூறு ஐம்பத்தெட்டாவது செய்யுளில் "பெரும்திருமான் வளவன்" என்னும் வளவன் என்னும் சோழனும், "பெருவழுதி" என்னும் பாண்டியனும் ஆகிய இருவரும் நட்புக் கொண்டிருந்தகாலத்து அவ்விருவரையும் நோக்கிக் கூறியது போல் "உம்முடைய புகழ் நெடுங்காலம் இருப்பதாக, நீங்கள் ஒருவர் ஒருவர்க்கு உதவி செய்வீராக! நீங்கள் இப்போது கூடியுள்ள நட்பினின்றும் வேறுபடாது இருப்பீராயின் இவ்வுலகமானது உங்கள் கையகத்தே தவழுமல் கிடைக்கும். ஆதலால் நல்லனவும், நியாயமுடையனவும், ஒழுக்கமுடையனவும் ஆகிய நீதியையும், அன்பினையும் உடைய மனமுடையவராகிய உங்களைப் பிரித்து விடுதற்குச் சுழண்டு வருகின்ற பகைவரது பயனற்ற மொழிகளைக் கேளாமல் இன்றிருப்பதுபோல் இந்நட்பு என்று மிருத்தல் வேண்டும்" என்று கூறப்பட்டிருக்கின்றது. 'இன்றேபோல்கதும் புணர்ச்சி' என்று கூறும் ஒருதன்மையாயிருக்கும் புணர்ச்சி ஒன்றினையே கூறியதாயிற்று. அதுவன்றியும் கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் போல உடலினின்றும் உயிர் நீங்கும் வரையில் நட்புமிருக்கும் என்று கூறுவதால் இவ்விருவர்க்கும் உள்ள நட்பின் சரிதையை ஈண்டுக் கூறுவோம்.

உறையூரைத் தனக்கு ராஜதானியாகக் கொண்டு ஆண்ட கோப்பெருஞ்சோழனென்பான் பிசிராந்தையார் என்னும் ஓர் புலவர்க்கு உயிர்த்தோழனாக இருந்தானென்றும், இச்சோழன் தன் பிள்ளைகள் இருவரும் தன்னோடு பகைகொண்டு போர்செய்ய வந்தகாலத்து பில்லாத்தூர் எற்றியனாரால் சமாதானம் செய்யப்பட்டு இருந்தானென்றும், இவ்வித மிருந்தவன் பாடும் தொழிலில் வல்லவனாய் இருந்தமையாலும் நில்லாப்பொருளின் உண்மை நிலையினை உணர்ந்தவனாதலாலும், தனக்கிருந்த எல்லாவற்றையும் துறந்து வடக்குச் சென்று இருந்து உயிரை நீப்பதற்கு ஆயத்தமாய் இருந்த காலத்துத் தன்னுடன் உயிரை விடுவதற்கு வந்த பொத்தியாரென்னும்

மற்றொரு கண்பினரை "நீவிர் மகன் பிறந்தபின் வருக" என்று கூறித் தன் உயிர் நீத்து நின்றனென்றும், இவ்விதம் வடக்குச் சென்று துறவுபூண்டு உயிர் நீத்தான் என்று கேள்விப்பட்ட பிசிராந்தையார் என்ற புலவரும் உடனே உயிரை நீத்தனர் என்றும் அறிகின்றோம். அதுவன்றியும், சோழன் மந்திரியாராகிய சீனக்க முதலியாரும், பொய்யா மொழிப் புலவரும் கொண்டிருந்த நட்பே உணர்ச்சி ஒத்ததற்கு ஓர் உதாரணமாகும். அது என்னையோ வெனில் ? பொய்யா மொழிப் புலவர் தம் காடுவிட்டுப் பாண்டிநாட்டிற்குச் சென்று அங்கு மறைந்த சங்கத்தை மறுபடியும் நிறுத்த வேண்டி முயற்சித்தும் அது பயன்படாமற் போகவும், பின்னர் சோழநாட்டிற்குச் சென்று அங்கு அக்காலத்துச் சோழன் பிரதம மந்திரியாக இருந்த சீனக்க முதலியாரை நட்பினராகப் பெற்று அவருடன் வசித்திருந்த காலத்து ஓர் நாள் மந்திரியார் புலவரோடு தம் மஞ்சத்தில் படுத்துக்கொண்டு பேசி இருக்கவும், அவ்விதம் பேசி இருந்த காலத்து அரசனல் அழைக்கப்பட்ட மந்திரியார் போய்விடவும் மஞ்சணையில் படுத்துப் பேசிய புலவர் பெரும பொழுது காத்திருந்து அதன்மீதே உறங்கி விடவும், அது அறியாத முதலியார் மனைவியார் தம் தலைவர் படுக்கையாதலால் தலைவரே பள்ளிகொண்டு உள்ளார் என்று எண்ணினவராய் அப் படுக்கையிற் சென்று படுத்துக் கொண்டனர். பின்னர் மந்திரியார் தம்முடைய தொழில் முடிந்தவுடன் நடுராத்திரியில் மஞ்சணையில் வந்து பார்த்த காலத்து இருவரும் படுத்திருப்பதைக் கண்டு 'செல்லக்கிடமின் செல்லக்கிடமின்' என்றுகூறி அவ்விருவருக்கும் நடுவில் உறங்கினரென்றும், இதை எவ்விதமாகவோ அறிந்த அரசன் புலவர்மீது ஐயம்கொண்டு அவரை அழைத்து 'இவ்விதம் ஓர் படுக்கையில் மூவரிருத்தல் கூடுமோ?' என்று கேட்டலும், பொய்யா மொழியார்,

"தேரையார் செவ்வளைநீர் உண்ணுப் பழி சுமப்பார்
நாரியார் தாமறிவர் நாமவரை நந்தாமை
மேலாரவாய் பொன்சொரியும் கொல்லி மலை நன்னாடா
ஊரவாய் மூட உலை மூடியில்லையே !"

என்னும் செய்யுளைக்கூறி அரசனை மகிழ்வித்தனர். பின்னர் ஒருகால் அவர் மந்திரியாரை விட்டு மற்றோர் ஊர்க்குச் சென்றிருந்த காலத்து, மந்திரியார் உயிர் நீங்கினர் என்ற கேள்விப்பட்டு ஓடோடியும் வருதலும், அக்காலத்து மந்திரியார்க்குச் செய்யவேண்டுவன வாகிய ஈமைக்கிரியைகளை யெல்லாம் செய்து திரும்புகின்ற சோழனை வன் இவர் ஓடி வருவதைக்கண்டு 'புலவீர்! நீவிர் எற்றுக்கு ஓடுகின்றீர்!' என்னலும், 'என்னுயிர்த் தோழனிறந்தான்; அவனோடு இறப்பதற்குச் செல்லுகின்றேன்.' என்று கூறினர். அதுகேட்ட அரசன் 'புலவீர்! மந்திரியார் இறந்தாலென்ன ? அரசனுகிய யான் இருக்கின்றேன்; என்னுடன் வாழ்தல் கூடும்' என்னலும், பொய்யா மொழியார்,

"வாழி சோழ என்வாய் மொழி கேண்மோ
ஊழி நிலவெரி மாளிகையின் வயின்
கட்டிளம் கணவன் நவின் பெரு சேக்கை
என்றறி மனைவி நெடிது துயில் கொள
'செல்லக் கிடமின்' எனக்கிடம் தருகெனச்
சொல்லிய நண்பன் தனிச் செல்பவனை
யானு மேகுவன் நற்றிணை அவர்க்கே !"

என்று கூறிச் சுடுகாட்டிற்குச் சென்று அங்கு மனைவியோடு எரிந்து கொண்டிருக்கின்ற சினைக்க முதலியாரை நோக்கி,

"அன்று நீ செல்லக் கிடவென்றாய் ஆயிழையோடு
இன்று நீ வானுலக மேறினாய்—மன்றல் கமழ்
மாலைக்கும் வேல்விழியார் மாரனே கண்டியூர்
சீனைக்கா செல்லக்கிட"

என்னும் வெண்பாவைப் பாடுதலும் அவ்விரண்டு தேகங்களும் பிரிந்து நடுவில் இடம் விடக்கண்டு நடுவில் படுத்து உயிர் துறந்தனர். ஆதலால், உணர்ச்சி ஒன்று மாத்திரம் ஒத்திருக்குமாயின் அந்நட்பானது எக்காலத்தும் நீங்காததென்றும் அறிந்தோ மென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "சிலர் நட்புக் கொண்டு நடுவில் அந்நட்பினின்றும் நீங்குவது எக்காரணம் பற்றி ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

786. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத் தகநக நட்பது நட்பு.

(பரி.) இ-ள். முகம் நக நட்பது நட்பு அன்று = கண்டவழி அகமொழிய முக மாத்திரமே மலரும்வகை நட்குமது நட்பாகாது;—நெஞ்சகத்தகம் நக நட்பது நட்பு = அன்பால் அகமும் மலர நட்குமதே நட்பாவது. எ-று.

நெஞ்சின்கணிகழ்வதனை 'நெஞ்சு' என்றார். இறந்தகுதழீஇய வெச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. இதனுல் இரண்டும் ஒருங்கே மலரவேண்டுமென்பது பெற்றாம். (கூ)

விளக்கம்:—அன்பின் மிகுதியால் மனமும் மலரும்படி நட்புக் கொள்வதே நட்பாகுமென்றும், அதுவன்றிக் கண்ட இடத்தே அகத்தில் அன்பு கொள்ளாது புறத்தில் முகம் மாத்திரம் மலர்ந்து நட்புக்கொள்வது நட்பு ஆகாது என்றும் இக்திருக்குறள் கூறுகின்றது. இதனுல், நீங்கள் மேல் வினையபடி அகமும், முகமும் ஒன்று படும்படி அன்புகொண்டு நட்புக் கொண்டவர் எக்காலத்தும் விடாத நட்பினராய் இருப்பரென்றும், அவ்விதமல்லாது மனத்தில் சிறிதும் அன்பில்லாது பொய்ம்மையாக நடிதது அன்பு கொண்டவர்போல் முகத்தை அலர்த்திக் காண்பிப்பவர் நட்பானது நெடுநாள் நில்லாது பிரிந்து போகுமென்றும அறிக்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், " இவ்விதம் முகமும் அகமும் ஒன்றாக அன்புகொண்டு நட்புக்கொண்டால் ஒருவருக்கொருவர் எவ்விதம் உபகாரத்தைச் செய்துகொள்வர் ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

787. அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க ணில்ல லுழப்பதா நட்பு.

(பரி.) இ-ள். அழிவினவை நீக்கி ஆறு உய்த்து = கேட்டினைத் தருந்தீநெறிகளைச் செல்லுகால் விலக்கி ஏனை நன்னெறிகளைச் செல்லாக்காற் செலுத்தி—அழிவின்கண் அல்லல் உழப்பது நட்பாம் = தெய்வத்தாற் கேடுவிளுழி அது விலக்கப்படாமையின் அத்தன்பத்தை உடனனுபவிப்பதே ஒருவனுக்கு நட்பாவது. எ-று.

ஆதலின வருகின்றமையின், அழிவினைத் தருமவை யென்றுழிக்தார். " தெருண்டவறிவினவர் " *என்புழிப்போல இன்சாரியை நிற்க இரண்ட

* நாலடியார், இரவச்சம், 1.

னுருபு தொக்கது. இனி நவையென்று பாடமோதி, அதற்குப் போராழிவி னுள் செல்வவழிவினும் வந்த துன்பங்களென்றும், அழிவின்க ணெண்ப தற்கு யாக்கை யழிவின்கணென்றும் உரைப்பாரு முளர். (எ)

விளக்கம்: —நட்புக்கொண்ட ஒருவன் அவனுக்குக் கேட்டி னைத்தருகின்ற தீயவழிகளில் செல்லுவானுயின் அவ்வா று செல் லாது அவனை விலக்கி அத்தீயவழிகளுக்கு மாறுகிய நல்லவழி களில் செலுத்தியும், ஊழ்வலியால் அவனுக்குக் கேடு சம்பவித்த காலத்து அவ்வித கேட்டினை நட்பாயினவன் விலக்குவது கூடா தாதலால் அக்கேட்டால்வரும் துன்பத்தைத் தானும் அனுப விக்து நிற்பதே ஒருவனது நட்பின் செயலாகும் என்றும இத்திருக் குறள் கூறுகின்றது. இதனால், உண்மை நட்புக்கொண்ட ஒருவன் தன் நண்பனுக்கு நல்லறிவு ஊட்டியும், நீதியல்லாத வழிகளில் செல்லாமல் தடுத்தும், நீதியானவைகளை செய்யும்படிச் செய்தும், தன் நட்பினனது ஊழ்வலியால் தீமையை அனுபவிக்க நேரின் அதனைத் தானும் உடன் அனுபவித்தல் வேண்டும் என்றும் அறிந் தோம். அன்றியும், இதனை இராமாயணத்தில் இராவணனுக்குப் புத்திகூறிய கும்பகர்ணனிடத்தும், பாரதத்தில் துரியோதனனுக் குப் புத்திகூறிய பீஷ்மன், துரோணன் முதலியவர்களிடத்தும் காணுதல் கூடும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் தன் நட்பினனுக்கு வந்த துன்பத்தைத் தடுக்கும் காலத்து பிர விரைந்துசெய்தல்வேண்டுமன்றே?" என்னலும், ஆசிரியர் கூறுவ ராயினர்.

788. உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே யிடுக்கண் களைவதா நட்பு.

(பரி.) இ-ள். உடுக்கை இழந்தவன் கைபோல=அவையிடை ஆடை குலைந்தவனுக்கு அப்பொழுதே கைசென்றுதவி அவ்விளிவரல் களையுமாறு போல,—ஆங்கே இடுக்கண் களைவது நட்பாம=நட்டவனுக்கு இடுக்கண் வந்தழி அப்பொழுதே சென்றுதவி அதனைக்களைவதே நட்பாவது. எ-று.

அற்றங்காத்தற்கட் கை தன்மனத்தினுமுற்படுதலின், அவ்விரைவு இடுக் கண்களைவதிலும் அதற்காத்த தொழிலுமையினும் வருவிக்க. உடையவன் முழில் நட்பின்மே லேற்றப்பட்டது. (அ)

விளக்கம்: —சபையினிடத்தே நின்ற ஒருவன் உடுத்தி இருந்த ஆடை அவிழ்ந்து கீழேவிழுகேருமாயின், கேர்ந்தஅப்பொழுதே அவ் வடுக்கை இழுந்த அவனது கையானது சென்று அவிழ்ந்த வஸ்தி ராத்தை உடுத்தி அவனுக்கு அவமானத்தை நீக்குவதுபோல், தன்னி டத்து வந்து நட்புக் கொண்டவனுக்குத் துன்பம் வந்தகாலத்துத் துன்பம் வந்த அப்பொழுதே போய் உதவி அத் துன்பத்தினை நீக்கு வதே நட்பென்று சொல்லப்படுவது என்று இத்திருக்குறள் கூறு கின்றது. ஆதலால், ஆடையிழந்தவனுக்கு வந்த அவமானத்தினை அவன் கையானது அவன் மனத்திற்கும முன் சென்று தடுப் பதற்கு அவ்வாடையைக் கட்டுகின்றதேபோ அதுபோல் மனத்தினும் விரைந்து சென்று தன் நட்பினன் துன்பத்தை நீக்க முயலல் வேண்டும் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் விரைந்து துன்பத்தை நீக்குவது எது? எதைக் கருவியாகக் கொண்டு நீக்குதல் வேண்டும்?" என் னலும், ஆசிரியர் கூறுவாராயினர.

789. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
யொல்லும்வா யூன்று நிலை.

(பதி.) இ-ள். நட்பிற்கு வீற்றிருக்கையாதெனின் = நட்பினுக்கு அரசிருக் கையாதெனின,—கொட்பு இன்றி ஒல்லும்வாய் ஊன்றும் நிலை = அலை வெஞ் ஞான்றுந் திரிபின்றி இயலுமெல்லை யெல்லாம் அறம்பொருள்களிற் றளரா மைத் தாங்கும் நிண்மை. எ-று.

ஒருஞான்றும் வேறுபடாது மறுமையிம்மைகட்கு உறுதியாய அறம் பொருள்களிற் றளர்ந்து நி அத்தளர்ச்சி நீங்கி அவற்றின்கணினறுத் துதற்கு மேல் ஒரு செயலுமின்மையின், அதனை நட்பிற்கு முடிந்தஎல்லை யெனல் ஈர். (க)

விளக்கம்:—நட்பிற்கு அரசிருக்கைபோன்ற முதன்மை யாவது எது எனின்? அந்நட்பானது எக்காலத்தும் சிறிதும் வேறுபாடு இல்லாது செல்லும் இடங்களிலெல்லாம் கூடிய அளவு அறம், பொருள்களில் தளராது இருக்கும வண்ணம் தாங்குகின்ற வன்மை என்று இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், நட்பிற்கு முடிந்த எல்லையாவது ஒரு காலத்தும் சிறிதும் வேறுபடாது இருப்

பதற்கு அறம், பொருள்களில் தன் நட்பினனுக்குக் குறைவு வந்த காலத்து அக்குறைவை நீக்கும்படி அறத்தின் வழி நிற்கச் செய்தும், பொருள்களில் தளர்ச்சிவந்த காலத்துப் பொருளை உதவியும அவன் அடையவேண்டிய இமமைப் புகழையும், மறுமை வான உலகத்தையும் அவனை அடையச் செய்வது நட்பின் முடிந்த எல்லை என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "நட்புக் கொண்ட ஒருவருக்கொருவர் தம் நட்பின் மிகுதியைப்பற்றி மற்ற ஒருவரிடத்துப புகழ்நது சொல்லிக் கொள்ளல் வேண்டுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

790. இனைய ரிவரெமக் கின்னம்யா மென்று
புனையினும் புல்லென்னு நட்பு.

(பரி.) இ-ள். இவர் எமக்கு இனையர் யாம் இன்னம் என்று புனையினும் =இவர் நமக்கித்துணையன்பினர் யாமிவர்க்கித்தன்மையமென்று ஒருவரையொருவர் புனைந்து சொல்லினும்,—நட்புப் புல்லென்னும்=நட்புப் புல்லிதாய்த் தோன்றும். எ-று.

இவர்க்கென்பது வருவிக்கப்பட்டது. தாம் அவரென்னும் வேற்றுமையின்றி வைததுப் புனைந்துரைப்பினும் வேற்றுமையுண்டாமாகலின், நட்புப் புல்லென்னுமெனறார். இவை யைந்துபாட்டானும் நட்பினதிலக்கணங் கூறப்பட்டது. (ய)

விளக்கம் :—நட்புக்கொண்டவர் தம் நட்பு இத்துணைத் தகுதியுடையது என்று பிறர் அறியவேண்டி ஒருவருக் கொருவர் எதிரெதிராக இருநது கொண்டு 'இவர் நமக்கு இவ்வளவு பெரியதோர் அன்பினை உடையவர்; நாம் இவர்க்கு இவ்வித தன்மையினை உடையோம்' என்று ஒருவரை ஒருவர் அலங்கார வார்த்தைகளால் புகழ்ந்து சொல்லிக் கொள்ளின், அவ்வித நட்பு அற்பமாகவே காணப்படும் என்று இததிருக்குறள் கூறுகின்றது. ஆதலால், உண்மை நட்புக்கொண்ட நட்பினர் இவரென்றும் நாமென்றும் வேறுபடுத்திக் கூறிய சொற்களாலேயே, எவ்வளவு வேறுபடாதசொற்களால் தம்மைப் புகழ்ந்து சொல்லிக் கொள்ளினும், வேறுபாடாகக் காணப்பட்டு நட்பின் உறுதியை உண்டாக்காதென்

றும், வேறுபாடு அற்று ஒருவருக்கொருவர் எதிரே புகழாது இருப்பதே உண்மை நட்பென்றும் அறிந்தோம். இதனை,

> "ஆசாரக் காணுவிடத்து அன்பாரவேதுதித்தல்
> நேசனேயு மப்படியே வாச மனையாளைப்
> பஞ்சனையில் மைந்தரை நெஞ்சில், வினை
> யாளை வேலை முடிவில்."*

என்றபடி, உண்மை அன்பு கொண்ட நட்பினர் ஒருவருக்கொருவர் நேரே புகழாது, ஒருவர் இல்லாத இடத்தில் மற்றொருவர் அன்பு மிகுந்து மனத்தால் துதித்தல் வேண்டுமே அன்றி நேரே புகழ்ந்து கொள்ளுதல் கூடாதென்றும, அவ்வாறு புகழ்ந்தால் அது நட்பு ஆகாதென்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்வதிகாரத்தால் நட்பு என்பது இது என்பதையும், அதன் சிறப்பினையும், அதன் பயனையும், அதன் இலக்கணத்தையும் அறிந்தோம். இனி அவ்வித நட்பினைப் தெரிந்து கொள்ளல் வேண்டுமன்றே? அவ்விதம் தெரிந்து கொள்வதற்கு நம ஆசிரியர் தெய்வப்புலவர் என்ன அருள் செய்கின்றனர் எனறு அறிய விரும்புகின்றோம்" என்னவும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

80 அதிகாரம்

நட்பாராய்தல்.

(பரி.) அஃதாவது மேற் சொல்லிய லிலக்கணத்தானை யாராய்ந்தறிந்து, நட்க வேண்டுதலின், அவரை யாராயுஞ் சிறப்பு. அதிகாரமுறைமையும் இதனோ டினைங்கும்.

விளக்கம் :—அதாவது, முன் அதிகாரத்தில் கூறிய நட்புக் குரிய இலக்கணமுடையாரை ஆராய்ந்து, பின்னர் நட்புக்கொள்ள வேண்டுவது ஆதலின், அவ்வித நட்பினரை ஆராயும் தன்மையே நட்பாராய்தல் எனப்படும். அதன் பொருட்டே இவ்வதிகாரம் அதன் பின்னர் வைக்கப்பட்டு உள்ளது என்று அறிகின்றோம

* தனிப்பாடற்றிரட்டு.

என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "அவ்வாராய்தலின் திறத்தைக் கூறல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

791. நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின் வீடில்லை நட்பாள் பவர்க்கு.

(பரி.) இ-ள். நட்பு ஆள்பவர்க்கு நட்டபின் வீடு இல்லை=நட்பினை விரும்பி அதன் கண்ணே நிற்பார்க்கு ஒருவனேனு நட்புச் செய்தபின் அவனை விடுதலுண்டாகாது;—நாடாது நட்டலிற் கேடு இல்லை=ஆகலான், ஆராயாது நட்புச் செய்தல்போலக் கேடுதருவது பிறிதில்லை. எ-று.

ஆராய்தல்=குணச்செய்கைகளது நன்மையையாராய்தல். கேடு—ஆகுபெயர். நட்கிற் ருமவென்னும் வேற்றுமையின்மையின், 'வீடில்லை' என்றும், அவ்வேற்றுமையின்மையான் அவன்கட் பழிபாவங்கள் தமவாமாகலின் இருமையுங் கெடுவென்பது நோக்கி 'நாடாது நட்டலிற் கேடில்லை' என்றுங் கூறினர். (க)

விளக்கம் :— உலகத்து நட்பு என்பதனை விரும்பி அக்கட்பினிடத்தே நிலைத்து நிற்பார்க்கு ஒருவனேனு நட்புச் செய்ய நேரின், பின் அந்நட்பினை விடுதல் கூடாதாதலால், ஆராயாது நட்புச் செய்வானுயின் அதைப் போல் பின்னர் கேடு தரும் செய்கை வேறு மன்றுமில்லை யென்று இந்திருக்குறள் கூறுகின்றது. இதனால், ஒருவன் ஒருவனேனு நட்புச்செய்ய வேண்டுமாயின் தான் நட்புக் கொள்ளுகிறவனது குணங்களையும், செய்கைகளையும் ஆராய்ந்து குணமும், செயலும் நன்மையாக இருக்குமாயின் அவ்விதந நட்பினைச் செய்தல் வேண்டுமென்றும், எனெனில்? அவ்வாறு நட்பைக் கொண்ட பிறகு நட்புக் கொண்டவனும் தானும் ஒருவிதவேறுபாடும் இல்லாது இருக்க வேண்டுமாதலாலும், அவ்விதமிருக்குங்காலத்து நட்புச்செய்தவன் தீக்குணங்கள் உடையவனும், தீச்செயல்கள் உடையவனும் ஆக இருப்பானுயின் அதனால் அவன் செய்கின்ற காரியங்களால் அவனுக்கு வருகின்ற பழியும், பாவங்களும் தனக்கும் வருமாதலாலும், அவ்வாராயாது செய்த நட்பின் கொடுமையால் இம்மைப் பயனுகிய புகழையும், மறுமைப்போகமாகிய தேவ போகத்தையும் இழக்க நேருமாதலால் 'நாடாது நட்டலில் கேடு இல்லை' என்று ஆசிரியர் நட்பின் ஆராய்தலை முத

லாவது கூறினர் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் ஆராயாது நட்புச் செய்தவனுக்குப் பழிபாவங்கள் தான் உண்டாகுமோ? அல்லது இன்னும் ஏதேனும் துன்பங்கள் நேருமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

792. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை, கடை
தான்சாந் துயரந் தரும். [முறை

(பரி.) இ-ள். ஆய்ந்து ஆய்ந்து கேணமை கொள்ளாதான் = குணமுஞ் செய்கையும் நல்லனென்பதும் அல்லனென்பதும் பலகாலாராய்ந்தும் பலவாற் றேராய்ந்தும் ஒருவனேனு நட்புக் கொள்ளாதவன் — கடைமுறை தான் சாம் துயரம் தரும் = முடிவிற் றன்சாதற்கேதுவாய துன்பத்தினைத் தன்மாற்றார் வினைக்கவேண்டாமற் றானேவினைக்கும். எ-று.

. கடைமுறைக்கண்ணென இறுகிக்கட்டொக்க எழாவது விரிக்க. குணஞ் செயலுந் தீயனெனு கொள்ளின் அவற்கு உரும்பகைமை யெல்லாந் தன்மேலவாய்ப் பின் அவற்றினிறந்துவிடு மென்பதாம். இவை யிரண்டுபாட்டானும் ஆராயாவழிப்பதிமிழுக்குக் கூறப்பட்டது. (டு)

விளக்கம் :—நட்புக்கொள்ளுநம் காலத்து அந்நட்புக்கொண்டவனது குணத்தாலும், செயலாலும், நல்லவனென்பதாலே, நல்லவனல்லாதது தீயவன் எனபதும் பல முறையிலும் பலகாலங்களிலுமாராய்ந்து நட்புக்கொள்ளாவிடின், அவ்விதநட்பானது முடிவில் தான் சாதற்கு மதுவாகிய துன்பங்களைத் தனனுடைய பகைவர் வினைக்காமலே தானே கொண்டுவந்துவிடும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அது எண்ணேயாவெனில்? நற்குணமும், நற்செயலும் இல்லாத தீயவனேனு நட்புக்கொண்டால் அவனது தீமையால் பலர் அவனுக்குப் பகைவர் ஆகித் தீங்கினை இழைக்கும் காலத்து அப்பகைமையும், தீங்கும் நட்புக்கொண்ட தனக்குமாகி அதனால் பின்னர் இறந்து விடவேண்டிவரும் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "மேற்கூறிய இரண்டு திருக்குறள்களாலும் ஆராயாது செய்யும் நட்பினால் வரும் துன்பத்தை அறிந்தோம். இனி அந்நட்பினை ஆராயும் நிறத்தையும் கூறல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

793. குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா
வினனு மறிந்தியாக்க நட்பு.

(பரி.) இ-ள். குணனும் குடிமையும் குற்றமும் குன்றா இனனும் அறிந்து=ஒருவன் குணத்தினையும் குடிப்பிறப்பினையும் குற்றத்தினையும் குறைவற்ற சுற்றத்தினையுமாராய்ந்தறிந்து,—நட்பு யாக்க=அவனோடு நட்புச் செய்க. எ-று.

குற்றமில்லாதார் உலகத்தின்மையின் உள்ளது பொறுக்கப்படுவதாயின் அவர் நட்பு விடற்பாற் றன்றென்பார் 'குற்றமும்' என்றும், சுற்றப்பிணிப்புடையார் நட்டாரோடும் பிணிப்புண்டு வருதலிற் 'குன்றாவினனும்' என்றும், விடப்படிற் றங்குறையாமென்பார் 'அறிந்தியாக்க' என்றுங் கூறினார். (௩)

விளக்கம்:—ஒருவனிடத்து நட்புச்செய்ய வேண்டுமாயின் அவனது குணத்தினையும், அவன் குடிப்பிறப்பினையும், அவனிடத்து உள்ள குற்றத்தினையும், அவனுடைய குறைவு அற்ற சுற்றத்தாரையும் ஆராய்ந்து அறிந்து அவனோடு நட்புச்செய்தல் வேண்டும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், உலகத்துக் குற்றமில்லாதவர்கள் ஒருவரு மில்லையென்றும், "அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கா, லினமை யரிதே வெளிறு" என்று முன்னரே தெரிந்து தெளிதல் என்னும் அதிகாரத்துள் கூறியதுடன், அவ்வதிகாரத்தின் உள்ளேயே "குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண், மிகைநாடி மிக்க கொளல்" என்று கூறியிருப்பதால் குற்றம் சிறியதாக இருந்து குணம் பெரியதாக இருக்குமாயின் அச்சிறியதோர் குற்றங்களையே எண்ணி அவனை நட்புக்கொள்ளாது விடுதல் கூடாதென்றும், அதுவன்றியும் பெரியதோர் உறவினரால் பிணிக்கப்பட்டு உள்ள தகுதியுடையவனாயின் தான் நட்புக் கொள்பவரிடத்தும் பிணிப்புண்டு விடாது நட்புக்கொள்ளுவானாதலால் அவ்வித தகுதியுடையான் ஒருவனை ஆய்ந்து அறிந்து நட்புக்கொள்ளுதல் வேண்டுமென்றும், அவ்வாறு கொள்ளாது விடின் கொள்ளாதவனுடைய குற்றமே ஆகும் என்றும் கூறியதாக அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இத்திருக்குறளால் குணத்தைப்பற்றியும், குற்றத்தைப்பற்றியும், குறையாத சுற்றத்தைப்பற்றியும் அறிந்தோம் ஆயின், குடிப்பிறப்பைப்பற்றி

விளக்கிக் காட்டவில்லை ஆதலால் அதனை அறிய விரும்புகின்றேம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

794. குடிப்பிறந்து தன்கட் பழிநா ணுவானைக் கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு.

(பத.) இ-ள். குடிப்பிறந்து தன்கட் பழி நாணுவானை = உயர்ந்தகுடியின்கட்பிறந்து தன்மாட்டு உலகோர்சொல்லும் பழிக்கஞ்சுவானை—கொடுத்தும் நட்புக் கொளல் வேண்டும் = நிலை கொடுத்தாயினும் நட்புக்கோடல் சிறந்தது. எ-று.

குடிப்பிறப்பாற் முன் பிழைசெய்யாமையும், பழிக்கஞ்சலாற் பிழைத்தன பொறுத்தலும் பெற்றும். இவை யிரண்டுமுடையானைப் பெறுதலருமையின், அவனட்பை நிலைகொடுத்துங் கொள்க வென்பதாம். (எ)

விளக்கம் :—உயர்ந்த குடியில் ஒருவன் பிறந்து தன்னிடத்து உலகத்தார் சொல்லும் பழிக்கு அஞ்சுபவனாக இருப்பானாயின், அவ்வித தகுதியுடையான் நட்பினை அவன் விரும்பாது பொருள் சில கொடுத்தாயினும் கொள்ளுதல் வேண்டுமென்று இதிருக்குறளால் கூறுகின்றது. இதனால், ஒருவன் உயர்ந்த குடியில் பிறந்திருப்பானாயின் அக்குடியில் பிறக்கவன் பிழை செய்ய மனமிசையானென்றும், பழிக்கு அஞ்சுகின்றவனாதலால் தன்னோடு நட்புகொண்டவன் பிழையைப் பொறுத்தல் குணமுடையவனாயிருப்பானென்றும், அவ்விதம் இரண்டு நற்குணங்களையும் பெறுவது அருமையாதலால் அவ்விதம் உடையவன் நட்பினைக் கிடைப்பானாயின் அவனது நட்பினை வீலை கொடுத்தாயினும் கொள்ளுதல் வேண்டுமென்றும் அறிகின்றேமென்றனர். ஆதலால், நீங்கள் இனி யிய குடிப்பிறப்பின் தகுதியையும் இத்திருக்குறளால் அறிகின்றோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் நற்குடித் தோற்றமுடையான் பழிக்கு அஞ்சுபவனும், பிழை பொறுப்பவனுமாக இருப்பானாயின், அவன் தன்னிடத்து நட்புக் கொண்டான் ஒருவன் செய்த குற்றத்தை மறந்து அதற்கு உடன்படுவானோ? அவ்விதம் உடன்படுவானாயின் அவனை நட்பினைக் கொள்ளுதல் கூடுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

795. அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய வல்லார்நட் பாய்ந்து கொளல்.

(பரி.) இ-ள். அல்லது அழச் சொல்லி = தாம் உலகவழக்கல்லது செய்யக் கருதிற் சோகம்பிறக்கும்வகை கொல்லி விலக்கியும்—இடித்து = செய்தக்காற் பின்னுஞ் செய்யாவகை நெருக்கியும்—வழக்கு அறியவல்லார் — அவ் வழக்குச் செய்யாவழிச் செய்விக்கவும் வல்லாரை— ஆய்ந்து நட்புக் கொளல் = ஆராய்ந்து நட்புக் கொள்க. எ-று.

அழச்சொல்லி இடித்தெனவுக்த பரிகாரமினைகளான் அவற்றிற்கேற்ற குற்றமினைகள் கருதிக்கப்பட்டன. வழக்கு = உலகத்தார் அடிப்படச் செய்யு மோர்த்த செயல். தம்மொடு நட்டாரும் அறியும்வகை அறிவித்த லரிதாகவின், 'அறியவல்லார்' என்றார். இரண்டாவது இறுதிக்கட் டொக்கது. (எ)

விளக்கம் :—உலகத்தில் வழக்க மில்லாதது ஒன்றைத் தாம் செய்ய எண்ணில் தமக்கு கல்லறிவு பிறக்கும் விதம் நன்னெறி கூறித் தாம் அழும்படியாகச் சொல்லி விலக்கியும், ஓர்வேளை செய்தலிடின் மறுபடியும் செய்யாவிதம் இடித்துப் புத்தி கூறியும், அவ்விதப் நீதெறியிற் செல்ல ஒட்டாது செய்விக்கவும் வல்லமை யுடையாரை ஆராய்ந்து நோக்கி நட்புக்கொள்ளுதல் வேண்டும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, உலகத்தார் பண்டை நாலமுதல் வழங்கி வந்த வழிகளை விடுத்துக் குற்றம் பொருந்திய வழிகளில் தம்மிடத்து நட்புக்கொண்டார் செல்வராயின் அவரை அவ்விதம் செல்லவொட்டாது தடுத்தும், ஓர்வேளை ஊழ் வலியால் சென்றாலும் மறுபடியும் அவ்விதம் செல்லாத வண்ணம் இடித்துப் புத்தி கூறியும் நிற்பவரே நட்பினரென்றும், அது விட்டுத் தம் நலம்கருதி நட்பினர் தீவழிச் செல்லும் காலத்து உடனிருந்து மகிழ்வார் நட்பினரல்லரென்றும், இவ்விதம் அழச்சொல்லி இடித்துப் புத்தி கூறும் நட்பினராலேயே இம்மை மறுமையாகிய இரண்டும் இடைக்குமாதலால், அவரைத் தேர்ந்து கொள்ளுதல் வேண்டுமென்றும் அறிந்தோமென்றனர் அதுகேட்ட மாணாக்கர், " இவ்விதம் நட்பினராயினர் தனக்கு வறுமை வந்த காலத்தும் தன்னெடு உடனிருந்து நட்பினராக இருப்பாரோ ? இராரோ ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

796. கேட்டினு முண்டோ ருறுதி நினைஞரை நீட்டி யளப்பதோர் கோல்.

(பரி.) இ-ள். நினைஞரை நீட்டி அளப்பது ஓர்கோல்=ஒருவனுக்குக் கேடென்பது தன்னட்டாராகிய புலங்களை யெஞ்சாமலளப்ப தோர்கோல்;—கேட்டினும் ஒருவரி உண்டு=ஆகலின், அதன் கண்ணும் அவனுற் பெறப் படுவதோர் நல்லறி வுண்டு. எ-று.

தத்த நட்பெல்லைகள் சுருங்கியிருக்கவும் செல்வக்காலத்துப் புறத்துத் தோன்றுமாறுபோந்தார் பின் கேடு வந்துழிச் செயல்வேறுபடுதலின் அக்கேட்டால் அவை வரையறுக்கப்படுமென்பதுபற்றிக் கேட்டினைக் 'கோல்' ஆக்கியும், அதனுல் அவரை யளந்தறிந்தால் ஆவாரையே கோடலின் அவ்வறிவை 'உறுதி' என்றும் கூறினர். நினைஞர்—ஆகுபெயர். இஃதேகதேசவுருவகம். இவை நான்கு பாட்டானும் ஆராயுமாறும், ஆராய்ந்தால் நட்கப்படுவார் இவ ரென்பதூஉங் கூறப்பட்டன. (க)

விளக்கம் :—நட்புக்கொண்டுள்ள ஒருவனுக்குச் செல் வக்கேடு வந்த காலத்து அக்கேடென்று சொல்லப்படுவது தன்னு டைய நட்பினாகிய நிலங்களைக் குறையாமல் அளக்கின்ற ஓர் அளவு கோலாகுமென்றும், ஆதலால் அச்செல்வக்கேட்டாலும் அவன் அடையக்கூடிய நல்லறிவு உண்டாகுமென்றும் இத்திருக்குறள் கூறு கின்றது. அதாவது, ஒருவனிடத்துத் தமக்கு உண்மையாகவே பெரியதோர் நட்பு இல்லாதிருக்கவும் அவனிடத்து உள்ள செல் வத்தைக் கவரும் வண்ணம் தம்முடைய நட்பினை அவன் அறியு வண்ணம் அவனிடத்தே வந்து பயின அனுபவித்தவர், பின் தம் நட்பினனுக்குச் செல்வக்கேடு வந்தகாலத்து முன்போல் வா ராது செயல் வேறுபட்டு நிற்பராதலால், அவ்வித நட்பல்லா நட் பினரை அளந்து பார்ப்பதற்கு வாய்மையே ஓர் அளவு கோலாகும் என்று அறிந்தோரென்றனர். அது கேட்ட மாணாக்கர், "ஓர்கால் அறிவிலாத ஒருவனிடத்து ஒருவன் நட்புக் கொள்வானுயின் நட்பினனுகக் கொண்ட அவனை என் செய்தல் வேண்டும்?" என்ன லும், ஆசிரியர் கூறுவாராயினர்.

797. ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார் கேண்மை பொரீஇ விடல்.

(பரி.) இ-ள். ஒருவற்கு ஊதியமென்பது=ஒருவனுக்குப் பேறென்று சொல்லப்படுவது—பேதையார் கேண்மை ஒரீஇ விடல்=அறிவிலாரோடு நட்புக் கொண்டானுயின் அதனை யொழிந்து அவரினீங்குதல். எ-று.

நட்பொழிந்தாலும் நீங்காக்கால் "வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வே" "மாறுபோலத் தீங்கு வருதலின் 'விடல்' என்றும், நீங்கியவழித் தீங் கொழிதலேயன்றி இருமை யின்பத்திற் குரிமை யெய்தலு முடைமையின் அதனை 'ஊதியம்' எனறுங் கூறினர். (எ)

விளக்கம் :—ஒருவன் அறிவிலாரோடு நட்புக் கொண்டானுயின், அந்நட்பினின்றும் நீங்கி அவரை விட்டுப் பிரிதல் அவனுக்குப் பெறுகின்ற செல்வங்களுக்கெல்லாம் பெரியதோர் செல்வமாகும் என்றுஇத்திருக்குறள் கூறுகின்றது. ஏனெனில்? நட்புக்குரியனல்லன் என்று அறிந்து அவனது நட்பினின்றும் நீங்காது அவனோடு இருக்கின், பூங்கிற்காடு பற்றி எரியும் காலத்து அக்காட்டிலுள்ள வாசனை வீசும் சந்தனமரமும், வேங்கைமரமும் உடன் வெந்து போவதுபோல், அவனுடகு உள்ளபகைவர் அவனை அழிக்கும் காலத்து அத்தீயவன் நட்பால் தானும் அழியவேண்டி வருமென்றும், ஆதலால் அப்பகைவனை விட்டு நீங்கிய காலத்துத் தீங்கடையாதிருப்பதுடன் புகழையும், புண்ணியத்தையும் அடைதல் கூடும் என்றும் அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இதனால் தீயாரது நட்பை விடுதல் வேண்டும் என்று அறிந்தோம். ஆயின், நட்பினென்று கூறிச் சமயத்துக் கைவிடுபவர் நட்பினை என் செய்தல் வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

798. உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க வல்லற்க ணூற்றுப்பார் நட்பு.

(பரி.) இ-ள். உள்ளம் சிறுகுவ உள்ளற்க=தம்மூக்கஞ் சுருங்குதற்குக் காரண மாய வினைகளைச் செய்ய நினையாதொழிக:—அல்லற்கண் அற்று

நாலடியார், நல்லினஞ்சேர்தல், 10.

அஞ்சுபார் நட்புக் கொள்ளற்க = அதுபோலத் தமக்கொருதுன்பம் வந்துழிக் கைவிடுவார் நட்பினைக் கொள்ளாதொழிக. எ-று.

உள்ளஞ்சிறுகுவனவாவன:—தம்மின்வலியாரோடு தொடங்கியனவும் பயனில்லனவுமாம். ஆற்றென்பது முதனிலைத்தொழிற்பெயர். முன்னெல்லாம் வலியாராவார்போன்று ஒழிதலின், வலியறுப்பாரென்றார். எடுத்துக் காட்டு வமை. கொள்ளின் அழிந்தே விடுமென்பதாம். (அ)

விளக்கம்:—நல்லறிவுடையார் தாம எடுத்தகாரியம் சுருங்கி னீடுவதற்கு ஏற்ற தொழில்களைச் செய்ய எண்ணுதிருத்தல் வேண்டு மென்றும், அதுபோலவே தமக்கு ஒரு துன்பம் வந்தகாலத்துத் தம்மைக் கைவிட்டுப் போய் விடுவார் நட்பினைக் கொள்ளாது ஒழிய வேண்டுமென்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, ஒருவன் தன்னைக்காட்டிலும் வலியாரோடு போர் முதலிய தொடங்கின் அவர் வலிமையால் தன் ஊக்கம கெட்டு எடுத்த தொழில் அழிந்து போம் என்று எண்ணி அத்தகைய தொழில களை எவ்வாறு செய்ய எண்ணுது ஒழிதல் வேண்டுமோ அதுபோல் நன்மையாக இருந்த காலத்து உடனிருந்து உண்டு ஒரு துன்பம் வந்தகாலத்து நட்பினென்று எண்ணுது கைவிடுவோர் நட்பு நட்பு ஆகாது என்று எண்ணி அவ்வித நட்பினை ஒழித்துவிடுதல் வேண்டும என்று அறிந்தோம். இதனை,

> "அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல
> உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அகுளதநில
> கொட்டியு மாம்பலும் கெய்தலும போலவே
> மொட்டி உலர்வார் உறவு."

எனபதினாலும் அறிதல் கூடும் என்றார். அதுகேட்ட மாணாக் கர், "இவ்வித்தம வறுமை வந்தகாலத்து நட்பினைக் கைவிட்டுப் போகின்றவரை 'இவர் இவனுக்கு நட்புக் கொண்டவர்' என்னினை, அது அவனுக்கு எவ்வித்தம இருக்கும்?" என்னலும், ஆசிரியர் கூவாயினர்..

799. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை படுங்காலை
யுள்ளினு முள்ளஞ் சுடும்.

(பதி.) இ-ள். கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை = ஒருவன் கெடுங் காலத்து அவனை விட்டு நீங்குவார் முன் அவனோடு செய்தகட்பு,—அடுங்

வாக்குண்டாம்.

காலே உள்ளினும் உள்ளம் சுடும் = தன்னைக் கூற்றுங்காலத்து ஒருவனினைப் பினும், அந்நினைத்த உள்ளத்தைச் சுடும். எ-று.

நினைத்தது ணையானே இயைபில்லாத பிறனுக்குங் கூற்றினுங் கொடிதா மெனக் கைவீடெண்ணிச் செய்த நட்பின் கொடுமை கூறியவாறு இனி அவன்ருனே ஆக்கிய கேடு தன்னே யடுங்காலே யுள்ளினும் அக்கேட்டினுஞ் சுடுமென்றுரைப்பாருமுளர். இவை மூன்றுபாட்டானும் ஆராய்ந்தால் நட்கப் படாதார் இவரென்பது கூறப்பட்டது. (கூ)

விளக்கம் :—ஒருவன் தான் கெட்டுப்போகுங் காலத்து நட்பினை விட்டு நீங்குவார் முன் அவனெடு செய்த நட்பினை, நட்புச் செய்தவனை மனனவன் வந்து கொல்லும் காலத்தும அவன் நினைக் கின் அந்நினைவானது அவன் மனத்தைச் சுட்டுவிடும் என்று இத் திருக்குறள் கூறுகின்றது. இதனுல் நட்புக்கொண்ட ஒருவன் தன் நட்பினன் தனக்குத் துன்பம வந்தகாலத்துத் தன்னைக்கைவிட்டு நீங்குவானுயின், அவ்வித செயலானது மிகக்கொடிய செயலென் றும், அக்கொடிய செயல்எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் மன தைற் சுடுமென்றும், அவ்வித சுடுகின்ற தன்மையானது இறக்கும் வரையில் இருக்குமென்றும், இறக்கும் காலத்து உண்டாகும் துன் பம் பெரிய தென்றலும் நட்பினன் செய்த துன்பத்தை நினைக் கும் காலத்து அத் துன்பம சிறிதாகி அதற்கு வருந்தாது நான் கெடுங் காலத்துத்தன் நட்பினன் தன்னைக் கைவிட்ட செயலையே நினைந்து வருந்துவானென்றும் அறிந்தோம என்றனர். அது கேட்ட மாணுக்கர், "நட்பாராய்தலின் தன்மையை அறிந்தோம. இனி எவரோடு நட்புக்கொள்ளுதலாகாது, எவரோடு நட்புக்கொள் ளுதல் வேண்டுமென்னுமிவ் விரண்டையும் ஒருங்கே அறிவித்தல் வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

800. மருவுக மாசற்றார் கேண்மையொன் றீதது மொருவுக வொப்பிலார் நட்பு.

(பத.) இ-ள். மாசு அற்றார் கேண்மை மருவுக = உலகோடொத்து குற்ற மற்றார் நட்பினையே பயில்க;—ஒப்பு இலார் நட்பு ஒன்று ஈததும் ஒரு வுக = உலகோடொத்தலில்லார் நட்பினை அறியாது கொண்டாராயின், அவர் வேண்டிய தொன்றனைக் கொடுத்தாயினும் விடுக. எ-று.

உலகோடொத்தார் நட்பு இருமையின்பமும் பயத்தலின் 'மருவுக' என்றும், அதனோடு மாறாயினார் நட்புத் துன்பமே பயத்தலின் அதனொழிவை விலைகொடுத்துங் கொள்க வென்றுங் கூறினார். இதனால் அவ்விருமையுந் தொகுத்துக் கூறப்பட்டன. (௰)

விளக்கம்:-உலகத்து அறிவுடையார் சென்ற வழியேசென்று குற்றமற்று இருப்பவர் நட்பினையே கொள்ளுதல் வேண்டுமென்றும், அவ்விதம் அன்றி உலகத்தோடு ஒற்றுமை இல்லாத காரியங்களைச் செய்வார் நட்பினை ஓர்கால் ஊழ்வலியால் அறியாது கொண்டாலும் அவர் நட்பினின்றும் நீங்குவதற்கு அவர் விரும்புகின்ற ஏதேனும் ஒரு பொருளைக் கொடுத்தாயினும் அந்நட்பினை விட்டு விடுதல் வேண்டுமென்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், நீங்கள் முன்னர் வினவியபடி உலகத்தோடு ஒத்து வாழக்கூடிய நல்லறிவினை உடையார் நட்பினையே கொள்ளுதல் வேண்டுமென்றும், அதனால் இருமைப்பயனையும் அடைதல் கூடுமென்றும், அவ்விதம் அல்லாதார் நட்புத் தீமையை விளைத்து இருமைப்பயனையும் கெடுத்தலால் அவர் தம்மைவிட்டு நீங்குவதற்கு ஏதேனும் ஓர் நன்மையை அவர்க்குச்செய்து விலக்கி விடுதல் வேண்டுமென்றும் அறிகின்றோம். உலகத்தோடு ஒட்டி ஒழுகுபவரே அறிவுடையார் என்பதை "உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும், கல்லார் அறிவிலாதார்" என்பதனால் அறியப்படும் என்று நட்பாராய்தலைக் கூறி முடித்தனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம நட்புச் செய்யவேண்டிய ஒருவன் தன் நட்பினர் ஏதேனும் ஓர் பிழையைச் செய்வாராயின் அதனைப் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

81. அதிகாரம்.

பழைமை.

(பரி.) அஃதாவது நட்டாரது பழையராதன்மைபற்றி அவர் பிழைத்தன பொறுத்தல். காரணப்பெயர் காரியத்திற்காயிற்று. ஆராய்ந்து நட்கப்பட்டாரெனினும் பொறுக்கப்படுங் குற்றமுடையராகலானும் ஊழ்வகையானும்

நட்டார்மாட்டுப் பிழையுளதாமென்பது அறிவித்தற்கு, இது நட்பாராய்தலின் பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:—அதாவது, நட்பினர் பழையராய் இருப்பாராயின் அந்நட்பினர் செய்த பிழைகளைப் பொறுத்துக் கொள்ளுதலே பழைமையாகும். மேல் அதிகாரத்தில் சொல்லிய வண்ணம் எல்லாவற்றையும் ஆராய்ந்து நட்புச் செய்தவராயினும் பொறுத்துக் கொள்ளக் கூடிய குற்றம் உண்டாகு மென்றும், ஊழ்வலியால் சிறந்த நட்பினைக் கொண்டவரிடத்தும் பிழை உண்டாதல் கூடுமென்றும், அவ்வித குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளுவதே தகுதியென்றும் அறிவித்தற்கு நட்பாராய்தலின் பின் இப்பழைமை என்னும் அதிகாரம் வைக்கப்பட்டு உள்ளது என்றனர். அதுகேட்ட மாணாக்கர் "இவ்விதம் நட்பினர் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்ளுதல் பழைமையென்பதை விளக்கல் வேண்டும" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

801. பழைமை யெனப்படுவ தியாதெனின் யாதுங் கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

(பரி.) இ-ள். பழைமை எனப்படுவது யாதெனின்—பழைமையென்று சொல்லப்படுவது யாதென்று வினவின்,—கிழமையை யாதும் கீழ்ந்திடா நட்பு=அது பழைமையோர் உரிமையாற் செய்வனவற்றைச் சிறிதுஞ் சிதையாது அவற்றிற் குடம்படும் நட்பு. எ-று.

கிழமை—ஆகுபெயர். கெழுதகைமையென வருமனவுமது. உரிமையாற் செய்வனவாவன:—கருமமாயின செய்யுங்காற் கேளாது செய்தல், கெடும்வகை செய்தல், தமக்கு வேண்டியன தாமே கோடல், பணிவச்சங்களின்மை யென்றிவை முதலாயின. சிதைத்தல்=விலக்கல். இதனாற் பழைமையாவது காலஞ் சென்றதன்று இப்பெற்றித்தாய நட்பென்பது கூறப்பட்டது. (க)

விளக்கம் :—பழைமையென்று சொல்லப்படுவது எது என்று அறிய வேண்டுமாயின், அது அப்பழைமையை யுடையார் தங்களுக்கு உள்ள உரிமையினால் செய்கின்றவைகளைச் சிறிதும் விலக்காது அக்காரியங்களுக்கு உடன்படுகின்ற நட்பு என்று இத்திருக்குறள் கூறுகின்றது இதனால், தம்மிடத்து நட்புக் கொண்டவர் தம்முடைய தொழில்களைச் செய்யுங் காலத்துத் தம்மைக்

கேளாமலே செய்தலும், செய்யும் தொழில்கள் கெட்டுப் போம் படிச் செய்தலும், தமக்கு வேண்டியனவாகிய பொருள்களைத் தம்மைக் கேளாமலே எடுத்துக் கொள்ளுதலும், பணிவுடைமை, அஞ்சுதல் இவை முதலாயின இல்லாதிருத்தலும் ஆகிய காரியங் களைப் பொறுத்துக் கொள்ளுதலே கட்புக் கொண்டவரின் இலக் கணமென்றும், அதுவே பழமையென்றும் அறிஞர்தோ மென் றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதக் கட்பைப்பெற்ற ஒருவன் தனக்கு உள்ள உரிமையினால் எதுசெய்யினும் பொறுத்துக்கொள் ளுதல் வேண்டும் போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாரா யினர்.

802. நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற் குப்பாதல் சான்றோர் கடன்.

(பரி.) இள். நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை = நட்பிற் கவயவமா வன நட்டார் உரிமையாற் செய்வன, — அதற்கு உப்பாதல் சான்றோர்கடன் = அதனால் அவ்வுரிமைக்கு இளியாதல் அமைந்தார்க்கு முறைமை. எ-று.

வேறன்மைதோன்ற 'உறுப்பு' என்றார். உறுப்பென்பது ண்டிலக்கணே யடியாகவந்த குறிப்புச்சொல். அவயவமாதலறிந்தே இனியவாவதென்பது தோன்றச் சான்றோர்மேல் வைத்தார். (உ)

விளக்கம் :—நட்பு என்று சொல்லப்படுதற்கு உறுப்புகளாக இருப்பன, நட்பாகக் கொண்டவர் உரிமையால் செய்வன என்றும், அவ்வுரிமைக்கு உவந்து இனிமை யுடையராக இருத்தல் நட்புக் கொண்டவர்க்கு முறைமை யென்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, மேற்கூறிய வண்ணம் தம்முடைய நட்பினர் எதேனும் ஒன்றைத் தம்மிடத்து உள்ள உரிமையால் செய்து விடுவாராயின், அதற்காக அவரை வெறுக்காது அவரிடத்து இனியவராயிருந்து தாம் கொண்ட நட்பினிடத்தே பொருந்துகின்றவரே நட்புச் செய் தற்கு உரியரென்றும், அவரே சான்றோரென்றும், அவரே பழை மை யென்பதைப் பாராட்டவல்லோ ரென்றும் அறிஞர்தோ மென் றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம உரிமையால் செய்தவற் றிற்கு உடன்படாவிடின் அவ்வித நட்பால் பயனில்லை போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

803. பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை.

(பரி.) இ-ள். கெழுதகைமை செய்தாங்கு அமையாக்கடை = தாமுடம் படாதனவேனும் நட்டார் உரிமையாற் செய்தனவற்றிற்குத் தாஞ்செய்தாற் போல உடம்படாராயின், — பழகிய நட்பு எவன்செய்யும் = அவரோடுபழைய தாய் வந்த நட்பு என்ன பயனைச் செய்யும். எ-று.

செய்தாற்போல வுடம்படுதலாவது :— தாமும் அவரிடத்துரிமையா லுடம்படுதல். இவை யிரண்டுபாட்டானும் பழைமையான் வரு முரிமையது சிறப்புக் கூறப்பட்டது. (சு)

விளக்கம்:— தாம் உடன்படக் கூடாத தொழில்களாக இருந் தும் தம்மிடத்து நட்புக்கொண்ட அவர் தம்மிடத்து உள்ள பாத் தியத்தின் மிகுதியால் செய்த தொழில்களுக்குத் தாமேசெய்தாற் போல உடன்படாது விடுவாராயின், அந்நட்பினோடு பழைமையா யிருந்து நட்புக்கொண்டு இருத்தல் ஒரு பிரயோசனத்தையுந்தாரா தென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தம்முடைய நட் பினர் தமக்கு நன்மை உண்டாதல் வேண்டுமென்று ஒரு காரியத் தைச் செய்த காலத்து அதில் தவறுவருமாயின் தாமேசெய்து தவறுவரின் அத்தவறினை எவ்விதம் ஊழ்வலி என்றெண்ணி அத் தவறுக்கு உரிய கஷ்டத்திற்கு ஈடுபடுவரோ அவ்விதம் ஈடு படாவிடின் ஒருவரோடு ஒருவர் நட்புக்கொள்ளுவதால் ஆகும் பிர யோசனத்தை அடைவதற்கு இல்லாமற்போம். எனெனின் ? உரிமையால் ஒன்றுசெய்து அதனால் ஒருகாலத்து நஷ்டம் வரினும் மற்றொரு காலத்து உரிமைகொண்டு செய்கின்றகாரியத்தால் பெரும் பயன் அடைவது கூடுமாதலால், உண்மை அன்புகொண்ட தம் நட் பினர் உரிமையால் செய்கின்ற செயல்களுக்கு உடன்பட்டு நிற்பதே நட்பால் அடையும் பயன் என்று அறிகின்றோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், " இவ்விதம் யாவரும் தம் நட்பினர் செய்த செய லுக்கு உடன்படுவரோ ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

804. விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகை
கேளாது நட்டார் செயின். [யாற்

(பரி.) இ-ள். நட்டார் கெழுதகையால் கேளாது செயின் = தங்கருமத் தை நட்டார் உரிமையாற் கேளாது செய்தாராயின், — விழைதகையான்

வேண்டியிருப்பர் = அச்செயலது வினையப்படுந் தன்மைபற்றி அதனை விரும்பு வர் அறிவுடையார் எ-று.

ஒருவர்க்குத் தங்கருமந் தாமறியாமன் முடிந்திருத்தலினும் அங்ஙனமின்மையின், அச்செயல் பிழையுத்தக்கதாயிற்று. அதனை அவ்வாறறிந்து விரும்புதல் அறிவுடையார்க்கல்ல தின்மையின், அவர்மேல் வைத்துக்கூறினர் வேண்டியிருப்பரென்பது எழுந்திருப்பரென்பது போல. ஒருசொன்னீர்மைத்து. இதனுள் கேளாது செய்தழி அதனை விரும்புவரென்பது கூறப்பட்டது. (5)

விளக்கம்:—அறிவுடையோர், தம்முடைய கருமத்தைத் தாமுடைய நட்டார் தம்மைக் கேளாமலே தமக்கு உள்ள பாத்தியதையால் செய்து விடுவராயின், அவ்வித உரிமையால் தனக்குச் செய்த செயலின் அன்பினை நோக்கி அதனை விரும்புவர் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தம்மை அறியாமலே தமக்கு ஆகவேண்டுவனவாய கருமங்கள் முடிந்திருக்குமாயின் அதனைக் காட்டிலும் கன்மை ஒருவருக்கு உலகத்து இல்லை ஆதலால் அவ்விதம் தாம் அறியாமலே தம்முடைய காரியத்தைச் செய்த நட்பினரை அவர் தகுதிக்கு விருப்பம் கொள்ளுவதே அன்றி அறிவுடையார்வேறு ஒன்றும்செய்யமாட்டாரென்றும, அறிவுடையார் அல்லது மற்றவர்க்கு அவ்வுரிமை அறிவதற்கு இல்லை யென்றும் அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "தம் நட்பினர் தம்மைக் கேளாமலே செய்த கருமங்களில் தவறு வருமாயின், அதனை யது என்று ரான்றோர் கொள்ளுவர்" என்னலும, ஆசிரியர் கூறுவாராயினர்.

805. பேதைமை யென்றொரு பெருங்கிழமை யெஞ் ஞோதக்க நட்டார் செயின்.

[றுணர்ந்

(பரி.) இ-ள். ஞோதக்க நட்டார் செயின் — தாம் வெறுக்கத்தக்கனவற் றை நட்டார் செய்தாராயின்,—பேதைமை என்றொரு பெருங்கிழமை என்னுமாக = அதற்குக் காரணம் என்றொரு கருமையென்றுதல் என்றிவ் வுரிமையென்றுதல் கொள்க. எ-று.

என்றொருவென்பது எண்ணிடைச் சொல். செயினென்னே, தம்மையல் பாற்செய்யாமை பெற்றும். இது கருதினமாத்திரத்துள்ளதெனவும். இழவுந்தான்

வரும் பேதைமை யாவர்க்கு முண்மையிற் றமக்கேதங்கொண்டாரென்றுதல் ஊழ்வலையான் எம்மின் வரற்பாலது ஒற்றுமை மிகுதிபற்றி அவரின்வந்த தென்றுதல் கொள்வதல்லது அன்பின்மையென்று கொள்ளப்படா தென்ப தாம். கெடும்வகை செய்யின் அதற்குக் காரணம் இதனுற் கூறப்பட்டது.(கு)

விளக்கம்:—தாம் வெறுக்கக்கூடிய விஷயங்களைத் தம்முடைய நட்பினர் செய்து விடுவாராயின், அவ்விதம் செய்தற்குக் காரணம் பேதைமையால் நடந்ததென்று கொள்ளுதல் வேண்டும் என்றும், அல்லது மிகுந்த பாத்தியதையால் நடந்தது என்று கொள்ளுதல் வேண்டும் என்றும் இக்திருக்குறள் கூறுகின்றது. இதனால், தம் நட்பினர் தம்தொழிலே நன்றாக முடியாது கெட்டுப்போகும் விதமாகச் செய்வாராயின் அதனைத் தமக்கு உள்ள துர் அதிர்ஷ்டத்தால் தம் நட்பினர் இவ்விதம் செய்தாரே அன்றித் தமக்குத் துன்பம் வர வேண்டுமென்று செய்தவர் அல்லரென்றும், தாமேசெய்துத் தமக்கு வரவேண்டியதுன்பமானது தம்நட்பினர் மூலமாக அவருக்கும் தமக் கும் உள்ளமிகுந்த ஒற்றுமையால்வந்தது என்றும் அறிவுடையோர் கொள்வரே அன்றித் தம்மிடத்து அன்பில்லாமையால் இவ்வித துன்பம் வருமபடிச் செய்தார் என்று கொள்ளார் என்று அறிகின் றோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "கெடுக்கின்ற ஊழ்வலி யால் இவ்விதம் தமக்குத் தம நட்பினரால் துன்பம்வந்ததே என்று பொறுத்துக் கொள்ளுவதுடன் அத்தவறு உண்டாகச் செய்தவ ரைப் பின்னும் தம் நட்பினராகவே கொள்ளுவரோ ?" என்னலும், ஆசிரியர கூறுவாராயினர்.

806. எல்லைக்கண் நின்றூர் துறவார் தொலைவிடத்துந் தொல்லைக்கண் நின்றூர் தொடர்பு.

(பரி.) இ-ள். எல்லைக்கண் நின்றூர்=நட்பு வரம்பிகவாது அதன் கண்ணே நின்றவர் —தொல்லைக்கண் நின்றூர் தொடர்பு தொலைவிடத்தும் துறவார் -தம்மொடு பழைமையிற் றிரியாது நின்றாரது நட்பினை அவராற் றொலைவு வந்த விடத்தும் விடார். எ-று.

பழைமையிற் றிரியாமை=முன்னை யொழியாமை. தொலைவு=பொருட் கேடும் போர்க்கேடும். (சு)

விளக்கம் :—நட்பின் வரம்பு கெடாது அந்நட்பினிடத்தே நிலைத்து நின்றவர் தம்மோடு பழைமையில் சிறிதும் வேறுபடாது

நின்றவர்களுடைய நட்பினை, அவரால் பொருளுக்குக் கேடும் போரில் அபஜெயமும நேருமாயினும், அவற்றின் பொருட்டாக விட்டுவிட மாட்டார்கள் என்று இத்திருக்குறள் கூறுகின்றது இதனால், மேறகூறிய வண்ணம தமக்குத் தம் நட்பினரால் உண்டாகும் நஷ்டங்களைத் தம்முடைய ஊழ்வலியால் வந்தது என்று எண்ணுவரே அன்றித தமக்குப் பதிலாக பாத்தியதையைக்கொண்டு செய்தவர் செயலால வநதது என்று அவரை வெறுத்து நீக்கிவிடமாட்டார்கள் என்று அறிநதோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம தம நட்பினரை நீக்காது தம்மோடு வைத்துக்கொண டிருப்பாரேனும அவரிடத்துப் பழைமை அன்பு பாராட்டுவரோ?" எனனலும, ஆசிரியர் கூறுவாராயினர.

807. அழிவந்த செய்யினு மன்பறா ரன்பின் வழிவந்த கேண்மை யவர்.

(111.) இ-ள். அழிவந்த செய்யினும் அன்பு அறா — நட்டார தமக்கு அழிவுவந்தவற்றைச் செய்தாராயினும அவர்மாட்டன்பொழியார் — அன்பின் வழி வந்த கேண்மையவர் = அன்புடனே பழையதாய்வாத நட்பினையுடையார். எ-று

அழியென்பது முதனிலைத் தொழிற்பெயர அழிவு = மேறசொல்லிய கேடுகள். இவை யிரண்டு பாட்டானுங கேடுசெய்த கேண்மும நட்பு விடற்பாற்றன்றென்பது கூறப்பட்டது. (எ)

விளக்கம்:—அனபுடனே பழைமையாகத தாம நடபினைச் செய்துவநத நட்பினை உடையவர தமமுடைய நட்டார தமககு அழிவினை உண்டாக்கும செயலகள் பலவறறைச செய்து இருநதாரானாலும, அவ்விதம அழிவு தரும செயலகளைச செய்த அநநட்பினரிடததுத தமககிருநத அன்பினை நீககிககொள்ள மாட்டார் எனறு இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால, மேறகூறிய வண்ணம தன்னுடைய பொருளுக்குக் கேடும, தனனுடைய பகைவர்கள்மேல் சென்று யுத்தம செய்தகாலத்து யுததததில தோல்வியாகிய கேடும் வருமபடித் தமமிடததே நட்புக கொண்டவர் செய்துவிடுவாராயின, தம்முடைய பழைமை மிகுதியால அவரது நட்பினை விடாததோடு அவரிடத்து இருநத அன்பினையும குறைககு மாட்டாரகள என்று

அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "நட்பின் வரம் பினை அடைந்த தம்முடைய நட்டார் செய்த பிழையைத் தாம பொறுத்துக் கொள்வதுடன் பிறர் கோள் சொல்லும் காலத்தும் அப்பிறர் சொல்லும் சொல்லை எடுத்துக் கொள்ளாது நட்பினர் பிழையைப் பொறுத்துக் கொள்ளுவரோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

808. கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு நாளிழுக்க நட்டார் செயின்.

(பரி.) இ-ள். கேள் இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு - நட்டார் செய்த பிழையைத் தாமாகவேயன்றிப் பிறர் சொன்னாலுங்கொள்ளாத உரிமையறிய வல்லார்க்கு—நட்டார் இழுக்கம செயின் நாள்—அவர் பிழை செய்வாராயின், அது பயனபட்ட நாளாம். எ-று.

பிழையாவன:—சொல்லாது நற்பொருள்வெளவல், பணியாமை, அஞ்சாமை முதலாயின. கேட்டல்—உட்கோடல். கெழுதகைமை வல்லாரென்பது ஒருபெயராய்க் கேளாதவென்னு மெச்சத்திற்கு முடிபாயிற்று. செய்து போந்துழி யல்லது அவ்வுரிமை வெளிப்படாமையின், செய்யாதன நாளல்லவாயின. இதனாற் பிழைபொறுத்தற் சிறப்புக கூறப்பட்டது. (அ)

விளக்கம்:—தம்முடைய நட்பினர் செய்த குற்றத்தைத் தாம் மனத்துள் கொள்ளாது பொறுப்பதுடன் பிறர் தமக்கு வந்து சொன்ன காலததும் பிழைகளை மனத்துள் கொள்ளாத உரிமையை உடைய பெரியோர்க்குத் தம நட்பினர் தமக்குப் பிழை செய்வாராயின் அவ்விதம பிழை செய்த நாள் தமக்குப் பயன்பட்ட நாளாகும என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், நட்பையும் அதனது பழைமையையும இவையென்று உணர்ந்து அவற்றின்வழி நிற்கும் சான்றோர் தம் நட்பினர் தம்முடைய நல்ல பொருள்களை அபகரித்தலும், தமக்கு வணங்காதிருத்தலும், தமக்குப் பயப்படாதிருத்தலும் ஆகிய குற்றங்களைச் செய்வாராயின், அக்குற்றங்களைப் பிறர் வலிந்து வந்து சொல்லினும் அவைகளைக்கேட்டுத் தம் நட்பினர் விஷயத்தில் கோபிக்கமாட்டாரென்றும, அவ்விதம் நட்பினர் பிழை செய்யும நாளே சான்றோர்க்கு நல்ல நாளென்றும், ஏனெனின்? எவ்வித பிழை செய்தும் பொறுததுக் கொள்ளுதலாகிய தகுதி தமக்கு

உள்ளது என்று உலகத்தாரால் அறிய நேருமாதலால அநநாளே நநநாளென்றும கூறுவதுடன், நட்பின் தகுதியை அடைநதவர், தமமிடத்தே நட்புச் செய்தவர் எவ்வளவு பிழைகளைச் செய்தாலும் பொறுத்துக் கொள்வார்கள் என்றும அறிகின்றோம் என்றனர் அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் நட்பினர் செய்யும் பிழைகளைப் பொறுத்துக் கொள்வதால் பொறுத்துக கொண்டவனுக்கு என்ன பயன் உண்டாகும்?" என்னலும, ஆசிரியர் கூறுவாராயினர்.

809. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை விடாஅர் விழையு முலகு.

(பரி.) இ-ள். கெடாவழி வந்த கேண்மையார் கேண்மை = உரிமையறாது பழையதாய்வந்த நட்பினையுடையாரது நட்பினை—விடார் உலகு விழையும்—அவர் பிழைநோக்கி விடுதல் செயயாதாரை உலகம் நட்புக்குறித்து விரும்பும். எ-று.

கெடாதென்பத னிறுதிநிலை விகாரத்தாற்றொக்கது. விடாதாரையெனவே, விடுதற்காரணங கூறப்பட்டது. நம்மாட்டும் இவரித்தன்மையரா ரென்று யாவருந் தாமே வந்து நட்பாவ ரென்பதாம. கெடாரென்று பாடமோதி, நட்புத்தன்மையிற் கெடாராகி யென்றுரைப்பாரு முளர். (+)

விளக்கம்:—தம்மிடத்தே உள்ள பாத்தியதை கெடாமல் பழைமையாய் நேர்ந்த நட்பினை உடையவர்கள் பிழைசெய்த காலத்தும், அப்பிழையைக் குறித்து அவரை நீக்காது தமமிடத்தே வைத்துக் கொள்ளுபவரையே உலகத்தார் அவர்களது நட்பின் சிறப்பினைக் குறித்து விரும்புவார்கள் என்று இத்திருக்குறள் கூறுகின்றது இதனால், தமமுடைய நட்பினர் தமக்குச் செய்த பிழையைப்பொறுத்துக்கொண்டு அவரை நீக்காமலும், அவரிடத்துத் தமக்கு உள்ளே அன்புநீங்காமலும இருக்கின்ற நல்ல சிநேகப் பான்மை யுடையவர்களை உலகத்தார் காணுவராயின், 'இவர் இவ்விதம் தம்முடைய நட்பினர் செய்யும் பிழையைப் பொறுத்துக கொள்ளுகின்ற குணமுடையவராக இருக்கின்றாராதலால் இவரிடத்து நாம் நட்புக் கொள்வோமாயின் நாம் பிழை செய்யுங்காலத்தும் நம்மையும இவ்விதமே பொறுத்து அன்பு நீங்காது ஆதரிப்பர்' என்று அவரைவிடாது பின்பற்றி அவரிடத்து நட்புக்கொள்ள

விரும்புவார்கள் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்டமாணாக்கர், "இவ்விதம் பிழை பொறுக்கும் பெரியோரது நட்பினை உலகத்தார் விரும்புவர் என்றமையால் உலகத்து அவரது அன்பினர் மாத்திரம் அவரை விரும்புவரோ? அல்லது பகைவரும் விரும்புவரோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

810. விழையார் விழையப் படுப பழையார்கட்
பண்பிற் றலைப்பிரியா தார்.

(பரி.) இ ள். பழையார்கண் பண்பின் தலைப்பிரியாதார் = பழைய நட்டார் பிழை செய்தாராயினும் அவர்மாட்டுத் தம் பண்பினீங்காதார்—விழையார் விழையப்படுப = பகைவரானும் விரும்பப்படுவர். எ-று.

தம் பண்பாவது:—செய்யாத முன்போல அன்புடையராதல். மூன்றனுருபுஞ் சிறப்பும்மையும் விகாரத்தாற் றொக்கன. அத்திரிபின்மை நோக்கிப் பகைவரும் நட்டாராவரென்பதாம். இவை யிரண்டுபாட்டானும் பழைமையறிவார் எய்தும் பயன் கூறப்பட்டது. (௰)

விளக்கம்:— தம்முடைய பழைய நட்பினர் தமக்குப் பிழை செய்த காலத்தும் அவரிடத்துத் தம்முடைய பழைய அன்பினையும், நட்பினையும் விடாதவரை அவருடைய பகைவரும் விரும்புவர் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, எக்காலத்தும் வேறுபடாத அன்புடையவர்களைச் சாலுடையவர்கள் என்றெண்ணி அவருடைய பகைவரும் தமக்கு இருந்த பகையை ஒழித்துத் தமக்கு நட்பினராவர் என்றமையால், பழைமையை அறிந்து எக்காலத்தும் நட்பினின்றும் வேறுபடாதவர் உலகத்தார் யாவராலும் விரும்பப்படுவார் என்று அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வதிகாரத்தால் பழைமை என்பது இதுவென்றும், அதனால் வரும்பயன் இதுவென்றும் அறிந்தோம். இனிப் பழைமை உடையராயினும் பொறுக்கக் கூடாத குற்றத்தைச் செய்பவர் மாட்டுப் பெரியோர் என் செய்வர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

82. அதிகாரம்.

தீநட்பு.

(பரி.) இழிப் பொறுக்கப்படாத குற்ற முடைமையின் விடற்பாலதாய நட்புரட்பாராய்தற்கட் கருங்கச்சொல்லிய நிணையா னடங்காமையின் அதனை பிருகைப்படுத்து இரண்டதிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கட்டு நட்புக் கூறுகின்றார். அஃதாவது தீக்குணத்தாரோடு ளதாய நட்பு. குணத் பிற் றீமை ஒற்றுமை பற்றி உடையார் மேற்றாய், அது பின் அவரோடு செய்த நட்பின்மேற்றாயிற்று. அதிகாரமுறைமை கூறுமையே விளங்கும்.

விளக்கம்:—அதாவது, பொறுக்கமுடியாத குற்றத்தினைச் செய் தின்றவரை நீக்கல வேண்டும் என்று நட்பு, நட்பாராய்தல் என் னும் இரண்டு அதிகாரத்துள் கருங்கச் சொன்னாலும், சொல் லிய அதனுள் அது அடங்காமையின், நீக்கிவிட வேண்டிய நட்பினை இரண்டு அதிகாரங்களால் சொல்ல வேண்டி முதலில் தீநட்பு என்பதைக் கூறுகின்றனர். தீநட்பாவது தீயகுணம் உடையவரோடு செய்ததாகிய நட்பு. அவ்விதமீ தீயகுணத்தை உடையாரோடு செய்த நட்பினை விலக்கவேண்டும் என்று கூறுவதே இவ்வதிகாரத்தின் கருத்தாகும் என்றனர் அதுகேட்ட மாணாக்கர், "மேல் அதிகாரங்களில் சொல்லியதுபோல் மிக்க அன்புடையார் கமக்கு நட்பினராய் மேர்ந்தவிடத்து அவரிடத்து உள்ள தீக்குணத் தால் அவரை விலக்குதல் வேண்டுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

811. பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை பெருகலிற் குன்று விரிது.

(பரி.) இ-ள். பருகுவார் போலினும் பண்பு இலார் கேண்மை = காதன் மருகியாற் பருகுவார் போன்றாராயினும் தீக்குணமுடையார் நட்பு—பெருக லின் குன்றல் இனிது = வளர்தலிற் றேய்தல் னன்று. வ-று.

'பருகு வன்ன வருகா னோக்கமொடு" *என்னும் பிறரும். நற்குணமில் லாரெனவே, தீக்குணமுடையாரென்பது அருத்தாபத்தியான் வந்தது. பெரு

* பொருநராற்றுப்படை, 78-ம் அடி.

கினுல் வருங்கேடு குன்றினுல் வாராமையின், 'குன்றலினிது' என்றார். இத னுற நீங்கினது ஆகாமை பொதுவகையாற் கூறப்பட்டது. இனிச் சிறப்பு வகையாற் கூறுப. (க)

விளக்கம் :—நீக்குணமுடையார் தம்மிடத்து உள்ள ஆசை பிருதியால் குடிக்கின்ற அமுதம்போல் தம்மைப் பெரும் பொரு ளாக எண்ணி ஆசையோடு இருப்பராயினும், அவருடைய நட்பு தமக்கு வளர்வதினும் தேய்வதே நன்மை உடையது என்று இத் திருக்குறள் கூறுகின்றது. இதனுல், தீயகுணமுடைய ஒருவன் ஒருவரிடத்து எவ்வளவு அன்புடையவனுக இருக்கினும் அவனு டைய கெட்ட குணத்தினுல் பெரியதோர் கேட்டினைத் தனக்குச் செய்துகொள்ளுவதுடன் தன் நட்பினருக்கும் அக்கெடுதியையும் அதனுல் இம்மையில்வரும் பழியையும், மறுமையில் வரும் பாவத் தையும் கொண்டுவந்து விடுவான். ஆதலால், ஒரு முறை ஆய்ந்து அறியாது நட்புக்கொண்டாலும்பின்னர் அறிந்தபிறகு அவனுடைய அன்புடைமையைச்சிறிதும் நினையாமல் அவனதுதீயகுணத்தையே எண்ணி அவனை ஒழித்து விடுதல் வேண்டும் என்று அறிஞர்தாம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "அன்புடையவரையே அவரது தீயகுணம் கண்டு ஒழித்துவிடுதல் வேண்டுமாயின், அன்பில்லாது பயன் கருதி நட்புச் செய்பவரை என் செய்தல் வேண்டும்?" என்ன லும், ஆசிரியர் கூறுவாராயினர்.

812. உறினட் டறிஞருஉ மொப்பிலார் கேண்மை பெறினு மிழப்பினு மெவ்.

(பரி.) இ-ள். உறின் நட்டு அறின் ஒரூஉம் ஒப்பு இலார் கேண்மை = தமக்குப் பயனுள்வழி நட்புச்செய்து அஃதில்வழி ஒழியும் ஒப்பிலாரது நட் பினை—பெறினும் இழப்பினும் என் = பெற்றுல் அக்காமியாது! இழந்தாற்கேடி யாது! எ-று.

தமக்குற்ற பார்ப்பார் பிறரோடு பொருத்த மிலராகவின், அவரை 'ஒப்பிலார்' என்றார். அவர்மாட்டு தொதமற்றன்மையே அமையுமென்பதாம்.

விளக்கம் :—தமக்குப் பயன் கிடைக்கின்றகாலத்து நட்பினைச் செய்தும், பயன் கிடைக்கக் கூடாத காலத்து நட்பினை விட்டும் உள்ள பொருத்த மில்லாதவர்களது நட்பினைப் பெறுவதால் வருகின்ற

லாபமெது என்றும், அந்நட்பினை இழத்தலால் வரும் கேடு எது என்றும் இத்திருக்குறள் வினாவுகின்றது. இதனால், தன்னலம் கருதி நட்புச் செய்பவர்களோடு நட்பினை அடைதல் யாதொரு பயனையும் அடைவதற்கு இல்லாமல் போமென்றும், அவ்வித தகுதி உடையாரோடு நட்பும் பகையுமில்லாது நடுவாகிய நொதுமலர் தன்மையைப்போலும் தன்மையுடையராயிருத்தலே போதுமென்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் தம் பயன் கருதி நட்புச்செய்யும் மக்களை உலகோர் எவ்விதம் கருதுகின்றனர்"? என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

813. உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது கொள்வாருங் கள்வரு நேர்.

(பரி.) இ-ள். உறுவது சீர்தூக்கும் நட்பும்=நட்பளவு பாராது அதனால் வரும் பயனளவு பார்க்கும் நட்டாரும்—பெறுவது கொள்வாரும்=கொடுப்பாரைக் கொள்ளாது விலையைக் கொள்ளும் பொதுமகளிரும்—கள்வரும்=பிறர் கேடு நோக்காது அவர் சோர்வு நோக்குங் கள்வரும்—நேர்=தம்முளொப்பர். எ-று.

நட்பு—ஆகுபெயர். பொருளையே குறித்து வஞ்சித்தொழுகலின், கணிகையர், கள்வரென் றிவரோடொப்ப ரென்பதாயிற்று இவை யிரண்டுபாட்டானுந் தமக்குறுவது பார்ப்பார் நட்பின்றீமை கூறப்பட்டது (௧)

விளக்கம்:—நட்பின் விசேடத்தைச் சீர் தூக்காது அந்நட்பினால் வருகின்ற பயன் அளவையே பார்த்து நட்புச்செய்கின்ற நட்பினரும், கொடுப்பாரை மனத்துக்கொள்ளாது அவர் கொடுக்கும் விலையை மனத்துக்கொண்டு மகிழும் பொதுமகளிரும், மற்றவர்க்கு வரும் கேட்டினை நோக்காமல் அவர் மறந்திருக்கும் தருணத்துத் திருடப் பார்க்கும் கள்வரும் ஒரே சமானமானவர் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், நட்புக்கொள்வதால நட்பினர்க்கு உள்ள சிறந்த குணங்களால இம்மை மறுமைப் பயனை அடையலாம் என்று எண்ணாது அவரால் வரும் பலன்களையே எதிர்பார்த்து நட்புச்செய்வாரானால் அவ்வித நட்பினை இருமனப் பெண்டிராகிய பரத்தையர் பொருள் கொடுக்கின்றவனை விரும்

பிப் புணராதி அவன் கொடுகின்ற பொருளையே விரும்பு கின்றார்கள் ஆதலால் அவ்வீலை மாதர்க்குச் சமானமென்றும், அது வன்றியும், பிறர் பொருளை அபகரிப்பதற்குச் சமயம் பார்த்து அப கரிக்கும் கள்வரோடு சமானமென்றும் உலகத்தார் எண்ணுவ ரென்று அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாகர், "தம் நலம் கருதுவார் நட்பினல்வரும் தீமை இதுவென அறிந்தோம். இவ்விதம் தம் நலம் கருதுவார் நட்பினைக் கொள்ளாதிருத்தலே தகுதி யன்றோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

814. அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா வன்னுர் தமரிற் றனிமை தலை.

(பரி.) இ-ள். அமரகத்து ஆற்று அறுக்கும் கல்லா மா அன்னர் தம ரின்=அமர் வாராத முன்னெல்லாம் தாங்குவது போன்று வந்துழிக் களத் திடை வீழ்த்துப்போம் கல்லியில்லாத புரவிபோல்வாது தமர்மையில்— தனிமை தலை=தனிமை சிறப்புடைத்து. எ-று.

கல்லாமை=கதியைத்தும் சாரிபதினெட்டும் பொருமுரணற்றலும் அறி யாமை. தன்பம் வாராதமுன்னெல்லாம் துணையாவார்போன்று வந்துழி விட்டுநீங்குவதென்பது உமையாற் பெற்றும். அவர் தமராளல் வருமிறுதி தனியாளல் வாராமையின், தனிமையைத் 'தலை' என்றார்: எனவே, அதுவுங் தீதாதல் பெறுதம். (ர)

விளக்கம் :—யுத்தம வருவதற்குமுன்னெல்லாம தாங்கிச் சென்று வெற்றியைக் கொடுப்பதுபோல் காணப்பட்டு யுத்தம் வந்த காலத்து யுத்தகளத்தில் தன்மீது எறிச்சென்ற யுத்த வீரனை யுத்தகளத்தில் வீழும்படிச் செய்துவிட்டுப் போய்விடுகின்ற அறிவில்லாத குதிரை ஒன்றினைப்போன்ற மனிதரது நட்பைக் கொள்வதிலும் தனிமையாக இருப்பதே சிறப்புடையது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, அறியவேண்டிய கதி ஐந்து என்கின்ற லேகத்தினையும், சுழன்று வருவது ஆகிய சாரி பதி னெட்டினையும், யுத்தம் வந்தகாலத்துப் பகைவருடைய படை தன் மீது வந்து பாயுமாயின் அஞ்சாத நிற்றலும் ஆகிய நற்குணங்களைப் பெறாது தன்மீது எறியுள்ள தலைவன் யுத்தம் செய்யும் காலத்துத்

தாங்கி நில்லாது அவனை யுத்தகளத்தில் வீழ்த்தி விட்டுப் பகைவரால் கொல்லும்படிச் செய்யும் குதிரை ஒன்று எவ்விதம் தகுதியற்றதோ, அதுபோல் தம் நட்பினனுக்கு யாதொரு துன்பமும் இல்லாத காலத்திலெல்லாம் பெரியதோர் துணைவர்போன்று காணப்பட்டு அவனுக்கு ஏதேனும் ஒரு துன்பம் வந்தகாலத்து அவனை விட்டு நீங்குகின்ற மக்களோடு நட்புக்கொள்வதிலும், அவர் நட்பில்லாது தனியாக இருப்பதே நன்மையென்று அறிந்தோம். எனெனின்? தனியாக இருப்பின் அஞ்சுவதற்கு அஞ்சி நடக்க நேருமாதலால் தனக்கு யாதொரு துன்பமும் வருவதற்கில்லை யென்றும், இவ்விதந நட்பில்லாதாரை நட்புக்கொள்வதால் துணை யுள்ளது என்று எண்ணிச் சென்று துன்பம் அடைய நேருமென் றும், இவ்வித தீயாரோடு நட்புக்கொள்ளாதிருத்தலே சிறந்ததென் றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வித நீநட்பினர் நட்பினைக் கொள்ளாதிருத்தல் வேண்டுமென்றமையால், நட்புக்கொள்பவர் நன் மக்களாயின் இவ்வித நீங்கு நேராதன்றே?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்

815. செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
யெய்தலி னெய்தாமை நன்று.

(பரி.) இ-ள். செய்து ஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை = செய்து வைத்தாலும் அணுகாத கீழ்மக்களது தீநட்பு — எய்தலின் எய்தாமை நன்று = ஒருவற்குண்டாதலின் இல்லையாதல் நன்று. எ-று.

சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. அணுகாமை = தொலைவின்கண் விட்டு நீங்குதல். எய்தலினெய்தாமை நன்றென்பதற்கு மேலுரைத்தாங்கு முரைக்க. சாராதவென்னும் பெயரெச்சம் கேண்மையென்னும் பெயர்கொண் டது; சிறியவரென்பதனைக் கொள்ளின், செய்தென்பதும் நின்று வற்றும். இவை யிரண்டுபாட்டானுந் தொலைவிற் றுணையாகாத நட்பின்றீமை கூறப் பட்டது. (இ)

விளக்கம் :—எவ்வளவு செய்து வைத்தாலும் சமயத்துக் காவலாகாத அறிவிலாக் கீழ்மக்களது தீய நட்பினை ஒருவன் அடைவதிடன் அடையாதிருப்பதே நன்மையாகுமென்று இத்

திருக்குறள் கூறுகின்றது. இதனால், நட்புக்கொள்பவர் மேன் மக்களாயின் அவ்விதம் சமயத்துவிட்டு ஒழியாரென்றும், அறிவிலாக் குடியில்பிறந்த கீழ்மக்களே அவ்விதம் செய்வார்களென்றும், ஆதலால் நட்புக்கொள்ளும் காலத்து நற்குடிப்பிறப்பு உடையவரை நாடியே நட்புச்செய்தல் வேண்டுமென்றும், அவ்வித நல்லகுடியில் பிறந்தவர் தமக்குத் துன்பம் வந்தகாலத்துத் தாங்கும் அரண்போல் காவலாக இருப்பாரென்றும், அவ்விதமல்லாத கீழ்மக்களது நட்பினைக்கொள்வது தமக்கு நன்மை ஆகாது முடிவதுடன் தீமையையும் தரும் என்றும் அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "அறிவிலாதார் நட்புக் கூடாது என்று அறிந்தோம். ஆயின், அறிவுடையார் பகைவராக இருப்பின் அவரது பகை ஏதேனும் தீமையைச் செய்யுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

816. பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையா ரேதின்மை கோடி யுறும்.

(பரி.) இ-ள். பேதை பெருங்கெழீஇ நட்பின் = அறிவிலானது மிகச் செறிந்தநட்பின் — அறிவுடையார் ஏதின்மை கோடி உறும் — அறிவுடையானது பகைமை கோடி மடங்கு நன்று. எ-று.

கெழீஇயவென்பத னிறுதிநிலை விகாரத்தாற்றொக்கது. பன்மை உயர்த்தற்கண்வந்தது. அறிவுடையான் பகைமை ஒருதீங்கும் பயவாமையானும், பேதைநட்பு எல்லாத்தீங்கும் பயத்தலானும் 'கோடியுறும்' என்றார். பெருங்கழி நட்பென்று பாடமோதுவாரு முளர். (௬)

விளக்கம் :—அறிவில்லாதவனோடு செய்கின்ற மிகுதியும் நெருக்கமாகிய நட்பைக்காட்டிலும் அறிவுடைய ஒருவனது பகையானது கோடி மடங்கு நன்மையை உடையது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அது என்னையோவெனின்? அறிவுடைய ஒருவன் பகைவன் ஆயினும், தனக்கு உள்ள பகையால் நன்னெறி விலகித் தீவழியிற் செல்லான் ஆதலால் அவ்வித பகைவனால் யாதும் தீமையே நேராது என்றும், அறிவில்லாத கீழ் மகனிடத்து நட்புக் கொள்ளுவதால் அவன் அறிவில்லாமையால் செய்கின்ற தீங்கினால் தனக்கும் துன்பம் வருமென்றும் அறிகின்றோமாதலால்,

அறிவில்லாதவரோடு நட்புக்கொள்வதிலும அறிவுடையோரது பகையே மேலானது என்று அறிகின்றோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "அறியவேண்டுவனவற்றை அறியாது நட்பினரிடத்து மகிழ்ச்சி அடைவதற்கு மாத்திரம் இருக்கின்ற மக்களோடு ஒருவன் நட்புக்கொள்ளுவானுயின், அது எவ்விதத் தகுதியுடைய தாகும்?" என்னலும், ஆசிரியர் கூறவாராயினர்.

817. நகைவகைய ராகிய நட்பிற் பகைவரோற் பத்தடுத்த கோடி யுறும்.

(பா.) இ-ள். நகை வகையர் ஆகிய நட்பின் = தாமறிதல் வகையராகாது நகுதல் வகையராதற் கேதுவாகிய நட்பான் வருவனவற்றின் — பகைவரால் பதனு அறித்த கோடி உறும் = பகைவரான் வருவன பத்துகோடி மடங்கு கல்ல. எ-று.

நட்பு — ஆகுபெயர். அந்நட்பாவது :— மிடமருங் துர்த்தரும் வேழம் பரும் போன்று பலவகையா னகுலித்துத் தாம் பயன்கொண் டொழிவாரோ டுளதாயது. பகைவரா லென்பது அவாய்நிற்றலின், வருவனவென்பது வருவிக்கப்பட்டது. பத்தடுத்தகோடி = பத்தாகத்தொகுத்தகோடி. அந்நட்பான் வருமின்பங்களின் அப்பகைவரான் வருந்துன்பங்கள் இறப்பல்லவென்ப தாம். இதற்குப் பிறரெல்லாஞ் சொல்லிலக்கணத்தோ டமாறுகொள வுரைத்தார்.

விளக்கம் :— தாம அறியவேண்டுவனவற்றை அறிவதற்கு இல்லாமல தம் நட்பினரோடு களிப்புடன் பேசி நடிகது மகிழச செய்து பயன்கொண்டு போகின்ற மக்களுடைய நட்பினுல் வருகின்ற இன்பங்களைக் காட்டிலும் நட்புக்கொள்ளாது பகைமையை உடைய பகைவரால் வரும நன்மை பத்துக்கோடி மடங்கு அதிகமாகும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, காமுகரும் கூத்து முதலிய கடிப்புகளைச் செய்யும் கூத்தாடிகளும் ஆகிய மக்கள் தம்மிடத்து நட்புக்கொண்டாரைப் பல வகையாலும் சிரிக்குமபடிச் செய்து தாம் அடையவேண்டிய பயனை அடைந்துவிட்டு ஒழிந்து போவராதலால், அவ்விதம் தன்பயன் கருதாம அறிவிலாத மக்களோடு நட்புக்கொண்டு பொருளையும் காலத்தையும் அறிவையும் ஒழிப்பதினும் பகைவரால் வருகின்ற லாபம பத்துக்கோடி

மடங்கு அதிகமாகும் என்று கூறுகின்றனர். எனினின்? அப்பகை வரால் எவ்வித பொருட்கேடும், காலக்கேடும், அறிவின்கேடும் நேரா ஆகையால் அவரால் வரும் குற்றமில்லாமையையே இலாபமாக்கி அவ்விலாபத்தால் வருமின்பத்தைக் காமுகர் முதலிய மக்கள் செய்த இன்பத்தைக் காட்டிலும் இன்பமென்று கூறி அவ்வின்ப மானது அளவற்றது என்று அறிவித்தற்குப் பத்துக்கோடி மடங்கு என்று ஓர் பெரிய எண்ணிணையும் எடுத்துக் காட்டினர் என்று அறிகின்றோம் என்றனர் அதுகேட்ட மாணாக்கர், "சிலர் தம்மால் பெரிய காரியங்களைச் செய்ய வல்லவராயினும் சமயத்தில் முடியா ததுபோல் நடித்துத் தம் நட்பினரைக் கைவிடுகின்றார்கள் என்று அறிகின்றோம். அவ்வித நட்பினரை என் செய்தல் வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

818. ஒல்லுங் கருமம் முடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல்.

(பதி.) இ-ள். ஒல்லுங் கருமம உடற்றுபவர் கேண்மை = தம்மால் முடி யுங் கருமத்தை முடியாதாக்கிச் செய்யாதாரோடு கொண்ட நட்பினை— சொல்லாடார் சோரவிடல் = அது கண்டால் அஞ்சாறியச் சொல்லாதே சோர விடுக. எ-று.

முடியாதாகுதல் = முடியாதாக நடித்தல். சோரவிடல் = விடுகின்ற வாறு தோன்றுமல் ஒருகாலைக் கொருகா லோயவிடுதல். அறியச்சொல்லி னும் விடுகின்றமாறு தோன்றினும் அதுபொழுது பரிகரித்துப் பின்னு நட்பாயொழுகக் கருதுவாகலின், 'சொல்லாடார்' என்றுஞ் 'சோரவிடல்' என்றுங் கூறினர். இவை மூன்றுபாட்டானும் முறையே பேதையார், நகுவிப் பார், இயல்வதுசெய்யாதாரென் றிவர்க ணட்பின் தீமை கூறப்பட்டது. (அ)

விளக்கம் :— தம்மால் முடியக்கூடிய தொழிலை முடியாதது போல் நடித்துக்காட்டி வஞ்சகம் செய்தாரிடத்துக் கொண்ட நட்பினை அவர் அறிய யாதும் சொல்லாமல் சிறிது சிறிதாக விட்டுவிடுதல் வேண்டும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், தம்மால் முடியக்கூடிய கருமத்தை முடியாததுபோல் நடித்துச் சமயத்துக் கைவிடுகின்ற தீயவரது நட்பானது ஓர் பயனும்

தாராது ஆகையால் அவ்வித நட்பினை விட்டுவிடுதல் வேண்டு மென்றும், அவ்வாறு விடுங்காலத்து அவர் அறியாவண்ணம் சிறிது சிறிதாக நாளுக்கு நாள் குறையும்படிச் சொல்லாமல் விட்டுவிட வேண்டுமென்றும் அறிகின்றேம். எனெனின் ? நட்பினை விட்டுவிடு வதாக அவர் அறிவராயின் அதுபொழுது ஏதேனும் பரிகாரத்தைச் சொல்லி திருப்திபடுத்திப் பின்னும் நட்பினராக இருக்க எண்ணுவ ராதலால் அவர் அறியாமலே நட்பினை விட்டுவிடுதல் வேண்டு மென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "மேற்கூறிய மூன்று செய்யுள்களாலும் அறிவில்லாதவர் நட்பும், சிரிக்கச்செய்து பொருள் கொள்ளுவார் நட்பும், தம்மால் செய்யக் கூடியதைச் செய்யாது ஒழிவார் நட்பும் தீமைபயக்குமென்றும், அவ்வித தீய நட்புக் கொள்ளுதல் கூடாதென்றும் அறிகின்றேம். ஆயின், சிலர் நட்புக்கொண்டவர்போன்று வாக்கால் கூறிச் செய்கையால் வேறு படுகின்றவர்களாகக் காண்கின்றேம். அவ்வித தகுதியுடையாரை என்செய்தல் வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

819. கனவினு மின்னாது மன்னோ வினைவேறு சொல்வேறு பட்டார் தொடர்பு.

(பரி.) இ-ள். வினை வேறு சொல் வேறு பட்டார் தொடர்பு = வினை யுஞ் சொல்லு மொவ்வாது வேறுபேருயிருப்பார் நட்பு,—கனவினும் இன் னாது = கனவின்கண்ணே யன்றிக் கனவின்கண்ணு மின்னாது. எ-று.

வினை சொற்களதொவ்வாமை முதன்மே லேற்றப்பட்டது. அஃதாவது வினையிற்பகைவராய்ச் சொல்லின் நட்டாராயிருத்தல். நிகழ்வின்கண் உளதா யிருத்தலால், 'கனவினுமின்னாது' என்றார். உம்மை எச்சவும்மை; இழிவு சிறப்பும்மையுமாம். மன்னும், ஓவும் அசைநிலை. (கூ)

விளக்கம்:—செய்யும் தொழிலும், சொல்லுமபடியான சொல் லும் ஒன்றை ஒன்று பொருந்தாது வேறு வேறாயிருக்கக்கூடிய தகுதியுடைய நட்பானது நினைக்குங்காலத்து நினைவினிடத்தே மாத்திரமல்லாமல் கனவினிடத்தேயும் துன்பம் தரும் என்று இத் திருக்குறள் கூறுகின்றது. அதாவது, நட்பினர்போன்ற உரை யாடிப் பின்னர் தம தொழிலில் செய்யுங்காலத்துப் பகைவர் செய்

யும் செயலைச் செய்கின்ற மக்கள் எமனினும் கொடியவர் ஆதலால் அவ்வித தகுதியுடையார் நட்பானது விழித்திருந்து நல்ல நினைவோடு இருக்கின்ற காலத்தைத் துன்பம் தருவது மாத்திரமல்லாமல் தூங்கும் காலத்தைத் தோன்றுகின்ற கனவிலேயும் அந் நினைவு தோன்றி மிக்க துன்பத்தைத் தருமாதலால், அவ்வித தீயாரோடு செய்த நீநட்பினை அறவே ஒழித்தல் வேண்டும் என்று அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "சிலர் தனியாக உள்ள காலத்தை நட்புக்கொண்ட நட்பினரைப் புகழ்ந்தும் பலரோடு கூடியுள்ள காலத்துப் பழிப்பதாகக் காண்கின்றோம். அவ்வித தகுதியுடையார் நட்பினை என் செய்தல்வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

820. எனைத்துங் குறுகுத லோம்பன் மனைக்கெழீஇ மன்றிற் பழிப்பார் தொடர்பு.

(பரி.) இ-ள். மனைக் கெழீஇ மன்றிற் பழிப்பார் தொடர்பு=தனியே மனைக்கண்ணிருந்து நீ நட்பாடிப் பலரோடு மன்றின்கண்ணிருந்துழிப் பழிகூறுவார் நட்பு—எனைத்தும் குறுகுதல் ஓம்பல்=சிறிதாயினுந் தம்மை நண்ணுதலைப் பரிகரிக்க. எ-று.

மனைக்கட் கெழுமலும் மன்றின்கட பழித்தலுந் தீதாகலின், அவர் ஒரு காலும் தம்மை நண்ணுகாலைகை குறிக்கொண்டு காக்கவென்பார், அவர் நட்பின் மேல் வைத்துக் கூறினார். இவை யிரண்டுபாட்டானும் வஞ்சர்நட்பின் நீமை கூறப்பட்டது. (10)

விளக்கம் :—தனியே வீட்டிலிருந்த காலத்து நட்பினர் போல் புகழ்ந்துபேசிச் சபையில் பலரோடு கூடியிருந்த காலத்துப் பழிச சொற்களைச் சொல்லுகின்றவர் நட்பானது தம்மைச் சிறிதளவும் சேராதபடிப் பரிகரித்தல் வேண்டும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, வீட்டிலுள்ள காலத்து எதோ பிசகுதியும் நட்பால் ஒற்றுமை கொண்டவர்போல் கூடிப் புகழ்ந்து குலாவுதலும் பலரோடு கூடியிருந்த காலத்துப் பகைவரினும் பகைவராய்ப் பழித்துக் கூறி மானத்தைப் போக்குதலும் உடையாரது நட்பு தம்மைச் சிறிதும் சேரவொட்டாதுச் கழித்துத் தொலைத்தல்

வேண்டுமென்றும் அறிகின்றேம் என்றனர். அதுகேட்ட மாணக்கர் "மேற்கூறிய இரண்டு செய்யுள்களாலும் வஞ்சகருடைய நட்புக்கொள்ளுவதால் வரும் தீமையினையும் அவரிடத்துச் சேர்தல் கூடாதென்பதையு மறிந்தோம். அன்றியும் நீநட்பு என்னும் இவ்வதிகாரத்தால் நட்புக்கொள்ளக் கூடாதார் தகுதியையும் அறிந்தோம். இனிச் சிலர் பகைவராக இருந்து நட்பினர் போல் நடிப்பதாகக் காண்கின்றோம். அவ்விதநட்பினை என் செய்தல் வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

83. அதிகாரம்.

கூடாநட்பு.

(பரி.) இனி வெளிக்கூடாநட்புக் கூறுகின்றார். அஃதாவது பகைமையான் அகத்தாற் கூடாதிருந்தே தமக்கு வாய்க்குமிடம் பெறுந்துணையும் புறத்தாற் கூடி யொழுகுவார் நட்பு.

விளக்கம்:—அதாவது, தமக்கு உள்ள பகைமையால் மனத்துள் கூடாமலிருந்து தம் பகைமையை மூடிக்கக் கூடிய காலம்வரும் வரையில் வெளிக்கு நட்பினர் போல் கூடி நடிக்கின்றவரது நட்பு. மேல் நீநட்புக் கூறினராதலால் இப்போது கூடா நட்பென்னும் இவ்வதிகாரத்தைக் கூறத் தொடங்கினர் என்றனர். அதுகேட்ட மாணக்கர், "இவ்விதக் கூடா நட்பினை ஓர் உவமை வாயிலால் விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

821. சேரிடங் காணி னெறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.

(பரி.) இ-ள். சேரா நிரந்தவர் நட்பு—கூடாதிருந்தே தமக்கு வாய்க்குமிடம் பெறுந்துணையுங் கூடியொழுகுவார் நட்பு—சேரிடம் காணின் எறிதற்குப் பட்டடை—அது பெற்றால், அவ்வெறிதற்குத் துணையாய பட்டடையாம். எ-று.

எறியுமெல்லை வாராமுன்னைலார் தாக்குவதுபோன்றிருந்து வஞ்சி.

அறவெறிவிப்பதாய பட்டடைக்கும் அத்தன்மைத்தாய நட்பிற்குந் தொழி லொப்புமையுண்மையான், அதுபற்றி அந்நட்பினைப் பட்டடையாக வுபசரித் தார். தீர்விடமென்று பாடமோதி முடிவிடமென் றுரைப்பாருமுளர். (க)

விளக்கம் :—தமக்குள்ள பகைமையால் மனத்திற் கூடா திருந்து தம் பகையை முடிக்கக் கூடும் சமயம் வரும் வரையில் நட்பினர் போன்று கூடி இருப்பவர் நட்பானது தன்னிடத்து வைத்த ஒன்றினை அறவெட்டுவதற்குத் துணையாகும் பட்டடை போன்று உள்ளது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால் கொல்லன் ஒருவன் தான் வெட்ட எண்ணிய இரும்பு முதலாகிய லோகத்தை வெட்டுவதற்குப் பட்டடை என்னும் (பட்ரை) பீடத்தின் மீது வைத்த காலத்து அவன் வெட்டுகின்ற காலம் வரையில் தன்னிடத்து வைத்த பொருளைத் தாங்கி நிற் பதுடன் அப்பொருளை வெட்டும் காலத்து உறுதியாக நின்று வெட்டுவதற்கு இடம் தருவது போல், உட்பகை உடைய மக்கள் கொள்ளுகின்ற நட்பானது கொல்லன் பட்டடை போல் சமயம் வரும் வரையில் தாங்கி நிற்பது போல் காணப்பட்டுப் பகையைத் தீர்த்துக்கொள்ளச் சமயம் வந்த காலத்து நட்புக் கொண்டவரைத் தொலைப்பதற்குத் துணையாக உள்ளது என்று கூடா நட்பினைக் கொல்லன் பட்டடைக்குச் சமானமாக எடுத்துக் காட்டினர் என்று அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக் கர், "இக்கூடா நட்பினை மற்றொரு உவமையால் விளக்குதல் வேண் டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

822. இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர் மனம்போல வேறு படும்.

(பரி.) இ-ள். இனம்போன்று இனமல்லார் கேண்மை=தமக்குற்றூர் போன்று உறுதாரோடு உளதாய நட்பு—மகளிர் மனம்போல வேறுபடும்= இடம்பெற்றூற் பெண்பாலார் மனம்போல வேறுபடும். எ-று.

அவர்மனம் வேறுபடுதல் "பெண்மனம் பேதின் றெருப்படுப்பே னென்ன—மெண்ணி லொருவன்" * என்பதனுணுமறிக. நட்பு வேறுபடுத லாவது :—பழைய பகையேயாதல். இவை யிரண்டுபாட்டானும் கூடா நட்பினது குற்றங் கூறப்பட்டது. (உ)

* ஔவையாபரி.

விளக்கம்.—தம்மிடத்து மிகுதியும் மனம் பொருந்தியவர் போல் வெளியே காணப்பட்டு மனத்தால் பொருந்தாதவராது கட்பானது தம்முடைய எண்ணத்தை முடிக்கக் கூடிய இடம் கிடைக்குமாயின் பெண்களுடைய மனம் எவ்விதம் மாறுபடுமோ அவ்விதம் மாறுபடும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, மனத்துள் ஒன்றும் வெளியில் ஒன்றும் ஆகச் சிறிதும் பொருந்தாத மக்களோடு கொள்ளுகின்ற கட்பானது தமக்குத் தக்க இடம் கிடைக்கும் வரையில் பயத்தால் நடித்துக்காட்டித் தம்முடைய எண்ணத்தை முடித்துக்கொள்ள இடம் கிடைக்குமாயின் தம் முடைய மனத்தை மாற்றித் தம் விருப்பத்தை முடித்துக்கொள்ளும் பெண்களுடைய மனம்போல் மாறுதலடையும் என்றும், அப் பெற்றியோர் தம் பகைமை முடிய இடம் கிடைக்கும் வரையில் பொறுத்திருந்து இடம் கிடைத்தகாலத்துத் தம் பகைமையை முடித்துக் கொள்ள எண்ணுவார்களென்றும், ஆகவே அம்மக்களது நட்பு கூடாதென்றும் அறிகின்றோம என்றனர். அது கேட்ட மாணாக்கர், "ஏன் பெண்கள் தங்களுடைய மனத்தை இடம் கிடைத்தவிடத்து வேறாக்கிக் கொள்ளுவர்?" என்னலும், ஆசிரியர் கூறத்தொடங்கினர். "மக்காள்! மகளிர் மனம் அயலார்மீது எக்காலத்தும் செல்வதென்றும், தம் நாயகர் எவ்வித தகுதியுடையவராயினும் அவர் மனம் அயலவரிடத்தேயே செல்லுமென்றும், குமரகுருபரசுவாமிகள் தமது நீதிநெறி விளக்கத்தில், "ஏந்தெழில் மிக்கான் இளையான் இசைவல்லான், காந்தையர் கண் கவர் நோக்கத்தான்—வாய்ந்த, நயனுடை யின்சொல்லான் கேளெனினும் மாதர்க்கு, அயலார்மேலாகும் மனம்" என்றுகூறியுள்ளார். அதாவது, பெண்கள் தமக்கு வாய்ந்த நாயகன் அழகில் மிகுந்தவனும், இளமைப்பருவம் கழியாதவனும், இசையில் வல்லவனும், பெண்களுடைய கண்களைக் கவரக்கூடிய பார்வையுடையவனும், நெருங்கிய சுற்றத்தவனும் இருந்தாலும், இவ்விதக் குணங்களையெல்லாம் மதியாது காம இன்பம் ஒன்றையே கருதித் தம்மனத்தை அயலாரிடத்துச் செலுத்துவதென்றும், அவ்விதம் செலுத்துபவர் தழுக்கு இடம் பெறும்வரையில் தம் நாயகரின் பொருட்டு உயிர் விடுவார் போன்று நடித்துக் காட்டி

இடம் பெற்ற விடத்தில் தம் மனத்தை வேறுபடுத்தித் தாம் கொண்ட எண்ணத்தை முடித்துக் கொள்ளுவரென்றும் இச் செய்யுளால் அறிகின்றோம். அதுவன்றியும், பரிமேலழகர் தம் விசேட உரையுள் வலியாபதி செய்யுளாகக் கூறிய செய்யுளிலும் பெண்ணின் மனத்தை வேறுபடாது ஒருமிக்கும்படி செய்வேன் என்று ஒருவன் எண்ணுமாயின் என்று பொருள்படக் கூறிய அடிகளை எழுதி உள்ளமையால், பெண்கள் மனம் எக்காலத்தும் வேறுபடக் கூடியதென்றும், அதுபோல் பகைவர் வெளியில் நட்பாக இருக்கினும் பழைய பகையே பகையாக நிலைத்து நிற்குமென்றும் கண்டோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஏதோ அறிவில்லாதார் பகைகொண்டு நிற்பாயின் அவர் தம நலம் கருதிக் கொள்ளுகின்ற நட்பு கூடா நட்பாக இருக்கும் என்று கூறியதாக அறிகின்றோம். ஆயின், பல நூல்கள் கற்றவர் பகைவராக இருகது நட்புக்கொள்வராயின் அந்நட்பு எதுவாக இருக்கும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

823. பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல ராகுதன் மாணார்க் கரிது.

(பர்.) இ-ள். நல்லபல கற்றக்கடைத்தும்=நல்லன பலநூல்களைக் கற்ற விடத்தும்— மனம் நல்லர் ஆகுதல் மாணார்க்கு அரிது=அதனுண் மனந்திருந்தி நட்பாதல் பகைவர்க்கில்லை. எ-று.

நல்லன—மனக்குற்றகெடுப்பன. மனநல்லரெனச் சினைவினை முதன்மேனின்றது. நல்லராகுதல்=செற்றம் விடுதல். உள்ளே செற்ற முடையார்க் கல்வியுடைமைபற்றி நட்பென்று கருதற்க வென்பதாம். (கு)

விளக்கம்:—மனக்குற்றத்தைக் கெடுப்பனவாகிய நல்ல நூல்கள் பலவறறைக் கற்ற இடத்து அக்கற்றலால் மனமானது திரும்பி நட்புத் தன்மையைக் கொள்ளுதல் பகைவர்க்கு உண்டாவதில்லை என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால் நூல் பல கற்றவர் என்று கல்வி உடைமை மூன்றையே கருதி கூடா நட்பினராகிய பகைவரை நட்பினரென்று கருதுதல் கூடாது. ஏனெனின்? அப் பகைவர் கூடா நட்பினர் ஆதலால், தம் பகைமையை ஒழிக்கக் கூடிய கோபத்தை விடுத்து நல்லவராதல் இல்லை என்று அறிந்தோ

மென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "சிலர் எக்காலத்தும் இனிய முகமுடையராய்ச் சிரித்து மனத்தோடு வஞ்சகராக இருக்கக் காணுகின்றோம். ஆதலால், அவ்வித நகைமுக முடையாரைக் காணில் என் செய்தல் வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

824. முகத்தி னினிய நகாஅ வகத்தின்னு வஞ்சரை யஞ்சப் படும்.

(பரி.) இ-ள். முகத்தின் இனிய நகாஅ அகத்து னின்னு வஞ்சரை = கண்டபொழுது முகத்தால் இனியவாகச் சிரித்து எப்பொழுதும் மனத்தா லின்னராய வஞ்சரை—அஞ்சப்படும் = அஞ்சல்வேண்டும். எ-று.

நகையது வகைபற்றி 'இனிய' என்றும், அகத்துச் செற்றம் நகழவும் அதற்கு மறுதலையாய நகையைப் புறத்து வீழ்த்தலின் 'வஞ்சர்' என்றும், அச்செற்றங் குறிப்பறிதற்கருவியாய முகத்தானுந் தோன்றுமையின் அஞ்சு தல் செய்யப்படுமென்றுங் கூறினர். இவை யிரண்டுபாட்டானுங் குற்றத்திற் கேதுவாய அவர்கொடுமை கூறப்பட்டது. (ச)

விளக்கம் :—ஒருவரை ஒருவர் பார்த்தகாலத்து முகத்தில் இனிமை தோன்றும்படிச் சிரித்துப் பேசி மனத்திடத்தே கோபத் தோடு வஞ்சகத்தைச் செய்யும் வஞ்சகரைக்காணின் அஞ்சுதல் வேண்டும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனுல் மனத்து இனிமை கொள்ளுகின்ற காரணத்தால் மலர வேண்டியதாகிய முகத்தை மக்கள் கண்டு 'இவர் இன்முக முடையாராதலால் இவர் மனத்திடத்தே இனியவர்' என்று எண்ணி அவரிடத்து நட்புக் கொள்ளவும், மாறுத பகைமையைக்கொண்ட அவ்வஞ்சகர் தம் முகத்தால் தம் கோபம் தெரியாமல் வஞ்சித்து நகைத்து நின்று பின்னர் தம் பகைமையை முடிப்பதற்குக் காலம் நோக்குகின்ற இடத்து நட்புக்கொண்டவர்களைத் துன்புறுத்துவார்கள் ஆதலால், மனத்தில் உள்ளதை அறிவிக்கக்கூடிய முகத்தை மாறுபடுத்தி வஞ்சிக்கின்ற வஞ்சரைக் கண்ட உடனேயே அஞ்சி அகலல்வேண் டும் என்று அவர் கொடுமை கூறியதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "மனத்தினில் இனிமை கொள்ளாது முகத்தினில் இனி மைகொள்ளும் வஞ்சரைப்பற்றி அறிந்தோம். இனி சிலர் எக்கா

லத்தும் இனிய சொற்களேயே கூறி வஞ்சிக்கின்றனர். அவரைப் பற்றி என் செய்தல்வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

825. மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றும்
சொல்லினுற் றேறற்பாற் றன்று.

(பரி.) இ-ள். மனத்தின் அமையாதவரை = மனத்தாற் றம்மொடு மமைவாதாரை—எனைத்தொன்றும் சொல்லினுன் தேறற்பாற்று அன்று—யாதொரு கருமத்தினுஞ் சொல்லாற் றெளிதன்முறைமைத் தன்று என்று சொல்லும் நீதி நூல். எ-று.

நீதிநூலென்பது அவாய்நிலையான் வந்தது. பகைமை மறைத்தற்பொருட்டுச் சொல்லுகின்ற வஞ்சனைச்சொல்லைச் செவ்விய சொல்லெனக்கருதி அவரைக் கருமங்களிற்றெளிதல் நீதிநூன்முறைமை யன்றென்பதாம். (நி)

விளக்கம் :—மனத்திடத்தே பகைமை கொண்டு எக்காலத்தும் தம்மோடு உள்ளவராகிய கூடா நட்பினரை அவர் இனிமை படப் பேசும் சொற்களால் 'இவர் நம்மிடத்து இனியர்' என்று கருதுதல் கூடாது என்று நீதி நூல்கள் கூறுகின்றன என்று இத் திருக்குறள் கூறுகின்றது. ஆதலால் மேல் வினவியபடி நஞ்சுடைய நாகம் போன்று தம்முடைய பகைமை தெரியாத விதமாக மறைத்து இனிமைபடப் பேசும் வஞ்சனைச் சொற்களே உண்மையாகிய சொற்கள் என்று எண்ணி அவ்வஞ்சகரைத் தாம் செய்ய எண்ணிய காரியங்களுள் கூடும்படிச் செய்தல் கூடாதென்றும், அவ்விதம் செய்யின் அது நட்புக் கொண்டார்க்குத் தீங்கிழை இழைக்குமென்றும் அறிகின்றோம். ஆதலால், இவ்வித வஞ்சகரை நட்புக் கொள்ளுதல் கூடாதென்பதே துணிபாகுமென்றனர். அது கேட்ட மாணாக்கர், "நட்பினரைப் போன்று சிலர் பகைவராகவே இருந்து பேசுகின்றனர். அவர் சொல்லைப் பகைமைகொண்ட சொல் என்று அறிதல் கூடாதோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

826. நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்
லொல்லே யுணரப் படும். [சொ

(பரி.) இ-ள். நட்டார்போல் நல்லவை சொல்லினும் = நட்டார்போன்று நன்மையகருஞ் சொற்களைச் சொன்னராயினும்,—ஒட்டார் சொல் ஒல்லே

உணரப்படும் = பகைவர்தொழில்கள் அது பயனுமை அச்சொல்லியபொழுதே யறியப்படும். எ-று.

சொல்லினுமெனவே, சொல்லாமையே பெற்றும். ஒட்டாராதலாற் றீமை பயத்தல் ஒருதலையென்பார், 'ஒல்லையுணரப்படும்' என்றார். (ஈ)

விளக்கம் :—நட்பினரைப்போலவே நடித்து நன்மையைத் தரக் கூடிய சொற்களைச் சொன்னாலும் மனத்தில் பகைமை கொண்ட அவருடைய சொற்கள் நன்மை பயவாதென்பதை அப் பகைவர் சொல்லுகின்றபொழுதே அறியக்கூடும் என்று இத்திருக் குறள் கூறுகின்றது. அது என்னையோவெனில்? மனத்துப் பகை கொண்டார் தம் பகைமையால் நல்ல சொற்களைச் சொல்லுவதே இல்லை என்றும், ஓர் கால் வஞ்சகமாகச் சொல்லினும் அவர் சொல் கொண்டு நடக்கின் நடந்த ஒருவனுக்கு அவன் எண்ணியபடி நன்மை யுண்டாகாது தீமையே உண்டாகிவிடுமாதலால் அக் கூடா நட்பினராகிய வஞ்சகருடைய சொற்கள் எக்காலத்தும் நன் மையை உண்டாக்காமல் தீமையையே உண்டாக்கும என்றும் அறி தல் கூடும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "சிலர் பகைவராக இருந்தும் காணுகின்ற காலத்து மிகுதியும் பணிவாகப் பேசுகின் றனர் அவ்வித பகைவருடைய வணக்கத்தைக் கண்டு யாது எண் ணுதல் வேண்டும் என்பதை ஓர் உவமையால் விளக்கல் வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

827. சொல்வணக்க மொன்னார்கட் கொள்ளற்க வில்வ
தீங்கு குறித்தமை யான்.

[ணக்கந்

(பரி.) இ-ள். வில்வணக்கம் தீங்கு குறித்தமையான் = வில்லினது வணக்கம் ஏற்றவர்க்குத் தீமைசெய்தற்குக் குறித்தமையால், — ஒன்னார்கண் சொல்வணக்கம் கொள்ளற்க = பகைவர்மாட்டுப் பிறக்குஞ் சொல்லினது வணக்கத்தையும் தமக்கு நன்மை செய்தலைக் குறித்ததென்று கரு தற்க. எ-று.

தம்வணக்க மன்றென்பது தோன்றச் 'சொல்வணக்கம்' என்றும், வில் வணக்கம் வேறுயினும் வணங்குதலொப்புமைபற்றி அதன் குறிப்பை எது வாக்கியங் கூறினர். வில்லியதன் குறிப்பு அவனினுய வில்வணக்கத்தின்மே னிற்றலான், ஒன்னாரது குறிப்பும் அவரினுய சொல்வணக்கத்தின் மேல

தாயிற்று. இதுவுந் தீங்கு குறித்த வணக்கமென்றே கொண்டு அஞ்சிக்காக்க வென்பதாம். இவைமூன்றுபாட்டானும் அவரைச்சொல்லாற் றெளியற்க வென்பது கூறப்பட்டது. (எ)

விளக்கம் :—போர்க்களத்தில் பகைவன் மீது எறியும்படி எண்ணிய பேராவீரன் ஒருவன் கன்னுடைய வில்லை எவ்வளவு வளைத்து எய்கின்றானோ அவ்வளவு தீமையை அப்பாணத்தை ஏற்றுக் கொண்டவனுக்கு அவ்வில்லின் மிருந்த வளைவு செய்வது போல், பகைவரிடத்து உண்டாகின்ற சொற்களால் ஆகிய வணக்கத்தையும் தமக்கு நன்மை செய்யும் சொற்களென்று எண்ணுதல் கூடாது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால் பகைவர் வணங்கிச் சொல்லுகின்ற பணிவாகிய சொற்கள் ஒருவனுக்கு மிருந்த அழிவைத் தருவதற்குக் காரணமாகு மென்றும், பகைவன் எவ்வளவு வில்லை வளைத்துப் பாணத்தை எய்கின்றானோ அவ்வளவு அதிகமாக அப்பாணத்தைத் தம் மீது தாங்கிக் கொள்ளுகின்றோர் அழிந்து போவது போல், சொல்லின் வணக்கத்தைக் கொண்டு 'இவர் மிகுதியும் இப்போது வணக்கமாகப் பேசுகின்றார்; ஆதலால் நமக்கு மிகுதியும் அடங்கியவர்' என்று மகிழ்தல் கூடாதென்றும், மகிழ்வதோடு அவ்வித கம்பிக்கையால் மிகவிரைவில் அழிந்து போதற்குக் காரணமாகு மென்றும், ஆதலால் அவ்வித வஞ்சகரைக் கண்டகாலத்திலேயே பயந்து தமக்குத் தீங்கு வாராத விதமாகக் காத்துக் கொள்ளுதல் வேண்டுமென்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "மேற்கூறிய மூன்று திருக்குறள்களாலும் கூடா நட்பினரது சொற்களால் அவரை மதித்தல் கூடாது என்று அறிந்தோம். இனி, பகைமை கொண்ட சிலர் நம்மைக் கண்டகாலத்து அழுத கண் உடையவராய்ப் பேசி நடிக்கின்றனரே, அவரைப்பற்றி நம்மாசிரியர் யாது கூறுகின்றனர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

828. தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னார் அழுதகண் ணீரு மனைத்து.

(பரி.) இ-ள். ஒன்னார் தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும் = ஒன்னார் சூழ்ச்சியை யுணரவல்லார்க்கு அவர் தொழுத கையகத்தும் படைக்கலம் மறைந்

கிருக்கும்;—அழுதகண்ணீரும் அனைத்து=அவர் அழுத கண்ணீரும் அவ் வாறே அதுமறைக்கிருத்தற் கிடனும். எ-று.

தாம் கட்பென்பதனைத் தங்கையாலுங் கண்ணுனுக் தேற்றிப் பின் கோறற்கு வாங்கவிருக்கின்ற படைக்கலம் உய்த்துணர்வுழித் தேற்றுகின்ற பொழுதே அவற்றுள்ளே தோன்றுமென்பார், 'ஒடுங்கும்' என்றார். பகைவர் தம் மென்மைகாட்டித் தொழினு மழினும், அவர் குறிப்பையே நோக்கிக் காக்கவென்பதாம். இதனுல் அவரைச் செயலாற் ரெளியற்க வென்பது கூறப் பட்டது. (அ)

விளக்கம்:—பகைவருடைய செயல் இது வென்று குறிப்பால் உணரக்கூடிய அனுபவ ஞானமுடையவர் தம்பகைவர் தம்மை வணங்கிய விடத்து அவ்வணங்கிய கையினுள் தம்மைக் கொல்ல ஓர் ஆயுதமிருக்கும் என்று கண்டு அறிந்து அவர் வணக்கத்தைக் கொண்டு எவ்வித நம்பிக்கையும் கொள்ளாமல் அவரைத் தம் பகை வராகவே எண்ணித் தம்மைக் காத்துக் கொள்ளுகின்றனரோ அது போல், அப்பகைவர் அழுகின்ற கண்ணீரும் தம்மை அழிப்பதற்கு உரியதோர் குறிப்பென்று கண்டு தம்மைக் காத்துக் கொள் ளுதல் வேண்டும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனுல், பகைவரானவர் தாம் பகைவரன்று நட்பினராவோம் என்று தம் கையினுலும், கண்ணீருலும் நடித்துக் காட்டி நம்பும்படிச் செய் தாலும், அவர் குறிப்பு நட்பன்று பகைமையே ஆகும் என்று உணர்ந்து நிற்பதோடு அவர் கையினுள்ளே தம்மைக் கொல்வ தற்கு மறைத்துவைத்திருக்கும் ஆயுதத்தினையும் கண்டு பிடித்து அவர் தம்மைக் கொல்லாதவண்ணம் எவ்விதம் தம்மைக் காத்துக் கொள்ளுகின்றனரோ அதுபோல் அழுத கண்ணும், சிந்திய மூக் கும், தொழுதகையும், துவண்ட நடையும் ஆக இருந்து தம்மிடத்தே வந்து தம்பகைவர் தம்முடைய பலமின்மையைக் காட்டி வணங்கி னுலும், அழுதாலும் அவருடைய குறிப்புத் தம்மைக் கெடுப் பதற்கே அல்லாமல் உண்மையாக மெலிவுடைமை அல்லை என்றி அறிந்து அவர் தம்மிடத்தே அணுகாவண்ணம் தம்மைக் காத்துக் கொள்ளுதல் வேண்டும். அன்றியும் இதனே மெய்ப்பொருள் நாய னரைக் கொல்ல வந்த பகை அரசனிடத்தும், ஔரங்கசீப்பின் சேனைத்தலைவரைக் கொன்ற சிவாஜியினிடத்தும் நேர்ந்த கதைகளை

முறையே பெரிய புராணத்துள்ளும, இந்து தேச சரித்திரத்திலும் அறிதல் கூடும் என்றனர் அதுகேட்ட மாணாக்கர், "இத்திருக்குறளால் கூடா நட்பினரது செயலால் அவரை நம்புதல் கூடாது என்று அறிந்தோம். ஆயின், சிலர் தம்மனத்துள்ள பகைமை தோன்றாத வழி மிகுதியும் நட்பினைச் செய்து பின்னர் மனத்தின்கண் இகழ்ச்சி செய்கின்றனர். அவ்வித தகுதியுடையாரை உலகத்தைக் காக்கும் அரசன் யாது செய்தல்வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

829. மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து நட்பினுட் சாப்புல்லற் பாற்று.

(பரி.) இ-ள். மிகச் செய்து தம் எள்ளுவாரை=பகைமை தோன்றாமற் புறத்தின்கண் நட்பினை மிகச்செய்து அகத்தின்கட் டம்மையிகழும் பகைவரை—நட்பினுள் நகச்செய்து சாப் புல்லற்பாற்று=தாமும் அந்நட்பின் கண்ணே நின்று புறத்தின்கண் அவர் மகிழும்வண்ணஞ் செய்து அகத்தின் கண் அதுசாம்வண்ணம் பொருந்தற்பான்மையுடைத்து அரசநீதி. எ-று.

நின்றென்பதூஉம் அரசநீதியென்பதூஉம் அவாய்நிலையான் வந்தன. அகனொன்று புறனொன்றாதல் ஒருவற்குத் தகாதெனினும் பகைவர்மாட்டாயிற்றகுமென்பது நீதிநூற்றுணிபென்பார், அதன்மேல் வைத்துக் கூறினார். சாவவென்பதனிறுதிநிலை விகாரத்தாற்றொக்கது, "கோட்டின்வாய்ச்சாக்குத்தி"* என்புழிப்போல. எள்ளுவாரைப புல்லலெனக் கூட்டுக. (௯)

விளக்கம் :—அரச நீதியாவது மனத்துக்குள்ளிருக்கும் பகை தோன்றாவிதம் செய்து புறத்தே மிகுதியும் நட்பினை உடையவர் போல் நடித்து உள்ளுக்குள் தம்மை இகழ்ந்து பேசுகின்ற பகைவரைத் தாமும் அவ்விதமே இருந்து புறத்தே அப்பகைவர் மகிழும் வண்ணமாகச் செய்து மனத்திற்குள்ளே அப்பகைவர் சாதற்குத் தக்கவிதமாகக் கூடியிருப்பது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, உள்ளே ஒன்றும், புறத்தே ஒன்றும் வைத்து நடிப்பது நீதியல்லவாயினும் உலகத்தைக்காக்கும் அரசன் ஒருவன் வஞ்சகரைக் கண்ட காலத்துத் தானும் வஞ்சகனாக இருந்து அவர்களை வெல்லாவிடில் உலகத்தைக் காத்தல் கூடாது ஆதலால், இவ்வித

* கலி, முல்லை 5.

வஞ்சகர்க்கு வஞ்சகராக நடப்பது அரசனுக்குப் பொருந்துமென் றும், அது அரச நீதியென்றும் அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணக்கர், " பகைவர் ஏதோ ஒரு காரணத்தால் தம்மிடத்து நட் புச்செய்யவேண்டி வருமாயின், அப்பகைவரை எவ்விதம் கொள் ளல்வேண்டும் ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

830. பகைநட்பாங் காலம் வருங்கால் முகநட்
டகநட் பொரீஇ விடல்.

(பரி.) இ-ள். பகை நட்பாம் காலம் வருங்கால்=தம்பகைவர் தமக்கு நட்டாராயொழுகுங்காலம் வந்தால்,—முகம் நட்டு அகம் நட்பு ஒரீஇ விடல்= தாமும் அவரோடு முகத்தால் நட்புச்செய்து அகத்தால் அதனைவிட்டுப் பின் னதுவுந் தவிர்க. எ-று.

அக்காலமாவது :—தம்மானும் பகையென்று வெளிப்பட நீக்கலாகாத வளவு. இதனானே ஆமளவெல்லாம் நீக்குகவென்பது பெற்றும். இவை யிரண்டுபாட்டானும் அந்நட்பிடை யொழுகுமாறு கூறப்பட்டது. (இ)

விளக்கம் :—தமக்குப் பகைவராக இருந்தவர் ஏதோ ஒரு காரணத்தால் தமக்கு நட்பினராக இருக்கக்கூடிய காலம வருமாயின், அப்பகைவரோடு தாமும் முகத்தால் நட்பினர்போல் காட்டி, மனத்தால் நட்புக்கொள்ளாதிருந்து பிறகு அம்முக நட்பினையும் ஒழித்து விடுதல்வேண்டும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, பகைவரானவர் தம்மிடத்து நட்பினர்போல் நடித்து இருக்கவேண்டிய கால அளவு வருமாயின், அறிவுடையோர் அக் காலத்துத் தாமும் பகைவரென்று காட்டாதிருப்பதற்கு முகத்தால் நட்புக்காட்டியும், பின்னர் தம் பகைமையை வெளிப்படுத்தக் கூடிய காலத்து அம்முகத்தாலும் நட்புக்கொள்வதைவிட்டு அவர்களோடு நீங்கி இருத்தலே வேண்டும் என்றும் அறிகின்றோமென்றனர். அதுகேட்ட மாணக்கர், "கூடா நட்பினரோடு எவ்விதம் கூடி இருத் தல் வேண்டும் என்பதை மேற்கூறிய இரண்டு திருக்குறள்களாலும் அறிந்தோம். அன்றியும், நட்புக்கு நேராக விதிமுகமாகக் கூறிய ஐந்து அதிகாரங்களையும் கேட்டு உணர்ந்தோம் இனி, எதிர் மறை முகத்தால் கூறியுள்ள நட்புக்கு உரிய பன்னிரண்டு அதிகாரங்களை யும் விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

84. அதிகாரம்.

பேதைமை.

(பரி.) இனி அந்நட்பினை யெதிர்மறுத்துப் பகைமுகத்தாற் கூறிய தொடங்கினர். அப்பகைதான் முற்றக்கடியுங் குற்றமன்மையி னுளவாய வெகுளியானுங் காமத்தானும் வருவதாம். அவற்றுள் வெகுளியான் வருவன ஐந்ததிகாரத்தானும் காமத்தான் வருவன ஐந்ததிகாரத்தானுங் கூறுவார், அவ்விரண்டற்கும் அடியாய மயக்கத்தை இருவகைப் படுத்து, இரண்டதி காரத்தாற் கூறுவான் றொடங்கி, முதற்கட் பேதைமை கூறுகின்றார். அஃ தாவது யாது மறியாமை.

விளக்கம்:—அதாவது, நீங்கள் வினவிய வண்ணம் நட்பு என் பதை எதிர் மறுத்துப் பகை முகத்தால் சொல்லிய அதிகாரங்களைச் சொல்ல ஆசிரியர் ஆரம்பித்தனர். அதாவது, பகைநட்பென்பது கோபத்தாலும், காமத்தாலும் வருவது ஆம். அவ்விரண்டும் முழு வதும் நீக்கும் குற்றமல்லவாதலால், அக்கோபம், காமம் என்னு மிரண்டினுள் கோபத்தால் வருகின்ற பகையினை ஐந்து அதிகாரங்க ளாலும், காமத்தால் வரும் பகையினை ஐந்து அதிகாரங்களாலும் கூறத் தொடங்கியவர் அக்கோபத்திற்கும், காமத்திற்கும் அடிப் பீடமாயுள்ள மயக்க அறிவினை இரண்டுவிதமாக்கி ஒன்றைப் பேதை மை யென்றும் மற்றொன்றைப் புல்லறிவாண்மை யென்றும் பெய ரிட்டு, முதலில் பேதைமை யென்னு மதிகாரத்தைக் கூறத்தொடங் கினர். அப்பேதைமையாவது:—அறியவேண்டுவது ஒன்றினையும் அறியாதிருத்தலே ஆகும் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "அறிய வேண்டுவது ஆகிய ஒன்றினை அறியாமை பேதைமை என்று கூறுவதால், உலகத்து மக்கள் ஒன்றையுமறியாது இருத்தல் முடியாது. ஏதோ ஒன்றில் ஒருவர் அறிவு செல்லுவதாகவே இருக்கும். ஆதலால், இப்பேதைமை கொண்டவர் அறிவின் செயல் எதுவாக இருக்கும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

831. பேதைமை யென்பதொன் றியாதெனி னேதந்
தீதியம் போக விடல். [கொண்

(பரி.) இ-ள். பேதைமை என்பது ஒன்று=பேதைமையென்று சொல் லப்படுவது ஒருவனுக்கு வினைக்குற்றங்களெல்லாவற்றினும் மிக்கதொன்று;—

யாது எனின் ஏதம் கொண்டு ஊதியம் போகவிடல்=அதுதான் யாதென்று வினவின், தனக்குக் கேடுபயப்பனவற்றைக் கைக்கொண்டு ஆக்கம் பயப்பன வற்றைக் கைவிடுதல். எ-று.

கேடு=வறுமை, பழி, பாவங்கள். ஆக்கம்=செல்வம், புகழ், அறங்கள். தானே தன்னிருமையுங் கெடுத்துக் கோடலென்பதாம். (5)

விளக்கம்:—பேதைமை என்று சொல்லப் படுவது ஒரு வனுக்கு உள்ள குற்றங்கள் எல்லாவற்றிலும் பெரியது ஒன்றாகும் என்றும், அப்பெரியது ஆகிய குற்றம் எது என்று அறிய வேண்டு மாயின் தனக்குக் கேட்டினை உண்டுபண்ணும் செயல்களைக் கைக் கொண்டு தனக்கு நன்மை பயக்கும் செயல்களை விட்டு விடுதல் என்பதே ஆகும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, நீங்கள் வினவியபடி பேதைமை உடைய ஒருவனது அறிவானது தனக்குக் கேடு செய்கின்ற தரித்திரம், பழி, பாவங்கள் ஆகிய இவைகளில் சென்று, தனக்கு உயர்வினை உண்டு பண்ணும் செல்வம், புகழ், தருமங்கள் ஆகிய இவைகளை யெல்லாம் ஒழித்து, இம்மை மறுமையாகிய இரண்டினையும் வரவொட்டாமல் செய்து விடும் என்று அறிந்தோ மென்றனர். அது என்னையோவெனின்? உல கத்து மக்கள் இருமையை அடைவதற்குரிய முயற்சிகளை எல்லாம் கைவிட்டு இருமையையும் கெடுக்கும் முயற்சிகளுள் சென்று தாமே தம்மைக் கெடுத்துக் கொள்ளும் தகுதியுடையோரைப் பேதைமை யுடையரென்றும், ஒருவனுக்கு இருக்கவேண்டிய குற்றங்களுள் இதனினும் மேற்பட்ட குற்றம் ஒன்று இல்லை யென்றும் கூறிய தாயிற்று என்றனர். அது கேட்ட மாணாக்கர், "ஏன் பேதைமை யுடையார் கேட்டினைத் தேடிக்கொள்ளுகின்றனர்? அவ்விதம் செய்து கொள்வதற்கு எவ்விதச் செயலை செய்பவராயிருப்பர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

832. பேதைமையு மெல்லாம் பேதைமை காதன்மை கையல்ல தன்கட் செயல்.

(பரி.) இ-ள். பேதைமையுள் எல்லாம் பேதைமை=ஒருவனுக்குப் பேதைமையெல்லாவற்றுள்ளும் மிக்க பேதைமையாவது—கையல்ல தனகண்

காதன்மைசெயல் = தனக்காகாத ஒழுக்கத்தின்கட் காதன்மை செய்தல். எ-று.

இருமைக்கும் ஆகாவென்று நூலோர் கடிந்த செயல்களே விரும்பிச் செய்தலென்பதாம். இவை யிரண்டுபாட்டானும் பேதைமையதிலக்கணங் கூறப்பட்டது.

விளக்கம் :—ஒருவனுக்கு உள்ள அறியாமை மல்லாவற்றுள்ளும் மிகுந்த அறியாமையாவது தனக்கு ஆகாத ஒழுக்கத்தில் ஆசைகொண்டு ஒழுகுதல் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, நூல்வல்லவர் விதியிது, விலக்கு இது என்று கூறியபடி விதியினைச் செய்தல் வேண்டுமென்றும், விலக்கினை ஒழிதல் வேண்டுமென்றும் கூறியிருக்கப் பேதைமையுடையார் தம், பேதைமை மிகுதியால் நீதியையும், அறத்தையும் கைவிட்டு அநீதியையும், பாவத்தையும் செய்யப் புகுவராதலால், அவ்வித ஒழுக்கம் அவர்களுக்குப் புகழிற்கும் புண்ணியத்திற்கும் மாறுகிய பழியையும் பாவத்தையும் விளைத்து இம்மைக்கு உரிய பயனையும், மறுமைக்கு உரிய பயனையும் போக்கி விடும் என்று அறிந்தோம். ஆதலால், பேதைமையுடையார் செயல் ஒழுக்கத்துக்கு மாறுகிய விஷயங்களில் ஆசைகொண்டு நிற்பதென்று அறிந்தோமென்றனர். அது கேட்ட மாணாக்கர், "பேதைமையென்பதின் தன்மையை அறிந்தோம். இனிப் பேதைமை என்பதற்கு இயற்கையான தொழில் எதுவென்று விளக்கல் வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

833. நாணுமை நாடாமை நாரின்மை யாதொன்றும் பேணுமை பேதை தொழில்.

(பரி.) இ-ள். நாணுமை = நாண வேண்டுமவற்றுக்கு நாணுமையும்—நாடாமை = நாடவேண்டுமவற்றை நாடாமையும்—நார் இன்மை = யாவர் மூட்டும் முறிந்தசொற்செய லுடைமையும்—யாதொன்றும் பேணுமை = பேணவேண்டுமவற்றுள் யாதொன்றினையும் பேணுமையும்—பேதை தொழில் = பேதையது தொழில். எ-று.

நாணவேண்டுமவை = பழி பாவங்கள். நாடவேண்டுமவை = கருமங்களிற் செய்வன தவிர்வன. முறிதல் = கண்ணழுதல். பேணவேண்டுமவை

=குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்க முதலாயின. இவை பேதைக்கு எஞ்ஞான்று மியல்பாய் வருதலின், 'தொழில்' என்றார். (கூ)

விளக்கம்:—பேதைமை உடையார் தொழில் நாணவேண்டு வதற்கு நாணுமையும், நாடவேண்டுவனவற்றை நாடாமையும், யாரி டத்தும் தாகவுண்யமில்லாது பேசுதலும், விரும்ப வேண்டுவன வற்றை விரும்பாமையும் ஆகுமென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, உலகத்து மக்கள் தம்மைப் பிறர் பழிக்கும் பழியை அடையாமலும், நரகத் துன்பத்திற்குச் செலுத்தும் பாவங்களைச் செய்யாமலும் ஆகிய நற்செயல்களைச் செய்ய வேண்டி இருக்க அவ்வித்தம் அச் செயல்களைச் செய்யாததோடு அவற்றிற்குச் சிறிதும் வெட்கப்படாத தன்மையும், செய்ய வேண்டிய கருமங்களைச் செய்ய வும், செய்யக் கூடாத கருமங்களை விடவும் வேண்டிய ஆராய்ச்சி களைச் செயயாதிருத்தலும், கட்பினர், பகைவர், கொதுமலர் என் னும் யாவரிடத்தும் தாகவுண்யமில்லாது பேசுதலும் குடிப் பிறப்பு, கல்வி, ஒழுக்கம் ஆகிய மூன்றினையும் உயிர்போல் எண்ணி ஒழுக வேண்டி இருக்க அவற்றைக் கொண்டு ஒழுகாமலும் இருப்பது அறிவிலாதார் செயல் ஆதலால், அவ்வித செயலைப் பேதைமை உடையார் செயல் என்று பிரித்துக்காட்டினர். அன்றியும், மேல் திருக்குறளில் தனக்கு ஆகாத ஒழுக்கத்தில் கலியிடுவது ஒருவ னுக்கு 'அறிவில்லாமை எல்லாவற்றுள்ளும் அறிவில்லாமை' என்று கூறியதை இத்திருக்குறளில் அவ்வொழுக்கமுடைமை இது வென் றும், அவ்வொழுக்கமுடைமையால் அப்பேதையர்க்கு இயற்கையாக வரும் குற்றங்கள் இவை என்றும் வகுத்துக் காட்டியதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "சிலர் எல்லா நூல்களையும் கற்று உணர்ந்தும் மேற் கூறிய ஒழுக்க மின்மையைச் செய்கின் றனர். அவரையும் பேதையரென்ற அழைத்தல் கூடுமோ?" என் னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

834. ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப் பேதையிற் பேதையா ரில்.

(பரி.) இ-ள். ஓதி=மனமொழி மெய்களடங்குதற் கேதுவாய நூல் களை யோதியும்,—உணர்ந்தும்=அவ்வடக்கத்தான் வரும் பயனை யுணர்ந்

தும்,—பிறர்க்கு உரைத்தும்=அதனை யதியலுறப் பிறர்க்குரைத்தும்,—தான் அடங்காப் பேதையின்=தான் அவை யடங்கி யொழுகாத பேதை போல—பேதையார் இல்=பேதையார் உலகத்தில்லை. எ-று.

உம்மை முன்னுங் கூட்டப்பட்டது. இப்பேதைமை தனக்கு மருந்தாய் இவற்றுற் றீராமையானும், வேற்றுமருந்தின்மையானும், 'பேதையிற்பேதையாரில்' என்றார். இவை யிரண்டுபாட்டானும் பேதையது தொழில் பொது வகையாற் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையாற் கூறுப. (ச)

விளக்கம் :—மனம், வாக்கு, காயங்களாகிய மூன்றும் அடங்குதற்குக் காரணமாகிய நூல்களே யெல்லாம் நன்றாகப் படித்தும், படித்த அளவே அவ்வடக்கத்தால் வரும் பயனை அறிந்திருத்தும், தாம் அறிந்த விஷயங்களை மற்றவர்கள் அறியும்படி அவர்களுக்குச் சொல்லியும், தாம் மாத்திரம் அடங்கி உலகத்து நடவாத பேதையைப்போல் அறிவில்லாதவர் உலகத்து இல்லை என்று இத் திருக்குறள் கூறுகின்றது. அதாவது, ஒரு உணராதவனுயின் படித்து உணர்ந்த அறிஞரைக் கொண்டு அவன் அஞ்ஞானத்தைப் போக்குதல் கூடுமென்றும், ஒரு உணர்ந்து அயலவர்க்குக் கூறும் வாக்கின் வல்லமையுமுடைய ஒருவனை மற்றொருவனைக் கொண்டு திருத்துவது கூடாத காரியமாதலால், அவனைக் காட்டிலும் அறிவில்லாத ஒருவன் உலகத்து இராதென்றும் கூறுவதாக அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பேதையின் தன்மையினைப் பொதுவகையால் உணர்த்த அறிந்தோம். இனிச் சிறப்புவகையால் கூறுதல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

835. ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையும்
தான்புக் கழுந்து மளறு.

(பரி.) இ-ள். பேதை=பேதையாயினான்—எழுமையும் தான் புக்கு அழுந்தும் அளறு=வரும்பிறவிகளெல்லாந் தான்புக்கழுந்தும் நிரயத்தினை—ஒருமைச் செயல் ஆற்றும்—இவ்வொரு பிறப்புள்ளே செய்து கொள்ள வல்லனும். எ-று.

எல்லாப் பிறப்பும் ஏழாயடங்குதல் அறியப்பட்டமையின், முற்றும்மை கொடுத்தார். அழுந்தும் நிரயம்=அழுந்துதற் கிடனுய நிரயம். ஈண்டைப் பிறப்புக்களினுங் கொடுவினைவயத்தால் அந்நிரயத்தன்மே யுழந்துவருத

லின், 'எழுமையுந் தான் புக்கழுந்து மளறு' என்றார். முடிவில் காலமெல்லாம் தான் நிரயத்துன்ப முழத்தற் கேதுவாங் கொடுவினைகளையே யறிந்து சில காலத்துள்ளே செய்துகோடல் பிறர்க் கரிதாகலின், 'ஆற்றும்' என்றார். இதனான் அவன் மறுமைச்செயல் கூறப்பட்டது. (௫)

விளக்கம் :—பேதைமை உடைய ஒருவன் வருகின்ற பிறவிகள் தோறும் தான் சென்று அழுந்துகின்ற நரகத்தினை இப்போது அடைந்துள்ள இவ்வொரு பிறப்பிலேயே செய்து கொள்ள வல்லவனாகின்றான் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, உயிரானது எவ்வித பிறப்பினை எடுக்கினும் அப்பிறப்பினுள் ஏழு முறை எடுத்தல் வேண்டுமென்றும், அவ்விதம் எடுத்த பிறவிகளுள் மக்கட் பிறப்பினை எடுத்த இப்பேதையாயினான் தன் பேதைமையால் இப்பிறப்பில் செய்து கொள்ளுகின்ற அதிகரித்த தீமையால் இனிவரும் பிறவிகளிலெல்லாம் இப்பிறப்பில் செய்த தீமையின் முயற்சியே அதிகரித்தும் பலவித நரகங்களில் சென்று அடைவதற்குக் காரணமாகிய தீவினைகளை எல்லாம் செய்தும் நிற்பான் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இதனால் பேதைக்கு உண்டாகும் மறுமைப் பயன் இதுவென்றறிந்தோம். இவ்வித பேதையாயினான் உலகத்து இம்மைப்பயனை அடையக்கூடிய செல்வத்தை எவ்விதம் தேடும் வல்லமை உடையவனாயிருப்பான் என்பதையும் விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

836. பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப் பேதை வினைமேற் கொளின்.

(பரி.) இ-ள். கை அறியாப் பேதை வினைமேற்கொளின்—செய்யு முறைமை யறியாத பேதை ஒருகருமத்தை மேற்கொள்வனாயின்,—பொய்படும் ஒன்றோ புனைபூணும்=அதுவும் புரைபடும், தானுந் தளைபூணும். எ-று.

புரைபடுதல்=பின் ஆகாவகை உள்ளழிதல். ஒன்றோவென்பது எண்ணிடைச்சொல். அதனையுங் கெடுத்துத் தானுங் கெடுமென்பதாம். இதனால் அவன் செல்வம் படைக்குமாறு கூறப்பட்டது. (௬)

விளக்கம் :—தொழிலைச் செய்யும் முறைமை இதுவென்று தெரிந்து கொள்ளுதலாகாத பேதையாயினான் ஒருவன் ஒரு தொழி

லைச் செய்ய உடன்பட்டுச் செய்வானுயின் அவன் செய்த தொழி லும் முடியாத விதமாகக் குற்றமடைவதுடன் அதனேடு கை, கால் களில் விலங்கென்னும் தளையைத் தனக்கு இடும்படியும் செய்து கொள்ளுவான் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், அறி வில்லாத ஒருவன் தான் அடையவேண்டிய இம்மைப் பயனுக்குக் காரணமாகிய செல்வத்தை உண்டு பண்ணுவதற்கு ஓர் தொழிலைச் செய்ய எடுத்துக் கொள்ளுவானுயின், அத்தொழிலைச் செய்ய வகை அறியாது எடுத்த தொழில் முடிவு அடையாதவிதமும், அத் தொழில் கெட்டுப்போம்படியும் செய்வதுடன் தனது அறியாமை யால் பலதவறுகளைச் செய்து அரசன் ஆணையால் இவன் செய்த தீங்குகளுக்காகத் தண்டனையும் அடைதல் கூடும் என்று அறிகின் றேம். இதனுல் நீங்கள் மேல் வினவிய வண்ணம் பேதையாயினுன் இம்மைப் பயனைத்தரும் செல்வத்தை உண்டுபண்ணும் யோக்கிய னுக இரான். ஆதலால் பேதைக்கு இம்மைப்பயன் கிடைப்பதும் அரி தாகும் என்று கூறினர். அதுகேட்ட மாணுக்கர், "செல்வமில்லாத ஒருவன் தன் பேதைமையால் செல்வத்தைத் தேடுதல் முடியாது என்று அறிந்தோம். ஆயின், பெரும் செல்வமுடைய ஒருவன் பேதைமை உடையவனுயின் அவன் அடைந்த செல்வம் எவ்விதப் பயனை உண்டாக்கும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

837. பதிலா ராரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வ முற்றக் கடை.

(பதி.) இ-ள். பேதை பெருஞ் செல்வம் உற்றக்கடை = பேதையாயி ஞன் பெரிய செல்வத்தைத் தெய்வத்தானெய்தியவழி, — எதிலார் ஆரத் தமர் பசிப்பர் = தன்னேடொரியைபு மில்லாதார் நிறைய, எல்லாயினைபு முடைய தமராயினர் பசியாநிற்பர். எ-று.

எல்லா நன்மையுஞ்செய்து கோடற்கருவியென்பது தோன்றப் பெருஞ் செல்வம்' என்றும், அதனைப் படைக்கு மாற்றலில்லாமை தோன்ற உற்றக் கடை' என்றும், எல்லாம் பெறுதலேறன்ற 'ஆர' என்றும், உண வும் பெருமை தோன்றப் 'பசிப்பர்' என்றுங் கூறினர். (எ)

விளக்கம்:—பேதையாயினுன் ஒருவன் தான்முன் செய்த நல் வினைக்குத்தக்க அளவாகப் பெரியதோர் செல்வத்தை அடைவானு

யின் அச்செல்வத்தால் யாதொரு சம்பந்தமும் இல்லாத அயலார் வயிறு நிறைய உண்டு சுகித்திருக்கவும், தன்னோடு பெரிதும் சம்பந்தம் உடைய சுற்றத்தவர் உணவின்மையால் மிகுதியும் பசித்திருக்கவும் ஆகும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தான் அடைந்த பெரியதோர் செல்வத்தால் தனக்கும் தன் சுற்றத்தவர்க்கும் எல்லாவித நன்மையும் செய்துகொள்வதற்கு ஏதுக்களைப் பெற்றிருந்தும் அச்செல்வத்தை உண்டாக்கவும், காக்கவும் வல்லமை இல்லாமையால் தன்னோடு யாதொரு சம்பந்தமுமில்லாத அயலவர் உண்ணுதல் முதலாகிய எல்லாவிதப் பயன்களையும், அடைந்திருக்கவும் தன் நெருங்கிய சுற்றத்தவர் இவனது செல்வத்தால் உண்ண உணவும் பெறாது பசி நோயால் வருந்தவும் ஆவதொன்றும் அறிகிலோம். ஆகலால் பேதையாயினோர் செல்வம் உதவவேண்டியவர்க்கு உதவாது அயலவர் அனுபவிப்பதற்கு உரியதாகும் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் பேதையாயினோன் பெரும் செல்வம் சுற்றத்துக்கு உதவாதென்று அறிகிலோம், ஆயின், அச்செல்வத்தைத் தான் அனுபவிக்கும் காலத்து அவன் செயல் எதுவாக இருக்கும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

838. மையல் ஒருவன் களித்தற்றுற் பேதைதன் கையொன்று உடைமை பெறின்.

(பி.) இ-ள். பேதை தன்கை ஒன்று உடைமை பெறின்=பேதையாயினோன் தன் கைக்கண்ணே ஒன்றினை யுடைமையாகப பெற்றானாயின்,—மையல் ஒருவன் களித்தற்று=அவன் மயங்குதல், முன்னே பித்தினை யுடையானொருவன் அம்மயக்கத்தின்மேலே மதுவுண்டு மயங்கினற்போலும். எ-று.

பெறினெனவே, தெய்வத்தானனைத் தன்னுற் பெருமை பெற்றும். பேதைமையுஞ் செல்வக்களிப்பும் ஒருங்குடைமையால் அவன் செய்வனமையலும் மறக்களிப்பும் ஒருங்குடையான் செய்வனபோற் றீதாதுமாறுமென்பதாம். இவை யிரண்டுபாட்டானும் அவன் செல்வமெய்தியவழிப் பயன் கொள்ளுமாறு கூறப்பட்டது. (அ)

விளக்கம்:—பேதைமையுடைய ஒருவன் தனக்கென்று ஒரு பொருளைத் தெய்வத்தால் பெறுவானாயின், அச்செல்வத்தைக்

கொண்டு அவன் மயங்குகின்ற தன்மையானது முன்னரே பயித்தியம் கொண்ட ஒருவன் அப்பயித்தியத்தால் உண்டாகும் மயக்கத்தோடு அறிவீனமயக்கும் கள்ளையும் உண்டு மயங்குவானுயின் எவ்வித மிருக்குமோ அவ்வித தன்மையாக இருக்குமென்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, பேதைமையுடையான் ஒருவன் தானுகவே செல்வத்தைப்படைக்கும் வல்லமை இல்லாதவன் என்றறிந்தோமாதலால் அவ்வித வல்லமை இல்லாத அப்பேதைமையுடையானுக்குத் தெய்வத திருவருளால் ஏதேனும் செல்வம் கிடைக்குமாயின் அச்செல்வத்தின் மகிழ்ச்சியால் மயங்குவான் ஆகையாலும், முன்னரே இருந்த அறிவில்லாமையாகிய மயக்கமும் செல்வத்தின் மகிழ்ச்சியால் வரும் மயக்கமும் இரண்டும் ஒன்று சேர்ந்து பித்தமுதிர்ச்சியால் அறிவு மயங்கி பயித்தியம் கொண்ட ஒருவன் இயல்பாகவே உண்டவருடைய அறிவை மயக்கும் கள்ளையும் குடித்து விடுவானுயின் எவ்விதம் இவ்விரண்டு மயக்கமும் ஒன்றுசேர்ந்து அவனை அழித்துவிடுமோ அதுபோல் இருக்குமென்று அறிந்தோம என்றனர் அதுகேட்ட மாணுக்கர், "பேதைமையுடையான் தான் அடைந்த செல்வத்தால் பயன் அனுபவியாது அழிந்துபோவானென்று அறிந்தோம் ஆயின், அப்பேதைமையுடையானது நட்பினைக் கொண்டால் எதுவாகும என்பதையும விளக்கல்வேண்டும" என்னலும, ஆசிரியர் கூறுவதாயினர்.

839. பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண் பீழை தருவதொன் றில்.

(பரி.) இ-ள். பிரிவின்கண் தருவது பீழை ஒன்று இல்—பின் பிரிவு வந்துழி, அவ்விருவர்க்குந்தருவதொருதுன்பமில்லை;—பேதையார் கேண்மை பெரிது இனிது=ஆகலாற் பேதையாயினர் தம்முட்கொண்ட நட்பு மிகவினிது.

நாடோறுந் தேய்ந்து வருதலின், துன்பந்தாராதாயிற்று. புகழ்வார் போன்று பழித்ததுவாறு. இதனுல் அவரது நட்பின் குற்றங கூறப்பட்டது. (கூ)

விளக்கம் :—பேதைமை கொண்ட இருவர் நட்புக்கொள்வாராயின் பின்னர் அவ்விருவர்க்கும் பிரிவு நேருமாயின் நட்புக்

கொண்ட அவ்விருவர்க்கும் அப்பிரிவால் யாதொரு துன்பமும் உண்டாகாது; ஆதலால் பேதைமையுடையார் ஒருவருக்கொருவர் கொள்ளுகின்ற நட்பானது மிக இனிமையை உடையது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், பேதைமையுடையவர்கள் கொண்ட சிநேகமானது தேய்பிறைபோல் முன்னர் முதிர்ந்தும், பின்னர் தேய்ந்தும் போவதுமாதலால் அவ்விதம தேய்ந்து போகின்ற காலத்து இருவர்க்கும் துன்பமில்லாமல் போம் என்று அப் பேதைமையுடையார் நட்பைப் புகழ்கின்றவர்போல் பழித்துக் கூறியபடியால் பேதைமையுடையவர் இவ்வுலகத்துப் பெறுதற் கரிய நட்பினையும் பெறுவதற்கு யோக்கியமில்லாதவர் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பேதைமையுடையாரது நட்புக்குரிய குற்றத்தையும் அறிந்தோம். ஆயின் பேதைமையுடையான் ஒருவன் அறிவுடைய ஆன்றோர் சபையில் புகுவானுயின் அச்சபை எதுபோல் இருக்கும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

840. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர் குழாஅத்துப் பேதை புகல்.

(பரி.) இ-ள். சான்றோர் குழாத்துப் பேதை புகல் = சான்றோரவையின்கட் பேதையாயினான் புகுதல்—கழாக்கால் பள்ளியுள் வைத்தற்று = தூயவல்ல மிதித்தகாலே இன்பந்தரும் அமளிக்கண்ணே வைத்தாற் போலும். எ-று.

கழுவாக்காலென்பது இடக்கரடக்கு. அதனுல் அவ்வமளியும் இழிக்கப்படுமாறுபோல இவனுல் அவ்வவையும் இழிக்கப்படு மென்பதாம். இதனுல் அவன் அவையிடை யிருக்குமாறு கூறப்பட்டது. (மே)

விளக்கம் :—ஆன்றோர் சபையினிடத்தே பேதைமை யுடையான் ஒருவன் செல்லுவானுயின் பரிசுத்தமல்லாத ஒன்றை மிதித்த காலினை இன்பத்தைக் கொடுக்கின்ற படுக்கையினிடத்தே வைத்தால் எவ்வித மிருக்குமோ அவ்விதம் காணப்படும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனுல், நாயனுர் 'இடக்கரடக்கல்' என்னும் இலக்கண வழக்கப்படி தூய அல்ல என்றுகூறிய மலத்தை ஒருவன் காலில் மிதித்தக கொண்டு அக்காலினைக் கழுவாமலே அம்

மலத்தோடு சென்று, இன்பமுடையார் இருவர் இன்பம் அனுப விப்பதற்கு மலர் முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டு உள்ள படுக்கையில் அம்மலம் நிறைந்த காலை வைத்து விடுவானுயின் அது கண்ட இன்பத்திற்கு உரிய இருவரும் எவ்விதம் அப்படுக்கையை இகழ்ந்து அதில் நித்திரை செய்யாமல் அகலுவரோ, அதுபோல், பேதைமை யென்னும் அறிவில்லாத மலத்தை மேல் பூசிக்கொண்ட ஒருவன் அலங்கரித்த படுக்கைபோல் ஆன்றவர் கூடி இன்பமடைய இருந்த சபையிற் செல்வானுயின் அதைக்கண்ட ஆன்றவராகிய அறிஞர் 'இவன் வருகையால் இச்சபை தூய்மை குலைந்தது. ஆதலால் நாம் இனி இங்கிருத்தல் ஆகாது' என்று அவனே விட்டு நீங்கி விடுவர் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "கழுவாக் காலைப் பள்ளியில் வைத்தால் எவ்வாறு அப்படுக்கை யானது இழிவடைந்து போமோ அதுபோல் பேதைமையுடைய ஒருவன் அறிவுடைய சபையிற் சென்றலும் இவன் சென்றமையால் அவ்வறிவுடைய சபையும் இழிவாக எண்ணப்படும் என்பதையும் இவ்வதிகாரத்தால் பேதைமையுடையவருக்கு வரும் குற்றங்களை யும் முற்றும உணர்ந்தோம். இனி மயக்கத்திற்குக காரணமாகிய புல்லறிவாண்மை என்பதைக் கூறல்வேண்டும்" என்னலும், ஆசிரி யர் கூறுவாராயினர்.

---

85. அதிகாரம்.

புல்லறிவாண்மை.

(பரி.) இனி வினைப் புல்லறிவாண்மை கூறுகின்றார். அது புல்லிய வறி வினையாடற் றன்மையென விரியும். அஃதாவது தான் சிற்றறிவினனு யிருக்தேதன்னைப் பேரறிவினனுக மதித்து உயர்ந்தோர் கூறும் உறுதிச்சொற் கொள்ளாமை.

விளக்கம் :—நீங்கள் வினவிய வண்ணம் மயக்கத்தால் வரும் புல்லறிவாண்மை இது என்று கூறலாயினர். அதாவது, அற்ப அறிவினைத் தனக்குப் பெரியதோர் அறிவுடைமை யென்று எண்ணி அதன்வழி நடத்தல் என்பதேயாம். அது என்னையோ வெனின்? தான் சிற்றறிவினை யுடையவனுகவே இருந்தும தன்னைப் பேரறி

வுடையவனுக எண்ணிக் கொள்வதுடன் அறிவால் உயர்ந்த பெரியோர் சொல்லுகின்ற உயிர்க்கு உறுதியைத் தரும் நீதி நூற் சொற்களே மனத்துக் கொள்ளாது நடத்தல் என்பதேயாம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வித அற்ப அறிவினே உடையார் உலகத்து எவ்விதம் மதிக்கப்படுவர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

841. அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை யின்மையா வையா துலகு.

(பரி.) இ-ள். இன்மையுள் இன்மை அறிவின்மை = ஒருவனுக்கு இல்லாமை பலவற்றுள்ளும் மிக்க வில்லாமையாவது அறிவில்லாமை;—பிறிதின்மை இன்மையா வையாது உலகு = மற்றைப்பொரு ளில்லாமையோவெனின், அதனை அப்பெற்றத்தாய இல்லாமையாகக் கொள்ளார் உலகத்தார். எ-று.

அறிவென்பது ஈண்டுத் தலைமைபற்றி நல்லறிவின்மே னின்றது. புல்லறிவாளர் செல்வ மெய்தியவழியும் இம்மை மறுமைப்பய னெய்தாமையின் அதனை 'இன்மையுளின்மை' என்றும், நல்லறிவாளர் வறுமை யெய்திய வழியும் அஃதிழுக்காமையின் அதனை 'இன்மையா வையாது' என்றுங் கூறினர். இதனுற் புல்லறிவினது குற்றங் கூறப்பட்டது. (க)

விளக்கம்:—ஒருவனுக்கு இல்லாமை என்று கூறுகின்ற இல்லாமை பலவற்றுள்ளும் பெரிய இல்லாமையாவது நல்லறிவு இல்லாமையே என்றும், ஆயின் உலகத்து இன்பம் அடையக் கூடிய பொருள் இல்லாமை ஒருவனுக்கு இருக்குமாயின் அப்பொருள் இல்லாமையை மேற்கூறிய அறிவில்லாமையாகிய இல்லாமையோடு ஒப்பாக உலகத்தவர் கொள்ளமாட்டார் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது அறிவுடைய பெரியோன் ஒருவன் தான் வறுமை அடைந்த காலத்து அவ்வறுமையால் தீயவழிச் செல்லாது இம்மைப் புகழையும், மறுமைப் போகத்தையும் அடைதல் கூடுமாதலால் அவன் தரித்திரத்தை இல்லாமையாக உலகோர் கொள்ளமாட்டாரென்றும், அற்ப அறிவினரென்னும் புல்லறிவாளர் செல்வத்தை அடைந்த காலத்துத் தம் அற்ப அறிவால் நல்ல நெறியில் ஒழுகாது தீயவழி ஒழுகி இம்மை, மறுமையாகிய இரண்டு பயன்களையும்

அடையாமற் போய்விடுவர்களாதலால் அவர் அடைந்த செல்வத்தால் பயனில்லை.என்றும், ஆதலால் ஒருவனுக்கு நல்லறிவு இல்லாமையே இல்லாமையென்னும் தரித்திரமென்றும் நல்லறிவு உடைமையே எல்லாப் பொருளுமுடைய செல்வமுடைமை யென்றும் அறிந்தோமென்றனர். அது கேட்ட மாணாக்கர், "புல்லறிவுடைமையே செல்வமிருகதும் எல்லாவறுமைக்கும் காரணமாகுமென்று அறிந்தோம். இவ்வித புல்லறிவாளன் முன்னைய நல்வினைப் பயனால் தான் அடைந்து உள்ள செல்வத்தை எவர்க்கேனும் கொடுத்தல் கூடுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

842. அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாது மில்லை பெறுவான் றவம்.

(பரி.) இ-ள். அறிவிலான் நெஞ்சு உவந்து ஈதல்=புல்லறிவுடையான் ஒருவனுக்கு மனமுவந்து ஒன்று கொடுத்தல் கூடிற்றாயின்,—பெறுவான் தவம் பிறிது யாதும் இல்லை—அதற்குக்காரணம் பெறுகின்றவனல்லனேயே, வேறொன்று மில்லை. எ-று.

ஒரோவழி நெஞ்சுவந்தீதல் கூடலிற் புல்லறிவாளரும் நல்வினைசெய்ப எண்பார்க்குப் பெறுவான் வீழ்பொருளெய்தியான்போல்வதல்லது இம்மை நோக்கியாக மறுமை நோக்கியாக எகின்றாரல்லரெனக் கூறியவாறு. கூடிற்றாயின, அதற்குக்காரண மென்னுஞ் சொற்கள் அவாய்நிலையான் வந்தன. இதனால் அமைதுடையார் தம்மாட்டு நல்லன செய்தலறியாமை கூறப்பட்டது. (2)

விளக்கம்.—அற்ப அறிவினை உடைய ஒருவன் தன்னிடத்து உள்ள செல்வத்தைப் பிறர்க்குக் கொடுக்கும் காலத்து மனத்தில் அன்போடு கொடுக்க நேருமாயின் அவ்விதம் கொடுக்க நேர்ந்ததைப்பெற்றுக் கொண்டவனது பூர்வ நல்வினையென்று எண்ணுதல் அல்லாது வேறு ஒன்றுகவும் எண்ணுதற்கு இராது என்று இத் திருக்குறள கூறுகின்றது. அதாவது, அற்ப அறிவினையுடையார் அறம் ஒன்றைக்கருதித் தாம் அடைந்த பொருளைச் செலவழிதல் இல்லையென்றும், அவ்வாறு செலவழிதல் இல்லாத அவ்வற்ப அறிவினை உடையோர் மனமகிழ்ச்சியுடன் ஒருவருக்கு ஒருபொருளைக் கொடுப்பதாயின் அப்பொருளை அடைந்தவர் பிறர் மறதியால் போக்கடிதது விட்டபொருளை நடக்கும் வழியில கண்டு எடுத்தது

போல் ஆகுமே அன்றி வேறு ஆகாதென்றும், அவ்விதமல்லாது அவ்வற்ப அறிவினர் மனமகிழ்ச்சியுடன் கொடுப்பது கூடுமானால் அவ்விதம் கொடுத்ததற்குக் காரணம் பெற்றுக் கொண்டவனது முன்னே கல்வியைப் பயனுக இருக்கவேண்டுமே அன்றிக் கொடுத்தவனது அறிவுடைமை அன்று என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "புல்லறிவுடையார் தம்முடைய செல்வத்தால் நன்மையான விஷயங்களைச் செய்தலாகாது என்பதை அறிந்தோம். ஆயின் நன்மைசெய்யாத இவர் தாம் அடைந்த செல்வத்தால் தீமையைச் செய்தல் கூடும் போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

843. அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை செறுவார்க்குஞ் செய்தலரிது.

(பரி.) இ-ள். அறிவிலார் தாம் தம்மைப் பீழிக்கும் பீழை=புல்லறிவுடையார் தாமே தம்மை வருத்தும் வருத்தம்—செறுவார்க்கும் செய்தல் அரிது=அது செய்தற்குரியராய தம் பகைவர்க்குஞ் செய்தலரிது. எ-று.

பகைவர் தாம அறிந்தகொன்றேனைக் காலம் பார்த்திருந்து செய்வதால் லாபமுமை, பழி, பாவ முதலிய பலவற்றையும் எக்காலத்துஞ் செய்ய மாட்டாமையின், அவர்க்குஞ் 'செய்தலரிது' என்றார். இதனால் அவர் தம்மாட்டுச் செய்கை செய்தலறிவென்பது கூறப்பட்டது. (கூ)

விளக்கம்:—அற்ப அறிவினை உடையவர் தமக்குத் தாமே தம்மை வெறுத்துக் கொள்ளும்படி வாவழைத்துக் கொள்ளுகின்ற துன்பத்தைப்போல், தம்மைத் துன்பப்படுத்த எண்ணிய பகைவராலும் செய்தற்குக் கூடாது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அது என்னையோவெனின்? பகைவராயினர் தமக்குத் துன்பம் செய்ய எண்ணுவாராயின் காலம், இடம் முதலியவைகளைக் நோக்கித் தமக்குக் கூடும் காலத்தே செய்வதற்குக் கூடுமே அன்றி வறுமை, பழி, பாவம் ஆகிய எலலாத் துன்பங்களையும் எக்காலத்தும் தமக்குச் செய்யமுடியாது. ஆதலால் பகைவர் செய்கின்ற துன்பத்தைக் காட்டிலும், தமக்குத் தாமே தேடிக்கொள்ளுகின்ற துன்பம் பலமன்றும், அத்துன்பங்கள் செல்வத்தை நல்வழியில் செலவழியாது தீயவழியில் செலவழித்து, உள்ள செல்வத்தைப்போக்கித் தரித்தி

ரத்தை வரவழைத்துக் கொள்ளுத லென்றும், நீயவழியில் செல்வத்தைச் செலவழித்தமையால் புகழைப்போக்கி பழியைத் தேடிக் கொள்வதென்றும், நீயவழியில் நடந்தமையால் புண்ணியத்தைப் போக்கிப் பாவத்தைத் தேடிக் கொள்வதென்றும் ஆகிய எல்லாத் துன்பங்களையும் எக்காலத்தும் இடைவிடாது தமக்குத் தாமே தேடிக்கொள்வரென்றும் அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "அற்ப அறிவினை உடையார் பிறர்க்குத் தீங்கு செய்வ துடன் தாமும் தம்மைத் தாமே தன்புறுத்திக் கொள்ளக் கூடிய தன்மை யுடையவர் என்று அறிந்தோம். ஆயின், இவ்விதம் தன் அப்புல்லறிவாளர் செய்து கொள்ளுகின்றனர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

844. வெண்மை யெனப்படுவ தியாதெனி னெண்மை யுடையமம்யா மென்னுஞ் செருக்கு.

(பரி.) இ-ள். வெண்மை எனப்படுவது யாது எனின் = புல்லறிவு டைமை யென்று சொல்லப்படுவது யாதென்று வினவின், — யாம் ஒண்மை உடையம் என்னும் செருக்கு = அது தம்மைத்தாமே யாம் நல்லறிவுடைய மென்று நன்கு மதிக்கும் மயக்கம். எ-று.

வெண்மையாவது:— அறிவுமுகிராமை. ஒண்மையெனக் காரியப்பெயர் காரணத்திற்காயிற்று. உலகத்தாரிகழ்தல் அறிந்துவைத்தும் அவ்வாறு மதித்த லான், மயக்கமென்றார். (கு)

விளக்கம்:— புல்லறிவுடைமை என்று சொல்லப்படுவது எது என்று வினவினால் அப்புல்லறிவுடைமை தங்களுக்குத் தாங்களே 'நாம் நல்லறிவுடையோம்' என்று எண்ணித் தங்களை நன்கு மதித்துக் கொள்ளும் மயக்கமே ஆகும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், "நீங்கள் வினவிய வண்ணம் புல்லறிவுடையோர் பிறரைத் துன்புறுத்துவதும், தம்மைத் தாமே துன்புறுத்திக் கொள்வதும் வெள்ளறிவு என்னும் முகிர்ந்த அறிவில்லாமை ஆகும். எனெனின்? தம்மைப் பிறர் அறிவில்லாதவர் என்று இகழ்ந்து கூறுவதை அறிந் திருந்தும் மயக்க அறிவால் தம்மை மூதறிஞராக எண்ணிக் கொள் வதால் நன்மை யுடையனவற்றைத் தீமையுடையன வென்றும், தீமை யுடையனவற்றை நன்மையுடையன வென்றும் மயங்கிச் செய்து

அம்மயக்கத்தால் தமக்கும் பிறர்க்கும் துன்பத்தைத் தேடுகின்றனர் என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "சிலர் நிரம்பிய கல்வி இல்லாமலே எல்லாவற்றையும் ஓதியவர்போல் நடிக்கின்றனரே; அவ்வித மக்களை உலகோர் எவ்விதம் கருதுவர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

845. கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉ மையந் தரும்.

(பரி.) இ-ள். கல்லாத மேற்கொண்டு ஒழுகல்=புல்லறிவாளர் தாங் கல்லாத நூல்களையுங் கற்றாராகத் தாம் மேலிட்டுக்கொண்டு ஒழுகுதல்,—கசடு அற வல்லதூஉம் ஐயம் தரும்=கசடறக் கற்றதொரு நூலுண்டாயின், அதன்கண்ணும் பிறர்க்கையத்தை வினைக்கும். எ-று.

வல்லதென ஏழாவது இறுதிக்கட் டொக்கது. உண்டாயினெனபது அவாய் நிலையான் வந்தது. ஐயம்—அது வல்லரென்பதூஉம் இவ்வாறு கொல்லோவென்பது. (கு)

விளக்கம் :—புல்லறிவாண்மையென்னும் மயங்கிய அறிவினை உடையார் தாம் கற்று அறியாத நூல்களையும் கற்றவர்போல் பிறர்க்குக் கூறி ஒழுகுதலானது அவ்வித புல்லறிவாளர் எதேனுமொரு நூலைக் குற்றமில்லாது கற்றிருந்தாராயினும், அந்நூலையும அவர் உண்மையாகக் கற்றாரில்லைபோலும் என்று சந்தேகப்பட வேண்டிய நிலையினை உண்டுபண்ணும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது; அதாவது புல்லறிவாளனவன் ஒரு நூலினைச் சந்தேகமும் வேறுபாடும் இல்லாமல் கற்றல் முடியாதென்றும், அவ்வாறு ஒரு வேளை கற்றனையினும் அவனது மயக்க அறிவால் கல்லாத நூல்களையும் கற்றவன்போன்று பிறர்க்குக் கூற எண்ணிக் குற்றப்படுவதால் அதுகண்ட சூழுமுடையோர் 'இவன் தான் அறியாத நூல்களையும் அறிந்தான் போன்று நடிக்கின்ற தகுதியுடைமையால் இவன் யாதொரு நூலையும் கற்றிருத்தல் முடியாது' என்று சந்தேகம கொள்ளுதற்கு இடமாகுமென்று அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்வித அற்ப அறிவினை உடையவர் தமக்கு வரும் அவமானத்தைக் கருதார்போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

846. அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற்
குற்ற மறையா வழி.

(பரி.) இ-ள். தம் வயின் குற்றம் மறையாவழி = புல்லறிவாளர் தங்கணி கழுங் குற்றங்களையறிந்து கடியாராயின்,—அற்றம் மறைத்தலோ புல்லறிவு = ஆடையால் அற்றமறைத்தாராகத் தம்மைக் கருதுதலும் புல்லறிவாம். எ-று.

குற்றமறைத்தலாவது அவற்றை இலவாக்குதல். மறைக்கப்படுவன பல வற்றுள்ளும் உயர்ந்தவற்றையெல்லாம் மறையாது தாழ்ந்த தொன்றனையே மறைத்து அவ்வளவாற் றம்மையு முலகவொழுக்கினராக மதித்தலும் புல்லறி வென்பதாம். இவை மூன்று பாட்டானும் அவர் தம்மை வியததற் குற்றங் கூறப்பட்டது. (௬)

விளக்கம் :—அற்ப அறிவினை உடையவர் தம்மிடத்து உண்டாகும் குற்றங்களைத் தெரிந்து அக்குற்றங்கள் உண்டாகா வண்ணம் செய்யாராகில் வஸ்திரத்தினால் தம்முடைய மானத்தை மறைத்ததாக அவர்எண்ணிக கொள்ளுதலும் அற்ப அறிவினை உடையதாம என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், மறைக்கப்படவேண்டிய பல உயர்ந்த குற்றங்களை மறைக்காது மிகத் தாழ்ந்ததாகிய தம் உறுப்பினுள் ஒன்றினை வஸ்திரத்தால் மறைத்துத் தம் மானத்தைக் காத்துக்கொண்டதாக எண்ணுவது அறிவில்லாமையே ஆகுமென்றும், உலகோர் பழியாவண்ணம் தம்மிடத்து உண்டாகும் குற்றங்களை மறைத்தலே நல்லறிவாளர்க்கு அழகென்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "மேற்கூறிய திருக்குறள்களால் அற்ப அறிவினையுடையார் தம் அற்ப அறிவால் வரும் குற்றங்களை மறையாது தம்மை அதிகமாக எண்ணிக்கொள்ளுதலால் வருகின்ற குற்றங்கள் இவை என்று அறிந்தோம். ஆயின் புல்லறிவாளனாய் உள்ள ஒருவனுக்கு நல்லுபதேசம் செய்து அவனது புல்லறிவாண்மையைப் போக்குதல் கூடாதோ ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

847. அருமறை சோரு மறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு.

(பரி.) இ-ள். அருமறை சோரும் அறிவிலான் = பெறுதற்கரிய உபதேசப் பொருளைப் பெற்றாலும் உட்கொள்ளாது போக்கும் புல்லறிவாளன்—

தானே தனக்குப் பெருமறை செய்யும்=அவ்வுறுதி யறியாமையாற் றானே தனக்கு மிக்க வருததத்தைச் செய்துகொள்ளும். எ-று.

சோருமென இடத்து நிகழ்பொருளின் றொழில் இடத்தின்மே னின்றது. மிக்க வருத்தம்=பொறுத்தற்கரிய துன்பங்கள். இனி அருமறைசோருமென்பதற்குப் பிறரெல்லாம் உள்ளத்தடக்கப்படும் எண்ணத்தை வாய் சோர்ந்து பிறர்க்குரைக்கு மென்றுரைத்தார்; அது பேணாமை யென்னும் பேதைமை யாவதன்றிப் புல்லறிவாண்மை யன்மை யறிக. (எ)

விளக்கம்:—நல்லாசிரியனிடத்து அடைவதற்கு அரிய உபதேசப் பொருள்களை அறிவில்லாத ஒருவன் பெறுவானாயினும், அவ்வுபதேசப் பொருளைத் தன் மனத்துள் கொள்ளாது போக்கிவிடுவதுடன் அவ்வுபதேசப் பொருளின் உண்மைப்பயன் இது என்று அறியாமையால் தனக்குத் தானே பெரியதோர் துன்பத்தைச் செய்துகொள்வான் என்று இத்திருககுறள் கூறுகின்றது. இதனால், புல்லறிவாளனுக்கு எவ்வளவு பெரியதாகிய உபதேசங்களைச் செய்தாலும் அவ்வுபதேசத்தின் பயனால் அவனுக்கு இயல்பாக உள்ள அற்ப அறிவினை அவன் நீக்கிக்கொள்ளாததுடன் அவ்வுபதேசப் பொருளை ஒன்றை ஒன்றாக எண்ணும் பேதைமையால் தனக்குத் தானே துன்பததைத் தேடிக்கொள்ளுவான் என்றமையால் அற்ப அறிவாளனுக்கு எவ்வித உபதேசம செய்தும் பயனில்லை என்பது அறிநதோம என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதமான அற்ப அறிவினை யுடையவன் உலகததார்க்கு எவ்விதமாகக் காணப்படுவான்?" என்று கேட்டலும, ஆசிரியர் கூறுவாராயினர்.

848. ஏவவுஞ் செய்கலான் றான்றேறா னவ்வுயிர் போஒ மளவுமோர் நோய்.

(பரி.) இ-ள். ஏவவும் செய்கலான்=புல்லறிவாளன் தனக்குறுதியாயவற்றை அறிவுடையார் சொல்லாநிற்கவுஞ் செய்யான்,—தான் தேறான்=அதுவன்றித் தானாகவும் இவை செய்வனவென்றறியான்,—அவ்வுயிர் போமளவும் ஓர் நோய்=அவ்வுயிர் யாக்கையி னீங்குமளவும் நிலத்திற்குப் பொறுத்தற்கரியதொரு நோயாம். எ-று.

உயிர் தான உணாதற் றன்மைததா யிருநதும நினற யாககையெத தான் மருடற றன்மைததாய வேறு படுதலின ' அவ்வுயிர ' என்றும, அதனி னீஙகியபொழுதே அதற்கு இரணடனுளொன்று கூடுதலிற ' போமளவும ' எனறும, குலமலை முதலிய பொறுககின்ற நிலததிற்குப பாவயாககை பெரும பொறையாயத் துன்பஞ செயதலின் 'ஒரு நோய' என்றுங கூறினா. (அ)

விளககம்:—அறப அறிவினையுடைய புல்லறிவாளன அறிவுடையார தன் உயிரககு உறுதியான விஷயஙகளைச சொலலிய காலததும அவவுறுதிச சொறகளைத தனககுச் சொலலா வண்ணம செய்துகொள்ளுவானெனறும, தானாகவே இது செய்யக்கூடியது இது செய்யககூடாதது எனறு அறியவும மாட்டான என்றும், ஆதலால இவ்வித தகுதி புடையானுடைய உயிரானது தேககதினின்று நீஙகும வரையில அத தேககதைப பொறுதத நிலததிற குத தாஙகுவதறகு அருமையாகிய ஒரு நோயாகவே இருக்கும எனறும் இததிருககுறள கூறுகினறது இதனால, உயிரானது அறிவுடைய பொருளாக இருநதும காமததுககுத தகக அளவாக எடுதத தேகததின தனமையால மயஙகிய அறிவை உடையதாய் வேறுபடடுத தான் அறிவதறகு மிலலாது, அறிவுடையோர சொறகளைக கேட்பதறகு மிலலாது தனககுத துன்பம தேடிக்கொளவதுடன் ஏனைய உயிரககும துன்பததைத தேடும எனறும, மேலதிருககுறளில ' உபதேசப பொருள உணரான ' எனறு கூறியமையால் புலலறிவாளனது உயிர, அது நறகதி அடைவதறகு உரிய வழியைத தேடிக கொளளாதிருபபதுடன ஏனைய உயிர்கள் செலலும் நனனெறியைத தீநெறி என்றும, கொள்ளுதலாகா கெனறுப போதிதது மயகக அறிவினை உண்டுபண்ணித தான கெடுவதுடன பிறரையும கெடுபபதால இவவித அறிவுடையானை உலகததில உளளாரககு 'ஒரு நோய் எனறும, இவவித நோய் போனற உயிரிருககும் தேகத்தைப் பொறுததல கூடடமாகிய மலை முதலியவைகளைப் பொறுககினற நிலததிறகும் கூடாததாக உள்ளதென்றும, அற்ப அறிவினனது இழிவினைக் கூறியதாயிறறு என்றனர் அதுகேடடமாணாக்கா, " இவவித பாவ யாக்கையை யுடையான ஏன் பிறா உபதேச மொழிகளைச சொல்லுமபடிச செய்யான ?" எனனலும, ஆசிரியா கூறுவாராயினர்.

849. காணுதாற் காட்டுவான் முன்காணன் காணுதான்
கண்டானுந் தான் கண்ட வாறு.

(பரி.) இ-ள். காணுதாற் காட்டுவான் தான் காணன்=தன்னை எல்லா மறிந்தானுக மதித்தலாற் பிறரால் ஒன்றறியுந் தன்மையிலாதானை அறிவிக்கப் புகுவான் அவனுற் பழிக்கப்பட்டுத் தான் அறியானும் முடியும்;—காணுதான் தான் கண்டவாறு கண்டானும்=இனி அவ்வறியுந் தன்மையில்லாதான் கொண்டது விடாமையாற் முனறிந்தவாற்முல் அதனை அறிந்தானும் முடியும். வ-று.

புல்லறிவாளர்க்கு நல்லறிவு கொளுவுதல் ஒருவாற்முனும் இயைவதன் றென்பதாம். (க)

விளக்கம் :—புல்லறிவாளன் தன்னை எல்லாம் அறிந்தவனுக மதித்துக் கொள்ளுதலால் மற்றவரால் ஒன்றினையும் அறிந்துகொள் ளும் மனமில்லாதவனுக இருப்பானென்றும், நல்லாசிரியன் ஒருவன் அவனுக்கு அறிவினைப் புகட்டச் செல்லுவானுயின் அப்புல்லறிவாள னுல் பழிக்கப்பட்டு அறிவுடைய இவனும் அறிவிலாதவனுகவே முடியுமேருமென்றும், அன்றியும் இனி அறிந்துகொள்ளும் தன்மை யில்லாத அற்ப அறிவுடையோன் தான் கொண்டது விடாமையால் தான் எவ்விதமாக உண்மைப் பொருளின் பயனைத் தவருக எண்ணி னனே அந்தவறு உடைமையே நன்மையுடைய பொருள் என்று அறிந்து நிற்பான் என்றும், இக்கிருக்குறள் கூறுகின்றது. இதனுல், அற்ப அறிவினை உடையோர் தாங்கள் உண்மையாகவே ஒன்றும் அறியாதவர்களாக இருந்தும் கர்வத்தினுல் எல்லாம் அறிந்தவர் களாகத் தங்களை எண்ணிக் கொள்ளுகின்றார்கள் என்றும், ஆதலால் அவ் விதக குருதியுடையவர்களிடத்து அவ்வறியாமையை நீக்கப் பிறர் பரிந்து சென்று உபதேசப் பொருளைக் கூறினும் அது அவனுக்குப் பயனைத் தாராததுடன் தமக்கும் பெரியதோர் இழுக்காகுமென்றும், அவ்வளவே அல்லாமல் அவ்வற்ப அறிவாளன் தான் எந்த உண் மை என்று எண்ணினனே அதனையே உண்மை யென்று எண்ணித் தன் மனத்துள் நிர்மானித்து அவ்வழியே ஒழுகுவானென்றும் அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணுக்கர், "அற்ப அறிவினை உடையார்க்கு நல்லறிவினை உண்டுபண்ணுதல் கூடாது என்பது அறிந்தோம். இவ்விதம் அறிவினை உடையான் உலகத்து எவ்விதமாக மதிக்கப்படுவான்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

850. உலகத்தாருண்டென்பதில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்.

(பரி.) இ-ள். உலகத்தார் உண்டு என்பது இல் என்பான் = உயர்ந்தோர் பலரும் உண்டென்பதோர் பொருளைத் தன் புல்லறிவா னில்லை யென்று சொல்லுவான் — வையத்து அலகையா வைக்கப்படும் = மகனென்று கருதப்படான், வையத்துக் காணப்படுவதோர் பேயென்று கருதப்படும். எ-று.

கடவுளும், மறுபிறப்பும், இருவினைப்பயனும் முதலாக அவர் உளவென்ன பல வேனுஞ் சாதிபற்றி 'உண்டென்பது' என்றும், தானே வேண்டிய கூறலால் ஒப்பும் வடிவால் ஒவ்வாமையு மூடைமையிற் றன்யாக்கை கரந்து மக்கள்யாக்கையுட்டோன்றுதல்வல்ல 'அலகை' என்றுங் கூறினார். இவை நான்கு பாட்டானும் உறுதிச் சொற்கொள்ளாமையை குற்றங் கூறப்பட்டது.

விளக்கம்:— அறிவால் உயர்ந்தவர் பலரும் உண்டு என்பதாகிய ஒரு பொருளைத் தன் புல்லறிவாண்மையால் இல்லையென்று சொல்லும் அற்ப அறிவுடையான் ஒருவன் உருவத்தால் மகனே ஆயினும் மகனென்று கருதப்படமாட்டான் என்றும், ஆனால் உலகத்துக் காணப்படுவதாகிய ஒரு பேயென்றே எண்ணப்படுவான் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால் கடவுள் உண்டென்றும், மறுபிறப்பு உண்டென்றும், நல்வினை தீவினைகளாகிய இரண்டுவினைகளும் அவற்றால் ஆகியபயன்களும் உண்டென்றும் உயர்ந்தஞானிகள் கூறுவனவற்றை மனத்துள் கொள்ளாது தன் அறியாமையால் தான் எண்ணிய ஒன்றினையே கொண்டவன் தான் கெடுவது மாத்திரமல்லாமல் உயர்ந்தோர்பலரும் ஒழுகிய ஒழுக்கத்தில் சென்று உய்யலாம் கின்று எண்ணுபவரையும் கெடுப்பன், ஆதலால் இவ்விதபுல்லறிவாளனை மக்கள் தேகத்தினுள் காணப்படுகின்ற அலகையென்று உவமித்தனர். என் எனின் ? மக்கள் தேகத்துள் தோன்றி தன் தேகத்துள் இல்லாது மறைந்து நிற்கின்ற அலகையைப்போல் இப்புல்லறிவாளன் உயர்ந்தோர்கூறும் ஒழுக்கநெறியைச் செய்பவனைப்போல் ஆஸ்திகமதமே கொண்டு காஸ்திகம் பேசுகின்றனன் ஆதலால் ஒப்பும் ஒவ்வாமையும் ஆகிய இரண்டுங்கொண்டு உருவத்தால் மனிதனாகவும் செயலால் அலகையுமாக எண்ணப்படுவான் என்று அறிந்தோதம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "மேற்கூறிய நான்கு திருக்குறள்களாலும்

உயர்ந்தோரது உறுதிச் சொற்களைக் கொள்ளாத புல்லறிவாளர் தன்மை இதுவென அறிந்தோம். இனிமேல் நட்பை எதிர்முகமாகக் கூறத் தொடங்கி வெகுளி யென்றும், காமமென்றும் பிரித்தார் ஆதலால், மயக்க அறிவால் உண்டாகும் பேதைமையோடு கூடிய வெகுளியைப்பற்றிக் கூறும் விஷயத்தை ஒன்றன்பின் ஒன்றாக விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவார்போயினர்.

---

86. அதிகாரம்.

இ க ல்

(பரி.) இனி அவற்றுள் வரும் வெகுளி காமங்களுள் அரசர்க்கு வெகுளி பெரும்பான்மைத்தாகலின், அதனுள் வருவன கூறுவான் றொடங்கி, முதற்கண் இகல் கூறுகின்றார். அஃதாவது இருவர் தம்முட் பொருது வலிதோலுதற் கேதுவாய மாறுபாடு.

விளக்கம்:—அதாவது, மேல்வினவிய வண்ணம் பேதைமையாலும், புல்லறிவாண்மையாலும் முறையே வருகின்ற வெகுளியென்பதையும், காமமென்பதையும் கூறத் தொடங்கி அவ்விரண்டனுள்ளும் அரசர்க்கு வெகுளியென்பது மிகுதியாதலால் அதனை முதற்கண் சொல்லவிரும்பி அதன்முதற் பாகமாகிய இகலென்னும் இவ்வதிகாரத்தை முதலில் கூறத் தொடங்கினர். அவ்விகல் என்பது பகை கொண்டார் இருவர் தமக்குள் யுத்தம்செய்து வலிமையை ஒழித்தற்குக் காரணமாகிய மாறுபாடு என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இகல் எனினது அறிவின் மாறுபாடு என்று அறிகின்றேமும். ஆனால் அம்மாறுபாடாகிய இகலைக் கொண்டார்க்கு என்ன உண்டாகும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

851. இகலெனப வெல்லா வுயிர்க்கும் பகலெனனும்
பண்பின்மை பாரிக்கு நோய்.

(பரி.) இ-ள். எல்லா உயிர்க்கும் பகல் என்னும் பண்பு இன்மை பாரிக்கும் நோய்=எல்லாவுயிர்கட்கும் பிறவுயிர்களோடு கூடாமையென்னும் நீக்கு

ணதை வளர்க்குங் குற்றம்—இகல் என்ப=இகலென்று சொல்லுவர் தூலோர். எ-று.

மக்களையும் விலங்குகளோ டொப்பிப்பதென்பது தோன்ற 'எல்லாவு யிர்க்கும்' என்றும், பகைக்குணத்தை இடைகின்று வினைத்தலிற் 'பகலென் னும் பண்பின்மை' என்றுங் கூறினர். நற்குணமின்மை அருத்தாபத்தியாற் றீக்குணமாயிற்று. இதனால் இகலது குற்றங் கூறப்பட்டது. (க)

விளக்கம்:—உலகத்துத் தோன்றும் எல்லா உயிர்களுக்கும் பிற உயிர்களோடு கூடிவாழாமை என்னும் தீயகுணத்தை விளைக் கும் குற்றமொன்றினை நூல் வல்லவர் இகல் என்று சொல்லுவர் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால் இகல்கொண்ட உயி சொன்று ஏனையவுயிர்களோடு ஒற்றுப் பொருந்தாதென்றும், ஒன்றை விட்டு ஒன்று பிரிக்திருக்கும பிரிவென்னும் குணத்தையே நடுவில் கின்று விளைக்குமென் றும், அவ்வித குற்றத்தை விளைப்பதால் நற்கு ணத்தையழித்துத் தீக்குணத்தை உண்டாக்குவது இகல்என்பதற்கு இயற்கை என்றும் கண்டோம். ஆதலால், இகலுடையோர் உல கத்து எக்காலத்தும் யாரோடும் நேசப்பான்மை கொள்ளார். மக் கட்கு மாத்திரமல்லாமல் ஏனைய உயிர்களுக்கும் அதாவது விலங்கு முதலியவைகட்கும் இக்குற்றமுண்டாகுமென்று அறிவித்தற்கு 'எல்லா உயிர்களுக்கும்' என்று நமமாசிரியர் கூறினர் என்று அறிக்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இத்திருக்குற ளால் இகலால் வரும் குற்றம் இதுவென்று உணர்ந்தோம். ஆயின் ஒருவன் தனக்குப் பொறுக்கக் கூடாத விஷயங்களைச் செய்கின்ற காலத்து இகல் கொள்ளுதல் கூடாதோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

852. பகல்கருதிப் பற்ற செயினு மிகல்கருதி யின்னாசெய் யாமை தலை.

(பரி.) இ-ள். பகல் கருதிப் பற்ற செயினும்=தம்மொடு கூடாமை யைக் கருதி ஒருவன் வெறுப்பன செய்தானாயினும்,—இகல் கருதி இன்னா செய்யாமை தலை=அவனொடு மாறுபடுதலைத் குறித்துத் தானவனுக்கு இன் னாதவற்றைச் செய்யாமை உயர்ந்தது. எ-று.

செய்யிற் பகைமை வளரத் தாந் தாழ்ந்து மலானும், ஒழியின் அப் பற்முதன தாமே யோய்ந்து போகத் தாம் ஒங்கிவரலானும், 'செய்யாமை தலே' என்முர். பற்முத வென்பது விகாரமாயிற்று. (உ)

விளக்கம்:—ஒருவன் தம்மோடு கூடாதிருக்கின்ற செயலே மண்ணி வெறுக்கக் கூடியதாகிய செயல்களேச் செய்தானுனும் அவ்வித தகுதி யுடையானேடு மாறுபடும்படியாகிய தன்மையை மனத்துள் எண்ணித் தாம் அம்மாறுபாட்டால் அத்தீக் குணமுடை யானுக்குத் துன்பமான விஷயங்களேச் செய்யா திருத்தல் உயர்ந்த தகுதி என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனுல், அவன் தமக்கு வெறுக்கக்கூடிய விஷயங்களேச் செய்கின்முன் என்று மண் ணித் தாமும் அவனுக்குத் துன்பத்தைச் செய்யப் புகுந்தால் அத னுல் மேலும் மேலும் பகைவளரவும் அப்பகைமையினுல் தாம் தாழ்ந்து போகவும் நேரும் என்றும், அவ்விதம் அவனுக்குத் துன் பம் செய்யாதிருப்பாராயின் அவ்வெறுப்பனவாகிய விஷயங்களேச் செய்கின்ற அவன் அச்செயல்களேச் செய்வதில் அலுத்து ஓய்ந்து போவானென்றும், இவ்வித செயலால் தாம் ஒங்கி வளரக் கூடு மென்றும் அறிகின்முேம். ஆதலால், இகலே மனத்திற் கொள்ளாத வர் உயர்வாரென்றும் ஏனேயோர் தாழ்வாரென்றும் அறிகின்முேம் என்றனர். அது கேட்ட மாணுக்கர், "ஒருவன் இகலேக் கொள் ளாது வாழ்வானுயின், அவனுக்கு உலகத்து எவ்வித நன்மை கிடைக்கும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

853. இகலென்னு மெவ்வநோய் நீக்கிற் றவலில்லாத் தாவில் விளக்கந் தரும்.

(பரி.) இ-ள். இகல் என்னும் எவ்வநோய் நீக்கின்=மாறுபாடென்று சொல்லப்படுகின்ற துன்பத்தைச்செய்யு நோயை ஒருவன் தன் மனத்தி னின்னு நீக்குமாயின்,—தவல் இல்லாத் தாவில் விளக்கம் தரும்=அவனுக்கு அந்நீக்குதல் எஞ்ஞான்றும் உளனுதற் கேதுவாய புகழைக்கொடுக்கும். எ-று.

தவலில்லாமை அருத்தாபத்தியான் அப்பொருட்டாயிற்று. தாவில் விளக்கம் வெளிப்படை. யாவருண்பாவர்; ஆகவே, எல்லாச்செல்வமும் மெய் நிக் கொடைமுதலிய காரணங்களாற் புகழ்பெறு மென்பதாம். (சு)

விளக்கம் :—மாறுபடுதல் என்று சொல்லக் கூடிய தீன் பத்தை உண்டு பண்ணும் ஓர் நோயைத் தன் மனத்தினின்றும் நீக்கி விடுவானுயின், அவ்வீதம் நீக்கிய அவனுக்கு அந்நீக்குத லானது எக்காலத்தும் அழியாது இருப்பதற்குக் காரணமாகின்ற புகழை உண்டுபண்ணும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனுல், பகைமையை வினக்கும் இகல் என்று சொல்லும் மாறுபாடாகிய தீய குணத்தை ஒருவன் மனத்துள் கொள்ளாது யாவரோடும் நட்பாக வாழ்வானுயின் அதனுல் யாவரும் நட்பாவரென்றும், அவ்வித நட்பு உண்டாகவே எல்லாச் செல்வ மும் அடைந்து கொடை முதலிய புகழுக்கு உரிய காரணங்களை எல்லாம் செய்து இறந்தும் அழியாத பெயருடையவனுய்ப் பூத தேகம் ஒழிந்தாலும் புகழ் உடம்போடு வாழ்வானென்றும் அறிந் தோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "இவ்வித இகலில்லாது புகழ்பெறுவது அறிந்தோம். இவ்விகலின்மையால் புகழ் அல்லாது இன்னும் எது வருதல் கூடும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயி னர்.

854. இன்பத்து ளின்பம் பயக்கு மிகலென்னுந் துன்பத்துட் டுன்பங் கெடின்.

(பரி.) இ-ள். இகல் என்னும் துன்பத்துள் துன்பம் கெடின்=மாறுபா டென்று சொல்லப்படுகின்ற துன்பங்களெல்லாவற்றினும் மிக்க துன்பம் ஒரு வனுக் கில்லையாயின்,—இன்பத்துள் இன்பம் பயக்கும்=அவ்வின்மை அவ னுக்கு இன்பங்களெல்லாவற்றினும் மிக்க வின்பத்தினைக் கொடுக்கும். எ-று.

துன்பத்துட்டுன்பம்=பலரொடு பொருது வலிதொலைதலான் யாவர்க்கு மேளியனு யுறுவது. அதனை இடையின்றியே பயத்தலின், 'இகலென்னும்' என்ருர். இன்பத்துளின்பம்=யாவருநட்பாகலின் எல்லாப்பயனு மெய்தியுறு வது. (ச)

விளக்கம்:—மற்றவர்களோடு மாறுபடுதல் என்று சொல்லப் படுகின்ற எல்லாத் துன்பங்களிலும் பெரியதோர் துன்பம் ஒருவ னுக்கு உண்டாகாதாயின், அவ்வுண்டாதல் இல்லாமை உடையா னுகிய அவனுக்கு இன்பங்கள் எல்லாவற்றிலும் பெரிய தோர் இன்பம் உண்டாகும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இத

ஞல், மாறுபடுதல் என்கின்ற துன்பத்துள் துன்பத்தினே ஒருவன் மனத்துக்குள் கொள்வானுயின், அத்துன்பத்தால் பலரோடு பகை கொண்டு யுத்தம்செய்து தன்னுடைய வலி குறைவதற்கு ஏது வாகி எதற்கும் எளியனுய்த் துன்புறுவானென்றும், அவ்விதமாறு பாடு இல்லாவிடின் எல்லோரும் நட்பினராகி அந்நட்பின் மிகுதியால் இன்பத்தை அடைந்து மாறுத இன்ப உருவின்னுப் இருப்பா னென்றும் அறிகின்றேம். ஆதலால், இகலில்லார்க்குப் புகழ்வருவ தோடு இம்மை இன்பமும் அடைதல் கூடும் என்று அறி கின்றேம் என்றனர். அது கேட்ட மாணுக்கர், "என்றும் இகலில் லார்க்கு வரும் நன்மைகளே விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

855. இகலெதிர் சாய்த்தொழுக வல்லாரை யாரே மிகலூக்குந் தன்மை யவர்.

(பரி.) இ-ள். இகல் எதிர் சாய்ந்து ஒழுக வல்லாரை = தம்முள்ளத்து மாறுபாடுதோன்றியவழி அதனே யேற்றுக்கொள்ளாது சாய்ந்தொழுகவல் லாரை,—மிகல் ஊக்கும் தன்மையவர் யார் = வெல்லக்கருதுந் தன்மையுடை யார் யாவர்! எ-று.

இகலே யொழிந்தொழுகல் வேந்தர்க்கு எவ்வாற்றுனும் அரிதாகலின் 'வல்லாரை' என்றும், யாவர்க்கும் நண்பாகலின் அவரை வெல்லக் கருது ரார் யாவருமில்லையென்றுங் கூறினர். இவை நான்குபாட்டானும் இகலா தார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது. (நு)

விளக்கம்:—தம்முடைய மனதில் மாறுபாடு தோன்றிய காலத்து அம்மாறு பாட்டினே மனத்துள் கொள்ளாது நட்பாக ஒழுகவல்லவரை வெற்றி கொள்ள எண்ணும் தகுதி யுடையவர் இவ்வுலகத்து ஒருவரும் இல்லையென்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனுல், அரசரானவர் பகைமையை மனத்திற் கொள்ளாது வாழ்தல் அரிதென்றும், அவ்விதம் வாழ அறிவின் வல்லமை உடையவ ராய் இருப்பாராயின், அவர்க்கு உலகத்து எல்லோரும் நண்பராய் இருப்பாராதலால் அவ்விதநட்பின் தகுதியுடையாரை ஒருவராலும் வெல்லல் முடியாதென்றும், அவர்க்கு வருவது எவையும் நன்மை யாகவே இருக்கும் என்றும அறிந்தோம் என்றனர். அதுகேட்ட

மாணாக்கர், "இதுகாறும் இகல் கொள்ளாதார்க்கு வரும் நன்மை களேஉணர்ந்தோம். இனிஇகலினைக் கொள்ளுவார்க்கு வரும்கேடுகள் இவை என்று அறிய விரும்புகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

856. இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை தவலுங் கெடலு நணித்து.

(பரி.) இ-ள். இகலின் மிகல் இனிது என்பவன் வாழ்க்கை = பிறரொடு மாறுபடுதற்கண் மிகுதல் எனக்கு இனிதென்று அதனைச் செய்வானது உயிர் வாழ்க்கை—தவலும் கெடலும் நணித்து = பிழைத்தலும் முற்றக் கெடுதலுஞ் சிறிது பொழுதுள் உளவாம். எ-று.

மிகுதல் = மேன்மேலாக்குதல். இனிதென்பது தான்வேறல் குறித்தல். பிழைத்தல் = வறுமையானின்னுதாதல். முற்றக்கெடுதல் = இறத்தல். இவற் றோடு நணித்தென்பதனைத் தனித்தனிகூட்டி, உம்மைகளே எதிரதும் இறக் குதுந் தழீஇய வெச்சவும்மைகளாக வுரைக்க. பொருட்கேடும் உயிர்க்கேடும் அப்பொழுதே யுளவா மென்பதாம். (அ)

விளக்கம்:—"மற்றவர்களோடு மாறுபடுதலில் மிகுந்தவனுக யானிருப்பது எனக்கு இனிமையைத் தரும்" என்று அம்மாறு பாட்டினை விரும்பிச் செய்வானது உயிர் வாழ்க்கையானது இருந்த நிலையில் மாறுபடுதலும் பிறகு முழுவதும் கெடுதலும் சிறிது காலத்தில் உண்டாதல் கூடும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனுல், பகைமை மேற்கொண்டு ஒருவரோடு ஒருவர் மாறுபடு கின்ற மாறுபாட்டினை மேலும் மேலும் அதிகமாகச் செய்து ஒருவன் தான் வெல்லும்படி எண்ணுதல் அவனுக்கு உள்ள செல் வங்களே எல்லாம் போக்கி வறியனுக்கி நிற்பதுடன் உயிர்க்கேட்டை யும் உண்டுபண்ணும் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "உலகத்து இகலென்னும் மாறுபாட்டை மிகுதியும் கொள்ளுவான் தன்னுடைய செல்வத்தையும் உயிரையும் இழப்பது திண்ணமென்று அறிந்தோம். ஆயின், ஏன் இவ்விதம் வெற்றியைக் குறித்த இவர் வெற்றியுமடையாது, செல்வத்தையும் இழந்து, உயி ரையும் போக்கிக்கொள்வர்? இதன் காரணத்தையும் விளக்கல் வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

857. மிகன் மேவன் மெய்ப்பொருள் நாணு ரிகன்மேவ லின்னு வறிவி னவர்.

(பரி.) இ-ள் இகல் மேவல் இன்னு அறிவினவர்=இகலோடு மேவுதலை யுடைய இன்னுத அறிவினையுடையார்—மிகல் மேவல் மெய்ப்பொருள் காணுர்=வெற்றி பொருந்துதலையுடைய நீதி நூற் பொருளை யறியமாட் டார். எ-று.

இன்னுவறிவு=தமக்கும் பிறர்க்குந் தீங்கு பயக்கு மறிவு. வெற்றி=வழி னினருர்க்கு உளதாவது காணப்படும் பயத்ததாகலின், மெய்ந்நூலனைப் பட் டது. இகலால் அறிவு கலங்குதலின், 'நாணுர்' என்றுர். இவையிரண்டு பாட் டானும் இகலினுர்க்கு வருந் தீங்கு கூறப்பட்டது. (எ)

விளக்கம்:—தமக்கும் பிறர்க்கும் தீங்கினை உண்டுபண்ணும் இகலென்னும் மாறுபாட்டோடு கூடிய அறிவாகிய துன்பம் தரும் அறிவு உடையார் பகைவரோடு போரிட்டு வெல்லுதற்குரிய நீதி களைக் கூறும் நூற்பொருள்களை அறிபமாட்டார்களென்று இத் திருக்குறள் கூறுகின்றது. அது என்னையோவெனின்? தமக்கும் பிறர்க்கும் தீங்கினை உண்டுபண்ணுகின்ற இகலால் அறிவு கலங்கி, அதனல் கலங்கிய அறிவுடையராய் உள்ளகாலத்து எல்லா வலிமை யும் பெற்றிருந்தும் கலங்கிய மனத்தால் உண்மை காணுது போரிட்டுத் தோல்வி அடைவதோடு பொருளையும், உயிரையும்இழப் பார் என்று அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணுக்கர், "இவ்விதம் இகலென்பது கேடுதரும் என்று அறிந்தோம். ஆயின், இவ்விகல் இல்லாத தன்மையை ஒருவன் கொள்ளுவானு யின், அவனுக்கு ஆக்கம் வரும்போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

858. இகலிற் கெதிர்சாய்த லாக்க மதனை மிகலூக்கி னூக்குமாம் கேடு.

(பரி.) இ-ள். இகலிற்கு எதிர் சாய்தல் ஆக்கம்=தன்னுள்ளத்து மாறு பாடு தோன்றியவழி அதனை யெதிர்தலையொழிதல் ஒருவனுக்கு ஆக்கமாம்;— அதனை மிகல் ஊக்கின் கேடு ஊக்குமாம்=அது செய்யாது அதன்கண்மிகு தலை மேற்கொள்வானையிற் கேடுந் தன்கண் வருதலை மேற்கொள்ளும். எ-று.

எதிர்தல் = வற்றுக்கோடல். காய்ந்தபொழுதே வருதலின், 'காய்தலாக்கம்' என்றார். இகலிற்கெனவும் அதனே யெனவும் வந்தன வேற்றுமை மயக்கம். (அ)

விளக்கம்:—ஒருவனுக்குத் தன் மனத்தினிடத்து மாறுபாடு என்னும் இகல் தோன்றிய காலத்து அதனோடு பொருந்தாது அதனே விட்டு விலகிச் செல்லுதல் மேலும் மேலும் வளர்ச்சியைத் தருமென்றும், அவ்விதம் ஒழியாது அவ்விகலே விரும்பி அதனிடத்தே பொருந்தி அதனையே மேலும் மேலும் கொள்ளுதல் அவனுக்குக் கெடுதியை உண்டாக்கும் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், நீங்கள் வினவியபடி இகல் என்பதைச் சிறிதும் விரும்பாத மனத்தை உடையானுக்கு யாவரும் நட்பினர் ஆவாரென்றும், அந்நட்பின் மிகுதியால் செல்வம் வளர்தலோடு ஆயுளும் வளருமென்றும், அவ்விதமல்லாதார் அவ்விரண்டையும் இழப்பரென்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் இவ்வாக்கக் கேடுகளே ஒருவன் தனக்குத் தானே செய்து கொள்ளுதல் கூடுமோ? யாவும் வினையின் பயன் அன்றே?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

859. இகல்காணு னுக்கம் வருங்கா லதனை மிகல்காணுங் கேடு தமற்கு.

(பரி.) இ-ள். ஆக்கம் வருங்கால் இகல் காணன் = ஒருவன் தன்கணுக்கம் வரும் வழிக் காரணமுண்டாயினும் இகலே நினையான்,—கேடு தமற்கு அதனை மிகல் காணும் = தனக்குக் கேடுசெய்து கோடற்குக் காரணமின்றியும் அதன்கண் மிகுகலே நினைக்கும். எ-று.

இகலான் வருங்கேடு பிறரா னன்றென்பது தோன்றத் 'தமற்கு' எனறார். நான்காவதும் இரண்டாவதும் ஏழாவதன்கண் வந்தன. ஆக்கக்கேடுகட்கு முன்னடப்பன இகலினது இன்மை உண்மைகளென்பதாம். (கூ)

விளக்கம்:—ஒருவன் தன்னிடத்துச் செல்வத்திற்கு அதிதேவதையாகிய இலக்குமி ஆனவள் வரவேண்டி இருக்கின் அக்காலத்து மற்றொருவனிடத்துப்பகை கொள்வதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், அக்காரணங்களால் மாறிகொள்ளுதல் என்பதையே

எண்ணமாட்டானென்றும், ஆயின் தனக்குக் கேட்டினை உண்டுபண்ணும் மூதேவியானவள் வரவேண்டிய காலத்து யாதொரு காரணமில்லாமலும் இகலென்னும் மாறுபாட்டினைச் செய்ய மிகுதியும் எண்ணுவான் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், ஒருவனுக்கு ஆகூழ் இருக்குமாயின் பகைவரிடத்தும் மாறு கொள்ளாமல் நட்பினனுய் இருந்து தன் செல்வத்தை வளர்ப்பானென்றும், அவ்விதம் அல்லாது போகூழ் இருக்குமாயின் பகைகொள்ளாதவரிடத்தும் பகையைச் செய்து செல்வத்தைப் போக்கி வறுமையை அடைவான் என்றும் அறிந்தோம். இதனுல் ஒருவனது கல்வியினை, நீவினையே இகலை உண்டு பண்ணுவதற்கும் இல்லாதிருக்கச் செய்வதற்கும் காரணமாம் என்று அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணுக்கர், "இகல் இல்லாமையால் ஒருவனுக்கு ஆக்கம் வருமென்றும், இகல் உள்ளமையால் ஒருவனுக்குக் கேடு வருமென்றும் அறிந்தோம். ஊழ்வலியின் வண்ணம் கொள்ளுகின்ற இகலால் இன்னும் எது உண்டாகும் என்பதையும் அறிவித்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

860. இகலான் இன்னாத வெல்லா நகலான் நன்னய மென்னுஞ் செருக்கு.

(பத.) இ-ள். இகலான் இன்னாத எல்லாம் ஆம்=ஒருவனுக்கு மாறுபாடொன்றனே இன்னாதனவெல்லாம் உளவாம்; —நகலான் நன்னயம் என்னும் செருக்கு அம்=நட்பொன்றனே நல்ல நீதியென்னும் பெருஞ்செல்வம் உளதாம். எ-று.

இன்னாதன =வறுமை, பழி, பாவ முதலாயின. நகல்=மகிழ்தல். நட்பென்பதனுஞ் செருக்கென்பதனுமும் தத்தங் காரணங்கட் காயின. நயமென்னுஞ் செருக்கெனக் காரியத்தைக் காரணமாக உபசரித்தார். இவை மூன்று பாட்டானும் அவ்விருமையுங் கூறப்பட்டன. (இ)

விளக்கம்:—ஒருவனுக்கு மற்றவரிடத்துக் கொள்ளுகின்ற மாறுபாடு ஒன்றினுல் தன்பங்களெல்லாம் உண்டாகுமென்றும், மற்றவரிடத்துக் கொள்ளும் நட்பு ஒன்றினுலேயே நல்ல நீதியென்னும் பெரியதோர் செல்வம் இவைக்கு மென்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. இதனுல், இகல் கொள்ளுவான் ஒருவனுக்குத் தரித்திரம்,

பழி, பாவம் எல்லாம் உண்டாகுமென்றும், அவ்விதமல்லாது பிறரிடத்து நட்புக்கொள்ளுவானுக்குச் செல்வம், புகழ், புண்ணியம் என்பன யாவும் உண்டாகுமென்றும் முடிவாகக் கூறிய விஷயங்களைக் கண்டோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இகல் உடைமையால் இம்மை மறுமை என்னும் இரண்டினையும இழக்க நேருமென்றும, இகலில்லாமையால இருமையும் அடையலாமென்றும் அறிந்தோம. இனி, அவ்வெகுளியால் வரும ஏனையவற்றையும் கூறுதல் வேண்டும்" என்னலும, ஆசிரியர் கூறுவாராயினர்

---

87. அதிகாரம்.

பகைமாட்சி.

(பரி.) அஃதாவது அறிவின்மை முதலிய குற்றங்க ளுடைமையாற் பகையை மாட்சிப்படுத் தல். அரசாகு எவ்வாற்றானும் பகையின்மை கூடாமையின் மேற்பொதுவகையான் விலக்கப்பட்ட இகலே ணண்டுக் றெப்புவகையான் விரிக்கின்ற ராகலின், இகைதன்பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:—அதாவது, அறிவின்மை முதலிய குற்றங்களிருப்பதால் அதன் பொருட்டுப் பகைத்தலே மாட்சிமையாக்க வேண்டும் என்பதாம. அரசராய் உள்ளவர்களுக்கு எவ்விதத்தாலும் பகை யென்பது இல்லாதிருத்தல் கூடாதாதலால் முன்னரே அதற்குப் பொதுவாகக் கூடாதென்று விலக்கப்பட்ட இகலென்னும் மாறுபாட்டினை இவ்விடத்துச் சிறப்பாகக் குறிக்கின்றார் ஆதலால், இப்பகைமாட்சி யென்பது இகலென்னும அதிகாரத்துக்குப் பிறகு வைக்கப்பட்டு உள்ளது என்றனர் அதுகேட்ட மாணாக்கர், எதற்கும் ஒரு சிறப்பு விதி உண்டென்பது போல், கூடாததாகிய இவ்விகலுக்கும் ஒரு சிறப்புவிதி உண்டுபோலும்! அச்சிறப்பினைக் கூறல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்

861. வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேல் மேக பகை.

(பரி.) இ-ள். வலியார்க்கு மாறு ஏற்றல் ஓம்புக = தம்மின் வலியார்க்குப்

பகையா யெதிர்தலே ஒழிக;—மெலியார்மேல் பகை ஓம்பா மேக=வீணேமெலி யார்க்குப் பகையாதலே ஒழியாது விருமபுக. எ-று.

வலியாரென்புழித் துணைவலியு மடங்கலின், மெலியாரென்புழித் துணை வலி யின்மையுங் கொள்ளப்படும். அத்துணைதான் படை பொருண்முதலிய வேற்றுமைத்துணையும் நல்லறிவுடைமை நீதிநூல்வழியொழுகன் முதலிய ஒற்றுமைத்துணையுமென விரண்டாம். அவ்விரண்டு மில்லாரை வெல்வார்க்கு வலி தொலையாமையின் அவரோடு பகைத்தல் விலக்கப்பட்டது. இங்ஙனாக் காகிய இதனுட் பகைமாட்சி பொருவகையாற் கூறப்பட்டது. (க)

விளக்கம்:—அரசாயினுர் தம்மைக் காட்டிலும வலியவரி டத்துப் பகைகொண்டு அவரை யெதிர்த்தலே ஒழித்தல் வேண்டு மென்றும், தம்மைக் காட்டிலும் வலிமையில்லாத மெலியாரிடத்துப் பகை கொள்ளுதலே யக்காலத்தும் விருமபுதல் வேண்டுமென்றும இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, படை, பொருள் முத லிய புறத்துணையும, நல்லறிவுடைமை, நீதி நூல் வழி ஒழுகுதல் முதலிய அகத்துணையும் ஆகிய இரண்டினையும் கொண்டவரிடத்துப் பகைகொள்ளுதல் ஆகாதென்றும, அவ்விதம் புறத்துணை, அகத் துணையாகிய இரண்டுமில்லாரை வெலவது சுலபமாதலால் அவரைப் பகைத்து வெற்றி கொண்டு உலகத்தை ஆளவேண்டுமென்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "வெகுளியால் வரும் இகலைக் கொள்ளவேண்டிய இடம இது வென்றும், கொள்ளக் கூடாத இடம் இதுவென்றுப் அறிந்தோம். ஆயின், என் ஒரு வருக்குத் துணைவலி யுள்ளது? என் சிலர்க்குத் துணைவலி யில்லா மற் போயின்றது ? என்பதை விளக்கல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்

862. அன்பில னன்ற துணையிலன் முனைமுவவா னென்பரியு மேதிலான் றப்பு.

(பரி.) இ-ள். அன்பு இலன்=ஒருவன் தன் சுற்றத்தின் மேலன்பிலன,—ஆன்ற துணை இலன்=அதுவேயன்றி வலிய துணையிலன்,—தான் துவ்வான் =அதன்மேற் சூன் வலியிலன்,—எதிலான் தப்பு என் பரியும்=அப்பெற்றி யான் மேல்வந்த பகைவன் வலியினை யாங்ஙனந் தொலைக்கும்! எ-று.

சுற்றமும், இருவகைத்துணையும், தன்வலியு மிலனாகலின், அவன்மேற் செல்வார்க்கு வலி வளர்வதன்றித் தொலையா தென்பதாம். துவ்வான் = துவ்வினைச் செய்யான். (உ)

விளக்கம்:—ஒருவன் தன் சுற்றத்தவர் மீது அன்பு இல்லாதவனும், அது மாத்திரம் அல்லாமல் நல்லறிவுடைய வலியார் துணையில்லாதவனும், தனக்குத் தானே வலிமையில்லாதவனும் இருப்பானுயின் அவ்வித தகுதியுடையான் தன் மேல் எதிர்த்து வந்த பகைவனுடைய பலத்தை எவ்வித தத்தாலும் தொலைத்தல் முடியாது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, மேல் வினவிய வண்ணம் சுற்றத்தவரிடத்து அன்பு செய்யாமையால் அவருடைய துணையற்றும், பொருள், படை முதலிய வெளித்துணையும், அறிவு முதலிய உள்துணையும் ஆகிய இரண்டு துணையுமில்லாமலும் இருக்கும் ஒருவன் தன் மீது வந்த பகைவரை வெற்றி கொள்வதற்கு முடியாது தோற்றுப்போவான் ஆதலால், அப்பகைவர் வலிமையானது வளருமென்றும், இவன் வலிமை ஒழிந்துபோம் என்றும் அறிந்தோம். ஆதலால் ஒருவன் வலிமைகொள்வதற்கும், வலிமையற்றிருப்பதற்கும் காரணம் துணை வலியேயாம் என்று அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "எவ்வித தீக்குணங்களால் சிலர் துணைவலிமை பெறுது பகைவரால் வெல்லப்படுகின்றனர் என்பதை விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

863. அஞ்சு மறியா வமைவில னீகலான்
தஞ்ச மெளியன் பகைக்கு.

(பரி.) இ-ள். அஞ்சும் = ஒருவன் அஞ்சவேண்டாதவற்றிற்கு அஞ்சாநிற்கும்,—அறியான் = அறியவேண்டுமவற்றை யறியான்,—அமைவு இலன் = பிறரோடு பொருத்தமிலன்,—ஈகலான் = இவற்றின்மேலும் யாவர்மாட்டும் இரந்தாலேயன்,—பகைக்குத் தஞ்ச மெளியன் = இப்பெற்றியான் பகைவர்க்கு மிகவெளியன். உ-து.

தஞ்ச மெளிய னென்பன ஒருபொருட்பன்மொழி, * இந்நான்கு குற்றமு முடையான் பகையின்றியு மழியுமாகலின், 'தஞ்சமெளியன்' என்றார்.

* தஞ்சக்கிளவி யெண்மைப்பொருட்டே. தொல்காப்பியம், சொல், 269.

விளக்கம்:—ஒருவன பயப்படக்கூடாதவற்றிற்குப் பயந்தும், அறிய வேண்டுவனவற்றை அறியாதும், பிறரோடு பொருந்துதல் இல்லாதவனுய் இருப்பானேதாடு உலோபத்தன்மை உடையவனு யும் இருப்பானுயின், அவ்வித தகுதி உடையான் பகைவர்க்கு மிகு தியும் எளிமை உடையவன் ஆவான் என்று இத்திருக்குறள் கூறு கின்றது. அதாவது, பயப்படக்கூடாதவற்றிற்குப் பயந்தும், அறிய வேண்டிய விஷயங்களே அறியாமலும், பிறர் கொள்கையோடு பொருந்தாமலும, ஈகை என்பதே இல்லாது உலோப குணமும் ஒருவனுக்கு இருக்குமாயின், அவ்வித தகுதியுடையானே உலகோர் விரும்பாரென்றும், அவ்வித்தம் விரும்பாத காலத்து அவன் தனிய னுவன் ஆதலால் பலமற்றவன் ஆவானென்றும், அவ்வித பலமில் லாதவனே வெற்றிகொள்வது பகைவர்க்குச் சுலபமென்றும் அறிந் தோம். அன்றியும், இவ்வித நான்கு குற்றங்களையும் ஒருவன் கொண்டிருப்பானுயின், பகைவரில்லாமலே தானே அழிந்துவிட நேரினும் நேருமென்றும் அறிகின்றேம் என்றனர். அதுகேட்ட மாணக்கர், "இன்னும் எவ்வெவ்வித குற்றங்களை உடையானைப் பகைவர் சுலபமாக வெல்லுதல் கூடும் என்பதையும் அறிவித்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

864. நீங்கான் வெகுளி நிறையில னெஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கு மெளிது.

(பரி.) இ-ன். வெகுளி நீங்கான் = ஒருவன் வெகுளியினீங்கான், —நிறை இலன் = அதுவேயன்றித் தான் நிறையுடையனல்லன், —எஞ்ஞான்றும் யாங்க ணும் யார்க்கும் எளிது = அவன்மேற்சேறல் எக்காலத்தும் எவ்விடத்தும் யார்க்கு மெளிது. எ-று.

நிறை = மறைபிறரறியாமை. வெகுடன்மாலைய னுகலானும், மறை வெளிப்படுத்தலானும், மேற்செல்வார்க்குக் காலமும் இடனும் வலியுமறிந்து சேறல் வேண்டாதாயிற்று. இனி, இனிதென்று பாடமோதி அவன் பகைமை இனிதென் றுரைப்பாரு முளர். (சு)

விளக்கம்:—ஒருவன் கோபத்தை விட்டு ஒழியாதவனுயும், மறைவாகிய விஷயங்களைப் பிறர் அறியச் செய்பவனுயும் இருப்பா னுயின், பகைவர் அவன் மேல் செல்லுதல் எந்தக் காலத்திலும்,

எந்த இடத்திலும், எவர்க்காயினும் சுலபமாக இருக்கும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, பகைவரானவர் ஒருவன்மீது செல்லவேண்டுமாயின் காலத்தையும், இடத்தையும், அவனுக்கு உள்ள தன் வலி துணை வலியையும் நோக்கிச் செல்லல் வேண்டி இருக்க இவ்வித கோபத்தையுடையானும், இவ்வித மறைவாகிய விஷயங்களை வெளிப்படுத்தி விடுகின்ற புல்லறிவாண்மையை உடையவனுமாகிய இவன்மீது பகைவர் பகைகொண்டு சென்று வெல்லுதல் மிகச் சுலபம் என்று கூறுவதால், அரசன் ஒருவன் பகைவரால் வெல்லப்படுவதற்கு இக்குற்றங்களும் காரணமாயின என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர் "ஒருவன் வலியிலனுதற்கு இன்னும் உள்ள குற்றங்களையும் விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

865. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது. [கான்

(பரி.) இ-ள். வழி நோக்கான்-ஒருவன் நீதிநூலையோதான், —வாய்ப்பன செய்யான் = அது விதித்ததொழில்களைச் செய்யான், —பழி நோக்கான் — தனக்கு வரும் பழியைப் பாரான், —பண்பு இலன் = தான் பண்புடையனல்லன், —பற்றார்க்கு இனிது = அவன் பகைவர்க்கு அப்பகைமையினிது. எ-று

தொல்லோரடிப்பட்டு வழங்கி வந்ததாகலான் 'வழி' என்றும், தப்பாது பயன்படுதலின் 'வாய்ப்பன' என்றும், இக்குற்றங்களுடையான் முனேயழிதலிற் 'பற்றார்க் கினிது' என்றும் கூறினர். (கு)

விளக்கம்:—ஒருவன் உலகத்து உள்ள நீதிநூல்களைப் படியாதவனையும், அந்நீதிநூல்கள் சொல்லிய வண்ணம் செய்ய வேண்டிய செயல்களைச் செய்யாதவனையும், தான்செய்யும் காரியங்களால் தீனக்கு வரும் பழியைப் பாராதவனையும், தான் நற்குணமுடையவன் அல்லாதவனையும் இருப்பானாயின், அவ்வித குற்றங்களுடையான் பகைமையானது அவனுடைய பகைவர்க்குமிக இனிமை உடையதாக இருக்கும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, மேற்கூறிய நீதிநூல்களை ஓதாதிருத்தலும், செய்ய வேண்டுவனவற்றைச் செய்யாதிருத்தலும், செய்யக் கூடாதவற்றையே செய்தலும, அவ்விதம் செய்யக் கூடாதவற்றைச் செய்வ

தால் தனக்கு வரும் பழியை எண்ணுமலும் நற்குணங்களில்லாதவனும் ஒருவன் இருப்பானுயின், அவன் உலகத்தாரால் விரும்பப்படானென்றும் அவ்விதம் விரும்பப்படாதவனது வலிமையைத் தொலைத்து வெற்றிகொள்வது சுலபமென்றும், அவ்விதம் பல மற்றவனிடத்துப் பகையைக் கொள்ளுதல் பகைவர்க்குத் தின்பமாகத் தோன்றுது இன்பமாகவே காணப்படும், என்றும் அறிந்தோம். அதவல்லாமலும் இவ்வித தீக்குணங்கள் உடையான் பகைவரால் அழிக்கப்படாது தானேயே அழிந்து போவான் ஆதலால் அவன் பகை பகைவர்க்கு இனிமை யென்றும் அறிந்தோம் என்றனர். அதகேட்ட மாணுக்கர், "இன்னும் மெலியோனது குற்றங்களை எடுத்துக் காட்டல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

866. காணுச் சினத்தான் கழிபெருங் காமத்தான் பேணுமை பேணப் படும்.

(பரி.) இ-ள். காணுச் சினத்தான் = தன்னையும் பிறரையுந் தானறியாமைக் கேதுவாகிய வெகுளியையுடையான் யாவன், — கழிபெருங் காமத்தான் = மேன் மேல் வளராநின்ற மிக்க காமத்தையுடையான் யாவன், — பேணுமை பேணப்படும் = அவரது பகைமை விரும்பிக் கொள்ளப்படும். எ-று.

காணுத சினமென்பது விகாரமாயிற்று. மூன்னேனுக்கு யாவரும் பகையாகலானும், எனேனுக்குக் காரியந் தோன்றுமையானும், தாமே யழிவ ரென்பது பற்றி, இவர் 'பேணுமை பேணப்படும்' என்றார். (சு)

விளக்கம்:— தன்னையும் மற்றவரையும் தான் அறியாதபடிச் செய்வதற்குக் காரணமாகிய கோபத்தை உடையான் ஒருவனும் மேல் மேல் அதிகரிக்கின்ற மிகுந்த காமத்தை உடையவனுயுள்ள ஒருவனும் ஆகிய இவரது பகைமையானது பகைவரால் விரும்பிக் கொள்ளப்படுவதாக உள்ளது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அது "என்னையோ வெனில்? தன் வலியும் மாற்றுன் வலியும் அறியாவிதமாகத் தனக்கு உள்ள கோபத்தால் யாவருடனும் பகை கொள்வான் ஆதலால் அவ்விக கோபத்தை உடையானுக்கு எவரும் பகை ஆவாரென்றும், பங்கையர் மையலிலே மயங்கிக் காமத்தையே பொருளாகக் கொண்டவனுக்கு வேறு ஒரு காரியத்திலும்

அறிவு செல்லாது ஆதலால் அவனது பகைமையும் விரும்பிக்கொள்ளப்படும் என்றும், மெலியோனது குற்றங்களை எடுத்துக்காட்டி முடிக்கின்ற இடத்தில் எதிர் முகமாகக் கூறுகின்ற சுட்பினுக்கு ஆதாரமாகிய வெகுளியையும், காமத்தையும் அறிவித்துவிட்டனர் ஆதலால், ஒருவன் அகம்புறமாகிய தூண வலியெல்லாம் கொண்டிருப்பனுயினும் கோபத்தையும் காமத்தையும் பொருளாகக்கொண்டு உலகத்து ஒழுகுவானுயின் பகைவரில்லாமலே அழிந்துபோவானென்றும் அவ்வித தகுதியுடையான் பகைமையை விரும்பிப் பகைவர் கொள்ளுதல் கூடுமென்றும் பகைமாட்சியின் திறத்தை அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "இதுவரையும் யார் மீது பகை கொள்ளுதல் வேண்டும் என்பதை அறிந்தோம். இனி இவ்வித பகைவனைத் தனக்குப் பகையாகக் கொள்வதற்கு அரசன் ஒருவன் எதுசெய்தல் வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

867. கொடுத்துங் கொளல் வேண்டுமன்ற வடுத்திருந்து மாணுத செய்வான் பகை.

(பரி.) இ-ள். அடுத்து இருந்து மாணுத செய்வான் பகை = வினையைத் தொடங்கியிருந்து அதற்கேலாதன செய்வான் பகைமையை—கொடுத்தும் கொளல் மன்ற வேண்டும் = சிலபொருளை நீயிக் கொடுத்தாயினுங் கோடல் ஒருதலையாகவேண்டும். எ-று.

எலாதன = மெலியனுய் வைத்துத் துணிதலும், வலியனுய் வைத்துத் தணிதலும் முதலாயின. அப்பொழுது அதனுற் சிலபொருளழியினும் பின் பலபொருளெய்தற்கு ஐயமின்மையின், 'கொளல் வேண்டுமன்ற' என்ருர். இவை யாறுபாட்டானும் அது சிறப்புவகையாற் கூறப்பட்டது. (எ)

விளக்கம்:—ஒரு வினையைத் தொடங்கி அதற்கு வேண்டுவனவற்றைச் செய்யாது அவ்வினைக்குப் பொருந்தாத செயல்களைச் செய்பவன் ஒருவனது பகையைச் சிலபொருள் அழியும்படிக் கொடுத்தாயினும் கொள்ளுதல் மிக முக்கியமாம் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, அறிவிலாத ஒருவன் தான் எடுத்த காரியத்தைச் செய்யுங் காலத்து அக்காரியத்திற்கு வேண்டுவனவாகிய செயல்களை எல்லாம் செய்து அதனை முடிக்காது தனது அறிவின்

மையால் தான் எடுத்த காரியத்திற்குப் பொருந்தாததாயுள்ள செயல்களை எல்லாம்செய்து அதனை அழித்துவிடுவார் ஆதலால் அவ்வித அறிவில்லாதார் பகைமையை முதலில் சில பொருள் செலவழித்தாயினும் கொள்ளல் வேண்டும் என்றும், அவ்வித பகைமையால் தான் பின்னர் பெரும் பொருள் அடைதல் கூடுமாதலால் அவ்வறிவிலாதவன் பகையைக் கொள்ளுதல் கூடுமென்றும் அறிகின்றோம். அது என்னையோ வெனில்? அறிவில்லாதான் செய்கின்ற காரியமானது தான் வலியனாக இருந்தும் தன்னை மெலியன்போல் எண்ணி அஞ்சுதலும் தான் மெலியனாக இருந்தும் தன்னை வலியவனென்று எண்ணித் துணிந்து செல்லுதலும் ஆகிய பொருந்தாத செயல்களாக இருக்கும் ஆதலால் அவனது பகையால் அவனை வெற்றிக் கொள்வது கிண்ணமென்று, முதற்றிருக்குறளில் கூறியபடி அவ்வித மெலியவனது பகையை விலைகொடுத்தும் வாங்குதல் வேண்டும் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "என் அறிவிலாதவன் பகைவரால் தோறகடிக்கப்படுகின்றான்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

868. குணனிலனெய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க் கினனிலனே மேமாப் புடைத்து.

(பரி.) இ-ள். குணன் இலனெய்க் குற்றம் பலவாயின் இனன் இலனும் = ஒருவன் குணனென்று மிலனெய் உடைய குற்றம் பலவாயவழி, அவன் துணையிலனும்; — மாற்றார்க்கு ஏமாப்பு உடைத்து = அவ்விலனதருமனே அவன் பகைவர்க்குத் துணையாதலையுடைத்து. எ-று.

குணம் = இறைமாட்சியுட் சொல்லியன. குற்றம் = இவ்வதிகாரத்துச் சொல்லியனவும் மற்று மத்தின்மையனவும் ஆம். இனன் = சுற்றம், நட்பு, பொருள், படை முதலியன. பகைவர்க்கு இவற்றானுளதாம் பயன்மனே யுளதாமாகலின், 'ஏமாப்புடைத்து' என்றார். இலனு மென்னும் செய்தெனெச்சம் உடையவென வந்த பெயரெச்சக்குறிப்புக்கொண்டது. (அ)

விளக்கம்:—ஒருவன் குணம் ஒன்றுமில்லாதவனாய், பல குற்றங்களை உடையவனாயிருப்பானாயின் அவனுக்குத் துணை என்பது இல்லாமற் போமென்றும், அவ்விதம் துணையில்லாமற் போதலே அவனது பகைவர்க்குப் பல துணைவரை வந்து சேர்த்ததுபோலாகும்

என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, இறைமாட்சி என்னும் அதிகாரத்துள் அரசனுக்குக் கூறிய தூங்காமை, கல்வி, தெளிவுடைமை ஆகிய நற்குணங்களில்லாமையும், இவ்வதிகாரத்துள் கூறுகின்ற வெகுளி, உலோபத்தனம் முதலிய குற்றங்கள் உடைமையும் ஒருவனுக்கு இருக்குமாயின் அவனிடத்துச் சுற்றத்தவர், நட்பினர், பொருள், படை முதலியவை பொருந்தாவென்றும், இவ்வித துணைப்பலங்கள் இல்லாத காலத்துப் பகைவர்க்கு மிகுந்த தோர் பயன் உண்டாகித் துணை அதிகரிக்குமென்றும், ஆதலால் ஒருவனது அறியாமையே அவன் பகைவனுக்குத் துணையாய் நின்று பயனைத் தருவதால் பகைவன் வெற்றி அடைகின்றான் என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "அறிவில்லாமையானது பகைவர் வெல்வதற்கு உபாயமாக உள்ளது என்பதை அறிந்தோம். இவ்வித அறிவில்லாத அரசரின் பகையைக் கொண்ட அரசர் தாம் பகையைச் சாதிக்கின்ற காலத்துத் தன்பத்தோடு சாதிக்கவேண்டும் போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

869. செறுவார்க்குச் சேணிகவா வின்ப மறிவிலா வஞ்சும் பகைவர்ப் பெறின்.

(பரி.) இ-ள் அறிவு இலா அஞ்சும் பகைவர்ப் பெறின் = நீதியையறிதலில்லாத அஞ்சும் பகைவரைப் பெற்றால், — செறுவார்க்குச் சேண் இன்பம் இகவா = அவரைச் செறுவார்க்கு உயர்ந்தவின்பங்கள் நீங்கா. எ-று.

உபாயமறிதலும் அறிந்தாற் செய்துமுடிக்குந் திண்மையு மில்லாதாரே பகைவராதல் கூடாமையிற் 'பெறின்' என்றும், அவரையறிந்து மேற்சென்ற பொழுதே பகையின்மையுஞ் செல்வமும் ஒருங்கேயெய்தலிற் 'சேணுடையின்பங்கள் இகவா' என்றுங் கூறினர். (கூ)

விளக்கம்:—உலக நீதியை அறியாதவரும், அஞ்சக் கூடாதவற்றிற்கு அஞ்சுபவரும் ஆகிய பகைவரைப் பெற்றால் அவ்வித பகைவரை வெற்றிகொள்ள எண்ணிச் செல்லுகின்ற பகை அரசர்க்கு மிகவும் உயர்ந்த இன்பங்கள் எக்காலத்தும் உண்டாகும் என்று இக்திருக்குறள் கூறுகின்றது. இதனால், செய்யவேண்டிய உபாயம் அறிவதற்கு அறியாதவர்களாயும், உபாயத்தை அறிந்து செய்து முடிக்கும் வலிமை இல்லாதவராயும் ஒருவர்க்குப் பகை

வர் கிடைப்பது மிக அருமை என்றும், அவ்விதம் ஓர் வேளை அறிவில்லாத பகைவர் கிடைப்பாராயின் அப்பகைவர் மீது சென்ற வேற்றுப்பகை அரசர், யுத்தத்திற்குச் சென்ற காலத்திலேயே அவரிடத்திருந்த பகை ஒழிந்து போதற்குக் கூடிய வெற்றியையும் அவரிடத்தே இருந்த செல்வங்களையும், ஒரே காலத்து அடையக் கூடிய வல்லமையையும் அடைவார்களாதலால் வெற்றி கொண்டவர்க்கு நீங்காத பெரியதோர் இன்பம் அவர்க்கு உண்டாகும் என்றும் அறிந்தோம். ஆதலால், அறிவில்லாதார் கொள்ளுகின்ற பகை இன்பம் தாராது அவர்க்குத் துன்பத்தையே தரும் என்று அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் நீதி அறியாதவனிடத்துப் பகைகொண்டு வெல்லுதல் வேண்டுமோ? அறிவிலாதவனென்று விட்டுவிடுதல் கூடாதோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

870. கல்லான் வெகுளுஞ் சிறுபொரு ளெஞ்ஞான்று மொல்லானே யொல்லா தொளி.

(பரி.) இ-ள். கல்லான் வெகுளும் சிறுபொருள் ஒல்லானே=நீதிநூலைக் கல்லாதானுடு பகைத்தலான் வரும் எளியபொருளே மேலாதானே—எஞ் ஞான்றும் ஒளி ஒல்லாது=எஞ்ஞான்றும் புகழ் மேவாது. எ-று.

சிறுபொருள்=முயற்சி சிறிதாய பொருள். நீதியுரையாதானே வேறல் எளிதாயிருக்கவும் அதுமாட்டாதானே வெற்றியான் வரும் புகழ் கூடா தென்பதாம்; ஆகலே, இச்சிறிய முயற்சியாற் பெரிய பயனெய்துக வென்றவாறு மிற்று. இதற்குப் பிறரெல்லாம் அதிகாரத்தோடு மாறுதன்மேலும் ஓர் பொருட்டொடர்பு படாமலுரைத்தார். இவை மூன்று பாட்டானும் அதனினைய பயன் கூறப்பட்டது. (ம)

விளக்கம்:—உலகத்துக கூறும் நீதி நூல்களைப் படியாதவனுடு பகைத்து அதனால் வருகின்ற எளியதோர் பொருளை அடையாத அரசன் ஒருவனை எக்காலத்தும புகழ் அடையாது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், நீதி நூல் அறியாதவனை வென்று வெற்றி கொள்வது மிக எளிமையாக இருக்கவும் அவ் வெளிமையாகிய காரியத்தைச் செய்து அதனால் அடைகின்ற என்றுமுள்ள புகழை அடையாமல் போதல் கூடாதென்றும், சிறு முயற்சி செய்து பெரும பொருளாகிய புகழை அடைவது அர

சர்க்குத் தருமமென்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்டமாணாக்கர், "மேற்கூறிய மூன்று திருக்குறள்களாலும் பகைமாட்சி என்பதனால் அடையக் கூடும் பயன் இது என்பதை அறிந்தோம். இனிப் பகைவருடைய திறங்களைத் தெரிந்து அரசன் அடையவேண்டிய பலன் எவ்விதம், என்பதையும் விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

88. அதிகாரம்.

பகைத்திறந்தெரிதல்.

(பரி.) அஃதாவது மாணாத பகைமை ஆக்குதற் குற்றமும், முன் ஆகின்ற பகையுள் நட்பாக்கற் பாலதும், நொதுமலாக்கற்பாலதும், அவற்றின் கட் செய்வதும், வினைக்கலைதற்பாலதன்கட் செய்வினையும், கலையும பருவமும், கலையாக்காற்படுமிழுக்கும் என்று இத்திறங்களை ஆராய்தல். இரட்டிற மொழிதலென்பதனுற் பகையது திறமும் பகையிடத்தாங்கு திறமுமென விரிக்கப்பட்டது. இவையெல்லாம் மாணாப் பகையாகலின், இது பகைமாட்சியின்பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:—அதாவது, மாட்சிமைப் படாத பகையினைப் பகையாக ஆக்குகின்ற குற்றமும், முன்னரே பகையாகி நின்ற பகையுள் நட்பாக்கக் கூடியதும், நட்புமில்லாது, பகையுமில்லாது நடுவாக்கக் கூடியதும், அப் பகையினிடத்தே செய்யக் கூடியதைச் செய்வதும், கலையக் கூடியதைக்கலைவதும், இவ்விதம் கலையும் காலத்துக் கலையக் கூடிய பருவத்தை நோக்குதலும், அவ்வித பகையினைக் கலையாத விடத்து உண்டாகும் குற்றத்தினையும் ஆகிய இத்திறங்களை அறிந்து தெரிதலே பகைத் திறந்தெரிதல் என்பதாகும், மேற்கூறியவைகளெல்லாம் மாட்சிமைப் படாத பகை ஆதலால் அதைத் தெரிதலைக் கூறும் இவ்வதிகாரம் பகைமாட்சி என்னும் அதிகாரத்துக்குப் பிறகு வைக்கப்பட்டு உள்ளது என்று கூறினர். அதுகேட்ட மாணாக்கர், "பகைமாட்சிக்குப்பின் பகைத்திறந் தெரிதலென்பதைக் கூறுவதால் பகையென்பது விரும்பக் கூடியதொன்றே?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

871. பகையென்னும் பண்பி லதனை யொருவ
வகையேயும் வேண்டற்பாற் றன்று.

(பரி.) இ-ள். பகை என்னும் பண்பு இலதனை = பகையென்று சொல்லப்படுந் தீமை பயப்பதனை — ஒருவன் நகையேயும் வேண்டற்பாற்று அன்று = ஒருவன் விளையாட்டின்கண்ணேயாயினும் விரும்புதலியற்கைத் தன்றென்று கூறும் நீதி நூல். எ-று.

மாணுதபகையை யாக்கிக்கோடல் எவ்வாற்றானுந் தீமையே பயத்தலிற் பண்பிலது' என்றும், அதனை விளையாட்டின்கண் வேண்டினுஞ் செற்றமே விளைத்து மெய்யாமாகலின் 'நகையேயும்' என்றும், வேண்டாமை தொல்லியோரது துணிவென்பார் நீதிநூன்மேல் வைத்துங் கூறினார். அப்பெயர் அவாய் நிலையான் வந்தது. (க)

விளக்கம்:—பகையென்று சொல்லப்படுகின்ற தீமை செய்யக் கூடிய ஒன்றினை ஒருவன் விளையாட்டுகாகவும் விரும்புதல் ஆகாது என்று நீதி நூல் கூறுகின்றது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனுல், மேல் அதிகாரத்தில் மாட்சிமை கொண்ட பகையைப் பகையாக்கிக் கொண்டு வெற்றியை அடைந்து அவ்வெவ்றியால் ஆகிய புகழை அடையக்கூடிய உபாயத்தை அரசர்க்குக் கூறினுமேனும் இவ்வதிகாரத்துள் கொள்ளக் கூடாத பகையைக் கொண்டு அப் பகையால் தீமையை அடைவது குணமுடையது அல்லவென்றும், அவ்வித குணமில்லாத ஒன்றினை விளையாட்டிற்காக ஒருவன் கொள்ளுவானுயினும் அவ்விளையாட்டே வினையாய் முடிந்து தீமை உண்டாவது உண்மையாக முடியுமென்றும், விளையாட்டிற்கும் கொள்ளக்கூடாத பகையைக் கொள்ளுதல் ஆகாதென்று நீதிநூல் எல்லாம் கூறுகின்றதென்றுமே கூறியதாக அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "மாட்சிமையுடைய பகையென்றும், மாட்சிமை இல்லாத பகையென்றும் அறிந்துகொள்வதற்குச் சிறிது வகுத்துக் காட்டுதல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

872. வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்வர்க
சொல்லே ருழவர் பகை.

(பரி.) இ-ள். வில் ஏர் உழவர் பகை கொளினும் = ஒருவன் வில்லே

ஏராகவுடைய உழவரோடு பகைகொண்டாலுமினும்,—சொல் வர் உழவர் பகை கொள்ளற்க =சொல்லே ஏராகவுடைய உழவரோடு பகை கொள்ளாதொழிக.

சொல்—ஆகுபெயரான் நீதிநூன்மேனின்றது. வீரம் சூழ்ச்சியென்னும் ஆற்றல்களுள் வீரமேயுடையாரோடு பகைகொண்டாற் கேடுவருதல் ஒருதலை யன்று, சூழ்ச்சியினுந் தனக்கேயாம், ஏனைச் சூழ்ச்சி யுடையாரோடாயிற் றன் வழியி னுள்ளார்க்குந் தப்பாது வருதலின், அது கொள்ளினும் இது கொள் ளற்க வென்றார். உம்மையான் அதுவுமாகாமை பெறுதும். இரண்டுமுடையா ரோடு கொள்ளலாகாமை சொல்லவேண்டாமாயிற்று. உருவகவிசேடம். (உ)

விளக்கம் :—ஒருவன் வில்லினைத் தமக்கு ஏராக உடைய வீரரோடு பகை கொள்ளினும் சொல்லே ஏராக உடைய புலவரோடு பகை கொள்ளுதல் ஆகாதென்று இத்திருக்குறள் கூறு கின்றது. இதனுல் உலகத்து வீரமென்னும் வல்லமையுடையவர் கள் என்றும், சூழ்ச்சி என்னும் ஆராய்ச்சியென்ற வல்லமை யுடையவர்கள் என்றும், ஆகிய இவ்விரண்டு பிரிவினுள் வீரமுடைய பகைவராகிய வில்லாளிகளுடன் பகைகொள் ளின் அதனுல் தனக்குக் கெடுதி வருதல் அவ்வளவு நிச்சயமில்லை என்றும், ஓர் கால் கெடுதி வருமாயினும் அக்கெடுதி தன்னோடு ஒழிந்து போமென்றும், ஆனுல் சூழ்ச்சி உடையாரென்னும் நூல் வல்லவரோடு பகை கொண்டால் அப்பகையால் கேடு வருதல் நிச்சயமென்றும், அக்கேடு தன்னோடு ஒழியாது தன்சந்ததியா ருக்கும் தப்பாது வந்து சேருமென்றும், ஆதலால் மாட்சிமைப் படாத பகைகளுள் புலவர் பகை முக்கியமென்றும் கூறியதாக அறிந்தேதாம். ஆனுல், வீரனது பகையும், புலவனது பகையும் ஆகிய இரண்டையும் கொள்ளுதல் ஆகாது எனினும், புலவன் பகை பெரியதோர் தவறு உடையதென்பது இதனுல் பெறப்படுகின்றது. இதனைப் பாண்டியனுக்கும் கம்பருக்கும் நடந்த கதையே நன்கு அறிவிக்கும்.

> "வில்லம்பு சொல்லம்பு மேதினியி லிரண்டுண்டு
> வில்லம்பிற் சொல்லம்பே மேலதிகம்—வில்லம்பு
> பட்டதடா என்மார்பிற் பாண்டியா! நின்குலத்தைச்
> சுட்டதடா என்னுயிற் சொல்."

என்பதனுலேயே அறிதல் கூடும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர்,

"இவ்விதம் பலரிடத்தும் பகை கொள்ளும் அரசனை உலகத்தவர் என்னென்று கருதுவர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

873. ஏமுற் றவரினு மேழை தமியனுய்ப்
பல்லார் பகைகொள் பவன்.

(பரி.) இ-ள். தமியனுய்ப் பல்லார் பகைகொள்பவனை = தான் தனியனுய் வைத்துப் பலரோடு பகைகொள்வான் — ஏமுற்றவரினும் ஏழை = பித்தற்றவரினும் அறிவிலன். எ-று.

தனிமை = சுற்றம், நட்பு, படை முதலிய வின்மை. மயக்கத்தால் ஒப்பாராயினும் ஏமுற்றவர் அதனுற் றீங்கெய்தாமையின், தீங்கெய்துதலை முடைய இவனை 'அவரினும் ஏழை' என்றார். தீங்காவது:— துணையுள்வழியும் வேறல் ஐயமாயிருக்க அஃதின்றியும் பலரோடு பகைகொண்டு அவரால் வேறு வேறு பொருதற்கண்ணும் ஒருங்கு பொருதற்கண்ணும் அழிந்தே விடுதல். இவை மூன்று பாட்டானும் பகைகோடற்குற்றம் பொதுவினுஞ் சிறப்பினுங் கூறப்பட்டன. (கூ)

விளக்கம்:— தான் தனியனுக இருந்துகொண்டு பலரோடும் பகை கொள்வான் ஒருவன் பயித்தியம் கொண்டவர்களைக் காட்டிலும் அறிவில்லாதவன் ஆவான் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, சுற்றத்தவர், நட்பினர், தான்குவித்த படை ஆகிய ஓர்வித பலமுமில்லாத ஒருவன் பலரோடும் பகை கொண்டு அப் பகைவர்களோடு தனித் தனியாகப் போர் செய்தும், பலர் ஒன்றுகூடி இருந்தகாலத்துப் போர் செய்தும், தனக்குத் துணை வலி இருந்த காலத்தும் வெல்வது சந்தேகமாக இருக்கத் துணியில் லாமலே இவ்வாறு செய்யின் அவன் பித்தத்தின் மிகுதியால் தும் அறிவு மயங்கிப் பயித்தியம கொண்டவரோடு ஓர்வித சமானம் உடையவன் என்றும், பின்னர் அப்பயித்தியம் கொண்டவர் தமக்குத் தீங்கு அடைதல் இல்லாதவரா யிருப்பதால் அவர்களோடு ஒப்புமை சொல்லிய இவ்வறிவிலாதவன் தனக்குத் தீங்கு தேடிக் கொள்ளுதலால் அப்பயித்தியக் காரரினும் இவன் அறிவில் லாதவனுயிருக்கின்றான் என்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "மேற்கூறிய மூன்று திருக்குறள்களாலும் பகையின் திறமறியாது பகைகொள்ளுதலின் குற்றம் இதுவென்று

பொதுவாகவும், சிறப்பாகவும் தெரிந்து கொண்டோம். இனிப் பகைவரைத் திறமறிந்து நட்பாக்கிக் கொள்ளும் தகுதியையும் உணர்த்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

874. பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடையாளன்
றகைமைக்கட் டங்கிற் றுலகு.

(பரி.) இ-ள் பகை நட்பாகொண்டு ஒழுகும் பண்புடையாளன் தகைமைக்கண் = வேண்டியவழிப் பகையை வேறுபடுத்துத் தனக்கு நட்பாகச் செய்துகொண்டொழுகும் இயல்பினையுடைய அரசன் கூ பெருமையுள்ளே — தங்கிற்று உலகு = அடங்கிற்று இவ்வுலகு. எ-று.

வேண்டியவழியென்பது ஆக்கத்தான் வந்தது. வேறுபடுத்தல் = பகை நிலைமையினீக்குதல். ஒழுகல் = நீதிவழியொழுகல். பெருமை = பொருள், படையென இருவகைத்தாய ஆற்றல். அதன்வழித்தாதற்கு வஞ்ஞான்ற நிரிபின்மையின், அத்துணிவுபற்றித் 'தங்கிற்று' என்றார். (ச)

விளக்கம்:—தனக்கு வேண்டிய காலத்துத் தன் பகைவரிடத்தே தனக்கிருந்த பகையை மாறுபடும்படிச் செய்து, தனக்கு அவர்களை நட்பினராகச் செய்து கொள்ளக்கூடிய இயற்கை அறிவினையுடைய அரசன் ஒருவனது பெருமையாகிய வல்லமையினுள் இவ்வுலகம் அடங்கி உள்ளது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது? பகையை நட்பாக்கிக்கொள்ளும் காலம் வந்த காலத்து அறிவுடைய அரசன் ஒருவன் தனக்கு அவரிடத்து உள்ள பகையை நீக்கி நட்புக்கொண்டு அவர்க்கு வேண்டுவன யாவும் செய்து தானும் நீதியோடு நடப்பானையின் அவ்விதப் பொருளாலும் படையாலும் வல்லமை கொண்ட அவன் பெருமையுள் உலகத்தார் வாழ்வர். ஏனெனின்? இவ்விதப் அறிவும் ஆற்றலும் உடைய அரசன் ஒருவன் குடைக்கீழ் தங்கின் எக்காலத்தும் யாதொரு வேறுபாடும் இல்லாது வாழ்தல் கூடும் என்னும் துணிபால் அவன் குடை நிழலில் வாழ்வார்களென்று அறிந்தோமென்றனர். அது கேட்ட மாணாக்கர் "பகையை நட்பாக்கிக்கொள்ளும் குணமுடைய அரசனைக் குடிகள் மகிழ்வார்கள் என்று அறிந்தோம். அவ்விதம் பகைவரை நட்பாக்கிக் கொள்ளும் விதம் எது என்பதையும் அறிவித்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

875. தன்றுணை யின்றாற் பகையிரண்டாற் றானொருவ
னின்றுணையாக் கொள்கவற்றி னொன்று.

(பரி.) இ-ள். தன்றுணை இன்று=தனக்குதவுந் துணையோவெனின் இல்லை,—பகை இரண்டு=நலிவுசெய்யும் பகையோவெனின் இரண்டு,—ஒருவன் தான் அவற்றின் ஒன்று இன்றுணையாக கொள்க=அங்ஙனமாய் நின்ற வழி ஒருவனாகிய தான் அப்பகையிரண்டனுட் பொருந்தியதொன்றை அப்பொழுதைக்கு இனிய துணையாகச் செய்துகொள்க. எ-று.

பொருந்தியது=ஏனையதனை வேறற்கு ஏற்றது. அப்பொழுது=அவ்வெல்லும்பொழுது. திரிபின்றாகச் செய்து கொள்கவென்பார், 'இன்றுணையா' என்றார். ஆல்கள் அசை. இவை யிரண்டுபாட்டானும் நட்பாக்கற்பாலது கூறப்பட்டது. (௫)

விளக்கம் :—உலகத்தில் தனக்கு யாதொரு துணையுமில்லாமல் நிற்கின்ற ஒருவன் தன்னை இரண்டு பகைவர்கள் துன்பம் செய்ய வரும் காலத்துத் தன்னை எதிர்த்து வந்த பகைவர் இருவருள் தன்னோடு சேரக்கூடிய பொருத்தமாகிய பகை ஒன்றினை அப்போதைக்குத் தனக்கு இனிய துணையாகச் செய்துகொள்ளல் வேண்டும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், துணையில்லாத ஒருவன்மீது இருவர் பகைகொண்டு போர் செய்யத் தொடங்கிய காலத்து அது அறிந்த அவன் அறிவுடையவனாயிருப்பானாயின் எப்படையினைத் தன்னோடு உறவாக்கிக் கொண்டால் மற்றொரு பகைவனைச் சுலபமாக வென்று விடலாம் என்று அறிந்து ஒரு பகைவனைத் தனக்குத் துணையாக்கிக் கொள்ளல் வேண்டுமென்றும், அவ்விதம் துணையாக்கிக்கொள்வதால் மற்றொரு பகைவனை வெல்லுதற்கு எளிதாக இருக்குமென்றும் பகையை நட்பாக்கிக் கொள்ளும் உபாயத்தினைக் கூறுகின்றனர் என்று அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பகையை நட்பாக்குவது அறிந்தோம். ஆயின், பகைவரிடத்துப் பகையும் நட்பும் ஆகிய இரண்டு மல்லாது நொதுமல் என்னும் நடுவாக உள்ளதைக் கொள்ளுதலாகாதோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

876. தேறினுந் தேரு விடினு மழிவின்கட்
டேரான் பகாஅன் விடல்.

(பரி.) இ-ள். தேறினும் தேரு விடினும் = பகைவனே முன் தெளிந்தா னாயினும் தெளிந்திலனாயினும் — அழிவின்கண் தேரான் பகான் விடல் = தனக்குப் புறத்தொருவனேயாற் சூழ்வுவந்துழிக் கூடாது நீக்காது இடையே விட்டுவைக்க. எ-று.

முன் தெளிந்தானாயினும் அப்பொழுது கூடாதொழிகவென்றது, உள் ளாய்நின்று கெடுத்தலேக்கு. தெளிந்திலனாயினும் அப்பொழுது நீக்கா தொழிகவென்றது, அவ்வழிவிற்குத் துணையாதலேக்கு. இதனுள் மொதும லாக்கற்பாலது கூறப்பட்டது. (சு)

விளக்கம் :—அறிவுடையை அரசன் ஒருவன் தன் பகைவனை முன் அவன் தகுதி அறிந்தும் அறியாதும் இருந்தானாயினும் தனக் குத் தான் எடுத்த வேறொரு காரியத்தால் ஒரு தாழ்வு வருவதாக இருக்குமாயின் அவனோடு கூடாதும், அவனை நீக்கி வேறுபடுத்தா தும் நடுவாகவிட்டு வைத்தல் வேண்டும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், அறிவுடையான் ஒருவன் ஒருவனைத் தனக் குப் பகைவனென்று அறிந்திருக்கினும் தனக்குத் துணையில்லாத காலத்து அப்பகைவனைப் பகைத்துக் கொள்வானாயின் அவன் உள் ளுக்குள்ளாய் நின்று கெடுத்துவிடுவான் ஆதலால் அவனைப் பகை யென்று நீக்குதல் கூடாதென்றும், பகையென்று முன்னரே தெரி யாதவிடத்தும் பகைவன் தன்னோடு கூட வருவானாயின் அவனோடு கூடாதிருந்து அவனை நீக்காததுபோல் இருத்தல் வேண்டுமென் றும் அறிந்தோம். இவ்விதம் நட்பும் பகையுமில்லாத பகைவரை நொதுமலென்னும் நடுநிலையில் வைத்துக் கொண்டிருக்கின், தனக் குத் துணையில்லாத காலத்துத் துன்பமற்று இருத்தல் கூடுமென் றும், துணை வந்த காலத்துப் பகையைத் தீர்த்துக் கொள்ளலா மென்றும் அறிந்தோ மென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பகை வனிடத்து நொதுமலன்போல் உள்ள செயல்களை அறிந்து கொண்டோம். இனி, பகைவரிடத்தும் நட்பினரிடத்தும் செய்ய வேண்டுவது எவை என்பதையும் அறிவித்தல் வேண்டும்" என்ன லும், ஆசிரியர் கூறுவாராயினர்.

877. நோவற்ப நொந்த தறியார்க்கு மேவற்க மென்மை பகைவ ரகத்து.

(பரி.) இ-ள். நொந்தது அறியார்க்கு நோவற்க=நொந்ததனைத் தாமாக வறியாத நட்டார்க்குத் தன்னோவு சொல்லற்க;—மென்மை பகைவ ரகத்து மேவற்க=வலியின்மை பார்த்திருகும் பகைவர்மாட்டு அவ்வலியின் மையை மேலிட்டுக கொள்ளற்க. எ-று.

நோவென்னும் முதனிலைத்தொழிற்பெயர் ணண்டு அது சொல்லுதற்க ணுயிற்று. பகைவர்கட் டவிர்வது கூறுவார், நட்டார்கட் டவிர்வதும் உடன் கூறினர். இதனால் அவ்விருபகுதிக்கண்ணுஞ் செய்வது கூறப்பட்டது. (எ)

விளக்கம் :—அறிவுடையான் ஒருவன் தனக்கு வந்த துன்பத் தினைத் தன்னுடைய நட்பினர் தாமாகவே அறிந்துகொள்ளாத காலத்துத் தானேசென்று தன் நட்பினர்க்குத் தனக்கு வந்த துன் பத்தைச் சொல்லுதல் கூடாதென்றும், தனக்கு எக்காலத்து வலிமை ஓடுங்கும் என்று எதிர்பார்த்திருக்கும் பகைவரிடத்து அவ் வலி இல்லாமையை அவர்மாட்டுத் தெரிவித்துக்கொள்ளாதிருத்தல் வேண்டுமென்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, 'தோழனேடும ஏழமை பேசேல்' என்ற வாக்கியத்தின்படி நட்பி னனுயினும் அவன் தன்னுடைய துன்பத்தை அறிந்துகொண்டு வினவுவதற்கு முன் தன்னுடைய துன்பத்தை அவனிடம் சொல்லிக் கொள்ளுவானுயின் தன்னிடத்திருந்த மதிப்பு அவனுக்குக் குறை ந்துவிடுமாதலால் அவ்விதம் போய்ச் சொல்லிக் கொள்ளுதல் கூடாதென்றும், பகைவனுனவன் எப்போது தன் பகைவனுக்கு வலிமை குறையும் என்றும், அவ்விதம் குறைந்த காலத்து மேல் சென்று தாக்குவோம் என்றும் இருக்கும் காலத்துத் தானே சென்று தனக்குள்ள வலிமைக் குறைவினை அவன் தெரிந்துகொள் ளச் செய்வானுயின் அச்சமயம் அறிந்து அவன் சுலபமாக வந்து விடுவான் ஆதலால் தனக்கு உள்ள பலமில்லாமையைப் பகைவர் அறியும்படிச் செய்தல் கூடாது என்றும், நட்பினரிடத் துச் செய்ய வேண்டுவதையும், பகைவரிடத்துச் செய்யவேண்டுவ தையும் இரண்டையும் ஒன்றுகக் கூறிவிட்டனர் என்று அறிந் தோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "நட்பினர் பகைவ

ராகிய இருவரிடத்தும் செய்யவேண்டுவன இவையென்று அறிந்தோம். அறிவுடைய ஒருவன் எவ்வித தகுதியோடு இருந்து தன் பகைவர் செருக்கை அடக்குதல் வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

878. வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும பகைவர்கட் பட்ட செருக்கு.

(பரி.) இ-ள். வகை அறிந்து தற்செய்து தற்காப்ப=தான் வினைசெய்யும் வகையை அறிந்து அது முடித்தற்கேற்பத் தன்னைப் பெருக்கி மறவி புகாமற் றனைக்காக்கவே,—பகைவர்கண் பட்ட செருக்கு மாயும்=தன் பகைவர் மாட்டுளதாய களிப்புக் கெடும். எ-று.

வகை=வலியனுய்த் தானெதிரே பொருமாறும், மெலியனுயவனவிற் போர் விலக்குமாறும் முதலாயின. பெருக்கல்=பொருள் படைகளாற் பெருகச்செய்தல். களிப்பு=இவற்றுன் வேறுமென்றெண்ணி மகிழ்ந்திருத்தல். இவ்விறுகுதலறிந்து தாமே அடங்குவரென்பதாம். இதனுற் கூறுதற்பால தன்கட் செய்வன கூறப்பட்டது. (அ)

விளக்கம் :—அறிவுடைய அரசன் ஒருவன் தான் செய்ய வேண்டிய தொழிலையும் அத்தொழிலின் வகையினையும் நன்றாக அறிந்து அத்தொழிலினை முடித்தற்குக் கூடிய அளவாகத் தன்னை செல்வத்தால் பெருக்கி மறதி என்பதே உண்டாகாமல் காத்துக் கொள்ளுவானுயின், அவனுடைய பகைவர்கொண்டிருந்த மகிழ்ச்சியானது மாய்ந்து கெட்டுப் போய்விடும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அது என்னையோ வெனின்? மேற்கூறிய அளவுகளே தன் வலியும, மாற்றுன் வலியும், துணைவலியும் ஆகிய வலிமைகளெல்லாம் முன்னர் தெரிந்து பின்னர் தான் எடுத்த காரியத்தின் தொழிலின் தன்மையை நன்றாக அறிந்து, அது செய்யும் விதத்தையும் நன்றாகத் தெரிந்து அதைமுடித்தற்கு உரிய உபாயங்களுள் தன்னை அதிகமாக்குவதற்குப் பொருள் படை முதலிய செல்வங்களையும் ஆக்கிக் கொண்டு பிறகு எடுத்த காரியத்தைச் சிறிதும் மறதி என்பதே இல்லாமல் செய்து இவ்வழியால் தன்னைக் காத்துக் கொள்ளுவானுயின், அவ்வித அறிவுடைய ஒருவனைக் கண்ட அவன் பகைவர் தாம் கொண்டிருந்த மகிழ்ச்சியினின்றும் மாறு

படுவர். அதாவது, தான் எடுத்த தொழிலில் தான் வல்லவனுக இருந்தால் தானே சென்று யுத்தம் செய்வதும், தன்னிலும் பகை வன் வலியனுயிருப்பானுயின் அவனிடத்துப் போர் செய்யாது விலக்கிக் கொள்ளுதலும் ஆகிய இவற்றினை அறிந்து ஒருவன் செய்வானுயின், அதனை அறிந்த பகைவர் இவ்விதத் தகுதி யுடை யானை வெல்லுதல் கூடாது என்று தாமே அறிந்து அடங்கிவிடு வர் என்று அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணுக்கர், "பகை வரை அடக்கும் விதம் இதுவென அறிந்தோம். ஆயின், எக்கா லத்துப் பகைவரை அடக்கிவிடுவது சுலபமாக இருக்கும் என்பதை யும் விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

879. இளதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து.

(பரி.) இ-ள். முள் மரம் இளதாகக் கொல்க = களையவேண்டுவதாய முண் மரத்தை இளதாய நிலைமைக்கட் களைக ;—காழ்த்தவிடத்துக் களையு நர் கைகொல்லும் = அன்றியே முதிர்ந்த நிலைமைக்கட் களையலுறிற் களைவார் கையினை அதுதான் களையும். எ-று.

களையப்படுவதாய தம்பகையை அது மெலிதாய காலத்தே களைக: அன் றியே வலிதாயகாலத்துக் களையலுறிற் றம்மை அதுதான் களையுமென்பது தோன்ற நின்றமையின், இது பிறிதுமொழிதல். இதனுற் களையும்பருவங் கூறப்பட்டது. (கூ)

விளக்கம் :—ஒழித்துவிட வேண்டுவதாகிய முள்ளோடு கூடிய மரங்களை அவற்றின் இளமைப் பருவத்திலேயே ஒழித்துவிடுதல் வேண்டும் என்றும், அவ்விதம் செய்யாது அம்முள் மரங்கள் முற்றி வயிரம் கொண்ட விடத்து அவற்றை ஒழிக்கப் புகுந்தால் வெட்டப் போகின்றவர் கையை அவை வெட்டிவிடும் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, நகத்தால் கிள்ளி விடும் செடி ஒன்றினை மரமாகவிடின் பிறகு கோடாலி (கோடரி) கொண்டு வெட்டுதல் வேண்டும் என்னும் பழமொழிப்படி மனி தர்க்கு இடையூறு செய்யும் முள்ளோடு கூடிய மரங்களை அவை தோன்றும் போதே அழித்து விடுவது வெகு சுலபமாக இருக்கவும் அவ்விதம் செய்யாது அவை முதிர்ந்து வயிரம் அடைந்த காலத்து அவற்

றைக்கொள்ளப் புகின் கலங்கின்றவர் கைகளில் காயம் முதலியவைகள் உண்டாகித் துன்பப்படுவதுபோல், பகைவரானவரை அவர் மெலிய ராயிருக்குங் காலத்தேயே கலி எடுக்க ஒட்டாமல் தடுத்தல் வேண்டு மென்றும், அவ்விதம் அல்லாது அவர்கள் பொருள், படை முதலிய ஆற்றல்களைக் கொண்ட பிறகு அவரை அழிக்கப்புகின் மிகுதியும் துன்பம் கொடுத்து அழிக்கச் சென்ற அரசன் உயிர்க்கும் இறுதி யைத் தருமென்றும் அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக் கர், "பகைவரை ஒழிக்கும் பருவம் இதுவென்று அறிந்தோம். இனி அவ்விதம் இளமையிலேயும், வயிரம் கொண்ட விடத்தும் பகைவரைக் கலையாதுவிடின் எதுவாகும் என்பதையும் அறிவித்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

880 உயிர்ப்ப வுளரல்லர் மன்ற செயிர்ப்பவர் செம்மல் சிதைக்கலா தார்.

(பரி.) இ-ள். செயிர்ப்பவர் செம்மல் சிதைக்கலாதார்=தம்மொடு பகைப்பாரது தருக்கினைக் கெடுகலாராயிருக்க இகழ்ச்சியான் அது செய்யாத வரசர்—உயிர்ப்ப வுளரல்லர் மன்ற=பின் உயிர்க்குமாத்திரத்திற்கும் உள ரல்லர் ஒருதலையாக. எ-று.

அவர் வலியராய்த் தம்மைக் கலைதல் ஒருதலையாகலின், இறந்தாரேயாவ ரென்பதாம். அவருயிர்த்த துணையானே சாமிறப்பரெனினு மமையும். இத னைக் கலையாவழிப் படுமிழுக்குக் கூறப்பட்டது. (ம)

விளக்கம் :—அரசர் தம்முடன் பகைப்போருடைய கர்வத் தைக் கெடுக்க வேண்டி இருக்கவும் அவர் மெலியர் என்கின்ற அவ மதிப்பால் அவரைக் கெடுக்காது இருப்பாராயின், பின்னர் அவ்வி தம் அவமதிப்பாய் இருந்த அரசராகிய அவர் ஒரு மூச்சுவிடுமள வும் நிச்சயமாகப் பிழைத்திருப்பார் என்று சொல்லுவதற்கில்லை என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, பகைவர் பல மற்ற காலத்து அவரை அவமதித்து அவர் கர்வத்தை அடக்காது இருந்த அரசன் ஒருவன் அப்பகைவர் பொருள், படை முதலிய வலிமைகளை எல்லாம் அடைந்த பிறகு தான் போருக்குச் செல்லாவிடினும் அவர்கள் இவன்மீது போர்கொண்டுவந்து இவனைத் தொலைத்து விடுவார்கள் என்பதாக அறிந்தோமென்ற

னர். அதுகேட்ட மாணக்கர், "பகைவரைப் பருவம கண்டு அடக்காத அரசனுக்கு வரும் குற்ற மிதுவென்று அறிக்தோம். இனி, இவ்வெருளியால் வரும் ஏனைய அதிகாரங்களையும் விளக்கல்வேண்டும்." என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்

---

89. அதிகாரம்.

உட்பகை.

(பரி.) *அஃதாவது புறப்பகைக்கு இடனுக்கிக் கொடுத்து அது வெல்லுந் துணையும் உள்ளாய்நிற்கும் பகை. இதுவும், களையப்படுவதன் பாலதாகலின், பகைத்திறந் தெரிதலின்பின் வைக்கப்பட்ட து.*

விளக்கம்:—அதாவது பகைவரென்று தம்மை வெளிப்படையாகத் தெரிவித்துக்கொண்டு பகை கொண்டிருக்கும் புறப்பகைவர்க்கு வெல்லுவதற்கு ஏற்ற உபாயங்களை எல்லாம் செய்துக் கொடுத்து அப்புறப்பகைவர் போர்செய்து வெற்றிகொள்ளும் வரையும் தாம் உள்ளாய் நின்று பகை சாதிக்கின்ற பகைவர் கொள்ளுகின்ற பகையே உட்பகையென்பதாம். இவ்வித உட்பகைவரைப் புறப்பகைவரைக் களைவதற்குமுன் களைந்துவிட வேண்டுமாதலால், பகைத்திறந்தெரிதல் என்னும் அதிகாரத்துக்குப் பிறகு இது வைக்கப்பட்டுள்ளது என்றனர். அதுகேட்ட மாணக்கர், "இவ்வித உட்பகைவரென்பார் ஒருவனுக்குச்சுற்றத்தவராகஇருப்பரோ? அல்லது சுற்றமல்லாதவர்களாக இருப்பரோ ? சுற்றத்தவராயினும் அவரும் உட்பகை கொள்வதுண்டோ? அவ்விதம் அவர் கொள்ளுவராயின் அவ்வுட்பகை எவ்வித தகுதியோடு இருக்கும் ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

881. நிழனீரு மின்னுத வின்னு தமர்நீரு மின்னுவா மின்னு செயின்.

(பரி.) இ-ள். நிழல் நீரும் இன்னுத இன்னு=ஒருவனுக்கு அனுபவிக்க வேண்டுவனவாய நிழலும் நீரும் முன் இனியவேனும் பின் நோய்செய்வன இன்னுவாம் ;—தமர் நீரும் இன்னுசெயின் இன்னுமாம்=அதுபோலத்தமுவ

வேண்டுவனவாய தமரியல்புகளும் முன் இனியவேனும் பின் இன்னுசெய்வன இன்னாமம். எ-று.

நோய்=பெருங்கால், பெருவயிறு முதலாயின. தமரென்றதனால் உட் பகையாதற்குரியாராய ஞாதியொன்ப தறிக. இன்னுசெயல் முன் வெளிப் படாமைநின்று தூணேபெற்றவழிக் கெடுத்தல். (சு)

விளக்கம் :—ஒருவனுக்கு இயல்பாகவே அனுபவிக்கக் கூடிய நிழலும் நீரும் அனுபவிக்கும் காலத்து முதலில் மிகுதியும் இனிமையுடையனபோல் இருந்து பின்னர் கோய் செய்யுமாயின், அவ்வித நிழலும் நீரும் எவ்விதம் துன்பமாமோ அதுபோலவே, தழுவி வாழவேண்டியவர்களாகிய சுற்றத்தவர்கள் இயல்பாய் முன்னர் இனியவராகக் காணப்பட்டுப் பின்னர் துன்பந்தருப வராக இருப்பாராயின் அவ்வியல்புகள் துன்பமுடையனவாகும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், உண்ணுகின்ற ஜலம் உண்ணுங்காலத்துத் தாகவிடாயைத் தணிப்பதாயினும், மரத்தின் நிழலில் இருக்குங்காலத்து அம்மரத்தின் நிழல் முதலில் நிழல் தருவதாயினும், பின்னர் உண்ட ஜலத்தினது இயற்கைக்குத் தகுந்த விதமாகவும், நிழல் தந்த மரத்தினது இயற்கைக்குத்தகுந்த அளவாகவும் பெருங்கால் என்னும் ஆணக்காலும், பெருவயிறு என் னும் மகோதரமும் உண்டு அனுபவித்தவனுக்கு உண்டாவதுபோல், உள்ளே பகைகொண்டு வெளியே சுற்றத்தவரைப்போல் நடித்து நிற்கின்ற சுற்றத்தவரும் வெளிப்படைக்கு மிகுதியும் நன்மையை விரும்புகின்றவர்போல் நடித்துக்காட்டிப் பின்னர் பகைவரோடு கூடிக் கெடுக்கும் உட்பகை யாவர் என்று அறிந்தோ மென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் சமயம் வரும்வரையில் தம் மூடைய பகையை வெளிப்படுத்தாதி சமயம் வந்தகாலத்து கெடுக் கின்ற சுற்றத்தவரை உட்பகையென்று அறிந்து கொண்டோம். இனி, அவ்வித சுற்றத்தவரைப் பகைவராகவே கொள்ளுதல் வேண்டுமன்றே?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

882. வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

(பரி.) இ-ள். வாள்போல் பகைவரை அஞ்சற்க=வாள்போல் எறிது மென்று வெளிப்பட்டுநிற்கும் பகைவர் பகையினை அஞ்சாதொழிக; கேள்

போல் பகைவர் தொடர்பு அஞ்சுக = அங்ஙனம் நில்லாது கேள்போல மறைந்துநிற்கும் பகைவர் நட்பினை அஞ்சுக. எ-று.

பகைவர் — ஆகுபெயர். முன்னேயறிந்து காக்கப்படுதலான் "அஞ்சற்க" வேண்டும், அங்ஙனம் அறியவும் காக்கவும்படாமையிற் கெடுதல் ஒருதலையென் பதுபற்றி 'அஞ்சுக' என்றுங் கூறினர். பின்செய்யும் பகையினுங் கொடிதாக லானும், காக்கலாகாததாகலானும், அஞ்சப்படுவது முன்செய்த அவர்தொ டர்பாயிற்று இவை யிரண்டுபாட்டானும் உட்பகை யாகாதென்பது கூறப் பட்டது. (உ)

விளக்கம்:—வெட்டுகின்ற வாளினைக் கைக்கொண்டு வெட்டி விடுவோம் என்று வெளிப்படையாக எதிர் நின்று பகைக்கும் பகை வரை அஞ்சுதல்வேண்டாமென்றும், அவ்விதம் வெளிப்படையாக நில்லாமல் சுற்றத்தவர்போல்நடித்துக்காட்டி உள்ளேபகைகொண்டு நிற்கும் பகைவருடைய நட்பினை அஞ்சுதல் வேண்டுமென்றும் இத் திருக்குறள் கூறுகின்றது இதனால், பகைவராயினர் பகைவரென்று வெளிப்படையாக நிற்கின்றமையின் அவர் தீங்கு செய்யாவண்ணம் தம்மைக் காத்துக்கொள்ளுதல் கூடுமாதலால் அவ்வித வெளிப் படையான பகைவர்க்கு அஞ்சுதல்வேண்டாமென்றும், ஆயின் சுற் றத்தவர் உட்பகைவராகி நட்பினர்போல நடிக்கின்றமையால் அவர் பகையைக் கண்டு தம்மைக் காத்துக்கொள்ளும் வண்ணம் செய்து கொள்வது கூடாமையாகுமென்றும, ஆதலால் அவ்வுட்பகைவர்க்கு மிகுதியும் பயப்படுதல் வேண்டுமென்றும அறிக்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "உட்பகையாயுள்ள சுற்றத்தவரது நட்பு ஒருவனுக்குக் கூடாது என்றும், அவர் பகைவரைக்காட்டிலும் பகைவர் என்றும் அறிந்தோம். இவ்விதம் உட்பகையாயினர் நம்பி யவர்தனக் கெடுப்பது எவ்விதமாயிருக்கும் என்பதை ஒரு உவமை வாயிலாக அறிவித்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவா ராயினர்.

883. உட்பகை யஞ்சித்தற் காக்க வுலைவிடத்து மட்பகையின் மாணத் தெறும்.

(பரி.) இ-ள். உட்பகை அஞ்சித் தற்காக்க = உட்பகையாயினரை யஞ்சித்தன்னைக் காத்துக் கொண்டொழுகுக; — உலைவிடத்து மட்பகை

யின் மாணத்தெறும்=அங்ஙன மொழுகாதவழித் தனக்கோர் தளர்ச்சி வந்த விடத்துக் குயவன் மட்கலத்தை யறுக்குங் கருவிபோல அவர் தப்பாமற் கெடுப்பர். எ.று.

காத்தல்=அவரணையாமலும் அவர்க்குடம்படாமலும் பரிகரித்தல். மண்ணைப் பகுக்குங் கருவி மட்பகையெனப்பட்டது. பகைமை தோன்ற மல் உள்ளாயிருந்தே சீழறுத்தலின், கெடுதல் தப்பாதென்பதாம். (கூ)

விளக்கம்:—சுற்றத்தவர்போல் இருந்து உட்பகைவராகத் தன்னைக்கெடுக்க முயற்சிக்கும் பகைவரினின்றும் தன்னைக் காத்துக் கொள்ளுதல் வேண்டுமென்றும், அவ்விதம் காத்துக்கொள்ளாவிடின் தனக்கு ஓர் தளர்வு வந்த காலத்தே குயவன் செய்கிற மட்பாண்டத்தை அறுக்கும் கருவியாகிய பலகைபோல் அப் பகைவர் தப்பாமல் கெடுத்து விடுவர் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால் குயவன் தான் மட் பாண்டத்தைச் செய்யுங்காலத்து அது செய்து முடிந்தவுடன் அதை அறுப்பதற்குத் தன்னிடம் உள்ள மரத்தாலாகிய ஒரு சிறு பலகை போன்ற கருவியை அப்பாண்டத்தைச் செய்யும் வரையும் அமைதியாக வைத்து இருந்து பின்னர் அறுக்கவேண்டிய சமயத்து அம் மட்கலத்துள் வைத்தும் அவ்விதம் வைத்ததும் பிறர் கண்ணுக்குப் புலப்படாமல் வைத்த தனக்கே தெரியும்படி அறுத்து விடுவதுபோல், உட்பகையாயினரும் வெளிப்பகையாகிய பகைவர் அழிப்பதற்கு வேண்டுவன வெல்லாம் செய்கின்ற காலத்தே ஒருவருக்கும் தெரியாமல் அவரோடிருந்து அழித்து நின்றும் அழிந்த பிறகு தாமும் வெளிப்படையாகப் பகைவரென்று தோன்றுவர் என்பது அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "குயவன் மட்கலத்தை அறுக்கும் கருவி அவன் அறியும்படி மாத்திரம் அவன் கைக்குள்ளிருந்து மட்கலத்திற்கு நோகாவண்ணம் அறுத்து விடுவதுபோல், உட்பகைவரும் தம் உதவி கொள்ளும் பகைவர் மாத்திரம் அறியும் வண்ணம் அவர்க்கு உடனுயிருந்து வேறு ஒருவர் அறியாவண்ணம் தம்மை மறைத்துக்கொண்டு அழித்துவிடுவர். அவ்விதம் அறுப்பதால் சுற்றத்தவர் என்றெண்ணி இருந்தவர் தப்பாமல் கெடுவர் என்பது அறிந்தோம். இனி, இவ்வித உட்பகைவர் அரசன் ஒருவனுக்கு இருப்பாராயின், அவ்

வரசனுக்கு அவர் உள்ளவரையில் தீமையாக இருக்குமன்றோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

884. மனமாணா வுட்பகை தோன்றி னினமாணா
வேதம் பலவுந் தரும்.

(பரி.) இ-ள். மனம் மாணா உட்பகை தோன்றின்=புறந்திருந்தியது போன்று அகந்திருந்தாத உட்பகை அரசனுக்கு உண்டாவதாயின்,—இனம் மாணா ஏதம் பலவும் தரும்=அஃது அவனுக்குச் சுற்றம் வயமாகாமைக்கேது வாகிய குற்றம் பலவற்றையுங் கொடுக்கும். எ-று.

அவை சுற்றத்தாரை உள்ளாய்நின்று வேறுபடுத்தலும், அதனால் அவர் வேறுபட்டவழித் தான்றேறாமையும், பின் அவற்றான் விளைவனவுமாம். (ச)

விளக்கம்:—அரசன் ஒருவனுக்குப் புறத்தில் அன்புடையவர் போன்று இருந்து மனத்துள் அன்பு பொருந்தாத உட்பகை உண்டாவதாயின், அவ்வித உட்பகையை அடைந்த அவ்வரசனுக்கு அவன் சுற்றத்தார் அவனோடு பொருந்தாது வேறுபடுதற்குக் காரணமாகிய பல குற்றங்களும் உண்டாகும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், வெளியில் நட்பும் மனத்துள் பகையும் கொண்ட உட்பகைவர் ஒரு அரசனுக்கு இருப்பாராயின், அப்பகைவர் அவ்வரசனது சுற்றத்தவர் முதலியவரை உள்ளாகவே நின்று அவ்வரசனைவிட்டுப் பிரித்துவிடுவரென்றும், அவ்வாறு பிரித்து விட்டகாலத்து அச்சுற்றத்தவரால் பல தீங்குகள் நேருமென்றும் அறிந்தோம். ஆதலால் உட்பகைவர் இனத்தவரையும பிரிப்பர் என்றறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வித உட்பகைவர் சுற்றத்தவரைப் பிரிப்பதால் அரசனுக்கு எவ்வித குற்றங்கள் நேரும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

885. உறன்முறையா னுட்பகை தோன்றி னிறன்முறை
னேதம் பலவுந் தரும். [யா

(பரி.) இ-ள். உறல் முறையான் உட்பகை தோன்றின்=புறத்து உறவு முறைத்தன்மையோடு கூடிய உட்பகை அரசனுக்கு உண்டாவதாயின்,—இறல் முறையான் ஏதம் பலவும் தரும்=அஃது அவனுக்கு இறத்தன் முறையோடு கூடிய குற்றம் பலவற்றையுங் கொடுக்கும். எ-று.

அவை புறப்பகைத் துணையாய் நின்றே அது தோன்றுமற் கோறன்முத லிய வஞ்சனை செய்தலும், அமைச்சர் முதலிய உறுப்புக்களைத் தேய்த்தலும் முதலாயின. (இ)

விளக்கம்:— வெளியே உறவு முறை கொண்டு தன்னோடு கூடிய உட்பகை அரசனுக்கு உண்டாகுமானால், அவ்வுட்பகையால் அவ்வரசனுக்கு இறந்து போகக்கூடிய நிலைமையோடு பல குற்றங் களும் உண்டாகும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதா வது, உள்ளே பகையும், வெளியே உறவுங்கொண்ட உட்பகைவர் புறப்பகைவராயிருக்கின்ற பகைவர்களுக்குத் துணையாக இருந்து கொண்டே தாம் கொண்ட உட்பகை தோன்றுமிதம் அரசனைக் கொல்லுவதற்கேற்ற வஞ்சனையாகிய செயலைச் செய்தலும் அவ்வரசனுக்கு உறுப்புக்களாகிய அமைச்சர் முதலாயினவரைப் பிரிந்து விடும்படிச் செய்தலும் ஆகிய குற்றங்களையெல்லாம் உண் டாக்குவர் என்றறிந்தோம என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "அரசன் ஒருவன் மிகுதியும் ஆற்றல் உடையவனாயின், அவனுக்கு எவ்விதம் இவ்வித தீங்குகள் நேரும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

886. ஒன்றுமை யொன்றியார் கட்படி னெஞ்ஞான்றும் பொன்றுமை பொன்ற லரிது.

(பரி.) இ-ள். ஒன்றுமை ஒன்றியார்கண் படின்=பகைமை தனக் குள்ளாயினர் மாட்டே பிறக்குமாயின், —பொன்றுமை ஒன்றல் எஞ்ஞான் றும் அரிது=அரசனுக்கு இறவாமை கூடுதல் எஞ்ஞான்று மரிது. எ-று.

பொருள் படை முதலிய உறுப்புக்களாற் பெரியனாய காலத்து மென் பார், 'எஞ்ஞான்றும்' என்றார். இவை நான்குபாட்டானும் அதனற் றனக்கு வருந்தீங்கு கூறப்பட்டது. (ஈ)

விளக்கம்:— அரசன் ஒருவனுக்குத் தன்னிடத்து உள்ளவர் களாலேயே பகை தோன்றுமாயின், அவ்வித பகை கொண்ட அர சனுக்கு எக்காலத்தும் இறவாதிருப்போம் என்று எண்ணுதல் கூடாது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், பொருள் படை முதலிய உறுப்புக்களால் மிகுதியும் வலிமை யுடையவனாயி

னும், அவ்வித வலிமைகளால் தன்னைக் காத்துக்கொள்ள முடியாமல் உட்பகைவர் செய்யும் வஞ்சகங்களால் இறந்துவிடுதலே வேண்டும் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "மேற் கூறிய நான்கு திருக்குறள்களாலும் அரசனுக்கு உட்பகையாய் வரும் கேடுகள் இவையென அறிந்தோம். ஆயின், உட்பகை கொண்டார் நட்புகொள்ளுங் காலத்து எவ்விதமாக ஒழுகுவர் என் பதை ஓர் உவமை வாயிலாக விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

887. செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே
யுட்பகை யுற்ற குடி.

(பரி.) இ-ள். செப்பின் புணர்ச்சிபோல் கூடினும்=செப்பினது புணர்ச் சிபோலப் புறத்து வேற்றுமை தெரியாமற் கூடினராயினும்,—உட்பகை உற்ற குடி கூடாது=உட்பகை உணடாயகுடியிலுள்ளார் அகத்துத் தம்முட்கூடார்.

செப்பின துபுணர்ச்சி=செப்பு மூடியோடு புணர்ந்த புணர்ச்சி. உட் பகையான் மனம் வேறுபட்டமையிற் புறப்பகை பெற்றழி வீற்றுவீற்றுவ ரென்பதாம். குடிகூடா தென்பதனை நாடு வந்ததென்பதுபோலக் கொள்க. உட்பகை தானுற்ற குடியோடு கூடாதென்றும், உட்பகை யுண்டாயகுடி அப் பகையோடு கூடாதென்றும் உரைப்பாரு முளர். (எ)

விளக்கம்:— செப்பு என்னும் செப்புப் பாத்திரத்தின் மூடி யானது எவ்விதம் ஒன்றுகத் திருகி உள்ள காலத்து வேற்றுமை தோன்றாது உள்ளதோ, அதுபோல உட்பகையானவர் வெளியே வேற்றுமை தோன்றுமல்கூடி இருப்பாரென்றும், ஆயின், அச்செப் பினது மூடி முதலியவைகளைக் கழற்றிப் பிரிக்கின்றகாலத்து அது வேறுவேறுகக் காணப்படுவதுபோல் முதலிலிருந்து உள்ளே பகைமை கொண்டு வஞ்சித்து நிற்கும் உட்பகை கொண்ட உறவினரும், புறப் பகை வந்து அடைந்த காலத்து அதனோடு சேர்ந்து எவ்வளவு வேறு பாடுகளைத் தெரிவித்தல் வேண்டுமோ, அவ்வளவையும் தெரிவிப்பர் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், கொல் லன் ஒருவன் செய்த செப்புப் பாத்திரம் பல உறுப்புக்களாக இருந்து பூட்டப்பட்டிருக்கும் காலத்து ஒன்றே என்று காணப் படினும், வேண்டிய காலத்து அதைக் கழற்றுகின்றவரைக் கொண்டு

கழறறினால எவவிதம வேறுபடுகிறதோ அதுபோல், உட்பகை வரும காம பொருநதிய இனததவரோடு பிரிக்கப்படாத இன முடையவா போன்று தம நடிபபால பொருநதியிருந்தாலும் அப் பாததிரததைக கழறற வேண்டியவர்கள கழற்றுகின்ற காலத்தே அவா இசசையின வழியே இருநது கழலுவதுடன் அப்பாததிரத தில் உளளவைகளையும அவா கொள்ளுமபடி உதவியாயிருப்பது போல், புறபபகைவா வநதகாலத்து அவர் மனத்திற்கு இசைநது நடநது இதுகாறும கூடி இருநத அரசனிடத்து உள்ள எல்லா மென் மைகளையும, வன்மைகளையும பகைவாக்கு அறிவிததுத் தீங்குநேரும் படிச செய்வர் என்று அறிநதோமென்றனர். அதுகேட்ட மாணாக் கர், "இவவுவமையால உடபகைவா உள்ளிருக்குங் காலததுப் பொருநதி ஒழுகும புணாசசியின தனமையும், அவர் பிரிகின்ற காலதது வேறுபடுகின்ற பிரிவின தன்மையும, அவறறால் புறப் பகைவாககு உணடாகும நன்மைகளும, அவ்வுட்பகை கொண்ட அரசனுககு உண்டாகும தீமைகளும இவையென நன்றாக உணர்ந தோம இனி, உடபகைகொண்ட குடியானது கெட்டுப்போய் விடுவது எவவிதம எனபதையும ஓர உவமை வாயிலாக விளக்கல வேண்டும" எனனலும, ஆசிரியா கூறுவாராயினர்.

888. அரம்பொருத பொன்போலத் தேயு முரம்பொரு துட்பகை யுற்ற குடி.

(பரி.) இ ள். உட்பகை உற்றகுடி=முன வளாநதுவநததாயினும உட் பகை யுணடாயகுடி—அரம பொருத பொனபோலப் பொருது உரம் தேயும=அரததாற பொரபபட்ட இருமபுபோல அதனாற் பொரப்பட்டு வலி தேயும. எ-று.

பொருதெனனுஞ செயபபாட்டுவினையெசசம தேயுமென்னும் வினை கொணடது. அஃது உரதகின றொழிலாயினுங குடிமே லேற்றுதலின், வினைமுதல வினையாயிறறு காரியஞசெயவதுபோன்று பொருந்தி மெல்ல மெலலப பிரிவிததலான, வலிதேயநதுவிடுமென்பதாம. இவை யிரண்டுபாட் டானும அவன குடிககு வருந தீங்கு கூறப்பட்டது (அ)

விளக்கம் —முதலில வளாசசி பெறறுவநத குடியொன்று உட் பகையை யடையுமாயின, இருமபு ஒனறு அரத்தால அராவப்படு

கின்ற காலத்து அவ்வரத்தினுல் அராவப்பட்டு எவ்விதம் வலிமை தேய்ந்து போமோ அதுபோல் தேய்ந்துபோம என்று இக்குறள் கூறுகின்றது. இதனுல், இரும்பால் செய்யப்பட்ட பொருளொன்றிற்குக் கொல்லன் தனது கை வல்லமைக்குத் தக்க அளவாக முதலில் ஓர் உருவத்தை அமைக்கினும், அவ்விரும்பினையே பின்னர் தேய்க்க எண்ணிய வழி ஓர் அரத்தைக்கொண்டு தேய்ப்பானுயின் அவ்வரமானது அவ்விரும்பின் வலியைச் சிறிது சிறிதாகத் தேய்த்து அதன் உருவத்தையும், வலிமையையும் குறைத்து விடுவதுபோல், உட்பகைவரும் புறப்பகைவராகிய கொல்லரோடு கூடி அவர் கை அரம் போலாகிச் சிறிது சிறிதாக உட்பகைகொண்ட குடியில் உள்ளாரைத் தேயும்படிச்செய்து அவர் உருவமாகிய புகழையும் அவர் வலிமையாகிய பொருள், படைகளையும் இழக்கும்படிச் செய்வர் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "மேல் இரண்டு திருக்குறள்களாலும் உட்பகை உடைய ஒருவனது குடிக்கு வரும் தீங்குகள் இவையென அறிந்தோம். இனி, அவ்வுட்பகை மிகச் சிறியதோர் பகையாயிருக்குமாயின், அப்பகையும் இவ்விதத் தீங்கினைச் செய்தல் கூடுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

889. எட்பக வன்ன சிறுமைத்தே யாயினு
மூட்பகை யுள்ளதங் கேடு.

(பரி.) இ-ள். உட்பகை எட்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்=அரசனது உட்பகை அவன் பெருமையை நோக்க எள்ளின்பிளவை யொத்த சிறுமையுடைத்தேயாயினும்,—கேடு உள்ளதாம்=பெருமையெல்லாம் அழிய வருங்கேடு அதனகத்ததாம். எ-று.

எத்துணையும பெரிதாயகேடு தனக்கெல்லைவருந்துணையும் எத்துணையுஞ் சிறிதாய உட்பகையுள்ளே யடங்கியிருந்து, வந்தால் வெளிப்பட்டுநிற்குமென்பதாம். இதனுல் அது சிறிதென்று இகழப்படாதென்பது கூறப்பட்டது. (கு)

விளக்கம் :—அரசனுடைய உட்பகையானது அவனுக்கு உள்ள பெருமையை நோக்குகின்ற காலத்தே ஒரு எள்ளினுடைய பிளவு எவ்வளவு அளவோ அவ்வளவு சிறியதாயிருக்கினும், அவனுக்கு உள்ள பெருமையை எல்லாம் அழிக்கக்கூடிய கெடுதியா

னது அவ்வுட்பகையினுள் உண்டாகும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், உட்பகையானது எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அது புறப்பகைவர் வந்து பெரிதாகிய கேடுகளை ஒருவனுக்குச் செய்யும்வரையும் உள்ளேயே அடங்கியிருந்து பின்னர் அது பெரிதாக வெளிப்பட்டு நிற்குமென்றும், ஆதலால் மிகச்சிறிய தானியமாகிய எள்ளின் பாதியை உவமித்துக் காட்டி அவ்வளவு பகையே இருக்குமாயினும் அது சமயம் வந்த காலத்துப் பெரிய கேட்டை விளைவிக்கும் என்று உவமித்துக் காண்பித்ததால் உட்பகைவர் எவ்வளவு தாழ்ந்தவராயினும் அவர் தாழ்வினை நோக்கி 'இவர் நமக்கு என்செய்தல் கூடும் ?' என்று இகழ்ந்து விட்டுவிடுதல் கூடாதென்றும், அவரை உடனே தொலைத்துவிடல் வேண்டுமென்றும் அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் அற்ப உட்பகைவர் வாழ்கின்ற குடியுள் வாழ்பவர்க்கு எவ்விதம் தகுதி உண்டாகும் என்பதை ஓர் உவமை வாயிலாக விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

890. உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட் பாம்போ டுடனுறைந் தற்று.

(பரி.) இ-ள். உடம்பாடு இலாதவர் வாழ்க்கை = மனப்பொருத்தமில் லாதாரோடுகூட ஒருவன் வாழும் வாழ்க்கை — குடங்கருள் பாம்போடு உடன் உறைந்தற்று = ஒருகுடிலுள்ளே பாம்போடுகூட உறைந்தாற்போலும். எ-று.

குடங்கமென்னும் வடசொற் றிரிந்து நின்றது. இடச்சிறுமையானும் பயிற்சியானும் பாம்பாற் கோட்படல் ஒருதலையாம்; ஆகவே, அவ்வுவமையால் அவனுயிர்க்கு இறுதிவருதல் ஒருதலையென்பது பெற்றாம். இதனுற் கஞ்ஞேடாதவரைக் கடிகவென்பது கூறப்பட்டது. (ல)

விளக்கம் :—மனத்துள் பொருந்தாது உட்பகையோடு உள்ளவர்களோடு கூடி ஒருவன் வாழ்கின்ற வாழ்க்கையானது ஒரு பெட்டகத்துள் பாம்பு ஒன்றிருக்க, அப்பாம்போடு சேர்த்துக்கொண்டிருப்பது போல் இருக்குமென்று இக்திருக்குறள் கூறுகின்றது. இதனால், பாம்புப் பிடாரன் அமைத்துள்ள பெட்டியொன்றினுள் பாம்போடு கூடி இருக்கும்படி ஒருவன் அதனுள் இருக்கப் புகுந்தால் எவ்விதம் அப்பாம்பானது அவனைக்

கடியாதுவிடாதோ, அதுபோல் உள்ளுக்குள்ளேயே இருந்து உட்பகை செய்கின்ற மனிதரும் உயிர்க்கு இறுதியை உண்டாக்குவரென்றும், அவ்வுட்பகையை வைத்துக்கொண்டவர் இறந்து போவது திண்ணமாகுமென்றும், ஆதலால் மேற்கூறிய வண்ணம் உட்பகைவீர் எவ்வளவு சிறியரேனும் அவரை இகழாதும், அவரிடத்துத் தாக்ஷண்யம்கொள்ளாதும் அவரை ஒழித்துவிடல்வேண்டும் என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வதிகாரத்தால் உட்பகையாவார் இவரென்றும், உட்பகை கூடாதென்றும், அவ்வுட்பகையால் உண்டாகும் குற்றங்களும், உட்பகை உண்டான குடி காளுக்கு காள் சிறிது சிறிதாகத் தேய்ந்து விடுமென்றும், உட்பகை மிகச்சிறிதாயினும் ஆதலினி இகழாது கடிதல் வேண்டுமென்றும் அறிந்தோம். இனி, வெகுளியால் வரும் பிழை இன்னும் எதுவாகும் என்பதை விளக்கல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

90. அதிகாரம்.

பெரியாரைப் பிழையாமை.

(பரி.) *அஃதாவது பெரியாராயினுரை அவமதித்து ஒழுகாமை. இரட்டுற மொழிதலென்பதனுற் பெரியாரென்பது ஆற்றலாற் பெரியாராய வேந்தர் மேலுஞ் தவத்தாற் பெரியாராய முனிவர்மேலும் நின்றது. மேற்சொல்லாது எஞ்சிநின்றதாகலின், இது வெகுளியான் வருவனவற்ற நிறுத்திக்கண் வைக்கப் பட்டது.*

விளக்கம் :— *அதாவது, வல்லமையால் பெரியவராகிய வேந்தரிடத்தும், தவத்தால் பெரியவராகிய தவசிகளிடத்தும், அவரை அவமதித்துப் பிழைபடாதிருத்தல். இதுகாறும் இப்பெரியாரிடத்துப் பிழைத்தல் கூடாதென்பதைச் சொல்லாதிருத்தமையால், வெகுளியால் வரும் தீமைகள் எல்லாவற்றையும்கூறி அவைகளுக்குப் பிறகு கடைசியாக இவ்வதிகாரம் வைக்கப்பட்டு உள்ளது என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பெரியார் இவரென்றும், அவரிடத்துப் பிழைத்தல் கூடாதென்றும் கூறுகின்ற இவ்வதிகாரம் மிக*

முக்கியமாதலின், இதைக் கேட்க மிகுதியும் ஆசைப்படுகின் றேம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

891. ஆற்றுவா ராற்ற லிகழாமை போற்றுவார் போற்றலு ளெல்லாந் தலை.

(பரி.) இ-ள். ஆற்றுவார் ஆற்றல் இகழாமை = எடுத்துக்கொண்டன யாவும் முடிக்கவல்லாருடைய ஆற்றல்களை அவமதியாமை — போற்றுவார் போற்றலுள் எல்லாம் தலை = தங்கட்டலைவராமற் காப்பார் செய்யுங் காவல்க ளெல்லாவற்றினும் மிக்கது. எ-று.

ஆற்றலென்பது பெருமை, அறிவு, முயற்சியென்னும் மூன்றன்மேலும் நிற்றலிற் சாதியொருமை. இகழ்ந்தவழிக் கேடியவல்லாரென்பது தோன்ற ஆற்றுவார்' என்றும், அரண், படை, பொருள், நட்பு முதலிய பிறகாவல்கள் அவரானழியுமாகலின் அவ்விகழாமையைத் தலையாய காவலென்றுங் கூறி னர். பொதுவகையால் அவ்விருதிறத்தாரையும் பிழையாமையது சிறப்பு இதனுற் கூறப்பட்டது. (க)

விளக்கம்:— தமக்கு யாதொரு தீங்கும் வாராது காத்துக் கொள்ளுவார் செய்யும் காவல்கள் எல்லாவற்றினும் மிக்கதாவது, தாம் எடுத்துக்கொண்ட தொழில்கள் எவையாயினும் அவற்றை முடிக்கவல்லவருடைய வல்லமைகளை அவமதியாது இருத்தலே ஆகும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், பெருமை, அறிவு, முயற்சி என்னும் மூன்று வல்லமைகளையும் பொருந்திய பெரியோரை அரண், படை, பொருள், நட்பு முதலிய காவல் களை உடைய அரசர்களும் இகழ்தல் கூடாதென்றும், அவ்வாறு இகழின் தம்மைக் காத்துக்கொள்ளுபவர் ஆகாரென்றும் கூறிய தாயிற்று என்று அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "தவத்திற்குரிய பெரியார் வல்லமை இதுவென்றும், ஏனைய அர சர் வல்லமை இதுவென்றும் அறிந்தோம். மேலும், வல்லமையால் பெரியராய அரசராயினும் அத்துறவிகளை இகழ்தல் கூடாதென்றும் அறிந்தோம். அவ்விதம் இகழ்வாராயின் எவ்வித துன்பம் இகழ்ந் தவர்க்கு வரும் என்பதையும் விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

892. பெரியாரைப் பேணு தொழுகிற் பெரியாராற் பேரா விடும்பை தரும்.

(பரி.) இ-ள். பெரியாரைப் பேணுது ஒழுகின் = ஆற்றல்களாற் பெரியாராயினரை வேந்தர் கன்குமதியாது அவமதித்து ஒழுகுவாராயின்,—பெரியாரால் பேரா இடும்பை தரும் = அவ்வொழுக்கம் அப்பெரியாரால் அவர்க்கு எஞ்ஞான்றும் நீங்காத துன்பங்களைக் கொடுக்கும். எ-று.

அத்துன்பங்களாவன:—இருமையினும் இடையறாது வரும் மூவகைத் துன்பங்களுமாம். அவையெல்லாம் தாமே செய்து கொள்கின்றனரென்பது தோன்ற, ஒழுக்கத்தை வினைமுதலாக்கியும் பெரியாரைக் கருவியாக்கியுங் கூறினர். பொதுவகையால் அவரைப் பிழைத்தற்குற்றம் இதனுற் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையாற் கூறுப. (உ)

விளக்கம்:—மேற்கூறிய வல்லமைகளில் மிக்க பெரியோராயினரை அரசர் கன்குமதியாது அவமதித்து நடப்பாராயின், அவ்வித ஒழுக்கத்தால் அப்பெரியோரால் அவ்வரசர்கள் எஞ்ஞான்றும் நீங்காத துன்பங்களை அடைவார் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், பெரியோராயினரை அவமதிப்பார் அரசராக இருக்கினும் இம்மையில் பொருளை இழந்து பழியைத் தேடிக்கொள்வதுடன், மறுமையில் பாவத்தின் மிகுதியால் புண்ணியத்தை இழந்து நரகத்தையும் அடைவர் என்று அறிகின்றேம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பெரியோரைப் பழிப்பவர் இம்மை, மறுமையாகிய இரண்டு பயன்களையும் இழப்பரென்று பொதுவாக அறிந்தோம். இனி, அவ்வித பிழைத்தலால் ஆகிய குற்றங்களையெல்லாம் சிறப்பு வகையால் கூறுதல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

893. கெடல்வேண்டிற் கேளாது செய்க வடல்வேண்டி னுற்று பவர்க ணிழுக்கு.

(பரி.) இ-ள். அடல் வேண்டின் ஆற்றுபவர்கண் இழுக்கு = வேற்றுவேந்தரைக் கோறல்வேண்டியவழி அதனை அப்பொழுதே செய்யவல்ல வேந்தர் மாட்டுப் பிழையினை—கெடல் வேண்டின் கேளாது செய்க = தான் கெடுதல் வேண்டினஞையின் ஒருவன் கீழ்நூலைக் கடந்துசெய்க. எ-று.

அப்பெரியாரைக் "காலனுங் காலம் பார்க்கும் பாராது—வேலீண்டு தானே விழுமியோர் தொலைய—வேண்டிடத் தடுஉம் வெல்போர் வேந்தர்"* என்னுர் பிறரும். நீதிநூல் செயலாகாதென்று கூறலின், 'கேளாது' என்னுர்.

விளக்கம்:— வேற்றரசர்களைக் கொல்ல எண்ணிய காலத்து அக்கொல்லும் தொழிலை அப்பொழுதே செய்யக்கூடிய ஆற்றலுடைய அரசரிடத்து ஒருவன் தான் கெடுதல் வேண்டுமாயின் அப்போதுதான் நீதி நூல்களில் சொல்லியவற்றை யெல்லாம் மறந்து பிழையினைச் செய்தல் வேண்டும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, காலம், இடம், தானே முதலிய யாவுமில்லாது தாமே சென்று போரிடக்கூடிய பேராற்றலை உடைய அரசர்பால் பிழை செய்தல் கூடாதென்றும், அவ்விதம் ஒருவன் செய்யப்புகுவானுயின் அது அவன் கெட்டுவிடுவதற்கே செய்வதென்றும் அறிந்தோ மென்றனர். அதுகேட்ட மாணுக்கர், "பெரியார்க்குக் கேடு செய்தார் எவ்வித கேட்டினை அடைவர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

894. கூற்றத்தைக் கையால் விளித்தற்ரு லாற்றுவார்க் காற்ருதா ரின்ன செயல்.

(பரி.) இ-ள். ஆற்றுவார்க்கு ஆற்ருதார் இன்ன செயல்=மூவகையாற்றலு முடையார்க்கு அவையில்லாதார் தாம் முற்பட்டு இன்னதவற்றைச் செய்தல்—கூற்றத்தைக் கையால் விளித்தற்று=தானேயும் வாற்பாலதை கூற்றவினை அதற்குமுன்னே கைகாட்டி அழைத்தலொக்கும். எ-று.

கையால் விளித்தல் இகழ்ச்சிக்குறிப்பிற்று. தாமேயும் உயிர்முதலிய கோடற்குரியாரை அதற்குமுன்னே விரைந்து தம்மேல் வருவித்துக்கொள்வார் இறப்பினது உண்மையும் அண்மையுங் கூறியவாறு. இவை யிரண்டு பாட்டானும் வேந்தரைப் பிழைத்தலின் குற்றங் கூறப்பட்டது. (ச)

விளக்கம்:—அறிவு, பெருமை, ஆண்மை என்னும் மூவிதமான வல்லமையும் உடையவரிடத்தே அவ்வாற்ற லில்லாதவர்கள் தாமே முன் சென்று அவர்க்குத் தீமையைச் செய்யப் புகுதல் ஆயுள் முடிந்த காலத்து அழையாமலே தானே வரக்கூடிய யமனை

* புறநானூறு, 41.

அவன் வருவதற்கு முன்னேயே 'வா' என்று தாமே தம் கையைக் காட்டி அழைப்பதுபோலுள்ளது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், இறப்பதற்குக் காலம் வருமுன்னே இறக்கத் தாமே விரும்புகின்றவர்களே பெரியோர்க்குப் பிழைசெய்வரென்றும், அவ்வாறு செய்வாராயின் அப்பிழைக்குத் தக்க தண்டனை இறப்பு என்றும், அது சீக்கிரத்தில் வருவ தென்றும அறிகது கொண்டோமென்றனர். அது கேட்ட மாணாக்கர், "இருவித பெரியோர்களுள் அரசராகிய பெரியவரை இகழ்கின்ற குற்றத்தால்வரும் தீங்குகளை அறிந்தோம் இனி அவ்வித ஆற்றலுடைய அரசர்க்குத் தீங்கு செய்பவன் அவன் நாட்டை விட்டு எங்கேனும் சென்று தப்பிப் போதல் கூடாதோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

895. யாண்டுச்சென் றியாண்டு முளராகார் வெந்துப் வேந்து செறப்பட் டவர். [பின்

(பதி.) இ-ள். வெந்துப்பின் வேந்து செறப்பட்டவர்=பகைவர்க்கு வெய்தாய வலியினையுடைய வேந்தனற் செறப்பட்ட அரசர்=யாண்டுச் சென்று யாண்டும் உளராகார்=அவனைத் தப்பி எங்கேபோயுளராவர், நிலைத்தும் உளராகார். எ-று.

இடைவந்த சொற்கள் அலாய்நிலையான் வந்தன. வெந்துப்பின் வேந்தாலால் தன்னிலம் விட்டுப்போயவர்க்கு இடங்கொடுப்பாரில்லை, உளராயின் இவை இனியாகாரென்பது நோககி அவனுடு நட்புக்கோடற்பொருட்டும் தானே வந்தெய்திய அருடைமை வௌவுதற்பொருட்டுங் கொல்வர், அன்றெனின் உடனே யழிவரென்பனநோககி, 'யாண்டுச் சென்றியாண்டு முளராகார்' என்றார். இதனால் அக்குற்றமுடையார் அருமையுடைய அரசன் சேர்ந்தும் உய்யாரென்பது கூறப்பட்டது. (ரு)

விளக்கம்:—தன்னை எதிர்த்த பகைவரை வெல்லக் கூடிய வலிமையுடைய அரசன் ஒருவனால் பகைக்கப்பட்டவர் அவனை போன்ற அரசராயிருக்கினும், அவ்வலியுடைய அரசனுக்குத் தப்பித்துக் கொண்டு எவ்விடத்துச்சென்றும் இருப்பதற்கு ஆகாது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், மன்னர் மன்னரையே உள்ள ஒருவனைப் பகைக்கின்ற சிற்றரசன் ஒருவன் அவனிடத்தே இருந்து

தப்பித்துக் கொள்ள வேண்டி மற்றொரு அரசனிடத்துச் சென்றாலும் 'இவன் வேறு அரசன் ஒருவனுக்குப் பிழைசெய்து வந்தவனாதலால் இவனுக்கு அடைக்கலம் நாம் தருவோமாயின் அப்பெரிய அரசனது கோபமானது நம்மீதும் பாய்ந்து நம்மையும் கொல்லும்', என்னும் பயத்தினால் ஓடிவந்த சிற்றரசனுக்கு இடம் தாராரென்றும், அவ்விதம் அல்லாவிடின் 'இவன் தஞ்சமில்லா திருப்பதால் இவன் பொருளை அபகரிப்பதற்கு இது தக்கதோர் காலம் ஆதலால் இப்பொழுதே ஓடிவந்த இவனது பொருளை வெளவுவதற்கு இவனைக் கொன்றுவிடுவோம்' என்று அவனைக் கொன்றுவிடுவானென்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வித வலிமை உடைய பெரியோரைப் பிழைக்கும் குற்ற முடையவர் மிக அருமையாகிய காவலுள்ள இடத்தே செல்லினும் இறவாதிருத்தல் கூடாதென்பதை அறிந்துகொண்டோம். இனி, ஏனைய தவத்தால் பெரியாரது கோபத்தை ஏற்றுக்கொள்பவரது பிழையினைக் கூறுதல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

896. எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.

(பரி.) இ-ள். எரியால் சுடப்படினும் உய்வு உண்டாம்=காட்டிடைச் சென்றானொருவன் ஆண்டைத் தீயாற் சுடப்பட்டானாயினும் ஒருவாற்றான் உயிருய்தல்கூடும்;—பெரியாரப் பிழைத்து ஒழுகுவார் உய்யார்=தவத்தாற் பெரியாரைப் பிழைத்து ஒழுகுவார் எவ்வாற்றானும் உயிருய்யார். எ-று.

தீ முன் உடம்பினைக் கதுவி அதுவழியாக உயிர்மேற்சேறலின் இடையே உய்யவுங்கூடும். அருந்தவர்வெகுளி அன்னதன்றித் தானிற்பது கணமாய் அதற்குள்ளே யாவர்க்குங் காத்தலரி தாகலின்,* அது கூடாதாகலான், அதற்கேதுவாய பிழைசெய்யற்க வென்பதாம். (சு)

விளக்கம்:—காட்டிடத்தே சென்ற ஒருவன் அக்காட்டிடத்து உண்டாகும் காட்டுத்தீயால் சுடப்பட்டானாயினும், அத்தீயினின்றும் ஒருவாறு தப்பித்துக்கொண்டு உயிர் பிழைத்தல் கூடும் என்றும், ஆனால் தவத்தில் பெரியவராகியவர்களுக்குப் பிழை செய்து இருப்பார் எவ்விதத்தாலும் உயிர்பிழைத்து இருக்கமாட்

* திருக்குறள், 29.

டார் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, காடுகளி லுள்ள மரங்கள் ஒன்றோடொன்று உரும்ந்து அதனால் உண்டா குஞ் தீயினிடத்தே ஒருவன் அகப்பட்டுக் கொள்வானாயின், அத்தீ யானது முன்னே உடம்பினைப்பிடித்து அவ்வுடம்பு வெந்தபிறகு உயிரிடத்தே சென்று கொல்வதாதலால் உடம்பினிடத்திற் பிடித்த வுடன் தப்பிச்சென்று உடம்பிற் சேர்ந்த புண்ணீனை ஆற்றி உயி ரைக் காத்துக்கொள்ளுதலும்கூடும் என்றும், ஆனால், நிறைமொழி மாந்தராகிய பெரியோர்க்கு வந்த கோபமானது ஒரு கணமிருப்பதா யினும் அக்கோபத்தீயைத் தாங்கிக்கொள்ளுதல் எவராலும் ஆகாது ஆதலால், அவ்வருந்தவரிடத்துப் பிழை செய்பவர் எவ்வளவு செல்வந்தராயினும் ஒரு கணத்துள்ளே அழிந்துவிடுவர் என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், " அருந்தவர்க் குப் பிழைசெய்தல் கூடாது என்பதறிந்தோம். பெரியார்க்குப் பிழை செய்தவர் எவராயினும் அழிவர் என்பதால் அரசர் முதலா யினோர் பெரியார்க்குச்செய்த பிழையால் அவர் அழியுங்காலத்து அவர் அரசும், பொருளும் எவ்வாறு ஆகும் ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்

897. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்
தகைமாண்ட தக்கார் செறின். [ஞந்

(பரி.) இ-ள். தகைமாண்ட தக்கார் செறின் = சாப வருள்கட்கேது வாய பெருமை மாட்சிமைப்பட்ட அருந்தவர் அரசினை வெகுள்வாயின்,— வகை மாண்ட வாழ்க்கையும் வான் பொருளும என்னும் = உறுப்பழகுபெற்ற அவனரசாட்சியும் ஈட்டிவைத்த பெரும் பொருளும் என்பட்டு விடும் ! எ-று.

உறுப்பு = அமைச்சு, நாடு, அரண், படை யென விவை. செறினென பது அவர் செறுமை தோன்ற நின்றது. இவ்வெச்சத்தான் முன் வருவன வற்றிற்கும் இஃதொக்கும். அரசர் தஞ்செல்வக்களிப்பான் அருந்தவர்மாட் டுப் பிழை செய்வாயின், அச்செல்வம் அவர் வெகுளித்தீயான் ஒரு கணத் துள்ளே வெந்து விடுமென்பதாம். (எ)

விளக்கம்:—தம்மைத் தாம்புறுத்தியவர்களைச் சபிப்பதற்கும், தம்மை வணங்கினவரிடத்து அருளைச் செலுத்துவதற்கும் காரண மாகிய பெருமையால் வெகு மாட்சிமை அடைகின்ற அருந்தவ

ரானவர் தமக்குப் பிழைசெய்த ஓர் அரசனைக் கோபிப்பாரா யின், அவ்வரசனது அமைச்சு, நாடு, அரண், படை என்கின்ற உறுப் புகளெல்லாம் அமைந்த அரசாகியும், அவன் சேர்த்துவைத்த பெரும்பொருள்களும் அழிந்தே விடுமென்று இத்திருக்குறள் கூறு கின்றது. இதனால், நிறைமொழி மாந்தராகிய தவத்தவர் கோபிப் பதே இல்லையென்றும், ஊழ்வலியால் அவர்கள் கோபிக்க நேரின் அக்கோபத்திற்கு இலக்கானவர்கள் உய்வது இல்லையென்றும், அவ் விதம் உய்யாததுடன் அவருடைய அரசும், அரசுக்கு உரிய அங் கங்களும் அவரது கோபத்தீயால் ஒரு கணத்துள்ளே வெந்து விடுமென்றும் அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பெரியாரைப் பிழைத்தவர் அரசும், செல்வமும் போய் விடு மென்று அறிந்தோம். ஆயின், அப்பிழைத்தவரது குடிக்கும் ஏதே னும் தீங்கு நேருமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

898. குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து.

(பதி.) இ-ள். குன்று அன்னார் குன்ற மதிப்பின் = குன்றத்தை யொக் கும் அருந்தவர் கெட நினைப்பாராயின், — நிலத்து நின்றன்னார் குடியொடு மாய்வர் = அப்பொழுதே இந்நிலத்து நிலைபெற்றாற்போலுஞ் செல்வர் தங் குடியொடும் மாய்வர். எ-று.

வெயில் மழை முதலிய பொறுத்தலுஞ் சலியாமையும் உள்ளிட்ட குணங்களுடைமையின், 'குன்றன்னார்' என்றார்: "மல்லன் மலையனைய மாத வர்" * என்றார் பிறரும். நிலைபெற்றாற் போறலாவது:—இறப்பப்பெரியராக லின் இவர்க்கு எஞ்ஞான்றும் அழிவில்லையென்று கண்டாராற் கருதப்படுதல்.

விளக்கம்:—வெயில், மழை முதலியவைகளால் தமக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதலும், அவற்றால் சலி யாமையுமுடைய மலையை ஒத்த மாதவர் தமக்குப் பிழைசெய்தவர் கெடும்படி நினைப்பாரானால், நினைத்த அப்பொழுதே அப்பிழை செய்தவர் இப்பூமியினுள் எக்காலத்தும் அழியாது நிலைபெற்றிருப் பவர் போன்று பிறரால் மதிக்கக்கூடிய பெரும் செல்வமுடைய ராயினும் தம் குடியோடும் மாய்ந்துபோவர் என்று இத்

* சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், 131.

திருக்குறள் கூறுகின்றது. இதனால், எவ்வித பெரிய செல்வ முடையாராயினும் அருந்தவராகிய பெரியோர்க்குப் பிழை செய்த காலத்தில் தாம் அழிவதுடன் தம் குடியும் அழிவதற்கு நேருமென்று அறிந்தோமென்றனர். ஆதலால், 'இவர் மிகப் பெரியவராதலால், இப்பெரியராய செல்வந்தர் எக்காலத்தும் அழியார்' என்று உலகத்தாரால் எண்ணப்படக்கூடிய பெரிய செல்வந்தனாயினும் தவத்திற் பெரியோரை இகழ்தல் கூடாது என்று அறிந்தோமென்றனர். அது கேட்ட மாணாக்கர், "இத்தவமுடையாரது சாப அருள்கள் இப்பூமியில் உள்ளாராகிய மக்கள்மீது தான் செல்லும் போலும்! ஏனைய தேவர் முதலாயினாரிடத்துச் செல்லுதல் கூடாது போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

899. ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து வேந்தனும் வேந்து கெடும்.

(பரி.) இ-ள். ஏந்திய கொள்கையார் சீறின்=காத்தற்கருமையான் உயர்ந்த விரதங்களை உடையார் வெகுள்வாராயின்,—வேந்தனும் இடை வேந்து முரிந்து கெடும்=அவராற்றலான் இந்திரனும் இடையே தன்பதம் இழந்துகெடும். எ-று.

"வேந்தன் மேய தீம்புன லுலகமும்" † என்றார் பிறரும். நகுடனென்பான் இந்திரன்பதம்பெற்றுச் செல்கின்ற காலத்துப் பெற்ற களிப்பு மிகுதியான் அகத்தியன் வெகுள்வதோர்பிழை செய அதனாற் சாபமெய்தி அப்பதம் இடையே இழந்தானென்பதனை யுட்கொண்டு, இவ்வாறு கூறினார். இவை நான்குபாட்டானும் முனிவரைப் பிழைத்தலின்குற்றங் கூறப்பட்டது.

விளக்கம் :—மற்றைய மக்களால் செய்து காத்தற்கு அருமையான உயர்ந்த விரதங்களாகிய தவங்களை உடைய பெரியோர் கோபம் கொள்வாராயின், கோபம்கொண்ட அம்மாதவரது சாபத்தால் தேவர்களுக்குத் தலைவனாகிய தேவேந்திரனாயினும் தான் நூறு அஸ்வமேத யாகத்தால் அடைந்திருக்கின்ற பதவியாகிய இந்திர பட்டத்தையு மிழந்து கெட்டுப் போவான் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், நம் நாயனார் தவத்திற் பெரியராயினார் எவர்மீது கோபிக்கினும் அவர் அழிந்து விடுவார் என்பதை அறி

† தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், 5.

வித்தற் பொருட்டு நகுடன் கதையை இத்திருக்குறளில் குறிப்பித் துள்ளார். அஃதென்னெனின்? தொண்ணூற்றொன்பது அஸ்வமேத யாகங்களைச் செய்து, நூறாவது அஸ்வமேத யாகத்தைச் செய்ய எண்ணி இருந்த நகுடன் என்பவனை இந்திர பதவிக்கு ஆளில்லாமையால் தேவர்களெல்லாம் இந்திரலோகத்திற்கு அழைத் துச் செல்லுதலும், சென்ற நகுடன் தான் இந்திர பட்டத்தை அடைந்த மகிழ்ச்சியின் மிகுதியால் இந்திராணியிடத்துச் செல் லுதல் வேண்டும் என்று தன்னுடைய விருப்பத்தைக் கூறவும், தேவர்கள் விரைந்து சென்று இந்திராணிக்கு அந்நகுடனது விருப் பத்தைக் கூறுதலும், அவள் தன் குருவாகிய வியாழ பகவானை அடுத்து 'என் தலைவனாகிய இந்திரன் இன்னும் உயிர் பிழைத்து உம்மால் தரப்பட்ட சாபத்தால் இந்திரபதவியை இழந்து இருக் கின்றகாலத்தே அப்பதவியைத் தேவர்களால் அடைந்த நகுடன் என்பான் ஒருவன் என்னை விரும்புகின்றான்' என்னலும், குருவாகிய வியாழபகவான் 'அவ்விதம் விரும்புவானுயின் உனது நாயகன் உன் னிடத்து இதுகாறும் வருங்காலத்து எவ்வித தகுதியோடு வரு வானோ, அவ்வித தகுதியோடு வருதல் வேண்டும் என்று கூறுவா யாக' என்றார். அவ்விதமே இந்திராணி தேவர்களுக்குச் சொல்லு தலும், தேவர்கள் சென்று நகுடனுக்குத் தெரிவிக்க, நகுடன் 'ஆனால் வழக்கம்போல செய்யுங்கள்' என்றனன். தேவர்களும் சப்தரிஷிகளை அழைத்து, இவ்விந்திரனைச் சிவிகையின்மீது ஏற்றிக் கொண்டு இந்திராணியிடத்துச் செல்லுங்களென்று கேட்டுக் கொண்டனர். அவ்விதமே சப்தரிஷிகளும்நகுடனெனுமிந்திரனைச் சிவிகையின் மீது ஏற்றிச் செல்லுதலும், "காமநெறிபடரும் கண்ணி ஞீர்க் கில்லையே ஏமநெறி படருமாறு" என்றபடிக் காமத்தால் கண் இழந்து நிற்கும் நகுடனென்பான் தன்னைத் தாங்கிச் செல் லும் தவசிகளுடைய மேன்மையை நோக்காது, "விரைந்து செல் லுங்கள்; விரைந்து செல்லுங்கள்" என்று பொருள்படும் "சர்ப்ப, சர்ப்ப" என்னும் மொழிகளைக் கூறினன். அம்மொழிகளைக் கேட்ட சிவிகையை முன் தாங்கிச் செல்லும் குறு முனிவரானவர் உடனே மிகுதியும் கோபமுடையவராகி 'எங்கள் ஆற்றல் இதுவென்று உணராது சர்ப்பவென்று கூறினாய் ஆகலால், நீ சர்ப்

பமாகக் கடவாய்' என்று சபித்தார். அவ்விதம் அவர் சபித்த வுடன் தொண்ணூற்றொன்பது அஸ்வமேத யாகங்களைச் செய்து முடித்த வலிமையால் அடைந்ததாகிய இந்திர பதவியையும் இழந்த திடன், அரிய பிறவியாகிய மானிடர் தேவர் முதலியவர்களுள் ஒருவனாக இருந்த பிறப்பினையும் இழந்து, யாவராலும் வெறுக்கக் கூடிய பாம்பின் பிறப்பினை அடைந்து உருண்டு பூமியில் வந்து விழுந்தனன். ஆதலால் உலகத்து மக்கள் மாத்திரமன்று, வானுலகத் துத் தேவர் மாத்திரமன்று, அத்தேவர்களுக்குத் தலைவனாகிய தேவேந்திரனே யாயினும் அருந்தவரிடத்துப் பிழைசெய்வாராயின் அழிந்துவிடுவது திண்ணமென் றறிஞர்தாம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் தேவர்க்கு அரசனாகிய இந்திரனும் பெரியாரைப் பிழைப்பானாயின், தன் பலமிழப்பான் என்பது கண்டோம். ஆயின், மக்கள், தேவர் ஆகிய இருவராலும் அழிக்கக்கூடாத அரண்களைத் தம் தவ வலிமையால் பெற்றவராயின், அவரையும் இப்பெரியாரது கோபமானது அழித்து விடுமோ ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

900. இறந்தமைந்த சார்புடைய ராயினு முய்யார் சிறந்தமைந்த சீரார் செறின்.

(பரி.) இ-ள். சிறந்து அமைந்த சீரார் செறின் = கழியமிக்க தவத்தினை யுடையார் வெகுள்வாராயின்,—இறந்து அமைந்த சார்பு உடையராயினும் உய்யார் = அவரான் வெகுளப்பட்டார் கழியப் பெரிய சார்பு உடையராயினும், அதுபற்றி உய்யமாட்டார். எ-று.

சார்பு = அரண், படை, பொருள், கட்பெனை வீவை. அவையெல்லாம் வெகுண்டவரது ஆற்றலாற் றிரிபுரம்போல அழித்துவிடுமாகலின், 'உய்யார்' என்றார். சீருடையது சீரெனப்பட்டது. இதனால் அக்குற்றமுடையார் சார்பு பற்றியும் உய்யாரென்பது கூறப்பட்டது. (ம)

விளக்கம்:— மிகப் பெரிய தவத்தினை உடையார் கோபிப்பாரானால், அவர் கோபத்திற்கு ஆளானவர் மிகப் பெரிய அரண் முதலாகிய சார்பினை உடையவராயினும் பிழைப்பதில்லை என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், திரிபுராசுரரென்பார் மூவர் தங்கள் தவவலிமையால் இமயவனிடத்து இரும்புக்கோட்

டை, செம்புக்கோட்டை, வெள்ளிக்கோட்டை என்கின்ற மூன்று கோட்டைகளையும் அடைந்து வாழும் காலத்து, உலகத்து மக்களை உயிர்களென்று எண்ணுமல் தாம் மகிழ்ச்சி அடைந்த காலத்தெல்லாம் அக்கோட்டைகளோடு பறந்துசென்று தாம் பகை கொண்டவர்கள் இருக்குமிடமெல்லாம் அக்கோட்டைகளை இருக்கச்செய்து அழித்துக்கொண்டு வருகிற காலத்தே, அவ்வொழுக்கத்தினைக் கண்ட மாதவர்கள் தாம் வருந்துவதைச் சிவபெருமானுக்கு அறிவித்தலும், அவர் தேவர்களையெல்லாம் யுத்தத்திற்குச் செல்வதற்குத் தேர்கொண்டுவரும்படி ஏவினரென்றும்,எல்லாத்தேவர்களும் தங்களையே ஓர் தேர் போலாக்கி, வேதங்களென்கின்ற குதிரைகளைப் பூட்டி, பிரமனென்னும சாரதியைஅமைத்து, மேருமலையைவில்லாகக்கொண்டு, வாசுகியை நாணாகக்கட்டி, விஷ்ணுமூர்த்தியை பாணமாக்கி, அப்பாணத்திற்கு முனையாக இருக்க அக்கினியையும், ஈர்க்காக இருக்கக் காற்றினையும் அமைத்துச் செல்லுதலும், அக்காலத்தே தம் ஆணவமலத்தடிப்பால் சக்கரமாக இருந்த சூரிய சந்திரர்கள் 'நாங்கள் சக்கரமாக இல்லாவிடில் எவ்விதம் இத்தேர் நடக்கும்' என்பது முதலாக, தேவர்கள் ஒருவருக்கொருவர் தாம் தாம் கொண்ட உறுப்புக்களை உயர்த்திக் கூறிக்கொள்ளுதலும், அதனை அறிந்த இறைவன் தேர் அருகில் வந்தவுடன் 'தேர் சித்தமாயிற்றே? இதில் ஏறுதல் கூடுமோ?' என்று அத்தேரினிடத்துத் தம் பெருவிரலை ஊன்றுதலும், அவ்வலிமையைத் தாங்கும் வலிமை இல்லாத தேவர்களெல்லாம் இற்று விழுந்தனரென்றும், அத்தேவர்களது அறியாமையை நீக்கவும், திரிபுராவாசிகளின் ஆணவமலத்தடிப்பை ஒழிக்கவும் சிறிது சிரித்தாரென்றும், அச்சிரிப்பால் திரிபுரங்களும் வெந்து விழுந்தனவென்றும் கூறுகின்ற கதையை நன்கு விளக்கல் வேண்டி நாயனார் இத்திருக்குறளைக் கூறியதாக அறிந்தோம். இத்திரிபுரக் கதையைத் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தம் தேவாரத்தில்,

> "கல்லால் நிழல்கீழாய் இடர்காவாய் எனவானோர்
> எல்லா மொருதேராய் அயன்மறைபூட்டி நின்றுய்ப்ப
> வல்வா யெரிகாற்றீர்க்கரி கோல்வாசுகி நாண்கல்
> வில்லால் எயிலெய்தா னிடம் வீழிம்மிழலையே."

என்று அருளிச் செய்திருத்தலாலும் அறிதல் கூடும். ஆதலால், தவவலியால் பெரியராய் உள்ளவர் எவரோ அவர்க்குப் பிழை செய்பவர் எவ்வித அரண் முதலிய சார்புகளைப் பெற்ற வலிமையுடையவராயினும் பிழைத்தல் முடியாது என்பதை நன்கு உணர்ந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "நட்பின் தகுதியை எதிர்மறை முகத்தால் விளக்கிய ஐந்து அதிகாரங்களாலும் அவை வெகுளியால் வருவனவென்றும், அவற்றின் பயன் இவையெனவும் அறிந்தோம். இனி, காமத்தால் வரும் ஏனைய வற்றையும் விளக்கல் வேண்டும" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

91. அதிகாரம்.

பெண்வழிச்சேறல்.

(பரி.) இனிக் காமத்தான் வருவன நேரே பகையல்லவாயினும் ஆக்கஞ் சிதைத்தல் அழிவதலேத் தருதலென்னுந் தொழில்களாற் பகையோடொத் தலிற் பகைப்பாற் படுவனவாமகலான், அவற்றைப் பகைப்பகுதிய திறுதிக் கட்கூறுவான் முடங்கி, முதற்கட் பெண்வழிச்சேறல் கூறுகின்றார். அஃ தாவது தன்வழி யொழுகற்பாலளாய இல்லாள் வழியே தான் ஒழுகுதல்.

விளக்கம்:—அதாவது, மேற்கூறியவண்ணம் காமத்தால் வருவனவாகிய பகைகள் நேரான பகைகள் அல்லவாயினும், மேல் மேல் வளருதலாகிய ஆக்கத்தைப் போக்குவதினாலும் அழிவாகிய காரியங்களை உண்டுபண்ணுவதினாலும் பகையோடு சமானமாயிருத் தலால், அக்காமத்தால் வரும் அவற்றினை பகைமையைப்பற்றிச் சொல்லிய அதிகாரங்களுக்குப் பிறகு சொல்லத்தொடங்கி, முதலில் பெண் வழிச்சேறல் என்னும் இவ்வதிகாரத்தைக் கூறுகின்றனர். பெண் வழிச்சேறலாவது:—தான் நியமித்தபடி நடக்க வேண்டியவ ளாகிய தன் மனையாள் நியமித்தபடி ஒருவன் நடப்பானுயின், அதுவே பெண் வழிச்செல்லல் என்பது ஆகும் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்வித்தம் தனக்கு உள்ள சுதந்திரத்தைப் போக்கித் தன்மனைவி கற்பித்தவழியே எதற்காக ஒருவன் நடத்தல் வேண்டும்? அவ்வித்தம் நடப்பான் இவ்வுலகத்து எவ்வித்மாவான்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

901. மனைவிழைவார் மாண்பய னெய்தார் வினைவிழை
வேண்டாப் பொருளு மது. [வார்

(பரி.) இ-ள். மனை விழைவார் மாண் பயன் எய்தார்=இன்பங் காரண மாகத் தம் மனையாளே விழைந்து அவடன்மையராய் ஒழுகுவார் தமக்கு இன் றுணையாய அறத்தினை யெய்தார்;—வினை விழைவார் வேண்டாப் பொருளும் அது=இனிப் பொருள்செய்தலே முயல்வார் அதற்கிடையீடென்று இகழும் பொருளும் அவ்வின்பம். எ-று.

மனையும், விழைதலும்,பயனும் ஆகு பெயர்.அவ்வின்பம்=அவடன்மைய ராதற்கு ஏதுவாய வின்பம். அஃது அவளாற் பயனுய வறத்தினும் அவ்வறத் திற்குந் தனக்கும் ஏதுவாய பொருளினுஞ் செல்லவிடாமையின், விடற் பாற் றென்பதாம். (க)

விளக்கம்:—எவர் தாம் அடையவேண்டிய இன்பத்தின் பொருட்டு தம் மனையாள் பீது பெரியதோர் விருப்பத்தைக் கொண்டு அவள் ஏவியபடி நடக்கிறாரோ, அவர் இம்மை, மறுமை, வீடு ஆகிய மூன்றினையுமடைவதற்குத் தமக்கு இனிய துணையாய் நிற்கும் அறமென்பதனை அடையமாட்டாரென்றும், அதுவு மன்றி, அறம், இன்பம் ஆகிய இரண்டினையும் அடைவிக்கும் பொருள் செய்தலே மேற்கொண்டவர்கள், அப்பொருள் செய்வ தற்கு இப்பெண் வழிச்செல்லல் இடையூறாய் உள்ளதென்று இகழ்ந்து நீக்குவதாக உள்ளதால், பொருளையு மடையமாட்டார் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், எவன் ஒருவன் தன் மனைவியினிடத்தே காமம் காரணமாகப் பணிந்து நடந்து அவள் சொல்வழி நிற்கின்றானே அவன் நிலையாகிய அறத்தையும், அவ்வறத்திற்குத் துணையாகிய பொருளையுமடையாது வருந்துவா னென்றும, ஆதலால் பெண்வழிச் செல்வதைவிட்டு விலகல் வேண் டும் என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பொருளில்லாதவன் ஒருவன் தான் பெண்வழிச் செல்வதால் துன்பம் அடைதல் கூடும். பெரியதோர் செல்வம் அடைந்த ஒரு வன் பெண்வழிச் செல்வானையின் அவனுக்கு எது உண்டாகும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

902. பேணுது பெண்விழைவா னுக்கம் பெரியதோர் நாணுக நாணுத் தரும்.

(பரி.) இ-ள். பேணுது பெண் விழைவான் ஆக்கம்=தன்னுண்மையை விட்டு மனையாளது பெண்மையை விழைவான் எய்திநின்ற செல்வம், —பெரியது ஓர் நாண் ஆக நாணுத் தரும் = இவ்வுலகத்து ஆண்பாலார்க்கெல்லாம் பெரியதோர் நாணுண்டாகத் தனக்கும் நாணுதலைக் கொடுக்கும். எ-று.

எய்திநின்றதாயிற்று, படைக்கும் ஆற்றலிலனாகலின். அச்செல்வத்தால் ஈதலுந் துய்த்தலும் முதலிய பயன்கொள்வாள் அவளாகலின், அவ்வாண்மைச் செய்கை அவள்கண்ண தாயிற்றென்று ஆண்பாலார் யாவரும் நாண அதனுந் தன்னுண்மையின்மை அறிந்து பின் தானும் நாணுமென்பதுதோக்கிப் 'பெரியதோர் நாணுக நாணுத்தரும்' என்றார். இவையிரண்டு பாட்டானும் மனைவிழைதற் குற்றங் கூறப்பட்டது. (உ)

விளக்கம்:—எவன் ஒருவன் தனக்கு உள்ளதான ஆண் தன்மையைப் போக்கித் தன்னுல் விரும்பப் படுகின்ற மனைவியினது பெண் தன்மையை விரும்புகின்றானே, அவ்விதகுகியுடையான் பெற்ற செல்வமானது இவ்வுலகத்து ஆண்மையோடுகூடி இருத்தல்வேண்டும் என்னும் ஆண்பாலார்க்கெல்லாம் மிகப் பெரியதோர் நாணத்தை உண்டாக்குவதுடன் அச்செல்வத்தைப் படைத்த அவனுக்கும் பெரியதோர் நாணத்தை உண்டுபண்ணும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனுல், பூர்வ நல்வினைப் பயனுல் ஒருவன் செல்வத்தை அடைந்திருந்தும் தான் ஒருவர்க்குக் கொடுப்பதோ அல்லது தானே அனுபவித்தலோ ஆகிய நன்மைகளைத் தானே செய்வதற்கு இல்லாமல் தன் மனைவி சொல்லும் வண்ணம பிறர்க்குக் கொடுத்தும் தான் உண்டும் காலம் கழிக்க நேருகின்றதனல், இவனுக்கு உள்ள ஆண்மைச் செயலை அவளிடம் ஒப்புவித்து விட்டு அவள் பெண் தன்மையைத் தான் வாங்கிக் கொள்கின்றனுதலால், உலகத்திலுள்ள ஆண்மக்கள் யாவரும் இவனைக் கண்ட காலத்து மிகுதியும் நாணத்தை அடைவதுடன் அவர்களைக்கண்ட இவனும் 'நாம் இவ்விதம் மனைவி சொல்லும் வழி நடப்பதால் ஓர் ஆண்மகனுக இவ்வுலகத்து உலாவுவதற்கு இல்லாமற் போயிற்று' என்று தனக்குத் தானே வருந்திப் பிற ஆண்மக்களைப் பார்ப்பதற்

கும் கூடாதவனுப் நாணத்தோடு இருப்பான் என்றறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "எதற்காகப் பெண்தன்மை விரும்பு மிவன் நாணமுடைவான் ளன்பதையும விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

903. இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்று நல்லாரு ணாணுத் தரும்.

(பரி.) இ-ள். இல்லாள்கண் தாழ்ந்த இயல்பு இன்மை=ஒருவன் இல்லாண்மாட்டுத் தாழ்தற்கு வதுவாய அச்சம்—நல்லாருள் நாணு எஞ்ஞான்றும் தரும்=அஃதிலாய நல்லாரிடைச் செல்லுங்கால் நாணுதலே அவனுக்கு எக்காலத்துங் கொடுக்கும். எ-று.

அவடான் அஞ்சி ஒழுகுதல் இயல்பாகலின், அவளையஞ்சுதல் இயல்பின்மையாயிற்று. அங்ஙனமஞ்சி யொழுகுதலின், அவளை நியமிப்பா ரில்லே யாம்; ஆகவே, எல்லாக்குற்றமும் வினையுமென்பது நோக்கி, எஞ்ஞான்றும் நாணுத்தரும் என்றார். (கு)

விளக்கம்:—ஒருவன் தன் மனைவி யிடத்துப் பணிந்து நடப்பதற்குக் காரணமாகிய அச்சத்தைக கொண்டிருப்பாயின், அவ்வச்சமானது அவ்விதம் ஒழுகாத நற்குண முடையவரிடத்து அவன் செல்லுகின்ற காலத்தெல்லாம் அவனுக்கு நாணத்தை உண்டு பண்ணும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், அவள் அஞ்சி நடக்க வேண்டிய இயற்கைக்கு மாறாக இவன் அஞ்சி நடப்பதால், மனைவியாகிய அவளை 'இதுவிதி; இது விலக்கு; இவ்வண்ணம் செய்தல்வேண்டும்; இவ்வண்ணம செய்தல் கூடாது' என்று கட்டளையிடுவர் ஒருவருமில்லை யாதலால், அவள் எண்ணிய வழியெல்லாம் அவள் ஒழுகுதல் கூடுமென்றும், அவ்விதம் செய்வதால் எல்லாக் குற்றங்களும் வினையு மென்றும், ஆகவே இவ்வித குற்றங்களோடு கூடிய இவன் நற்குண முடையாரிடத்துச் செல்லுங்காலத்து இவனுக்கே அச்செயல் நாணத்தை உண்டுபண்ணுமென்றும் அறிந்தோம். ஆதலால் பெண் வழிச் செல்பவன் நாணவேண்டி உள்ளது என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் நாணத்தை அடைந்தும் மனைவியை விரும்புபவனையிருப்பின், இவன் ஏதேனும் ஒருகாரியத்தைத் தனது

வல்லமையால் செய்யப் புகுங்காலத்து அவன் செய்யும் தொழிலைக் கண்டு நல்லவர் மகிழ்வரோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

904 மனையாளை யஞ்சு மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்த லின்று.

(பரி.) இ-ள். மனையாளை அஞ்சும் மறுமை இலாளன் = தன் மனையாளை யஞ்சி ஒழுகுகின்ற மறுமைப்பயனில்லாதானுக்கு — வினை ஆண்மை வீறு எய்தல் இன்று = வினையை ஆளுந்தன்மை உண்டாயவழியும் நல்லோரால் கொண்டாடப்படாது. எ-று.

உண்டாயவழியுமென்பது அவாய்நிலையான் வந்தது. இல்லறஞ் செய்தற்குரிய நன்மையின்மையின் 'மறுமையிலாளன்' என்றும், வினையையாளுந் தன்மை தன்றன்மையில்லாத அளவில் முடிவுபோகாமையின் 'வீறெய்தலின்று' என்றுங் கூறினார். (க)

விளக்கம்:—தன் மனைவிக்குப் பயந்த அவள் சொல்லும் வண்ணம் நடக்கின்றதால் மறுமைப் பயனே இழந்த ஒருவனுக்கு ஓர் காரியத்தைச் செய்யும் தன்மை உண்டான இடத்தும் அவன் செய்த அக்காரியமானது நல்லறிவுடையோரால் மகிழ்ந்து ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், பெண்வழிச் செல்பவனுகிய இவன் இல்லறத்தை நல்லறமாகச் செய்வதற்கு முடியாதவனுக இருக்கின்றனனாலும், மறுமைப் பயனையிருக்கின்ற தேவபோகம் முதலியவைகளை அடைவதற்கு இல்லாமல் போகின்றனன் என்றும், அவ்விதம் மறுமைப்பயனை அடைவதற்கு யோக்கிய மில்லாத இவன் எதேனும் ஓர் நற் காரியத்தைச் செய்ய மேற் கொள்வானுயினும், அக்காரியம் முடிவடைதற்குப் பொருள் செலவழித்தல் முதலியவைகளை இவனுகச் செய்வது கூடாமையாதலாலும் இவன் மனைவியின் விருப்பத்தின் படியே பொருள் செலவழித்தல் வேண்டுமாதலாலும் தான் விரும்பியபடியே செய்யும் அத்தகுணமுடையாள் இவன் எடுத்த காரியத்தை முடிவு பெறும்படிச் செய்பாளென்றும், அவ்விதம் அவள் செய்வதால் இவன் எடுத்த காரியம் முடிவு பெறுதென்றும், முடிவு பெறுத அக்காரியத்தைக் கண்ட நல்லறிஞர் இவன்

செய்த அவ்வளவு காரியத்திற்கும் மகிழ்ச்சி அடையாது அலகூி யமாக நினைப்பாரென்றும் அறிந்தோம். ஆதலால் பெண்வழிச் செல்பவன் நல்லூழால் ஏதேனுமோர் நற்காரியத்தைச் செய்யப் புகுந்தாலும், அக்காரியம் முடிவு பெறுது போய்விடும் என்று அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணக்கர், "இவன் தேடிய பொருளை இவன் நல்வழியில் செலவழித்தற்கும் கூடாதோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

905. இல்லாளே யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று நல்லார்க்கு நல்ல செயல்.

(பரி.) இ-ள். இல்லாளே அஞ்சுவான்=தன் மனையாளையஞ்சுவான்—நல்லார்க்கு நல்ல செயல் எஞ்ஞான்றும் அஞ்சும்=தான் தேடிய பொருளை யாயினும் அதனால் நல்லார்க்கு நல்லனசெய்தலை எஞ்ஞான்றும் அஞ்சாநிற்கும்.

நல்லார்=தேவர், அருந்தவர், சான்றோர், இருமுதுகுரவர் முதலாயினரும் நல்விருந்தினரும். நல்லனசெய்தல்=அவர்விரும்புவனகொடுத்தல். அது செய்யவேண்டும் நாள்களினுமென்பார், 'எஞ்ஞான்றும்' என்றார். "இல்லாளை யஞ்சிவிருந்தின்முகங் கொன்றகெஞ்சிற்—புல்லாளனுக"* என்றார் பிறரும். (கு)

விளக்கம்:—தன் மனைவியைக்கண்டு பயந்து நிற்பவன் எவனை அவன் அடைந்து உள்ள பொருள் தானே தேடிய பொருளாக இருந்தாலும் அப்பொருளால் நல்லவர்களுக்கு நல்ல அறங்களை எக்காலத்தும் செய்வதற்கிலலாமல் பயந்து கிடப்பான் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால் ஒருவன் தான் தேடிய பொருளை அறத்தின் பொருட்டாகச் செலவழித்தல் வேண்டும் என்று மனத்தில் விருப்பம் கொண்டானுமினும், அவ்வித தருமச்செயலைத் தேவர்களுக்கும், அரிய தவத்தவர்களுக்கும், சால்புடைய சான்றோர்க்கும், தாய் தந்தை முதலியோர்க்கும், ஒழுக்கமுடைய விருந்தினர்க்கும் செய்யவேண்டிய காலங்களிலும் செய்வதற்கில்லாது அஞ்சுவா

*இல்லாளை யஞ்சி விருந்தின் முகங் கொன்ற நெஞ்சிற், புல்லாளனுக மறந்தோற்கி லெனப் புகைந்து, வில்லா ளழுவம்பிளந்திட்டு வெகுண்டு நோக்கிக், கொல்யானை யுந்திக் குடைமேலுமோர் கோளெடுத்தான். (சீவகசிந்தாமணி; மண்மகளிலம்பகம்—217)

னென்றும், இவைகளுக்கெல்லாம் காரணம் தன் மனைவியினிடத்தே கொண்டிருக்கின்ற இன்பம் ஒன்றே யென்றும், ஆதலால் இல்லா இன்பமாகிய ஒன்றின் பொருட்டாகப் பெண்வழிச் செல்பவனுக்கு நிலைக்கும் இன்பமாகிய பேரின்பத்தை அடைவதற்கு இல்லா மற்போம் என்றும் அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், 'பெண்வழிச் செல்பவன் ஒருவன் வானவுலகத்து வாழும் தேவர்களில் ஒருவனைப்போல் செல்வத்தைப் பெற்றுவாழ்வானாயின் அக்காலத்து உலகோர் அவனை எவ்விதம் கருதுவர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

906. இமையாரின் வாழினும் பாடிலரே யில்லா
ளமையார்தோ ளஞ்சு பவர்.

(பரி.) இ-ள். இல்லாள் அமை ஆர் தோள் அஞ்சுபவர் = தம்மில்லாளுடைய வேய்போலுந் தோளினை அஞ்சுவார்,—இமையாரின் வாழினும் பாடு இலர் = வீரத்தாற் றுறக்கமெய்திய அமரர்போல இவ்வுலகத்து வாழ்ந்தாராயினும், ஆண்மையிலர். எ-று.

அமரர்போல வாழ்தலாவது :—பகைத்த வீரர் தோள்களையெல்லாம் வேறலான் நன்கு மதிக்கப்பட்டு வாழ்தல். அது கூடாமையின், 'வாழினும்' என்றார். அமையார்தோளெனவே, அஞ்சுதற் காரணத்தது எண்மை கூறிய வாறு. வீரர்தோள்களை வென்றாராயினும் இல்லாடோள்களை அஞ்சுவார் ஆண்மையில ரென்பதாம். இவை நான்குபாட்டானும் அவளையஞ்சுதற் குற்றங் கூறப்பட்டது. (சு)

விளக்கம்:—தம் மனைவியினுடைய மூங்கில்போன்று அழகு வாய்ந்த தோளினை விரும்பி அவளுக்கு அஞ்சுகின்றவர் தம்முடைய வீரத்தால் பகைவரை யெல்லாம் வென்று தேவநாடு அடைந்த அமரரென்னும் தேவர்களைப்போல இவ்வுலகத்தில் வாழ்ந்திருந்தார்களாயினும், ஆண்மையில்லாதவரே ஆவர் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், தம்மோடு பகைத்த வீரர்களுடைய தோள்களை எல்லாம் வெட்டி வெற்றிகொண்டு அவ்வெற்றியால் பலராலும் நன்கு மதிக்கப்பட்டு வாழ்ந்தவர் மறுமையில் தேவ உலகத்தை அடைவது திண்ணமென்று நூல்கள் கூறுகின்றமையால், அவ்விதம் தோள்வல்லமை உடையவராக இருந்து ஒருகால் தம் பகைவரை

வென்று அரசாளக் கூடியவராய் இருந்தாலும், வீரர்கள் தோள்களை வெட்டிய இவர் தம் மனைவியின் தோளுக்கு அஞ்சுவாராயின், வீர முடையரென்று அறிவதற்காகாது என்று அறிந்தோ மென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "மேற்கூறிய நான்கு திருக்குறள்களாலும் மனைவிக்குப் பயந்து நடப்பதால் வரும் குற்றங்கள் இவை என உணர்ந்தோம். பெண்வழிச் செல்பவன் ஆண்மை உடையவனாயினும் ஆண்மை இல்லாதவன் என்றமையால் அவனது ஆண்மையை உலகோர் எவ்விதம் கருதுவர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

907. பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி னாணு பெண்ணே பெருமை யுடைத்து. [டைப்

(பரி.) இ-ன். பெண ஏவல் செய்து ஒழுகும் ஆண்மையின்=நாணின்றித் தன்னில்லாளது ஏவற்றொழிலைச் செய்து நிரிகின்றவனது ஆண்டன்மையின்—நாண் உடைப் பெண்ணே பெருமை உடைத்து=நாணினை யுடைய அவள் பெண்டன்மையே மேம்பாடுடைத்து. எ-று.

நாணுடைப் பெண்ணென வேண்டாது கூறியது அவளேவல் செய்வானது நாணின்மை முடிதற்கு காதலின், அம்மறுதலைத்தொழில் ஒருவிக்கப் பட்டது. ஏவல்—ஆகுபெயர். இறுகிக்கட் பெண்ணென்பதூஉம் அது. ஏவல் செய்வித்துக் கோடற்சிறப்புத்தோன்றப் பெண்ணேயெனப் பிரித்தார். (எ)

விளக்கம்:—நாணமில்லாது, தன் மனைவியால் ஏவப்படுகின்ற ஏவல் தொழிலைச் செய்து நிரிகின்ற ஒருவனது ஆண்மைத் தன்மையைக் காட்டிலும், இயல்பாகவே நாண் என்னும் தன்மையை வேலியாக அடையவேண்டிய அம்மனைவியின் பெண் தன்மையே மிக மேம்பாடு உடையதாகும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. சீர்தாவது, நாணத்தையே ஆபரணமாகப் பூணவேண்டிய ஒரு பெண்ணினது ஏவலை மேற்கொண்டு இவன் தனது நாணத்தை இழந்து பலரால் பழிக்கப்பட்டு உயிர் வாழ்கின்றானதலால் அப்பெண்ணைக் காட்டிலும் ஆண்மகனென்று சொல்லிக்கொள்ளும் இவனுடைய தகுதியே மிகுதியும் இழிவுடையதாகும் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம்

*"ஆண்மை" என்பதற்கு ஆளுந்தன்மை யென்றும், "பெண்மை" என்பதற்கு அமைதித்தன்மை யென்றும் நச்சினார்க்கினியர் பொருள் கூறியுள்ளார்.

பெண் ஏவல் செய்வார் தம் நட்பினர்க்கு ஏதேனும் குறை உண் டாகுமாயின் தீர்க்கவல்லவரோ ?" என்னலும், ஆசிரியர் கூறுவாரா யினர்.

908. நட்டார் குறைமுடியார் நன்ருற்ருர் நன்னுதலாள் பெட்டாங் கொழுகு பவர்.

(பரி.) இ-ள். நன்னுதலாள் பெட்ட்ங்கு ஒழுகுபவர் = தாம்வேண்டிய வாறன்றித் தம் மனையாள் வேண்டியவாறு ஒழுகுவார்—நட்டார்குறை முடி யார் = தம்மொடு நட்புச் செய்தார் உற்றகுறை முடிக்கமாட்டார்,—நன்று ஆற் ருர் = அதுவேயன்றி மறுமைக்குத் துணையாய அறஞ்செய்யவுமாட்டார். எ-று.

நன்னுதலா ளென்பதனை "அமையார்தோள்"* என்புழிப்போலக் கொள்க. அவடானே அறிந்து ஏவலும் பொருள்கொடுத்தலுங் கூடாமை யின், இருமைக்கும் வேண்டுவன செய்யமாட்டா ரென்பதாம். (அ)

விளக்கம்:—எவர் தாம் விரும்பிய வண்ணம் செய்வதற்கில் லாமல் தம் மனைவி விரும்பியவண்ணம் செய்து உயிர் வாழ்கின் ருரோ அவ்வித ஒழுக்கமுடையார் தம் நட்பினர்க்கு கேர்ந்த ஏதே னும் ஒரு குறையைத் தீர்க்க வல்லவர் ஆகார் என்றும், அதுவல்லா மலும் மறுமைப் பயனை உண்டாக்கும் நல்லறத்தினையும் செய்யவல்ல வர் ஆகார் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. இதனல் சேர்த்த பொருள்கள் தம்முடையவாக இருப்பினும் தாமே கேட்டவர்க்குக் கொடுத்தலும் குறைதீர்த்தலும் கூடாமையான், நட்டார்குறை முடித்து இம்மைக்கு ஆகவேண்டிய புகழையும் அறத்திற்குரிய பொருளை கொடுத்து மறுமைக்கு ஆகவேண்டிய புண்ணியத்தையும் தேடுவதற்கில்லாமல் போவரென்று அறிந்தோமென்றனர். அது கேட்ட மாணுக்கர், "இவ்வித பெண் ஏவல் செய்வார் தாம் விரும்பிய இன்பத்தை ஆயினும் பெறுவரோ ?" என்னலும், ஆசிரியர் கூறு வாராயினர்.

909. அறவினையு மான்ற பொருளும் பிறவினையும் பெண்ணேவல் செய்வார்க ணில்.

(பரி.) இ-ள். அறவினையும் = அறச்செயலும்—ஆன்ற பொருளும் = அது முடித்தற்கு ஏதுவாய பொருட்செயலும்—பிறவினையும் = அவ்விரண்டின்

*திருக்குறள்—906.

வேருய இன்பச்செயல்களும்—பெண் ஏவல் செய்வார்கண் இல்=தம்மனை யாள் ஏவல் செய்வார்மாட்டு உளவாகா. எ-று.

புலன்களைந்தாகலின், பிறவினை யெனப் பன்மையாயிற்று. அவை நோக்கி அறச்செயல் பொருட்செயல்கள் முன்னே யொழிந்தார்க்குத் தலைமை அவள் கண்ணதாகலின், பின் அவைதாமும் இலவாயினவென்பது தோன்ற, அவற்றைப் பிரித்துக் கூறினர். இவை மூன்றுபாட்டானும் அவளே வல்செய்தற் குற்றங் கூறப்பட்டது. (கூ)

விளக்கம்:—தம்மனையாள் இட்ட வேலைகளைச் செய்து உயிர் வாழ்கின்ற மக்களிடத்து அறத்திற்கு உரிய செயலாவது, அவ்வறத்தை முடித்தற்கு உரிய பொருளைச் செய்யும் செயலாவது, அவ்விரண்டிற்கும் வேருகிய இன்பத்தை உண்டாக்கும் செயல்களாவது உண்டாகமாட்டா என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், முன்னர் அறத்தினையும், பொருளையும் தேடுவதற்குப் பெண் ஏவல் செய்வார்க்குக் கூடாது என்பவர் இன்பத்தின் பொருட்டே பெண் ஏவல் செய்து கிடக்கின்ற இவ்வறிவிலானுக்கு அவ்வின்பமொன்றுவது கைகூடுமோ எனின்? அவ்வின்பமும் அவள் விரும்பிய காலத்தே இவன் அடையக் கூடுமே அன்றி இவன் விரும்பிய காலத்து விரும்பிய வண்ணம் அடைதற் கில்லாமல் போகுமாதலால், இவன் அடைகின்ற இன்பமும், அடையாத இன்பமே என்று கூறுவாராய், அவ்வின்பமும் இல்லை என்று பிரித்துக் காட்டினர். ஐம்புலன்களாலும் இன்பம் அனுபவிப்பது இயல்பு ஆதலால், இன்பச் செயல்கள் என்று பன்மையால் காட்டி எல்லா இன்பங்களையும் விரும்பிய வண்ணம் எய்தாத காலத்து இன்பம் அனுபவிக்க நின்ற ஒருவனுக்கு அவன் அனுபவித்த இன்பம் இன்பமாகாது என்று மறுத்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "மேற்கூறிய மூன்று திருக்குறள்களாலும் இன்பம் விரும்பிப் பெண் ஏவல் செய்வார்க்கு வரும் குற்றங்களே அறிந்தோம். ஆயின், இவ்வித பெண்வழிச் செல்லல் என்னும் பேதைமை எவரிடத்து உண்டாகாதிருத்தல் கூடும் என்பதை விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

910. எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில். [ஞான்றும்

(பரி.) இ-ள். எண்சேர்ந்த நெஞ்சத்து இடன் உடையார்க்கு=கருமச் சூழ்ச்சிக்கட்சென்ற நெஞ்சத்தினையும் அதனிலுள செல்வத்தினையும் உடைய ராய வேந்தர்க்கு,—பெண் சேர்ந்து ஆம் பேதைமை எஞ்ஞான்றும் இல்= மனையாளைச் சேர்தலான் விளையும் பேதைமை எக்காலத்தும் உண்டாகாது.

"இடனில்பருவத்தும்" *எனவும் "இடனின்றியிரந்தோர்க்கு" †எனவும் வந்தமையான், இடனென்பது அப்பொருட்டாதலறிக. இளமைக்காலத்து மென்பார், 'எஞ்ஞான்றும்' என்றார். அப்பேதைமையாவது:—மேற்சொல்லிய விழைதல், அஞ்சல், எவல்செய்தலென்னும் மூன்றற்குங் காரணமாயது. எதிர் மறைமுகத்தான் அம்மூன்றும் இதனுற் பெருகுத்துக் கூறப்பட்டன. (ம)

விளக்கம்:—தாம் எடுத்த தொழிலுக்கு உரிய உபாயங்களைச் செய்வதற்குச் செல்லுகின்ற மனத்தினையும் அவ்விதம் செய்து அத் தொழிலால் வந்த செல்வத்தினையும் உடையவராகிய அரசர்க்கு மனைவியின் வழிச்சென்று அவளால் விளையும் அறிவிலாக் குணங்கள் எந்தக் காலத்தும் உண்டாகா என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், எவனொருவன் நல்வழியில் பொருளைச் சம்பாதிக்க எண்ணி அதற்குரிய நற்கருமங்களைச் செய்தற்கு உரிய உபாயங்களையே பலகாலும் எண்ணிச் செய்கின்றானே அவன் மனம் அவ்வுபாயங் களிலேயே எக்காலத்தும் செல்லுமென்றும, அவன் தேடிய பொருள் நல்ல அறத்திற்கே உபயோகப் படுமென்றும், அவ்விதம் தன் முயற்சியால் பொருளைச் சம்பாதிக்கின்ற அவன் ஐம்புலன்கள் ஆதி தம் மனைவியினிடத்து இன்பம துய்க்க எண்ணுவானையினும அவளைத் தன் வழி நிற்கச் செய்து தான் அவள் வழிச் செல்லா னாய் இருப்பன் என்றும், அவ்விதம் பெண்வழிச செல்லாத அவன் முதுமைப் பருவத்தில் அல்லாமல் பெண்ணை விட்டுப் பிரியக் கூடாத இளமைப் பருவத்தும் பெண்வழிச் சென்று இன்பம் துய்த்து பேதைமை அடைய மாட்டான் என்றும அறிந்தோமென் றனர். அது கேட்ட மாணக்கர், "பெண்வழிச் சென்று பேதைமை அடையாத ஒருவன் பெண்ணை விரும்புதலும, பெண்ணிற்கு அஞ்சு

* திருக்குறள்—218. † கலி, பாலை—1.

தலும், பெண் இட்ட ஏவலைச் செய்தலும் ஆகிய குற்றங்களுள் செல்லாணென்றும், ஏனையோர் செல்வரென்றும், பெண்வழிச் சேறல் என்னும் இவ்வதிகாரத்தால் அறிகுதோம். இனிக் காமத்தால் உண்டாகும் ஏனைய குற்றங்களையும் எடுத்து விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

92. அதிகாரம்.

வரைவின்மகளிர்.

(பரி.) *அஃதாவது தந்தலம் விலைகொடுப்பார் யாவர்க்கும் விற்பதல்லது அதற்கு ஆவார் ஆகாதாரென்னும் வரைவிலாத மகளிரது இயல்பு; ஆதலால் தமக்குரிய மகளிரான் வருங் குற்றத்தின் பின் வைக்கப்பட்டது.*

விளக்கம்:—அதாவது, தம்முடைய அழகு முதலிய நலங்களை விலைகொடுத்து வாங்குவார் யாவராக இருப்பினும் விற்று விடுவது அல்லாமல் அதை விட்டு இவர் தக்கவர், இவர் தகாதவர் என்னும் அளவினை உட்கொள்ளாத காமக்கிழத்தியர்களாகிய பொதுமகளிர் இயற்கையாம். தமக்குச் சொந்தமாகிய மனையியரால் வரும் குற்றத்தையெல்லாம் எடுத்துக்கூறி இனி இப்பொதுமகளிரது இலக்கணத்தைக் கூற இவ்வதிகாரத்தை இங்கு வைத்தனர் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பொருள் ஒன்றையே கருதித் தம் மனத்தை யாவரிடத்தும் செலுத்தும் மாதருக்கு அன்பென்பது உண்டாகுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

911. அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடி
ரின்சொ லிழுக்குத் தரும். [யா

(பரி.) இ-ள். அன்பின் விழையார் பொருள் விழையும் ஆய் தொடியார் = ஒருவனை அன்புபற்றி விழையாது பொருள்பற்றி விழையும் மகளிர்—இன் சொல் இழுக்குத் தரும் = அது கையுறுத்துணையும் தாம் அன்புபற்றி விழைந்தாராகச் சொல்லும் இனியசொல் அவனுக்குப் பின் இன்னாமையைப் பயக்கும். எ-று.

பொருளெனபுழி இன் விகாரத்தாற் றொக்கது. ஆய்ந்ததொடியினையுடையா ரென்றதனானும், இனியசொல்லென்றதனானும், அவர் கருவி கூறப்

பட்டது. அச்சொல் அப்பொழுதைக்கு இனிதுபோன்று பின் வறுமை பயத்தலின், அது கொள்ளற்க வென்பதாம். (க)

விளக்கம் :—ஆபரணத்தால் அழகு பெறச் செய்து தம் நலத்தைப் பொருள் கருதி எவர்க்கும் விற்கின்ற பொதுமகளிர் ஒருவனை அன்புகாரணமாக விரும்புவது இல்லையாதலால், அவ்விதம் தமக்கு வேண்டிய பொருள்கள் தம் கையில் கிடைக்கும் வரையில் தாம் மிக அன்போடு புணர்ந்தவராய்ச் சொல்லுகின்ற இனிய சொற்களின் பொருட்டு அவர்களை விரும்பிச் செல்லுகின்ற ஒருவனுக்குப் பிறகு அவை துன்பத்தைக் கொடுக்கும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், அன்பென்பது சிறிதுமில்லாமல் பொருளொன்றையே கருதித் தம் மேனியை அணி முதலியவைகளால் அழகு பெறச் செய்து இனிய சொற்களைக் கூறி உயிர் வாழும் பொதுமகளிரது சொல் அவரோடு புணர்ந்த ஒருவனுக்கு அப்போது மிக இனிமையைத் தருவது போல் காணப்படினும், பொருளை இழந்து வறுமை வருங்காலத்துத் துன்பத்தை அடைவிக்குமாதலால், அப்பெண்களது நட்பினைக் கொள்ளுதல் கூடாது என்று அறிந்தோமென்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்வித தகுதியுடையார் தம் நட்பினை விடுதற்கு உபாயம் நம் நாயனார் என்ன கூறுகின்றனர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

912. பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர் நயன்றூக்கி நள்ளா விடல்.

(பரி.) இ-ள். பயன் தூக்கிப் பண்பு உரைக்கும் பண்பு இல் மகளிர் = ஒருவனுக்கு உள்ளபொருளை அளந்தறிந்து அஃதெய்துந்துணையும் தம்பண்புடைமை சொல்லும் பண்பில்லாத மகளிரது—நயன் தூக்கி நள்ளா விடல் = ஒழுகலாற்றினை ஆராய்ந்தறிந்து அவரைப் பொருந்தாது விடுக. எ-று.

பண்பு சொல்லின்க ணல்லது தங்கட்கிடவாமை தோன்றப் 'பண்பின் மகளிர்' என்றும், அவர்க்கு அது சாதிதருமமாதல் நூலானேயன்றி அவர் செயலானுமறிந்தென்பார் 'நயன்றூக்கி' என்றும், அவ்வறிவு அவரை விடுதற்கு உபாயமென்பது தோன்றப் பின் 'நள்ளாவிடல்' எனறுங் கூறினார். (உ)

விளக்கம்:—ஒருவனிடத்தே உள்ள பொருளின் அளவினை அறிந்து அதற்குத் தக்க அளவாக அப்பொருளை அடையும் வரை

யும் தம்முடைய அன்புடைமையெல்லாம் வாக்கால் கூறும் நற் குணமில்லாத பொதுமகளிருடைய ஒழுக்கத்தினை நூலாலும், அனுபவ ஞானத்தாலும் அறிந்து அவரைச் சேராது விடுதல் வேண்டும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, வாக்களவாகத் தமக்கு உள்ளதாகச் சொல்லும் அன்பு முதலியவைகளைக் கருவியாகக் கொண்டு மயக்கும் ஜாதி தர்மமுடைய அப்பொதுமகளிரை நன்றாக அறிந்து அவரிடத்துச்சேராது அவரை முற்றவும் விடுதலே உபாயமாகும் என்று அறிந்தோமென்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் வாக்களவாகக் கூறி, மனத்தால் வஞ்சித்து நிற்கின்ற அம்மகளிரிடத்து முயங்குகின்ற காலத்து அச்சேர்க்கையானது பொருள் கொடுத்துச் சேருகின்ற ஒருவனுக்கு எவ்விதமான இன்பத்தைத் தரும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

913. பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையில் பிணந்தழீஇ யற்று. [றையி

(பரி.) இ-ள். பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம்=கொடுப்பாரை விரும்பாது பொருளையேவிரும்பும் பொதுமகளிரது பொய்ம்மையையுடைய முயக்கம்—இருட்டு அறையில் எதில் பிணம் தழீஇயற்று=பிணமெடுப்பார் இருட்டறைக்கண்ணே முன்னறியாத பிணத்தைத் தழுவினற்போலும். எ-று.

பொருட்குமுயங்கும் மகளிர் கருத்துஞ்செயலும் ஆராயாது சாதியும் பருவமும் ஒவ்வாதானை முயங்குங்கால் அவர்குறிப்புக் கூவிக்குப் பிணமெடுப்பார் காணப்படாததோரிடத்தின்கண் இயைபில்லாததோர் பிணத்தை எடுக்குங்கால் அவர்குறிப்போடொக்குமெனவே, அசுத்தால் அருவாநின்றும் பொருணேக்கிப் புறத்தாற்றழுவுவார்; அதனை யொழிகவென்பதாம். இவை மூன்றுபாட்டானும் அவர்சொல்லும் செயலும் பொய்யென்பது கூறப்பட்டது. (உ)

விளக்கம்:—பொருள் கொடுப்பவர்களை விரும்பாமல் கொடுக்கின்ற பொருளையே விரும்புகின்ற பரத்தையரது பொய்யாகிய புணர்ச்சியானது பிணமெடுப்பதே தொழிலாகக் கொண்ட பிணமெடுப்பார் ஓர் இருட்டறையில் முன் ஏக்காலத்து மறியாத பிணமொன்றினைத் தழுவிக் கொண்டால் எவ்விதமோ, அவ்விதமாகும்

என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், பொருள் ஒன்றி னையே தங்களுக்குப் பொருளாகக் கொண்டு ஒருவனுடைய குலம், வயது இவைகளை யெல்லாம் ஒரு சிறிதும் ஆராயாது இழிகுல மூடையவனேனும், வயதிற் சிறியனேனும், வயதில் முதியவனே னும், எத்தகுதியுடையனேனும் அவனிடத்தில் மூயங்குகின்ற பொதுமகளிர் ஒருவனோடு புணரும்காலத்து அவர்புணர்ச்சியானது கூலிக்குப் பிணமெடுப்பவர் கண்ணுக் காணக்கூடாத இருள் நிறைந்த ஓர் இடத்தில் தமக்கு யாதொரு சம்பந்தமுமில்லாத ஓர் பிணத்தி னைத் தழுவி எடுக்க நேருமாயின் எடுக்கின்ற அககூலியாளர் அப் பிணத்தை எடுக்குங்கால் மனத்தில் மிகுதியும் அருவருப்புடனே புறத்தில் கூலியின் பொருட்டே தூக்கித் தழுவுவதுபோலும். ஆத லால், இம் மகளிரும் பொருள் கருதிவந்தவன் எவனேனும் அவ னைத் தழுவிக் கொண்டாலும் மனத்துள் அன்பு சிறிது மில்லாதவ ராய் இருப்பர் என்றும் அவரது புணர்ச்சியானது உண்மைப் புணர்ச்சி ஆகாது என்றும் அறிஞர்தா மென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "மேற்கூறிய மூன்று திருக்குறள்களாலும் அப்பொது மகளிர் பேசும் சொற்களும், செய்யும் செய்கைகளும், பொய்மை என்று அறிஞர்தாம். இனி இவ்வித தகுதியுடையாரை எவர் கூடுவர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

914. பொருட்பொருளார் புன்னலந் தோயா ரருட்பொரு ளாயு மறிவி னவர்.

(பரி.) இ-ள். பொருட்பொருளார் புன்னலம் = இன்பமாகிய பொருளை இகழ்ந்து பொருளாகிய பொருளையே விரும்பும் மகளிரது புல்லியநலத்தை— அருட்பொருள் ஆயும் அறிவினர் தோயார் = அருளோடு கூடியபொருளை ஆராய்ந்துசெய்யும் அறிவினையுடையார் தீண்டார். எ-று.

அறமுதலிய நான்கும் பொருளெனப்படுதலின், பொருட்பொருள் அருட்பொருளென விசேடித்தார். புன்மை = இழிந்தார்க்கே உரித்தாதல். தாம் விரும்புகின்ற அறத்திற்கு அவர்மெய்ந்நலம் மறுதலையாகலின், தோயா ரென்பதாம். (ச)

விளக்கம்:—இருவர் புணரும் காலத்து உண்டாகும் இன்ப மாகிய பொருளை விரும்பாமல் பொருளாகிய பொருளையே மனத்

தால் விரும்பும் பொது மகளிருடைய அற்பமாகிய அழகு முதலிய நன்மைகளே அருளென்பதே பொருள் என்று உணர்ந்து அருட் பொருளையே ஆராய்ந்து தாம் செய்யும் செயல்களைச் செய்கின்ற பேரறிவினை உடையவர் அவர்களை விரும்பித் தீண்டமாட்டார் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால் உலகத்து மக்கள் விரும்பு வனவாகிய அறம், பொருள், இன்பம், வீடாகிய நான்கு பொருள் களுள் பொருட் பொருளையே உயர்வாகக் கொண்டு வஞ்சித்துப் பொருள் தேடும் பொதுமகளிரது அழகு முதலியவைகளைக் கண்டு அருட்பொருளையே பொருளென்று கொண்டு அவ்வருள்வழி நடக் கும் பேரறிஞர் தம் அறத்திற்கு இடையூறு செய்யும் அவர் மெய் யின் நலம் கொண்டு அவரிடத்துச் சேரார் என்றும், அற்ப அறி வினை உடையவரே அவர் சொல், செயல் முதலியவைகளில் மயங்கி அவரைப் புணர்வரென்றும் அறிக்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பேரறிவாளர் எவ்விதம் அவரது அற்பமாகிய அழகு முதலியவைகளை இகழ்ந்து நீக்குகின்றனர்? அவ்வறிவுடையோர்க்கு உள்ள ஆற்றல் என்ன?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

915. பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின் மாண்ட வறிவி னவர்.

(பரி.) இ-ள். மதிநலத்தின் மாண்ட அறிவினவர்=இயற்கையாகிய மதி நன்மையான் மாட்சிமைப்பட்ட செயற்கையறிவினையுடையார்—பொது நலத் தார் புன்னலம் தோயார்=பொருள் கொடுப்பார்க்கெல்லாம் பொதுவாய ஆசையினையுடைய மகளிரது புல்லிய நலத்தைத் தீண்டார். எ-று.

மதிநன்மை=மூற்பிறப்புக்களிற் செய்த நல்வினைகளான் மனந்தெளி வுண்டாதல். அதனானன்றிக் கல்வியறிவு மாட்சிமைப்படாமையின் 'மதி நலத்தின் மாண்டவறிவினவர்' என்றும், அவ்வறிவுடையார்க்கு அவராசை யது பொதுமையும் மெய்ந்நலத்தது புன்மையும் விளங்கித் தோன்றலின் 'தோயார்' என்றுங் கூறினர். (இ)

விளக்கம்:—இயற்கையாகவே தமக்கு உள்ள அறிவின் மிகு தியோடு மாட்சிமைப் பட்ட செயற்கை அறிவினையும் உடைய பெரி யோர் பொருள் கொடுப்பவர் எவராயினும் அவர்களுக்கெல்லாம் பொதுவாகவே மிக ஆசை உடையவர் போல் நடிக்கும் பொது

மகளிரது அற்ப அழகு முதலியவைகளைக் கண்டு அவரைத் தீண்ட மாட்டார் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், முன் பிறப்புகளில் செய்த கல்வினையின் பலனால்தெளிந்த மனத்தினையும், இயற்கை அறிவினையும், அதனோடு செயற்கையாகிய கல்வி அறிவினையும் பெற்றுள்ள அப்பேரறிவாளர் அவ்வறிவால் உண்மையும், பொய்மையும் உணரவல்லவராதலால், அப்பொதுமகளிர் பொய்யாக உணர்த்தும் அவர் ஆசையின் தன்மையையும் அவர்கள் தேகத்தின் மேனியையும் கண்டியாரும் மயங்குகின்ற அத்தேகத்தைத் தாம் தீண்டி முயங்க மாட்டாரென்றும், அவ்விதம் அல்லாதாரே அப் பொதுமகளிரது மயக்க வலையில் சிக்கி மயங்கிப் போவரென்றும் அறிந்தோமென்றனர் அதுகேட்ட மாணாக்கர். "மயக்க அறிவினை உடையவர் தம் மகளிரை விட்டு அப்பொதுமகளிர் புன்னலத்தை விலை கொடுத்து ஏன் தீண்டுகின்றனர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

916. தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப் புன்னலம் பாரிப்பார் தோள்.

(பரி.) இ-ள். தகை செருக்கிப் புன்னலம பாரிப்பரா தோள் = ஆடல் பாடல் அழகென்பனவற்றைற் களித்துத் தம்புல்லிய நலத்தை விலைகொடுப் பார் யாவர்மாட்டும் பரப்பும் மகளிர்தோளினை—தம் நலம் பாரிப்பார் தோ யா = அறிவொழுக்கங்களாலுய தமபுகழை உலகத்துப் பரப்புதற்குரிய உயர்ந் தோர் தீண்டார்; (எ - று.)

ஆடன் முதலிய மூன்றுமுடைமை அவர்க்கு மேம்பாடாகலின் 'தகை' என்றும், தோயின் அறிவொழுக்கங்கள் அழியுமாகலின் அவற்றைற் புகழ்பரப்பு வார் 'தோயார்' என்றுங் கூறினுள். தந்நலமென்புழி நலம் ஆகுபெயர். இவை மூன்றுபாட்டானும் அவரை உயர்ந்தோர் தீண்டாரென்பது கூறப்பட்டது.

விளக்கம்:—உலகத்தரால் விரும்பப்படும் ஆடல் பாடல் அழகு என்னும் கருவியைக்கொண்டு தமது அற்பமாகிய இன்பத் தினை விலைகொடுத்து வாங்குவோர் யாவர்க்கும் விற்கும் பரத்தை யர் தோளினை அறிவு ஒழுக்கங்களால் தம் புகழைப் பரப்பவேண் டிய தகுதி யுடையவர் சேரமாட்டார் என்று இத்திருக்குறள் கூறு கின்றது. இதனால், பொது மகளிர் ஆடவரை மயக்குவது ஆடல்,

பாடல், அழகு, என்பனவற்றுலென்றும், அவ்வாடல் பாடல் அழகு என்பனவற்றை விரும்பித் தமக்கு உரிய மகளிரையும் விட்டு அவர் மயக்கத்தில் சிக்கிப் பொருளையும் கொடுத்துப் புகழையும் இழந்து, ஊனையும் அறிவிலாதார் இழப்பாரென்றும், ஏனைய அறிவு ஒழுக்கங்களால் இம்மைப் பயனுகிய தம்முடைய புகழைப் பரப்ப எண்ணிய பெருத்த அறிவினையுடையோர் அப் பொதுமகளிரைத் தீண்டாரென்றும் அறிந்தோ மென்றனர். அதுகேட்ட மாணுக்கர், "உயர்ந்தோர் அப் பொதுமகளிரைத் தீண்டாரென்பதை மேற் கூறிய மூன்று திருக்குறள்களாலும் அறிந்தோம். ஆயின் அப் பொதுமகளிரை விரும்பும் புல்லறிவாளர் எவ்விதம் மயங்குகின்றனர்? அதற்குக் காரணமென்ன?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

917. நிறைநெஞ்ச மில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற் பேணிப் புணர்பவர் தோள்.

(பரி. இ-ள். நெஞ்சின் பிற பேணிப் புணர்பவர் தோள்=நெஞ்சினுற் பிறவற்றை ஆசைப்பட்டு அவை காரணமாகக் கொடுப்பாரை மெய்யாற் புணரும் மகளிர் தோள்களே—நிறை நெஞ்சம் இல்லவர் தோய்வர்=நிறையாற்றிருத்திய நெஞ்சமில்லாதார் தோய்வர்; (எ - று.)

பொருளும் அதனுற் படைக்கப்படுவனவும் விரும்பும் நெஞ்சு அவற்றின் மேலதாகலின், புணர்வது உடம்புமாத்திர மென்பதறிந்து அதுவழி ஓடாது நிற்கும் நெஞ்சினையுடையார் தோயாமையின், அஃதிலார் 'தோய்வர்' என்றார்.

விளக்கம் :—மனத்தினிடத்தே பொருளையும் அப்பொருளினுல் உண்டாகும் பணி முதலியவற்றையும் அடைய ஆசைகொண்டு அவைகாரணமாகத் தமக்குப் பொருள் கொடுக்கின்றவர்களே மனத்தால் விரும்பிப் புணராது உடம்பு ஒன்றினால் மாத்திரம் புணர்ந்து நிற்கும் பொதுமகளிராய பெண்களுடைய தோள்களே நிறை என்னும் நியதியால் திருத்திய மனத்தையடையாதவரே பொருத்துவர் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால் பொது மகளிர் தம்மிடத்தே வரும் ஆடவரைப் பொருள் ஒன்றையே கருதி அவரை மிக விரும்புவார் போல் நடித்துத் தேக மொன்றினை மாத்திரம் அவர்க்கு இன்பத்தின் பொருட்டாகக் கொடுத்துப் புணரும்

காலத்தும் தம் மனத்தினை இனிப் பொருள் கொடுத்துப் புணர வரும் ஏணையோர் வருகையையும் காலத்தையும் நோக்கிச் செலுத்துவாராதலால் இவ்விதம் மனத்தில் அன்புகொள்ளாத மகளிரைப் புணர்ந்து இன்பத்தைப் பெறுபவர் தம் மனத்தை நல்வழியில் செலுத்தாத புன்மக்களே யாவர். ஏனெனின்? வறுமையை அடைந்து துன்பத்தை எய்தி, புகழினைப் போக்கி, மறுமை இன்பத்தையும் இழக்கும் ஊழ்வலியினையும் உடையராதலால் அவரைப் பொருந்துகின்றாரென்றும் அவ்விதமில்லாத நல்லறிஞர் அவரைப் புணராரென்றும் அறிந்தோ மென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் மனத்தினிடத்தே திருத்தமடையாதவர் பொது மகளிரை விரும்புங் காலத்து அப் பொதுமகளிரிடத்து உண்டாகும் விருப்பம் அவர்க்கு எவ்விதமாக இருக்கும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

918. ஆயு மறிவினர் லார்க் கணங்கென்ப மாயா மகளிர் முயக்கு.

(பரி.) இன் மாய மகளிர் முயக்கு = உருவுசொற்செயல்களான் வஞ்சித்தலே வல்ல மகளிரது முயக்கத்தை — ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கு என்ப = அவ்வஞ்சனை ஆராய்ந்தறியுமறிவுடையரல்லார்க்கு அணங்குதாக் கென்று சொல்லுவார் நூலோர்; (எ - று.)

அணங்கு = காமநெறியான் உயிர்கொள்ளும் தெய்வமகள். தாக்கு = தீண்டல். இவ்வுருவகத்தான் அம்முயக்கம் முன் இனிதுபோன்று பின் உயிர் கோடல்பெற்றும். இது நூலோர் துணிவென்பதுதோன்ற அவர்மேல்வைத்துக் கூறினர். அப்பெயர் அஃறிணையான் வந்தது. (அ)

விளக்கம்:—தம்முடைய உருவத்தாலும், சொற்களாலும், செயல்களாலும் வஞ்சிக்கும் வல்லமையுடைய பொது மகளிருடைய புணர்ச்சியானது அவ்வஞ்சகத்தினை ஆராய்ந்து அறியும் அறிவு இலீலாதார்க்கு அணங்கு என்னும் காம நெறியால் ஒருவன் உயிரைக் கொள்ளை கொள்ளும் தெய்வமகள் தீண்டுவது போல் இருக்குமென்று நூல் வல்லவர்கள் சொல்லுவரென்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், மனத்தால் விரும்பாது தம்முடைய தேகத்தின் அழகினாலும், வஞ்சகமாகிய சொற்களாலும் உடலி

ரண்டு உயிர் ஒன்று என்பது போல் புணருகின்ற புணர்ச்சியால், வருகின்ற எவரையும் வஞ்சிக்கவல்ல பொதுமகளிரது வஞ்சகத்தை அறிந்து கொள்ளும் தன்மை இல்லாதவர்கள் காமநெறி கொண்ட உயிரைக் கொள்ளை கொள்ளுகின்ற தெய்வமகள் என்பாள் தீண்டி னால் தீண்டப்பட்ட அவ்வுயிர் அவளை உடலால் புணராமலே மனத் தால் புணர்ந்த போதிலும் எவ்வித்தம் நாளுக்குநாள் உடல் மெலிந்து உறுதி கெட்டுப் போய் விடுமோ? அதுபோல், மனத்தால் புணராத இப் பொதுமகளிரைத் தோய்ந்து, தோய்ந்த அவ்வுடலின் வன்மை கெட்டு நோய் முதலிய கொண்டு ஊழ்வலிக்குத் தக்க அள வாக இறந்துவிடுவர் என்று அறிந்தோ மென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வித்தம் அறிவிலாதார் பொதுமகளிரது சேர்க்கை யால் இன்பத்தை அடையாமலே உயிர் இழப்பரென்று அறிந் தோம். ஆயினும் அப்பொது மகளிரது இன்பத்தை விரும்பி அவ ரோடு கூடியுள்ளவரையில் அவரது வாழ்க்கையானது எவ்வித மிருக்கும் என்பதையும் அறிய விரும்புகின்றோம்" என்னலும், ஆசி ரியர் கூறுவாராயினர்.

919. வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப் பூரியர்க ளாழு மளறு.

(பரி.) இ-ள். வரைவு இலா மாண் இழையார் மென்றோள் = உயர்ந்தோர் இழிந்தோரென்னாது விலைகொடுப்பார் யாவரையும்முயங்கும் மகளிரது மெல் லியதோள்கள்—புரை இலாப் பூரியர்கள் ஆழும் அளறு = அக்குற்றத்தை யறியும் அறிவில்லாத கீழ்மக்கள் புக்கழுந்து நிரயம்; (எ - று.)

உயர்தற்கேதுவாகலின், 'புரை' எனப்பட்டது. சாதியானிழிந்தாரி னீக்குதற்குப் 'புரையிலாப்பூரியர்கள்' என்றும், அவர் ஆழ்தற்கேது உருவ முதலிய மூன்றுமெனின் பதுதோன்ற 'மாணிழையார் மென்றோள்' என்றும், அவர்க்கு அளறின்னே யிடையின்றிப் பயக்குமென்பது தோன்ற உருவக மாக்கியுங் கூறினர். (க)

விளக்கம்:—இவர் உயர்ந்தவர், இவர் இழிந்தவர் என்று சிறி தும் மனத்துக் கொள்ளாது தமக்குக் கொடுக்க வேண்டிய விலை யினைக் கொடுத்து நிற்பவர் எவரையும் புணரும் பொது மகளிரது மென்மையாகிய தோள்கள் அக்குற்றத்தை அறியாத அறிவில்லாத

கீழ்மக்கள் புகுந்து அழுந்துகின்ற நரகத் துன்பம் போல் இருக்கும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், பொது மகளிரது இயற்கை எக்குலத்தவரேனும் தம்மினும் மூத்தாரேனும், தம்மினும் இளையாரேனும், நோய் கொண்டவரேனும் அவரிடத்து உள்ள குற்றங்களே நோக்காது பொருள் ஒன்றையே கருதி புணர்வதென்றும், அவ்விதம் புணருகின்ற அம்மங்கையரது ஆடல், பாடல், அழகு என்பனவற்றில் அறிவிலாத மக்கள் மயங்கி அம்மயக்க அறிவால் அவரைப் புணர்ந்தார்களாயின் அப்புணர்ச்சியின் பயன் பெரியதோர் நரகத்துன்பமாகவே இருக்கும் என்றும் அறிந்தோம். ஆதலால் பொருள் கொடுத்துப் புணர்ச்சியை விரும்பியும், அப்புணர்ச்சியானது எண்ணிய இன்பத்தைத் தராது துன்பத்தையே தரும் என்று உணர்ந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர் "இவ்விதம் இவரது நட்பைக் கொண்டார்க்கு, இம்மையில் எதுவாகும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

920. இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

(பரி.) இ-ள். இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்=கவர்த்த மனத்தினையுடைய மகளிரும் கள்ளும் சூதுமென இம்மூன்றும்--திரு நீக்கப்பட்டார் தொடர்பு=திருமகளாற் புறக்கப்பட்டார்க்கு நட்பு. எ-று.

இருமனம்=ஒருவனேடு புணர்தலும் புணராமையும் ஒரு காலத்தேயுடைய மனம். கவறு—ஆகுபெயர். ஒத்தகுற்றத்தவராகலின், கள்ளும் சூதும் உடன்கூறப்பட்டன. வடநூலாரும் இக்கருத்தான் விதனமென உடன் கூறினர். வருகின்ற அதிகாரமுறைமையும் இதனானறிக. திணைவிரா யெண்ணிய வழிப்பன்மைபற்றி முடிபுகோடலின், ஈண்டு ஒரீற்றினையாற் கொண்டது. திருநீக்கப்பட்டமை இக்குறிகளான் அறியப்படுமென்பதாம். இவை நான்கு பாட்டானும் சேர்வார் இழிந்தோரென்பது கூறப்பட்டது. (ய)

விளக்கம்:—வஞ்சக மனத்தினை உடைய பொதுமகளிரும் கள்ளும், சூதும் என்று சொல்லப்படுகின்ற இம்மூன்றும் திருமகளால் வேண்டாமென்று நீக்கப்பட்டவர்களுடைய நட்பு ஆகும் என்று

இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, பொருள் கருதி ஒருவனை நாடி புணர்ந்து கொண்டிருந்தாலும் அப்புணருகின்ற பொதுமகளிருடைய மனமானது அக்காலத்தேயே வேறு ஒருவன் மீது பொருள் கருதிச் செல்லுகின்றது ஆதலால் அவர் மனத்தை இருமனமென்றும், அவ்விதம் புணர்ந்தவர்க்கு இன்பம் தாராது வறுமையினையும் துன்பத்தையும் உண்டுபண்ணுகின்ற அப்பொது மகளிர்க்குச் சமானமாக கள், சூது என்னும் இரண்டினையும் ஒன்று சேர்த்து அம்மூன்றினையும் திருமகளால் நீக்கப்பட்டாரது கட்பு என்று கூறினர். இம் மூன்று குற்றங்களையும் உடையவர் வறுமை அடைந்து இம்மைப் பயனுகிய புகழினையும் இழந்து, மறுமைப் பயனுகிய தேவபோகத்தையும் இழப்பர் என்னும் குறிப்பை அறிவிக்க வேண்டி வரைவின்மகளிரைப்பற்றி கூறி முடிக்கவேண்டிய இவ் வதிகாரத்துக் கடையில் உள்ள இத்திருக்குறளில் வினைய இரண்டு அதிகாரங்களாகிய கள்ளுண்ணுமை, சூது என்பன இரண்டிற்கும் தோற்றுவாய்ச் செய்தனர் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "காமத்தால் வரும் நட்பின் தகுதிகளில் ஒன்றுகிய வரைவின் மகளிரைப்பற்றி அறிந்தோம். இனித் தோற்றுவாய் செய்த இரண்டினுள் கள்ளுண்ணுமையைப் பற்றியும் அறிவித்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

93. அதிகாரம்.

கள்ளுண்ணுமை.

(பரி.) இனி ஒழுக்கமும் உணர்வு மழித்தற்கண் அவ்வரைவின்மகளிரோ டொப்பதாய கள்ளினை யுண்ணுமையது சிறப்பு எதிர்மறைமுகத்தாற் கூறுகின்றார்.

விளக்கம் :—அதாவது ஒருவனது ஒழுக்கத்தையும், அறிவினையும் அழிக்குமிடத்தே அப் பொதுமகளிரோடு ஒப்பாக இருக்கும் கள்ளினைக் குடியாமையினது சிறப்பினை எதிர்மறை முகத்தால் சொல்ல ஆரம்பித்தனர் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "கள்

ஞண்பாரது தகுதியை ஒன்றன்பின் ஒன்றாகக் கூறல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

921. உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார்.

(பரி.) இ-ன். கட்காதல் கொண்டு ஒழுகுவார் = களளின்மேற்காதல் செய்தொழுகுமரசர்—எஞ்ஞான்றும் உட்கப்படார் = எஞ்ஞான்றும் பகைவரானஞ்சப்படார்;—ஒளி இழப்பர் = அதுவேயன்றி முன்னெய்தி நின்ற ஒளியினையுமிழப்பர். எ-று.

அறிவின்மையால் பொருள் படை முதலியவற்றாற் பெரியராயகாலத்தும் பகைவர் அஞ்சார், தம்முன்னோரா னெய்திநின்ற ஒளியினையும் இகழற் பாட்டான் இழப்பரென்பதாம் இவையிரண்டானும் அரசு இனிதுசெல்லாதென்பது இதனாற் கூறப்பட்டது. (க)

விளக்கம்:—கள்ளினை உண்ண ஆசை கொண்டு உண்டு அக்கள்ளின் வழி ஒழுகும் அரசரானவர் எக்காலத்தும் பகைவரால் அஞ்சக்கூடிய மதிப்பினை அடையமாட்டாரென்றும், அதுவல்லாமலும் இவருடைய பெரியோரால் இவரது சூடியானது முன்னர் அடைந்திருந்த மதிப்பினையும் இழந்து விடுவரென்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. ஏனெனின்? பொருள், படை முதலிய துணைக் காரணங்களெல்லாம் கொண்டு மிருதியும் பலமுடைய அரசராயிருந்தும் கள்ளினை உண்ணும் காலத்து அறிவினை இழக்கின்றார் ஆதலால், அக்காலத்து அவரைச் சுலபமாக வென்று விடுதல் கூடும் என்று பகைவர் எண்ணுவாராதலால் பகைவர் அஞ்சாரென்றும், கள் முதலியவை உண்ணுது மற்றை அரசர்களால் புகழப்பட்டிருந்த தம் முன்னோர் தேடிய மதிப்பினையும் பலர் இகழ்ச்சியால் இழந்து விடுவரென்றும், இவ்விதம் பகைவர் அஞ்சாமையாலும், முன்னர் தேடிய மதிப்பை இழந்தலாலும் இவ்வரசானது நன்றாக நடவாதென்றும் அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஒருவன் தன் பொருள் கொடுத்துக் கள்ளினை உண்ட காலத்து உண்ட அவனை எவ்விதத் தகுதியுடையார் இகழ்ந்து பேசுவர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

922. உண்ணற்க கள்ளை யுணினுண்க சான்றோரா
லெண்ணப் படவேண்டா தார்.

(பரி.) இ-ள். கள்ளை உண்ணற்க = அறிவுடையராயினும் அஃதிலராதற்கு ஏதுவாய கள்ளினை உண்ணுதொழிக, —உணில் சான்றோரால் எண்ணப்பட வேண்டாதார் உண்க = அன்றியே உண்ணல் வேண்டுவார் உளராயின், நல்லோரால் எண்ணப்படுதலே வேண்டாதார் உண்க. எ-று.

பெறுதற்கரிய அறிவைப் பெற்றுவைத்தும் கள்ளா னழிதுக்கொள் வாரை இயல்பாகவே அஃதில்லாத விலங்குகளுடனும் எண்ணுராகலின், 'சான்றோரா லெண்ணப்பட வேண்டாதா ருண்க' என்றார். (உ)

விளக்கம் :—அறிவுடையவராய் உள்ளோர் அவ்வறிவினை இழத்தற்குக் காரணமாகிய கள்ளினை உண்ணுது ஒழித்தல் வேண்டு மென்றும், அவ்வாறு அல்லாது அக்கள்ளினை உண்ணு எண்ணங் கொண்டிருப்பவர் எவரேனுமிருப்பாயின் நல்லறிவினை யுடைய வரால் மதித்தலே வேண்டாதவரே உண்ணுதல் வேண்டுமென்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, முன்னே நல்வினைப் பயனால் அறிவு அடைந்திருந்தும் கள்ளினாலே மயங்கி அவ்வறி வினை இழந்துவிடுவென்றவர்களை அவ்வித மும் கள்ளுண்டு மயங்காத செயற்கை அறிவற்ற மிருகங்களோடு ஒப்புமையாக உலகத்துள் ளார் எண்ணுதலில்லை என்றும், அதனால் உயர்ந்த ஒழுக்கத்தைக் கொண்ட சான்றோர் ஒருபொருளாக மதிக்கப்படவேண்டாதாரே நல்லறிவினைப்போக்கி பலதுன்பங்களையும் உண்டுபண்ணும் கள்ளினை உண்ணுதல் வேண்டும் என்றும் கூறியதாயிற்று என்றனர். ஆதலால் தம் பொருள் கொடுத்துக் கள்ளினை உண்பாரேனும், யாதொரு சம் பந்தமுமில்லாத அயலவர் தம் அறியாமையை நோக்கி இகழ்ந்து, பேசுவர் என்பது பெற்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "கள்ளுண்பார் சான்றோரால் ஒரு பொருளாக மதிக்கப்படார்" என்று கூறினீர். ஆயின், அவரது சுற்றத்தவரால் மதிக்கப்படு வரோ ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

923. ஈன்றாண் முகத்தேயு மின்னாதா லெம்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி.

(பரி.) இ-ள். ஈன்றாள் முகத்தேயும் களி, இன்னாது = யாதுசெய்யினும் உவக்குந்தாய் முன்பாயினும் கள்ளுண்டு களித்தல் இன்னாதாம்;—மற்றுச்

சான்றோர் முகத்து என் = ஆனபின், குற்றம் யாதும்பொருந்த சான்றோர் முன்பு களித்தல் அவர்க்கியாதாம். எ-று.

மனமொழிமெய்கள் தம்வயத்தவன்மையான் நாணழியும் ; அழியவே, என்றூட்கும் இன்னுதாயிற்று ; ஆனபின், கள் இருமையுங் கெடுத்தலறிந்து சேய்மைக்கண்ணே கடியுஞ் சான்றோர்க்கு இன்னுதாதல் சொல்லவேண்டுமோ வென்பதாம். (கூ)

விளக்கம் :—எவ்வித காரியத்தைச் செய்யினும் அதற்காக வெறுக்காது மகிழ்ந்த தாய் முன்னே ஆயினும் கள்ளினை உண்டு அறிவு மயங்குதல் துன்பமுடையதாகும் என்று கூறின், ஓர் குற்றத்தினையும் தாம் செய்யாது பிறர் செய்த காலத்தும் பொறுத்துக் கொள்வதற்கும் மனம் கொள்ளாத கல்லோர் முன்பு கள்ளுண்டு களிததல் அவர்க்கு எதுவாக இருக்கும என்று இத்திருக்குறள் விளைக்கின்றது. இதனால் கள்ளுண்பான் ஒருவனுக்கு மனம், வாக்கு, காயமாகிய மூன்றும் தன் வசமில்லாமல் போய்விடுமாதலால் அவ் வாறு போய்விட்ட காலத்து ஒருவனுக்கு இருக்கவேண்டிய நாண மென்னும் தூண் அழியும். அத்தூண் அழியவே தன்னைக் காத்துக்கொள்ள இருந்த உள்ளாடை முதலியனவு குலையும். இவ்விதம் ஓர் சிறிய ஆடையே இல்லாது தாய் மூன்னர் நிற்பாளையின் தான் பெற்றுவளர்த்த மகளையினும் தருணப்பருவத்து ஆடையற்றுநிற்கும் அத்தகுதியைப் பார்ப்பதற்கு மனம் கொள்ளாள் ஆதலால், காயும் வெறுப்பளென்றும், அத்தாய்மார் உள்ளும் ஈனய கைத்தாய் செவிலித்தாய் என்று உலகம் மயங்காவிதம் பெற்றெடுத்த தாய் என்று அறிவித்தற்கு ஈன்றாளென்றும் விதந்து கூறியதுடன் அவ்விதம் நற்றாயாகிய ஈன்றாளாலும் வெறுக்கப்படுகின்ற கள்ளினை இது இம்மை, மறுமை ஆகிய இரண்டையும் கெடுக்கக் கூடியது என்று அறிந்து வெகு தூரத்தில் காணு முன்னரே வெறுத்து ஓடுகின்ற நற்குணங்களமைந்த சான்றோர்க்கு அஃ கள்ளுண்டல் துன்பமாதல் சொல்லுதலும் வேண்டுமோ என்று கூறுவதால் கள்ளுண்பான் ஒருவனைச் சான்றோர் மாத்திரமல்லாமல் சூழ்றத்தவர் யாவரும் இகழ்ந்தே கூறுவர் என்பது அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "கள்ளை ஒருவன் உண்பானையின் முதலில் அவன் இழக்கின்ற சால்பு எது ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்

924. நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்
பேணுப் பெருங்குற்றத் தார்க்கு. [னும்

(பரி.) இ-ள். கள் என்னும் பேணுப் பெருங்குற்றத்தார்க்கு = கள்ளென்று சொல்லப்படுகின்ற யாவருமிகழும் மிக்க குற்றத்தினையுடையாரை = நாண் என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் = நாணென்று சொல்லப்படுகின்ற உயர்ந்தவள் நோக்குதற்கஞ்சி அவர்க் கெதிர்முக மாகாள். எ-று.

காணுதற்குமஞ்சி உலகத்தார் சேய்மைக்கண்ணே நீங்குவாகலிற் 'பேணு' என்றும், பின் ஒருவாற்றானுங் கழுவப்படாமையிற் 'பெருங்குற்றம்' என்றும், இழிந்தோர்பானில்லாமையின் 'நல்லாள்' என்றும் கூறினர். பெண்பாலாக்கியது வடமொழிமுறைமைபற்றி. இவை மூன்றுபாட்டானும் ஒளியிழத்தற்காரணங் கூறப்பட்டது. (ச)

விளக்கம் :—எவராலும் இகழப்படும் கள்ளுண்டலென்று சொல்லப்படுகின்ற பெரியதோர் குற்றத்தினை உடையவரிடத்து நாண் என்று கூறப்படும் உயர்ந்தவள் அக்கள்ளுண்டாரைப் பார்ப்பதற்கஞ்சி அவர்க்கு எதிர்முகமாக வரமாட்டாள் என்று இத்திருக்குறள் கூறுகின்றது., இதனால், கள்ளுண்ட ஒருவனை உலகத்தவர் பார்த்தவுடனே தூரத்திலேயே அவன் எதிர் தோன்றுது மறைந்து கொள்வது இயல்பு ஆதலால் அவ்வாறு ஒருவராலும் விரும்பப்படாததாயும் ஒருமுறை உண்டார்க்குப் பின்னொருகாலும் போக்கிக் கொள்ளக் கூடாத பெருங் குற்றமுடையதாயும் தன்னை உண்டானுக்கு அறிவு மயக்கத்தால் நாணமென்பதே எக்காலத்தும் இல்லாமல் செய்வதாயும் உள்ள கள்ளுண்டல் ஒருவனுக்கு இருக்கவேண்டியுந் நற்குணங்களாகிய அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்று சொல்லுகின்ற ஐந்து நல்ல குணங்களுள் முதலாவதாகிய நாணத்தைப் போக்கிப் பழிபாவங்களைச் செய்யத் தூண்டும் என்றனர். ஆதலால் நற்குணங்களில் முதலாவதாகிய நாணத்தை இழந்துவிடுகின்றன் என்பவர், "நாணென்னும் நல்லாள் அவனெதிர் வாராள்" என்று நாண் என்பதை ஒரு பெண்ணுக்கிக் கூறினர் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் தம்பொருளையும் கொடுத்து இவ்வித தீய காரியத்தினை உலகோர் ஏன் செய்கின்றனர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

925. கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்.

(பரி.) இ-ள். பொருள் கொடுத்து மெய் அறியாமை கொளல்=ஒருவன் விலைப்பொருளைக்கொடுத்துக் கள்ளாற்றனக்கு மெய்ம்மறப்பினைக் கொள்ளுதல்—கை அறியாமை உடைத்து=அவன்பழவினைப்பயனுய செய்வதறியாமையைத் தனக்குக் காரணமாகவுடைத்து. எ-று.

தண்ணேயறியாமை சொல்லவே, ஒழிந்தன யாவுமறியாமை சொல்லல் வேண்டாவாயிற்று. கை அப்பொருட்டாதல் "பழனுடைப்பெருமரம் வீழ்ந்தெனக் கையற்று" என்பதனுனு மறிக. அறிவார் விலைகொடுத்து ஒன்றினைக் கொள்ளுங்காற் றீயதுகொள்ளாமையின் மெய்யறியாமைகொளல் முன்னேயறியாமையான் வந்ததென்பதாம். (கி)

விளக்கம்:—ஒருவன் தன் பொருளே விலையாகக் கொடுத்து வாங்கி உண்ட கள்ளினுல் தனக்குத் தேகத்தினிடத்து யாதொரு நினேவுமில்லாமல் செய்து கொள்ளுதல் அவனது முன்னைய வினைப் பயனுல் செய்யவேண்டுவதனே அறியாமையாகிய காரணத்தைத் தனக்குக் காரணமாக உடையவனுகின்றன் என்று இத் திருக்குறள் கூறுகின்றது. அறிவுடைய ஒருவன் ஏதேனுமொன்றனே விலைகொடுத்து அப்பொருளது பயனேக்கொள்ள விரும்பிய காலத்து, தீமையாகிய பயனேத்தரும் பொருளேக் கொள்ளாஞதலால் இவ்விதம அறிவின்மையால் தன்னேத் தான் அறியாது செய்து கொள்வதாகிய மெய்ம்மறப்பினே விலை கொடுத்து வாங்குதல் முற்பிறவிகளிலே செய்த தீவினேயின் பயனுல் வந்ததென்றே கொள்ளுதல் வேண்டும். ஆதலால் இவ்வித தீமையாகிய கள்ளுண்டலேச் செய்வது முன்செய்த தீவினேயின் பயனேயாகும் என்றனர். அது கேட்ட மாணுக்கர், "இவ்விதம் கள்ளுண்டு மெய்ம்மயங்குகின்ற அற்பரை உலகோர் என்னென்று கூறுவர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

926. துஞ்சினுர் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

(பரி.) இ-ள். துஞ்சினுர் செத்தாரின் வேறு அல்லர்=உறங்கினுர், செத்தாரின் வேருதலுடையரேனும், அக்காலத்தறிவின்மையான் வேறெனப் படார்; கள் உண்பவர் எஞ்ஞான்றும் நஞ்சுஉண்பார்=அவ்வாறே கள்ளுண்

பார், நஞ்சுண்பாரின் வேறுதலுடையரேனும், எக்காலத்தும்நிலின்மையான் வேறெனப்படார், அவர் தாமேயாவர். எ-று.

உறங்கினோர்க்கும் கள்ளுண்பார்க்கும் வேற்றுமை உயிர்ப்புநிற்றல். வேறுதலும் வேறன்மையுமுடைமை காட்டற்கு உவமை புணர்க்கப்பட்டது. இதனை நிரனிறையாக்கி, நிரிக்கப்படுதலால் உறங்கினோரும் நஞ்சுண்பாரு மொப்பர், கைவிடப்படுதலாற் செத்தாருங் கள்ளுண்பாருமொப்பரென்று ரைப்பாரு மூளர்; அதிகாரப்பொருள் பின்னதாயிருக்க யாது மியைபில்லாத நஞ்சுண்பார்க்கு உவமைபுணர்த்து மாண்டுக்கூறல் பயனின்மைகலானும், சொற் கிடக்கை நிரனிறைக்கேலாமையானும், அமைதுரையன்மை யறிக. இவை யிரண்டுபாட்டானும் அவரதறிவிழத்தற் குற்றங் கூறப்பட்டது. (சு)

விளக்கம்:—உலகத்து உறங்குகின்றவர்கள் இறந்து போகின்றவர்களிலும் வேறுகிய தன்மை உடையவராயினும் அவ்வுறங்குகின்ற காலத்தில் அறிவு இல்லாமையால் வேறு என்று சொல்வதற்கு இல்லாதவராக உள்ளாரென்றும், அது போலவே கள்ளுண்பாரும் விஷத்தை உண்பவரினும் வேறுகிய தன்மை உடையவரேனும் உண்ட எக்காலத்தும் அறிவில்லாது மயங்குகின்றார் ஆதலால் நஞ்சு உண்பவரினும் வேறு என்று சொல்லப்படாமல் அந்நஞ்சு உண்பவரே ஆவரென்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால் தூங்குபவர்க்கும், கள் உண்பவர்க்கும் உள்ள வேறுபாடு மூச்சு இருத்தலென்றும், ஆயின் அறிவில்லாமையினால் இறந்தவரு நஞ்சு உண்பவரும் ஆகிய இருவரையும் ஒப்பாரென்றும் எடுத்துக் காட்டியதாயிற்று. ஆதலால் இறந்தவரும் நஞ்சு உண்பவரும் தம் செயலற்றுப் போகின்றாரோ அதுபோல் கள்ளுண்பாரும் மெய்ம்மறந்து செயலற்று, அறிவிழந்து போவர் என்றும், கள் குடித்தவரைக் காணுங் கீழ்த்து உலகத்தவர் அவரை உயிரோடு கூடி உள்ளவராக மதியாரென்றும் அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் அறிவு மயங்கிக் கள்ளுண்பாரை உலகோர் பழிப்பர் அன்றே?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

927. உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவ ரெஞ்ஞான்றுங் கள்ளொற்றிக் கண்சாய் பவர்.

(பரி.) கள் ஒற்றிக் கண் சாய்பவர்=கள்ளே மறைந்துண்டு அக்களிப பாற் றம்மறிவு தளர்வார்—உள்ளூர் உள் ஒற்றி எஞ்ஞான்றும் நகப்படுவர்=

உள்ளூர் வாழ்பவரான் உண்ணிகழ்கின்றதுய்த்துணர்ந்து எஞ்ஞான்றும் நகுதல் செய்யப்படுவர். எ-று.

உள்ளூர்—ஆகுபெயர். உண்டென்பது அவாய்நிலையான் வந்தது. உய்த்துணர்தல்=தளர்ச்சியாற் களிப்பினையுணர்ந்து அதனாற் கள்ளுண்ட துணர்தல். (எ)

விளக்கம்:—யாரும் பாராவிதம் ஒருவன் கள்ளினை மறைந்து உண்டு அம்மயக்கத்தால் தளர்வடைவானேல் அதைக் கண்ட அவன் வசிக்கும் ஊரில் வாழ்பவர் அவன் அறிவின் தளர்ச்சியால் அவனிடத்தே உண்டாகின்ற வாக்கு, செயல்களை எல்லாம் நன்றாக அறிந்து அவன் கள்ளினை உண்டு இவ்விதம் மயங்கி நிற்கின்றான் என்று அவனைக் காணுந்தோறும் அவனைப்பழித்துச் சிரிப்பர் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், கள் உண்பவன் ஒருவன் எவ்வளவுதான் பிறர் அறியாவண்ணம் கள்ளினை மறைந்து உண்டானாயினும் அவன் உண்ட கள்ளின்மயக்கமானது அவனைமயங்கச் செய்வதும், அம்மயக்கத்தால் மனம், வாக்கு, காயமாகிய மூன்றும் தன்வழிநில்லாது தளர்ச்சியைஅடைவதும்,அத்தளர்ச்சியைக்கண்டு இவன் கள்ளுண்டு மயங்குகின்றான் என்று உலகோர் எக்காலத்தும் சிரிப்பதும் உண்டாகுமென்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் கள்ளுண்பான் பலராலும் நகைக்கப்படுவான் என்பது அறிந்தோம். ஆயின், கள்ளுண்பவன் ஒருவன் தான் கள்ளினை உண்பதற்கு முன் மிக ஒழுக்கமுடையவனாக நடிப்பதைச் சிலரிடத்துக் காண்கிறோம். அவ்வித நடிப்பானது கள்ளை உண்டபொழுது பிறர் அறியும் வண்ணம் வெளிப்படுமன்றோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

928. களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத் தொளித்ததூஉ மாங்கே மிகும்.

(பரி.) இ-ள். களித்து அறியேன் என்பது கைவிடுக=மறைந்துண்டு வைத்து யான் கள்ளுண்டறியேனென்று உண்ணாதபொழுது தம்மொழுக்கங் கூறுதலையொழிக;—நெஞ்சத்து ஒளித்ததும் ஆங்கே மிகும்=அவ்வுண்ட பொழுதே பிறரறியின் இழுக்காமென்று முன்னெஞ்சத்தொளித்த குற்றமும் முன்னையளவின்மிக்கு வெளிப்படுதலான். எ-று.

களித்தறியேனெனக காரியத்தாற் கூறினார். இவையிரண்டுபாட்டானும் அது மறைக்கப்படாதென்பது கூறப்பட்டது. (அ)

விளக்கம்:—ஒருவன் கள்ளினை உண்ண அவாவிய காலத்து அக்கள்ளினை மறைவாக உண்டு பின் அக்கள்ளினை உண்ணாத பொழுது 'நான் எக்காலத்தும கள்ளினை உண்டு அறியேன்' என்று தன்னுடைய பொய்யாகிய ஒழுக்கத்தைக் கூறுதலை ஒழித்துவிடல் வேண்டும் என்றும், ஏனெனின்? இவன் உண்ணாத பொழுது நடித்தானாயினும் கள்ளினை உண்ட காலத்தே 'நாம் உண்ணுகின்ற இச்செயலை மற்றவர்கள் அறிவாராயின் நமக்கு அது குற்றமாகும்' என்று முன் தன் நெஞ்சில் ஒளித்த குற்றமும் முன்னிலும அளவின் மிகுந்து யாவும் வெளிப்படும என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால் கள்ளுண்பான் ஒருவன் உண்ணாத காலத்துத் தான் கள்ளுண்பது இல்லையென்று மறைத்துக் கூறினானாயினும் உண்டபொழுது மறைத்துச்சொல்லிய குற்றங்களும் மிக அதிகமாக வெளிப்படுமென்றும், கள்ளுண்டலை ஒருவனாலும் மறைக்க முடியாதென்றும் அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் கள்ளுண்டு மயங்குவானுக்கு நல்லோர் புத்தி புகட்டுதல் கூடாதோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

929. களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க் குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

(பரி.) இ-ள். களித்தானைக் காரணம் காட்டுதல்=கள்ளுண்டு களித்தானொருவனை இஃதாகாதென்று பிறனொருவன் காரணங்காட்டித் தெளிவித்தல்—நீர்க் கீழ்க குளித்தானைத் தீத்துரீஇயற்று=நீருண்மூழ்கினானொருவனைப் பிறனொருவன் விளக்கினால் நாடுதலை யொக்கும். எ-று.

களித்தானை யென்னு மிரண்டாவது "அறிவுடை யந்தண னவளைக் காட்டென்றானோ"* என்புழிப்போல நின்றது. நீருள் விளக்குச் செல்லாதாற்போல அவன் மனத்துக் காரணஞ் செல்லாதென்பதாம். இதனான் அவனைத் தெளிவித்தல் முடியாதென்பது கூறப்பட்டது. (கூ)

விளக்கம்:—கள்ளினை உண்டு அறிவு மயங்கிய ஒருவனுக்கு இக்கள்ளுண்ணுதல் ஆகாதென்று நல்லொழுக்கமுடைய ஒருவன்

* கலி, மருதம், 7.

தான் கற்ற நூல்களைக் காட்டித் தெளிவிக்கப் புகுவானாயின், ஜலத்தில் முழுகிக்கிடக்கின்ற ஒருவனை மற்றொருவன் விளக்கைக் கையில் கொண்டு ஜலத்துக்குமேல் தேடிப் பார்த்தலையே ஒத்திருக்கும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், கள்ளுண்பான் ஒருவனுக்கு எடுத்துக் காட்டுகின்ற தீதும், அறமும் அவன் மனத்துள் செல்லாதாதலால் அவனைத் தெளிவித்தல் கூடாது என்று கூறவந்தவர் ஜலத்துக்குள் முழுகிக்கிடக்கின்ற ஒருவனை மற்றொருவன் தேடவேண்டுமானால் அங்ஙீருள் முழுகி அவனைத்தேடினலன்றி அவனைக் கண்டுபிடித்தல் கூடாதென்றும், அவ்விதமல்லாது ஒருவன் விளக்கைக் கையில்கொண்டு முழுகியவனைத் தேடினால் விளக்கின் ஒளியானது ஜலத்திற்குள்சென்று முழுகியவனைக்காட்டாதுபோல நல்லொழுக்கமுடையவனது விளக்குப்போன்ற அறிவும் கள்ளுண்டானுக்கு யாதொரு பயனும் தாராமல் ஒழிந்துபோகும் என்றும், இவ்வித கள்ளுண்பானைத் தெளிவித்தல் எவரானும் முடியாது என்றும் அறிந்தோம் என்று கூறினர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வித கள்ளினை உண்பார் அதனை ஒழித்தற்கு ஏதேனும் உபாயமுள்ளதோ?" என்னவும், ஆசிரியர் கூறுவாராயினர்.

930. கள்ளுண்ணப் போழ்தில் களித்தானைக் காணுங்கா லுள்ளான்கொ லுண்ட தவன் சோர்வு.

(பரி.) இ-ள். கள் உண்ணப் போழ்தில் களித்தானை = கள்ளுண்பானொருவன் தான் அஃதுண்ணுது தெளிந்திருந்த பொழுதின்கண் உண்டு களித்த பிறனைக் காணுமன்றே, — காணுங்கால் உண்டதன் சோர்வு உள்ளான்கொல் = காணுங்கால் தானுண்டபொழுது உளதாஞ்சோர்வினை அவன் சோர்வில் அதுவு மிற்றென்று கருதான்போலும்! எ-று.

சோர்வு = மனமொழிமெய்கள் தன்வயத்தவல்லவாதல். •கருதலளவையான் அதனிழுக்கினை யுய்த்துணரின் ஒழியுமென இதனுள் அஃதொழிதற் காரணங் கூறப்பட்டது. (ம)

விளக்கம்:—கள்ளினை உண்ணுகின்ற ஒருவன் அக்கள்ளினைத்தான் உண்ணுமல் அறிவு தெளிந்திருந்த காலத்தில் தன் போன்று கள்ளினை உண்டு மயங்கிய மற்றொரு குடியனைக் காண்பான் அல்லவோ?

அவ்விதம் காணுங்காலத்து அவனது சோர்வினை எல்லாம் பார்த்துத் தான் கள்ளினைக் குடித்தபோது உண்டாகும் சோர்வும் இவ்விதமே இருக்குமென்று எண்ணமாட்டான் போலும் என்று இத் திருக்குறள் கூறுகின்றது. இதனால் கள் உண்ணுதகாலத்துக் கள் ளுண்ட ஒருவனைப் பார்க்கின்றவன் தன்னுடைய மனம், வாக்கு, காயம் தன்வசப்படாது பிறரால் சிரிக்கவும், பழிக்கவும் படுவதையும் தன்தேகத்திற்குத் தின்பத்தைத் தேடிக்கொள்ளுதலையும் நன்முக ஆராய்ந்து மனத்துள் எண்ணுவானாயின், அவ்வித எண்ணத்தால் ஓர்கால் அறிதல் கூடுமென்றும், அவ்வறிவால் அக்கள்ளுண்டலை ஒழித்தல் கூடுமென்றும் காரணம் கூறுவதாக அறிகின்றோம். ஆயின், கள்ளுண்பான் இவ்விதம் கருதல் அளவையால் கள்ளுண்ணும் குற்றத்தை அறிந்து ஒழிப்பது அருமையினும் அருமையே என்று உணர்கின்றோமென்றனர். அது கேட்ட மாணாக்கர், "காமத்தால வரும் நட்புக்களில் ஒன்றுகிய கள்ளுண்பது இதுவென்று அறிந்தோம். இனி, கவறு என்று மூன்னர்த் தோற்றுவாய்ச் செய்த சூது என்பதன் தன்மையையும் உணர அவாவுகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

94. அதிகாரம்.

சூது.

(பரி.) இனி அக்கள்ளுண்டல்போல அறம் பொருள் இன்பங்கட்கு இடையீடாகிய சூதாடலும் பிணியழத்தலுங் கூறுவான்றொடங்கி, முதற்கட் சூதினதியல்பு கூறுகின்றார்.

விளக்கம்:—அதாவது, மேற்கூறிய கள்ளுண்டலால் வரும் இடையூறுகள் போல அறம், பொருள், இன்பங்களுக்குச் சூதாடுதலும், பிணியால் துன்புறுதலும் இடையூறாக உள்ளனவாதலால் அவ்விரண்டினுள் முதலில் சூதினால் வரும் துன்பங்களைக் கூறுவான் தொடங்கினர் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "சூதினால் வெல்லுபவர் பெரும்பொருள் தேடிப் பிழைக்கின்றனர் என்று கேட்டுள்ளோம். அது உண்மையோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

931. வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூ
உண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. [உந்

(பரி.) இ-ள். வென்றிடினும் சூதினை வேண்டற்க=தான் வெல்லு மாற்றலுடையனாயினும் சூதாடலை விரும்பாதொழிக;—வென்றதூஉம் தூண்டிற் பொன் மீன் விழுங்கியற்று=வென்று பொருளைப் ஏவார் உளராலெனின் அஃதென்றபொருடானும் இரையான் மறைந்த தூண்டி லிருமபினை இரையெனக்கருதி மீன் விழுங்கினற்போலும். எ-று.

வேறல் ஒரு தலையன்மையின் 'வென்றிடினும்' என்றும், கருமங்கள்பல வுங் கெடுதலின் 'வேண்டற்க' என்றுங் கூறினர். எய்தியபொருள் சூதாடுவார் நீங்காமைக்கு இட்டதோர் தளையென்பதூஉம், அதனற் பின்றையருழத்தலும், உவமையாற் பெற்றும். (க)

விளக்கம்:—ஒருவன் தான் வெல்லக்கூடிய வல்லமை உடைய வனாயிருந்தாலும், சூதாட்டம் ஆடுதலை விரும்பாது ஒழிதல் வேண் டும் என்றும், ஏனெனின் ? சூதாட்டத்தில் வென்று பொருளை அடைந்து வாழ்பவர் உண்டு என்று கூறினும் அவ்விதம் வெற்றிகொண்ட பொருள்தானும் இரையோடு கூடியுள்ள தூண்டி லென்னும் மீன் பிடிக்கும் கருவியில் உள்ள இரும்பினை இது முழுவ தும் இரை என்று கருதி அதை உண்ணவந்த மீனைது அக்கருவி யினை விழுங்கியது போலும் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், சூதாட்டத்தில் வென்று பொருளடைந்தவர் பலர் இல்லை யென்றும், ஒருவேளை ஒருவன் வென்று பொருளினைக் கைக்கொண் டாலும் அவனுக்கு அப்பொருள் அச்சூதாட்டத்தை விட்டு நீங்கா திருக்கக்கூடிய காலில் தங்கிய ஓர் விலங்கு போலாகிப் பின்னர் வென்ற பொருளையு மிழந்து உலகத்து வாழ்வதற்கு மில்லாமல் வறு மையால் இறப்பன் என்னும் உண்மையைப் பெறுவதற்கு மீன்பிடிப் போர் கருவியாகிய தூண்டிலைச் சூதாகவும், அக்கருவியின் இரும் பில் கோத்துள்ள இரையினை ஜெயித்து வந்த பொருளாகவும், அவ்வரையினை இலவசமாகக் கிடைத்ததென்று விழுங்கவந்த மீனைச் சூதாடியாகவும் உவமித்தனர். அது எவ்வாறே எனின்? அம் மீனைது இரையல்லாத இரும்பினை இரை என்று எண்ணி அதனை விழுங்கி இறந்து போவதுபோல், சூதாட்டத்தில் சிக்கிக்கொண்ட

ஒருவன் இரவு பகலாகச் சூதாடுவதாலும் உண்ணல், உறங்கல் இல்லாமையாலும், பொருளை இழந்து வறுமை அடைவதாலும், உயிரை விடுகின்றான் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "சூதினால் ஒருவன் ஒருமுறை வென்று பொருளை அடைவானுயின் அவன் பின்னர் ஏன் துன்புறுகின்றான்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

932. ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ
னன்றெய்தி வாழ்வதோ ராறு.

(பரி.) இ-ள். ஒன்று எய்தி நூறு இழக்கும் சூதர்க்கும் = அத்துண்டிற் பொன் போன்ற ஒன்றினை முன்பெற்று இன்னும்பெறுதுமென்னுங்கருத்தால் நூற்றினையிழந்து வறியராஞ் சூதர்க்கும் — நன்று எய்தி வாழ்வதோர் ஆறு உண்டாங்கொல் = பொருளால் அறனுமின்பமுமெய்தி வாழ்வதொருநெறியுண்டாமோ? ஆகாது. எ-று.

அவ்வாற்றுப் பொருளிழந்தே வருதலான், அதனுலெய்தும் பயனும் அவர்க்கில்லை யென்பதாம். (உ)

விளக்கம்:— துண்டியிலுள்ள இரையால் மறைக்கப்பட்டுள்ள இரும்பைப் போல் ஏதேனுமொரு பொருளை ஒருமுறை அடைந்து இன்னும் இவ்விதமே ஜெயித்துப் பொருளை அடைவோம் என்னும் எண்ணத்தினுல் சூதாடப் புகுந்து முன் அடைந்த ஒரு பொருளைப் போல் நூறு பங்காகிய பொருள்களை அச்சூதாட்டத்தால் இழந்து தரித்திரர்களாகும் சூதாடுபவர்களுக்கும், அவர்களடைந்த பொருளால் பொருள் படைத்த வேளையோர் அடையக்கூடிய அறத்தினையும், இன்பத்தினையும் அடைந்து வாழ்வதற்கு உரிய ஒரு வழி கிடைக்குமோ? எக்காலத்தும் கிடைக்காது என்று இத்திருக்குறள்கூறுகின்றது. இதனுல்சூதாட்டமென்பது ஒருவேளைப் பொருளைத் தருமாயினும் அடைந்த பொருளாசையால் அச்சூதாட்டத்திலேயே நின்று ஜெயித்த பொருளல்லாமல் தம் முன்னோர் தேடிய பொருளையும் இழந்து வறியராகி இறப்பரே அன்றி, படைத்த பொருளால் அறத்தைச் செய்து அதனுல் ஆகிய பயனை அடைவதற்கோ, அல்லது இன்பத்திற்காகச் செலவழித்து அதனுலடையும் பயனை அடைவதற்கோ இல்லாமல் வருந்தி இறப்பர்

என்று அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணக்கர், "சூதினை வறிஞன் ஒருவன் ஆடப் புகுவானுயின் அவன் துயருறுதல் கூடும். ஆயின், அரசன் ஒருவன் சூதினை ஆடுவானுயின், அவனும் மேற் கூறிய துன்பத்தை அடைவானே?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

933. உளூஉய மோவாது கூறிற் பொருளாயம்
போஒப் புறமே படும்.

(பரி.) இ-ன். உருள் ஆயம் ஓவாது கூறின்=உருளுங்கவற்றின்கட்பட்ட ஆயத்தை இடைவிடாது கூறிச் சூதாடுமாயின்,—பொருள் அயம் போய்ப் புறமே படும்=அரசனீட்டியபொருளும் அவன்பொருள் வருவாயும் அவனை விட்டுப்போய்ப் பகைவர்கண்ணே தங்கும். எ-று.

கவற்றினதருட்சியை அதனினுய ஆயத்தின்மேலேற்றியும், சூதாட்டை அது கூடலாகிய காரணத்தின்மேலிட்டுங் கூறினர். பொருளாயமென்பது உம்மைத்தொகை. ஆயம் வடமொழித்திரிசொல். காத்தற்கண்ணும் இயற்றற் கண்ணும் கருத்திலஞகலின், அவையிரண்டும் பகைவர்பாற் செல்லுமென்பதாம். (கூ)

விளக்கம்:—உருண்டு ஓடுகின்ற சூதாட்டுக் கருவியாகிய பாய்ச் சிகை என்னும் கருவியினிடத்தே வருகின்ற லாபத்தைக் கருதி அதனுல் வரும் பந்தயங்களை இடைவிடாது சொல்லி ஒருவன் சூதினை ஆடுவானுயின், அவ்விதம் சூதாடியவன் அரசனுயினும் அவன் சேர்த்த பொருளும் அவனுக்கு இனி வரவேண்டிய பொருள் வருவாயும் அவனை விட்டு நீங்கி அவனது பகைவர்களிடத்தே சேர்ந்து தங்கிவிடும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனுல், சூதாடுகின்ற ஒருவன் சூதாடுதலையே தனக்குப் பொருளென்று கொண்டு எக்காலமும் சூதாடிப் பொருளை இழந்து வருவதால் அப்பொருளைக் காத்தல் வேண்டுமென்னும் எண்ணத்தையுமிழந்து உள்ள பொருளைக் காவாததுடன் பெரும் பொருள் வருதற்கு உள்ள வருவாய்களை எண்ணி அவற்றைச் சேர்த்தல் இல்லை ஆதலால், பொருள் சேர்த்தற்கு இல்லாமையும் ஆகி இருப்பானென்றும், அவ்விதம் இருக்குங்காலத்து இவன்து பொருள் இவனேடு சூதாடிய மாற்றரசனிடத்தே யாயினும் அல்லது வேறைய பகைவர்களிடத்தே யாயினும் போய்விடும் என்றும் அறிந்தோம். ஆத

லால், சூதாடுகிறவன் அரசனுயினும் அவன் வருந்தி இறத்தல் வேண்டும் என்பதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "சூதாட்டத்தால் அடையும் வறுமைபோல் வேறொன்றுலும் அவ்வித வறுமையை அடைவதற்கு இல்லை போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

934. சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதில் வறுமை தருவதொன் றில்.

(பரி.) இ-ள். சிறுமை பல செய்து சீர் அழிக்குஞ் சூதின் = தன்னை விழைந்தார்க்கு முன்னில்லாத துன்பங்கள் பலவற்றையும் விளைத்து உள்ள புகழையுங் கெடுக்குஞ் சூதுபோல்—வறுமை தருவது ஒன்று இல் = நல்குரவினைக் கொடுக்கவல்லது பிறிதொன்றில்லை. எ-று.

அத்துன்பங்கள் முன்னர்க் கூறப. நல்வினைகளையும் நல்லினத்தையும் நீக்கித் தீவினைகளையுந் தீயினத்தையுங் கூட்டுதலால், 'சீரழிக்கும்' என்றார். வறுமைக்கு எல்லையாவதொன்பதாம். (ச)

விளக்கம் :—தன்னை விரும்பினர்க்கு முன் ஒருபோதும் இல்லாதனவாகிய பல துன்பங்களையும் உண்டாக்கி உள்ள புகழையும் கெடுக்கின்ற சூதாட்டத்தைப்போல் தரித்திரத்தைக் கொடுப்பது வேறு ஒன்றுமில்லை என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனுல் பல துன்பங்களையும் தருமென்று கூறுவதுடன், நற்றொழில்களையும், நல்ல கூட்டத்தையும் ஒழித்து தீத்தொழில்களையும், தீய இனத்தையும் இச்சூதாட்டமானது உண்டாக்குகின்றது. ஆதலால், இச்சூதாட்டமானது உள்ள சிறப்பினை நீக்கித் துன்பத்தைக் கொடுத்து நிற்குமென்றும், அதனுல் அவன் அடைந்த புகழினை இழப்பானென்றும், அதுவன்றியும் இச்சூதைப்போல் தரித்திரத்தை உண்டுபண்ணக்கூடியது வேறு ஒன்றுமில்லையென்றும் அறிகின்றோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் சூதாடி வறுமை அடைகின்ற அரசராயினர் உலகத்துள் புகழை இழப்பர் என்று கூறியதால் அவர்கள் தாமிருந்த காட்டில் இருந்தேனும் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருத்தல் கூடுமோ? அன்றி நாட்டையும் விட்டுப் போய்விடுதல் வேண்டுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

935. கவறுங் கழகமுங் கையுந் தருக்கி
யிவறியா ரில்லாகி யார்.

(பரி.) இ-ள். இல்லாகியார்=முற்காலத்துத் தாமுளராகியே இலராகி யொழுகினார்,—கவறும் கழகமும் கையும் தருக்கி இவறியார்=கவற்றினையும் அஃதாடுங்களத்தினையும் அவ்வாடற்குவேண்டுங் கைத்தொழிலினையும் மேற்கொண்டு கைவிடாத வேந்தர். எ-று.

கைத்தொழில்=வெல்லுமாயம்படப் பிடித்தெறிதல். அவ்விவறுதலாற் பாண்டவர் தம்மரசுவிட்டு வனத்திடைப்போய் ஆண்டுமறைந்தொழுகினாரென அனுபவங்காட்டியவாறு. இவையைந்துபாட்டானும் அதனது வறுமை பயத்தற்குற்றங் கூறப்பட்டது. (௫)

விளக்கம்:—சூதாடுகின்ற கருவியையும், சூதாடுகின்ற இடத்தையும், அச்சூதாட்டத்திற்கு வேண்டிய விதம் உருட்டும் பாய்ச்சிகையைப் பிடித்து எறியும் வன்மையினையும் கொண்டு வெற்றியினைக் கைவிடாத அரசர் முற்காலத்தில் தாம் உலகத்துப் பிழைத்திருந்தவராகவே இருந்தும் இல்லாதவராகவே காணப்பட்டனர் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், சூதினையே பொருளென்று விரும்பி அச்சூதாடுதலையே தமக்குத் தொழிலாகக் கொண்டவர் எல்லாவற்றையு மிழந்து நாட்டினைவிட்டுக் காட்டை அடைந்து உலகத்து உயிரோடிருந்தும் உலகத்து உள்ளார் அறியாவண்ணம் அஞ்ஞாத வாசமும் இருத்தல் வேண்டிவரும் என்று காட்டுவார், முன் காலத்து இவ்விதம் இருந்தனரென்று பாண்டவரைக் குறிப்பாக உவமை காட்டினர். இதனைப் பின்வரும் வில்லி பாரதச் செய்யுள்களாலும் அறிதல்கூடும் என்றனர்.

"தீதினால் வரித்து நெஞ்சந் தீயவராடுமாயச்
சூதினால் வென்று கொள்கை தோற்றமும் புகழுமன்று
போதினான் முகனுமாலும் புரிசடையவனுங் கேள்வி
யாதிநான் மறையு முள்ளவளவு மிவ்வசையறாதே."

"அடியுமாண்மையும் வலிமையுஞ் சேனையுமழகும் வென்றியுந்தத்தங்
குடியுமானமுஞ் செல்வமும் பெருமையுங்குலமு மின்பமுந்தேசும்
படியுமாமறை யொழுக்கமும் புகழுமுன்பயின்ற கல்வியுஞ்சேர
மடியுமான் மதியுணர்ந்தவர் சூதின்மேல்வைப்பரோ மனம்வையார்."

"தந்தைக னருளாற் பெற்றீருரிமையுந் தம்பிமாரும்
பைந்தொடிதானு நீயும்பதி பெயர்ந்துயர்ந் தவேயின்
வெந்தழ லனையகானின் வெளிப்படாதுறை மினின்றே
யிந்தமா தரணிகைவிட் டேகுமினெமுமி னென்றான்."

அதுகேட்ட மாணாக்கர், "மேற்கூறிய ஐந்து திருக்குறள்களாலும் சூதினால் வறுமை அடையும் குற்றத்தை அறிந்தோம், இனி, இச் சூதால் அடையும் சிறுமைகளையும், அதனால் இழக்கும் இருமைப் பயன்களையும் அறிவித்தல் வேண்டும்" என்ன லும், ஆசிரியர் கூறு வாராயினர்.

936. அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்னு முகடியான் மூடப்பட் டார்.

(பரி.) இ-ள். சூது என்னும் முகடியான் மூடப்பட்டார்=தன்பெயர் சொல்லல் மங்கலமன்மையிற் சூதென்று சொல்லப்படும் முகடியான் விழுங் கப்பட்டார்—அகடு ஆரார் அல்லல் உழப்பர்=இம்மைக்கண் வயிறுரப் பெறார், மறுமைக்கண் நிரயத் துன்பமுழப்பர். எ-று.

செல்வங்கெடுத்து நல்குரவு கொடுத்தற்கேதுவில் வேறுபடாமையிற் 'சூதென்னு முகடி' என்றும், வெற்றிதோல்விகளைக்கி ஒருபொழுதும் விடா ராகவின் ஈண்டு 'அகடாரார்' என்றும், பொய்யுங் களவும் முதலிய பாவங்க ளீட்டவின் ஆண்டு 'அல்லலுழப்பர்' என்றுங் கூறினர். வயிறுராமை சொல் லலே, ஈனப்புலன்க ளுகரப்பெறுமை சொல்லவேண்டாவாயிற்று. உழப்ப ரென்பது எதிர்காலவினை. (சு)

விளக்கம்:—தன்னுடைய பெயரையும் சொல்லப் புகுந்தால் மங்கலமல்லாத சூது என்று சொல்லப்படும் முகமூடியால் விழுங் கப் பட்டவர் எவரோ, அவர் இம்மையில் வயிறுர உண்பதற்கு இல் லாமல் பசியால் துன்பப் படுவாரென்றும், மறுமையில் நரகத்துன்பத் தில் விழுந்து வருந்துவரென்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், சூது என்பது உள்ள செல்வத்தையெல்லாம் போக்கித் தரித் திரத்தையே உண்டுபண்ணும் தொழிலோடு கூடி உள்ளதாதலால், அதைக் கொண்ட ஒருவனுக்கு அச்சூதானது விழுங்கப்படுகின்ற முகடியாக உள்ளதென்றும், அதுவன்றியும் சூதாடுகின்றவர், தமக்கு

வெற்றி வந்தகாலத்தில் அவ்வெற்றிக்காக மகிழ்ந்து மேலும், மேலும் ஆடுவதும் தோலவி வந்த காலத்து அதற்காக வருந்தி மேலும், மேலும் வெற்றி யடையும் பொருட்டு ஆடுவதும் தொழிலாகக் கொண்டு ஓயாது ஆடுவாராதலால், இவ்வித சூதாட்டத்தில் தலையிட்டவர் உணவு கொள்வதிலும், அறிவைச் செலுத்தார். அதனால் பசியால் வருந்துவர் என்பது அறிய வயிறுரப் பெருஞ்சென்றும், சூதினை ஆடுகின்ற காலத்துப் பாய்ச்சிகையில் ஒன்று விழுந்திருக்க மற்றொன்றுகக் கூறி வெற்றி கொள்வதற்குச் சொல்லும் பொய்களாலும் அதுவல்லாமலும் காய்களை வைக்குங்காலத்து இடங்களை மாற்றி வைக்கின்ற களவுச் செய்கைகளாலும் வருகின்ற பாவத்தைக் கொண்டு தாம் அடைய இருக்கும் மறுமைப் பயனையும் இழந்து நரகத் துன்பத்தையும் அனுபவிப்பர் என்றும் கூறுவார் அல்லலுழப்பார் என்றும் கூறினாயிற்று. அதுவன்றியும் இத்திருக்குறளில் வயிறுரப்பெறார் என்பதினாலேயே ஏனைய புலன்களாகிய கண், செவி, மூக்கு, வாய் ஆகிய நான்கும் அடைய வேண்டிய இன்பங்களை அடையாவென்றும் அறிந்தோம். ஆதலால் சூதாடுபவர் இம்மை மறுமையாகிய இரண்டு பயன்களையுமிழப்பர் என்று கூறினர் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இன்னும் இச் சூதால் வரும் சிறுமைகளையும் சொல்லுதல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

937. பழகிய செல்வமும் பண்புங் கெடுக்குங்
கழகத்துக் காலை புகின்.

(பரி.) இ-ள். காலை கழகத்துப் புகின்=அறம் பொருளின்பங்கட் கடைத்தகாலம் அரசனுக்குச் சூதாடுகளத்தின்கட் கழியுமாயின்,—பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்=அக்கழிவு தொன்றுதொட்டுவந்த அவன் செல்வத்தினையும் நற்குணங்களையும் போக்கும். எ-று.

பழகியவென்பது பண்புடனுமியையும். தான் செய்துகொள்ளும் அற முதலியவேயன்றி முன்னோரைத்தொடங்கி வருகின்ற செல்வமும் முன் செய்த நல்வினையின் பயனுய பண்பும் இலவாமென்பதாம். (எ)

விளக்கம்:—ஒருவனுக்கு அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றினையும் செய்ய வகுத்த காலத்தைச் சூதாடுகின்ற இடத்தில்

போக விடுவானுயின், அவ்விதம் போகவிட்ட அக்காலத்தினது அழி வானது பழைமையாக அவனுக்கு வந்திருந்த அவனுடைய செல் வத்தினையும், இயல்பாக இருந்த நற்குணங்களையும் போக்கிவிடும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், ஒருவன் அரியதா கிய மானுடப் பிறவியை அடைந்ததின் பயனாக அறம், பொருள், இன்பங்களால் ஆகிய பயனை அடைவதற்குத் தன் பெரும்பழுதைப் போக்கவேண்டி இருக்க அவ்விதம் செய்யாது தன் கால முழுமை யும் சூதாடுகின்ற இடத்திலேயே கழித்து விடுவானுயின், மூன்று லும் வரும்பயனையும் இழந்து விடுவதுடன் தன் முன்னோர் தேடிய செல்வத்தையும் சூதாடு மிடத்தில் இழந்து பொய் கூறுமை களவு செய்யாமை என்னும் தனக்கு இயல்பாக இருந்த நற்குணங்களையும் போக்கி நிற்பானென்றும் அறிகின்றோம். ஆத லால், சூதாடுபவன் இம்மையில் வறுமையும், பழியும், பாவமு மடைந்து, மறுமையில் நரகத்தையுமடைவான் என்று இத்திருகுற ளால் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "இன்னும் எவ்வெவ்வித சிறுமைகள் சூதாடுபவனுக்கு நேரும் என்பதையும் கூறுதல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

938. பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ யருள்
தல்ல லுழப்பிக்குஞ் சூது. [கெடுத்

(பரி.) இ-ள். சூது=சூது—பொருள் கெடுத்து=தன்னைப்பயின்றவன் பொருளைக்கெடுத்து,—பொய் மேற்கொளீஇ=பொய்யை மேற்கொள்ளப் பண்ணி,—அருள் கெடுத்து=மனத்தெழும் அருளைக்கெடுத்து,—அல்லல் உழப்பிக்கும்=இவ்வாற்றுன் அவனை இருமையினும் துன்பமுறுவிக்கும்.

இத்தொழில்கண்மூன்றற்கும் சூது வினைமுதலாகவும், தோல்வி, வெற்றி, செற்றமென்பன முறையே கருவிகளாகவுங் கொள்க. மூன்றனுள் இம்மையினும், வினையவற்றுன் மறுமையினுமாம். பொருள்கொடுத்தென் பது பாடமாயின், அவ்வெச்சத்திற்கு முடிவு மேற்கொளீஇ யென்புழி மேற் கோடலாகிய வினைமுதல்வினை. (அ)

விளக்கம்:—சூது என்று சொல்லப்படுவது தன்னிடத்துப் பழகிய ஒருவனது பொருளை எல்லாம் போக்கிப் பொய்மை கூறு வதையே விரதமாகக் கொள்ளும்படிச் செய்து இயல்பாக மனத்

கில் தோன்றும் பல உயிர்கள் மீதும் செல்லுகின்ற அருள் என்ப தைப் போக்கி அவனை இம்மை, மறுமையாகிய இரண்டு இடங்களி லேயும் துன்பத்தை அனுபவிக்கும்படிச் செய்யும் என்று இத்திருக் குறள் கூறுகின்றது. இதனால், சூதாடுபவனுக்குப் பொருள் போத லும், பொய் கூறலும், அருள்போதலும், ஆகிய குற்றங்கள் உண் டாகு மென்றும், அவைகளால் இருமையிலும் துன்பமடைவா னென்றும் அறிக்தோமென்றனர். இதுகேட்ட மாணாக்கர், " இனி முடிவாகச் சூதாடுபவனுக்கு வரும் குற்றங்கள் இவையென்று சொல்ல விரும்புகின்றோம் " என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

939. உடைசெல்வ மூணெளி கல்வியென் றைந்து
மடையாவா மாயங் கொளின்.

(பரி.) இ-ள். ஆயம் கொளின்=அரசன் சூதினைத் தனக்கு வினோதத் தொழிலாக விரும்புமாயின்,—ஒளி கல்வி செல்வம் ஊண் உடை என்று ஐக்தும் அடையாவாம்=அவனை ஒளியும் கல்வியும் செல்வமும் ஊணும் உடை யுமென்றிவ்வைந்துஞ் சாராவாம். எ-று.

ஆயம்—ஆகுபெயர். இச்சிறப்புமுறை செய்யுளேக்கிப் பிறழ்ந்தது. செல்வம்=அறுவகையுறுப்புக்கள். ஊணுடையென்பனவற்றுள் துப்புரவுக ளெல்லாங் கொள்ளப்படும். காலமும் கருத்தும் பெருமையின், இவையுள வாகாவென்பதாம். இவை நான்கு பாட்டானும் சிறுமைபலசெய்து அவற்று ளிருமையுங்கெடுத்தல் கூறப்பட்டது. (கூ)

விளக்கம் :—அரசன் ஒருவன் சூதாட்டத்தைத் தனக்கு விநோதத் தொழிலாக எண்ணி விரும்புவானாயின், அவ்விதம் விரும் புகின்ற அவ்வரசனை மதிப்பும், கல்வியும், செல்வமும், ஊணும், உடையும் என்று கூறப்பட்ட இவ்வைந்து தகுதிகளும் அடையா என்று இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், சூதாடுபவனுக்குச் சூதாடுவதிலேயே காலமும், கருத்தும் செல்வதால் அவன் கால மும், கருத்தும் மதிப்பை அடைவதற்கோ, கல்வியைப் போற்றுவ தற்கோ, செல்வத்தைக் காப்பதற்கோ, உணவினை உண்பதற்கோ, உடையைத் தரிப்பதற்கோ இல்லாமல படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்கின்ற ஆறு செல்வங்களையுமிழந்து உண்ணலும்,உடுத்தலுமில்லாது கல்வியால் ஆகிய அறிவினை இழந்து,

பிறர் போற்றும் மதிப்பினை இழந்து, இருமையினும் துன்பத்தை அடைவானென்று முடிந்தது முடிந்தலாகக் கூறினார் என்று அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "என் சூதாடலை ஒருவன் விரும்புகின்றனென்றும், அவ்வாறு விரும்புவது எவ்விதம் முடியும் என்றும் ஓர் உவமை வாயிலாக விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

940. இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதே போற்றுன்ப
முழத்தொறூஉங் காதற் றுயிர்.

(பரி.) இ-ள். இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல்=சூதாடலான் இருமைப்பயன்களையுமிழக்குந்தோறும் அதன்மேற் காதல்செய்யுஞ் சூதன் போல—துன்பம் உழத்தொறூஉம் காதற்று உயிர்=உடம்பான் மூவகைத் துன்பங்களையும் அனுபவிக்குந்தோறும் அதன்மேற் காதலையுடைத்து உயிர்.

சூது—ஆகுபெயர். உயிரினதறியாமை கூறுவார்போன்று சூதனதறியாமை கூறுதல் கருத்தாகலின், அதனை யாப்புறுத்தற்பொருட்டு உவமமாக்கிக்கூறினர். இதனெதிர்மறைமுகத்தாற் சூதினைவெறுத்தொழிவானையொக்கும் உடம்பினை வெறுத்தொழியுமுயிரெனவுங் கொள்க. இதனுள் அஃதொழிதற்கருமையும் ஒழிந்தாரது பெருமையும் கூறப்பட்டன. (ம)

விளக்கம்:—உடம்பால் வருகின்ற மூன்றுவித துன்பங்களையும் அனுபவிக்குந் தோறும், அனுபவிக்குந்தோறும் அவ்வுடம்பின் மீது உயிரானது வெறுப்புக் கொள்ளாது எவ்வாறு ஆசைகொண்டு உள்ளதோ, அதுபோல் சூதாடுவதால் இம்மை, மறுமை ஆகிய இரண்டு பயன்களையும் இழக்குந்தோறும், இழக்குந்தோறும் சூதாடுபவன் ஆசைகொண்டு ஆடுவரன் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனுள், உடம்படுக்குந் தோறும் அவ்வுடம்பை இடமாகக்கொண்டு வாழும் உயிரானது பல துன்பங்களையும் அடைந்துகொண்டிருந்தும், அடைகின்ற துன்பத்தைக் கருதாது அவ்வுடலே இன்பமென்று கருதி அதனிடத்தே வாழ்ந்து அவ்வுடலே மேலும், மேலும் போற்றிக் காத்துப் பின்னர் அவ்வுடலே விட்டு நீங்கும் காலத்து ஓர் சமயந்தானும் இல்லாது போகின்றதைப்போல் சூதாடுகின்ற ஒருவன் மேல்திருக்குறளில் கூறிய ஒளி, கல்வி, செல்வம், ஊண், உடை என்கின்ற ஐந்தினையு மிழந்து இருமைப் பய

னையு மிழப்போம் என்று அறிந்திருந்தாலும் ஒருமுறைப் பழகிய பழக்கத்தால் அச்சூதினை விடாது எல்லாத் துன்பங்களையும் அனுபவித்துப் பின்னர் ஒன்றுமற்றவனுப் போய்விடுவானென்று அறிவதுடன், உடம்பின் இழிவினை அறிந்த துறவிகள் அவ்வுடம்போடு கூடியிருக்கினும் அவ்வுடம்பில் சிறிதும் பற்றில்லாதிருப்பதுபோல் நல்லறிஞர் சூதால் வரும் இன்பத்தைத் துன்பமாகக் கருதி அதை ஒழித்து இருமைப் பயனையுமடைவர் என்று சூதாடுபவரையும், சூதாடாது ஒழிபவரையும், அவ்விருவர்க்கு வரும் துன்ப இன்பங்களையும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "சூதாடுகின்ற ஒருவன் ஒருமுறை சூதினிடத்தே பழகுவானுயின், அதை அவன் ஒழித்தல் மிக அருமை யென்றும் ஒழித்தால் மிகுதியும் பெருமை யென்று மறிந்தோம். இதுகாறும் காமத்தால் வரும் தீமைகளின் குணங்களைப் பெண்வழிச் சேறல், என்பது முதல் சூது என்னும் இவ்வதிகாரம் வரையில் அறிந்தோம். இனி, எற்காத உணவு முதலியவைகளாலும், காமம் முதலிய இன்பம் அனுபவிக்கும் தீச்செயல்களாலும் வரும் நோய்களைத் தீர்ப்பதற்குக் கூறுவதாக உள்ள மருந்து என்னு மதிகாரத்தைக் கூறல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

95. அதிகாரம்.

மருந்து.

(பரி.) பழவினையானும் காரணங்களானும் மக்கட்கு வாதமுதலிய பிணிகள் வரும்; அவற்றுட் பழவினையான் வருவன அதன்கழிவின்கணல்லது தீராமையின் அவையொழித்து, வினைக்காரணங்களான் வருவனவற்றைத் தீர்க்கும் மருந்தின் றிறங்கூறுகின்றார். காரணங்களாவன உணவுசெயல்கள தொவ்வாமையாகலின், பிணிகளுங் காரணத்தான் வருவனவாயின.

விளக்கம்:—அதாவது, மக்கள் செய்த முன்னைய வினையின் பயனனும் காரணங்களாலும் வாத, பித்த, சிலேத்துமம் என்கிற மூன்றினாலாகிய நோய்கள் வருமென்றும், அவ்விதம் வருவதுடன் முற்பிறவிகளில் செய்த வினைக்குத் தக்க அளவாக வர்த்தனவாய் அப்பழவினை தீர்ந்தாலன்றி தீராதனவாய் உள்ள தொழு நோய்

முதலிய நோய்கள் மருந்தால் தீராமையின் அந்நோய்களே எல்லாம் இங்குக் கூறுது மக்கள் செய்கின்ற செயலுக்குத் தக்க அளவாக வருவனவாகிய நோய்களின் தன்மையை நீக்கும் மருந்தின் திறத்தையே இங்குக் கூறப்புகுந்தனர். அச்செயல்களாவன:—மக்கள் உண்ணுகின்ற உணவும், அவர்கள செய்கின்ற செயல்களுமாம். அவை ஒன்றோடொன்று ஒவ்வாதனவாக இருக்குமாயின் அவற்றால் வருவனவும் தீர்க்கக்கூடியனவும் ஆகிய நோய்களேயே தீர்ப்பதற்கு உரிய மருந்தினை இங்குக் கூறுகின்றனர் என்று அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "மக்கள் அடையும் நோய் காரணத்தால் ஆயின், அக்காரணங்கள் எவை ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

941. மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர் வளிமுதலா வெண்ணிய மூன்று.

(பரி.) இ-ள். மிகினும் குறையினும்=உணவுஞ் செயல்களும் ஒருவன பகுதிக்கொத்தலவினவன்றி அதனின் மிகுமாயினும் குறையுமாயினும்,—நூலோர் வளிமுதலா வெண்ணிய மூன்றும் நோய் செய்யும்=ஆயுள்வேதமுடையாரால் வாதமுதலாக வெண்ணப்பட்ட மூன்றுதோடம் அவனுக்குத் துன்பஞ் செய்யும். எ-று.

நூலோரென்னையெனவே, அவர் அவற்றுன்வகுத்த வாதப்பகுதி பித்தப்பகுதி ழப்பகுதியென்னும் பகுதிப்பாடும் பெற்றும். அவற்றிற்குணவொத்தலாவது:—கை வீரியங்களானும் அளவானும்பொருந்துதல். செயல்சமொத்தலாவது :—மனமொழிமெய்களாற்செய்யுந் தொழில்களே அவை வருந்துவதற்கு முன்னேயொழிதல். இவை இரண்டும் இங்ஙனமன்றி மிகுதல் குறைதல் செய்யின், அவை தத்தநிலையி னில்லாவாய் வருத்துமென்பதாம். காரணமிரண்டும் அவாய் நிலையான் வந்தன. முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. இதனுல் யர்க்கைகட் கியல்பாகிய நோய் மூவகைத்தென்பதூஉம், அவை துன்பஞ் செய்தற்காரணம் இருவகைத்தென்பதூஉம் கூறப்பட்டன. இன்பஞ் செய்தற் காரணம் முன்னர்க் கூறுப. (க)

விளக்கம்:—ஒருவன் கொள்ளும் உணவுகளும், செய்யும் செய்கைகளும் அவனுடைய தேகக் கூறுக்கு ஒத்த அளவினை உடையனவாக இல்லாமல் அத்தேகக் கூறுக்கு அதிகப்பட் டிருக்குமாயினும்,

குறைந்திருக்குமாயினும் ஆயுள்வேத மென்கின்ற வைத்திய நூலார் சொல்லுகின்ற வாத, பித்த, சிலேத்துமமாகிய இம்மூன்றி னால் உண்டாகும் மூன்றுவித நோய்களும் அவனுக்குத் துன்பத்தை உண்டுபண்ணும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, வாதம் முதலிய மூன்றிலுக்கும் ஒத்த அளவாக உணவுகள் ஒத்திருத்தலாவது உணவில் உள்ள சுவையும், உணவில் உள்ள பலமும் கொள்ளுகின்ற உணவின் அளவும், கொள்ளுகின்ற அவனது தேகக் கூறுபாட்டுக்குத் தக்க அளவாகக் கொள்ளுதல் என்றும், மனத்தாலும், வாக்காலும், தேகத்தாலும் செய்யவேண்டிய அததற்கு உரிய தொழில்களே அம்மனமும், வாக்கும், காயமும் துன்பம் அடைவதற்கு முன்னே நிறுத்திக் கொள்ளல் வேண்டுமென்றும், அவ்விதமல்லாது ஒருவனது தேகக் கூறுபாட்டிற்கு மிகுதியாகவோ, குறைவாகவோ உண்பதும் மிகச் சுவையுடனேயாகவோ, மிகப்பலமுடையனவாகவோ, அல்லது மிகுந்த அளவினை உடையனவாகவோ உள்ள பொருள்களே உண்ணுதலும் அல்லது மேற்கூறியவைகளுள் எல்லாவற்றிலும் குறைவாக உண்ணுவதோ ஆகிய தகுதியை ஒருவன் கொள்வானுயின் அப்போது அவனுக்கு நோய் உண்டாகும் என்றும், ஏனெனின்? மிகுந்த அளவைக் கொள்வானுயின் குறைந்த கூறுபாட்டையுடைய அத்தேகப் பகுதியானது அவ்வுணவுகளை ஏற்று ஜீரணிப்பதற்கு இல்லாமல் பலவித நோய்களையும் உண்டு பண்ணுமென்றும், குறைந்த அளவைக் கொள்வானுயின் தேகக் கூறுபாட்டிற்குத் தக்க அளவாக அத்தேகத்துக்கு வலிமை செய்யாது உள்ள பலத்தையும் போக்கி நோயினை உண்டு பண்ணுமென்றும் உணவால் வரும் குற்றத்தை அறிகின்றோம். அன்றியும் மனம், வாக்கு, காயங்களால் ஆகவேண்டிய செயல்களை ஒருவன் செய்யுங் காலத்து நெடும் பொழுது சிந்திக்கின் சிந்திக்கின்ற மனமானது வெப்ப மிகுதியால் கோப்கொள்ளுமென்றும், நெடும் பொழுது பேசப்புகின் பேசுகின்ற வாக்கானது வெப்பம் கொண்டு தேகத்தை வாட்டுமென்றும், நெடும் பொழுது பல வேலைகளைச் செய்யப் புகுந்தால் செய்கின்ற உறுப்புகள் மெலிந்து நோயினை உண்டு பண்ணுமென்றும் அவ்விதமின்றி மேற் சொல்லியவைகளாகிய தொழில்களை

யெல்லாம் குறைவாகச் செய்யின் அக்காலத்தும் அம்மனம், வாக்கு, காயங்கள் தத்தம் வழி நில்லாமல் நோயினைக் கொள்ளு மென்றும் அறிந்தோம். ஆதலால், ஒருவன் தேகத்துக்கு வருகின்ற நோய்கள் மூன்று விதமென்றும், அந்நோய்கள் உணவும், செயலும் அதிகப்படினும், குறைவாயினும் வருமென்றும் அறிந்தோமென்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் உணவும் செயலும் ஒத்திருக்குமாயின், நோய் என்பது உண்டாகாது போலும்! அதுவன்றியும் மருந்தென்பது ஒன்று வேண்டியதில்லை போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

942. மருந்தெனி வேண்டாவாம் யாக்கைக் கருந்திய தற்றது போற்றி யுணின்.

(பரி.) இ-ள். அருந்தியது அற்றது போற்றி உணின்=ஒருவன் முன்னுண்டது அற்றபடியைக் குறிகளாற்றெளியவறிந்து பின்னுண்ணுமாயின்,--யாக்கைக்கு மருந்து என வேண்டாவாம்=அவன் யாக்கைக்கு மருந்தென்று வேறு வேண்டாவாம். எ-று.

குறிகளாவன:—யாக்கைநொய்ம்மை, தேக்கின்றாய்மை,* கரணங்கடொழிற்சுரியவாதல், பசிமிகுதலெனவிவை முதலாயின. பிணிகள் யாக்கையவாகலின், 'யாக்கைக்கு' என்றார். உணினென்பது அதனருமை தோன்றின்றது. (உ)

விளக்கம்:—ஒருவன் தான் உண்ட உணவுகள் நன்றாக வயிற்றினிடத்தே ஜீர்ணித்ததை ஆராய்ந்தறிந்து பின்னர் உண்ணப் புகுவானாயின், அவ்விதம் உண்ணுகின்றவனுக்கு மருந்தென்று வேண்டுவதில்லை என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது; தன் தேகத்தினுடைய பலமுடைமை, பலமில்லாமை ஆகிய இரண்டினையும் முதலில் தானே தெரிந்து கொள்ளுதலும், பிறகு உண்ட உணவு ஏப்பம் கொள்ளுகின்ற காலத்து அவ்வேப்பத்தினாலேயே உணவு ஜீர்ணித்தது, ஜீர்ணிக்கவில்லை என்று இரண்டையும் தெரிந்துகொள்ளுதலும் பின்னர் கரணங்களாயிருக்கின்ற மனம் முதலியவைகளெல்லாம் இவன் எண்ணியபடி செய்வதற்கு உரியனவாக உள்ளனவோ அல்லது உரியனவாக இல்லையோ

* தேக்கின்றாய்மை=ஏப்பமிடலின் நற்குணம்.

என்று அவற்றின் செயலால் தெரிந்து கொள்ளுதலும் பசி மிகுந் திருத்தல், பசி இல்லாமை என்கின்ற இரண்டின் குறிகளை அறிந்துகொள்ளுதலும் ஆகிய இவைகளையெல்லாம் தினந்தோறும் குறிப்பால் அறிந்து ஒருவன் உண்ணுவானுயின், அவ்விதம் உண் ணுகின்ற அவனது தேகத்திற்கு நோய் என்பதே உண்டாகா தென்றும், நோய் என்பது எப்போது உண்டர்க வில்லையோ, மருந்தும் வேண்டியதில்லை என்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "ஒருவன் உண்டது ஜீர்ணித்ததென்று நன் றாக அறிந்து கொண்ட பிறகு எவ்விதம் உண்ணுதல் வேண்டும் என்பதை யறிய விரும்புகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவா ராயினர்.

943. அற்ற ளவறிந் துண்க வஃதுடம்பு பெற்ற னெடிதுய்க்கு மாறு.

(பரி.) இ-ள். அற்றல் அளவு அறிந்து உண்க=முன்னுண்டது அற் றுப் பின்னுண்பதனை அறுமளவறிந்து அவ்வளவிற்றாக உண்க,—உடம்பு பெற்றான் நெடிது உய்க்கும் ஆறு அஃது=இறப்பவும் பலவாய பிறவாக்கை களிற் பிழைத்துப் பெறற்கரிய இம்மானுடயாக்கையைப் பெற்றான் அதனை நெடுங்காலங்கொண்டு செலுத்துநெறி அதுவாகலான். எ-று.

இம்மை மறுமை வீடுபேறுகளெய்தற்பாலது ஈதொன்றுமேயாகலின் உடம்புபெற்றான்' என்றும், அது நெடிதுநின்றுழி அவைபெருகச்செய்து கொள்ளலாமாகலின் 'நெடிதுய்க்குமாறு' என்றுங் கூறினர். பெற்றலென்று பாடமோதுவாரு முளர். (சு)

விளக்கம்:—ஒருவன் முன் உண்டதாயுள்ள உணவுகள் நன் றாக ஜீர்ணித்தன என்று அறிந்து கொள்ளுவானுயின் அவ்விதம் அறிந்த அவன் பின் உண்ண இருக்கும் உணவினை ஜீர்ணித்துக் கொள்ளக்கூடிய தேகக் கூறுபாட்டின் அளவினை அறிந்து அவ் வளவிற்குத் தக்கவிதமாக உண்ணுதல் வேண்டு மென்றும், அவ்விதம் அவன் செய்வானுயின் மிகப் பலவாகிய ஏனைய தேகங்க ளில் இருந்து நீங்கிப் பெறுதற்கு அருமையாகிய இம்மனிததேகத் தைப் பெற்றவனுகிய இவன் அத்தேகத்தை வருத்த அளவாக வைத்துக்கொண்டிருந்து அதனால் நன்னெறிகளில் எல்லாம் செல்

லுதல் கூடுமென்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. அது என்னீயோவெனின்? உயிர் ஒன்று புல் முதல் பலபிறவிகளில் சென்று சென்று அப்பிறவிகளுக்குத் தக்க தேகங்களில் எல்லா மிருந்து அவற்றை எல்லாம் விட்டுக் கழிந்து பின்னர் நல்வினையின் பயனால் மனிததேகத்தை எடுப்பதென்றும், அவ்விதமெடுத்த மனித தேகமே இம்மைப்பயன், மறுமைப்பயன், வீடு என்னும் மூன்றையு மடைவதற்கு உரிய நன்னெறிகளிற் செலுத்துவதென்றும், ஆதலால் அத்தேகம் படைப்போன் வகுத்தபடி நெடுங்காலமிருந்து இம்மைக்கு உரிய புகழை அடைவதற்கு வேண்டிய செல்வங்களைச் சேர்ப்பதற்கும், மறுமைக்கு உரிய தேவபோகங்கள் முதலியவை களைக்கொள்வதற்கு வேண்டுவனவாகிய வேள்வி முதலியவைகளைச் செய்வதற்கு வேண்டிய பொருளைச் சேர்த்தற்கும், பிறகு இம்மை மறுமைகளாகிய இவ்விரண்டினும் வரும்பயன் அத்துணைப் பெரிய தல்லவென்றும், மேலும்மேலும் பிறப்பதற்கே காரணமாக உள்ளது என்றும் அறிந்து வீட்டிற்கு உரிய துறவுபூண்டு விரதம் ஞானமென் கின்ற இரண்டு பகுதிகளையும் கொள்வதற்கும் இத்தேகமே காரண மாதலால், இத்தேகம் நெடுநாளிருந்து அதன் பயனை அடைய ஒரு வன் விரும்புவானாயின் அவன் அத்தேகத்திற்குத் தக்க அளவாக முன் உண்டதாகிய உணவு நன்றாக ஜீர்ணிக்கின்ற வரையில் எதனை யும் உண்ணுதிருந்து பின்னர்ப் பசிக்கின்ற குறிகள் தோன்றுமாயின் மேலும் உண்ண முயற்சித்து அவ்விதம் உண்ணுங்காலும் உண்ணு கின்ற உணவினது அளவு, சுவை, வீரியம் என்பனவற்றையு மறிந்து உண்ணுதல் வேண்டும் என்றும் அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் உண்டது நன்றாக ஜீர்ணித்தது என்று அறி தற்கு பிறகு உண்ணவேண்டிய உணவு எவ்வித தகுதியுடையதா யிருத்தல் வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

944. அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல துய்க்க துவரப் பசித்து.

(பரி.) இ-ள். அற்றது அறிந்து=முன்னுண்டது அற்றபடியை யறிந்து,—துவரப் பசித்து=பின் மிகப்பசித்து,—மாறல்ல கடைப்பிடித்துத் துய்க்க=உண்ணுங்கால் மாறுகொள்ளாத உணவுகளைக் குறிக்கொண்டுண்க.

'அற்றதறிந்து' என்னும் பெயர்த்துரை அதனை யாப்புறுத்தற்பொருட்டு. உண்டது அற்றாலும் அதன் பயனாகிய இரதமறாதாகலான் அதுவு மறல்வேண்டுமென்பார், 'மிகப்பசித்து' என்றார். பசித்தல்வினை ஈண்டு உடையான்மேனின்றது. மாறுகொள்ளாமையாவது:—உண்பான் பகுதியோடு மாறுகொள்ளாமையும், காலவியல்போடு மாறுகொள்ளாமையும், சுவை வீரியங்களாற் றம்முண் மாறுகொள்ளாமையுமாம். அவையாவன:—முறையே வாத பித்த ஐகளானாய பகுதிக்கடாதவற்றைச் செய்வனவாதலும், பெரும்பொழுது சிறுபொழுதென்னுங் காலவேறுபாடுகளுள் ஒன்றற்காவன பிறிதொன்றற்காகாமையும், தேனுநெய்யுந் தம்முளொத்து நஞ்சாதல் போல்வனவுமாம். அவற்றைக் குறிக்கொள்ளாது மனம்பட்டவாற்றாற்றுய்ப்பின் அதனானே நோயும் மரணமும் வருதலின், 'கடைப்பிடித்து' என்றார். (௪)

விளக்கம்:—ஒருவன் உண்ண வேண்டுமாயின் முன் உண்ட உணவுகள் நன்றாக ஜீர்ணித்தன என்பதை அறிந்துகொண்டு அவ்வளவோடல்லாமல் பின் பசித்தபிறகு உண்ணுதல் வேண்டுமென்றும், அவ்விதம் உண்ணுங் காலத்தும் முற்கூறியபடி மாறுபாடில்லாத உணவுகளையே நன்றாக அறிந்து உண்ணுதல் வேண்டும் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், மேல்திருக்குறளில் 'அற்றால் அளவறிந்து உண்க' என்று கூறியதையே இத்திருக்குறளிலும் 'அற்றதறிந்து கடைப் பிடித்து' என்று கூறியதால், முன் உண்ட உணவானது முற்றும் ஜீர்ணித்த பிறகே உண்ணல் வேண்டும் என்பதையே வலியுறுத்திக் கூறியதாயிற்று என்றும், மாறு கொள்ளாத உணவு என்றமையால் அவ்வுணவும் உண்ணுகின்றவன் தேகக் கூறுபாட்டிற்கு மாறுபடாதிருத்தல் வேண்டுமென்றும், ஓர் உணவு மற்றொரு உணவோடு சுவையினாலும், பலத்தினாலும் மாறுபாடு கொண்டு துன்பப்படுத்தாதிருத்தல் வேண்டுமென்றும், உண்ணுகின்ற கால அளவு காலமல்லாத காலமாய் இருத்தல் கூடாதென்றும் அறிந்தோம். அவையாவன, வாத பித்த சிலேத்மங்களாகிய மூன்று நோய்களுக்கும் ஒற்றுமையில்லாத உணவுகளை உண்ணுவதோ மனம் வாக்கு காயங்களால் ஆகிய மூன்றிற்கும் பொருந்தாத அதிகமாகிய செயல்களைச் செய்வதோ பெரும்பொழுது சிறுபொழுது என்று கூறப்படுகின்ற கார்ப்பருவம் முதலாகிய பருவங்களிலேயும் காலை, மாலை, கடும்பகல், யாமம், இடையாமம், வைகரை என்னும் சிறு பொழுது

களிலேயும் உண்ணவேண்டிய பொழுதறியாதும், அவ்வப் பருவங்களுக் கேற்ற உணவினை அறியாதும் உண்பதோ கூடாதென்பதாம். அதுவன்றியும் ஒருவன் சில பொருள்களை உண்ணுங்காலத்து, ஒன்றுக்கொன்று ஆகாததாகிய பொருள்களை உண்ணுதல் ஆகாதென்றும், அவ்விதம் உண்டால் ஒன்றுக்கொன்று மாறுகொண்டு நோயினை உண்டுபண்ணுமென்றும், அது எது போல வெனின் ஒருவன் தேனும் நெய்யுமாகிய இரண்டினையும் ஒரே காலத்தில் சேர்த்து உட் கொள்ளுவானாயின் அவ்விரண்டும் கூடியகாலத்து உண்ட ஒருவனுக்கு விஷமாவது போல் மாறுபட்ட பொருள்களைச் சேர்த்து உண்ணின் நோயும், மரணமும் வருமென்றும், அவ்விதமெல்லாம் நோவண்ணம் நன்முகக் குறித்துக்கொண்டு உண்ணுதல் வேண்டுமென்பார் கடைப்பிடித் தென்று கூறினரென்றும் அறிகின்றேமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் மாறுபடக்கூடிய உண்டியினை ஒருவன் மனம் போன போக்கின்படி உண்ணுவானுயின் நோயும், மரணமும் வருமென்பீர்.. அவ்விதம் மாறுபாடில்லாத உண்டியை ஒருவன் உண்ணுவானுயின், அவன் உயிர்க்குத் தீங்கு வாராதோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

945. மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி னுறுபா டில்லை யுயிர்க்கு.

(பரி.) இ-ள். மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின்=அம்மூவகைமாறுகோளு மில்லாத உணவைத் தன்னுள்ளம் வேண்டியவளவினுனன்றிப் பிணிவாரா வளவினுல் ஒருவனுண்ணுமாயின்,—உயிர்க்கு ஊறுபாடு இல்லை=அவனுயிர்க்குப் பிணிகளாற்றுன்பம் வினேதலுண்டாகாது. எ-று.

உறுவதனை 'ஊறு' என்றார்; அஃது இன்பத்திற்செல்லாதாயிற்று, இல்லையென்பது தெரிடர்பாகலின். துன்பமுறுவது உயிரேயாதலின், அதன்மேல் வைத்துக் கூறினர். மாறுபாடில்வழியுங் குறைதல் நன்றென்பதாம். இவை நான்குபாட்டானும் உண்ணப்படுவனவும், அவற்றளவும், காலமும், பயனுங் கூறப்பட்டன. (கு)

விளக்கம்:—மேற்கூறியபடி உண்பான், பருதியோடு மாறு கொள்ளாமலும், கால இயற்கையோடு மாறு கொள்ளாமலும், சுவை வீரியங்களால் ஒன்றுக்கொன்று மாறு கொள்ளாமலும்

ஆகிய மூன்று விதங்களாலும் ஒருவித மாறுதலுமில்லாத உணவினை மனமபோனபடி வேண்டிய அளவு ஒருவன் உண்ணாதும் பிணி வருவதை விரும்பாதும் தக்க அளவாக உண்பானாயின், அவ்விதம் உண்டவனது உயிரினுக்கு நோய்களால் உண்டாகும் துன்பங்களே உண்டாகாது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், ஒருவன் தன் மனம் விரும்பியபடி அதிக அளவினை உடைய உண்டியை உண்ணாது மேற்கூறிய மாறுபாடுகளில்லாமல் உண்ணப்புகுவானாயின், நோய் கொள்ளானென்றும், நோய்கொள்ளாத காலத்தில் உயிர்க்குத் துன்பமில்லை யென்றும், துன்பமில்லாத காலத்தில் இன்பமே மிகுந்து நிற்குமென்றும் அறிந்தோ மென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "மேற்கூறிய நான்கு திருக்குறள்களாலும் உண்ண வேண்டிய பொருளையும், உண்ணவேண்டிய அளவினையும், உண்ண வேண்டிய காலத்தினையும், அறிந்ததுடன் அவை அளவாக நிற்குமாயின் அவற்றால் உண்டாகும் பயனையும் அறிந்தோம். ஆயின், இத்திருக்குறளால் அளவறிந்து உண்பானுக்கு நோய்களால் துன்பம் வாராது என்றமையால் அவனுக்கு உண்டாகும் இன்பம் எவ்விதம் இருக்கும் என்பதையும் அறிவித்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

946. இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்கும் கழிபே ரிரையான்க ணோய்.

(பரி.) இ-ள். இழிவு அறிந்து உண்பான்கண் இன்பம்போல்=அக்குறைதலை நன்றென்றறிந்து அவ்வாறே யுண்பவன்மாட்டு இன்பம் நீங்காது நிலை நிற்குமாறுபோல்,—கழிபேர் இரையான்கண் நோய் நிற்கும்=மிகப்பெரிய விரையை விழுங்குவான் மாட்டு நோய் நீங்காது நிலைநிற்கும். எ-று.

அவ்வாறேயுண்டல்=உண்ணலாமளவிற் சிறிது குறையவுண்டல். இன்பமாவது:—வாதமுதலியமூன்றும் தத்தநிலையிற்றிரியாமையின் மனமொழி மெய்கள் அவன் வயத்தவாதலும், அதனான் அறமுதலிய நான்குமெய்தலுமாம். இரையை யளவின்றியெடுத்து அதனான் வருந்தும் விலங்கோடொத்தலின் இரையான்' என்றார். விதியெதிர்மறைகளை உவமமும் பொருளுமாக்கியது இரண்டானும் பெறுதற்கு. (௬)

விளக்கம்:—மேற்கூறிய வண்ணம் ஒருவன் எல்லா அளவினையு மறிந்து உண்பதுடன் சிறிது குறைவாகவே உண்ணுதல் நன்மை

யென்று தெரிந்து அவ்விதம் சிறிது குறைவாக உண்பாஞயின் தன் பமில்லாத இன்பமானது நீங்காமல் நிலைத்து நிற்பதுபோல் மிகப் பெரிய இரையை விரும்பி அளவுகடந்து விழுங்குகிறவனிடத்து நோய் நீங்காது நிலையாகவே நின்று துன்புறுத்தும் என்று இத் திருகுறள் கூறுகின்றது.அதாவது, ஒருவன் உண்ணக்கூடிய அளவு இவ்வளவு என்று தெரிந்துகொண்டு அவ்வளவிற்கும் சிறிது குறை வாக உண்பாஞயின் அவ்விதம் உண்பதால் வாத பித்த சிலேத்மங் களாகிய மூன்றும் அததனுடைய நிலையில் நின்று மாறுபடா வென் றும், அவ்வாறு மாறுபடாத காலத்து மனம், வாக்கு, காய மென் கின்றமூன்றும் இவன் நினைக்கும் விதம் ஒத்து நடக்குமென்றும், அவ்வித மன வாக்கு காயங்கள் வேறுபாடு இல்லாது ஒத்தகாலத்து மனித தேகத்தை எடுத்த ஒருவன் அடைவதற்கு உள்ள அறம், பொருள், இன்பம், வீடாகிய நான்கினையு மடைவதற்கு ஏதுவாக இருக்கும் என்றும் அறிவதுடன் இவற்றிற்கு மாறுகிய செயல்க ளோடு கூடிய ஒருவன் தன் மனம் விரும்பியபடி கொள்ளுகின்ற உணவினை மனித உணவு என்று கொள்ளாது கிடைத்த எப்பொரு ளையும் கிடைத்த எக்காலத்தும் அளவில்லாது உண்ணுகின்ற மிரு கங்களின் இரை என்பதை அறிவித்தற்கு அவன் உண்ணும் உண வினை இரையென்றும், அவ்விரையினையும் பேர் இரையென்றும், அப்பேரிரையை மிகப் பெரிய இரையென்று அறிவித்தற்குக் கழி பேர் இரையென்றும் கூறியதால் விலங்குகளாயினும் வயிறு நிறைந்து விடுமாயின் பின்னர் இட்ட இரையினை மிகுத்து விடுமென் றும், இவனை அவ்விதம் மிகுத்தாது காண்கின்ற எதனையும் மிக அளவுகடந்து உண்டுகொண்டே இருப்பானதலால் அம்மிருகங்க ளைக் காட்டிலும், இவன் தாழ்ந்தவனுகின்றன் என்று கூறுவதற்கு கழி பேரிரையான்கண்' என்று எடுத்துக் காட்டியதுடன் உண வினை உண்ணுங்காலத்து உண்ணும் உணவுகளை நன்றுகமென்று சுவை கொண்டு மெதுவாக உண்ணவேண்டி இருக்க அவ்விதமல் லாது ஒன்றன்பின் ஒன்றாக விரைந்து உண்ணுகின்றன் ஆதலால் உண்ட அவைகளை மெல்லாமலும், சுவைபாராமலும் உண்கின்றன் என்று அறிவிப்பதற்கு விழுங்குவா னெனறும் அவ்விதம் விழுங்கு வானுக்கு நோயானது நிலைத்து அவனிடத்து நிற்குமென்றும்

அறிவதுடன் நீங்காத துன்பத்தையும் உயிர்க்குத் தேடிக்கொண்டு மனித தேகத்தால் அடையவேண்டிய புருஷார்த்தத்தையும் அடையாமல் போய்விடுவான் என்றும் அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "என் அதிக ஆகாரத்தைக் கொண்டால் நோய்வருகின்றது? அதனையும் விளக்கல்வேண்டும்" என்னலும் ஆசிரியர் கூறுவாராயினர்.

947. நியள வன்றித் தெரியான் பெரிதுண்ணி
னெயள வின்றிப் படும்.

(பரி.) இ-ள். தெரியான் நீ அளவு அன்றிப் பெரிது உண்ணின்=தன் பகுதியும் அதற்கேற்றவுணவும் காலமுமாராயாது வேண்டியதோருணவை வேண்டியதோர்காலத்து வயிற்றுத் தியளவன்றி ஒருவன் மிகவுண்ணுமா யின்,—நோய் அளவு இன்றிப் படும்=அவன்மாட்டு நோய்கள் எல்லையற வளரும். எ-று.

தெரியாமைவினைக்குச் செயப்படுபொருள்கள் அதிகாரத்தான்வந்தன. நோய்—சாதியொருமை. இவைபிரண்டுபாட்டானும் அவ்வகை யுண்ணுவழிப் படுமிழுக்குக் கூறப்பட்டது. (எ)

விளக்கம்:—ஒருவன் தன்னுடைய தேகக் கூற்றினையும், அத் தேகத்துக்கேற்ற உணவினை உண்ணுகின்ற காலத்தினையும் ஆராயாமல் வேண்டியபடியே ஒரு உணவினை அவன் விரும்பிய ஓர் காலத்தில் வயிற்றில் ஜீர்ணிக்கச்செய்யும் நீ அளவிற்குத் தகுதியாக அல்லாமல் மிகுதிப்பட்டு உண்பானாயின், அவ்விதம் உண்ணுகின்ற அவனிடத்தே நோய்களானவை முடிவில்லாமல் வளர்ந்துகொண் டிருக்கும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், ஒவ்வொ ருவனுக்கும் அவனவனது தேகத்தின் பகுதிக்குத் தக்க அளவாக ஜீர்ணிக்கும் கருவி அமைக்கப்பட்டிருக்கிற தென்றும், அக்கருவி வேலைசெய்து ஜீர்ணிக்கக்கூடிய அளவிற்குமேல் உண்வினை உண் டால் அக்கருவியானது ஜீர்ணித் தலைச் செய்யமுடியாது அயர்ந்துப் போய் அதனுடைய வீரியம் கெட்டு முன்செய்த வேலையும் செய்ய முடியாமல் நாளுக்குநாள் கெட்டுப்போகுமென்றும், அவ்விதம் கெடு தலால் பின்னர்க்கொள்ளுகின்ற உணவு ஜீர்ணிக்காது பலநோய்களைச் செய்யுமென்றும், அவ்விதம் நோய்களைச் செய்கின்ற காலத்து அள

வறியாது இவன் இயற்கையின்படி உண்டுகொண்டே வருவானு யின் பலவித நோய்கள் வருமென்றும், அந்நோய்கள்முடிவில்லாமல் வளருமென்றும், அவ்விதம் வளர்வதால் எடுத்த தேகத்தின் பயன் ஒன்றையு மடையாமல் போய்விடுவா னென்றும் அறிந்தோமென்ற னர். அதுகேட்ட மாணாக்கர், "இதுகாறும் உண்ணு முண்ணினே ளவோடு உண்பவனுக்கு வரும் பயனையும், அவ்விதம் அல்லாதவ னுக்கு வரும் தீமையினையும் உணர்ந்தோம். இனிக் காரணங்களால் வருவனவாகிய இவ்வித நோய்களைத் தீர்க்கும் மருத்துவனைப்பற்றி ஆசிரியர்யா துகூறுகின்றனர்?" என்னலும், ஆசிரியர்கூறுவாராயினர்.

948. நோய்நாடி நோய்முத லுடி யாதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்.

(பரி) இ-ள். நோய் நாடி = மருத்துவனுயினுன் ஆதுரன்மாட்டு நிகழ் கின்ற நோயை அதன் குறிகளான் இன்னதென்று துணிந்து,—நோய் முதல் நாடி = பின் அது வருதற்காரணத்தை ஆராய்ந்து தெளிந்து,— அது தணிக் கும் வாய்நாடி = பின் அது தீர்க்குமுபாயத்தினை யறிந்து,—வாய்ப்பச் செயல் = அதனைச் செய்யும் வழிப் பிழையாமற் செய்க. எ-று.

காரணம் = உணவுசெயலென முற்கூறியவிரண்டும். அவற்றை ஆயுள் வேதமுடையார் நிதானமென்ப. அவை நாடுதற்பயன் = நோயினையும் வாயி னையும் ஐயமறத்துணிதல். மருந்துசெய்தல், உதிரங்களைதல், அறுத்தல், சுடு தன் முதலிய செயல்களெல்லாம் அடங்குதற்கு 'அது தணிக்கும்வாய்' என் றார். "கழுவாயுமுள" * என்றார் பிறரும். பிழையாமை = பழையமருத்துவர் செய்துவருகின்ற முறைமையிற் றப்பாமை. (அ)

விளக்கம்:—மருத்துவனென்று சொல்லப்படுகின்ற வைத்தி யன் ஒருவன் ஆதுரன் என்கின்ற நோயாளியைக் கண்டபோது அவனிடத்து அப்போது தோன்றுகின்ற நோயினை அதனதனு டைய குறிகளால் இன்னது இன்னது என்று துணிவதுடன், பின் னர் அந்நோய்கள் வருவதற்கு இருந்த காரணங்களையும் தான் கற் றும் கேட்டும் உள்ள நூல்களுக்குத் தக்க அளவாக ஆராய்ந்து தெளிந்தும், அவ்விதம் ஆராய்ந்து தெளிந்தபின்னர் அந்நோய் களைத் தீர்க்கின்ற உபாயங்களை அறிந்தும், அவ்விதம் அறிந்ததோடு

* புறநானூறு—34.

நில்லாமல் அந் நோய்களைத் தீர்க்கச்செய்யும் வழிகளைத் தவறில்லாமல் செய்தும் இருத்தல் வேண்டும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, வைத்தியனவன் நோயாளியைக் கண்ட காலத்து அவனுக்கு உள்ள நோய் உணவினால் வந்ததோ, அவன் செய்த செயலால் வந்ததோ என்று முதலில் நிதானித்துக் கொள்ளுதல் வேண்டுமென்றும், அவ்விதம் காரணங்கள் அறிந்தபிறகு உள்ள நோயினை இதுவென்றும், அதனைத் தீர்க்கின்ற உபாயம் இதுவென்றும் சிறிதும் சந்தேகமில்லாமல் தெளிந்து துணிய வேண்டுமென்றும், அவ்விதம் நோயினைக் கண்டு துணியுங் காலத்து அந்த அந்த நோய்க்கு வேண்டிய செயல்களாகிய மருந்து செய்தல், உதிரங்களைதல், அறுத்து விடுதல், சுட்டு விடுதல் என்ற செயல்களையெல்லாம் நன்றாக ஆராய்ந்து பிழைபடாமல் மருந்தினைச் செய்வதும், ஒருவனுக்கு உதிரத்தைக் களைதலும், கட்டி முதலியவை அறுத்தலும், தேகத்தில் உண்டாகும் சுடக் கூடிய நோய்களைச் சுடுதலும் ஆகிய உபாயங்களையெல்லாம் தனக்கு முன்னிருந்த வைத்தியர்கள் செய்த முறைபிழையும் அளவிலும் தவறுதல் செய்தல் வேண்டுமென்றும் அறிந்தோரும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், " வைத்தியன் நோயாளியைக் கண்ட காலத்து நிதானத்தால் செய்யவேண்டுவன இவை என்று அறிந்தோம். இனி அவ்வைத்தியனவான் நோயாளியைப் பார்த்த காலத்து நூல் அளவாக நோய்க்குச் செய்யவேண்டுவன எவையென்று அறிவித்தல் வேண்டும் " என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

949. உற்ற னளவும் பிணியளவுங் காலமுங் கற்றன் கருதிச் செயல்.

(பரி.) இ-ள். கற்றன்=ஆயுள்வேதத்தினைக் கற்றமருத்துவன், —உற்றன் அளவும் பிணி அளவும் காலமும் கருதிச் செயல்=அவ்வுபாயத்தினைச் செய்யுங்கால், ஆதானளவினையும் அவன்கணிகழ்கின்ற நோயினளவினையும் தன் செயற்கேற்ற காலத்தினையும் அந்நூனெறியால் நோக்கி, அவற்றோடு பொருந்தச் செய்க. எ-று.

ஆதானளவு=பருதி, பருவம், வேதனை, வலிகளினளவு. பிணியளவு=சாத்தியம், அசாத்தியம், யாப்பிய*மென்னுஞ் சாதிவேறுபாடும், தொடக்கவீறென்னும் அதன் பருவவேறுபாடும், வன்மைமென்மைகளு முதலாயின.

* யாப்பியம்=பெரும்பான்மை தீர்க்கத் தக்கதும் சிறுபான்மை தீர்க்கத் தகாததுமாயிருப்பது.

காலம் மேற்சொல்லியன. இம்மூன்றும் பிழையாமல் தானெறியானும் உணர்வுநிகுதியானும் ஆராய்ந்து செய்கவென்பார், 'கற்றான் கருதிச்செயல்' என்றார். இவையிரண்டுபாட்டானும் அவ்விழுக்குப்பட்டுழி மருத்துவன் தீர்க்குமாறு கூறப்பட்டது. (க)

விளக்கம்:—ஆயுள்வேதம் இதுவென்று கற்றவனுகிய வைத்தியன் மேற் கூறியபடி நோய் தீருவதற்கு உரிய உபகரணத்தினைச் செய்யுமிடத்து நோய்கொண்டவனது அளவினையும், அவனிடத்தே உண்டாயுள்ள நோயின் அளவினையும், தான் செய்வதற்கு ஏற்ற காலத்தினையும், தான் கற்ற நூலில் கற்ற அளவே உய்த்து உணர்ந்து அந்நூல்களில் சொல்லிய வழியே பொருந்தச் செய்தல் வேண்டும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, நோய்தீர்க்க முயன்ற வைத்தியன் நோயாளியினது உருவம், அவனது தேகவன்மை, அவனுடைய வயது, நோயினுல் உண்டாகும் துன்பம், அந்நோய்த் துன்பம் தோன்றுகின்ற காலம், அது இல்லாதிருக்கின்ற காலம், ஆகிய இவைகளை அறிதல் வேண்டுமென்றும், நோய் தோன்றிய காலமும், அது உள்ள காலமும் ஆகிய நோயின் அளவைத் தெரிந்து பின்னர் இந்நோய் தீர்க்கத் தக்கது, இந்நோய் தீர்க்கத்தகாதது, பெரும்பாலும் தீர்க்கத் தகுந்தும் சிறுபான்மை தீர்க்கத் தகாததுமாகவுள்ளது என்னும் நோயின் தகுதியை அறிய வேண்டுமென்றும், நோய் தொடங்கிய தொடக்கந்தானே, அல்லது தொடங்கி நடுப்பருவமாக உள்ளதோ, அல்லது தீர்ந்துபோகக் கூடிய கடைப்பருவமாக உள்ளதோ என்று நோயின் பருவத்தை ஆராய வேண்டுமென்றும், அதுவன்றியும், நோய் பலமுடைய தென்றும், பலமில்லாதது என்றும் ஆகிய நோய்களின் தகுதியை அறிதல் வேண்டுமென்றும், அவ்விதம் அறிதலோடு மேற்கூறிய வண்ணம் காலத்தையும் நோக்குதல்வேண்டுமென்றும், ஆகியஇவை களை எல்லாம் சிறிதும் குறைபடாமல் தான் கற்றநூல் அளவாகவும், தன்னுடைய அறிவின் அளவாகவும் ஆராய்ந்து உணர்ந்து நோயினைத் தீர்க்க வேண்டுமென்றும் அறிகின்றேம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "மேலிரண்டு திருக்குறள்களாலும் ஒருவன் உணவாலும், செயலாலும் நோய் கொண்டகாலத்து வைத்தியன் தீர்க்க வேண்டிய முறை இதுவென்று அறிந்தோம். இனி, அம்

மருத்துவன் நோயினைத் தீர்ப்பதற்கு முறை யாது? அதற்கு வேண்டுவன எவை? அவையெல்லாம் தொகுத்துச் சொல்லுதல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

950. உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென் றப்பானுற் கூற்றே மருந்து.

(பரி.) இ-ள். மருந்து=பிணிக்கு மருந்தாவது—உற்றவன்=அதனை யுற்றவன்,—தீர்ப்பான்=அதனைத் தீர்க்குமருத்துவன்,—மருந்துழை=அவனுக் குக் கருவியாகிய மருந்து,—உழைச்செல்வான் என்ற அப்பால் நாற்கூற்று= அதனைப்பிழையாமல் இயற்றுவானென்று சொல்லப்பட்ட நான்குபகுதி யையுடைய நான்கு நிறத்தது. எ-று.

நான்கென்னு மெண் வருகின்றமையின், அதுநோக்கி அப்பாலென் றெழுந்தார். நாற்கூற்றென்பது விகாரமாயிற்று. அவற்றுள் உற்றவன் வகை நான்காவன:—பொருளுடைமை, மருத்துவன்வழி நிற்றல், நோய்நூல் யுணர்த்தல்வன்மை, மருத்துத் தான்பம்பொறுத்த லெனவிவை. தீர்ப்பான் வகைநான்காவன:—நோய்கண்டஞ்ஞாமை, ஆசிரியனை வழிபட்டோதிய கல் வியு துண்ணறிவுடைமை, பலகாலுந்தீர்த்தலருதல், மனமொழிமெய்தடு மாத லெனவிவை. மருந்தின்வகை நான்காவன:—பலபிணிகட்குமேற்றல், சுவைவீரியம் விபாகாற்றல்களான் மேம்படுதல், எளிதினெய்தப்படுதல், பகுதியோடு பொருந்துத லெனவிவை. இயற்றுவான்வகை நான்காவன:— ஆதுரன்மாட்டன்புடைமை, மனமொழிமெய்தடுமாதல், சொல்லியன அவ்வாறேசெய்தல் வன்மை, அறிவுடைமை யெனவிவை. இவையெல்லாங் கூடியவழியல்லது பிணி நீராமையின், இத்தொகுதியையும் 'மருந்து' என் றார். ஆயுள்வேதமுடையாரும் இவை காலங்களாக நடக்குமென்பதுபற்றிப் பாதமென்றும், இலவமாறுபட்டவழிச் சாத்தியமுமுதிர்ந்து அசாத்தியமா மென்றுங் கூறினர். இதனால் 'அதனைத் தீர்த்தற்கு வேண்டுவனவெல்லாந் தொகுத்துக் கூறப்பட்டன. (இ)

விளக்கம்:—நோய்க்கு மருந்தாவது நோயினைக் கொண்ட வன், அந்நோயினைத் தீர்க்கும் வைத்தியன், அவ்வைத்தியனுக்கு நோய் தீர்ப்பதற்குக் கருவியாகிய மருந்து, அம்மருந்தினைப் பிழையா மல் செய்கின்றவன் என்று சொல்லப்பட்ட நான்கு பகுதிகளோடு கூடிய நான்கு தன்மையை உடையது என்று இத்திருக்குறள் கூறு கின்றது. இதனால் மருந்தின் தன்மைநான்கெனக் கூறி, அவைகளுள்

ஒவ்வொன்றும் நான்குதிறத்தது என்று கூறுவதால், மேற்கூறிய நான்கினுள் நோய் கொண்டவனுக்கு இருக்கவேண்டிய நான்கு தகுதிகளாவன:—பொருளுடையவனுயிருத்தல், வைத்தியன்சொல்லிய வழி நடக்கக் கூடியவனுயிருத்தல், தனக்கு உள்ள நோயினை வைத்தியனுக்கு அறிவிக்க வேண்டிய வல்லமை உடையவனு யிருத்தல், மருந்தை உண்ணுகின்ற காலத்து அம்மருந்தினுல் உண்டாகும் துன்பங்களைப் பொறுத்துக்கொள்ளும் வன்மையுடையவனுயிருத் தல் என்பனவென்றும், தீர்ப்பவன் வகையாவது:-நோய்களின்தகு தியை எல்லாம் ஆராய்ந்து உணர்ந்து அவ்விதம் உணர்வதுடன் முதலில் நோய்கொண்டவனுக்கு உற்ற நோய் இதுதான் என்று ஆராய்வதற்கு அஞ்சாது ஆராய்தல், தான் ஆசிரியனை அடைந்து அவன் வழிநின்று ஓதியதாகிய கல்வியின் வல்லமையுடையவனு யிருத்தல், இயற்கை அறிவாகிய நுட்ப அறிவினையும் உடையவனுப் இருத்தல், அன்றியும் நோய் கொண்டார் பலர்க்கு நோய்களைப் பல தரமும் தீர்த்து வருதல், மனம், வாக்கு, காயமாகிய மூனறும் கூடா ஒழுக்கத்தைச் செய்யாது பரிசுத்தமுடையனவாய் இருத் தல் என நான்காகும் என்றும், மருந்தின் வகையாவது:—பலநோய் களுக்கும் ஏற்றது ஒன்றுயிருததல், சுவையிலும் வீரியத்திலும ஈற்பயனிலும் வன்மையிலும் உயர்ந்திருத்தல், எளிதில் இடைக்கக் கூடியதா யிருத்தல், நோய் கொண்டவனது தேகக் கூறுடு பொருந்தியதா யிருத்தல் என நான்கென்றும், வைத்தியனுக்கு உதவியாக மருந்தினைச் செய்கின்ற ஒருவனுக்கு நோயாளியினி டத்து அன்புடையவனு யிருத்தல், மனம் வாக்கு காயம் பரிசுத்த முடையவனு யிருத்தல், மருந்தை முடிக்கும் காலத்து வைத்தியன் சொல்லிய அளவாகவே மருந்தினைச் செய்துமுடிக்கும் வல்லமை உடையவனு யிருத்தல், இயற்கை அறிவுடையனு யிருத்தல் ஆகிய நான்குவித தகுதிகளும் இருத்தல் வேண்டுமென்றும், மேற் கூறிய நன்னனகு பகுதிகளாகிய பதினறு பகுதிகளும் அமையாத காலத்து நோய் தீராதென்றும் கூறியதுடன் இதுதான்கே ஆயுள் வேதமுடையார் நான்கு கால்களாக நடக்கு மென்பதை அறிந்து இந்தான்கினையும் பாதமென்றும் இவ்வுகை நான்கினுள் ஒன்று மாறுபட்ட காலத்தும் தீரக்கூடிய நோயாகிய சாத்யமென்கின்ற

நோயும்அதிகப்பட்டுத் தீராதுஅசாத்தியமாகும் என்றுகூறினார் என்றும் அறிந்தோ மென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதமெல்லாம் நோய்க்கு மருந்து இதுவென்று எடுத்து நோய்கொண்டவனது தகுதி நான்கினையும், தீர்க்கின்ற வைத்தியன் தகுதி நான்கினையும், அந்நோயினைத் தீர்க்கும் கருவியாகிய மருந்தின் தகுதி நான்கினையும், அம்மருந்தினைச்சிறிதும் தவறாதுசெய்பவனது தகுதி நான்கினையும்கூறியதை நன்றாக உணர்ந்தோம். அங்கங்களின் பகுதியாகிய நட்பு என்னுமங்கத்தின் கடைசியாகிய மருந்து என்னுமிவ்வதிகாரத்தால், காமத்தால் வரும் செயல்களின் தீங்கு நோய் என்றும், அந்நோயைத் தீர்ப்பதற்கு உபாயம் மருந்துஎன்றும்கூறி உலகத்தார் உய்வதற்கு உரிய உபாயங்களை எல்லாம் உணர்த்தினாரென்று அறிந்தோம். இனிப் பொருட்பாலை யெடுத்து அரசனுக்கு இருக்கவேண்டிய தன்மையை அரசியல் என்று கூறி, அவ்வரசனுக்கு இருக்கவேண்டிய அங்கங்கள் ஆறென்று அமைச்சியல் முதல் நட்பியல் வரையில் கூறிமுடித்தனராதலால், அப் பொருட்பாலுள் சொல்லவேண்டுவன இன்னும் எவையேனும் உளவோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

அங்கவியல் முற்றிற்று.

ஒழிபியல்.

(பரி.) இனி அவ்வரசியலினும் அங்கவியலினும் அடங்காதொழிந்தவற்றதியல்பு பதின்மூன்றதிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கட் குடிமை கூறுகின்றார்.

விளக்கம்:—அதாவது, மேற்கூறிய அரசியலிலும், அங்கவியலிலும் அடங்காமல் நின்றவற்றின் இயல்பினை எல்லாம் பதின்மூனறு அதிகாரங்களால் சொல்லத்தொடங்கினாரென்றும், அவ்விதம் சொல்லும் காலத்து முதலில் குடிமை என்பதை கூறுகின்றாரென்றும் அறிந்தோ மென்றனர். அது கேட்ட மாணாக்கர், "அடங்காதனவற்றை ஒழிபியலென்றும், அவற்றுள் முதலாவது குடிமையென்றும் கூறியதை அறிந்தோம். இனி அக்குடிமை என்பதை விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

96. அதிகாரம்

குடிமை.

(பரி.) அஃதாவது உயர்ந்தகுடியின்கட் பிறந்தாரது தன்மை. உயர்ந்த குடிப்பிறப்பு நால்வகை வருணத்தார்க்கும் இன்றியமையாதாகலின், அச் சிறப்புப்பற்றி இது முன்வைக்கப்பட்டது.

விளக்கம்:—அதாவது, உயர்ந்த குடியில் பிறந்தவர்களுடைய இயற்கை என்பதாம். நான்கு வித வருணத்தவர்க்கும் உயர்ந்த குடிப் பிறப்பு என்பது இருந்தே ஆகவேண்டி இருப்பதால், அவ் வித சிறப்புக் கருதி இக்குடிமை என்னும் அதிகாரம் முதலில் வைக்கப்பட்டு உள்ளது என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வி தம் மக்கள் தகுதியினுள் யாவரும் இருவினைக்குத் தக்க அளவாக உயர்ந்த குணங்களை உடையவராக இருக்கவேண்டி இருக்கக் குடிப் பிறப்பு ஒன்றினால் உயர்வு வருதல் வேண்டும் என்று கூறுவதைக் கேட்க வியக்கின்றோம். ஆதலால், குடிப்பிறந்தார் என்பார்க்கு இயல்பாகவே உள்ள செய்கைகள் எவை என்று அறிவித்தல் வேண் டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

951. இற்பிறந்தார் கண்ணல்ல திவ்வியல்பாகச்
செப்பமு நாணு மொருங்கு.

(பரி.) இ-ள். செப்பமும் நாணும் ஒருங்கு=செம்மையம் நாணும் சேர—இற்பிறந்தார் கண் அல்லது இயல்பாக இல்லை=குடிப்பிறந்தார் மாட்டல்லது பிறர்மாட் டியற்கையாக உளவாகா. எ-று.

இல்லக குடி தலமென்பன ஒரு பொருள; ணண் டியர்ந்தவற்றின் மேல. செமமை=கருததுஞ் சொல்லுஞ் செயலுந்தம்முண் மாறுகாமை. நாண்= பழிபாவங்களின் மட்டுதல். இவை இற்பிறந்தார்க்காயின் ஒருவர் கற்பிக்க வேண்டாமற்றாமேயுளவாம், பிறர்க்காயிற் கற்பித்தவழியும நெடிதுநில்லா வென்பதாம். (க)

விளக்கம்:—செம்மை என்பதும், நாணமென்பதும் நற்குடி யில் பிறந்தவர்களுக்கு அல்லாது மற்றவர்களிடத்து இயற்கையாக ஒன்று சேர உள்ளன ஆகா என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, மனத்தாலும், வாக்காலும், காயத்தாலும் உண்டாகின்ற

கருத்தும், செரல்லும், செயலும் ஒன்றிற்கொன்று மாறுபடாம லிருக்கும் பெரியதோர் செம்மை யென்னும் தகுதியும், பழிவரும் காலத்தும், பாவமான செய்கையைச் செய்ய வேண்டிய காலத்தும் அவற்றிற்கு மிகுதியு மஞ்சி அடங்கி நிற்கின்ற தகுதியாகிய நாண முமாகிய நற்குடியில் பிறந்தார்க்கு ஒருவர் சொல்லாமல் இயல்பாகவே உண்டாகு மென்றும், அவ்விதமல்லாது மற்றவர்க்கு எவ்வளவு சொன்னலும் சொல்லிய அக்காலத்து மாத்திரம் இருப்பதுபோல் காணப்பட்டுப் பின்னர் வெகு விரைவில் மறைந்துவிடும் என்றும், ஆகவே, கல்ல குடியின் இயற்கையை இதனால் அறிந்தோம் என்ற னர். அதுகேட்ட மாணாக்கர், "செம்மையும், நாணமுமாகிய இரண்டு மன்றி இன்னுமேதேனும் இயற்கையாகிய குணங்கள் நற்குடிப் பிறந்தார்க்கு உளவோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

952. ஒழுக்கமும் வாய்மையு நாணுமிம் மூன்று மிழுக்கார் குடிப்பிறந் தார்.

(பத.) இ-ள். குடிப்பிறந்தார்=உயர்ந்தகுடியின்கீட் பிறந்தார்—ஒழுக் கமும் வாய்மையும நாணும் இம்மூன்றும் இழுக்கா=தமக்குரிய ஒழுக்கம் மெய்ம்மை நாணெனப்பட்ட இம்மூன்றன்கண்ணும் கல்வியானன்றித் தாமா கவே வழுவார். எ-று.

ஒழுக்க முதலிபன மெய்ம்மொழி மனங்களினவாகவின், அம்முறையவா யின. இழுக்குதல் அறியாது வருகின்றமையின், 'இழுக்கார்' என்றார். (ஏ)

விளக்கம்:—உயர்ந்த குடியில் பிறந்தவர்களுக்குத் தம் வரு ணத்திற்கு உரிய ஒழுக்கமும்,,பொய்மை பேசாமையும், நாணமும் ஆகிய இம் மூன்றும் தாம் கற்காமலே வந்து விடும் என்று இத்தி ருக்குறள் கூறுகின்றது. அதாவது, செயற்கை அறிவாகிய கல்வி யினால் வரும் மேற்கூறிய நற்குணங்களெல்லாம் இயற்கையாகவே நற்குடியில் பிறந்தவர்களுக்கு உண்டாகி விடுமென்றும், நடுவில் அந்நற்குணங்கள் பிளவுபடா என்றும் அறிந்தோ மென்றனர். அது கேட்ட மாணாக்கர், "குடிமை என்பதன் இயற்கையைத் தொகை யாக அறிந்தோம். இனி அதன் வகையையும் விரித்துக் கூறல்வேண் டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

953. நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு.

(பரி.) இ-ள். வாய்மைக் குடிக்கு=எக்காலத்துங் திரிபில்லாத குடியின்கட் பிறந்தார்க்கு—நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும் வகை என்ப=வறியார் சென்றழி முகமலர்ச்சியும், உள்ளன கொடுத்தலும், இன்சொற் சொல்லுதலும், இகழாமையுமாகிய இந்நான்கும் உரிய கூறென்று சொல்லுவர் நூலோர். எ-று.

பொய்ம்மை திரிபுடைமையிற் றிரிபின்மையை 'வாய்மை' என்றும், "இல்லாரை யெல்லாருமெள்ளுவர்"* ஆகலின் இகழாமையை அவர் கூறுக்கியுங் கூறினர். குடி—ஆகுபெயர். நான்கின்வகையென்பதுபாடமாயின், வாய்மைக்குடிப் பிறந்தார்க்குப் பிறரின் வேறுபாடு இந்நான்கா னுளதாமென்றுரைக்க. இவை மூன்று பாட்டானுங் குடிப்பிறந்தார தியல்பு கூறப்பட்டது.

விளக்கம் :—தம்மிடத்தே தரித்திரர் வந்த காலத்து முகமலர்ச்சியோ டிருத்தலும், தம் கையில் உள்ளவற்றை இல்லையென்னாது கொடுத்தலும், அவர்க்கு இனிய சொற்களைச் சொல்லுதலும், வறியவர்களென்று அவர்களை இகழாமையும் ஆகிய நான்கு விதமாகிய தகுதிகளும் எக்காலத்தும் மாறுதலில்லாத நற்குடியில் பிறந்தவர்களுக்கு இயல்பாகவே உண்டாகும் என்று நூல் வல்லவர் சொல்லுவர் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், முன்னர் இல்லறத்தில் கூறியபடியே நற்குடிப் பிறந்தான் ஒருவன் அன்புடையவனாய் இருந்து விருந்து ஓம்பி இனியவைகூறி நிற்பது அவனுக்கு இயல்பாகும என்று எடுத்துக் காட்டினர். ஆதலால் நற்குடியில் பிறந்தார்க்கு உள்ள குணங்கள் இவை என்று கூறியதால், ஏனைய குடியில் பிறந்தார்க்கு இவை உண்டாகாவென்றும், உண்டாகுமாயினும் இயற்கையாகவே உண்டாகாவென்றும் அறிக்தோ மென்றனர். இது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் நற்குடியில் பிறந்தவர்கள் மறந்தும் தம் ஒழுக்கத்தில் குறைவுபடாரோ?" ரன்னலும், ஆசிரியர் கூறுவராயினர்.

954. அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்த லிலர்.

(பரி.) இ-ள். அடுக்கிய கோடி பெறினும்=பலவாகவடுக்கிய கோடி

* திருக்குறள், 752.

யளவிற்றாயபொருளைப் பெற்றாராயினும்,—குடிப்பிறந்தார் குன்றுவ செய்தல் இலர்=உயர்ந்தகுடியின்கட்பிறந்தார் தம்மொழுக்கங்குன்றுந் தொழில்களைச் செய்யார். எ-று.

அடுக்கியகோடியென்பது எண்டெண்ணப்படும் பொருண்மேனின்றது. குன்றுந் தொழில்கள்=குன்றுதற் கேதுவாய தொழில்கள். (ச)

விளக்கம்:—உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் பல கோடிகளாக அமைந்த பொருள்களைப் பெறுவதாக இருந்தாலும், தன் குடிக்கு உரியதாயுள்ள ஒழுக்கத்தில் சிறிதும் குறைந்த தொழில்களைச் செய்யமாட்டார்கள் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், நீங்கள் மேல் வினவிய வண்ணம் உண்மையாகவே நற்குடியில் பிறந்திருப்பவர்கள் எவ்வளவு கோடி அளவாகிய பொருளைப் பெறுவதாக இருக்கினும், 'அப்பொருள்கள் நிலையாதன; தாம செய்யும் பழிகளோ நிலைத்து நிற்பன' என்று உணர்ந்து, நில்லாத பொருளுக்காகத் தம் குடிக்கு ஊனமாகிய நிலைத்து நிற்கும் பழியைத்தேடிக் கொள்ள மாட்டார்கள் என்று அறிந்தோமென்றனர்: அது கேட்ட மாணாக்கர், "நற்குடிப் பிறந்தார் பெரும் பொருள் இடைப்படுதலினும் தகுதியற்ற காரியத்தைச் செய்யமாட்டார் என்று அறிந்தோம். இனி, ஓர் கால் தம் பழைவினை வயததால் தாம் அடைந்திருந்த பொருள்கள் சுருங்கி விடுமாயின், அப்போதும் தம் தகுதியைக் காத்துக் கொள்வரோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

955. வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று.

(பரி.) இ-ள். பழங்குடி = தொன்றுதொட்டுவருகின்ற குடியினகட பிறந்தார்,—வழங்குவது உள்வீழ்ந்தக்கண்ணும்=தாங்கொடுக்கும் பொருள் பண்டையிற் சுருங்கியவிடத்தும்—பண்பின் தலைப்பிரிதல் இன்று=தம்பண்புடைமையின் நீங்கார். எ-று.

தொன்றுதொட்டு வருதல்=சோ சோழ பாண்டியரென்றாற்போலப் படைப்புக்காலந்தொடங்கி மேம்பட்டு வருதல். அவர்க்கு நல்குரவாவது வழங்குவீது உள்வீழ்வதாகலின், அதனையே கூறினர். (கு)

விளக்கம்:—தொன்று தொட்டுப் பழமையாக வருகின்ற நற்குடியில் பிறந்தவர்கள் வறியவர்க்குத் தம்மியற்கைக் குணத்

தால் கொடுக்கின்ற கொடையின் பொருட்டு இருந்தபொருள் முன்னிருந்ததைக் காட்டிலும் சுருங்கிப் போகுமானால், அச்சுருங்கிய காலத்தும் வறியவரைக் கண்டால் தம இயற்கைக் குணத்தினின்றும் மாறுபடார் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், நற்குடியில் பிறந்தவர்கள் தம் கையில் பொருளில்லாவிடத்தும் தமக்கு உரிய நற்குணங்களாகிய ஈகை முதலிய சிறப்பினைச் செய்து உண்மைப்பயனை அடைவதற்கு உரியராவரே யன்றி, தம் பொருள் சுருங்கியதற்காக வருந்தா ரென்றும் அறிந்தோம. அவர்கள் வருந்துவதெல்லாம் தமக்குப் பொருள் நிறைந்திருந்த காலத்து ஈகையைச் செய்த அளவிற்குத் தாம் இக்காலத்துச் செய்வதற்கில்லையே என்று எண்ணுவதே யாகுமென்றனர். இதனைப் பெரிய புராணத்தில் இளையான்குடிமாற நாயனார் சரிதத்தாலும், ஏனைய சரிதங்களாலும் அறிதல் கூடும என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் வறுமை உற்றகாலத்தும் வஞ்சனையோடு கூடியிருப்பனவும் தம் குடிக்கு அமையாதனவுமாகிய செயல்களை நற்குடிப் பிறந்தார் ஒருபோதும் செய்வதில்லையோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

956. சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற குலம்பற்றி வாழ்துமென் பார்.

(பரி.) இ-ள். மாசு அற்ற குலம் பற்றி வாழ்தும் என்பார் = வஞ்சயற்று வருகின்ற நங்குடிமரபினோடொத்து வாழுகுடவேமென்றுகருதி அவ்வாறு வாழ்வார், —சலம்பற்றிச் சால்பு இல செய்யார் = வறுமையுற்றவழியும், ஒஞ்சினையைப் பொருந்தி, அமைவிலவாய தொழில்களைச் செய்யார். எ-று.

அமைவின்மை = அம்மாபிற்கேலாமை. இவை மூன்று பாட்டானும் அவர் வறுமையுற்றவழியும், அவ்வியல்பின் வேறுபடாரென்பது கூறப்பட்டது. (சு)

விளக்கம்:—பிறருடைய பழிப்பென்பதே இல்லாமல் பழைமையாக வருகின்ற தம் குடிப்பிறப்போடு நாம் ஒத்து வாழவேண்டுமென்று மனத்தால் எண்ணி, எண்ணிய அவ்விதமே வாழ்பவர்கள் தாம் தரித்திரத்தை அடைந்த காலத்திலும் வஞ்சனையோடு கூடியனவும் தம் குடிக்குப் பொருந்தாதனவுமாகிய தொழில்களைச் செய்ய

மாட்டார் என்னு இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், தம் குடிப் பிறப்பின் தகுதியைப் பிறர் பழித்தல் கூடாது என்று எண்ணுகின்ற பெரியோர் தம் உயிரையே இழக்கக்கூடிய அத்தீவிணத் தீங்குகள் தங்களுக்கு வருவனவாயினும் தம் குடிப்பிறப்புக்குப் பொருந்தாத செயல்களைச் செய்யமாட்டார் என்று அறிந்தோம். இதனைச் சூரிய குலத்துத் தோன்றலாகிய அரிச்சந்திரன் என்பான் விஸ்வாமித்திரனது சூழ்ச்சியால் எல்லாவற்றையு மிழந்து சுடுகாட்டில் காவலாளியாக இருந்தகாலத்து மைந்தனை யிழந்தும் தம் மனைவியையே வெட்டுதற்கிருந்தும், ஒரு பொய் சொல்வதற்கு அஞ்சினவனுப்த் தன் குடிக்கு இயற்கையாகிய வாய்மையையே உறுதியாகக்கொண்டு நின்றான் என்றும், அவன் உறுதியைக் கெடுப்பதற்குச் சூழ்ச்சிசெய்த விஸ்வாமித்திரன் ஒரு பொய் பேசினால் இழந்தபொருள் யாவும் தருவதாகச் சொல்லிய காலத்தும் அதற்குமிணங்காது தனது வாய்மையையே நிலைநாட்டினனென்றும் அறிகின்றோம். இதனைப் பின் வரும் அரிச்சந்திர புராணச் செய்யுளால் அறிதல் கூடும் என்றனர்.

"பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் பணைத்த
நிதி யிழந்தனம் இனி நமக்கு உளதென் நினைக்கும்
கதி யிழக்கினும் கட்டுரை யிழக்கிலே மென்றான்
மதி யிழந்து தன் வாயிழந்து மதிதவன் சென்றான்."

அதுகேட்ட மாணாக்கர், "ஒருவர் ஒரு குற்றத்தைச் செய்து, பிறகு செய்த அக்குற்றத்தை உலகோர் அறியாவண்ணம் மறைத்துவிடுவதையும் நாம் பார்க்கின்றோம். அவ்விதமே உயர் குடிப்பிறந்தாரும் ஒரு குற்றத்தைச் செய்வாராயின், அதைப் பிறர் அறியாது மறைத்து விடுதல் கூடாதோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

957. குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின் மதிக்கண் மறுப்போ லுயர்ந்து.

(பரி.) இ-ள். குடிப் பிறந்தார்கண் குற்றம்=உயர்ந்த குடியின்கட் பிறந்தாரிடமாட்டுளதாங்குற்றம்—விசும்பின் மதிக்கண் மறுப்போல் உயர்ந்து விளங்கும்=தான்சிறிதேயாயினும் விசும்பின்கண் மதியிடத்து மறுப்போல ஓங்கித் தோன்றும். எ-று.

உயர்குடிமுதலிய பொருள்வகை மூன்றற்கும் விசும்பு முதலிய உவமை வகை யொத்துப் பான்மாறுபட்டது. குடியதுயர்ச்சியானும், மதிபோன்ற அவர் நற்குணங்களோடு மாறுதலானும், உலகெங்கும் பரந்து வெளிப்படு மென்பதாம். (எ)

விளக்கம்:—உயர்ந்த குடியிலே பிறந்தவர்களிடத்தே ஏதே னும் ஓர் குற்றமுண்டாயின், அக்குற்றமானது சிறியதாக இருந் தாலும் ஆகாயத்தில் உள்ள சந்திரனிடத்தே காணப்படுகின்ற களங் கம்போல் யாவருமறிய காணப்படும் என்று இத்திருக்குறள் கூறு கின்றது. இதனால், ஆகாயத்திலுள்ள சந்திரனது களங்கத்தை யாவ ரும் பார்ப்பதுபோல், உயர்ந்த குடியிலுள்ளார் குற்றம் யாவரு மறிய காணப்படுமென்றும், வெண்மையாகிய சந்திரனிடத்துக் களங்கம் சிறிதாக இருந்தாலும் யாவரும் காணும்படி இருத்தல் போலக் குற்றமில்லாத குடியாதலால் அவர் செய்யும் குற்றம் மிகச் சிறிதாக இருந்தாலும் யாவருமறிய எடுத்துக் காட்டுமென்றும், சந் திரனிடத்துத் தோன்றும் வெண்மைக் குணம் பெரிதாக இருந் தும் குற்றமே எடுத்துக்காட்டுவதுபோல் நற்குடிப் பிறந்தார் செயல் கள் பல நல்லனவாக இருக்கினும் அவர் செய்த குற்றமே எடுத்துக் காட்டுமென்றும் அறிந்தோமென்றனர். அது கேட்ட மாணாக் கர், "உயர் குடிப் பிறந்தார் செய்யும் குற்றத்தினை ஏனையோரிடத் துத் தோன்றும் குற்றத்தைப்போல் சிறிதும் மறைத்தல் முடி யாது என்பதை அறிந்தோம். இனி, நற்குடிப் பிறந்தவனிடத்தே அன்பென்பது இல்லாவிடின், அவனை உலகோர் என்னென்று எண் ணுவர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

958. நலத்தின்க ணுரின்மை தோன்றி னவனைக் குலத்தின்க ணையப் படும்.

(பரி.) இ-ள். நலத்தின்கண் ஊர் இன்மை தோன்றின்=குலநலமுடை யனும் வருகின்றவன்கண்ணே ஈரமின்மையுளதாமாயின்,—அவனைக் குலத் தின்கண் ஐயப்படும்=அவனை அக்குலப்பிறப்பின்கண்ணே ஐயப்படும் உலகம். எ-று.

நலமும் குலமும் ஆகுபெயர். ஊரின்மையாற் கொடாமையுங் கடுஞ் சொல்லு முதலிய கூறப்பட்டன. தோன்றினென்பது தோன்றுமை விளக்கி

நின்றது. நலனுடையனுய் ஒருதலினிடையே இவைதோன்றலின், உள்ளது ஐயமாயிற்று. உலகமென்பது அவாய்நிலையான்வந்தது. ஐயப்படலென் பது பாடமாயின், ஐயப்படுகவென விதியாக்கியுரைக்க. இவை யிரண்டு பாட்டானும் வேறுபட்டவழிப் படுமிழுக்குக் கூறப்பட்டது. (அ)

விளக்கம்:—கல்ல குலத்திலே பிறந்தவனுய்க் காணப்படுகின்ற வனிடத்து அன்பில்லாமை உண்டாகுமாயின், அவ்வித நற்குடி யில் பிறந்தவனேயும் அவன் அக்குலத்தில் பிறந்தவன்தானு என்று சந்தேகிப்பதற்கு இடமுண்டாகும் என்று இக்கிருக்குறள் கூறு கின்றது. அதாவது, நற்குடியில் பிறந்தார்க்கே தோன்றிய மகன் ஒருவன் தன்னிடத்தே வந்த வறிஞர்க்குக் கொடுத்தலும், இனியவை கூறலும் தனக்குக் கடனுகக் கொள்ள வேண்டி இருக்க அவ்வாறு அல்லாது கொடாமையும், கடிந்து சொல்லும் உடைய வனுக இருப்பானுயின், அவனே உலகத்தவர் 'இவனுக்கு இவன் குடிக்கு இருக்க வேண்டிய நற்குணங்களாகிய ாகையும், இன் சொல்லுமில்லே ஆகையால், இவன் உண்மையாகவே இக்குடியிற் ரேன்றியவன்தானே அல்லையோ' என்று ஐயுறுவர் என்று அறிந் தோ மென்றனர். அதுகேட்ட மாணுக்கர், "மேற்கூறிய இரண்டு திருக்குறள்களாலும் நற்குடிப் பிறந்தார் அவர் குடிக்கேற்ற குணங் களேயும், செயல்களேயும் கொள்ளாவிடின் அவர்க்கு வருகின்ற துன் பங்கள் இவை என்று அறிந்தோம். இவ்விதம் ஒருவன் நற்குடியில் தோன்றினனென்பதை அறிந்துகொள்வதற்கு முதலாக உள்ள குறிப்பு எது?" என்று கேட்டனும், ஆசிரியர் கூறுவாராயினர்.

959. நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங் குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.

(பரி.) இ-ள். நிலத்திற் கிடந்தமை கால் காட்டும்=நிலத்தினியல்பை அதன்கண் முளேத்த முளே காட்டும்;— குலத்திற் பிறந்தார் வாய்ச் சொல் காட்டும்=அதுபோலக் குலத்தினியல்பை அதன்கட் பிறந்தார்வாயிற்சொற் காட்டும். எ-று.

கிடந்தமை=உள்ளபடி. முளேத்தமாத்திரத்தானே நன்மையுந் தீமையுந் தெரிதலின், இலேமுதலிய கூறுாயினும்; ஆகவே பொருளினுஞ் செயன் முதலியன வேண்டாவாயின். குலத்தியல்பறிதற்கருவி கூறுவார்போன்று, இன்சொல் வேண்டுமென்ற வாறுயிற்று. (க)

விளக்கம்:—ஒரு நிலத்தினது தன்மையை அறியவேண்டுமானால் அந்நிலத்தினிடத்தே முளைத்த முளையைக்கொண்டு அறிந்து கொள்வதுபோல், நற்குலத்தில் தோன்றிய தன்மையினை அவர் வாயிலுண்டாகும் சொற்களைக் கொண்டே அறிதல்கூடும் என்று இத் திருக்குறள் கூறுகின்றது. அதாவது, ஒருவனிடத்தே உள்ள நற்குணங்கள் பலவற்றினும் முன்னிருக்கவேண்டுவது இனியசொல் ஒன்றே ஆதலால், அவ்வினியசொல் கண்டவிடத்து அவனை நற்குலத்து உதித்தானென்றும், அவ்வொன்றில்லாது ஏனைய குணங்களெல்லாம் பிருக்கினும் நற்குலத் தோற்றமில்லாதவனென்றும் பிரித்து அறிதல் வேண்டும் என்பதை உவமை வாயிலாகக் காட்டுவதற்குப் பூமியில் முளைக்கின்ற முளை ஒன்றினைக் கண்டே அது இனிக் கொள்ளப்போகும் இலை முதலிய பயன்களைக் காணுதற்கு முன்னரே 'இம்முளை இத்தனை வளமுடையது ஆதலால் இதுநல்ல நிலத்தே தோன்றியதாக இருக்கவேண்டும்' என்று குறிக்கொண்டு அறிவதுபோல், அவனது வாய்ச்சொல் ஒன்றினாலேயே அறிந்துகொள்ளுதல் கூடுமென்று கூறியதுடன், இனிய சொல்லில்லாதார் நற்குடித் தோற்றமில்லாதவரென்று கூறியதாயிற்று. ஆதலால், மனம், வாக்கு, காயமாகிய மூன்றினையு மறிவதற்கு வாக்கின் செயலே போதுமென்று அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஒருவன் பணிவில்லாத இனிய சொற்கள் மாத்திரம் கூறி நிற்பானேயானால் அது நற்குடித் தோற்றமாகுமா?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

960. நலம்வேண்டி ஞெண்ணுடைமை வேண்டுங் குலம்
வேண்டுக யார்க்கும் பணிவு. [வேண்டின்

(பரி.) இ-ள். நலம் வேண்டின் நாண் உடைமை வேண்டும்=ஒருவன் தனக்கு நலனுடைமையை வேண்டுவனாயின், தாணுடையனாதலை வேண்டுக; —குலம் வேண்டின் யார்க்கும் பணிவு வேண்டுக=குலனுடைமையை வேண்டுவனாயின், பணியப்படுவார் யாவர்மாட்டும் பணிதலைவேண்டுக. எ-று.

நலம்=புகழ், புண்ணியங்கள். வேண்டுமென்பது விதிப்பொருட்டாய் நின்றது, "வினைப்படு தொகுதியி னும்மை வேண்டும்"* என்புழிப்போல. அந்தணர், சான்றோர், அருந்தவத்தோர், தம்மூரினர், தக்தை, தாயென்றிவை

* தொல்காப்பியம், இளவியாக்கம், 33.

செல்லாருமடங்கு 'யார்க்கும்' என்றார். பணிவு=இருக்கையெழலும், எதிர் செலவும் முதலாயின. இவை யிரண்டுபாட்டானும் குடிமைக்கு வேண்டுவன கூறப்பட்டன.

விளக்கம்:—ஒருவன் தனக்கு எல்லா நலங்களுமாகிய புகழ் புண்ணியங்கள் முதலியவை வேண்டுவானுயின் எவ்வாறு நாணமுடையவனுப் இருத்தல் வேண்டுமோ, அதுபோன்று தான் பிறந்த குடியை நற்குடியாக்க விரும்புவானுயின் யார் யார்க்குப் பணிதல் வேண்டுமோ அவரவர்க்கெல்லாம் பணிவுடையனுக இருத்தல்வேண்டும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. ஆகலால், நற்குடிப் பிறந்தான் ஒருவன் மேல் திருக்குறளில் கூறியவண்ணம் இனிய சொல்லோடு கூடியிருப்பதுடன் துறவிகள், சால்புடையவர்கள், அரிய தவத்தோர்கள், தமக்குமுன்னே தோன்றினவர்கள், தந்தை, தாய் என்று கூறப்பட்ட பெரியோர்களைக் கண்டகாலத்து இருந்த இடத்தைவிட்டு எழுந்திருந்து எதிர்சென்று அவரவர்க்கு வேண்டுவனவாகிய வணக்கத்தைக் காட்டி வணங்கவேண்டும் என்றும், அவ்விதம் செய்வதே தான் நற்குடியில் பிறந்தானென்று அறிவிக்கும் குறிப்பாகும் என்றமையால் நற்குடிப்பிறந்தார்க்கு இயல்பாகவே எல்லா நற்குணங்களும் அமைந்து கிடக்குமென்றும், அவ்வுவமையினைத் தெரிந்து கொள்வதற்கு முதலாவதாக உள்ளது இன்சொல்லென்றும், இரண்டாவது பணிவுடைமை யென்றும், அதன்பின்னர் ஈகை முதலியவை என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "இவ்விதம் நற்குடிப் பிறந்த ஒருவனது குணங்களெல்லாம் இவை என்று தொகையாக அறிந்தோம். இனி, ஒவ்வொன்றுக அவர் குணங்களை விரித்துக் கூறல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

97. அதிகாரம்.

மானம்.

(பரி.) இனிக் குடிப்பிறந்தார்க்கு உரியவாய குணங்கள் கூறுவான் றொடங்கி முதற்கண் மானங்கூறுகின்றார் அஃதாவது எஞ்ஞான்றும் தங்கிலேயிற்றாழாமையும், தெய்வத்தாற்றாழ்வுவந்துழி உயிர்வாழாமையுமாம். இஃது, அக்குடிப் பிறப்பினை நிறுத்துதலுடைமையின், அச்சிறப்புப்பற்றி முன்வைக்கப்பட்டது.

விளக்கம்:—அதாவது, மேற்கூறிய நற்குடியில் தோன்றியவர் களுக்கு இயற்கையாகவே இருக்கும் குணங்களே யெல்லாம் சொல் லத் தொடங்கி முதலாவதாக மானமென்பதைக் கூறத் தொடங்கி னர். மானமாவது எக்காலத்தும் தன் குடிக்குத் தகுதியாகிய நிலையிலிருந்து தாழ்ச்சி அடையாது இருத்தலும், ஓர் வேளை தாழ்ச்சி அடையாதிருக்க முயன்றும் ஊழ்வலியால் தாழ்வு வந்து விடின் பின்னர் எக்காலத்தும் நிலைத்து நிற்பதாகிய பழிக்கு அஞ்சி நிலையாத தேகத்தை ஒழித்து விடுதலும் ஆகும். இவ்வதிகாரம் மேற்கூறிய குடிப்பிறப்பின் பெருமையை நிலைநாட்டக்கூடிய தகுதியுடையது ஆதலால், அதன் சிறப்பினை நோக்கிக் குடிமை யென்னும் அதிகாரத்துக்குப்பிறகு இது முதலாக வைக்கப்பட்டுள் ளது என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "நற்குடியில் பிறந்தவர்கள் தம்மைச் சிறிதும் தம் நிலையினின்று தாழ்த்திக் கொள்ளாதிருத்தல் என்றீர். ஆயின், ஒரு பெரும் பொருளை இழந்து விடுவதாயின், அக்காலத்து என் செய்வர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

961. இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல்.

(பரி.) இ-ள். இன்றியமையாச் சிறப்பின ஆயினும்=செய்யாதவழித் தாம் அமையாத சிறப்பினை யுடையவேயெனினும், —குன்ற வருப விடல்= தங்குடிப்பிறப்புத் தாழவருஞ் செயல்களை யொழிக. எ-று.

அமையாமை=இறத்தல். குடிப்பிறப்பென்பது அதிகாரமுறைமைபான் வந்தது. இறப்பவருவழி இளைத்தன செய்தாயினும் உய்கவென்னும் வட நூல் முறைமையை மறுத்து, உடம்பினது நிலையின்மையையும் மானத்தி லது நிலையுடைமையையுந் தூக்கி அவைசெய்யற்க வென்பதாம். (கு)

விளக்கம்:—தம குடிப் பிறப்புக்குச் சிறிதும் ஒவ்வாதனவா கிய மானம்பட வரும் செயல்களை ஒருவன் ஒருகாலத்துச் செய் யாதுவிடுவானாயின், அவ்விதம் செய்யாது விடுதலால் அவன் பெரிய தோர் சிறப்பு அமைந்த செல்வங்களை எல்லாம் இழந்து விடுவதாக இருந்தாலும், அக்காலத்தும் தன் குடிப் பிறப்புக்குத் தகாதனவா கிய தாழ்ந்த செயல்களைச் செய்யாமலே இருத்தல்வேண்டும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, நற்குடிப்பிறந்தான் ஒரு

வன் மானத்திற்காக அஞ்சி ஒரு தாழ்வாகிய காரியத்தைச் செய்யாதுவிட்டால், அவ்விதம் செய்யாமையானது தன் செல்வங்களெல்லாம் மிழந்து தானும் அழிந்து போதற்குரிய தகுதியை உண்டு பண்ணினும், அக்காலத்தும் தன் குடிப்பிறப்பினிலைநாட்டுவதற்கு மானத்தை இழத்தல் கூடாது. ஏனெனின்? உடம்போ நிலையற்றது; காப்பாற்றுகின்ற மானமோ நிலை உடையது புகழைக்கொடுப்பது; ஆகையால் நிலை உடைய ஒன்றினை விரும்புதல் நற்குடிப் பிறந்தானுக்கு இலக்கணமென்று கூறியதுடன் ஒருவன் இறக்கவேண்டிய ஆபத்தினை அடையவருங்காலத்து எவ்வளவு இழிவாகிய காரியங்கள் செய்தாகினும் உயிர் வாழ்வதற்குரிய தகுதிகளைச் செய்தல்கூடும் என்று கூறுகின்ற வடநூலார் கொள்கையை மறுத்து மானத்தின் பெருமையே பெருமை என்று நிலைநாட்டியதும் ஆயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "மானத்தை விரும்புபவர் பெரியதோர் தகுதியை யடைவதன் பொருட்டும் இழிவாகிய காரியத்தைச் செய்யாரோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

962. சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு பேராண்மை வேண்டு பவர்.

(பரி.) இ-ள். சீரினும் சீர் அல்ல செய்யார் = புகழ்செய்யுமிடத்தும் தங் குடிமைக்கொவ்வாத இளிவாவுகளைச் செய்யார்—சீரொடு பேராண்மை வேண்டுபவர் = புகழுடனே மானத்தை நிறுத்துதலை விரும்புவார். எ-று.

எவ்விடத்தும் நிலைகுலையாத் திண்மையான் உளதாதல்பற்றிப் 'பேராண்மை' எனப்பட்டது. நிலையுடைய புகழின் பொருட்டாகவுஞ் செய்யாரென்பதாம். (உ)

விளக்கம்:—புகழோடு மானத்தை நிலை நிறுத்துதலை விரும்பி ஒன்றவர் அந்நிலையாகிய புகழைத் தேடுவதன் பொருட்டு தம் மூடைய குடிப்பிறப்புக்கு ஒவ்வாதனவாகிய இழிவான காரியங்களைச் செய்யமாட்டார்கள் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், எவ்விடத்தும் எக்காலத்தும் தம் நிலை குலையாமலிருக்க வேண்டுமென்று உறுதிகொண்ட மனமுடையவர் புகழ்பொருட்டாக இழிந்த காரியங்களைச் செய்யமாட்டார்க ளென்றும், அவ்வித செய்யாது தம் மானத்தை நிலை நாட்டுகின்றனராதலால், அவ்

வித தகுதிஉடையாரைப் பேராண்மைஉடையாரென்றும் அறிகின் றேமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "புகழ் பொருட்டும் குடிப் பிறந்தார் தம் மானத்தைப் போக்கார் என்று அறிந்தோம். ஆயின், ஒருவனுச்குச் செல்வம் சுருங்கிய காலத்தும் தன் மானத் தைக் கருதாது பணிந்து நடத்தல் வேண்டியதில்லையோ?" என்ன லும், ஆசிரியர் கூறுவாராயினர்.

963. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய சுருக்கத்து வேண்டு முயர்வு.

(பரி.) இ-ள். பெருக்கத்துப் பணிதல் வேண்டும்=குடிப்பிறந்தார்க்கு நிறைந்த செல்வமுளதாயவழி யாவர்மாட்டும் பணிவு வேண்டும்;—சிறிய சுருக்கத்து உயர்வு வேண்டும்=குறைந்த நல்குரவுளதாயவழிப் பணியாமை வேண்டும். எ-று.

பணியாமை=தாழ்வு வாராமற் பழையவுயர்ச்சிக்கண்ணே நிற்றல். செல் வக்காலை அஃதுயர்ச்சி செய்யத் தாந் தாழ்தலும், அல்லற்காலை அது தாழ்வு செய்யத் தாமுயர்தலும், வேண்டுமென்பதாம். இவைமூன்றுபாட்டானும் தாந் தாழ்தற்கேதுவாயின செய்யாமைச் சிறப்புக் கூறப்பட்டது. (கூ)

விளக்கம் :—நற்குடியில் பிறந்தவர்களாயினுர்க்கு எவ்வித பெருஞ் செல்வமுண்டான காலத்தும் செல்வத்தை அடைந்த அவர் யாவரிடத்தும பணிவாக இருத்தல் வேண்டுமென்றும், அந் நற்குடிப் பிறந்தார்க்கே தரித்திரமென்பது உண்டாகுமாயின் பணி யாதிருத்தல் வேண்டும் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. இதனுல், ஒருவன் நற்குடிப் பிறந்தானுப் இருந்து தன் செல்வத்தை எல்லாம் போக்கியகாலத்து எல்லோரிடத்தும் வணங்கி நடக்க முயல்வானுயின், உலகத்தவர் அவ்வணக்கத்தை அவனது இயற்கை யரிய நற்குணமென்று கொள்ளாது வறுமை மிகுதியால் பணிவு காட்டுகின்ருன் என்று எண்ணி அவனைத் தாழ்த்தி விடுவார்களாத லால், அவ்வீத பணிவு செய்பவன் தரித்திரம் வந்தகாலத்து பழைய உயர்ந்த நிலையிலேயே நின்று எவற்றையும் செய்தல் வேண்டு மென்றும், அவ்வீதம செய்வதால் மானத்தைக் காத்தலாகு மென்றும், அந்நற்குடிப் பிறந்தானே செல்வத்தை உடையவனுக இருக்கின்ற காலத்து யாரிடத்தும் எவ்வீரவுக் கெவ்வளவு அதிக மாகத் தாழ்ந்து நடக்கின்ருனே அவ்வளவுக் கவ்வளவு உலகத்தவர்

இவன் இவ்வளவு செல்வந்தனாக இருந்தும், இவ்வளவு பணிவுடையவனாக இருக்கின்றானே' என்று அவனது பணிவுடைமைக்கு வியந்து அவனை உயர்த்துவராதலால், செல்வமுள்ளகாலத்துப் பணிதல் அவனுக்கு உள்ள பெருமையை அதிகப் படுத்துவதாகும் என்று அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "நற்குலத்தில் தோன்றினர் எக்காலத்துப் பணிவுடையராயி இருத்தல் வேண்டும் என்பதை இத்திருக்குறளால் அறிந்துகொண்டோம். ஆனால், இவ்விதம் எவனேனும் ஒருவன் தான் முன்னிருந்த நிலையினின்றும் சிறிது தாழ்ந்து நடக்க முயலுவானாயின், அவனை உலகோர் எவ்விதம் மதிப்பர் என்பதை ஓர் உவமை வாயிலாக விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

964. தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை.

(பரி.) இ-ள். மாந்தர்=குடிப்பிறந்தமாந்தர், —நிலையின் இழிந்தக் கடை=தம் முயர்ந்த நிலையைவிட்டு அரனினின்றும் தாழ்ந்தவழி,—தலையின் இழிந்த மயிர் அனையர்=தலையைவிட்டு அதனினின்றும் வீழ்ந்த மயிரினை யொப்பர். எ-று.

அந்நிலையை விடாதுநின்றவழிப் பேணப்படுதலும், விட்டுத்தாழ்ந்தவழி இழிக்கப்படுதலும், உவமையாற்பெற்றாம். (ர)

விளக்கம்:—உயர்ந்த குடியில் பிறந்த மக்கள் தமக்கிருக்க வேண்டிய தம்முடைய உயர்ந்த நிலைமையை விட்டுவிட்டு அந்நிலைமைக்கு மாறுகத் தாழ்ந்து நடக்க முயலுவார்களாயின், அவரை உலகத்தவர் தலையிலிருந்த மயிரானது அத்தலையை விட்டுக் கீழே விழுந்துவிடுமாயின் அதனை எவ்விதம் மதிப்பரோ அவ்விதம் மதிப்பர் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, ஒருவன் தலையில் உள்ள மயிர் அத்தலையினிடத்தே இருந்த காலத்து உறுப்புகளில் ஒன்றாக எண்ணப்பட்டு வளர்க்கப்படுவதாயினும், அவ்விதம் வளர்த்த அத்தலையிலே கீழே விழுந்துவிடின் அதனைச் சிறிதும் கவனியாது ஓதுக்கிடத்தில் தள்ளிவிடுவது உலக இயல்பாதலால் நற்குடிப் பிறந்தார் தம் குடிக்கேற்ற பெருமையோடு இன்சொல்லும், கையும், தன் மதிப்பும் உடையராய் நிற்பாராயின், அவரை

உலகோர் மிகுதியும் விரும்பிப் போற்றுவரென்றும், அவ்வித மல்லாது தம் நிலையில் தாழ்வராயின் அவரை உல்கோர் மதியார் என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "நற்குடிப் பிறந்தார் தம்மை மறந்து ஏதேனும் தம் குடிக்கு ஏலாத ஓர் சிறிய தாழ்வினைச் செய்து விடுவாராயின் உலகத்தவர் அதன் பொருட்டும் அவரை இழித்துக் கூறுவரோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

965. குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின்.

(பரி.) இ-ள். குன்றின் அனையாரும்=குடிப்பிறப்பான் மலைபோல வுயர்ந்தோரும்—குன்றுவ குன்றி அனைய செயிற் குன்றுவர்=தாழ்தற்கேதுவா கிய செயல்களை ஒருகுன்றியளவாயினுஞ் செய்வராயிற் றாழ்வர். எ-று.

குன்றியனையவுமென்னும் இறந்தெறிப்பும்மை விகாரத்தாற்றொக்கது. தாழ்தற்கேதுவாய செயல்களாவன:—இளிவந்தன. சொற்பின்வருநிலை. (கு)

விளக்கம்:—மலைபோன்ற உயர்ந்த குடியிற் பிறந்த மக்களும் தாம் தாழ்ந்து போவதற்குக் காரணமாகிய செயல்களில் ஒரு குன்றிமணி அளவு செய்துவிடுவாராயின், அக்குடிப் பிறப்பினும் தாழ்ந்தவராவார் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால் நற்குடிப் பிறந்தார் எத்துணைப் பெரியதோர் தகுதியிலிருப்பவராயினும், தம் குடிக்கு அடாததாகிய பழிவரக்கூடிய செயல் ஒன்றினைக் குன்றிமணியைப்போன்ற மிகச் சிறிய அளவாகச் செய்தாலும், அவர் உலகத்தாரால் தாழ்ந்தவராகவே எண்ணப்படுவர் என்று அறிந்தோம். அன்றியும், ஆசிரியர் காட்டிய உயர்ச்சிக்கு உரிய மலையும் தாழ்விற்கு உரிய குன்றிமணியும் ஆகிய உவமைகளால் "கலப்பாலிற்குத் தெளிப்புரை" என்பதுபோல் பெரியதோர் நற்குணமும் சிறியதோர் பழிப்பால் கெட்டுவிடும் என்பதும் அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வித நற்குடிப் பிறந்தான் தாழ்ந்த செயல் ஒன்றினைக் கொள்வானாயின், அந்நிலையால் அவன் அடைந்த மக்கட் பிறப்பினால் அடைய வேண்டிய இருமைப் பயன்களையும் இழப்பன்போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

966. புகழின்ரூற் புத்தேணுட் டுய்யாதா லென்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை.

(பரி.) இ-ள். இகழ்வார்பின் சென்று நிலை=மானத்தைவிட்டுத் தன்னை யவமதிப்பார் பின்னே ஒருவன்சென்று நிற்கின்றநிலை—புகழ் இன்று=இவ்வுலகத்துப் புகழ்பயவாது;—புக்தேள் நாட்டு உய்யாது=வானப்புத்தேளுலகத்துக் செலுத்தாது;—மற்று என்=இனி அவனுக்கு அது செய்வதியாது! எ-று.

புகழ் பயப்பதனைப் புகழென்றார். பயனுய இவ்விரண்டுமின்றிக் கொன்னே மானங்கெடுகின்றது என்னையென்பதாம். இஃது மூன்றுபாட்டானும் அவைசெய்தற்குற்றங் கூற்பட்டது. (சு)

விளக்கம் :—நற்குடிப் பிறந்தான் ஒருவன் தனக்கு இயற்கையாக அமையவேண்டிய மானத்தைவிட்டுவிட்டுத் தன்னை அவமதிப்பவர் பின்னேசென்றுதாழ்க்திருக்கும் நிலையானது இவ்வுலகத்தும் அவனுக்குப் புகழினை உண்டுபண்ணுது என்றும், அதுவல்லாலும் தேவ உலகத்தும் அவனைச் செல்லும்படிச் செய்யாது என்றும், இவ்விதமிருக்க அவன் தன்னைத் தாழ்த்திக்கொண்டு நிலையானது அவனுக்கு என்னபயனைச்செய்யுமென்று இக்திருக்குறள் விளவுகின்றது. இதனால் எவன் ஒருவன் தன் பெருமையை விட்டுத் தன்னை மதியாதவர்கள் பின்னேபோய் அவரிடத்தைக் கைகட்டி வாய்பொத்தி மானத்தை இழக்கின்றனே அவ்வித தருதியுடையவனது நிலையானது அவனதுஇம்மைப்பயனுகிய புகழினையும், மறுமைப்பயனுகிய தேவபோகத்தையும் கெடுக்கும்என்றும், ஆதலால் அவ்விதம் செய்தல் ஆகாது என்றும் அறிக்தோ மென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "தனது இன்னுயிர் காத்தற்பொருட்டேனும் ஒருவன் தன்னை இகழ்வானிடத்திச் சென்று பொருள் பெற்று வாழ்தல் கூடாதோ ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

967. ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலி னந்நிலையே
கெட்டா னெனப்படுத னன்று.

(பரி.) இ-ள். ஒட்டார் பின் சென்று ஒருவன் வாழ்தலின்=தன்னையிகழ்வார் பின்னே சென்று பொருள்பெற்று அதனலொருவன் உயிர்வாழ்த

வின்,—அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று = அது செய்யாது இறந்தானென்று சொல்லப்படுதல் அவனுக்கு நன்று. எ-று.

ஒட்டுதல் = பொருந்துதல். அந்நிலையேயென்றது செல்லாத முன்னே நிலைக்கண்ணே நின்றென்றவாறு; அப்பொழுதே யென்றுமாம். புகழும் புத்தேணுடும் பயவாதேனும் பொருள்பெற்று உயிர்வாழ்வாமென்பாரை நோக்கிக் கூறியது. (எ)

விளக்கம் :—ஒருவன் தன்னை இகழ்ந்து பேசுகின்றவன் பின்னேபோய் அவ்விகழ்தலை நோக்காது பொருள் ஒன்றையே கருதி அவனிடத்துப் பொருள்பெற்று அப்பொருளால் வாழ்ந்து உயிரோடிருத்தலினும், அவ்விழிந்த காரியத்தைச்செய்யாது இறந்து போய்விட்டான் என்று பிறரால் சொல்லும்படி அவன் இறப்பானையின் அது மிகுதியும் நன்மை உடையது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. எனெனின் ? அடையவேண்டிய இம்மை மறுமைப் பயன்களை அடையாதவிதம் செய்கின்ற இழிந்த காரியத்தைச் செய்து ஒருவனிடத்துப் பொருளைப்பெற்று நில்லாத தேகத்தைக் காப்பாற்றினாலும், அத்தேகமானது பின்னும் அழிந்தே போகின்றபடியால், அவ்விதம் அழிந்து போகும் தேகத்தை மான மழிவதற்கு முன்னேயே விட்டுவிடுவானுயின் புகழ் ஒன்றையேனும் அடைதல் கூடும் என்று அறிவித்ததாக அறிந்தோ மென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "நம்மாசிரியர் உடலை ஓம்பி வாழ்வதற்கும் மானம் கெடுதலாகாது என்று கூறுகின்றனர். அவ்விதம் கூறுவதற்கு உள்ள ஏதுவையும் இன்னும் சிறிது விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

968. மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை பீடழிய வந்த விடத்து. [மை

(பரி.) இ-ள். பெருந்தகைமை பீடு அழிய வந்தவிடத்து = உயர்குடிப் பிறப்புத் தன்வலியாகிய மானம் அழியவந்துழி,—ஊன் ஓம்பும் வாழ்க்கை மற்று மருந்தோ = இறத்தலொழிந்து பயனில்லாத வுடம்பினைக் காக்கும் வாழ்க்கை பின்னுமிறவாமைக்கு மருந்தாமோ ? எ-று.

மற்றென்பது மேற்சொல்லிய இறப்பினை மாற்றிநின்றது. நற்குணங் கட்கெல்லாம் இடனுதற் சிறப்புப்பற்றிப் 'பெருந்தகைமை' என்றும், அவை

யெல்லாவற்றுள்ளும் அதற்கு வலியாதற்கிறப்புப்பற்றிப் 'பீடு' என்றும், அஃ தழிந்தால் பின்றைவேற்றுடம்பு இழிக்கப்படுதலின் அதனை 'ஊன்' என்றும், பின்னுமிறத்தல் ஒருதலையென்பார் 'மருந்தோ' என்றுங் கூறினர். மானத் தின்றொழில் அதற்கிடனாகிய குடிப்பிறப்பின்மேனின்றதாம். (அ)

விளக்கம்:—உயர் குடிப் பிறப்புக்கு வலிமை என்று சொல்லு கின்ற மானமென்னும் பெருமை ஒருவனுக்கு அழிந்து போகக் கூடிய நிலைமை வந்தகாலத்து அதனால் இறந்து விடாமல் இருந்து, பயன் அடையக்கூடாத இவ்வுடம்பினைக் காத்து, வாழ்கின்ற வாழ்க் கையானது பின்னும் இறவாதிருத்தற்கு ஓர் மருந்தாகுமோ என்று இத்திருக்குறள் வினவுகின்றது. அதாவது, கற்குடிப் பிறப்பு கற் குணங்களுக்கெல்லாம் காரணமாக இருக்கின்றதென்றும், அக்கற் குணங்கள் எல்லாவற்றுள்ளும் மானமென்பது மிக வலிமை உடை யதாயிருத்தலின், அவ்வித வலிமை உடைய மானத்தை ஒருவன் இழந்த பிறகு அவனுக்கு இருப்பது பயனற்ற வெற்றுடம்பென்றும், அவ்விதம் உயிரில்லாத பிணத்துக்குச் சமானமாகிய வெற்றுடம் பினை ஒருவன் காக்கவேண்டுமென்று இழிந்த தொழிலைச் செய்து காப்பானெனினும், காத்த அவ்வுடம்பு இறவா திருக்குமாயின் காத்தல் கூடுமென்றும், அவ்வாறு அல்லாது என்றேனும் அவ் வுடம்பு அழிந்தே போகுமாதலால் இவ்விதம் இழிந்த தொழிலைச் செய்து காத்ததாகிய அவவுடம்பிற்கு அவ்விழிந்த தொழில் இறவாத நிலைமையை உண்டுபண்ணும் மருந்து என்னும் அமிர்தம் ஆகாது என்றும் கூறியதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக் கர், "இன்னுயிர் தங்கும் இவ்வுடலை ஒருவன் தனக்கு வரும் சிறிய இழிவின்பொருட்டு எவ்விதம் போக்கிக்கொள்ள ஆசைப்படுவானோ? அவ்விதம் போக்கிக்கொள்வதை மக்களுள் உண்டு என்பதை ஓர் உவமைவாயிலாக விளக்குதல் கூடுமோ?" என்னவும், ஆசிரியர் கூறுவாராயினர்.

969. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்ன
ருயிர்நீப்பர் மானம் வரின்.

(பரி.) இ-ள். மயிர் நீப்பின் வாழாத் கவரிமா அன்னர் = தன்மயிர்த் திரளின் ஒருமயிர் நீங்கினும் உயிர்வாழாத கவரிமானையொப்பார், —மானம்

வரின் உயிர் நீப்பர்=உயிர் நீக்கத்தான் மானமெய்து மெல்லைவரின், அதனைத் தாங்கா திறப்பர். எ-று.

இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. உயிரும் மானமும் உடனில்லாமைக்கண், பின்னும் போவதாய உயிரைநீத்து எஞ்ஞான்றும் நிற்பதாய மானத்தை யெய்துவரென்பதாம். உவமை அவர்க்கு அஃதியல்பென்பது விளக்கி நின்றது. (௯)

விளக்கம் :—தம்முடைய உயிரைப் போக்கிக் கொள்ளுவதால் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் தகுதி ஒருவருக்கு வாய்க்குமாயின், அக்காலத்து உயிரைப்பொருளென்று கொள்ளாது மானத்தையே பொருளென்று கொண்டு உயிரைக் காத்து நில்லாது இறந்துவிடுபவர் எவரோ, அவர் அடர்ந்த தன்னுடைய மயிர்க் கூட்டத்தில் ஒரு மயிர் தன்னை விட்டு நீங்குவதாக நேரிடின் அதற்காக உயிரைப் போக்கிக்கொள்ளும் கவரிமான் என்னும் மிருகத்திற்குச் சமானமாவர் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால் ஒருவன் தன் உயிர் காக்கும் பொருட்டு மானத்தைப் போக்கி அவ்வுயிரைக் காத்தல் வேண்டிய நிலைவருமாயின், எப்போதும் தேகத்தைவிட்டுப் போய்விடக்கூடியதாகிய அவ்வுயிரைக் காத்துப் பயனில்லை என்று உணர்ந்து எப்போதும் அழியாததாகிய மானத்தையே காக்கும்பொருட்டுத் தன்உயிரைப் போக்கிக்கொள்ளுவான் என்றும், தேகம் முழுவதும் அடர்ந்த மயிரைப்பெற்று இருந்தும் அதில் ஒரு மயிரைப் பிறரால் இழக்கவரும காலத்து அதற்காக மனம் வருந்தி உயிரைப் போக்கிக் கொள்ளும் கவரிமான் என்னும் மிருகத்துக்கு அவன் சமானமாவான் என்றும் அறிவதுடன், மானமுடையார் "மயிர் நீப்பின்வாழாக் கவரிமான்" என்பதை உணர்ந்து அம்மானத்தை இழந்து உயிரைக்காத்தல் இல்லையென்றும், மானத்தையே காத்தல் அவர்க்கு இயற்கை என்றும் அறிந்தோமென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வித மானமுடையாரை உலகோர் எவ்விதம் கொள்வர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

970. இளிவரின் வாழாத மான முடையா
ரொளிதொழு தேத்து முலகு.

(பரி.) இ-ள். இளி வரின் வாழாத மானம் உடையார் ஒளி=தமக்கோரிழிவு வந்துழிப் பொறுத்து உயிர்வாழாது அதனை நீத்த மானமுடையா

ரது புகழ்வடிவினை—தொழுது வத்தும் உலகு=எஞ்ஞான்றுந்தொழுது நுதியாநிற்பர் உலகத்தார். எ-று.

"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்—வலவ னேவா வான வூர்தி யெய்து" * வராகலின், துறக்கச்செலவு சொல்லவேண்டாவாயிற்று. இவை நான்கு பாட்டாலும் மானப்பொருட்டாய இறப்பினது சிறப்புக் கூறப் பட்டது. (௰)

விளக்கம்:— தமக்கு ஏதேனும் ஓர் இழிவான செயல் வந்த காலத்து அவ்விழிவைப் பொறுத்துக்கொண்டு உயிர் வாழ முடி யாதவராய் அவ்வுயிரினைப் போக்கிக் கொண்ட மானமெனனும் ஆபரணத்தைப் பூண்டவரது புகழ் என்னும் உருவத்தை உலகத்தார் எக்காலத்தும் வணங்கித் துதித்துக் கொண்டிருப்பர் என்று இத் திருக்குறள் கூறுகின்றது. இதனால், எவர் மானத்தின் பொருட்டு உயிரைப் போக்கிக் கொண்டு மானத்தைக் காத்துச் சென் றாரோ, அவருடைய உருவம் போய்விட்டாலும் அவர்க்குப்பின் நிலையாக நிற்கின்ற புகழ் என்னும் உருவத்தை உலகத்தவர் எக்கா லத்தும் நினைத்தலோடு, அதையே மனத்தால் வணங்கி, வாக்கால் துதித்துக் கொண்டிருப்பார் என்று கூறுவதால், மானமுடையவர் இறந்தும் இறவாதாராய் உலகத்து இருப்பதுடன் மறுமைப் பய னாகிய துறக்கத்தையும் அடைவது திண்ணம் என்பது ஆயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "மேற்கூறிய நான்கு திருக் குறள்களாலும் மானத்தின் பொருட்டு உயிரைப் போக்கிக் கொள்ளுகின்றவர்கள் சிறப்பினை அறிந்தோம். இனி, இன்னும் குடிப்பிறந்தார்க்கு உள்ள தன்மைகளையும் அறியவேண்டும்" என்ன லும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

98. அதிகாரம்.

பெருமை.

(பரி.) அஃதாவது செயற்கரியசெய்தல், தருக்கின்மை, பிறர் குற்றங் கூறாமை யென்றிவை முதலிய நற்குணங்களாற் பெரியாரது தன்மை. நிலையினு மேன்மேலுயர்த்தப்பயத்தவாய விவை உளவாவது நிலையிற் றாழாமையுள்வழியாகலின், இது மானத்தின்பின் வைக்கப்பட்டது.

---

*புறநானூறு, 27.

விளக்கம் :—அதாவது, பெரிய தன்மை. பெரிய தன்மையாவது செய்தற்கு எளியவற்றை விட்டு அரியவற்றைச் செய்தல், கர்வமில்லாமை, பிறருடைய குற்றம் சொல்லாமை என்ற நற்குணங்கள் எல்லவேயா அவைகளே எல்லாம் உடையோருடைய தன்மையேயாம். தம் நிலையினின்றும் எக்காலத்தும் தாழ்வதற்கு மனம் கொள்ளாத மானமுடையவர்க்கே பெருமை என்னும் உயர்வு உண்டாகுமாதலால், அம்மானத்தை இதுவென்று அறிவிக்கும் அதிகாரத்துக்குப் பிறகு பெருமை என்னும் இவ்வதிகாரம் வைக்கப்பட்டு உள்ளது என்றனர். அது கேட்ட மாணாக்கர், "நற்குடியிற் பிறந்தார்க்கு மானமென்பது முக்கியமானதென்று அறிந்தோம். இனி, அவர் தகுதிகளுள் பெருமை என்பது ஒன்று ஏன்றமையால், அப்பெருமை என்பதின் இலக்கணத்தையும் அறியவிரும்புகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்

971. ஒளியொருவற் குள்ள வெறுக்கை யிளியொருவற் கீஃதிறந்து வாழ்த்து மெனல்.

(பர்.) இ-ள். ஒருவற்கு ஒகி உள்ள வெறுக்கை = ஒருவனுக்கெகாரியாவது பிறரால் செயற்கரிய செய்வேமென்று கருதும் ஊக்கமிருந்தி, — ஒருவற்கு இளி அஃது இறந்து வாழ்தும் எனல் = ஒருவனுக்கு மாசாவது அச்செயலை யொழிந்து உயிர்வாழுக்கடவே மென்று கருதுதல். எ-று.

ஒளி = தானுளனுயகாலத்து மிக்குத் தோனறுதலுடைமை. "ஒளிக்கு ளேங்குபுகழ்" செய்யான்" என்றார் பிறரும். மேலும் செயற்கரிய செய்வார் பெரியர் *என்றாராயினும், ஈண்டு அவை அளவிறந்த வொப்புரவு முதலியவாக். அவற்றினுளுய பெருமையை அதன் காரணத்தின்மேலிட்டு 'உள்ள வெறுக்கை' என்றும், அதுதன்னையே அதன் காரியமாகிய ஒளியாகியுங் கூறினர். இவ்வாறு இதனெதிர் மறைக்கண்ணு மொக்கும். இக்குறள் பெருமையின் சிறப்புக் கூறப்பட்டது. (க)

விளக்கம் :—உலகத்து ஒருவனுக்கு ஒளியென்று சொல்லப்படுவது மற்றவர்களால் செய்தற்கரிய செயல்களைச் செய்யவேனென்று எண்ணுகின்ற ஊக்க மிருதி யென்றும், அதற்கு மாருகிய இளியென்பது ஒருவனுக்கு அவ்வொரியை மறைத்து அச்செய்

*திருக்குறள், 26.

தற்கரிய காரியங்களைச் செய்யாது மாசில்லை அடைந்து எவ்வித மேனும் உயிர் வாழ்ந்து கிடப்போமென்று எண்ணுதல் என்னும் இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, ஒளி யென்றும் புகழ் என்றும் கூறுகின்ற இரண்டு தகுதிகளுள் ஒருவன் தான் உள்ள காலத்துப் பிறர் அறியும்படி வாழ்வது ஒளியென்றும், இறந்த பிறகும் பலரால் எண்ணக் கூடிய அறம் முதலியவற்றால் அடைந்த பயன் புகழ் என்றும் மேலோர் கூறுகின்றனராதலால், இல்லறத்தானுகிய ஒருவன் தான் உள்ளகாலத்துப் பிறரால் அறியப்படும் ஒளியோடு கூடி வாழவேண்டுமானால், அவன் எக்காலத்தும் செய்வதற்கு அரிய செய்கைகளாகிய அளவு சொல்லக்கூடாத ஒப்புரவு, ஈகை முதலியவைகளை மேற்கொண்டு செய்தல் வேண்டுமென்றும், அவ்விதம் செய்து அதனாலாகிய பெருமையை அடைவதே ஒருவனுக்குப் பொக்கிஷ மென்றும், அப் பொக்கிஷமே எக்காலத்தும் அழியாத ஒளியென்றும் கூறினர். இவ்வித ஒளியும், புகழும் ஆகிய இரண்டினையும் பிரித்துக் காட்டும் தன்மையினை,

> "உண்ணு ளொளிதிரு வேனுங்கு புகழ்செய்யான்
> றன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
> வழங்கான் பொருள் காத்திருப்பானேல் அஃ
> தீழந்தானென் றெண்ணப்படும்."

என்னும் கலடியார் செய்யுளாலும் அறிதல் கூடும். இங்கு இப்பெருமை உடையார் செயல் செயற்கரிய செய்தல் என்றாலும், மேல் நீத்தார் பெருமையினுள் நீத்தாருக்குக் கூறிய செயற்கரிய செயலாகிய மனத்தைப் புலன்கள் வழி செலுத்தாத பெருமையினின்றும் இது பிரித்துக் காட்டப்பட்டது என்று அறிந்தோம். ஆதலால், ஒத்த பிறப்பினராய மக்களுள் மனத்தைப் பொறி வழிச்செலுத்தாத பெரியோர் துறவிகளென்றும், ஒத்த பிறப்பினராய மக்களுள் தாம் நல்வழியில் தேடிய பொருளை இம்மைப் பயனின் பொருட்டுச் செலவழித்துப் புகழினை அடைகின்றவர் செயற்கரிய செய்கின்ற பெரியாரென்றும், அவ்வாறு செய்யாதும் தாமும், உண்ணுந்தம் பொருளைச் சேர்த்துவைத்து இழந்து போகின்றவர் சிறியரென்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இத்திருக்குறளால் பெருமையின் சிறப்பு இதுவென்று அறிந்

தோம. ஆயின எல்லாரும் மக்கட் பிறப்பினராகலே காணப்படுகின் றதாதலால், பெருமை உடையராய சிறுமை உடையரென்பதை எவ்விதம் அறிந்து கொள்ளுதல் கூடும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

972. பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்கு மந் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்.

(ப-ரை) மக்கள்.எல்லாவுயிர்களும் பிறப்பு ஒக்கும்=எல்லாமக்களுயிர்களும் பொதுவாகிய பிறப்பியல்பு ஒருதன்மையுடைத்தாம்;—சிறப்பு ஒவ்வா செய தொழில் வேற்றுமையான்=பெருமை சிறுமையெனப்பட்ட சிறப்பியல்பு வொவ்வா, முறைசெயயுந் தொழில்களது வேறுபாட்டான். எ-று.

வேறுபாடு=நல்லனவும், தீயனவும், இரண்டுமாய வகைமை, இரண்டுமல்ல வாகிய வுமாய பலவிதமாய பாகபாடுகள். வினையஞ்சாற் பஞ்சபாதகங்களு மாகிய யாவகையுய பொருந் நிலன் அதர் பயனனுபவித்தல் எல்லா பருணதிகார்களுமொருமித் 'பிறப்பொக்கும்' என்னும், பெருமைசிறுமைகட் குக் கட்டளைக்கல்லாகிய தொழிற்பாகுபாடுகள் வருணதோறும் யாக்கை தோறும் வேறுபடுதலிற் 'சிறப்பொவ்வா' எனறுங் கூறினர். ( )

விளக்கம்:— எல்லா மக்களுக்கும பிறப்பியலபு பொதுவாக ஒத்திருந்தாலும், பெருமை, சிறுமை என்று சொல்லப்பட்ட சிறப்பு இயல்புகள் அம்மக்கள் செய்கின்ற தொழில்களது வேறுபாட்டி னால் ஒவ்வா என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, எச்சாதியிற் பிறந்தவராயினும் ஐம்பூத சேர்க்கையாலாகிய தேகமானது ஒத்து காணப்படினும் அவர்களிடத்தே தோன்று கின்ற நல்ல காரியங்களும், தீய காரியங்களும் ஆகிய இரண்டினா லேயே அவர்களுக்குப் பெருமையும, சிறுமையும் வருமே அன்றி, நற்குலத்தான் தீய செயல்களைச் செய்வானாயின் பெருமை வாரா தென்றும், தாழ்ந்த குலத்தவன் நீயன முழிந்து நல்லன செய்வா னாயின் அவனுக்குச் சிறுமை வாராது பெருமையே வருமென்றும், உருவத்தால் ஒத்திருக்கின்ற மக்கட் பிறப்பினாலேயோ குலத்தினா லேயோ பெருமையும் சிறுமையும் உண்டாவதில்லை என்றும், அவ ரவருடைய தொழில்களுக்குத் தக்க அளவாகத் தான் பெருமையும் சிறுமையும் வரும் என்றும் எடுத்துக் காட்டியதாயிற்று என்றனர்.

அது தேட்ட மாணாக்கர், "அவரவர் செயல்களால் பெரியர் சிறியர் என்பதை அறிந்து கொள்ளுதல் கூடும் என்பதை அறிந்தோம். ஆயின், செல்வந்தராயிருப்போர் தீயன செய்வாராயின், அவரை உலகத்தோர் பெருமையாக மதிப்பரோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

973. மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங் கீழல்லார் கீழல்லவர்.

(பரி.) இ-ள். மேல் அல்லார் மேல் இருந்தும் மேல் அல்லர் = செயற்கரிய செய்கலாது சிறியராயினார், உயர்ந்த வமளிமுதலியவற்றின் மிசையிருந்தாராயினும் பெரியராகார்; — கீழ் அல்லவர் கீழ் இருந்தும் கீழ் அல்லார் = அவை செய்து பெரியராயினார், தாழ்ந்த வறுநிலத்திருந்தாராயினும், சிறியராகார். ஏ-று.

மேலிருத்தல் கீழிருத்தல்களாற் செல்வ நல்குரவுகளும், மேல் கீழ்களாற் பெருமை சிறுமைகளும், நருதப்பட்டன. இவை யிரண்டுபாட்டானும் முறையே குடிமை மாத்திரத்தானுஞ் செல்வமாத்திரத்தானும் அஃதாகாமை கூறப்பட்டது. (௩)

விளக்கம்:- மற்றவர்கள் செய்தற்கு முடியாத செயல்களைச் செய்யாது சிறியராயினோர் மிக உயர்வாகிய செல்வத்தோடு கூடி இருந்தாராயினும் உலகத்தார் அச்செல்வந்தரைப் பெருமை உடையவரென்று மதிக்கமட்டாரென்றும், செய்தற்கு அருமையாகிய காரியங்களைச் செய்து பெருந்தன்மையை அடைந்தவர் மிகத் தரித்திரராய் இருந்தாலும் அவர்களை உலகோர் சிறியரென்று மதியாது பெருமை உடையவரென்றே மதிப்பரென்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், உண்பன. உடுப்பன, உறங்குவன ஆகிய இவைகளில் எவ்வளவு மேம்பட்ட இன்பங்களை அடையக் கூடியவர்களாக இருந்தாலும், உலகத்தில் மற்றவர்களால் முடியாத இன்சொல், ஈகை ஆகிய நற்குணங்கள் இல்லாதவர்க்கு அவர் செலவம் ஒன்றினால் மாத்திரம் உலகத்தில் பெருமை கிடைக்காதென்றும், படுப்பதற்குப் பாயுமில்லாது வெறுநிலத்தில் படுக்கக் கூடிய அவ்வளவு ஏழ்மை உடையவராக இருந்தாலும், உலகத்தவரால் விரும்பக கூடிய இனியசொல்லும், ஈகைக்குணமும் இருக்கு

மாயின் அவர்களைப் பலர் வறிஞர் என்று கருதி இகழாமல் செல்வந்தர்க்குக் கொடுக்கும் மேம்பட்ட பெருமையைக் கொடுப்பர் என்றும் அறிந்தோம் என்றனர் அதுகேட்ட மாணாக்கர்; "மேற்கூறிய இரண்டு திருக்குறள்களாலும் நல்லகுடியில் பிறத்தல் மாத்திரத்தாலும், செல்வத்தை உடையராய் இருத்தல் மாத்திரத்தாலும், ஒருவர்க்குப் பெருமை உண்டாகாது என்றும், அவர்களிடத்தே உள்ள நற்குணங்களால்தான் அது உண்டாகும் என்றும் அறிந்தோம். இனி, இவ்விதம் உலகத்துப் பெருமையை யடைய விரும்புவோர் எவ்வித நற்குணங்களோடு இருத்தல் வேண்டு மென்பதை ஓர் உவமை வாயிலாக விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

974. ஒருமை மகளிரே போலப் பெருமையுந் தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு.

(பரி.) இ-ள். ஒருமை மகளிரே போல=கவராத மனத்தினையுடைய மகளிர் நிறையின் வழுவாமற் றம்மைத் தாங் காத்துக்கொண்டொழுகுமாறு போல,—பெருமையும் தன்னைத் தான் கொண்டு ஒழுகின் உண்டு=பெருமைக்குணனும், ஒருவன் நிறையின் வழுவாமற் றன்னைத் தான் காத்துக் கொண்டொழுகுவானாயின். அவன்கணுண்டாம். எ-று.

பொருளின்றொழில் உவமையினும் வந்தது. நற்புண்டாதல் தோன்ற நின்றமையின், உம்மை எச்சவும்மை. ஒழுகுதல்=மனமொழிமெய்களை யொடுக்கி ஒப்புரவு முதலிய செய்துபோதல். இதனால் அஃதுளதாமாறு உறப்பட்டது. (ச)

விளக்கம்:- - வஞ்சகமில்லாத மனத்தினை உடைய பெண்கள் தமமுடைய கற்பினின்றும் வழுவாமல் தம்மைத் தாம் காத்துக் கொண்டு உலகத்து ஒழுகுவதுபோல், ஒருவனுக்கு வரவேண்டிய பெருமைக் குணமும் அவன் தன்னை நியாயவழியி னின்றும் தவறாமல் காத்துக் கொள்ளுதலாலேயே வருதல் வேண்டும் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, மகளிரை அவர்களுடைய கற்பு நிலையைக் கண்டு உலகத்தவர் போற்றிப் புகழ்வது வழக்கமாதலால், அவ்விதமே ஆடவன் ஒருவன் தன்னுடைய மனம் வாக்கு காயங்களை ஒடுக்கி மூன்றுவித அடக்கமுடையவனாகி உலகத்தோர்க்

குத் தன்னாலியன்றவரையில் ஈகையை செய்து வாழ்வானாயின் அவனுக்கு அப்போதுதான் பெருமை உண்டாகும் என்றும், செல்வத்தாலோ, வறுமையாலோ, நற்குடிப்பிறத்தலாலோ, தாழ்ந்தகுடிப்பிறத்தலாலோ பெருமையும் சிறுமையும் உண்டாகாது என்றும் அறிந்தோமென்றனர் அதுகேட்ட மாணாக்கர், "அவ்வித பெருமையுடையார் வறிஞராயிருப்பின் தாமெடுத்த ஈகையை முற்றுஞ் செய்யவல்லரோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

975. பெருமை யுடையவ ராற்றுவா ராற்றி னருமை யுடைய செயல்.

(பரி.) இ-ள். பெருமை உடையவர் = அவ்வாற்றாற் பெருமையுடையராயினார் — அருமை உடைய செயல் ஆற்றின் ஆற்றுவார் = தாம் வறியராயவழியும் பிறராற் செய்தற்கரியவாய தஞ்செயல்களை விடாது அவை செய்யுநெறியாற் கடைபோகச் செய்தலை வல்லராவர். எ-று.

வறியராயவழியுமென்பது, முன்செய்து போந்தமை தோன்றப் 'பெருமையுடையவர்' என்றதனானும், 'ஆற்றுவார்' என்றதனானும் பெற்றாம். இதனால் அசனையுடையார் செய்தி கூறப்பட்டது. (௫)

விளக்கம்:—மேற்கூறிய வண்ணம் மனமொழி மெய்களை அடக்கிப் பெருமையை அடைந்தோர் தாம் தரித்திரத்தை அடைந்த காலத்தும் ஏனைய செல்வந்தர்களால செய்வதற்கு அருமையாகிய ஈகை முதலியவைகளை விடாமல் எவ்வெவ்விதமாகச் செய்தல் வேண்டுமோ அவ்வவ்விதமாகச் செய்து அந்நற்செயல்களை முடியும் வரையில் செய்ய வல்லவர் ஆவர் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, நற்குணமுடைய பெரியோர் தாம் செல்வந்தராத இருந்த காலத்தில் மாத்திர மல்லாமல் வறுமைப்பட்ட காலத்தும் நல்ல செய்கைகள் என்று எண்ணி எடுத்தனவாகிய ஒப்புரவு, ஈகை முதலிய செயல்களைத் தாம் இறக்கும் வரையும் எடுத்த தொழில் முடியும் வரையும் செய்து முடிக்கும் வல்லமை உடையவராகவே இருப்பர் என்று அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பெருமையே பொருளென்று கொண்ட பெரியார்க்கு எவ்வித இடையூறு வரினும் தாமெண்ணிய நற்செயல்களைச் செய்ய வல்லவர் என்பதை அறிந்தோம். இனி, இவ்வித பெரிய

தகுதி உடையாரை உலகோர் என் பின்பற்றுவதில்லை?" என்னும், ஆசிரியர் கூறுவாராயினர்.

976. சிறியா ருணர்ச்சியு ளில்லைப் பெரியாரைப் பேணிக்கொள் வேமென்னு நோக்கு.

(பரி.) இ-ள். பெரியாரைப் பேணிக் கொள்வேம் என்னும் நோக்கு= அப்பெற்றியராய பெரியாரை வழிபடாது அவரியல்பினை யாங் கோடுமென்னும் கருத்து—சிறியார் உணர்ச்சியுள் இல்லை=மற்றைச் சிறியாராயினர் மனத்தின்கண் உளதாகாது, எ-று.

குடிமை, செல்வம், கல்வியென்னிவற்றது உண்மை மாத்திரத்தால் தம்மை வியர்திருப்பார்க்கு அவை தமக்கியல்பென்று அமைந்திருப்பாரை வழிபட்டு அஃ துடையராதல் கூடாதென்பதாம். (கு)

விளக்கம் :—மேற் கூறிய வண்ணம் எடுத்த காரியத்தைச் செய்து முடிக்கும் பெருமை உடையவரை வழிபட்டு அவரது தகுதியைத் தாம் அடைவோம் என்னும் எண்ணமானது அப்பெருமையை அடையத் தகுதி அல்லாத வேனைய சிறியவர்களுக்கு மனத்தினிடத்தே தோன்றுதல் இல்லை என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அதாவது, தாம் பிறந்த குடிப்பிறப்பு, தாமடைந்த செல்வம், தமக்கு உள்ள கல்வி ஆகிய இவைகளே மிகப் பெருமை என்று தம்மைத்தாமே மதித்துக் கொள்ளுகின்ற இழிந்த குணமுடையோர்க்குப் பிறர்க்கு நன்மையாகிய செயல்களையே செய்து வாழ்வதும் குடிமை, செல்வம், கல்வி ஆகிய இவைகளெல்லாம் பெருமைக்குக் காரணவல்ல என்று பெருமையே பொருளாகக் கொண்ட பெரியோர்களை வழிப்பட்டு அவர் சொல்லும் வழி நின்று பெருமை அடைவதும் கூடாது. ஏனெனின்? தமக்குக் கிடைத்த குடிப்பிறப்பு, செல்வம், கல்வி ஆகிய இவைகளின் தகுதி ஒருவருக்கு அத்தகுதிச் சிறப்பினை உண்டாக்காது என்று அறியாமல் அவைகளை அதிகமாக எண்ணித் தம்மைத் தாமே மதித்துக் கொண்டு இருக்கின்ற கீழ் மக்களுக்கு அவர் மனத்தில் எக்காலத்தும் யான் என்கின்ற கர்வமே முனைந்து நிற்குமாதலால், அவர்க்குப் பெருமையை அடையவேண்டும் என்கின்ற உணர்ச்சி அம்மனத்தினில் தோன்றுவதற்கு இடமில்லை என்பது அறிந்தோம் என்றனர். அதுகேட்ட

மாணாக்கர், "இவ்விதம் பெருமையை அடைய விருமபாத கீழ் மக்களது கல்வி முதலியவை என்னாகும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

977. இறப்பே புரிந்த தொழிற்றாஞ் சிறப்புந்தான் சீர்ல்லவர்கட் படின்.

(பி.) இ-ள். சிறப்புத் தானும் = தனக்கொக்கும் பெரியாரிடத்து அமைந்திருத்தலைச் செய்வதாய சிறப்புத்தானும்,—சீர் அல்லவர்கட் படின் = தனக்கொல்வாத சிறியாரிடத்துப் படுமாயின்,—இறப்பே புரிந்த தொழிற்றாம் = அதனையொழிந்து தருக்கின்கண்ணே மிக்க செயலையுடைத்தாம்.

தருக்கினை மிகச் செய்யுமென்பதாயிற்று. சிறப்பு = குடிமை, செல்வம், கல்விகளினாய மிகுதி. இவை யிரண்டு பாட்டானும் அஃதிலார் செய்தி கூறப் பட்டது. (எ)

விளக்கம்:—குடிமை, செல்வம், கல்வி ஆகிய இவைகளின் மிகுதியானது அவை இருக்கவேண்டிய பெரியாரிடத்து அமையாது இருக்கக் கூடாத சிறியாரிடத்து உண்டாகுமாயின், அச்சிறப்பாகிய பெருமையினின்றும் ஒழிந்து கர்வத்தினையே மேற்கொண்டு சிறுமையே செய்வர் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. அது என்னையோவெனின்? நற்குடித் தோற்ற முடையாரிடத்தே செலவமும் கல்வியும் உண்டாகுமாயின், அச்செல்வத்திற்கும் கல்விக்கும் உண்டாகவேண்டிய பயன் யாவும் உண்டாகி அவற்றால ஆகிய பெருமையை அடையுமென்றும், அவ்வாறு அல்லாது நற்குடித் தோற்றமில்லாதாரிடத்துச் செல்வமும் கல்வியும் உண்டாகுமாயின், அவற்றால் தாமும் பயனடையாது பிறர்க்கும் பயன்படுத்தாது தமக்குக் கிடைத்த அப்பொருட் செல்வம், கல்விச் செல்வம் ஆகிய இரண்டு செல்வங்களாலும் தம்மை அதிகமாக மதித்துக் கர்வமடைந்து தீயன செய்து தீய வழியில் செல்வார்களாதலால் கல்வியும், செல்வமும் அடையவேண்டிய பெரியோரிடத்து அடைந்தாலன்றி அவையும் பெருமை யடையாமற்போம் என்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "சிறியோர் தருக்குற்று வாழ்வர் என்பதனால் ஏனைய பெரியோராயினார் தருக்கின்றி இருப்பர்போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

978. பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து.

(பரி.) இ-ள். பெருமை என்றும் பணியும்=பெருமையுடையார் சிறப்புண்டாய ஞான்றுந் தருக்கின்றி அமைந்தொழுகுவர்;—சிறுமை (என்றும்) தன்னை வியந்து அணியும்=மற்றைச் சிறுமையுடையார் அஃதில்லாத ஞான்றுந் தம்மை வியந்து புனையாநிற்பர். எ று.

பொருளின்றொழில்கள் பண்பின்மேலேற்றப்பட்டன. இஃது 'அற்ற மறைக்கும் பெருமை'* என்புழியு மொக்கும். என்றுமென்பது பின்னும் வந்தியைந்தது. ஆமென்பன விரண்டும் அசை. புனைதல்=பிறரிற் றமக்கோர் மிகுதியை யேற்றிக்கோடல். இதற்கு உயர்ந்தார் தாழ்வார் தாழ்ந்தார் உயர்வார் இஃதொருவிரோத மிருந்தவாறென்னென உலகியலை வியந்து கூறிற்றாக்குவாரு முளர். (௧)

விளக்கம்:—பெருமையையே தமக்கு அணிகலமாகவுடைய பெரியோர் மேற்கூறிய சிறப்புக்களாய குடிமை, செல்வம், கல்வி முதலியவைகள் தமக்கு உண்டாகிய காலத்தும் கர்வமில்லாமல் வாழ்வார் என்றும், ஏனைய சிறியோராவார் அவ்வித குடிமை, செல்வம, கல்வி முதலியவைகளைத் தாம் அடையாத காலத்தும் தம்மை அதிகமாக எண்ணிக் கர்வித்து நிற்பர் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது அதாவது, அளவிறந்த செல்வங்களும் அளவிறந்த கல்வியும் முன் நல்வினைப் பயனால் பெருமையை யுடையவர்கள் அடைவார்களாயின் 'இவை நமக்கு நல்வினைப்பயனால் வந்தன; இனி இவற்றைக் கொண்டு உலகோர்க்குப் பயன்படச் 'செய்தல்வேண்டும்' என்று எண்ணினவராய் யாவர்க்கும் பயன்படுத்துங் காலத்தும் யாதொரு கர்வமுமில்லாமல் பணிவுடன் வாழ்வர் என்றும், ஏனைய பெருமையில்லாத சிறுமையையே மேற்கொண்ட குடியிற் பிறந்தார் தமக்கு மேற்கூறிய கர்வத்தைத் தரக்கூடிய செல்வங்களெல்லாம் இல்லாதிருந்தும மிக்கதோர் கர்வத்தைக்கொண்டு பணிவோடு இராது தம்மைத் தாமே அதிகமாக மதித்து உலகில் வாழ்வர் என்றும் அறிந்தோம். ஆதலால், பெருமையுடையார் எக்காலத்தும் பணிவுடையராவர் என்றும், அவரல்லாதாராகிய சிறுமையுடையார் எக்காலத்தும் கர்வத்தோடு வாழ்வர் என்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட

* திருக்குறள், 980.

மாணாக்கர், "இவ்விதமாயின் பெருமையுடையார்க்குக் குணம் இது வென்றும், சிறுமையுடையார்க்குக் குணம் இதுவென்றும் ஆகிய இரண்டனையும் தொகுத்துச் சொல்லுதல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

979. பெருமை பெருமித மின்மை சிறுமை பெருமித மூர்ந்து விடல்.

(பரி) இ-ள். பெருமை பெருமிதம் ஆனமை=பெருமைக்குணமாவது காரணமுண்டாயவழியும் அஃதியல்பாதலேக்கிச் ருக்கின்றியிருத்தல்;— சிறுமை பெருமிதம் ஊர்ந்து விடல்=சிறுமைக்குணமாவது அஃதில்வழியும் அதனை யேற்றிக்கொண்டு தருக்கின்முடிவின்கண்ணே நின்றுவிடுதல். எ-று.

அளவறத்தருக்குதலென்பதாயிற்று. விடுமென்று பாடமோதுவாருமுளர்; முற்றுத்தொடரும் எழுவாய்த்தொடரும் தம்முளியையாமையின், அஃது பாடமன்மை யுணர்க. (கூ)

விளக்கம்:—பெரியோர்க்குள்ள பெருமைகுணம் என்பது கர்வத்தை உண்டாக்கக்கூடிய நற்குடிப் பிறப்பு, செல்வம், கல்வி இவையெல்லாம் இருந்தும் கர்வமில்லாது வாழ்வது என்றும், சிறியோர்க்கு உள்ள குணம் கர்வத்தை உண்டாக்கக்கூடிய மேற் சொல்லிய காரணங்களெல்லாம் இல்லாதிருந்தும் கர்வத்தின் உச்சியில் நின்று விடுதல் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், நீங்கள் வினவியபடி எல்லாச் செல்வங்களும் அடைந்தாலும், இச்செல்வங்களெல்லாம் இயற்கையாகவே உண்டாவனவும் போய் விடுவனவுமாகும்' என்று எண்ணிப் பெரியோர் கர்வத்தை அடையமாட்டார் என்றும், கர்வத்தை உண்டாக்கக்கூடிய ஒரு காரணமும் தமக்கு இல்லாதிருந்தும் சிறியோராயினர் எல்லாச் செல்வங்களும் தமக்கு இருப்பதுபோல் தம்மை மதித்து, இனி இல்லை என்கின்ற கர்வத்தின் முடிவில் நின்று விடுவார்களென்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் பெருமையுடையார்க்கும் சிறுமையுடையார்க்கும் உள்ள குணங்களை அறிந்தோம். ஆயின் இப்பெருமையுடையார் பிறரைப் பற்றிக் கூறுங் காலத்து எவ்விதங் கூறுவர் என்பதையும், சிறுமையுடையார் பிறரைப்பற்றிக்

கூறுங் காலத்து எவ்விதங் கூறுவர் என்பதையும் விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

980. அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான் குற்றமே கூறி விடும்.

(பா.) இ-ள். பெருமை அற்றம் மறைக்கும்=பெருமையுடையார் பிறர் மானத்தையே கூறி அமானத்தை மறையாதிருப்பர்,—சிறுமை குற்றமே கூறி விடும்=மற்றைச் சிறுமையுடையார் பிறர் குணத்தை மறைத்துக் குற்றத்தையே கூறிவிடுவர். எ-று.

மறைத்தலுங் கூறலும் வினையிடத்து மலையற்றன. அற்றம்—ஆகுபெயராகாமென்பது அரை. இவை மூன்றுபாட்டாலும் இருவர் செயலும் ஒருங்கு கூறப்பட்டன. (ம)

விளக்கம்:—பெருமையுடையவர் பிறரைக் குறித்துச் சொல்லுங்காலத்து அவர்க்கு உள்ள பெருமைகளையே எடுத்துச் சொல்லி அவர்க்கு இருக்கும் பெருமையல்லாத விஷயங்களை மறைத்து நிறுத்தல் வேண்டும், மற்றைச் சிறுமையுடையார் பிறரைப் பற்றிக் கூறுங் காலத்து அவர்க்கு உள்ள நல்ல குணங்களை எல்லாம் மறைத்து விட்டுக் குற்றங்களையே கூறுவர் என்றும் இத்திருக்குறள் கூறுகின்றது ஆதலால், பெருமையுடையார் பிறர்க்குள்ள பெருமையையே பேசி அவர்க்குள்ள சிறுமையை மறைத்துத் தாமும் பெருமையடைவதுடன் பிறரையும் பெருமையடையச் செய்வர் என்றும், அவ்விதம் அல்லாத கீழ்மக்களாகிய சிறியவர் மற்றவர்களுக்கு நல்ல குணங்களிருப்பினும் அவைகளை எல்லாம் சொல்லாமல் மறைத்து விட்டு ஏதேனும் ஓர் சிறு குற்றம் இருக்குமாயின் அதனையே பொருளாகக் கொண்டு யார்க்கும் பரக்கக்கூறித் தாமும் பெருமையடையாது அவரையும் பெருமையடையாமல் செய்து விடுவர் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "மேற் கூறிய மூன்று திருக்குறள்களாலும் பெருமையுடையார்க்கும் சிறுமையுடையார்க்கும் நிகழும் குணங்களும், குற்றங்களும் இவையென நன்கு அறிந்தோம். இனி, இவ்வித பெருமை உடையார்க்கு உண்டாகும் பல குணங்களையும் எடுத்துக் கூறல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

99. அதிகாரம்.

சான்றாண்மை.

(பரி.) அஃதாவது பலகுணங்களானு நிறைந்து அவற்றை யாடற்றன்மை. பல குணங்களானுமென்பது சாலுதற் றொழிலாற் பெறப்படுதலின், அவற்றை யென்பது வருவிக்கப்பட்டது. பெருமையு ளடங்காத குணங்கள் பலவற்றை யுந் தொகுத்துக்கொண்டு நிற்றலின், இஃதத்தன்பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:— அதாவது, எல்லாக் குணங்களும் நிறையப் பெற்று அக்குணங்களைப் பயன் படுத்தும் தன்மை. பெருமை என்னும் அதிகாரத்தில் சொல்லாத குணங்களெல்லாவற்றையும் தொகுத்து இதனுள் கூறுவதால் சான்றாண்மை என்னும் இவ்வதிகாரம் பெருமை என்னும் அதிகாரத்துக்குப் பிறகு வைக்கப்பட்டுள்ளது என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "சான்றாண்மை என்பதும் ஒன்று உள்ளது போலும்! அதனை விளக்கல்வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

981. கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

(பரி.) இ-ள். கடன் அறிந்து சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு= நமக்குத் தகுவது இதுவென்றறிந்து சான்றாண்மையை மேற்கொண்டொழுகுவார்க்கு—நல்லவை எல்லாம் கடன் என்ப=நல்லனவாய குணங்களெல்லாம் இயல்பாயிருக்குமென்று சொல்லுவர் நூலோர். எ-று.

சிலகுணங்களிலவாயவழியும் உள்ளன செய்துகொண்டனவாயவழியுஞ் சான்றாண்மையென்னுஞ் சொற்பொருள் கூடாமையின், 'நூலோர் இவ்வேதுப்பெயர்பற்றி அவரிலக்கணம் இவ்வாறு கூறுவரென்பதாம். (க)

விளக்கம்:—தாம் செய்யவேண்டிய காரியம் இதுவென்று தெரிந்து சான்றாண்மை என்பதை மேற்கொண்டு இவ்வுலகத்தில் நடப்பாரிடத்து நன்மையாகிய குணங்களெல்லாம் இயல்பாகவே அமைந்து இருக்கும் என்று நூல் வல்லவர் சொல்லுவர் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், நூல் வல்லவரெல்லாம் சான்

றோருடைய இலக்கணத்தைச் சொல்லுங் காலத்து நல்ல குணங்களை யெல்லாம் தம்மிடத்து இயல்பாகவே அடைந்துள்ளவர் சான்றோரென்றும், அவ்வித சான்றோர் தமக்குத் தகுந்தனவாகிய நல்ல செயல்களையே மேற்கொண்டு ஒழுகுவார் என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஆனால் இவ்வித சான்றோர்க்கு குணநலம் ஒன்றே அமையும் போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

982. குணநலஞ் சான்றோர் நலனே பிறநல
மெந்நலத் துள்ள தூஉ மன்று.

(பரி.) இ-ள். சான்றோர் நலன் குணநலமே=சான்றோர் நலமாவது குணங்களானாய நலமே;—பிற நலம் எந்நலத்தும் உள்ளது அன்று=அஃதொழிந்த வறுப்பக்களானாய நலம் ஒருநலத்தினு முள்ளதன்று. எ-று.

அகரலத்தை முன்னே பிரித்தமையின் ஏனைப்புறநலத்தைப் 'பிறநலம்' என்றும், அது குடிப்பிறப்புங் கல்வியு முதலாக நூலோரெடுத்த நலங்களுட் பகுதாமையின் 'எந்நலத்துள்ளதூஉ மன்று' என்றுங் கூறினார் இவையிரண்டு பாட்டானும் சார்பிற்கேற்ற குணங்கள் பொதுவகையாற் கூறப்பட்டன. (௯)

விளக்கம்:—சான்றோர்க்கு உள்ளனவாகிய நலங்களெல்லாம் குணங்களாலாகிய நலமே என்றும், அக்குணநலமொழிந்த ஏனைய உறுப்புக்களாலாகிய நலம் மற்றைய நலங்கள் எவையிலும் சேர்ந்தது அன்றென்றும் இத்திருக்குறள் எடுத்துக் கூறுகின்றது. இதனால் ஒருவனுக்குக் குணத்தால் உண்டாகின்ற அழகே அழகுடைமை என்றும், ஏனைய கை கால் முதலிய உறுப்புக்களில் அமைந்துள்ள அழகுகள் அத்துணை அழகுடையனவல்லவென்றும், அவ்வுறுப்புக்களில் அமைந்த அழகினையும் நூல் வல்லவர்கள் மற்றை அழகுகளாகிய கல்வி, குடிப்பிறப்பு முதலியவைகளில் ஒன்றாக எண்ணாராகையால், குணநலம் ஒன்றே சான்றோர் என்று கூறுவார்க்கு அமையும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் சான்றோர்க்கு உள்ள குணங்களின் பிரிவினை இவை என்று எடுத்துக் கூறல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

983. அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ டைந்துசால் பூன்றிய தூண்.

(பரி.) இ-ள். அன்பு=சுற்றத்தார்மேலே யன்பிப் பிறர்மேலு முளதாய வன்பும்—நாண்=பழிபாவங்களி ஞணவும்—ஒப்புரவு=யாவர்மாட்டு மொப் புரவுசெய்தலும்—கண்ணோட்டம்=பகைபார்மேற்கண்ணோடலும்—வாய்மை =எவ்விடத்தும் மெய்ம்மை கூறுதலுமென—சால்பு வுனைறிய தூண் வுந்து= சால்பென்னும் பாரத்தைத் தாங்கிய வாண்க ளேக்ரு. எ-று.

எண்ணெடு முன்னவற்றோடுங் கூடற்று. இக்குணங்க ளில்வழிச் சால்பு நிலைபெறுமையின், இவற்றைத் 'தூண்' என்ஞர். எகதேச வருவகம். (ஈ)

விளக்கம் :—சுற்றத்தவர்கள்மேல் உள்ள அன்பே யல்லாமல் மற்றவர்கள்மீது உண்டாகும அன்பும், பழிபாவங்களுக்கு நாணு கின்ற நாணமும. எவர்க்கும் உபகாரம் செய்தல் என்னும் ஒப் புரவு செய்தலும, பழைமையாக அறிந்தவர்கள் மீது தாட்சணிய மும், எக்காலத்தும் யாரிடத்தும் உண்மை கூறுதல் என்னும் உண் மையும ஆகிய ஐந்தும சால்பு என்னும் பெரியதோர் பாரத்தைத் தாங்குகின்ற ஐந்து தூண்கள் என்று இந்திருக்குறள் கூறுவதால், இவ்வைந்து குணங்களும் இலலாதவழிச் சால்பாகாதென்றும, இச் சால்பினை மேற்கொண்டு சான்ரோர் எனப் பெயர் வகிக்க விரும்பு வார் இவ்வைந்தையும் உடையவரா யிருத்தல் வேண்டும என்றும் அறிக்தோம் என்றனர். அகற்கேட்ட மாணாக்கர், "இவ்வறிந்த கூறிய ஐந்து குணங்கள் இருத்தலோடு இன்னும் எதேனும் முதன்மை யாகிய குணம் சால்புடையார்க்கு இருத்தல்வேண்டுமோ ?" என்ன லும், ஆசிரியர் கூறுவாராயினர்.

984. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை சொல்லா நலத்தது சால்பு.

(பரி.). இ-ள். நோன்மை கொல்லா நலத்தீது=பிறவுயிர்களையும் வேண்டு மாயினுந் தவம் ஒருயிரையுங் கொல்லாத வறத்தின்கண்ணதாம்;—சால்பு பிறர் தீமை சொல்லா நலத்தது=அதுபோலப் பிறகுணங்களும் வேண்டுமா யினுஞ் சால்பு பிறர்குற்றத்தைச் சொல்லாத குணத்தின்கண்ணதாம். எ-று

லமென்னும் ஆகுபெயர்ப்பொருளிரண்டனையுங் கூலமை தோன்ற இவ்விரண்டற்கு மதிகாரமாக்கிக் கூறினர். தவத்திற்குக் கொல்லாவறஞ் சிறந் தாற்போலச் சால்பிற்குப் பிறர்குற்றஞ் சொல்லாக்குணஞ் சிறந்ததென்பதாம்.

விளக்கம் :—பிற அறங்களும் ஒருவன் செய்ய வேண்டுமாயி னும் யாதொரு உயிரையும் கொல்லாத தவம் என்பது ஒன்றைச் செய்வது எவ்விதம் மேலாகிய அறமாக உள்ளதோ அதுபோலச் சால்புடையார்க்கு எல்லாக் குணங்களும் இருக்கவேண்டுமாயினும் பிறர் குற்றத்தை எடுத்துச் சொல்லா திருத்தலே நற்குணம் என்று சொல்லப்படுவது என்று இத்திருக்குறள் கூறுகின்றது. இதனால், தவம் செய்யும் துறவி ஒருவனுக்குக் கொல்லா அறம் எவ்வளவு சிறந்ததோ அதுபோலச் சால்புடையான் என்பானுக்கு அயலவர் குற்றத்தை எடுத்துச் சொல்லாதிருத்தலே நற்குணம் என்று அறிந் தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "சால்புடையார்க்குப் பகைவர் தோன்றுவராயின் அச்சால்புடையார் தம் பகைவரை ஒழிப்பித்தற்கு நற்குணங்களே போதுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

985. ஆற்றுவார் ஆற்றல் பணிதல தகுசான்றோர் மாற்றுரை மாற்றும் படை.

(பி-ம்.) இ-ன். ஆற்றுவார் ஆற்றல் பணிதல்=ஒருகருமத்தைச் செய்து முடிப்பாரதாற்றலாவது அதற்குத் துணையாவாரைத் தாழ்ந்து கூட்டிச்சென் ஞதல்;—சான்றோர் மாற்றுரை மாற்றும் படை அது=இனிச் சால்புடையார் தம்பகைவரைப் பகைமையொழிக்குங் கருவியும் அது. எ-று.

ஆற்றல்=அது வில்லாற்றன்மை. இறந்ததுதழீஇய வெச்சவும்மை விகா ரத்தாற் றொக்கதி. சால்பிற்கேற்ற பணிதற்குணத்தது சிறப்புக்கூறுவார், எனையது முடன்கூறினர். (இ)

விளக்கம் :—உலகத்து ஒரு தொழிலைச் செய்து முடிக்க எண் ணியவர்கள் எவ்வாறு அத்தொழிலை முடிப்பதற்குத் துணையாக இருப்பவரை வணங்கித் தம்மோடு சேர்த்துக்கொள்ளுவரோ அது போலச சால்புடையார் என்பாரும் தமக்குப் பகைவர் தோன்றுவரா யின் அப்பகைவரது பகைமையை ஒழிப்பதற்குத் தமக்குக் கருவி

யாகக் கொள்ளுவதும் அப்பணிவுடைமையேயாகும் என்று இத்திருக்குறள் கூறுவதால், சால்புடையார் தமக்குள்ள எல்லா நற்குணங்களோடும் யாரிடத்தும் தாழ்ந்து நிற்கின்ற பணிவுடைய குணத்தோடு கூடியிருத்தல் வேண்டும் அவ்வித பணிவாகிய நற்குணத்தைக்கொண்ட சால்புடையார் தம் நட்பினரிடத்து மாத்திரமல்லாமல் பகைவரிடத்தும் பகையொழிந்து சிறப்பை அடைதல் கூடும் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "சால்புடையார் பணிவுடைமை என்பதைத் தமக்குச் சமானமானவர்களிடத்தில் தான் கொள்ளுவரோ அல்லது யாவரிடத்தும் கொள்ளுவரோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

986. சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி துலையல்லார் கண்ணுங் கொளல்.

(பரி) இ-ள் சால்பிற்குக் கட்டளை யாது எனின்=சால்பாகிய பொன்னினளவறிதற்கு உரைகல்லாகிய செயல் யாதெனின்,—தோல்வி துலை அல்லார்கண்ணும் கொளல்=அது தம்மினுயர்ந்தார் மாட்டுக்கொள்ளுந் தோல்வியை இழிந்தார்மாட்டுங் கோடல். எ-று.

துலை=ஒப்பு. எச்சவும்மையான் இருதிறத்தார்கண்ணும் வேண்டுதல் பெற்றாம். கொள்ளுதல்=வெல்லுமாற்ற லுடையராயிருந்தே ஏற்றுக்கொள்ளுதல். இழிந்தாரை வெல்லுதல்கருதித் தம்மோடொப்பித்துக்கொள்ளாது தோல்வியான் அவரினுயர்வராயின். அதனாற் சால்பளவறியப்படுமென்பதாம்.

விளக்கம்:—சால்பு என்று சொல்லப்படும் பொன்னினுடைய அளவினை அறிய வேண்டுமாயின், அப்பொன்னினை உரைத்துத் தெரிந்துகொள்வதற்குக் கல்லாக இருப்பது தம்மினும் உயர்ந்தவர்களிடத்து மாத்திரம் அல்லாது இழிந்தவர்களிடத்தும் தோல்வியைக் கொள்ளுதல் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், சால்புடைமையை விரும்புவோர் தம்மினும் உயர்ந்தவரிடத்தும் தமக்குச் சமானமானவரிடத்தும் பணிவோடு இருப்பது மாத்திரம் அலலாமல், தம்மால் வெல்லக்கூடியவராய் உள்ள இழிந்தவரிடத்தும் அவர்களை வெல்லக் கருதி அவர்களைத் தம்மோடு சமானமாக வைத்துக் கொள்ளாது தாழ்ந்துவிடுதல் என்

ணும் தோல்வியால் அவரினும உயர்ந்து நிற்பது சாலபுடைமை உடையார் என்று அறிவதற்குக் குறியாகவுள்ளது என்று அறிந் தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "சான்முண்மை உடை யார் தம பணிவுடைமையை யாவரிடத்தும் செலுத்தித் தாம் உயர் வினை அடைவர் என்று அறிந்தோம். ஆயின் தமக்கு யாதொரு துன்பமும் செய்யாதவரிடத்து இவ்வித பணிவினைக் கொள்ளுவது இயல்பே ஆகும்; அவ்விதமல்லாது தமக்குத் துன்பம் செய்தவரி டத்தும் தம் நற்குணங்களைச் சான்றோர் காட்டுதல் வேண்டுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

987. இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா லென்ன பயத்ததோ சால்பு.

(பரி.) இ-ள். இன்னா செய்தார்க்கும் இனியவே செயயாக்கால்=தமக் கின்னாதவற்றைச் செய்தார்க்குஞ் சால்புடையார் இனியவற்றைச் செய்யாரா யின்,—சால்பு என்ன பயனுதது=அச்சால்பு வேறென்ன பயனே யுடைத்து!

சிறப்புமை அவர் இனனாசெய்தார்டனுதல் விளக்கிநின்றது. ஓகாரம் அசை. வினு எதிர்மறைப்பொருட்டு. ஆமுமன்னுசெய்வாராயின், சால்பா லொருபயனுமில்லை யென்பதாம். இனைய தபாட்டானுஞ் சிறப்புவகை யாற் கூறப்பட்டது. (எ)

விளக்கம்:—சால்பு உடையார் தமக்குத் துனபமாகிய விஷ யங்களைச் செய்தவருக்கும் இனியவாகிய விஷயங்களையே செய் யாது விடுவாராயின் அவர் கொண்ட சால்பு அவர்க்கு என்ன பய னைத்தரும் என்று இத்திருக்குறள் வினவுகின்றதாதலால், அறிவிலாக் கீழ்ம மகனொருவன் தமக்குத் துன்பம் தருவனவற்றைச் செய்து விடுவானுயினும், நற்குணங்களையே தமக்கு ஆபரணமாகக் கொண்ட பெரியோர் தமக்குச் செய்த துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு அவனுக்கு இனிமையாகிய செயல்களையே செய்து அவனது அறியாமையைப் போக்கித் தம்முடைய அறிவுடை மையை உயர்த்தி உலகோர் தம்மைப் பின்பற்றும்படிச் செய் தால் அதுவே சால்பு என்றும், அச்சால்பால் விளையும் நற்பயன் என்றும் அறிந்தோம். இது கருதியன்றே நம் நாயனார் துறவற

வியலுள் இன்னு செய்யாமை என்னும் அதிகாரத்துள், தான்காவது திருக்குறளாக,

"இன்னு செய்தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்."

என்று கூறியுள்ளனர் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வித மெல்லாம் யார்க்கும் துன்பம் வாராது நடந்து கொள்ளுதல் வேண்டும் என்றும் அறிவோடு சால்புடையார் இருப்பாராயின், அவர்க்குத் தரித்திரம் என்பது ஒன்றுதான் செல்வமாக இருக்கும் என்று அறிகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்

988. இன்மை யெருவற் கிளிவன்று சால்பென்னுந் திண்மையுண் டாகப் பெறின்.

(பி) இள் சால்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின்—சால்பென்று சொல்லப்படும் வலியுண்டாகப்பெறின்,—ஒருவற்கு இன்மை இளிவு என்று=ஒருவனுக்கு நல்குரவு இழிவாகா து. எ-று.

தளராமைநாட்டுதலின், வலியாயிற்று. இன்மையான் வருவதொன்று இன்மைதானுக உபசரித்துக்கூறினர். சால்புடையார் சால்சார்ந்தவழியும் மேம்படுதலுடைய ரென்பதாம் (அ)

விளக்கம்:—சால்புடைமை என்று சொல்லப்படும் வலிமை ஒன்று மாத்திரம் ஒருவனுக்கு உண்டாகுமாயின் அவ்வித வலிவுடையான் ஒருவனுக்கு அவனடைந்த தரித்திரம் இழிவினைச் செய்யாது என்று இத்திருக்குறள் கூறுவதால், சால்புடைமையையே தமக்குப் பெரியதோர் காய வலிமையாகக்கொண்ட பெரியோர் தரித்திரத்தால் வரும் உணவில்லாமை, ஆடையில்லாமை ஆகிய துன்பங்களுக்கு அஞ்சார் என்றும், தம்மன நிலையை நல்லவழியிலேயே செலுத்துவார் என்றும் அறிஞருடன், இவ்விதம் நல்ல வழியில் நடப்பவனது தரித்திரத்தை உலகோர் இழிவாகக் கருதார் என்றும், இதற்குக் குசேல முனிவனையே சான்றாகக் கொள்ளுதல்வேண்டும் என்றும் அறிந்தோம் என்றனர் அதுகேட்ட மாணாக்

கா, "இவ்வித சான்றாண்மை உடையார் தரித்திரம் வந்த காலத்துத் தம் நிலையினின்றும் மாறுபட மாட்டார் என்பது அறிந்தோம் ஆயின், தம்மைத் தாம் தாங்கிக் கொள்ளக் கூடாத பெரியதோர் துன்பம்வந்த காலத்து இச்சான்றாண்மை உடையார் தம் நிலையினின்றும் மாறுபடமாட்டாரோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

989. ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார்.

(பரி.) இ-ள். சான்றாண்மைக்கு ஆழி எனப்படுவார்—சால்புடைமையாகிய கடற்குக் கரையென்று சொல்லப்படுவார்,—ஊழி பெயரினும் தாம் பெயரார்—ஏனைக்கடலுங் கரையாணில்லாமல் நாலந்திரிந்தாலும், சாந்திரியார். எ-று.

சான்றாண்மையது பெருமைதோன்ற அதனைக் கடலாக்கியும், அதனைத் தாங்கிக்கொண்டு நிற்றலின் அஃதுடையாரைக் கரையாக்கியுங் கூறினார். "பெருங்கடற் காழியனையன் மாதோ"* என்றார் பிறரும். ஏகதேசவுருவகம்.

விளக்கம்:—சால்புடைமை என்று சொல்லப் படுகின்ற சமுத்திரத்திற்குக் கரை என்று சொல்லக் கூடியவர் எவரோ அவர் தம் சால்புடைமையால், அச்சால்புடைமைக்கு அன்னியமாகிய மற்றைக் கடலெல்லாம் தம் கரை கடந்து மேலே எழுந்து உலகம் அழியும்படி மாறுபட்டு வந்தாலும், அப்போதும் மாறுபடார் என்று இத்திருக்குறள் கூறுவதால், சால்புடையார் கரையையுடைய கடலும் கரை கடந்தாலும் தம் சால்பென்னும் கடலின் கரையைப் புரளவிடார் என்று அறிந்தோம். இதற்கு அரிச்சந்திரன் தன் மனைவியையும் மைந்தனையும் இழந்த காலத்தும், தான் கொண்ட வாய்மையினின்றும் பிறழாது இருந்தது சான்றாகும் என்றனர். அதுகேட்டமாணாக்கர், "இச்சால்புடையார் எக்காலத்தும் தம் சால்புடைமையினின்றும் மாறுபடார் என்பதை அறிந்தோம். ஆயின், அவ்விதம் சால்புடையார் மாறுபடுவராயின் அதனால் என்னாகும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

* புறநானூறு, 330.

990. சான்றவர் சான்றாண்மை குன்றி னிருநிலந்தான் றாங்காது மன்னோ பொறை.

(பரி.) இ-ள். சான்றவர் சான்றாண்மை குன்றின்=பலகுணங்களானு நிறைந்தவர் தந்தன்மை குன்றுவராயின்,—இருநிலந்தான் பொறை தாங்காது=மற்றை யிருநிலந்தானுந் தன்பொறையைத் தாங்காதாய் முடியும்.

தானுமென்னு மெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. அவர்க்கது குன்றாமையும் அதற்கது தாங்கலும் இயல்பாகலான், அவை யெஞ்ஞான்று முளவாகா வென்பது தோன்ற நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. ஓகாரம் அசை. இதற்கு இருநிலம் பொறைதாங்குவது சான்றவர் துணையாகவருதலான் அதுவும் அது தாங்கலாற்றாதென் றுரைப்பாருமுளர். இவை மூன்று பாட்டானும் அவற்றா னிறைந்தவரது சிறப்புக் கூறப்பட்டது. (௰)

விளக்கம்:—பல குணங்களாலும் நிறைந்த சால்புடையார் என்போர் ஏதேனும் ஊழ்வலியால் பிறழ எண்ணுவாரானால், எல்லாவற்றையும் பொறுக்கும் இப்பெரிய பூமியானது தன்னுடைய பாரத்தைத் தாங்காததாய்க் கெட்டுப்போம் என்று இத்திருக்குறள் கூறுவதால், சால்புடையார் என்பார் ஒரு காலத்தும் தம் சால்புடைமையினின்றும் குறைவது இல்லை என்றும், தமக்குச் சால்புடைமையையே பெரிய பாரமாகத் தாங்குவது இயல்பென்றும், அவ்விதம் இயல்பாகவுள்ள சான்றாண்மை உடைய பெரியோர் ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்து விடுவாராயின் எல்லாப் பளுவையும் தாங்கி நிற்பதும் தன்னை வெட்டுகின்றவனையும் தாங்கி நிற்பதுமாகிய பூமியும் தன்மீது உள்ள பாரத்தைத் தாங்காது உலகம் அழிய ஏதுவாகும் என்றும் அறிகின்றோம் ஆதலால் சான்றாண்மைக்கு அணிகலமாகவுள்ள பெரியோர் எக்காலத்தும் தம் இயற்கையினின்றும் மாறுபடார் என்று இப்பூமியின் உவமையால் அறிந்தோம் அதுவன்றியும், மேற்கூறிய மூன்று திருக்குறள்களாலும் அச்சான்றாண்மை நிறைந்தவரது சிறப்பினை அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வித சான்றோர் எல்லோரிடத்தும் தம் சான்றாண்மையை நிலைநிறுத்த வேண்டுமாயின், அவர் எவ்விதம் ஒழுகுதல்வேண்டும் என்பதையும் விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

100. அதிகாரம்.

பண்புடைமை.

(பரி.) அஃதாவது பெருமை சான்றாண்மைகளிற்றாம் வழுவாது நின்றே எல்லாரியல்புகளு மறிந்தொத்தொழுகுதல்; "பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்"* என்றார் பிறரும். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

விளக்கம்:—அதாவது, பெருமை சான்றாண்மை என்னும் இவைகளில் தாம் சிறிதும் குற்றப்படாது இருந்து கொண்டே உலகத்துள்ள எல்லோருடைய இயற்கையையும் அறிந்து அவர்களோடு அவரவர்க்குத் தக்க விதமாக ஒழுகி வருதல் என்று அறிகின்றோம் இவ்விதம் பெருமை சான்றாண்மை ஆகிய இரண்டையும் உடையவரே அவ்விதம் ஒழுகுதல் கூடுமாதலால், அவ்விரண்டு அதிகாரங்களுக்குப் பிறகு இப்பண்புடைமை என்னும் அதிகாரத்தை வைத்தனர் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "நாங்கள் மேல் வினவியபடி உலகத்தோடு ஒத்து ஒழுகுகின்ற சால்புடையார் பண்பினை இவ்வதிகாரம் ஆரம்பிப்பதால் இதனை விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்

991. எண்பதத்தா லெய்த லெளிதென்ப யார்மாட்டும் பண்புடைமை யென்னும் வழக்கு.

(பரி.) இ-ள். யார்மாட்டும் எண்பதத்தால்=யாவர்மாட்டுமெளிய செவ்வியராதலால்—பண்புடைமை என்னும் வழக்கு எய்தல் எளிது என்ப—அரிதாய பண்புடைமையென்னும் நன்னெறியினை யெய்துதல் எளிதென்று சொல்லுவர் நூலோர். எ-று.

குணங்களானிறைந்து செவ்வியெளியருமாயக்காற் பண்புடைமை தானே உளதாமாகலின், 'எண்பதத்தாலெய்தலெளிது' என்றும், அஃதுலகத்தை யெல்லாம் வசிகரித்தற்பயத்ததாகலின் அதனைத் தொல்லோர்சென்ற நன்னெறியாக்கியும், அதனையெளிதினெய்துதற்கு இது நூலோரோதிய வுபாயமென்பார் அவர்மேல் வைத்துங் கூறினார். (க)

---

* கலி, நெய்தல் 16.

விளக்கம்:—உலகத்து உள்ள எவரிடத்தும் மிக எளிய காட்சியுடையராய் இருப்பது ஒன்றே உலகத்தை எல்லாம் அறிந்து ஒத்தீ ஒழுகுகின்ற மிக அருமையுடைய பண்புடைமை என்னும் நல்வழியினை அடைவதற்கு எளிமையாகிய வழி என்று நூல் வல்லவர் சொல்லுவர் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. ஆதலால், மேல் அதிகாரங்களுள் சொல்லிய நற்குணங்க ளெல்லாம் நிறையப் பெற்றுத் தம்மைப் பார்ப்போர்க்கும அரியராக இல்லாமல் மிக எளியராய் அவரவர் காலத்தில் காணக்கூடியவராயும் இருப்பாராயின், அவ்விந தகுதியுடையார் எல்லோருடைய இயற்கைகளையும் அறிந்து அவரவர்க்குத் தக்க விதமாக ஒழுகுதல் கூடும் என்று அறிகின்றோம். எனின்னின்? இவ்விதம் யார்க்கும் சுலபமாகக் காணக் கூடியவராய் இருப்பாராயின், அவ்வொழுக்கத்தைக் கண்ட உல்கோர், "இவர் நமக்குச் சுலபமாகக் கிடைக்கக் கூடியவர்; பெரிய தகுதிகளெல்லாம் வாய்ந்த இவர் நமக்கு இவ்வளவு சுலபமாகக் கிடைப்பதுடன் நன்னெறிகளெல்லாம் போதிக்கின்றாதலால் இவர் வழியே செல்லுதல் வேண்டும்" என்று யாவரும் தம்மை யடைவார் என்றும், அவ்விதம் தம்மை யாவரும் அடையும்படிச் செய்யும் வசியமாவது யார்க்கும் சுலபமாகக் காணப் படுபவராய் உள்ளது ஆதலால் இவ்விந வுபாயமே பெரிய தோர் உபாயமென்றும, இதுவே பெரியோரெல்லாம் சென்ற நல்வழி என்றும், நூல் வல்லவர்களெல்லாம் சொல்லிய உபாயம் என்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் யார்க்கும் அவரவர் நினைத்த காலத்துச் சென்று கிடைக்கக்கூடியவராய் இருப்பதாலேயே பண்புடைமை என்னும் பெரிய தகுதியை அடைந்து விடுதல் கூடும் போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

992. அன்புடைமை யான்ற குடிப்பிறத்த லிவ்விரண்டும் பண்புடைமை யென்னும் வழக்கு.

(பரி.) இ-ள். அன்புடைமை ஆன்ற குடிப பிறத்தல் இவ்விரண்டும்= பிறரிடமே லன்புடையராதலும் உலகத்தோடமைந்த குடியின்கட்பிறத்தலுமாகிய இவ்விரண்டும்—பண்புடைமை என்னும் வழக்கு=ஒருவனுக்குப் பண்புடைமையென்று உலகத்தார் சொல்லும் நன்னெறி. எ-று.

அமைதல் = ஒத்துவருதல். குடிப்பிறத்தலென்றது பிறந்தார் செயலே. தனித்தவழி ஆகாது இரண்டுங்கூடியவழியே ஆவதென்பதுதோன்ற, மூற்றும்மை கொடுத்தார். காரணங்கள் காரியமாக வுபசரிக்கப்பட்டன. இவை பிரண்டுபொட்டாலும் பண்புடையாதற் காரணங் கூறப்பட்டது. (இ)

விளக்கம்:—பிறரிடத்து அன்புடையவனுப் இருத்தலும், உலகந் தோன்றிய காலமுதல் உலகத்தோடு அமைந்த ஓர் குடிபினிடத்தே பிறத்தலும் ஆகிய இவ்விரண்டினையும் உடையவன் எவனே அவனே பண்புடையான் என்று உலகத்தோர் உயர்த்திக் கூறுவர் என்று இத்திருக்குறள் கூறுவதால், நீங்காத அன்புடைமையும் தொடர்புடையவர்களிடத்து மாத்திரம் இருப்பது அல்லாமல் யாவரிடத்தும் இருத்தல் வேண்டும் என்றும், அதுவன்றியும் உயர்ந்த குடியில் பிறந்திருத்தல் வேண்டுமென்றும், ஆகிய இவ்விரண்டும் ஒத்திருத்தலே ஒருவனுக்குப் பண்புடைமை என்றும், இவ்விரண்டு தகுதிகளுள் ஒன்று இருந்து மற்றொன்று இல்லாவிடின் அது பண்புடைமை யாகாதென்றும், மேற்கூறிய காண்பதற்கு எளியனுப் இருப்பதுடன் இவ்விரண்டு குணங்களுடன் இருப்பதே பண்புடைமை என்றும் அறிந்தோம் என்றனர் அதுசேட்ட மாணக்கர், "பண்புடைமை என்பது மக்கள் ஒருவருக்கொருவர் அவர்கள் உறுப்புக்களால் ஒத்து இருத்தலால் கொள்ளுதல் ஆகாதோ?" என்னலும், அசிரியர் கூறுவாராயினர்.

993. உறுப்பொத்தல் மக்களொப் பன்மரல் வெறுத்தக்க பண்பொத்த லொப்பதா மொப்பு.

(பரி.) இள். உறுப்பு ஒத்தல் மகளை ஒப்பு அன்று = தெரியத்தகாத வுடம்பாலொத்தல் ஒருவனுக்கு சுன்மகளோ டொப்பாகாமையின் அது பொருந்துவதன்று;—ஒப்பதாம் ஒப்பு வெறுத்தக்க பண்பு ஒத்தல் = இனிப் பொருந்துவதாய வொப்பாவது தெரியத்தகாத பண்பாலொத்தல். எ-று.

வடநூலார் அங்ஙமெலாமையின், 'உறுப்பு' என்றார். ஒருவனுக்கு சுனமக்களோடு பெறப்படுமொப்பாவது :—உயிரின்வேறும் நிலையுதலில்லாவுடம்பொத்தலன்று வேறன்றி நிலையுதலுடைய பண்பொத்தலாகலான், அப்பெற்றித்தாய அவர் பண்பினையுடையனுக வென்பதாம். (சு)

விளக்கம்:—நிலையில்லாத உடம்பானது ஒருவனுக்கு ஒத்திருத்தலாலேயே நன்மக்கட் என்று சொல்லுவார்க்கு ஒப்பாக இராது ஆதலால் அத்தேகத்தால் பண்புடைமை என்பது பொருந்துவது இல்லை என்றும், ஆனால் பண்புடையாரொடு பொருந்தி நிற்கும் பொருந்திய ஒப்பாவது எக்காலத்தும் நிலையாக இருக்கும் தகுதியுடைமையாகிய பண்பினாலே ஒத்திருத்தல் என்றும் இத்திருக்குறள் கூறுவதால், உயிருக்கு வேறாய் நிலையில்லாத உடம்பினால் நன்மக்களோடு ஒருவன் சமானமாகக் காணப்படுவானாயினும், அதனை ஒப்பென்று கொள்ளக் கூடாதென்றும், உயிரோடு கூடி எக்காலத்தும் அவ்வுயிர்க்கு நிலையாக நிற்கின்ற நற்குணங்களோடு நிற்றலே நன்மக்களோடு சமானமாகக் கூறிய பண்புடைமை என்றும், இக்குணங்களைப் பெற்றோனே பண்புடையான் என்றும், அறிந்தோம். இதனால் ஒருவனுக்குத் தேகப்பொருத்தம் பொருத்தமன்று என்றும், குணப் பொருத்தமே பொருத்தம் என்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "முன்னர் கூறிய அன்புடைமையும் நற்குடிப் பிறத்தலும் ஆகிய தகுதிகளால் பண்புடையார் எவற்றைச் செய்வர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

994. நயனெடு நன்றி புரிந்த பயனுடையார் பண்புபா ராட்டு முலகு.

(பரி.) இ-ள். நயனெடு நன்றி புரிந்த பயன் உடையார் பண்பு=நீதியையும் அறத்தையும் விரும்புதலாற் பிறர்க்குந் தமக்கும் பயன்படுதலுடையாரது பண்பினை—உலகு பாராட்டும்=உலகத்தார் கொண்டாடாநிற்பர். எ-று.

புரிந்தவென்னும் பெயரெச்சம் ஈண்டுக் காரணப்பொருட்டு. நயனெடு நன்றி புரிதலும் பயனுடைமையும் பண்புகாரணமாக வந்தமையின், அதனை 'பாராட்டும்' என்றார். (ச)

விளக்கம்:—உலகத்து நீதியினையும் அறத்தினையும் தாம் எக்காலத்தும் விரும்புவதால் பிறரும் பயனடையக் கூடிய தகுதியுடையவரது பண்புடைமையை உலகத்தார் கொண்டாடுவர் என்று இத்திருக்குறள் கூறுவதால், உலகத்து பண்புடைமை என்னும் தகுதியை யடைந்தவர் இம்மைப் பயனுக்குக் காரணமாகிய நீதியையும், மறுமைப் பயனுக்குக் காரணமாகிய அறத்தையும்

செய்து தாம் அடையவேண்டிய இருமையையும் அடைவதுடன், உலகத்து மக்கள் மற்றவர்களுக்கும் பயன்படக் கூடியவர்கள் ஆகின் றார்கள் ஆதலால், அவர்களைப் பண்புடையார் என்றும், மேற்கூறிய படிப் பண்புடைமை அடைந்த தகுதியால் பயனை அடையக் கூடியவ ரென்றும், அவர் குணங்களால் அவர் செய்வன நீதியும் அறமுமென் றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் பண்புடையார் நீதியையும் அறனையும் செய்வதன்றி வேறொன்றும் செய்யார் போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

995. நகையுள்ளு மின்னு திகழ்ச்சி பகையுள்ளும் பண்புள பாடறிவார் மாட்டு.

(பரி.) இ-ள். இகழ்ச்சி நகையுள்ளும் இன்னுது = தன்னையிகழ்தல் ஒரு வற்கு விளையாட்டின் கண்ணும் இன்னாது;—பாடு அறிவார்மாட்டுப் பகையுள் ளும் பண்பு உள = ஆகலாற் பிறர்பாடறிந் தொழுகுவார்மாட்டுப் பகைமையுள் வழியும் அஃதுளதாகாது இனியவாய பண்புகளே உளவாவன. எ-று.

'பாடறிவார்' எனவே, அவ்வின்னுமையறிதலும் பெற்றாம். அதனை யறிந்தவர் பின் அது செய்யார் தீனியவே செய்வாரென்பது கருத்து. இதற் குப் பிறரெல்லாம் ஓரண்டு தொடருந்தம்முளியையாமனுரைப்பாரும், இன்னுதென்னுஞ் சொற்குப் பிறவாதென் றுரைப்பாருமாயினர். (நு)

விளக்கம்:—ஒருவன் தன்னை விளையாட்டுக்காக இகழ்வானேன யாஞல் அவ்விகழ்ச்சியும் அவனுக்குத் துன்பத்தைத் தருவது உலக வழக்கம் என்றும், அவ்வித உலக வழக்கினை அறிந்தோராய பண்புடையவர் தமக்கும் பிறர்க்கும் பகைமை இருந்த காலத்தும் துன்பத்தைத் தருகின்ற இகழ்ச்சியை உண்டாக்காது இன்பத்தைத் தருகின்ற இனிய செயல்களையே செய்யும் நற்குண முடையாரவர் என்றும் இத்திருக்குறள் கூறுவதால், பண்புடையார் என்பார் தம் முடைய பகைவர்க்கும் துன்பம் உண்டாக்கும் இகழ்ச்சியான விஷ யங்களை எடுத்துச் சொல்லாது அப்பகைவர்க்கும் நன்மையும் புகழும் உண்டாகும் சொற்களையும் செயல்களையும் செய்வார் என்று அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் கூறுவதால் பண்புடையார் என்பவர் நற்குணங்களாலேயே உலகம் நிலைத்து நிற்கின்றது போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவா ராயினர்.

996. பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

(பரி.) இ-ன். பண்பு உடையார்ப்பட்டு உலகம் உண்டு=பண்புடையாரை கண்ணே படுதலால் உலகியல் எஞ்ஞான்றுமுண்டாய் வாராநின்றது;—இன்மேற்றல் அது மண்புக்கு மாய்வது=ஆண்டுப்படுதலில்லையாயின், அது மண்ணின்கட் புக்கு மாய்ந்துபோவதாம். எ-று.

பட்டென்பது திரிந்துநின்றது. உலகு ஆகுபெயர். மற்றைப் பண்பில்லார் சார்பன்மையின் ஓர்சார்புமின்றி மண்ணின்கட்புக்கு மாயுமது வேண்டாவாயிற்றென்பது பட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. இவை கான்குபாட்டானும் அதனே யுடையார் தூயர்ச்சி கூறப்பட்டது. (கு)

விளக்கம் :—மேற்கூறிய பண்புடையவர் என்று சொல்லுவாரது நற்குணங்கள் இவ்வுலகத்துப் பயன் தருவதாலேயே இவ்வுலக இயற்கையானது எக்காலமும் நிலைத்து வருகின்றது என்றும், அவ்விதம் அல்லையேல் இவ்வுலகமானது மண்ணுள் மறைந்து மாய்ந்து போய்விடும் என்றும் இத்திருக்குறள் கூறுவதால், உலகம் நிலைத்து நிற்பது பண்புடையவர்களுடைய நீதியாலும் அறத்தினாலும் என்றும், அவ்விரண்டு தகுதிகளையும் உடைய பண்புடையோர் இல்லாத காலத்து உலகம் அழிந்துவிடும் என்றும், உலகியல் நடவாது என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "சில மேற் கூறிய நற்குணங்க ளில்லாவிடினும், மிகுதியும் கூர்மையாகிய அறிவுடையவராக இருக்கின்றனர். அவ்வித அறிவுடைமையால் உலகத்திற்கு ஏதேனும் பயன் உண்டாதல் கூடாதோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

997. அரம்போலுங் கூர்மைய ரேனு மவரம்போல்வர்.
மக்கட்பண் பில்லா தவர்.

(பரி.) இ-ன். மக்கட்பண்பு இல்லாதவர்=நன்மக்கட்கேயுரிய பண்பில்லாதவர்,—அரம்போலும் கூர்மையரேனும்=அரத்தின் கூர்மைபோலுங் கூர்மையை யுடையரேயாயினும்,—மரம்போல்வர்=ஓரறிவிற்குய மரத்தினை யொப்பர். எ-று.

அரம்-ஆகுபெயர். ஓரறிவு=ஊற்றினையறிதல். உவமையிரண்டனுள், முன்னது தான் மடிவின்றித் தன்னையுற்றபொருள்களை மடிவித்தலாகிய தொழில்

பறறி வருவது; வினையது நிறைவுமையாகிய பணபுபறறி வருவது; அவவிரண்டிறகும் பயனுரை மகபபேறறினமையின், அந்நூலிலே யெனபதாயிறறு. (எ)

விளக்கம் — உலக மனிதர்களுக்கே சொந்தமாகிய பண புடைமை எனபதை இவ்வுலகத்து அடையாளமாக அரசனும கருவிபோல கூலமபுடையவராயினும, ஓர் அறிவினை யுடைய மரத்திறகே சமானமாவா னென்று இதற்குக்குறள் கூறுவதால, பண பிலாதோர் தமமுடைய கூலமையால கூலமெகாண்ட அரசர னது தனனிடத்தே வந்த பொருளைவிட தேயத்தை தேய்த்து மாயந்து போகுமபடி செயவதுபோல பிறரை அழிபபதறகாக தம கூலமையைப பயனபடுத்திக கொளளுவரே அனறி, ஓர் அறிவு டைய மரம உலகத்தாருக்குப பயன படுகினற பயன அளவும பயன தராது போவாராதலால, அறிவற்ற மரத்தைக காடடிலும இவர் மிகத தாழ்ந்தவரென்றும, இவ்வித அறிவுடையார் உலகத்திருப பது உல்கத்து மகசுகமும ஏனைய வுயிர்களுக்கும தீனபமே பயக குமனறும, இவரும இவ்வித அறிவுடைமையும இலலாதிருத்தலே உலகிறகுப பயன தீரும எனறும அறிந்தோம எனறனர் அது கேடட மாணாக்கர், "கலவியுடைய பெரியோராகிய பண்புடையார் தமமிடத்து நடபுக கொணடாறகு ஏனமையைச செய்தலவேணடும எனபது இயலபேயாம. ஆயின, தம பகைவரிடத்துப பண்புடையார் எவ்விதம் நனமைசெயவர்?" எனனனும, ஆசிரியர் கூறுவாராயினர்.

998. நண்பாற்று ராகி நயமில செய்வார்க்கும் பண்பாற்று ராதல் கடை.

(பரி) ஆ-ள. நண்பு ஆற்றாராகி நயம இலல செயவாருக்கும=தமமைவிடு பிணைச செயயாத, பகைமையைச செய்தொழுகுவாரிடமும—பண்பு ஆற்றாதல கடை=தாம பண்புடையராயொழுகாமை அறிவுடையார்க கிழுக்காம. எ-று.

நயம=ஈரம. பிறபுமமை அவர் பண்பாற்றுமைக்கிடனுதல தோன்ற நினறது. அதனைச செயயிறறுமும அவர்தனமையராவரெனபார, கடை எனறார். (அ)

விளக்கம்:—தம்மிடத்து கட்பினைக் கொள்ளாது பகைமையைக் கொண்டு இருப்பவரிடத்தும் தாம் பண்பு உடையராய் இல்லாமல் நடப்பாராயின், அறிவுடையார் என்பார்க்குக் குற்றமாக முடியும் என்று இத்திருக்குறள் கூறுவதால், அறிவுடையராயினும் தமக்கு இயல்பாகவுள்ள நற்குணங்களால் தம்மிடத்துப் பகை கொண்டு கீங்கினைச் செய்து வருபவர்க்கும் தாம் கீங்கினைச் செய்யாது நன்மையே செய்வர் என்றும், அவ்விதம் செய்யாவிடில் பண்புடையவர் என்று தம்மை எண்ணியிருந்த அவருடைய தகுதிக்குக் குற்றமாகிப் பண்பில்லாத அப்பகைவர் தகுதியையே அடைவர் என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் பண்புடைமை இல்லாது உள்ள மாந்தர்க்கு இவ்வுலகம் எவ்விதம் இருக்கும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்

999. நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்.

(பரி.) இ-ள். நகல் வல்லர் அல்லார்க்கு=பண்பின்மையான் ஒருவரோடுங் கலந்து உணர்கிழ்தன் மாட்டாதவர்க்கு—ஆயிரு ஞாலம் பகலும் இருட்பாற்பட்டன்றுமிகவும் பெரியஞாலம் இருளில்லாத பகற்பொழுதும் இருளின்கட்கிடந்ததாம். எ-று.

எல்லாரோடுங் கலந்தறியப்பெறுமையிற் பண்பில்லார்க்கு உலகியல் தெரியாதென்பார், உலகமிருளின்கட் பட்டதென்றார். பாம்பட்டன்றிருளென்றுபாடமோதி, இருணீங்கிற்றன் றென்னுரைப்பாருமுளர். (சு)

விளக்கம்:—தமக்குப் பண்பு என்னும் நல்ல தகுதியில்லாமையால் உலகத்து உள்ள மக்கள் ஒருவரிடத்தும் கலந்திருந்து மனித்தர்களுக்குள் மகிழ்ச்சியடைய மாட்டாத மனிதர்களுக்கு இப்பெரிய பூமியானது இருளில்லாத பகற் காலத்தும் இருள் நிறைந்து இருப்பது போலாம் என்று இத்திருக்குறள் கூறுவதால், எவரொருவர் உயிர்களெல்லாம் ஒன்றென்று கருதுதலும் கருதுவதுடன் மக்கட் பிறப்பையடைந்த மக்களிடத்தே கட்புலுறுகொண்டு அதனால் வருகின்ற மகிழ்ச்சியை அடைதலும் அடையாமல் இருக்கின்றாரோ, அவ்விதம் பண்பிலாதவர் இப்பெரிய உலகத்துள் அறிய வேண்டுவனவற்றை அறிவதற்குக் காரணமாகிய கண்களில்லாத குருடருக்

குச் சமானமாய் கண்ணொளி இழந்து ஒன்றும் அறியாதவராய் நிற்பார்கள் என்று அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் யாரிடத்தும் நட்புக்கொண்டு மகிழாது நிற்கும் பண்பில்லாதவனுக்குப் பெரிய செல்வம் கிடைத்து விடுமாயின், அச்செல்வம் எவ்விதமாம்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1000. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால் கலந்தீமை யாற்றிரிந் தற்று.

(பரி.) இ-ள். பண்பு இலான் பெற்ற பெருஞ்செல்வம்=பண்பில்லாதவன் முன்னை நல்வினையானெய்திய பெரிய செல்வம் அக்குற்றத்தால் ஒருவற்கும் பயன்படாது கெடுதல்—நன்பால் கலந்தீமையால் திரிந்தற்று=நல்லவான்பால் ஏற்ற கலத்தின் குற்றத்தால் இன்சுவைத்தாகாது கெட்டாற்போலும். எ-று.

கலந்தீமையென்பது மெலிந்துநின்றது. தொழிலுவமமாகலின் பொருளின்கண் ஒத்ததொழில் வருவிக்கப்பட்டது. படைக்குமாற்றலிலனாதலோன்றப் 'பெற்ற' என்றும், எல்லாப்பயனுங்கோடற்கேற்ற இடனுடைமை தோன்றப் 'பெருஞ்செல்வம்' என்றுங்கூறினார். அச்செல்வமும் பயன்படாதென்ற இதனான் வருகின்ற அதிகாரப்பொருண்மையுந் தோற்றுவாய் செய்யப்பட்டது. இவை நான்குபாட்டானும் அஃதில்லாரதிழிவு கூறப்பட்டது. (௰)

விளக்கம்:—எவ்விதம் நல்லபசும்பாலானது அது வைக்கப்பட்டிருந்த பாத்திரத்தின் குற்றத்தினால் இனியதோர் சுவையைக்கொடாமல் கெட்டுப் போகின்றதோ அதுபோல் உலகத்துப் பண்பில்லாத ஒருவன் தான் முன் செய்த நல்வினைப்பயனால் அடைந்த பெரிய செல்வமானது தனக்குப் பண்பில்லாமையாகிய குற்றத்தினால் ஒருவருக்கும் பயன்படாது கெட்டுவிடும் என்று இத்திருக்குறள் கூறுவதால், பெற்ற செல்வத்தைக்கொண்டு தான் பயன் அடைவதற்கு உரிய நற்குணத்தை யடையாத ஒருவனது செல்வமானது மிகப் பெரியதாக இருக்கினும் பண்பில்லாமை என்னும் குற்றமுடைய அவனுக்கும் நன்மையைத் தாராது அப்பொருளும் அழிந்து பிறர்க்கும் பயன்படாது ஒழிந்துபோம் என்று அறிவதற்கு நாயனார் உலகத்து யாவராலும் அறியக்கூடிய சிறந்தபொருளாகிய பசும்பாலினை நல்லபாத்திரத்தில் வைக்காது குற்றமுடைய பாத்திரத்தில் வைக்கப்

புகுந்தால் பாவு குற்றமில்லாதிருந்தும் அது இருக்க பாத்திரத்தின் குற்றத்தினால் அப்பாவினது இனிமையாகிய சுவையுங் கெட்டுப் பாவுக்கு உரியவனுக்கும் பயன்படாது பிறர்க்கும் பயன்படாது எறிந்து விடப்படுமோ அதுபோலவே இப்பொருளும் அழிந்து போம்' என்று அறிவித்தனர் என்று அறிந்தோம்' என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்வித பெரியதோர் செல்வம் ஒருவனுக்குக் கிடைத்தி அவனுக்கும் மற்றையோர்க்கும் பயன்படாமற் போகுமாயின், அவ்வித செல்வத்தை நம் தெய்வப்புலவர் எவ்வித செல்வம் என்று அழைக்கின்றனர் ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

101. அதிகாரம்.

நன்றியில்செல்வம்

(பரி.) *அஃதாவது ஈட்டியார்க்கும் பிறர்க்கும் பயன்படுதலில்லாத செல்வத்தினியல்பு. உடையானது குற்றஞ் செல்வத்தின் மேலேற்றப்பட்டது. அதிகார முறைமை மேற்றோற்றுவாய் செய்தவதனாற் பெற்றாம்.*

விளக்கம் :—அதாவது, அச்செலவத்தைச் சேர்த்தவனுக்கும் மற்றவர்களுக்கும் பயனே உண்டாக்குதல் இல்லாததாகிய செல்வத்தினுடைய இயற்கை. இவ்விதம் பயன்படுதலே உண்டாக்காத செல்வத்துக்குரிய ஒருவனுடைய குற்றத்தை அவனது செல்வத்தின் மீது ஏற்றிச் சொல்லலாயினர். ஏனெனின்? மேல் திருக்குறளில் தோற்றுவாய்ச்செய்த முறையினால் இவ்வதிகார முறைமை அமைந்திருக்கின்றது என்று அறிகின்றோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் தனக்கும் பிறர்க்கும் பயன்படாத செல்வத்தின் தகுதியைக் கேட்க ஆசைப்படுகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1001. வைத்தான்வாய் சான்ற பெரும்பொரு ளஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில் [ணின்

(பரி.) இ-ள். வாய் சான்ற பெரும்பொருள் வைத்தான் அஃது உண்ணான் = தன்மனோயகலமெல்லாம் நிறைதற்கேதுவாய பெரும்பொருளே யீட்டி வைத்தி உலோபத்தால் அநுபவியாண்ணாதவன்—செத்தான் செயக்கிடந்தது

இல்=உளனாயினுஞ் செத்தானாம். அதன்கண் அவனாற் செயக்கிடந்ததோரு ரிமையின்மையான். எ-று.

வைத்தானென்பது முற்றெச்சம். உண்ணுதல்=அதனானைம்புலன் களையும் நுகர்தல். வாய்சான்ற பெரும்பொருளை வைத்தானொருவன அதனை யுண்ணாது செத்தவழி அதன்கண் அவனாற் செயக்கிடந்ததோ ருரிமை யில்லையாகலான், வையாது பெற்றபொழுதே நுகர்கவென் றரைப்பினுமமை யும். இதற்குச் செத்தானென்பது எச்சம். இதனால் ஈட்டியானுக்குப் பயன் படலின்மை கூறப்பட்டது. (க)

விளக்கம் :—தன் வீடு முழுவதும் நிறையக்கூடிய பெரிய தோர் பொருளைச்சேர்த்து வைத்துத் தனக்குள்ள கொடாமை என் கின்ற உலோப குணத்தால் அச்செல்வத்தை அனுபவியாதவன் உயிரோடு இருக்கினும் செத்தவனே யாவான் என்றும், ஏனெனில் அப்பெரியதோர் செல்வத்தால் அவன் செய்வதற்குரிய சுதந்திரம் அவனுக்கு இல்லாமற்போகின்றது என்றும் இத்திருக்குறள் கூறுவ தால், பெரும் பொருள்தேடிய ஒருவன் அப்பொருளாலாகிய நலங் களை ஐம்புலன்களும் மகிழும்படி உண்ணுதல்வேண்டும் என்றும், அவ்விதமல்லாது இருப்பவன் அவன் இறந்தகாலத்து எவ்விதம் யா தொரு பாத்தியதையும் இல்லாமற் போய்விடுகின்றானோ அவ்விதம் யாதொரு பாத்தியதையும் உயிரோடு உள்ள காலத்தும் பெறுவ தற் கில்லாமையால் அப்பொருள்களை அனுபவிக்கும் விஷயத்தில் அவன் இருந்தும் இறந்தவனே யாகின்றான் என்றும், அதனால் உயிரோடு உள்ள பொழுதே அனுபவியாது சேர்த்த பொருளால் யாதொரு பயனும் இல்லை என்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "சேர்த்தவனுக்குப் பயன் படாததன்மை யறிந்தோம். இனிப் பிறர்க்குப் பயன்படாமையையும் அறிவிக்க வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்

1002. பொருளானா மெல்லாமென் றீயா திவறு
மருளானா மாணாப் பிறப்பு.

(பரி.) இ-ள். பொருளான் எல்லாம் ஆம் என்று=பொருளொன்று முண்டாக அதனாலெல்லா முண்டாமென்றறிந்து அதனையீட்டி—ஈயாது இவறும் மருளான்=பின் பிறர்க்கீயாது பற்றுள்ளஞ்செய்யு மயக்கத்தாலே— மாணாப்பிறப்பு ஆம்=ஒருவனுக்கு நிறைதலில்லாத பேய்ப்பிறப்புண்டாம்.

இருமையினு மெய்து மின்பங்கள் பலவுமடங்க 'எல்லாம்' என்றும், ட்டுதற்கு முன்னுண்டாயி வறிவு பின் மயங்குதலின் 'மருள்' என்றும், பொருளுண்டாயிருக்கப் பிறர்பசி கண்டிருந்த தீவினைபற்றி உணவுகளுளவா யிருக்கப் பசித்துவருந்தும் பிறப்புளதாமென்றுங் கூறினர். (உ)

விளக்கம் :—இவ்வுலகத்தில் பொருள் ஒன்று கிடைக்குமா யின் அப்பொருளால் எல்லாம் உண்டாகும் என்று அறிந்து அப் பொருளைச் சேர்த்து, சேர்த்ததாகிய அப்பொருளைப் பின்னர் மற்ற வர்களுக்குக் கொடாது உலோபத்தனம் செய்கின்ற ஒருவனுக்கு ஆசை நிறைதலில்லாத பேய்ப் பிறப்பு உண்டாகும் என்று இத்திருக்குறள் கூறுவதால், பொருள் தேடுவான் ஒருவன் பொரு ளைத் தேடுவதற்குமூன் 'நாம் பொருளைத் தேடுவோமாயின் அப்பொருளால் இம்மை மறுமை என்னும் இரண்டு இன் பங்களையும் அடைதல் கூடும்' என்று எண்ணிச் சேர்த்து, அப்பொருளைச் சேர்த்த பிறகு முன்னர் இருந்த கல்லறிவா னது உலோப குணம் என்கின்ற தீமையினால் மயக்கப்பட்டுப் பிறர் மிகப் பசியோடு பசித்து வாடுவதைக் கண்டு இருந்தும் அவர்க்கு உதவி செய்யாது நிற்பானாயின், இவ்வித மயக்கத்தால் மறு பிறப்பில் பேயாகப் பிறந்து பல வுணவுகள் உலகத்தில் இருந்தும் அவற்றை அனுபவிக்கத் தெரியாது பசித்து வருந்துவான் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வித நன்மை தனக்கும் பிறர்க்கும் பயன்படாத செல்வத்தையுடையான் இவ் வுலகத்து இருப்பது யாதொரு பயனும் இல்லை போலும்!" என்ன லும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1003. எட்ட மிவறி யிசைவேண்டா வாடவர் தோற்ற நிலக்குப் பொறை.

(பரி.) இ-ள். எட்டம் இவறி இசை வேண்டா ஆடவர் தோற்றம் = யாம் பிறரின்மிக வீட்டுதுமென்று பொருளினீட்டன்மாத்திரத்தையே விரும்பி அதன் பயனுய புகழை விரும்பாத மக்களது பிறப்பு—நிலக்குப் பொறை = நிலத்திற்குப் பாரமா மத்துணையே. எ-று.

இசை இருமைக்குமுறுதியாய அறமாகலின் சுகையான் அதனையேவேண் டல் செய்யாது ஈட்டற்றுன்பத்தையும் காத்தற்றுன்பத்தையும் வேண்டிய

வறிவின்மைபற்றி, 'நிலக்குப்பொறை' என்றார். பிறப்பென்றது அதற்குரிய வுடம்பினை. (சு)

விளக்கம்:—உலகத்துள்ள எல்லாரைக் காட்டிலும் நாமே மிகப் பொருளைச் சேர்த்தல் வேண்டும் என்று அப்பொருளினுடைய சேர்க்கையை மாத்திரம விரும்பிச் சேர்த்து, சேர்த்த அப்பொருளின் பயனாகிய புகழை விரும்பாத மக்களுடையவு பிறப்பானது நிலத்திற்குப் பாரமேயன்றி வேறு ஒன்றும் இல்லை என்று இத்திருக்குறள் கூறுவதால், இம்மை மறுமையாகிய இரண்டின் பயனை அடைதற்கு உறுதியாகியது அறம் என எண்ணிக் கொடுத்தல் செயலால் அவ்வுறுதியாகிய அறத்தை விரும்பி அடையாது, பொருளைச் சேர்த்தலால் தனக்கு வரும் துன்பத்தையும் வருந்தித் தேடிய அப்பொருளைக் காத்தலால் வரும் துன்பத்தையும் ஆகிய துன்பங்களையே அடைந்து இன்பம் என்பதே யறியாது இறந்துபோவதால், அவர் இருக்கின்ற காலத்தும் அவர் இருப்பது நிலத்திற்குப் பாரமே அன்றி வேறு ஒன்றிற்கும் அல்லை என்று அறிகின்றோம் என்றனர். அது கேட்ட மாணக்கர், "கொடாத உலோப குணத்தோடு உள்ள உயிரைத் தாங்கும் உடம்பினை நிலத்திற்குப் பாரம் என்று தெய்வப் புலவர் கூறினர் என்பது அறிந்தோம். இவ்வித மிருப்பார் செல்வந்தராயினும், அவரை யாரேனும் விரும்புவரோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1004. எச்சமென் றெண்ணெண்ணுங் கொல்லோ னச்சப் படாஅ தவன். [வொருவரா

(பதி.) இ-ன். ஒருவரால் நச்சப்படாதவன்=ஒரு பொருளுமீந்தறியாமையீன் ஒருவரவும் நச்சப்படுதலில்லாதவன்—எச்சமென்று என் எண்ணுங்கொல்=தானீறந்தவழி ணண்டொழிந்து நிற்பதாக யாதனைக்கருதுமோ!

ஈண்டொழிந்து நிற்கும்புகழ் ஈவான்மேலன்றி நில்லாமையின் அவனுக் கதனேடியாதுமையில்லை யென்பார், 'என்னெண்ணுங் கொல்லோ' என்றார். ஓகாரம் அசை. இவை மூன்றுபாட்டானும் பிறர்க்குப் பயன்படவின்மை கூறப்பட்டது. (சு)

விளக்கம்:—ஒருவன் தான் தேடிய பொருள்களுள் ஒரு பொருளையும் பிறர்க்குக் கொடுத்து அறியாமையால் அவன் ஒருவ

யாலும் விரும்பப்படாதவன் ஆவான் என்றும், அவ்விதப் யாராலும் விரும்பப்படாத அவன் தான் இறந்துபோகுங் காலத்து இவ்வுலகத்து எதனை நிலையாக நிற்கும் பொருளாக எண்ணிச் செல்வானே என்றும் இத்திருக்குறள் கூறுவதால், பிறர்க்குத் தன்பொருள் கொடுத்து நிற்பவனே எக்காலத்தும் அழிதல் இல்லாது நிற்கும் புகழ், ஒன்றினைப் பிறகு அடைதல் கூடுமே யன்றி அவ்விதமல்லாதவன் புகழை யடைதல் கூடாதாகையால், பொருளைச் சேர்த்துத் தானும் உண்ணாது பிறர்க்கும் கொடாது நின்றொழிகிய இவன் இருந்த காலத்தும் ஒருவராலும் விரும்பப்படாது போவதுடன் இறந்த காலத்தும் புகழாகிய பயனை அடையாமற் போகின்றான் என்று அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "மேற்கூறிய இம்மூன்று திருக்குறள்களாலும் நன்றியில் செல்வம் பிறர்க்குப் பயன்படாமையை அறிந்தோம். ஆயின், பெரிய தோர் செல்வத்தை அடைந்தவர் உலோபகுணத்தால் தாம் ஏதேனும் ஒருபொருளை அடைபவர் ஆவரோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1005. கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய கோடியுண் டாயினு மில்.

(பரி.) இ-ள். கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லாதகு=பிறர்க்கீவதும் தானதுவதுமாய இரண்டுசெய்கையுமுடையரல்லாதார்க்கு—அடுக்கிய கோடி உண்டாயினும் இல்=பலவாகவடுக்கிய கோடிபொருளுண்டாயினும் ஒன்றுமில்லை. எ-று.

இன்பத்தினும் அறஞ்சிறந்தமையின், கொடுத்தற்றொழில் முற்கூறப்பட்டது. அடுக்கியகோடியென்றது எண்டெண்ணப்படும் பொருண்மேனின்றது. ஒன்றுமில்லார்போலப் பயனிரண்டு மிழத்தலின் 'இல்' என்றார். (கு)

விளக்கம் :—பிறர்க்குக் கொடுப்பதும் தாம் உண்பதும் ஆகிய இரண்டு செய்கைகளும் இல்லாதவர்களுக்குப் பல என்று சொல்லும் பலகோடி பொருள்கள் கிடைக்கினும், அப்பொருள்களால் அவர்களுக்கு யாதொருபயனும் உண்டாவதில்லை என்று இத்திருக்குறள் கூறுவதால், அறத்திற்கு உரியதாகிய கொடுத்தல் தொழிலையும் இன்பத்திற்குரியதாகிய உண்டல் தொழிலையும் ஆகிய இரண்

டையும் பெறாது போகின்றவர் பொருளில்லாமையால் அவ்வறத்தையும் இன்பத்தையும் அடையாதவர்களில் வேறு அல்லர் ஆதலால், இப்பொருள் பெற்றாரும் பொருளில்லா வறிஞரேயன்றி பொருளுடையார் அடையும் பயன் யாதொன்றையும் அடைவதற்கு உரியரல்லர் என்பது பெற்றோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் பொருள் படைத்தும் இம்மை மறுமையாகிய இரண்டையும் அடைவதற்கு இல்லாது உள்ள ஒருவன் தான் அடைந்த செல்வத்திற்கு எவ்வித தகுதியுடையனுய் உள்ளான் என்று புலவர் கூறுவர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

**1006. பதம் பெருஞ்செல்வத் தான்றுவ்வால் றக்கார்க்
றீகலியல்பிலா தான். [கொல்**

(பரி.) இன். தான் நுவ்வான் தகுகார்க்கு ஒன்று ஈதல் இயல்பிலா னால்=தானுடையானுய் அதன்மேலும் தகுதியுடையார்க்கு அவர்வேண்டிய தொன்றை யீதலியற்கையிலனுயினும்—பெருஞ் செல்வம் பதம்=ஒரண்டுஞ் செய்தற்கிடனுடைத்தாய செல்வத்திற்கு ஒருநோய். எ-று.

தகுதி=தானங்கோடற்கேற்புடைமை. எதம்—ஆகுபெயர். நுகரப்படினும் பயப்படுதலுமாகிய தொழிற்குரியதனை அன்மொழித்தினையின், 'நோய்' என்றார். ஈகலியல் பிலாதானது பெருஞ்செல்வம் அவனுக்கு கூட்டல் காத்தன் மூகலியவற்றுல் ஏன்பமேயாமென்றுரைப்பாருமுளர். இவை யிரண்டு பாட்டானும் அவரிருமையும் உடன்கூறப்பட்டன. (கூ)

விளக்கம் :—தானும் உண்ணுனுய் நானம் கொள்ளுவதற்குத் தகுதியுடையார்களுக்கு அவர் விரும்புகின்ற ஒன்றினைக் கொடுக்கின்ற இயற்கை இல்லாதவனுய் உள்ள ஒருவன் பெற்ற பெரிய செல்வத்திற்கு அவன் ஒரு நோயாக இருக்கின்றன் என்று இத்திருக்குறள் கூறுவதால், உலகத்துத் தானுண்டலும் பிறர்க்குக் கொடுத்தலும் ஆகிய இரண்டையும் இல்லாதவன் பெரிய செல்வத்தைப் பெறுவானுயின், அச்செல்வத்தைச் சேர்த்தல் என்கின்ற துன்பமும் அதனைப் பிரிந்து கொள்ளாது காத்தல் என்னும் துன்பமும் ஆகிய இரண்டினையும் இவன் அடைவதன்றி அப்பொருளையும் அசைய வொட்டாது ஓரிடத்தில் சேர்த்து வைக்கின்றன் ஆதலால், அப்பொருளுக்கும் உயிர்கள் தம்மிச்சை வழி

நடவா வண்ணம் துன்பம் செய்யும் நோய் போலிருக்கின்றான் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஈயா தானொருவன் அவனது பெரிய செல்வத்திற்கு நோய் போலுள்ளான் என்ற வுவமையை நன்கு அறிந்தோம். ஆயின், அவ்விதம் ஈயாது சேர்த்துவைக்கும் பொருளை நம் தெய்வப் புலவர் என்னென்று வுவமிக்கின்றனர் என்பதையும் அறிய அவலுறுகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1007. அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வ மிகநலம் பெற்றா டமியண்மூத் தற்று.

(பரி.) இ-ள். அற்றார்க்கு ஒன்று ஆற்றாதான் செல்வம்=ஒருபொருளு மிலராயினார்க்கு அவர்வேண்டியதொன்றினைக்கொடாதானது செல்வம் கொன்னே கழிதல்—மிகநலம் பெற்றாள் தமியள் மூத்தற்று=பெண்டிரின் மிக்க நலத்தினைப் பெற்றாளொருத்தி கொடுப்பாரின்மையிற்கொழுநனின்றித் தமியளாய் மூத்ததன் மைத்து. எ-று.

நலம்=வடிவினன்மையும் குணத்தினன்மையும். இரண்டுமொருங்கு பெறுதலரிதாகலின், 'பெற்றாள்' என்றார். கொடுப்பாருங்கொழுநனுமேயன்றித் தானும் பயனிழந்து கழிந்த குமரியோடுவமை கூறினமையின், தானுமேற்பானுமே யன்றிச் செல்வமும் பயனிழந்து கழியுமென்பதாயிற்று. (எ)

விளக்கம்:— ஒரு பொருளும் இல்லாது உலகத்துள்ள தரித்திரர்களுக்கு அவர் விரும்பும் யாதொன்றினையும் கொடாத ஒருவனது செல்வம் யாதொரு பயனையும் அடையாது இருந்து வீணே யழிந்துபோதல் பெண்களில் மிக அழகினைப் பெற்றாள் ஒருத்தி தன்னைத் தக்க ஒருவனுக்கு நாயகியாகக் கொடுப்பாரில்லாமையால் நாயகனைப் பெறாது ஒன்றியாக இருந்து தன்னலத்தை யாரும் யடையாமலும் தான் யாதொரு நலனும் யடையாமலும் வயது முதிர்ந்து இருப்பது போலும் என்று இத்திருக்குறள் கூறுவதால், பெண்களுக்குரிய உருவத்தின் அழகும் குணத்தின் அழகும் ஆகிய இரண்டனையும் பெற்று இருக்கின்ற பெண் ஒருத்தி தக்கதோர் நாயகனுக்கு அவளைப் பெற்றார் கொடாது வைத்திருப்பாராயின், அவள் எவ்விதம் உலகத்துத் தோன்றியதால் உண்டாகும் பயனை யடைவதற்கு இல்லாது போவதுடன் பிறர்க்கும் இன்பம் தரும்

பயனை யடையாமல் வீணே கன்னிளமை யழித்து மூப்பினை யடைந்து எடுத்த தேகமானது பயன்பெறாது ஒழிந்து போமோ அதுபோல் வறியோர்க்குக்கொடாத செல்வம் ஆனது படைத்தவனுக்கும் பிரசை கேட்பவனுக்கும் பயன் தராது போவதுடன் தானும் பயன்படாது அழிந்துபோகும் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் கொடாதவன் அடைந்த செல்வத்தால் அடையும் பயனையும் அச்செல்வம் அடையும் பயனையும் இவை என்று அறிந்தோம். ஆயின், இவ்விதம் கொடாதவனது செல்வம் யாருக்கும் நன்மை செய்யாவிடினும், அப்பொருளால் யாருக்கும் யாதொரு தீமையும் உண்டாகாது போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1008. நச்சப் படாதவன் செல்வ நடுவூருள்
ணெச்சு மரம்பழுத் தற்று.

(பதி.) இ-ள். நச்சப்படாதவன் செல்வம்=வறியார்க்கணியனுமிருந்தும் ஒன்றுங்கொடாமையின் அவரானச்சப்படாதவன் செல்வமெய்துதல்—ஊர் நடுவுள் நச்சுமரம் பழுத்தற்று=ஊரிடைநின்றோர் நச்சுமாம் பழுத்தார்போலும். உ-று

நடுவுரென்பது பின்முன்னுதத்தொக்க வாரும்வேற்றுமைத்தொகை. அண்மையுடைமையளாற் பயனில்லை யென்பதாம். (அ)

விளக்கம் :—வறியவர்கள் தனக்குச் சமீபத்தில் இருந்தும் அவர் துன்பத்தை நீக்குவதற்கு ஒன்றும் கொடாததால் அவ்வறியவர்களால் விரும்பப் படாத ஒருவன் செல்வத்தை யூரிடைதல் ஊரின் நடுவிலே விஷந்தரும் மரம் ஒன்று பழுத்திருந்தாற்போலும் எனறு இத்திருக்குறள் கூறுவதால், உலகத்தார் விரும்பக் கூடிய பழத்தைத் தரும் மரம் ஒன்று விஷத்தை யுடையதாகி நிற்குமாயின் அது உண்ணும் பழமாயினும் ஊர் நடுவே இருந்தும் அப்பழத்தை எவ்விதம் விரும்பாது அப்பழம் உள்ள மரத்திடத்தும் செல்லாது ஒதுங்கிச் செல்லுவரோ, அதுபோல் சமீபத்தில் உள்ள இச்செல்வந்தனிடத்தும் நெருங்காதும் விரும்பாதும் விலகிச் செல்வர் என்று அறிகின்றோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் நச்சுமரம் போல் உள்ளானை ஒருவ

ரும் விரும்பாவிடினும், அவனது பொருளையேனும் விரும்பிப் பிறர் கொண்டுசென்று பயன்பெறுதல் கூடுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1009. அன்பொரீஇத் தற்செற்றறநோக்கா தீட்டிய வொண்பொருள் கொள்வார் பிறர்.

(பரி.) இ-ள். அன்பு ஒரீஇ=ஒருவன் கொடாமைப்பொருட்டுச் சுற்றத்தார் நட்டார்கண் அன்பு செய்தலையொழிந்து—தற்செற்று=வேண்டுவன நுகராது தன்னைச்செறுத்து—அறம் நோக்காது=வறியார்க்கு ஈதன் முதலிய வறத்தை நினைப்பதுஞ்செய்யாது—ஈட்டிய ஒண்பொருள் கொள்வார் பிறர்=ஈட்டிய வொள்ளியபொருளைக் கொண்டுபோய்ப் பயன்பெறுவார் பிறர். எ-று.

பயனாய அறனும் இன்பமுஞ் செய்துகொள்ளாதானுக்குப் பொருளாலுள்ளது ஈட்டற்றுன்பமேயென்பது தோன்ற 'ஈட்டிய' என்றும், அவன் வழியினுள்ளார்க்கும் உதவாதென்பது தோன்றப் 'பிறர்' என்றுங் கூறினார்.

விளக்கம் :—ஒருவன் கொடாமையின் காரணமாகச் சுற்றத்தவரிடத்தும் நட்பினரிடத்தும் அன்பு செய்யாது இருப்பதுடன் தனக்கு வேண்டுவனவாகியவற்றைத் தான்உண்ணாது தன்னைத் துன்பப்படுத்தியும் வறியவர்களுக்குக் கொடுத்தல் முதலிய அறச்செயலை நினைப்பதும் செய்யாது பொருளை அதிகமாகச் சேர்ப்பானாயின் அவனது பெரும் பொருளை அயலவர் கொண்டு சென்று அப்பொருளாலாகிய பயனை அடைவர் என்று இத்திருக்குறள் கூறுவதால், தான் உண்ணாதும் சுற்றத்தவர்க்கும் நட்பினர்க்கும் கொடாதும் அறவழியிற் செலவழியாதும் எவனேனும் பெரும் பொருள் சேர்த்து வைப்பானாயின், அவ்விதம் சேர்த்த பெரும் பொருளை அயலார் கொள்ளை கொண்டு சென்று பயனை அடைவர் என்று அறிந்தோம். அன்றியும், இவ்விதம் பொருள் சேர்த்தவனுக்குப் பொருள் சேர்த்ததாலாகிய துன்பம் ஒன்றே நின்றதுடன் அவன் வழியாராகிய சந்ததியாருக்கும் அப்பொருள் உதவாதவாறு பிறர் கொள்ளைகொண்டுபோவர் என்றும் கூறியதாயிற்று என்றனர். அது கேட்ட மாணாக்கர் "இவ்விதம் கொடாதவனது பொருளை அயலவர் அடித்துச் சென்று அவனுக்கும அவன் சந்ததியார்க்கும் வறுமையை உண்டுபண்ணு

வார் என்று அறிந்தோம். ஆயின், யார்க்கும் தம்பொருள் கொடுத்து அதனால் புகழையடைய விரும்புவார் வறியராவரோ ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1010. சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து.

(பி.) இ-ள். சீர் உடைச்செல்வர் சிறு துனி=புகழுடைத்தாய செல்வத்தினையுடையவரது நிற்குங்காலஞ் சிறிதாய வறுமை—மாரி வறங்கூர்ந்தனைய துடைத்து=உலகத்தையெல்லாம் நிலைநிறுத்து மேகம் வறுமை மிக்கார்போல் ஏதோரியல்பினையுடைத்து. எ-று.

துனி=வெறுப்பு, அதனைச்செய்தலாற் றுனியெனப்பட்டது. யாவர்க்கும் பயன் பட்டார் அதனான் வறியராயவழியும் அவ்வறுமை கடிதினீங்குதலிற் பின்புஞ் செல்வராயப் பயன்படுவரென்பது உவமையாற் பெறப்பட்டது, படலே, நன்றியில்லாத செல்வம் எஞ்ஞானறும் பயன்படாதென்பதாயிற்று. இதற்குச் சீருடைச்செல்வர் இரவலரோடு வெறுக்கும் நிலையில் வெறுப்பு மாரி வறங் கூர்ந்தனைய தன்மையையுடைத்தென அதிகாரத்தோடு பொருந்தாமை மேலும் ஓர் பொருட்டொடர்பு படாமலுரைப்பாருமுளர். இவை நான்குபாட்டானும் அச்செல்வத்தது குற்றங் கூறப்பட்டது (ம)

விளக்கம் :—புகழ்படைத்தற்கே உரியதாகிய செல்வத்தினை உடையவரது வறுமையானது நிற்கும் காலம் மிகச் சிறியது என்றும், அச்சிறியகாலமுள்ள வறுமையானது இவ்வுலகத்தை எல்லாம் நிலைநிறுத்தும் மேகமானது பெய்யாது வறுமை மிகுந்தால் எவ்வித்தோ அவ்வித இயல்பினை உடையது என்றும் இத்திருக்குறள் கூறுவதால், எவர்க்கும் கொடுத்துப் புகழை அடைய விரும்பி நின்றவர் அக்கொடுத்தலால் வறிஞர்களானாலும் அவர் கொடையின் பயனால் அவர்க்குக் குறைந்த செல்வமானது மறுபடியும் பலவழியாலும் நிரம்பப்பெற்று அவருடைய வறுமையை நீக்கிப் பலர்க்கும் பயன்படும் ஆதலால், மேகமானது பெய்யாது ஒருகாலத்து இருந்தாலும் மற்றோர் காலத்துப் பெய்து, பெய்யாத காலத்து உயிர்கள் வருந்திய வருத்தத்தை நீக்குவதுபோல இவரும் நீக்குவர் என்றும், இத்தகுதியுடையார் செல்வம் எக்காலத்தும் குறையாது தமக்கும் தம்சந்ததியார்க்கும் உதவுமென்றும், அவ்விதமில்லாதார் செல்வம்

நன்றியில் செல்வமாய் அவர்க்கும் பிறர்க்கும் பயன்படாது ஒழியும் என்றும அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "மேற் கூறிய நான்கு பாட்டினுல் நன்றியில் செல்வத்தினது குற்றம் அறிந்தோம். இனிச் சான்றாண்மையுள் மூன்றாவது திருக்குறளில் கூறிய நாண் என்பதின் தன்மையையும் அறிய விரும்புகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

102. அதிகாரம்.

நாணுடைமை.

(பி.) அஃதாவது மேற்சொல்லிய சால்பு பண்பு முதலிய குணங்களாலுயர்ந்தோர் தமக்கொவ்வாத கருமங்களில் நாணுதலுடையராக்கன்மை. அதிகார முறைமையும் இதனுனே விளங்கும்.

விளக்கம்:—அதாவது, தமக்குக் கூறிய சால்புடைமை, பண்புடைமை முதலிய குணங்களைத் தமக்கு உயிரென மதித்து அவற்றுல் உயர்ந்தோர் தம் தகுதிக்குப் பொருந்தாத தொழில்களில் தலையிட வேண்டி வருமாயின் அத்தொழில்களால் வரும் பழிபாவங்களுக்கு நாணுதலுடையராய் நிற்கும் தன்மையாகும் என்பதாம். அதுகேட்ட மாணாக்கர், "நாணம் என்பது எல்லோர்க்கும் பொதுவாக இருக்கவும் உயர்ந்தோர்க்கே கூறுவது என்னை?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1011. கருமத்தா னாணுத னாணுத் திருநுத
னல்லவர் நாணுப பிற.

(பி.) இ-ள். நாணுக் கருமத்தால் நாணுதல்=நன்மக்களணைவது இழிந்த கருமங்காரணமாக நாணுதல்;—பிற திருநுதல் நல்லவர் நாணு=அம்மை தன்னி மனமொழிமெய்களதொடுக்கத்தான் வருளனைவோவெனின், அணிவ அவரளவல்ல அழகிய நுதலினையுடைய குலமகளிர் காண்கள். எ-று.

பிற குலமகளிர் நாணென்றதனுன் வேனயது நன்மக்களணைன்பதும், நாணுதலென்றதனுல் கருமத்தினிழிவும் பெற்றும். திருநுதனல்லவரென்பது புகழ்ச்சிக்குறிப்பு. எதுப்பன்மைபற்றிப் 'பிற' என்றார். இனி அற்றமறைத்தன் முதலியன பொதுமகளிர் நாணைடோக்குமென் றுரைப்பாருமுளர்; அவர்க்கு

நாண் கேடுபயக்குமென விலக்கப்பட்டமையானும், அவர்பெயராற் கூறப்படாமையானும் அஃதரையன்மையறிக. இதனுள் நாணினதிலக்கணங் கூறீப்பட்டது. (க)

விளக்கம்:—நன்மக்களாகிய உயர்ந்தோர்க்கு உரிய நாண் என்று சொல்லப்படுவது எதேனும் இழிவினைத் தரும் தொழில் ஒன்றினைத் தாம் செய்யவேண்டிவருமாயின் அதுகாரணமாக நாணுதல் என்றும், அவ்விதம் அல்லாது மனத்தாலும், சொல்லாலும், தேகத்தாலும் ஆகிய இவைகளால் வரும் ஒடுக்கத்தினால் வருவதாகிய நாணுடைமை உயர்ந்தோரது நாணமாக இராது, அழகிய நெற்றியினையுடைய குலப்பெண்கள் கொள்ளும் நாணமாகவே உள்ளதென்றும இத்திருக்குறள் கூறுவதால், உண்மையாகவே நாணுதலால் உயர்ந்தோர் தம் குடிக்கு அடாத கருமம் ஒன்றினைத் தாம் செய்ய நேருமாயின் தமக்கு அது பழிப்பினைத் தரும் என்று எண்ணித் தம் அறிவின் மிகுதியால் அவ்விழிந்த கருமத்தைச் செய்யாது நிற்பதே நாணுடைமை என்றும், அப்பெரியதோர் தூணினைத் தமக்கு உறுதியாகக் கொண்டதே நாணுடைமைக்கு இலக்கணம் என்றும், எனைய மகளிர்க்குக் கூறிய நான்கு வேலிகளுள் ஒன்றாகிய நாணுடைமையானது அவரது பெண் தன்மையால் தம் கணவரல்லாது பிறரைக் கண்ட காலத்து மனமொழி மெய்யாகிய மூன்றும் அஞ்சி நாணம கொள்ளுகின்ற அவரது இயற்கை என்றும், அவரின் இயல்பாகக்கொள்ளும் நாண் என்பதை ஒண்டு நாணுடைமை என்று கொள்ளாது ஒரு காரணங் கருதி நாணுதலே நாணுடைமை என்றும், அதுவே சான்புடையார்க்கு உரியதென்றும் அறிந்தோம் எனலுமனர். அதுகேட்ட மாணாக்கர், "நாணுல் சிறப்புடையவர் தாம் சிறந்தார் என்று கொள்ளுதல் வேண்டுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1012. ஊணுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல நாணுடைமை மாந்தர் சிறப்பு.

(பரி.) இ-ள். ஊண் உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறு அல்ல — ஊணும் உடையும் அவையொழிந்தனவும் மக்களுயிர்க்கெல்லாம் பொது,— மாந்தர் சிறப்பு நாணுடைமை = நன்மக்கட்குச் சிறப்பாவது நாணுடைமையே, அவையல்ல. எ-று.

ஒழிந்தன = உறக்கமும் அச்சமும் காமமும். சிறப்பு = ஆவ்வுயிர்களின் வேற்பாடு. அச்சமென்று பாடமோதுவாருமுளர். (ப)

விளக்கம்:—உண்ணுதலும், உடுத்தலும், உறங்குதலும், அஞ்சுதலும், காம இன்பம் துய்த்தலும் மக்களாகப் பிறந்த எல்லோர்க்கும் பொதுவென்றும், அம்மக்களுள் நன்மக்கள் என்று சொல்லப்படுவார்க்குச் சிறந்த குணம் நாணுடைமை ஒன்றே யாகுமேயன்றி மேற்கூறிய பொதுவாகிய குணங்களல்ல என்றும் இத்திருக்குறள் கூறுவதால், உயிர்க்கெல்லாம் உண்பதும், உறங்குவதும், உடுப்பதும், அஞ்ச வேண்டுவதற்கு அஞ்சுவதும், துய்க்கவேண்டிய அளவில் காமத்தைத் துய்ப்பதும் ஆகிய செயல்களால் தம்மைக் காத்து உலகத்து வாழ்வது அத்துணைச் சிறப்புடைமை அல்லவென்றும், அவைகளுக்கு வேறாகிய நாணுடைமை என்பது ஒன்றினைத் தம் உயிரினும் மேம்பட்டதாகக்கொண்டு அந்நாணத்தோடு உயிர் வாழ்வாரே சிறப்புடையவராவர் என்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "நாணுடையாரே சிறப்புடையார் என்று நாணில்லாத உயிர்களினின்றும் பிரித்துக் காட்டியதை அறிந்தோம். ஆயின், நாணுடைமை சால்புடைமைக்கு மிக இன்றியமையாதது என்பதை ஓர் உவமையால் காட்டல் வேண்டும்" என்னவும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1013. ஊனைக் குறித்த வுயிரெல்லா நாணைஞ்சு
நன்மை குறித்தது சால்பு.

(பரி.) ஓ-ள். உயிரெல்லாம ஊனைக் குறைத்த = எல்லாவுயிர்களும் உடம்பினைத் தமக்கு நிலைக்களனாகக்கொண்டு அதனைவிடார்; சால்பு நாண் என்னும் நன்மை குறித்தது = அதுபோலச் சால்பு நாணென்னு நன்மைக் குணத்தைத் தனக்கு நிலைக்களனாகக்கொண்டு அதனை விடாது. எ-று.

உடம்பென்பது சாதியொருமை. நன்மை—ஆகுபெயர். உயிர் உடம்போடு கூடியல்லது பயனெய்தாதவாறுபோலச் சால்பு நாணோடு கூடியல்லது பயனெய்தாதென்பதாம். ஊனைக்குறித்தவென்று பாடமோதுவாருமுளர். (ங)

விளக்கம்:—உலகத்துத் தோன்றிய எல்லாவுயிர்களும் உடம்பினைத் தமக்கு இருக்க இடமாகக்கொண்டு அவ்வுடலினை விட்டுவிடா என்றும், அதுபோலவே சால்புடைமை என்பது நாணமென்னும் நல்ல குணத்தைத் தனக்கு இருப்பிடமாகக் கொண்டு அந்நா

ணினை விடாது என்றும் இத்திருக்குறள் கூறுவதால், உயிர் ஒன்று ஓர் உடம்பினைப்பெற்று அவ்வுடம்பினைக் காத்தலன்றித் தான் எவ்வாறு அடையவேண்டிய பயனை அடைதல் கூடாதே. அதுபோல் சால்பு என்னும குணமும் காணுடைமை என்னும் நற்குணத்தோடு கூடியிருந்தாலன்றி அதன் பயனெய்துவதற்கு ஆகாது என்று அறிகின்றேமும் இதனால், உடலானது உயிர்க்கு எவ்வளவு இன்றியமையாததோ அதுபோல் சால்புடைமைக்கு நாண் என்பது இன்றியமையாதது என்று ஓர் உவமை வாயிலாக அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இந்நாணுடைமை என்பது சால புடையோர்க்கு எவ்விக அழகினைச் செய்யும என்பதையும அறிய விரும்புகின்றேம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1014. அணியல்லோ நாணுடைமை சான்றோர்க்கஃதின்
பிணியன்றோ பீடு நடை. [றேற்

(இ-ள்.) சான்றோர்க்கு நாணுடைமை அணியன்றோ = சான்றோர்க்கு நாணுடைமை ஆபரணமாம்; அஃது இன்றேல் பீடு நடை பிணியன்றோ = அவ்வாபரணமில்லையாயின் அவர் பெருமிதத்தையுடைய நடை கண்டார்க்குப் பிணியாம். எ-று.

அழகுசெய்தலின் 'அணி' என்றும், பொறுத்தற் கருமையிற் 'பிணி' என்றும் கூறினர். ஓகாரவிடைச்சொற்கள் எதிர்மறைக்ணை வந்தன. இவை மூன்று பாட்டானும் அதன்சிறப்புக் கூறப்பட்டது. (ர)

விளக்கம்:—சான்றோர் என்பார்க்கு நாணுடைமை எனபது ஆபரணம் என்றும், அவ்வாபரணம் ஒன்று இல்லையாயின் அவர் பெரு மிதக்கொண்டு நடக்கின்ற நடை பார்ப்பவர்க்கு நோயாகும் என்றும இத்திருக்குறள் கூறுவதால், எல்லாச் சிறப்புக்களையும் பெற்று உல கத்து வாழ்வதாலும் நாணுடைமை என்னும் அழகு செய்யும ஆபர ணம் ஒன்றினை ஒருவன் அடையாவிட்டால் அவனுக்கு அழகு உண் டாகாதென்றும், அவ்வழகு ஒன்றினை அடையாது தான் மற்றைய குணங்களை அடைந்திருப்பதினாலேயே தன்னைப் பெரியனாக எண் ணிக் கர்வதோடு நடக்கின்ற நடையைப் பார்க்கின்ற பிறர்க்கு அந் நடையானது விடாது துன்பத்தைத் தரும் பொறுத்தற்கரிய நோய் போல் இருக்குமென்றும் அறிகின்றேம். இதனால் சால்புடைமைக்கு

நாண் ஒன்றே பிறந்தது என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "சால்புடையார் தமக்கு வரும் பழி ஒன்றிற்கே நாணுவரோ? அன்றி, எனையோர்க்கு வரும் பழிக்கும் நாணுவரோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1015. பிறர்பழியுந் தம்பழியு நாணுவார் நாணுக் குறைபதி யென்னு முலகு.

(பரி.) இ-ள். பிறர் பழியும் தம்பழியும் நாணுவார்=பிறர்க்கு வரும் பழியையுந் தமக்கு வரும் பழியையும் ஒப்பமதித்து நாணுவாரை—உலகு நாணுக்கு உறைபதி என்னும்=உலகத்தார் நாணுகளுறைவிடமென்று சொல்லுவர். எ-று.

ஒப்பமதித்தல்=அறவுந்தமக்கு வந்ததாகவே கருதுதல். அக்கருத்தடையார் பெரியாராகலின், அவரை உயர்ந்தோர்யாவரும் புகழ்வரென்பதாம். இனைலால் அதனை புடையாரது சிறப்புக் கூறப்பட்டது. (இ)

விளக்கம்:—பிறர்க்கு வரும் பழிகளையும் தமக்கு வரும் பழிகளையும் ஒன்றாகவே மதித்து நாணத்தைக் கொள்பவரே நாண் என்பது தங்குகற்கு ஓர் இடம் என்று உலகோர் புகழ்ந்து சொல்லுவார் என்று இதனிருக்குறள் கூறுவதால், நீங்கள் மேல் வினையிய வண்ணம் கல்லோர் தமக்கு வரும் பழியைக் கருதி அதற்காக நாணுவதுடன் பிறர்க்கு வரும் பழியையும் தமக்கு வந்ததுபோல் எண்ணி நாணத்தை அடைவர் என்றும், அவ்விதம் தம்மைப்போல் பிறரையும் எண்ணும் எண்ணமுடையார் மிகப் பெரியராதலின், அவ்வித பெரியோரை உயர்ந்தோரெவரும் 'இவரே பெரியர்' என்று புகழ்ந்து பேசுவர் என்றும் அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இத்திருக்குறளால் நாணினை உடையாரது சிறப்பு இதுவென அறிந்தோம். ஆயின், இவ்வித நாணினைத் தமக்கு உயர்ந்த பொருளாகக் கருதுவோர் அதை ஒழிந்து வேறும் பொருளைத் தமக்குச் சிறந்த பொருளாகக் கருதமாட்டார் போலும!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1016. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம் பேணலர் மேலா யவர்.

(பரி.) இ-ள். மேலாயவர்=உயர்ந்தவர்,—வேலி நாண் கொள்ளாது=தமக்கேமமாக நாணினைக் கொள்ளுகன்றி,—வியன் ஞாலம் பேணலர்=ஆகன்ற ஞாலத்தைக்கொள்ள விரும்பார். எ-று.

பழிபாவங்கள் புகுதாமற்காத்தலின், 'வேலி' என்றார். நாணும் ஞால மும் தம்முண்மாறுபடவழி அந்நாணினைக் கொள்வதல்லது அவை புகுதலொறி யாய ஞாலத்தினைக்கொள்ள விரும்பாரென்பதாம். மன்னும் ஓவும் அசை நாணுகிய வேலியைப்பெற்றல்லது ஞாலம்பெற விரும்பாரென்றுரைப்பாரு முளர். (அ)

விளக்கம்:—உயர்ந்தவர் ஆகிய பெரியோர் தமக்கு இவ்வுல கத்தை இருமையையடைவதற்குப் பெரிய ஆதாவாகக் கொள்ளு கின்றதாண் என்பதைக் கொள்ளுவது அல்லாமல், மிகுதியும் அகன்ற இடத்தையுடைய இவ்வுலகம் முழுவதும் தாம் பெற்றுவதாயினும் அதனைக் கொள்ளவிரும்பார் என்று இத்திருக்குறள் கூறுவதால், நாண் ஒன்றினைத் தமக்குக் காவலாகக்கொண்டு நன்னெறியில் செல்ல எண்ணிய பெரியோர் பழியும் பாவமும் அடைய வொட் டாது நல்நெறியிற் செலுத்தும் அந்நாணினைக் கொள்வதே யன்றி அந்நாண் ஒழிந்து நிற்பதாயின் இப்பூமி முழுவதையும் தாம் அடைவதற்கு ஏதுவிருக்கினும் இருமையுங் கெடுப்பதாகிய அவ்வழியிற் செல்லார் என்று அறிகின்றோம். இதனால், நல்லோர் இப்பூமி முழுவதையும் தாம் பெற்றுப் பழி பாவத்தை அடைவ தாஞல் அப்பூமியைக் கொள்ளவிரும்பாது பழி பாவத்தைப் போக் கும் நாணினையே அடைய விரும்புவர் என்று அறிகின்றோம் என்ற னர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் நாண் வேலிகொண்டு வாழ்பவர் உலகத்தையும் மதியார் என்பீராயின், அந்நாண் ஒன்றின் பொருட்டு எதையும் விட்டுவிடுவர் போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1017. நாணு வுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா ணாணுபவர் நாணுள் பவர்.

(பரி.) இ-ள். நாண் ஆள்பவர் = நாணினது சிறப்பறிந்து அதனை விடா தொழுகுவார்—நாணுல் உயிரைத் துறப்பர் = அந்நாணு முயிருந் தம்முண் மாறுபவழி நாண்சிதையாமற்பொருட்டு உயிரை நீப்பர், —உயிர்ப்பொருட்டு நாண் துறவார் = உயிர்சிதையாமற்பொருட்டு நாணினை நீக்கார். எ-று.

யிரினும் நாண்சிறந்ததென்பதாம். இவை யிரண்டுபாட்டானும் அவர் செயல் கூறப்பட்டது. (எ)

விளக்கம்:— நாணினது சிறப்பு இது என்று அறிந்து அந்நாணினை விடாது நன்னெறியில் ஒழுகுவோர் அந்நாணை விட்டால் மாத்திரம் உயிர் இருப்பதாயினும் அவ்வுயிர் பொருட்டு நாணை விடமாட்டார் என்றும், நாணின் பொருட்டே உயிரை விட்டுவிடுவர் என்றும் இத்திருக்குறள் கூறுவதால், நாண் ஒன்றே பழிபாவங்களைப் போக்கிப் புகழையும் புண்ணியபத்தையும் தரும் என்று எண்ணிய பெரியோர் தம் இன்னுயிர் தங்குவதற்கு நாணுடைமையை இழந்தாலன்றி முடியாது என்றும் அவ்வித பெரியதோர் ஆபத்து வந்த காலத்தும் அவ்வின்னுயிர் பொருட்டு நாணத்தைத் துறவார் என்று அறிகின்றோம். இதனால், நாணைச் சிறந்ததாகக்கொண்டவர் அருமையாகிய உயிரை அந்நாணிற்குமுன் சிறப்பாக எண்ணார் என்பது பெறப்பட்ட பொருளாயிற்று என்றனர். அதைகேட்ட மாணாக்கர், "நாணை சிறப்புடையது என்று கருதிய பெரியோர் வேறு எதனையும் அதற்குச் சமானமாக எண்ணிக் கொள்ளார் என்று அவர் செயலே மேற்கூறிய இரண்டு திருக்குறள்களாலும் அறிந்தோம். இனி, இந்நாணிற்கு அஞ்சாதவரது தகுதி எதுவாகும் என்று அறிய விரும்புகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1018. பிறர்நாணத் தக்கது தாணுணு ணுயி னறநாணத் தக்க துடைத்து.

(பரி.) இ-ள். பிறர் நாணத்தக்கது தான் நாணுணுயின்=கேட்டாருங் கண்டாரு நாணத் தக்கபழியை ஒருவன் நாணுணுது செய்யுமாயின்,— அறம் நாணத்தக்கது உடைத்து=அந்நாணுமை அவனை அறம் விட்டுநீங்கத் தக்க குற்றத்தினை யுடைத்து. எ-று

தானெனச் செய்வானை பிரிக்கின்றமையால், 'பிறர்' என்றார். நாணுடையில்லாதானை அறஞ்சாரா தென்பதாம். (அ)

விளக்கம்:—கேட்பவரும் காண்பவரும் நாணக்கூடிய பழி ஒன்றினை ஒருவன் சிறிதும் நாணுது செய்வானுயின், அவ்விதம் நாணுது செய்தல் அவனை அறம் என்பது விட்டு நீங்கத்தக்க குற்றத்தினுள் கொலுத்திவிடும் என்று இத்திருக்குறள் கூறுவதால், நாண் என்பது யாவர்க்கும் ஓர் வேலியாக இருக்கின்றதென்றும், பிறர்கேட்ட காலத்தும் பார்த்த காலத்தும் இவ்விதி பழியும் பாவமும் செய்கின்றனை

என்று அஞ்சக்கூடிய அவ்வினைப் பழியையும் பாவத்தையும் சிறிதும் செய்வதற்கு அஞ்சாதும் உலகத்திற்கு நாணுதும் ஒருவன் செய்வானாயின், அவ்வித அஞ்சாச் செய்கையாகிய நாணில்லாமையானது அவனுக்கு அறத்தைப் போக்கிப் பாவத்தையும் உண்டாக்கும் என்று அறிகின்றோம என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "நாண் மனத்து இல்லாதவன் அறத்தை இழப்பான் என்று அறிந்தோம். ஆயின், அவனது நாணில்லாமையானது அறம் ஒன்றினைத்தான் கெடுக்கும்போலும்! வேறு ஓர் கேட்டினையும் அவனுக்கு உண்டாக்காதோபோலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1019. குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னிலஞ்சுடு நாணின்மை நின்றக் கடை.

(பரி.) இ-ள். கொள்கை பிழைப்பிற் குலம் சுடும்=ஒருவனுக்கொழுக்கம் பிழைக்குமாயின் அப்பிழைப்பு அவன் குடிப்பிறப்பினையுங் கெடுக்கும்;—நாணின்மை நின்றக்கடை நலம் சுடும்=ஒருவன்மாட்டு நாணின்மை நின்ற வழி அந்நிலை அவனலம் யாவற்றையுங் கெடுக்கும். எ-று.

நிற்றல்=ஒருபொழுது நீங்காமை. நலம்—சாதியொருமையாகலின், பிறப்பு, கல்வி, குணம், செயல், இனமென்றிவற்றுள் வந்தனவெல்லாங்கொள்ளப்படும். ஒழுக்க வழியினும் நாணுநிலை இறப்பத் தீதென்பதாம். (க)

விளக்கம்:—ஒருவனிடத்தே உள்ள ஒழுக்கம் தவறுமானால் அவ்வித தவறுபாடுமை அவன் குடிப் பிறப்பு ஒன்றினையுங் கெடுத்துவிடுமென்றும், ஆயின் ஒருவனிடத்தே நாண் இல்லாமை நீங்காது நிற்குமானால் அவ்வித நீங்காது நிற்கும் நிலைமை அவனுக்கு உரிய எல்லா நன்மைகளையும் போக்கிவிடும் என்றும் இத்திருக்குறள் கூறுவதால், ஒழுக்கம் தவறிய ஒருவனுக்குக் தான பிறந்த குடியின் பெருமை ஒன்றினையும் இழக்க நேருமென்றும், ஆனால் நாணமற்றவன் ஒருவனுக்கு அவன் பிறப்பு, அவனது கல்வி, அவனுடைய குணம், அவனுடைய செயல், அவனுடைய இனம் ஆகிய எல்லா நலங்களும் போய்விடுமென்றும், உயிரினும் மேம்பட்ட ஒழுக்கத்தைக் காத்தல் வேண்டும் என்று ஒழுக்கமுடைமை என்னும் அதிகாரத்தில் கூறிபிருந்தாலும், அவ்வொழுக்கமுடைமையை இழுத்தலினும் நாணத்தை இழுத்தல் எல்லாத் தீமைகளையும் தரும் என்பதால் ஒழுக்க அழிதலினும் நாண் அழிதல்

மிகத் தீங்கு உடையது என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "நாண் இழப்பதால் அறத்தை இழப்பதுடன் எல்லாவற் றையும் இழந்தல்லவேண்டும் என்று அறிகோம். ஆயின், இவ்வித நாணில்லார் உலகத்து இயங்கும் இயக்கத்தை எவ்விதமாகக் கருதுதல் வேண்டுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1020. நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை நாணு யிர்மருட்டி யற்று.

(பரி.) இ-ள். அகத்து நாண் இல்லார் இயக்கம்=தம்மனத்தின்கண் நாணில்லாத மக்கள் உயிருடையார்போன்றியங்குகின்ற வியக்கம்—மரப் பாவை நாணுல் உயிர் மருட்டியற்று=மரத்தால்செய்த பாவை இயந்திரக் கயிற்றினுலுய தன்வியக்கத்தால் உயிருடைத்தாக மயக்கினற்போலும். எ-று.

*கருவியே கருத்தாவாயிற்று. நாணில்லாத மக்களியக்கம் நாணுடைய பாவையியக்கம்போல்வதல்லது உயிரியக்கமனறென்பதாம். இவை மூன்று பாட்டானும் நாணில்லாதிழிவு கூறப்பட்டது. (ம)

விளக்கம்:—தம்மனத்தினிடத்தே நாணம் என்பதைக் கொள்ளாத மக்கள், உயிருடையவர்கள் போல் வசித்து வருகின்ற வாழ்க்கையானது மரத்தினுல் செய்த பொம்மை ஒன்று அதனை அசைக்கின்ற இயந்திரக் கயிற்றில் அசைந்து அதனுல் உயிருடையதுபோல உலகத்தவர்களை மயக்குகின்றதுபோலும் வேறு அல்ல என்று இதற்கிருக்குறள் கூறுவதால், மனத்து நாணத்தைக் கொண்டு வாழ்கின்ற மக்கள் வாழ்க்கையே உயிரோடு கூடிவாழும் இயற்கையை உடையது என்றும், அவ்வித நாணம் இல்லாது எவ்விதமேனும் வாழ்ந்தால்போதும் என்று பழியையும் பாவத்தையும் ஏற்றுக் கொண்டு வாழ்பவர் வாழ்க்கை உயிரில்லாத மரத்தாற்செய்த பொம்மை ஒன்று தானே அசைவதற்கு இல்லாத்தன்னை ஆட்டுகின்றவனது கையிலுள்ள கயிற்றால் அசைந்து உயிருடையதுபோல் பார்ப்பவரை மயக்கி எவ்வாறு தான் ஒரு நலனையும் அடையாது போய்விடுகின்றதோ அதுபோல் உலகத்து அடையவேண்டிய பயன் யாதொன்றையும் அடைவதுகில்லாமல் போம் என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "நாணமில்லார்க்கு உண்டாகும் இழிவு இதுவென அறிந்தோம். இனி, நாணம் உடையார் தமமை எவ்விதம் உயர்த்திக் கொள்வர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

103-ம் அதிகாரம்.

குடிசெயல்வகை.

(பரி.) *அஃதாவது ஒருவன்றன் பிறந்தகுடியை உயரச்செய்தலின் திறம் இது தாழ்வின்கண் நாணுதலுடையார்களுளதாவதாகலின் நாணுடைமையின் பின் வைகைப்பட்டது.*

விளக்கம்:—அதாவது ஒருவன்தான் எக்குடியில் தோன்றினானே அக்குடியை உயரச் செய்வதற்கு வேண்டிய திறமாகும். நற்குடிப் பிறந்தார்க்குச் செப்பமும் நாணமும் ஆகிய இரண்டும் ஒன்றுக வாய்க்குமென்று குடிமை என்னும் அதிகாரத்தினுள் முதற் றிருக்குறளால் கண்டோம் ஆதலால், இங்கும் அக்குடியினை உயர்த்தவேண்டிய ஒருவன் நாணுடைமை கொள்ளுதல் வேண்டுமெனறு அறிவதற்கு நாணுடைமை கூறிய அதிகாரத்திற்குப் பிறகு குடிசெயல்வகை எனறும் இவ்வதிகாரம் வைக்கப்பட்டுள்ளது என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஒருவன் தன் குடியை உயர்த்தவது அவனுக்கு மிகுதியும் பெருமையை உண்டுபண்ணும் போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1021. கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும் பெருமைபிற் பீடுடைய தில்.

(பரி.) இன்., கருமம் செயக் கைதூவேன் எனனும் பெருமையின்=தனகுடி செய்தற்பொருட்டுத் தொடங்கிய கருமமுடியாமையின் எண்ணியகருமஞ் செய்தற்கியான் கையொழியேனென்னும் ஆள்வினைப் பெருமைபோல —ஒருவன் பீடு உடையது இல்=ஒருவனுக்கு மேம்பாடுடைய பெருமை பிறிதில்லை. எ-று.

குடிசெய்தற்கென்பது அதிகாரத்தான் வந்தது. பலவகைத்தாய கருமச் செயலாற் செல்வமும் புகழுமெய்திக குடியுயருமாகலின், 'பீடுடையதில்' எனறார். குடிசெய்தற் கருமமே நடத்தலால், தன்கருமஞ்செய்யவென்றும பிறர்கருமஞ்செய்யவென்று முரைப்பாருமுளர்; தன்கருமமும் அதுவேயாகலானும, பிறரேவல் செய்தல் நீலைமையன்மையானும், அவை யுரையன்மையறிக. (க)

விளக்கம்:—தன் குடியை உயரச் செய்வதற்காக ஆரம்பித்த தொழிலானது முடியாதுபோமாயின் அவ்விதம் உயரச் செய்வதற்கு

உரியதாகிய தொழிலை 'நான் விட்டுவிடாது செய்து முடிப்பேன்' என்னும் முயற்சியால் வருகின்ற பெருமைபோல ஒருவனுக்கு மேலாகிய பெருமை வேறு ஒன்று இல்லை என்று இத்திருக்குறள் கூறுவதால், தன் குடியை உயர்த்த வேண்டுவான் ஒருவன் பலவித தொழில்களைச் செய்து அத்தொழில்களால் வரும செல்வத்தையும் புகழையும அடைந்து அதனால் குடி உயர வேண்டுமென்றும், அவ்விதம் குடி உயர்வதற்கு எடுத்த காரியங்களை விடாது முயற்சிப்பார் பெருமையே பெருமை என்றார், ஏனையவற்றால் வரும் பெருமை அவ்வித மேலாகிய பெருமை அல்லவென்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஒருவன் தன் குடியை உயர்த்த வேண்டுமாயின் முயற்சி ஒன்று இருப்பின் உயர்ந்திவிடுதல் கூடும்போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1022. ஆள்வினையு மான்ற வறிவு மெனவிரண்டி
னீள்வினையா னீளுங் குடி.

(பரி) இ-ள் ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின் நீள்வினையான்=முயற்சியும் நிறைந்த வறிவுமென்று சொல்லப்பட்ட இரண்டினையுமுடைய இடையறாத கருமச்செயலால்—குடி நீளும்=ஒருவன் குடியுயரும்.

நிறைதல் -இயற்கையறிவு செயற்கையறிவோடுகூடி நிரம்புதல். ஆள்வினை—மடிபுகுதாமற்பொருட்டு. ஆன்றவறிவு—உயர்தற்கேற்ற செயல்களும் அவை முடிக்குந்திறமும் பிழையாமலெண்ணுதற்பொருட்டு. இவையிரண்டு பாட்டானும் அச்செயற்குக் காரணங் கூறப்பட்டது. (உ)

விளக்கம்:—முயற்சி என்றும், நிறைந்த அறிவு என்றும் சொல்லப்பட்ட இரண்டு குணங்களையுமுடைய ஒருவன் நடுவில் விட்டுப் போகாவிதம் எக்காலத்தும் செய்து வருகின்ற தொழிலின் செய்கையால் அவனுடைய குடியானது உயரும் என்று இத்திருக்குறள் கூறுவதால், மேற் கூறியபடி ஒருவன் தன் குடியை உயர்த்துவதற்கு எடுத்த தொழில்களைச் சோம்பலில்லாமல் நடத்தும்வண்ணம் முயற்சிகொண்டிருப்பதுடன் அவ்வித முயற்சிகொண்டு தான்செய்த காரியங்களை முடிக்கின்ற திறத்தையும், முடிப்பதில் கெட்டுப் போகாமல் இருப்பதை எண்ணி எண்ணிச் செய்யும் திறத்தையும் அடைவதற்கு, தனக்குள்ள இயற்கை யறிவோடு செயற்கை அறிவாகிய கல்வி முதலியவைகளும்

வேண்டும் என்று அறிகின்றேம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "குடி உயரச் செய்வதற்குக் காரணம் உணர்ந்தோம். இவ்வித காரணத்தால் எடுத்த தொழிலை முடித்துவிடுதல் கூடியாரின் ஊழுவலி என்பது ஒன்று வேண்டுவதிலையோனும்!" என்னனும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1023. குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வ மடிதற்றுத் தான்முந் துறும்.

(பரி.) இ-ள். குடி செய்வல் என்னும் ஒருவற்கு=என்குடியினியுயரச் செய்யக் கடவேனென்றுகொண்டு அதற்கேற்ற கருமவகளின் முயலும் ஒருவனுக்கு—தெய்வம் மடிதற்றுத தான் முந்துறும்=தெய்வம் ஆடையைத் தற்றுக்கொண்டு தான் முற்றுற நிற்கும். எ-று.

முயற்சியை அதன் காரணத்தாற் கூறினர். தற்றுதல்=இழுகவுடுத்தல். முன்னடப்டார் செயல் நியதிமேலேற்றப்பட்டது. (கு)

விளக்கம்:—'என் குடியின் உயரச் செய்வதே என்னுடைய கடமை' என்று மனத்துட் கொண்டு அதற்கு ஏற்றவாகிய கருமங்களில் முயற்சி செய்யும் ஒருவனுக்குத் தெய்வமானது தான் உடுத்தியிருக்கும ஆடையை அவிழ்த்து போகாவண்ணம் கன்றுக இறுக்கிக் கட்டிக் கொண்டு அப்முயற்சியுடையான் முன்னர் வந்து நிற்கும என்று இத் திருக்குறள் கூறுவதால், முயற்சியுடையவன் ஒருவனுக்கு அவ்வெண்ணத்தை உண்டுபண்ணுவது அவனது ஊழே என்றும, அவ்வூழின் வலியால் எடுத்த கருமம் முடியும் என்றும, முயற்சி என்பது துணைக்காரணமும் ஊழ என்பது முதற் காரணமும் ஆக உள்ளன என்றும், எதற்கும் நியதி என்னும் தெய்வத்தினை வேண்டும என்றும் அறிகின்றேம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் ஊழாகிய தெய்வ முயற்சியைக் கொண்ட ஒருவனது தொழிலை முடிப்பதற்கு அவனுக்கு முன்னே நடந்து செல்லுவதால், அவன் எடுத்த காரியங்கள் பழுதுபடாமல் முடியுமோ?" என்னனும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1024. சூழாமற் றானே முடிவெய்துந் தங்குடியைத் தாழா துஞற்று பவர்க்கு.

(பரி.) இ-ள். தங்குடியைத தாழாது 'உஞற்றுட வர்க்கு=தங்குடிக்காம வினையை விரைந்து முயல்வார்க்கு—சூழாமல் தானே முடிவெய்தும்=அவ்வினை முடிக்குந் திறம அவர் சூழவேண்டாமற்றானே முடிவெய்தும் எ-று.

குடி—ஆகுபெயர். தெய்வமுந்துறுதலாற் பயன்கூறியவாறு. இவை யிரண்டுபாட்டானும் அதற்குத் தெய்வந் துணையாதல் கூறப்பட்டது. (௪)

விளக்கம்:—தமமுடைய குடியை உயரச் செய்வதற்கு ஆகும் தொழிலை விரைவாக முயலவல்லார்க்கு அத்தொழிலை முடிக்கின்ற வல்லமை அவர் ஆலோசியாமலே தானே வந்து முடிவினையடையச்செய்யும் என்று இத்திருக்குறள் கூறுவதால், தெய்வம் முயற்சி செய்பவனுக்குத் துணையாக நிற்குமென்றும், முதற் காரணமாகிய அவ்வூழ் உடையார்க்கு முயற்சியென்னும் துணைக் காரணம் ஒன்றே வேண்டுவது என்றும், தாம செய்து முடிக்கும் தொழிலுக்கு ஆலோசனை முதலியவைகளும் செய்யவேண்டாம் என்றும், அத்தொழில் பழுதுபடாது நடக்கும் என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் குடி உயர முயற்சி செய்வானை உலகோர் எவ்விதம் விரும்புவர்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1025. குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச் சுற்றமாச் சுற்று முலகு.

(பரி.) இ-ள். குற்றம இலனாய்க குடி செய்து வாழ்வானை=குற்றமாயின செய்யாது தன்குடியை யுயரச் செய் தொழுகுவானை—சுற்றமாச் சுற்றும் உலகு =அவனுககுச் சுற்றமாகவேண்டித் தாமே சென்று சூழ்வர் உலகத்தார். எ-று.

குற்றமாயின=அறநீதிகட்கு மறுதலையாய செயல்கள். தாமும் பயனெய்தனோககி யாவருஞ்சென்று சார்வரென்பதாம். (௫)

விளக்கம் :—குற்றந தரக்கூடியனவாகிய காரியங்கள் எவையும் செய்யாது தன்குடி உயரவேண்டிய காரியம ஒன்றினையே செய்து வாழ்கின்ற ஒருவனை உலகத்தார் தாமே சென்று அவனுக்குச் சுற்றமாக இருக்கவேண்டி அவனைச் சூழ்ந்துகொள்ளுவர் என்று இத்திருக்குறள் கூறுவதால், அறத்திற்கும் நீதிக்கும் எதிராகிய பாவத்தையும் அநீதியையும் செய்யாது ஒருவன் அறததோடும நீதியோடும் தன்குடி உயர்வதற்குரிய செல்வத்தையும் புகழையும் கொண்டு வாழ்வானாயின், அவ்வித தகுதியுடையானை உலகத்தவர் 'நாம் இவனுக்குச் சுற்றமாக இருப்பின் இவன அடையும் புண்ணியத்தையும் புகழையும் அடைந்து இம்மை மறுமைப் பயன்களை அடைதல் கூடும்' என்று அவனைச் சுற்றிககொள்ளுவர் என்று அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "குடி

உயரச் செய்வானுக்கு உலகம் யாவும் சுற்றமாகு மென்பதை யறிந்தோம். இவ்வித தகுதியுடையானை உலகோர் சுற்றிக்கொள்ளுவதால் அவர்க்கு இவன் ஏதேனும் செய்தல் கூடுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1026. நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த வில்லாண்மை யாக்கிக் கொளல்.

(பரி.) இ-ள். ஒருவற்கு நல்லாண்மை என்பது=ஒருவனுக்கு நல்ல வாண்மையென்று உயர்த்துச்சொல்லப்படுவது—தான் பிறந்த இல்லாண்மை ஆக்கிக்கொளல்=தான் பிறந்த குடியினையாளுந் தன்மையைத் தனக்குள் தாக்கிக் கோடல். எ-று.

போர்த்தொழிலினீக்குதற்கு 'நல்லாண்மை' என விசேடித்தார். குடியினையாளுந் தன்மை=குடியிலுள்ளாரை யயரச்செய்து தன் வழிப்படுத்தல். அதனைச் செய்துகோடல் நல்லாண்மையாமாறு வருகின்ற பாட்டாற் பெறப்படும். (௬)

விளக்கம்:—தான் பிறந்த குடியினை ஆளும் தன்மையினைத் தனக்கு உள்ளதாக்கிக் கொள்ளுதலையுடைய ஒருவனை நல்ல ஆண்மையுடையவன் என்று உயர்வாக உலகத்தோர் சொல்லுவர் என்று இத்திருக்குறள் கூறுவதால், தன் குடிக்கு ஆவன எவை என்று அறிந்து, செய்யுங்காலத்து அவற்றை எல்லாம் தன்மீதே சுமத்திக்கொண்டு பிறர்க்கு யாதொரு பாரத்தையும் சுமத்தாது தாங்கிக்கொள்ளும் தன்மையுடையானை நல்ல ஆண்மையுடையவன் என்று உலகத்தோர் சொல்லுவர் என்றும், அவன் குடியில் வந்தார்க்கு அவன்செய்யும் துணை அவரை உயரச்செய்வது என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் போரில் வல்லவர்கள் செய்யும் ஆண்மையை ஆண்மை என்றும், இதனை நல்லாண்மை என்றும் விசேடித்துக் கூறியதால், இவனது" நல்லாண்மையை ஓர் உவமை வாயிலாக அறிவித்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1027. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்து மாற்றுவார் மேறறே பொறை.

(பரி.) இ-ள். அமரகத்து வன்கண்ணர்போல=களத்தின்கட்சென்றார் பலராயினும் போர்தாங்குதல் வன்கண்ணர்மேலதானாற்போல;—தமரகத்தும்

பொறை ஆற்றுவார் மேற்றே=குடியின்கட்பிறந்தார் பலராயினும் அதன் பாரீம் பொறுதல் அதுவல்லார் மேலதாம். எ-று.

பொருட்கொக்கவேண்டுஞ்சொற்கள் உவமைக்கண் வருவிக்கப்பட்டன. ன்குமதிக்கப்படுவார் அவரேயென்பதாம். இவை மூன்றுபாட்டானும் அது செய்வாரெய்துஞ் சிறப்புக் கூறப்பட்டது. (எ)

விளக்கம் :—யுத்தகளத்தில் சென்றார் பலராக இருந்தாலும் அக்களத்தில் யுத்தத்தைத் தாங்கிநிற்பது அஞ்சாத நெஞ்சுடையார்க்கே ஆவதுபோல், ஓர் குடியில் பிறந்தவர்கள் பலராயிருந்தாலும் அக்குடியின் பாரத்தைப் பொறுத்துக் கொள்ளுதல் வல்லவர்க்கே யாகும் என்று இத்திருக்குறள் கூறுவதால், புறமுதுகிடாத அஞ்சா நெஞ்சினரொருவனே யுத்தத்தில் முன்னின்று போர் செய்து தன்னையும் தன்னோடு உள்ள ஏனைய வீரரையும் தாங்குவதுபோல், ஒரு குடியில் பலர் தோன்றினும் தோன்றிய அப்பலருள் ஒருவனே தன் குடிக்ய உயர்த்துவதற்கு வேண்டுவன எல்லாம் செய்து அப்பாரம் முழுவதையும் பொறுத்துத் தனக்கும் ஏனையோர்க்கும் புகழையும் புண்ணியத்தையும் உண்டுபண்ணுவான் என்று அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "மேற்கூறிய மூன்று திருக்குறள்களாலும் குடியை உயர்த்துவான் யாவராலும் நன்கு மதிக்கப்படுவான் என்றும், நல்லாண்மை உடையவன் ஆவான் என்றும், அவனுக்குள்ள சிறப்புக்கள் யாவும் அறிந்தோம். இவ்விதம் குடிசெய்வான் காலம் முதலியவற்றைக் கருதிச் சிறிது சோம்பலாக இருப்பானாயின், அதனால் எதுவாகும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1028. குடிசெய்வார்க் கில்லைப் பருவ மடிசெய்து மானங் கருதக் கெடும்.

(பி-ம்.) இ-ள். மடிசெய்து மானம் கருதக் கெடும்=தங்குடியினை யுயரச்செய்வார் அச்செயலையே நோக்காது காலத்தைநோக்கி மடியினைச் செய்துகொண்டு மானத்தையுங் கருதுவாயிற் குடிகெடும்;—குடி செய்வார்க்குப் பருவம் இல்லை=ஆகலான் அவர்க்குக் காலமியதி யில்லை. எ-று.

காலத்தைநோக்கி மடிசெய்தல்=வெயின்மழைபனியென்பனவுடைமை நோக்கிப் பின்னர்ச்செய்து மென்றெழிந்திருத்தல். மானங்கருதுதல்='இக்குடியீனன்னார் யாவரும் இன்பமுற இக்காலத்துத் தன்பமுறுவேன் யானே'

வென்று உட்கோடல். மேல் "இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழு"* தென்றதுட்கொண்டு இவர்க்கும் வேண்டுமோவென்று கருதினும் அது கருதற்கடன்று மறுத்தலாறு. (அ)

விளக்கம் :—தம் குடியினை உயரச்செய்ய எண்ணுவார் தாம் எண்ணிய அச்செயலேயே நோக்காமல் காலத்தைக் கருதியும் சோம்பலைக் கொண்டும் இருப்பதுடன் தம் பெருமையையும் எண்ணிக்கொண்டு இருப்பாராயின் அக்குடி கெட்டுவிடும் என்றும், ஆகலால் குடி செய்ய வேண்டி வென்போர்க்குக் கால அளவு வேண்டுவது இல்லை என்றும் இத் திருக்குறள் கூறுவதால், இது வெயிற்காலம் இது மழைக்காலம் இது பனிக்காலம் என்று கருதித் தாம் செப்பவேண்டிய காரியத்தைப் பின் னர்ச் செய்யலாம் எனறு காலத்தை நோக்கிச் சோம்பல் கொள்ளுதல் கூடாது என்றார், தம்குடியில் உள்ளவர்கள் எல்லாம் இன்பமுற்றிருக் கக் காரம் மாத்திரம் அவர் பொருட்டுத் துன்பமுற்று என் வருந்துதல் வேண்டுமென்று உட்கொள்ளாது தொழில்செய்ய வேண்டுமென்றும், இவ்விதம் செய்யாது சோம்பி யிருப்பின் அக்குடி முழுதும் கெடும் என்றும் அறிந்தோம் என்றனர். அதற்கேட்ட மாணாக்கர், "சோர்ப வுடையார்குடி கெடும் என்று அறிந்தோம். இவ்விதம் குடி உயரச்செய் வான் தன் குடி உயர்வதன் பொருட்டுச் செய்யும் முயற்சியால் உண்டா கும் துன்பங்களுக்கே அவன் உடம்பை ஒழித்து விடுதல் வேண்டும் போலும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1029. இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத் குற்ற மறைப்பா னுடம்பு. [தைக்

(பரி) இ-ள். குடும்பத்தைக் குற்றம் மறைப்பான் உடம்பு=மூவகைத் துன்பமுமற்பால்தாய் தன்குடியை அவையுறாமற்காக்க முயல்வானது உடம்பு—இடும்பைக்கே கொள்கலங்கொல் = அம்முயற்சித் துன்பத்திற்கே கொள்கலமாமத்துணையோ, அஃதொழிந்து இன்பத்திற்காதலில்லையோ! எ-று.

"உறைப்பெய லோலை போல—மறைக்குவன் பெருமகிற்குறித்து வருவேலே"† என்புழியும் மறைத்தல் இப்பொருட்டாயிற்று. என்குடிமுழுது மின்புற்றுயரவே னாளிருமையுமெய்துதலான் இம்மெய் வருத்த மாத்திரம்

* திருக்குறள், 481. † புறநானூறு, 290.

எனக்கு நன்றென்று முயலு மறிவுடையான் அஃதொருஞான்றுமொழி யாமை நோக்கி, 'இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ' என்றார். இது குறிப்பு மொழி. இவையிரண்டுபாட்டானும் அவர் அது செய்யுமியல்பு கூறப்பட்டது. (௯)

விளக்கம்:—மூவகைத் துன்பங்களையும் அடையக் கூடியதாகிய தன்னுடைய குடியை அத்துன்பங்கள் அடையாமல் காக்கும்படி முயற்சி செய்வானுடைய உடம்பானது அம்முயற்சி செய்யும் துன்பத்திற்கே ஓர் இடம்போல் இருப்பதற்குத் தானோ அன்றி அவ்வுடம்பு இன்பத்தினை அடைவதற்கு இல்லையோ என்று இத்திருக்குறள் வினாவுவதால் 'என்குடி முழுவதும இன்பத்தினை அடைந்து உயர்ச்சி அடையுமாயின் நான் இம்மை மறுமையாகிய இரண்டையும் அடைவேனாதலால் என்னுடைய தேகத்திற்கு வரும் வருத்தம் எனக்கு நன்மையேயாகும் தீமையன்று' என்று முயற்சிக்கும் அறிவுடையவன் ஒருவன் அம்முயற்சியினின்றும் ஒருகாலத்தும் ஒழியானாதலால், அவ்வித குடி உயர்ச்சிக்கே தன் தேகத்தைத் தாங்கியவன் எக்காலத்தும் இன்பத்தை யடைவதற்கில்லாது துன்பத்தையே யடைதல்வேண்டியுள்ளது என்று அறிகின்றோம். இதனால், தன்குடியை உயர்த்துவானுக்கு அவன் உள்ளவரையில் துன்பம் வரினும் இன்பமாகவே கொண்டு நிற்பான் என்று அறிந்ததாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாகர், "இவ்விதம் நல்லாண்மை யுடையான் ஒருவன் ஓர் குடியினிடத்து இல்லாத காலத்து அக்குடி என்னாகும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1030. இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்று நல்லா ளிலாத குடி.

(பரி.) இ-ள். இடுக்கண் கால் கொன்றிட வீழும்=துன்பமாகிய நவியம் புகுந்து தன்முதலை வெட்டிச் சாய்க்க ஒருபற்றின்றி வீழாநிற்கும்—அடுத்து ஊன்றும் நல்லாள் இலாத குடி=அக்காலத்துப் பற்றாவனகொடுத்துத் தாங்கவல்ல நல்லவாண்மகன் பிறவாத குடியாகிய மரம். எ-று.

முதல்=அதன்வழிக்குரியார். வளர்ப்பாரைப் பெற்றுழி வளர்ந்து பயன்படுதலும் அல்லாவழிக் கெடுதலுமுடைமையின், மரமாக்கினார் "தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளன்ன—வோங்குகுல நையவதனுட்பிறந்த வீரர் —தாங்கல்கடன்" என்றார் பிறரும். இது குறிப்புருவகம். இதனான் அவரில்லாத குடிக்குளதாங் குற்றங் கூறப்பட்டது. (௰)

விளக்கம் :—தன்பம் புகுந்த காலத்து பற்றச்கோடாலனவற் றைக் கொடுத்துத் தாங்கக்கூடிய நல்ல ஆண்மகன் ஒருவன் பிறவாத குடியானது, கோடரி ஒன்று புகுந்து தன் முதலாகிய அடியினை வெட்டிச் சாய்த்தலும் ஓர்ந்த பற்றுக்கோடும் இல்லாமல் வீழ்ந்துவிடும் மரம்போலாகும் ஏன்று இத்திருக்குறள் கூறுவதால் மரம் ஒன்று வளர்ப்பார் இருப்பாராயின் வளர்த்தவர்க்கும் பிறர்க்கும் வளர்ந்து பயன் படுவதும் அவ்விதம் வளர்ப்பாரில்லாவிடில் கெட்டுப் போத லும் எவ்விதமோ அதுபோல் ஓர் குடியும் பல தன்பங்களால் கெடாவண்ணம் தாங்கக்கூடிய நல்லாண்மை உடைய ஓர் தக்கோனைப் பெறுவிடின் பயன் தராது அடிபோடு அழிந்துபோம் என்று அறிந்த தாயிற்று. இதனால் தனக்கு வரும் தன்பத்தை எல்லாம் பொறுத்துத் தன் குடிச்கு உரியாரைக் காப்பாற்றக் கூடிய ஒருவன் இல்லாவிடில் அக்குடி உயராது என்று கூறியதாயிற்று. இதனை மேல் பரிமேலழகர் குறித்துள்ள சீவக சிந்தாமணி காந்தர்வதத்தையார் இலம்பகம் ஆறாவது செய்யுளாலும் அறிதல் கூடும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "குடியை உயர்த்துவான் செய்கின்ற முயற்சிகளுள் எவ்வித முயற்சி மிகச் சிறந்தது?" என்னவும், ஆசிரியர் கூறுவாராயினர்.

104-ம் அதிகாரம்.

உழவு.

(பரி.) அஃதாவது சிறுபான்மை வாணிகர்க்கும் பெரும்பான்மை வேளா ளர்க்கு முரித்தாய உழுதற்றொழில். செய்விக்குங்கால் வேறோர்க்குமுரித்து. இது, மேற்குடியுயர்தற் கேதுவென்ற ஆன்றோரினவகையாகலின், குடிசெயல் வகையின்பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:—அதாவது, வாணிபம் செய்வோர் சிலருக்கும் வேளா ளர் பலருக்கும் உரியதாகிய உழுதலைச் செய்யும் தொழில். அன்றியும், இவ்விரண்டு வருணத்தார்க்கும் அல்லாமல் மற்றைய வருணத்தாரும் செய்ய முயலுவாராயின் அவருக்கும் உரிய தொழிலேயாகும். இவ்வித தொழில் மேற்கூறிய குடியை உயர்த்தற்குரிய முயற்சிகளுள் சிறந்த தோர் முயற்சியாதலால் அதனை அறிவித்தற் பொருட்டுக் குடிசெயல் வகை என்னும் அதிகாரத்திற்குப் பிறகு இது வைக்கப்பட்டுள்ளது.

இதனால் குடிசெய்தற்கு உழவு சிறந்த முயற்சி என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வுழவு ஒன்று தானே சிறந்த முயற்சியும் சிறந்த தொழிலும் ஆகும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1031. சுழன்றுமேர்ப் பின்னதுலக மதனா லுழந்து முழவே தலை.

(பரி.) இ-ன். சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்=உழுதலான்வரும் மெய்வருத்த நோக்கிப் பிறதொழில்களைச் செய்துநிற்கும், முடிவில் வருடையார் வழியதாயிற்று உலகம்; —அதனால் உழந்தும் தலை உழவே=ஆதலான் எல்லா வருத்தமுற்றும், தலையாய தொழில் உழவே. எ-று.

ஏர்—ஆகுபெயர். பிறதொழில்களாற் பொருளெய்தியவழியும் உணவின் பொருட்டு உழுவார்கட்செல்லவேண்டுதலிற் 'சுழன்று மேர்ப்பின்னதுலகம்' என்றும், வருத்தமிலவேனும் பிறதொழில்கள் கடையென்பது, போதர 'உழந்துமுழவேதலை' என்றும் கூறினர். இதனால் உழவினது சிறப்புக் கூறப்பட்டது. (க)

விளக்கம்:—உழுவதினால் வருகின்ற தேக வருத்தத்தைப் பார்த்து உழுதல் தொழில் நீங்கலாகிய மற்றைய தொழில்களைச் செய்து திரிந்தாலும் முடிவில் ஏர்கொண்டு உழுகின்ற உழவர் வழியில் நிற்பதாகவே உலகம் உள்ளது என்றும், எவ்விதவருத்தத்தை அடைபினும் தலைமாக நிற்கும் தொழில் உழவு என்பதேயாகும் என்றும் இத்திருக்குறள் கூறுவதால் எவ்விதமாகிய தொழிலை எவர் செய்யினும் அத்தொழில்களால் வரும் பொருளைக்கொண்டு பிழைக்கவேண்டிய காலத்தில் தமக்கு வேண்டிய உணவின் பொருட்டாக அவ்வுணவை உழுது பயிரிடுகின்ற வனுகிய உழவனிடத்தே சென்று பெறுதல் வேண்டுமென்றும், ஏனைய தொழில்கள் எத்துணைச் சுலபமாக இருக்கினும் மிகுதியும் தேகத்திற்குத் துன்பத்தைத் தரும் உழவுத்தொழிலே தலைமையாகிய தொழிலென்றும் அறிந்தோம். இதனால் உழவுத்தொழிலே சிறந்தது என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்விதம் மெய்வருத்தம் பாராது செய்கின்ற உழவுத் தொழிலே தலை என்பதை இன்னும் விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1032. உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து.

(பரி) இள் அஃது ஆற்றாது எழுவாரை எல்லாம் பொறுத்து = அவ்வுழுதலைச் செய்யமாட்டாது பிறதொழில்கண்மேற்செல்வார் யாவரையுந் தாங்குதலால், — உழுவார் உலகத்தார்க்கு ஆணி = அதுவல்லார் உலகத்தாராகிய தேர்க்கு அச்சாணியாவர். ௨-று.

"காடுகொன்று நாடாக்கிக் குளந்தொட்"* டென்றாற்போல உழுவாரென்றது உழுவிப்பார்மேலுஞ் செல்லும். உலகத்தாரென்றது ஈண்டிவரையொழிந்தாரை. கலங்காமலிறுத்தற்கண ஆணிபோறலின், 'ஆணி' என்றார். பொறுத்தலானென்பது திரிந்துநின்றது ஏகதேசவுருவகம் அஃதாற்றார் தொழுவாரேயெல்லாம் பொறுத்தென்று பாடமோதி, அதுமாட்டாதார் புரப்பார்செய்யும் பரிபவமெல்லாம் பொறுத்து அவரைத் தொழுவாரேயாவரென்றுரைப்பாரு முளர். (உ)

விளக்கம்:— அவ்வுழவுத் தொழிலைச் செய்வதற்குத் தம்மால் முடியாமல் அது நீங்கலாக வேறு தொழில்களை மேற்கொண்டு செல்லுகின்றவர்கள எல்லோரையும் தாங்கி நிற்பதால், அவ்வித உழவுத் தொழிலில் வல்லவர்களாய் உள்ளவர்கள் உலகத்தாராகிய தேரினுக்கு அச்சாணி போல் இருக்கின்றனர் என்று இத்திருக்குறள் கூறுகின்றது. ஆகவே, தேகவருத்தம் நோக்கி உழுதல் தொழிலைச் செய்யாது வேறு தொழில்களில் சென்று நிற்பார்க்கு உணவுப் பொருளைத் தந்து உயிர் வாழ்தலில் கலக்கம் அடையாமல் இருக்கும் வண்ணம் செய்கின்ற உழுதல் தொழிலைச் செய்பவரும் பிறரைக்கொண்டு உழுவித்தலாகிய தொழிலைச் செய்கின்றவரும தேரைத் தாங்கிநிற்கும் அச்சாணிபோல் இருக்கின்றனர் என்று அறிகின்றோம். உழவுத் தொழிலைத் தாமே செய்து வாழ்பவரை உழுவார் என்றும், தம் செல்வ மிகுதியால் தாம அத்தொழிலைச் செய்யாது பிறரைக்கொண்டு உழுவித்து வாழ்பவரை உழுவிப்பார் என்றும், வேளாளரிலும் இருவிதமாகிய வேளாளர் உண்டு என்பதைத் தொல்காப்பியம் பொருளதிகாரம அகத்திணையியல் இருபதனொன்பதாவது சூத்திரம் "மேலோர் முறைமை நால்வர்க்கும உரிததே" என்பதனாலும் காணுதல்கூடும். இதனால், உழுதல் தொழிலே சிறந்த தொழில் என்றும், ஏனைய தொழில்கள் தொழில்களாகாவென்றும் பிரித்துக் காட்

* பட்டினப்பாலை.

டியதாழிற்று வென்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஏனைய தொழில்கள் தொழில்களாதா வென்பதை விளக்கல் வேண்டும்" என்னவும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1033. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந் தொழுதுண்டு பின்செல் பவர்.

(பரி.) இன். உழுது உண்டு வாழ்வாரே வாழ்வார்=யாதொரு முண்ணும் வகை உழுதலேச்செய்து அதனுற்றாமுமுண்டு வாழ்கின்றாரே தமக்குரியராய் வாழ்கின்றவர்;—மற்றெல்லாம் தொழுது உண்டு பின்செல்பவர்=மற்றை யாரெல்லாம் பிறரைத்தொழுது அதனுற்றாமுண்டு அவரைப் பின்செல்கின் றவர். எ-று.

மற்றென்பது வழக்குப்பற்றி வந்தது தாமும் மக்கட்பிறப்பினராய் வைத் துப் பிறரைத்தொழுது அவர் சிலதொடுப்பத் தம்முயிரோம்பி அவர்பின்செல் வார் தமக்குரியரல்லரென்பது கருத்து. (கூ)

விளக்கம் :—உலகத்தில் உள்ளார் யாவரும் உண்டு பிழைக்கும் விதம் உழுதல் தொழிலைச் செய்து அதனில் தாமும் உண்டு பிழைத்து வாழ்கின்ற மக்களே தம் சுதந்திரத்திற்கு உரியவராய் வாழ்கின்றவர் என்றும், அவ்விதம் உழுதல் தொழிலைச் செயாது வேறு தொழில் களைச் செய்பவர் மற்றவரை வணங்கித் தொழில் செய்து அத்தொழி லால் தாம் மாதாந்திரம் உண்பதுடன் தம்மைத் தொழிலாளராகக் கொள் ளுகின்ற கூலிவர்க்கும் பின் செல்பவராயும் உள்ளனர் என்று இத்திருக் குறள் கூறுவதால், மக்கட் பிறப்பில் தாமும் ஒருவராய் இருந்தும் பிற ரை வணங்கி அவர் ஏவிய தொழிலைச் செய்து அத்தலைவர் ஏதேனும் சில கொடுத்தலால் தம்முடைய உயிரைக் காத்துக் கைகட்டி வாய் பொத்தி அவர் நிழலை மிதிப்பாது அவருக்குப் பிறகே செல்லுகின்ற மக்கள் சுதந்தரத்தோடு வாழ்வதற்கு உரியரல்லர் என்றும், தமக்கு உரிய உழவுத் தொழிலைச் செய்து சுதந்தரத்தோடு தாமும் வாழ்ந்து உலகத் தாரையும் உண்பித்து அவரையும் வாழச் செய்பவரே மக்கட் பிறப்பின ராய் வாழ்பவர் என்றும் அறிகின்றோம். ஆதலால், உழுதற்றொழிலே நற்றொழில் என்பதை நன்றாகக் கண்டோம்' என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வுழவினர், உலகத்தினரைக் காப்பர் என்றமையால் உலகைக் காக்கும் அரசனையுங் காக்க வல்லரோ?" என்னவும், ஆசிரி யர் கூறுவாராயினர்.

1034. பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்ப
ரலகுடை நீழ லவர்.

(பரி.) இ-ள். அலகு உடை நீழலவர் = உழுதற்றொழிலான் நெல்லினை யுடையராய தண்ணளி யுடையோர்—பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர் = பலவேந்தர் குடைநிழலாதாய மணமுழுதினையுந் தம்மரசன் குடைக் கீழே காண்பர். எ-று.

அலகு = கதிர்; அஃதீண்டாகுபெயராய் நென்மேலதாயிற்று. உடைய வென்பது குறைந்துநின்றது. நீழல்போலின், நீழலெனப்பட்டது நீழலவ ரென்றது இரப்போர்க்கெல்லாம் ஈதலேக்கி. ஒற்றுமைபற்றித் 'தங்குடை' என்றார். குடைநீழலென்பதூஉம் ஆகுபெயர். "ஊன்று சான் மருங்கி னீண்ட தன் பயனே"* என்றதனால் தம்மரசனுக்குக் கொற்றமபெருக்கி மண்முழு தும அவனதாகக்கண்டிருப்பரென்பதாம்; "இரப்போர்சுற்றமும் புரப்போர் கொற்றமு முழவிடை விளைப்போர்"† என்றார் பிறரும். (சு)

விளக்கம் :— உழுதற்றொழிலால் நெல்லினை உடையவராய அருளுடையோர் தம் வேந்தரல்லாத மற்றைய வேந்தர்களால் ஆளப்பட்ட பூமி முழுவதையும், தம் வேந்தர் ஆளுகையின் கீழ் இருக்குமாறு படிச் செய்வர் என்று இக்குறள் கூறுவதால், உழுவர் தம் தொழிலை நன்றாகச் செய்து அதனால் வந்த உணவுக்குரிய நெல்லினை மிகுதியும் பெற்றிருப்பாராயின், அவ்வருவாயைக் கொண்டு தம் அரசன் மிகப் பொருள் படைத்தவனாகி ஏனைய அரசர்களை யெல்லாம் பெருநிலப் பரப்பால் வென்று அவ்வரசர்களால் ஆளப்படும் நாடுகளையும் தன்னுடையவாக்கிக் கொள்ளச்செய்தலாலும், அன்றியும், யாசிப்போர்க்கெல்லாம் ஈதல் தொழிலைச் செய்து வறுமை என்னும் வெயிலால் வருந்துகின்ற அவரைத் தம் கொடை எனும் நீழலில் இருத்தி நிலை நிறுத்தலாலும், உரையாசிரியர் சிலப்பதிகாரம் நாடுகாண் காதையினுள் எடுத்துக் காட்டிய உதாரணத்தின் வண்ணம் இரப்போர்க்குச் சுற்றமா யும் புரப்போராகிய அரசர்க்கு வெற்றியுமாயும் இருப்பவர் உழவரே என்று அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் அரசர்க்கு வெற்றியும் இரப்போர்க்குச் சுற்றமுமாக உள்ள இவ்வுழவர் எவரிடத்தும் யாதொன்றினையும் யாசிக்க மாட்டாரோ" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

* புறநானூறு, 35. † சிலப்பதிகாரம், நாடுகாண் காதை, 149.

1035. இரவு ரிரப்பார்க்கொன் றிவர் கரவாது கைசெய்தூண் மாலை யவர்.

(பரி.) இ-ள். கைசெய்த ஊண் மாலையவர் இரவார்=தங்கையாலுழை தூண்டலே யியல்பாகவுடையார் பிறரைத் தாமிரவார்;—இரப்பார்க்கு ஒன்று கரவா ரவர்=தம்மை யிரப்பார்க்கு அவர்வேண்டியதொன்றீனைக் கரவாது கொடுப்பர். எ-று.

செய்தென்பதற்கு உழுதலேயென வருவிக்க. கைசெய்தூண் மாலையவ ரென்பது ஒருஞான்றும் அழிவில்லாத செல்வமுடையரென்னும் வதுவை யுட்கொண்டு நின்றது. (இ)

விளக்கம்:—தம்முடைய கையால் உழுதல் தொழிலைச் செய்து உண்ணுதலைத் தமக்கு இயற்கையாக உடையவர்கள் தாம் பிறரிடம் சென்று இரக்கமாட்டார்களென்றும், ஆனால், தம்மிடத்து வந்து இரப்ப வர்க்கு அவர் வேண்டியதெதுவோ அதனை ஒளிக்காது கொடுப்பர் என்றும் இத்திருக்குறள் கூறுவதால், மெய் வருத்தம் நோக்காது பருவ மறிந்து உழுதற்றொழிலைச் செய்து அதனால் வந்த, அழிவில்லாத செல் வத்தை உடையவர் எக்காலத்தும் எவரிடத்தும் எப்பொருளையும் சென்று யாசியார் என்றும், ஆனால் தம்மிடத்தே வந்தவர் எவர்க்கும் எக்காலத்தும் எப்பொருளையும் இல்லை என்னாது கொடுப்பர் என் றும் அறிகின்றோம். இதனால் உழவினர் எக்காலத்தும் இழிவாகிய யாசகத்தைச் செய்யமாட்டார் என்பதாயிற்று. அதுகேட்ட முனிவர்கள், "இவ்வுழவர் அரசன் முதல் யாசகன் வரையில் தாங்குவார் என்று அறிகின்றோம். ஆயின், வேந்தனும் தருமம்பாக எண்ணுகின்ற தானவி என்பானுக்கு ஏதேனும் இவரால் உதவி உண்டாகுமோ?" என்ன, ஓம், ஆசிரியர் கூறுவாராயினர்.

1036. உழவினர் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம் விட்டேமென் பார்க்கு நிலை.

(பரி.) இ-ள். உழவினர் கை மடங்கின=உழுதலையுடையார் கை அதனைச்செய்யாது மடங்குமாயின்;—விழைவதூஉம் விட்டேம் என்பார்க்கு நிலை இல்லை=யாவரும் விழையுமுணவும் யாம் தருந்தேமென்பார்க்கு அவ்வறத் தின்கணிற்றலுமுளவாகா. எ-று.

உம்மை இறுதிக்கண்ணும் வந்தியைந்தது. உணவின்மையால், காமுண்டலும் இல்லறஞ்செய்தலும் யாவர்க்கு மில்லையாயின, அவருறப்புமாத்திரமாகை வானாளிருப்பின் உலகத்து இம்மை மறுமை வீடென்னும் பயன்கள் நிகழாவென்பதாம். ஒன்றினை மனத்தால் விழைதலு மொழிந்தேமென்பார்க்கென வுரைப்பாரு முளர். இவையைந்து பாட்டானும் அதனைச் செய்வாரது சிறப்புக் கூறப்பட்டது. (கூ)

விளக்கம் :—உழுதல் தொழிலைச் செய்பவர் கையானது அத் தொழிலைச் செய்யாது இருக்குமாயின், எல்லாராலும் விரும்பப்படுதிற் உணவினையும் நாம் துறந்துவிட்டோம் என்று சொல்லுகின்ற துறவறத்தின்கண் நிற்கின்ற துறவிகளுக்கும் அவர் செய்யும் துறவறமானது கடவாது என்று இதனிருக்குறள் கூறுவதால், இல்லறஞ் செய்வார்க்கு உரியதாகிய உண்டலும் இல்லறஞ் செய்தலும் இல்லையானால் எல்லாவற்றையும் விட்டு நிற்கின்ற துறவியும் தான் கொண்ட விரதத்திற்குரிய வேள்வி முதலியவற்றைச் செய்தற்கு முடியாது என்றும், உழவன் உறுப்புகளில் கை ஒன்றுமாத்திரம் வேலைசெய்யாது கும்மா இருக்குமாயின் உலகத்தார் இம்மை மறுமை வீடு என்னும் மூன்றின் பயன்களை அடையமுடியாது என்றும் அறிகின்றோம். இதனால் துறவிக்கும் உழவனது தொழிலே காவல் என்றதாயிற்று. அது கேட்ட மாணாக்கர், "இதுவரையும் அவ்வுழவுத் தொழிலைச் செய்பவருடைய சிறப்பினை அறிந்தோம். இனி, அவ்வுழவுத் தொழிலைச் செய்யும் விதத்தையும் அறிய விரும்புகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்

1037. தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும் வேண்டா தாகப் படும்.

(பரி.) இ-ள். தொடிப்புழுதி கஃசா உணக்கின்=ஒரு நிலத்தினை உழுதவன் ஒரு பல்புழுதி கஃசாம்வண்ணம் அதனைக் காயவிடுவனுயின், பிடித்து எருவும் வேண்டாது சாலப் படும்=அதன்கட்செய்த பயிர் ஒரு பிடியின்கணடங்கிய எருவிடவேண்டாமற் பலனைத்து விளையும். எ-று.

பிடித்து=பிடியின்கண்ணது. பிடித்தவென்பதன் விகாரமென்பாரு முளர். வேண்டாமல், சான்று என்பன திரிந்துநின்றன. (எ)

விளக்கம் :—ஒரு நிலத்தினை உழுத ஒருவன் அந்நிலத்தில் உள்ள ஒரு பலம் என்கின்ற எடையுள்ள புழுதியை ஒரு கஃசு

என்னும் எடையளவாக ஆகும்வரையில் அதனைக் காய விடுவானுயின், அவ்விதம் காயவிட்ட அப்புழுதியில் செய்த பயிரானது ஒரு கைப் பிடியினுள் அடங்கிய எருவும் இடாமலே நன்றாகக் களைத்து வீளையும் என்று இத்திருக்குறள் கூறுவதால், நிலத்தைப் பயிரிடுபவன் ஒருவன் தன் நிலம நன்றாக வீளையவேண்டுமாயின் பலமுறை உழுதல் வேண்டும என்றும், அவ்விதம உழுவதால் புழுதியானது நாளுக்குநாள் உழுந்தோறும் உழுந்தோறும் காய்ந்து பதப்படுமென்றும், அவ்விதம் பதப்பட்ட நிலத்தில் புல் பூண்டுகள் இல்லாது பயிரே மூளைத்துத் தழைத் நுப் பலன்தரும் என்றும், அவ்வித நிலத்திற்கு எருவும் இடுதல்வேண் டாம் என்றும் அறிகின்றோம என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ் விதம் உழுவதோடு எருவினையும் இடுவானுயின் நன்மையாகாதோ ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்

1038. எரினு நன்று லெருவிடுதல் கட்டபி னீரினு நன்றதன் காப்பு.

(பரி.) இ - ள். எரினும் எரு இடுதல் நன்று = அப்பயிர்க்கு அவ்வுழுதலி னும் எருப்பெய்தல் நன்று;—கட்டபின் அதன்காப்பு நீரினும் நன்று = இவ் விரண்டுஞ் செய்து களைகட்டால் அதனைக் காத்தல் அதற்கு நீர்கால்யாத் தலினு நன்று. எ - று.

எர் — ஆகுபெயர். காத்தல் = பட்டிமுதலியவற்றுன் அழிவெய்தாமற்காத தல். உழுதல், எருப்பெய்தல், களைகட்டல், நீர்கால் யாத்தல், காத்தலென்றிம் முறையவாய இவ்வைந்தும் வேண்டுமென்பதாம். (அ)

விளக்கம்:—அவ்விதம் களைத்துவீளையும் அப்பயிருக்கு மேற் கூறிய உழுதல் தொழிலினும் எருவிடுதல் நன்மை உடையது என்றும் உழுதலேயும் எருவிடுதலேயும் செய்து அப்பயிரினைக் களை பறிப்பதால் உண்டாகும் நன்மையானது அப்பயிருக்கு ஜலம் பாய்ச்சிக் காப்பதி னும் நன்மையுடையது என்றும் இத்திருக்குறள் கூறுவதால், பயிரிடு வோன் உழுதற்றொழிலும், எருவிடுதலும், களை பிடுங்குதலும், ஜலம் பாயும் கால்களை வெட்டி ஜலமுடையங்கச் செய்தலும், பிறகு பட்டிமாடு முதலியவைகளால் பயிர் அழியவொட்டாமல் காத்தலும் ஆகிய இவ் வைந்து காரியங்களேயும் முறையாகவே செய்து முடிக்க வேண்டுமென் றும் அறிந்தோம். இதனுல் இவ்வைந்தனுள்ளும் ஒன்று குறையுமாயினும்

பயிரானது பலன்தாராது என்பதாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் உழுது பயிரிடுகின்ற ஒருவன் தானே தன் நிலத்தில் சென்று பார்த்தல வேண்டுமோ? அன்றி ஏவலாளர் பார்ப்பது போதுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1039. செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும்.

(பரி.) இ - ள். கிழவன் செல்லான் இருப்பின் = அந்நிலத்திற்குரியவன் அதன்கணாடோறுஞ் சென்று பார்த்து அடுத்தனசெய்யாது மடிந்திருக்குமாயின்,—நிலம் இல்லாளிற் புலந்து ஊடிவிடும் = அஃது அவனில்லாள் போலத் தன்னுள்ளே வெறுத்துப் பின்னவனோடுடிவிடும். எ-று.

செல்லுதல்—ஆகுபெயர். பிறரை யேவியிராது தானேசேறல்வேண்டுமென்பதுபோதரக் 'கிழவன்' என்றார். தன்கட்சென்று வேண்டுவன செய்யாது வேறிடத்திருந்தவழி மனையாளூடுமாறு போலவென்றது அவன் போகமிழத்தனோக்கி. இவை மூன்று பாட்டானும் அது செய்யுமாறு கூறப்பட்டது. (௬)

விளக்கம்:—நிலத்திற்குரிய தலைவன் ஒருவன் அவன் நிலத்தினிடத்தே நாள்தோறும் போய்ப் பார்த்துச் செய்யவேண்டுவனவற்றைச் செய்து முடிக்கானாயின், அந்நிலமானது அவன் மனைவியைப் போல் வெறுத்து அவனோடு சிறு பிணக்குக்கொள்ளும் என்று இத்திருக்குறள் கூறுவதால், நிலத்திற்குரியான் ஒருவன் மற்றவர்களை ஏவித் தொழிலைச் செய்யாமல் தானே சென்று பார்த்துச் செய்யவேண்டுவனவற்றை ஒன்றின்பின் ஒன்றாக முறையோடு செய்தல்வேண்டும் என்றும், அவ்விதம் செய்யாவிட்டால் கணவன் ஒருவன் தன்னோடு இருந்து தனக்கு வேண்டியவைகளைச் செய்யாமல் பரத்தையர் முதலியோரிடத்திலிருந்து இன்பந் துய்ப்பானாயின், அவன் மனைவியானவள் அவனை வெறுத்துக் கோபித்துக்கொண்டு அவனுக்குப் போகத்தைக் கொடாதது போல் இதுவும் போகம் என்னும் விளைவினைத் தாராது என்று அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "உழவன் ஒருவன் செய்யும் விதம் இவை என்று அறிந்தோம்; ஆயின் நிலத்தைத் தன் மனைவிபோல் காப்பாற்றாத ஒருவன் தான் அடையவேண்டிய பயனை அடையாது போவதால் அவனுக்கு எவ்வித குற்றமுண்டாகும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்

1040. இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி
னிலமென்னு நல்லா ணகும்.

(பரி.) இ-ள். இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்=யாம் வறியேமென்று சொல்லி மடிந்திருப்பாரைக் கண்டால்,—நிலம் என்னும் நல்லாள் நகும்=நிலமகளென்று உயர்த்துச் சொல்லப்படுகின்ற நல்லாள் தன்னுள்ளே நகாநிற்கும். எ-று.

உழுதன்முதலிய செயவாக யாவாக்குஞ் செல்வங்கொடுத்துவருகின்றவாறு பற்றி 'நல்லாள்' என்றும், அதுகண்டுவைத்தும் அதுசெய்யாது வறுமையுறுகின்ற பேதைமைபற்றி 'நகும்' என்றுங் கூறினார். இரப்பாரையென்று பாடமோதுவாரு முளர். இதனான் அது செய்யாதவழிப்படு மிழுக்குக் கூறப்பட்டது. வருகின்ற வதிகாரமுறைமைக்குக் காரணமுமிது. (௰)

விளக்கம் :—யாம வறியவராக உள்ளோம் என்று சொல்லித் துன்பப்படுகின்றவரைக் கண்டால் நிலமகளென்று உயர்ந்தோரால் சிறப்பாகச் சொல்லப்படுகின்ற நல்லவள் தனக்குள்ளேயே தான் சிரித்துக் கொண்டிருப்பள் என்று இத்திருக்குறள் கூறுவதால், மேற்கூறிய விதம் உழுதல் முதலிய செயல்களைச்செய்து நிற்கின்ற உழவர்க்குப் பலவித செல்வங்களையும் கொடுத்து வருகின்ற நிலம என்னும் செல்வியானவள் அது பார்த்திருந்தும் அத்தொழில்களைச் செய்யாது தரித்திரத்தையடைகின்ற பேதையரைக் கண்டால் சிரிப்பாள் என்று அறிகின்றோம். அதாவது, உழவன் ஒருவன் தன் தொழிலைச் சரியாகச் செய்யாத விடத்து வறுமையை அடைவானேயன்றிச் செய்தவிடத்து எல்லாச் செல்வமும் அடைவான் என்றதாயிற்று. அன்றியும் இனிமேல் வருகின்ற நல்குரவு என்னும் அதிகாரத்தாலும இதனை அறிதல் கூடும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "நல்குரவு என்பதையும் விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

105. அதிகாரம்.

நல்குரவு.

(பரி.) அஃதாவது நுகரப்படுவன யாவுமில்லாமை.

விளக்கம்:—அதாவது, உண்பனவாகிய பொருள்கள் யாவும இல்லாதிருத்தல். மேல் அதிகாரத்தின் கடையினுள் கூறிய வறுமை என்பது ஆகும என்றனர்.

1041. இன்மையி னின்னுத தியாதெனி னின்மையி னின்மையே யின்னு தது.

(பரி.) இ-ள். இன்மையின் இன்னுதது யாது எனின்=ஒருவனுக்கு மறுமைபோல வின்னுதது யாதென்று வினவின்,—இன்மையின் இன்னுதது இன்மையே=மறுமைபோல வின்னாது மறுமையே, பிறிதில்லை. எ-று.

இன்னுதது=துன்பஞ்செய்தது. ஒப்பதில்லையெனவே, மிக்கதின்மை சொல்லவேண்டாவாயிற்று. (க)

விளக்கம்:—ஒருவனுக்குத் தரித்திரத்தைப்போலத் துன்பஞ்செய்யக் கூடியது எது என்று வினவுவோமாயின், தரித்திரத்தைப் போலத் துன்பம் தருவது தரித்திரமே யாகும் என்று இத்திருக்குறள் கூறுவதால் தரித்திரம் என்பது உலகத்துள் மக்கள் அடையும் துன்பங்களுள் துன்பமாக உள்ளது என்றும், அதற்குச் சமானமாகிய துன்பமோ மேலுகிய துன்பமோ இல்லை என்றும் அறிகின்றோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "தரித்திரமானது ஒருவனிடத்து வந்தால் அவனுக்கு இம்மையில் உண்டாகும் இன்பம் என்பது இல்லாமல் துன்பமே வரும் போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1042. இன்மை யெனவொரு பாவி மறுமையு மிம்மையு மின்றி வரும்.

(பரி.) இ-ள். இன்மையென ஒருபாவி=மறுமையென்று சொல்லப்படுவதொருபாவி—மறுமையும் இம்மையும் இன்றி வரும்=ஒருவனுழை வருங்கால் அவனுக்கு மறுமையின்பமும் இம்மையின்பமுமில்லையாக வரும். எ-று.

இன்மையென வொருபாவி' என்பதற்கு மேல் "அழுக்காறெனவொரு பாவி"* யென்புழி யுரைத்தாங்குரைக்க. மறுமை இம்மையென்பன ஆகுபெயர். சாமையையானும் நுவ்வாமையானும் அவையிலவாயின. இன்றிவிடுமென்று பாடமோதிப் பாவியாலென விரித்துரைப்பாரு மூளர். (உ)

விளக்கம்:—தரித்திரம் என்று சொல்லப்படும் ஒருபாவி, ஒருவனிடத்தே வருங்காலத்து அவனுக்கு மறுமையில் உண்டாகும் இன்பமும் இம்மையில் உண்டாகும் இன்பமும் ஆகிய இரண்டும் இல்லாதபடி வரும் என்று இத்திருக்குறள் கூறுவதால், தரித்திரமானது இம்மையில்

* திருக்குறள், 168.

அடையவேண்டிய உன்பன முதலியவற்றைச் செய்து இன்பம் அடைவதற்கும் பிறர்க்குக் கொடுத்துப் புகழை அடைவதற்கும் இல்லாமற் செய்வதால் இம்மை இன்பத்தை அடைவதற்கில்லை என்றும், அதுவன்றியும் அறத்தைச் செய்வதற்கு முடியாமற் செய்வதால் மறுமை இன்பத்தையும் அடைவதற்கு இல்லை என்றும் அறிகின்றோம். இவ்வித கொடுமையை உண்டுபண்ணும் தரித்திரத்தைப் பாவி என்றும் அழைத்தனர். இதுபோன்றே தன்பந்தைத் தரும் அழுக்காற்றினையும் பாவி என்று அழைத்ததை நாற்பது அறுபத்தெட்டாவது திருக்குறளில் காணுதல் கூடும். இதனால் மேல் வினவிபபடி தரித்திரம் இம்மைப் பயனே மாத்திரம் அல்லாமல் மறுமைப் பயனையும் போக்கிவிடும் என்ற தாயிற்று என்றனர். அதிகேட்ட மாணாக்கர், "இத்தரித்திரத்தால் ஒருவனுக்கு மேலாகிய குடிப்பிறப்பும் காழ்வுபடும் போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1043. தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகைபோக நல்குர வென்னு நசை.

(பரி.) இ-ள். நல்குரவு என்னும் நசை=நல்குரவென்றுசொல்லப்படுமாசை—தொல் வரவும் தோலும் தொகையாகக் கெடுக்கும்=தன்னுற்பத்திறப்பட்டாருடைய பழைய குடிவரலினையும் அதற்கேற்ற சொல்லினையும் ஒருங்கே கெடுக்கும். எ-று.

நசையில்வழி நல்குரவுமில்லையாகலின் நல்குரவையே நசையாக்கி, அஃது அக்குடியிற்பிறல்லோர்க் கில்லாத இழிதொழில்களையும் இழிவந்த சொற்களையுமுளவாக்கலான் அவ்விரண்டனையுமொருங்கு கெடுக்குமென்றார்: "குடிப்பிறப் பழிக்கும் வீழுப்பங் கொல்லும்"* என்றார் பிறரும். தோலாவது "இழுமென் மொழியால் விழுமியத நவறல்"† என்றார் தொல்காப்பியனாரும். இதற்கு உடம்பென்றுரைப்பாரு முளர்; அஃதற்குப் பெயராயினும் உடம்பு கெடுக்குமென்றற்கோர் பொருட்சிறப்பில்லாமை யறிக. (கூ)

விளக்கம்:—தரித்திரம் என்று சொல்லப்படுகின்ற ஆசையானது ஒருவனுக்குத் தன்னுடைய பழைய குடிப்பிறப்பினையும், அக்குடிக்கு ஏற்ற புகழுக்குரிய சொல்லினையும் ஆகிய இரண்டினையும் ஒருங்காகவே

* மணிமேகலை, பாத்திரம் பெற்ற காதை, 11.

† பொருள், செய்யுளியல், 239.

கெடுத்துவிடும் என்று இத்திருக்குறள் கூறுவதால், எவனொருவனுக்குத் தன்னுடைய தரித்திரத்தால் பொருள்மீது ஆசை பள்ளதோ அவன் அப் பொருளாசையை நிரப்புவதற்குப் பல இழிந்த தொழில்களையும் செய்ய நேருமாதலால் அதைக்கண்ட ஏனையோர் 'உயர்குடிப் பிறந்தானெனிய இவன் தன் குடிக்கு அடாதகாரிய இழிதொழில்களைச் செய்து பொருள் தேட முயலுகின்றனன் இவ்வித்தம் இவன் செய்வதால் இவனது நற்குடிப் பிறப்பும் தாழ்ந்ததாயிற்று. அன்றியும் இவன் முன்னோர்களது பெரும் புகழையும் கெடுக்கின்றனன்' என்று சொல்லும இழிவினையும் தரித்திரமானது உண்டாக்கிவிடும் என்றும், இதனால் தரித்திரம் என்பது மேற் கூறியபடி இம்மை மறுமையாகிய இரண்டையுங் கெடுப்பதுடன் தன்னுடைய நற்குடிப் பிறப்பினையும் தன் மூதாதையர்க்கிருந்த புகழினையும் கெடுக்கும் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "நற்குடிப் பிறந்தாலுக்கும தரித்திரம் இழிவினை உண்டுபண்ணுமோ ?" என்னலும், அதிகாரியர் கூறுவாராயினர்.

1044. இற்பிறந்தார் கண்ணேயு மின்மை யிளிவந்த சொற்பிறக்குஞ் சோர்வு தரும்.

(பரி.) இ-ள். இற்பிறந்தார் கண்ணேயும்=இளிவந்த சொற்பிறவாத குடிப்பிறந்தார் மாட்டேயும்—இளிவந்த சொற் பிறக்கும் சோர்வு இன்மை தரும்=அது பிறத்தற்கேதுவாகிய சோர்வினை கல்குரவு உண்டாக்கும். எ-று.

இறப்பும்மை அவர்மாட்டு அது பிறவாமை தேன்ற நின்றது. இளிவந்தசொல்=இனிவருதற் கேதுவாகியசொல் ; அஃதாவது எக்காலத்தும் பிறப்பினை மறந்து அது சொல்லுவதற்கு நினைத்தல். (க)

விளக்கம்:—இழிவினைத் தருகின்ற சொல் என்பதே ஒருகாலத்தும் உண்டாகாத நல்ல குடியில் பிறந்தவர்களிடத்தும் அவ்விழிவாகிய சொல் உண்டாவதற்குக் காரணமாகிய மறதியினைத் தரித்திரம் என்பது உண்டாக்கும் என்று இத்திருக்குறள் கூறுவதால், நற்குடிப்பிறந்தான் ஒருவனும் தன்னுடைய தரித்திரத்தினால் உண்டாகும் மிகுந்த துன்பத்தைக் கருதித் தன்னுடைய பிறப்பின் உயர்வினையும் மறந்து யாசிக்கக் கூடாத இடங்களிலெல்லாம் சென்று தன் தரித்திரம் நீங்குவதற்கு ஏதேனும் உண்ணவும் உடுக்கவும் தருதல் வேண்டும் என்று கேட்பான் என்

மை, அதனால் தரித்திரமானது எவ்விதத் தொழிலையாவது சோர்வடையச் செய்யும் என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் நற்குடிப் பிறந்தானுக்கு இழிவு வருமபடிச் செய்யும் தரித்திரமானது இன்னும், எவ்விதமாகிய துன்பங்களை அவனுக்கு உண்டுபண்ணும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்

1045. நல்குர வென்னு மிடும்பையுட் பல்லூரைத் துன்பங்கள் சென்று படும்.

(பத.) இ-ள் நல்குரவு என்னும் இடும்பையுள்—நல்குரவென்று சொல்லப்படுகின்ற துன்பமானது நிலைபெற்றிருப்பதனுள்ளே—பல துன்பங்கள் சென்றுபடும்—பல துன்பங்களும் வந்து விளையும். (அ)

(விசேடவுரை) தரித்திரமானது, முன்பழகினாலும் முடனே பிறந்ததன் நல்குரவைத் துன்பமாக்கியும், அத்துன்பமடையிச் செல்வர்களுடனாகிய சேரற்றுன்பமும், அவரைக்காண்டற்றுன்பமும், கண்டான் மறுத்தழி நெறுநர் துன்பமும், மறுவழியும் அவர்கொடுத்தது வார்கற்றுன்பமும், அதனைக்கூட்டற்றுன்பமுமுதலாகிய பாடோறும் வேறுவேறுக வருதலின் எல்லாத்துன்பங்களு மூளவாமென்றுங் கூறினர். இவையைந்துபாட்டானும் நல்குரவின் கொடுமை கூறப்பட்டது. (இ)

விளக்கம்:—தரித்திரம் என்று சொல்லப்படுகின்ற துன்பம் ஒன்றினாலேயே பலவித துன்பங்களும் உண்டாகிவிடும் என்றும் இத்திருக்குறள் கூறுவதால், தரித்திரத்தை யடைந்த ஒருவன் தனக்கு உணவு முதலியவை இல்லாமையால் அத்துன்பத்தை நீக்குகியை நோக்கிச் செல்வரிடத்துச் சென்று நின்று அவரைப் பார்ப்பதற்கு முடியாமை லிருப்பதும், ஓர் கால் பார்க்கினும் கொடுப்பதற்குச் செல்வத்தர் மறுப்பதும், ஓர் கால் மறுக்காது கொடுத்தாலும் கொடுத்ததொன்றை அவரிடம் வணங்கிப் பெறுவதும், பெற்றதாகிய அப்பொருள் கொண்டுவந்து உண்பனவற்றிற்கு வேண்டுவனவாகிய பலவித பொருள்களைச் சேர்ப்பதும் ஆகிய இவற்றால் உண்டாகும் துன்பங்கள் தினந்தோறும் வேறு வேறுக வரும் என்றும், ஆகையால் தரித்திரம் என்பது ஒன்றினாலேயே எல்லாத் துன்பங்களும் உண்டாகிவிடும் என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "உலகத்தார்க்குச் சொல்ல வேண்டுவனவாகிய நல்ல சொற்

கலை அறியாத கல்லியில்லாத ஒருவனுக்கே தரித்திரம் வருமாயின் பல துன்பங்கள் உண்டாதல் கூடும். அதின், கற்றவனுக்கு ஒருவேளைக்கும் அவ்விதம் துன்பங்கள் உண்டாதல் கூடுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1046. நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினை நல்கூர்ந் சொற்பொருள் சோர்வு படும். [தரும்.

(பதி.) இ-ள். நற்பொருள் நன்கு உணர்ந்து சொல்லினும்—மெய் நூற் பொருளைத் தெளியவறிந்து சொன்னராயினும்,—கல்கூர்ந்தார் சொற் பொருள் சோர்வு படும்—கல்லாதார் சொல்லுகின்ற பொருளின்மையைத் தலைப்படும்; எ-று.

பொருள் இன்மையைத் தலைப்படுதலாவது, யாமவை சொல்லியன திரும்பிக் கேட்குமாயிற் தாண்டேமுடி தெருறகின்ற குறைமடிக்கிறண்டுமென் றஞ்சி யாதொரு பேசாமையின் பயனில்சொல்லாய்முடிதல். கல்வியும் பயன படாதென்பதாம். (7)

விளக்கம்:—உண்மை நூல்களின் பொருள்களை நன்றாக அறிந்து சொன்னாலுங்கூட தரித்திரராயுள்ளவர்கள் சொல்லுகின்ற அவ்விதம் உண்மைச் சொற்கள் யாதொரு பொருளும் படாமற் போய்விடும் என்று இக்குறுக்குறள் கூறுவதால், மெய்ப்பொருளைத் தரும் உண்மை நூல்களை எல்லாம் நன்றாகக் கற்றுக் கேட்டுத் தெளிந்து நின்ற பலவனேனும், தான் கற்றதைச் செல்வந்தரிடத்துச் சென்று சொல்ல முயலுவானாயின், அதுகண்ட செல்வந்தர் 'இவன் தரித்திரன் ஆதலால் இவன் சொல்லுகின்ற விஷயங்களை நாம் விரும்பிக் கேட்போமாயின் அதனால் தாகசாந்தியம் கொண்டு இவனுக்குவேண்டிய குறைகளை நீக்க வேண்டி வரும். இதனால் நமக்குப் பொருட் செலவு நேரும். இவன் சொல்லுவதைக் கேளாது விடுவதே தகுதியாகும்' என்று பயந்து யாவரும் கேளாது போய் விடுவர். ஆதலால், கற்றவனது கல்வியும் தரித்திரத்தால் பயனில் லாததாகும். அதனால் மேல் வினவியபடி கல்வியுடையவனுக்கும் தரித்திரத்தால் பல துன்பங்கள் உண்டாகும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர் "செல்வந்தராய் உள்ள அயலவர்தாம் ஒதுக்கி விடுதல்கூடும். ஆயின் நற்றத்தவர் இவ்விதக் கல்வியுடையாரைச் சூழ்ந்து இருத்தல் கூடுமன்றே?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1047: அறத்தோடு சேரா நல்குரவு ஈன்றதா யானும் பிறன்போல நோக்கப் படும்.

(பரி.) இ-ள். அறம் சேரா நல்குரவு=அறத்தோடியையாதிலாத நல்குரவு யுடையவன்—என்றதாயானும் பிறன்போல நோக்கப்படும்=தன்னையீன்ற யானும் பிறனை ஒரு தமாறுபோலக் நனி நோக்கப்படும். எ-று.

அறத்தோடுகூடாமை=காரண பாரியங்களுளொன்று பியையாமை. நல்குரவு—ஆகுபெயர். சிறப்பும்மை அவளதியற்கையன் புடைமை விளக்கிநின் றது கொள்ள நின்றதலேயன்றி கொடுப்பவுண்டாதலுமுடைமையின், அது நோக்கிச சுற்றத்தார் யாவரு மிரப்பரென்பதாம் (எ)

விளக்கம்:- அறத்தோடு வருதல இல்லாத தரித்திரம் உடையவன் ஒருவன் தன்னைப் பெற்றெடுத்த தாயினும் அயலவனை எண்ணுவதுபோல எண்ணிப் பார்க்கப்படுவான் என்று இத்திருக்குறள் கூறுவதால், ஒருவன் அறப் முதலியவைகளோடு செயதது தன் கைபிலுள்ள பொருள்களைச் செலவழித்து அது காரணமாக அவனுக்குத் தரித்திரம் வந்திருக்குமாயின், அவனைச் சுற்றத்தவர் அவனை இகழார் என்றும, அவ்விதம் அல்லாது அவனது சோம்பலால் தரித்திரத்தை அடைந்திருப்பானையின், சுற்றத்தவர் மாத்திரம் அன்றி அவனைப் பெற்றெடுத்த தாயும் தன் இயற்கை அன்பினின்றும் நீங்கி அவனை விரும்பாமட்டாள் என்றும அறிகினறோம. இதனால், பொருள் இல்லாத ஒருவனைச சுற்றத்தவரேயன்றி தன்றெடுத்ததாயும் விரும்பமாட்டாள் என்றதாயிற்று என்றனர். அதிசிகட்ட மாணக்கர், "இவ்விதம் தரித்திரத்தால துன்பப்படுபவன் தன் துன்பததை மிகுதியும் துன்பமாகக் கருதுவன். போதும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1048. இன்னும் வருவது கொல்லோ தெருநலுங் கொன்றது போலு நிரப்பு.

(பரி.) இ-ள். தெருநலும் கொன்றதுபோலும் நிரப்பு—தெருநற்கு கொன்றதுபோன்று எனக்கின்னதவறைச்செய்த நல்குரவு—இன்னும் வருவது கொல்—இன்னும் என்பால் வரக்கடவதோ? வந்தால் இனி யாதுசெய் வேன்! எ-று.

அவ்வின்னதனாலவன.—மேற்சொல்லிய துன்பகள் *தெருநன்மிக வருந்தித் தன் வயிறுநிறைத்தானொருவன் கூற்று. (அ)

*திருக்குறள், 1045.

விளக்கம்:—'நேற்றைய தினமும் என்னைக் கொன்றால் எவ்வித துன்பமிருக்குமோ அவ்வித துன்பத்தைச் செய்ததாகிய தரித்திரம் இன்றையதினமும் என்னிடத்து வருவதாக உள்ளதோ? அவ்விதம் வந்தால் அதற்கு இனி யான் யாதுசெய்தல்கூடும் என்று ஒரு வறியோனது கூற்றாக இத்திருக்குறள் கூறுவதால், தரித்திரன் ஒருவன்தன் இல்லாமையால் ஆயிரத்து நாற்பத்தைந்தாவது திருக்குறளில் சொல்லியபடி செல்வரிடத்திற் சென்று வயிறு வளர்த்தல் பெரியதோர் துன்பமென்று அறிகின்றோம். இதனால் எல்லாத் துன்பங்களினும் தரித்திரனுக்குள்ள துன்பமே பெரியதோர் துன்பமென்று அறிந்ததாயிற்று என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இத் தரித்திரத்தை ஓர் உவமை வாயிலால் விளக்கல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1049. நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள் யாதொன்றுங் கண்பா டரிது.

(பரி.) இ-ள். நெருப்பினுள் துஞ்சலும் ஆகும்=மந்திரமருந்துகளான் ஒருவனுக்கு நெருப்பிடையே கிடந்துறங்கலுமாம்,—நிரப்பினுள் யாதொன்றும் கண்பாடு அரிது=நிரப்புவந்தழி யாதொன்றானு முறக்கமில்லை. எ-று.

நெருப்பினும் நிரப்புக் கொடிதென்றவாறாயிற்று. இதுவுமவன்கூற்று. இவை நான்குபாட்டானும் நல்கூர்ந்தார்க்குள்ளதாங்குற்றங் கூறப்பட்டது. (*)

விளக்கம்:—மந்திரத்தாலும் மருந்துகளாலும் ஒருவனுக்கு நெருப்பின் நடுவே கிடந்து தூங்குதலும் ஆகும் என்றும், ஆயின், தரித்திரம் என்பது வந்துவிடின் யாதொன்றினாலும் தூங்குவது கூடாது என்றும் இத்திருக்குறள் கூறுவதால், ஒருவன் நெருப்பின் நடுவிலே கிடந்து தூங்குதல் இயற்கை யல்லாவிடினும் ஓர் மந்திரத்தைக் கொண்டேனும் மருந்தைக் கொண்டேனும் செயற்கையினால் தூங்கிவிடுதல் கூடும் என்றும், ஆனால், இத்தரித்திரர்க்கோ மந்திரமும் மருந்தும் பயன்படாது போவதால் நெருப்பினைக் காட்டிலும் நிரப்பு என்னும் தரித்திரமானது மிகக் கொடியதாக உள்ளது எனறும் கூறியதாக அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "தரித்திரர்க்கு உண்டாகும் துன்பம் இதுவென்று அறிந்தோம்; ஆனால், இவ்வித தரித்திரர் உலகத்து வாழ்தலை நம் ஆசிரியர் என்னென்று கூறுகின்றனர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1050. துப்புர வில்லார் துவரத் துறவாமை
யுப்பிற்குங் காடிக்குங் கூற்று.

(பரி.) இ-ள். துப்புரவு இல்லார் துவரத் துறவாமை=துகரப்படும் பொருளுகளில்லாதார் தம்மாற்செயற்பாலது முற்றத்துறத்தலேயாகவும் அது செய்யாதொழிதல்—உப்பிற்கும் காடிக்கும் கூற்று=பிறரில்லினுளவாய உப்பிற்குங் காடிக்குங் கூற்றாம், எ-று.

மானமழியாமையிர் செயற்பாலது அதுவேயாயிற்று. முற்றத்துறத்தல=சுற்றந்தானேவிட்டமையின் ஒருவாற்றாற் றுறந்தாராயினார் நின்ற தம் முடம்பினையுந் துறத்தல. அது செய்யாது கொண்டிருத்தல் இரண்டனையு மாளட் பண்ணுதலின், அதனை அவற்றிற்குக 'கூற்று' என்றார். இனி முற்றத் துறத்தலாவது துப்புரவில்லாமையின் ஒருவாற்றாற்றுறந்தாராயினார் பின்னவற்றை மனத்தாற்றுறவாமையென் றுரைப்பாருமுளர். இதனான் அஃதுள தாயவழிச் செய்வது கூறப்பட்டது. (ம)

விளக்கம்:—அனுபவித்தற்கு உரியனவாகிய பொருள்களை அடையாதார் செய்ய வேண்டுவது முழுவதும் துறந்து விடுவதாகவே இருக்க அவ்விதம் துறவாது இருத்தல் மற்றவாகள் வீட்டில் உள்ள உப்புக்கும காடிக்கும் எமனாக இருத்தல்போலாம என்று இத்திருக்குறள் கூறுவதால், தரித்திரத்தால் மானமழிந்து உயிர்வாழ்தலினும் இறத்தல் தகுதியாகும் என்றும, அதுவிட்டுச் சுற்றத்தவர் முதலியோர் கைவிட்ட பிறகும் அவ்வுயிரை ஓம்பி வாழ்வது அயலார் பொருளுக்கு எமன் போல் இருப்பதே யன்றி வேறு அல்ல என்றும் அறிகின்றோம் என்றனர் அதுகேட்ட மாணாக்கர், "தரித்திரன் ஒருவன் உயிரோடு இருத்தலினும் இறத்தலே நன்று என்று கூறினும, அரிய பிறவியாகிய மக்கட்பிறவியை அடைந்ததற்கு உரிய பயனை அடைவதற்கு இவவுடம்பினை எவ்விதமேனும காப்பாற்றுதல் வேண்டும் என்று நூல்கள் கூறுவனவாகவும் கேட்டிருக்கின்றோம்; அவ்விதம் உடலை ஓம்ப வேண்டுமாயின், யாசித்தலினும் வேறு வழி இல்லையாதலால் அவ்வித இரவு கொண்டு வாழ்தல் கூடுமன்றோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

106. அதிகாரம்.

இரவு.

(பரி.) இனி மானந்தீரா விரவு இரவாமையோ டொத்தலின், அதனானும் வீடெய்தற்பயத்ததாய உடம்போம்பப்படுமென்னும் அறநூல்வழக்குப்பற்றி

மேலெய்திய துவரத்துறத்தல் விலக்குதற்பொருட்டு இரவு கூறுகின்றார். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

விளக்கம்: — அதாவது, மானத்தைப் போக்கிக் கொள்ளாது யாசிக்கின்ற யாசகமானது யாசகம் அல்ல ஆதலாலும் வீட்டினை யடைவதற்குப் பயன் தருவதாகிய இவ்வுடம்பினை மானந்தீரா விரவால் ஒம்புதல் வேண்டும் என்று கூறுகின்ற தருமநூலில் சொல்லிய வழக்கினபடியும் மேல்கூறிய துவரத்துறத்தல் என்னும் உடம்பினைப் போக்குதலை விலக்குதல் பொருட்டும் இவ்விரவு என்னும் அதிகாரத்தை இங்கு கூறலாயினர் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "மானத்தைப் போக்கிக்கொள்ளாத இரவு என்பது எவ்விதம்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1051. இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பி
னவர்பழி தம்பழி யன்று.

(பி.) இ-ள். இரத்தக்கார்க் காணின் இரக்க = நல்கூர்ந்தார் இரத்தற்கேற்புடையாரைக் காணின், அவர்மாட்டிரக்க; — கரப்பின் அவர்பழி தம்பழி அன்று = இரந்தால் அவர் கரந்தாராயின் அவர்க்குப் பழியாகல்லது தமக்குப் பழியாகாமையான். எ-று.

இரவென்னு முதனிலைத்தொழிற்பெயரதிறுதிக்கண் நான்கனுருபுவிகாரத்தாற்றொக்கது. இரத்தற்கேற்புடையராவார் = உரையாமை முன்னுணருமொண்மையுடையராய் மாற்றாதீவார். அவர் உலகத்தரியராகலிற் 'காணின்' என்றும், அவர்மாட்டிரக்கார்க்கு-இரவான்வரும் ழிவின்மையின் 'இரக்க' என்றும், அவரீதலிற் குறைகாட்டாமையிற் 'கரப்பின்' என்றும், காட்டுவராயின் அப்பழி துவெள்ளறுவைக்கண் மாசுபோல அவர்கட்கடிதுசேறலின் 'அவர்பழி' என்றும், ஏற்பிலார்மாட் டிரவன்மையின் 'தம்பழியன்று' என்றுங் கூறினார். (க)

விளக்கம்: — தரித்திரராயினார் பிச்சை கொடுப்பதற்கு யோக்கியராய் உள்ளவர்களைப் பார்ப்பார்களானால் அவரிடத்துப் பிச்சைகேட்டல் வேண்டும் என்றும், அவ்விதம் அவர் பிச்சைகேட்ட காலத்து வைத்துக் கொண்டே இல்லை என்று ஒளிப்பாராயின் அவ்வித ஒளிப்பு அவர்க்கே பழியாவது அல்லாமல் பிச்சை கேட்ட தமக்குப் பழியாகாதென்றும் இத்திருக்குறள் கூறுவதால், யாசிக்க வேண்டுமாயின் கேட்பதற்கு முன்னே தாமே உணர்ந்து கொடுக்கக்கூடிய தகுதியுடையாரிடத்

தெ யாகிற்கல் வேண்டும் என்றும், அவ்விதம் கேட்பதற்கு முன் கொடுப் பான் அரியராக இருந்தும் அவ்வித தகுதியுடையவரைக் கண்டு கேட்டகாலத்து அவர் கொடுப்பதை ஒளியர் என்றும், ஒர்கால் ஊழ்வலி யால் கொடாதது தம் பொருளை ஒளிப்பாராயின் மிகுதியும் வெண்மையா கிய வல்லிரத்தினிடத்தே கறையிருளை அது எவ்விதம் உடனே யார்க்கும் எடுத்தக் காட்டுமோ அதுபோல் பரியோனது மிகுதியும் அவர்க்கு வந்தசேரும் எவ்வகை அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர் "ஒருவன் தான் யாசித்த பொருளால் இன்பம் அடைதல் கூடுமோ?" என்னவும், அகிரியர் கூறுவாராயினர்.

1052. இன்ப மெய்தருவற் கிரத்த லிரந்தகைதுன்ப முறுதல் வினின்.

(பரி.) இ-ள். ஒருவற்கு இரத்தல் இன்பம்=ஒருவனுக்கு இரத்தலும் இன்பதன்றோ எனில்,—இரத்தலை துன்பம் உறு வினின்=இரத்தலேபோன்ற தன் சுவாதந்திரியத்தை அடிமையாற் முன்றுன்புறுமல் வருமாயின். எ-று.

இன்பம்—தகுபெயர். உறுமலென்பது கடைக்குறைத்து நின்றது. துன் பம் காரியொருமைப்பெயர். அவையாவன —சுவாதீனம் காலமுமிடனுமறிந் தீதலும், அவர் குறிப்பறிதலும், அவரைக்கண்டவுடனே முகமலர்ச்சியுடனே கடிதிற்சொல்லலு முதலியவற்றுன் ஒருவனவும், மறுத்துழி வரு வனவுமாம். அவையுறுமல் வருதலாவது:—அவர் முன்னுணர்ந்தியக்கோடல். இரக்கவர் துன்பமுறுவரினென்றுபாடமோதி. இரக்கப்பட்டவர் பொரு ளின்மை முதலியவற்றுன்புறுதல் எரிவிக்கிலாமை னென்றுரைப்பாரு முளர். இவை யிரண்டுபாட்டானும் கல்குரவா னுயிர்நிங்குமெல்லைக்கண் இளிவில்லாவிரவு விலக்கப்படாதென்பது கூறப்பட்டது. (2)

விளக்கம்.—தான் யாசித்த பொருள்கள் கொடுப்பாரது கல்லறி வுடைமையால் தனக்கு யாதொரு துன்பமும் இல்லாதல் கிடைக்கு மாயின் அவ்வித யாசகமானது ஒருவனுக்கு இன்பத்தைத் தருவதற்குக் காரணமாம் என்று இத்திருக்குறள் கூறுவதால், பிச்சை கேட்கின்ற காலத்தைக் கொடுப்பவனிடத்தே போகவேண்டிய காலத்தையும் இடத்தை யும் அறிந்தது போதலும், அவ்விதம் போன பிறகும் அவன் குறிப்பினை அறிதலும், குறிப்பறிந்த பிற்கு அச்செல்வரைத் தம் வசமாக்கலும், தம் வயப்பட்ட பிறகு அவர் மனம் உருகும்படி சொல்லவேண்டுவனவற்றை

ஆராய்ந்து சொல்லுதலும் ஆசிய இவைகளால் வருந்துன்பமும் அவர் இல்லை என்ற காலத்து வருகின்ற துன்பமும், இல்லாமல் கொடுப்பவர் கொடுக்கும் பொருளால் இன்பமடைதல் கூடும் என்றும், இவ்விதம் பிச்சை வாங்குவது இழிவாகாது என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் நல்லவரால் கொடுக்கப்படும் பொருள் இன்பத்தைத்தரும் என்றி அறிந்தோம் ஆயின், இவ்வித இன்பத்தைத்தரும் பொருளைப் பெறுவதற்கு அச்செல்வர் முன் யாசகர் எவ்விதம் நிற்பர்?" என்னலும், ஆசிரியர் கூறவாராயினர்

1053. கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்
றிரப்புமோ ரேஎ ருடைத்து.

(பரி.) இ-ள். கரப்பிலா நெஞ்சிற் கடன் அறிவார் முன் நின்று இரப்பும்=கரத்தலில்லாத நெஞ்சினையுடைய மானமறிவார் முன்னர் நின்று அவர் மாட்டொன்றிரத்தலும்—ஏரோ ஏடைத்து=நல்கூர்ந்தார்க்கு ஓர் அழகுடைத்து.

"சிறியசருக்கத்தா வேண்டுமுயர்" *வென்றதனால், அவர்க்கு அதுகடனெனப்பட்டது. அதனையறிதல்=சொல்லுதலுற்றுரைக்கலாகாமைக் கேதுவாய அதனியல்பினையறிதல். அவ்வறிவுடையார்க்கு முன்னிற்றன் மாத்திரமே யமைதலின் 'முன்னின்று' என்றும், சொல்லுதலான்வருஞ் சிறுமையெய்தாமையின் 'ஓரேருடைத்து' என்றுங் கூறினார். ஐம்மை அதனிழிபு விளக்கி நின்றது. (௩)

விளக்கம்:—உள்ளது ஒளித்தல் இல்லாத நெஞ்சினையுடைய மானமறிந்த பெரியோர் முன்னர் யாசகன் ஒருவன் எதிர் நின்று அப்பெரியோரிடத்து ஒன்று யாசித்தலும் ஓர்வித அழகினை யுடையதாகும் என்று இத்திருக்குறள் கூறுவதால், தொளாயிரத்து அறுபத்து மூன்றாவது திருக்குறளில் கூறியபடி குறைவினை யுண்டுபண்ணும் தரித்திரம் என்பது ஒருவனுக்கு உண்டான காலத்துத் தான் செல்வந்தனாக இருந்தபோது எவ்விதம் தன் உயர்வினின்றும் தாழ்வு வராமல் தன்னைக் காத்துக்கொண்டு நின்றானோ அதுபோல் இப்போதும் பிச்சைக்கு வருவானாயினும் தனக்குத் தகாத தொழிலைச் செய்தல் கூடாது என்றும், அவ்விதம் செய்யாது நின்று யாசித்தல் ஓர் அழகுடையது என்றும் அறிவதுடன் யாசகர் தம்மைப் பணிதல் கூடாது என்று உண்மைச்

*திருக்குறள் 963.

செல்வந்தர்கள் விரும்புவர் ஆதலால் அவரிடத்து நின்று யாசித்தல் துன்பத்தைத் தாராது அழகினையே தரும என்றும் அறிந்ததாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் நல்லவரிடத்துக் கொள்ளும் பொருள் பிச்சை கேட்டு வாங்கியதாகவே இரார் துபோலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1054. இரத்தலு மீதலே போலுங் கரத்தல் கனவிலுந் தேற்றாதார் மாட்டு.

(பரி.) இ-ள். கரத்தல் கனவிலும் தேற்றாதார்மாட்டு இரததலும்= தமககுள்ளது கரத்தலைக் கனவின்கண்ணு மறியாதார் மாட்டுச் சென்றொன றனை யிரத்தலும்—ஈதலே போலும்=வறியார்க்கீதலேபோலும். எ-று.

உம்மை ஈண்டுமெவ்வாறு நின்றது. தான் புகழ்பயவாதாயினும் முன்னுள் தாய புகழ்கெடவாராமையின், 'ஈதலேபோலும்' என்றார். ஏகாரம் ஈற்றசை.

விளக்கம்.—தமக்குஉள்ளபொருளை ஒளித்தலைக் கனவினிடத்தும் அறியாத பெரியோரிடத்து ஒருவன் போய் ஒரு பொருளை யாசித்தலும் தரித்திரர்க்குத் தான் ஒன்று கொடுப்பதே போலும் என்று இத்திருக் குறள் கூறுவதால், ஒருகாலத்துச் செல்வந்தனாக இருந்தவன் தான் தரித்திரனாகியும் புகழ் கெடாது பொருளைப் பெற்றுத் தன்னுடம்பைக் காப்பாற்றுதலால் அவ்வித அரிய பிறப்பாலாகிய மக்களுடம்பைக் காப்பாற்றியதும் ஈகையிற் சிறந்ததாகும் என்று அறிகின்றோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "அவ்வித செல்வந்தர் இல்லையாயின் உலகத்துள்ள யாசகர் உயிரோடு வாழார் போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1055. கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின் றிரப்பவர் மேற்கொள் வது.

(பரி.) இ-ள். கண்ணின்று இரப்பவர் மேற்கொள்வது=சொல்லுதன் மாட்டாது முன்னிற்றன் மாத்திரத்தான் இரப்பார் உயிரோம்பற் பொருட்டு அதனை மேற்கொண்டு போதுகின்றது—கரப்பிலார் வையகத்து உண்மையான்=அவர்க்கு உள்ளதுகரவாது கொடுப்பார் சிலர் உலகத்துளராய கன்மையானே, பிறிதொன்றுனன்று. எ-று

அவரில்லையாயின், மானநீக்கமாட்டாமையின் உயிர்நீப்பரென்பதாம்.(௫)

விளக்கம்:—தம் வாயால் சொல்லுவதும் இல்லாமல் முள்ளின்ற அளவிலேயே யாசிப்போர் உயிர் காத்தற் பொருட்டு அவ்வித யாசகத்தை மேற்கொண்டு செல்லுகின்றது, தம்மிடத்தே உள்ள பொருளை ஒளியாது கொடுக்கின்ற கொடையாளர் சிலர் உலகத்து உண்டு என்கின்ற தன்மையினாலேயே அல்லாமல் வேறு ஒன்றினாலும் இல்லை என்று இத் திருக்குறள் கூறுவதால், அவ்வித்தம் உள்ளதை இல்லை என்னாது கொடுக் கின்ற கொடையாளர் உலகத்துச் சிலர் இருப்பதால் யாசகர் அவர் முன் சென்று தம் குறையை எடுத்துரைத்து சொல்லாமல் எதிர் நின்ற அள விலேயே பொருளைப் பெற்றுப் புகழ் கெடாது வாழ்கின்றார் என்றும், அவ்வித தகுதியுடையார் இல்லையாயின் உயிரைத் துறப்பார்களே யன்றி யாசிக்கமாட்டார்கள் என்றும் அறிக்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இவ்வித பெருங்கொடையாளர் உள்ள இடத்தே சென்று அவரைக் கண்டால் யாசகத்திற்குச் சென்ற ஒருவனுடைய துன்பங்கள் என்னகும்?" என்னலும், ஆசிரியர் கூறலாராயினர்.

1056. கரப்பிடும்பை யில்லாரைக் காணி னிரப்பிடும்பை யெல்லா மொருங்கு கெடும்.

(பரி.) இ-ன் கரப்பிடும்பை இல்லாரைக் காணின்=உள்ளதுகரத்தலா கிய நோயில்லாரைக் கண்டால்,—நிரப்பிடும்பை எல்லாம் ஒருங்கு கெடும்= மானம்விடா நிரப்பார்க்கு நரப்பான் வருத்துன்பங்களெல்லாஞ் சோக் கெடும். எ-று.

கரத்தல் ஒருவற்கு வேண்டுவதொன்றன்மையின் அதனை 'நோய்' என் றும், அஃதில்லாத இரக்கத்தக்காரைக் கண்டபொழுதே அவர் கழியுவகைய ராகவாகவின் 'எல்லாமொருங்குகெடும்' என்றும் கூறினர். இடும்பை—ஆகு பெயர். முழுதுங்கெடுமென்று பாடமோதி, எஞ்சாமற்கெடுமென் றுரைப் பாரு முளர் (கு)

விளக்கம்:—தம்மிடத்தேயுள்ள பொருளை இல்லையென்று ஒளிக் கின்ற நோய் ஒன்றினை இல்லாதவரைப் பார்த்தால் மானத்தை விட்டு விடாது இரக்கின்ற யாசகருக்குத் தரித்திரத்தால்வரும் துன்பங்களெல் லாம் ஒரு சேரக் கெட்டுவிடும் என்று இத்திருக்குறள் கூறுவதால், யாச கரைக் கண்டகாலத்து அவர் மீது உள்ள அன்பின் மிகுதியால் இல்லை என்னாது கொடுக்கும் செல்வந்தரை (யாசகர் காண்பாராயின் 'கண்ட

பொழுதே அளவில்லாத மகிழ்ச்சி கொள்ளுவார் ஆதலால் அவ்வித மகிழ்ச்சி கொள்ளும் காலத்துத் தரித்திரத்தால் தமக்கு இருந்த துன்ப மெல்லாம் முழுவதும் கெட்டுவிடும் என்று அறிகின்றோம் என்றனர். அதுகேட்டு மாணாக்கர், ''உண்மைச் செல்வந்தரைக் கண்ட காலத்து நீங்காத தரித்திரமுடையானது துன்பமும் நீங்கிப்போம் என்பது அறிந் தோம். ஆயின், கொடுப்பாரைக் காணின் கொள்வார்க்குத் துன்பம் நீங்கு வது எவ்வித மகிழ்ச்சி கொள்வதினால் என்பதையும் அறிய விரும்பு கின்றோம்'' என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1057. இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந் தூள்ளு ளுவப்ப துடைத்து. [துள்ள

(பரி.) இ-ள். இகழ்ந்து எள்ளாது ஈவாரைக் காணின் = கும்மைவ மதித்திழிவுசொல்லாது பொருள்கொடுப்பாரைக் கண்டால், — உள்ளம் மகிழ்ந்து உள்ளுள் உவப்பது உடைத்து = அவ்விரப்பாரது உள்ளமகிழ்ந்து உள்ளுள்ளே யுவக்கும் தன்மையுடைத்து. எ-று.

இகழ்ந்தெள்ளாதெனவே, நன்குமதித்தலும் இனியவைகூறலும் பேறு தும். நிரப்பிடும்பை கெடுதலவேயன்றி ஐம்புலன்களானும் பேரின்பமெய் திலாகக் கருதலான், 'உள்ளுளுவப்பதுடைத்து' என்றார். இவையைந்து பாட்டானும் அவ்விரத்தற்காக நியல்பு கூறப்பட்டது. (எ)

விளக்கம்:—யாசிக்கச் சென்றகாலத்துத் தம்மை யுமதியாமலும், இழிவாகப் பேசாமலும் பொருள் கொடுத்து உதவுவாரைக் கண் டால், யாசிப்பாரது உள்ளமானது மகிழ்ச்சி யடைவதுடன் உள் ளுக்குள்ளே எல்லாப் புலன்களும் மகிழ்ச்சி யடையும் தன்மையுடைய தாகும் என்று இத்திருக்குறள் கூறுவதால், நன்குமதித்தலும்; இனியவை கூறலும் ஆகியஇரண்டுடன் இன்முகமும் காட்டிப்பொருளீயும் கொடுப் பாராயின் யாசிக்கச்சென்ற ஒருவன் கொடுப்பவனது இனிய முகத்தைப் பார்த்த அளவிலேயே கட்புலன் மகிழ்வெய்துமென்றும், இனியசொல் லைக்கேட்ட அளவிலேசெவிப்புலன் இன்பமடையுமென்றும், நன்குமதித் தலாலே மனம் மகிழ்வடையுமென்றும், பொருள் கொடுத்தலாலே நீங் காத் தரித்திரம் நீங்கி வாய் மெய் முதலிய புலன்களும் இன்பம் துய்த்து மகிழ்வடையுமென்றும், ஆகவே, தரித்திரமுடையானது துன்பங்கள் நீங்

குவதற்குச் செல்வந்தனைப் பார்ப்பதே ஓர் காரணமாகவுள்ளது, என்று அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "தரித்திரர் இருப் பதினாலேயே சுவார் இம்மையும் மறுமையுமாகிய இரண்டு பயன்களையும் அடைகின்றார்கள் போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1058. இரப்பாரை யில்லாக்கி னீர்ங்கண்மா ஞால மரப்பாவை சென்றுவந் தற்று.

(பரி.) இ-ள். இரப்பார் இல்லாயின் = வறுமையுற்றிரப்பாரில்லையாயின், —ஈர்ங்கண்மா ஞாலம் = குளிர்ந்தவிடத்தையுடைய பெரிய ஞாலத்துள்ளார் செலவு வரவுகள் — மரப்பாவை சென்றுவந்தற்று = உயிரில்லாத மரப்பாவை இயந்திரக்கயிற்றூற் சென்று வந்தாற்போலும். எ-று.

ஜகாரம் — அசைநிலை. ஞாலமெனனும் ஆகுபெயர்ப்பொருட்கு உவமை யோடொத்ததொழில் வருவிக்கப்பட்டது. ஞாலத்துள்ளாரென்றது அவரை யொழிந்தாரை. அவர்க்கீதலேச்செய்து புகழும் புண்ணியமுமெய்தாமையின் உயிருடையரல்லரென்பதாம்; "ஈவாருங் கொள்வாரு மில்லாத வானத்து — வாழ்வாரே வன்க ணவர்" என்றார் பிறரும். இத்தொடையின் பலோக்காது இரப்பவரில்லாயினென்று பாடமோதுவாருமுளர். (அ)

விளக்கம்:—தரித்திரமடைந்து பிச்சை யெடுப்பார் இல்லையாஞல் இப்பெரிய பூமியில் உள்ளவர் போதலும் வருதலும் மரத்தாற் செய்த பொம்மை ஒன்று இயந்திரக் கயிற்றால் முன் சென்றும் பின் வந்தும் இருப்பது போலேயே ஆகும் என்று இத்திருக்குறள் கூறுவதால், பெரிய செல்வத்தை ஒருவர் படைத்து இருக்கினும் அச்செல்வத்தா லாகிய புகழும் புண்ணியமும் அடையவேண்டுமாயின் தரித்திரர் இல் லாவிடின் முடியாதுபோகும் என்றும், அவ்விதம் ஈதல் இல்லாமல் உல கத்து வாழ்ந்து செல்கின்றவர்கள் தாம் பிறத்தலும் இறத்தலும் மரத் தாற் செய்த பொம்மை ஒன்று அதை ஆட்டுகின்ற தலைவனுடைய கையி லுள்ள கயிற்றால் ஆடி யாதொரு பயனும் அடையாமற் போவது போல் எப்பயனும் அடையாமற்போவதற்கேயாகின்றது என்றும் அறிந் தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "தரித்திரத்தால் பிச்சை எடுப்பவர்கள் இவ்வுலகத்துத் தோன்றுவதும் ஒரு பெரும்பயனே போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்

1059. ஈவார்க ணென்னுண்டாந் தோற்ற மிரந்து
மேவா ரிலாஅக் கடை. [கோண்

(பரி.) இ-ள். இரந்துகோள் மேவார் இலாக்கடை=அவர்பாற்சென்று ஒன்றனை யிரந்துகோடலை விரும்புவாரில்வழி—ஈவார்கண் தோற்றம் என் உண்டாம்=கொடுப்பார்மாடடு என்னபுகழுண்டாம்! யாதுமில்லை. எ-று.

தோற்றம்—ஆகுபெயர். மேவுவாரென்பது விகாரமாயிற்று. கொடுத்தலவன்மை வெளிப்படாமையின், அதனாற்புகழெய்தாரென்பதாம். இவை பிரண்டுபாட்டானும் உலகிற்கிரப்பார் வேண்டுமென்பது கூறப்பட்டது. (கூ)

விளக்கம்:—கொடுப்பவரிடத்திற்சென்று ஏதேனும் ஒருபொருளை யாசித்துக் கொள்ளுதலை விரும்புபவர்கள் இவ்வுலகத்து இல்லையாயின், அக்கொடுப்பவருக்கு ஈதலின்மையின் காரணத்தால் ஒரு புகழும் உண்டாகாது என்று இத்திருக்குறள் கூறுவதால், ஒருவனது கொடுத்தலாகிய வல்லமை பிச்சை எடுப்பாராகிய தரித்திரர் இல்லாவிடின் வெளிப்படாதாதலாலும், புகழெய்துதல் கூடாதாதலாலும் உலகத்திற்கு யாசகர் வேண்டுமென்றே யறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் உலகத்திறகு இருந்தே ஆகவேண்டுபவனாகிய யாசகன் தான் யாசகத்தைப் பெறச் சென்றபோது கோபித்தல்கூடுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1060. இரப்பான் வெகுளாமை வேண்டு நிரப்பிடும்பை
தானேயுஞ் சாலுங் கரி.

(பரி.) இ-ள். இரப்பான் வெகுளாமைவேண்டும்=ஈவானுக்குப்பொருளுதவாவழி இவனெனக்கீகின்றிலனென்று அவனை யிரப்பான் வெகுளாதொழிதல்வேண்டும்;—நிரப்பிடும்பை தானேயும் கரிசாலும்=அதுவேண்டிய பொழுது உதவாதென்பதற்கு வேறுசான்று வேண்டா, நிரப்பாகிய தன்னிடும்பை தானேயுஞ் சான்றாதலமையும். எ-று.

யாவர்க்கும் தேடவேண்டுதலும் நிலையின்மையுமுதலிய பிறசானறு முண்டென்பதுபட நின்றமையின், உம்மை எச்சவும்மை. தனக்கேயன்றி மற்றை யிரந்தார்க்கும் அற்றைக்கன்று பொருள் கடைக்கூட்டற்கு அவனுறுந் துன்பத்தைத் தனக்கேயாகவைத்துத் தானுறுந்துன்பந் தானறிந்து வெகுளற்க வென்பதாம். இதனால் அவர்க்கின்றியமையாததோரியல்பு கூறப்பட்டது. (ய)

விளக்கம்:—யாசகம் கொடுக்கின்ற ஒருவனுக்குப் பொருள் உதவாத காலத்து அவன்கொடாமையால் 'இவன் எனக்குக் கொடுக்கவில்லை' என்று அவனை யாசிப்பான் கோபியாது இருத்தல் வேண்டும் என்றும், பொருளானது அவனி வேண்டிய காலத்து வந்து உதவாது என்பதற்கு தரித்திரமாகிய அவனுக்குள்ள துன்பமே அவனுக்குச் சாட்சியாக அமையும் என்றும் இத்திருக் குறள் கூறுவதால், பொருளானது எல்லோர்க்கும் வேண்டுவது ஒன்றாயும் ஒரிடத்திலேயே நிலையில்லாது இருப்பதாயும், கொடையாளி ஒருவன் ஓர் காலத்துச் செல்வதனை இருக்கினும் மற்றோர் காலத்துத் தன்னைக் காத்தற்கும் தன்னிடத்தே வந்து யாசித்தார்க்குப் பொருள்கொடுத்தற்கும் அப் பொருளினை யீட்டுதல் மிகுதியும் துன்பம் தருவதாயும் உள்ளது என்பதை யாசகன் அறியும் வண்ணம் அவன் தரித்திரத்தால் அவன் துன்பம் அடைவதை அவனே அறிதல்கூடும் என்றும், அவ்விதம அறிவானுயின் பொருளை கொடாதவனை நேரக்கி அவன் துன்பமறிந்து அவன் மீது கோபியான் என்றும் கூறியதாயிற்று என்று அறிந்ததுடன் இதனைப் யாசிப்பவனுக்கு இருக்கவேண்டிய ஓர் இன்றியமையாத இயல்பினையும் கூறலாயிற்று என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வதிகாரம் மானங்கொடாமல் வரும் பிச்சையை எங்களுக்கு அறிவித்ததாயிற்று. இனி, மானங்கெடவரும பிரசையாயின் என் செய்தல்வேண்டும்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

---

107. அதிகாரம்.

இரவச்சம்.

(பரி.) அஞ்சாமை மானந்தீரவரு மிரவிற் கஞ்சுதல். அதிகாரமுறைமையும் இதனினே விளங்கும்.

விளக்கம்:—அதாவது, பெருமைகெட்டு அதனால் வரும் பிச்சையெடுத்தலுக்குப் பயப்படுதல்: இஃது மேல்வினவியபடி பெருமை கெடவரும் பிரசைக்கு அஞ்சவேண்டும் என்றதாயிற்று என்றனர். அது கேட்ட மாணாக்கர், "மிக்கதோர் தகுதியுடையார் இடத்தும் இரத்தலுக்கு அஞ்சுதல் வேண்டுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1061. கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணு
மிரவாமை கோடி யுறும்.

(பரி.) இ-ள். கரவாது உவந்து ஈயும் கண்ணன்னார் கண்ணும் இரவாமை = தமக்குள்ளது கரவாது இவர் வரப்பெற்றேமென்று உண்மகிழ்ந்து கொடுக்கும் கண்போலச் சிறந்தார்மாட்டும் இரவாதே ஒருவன் வறுமைகூர்தல்—கோடி உறும் = இரந்துசெல்வமெய்தலிற் கோடிமடங்கு நன்று, எ-று.

நல்குரவு மறைக்கப்படாத நட்டார்மாட்டும் ஆகாதென்பதுபட நின்றமையின், உம்மை உயர்வுசிறப்பின்கணவந்தது. அவ்விரவான் மானந்தீராதென்னுந் துணையல்லது அதற்கு மிகுதிகூடாமையின், வல்லதோர் முயற்சியானுயிரோம்பலே நல்லதென்பது கருத்து. (௧)

விளக்கம்:—தமக்கு உள்ள பொருளைச் சிறிதும் ஒளியாது 'இவர் நம்மிடத்தே வருதற்குப் பெற்றோமே' என்று மனமகிழ்ந்து கொடுக்கின்ற கண்போலச் சிறப்புடையவரிடத்தும் ஒருவன் சென்று பிச்சை யெடாமல் தரித்திரத்தை யடைவானாயின் அவ்வித தரித்திரமானது பிச்சை எடுத்து அடைந்த செல்வம் கோடி மடங்கினை உடையதாகினும் அச்செல்வத்தைக் காட்டிலும் நல்லதாகும் என்று இத்திருக்குறள் கூறுவதால், ஒருவன் தன்னால் கூடிய அளவு முயற்சி செய்து அதனால் வரும் பொருளைக் கொண்டு தரித்திரத்தோடு வாழ்தலே நன்மை உடையது என்றும், பிச்சை எடுத்துவரும் செல்வம் அளவிற்கு அடங்காதாயினும் அது ஒருவனது பெருமை கெட்டுவருவதால் கோடியளவானாலும் கொள்ளுதல் ஆகாதென்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "ஏதோ தம்முயிர் தாங்கும் இடமாகிய உடம்பைக் காப்பாற்றுவதற்கு ஓர் முயற்சியும் செய்வதற்கு இல்லாத ஒருவன் பிச்சை எடுத்தேனும் பிழைத்தல் வேண்டாவோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1062. இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்.

(பரி.) இ-ள். உலகு இயற்றியான் இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் = இவ்வுலகத்தைப் படைத்தவன் இதன்கண் வாழ்வார்க்கு முயன்றுயிர்வாழ்தலையன்றி இரந்துமுயிர்வாழ்தலைவேண்டி விதித்தானாயின், —பரந்து கெடுக = அக கொடியோன்றானும் அவரைப்போன்று எங்கு மலமந்து கெடுவானாக, எ-று.

மக்களுயிர்க்கெல்லாம் வாழ்நாளும் அதற்கு வேண்டுவதாயவுண்டியும் அதற்கேதுவாய செய்கொழிலும் பழவினைவயத்தார் கருவொடுகலங்குவனமே அவன் கற்பிக்குமன்றே, அவற்றுட் சிலவுயிர்க்கு இரதத்தலேயும் ஒருசெய தொழிலாகக் கற்பித்தானுயினை அத்திவினையாற் ருனும் யாதுங் பழமுல் வேண்டுமென்பதாம். இவை யிரண்டொட்டாலும் அவ்விரவின்தொடுமை கூறப்பட்டது. (2)

விளக்கம்:--இவ்வுலகத்தைப் படைத்தவனுகிய சிருஷ்டி கருத்தா உலகத்து வாழ்கின்ற மக்கள முயற்சிசெய்து உயிர் வாழ்வதை விட்டுப் பிச்சை எடுத்து உயிர் வாழவேண்டுமென்று ஓர் விதியினை விதித்திருப்பானுயின், அவ்வித விதியினை உண்டுபண்ணிய அக்கொடியவனுகிய சிருஷ்டி கருத்தா இப்பிச்சை எடுப்பாரைப்போன்று எங்கும் சுழன்று வருந்திக் கேட்டுப்போவானுக என்று இத்திருக்குறள் கூறுவதால், எல்லா உயிர்க்கும் வாழவேண்டிய நாட்களும், அவ்வாழ்விற்குரிய உணவும், அவ்வுணவைப் பெறுவதற்குக் காரணமாகிய செய்கொழிலும் முன்னைய வினைக்குத் தக்க அளவாகக் கருவில் அமைத்தபோதே சிருஷ்டி கருத்தா அமைக்கின்றுன் அன்றே? அவ்விதம் அமைத்தவன் முயற்சியைவிட்டுப் பிச்சை எடுத்து உயிர் வாழ்தலும் கூடும் என்று ஓர் விதியினைக் கற்பித்திருப்பானுயின் அவன் கற்பித்த பிச்சையினபடி பிச்சை எடுத்து உயிர் வாழ்கின்ற மக்கள் தருதியை அவரவர் செய்த வினைக்குத்தக்க அளவாக முடிந்ததாகக் கொள்ளுதல் வேண்டுமேயன்றி சிருஷ்டித்தவனது தவறு அல்லை என்று அறிகின்றேம் என்றனர் அதுகேட்ட மாணுக்கர் "பிச்சை எடுத்தலின் கொடுமை இதுவென்று அறிந்தோம். இனிப் பிச்சை எடுத்து வாழ்ந்து இருப்போம போம என்ற எண்ணுதலும் கூடாதுபோலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்

1063. இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமெனினும் வன்மையின் வன்பாட்ட தில்.

(பரி.) இ-ள். இன்மை இடும்பை இரந்துதீர்வாம் என்னும் வன்மையின் = வறுமையான் வருந்துன்பத்தை முயன்று நீக்கக்கடவேமென்று கருதாது இரந்து நீக்கக்கடவேமென்று கருதும் வன்மைபோல — வன்பாட்ட து இல் = வலிமைப்பாடுடையது பிறிதில்லை. எ-று.

நெறியாய் முயற்சி நிற்க நெறியல்லாத இரவாற்றீரக்கக்கருதுதலின், வன்மையாயிற்று. வன்பாடு=முருட்டுத்தன்மை; அஃதாவது ஓராதுசெய்து நிற்றல். இதனான் வறுமைதீர்தற்கு நெறி இரவன்றென்பது கூறப்பட்டது.

விளக்கம்:—தரித்திரத்தால் வரும் துன்பத்தினை முயற்சிசெய்து வரும் பொருளால் நீக்குவோம் என்று எண்ணாது, பிச்சை எடுத்து நீக்குவோம் என்று எண்ணும் மன வலிமையைப்போல வலிமையுடையது வேறு ஒன்று இல்லை என்று இத்திருக்குறள் கூறுவதால், முயற்சி செய்து பிழைக்கும் நன்னெறியினைக் கைவிட்டுத் தீநெறியாகிய பிச்சை எடுத்தலால் பிழைப்போம் என்று சிறிதும் ஆராயாது கொள்ளும் முருட்டுத் தன்மையைக் காட்டிலும் வேறு முருட்டுத்தன்மை இவ்வுலகத்து இல்லை என்று அறிகின்றோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பிச்சை எடுக்க எண்ணுவது நன்னெறி அல்லை என்று அறிந்தோம; இவ்வித பிச்சை எடாத அமைதியானது உலகத்து எவ்வித தகுதியுடையது என்று அறிய விரும்புகின்றோம்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1064. இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்காலு மிரவொல்லாச் சால்பு. [லாக்

(பரி.) இ-ள். இடம் இல்லாக்காலும் இரவுஒல்லாச் சால்பு=நுகரவேண்டுவனவின்றி நல்கூர்ந்தவழியும் பிறர்பாற்சென்றிரத்தலையுடம்படாத அமைதி—இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே=எல்லாவுலகும் ஒருங்கியைந்தாலுங் கொள்ளாத பெருமையுடைத்து. எ-று.

அவ்விரத்தலைச் சால்பு விலக்குமாகலின், இரவொல்லாமை அதன்மே லேற்றப்பட்டது. இதனான் அந்நெறியல்லதனைச் சால்புடையார் செய்யாரென்பது கூறப்பட்டது. (௪)

விளக்கம் :—உண்பதற்குரிய பொருள்கள் ஒன்று மில்லாது தரித்திரத்தை அடைந்தகாலத்தும் பிறரிடத்துப்போய்ப் பிச்சை எடுத்தற்கு மனங்கொள்ளாத அமைதியானது எல்லாவுலகங்களும் ஒன்று சேர்ந்தாலும் நிரம்புதற்கு முடியாத பெருமையை யுடையதாகும் என்று இத்திருக்குறள் கூறுவதால், சால்புடையவர் உண்பதற்கு ஒன்றுமில்லாது உயிர்போங்காலத்தும் பிச்சைஎடுத்தல் என்பதைவிரும்பி அந்நெறியிற் செல்லார் என்றும், அவ்வித தீயநெறியிற் செல்லாத நல்ல அமைதி

யால் வரும் பெருமை எல்லாவுலகங்களிலும் கொண்டு அடைத்தாலும் அடைப்பதற்கு இடம்போதாமல் மிகுந்து நிற்கும் என்றும் கூறியதாயிற்று. இதனால், பிச்சைகேளாதவரது பெருமையைக் காட்டிலும் வேறொரு பெருமை இல்லை என்று அறிந்தோம் என்றனர். இது கேட்ட மாணாக்கர், "முயற்சியால் வரும் பொருள் பின் வாழ்க்கைக்குப் போதாததாக இருக்குமாயின் என் செய்வது?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1065. தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த துண்ணலி னூங்கினிய தில்.

(பரி.) இ-ள். தாள் தந்தது தெண்ணீர் அடுபுற்கையாயினும் = நெறியாய முயற்சி கொடுவந்து தந்தது தெளிந்தநீர்போலும் அடுபுற்கையேயாயினும்,— உண்ணலின் ஊங்கு இனியது இல் = அதனையுண்டற்குமேலினியதில்லை. எ-று.

தாடந்தகூழ் செறிவின்றித் தெண்ணீர் போன்றதாயினும் இழிவாய இரவால்வந்ததன்றித் தம்முடைமையாகலின், அமிழ்தத்தோடொக்குமென்பதாம். இதனால் நெறியினாயது சிறிதேனும் அதுசெய்யுமின்பம் பெரிதென்பது கூறப்பட்டது. (௫)

விளக்கம் :—நன்னெறியாகிய முயற்சியைச்செய்து அம்முயற்சியால் கிடைத்த பொருளால் வந்தது மிகுதியும் தெளிவினையுடைய தண்ணீரைப்போல் சமைத்த நொய்ச் சோறேயாயினும் அவ்வித வலிமையற்ற நொய்ச்சோற்றினை உண்பதற்குமேல் இனிமையை யுடையது வேறொன்று இல்லை என்று இத்திருக்குறள் கூறுவதால், தன்னுடைய முயற்சியால் வந்த உணவானது ஒன்றோடொன்று சேராத தெளிந்த நீர்போல் பலன் தாராததாக இருந்தாலும், இழிவாகிய பிச்சை எடுத்தலால் வந்த பொருள் அல்லாது தம்முடைய சொந்த முயற்சியால் வந்த பொருளாக இருத்தலால் அந்த ஜலமாகிய உணவும் அமிழ்தத்திற்குச் சமானமென்றும், நன்னெறியில் கிடைத்த உணவு மிகச் சிறியதாயினும் அவ்வுணவினை உட்கொள்ளுதலால் வரும் இன்பம் மிகப்பெரியது என்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "தன்னுயிர் காத்தல்பொருட்டுப் பிச்சை எடுத்தல் ஆகாது எனினும், மற்றோர் உயிரைக் காப்பதன் பொருட்டாகப் பிச்சை எடுத்தல் கூடாதோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1066. ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற் கிரவி னிளிவந்த தில்.

(பரி.) இ-ள். ஆவிற்கு ஒன்று இரப்பினும்=தண்ணீர்பெறுது இறக்கு மலைமைத்தாயதோர்ஆவினைக் கண்டு அறனெனக்கி இதற்குத் தண்ணீர் தரல் வேண்டுமென்றிரந்து சொல்லுங்காலும்,—இரவின் நாவிற்கு இளிவந்தது இல்=அஃதிரவுபோல ஒருவனுவிற்கிளிவந்தது பிறிதில்லை. எ-று.

ஆ காத்தோம்பல் பேரறமாகலின் 'ஆவிற்கு' என்றும், பொருள்கொடுத் துக் கோள்ள வேண்டாத எண்மைத்தாகலின் 'நீர்' என்றும், இரக்கின் றனுக்கு இளிவு அச்சொல்லளவேயாகலின் 'நாவிற்கு' என்றும், அது தான் எல்லாவிளிவினும் மேற்பந்தலின், 'இளிவந்ததில்' என்றுங் கூறினர். இதனுள் அறனும் முயன்றுசெய்வதல்லது இரந்து செய்யற்கவேண்டாது கூறப்பட்டது.

'விளக்கம் :—குடிப்பதற்குத் தண்ணீரும் ஓடைக்காலில் இறக் கும் தகுதியில உள்ள ஓர் பசுவினைப் பார்த்து 'இப்பசுவிற்கு நாம் தண் ணீர் தருதல்வேண்டும்' என்ற தருமத்தைக் கருதிப் பிறரிடத்திற் சென்று அத்தருமத்தைச் சொல்லிப பிசசை எடுப்பதாயினும் சொல்லிய அந்நாவிற்கு வந்த இழிவைக்காட்டிலும் இழிவு வேறு ஒன்றும் இல்லை என்று இத்திருக்குறள் கூறுவதால், பசுவினைக் காத்து நிற்பது தருமங்கள் எல்லாவற்றிலும பெரியதோர் தருமமாக இருந்தும், அவ் விதம் கேட்கும், தருமமும் பொருள் செலவில்லாத தண்ணீராக இருந் தும, அதையும் யாசித்துக் கேட்குமிடத்தும் கேட்ட நாவினுக்கும் இழிவுவரும் என்று அறிவதால், தருமத்தையும் தான் முயற்சிசெய்து வரும்'பொருளால் செய்யவேண்டுமே யன்றிப் பிசசை எடுத்துச்செய்தல் ஆகாது என்று அறிகதோம் எனறனர். அதுகேட்ட மாணாக்கர், "ஒரு வன் தான் பிச்சை எடாவிட்டாலும் பிறர் பிச்சை எடுப்பதையும தடுத் தல் வேண்டுமோ?" என்னலும், ஆசிரியர் கூறுவார்போனினர்.

1067. இரப்ப னிரப்பாரை யெல்லா மிரப்பிற் கரப்பா ரிரவன்மி னென்று.

(பரி.) இ-ள். இரப்பாரை எல்லாம் இரப்பன=இரப்பாரையெல்லாம் யானிரவாநின்றேன்,—இரப்பிற் கரப்பார் இரவன்மின் என்று=யாது சொல்லி யெனின், நமக்கிரக்கவேண்டுமனிதர் நமக்குள்ளது கரப்பாரையிரவாதொழி மினென்று சொல்லி. எ-று.

இரண்டாவது விகாரத்தாற்முெக்கது. இவ்விளிவந்த செயலான் ஊட்டிய வழியும் உடம்பு நில்லாதாகலின் இது வேண்டாவென்பது தோன்ற, இரப்பன்' என்முர். இதனுன் மானந்தீரவருமிரவு விலக்கப்பட்டது. (எ)

விளக்கம்:—'நீங்கள் பிச்சை எடுக்கவேண்டுமாலும் தம்மிடத்தே உள்ள பொருளை இல்லை என்று ஒளிப்பாரைப் போய்ப் பிச்சை கேளாதீர்கள்' என்று சொல்லிப் பிச்சை எடுப்பவர்களை எல்லாம் நான் 'பிச்சை கேட்பேன் என்று இத்திருக்குறள் கூறுவதால், இழிவாகிய பிச்சை எடுக்கும் செய்கையால் வந்த பொருளைக் கொண்டு உண்பித்த காலத்தும அதை உண்ட உடம்பு நில்லாது என்றும், நில்லாத தேகத் தின்பொருட்டு நிலையாகிய இழிவைத் தரும் பிச்சையைக் கொள்ளாதீர் கள் என்றும், மேல் மானம் ஒழியாத பிச்சையை வாங்குதல் கூடும என்று கூறிய இவர் இத்திருக்குறளால் மானம் ஒழியவரும் பிச்சையானது கொடுமையையும் பயனில்லாமையையும் தரும் என்றும் எடுத்துக் காட்டியது ஆயிற்று என்றனர். அது கேட்ட மாணுக்கர், "பிச்சை எடுப்பதால் ஒருவன் தன் தரித்திரத்தை நீக்குதல் கூடாது போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1068. இரவென்னு மேமாப்பி ரேணி கரவென்னும் பார்தாக்கப் பக்கு விடும்.

(பரி.) இ-ள். இரவு என்னும் ஏமாப்பு இல் தோணி = இவ்வருமை யென்னும் கடலை இதனுற்கடத்தமென்று கருதி ஒருவனேறிய இரவென் னுஞ் சேமமற்ற தோணி—கரவு என்னும் பார் தாக்கப் பக்கு விடும் = அதன் கீழ்ணெடுங்காற் கரத்தலென்னும் வன்னிலத்தோடு தாக்குமாயிற் பிளந்து போம். எ-று.

முயற்சியாற் கடப்பதனை இரவாற்கடக்கலுற்முன் அதன்கரை காணு மையின் 'ஏமாப்பிரேணி' என்முர். ஏமாப்பின்மை தோணிமேலேற்றப்பட் டது. அது கடத்திற் கேற்றதன்மையானும், நிலமறியாது செலுத்தியவழி உடைதலானும், அதன்கணேறற்க வென்பதாம். இஃதவ்வள வருவகம். (அ)

விளக்கம்:—இதரித்திரம் என்னும் சமுத்திரத்தை யாசித்த லால் கடந்து விடுவோம என்று எண்ணி ஒருவன் ஏறிச் செலுத்தும் பிச்சை எடுத்தல் என்னும் பலமற்ற தோணியானது அத்தரித்திரக் கடலில் ஓடுங்காலத்து வைத்துக்கொண்டு. இல்லை என்று சொல்லுகின்ற

வலிமை தங்கிய பாறையின் மீது தாக்குமாயின் பிளந்து போய்விடும் என்று இத்திருக்குறள் கூறுவதால், முயற்சிசெய்து கடக்கவேண்டிய தரித்திரக் கடலைப் பிச்சை எடுத்துக் கடப்பேன் என்று ஒருவன் ஆரம்பிப்பானாயின், அக்கடலைக் கடத்தற்கு அவன் கொண்டதாகிய அப்பிச்சை என்னும் தோணி வன்னெஞ்சரிடத்தே அடுத்த காலத்து உடைந்து போவதாகும் என்றும், தோணி யோட்டுவான் ஒருவன் தான் கொண்ட தோணி பலமுடையதும் ஓட்டும் வழி பாறையற்றதும் ஆக இருந்தாலன்றி அக்கடலைக் கடத்தல் எவ்வாறு ஆகாதோ அவ்வாறு, தரித்திரக் கடலைக் கடப்பானும் பிச்சை எடுப்பதாகிய பலமற்ற தோணியைக் கைக்கொண்டதுடன் அத்தோணியையும ஒளிப்பாராகிய பாறையில் மோதுவானாயின் அத்தோணியும பிளந்து போவது அல்லாமல் தானும் அத்தரித்திரக் கடலுள் அழுந்தி இறந்துபோவான் என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பிச்சை எடுத்தலால் தரித்திரத்தைக் கடப்பது அருமை என்று அறிந்தோம். ஆயின், பிச்சை எடுப்பவர்களைக் காணுங் காலத்துப் பெரியோர் வருந்துவரோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1069. இரவுள்ள வுள்ள முருகுங் கரவுள்ள வுள்ளதூஉ மின்றிக் கெடும்.

(பரி.) இ-ள். இரவு உள்ள உள்ளம் உருகும்=உடையார்முன் இல்லார் சென்றிரந்து நிற்றலின் கொடுமையை நினைந்தால் எம்முள்ளங் கரைந்துருகாநிற்கும்,—கரவு உள்ள உள்ளதூஉம் இன்றிக் கெடும்=இனி அந்நிலையைக் கண்டுவைத்தவர் இல்லையென்றலின் கொடுமையை நினைந்தால் அவ்வுருகுமளவுதானுமின்றிப் பொன்றிவிடும் எ-று.

"இரவினை—யுள்ளுங்கா லுள்ள முருகுமா லென்கொலோ—கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு" என்றார் பிறரும். இரவினுங்கரவு கொடிதென்பதாம். இதற்குப் பிறரெல்லாம் இரக்கின்றவருள்ளமுருகுமென்றுரைத்தார். (கூ)

விளக்கம்:—செல்வம் உடையவரிடத்தே சென்று அவர்முன் வறிஞர் யாசித்து நின்று பிச்சை கேட்கும் கொடுமையை நினைத்தால் எம்முடைய மனமானது கரைந்து உருகுகின்றது என்றும், ஆயின், அவ்விதம் அன்றித் தம்முன் நிற்பவர் நிற்கின்ற ஏங்கியநிலையைப்

பார்த்த செல்வந்தர் வைத்துக்கொண்டே இல்லை என்று சொல்லுகின்ற கொடுமையை நினைத்தால் முன்னர் மனம் உருகிநின்ற அவ்வளவு காலமும் உயிர் தரித்து இருந்தது போல் தரியாது அப்போதே உயிர் போய் விடும்போல் இருக்கின்றது என்றும் இத்திருக்குறள் கூறுவதால், பிச்சை எடுத்தலே மிகுதியும் கொடுமை உடைய செயல் என்றும், அவ்வித கொடிய செயலையும் கை கட்டிவாய் பொத்தி நின்று கேட்டகாலத்தும் வைத்துக்கொண்டே இல்லை என்று சொல்லப் புகுந்தால் அதனினும் கொடியது வேறொன்றில்லை என்றும் கூறவந்தவர் பிச்சை எடுப்பவன் செல்வந்தர் முன் நிற்கின்ற நிலையினது பரிதாப மிகுதியைக் கண்டவுடனே மனமுருகிப் போகுமென்றும், அதனினும் வைத்துக் கொண்டே இல்லை என்று சொல்லுவதாகிய வஞ்சகத்தை நினைந்தால் இறப்பே உண்டாகும் என்றும் பிரித்துக் காட்டினாராயினர். இதனை நாலடியார், இரவச்சம் என்னும் அதிகாரத்தினுள்,

"சூரவாத திண்ணன்பிற் கண்ணன்னார் கண்ணு
மிரவாது வாழ்வதாம் வாழ்க்கை—யிரவினை
யுள்ளுங்கா லுள்ள முருகுமா லென்கொலோ
கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு"

என்பதனாலும் அறிதல் கூடும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பிச்சை எடுப்பார் நிலையைக் கண்ட பிறர் இவ்விதம் ஆவர் எனின், இல்லை என்று சொல்லுகின்ற செல்வந்தர்க்கு அதனால் உண்டாகும் வருத்தம் ஒன்றும் இல்லை போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1070. கரப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ விரப்ப சொல்லாடப் போஒ முயிர். [வர்

(பரி.) இ-ள். சொல்லாட இரப்பவர் உயிர் போம்=கரப்பார் இல்லையென்றுசொல்லாடிய துணையானே இரப்பார்க்கு உயிர்போகாநின்றது;—கரப்பவர்க்கு யாங்கு ஒளிக்குங்கொல்=இனிச் சொல்லாடுகின்ற அவர் தமக்கு உயிர் பின்னுநிற்றலான் அப்பொழுது எப்புரையுட் புக்கொளித்து நிற்கும்!

உயிர்போகலாவது:—, இனி யாமென்செய்துமென்றேங்கிச் செயலற்று நிற்றல்; "அந்நிலையே—மாயானோ மாற்றி விடின்" என்றார் பிறரும். கேட்டாரைக்கொல்லவற்றாயசொற் சொல்வாரைக்கொறல் சொல்லவேண்டாவாயினும் அது காண்கின்றிலம் இஃதென்னோவென்பதாம். வறுமையுற்றுழிமறை

யாது இரக்கப்படுவராய கேளிர்கட்கும் அதனைச்சொல்லாட உயிர்போம், ஆனபின் மறைக்கப்படுவராய பிறர்க்குச் சொல்லாடியக்கால் போகாதெ னவே யொளித்துநிற்கும் இரண்டானும் போமேயன்றேயெனவ் இரவஞ்சினவினருவ ரண் கூற்றுக்கியுரைப்பாரு மூளர். இவை மூன்றுபாட்டானும் அல்லிரவின் குற்றமும் காவின்குற்றமும் ஒருக்குகூறப்பட்டன. (எ)

விளக்கம் :—பொருளை வைத்துக்கொண்டு இல்லை என்று சொல்லிய அளவே பிச்சை எடுப்பவர்க்கு உயிர்போய்விடும் என்றாம் அவ்விதம் இல்லை என்று சொல்லுகின்ற அச்செல்வந்தர்களுக்கு உயிர்போகாது இருத்தலால் அவ்விதம் இல்லை என்று சொல்லுங் காலத்தும் பிச்சை எடுப்பவரின் உயிர் போங்காலத்தும் சொல்லிய இவ்வுடையை உயிர் எந்தப் புலையினுள் புகுந்து ஒளித்து நிற்கும் என்றும் இக்கிருக் குறள் கூறுவதால், பிச்சை எடுப்போர் இல்லை என்ற சொல்லிய சொல் லைக் கேட்டவுடன் 'இனி நாம் என் செய்வோம்?' என்று ஏங்கியதொரு செயலுமில்லாமல் நிற்பர் என்றும், அந்நிற்கின்ற நிலையாற்றாமை தம் மூயிரை இழப்பர் என்றும், இவ்விதம் கேட்ட அளவிலேயே கொல்லுக் தருதியுடைய சொல் அதைச் சொல்லிய ருவனைக் கொல்லாது நிற்பது மிருதியும் அச்சரியமாக உள்ளது என்றும், அன்றியும் அச்செல்வந்த னது உயிரானது அவன் தேகத்தில் எங்கேயோ ஒரு சந்தில் ஒளித்துக் கொண்டு இருத்தல் வேண்டுமென்றும் ஈபாமையின் கொடுமையை எடுத் துக் காட்டுவதாயிற்று. இவ்விதம் இல்லை என்று சொல்லிய சொல்லைக் கேட்டவுடன் இரப்பவன் மாய்ந்து விடுவான் என்பதை நாலடியார், இர வச்சம் என்னும் அதிகாரத்தினுள் :—

> "புறத்துத் தன் னின்மை நலிய வகத்துத்தன்
> னன்ஞான நீக்கி நிரீஇ—யொருவனீ
> யியா யெனக்கென் றிரப்பானே லங்நிலையே
> மாயானை மாற்றி விடின்"

என்று கூறியதால் அறிதல்கூடும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "பிச்சை எடுத்தலால் உண்டாகும் குற்றமும் வைத்துக்கொண்டே இல்லை என்று சொல்லுகின்றவர்களது குற்றமும் அறிந்தோம். இனி, இவ்விதம் கூறிய ஒழிபியலுள் இன்னும் கூறவேண்டுவது ஏதேனும் இருக்குமாயின், அதனையும் கூறுதல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

108. அதிகாரம்.

கயமை.

(பரி.) அஃதாவது மேல்அரசியலுள்ளும் அங்கவியலுள்ளுஞ் சிறபுவகை யாற் கூறப்பட்ட குணங்களுள் ஏற்புடையன குறிப்பினுல் யாவர்க்குமெய்த வைத்தமையின் ஆண்டுக் குறிப்பாற் கூறியனவும் ஈண்டொழிபியலுள் வெளிப் படக் கூறியனவுமாய குணங்கள் யாவுமிலராய கீழோரது தன்மை. அதனுல் இஃதெல்லாவற்றிற்கும் பின் வைக்கப்பட்டது.

விளக்கம்:—அதாவது, மேல் அரசியல் என்று கூறப்பட்ட இரு பத்தைந்து அதிகாரங்களுள்ளும், அங்கவியல் என்று கூறப்பட்ட முப்பத் திரண்டு அதிகாரங்களுள்ளும் சிறப்பு வகையினுல் அரசனுக் குரிய அமைச்சர் முதலாயினர்க்கும் சொல்லிய குணங்களுள் ஈனை யோர்க்கும் அவரவர்க்கு ஒத்த விஷயங்களைக் குறிப்பாக எல்லோரும் அடையும்படிச சொல்லியதுடன் அவ்விதம் குறிப்பால் யாவர்க்குங் கூறிய குணங்களுள்ளும் ஒழிபியலில் மேற்கூறிய பன்னிரண்டு அதிகா ரங்களுளரும் வெளிப்படையாகக் கூறிய குணங்களும் ஆகிய இக் குணங்களுள் ஒன்றுமில்லாதவராகிய கீழோருடைய தன்மையாம். இக் கீழோரது தன்மை எல்லாவற்றிலும் கடையாகி நிற்பதால் இதனை எல்லா அதிகாரங்களுக்கும் பின்வைத்து உள்ளனர் என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "இவ்விதம் ஒரு குணமும் அடையாது உள்ள மக்களும் உலகத்து உள்ளார் போலும்!" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1071. மக்களே போல்வர் கயவ ரவரன்ன
வொப்பாரி யாங்கண்ட தில்.

(பரி.) இ-ள். மக்களே போல்வர் கயவர்=வடிவான் முழுதும் மக்களே யோப்பர் கயவர்;—அவர் அன்ன ஒப்பார் யாம்கண்டது இல்=அவர் மக்களே யொத்தாற்போன்ற வொப்பு வேறிரண்டு சாதிக்கண் யாங்கண்டதில்லே. எ-று.

முழுதுமொத்தல் தேற்றேகாரத்தாற்பெற்றும். அவரென்றது அவர் மாட்டினதாய வொப்புமையை. மக்கட்சாதிக்குங் கயச்சாதிக்கும் வடிவொத் தலிற் குணங்களது உண்மையின்மைகளனல்லது வேற்றுமை பரியப்படா தென்பதாம். இதனுற் கயவரது குற்றமிகுதி கூறப்பட்டது. (க)

விளக்கம்:—உருவத்தினால் கயவர் முழுவதும் மக்களைப் போன்றே காணப்படுவர் என்றும், ஆயின அக்கயவர் மக்களைப்போல ஒத்து இருக்கின்ற ஓர் ஒப்பினை மக்களல்லாத வேறு இரண்டு ஜாதிகளிடத்தே நாம்கண்டது இல்லை என்றும் இத்திருக்குறள் கூறுவதால், மக்களுள் குணமற்றாரைக் கயச் சாதி என்று வேறாகப் பிரித்து நிற்பதோடு அக்கயவரும் ஏனைய மக்களோடு உருவத்தால் ஒத்திருப்பதால் அவ்வுருவங் கண்டு அவரைப் பிரித்து அறிதல் முடியாது என்றும், குணங் கண்டே வேறுபாடு அறிதல் கூடும் என்றும் கண்டோம். இதனால் கயவர்க்குள்ள குற்றத்தின் மிகுதியைக் கூறியதாக அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இக்கயவர் குற்றமுடைமையினால் கீழாகிய சாதியோர் என்றீர்; எவ்வித கீழ்மையுடையவர் என்பதை அறிவித்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1072. நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்.

(பரி.) இ-ள் நன்று அறிவாரிற் கயவர் திரு உடையார்=தமக்குறுதியாவனவறிவாரின் அவையறியாத கீழ்மக்கள் நன்மையுடையர்,—நெஞ்சத்து அவலம் இலர்=அவர்போல அவை காரணமாகத் தங்நெஞ்சத்தின்கட் கவலை யிலராகலான். எ-று.

நன்றென்பது சாதியொருமை. உறுதிகளாவன:—இம்மை மறுமை வீடு கட்குரியவாய புகழறஞானங்கள். இவற்றையறிவார் இவை செய்யாநின்றே மிகச்செயப் பெறுகின்றிலேமென்றும், செய்கின்றவிவைதமக்கு இடையூறு வருங்கொலென்றும், இவற்றின் மறுதலையாய பழிபாவமறியாமையென்பனவற்றுள் யாதுவிளையுமோவென்றும், இவ்வாற்றாற் கவலையெய்துவர்; கயவர் அப்புகழ்முதலியவொழித்துப் பழி முதலிய செய்யாநின்றும் யாதுங்கவலையுடைய ரல்லராகலான், 'திருவுடையர்' எனக் குறிப்பாலிகழ்ந்தவாறு. இதனாற் பழி முதலியவற்றிற் கஞ்சாரென்பது கூறப்பட்டது. (உ)

விளக்கம்:—தமக்கு உறுதியைத் தரும் நன்மைகளை அறிகின்றவர்களைக் காட்டிலும் அந்நன்மைகளை அறியாத கீழ்மக்கள் மிக நல்லவர் என்றும், ஏனெனின், உறுதியானவற்றை எண்ணுபவர்போல் கீழ்மக்கள் அவ்வுறுதிப் பொருட்குத் தம் மனத்தினிடத்தே யாதொரு கவலையும் அடையாது இருக்கின்றார் என்றும் இத்திருக்குறள் கூறுவதால்,

இம்மை, மறுமை, வீடு ஆகிய மூன்றிற்கும் உரியனவான புகழ், அறம், ஞானங்களின் பொருட்டுத் தாம் எக்காலத்தும் நன்னெறியிலேயே பிழ குகின்ற பெரியோர், 'நாம் செய்கின்ற அறம் முதலியவைகள் அவற் றின் பயனை அடைவதற்குப் போதுமான அளவாக இல்லையே' என்றும், 'அவ்வாறு சிறிதளவே செய்யும் இவ்வறம் முதலியவைகட்கு எதேனும் இடையூறு வருமோ' என்றும், 'இதுவல்லாமலும் புகழ், அறம், ஞானங் களுக்கு எதிராகிய பழியும், பாவமும், அறியாமை என்பனவற்றுள் ஏதே னும் செய்கின்றோமோ' என்றும் ஆக இவ்விதமெல்லாம் மனத்தினி டத்தே கவலைகொண்டிருப்பர் என்றும், ஆதலால், யாதொரு குணமு மில்லாத கபவர் என்னும் கீழ் மக்கள் அப்புகழ் முதலாகச் சொல்லப் பட்ட எல்லாவற்றையும் ஒழித்துப் பழிமுதலாகிய எல்லாத் தீமைகளை யும் செய்யும் தம்முடைய அறியாமையினால் இவ்விதம் 'நாம் நிகெறி யிற் செல்கின்றோமே' என்று அறியாமலும் மனத்தினிடத்தே யாதொரு கவலை கேள்ளாமலும் இருப்பர் ஆதலால், நன்னெறியைக் கடைப் பிடித்துச் செல்பவரைக்காட்டிலும் தீநெறியைத் தமக்கு உறுதியாகக் கொண்டு நிற்பவரை நன்மை உடையவர் எனக் குறிப்பால் இகழ்ந்தவா றுயிற்று என்றும் அறிந்தோம் என்றனர் அதுகேட்ட மாணாக்கர், "கீழ்மக்கள் பழி முதலியவறறிற்கு அஞ்சாதவராயின் உலகத்தில் யாவரும் அவரை விலக்குபவர் இல்லையோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1073. தேவ ரனையர் கயவ ரவருந்தா மேவன செய்தொழுக லான்.

(பரி.) இ-ள். தேவர் அனையர் கயவர்=தேவருங் கயவரும் ஒருதன்மை யர்,—அவரும் தாம் மேவன செய்து ஒழுகலான்=அஃதியாதனுனெனின், தேவரைப்போன்று தம்மை நியமிப்பாரின்றிக் கயவரும் தாம் விரும்புவன வற்றைச் செய்தொழுகலான். எ-று.

உயாசசயும இழுவுமாகிய தங்காரண வேறுபாடு குறிப்பாற்றோன்ற நின் றமையின், இது புகழ்வார்போன்று பழித்தவாறுமிற்று. இதனுல் விலக்கற் பாலின்றி வேண்டிய செய்வரென்பது கூறப்பட்டது. (சு)

விளக்கம்:—தேவர்களும் கயவர்களும் ஒருவித தகுதியுடையார் என்றும், அது எவ்விதமெனின்:—தேவர்களைப்போலவே தமக்குக் கட் டளையிடுவார் இல்லாமல் கயவராகிய கீழ்மக்களும் தாம் விரும்பு கின்ற எல்லாவற்றையும் செய்து உலகத்து வாழ்ந்து வருகின்றனர் என்றும் இத்திருக்குறள் கூறுவதால், விண்ணுலகத்து வாழும்

தேவர்களாம் யாதொன்றையும சிந்தியாதும் வருந்தாதும் தமக்குக் கிடைத்த கற்பகத்தரு முதலியவற்றின் பயனைக் கொண்டு நல்வினைப்பகுதியால் தம்மை யாரும் ஆள்பவரின்றித் தம் மனம் போன வழிச் சென்று அவ்வழிகளில் உண்டாகும் இன்பங்களை அனுபவித்து நிற்கின்றார்களாதலால், புண்ணிய மிகுதியால் விண்ணுலகத்து உள்ள தேவர்களையும் பாப மிகுதியால் இவ்வுலகத்துள்ள கீழ் மக்களையும் ஒப்புமையுடையவர் போல் எடுத்துக்காட்டி அதனால் இக்கீழ்மக்களைப் புகழ்பவரைப்போல் ஆசிரியர் பழித்தார் என்று அறிந்தோம என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "கீழ் மக்கள் தம்மை விலக்குபவர் ஒருவரும் இல்லாமல் வேண்டியவற்றை எல்லாம செய்வார் என்று அறிந்தோம். ஆயின், இக்கீழ்மக்கள் எதனால் தமமை மேமபட்டவர்களாக எண்ணிக் கொள்வர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1074. அகப்பட்டி யாவாரைக் காணி னவரின் மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ்.

(பரி.) இ-ள். கீழ்=கீழாயினான்,— அகப்பட்டி ஆவாரைக் காணின்=தன்னிற் சுருங்கிய பட்டியாயொழுகுவாரைக் கண்டானாயின,— அவரின் மிகப்பட்டுச் செம்மாக்கும்=அவ்வொழுக்கத்தின்கண் அவரிற் றான் மேமபட்டு அதனாற் றன்மிகுதிகாட்டி யிறுமாக்கும். எ-று.

அகப்பட்டி=அகமாகிய பட்டி. பட்டிபோன்று வேண்டியவாறேயொழுகலின், 'படடி' என்றார்; "நோதக்கசெய்யஞ் சிறுபட்டி" *என்றார் பிறரும். இதனால் அவர் மேம்படுமாறு கூறப்பட்டது. (௪)

விளக்கம்:-மனத்தினிடத்தே தன்னைக்காட்டிலும் கீழ்ப்பட்ட பட்டியாய் ஒழுகுகின்றவர்களைக் கீழ்மகன் காண்பானாயின், அவரைக் காட்டிலும் தான் மிக வேண்டி அத்தீய ஒழுக்கத்தில் அதிகமாகச் சென்று தன்னை மேம்பாடுடையவனாக உயர்த்திக் கொள்வான் என்று இத்திருக்குறள் கூறுவதால், கீழ்மகன் ஒருவன் தன்னை அதிகமாக உயர்த்திக் காண்பிப்பது தன்னுடைய தீய ஒழுக்கம் ஒன்றினாலேயே என்று அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்விதம் தீய ஒழுக்கத்தில் மிகுந்த கீழ் மகனுக்கு அரசனது ஆணையினால் அச்சம உண்டாகாதோ?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

*கலி, குறிஞ்சி 15.

1075. அச்சமே கீழ்களது ஆசாரம் மெச்ச மவாவுண்டே லுண்டாஞ் சிறிது.

(பரி.) இ-ள். கீழ்களது ஆசாரம் அச்சமே=கயவராகிய வாசாரக் கண்டதுண்டாயின் அதற்குக் காரணம் அரசனுள் ஏதம் வருமென்றஞ்சுமச் சமே; —எச்சம் அவா உண்டேல் சிறிது உண்டாம்=அஃதொழிந்தால், தம் மால் அவாவப்படும் பொருள் அதனுளுண்டாமாயிற் சிறிதுண்டாம்." எ-று.

ஆசாரத்தின் காரணத்தை 'ஆசாரம்' என்றும், அவாவப்படுவதனை அவா' என்றுங் கூறினர். எச்சத்தின்கண்ணென்னுமேழாவது இறுதிக்கட் டொக்கது. பெரும்பான்மை அச்சம், சிறுபான்மை பொருட்பேறு இவ்வி ரண்டானுமன்றி இயல்பாகவுண்டாகாதென்பதாம். வேண்டியசெய்தலே இயல்பு, ஆசாரஞ் செய்தல் இயல்பன்றென்பது இதனுற் கூறப்பட்டது. (9)

விளக்கம்:—கயவராகிய கீழ்மக்களிடத்தே உண்டாகிய ஆசாரம் ஒன்றுஞ் சிறிதேனும் இருப்பதானால் அவ்வாசாரம் உண்டாதற்குக் காரணம் தப்புக்கு ஏதேனும் அரசனால் குற்றம் வரும் என்ற பயப்படுதல் பயமே ஆகும் என்றும், அப்பயத்தின் பொருட்டுச் செய்தது அல்லதானால் தம்மால் விரும்பப்படும் பொருள் சிறிது ஏதேனும் கருதியதாகும் என்றும் இத்திருக்குறள் கூறுவதால், கீழ்மக்களது ஆசாரம் மிகுதியும் பயத்தால் வருவது என்றும், அல்லது சிறிது பொருளை அடைவதற்கு என்றும், இவ்விரண்டு விதத்தினும் அல்லாமல் இயல்பாகவே அவர்க ளுக்கு ஆசாரம் உண்டாகாது என்றும், தாம் வேண்டியவழிச் செய் தலே அவர்களுடைய இயற்கை என்றும், ஆயின், கீழ்மக்களுக்கு எக் காலத்தும அரசன் தமமைத் தண்டிப்பான் என்ற பயமே முண்டென்று அறிஞர்களும் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "இவ்வித கீழ்மக் களிடத்து யாரேனும் நெருங்குவரோ? நெருங்கினால் எதுவுண்டாகும்?" என்னலும், ஆசிரியர் கூறுவராயினர்.

1073. அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட மறைபிறர்க் குய்த்துரைக்க லான்.

(பரி.) இ-ள். தாம் கேட்ட மறை உய்த்துப் பிறர்க்கு உரைக்கலான்= தாங்கேட்ட மறைகளை இடந்தோறுந் தாங்கிக்கொண்டு சென்று பிறர்க்குச் சொல்லுதலான், —கயவர் அறை பறை அன்னர்=கயவர் அறையப்படும் பறையினையொப்பர். எ-று.

மறை=வெளிப்படிற் குற்றம் வியுமென்று பிறரை மறைத்து ஒருவன் சொல்லியசொல். பிறர்=அம்மறைத்தற்குரியார். உய்த்தெய்ரர், அவர்க்கது பெரும்பாரமாதலினுக்கி. பறை ஒருவன்கையாற் றன்னையறிவித்ததொன்றினை இடம்தோறுங்கொண்டுசென்று யாவரையுமறிவிக்குமாகலான், இது தொழிலு மெம், இதனால் அவரது செறிவின்மை கூறப்பட்டது. (ச)

விளக்கம் :— தம்மிடத்தே எவரேனும் சொல்லிய மறைவாகிய இரகசியங்களை ஒவ்வொரு இடமும் சென்று மற்றவர்களுக்குச் சொல லுதலை ஈ, கயவர் என்று சொல்லப்படுபவர் ஊரார்க்கு அறிவிக்கப்படுதற்கு அடிக்கப்படும பறை என்னும வாத்தியத்திற்கே சமானமாவர் என்று இக்திருக்குறள் கூறுகின்றது. ஆகவே, ஊரார் அறியும வண்ணம் பறை யடிப்பவன் ஒருவன் தனக்கு மேலோர் கட்டளையிட்டபடி இடந்தோ றும் போய்ப் பறையை யடித்துச் சொல்லிய விஷயங்களைச் சொல்லு வது வழக்கம் ஆதலின், அதுபோலவே தன்னிடத்தே யாவரும அறியாத வண்ணமாக மறைவாகிய விஷயங்களை எவனேனும் ஒரு வன் சொல்லி விடுவானுபின் பிறர் அறிந்தால் குற்றம் வரும் என்று எண்ணி மறைவாகச் சொல்லிய அவ் விஷயத்தைக் கேட் டவனுகிய கீழ் மகன் தான் கேட்டதாகிய அதனை வேறொருவ ருக்குச் சொல்லாவிடில் தனக்குப் பெரும் பாரமாகத் தாங்க முடி யாதவனைப்போல் விரைந்து சென்று ஒவ்வொரிடமும சொல்லி வெளிப்படுத்தி சொன்னவனுக்குக் குற்றத்தினை உண்டாக்குவான் என்று அறிந்தோம். இதனால், அக்கீழ்மக்களிடத்து நெருங்குதல் ஆகாது என்றும் அறிந்ததாயிற்று என்றனர். அதுகேட்ட மாணுக்கர், "கீழ் மகன் ஒருவன தன்னிடத்துள்ள பொருளை ஏதேனும் பிறர்க்கு உகவு வானே?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்

1077. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங் கூன்கை யரல்லா தவர்க்கு.

(பதி.) இ-ள். கயவர் கொடிறு உடைக்கும கூன் கையர் அல்லாதவர்க்கு: கயவர் தங்கதுப்பினை நெரிப்பதாக வளைந்த கையினையுடையரல்லாதா ருக்கு—ஈர்ங்கை விதிரார்=தாமுண்டு பூலிய மாகையைத் தெறித்தல் வேண்டு மென்றிராதவர் தெறியார். எ-று.

வளைந்த கை=முறுக்கிய கை. மெலிவார்க்கு யாதுங்கொடார், கலி வார்க்கு எல்லாம கொடுப்பரென்பதாம். (எ)

விளக்கம் :— கீழ்மக்களானவர் தம் கழுத்தினை ஒடிப்பதாக வளைந்த கைகொண்டு தம்மிடத்தே வருகின்றவர்களுக்கு அல்லாமல் மற்றவர்க்குத் தாம் உணவினை உண்டு நக்கிய கையையும் தெறிக்கவேண்டுமென்று யாசித்தாலும் தெறிக்கமாட்டார்கள் என்று இத்திருக்குறள் கூறுவதால், கீழ்மக்கள் முறுக்கிய கைகொண்டு தம்மை நையப்புடைப்பார்க்கே கொடுப்பர் அல்லாமல் வறிஞராய் உள்ளவர்க்கும் ஒழுக்கத்தால் சிறந்தவர்க்கும் ஒன்றுங் கொடார் என்று அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "கீழ்மகனது கொடுக்கும் தன்மையும் சான்றோரது கொடுக்கும் தன்மையும் ஆகிய இரண்டையும் ஒன்றாகவே கூடுத்துக் காட்டல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்.

1078. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற் கொல்லப் பயன்படுங் கீழ்.

பரி.) இ-ள். சொல்லப் பயன்படுவர் சான்றோர்=மெலியார் சென்று தங்குறையைச் சொல்லிய துணையானே இரங்கிப் பயன்படுவர் மேலாயினார்;— கீழ் கரும்புபோல் கொல்லப் பயன்படும்=மற்றைக் கீழாயினார் கரும்புபோல வலியார் நைய நெருக்கியகாலத்து பயன்படுவர். எ-று.

பயன்படுதல்= உள்ளது கொடுத்தல். கீழாயினார் திழிவுதோன்ற, மேலாயினாரையும் உடன்கூறினார். இவை யிரண்டுபாட்டானும் அவர் கொடுக்குமாறு கூறப்பட்டது. (அ)

விளக்கம் :— வறிஞர் சென்று அவர்களுடைய குறையைத் தம்மிடத்துச் சொல்லிய அவ்வளவிலேயே இரக்கப்பட்டு வந்த வறிஞர்க்குப் பயன்படும்படித் தம்மிடத்துள்ள பொருளை மேலாயினார் கொடுப்பர் என்றும், மற்றைய கீழானவர்கள் கரும்பைப்போல வலிமையுடையவர் நைய நெருக்கியகாலத்து ஏதேனும் தருவர் என்றும் இத்திருக்குறள் கூறுவதால், சான்றோராவார் தம்மிடத்தேயுள்ள பொருளை வந்து கேட்பவருக்குக் கேட்ட அளவிலேயே அன்பின் மிகுதியால் கொடுத்து விடுவார்களென்றும், கீழாயினோர் தரித்திரர் முதலாயினார்க்கு ஓர் இம்மி அளவுங்கொடாது சேர்த்துவைத்து கள்வர் முதலாயினோர் நையப்புடைக்கின்ற காலத்து அவர்களுக்கு முற்றுங்கொடுத்து வறிஞராவார் என்றும் அறிவதுடன் கரும்பானது கண்ணிடத்தேயுள்ள இரசத்தினை தொட்ட அளவில் கொடாமல் ஆலையில் இட்டு நன்றாக நசுக்கிய காலத்துக் கொடுப்பதுடன் தன் உருவத்திற்கும் பழுது தேடிக்கொள்ளுவது

போல கள்வர் முதலாயினோர் பொருளைப் பறிக்கின்ற ராலத்துப் பொருள் வைத்திருந்த கீழ்மகனை அவன் உறுப்புக்களை சிதைத்து உயிரையுங் கொள்ளைகொண்டு போவர் என்றும் சண்டோர் என்றனர். அதுகேட்ட மாணாக்கர், "கீழாயினாருடைய கொடையினது இழிவை நன்றாக அறிந்தோம். இனிக் கீழ்மக்கள் பிறர் செல்வத்தைப் பார்ப்பாராயின் என் செய்வர்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்

1079. உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல் வடுக்காண வற்றாகுங் கீழ்

(பரி.) இ-ள். உடுப்பதூஉம் உண்பதூஉம் கீழ் காணின்=பிறர்செல்வ தாற் பட்டுந் துகிலுமுடுத்தலையும் பாலோடடிசிலுண்டலையுங் கீழாயினான் காணுமாயின்—பிறர்மேல் வடுக் காண வற்றாகும்=அவற்றைப் பொறாது அவர்மாட்டு வெடுவில்லையாகவும் உண்டாக்கவல்லனாம். எ-று.

உடுப்பது உண்பதென்பன ரண்டவ்வத்தொழின்மேனின்றன: அவற்றாற் பூண்டல் ஊர்தன்முதலிய பிறதொழில்களுங் கொள்ளப்படும். அவற்றைக் கண்டதுணையானே பொறாமையெய்தலிற் 'காணின்' என்றும், கேட்டார் இது கூடுமென்றியையப் படைத்தல் அரிதாகலின் 'வற்றாகும்' என்றுங் கூறினார். இதனாற் பிறர்செல்வம் பொறாமை கூறப்பட்டது (௯)

விளக்கம் :—பிறர் தம்முடைய செல்வத்தால் பட்டையும் துகிலையும் உடுத்தலையும், பாலோடு அன்னம் உண்டலையும் கீழாயினான் காண்பானானால், அவ்வுடுத்தலையும் உண்டலையும் காணப்பொறாது அவரிடத்தே யாதொரு குற்றமுமில்லாமலிருக்கவும் குற்றம் உள்ளதாகச்செய்ய வல்லவனாகும் என்று இத்திருக்குறள் கூறுவதால், கீழ்மகனானவன் தான் உடுக்காதும் உண்ணாதும் இருப்பதுடன் நல்வினைப் பயனால் மற்றவர்கள் செல்வத்தை யடைந்து உண்ணலையும் உடுத்தலையும் செய்வாராயின் அச்செயலைக்கண்ட அளவிலேயே மனம்பொறாது பொறாமையினை அடைவான் என்றும், மேலும் அவரிடத்து யாதொரு குற்றமும் இல்லாதிருக்கவும் குற்றம் உண்டு என்று பலரும் நம்பும்படிக் குற்றத்தை உண்டுபண்ணித் தூற்றுவான் என்றும் அறிந்தோம் என்றனர். அது கேட்ட மாணாக்கர், "இத்திருக்குறளால் கீழ்மகன் பிறர் செல்வங்கண்ட இடத்துப் பொறாமைப்படுவான் என்று அறிந்தோம். இனி, இவ்வித கீழ்மகன் தனக்கு ஏதேனும் ஒரு துன்பம் வந்தால் என் செய்வன்?" என்னலும், ஆசிரியர் கூறுவாராயினர்

1080. எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து.

(பரி.) இ-ள். கயவர் ஒன்று உற்றக்கால் விரைந்து விற்றற்கு உரியர் = கயவர் தம்மை யாதானுமொரு துன்பமுற்றக்கால் அதுவே பற்றுக்கோடாக விரைந்து தம்மைப் பிறர்க்கு விற்றற்குரியர்:—எற்றிற்கு உரியர் = அதுவன்றி வேறெத்தொழிற்குரியர்! எ-று.

உணவின்மையாகப் பிறிதாக ஒன்றுவந்துற்ற துணையானென்பது தோன்ற 'ஒன்றுற்றக்கால்' என்றும், சொள்கின்றார் தங்கயமையறிந்து வேண்டாவென்றற்கு முன்னேவிற்றுநிற்றலின் 'விரைந்து' என்றும் கூறினார் ஒருதொழிற்கு முரியால்லரென்பது குறிப்பெச்சம். இதனாற் றாம் பிறர்க்கடிமையாய் நிற்பரென்பது கூறப்பட்டது. (ய)

விளக்கம் :—கீழ்மக்கள் தமக்கு ஏதேனும் ஒரு துன்பம் வந்து விடுமாயின், அத்துன்பத்தையே தமக்கு ஒரு முதலாகக் கொண்டு விரைந்து சென்று தம்மைப் பிறர்க்கு விற்றுவிடுவதற்கே தகுதியாவர் என்றும், அதுவல்லாமல் அவர் வேறு எந்தத் தொழிற்கும் உரியராகார் என்றும் இத்திருக்குறள் கூறுவதால், கீழ்மக்களானவர்கள் தமக்குத் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள உணவு கிடைக்காமையினாலேயோ வேறு எதனாலேயோ ஒரு துன்பம் வருங்காலத்து அத்துன்பத்தினைத் தாம் முயன்று நீக்கிக்கொள்ளாது பிறரிடத்தே சென்று அவர்கள் 'இவர் கயவர்; இவர் சொல் கேட்டலாகாது' என்று விலக்குவதற்கு முன்னே தமக்கு வந்த துன்பத்தினை அதிசீக்கிரமாகச் சொல்லித் தம்மைத் தாழ்வு படுத்திக் கொண்டு அவர்க்கு அடிமைபோலும் இருப்பர் என்றும், அதுவல்லாது அவர் வேறு எத்தொழிலையும் செய்யத் தகுந்தவர் அல்லர் என்றும் அறிந்தோம் என்றனர். அதுகேட்ட மாணாக்கர் தம் ஆசிரியரை நோக்கிப், "பெரியோய்! இதுவரையும் அறமும் பொருளும் உணர்ந்தோம். இனி காமம் என்பது ஈதென விளக்கும் காமத்துப்பாலையும் அறிவித்தல் வேண்டும்" என்னலும், ஆசிரியர் அன்புடன் கூறுவாராயினர்.

ஒழிபியல் முற்றிற்று.

பொருட்பால் முற்றிற்று.